சர்வதேச கம்யூனிச
இயக்கத்தின் ஆவணங்கள்
1957-1970

மாபெரும் விவாதம்

நக்சல்பாரி
விவசாயிகள் பேரெழுச்சி
தொடங்கி
இன்றுவரை
இந்தியப் புரட்சிக்காக
உயிர் நீத்த
தியாகிகளுக்கு

அர்ப்பணம்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

மார்க்சிய—லெனினியத்திற்கு
உண்மையுடன் இருந்து,
பாட்டாளிவர்க்க லட்சியங்களுக்காக,
உலகெங்கும்
சிறை, சித்திரவதை போன்ற
எண்ணற்ற இன்னல்களை,
இன்முகத்துடன் ஏற்றும்,
மனித குலத்தை
விடுவித்து முன்னேற்றும்
போராட்டத்தில்
தமது இன்னுயிரை ஈந்தும்,
புரட்சிப் பாதையை
மேலும் சிவப்பாக்கி,
வழிகாட்டும் ஒளியாகத் திகழும்
தியாகச் சுடர்களுக்கு,
நமது சிவப்பு வணக்கங்கள்.

மாபெரும் விவாதம்

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஆவணங்கள்
1957 — 1970

''சர்வதேச கம்யூனிச இயக்கம் ஒரு முக்கியக் காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. இப்போது நடைபெறுகின்ற விவாதம் பாட்டாளிவர்க்க உலகப் புரட்சியின் எதிர்காலத்தையும், மனித குலத்தின் விதியையும் தீர்மானிக்கின்ற முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த விவாதத்திற்குப் பின் மார்க்சிய-லெனினியம் இன்னும் பிரகாசமாக ஒளிவீசும். சர்வதேசப் பாட்டாளிவர்க்கமும், உலக மக்களும் தங்களுடைய புரட்சிகர நோக்கத்தில் இன்னும் மாபெரும் வெற்றிகளை ஈட்டுவார்கள் என்பதை வரலாறு நிரூபிக்கும்.''

—ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய
கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின்
மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி
யின் முதல் விமர்சனத்திலிருந்து

மாபெரும் விவாதம்

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின்
ஆவணங்கள்

1957 - 1970

SEELAN BOOKS NORWAY SIGNATURE
NORWAY SIGNATURE SEELAN BOOKS

கேடயம் வெளியீடு

மாபெரும் விவாதம்

(சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஆவணங்கள் 1957 - 1970)

முதற்பதிப்பு : ஆகஸ்டு 1988

விலை ரூ. 290-00

வெளியீடு :

கேடயம்,

~~அ. பெ. எண். 2480, சென்னை-29.~~

கேடயம்
அஞ்சல் பெட்டி எண் 7195
அரும்பாக்கம்
சென்னை-600106

THE GREAT DEBATE

(Documents of International Communist Movement 1957-1970)

Tamil Edition

First Edition : *August 1988*

Rs. 290-00

Publishers :

KEDAYAM

~~Post Box No. 2480~~
~~11, IInd Street, Vada Agaram,~~
~~Metha Nagar, Madras - 29.~~

KEDAYAM
POST BOX No. 7195
ARUMBAKKAM
CHENNAI-106.

அச்சிட்டோர் :
நீட் பிரிண்டர்ஸ், சென்னை-600 002.

உள்ளடக்கம்

NORWAY
SEELAN BOOKS
SIGNATURE

நுழையும் முன் சில குறிப்புகள் — முன்னுரை

I. **விவாதத்திற்குள்ளான சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் இரண்டு ஆவணங்கள்**

1. சோசலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரகடனம் (மாஸ்கோ—1957) 1
2. 81 நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் கூட்டறிக்கை (மாஸ்கோ—1960) 20

II. **ரசிய-சீனக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மத்திய கமிட்டிகளுக்கிடையிலான கடிதப் பரிமாற்றம்**

1. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு எழுதிய கடிதம், பிப்ரவரி 21, 1963 79
2. 21-2-1963ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய கடிதத்துக்கு 9-3-1963ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய பதில் கடிதம் 86
3. 9-3-1963ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய கடிதத்துக்கு 30-3-1963ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய பதில் கடிதம் 94
4. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய ஓர் ஆலோசனை

   30-3-1963ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய கடிதத்திற்கு 14-6-1963ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய பதில் கடிதம் 125

III. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பகிரங்கக் கடிதமும், அதன்மீது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 9 விமர்சனங்களும்

1. ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் (ஜூலை 14, 1963) 185

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 9 விமர்சனங்கள்

2. முதல் விமர்சனம் : ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக்கும் நமக்கும் இடையே உள்ள வேறுபாடுகளின் தோற்றமும், வளர்ச்சியும் (செப்டம்பர் 6, 1963) 251

1) ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசிலிருந்து வேறுபாடுகள் துவங்கின 253

2) ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசின் தீவிர விளைவுகள் 262

3) 1957-ல் மாஸ்கோவில் நடைபெற்ற சகோதரக் கட்சிகளின் கூட்டம் 265

4) ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையினுடைய திரிபுவாதத்தின் வளர்ச்சி 270

5) சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீது, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை நடத்திய எதிர்பாராத தாக்குதல் 274

6) 1960-ல் நடைபெற்ற சகோதரக் கட்சிகளின் கூட்டத்தில் இரு பாதைகளுக்கிடையிலான போராட்டம் 278

7) ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் திரிபுவாதம் முறைப்படுத்தப்படுகிறது 284

8) மார்க்சிய—லெனினியத்திற்கு எதிரானதும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தைப் பிளவுபடுத்துவதுமான ஒரு எதிர்ப்போக்கு 288

9) கடந்த ஏழு ஆண்டு கால உண்மைகள் எதை நிரூபிக்கின்றன? 295

பின் இணைப்பு 1

சமாதான மாற்றம் என்ற பிரச்சினை மீதான சுருக்கமான கருத்துக்கள் (நவம்பர் 10, 1957) 301

பின் இணைப்பு 2

புக்காரஸ்டில் நடைபெற்ற சகோதரக் கட்சிகளின் கூட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக்குழு வெளியிட்ட அறிக்கை (ஜூன் 26, 1960) 305

பின் இணைப்பு 3

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் தகவல் கடிதத்திற்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அளித்த பதில் கடிதத்தில், வேறுபாடுகளைத் தீர்த்துக்கொள்ளவும், ஒற்றுமையை அடையவும் முன்வைக்கப்பட்ட அய்ந்து முன்மொழிதல்கள் (செப்டம்பர் 10, 1960) 309

3. **இரண்டாவது விமர்சனம்: ஸ்டாலின் பற்றிய பிரச்சினையின் மீது (செப்டம்பர் 13, 1963)** 311

4. **மூன்றாவது விமர்சனம்: யூகோஸ்லாவியா சோசலிச நாடுதானா? (செப்டம்பர் 26, 1963)** 337

1) யூகோஸ்லாவிய நகரங்களில் தனியார் மூலதனத்தின் வளர்ச்சி 342

2) முதலாளித்துவத்தில் மூழ்கியுள்ள யூகோஸ்லாவிய கிராமப்புறம் 345

3) அனைத்து மக்களுக்கும் சொந்தமான சோசலிசப் பொருளாதாரம் முதலாளித்துவப் பொருளாதாரமாய் சீரழிந்த கதை 353

4) அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சார்பு நாடு 361

5) அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புரட்சி படைப் பிரிவு 367

6) பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், முதலாளிவர்க்க சர்வாதிகாரமாக சீரழிந்த கதை 373

7) யூகோஸ்லாவியப் பிரச்சினையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாட்டுரீதியான நிலைப்பாடு 377

8) டிட்டோ ''தனது தவறுகளைப் போக்கிக் கொண்டாரா''? அல்லது குருச்சேவ், டிட்டோவைத் தனது ஆசானாய்க் கருதுகிறாரா? 379

9) முடிவுரை 384

5. **நான்காவது விமர்சனம் : புதிய காலனியத்தின் ஆதரவாளர்கள் (அக்டோபர் 22, 1963)** 386

1) ஏகாதிபத்தியத்தையும் காலனியத்தையும் எதிர்த்துப் போராடும் கடமையைக் கைவிடுதல் 388

2) ஒடுக்கப்பட்ட நாடுகளில் புரட்சியை கைவிடுவதற்கான பரிந்துரைகள் 393

3) தேசிய விடுதலைப் போர்களுக்கு எதிர்ப்பு 398

4) தற்கால உலக முரண்பாடுகள் குவிந்திருக்கும் பகுதிகள் 401

5) புரட்சியில் தலைமை பற்றிய லெனினியக் கருத்தைப் புரட்டுதல் 405

6) தேசியவாதப் பாதையும், சீரழிவுப் பாதையும் 407

7) சமூக ஆதிக்கவாதத்தின் ஓர் உதாரணம் 411

8) ''இனவாதக் கோட்பாட்டுக்கும்'' ''மஞ்சள் அபாயக் கோட்பாட்டுக்கும்'' எதிராக 414

9) புதிய வேடத்தில் அவதரித்துள்ள பழைய திரிபுவாதம் 418

6. **அய்ந்தாவது விமர்சனம் : யுத்தம், சமாதானம் பற்றிய பிரச்சினையில் இரண்டு வேறுபட்ட வழிகள் (நவம்பர் 19, 1963)** 423

1) வரலாற்றின் படிப்பினைகள் 425

2) மிகப்பெரிய மோசடி 431

3) புதிய உலக யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறு பற்றிய பிரச்சினை 438

4) அணு ஆயுதங்கள் பற்றிய நம்பிக்கையும், அணுஆயுத அச்சுறுத்தலுமே நவீன திரிபுவாதத்தின் கோட்பாட்டு அடிப்படையாகவும் வழிநடத்தும் கொள்கையாகவும் விளங்குகின்றன 446

5) போராட்டமா? அல்லது சரணடைவா? 453

6) சமாதானத்தைப் பாதுகாக்கும் பாதையும் யுத்தத்திற்கு இட்டுச்செல்லும் பாதையும் 459

7. ஆறாவது விமர்சனம் : சமாதான சகவாழ்வு— இரண்டு நேரெதிரான கொள்கைகள் (டிசம்பர் 12, 1963) 463

1) லெனின் மற்றும் ஸ்டாலினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கை 464

2) லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கையை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உயர்த்திப் பிடிக்கிறது 474

3) ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் ''சமாதான சகவாழ்வுப்'' பொதுவழி 479

4) கொள்கை விதியில் மூன்று வேறுபாடுகள் 484

5) ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் ''சமாதான சகவாழ்வுப்'' பொதுவழி அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்கிறது 496

6) ரசிய - அமெரிக்க துரோகக் கூட்டே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் ''சமாதான சகவாழ்வுப்'' பொதுவழியின் இதயமும் ஆன்மாவும் 503

7) ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு சில அறிவுரைகள் 509

8. ஏழாவது விமர்சனம் : நமது காலத்தின் மிகப்பெரிய பிளவுவாதிகள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களே! (பிப்ரவரி 4, 1964) 512

1) ஒரு வரலாற்றுப் பரிசீலனை 514

2) அனுபவங்களும் படிப்பினைகளும் 522

3) நமது காலத்தின் மிகப்பெரிய பிளவுவாதிகள் 527

4) ரசியாவின் எதிரி என்ற குற்றச்சாட்டுக்கு மறுப்பு 537

5) தலைமையைக் கைப்பற்றும் முயற்சி என்ற குற்றச்சாட்டுக்கு மறுப்பு 542

குறிப்பு:

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி என்பது ரசிய கம்யூனிஸ்ட் கட்சி என்றும், சோவியத் யூனியன் என்பது ரசியா என்றும் இந்நூல் மொழிபெயர்ப்பில் கையாளப்பட்டுள்ளது.

—வெளியீட்டாளர்

நுழையும் முன் சில குறிப்புகள்

முன்னுரை

1

இத்தொகுப்பில் 1957 நவம்பரில் 12 சோசலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் மாஸ்கோவில் கூடி வெளியிட்ட பிரகடனமும், 1960 நவம்பரில் 81 நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் மாஸ்கோவில் கூடி வெளியிட்ட கூட்டறிக்கையும், 1963 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் ரசிய-சீன கம்யூனிஸ்ட் கட்சிகளின் மத்திய கமிட்டிகளுக்கு இடையே பரிமாறப்பட்ட மூன்று கடிதங்களும், அதே ஆண்டு ஜூனில் சீனக் கட்சி முன்வைத்த சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் 'பொதுவழி பற்றிய ஓர் ஆலோசனை' என்ற ஆவணமும், அதை விமர்சித்து ரசியக் கட்சி தனது கட்சி அணிகளுக்கு வெளியிட்ட பகிரங்கக் கடிதமும், அந்த பகிரங்கக் கடிதத்தின் மீது 1963 செப்டம்பரிலிருந்து 1964 நவம்பர் வரை சீனக் கட்சி வெளியிட்ட ஒன்பது விமர்சனக் கட்டுரைகளும், 1970-ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியை விமர்சித்து சீனக்கட்சி வெளியிட்ட 'லெனினியமா, சமூக ஏகாதிபத்தியமா?' என்ற ஆவணமும் இடம் பெற்றுள்ளன.

இவற்றில் முதல் இரண்டு ஆவணங்களும், 'சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய ஓர் ஆலோசனை' என்ற சீனக் கட்சியின் ஆவணமும், ரசியக் கட்சியின் பகிரங்கக் கடிதமும், அறுபதாம் ஆண்டுகளின் இறுதி வாக்கில் ஜனசக்தி வெளியீடாக தமிழில் வெளிவந்துள்ளன. இவற்றில் முதல் இரண்டு ஆவணங்களை மட்டும் என். சி. பி. எச். நிறுவனம் சமீபத்தில் மறுவெளியீடு செய்துள்ளது. 'லெனினியமா, சமூக ஏகாதிபத்தியமா?' என்ற சீனக் கட்சியின் ஆவணம் பீஜிங் வெளியீடாகவும், அதன் மறுபதிப்பு ம.க இ.க.வின் வெளியீடாகவும் தமிழில் வெளிவந்துள்ளது. மற்ற ஆவணங்கள் அனைத்தும் தமிழில் வெளிவருவது இதுவே முதல்முறையாகும். 1957-70-ம் ஆண்டுகளில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நடந்த மாபெரும் விவாதத்தை

வாசகர்கள் முழுவதுமாக தொகுப்பாக புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே ஏற்கனவே தமிழில் வெளிவந்தவற்றையும் இணைத்து ஒரு தொகுப்பாக வெளியிடுகிறோம்.

ஏறக்குறைய 20-30 ஆண்டுகளுக்கு முன்பாக சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நடந்த விவாதத்தை தற்போது வெளியிடுவதன் அவசியம் என்ன? இவ்வெளியீடு பற்றிய அறிவிப்பு வந்த உடனேயே சிலர் இக்கேள்வியை எழுப்பியுள்ளனர்.

இத்தொகுப்பு நூல் 20 ஆண்டுகளுக்கு முன்பே வெளியிடப்பட்டிருக்க வேண்டும். 1953-ல் ஸ்டாலின் மறைந்தபின் படிப்படியாக கட்சியிலும், அரசாங்கத்திலும் முழு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட குருச்சேவ் 1956-ல் நடைபெற்ற கட்சியின் 20-வது காங்கிரசில் திருத்தல்வாதத்தை அரங்கேற்றினார். அப்போதே சர்வதேச் கம்யூனிச இயக்கத்தில் குருச்சேவ் திருத்தல்வாதத்துக்கு எதிரான போராட்டம் தொடங்கியது. தோழர் மாவோவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்தப் போராட்டத்தை தலைமை ஏற்று நடத்தினர். அல்பேனியா தொழிலாளர் கட்சியும் இதற்குத் துணை நின்றது. குருச்சேவின் திருத்தல்வாதமும் அதற்கு எதிரான போராட்டமும் சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதிலும் பிரதிபலித்தன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைமை முற்றிலும் குருச்சேவ் திருத்தல் வாதத்தை ஆதரித்தது. எனவே அது ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாத நிலைப்பாடுகளை மட்டுமே அணிகளிடையே எடுத்துச் சென்றது. அதற்கு ஆதரவான ஆவணங்களை மட்டுமே பெரும்பாலும் மறுவெளியீடு செய்தது. குருச்சேவ் திருத்தல்வாதத்துக்கு எதிராக சீன கூ. கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட தத்துவார்த்த ஆவணங்கள் பலவற்றை இருட்டடிப்பு செய்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக் குள்ளாகவே திரிபுவாதத்துக்கு எதிராகப் போராடி வெளிவந்ததாகக் கூறிக்கொள்ளும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தலைமை சீனக் கட்சியின் புரட்சிகர நிலைப்பாடுகளை ஆதரிப்பது போல் காட்டிக் கொண்ட போதிலும் உண்மையில் அது சந்தர்ப்பவாத நிலைப் பாடுகளையே கொண்டிருந்தது. எனவே அதுவும் சீனக் கட்சியின் ஆவணங்கள் எதையும் மறுவெளியீடு செய்யாமலேயே 1999-ல் தனது சந்தர்ப்பவாத சித்தாந்த நிலைப்பாடுகளை அறிவித்தது.

நக்சல்பாரி விவசாயிகள் பேரெழுச்சியை அடுத்து 'மார்க்சிஸ்ட்' கட்சியின் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து நாடெங்கும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் கட்சியிலிருந்து வெளியேறினர். அவர்கள் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் ஒருங்கிணைப்புக் கமிட்டிகளை அமைத்தனர்.

மார்க்சிய-லெனினிய கட்சியையும் உருவாக்கினர். ஆனால் அவர்கள் கட்சியைக் கட்டுவதில் தத்துவார்த்த போராட்டத்தின் முக்கியத்துவத்தை புறக்கணித்தார்கள். ஆயுதப் போராட்டத்திற்கு அளித்த முதன்மையை தத்துவார்த்த போராட்டத்திற்கு அளிக்கத் தவறினார்கள். இதனால் இவர்களும் கூட குருச்சேவ் திரிபுவாதத்துக்கு எதிராக சீனக் கட்சி வெளியிட்ட தத்துவார்த்த ஆவணங்களை அனைத்து மொழிகளிலும் வெளிக்கொண்டு வரவில்லை.

சுருங்கச் சொன்னால் விசயம் இதுதான். திரிபுவாதிகளும், சந்தர்ப்ப வாதிகளும் புரட்சிகர தத்துவத்திற்கு அஞ்சி குருச்சேவ் திரிபுவாதத்துக்கு எதிரான சீனக் கட்சியின் ஆவணங்களை வெளியிடாமல் இருட்டடிப்பு செய்தனர். கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் தத்துவார்த்த போராட்டத்தின் அவசியத்தைக் குறைத்து மதிப்பிட்டு அதைப் புறக்கணித்ததன் காரணமாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணங்களை வெளியிடுவதில் அக்கறை காட்டவில்லை. லின்பியாவோ தொகுத்து வெளியிட்ட மாவோவின் மேற்கோள்கள் என்ற சிறு நூலையும், மக்கள் யுத்தம் நீடூழி வாழ்க என்ற லின்பியாவோவின் கட்டுரையையும், மாவோவின் புகழ் பெற்ற மூன்று கட்டுரைகள் என்ற ஒரு சிறு பிரசுரத்தையும் வெளியிடுவதில் காட்டிய அக்கறையில் ஆயிரத்தில் ஒரு பங்கைக் கூட குருச்சேவ் திரிபுவாதத்தை மயிரிழை அளவு கூட விட்டு வைக்காமல் முறியடிக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்பது விமர்சனக் கட்டுரைகளை வெளியிடுவதில் காட்டவில்லை.

அவர்கள் நவீன திரிபுவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடிப்பதாக பிரகடனப்படுத்தினார்கள். ஆனால் தத்துவார்த்த போராட்டத்தின் முக்கியத்துவத்தை புறக்கணித்தது அவர்கள் மாசேதுங் சிந்தனையை முழுமையாக கிரகித்துக் கொள்வதற்குத் தடையாக மாறியது. சீனப் புரட்சி வழியும், கலாச்சாரப்புரட்சி நடவடிக்கைகளுமே மாசேதுங் சிந்தனை என்பதாக பரவலாகக் கருதப்பட்டு விட்டது. இதன் விளைவு டெங்சியாவோபிங் கும்பல் சீனத்தில் மாசேதுங் சிந்தனைக்கு எதிராக தாக்குதல் தொடுத்தபோது தத்துவார்த்த ரீதியில் நிராயுதபாணியாக நின்றார்கள். தமக்குள்ளாகவே சித்தாந்த ஒருமைப்பாடு காண முடியாதவர்களாகி விட்டார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன் தத்துவார்த்த போராட்டத்தை புறக்கணித்து கட்சியைக் கட்டவும், புரட்சியை நடத்தவும் முயன்றதன் விளைவு இன்று இருபது ஆண்டுகளுக்குப் பின்னும் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள்முன் அதே கடமை எதிர்கொண்டிருக்கிறது. வரலாற்றுச் சக்கரம் இருபது ஆண்டுகள் சுழன்று மீண்டும் அதே இடத்தில் ஆனால்

புதிய தேவைகளையும் சேர்த்துக்கொண்டு வந்து நிற்கிறது. வரலாறு அவசியமான போராட்டங்களைத் தவிர்த்து விட்டு முன்னேறி விட முடியாது என்ற உண்மை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அறுபதாம் ஆண்டுகளில் குருச்சேவ் அதிகாரத்துக்கு வந்து திரிபுவாதத்தைப் புகுத்தியபோது உலகம் முழுவதிலும் இருந்த முதலாளித்துவவாதிகள் கம்யூனிசம் தோற்றுவிட்டது, மார்க்சியம் தோற்றுவிட்டது என்று கூரை மேல் நின்று மகிழ்ச்சியுடன் கூச்சலிட்டார்கள். அதே நேரத்தில் திரிபுவாதிகள் இதுதான் மார்க்சிய வழி என்றும், கம்யூனிசம் என்றும் பிரச்சாரம் செய்தார்கள். குருச்சேவ் திரிபுவாதத்திற்கு எதிராக நடத்திய மாபெரும் விவாதத்தில் மார்க்சியம் வெல்லப்பட முடியாதது, கம்யூனிசத்தின் வெற்றி தடுக்கப்பட முடியாதது என்றும் குருச்சேவின் திரிபுவாதம் முதலாளித்துவ சித்தாந்தமே தவிர மார்க்சியமல்ல என்றும் மாவோ நிரூபித்துக் காட்டினார்.

இன்று ரசியாவில் கோர்பசேவும், சீனத்தில் டெங்சியாவோ பிங்கும் மேற்கொண்டிருக்கும் அதிவேக முதலாளித்துவ மீட்சி சீர்திருத்த நடவடிக்கைகளைப் பார்த்து உலகம் முழுவதிலும் உள்ள முதலாளித்துவவாதிகள் மார்க்சியம் தோற்றுவிட்டது, கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று குருச்சேவ் காலத்தைவிட பெருங் கூச்சலிடுகிறார்கள். அதே போல திரிபுவாதிகள் இதுதான் மார்க்சிய வழி என்றும், கம்யூனிசம் என்றும் உரத்த குரலில் பாட்டாளி வர்க்கத்திடம் பிரச்சாரம் செய்கிறார்கள். இந்த நேரத்தில் குருச்சேவ் திரிபுவாதத்திற்கு எதிராக மட்டுமின்றி லியூ-டெங், கோர்பசேவ் திரிபுவாதத்திற்கு எதிராகவும் போராட்டம் நடத்தப்பட வேண்டும். இந்த வரலாற்றுத் தேவையின் விளைவே கேடயம் வெளியீடாக 'திரிபுவாதத்திற்கு எதிராக'வும் 'மாபெரும் விவாதமும்' வெளியிடப்படுவதாகும்.

2

மாபெரும் விவாதம் நடந்த ஆண்டுகள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் புயல் வீசிய ஆண்டுகளாகும். குருச்சேவின் திரிபுவாதத் துக்கு எதிரான போராட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இந்த புயல் வீசத் தொடங்கியது. இன்றும் அதன் அலைகள் ஓய்ந்து விடவில்லை.

மாவோவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் குருச்சேவின் திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தை நடத்தும் போது மிகுந்த கவனத்துடன் இருந்தார்கள். ரசியா உலகிலேயே முதன் முதலாக சோசலிசப் புரட்சியை நடத்திய நாடு, மாபெரும் லெனினால் தலைமை தாங்கப்பட்ட நாடு, சோசலிச கட்டுமானத்தில் மிகப்பெரும் சாதனைகளை லெனின் தலைமையிலும், ஸ்டாலின் தலைமையிலும் சாதித்த நாடு, எனவே ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும், நாடும் உலகெங்கும் உயர்ந்த மதிப்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவையாய் இருந்தன என்பதையும் அத்தகைய ஒரு நாட்டில் குருச்சேவ் உள்ளிருந்தே அதிகாரத்தைக் கைப்பற்றி திரிபுவாதத்தைப் புகுத்தினார் என்பதையும் அவர்கள் கவனத்தில் கொண்டார்கள்.

மேலும் குருச்சேவ் திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியங்களின் தீய நோக்கங்களுக்கு உதவுவதாக அமைந்து விடக்கூடாது என்பதிலும், ரசியக் கட்சியின் தலைவர்களை தவறான பாதையிலிருந்து திருத்தி சரிப்படுத்த உதவுவதாக இருக்க வேண்டும் என்பதிலும் அவர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள். எனவேதான் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மீதான விமர்சனங்களை பகிரங்கமாக வைப்பதையும், பெயர் குறிப்பிட்டு விமர்சிப்பதையும் நீண்ட காலம் தவிர்த்து வந்தனர். நேரில் சந்திக்கும்போது சுட்டிக்காட்டி விமர்சிப்பது, மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் பொதுவான கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் திரிபுவாதத்தை எதிர்ப்பது, பெயர் குறிப்பிடாமல் விமர்சிப்பது, அவசியமான சமரசங்கள் செய்து கொள்வது என்ற அணுகுமுறைகளையே மேற்கொண்டனர்.

ஆனால் தோழர் மாவோவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் மேற்கொண்ட இந்த பொறுப்பு மிக்க அணுகுமுறையை ரசிய குருச்சேவ் திரிபுவாதக் கும்பல் தனது தீய, வஞ்சகத்தனமான பிளவுவாத நோக்கங்களுக்கே பயன்படுத்திக் கொண்டது.

1953-ல் ஸ்டாலின் மறைந்தார். 1956-ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ் கூடியது. இந்த மூன்று ஆண்டுகளில் கட்சியிலும், அரசாங்கத்திலும் முழு அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட குருச்சேவ், கட்சியின் 20-வது காங்கிரசில், உலக நிலைமையில் 'புரட்சிகர மாற்றங்கள்' ஏற்பட்டுள்ளன என்ற காரணம் கூறி ஏகாதிபத்தியம், யுத்தம், சமாதானம் பற்றிய லெனினிய கோட்பாடுகளைத் திரித்துப் புரட்டினார். 'பாரளுமன்றப் பாதை' மூலமாக சோசலிசத்திற்கு அமைதியான முறையில் மாறிச் செல்வது என்ற திரிபுவாதக் கோட்பாட்டை முன் வைத்தார். பல்வேறு சமுதாய அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான

சகவாழ்வு என்ற சரியான லெனின் கோட்பாட்டைத் திரித்து 'மூன்று சமாதானக் கொள்கைகள்' என்ற திரிபுவாதக் கோட்பாட்டை முன் வைத்தார். சமாதான சகவாழ்வை ரசியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் பொதுவழியாக அறிவித்தார். இதன் மூலம் சோசலிச நாடுகளின் பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு, ஒடுக்கப்பட்ட நாடுகளின், மக்களின் போராட்டங்களுக்கு உதவி என்ற வெளிநாட்டுக் கொள்கையைப் புறக்கணித்தார். இவை எல்லாவற்றையும் சமாதான சகவாழ்வு என்ற கொள்கையின் கீழ் கொண்டுவந்தார். மேலும் ஸ்டாலின் தவறுகளை விமர்சிப்பது என்ற பெயரில் அவருடைய ஈதனைகளைத் தாக்கி இழிவுபடுத்தினார்.

எதிரிகளுக்கு எதிரான ஒற்றுமையைப் போற்றும் பொருட்டு சீனக் கட்சியும் மாவோவும் ரசியக் கட்சியின் 20-வது காங்கிரஸ் மற்றும் குருச்சேவின் தவறுகளை பகிரங்கமாக விமர்சிப்பதைத் தவிர்த்தனர்.

மாவோவும், சீனக் கட்சியின் பிறதலைவர்களும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர்களையும், பிரதிநிதிகளையும் நேரில் சந்தித்த போது ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 50 வது காங்கிரசின் திரிபு வாத நிலைப்பாடுகளுடன் தமது உடன்பாட்டின்மையைத் தெரிவித்து தவறுகளைச் சுட்டிக்காட்டி விமர்சித்தனர். அமைதிவழியில் மாற்றம் பற்றிய பிரச்சினையில் தமது கருத்துக்களை எழுத்துப் பூர்வமான, விரிவான, விளக்கமான அறிக்கையாக அளித்தனர்.

மேலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1956 ஏப்ரலில் 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவத்தைப் பற்றி' என்ற கட்டுரையையும், டிசம்பரில் 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவத்தைப் பற்றி மேலும் சில கருத்துக்கள்' என்ற கட்டுரையையும் வெளியிட்டது. இக்கட்டுரைகள் ரசியக் கட்சியின் 20-வது காங்கிரசின் தவறுகளை பெயர் குறிப்பிடாமல் விமர்சித்து மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளுக்காகப் போராடின.

1957 நவம்பரில் சோசலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மாநாடு மாஸ்கோவில் நடைபெற்றது. இதில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி முன் வைத்த நகல் பிரகடன அறிக்கை முற்றமுழுக்க அதன் 20-வது காங்கிரசின் திரிபுவாதக்கோட்பாடுகளையே கொண்டிருந்தது. தோழர் மாவோ தலைமையில் அக்கூட்டத்தில் கலந்து கொண்ட சீனக் கட்சியின் பிரதிநிதிக் குழுவும் பிற சகோதரக் கட்சிகளும் அவ்வறிக்கையின் திரிபுவாதக் கோட்பாடுகளுக்கு எதிராகப் போராடினர். இதன் விளைவாக ரசியக் கட்சியின் 20-வது காங்கிரஸ் முன்வைத்த ஏகாதிபத்தியம், யுத்தம், சமாதானம் பற்றிய திரிபுவாதக்

கருத்துக்கள் களையப்பட்டு பிரகடனம் சரி செய்யப்பட்டது. சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச கட்டுமானம் பற்றிய பொது வழி பற்றிய கோட்பாடுகள் சேர்க்கப்பட்டன, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது புரட்சியின் தொடக்கம்தானே தவிர முடிவல்ல. முதலாளியமா, சோசலிசமா எது வெல்லும் என்ற பிரச்சினை தீர்க்கப்பட நீண்ட காலம் ஆகும் என்பது போன்ற சரியான கருத்துக்களும் சேர்க்கப்பட்டன. மேலும் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு அமைதிவழியிலல்லாத மாற்றம் பற்றிய கருத்துக்களும் சேர்க்கப்பட்டன இது குறித்து நகல் அக்றிகையில் எதுவுமே இல்லாதிருந்தது. என்றாலும் ரசியக் கட்சியின் தலைவர்கள் மாநாட்டின் பிரகடனம் 20-வது காங்கிரசுடன் சிறிதாவது தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்று திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டதன் காரணமாக சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமை கருதி 'அவசியமான சமரசமாக' அறிக்கையில் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாற்றம் பற்றிய திருப்தியற்ற கருத்துக்கள் இடம் பெறுவதை சீனக் கட்சியின் பிரதிநிதிக் குழு ஏற்றுக்கொண்டது.

எனினும் ரசியக் கட்சியின் தலைவர்கள் 1957-ம் ஆண்டு பிரகடனத்தில் சேர்க்கப்பட்ட பு ர ட் சி க ர நிலைபாடுகளைப் பின்பற்றுகின்றவர்களாக இல்லை. தொடர்ந்து அவர்களுடைய கட்சியின் 20-வது காங்கிரசின் போர் இல்லாத உலகம், ஏகாதிபத்தியங்களின் நல்லெண்ணம், அமைதி வழி மாற்றம் பற்றிய திரிபுவாதா கருத்துக்களையே பரப்பி வந்தனர். இதனால் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட குழப்பத்தைக் களைவதற்காக சீனக் கட்சி 'லெனினியம் நீடூழி வாழ்க' என்ற கட்டுரையையு மற்றும் இரண்டு கட்டுரைகளையும் 1960 ஏப்ரலில் வெளியிட்டது. ரசியக் கட்சியின் தவறான கருத்துக்களை இக்கட்டுரைகள் மறுத்து சரியான கோட்பாடுகளை உயர்த்திப் பிடித்தன. விரிவான நலன் கருதி இக் கட்டுரைகளிலும் ரசியக் கட்சியின் பெயர் குறிப்பிட்டு விமர்சிப்பதை சீனக் கட்சி தவிர்த்தது.

ஆனால் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அணுகுமுறை வேறாக இருந்தது. கட்சிகளுக்கு இடையிலான முரண்பாட்டை அது அரசு மட்டத்திற்கு உயர்த்தியது. 1957-ல் ரசியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் உருவான தேசிய பாதுகாப்புக்கான தொழில்நுட்ப ஒப்பந்தத்தை 1959-ல் தன்னிச்சையாகக் கிழித்தெறிந்தது; அணுகுண்டு தொழில்நுட்ப விபரங்களையும், மாதிரியையும் சீனத்திற்கு அளிக்க மறுத்தது. 1960 ஜூனில் புகாரெஸ்டில் கூடிய சகோதரக் கட்சிகளின் கூட்டத்தில் சீனக் கட்சியை 'வறட்டு வாதிகள்' 'இடதுசாரி

தீவிரவாதிகள்','பிளவுவாதிகள்', 'போலிப் புரட்சியாளர்கள்', 'யூகோஸ்லாவியாவை விட மோசமானவர்கள்', 'பைத்தியக்காரர்கள்', 'யுத்த வெறியர்கள்', 'தேசிய வெறியர்கள்', 'டிராட்ஸ்கியவாதிகள்' என்றெல்லாம் அவதூறு பொழியும் கடிதம் ஒன்றை சுற்றுக்கு விட்டது. ரசியாவும்—சீனாவும் இரு நாடுகளின் நட்புறவுக்காக தனித்தனியே பத்திரிகைகள் வெளியிடுவது எனத் தீர்மானித்திருந்த திட்டத்தை தன்னிச்சையாக ரத்து செய்தது. மேலும் சீனத்தில் பணியாற்றி வந்த எண்ணற்ற ரசிய தொழில்நுட்ப வல்லுனர்கள் அனைவரையும் தன்னிச்சையாகத் திரும்பப் பெற்றுக் கொண்டதுடன் அது சம்பந்தமான ஒப்பந்தங்கள் அனைத்தையும் ரத்து செய்தது.

1960 நவம்பரில் 81 நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம் மாஸ்கோவில் நடைபெற்றது. முன்னதாக அக்டோபரில் நவம்பர் கூட்டத்திற்கான நகல் அறிக்கை தயாரிப்பதற்கு 21 நாடுகளின் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கூட்டம் நடத்தப்பட்டது. அக்டோபரில் கூடிய கூட்டத்தில் ரசியா தனது சொந்த திரிபுவாத நகல் அறிக்கை ஒன்றை வைத்தது. சீனக் கட்சியும் மற்ற சகோதரக் கட்சிகளும் ரசியா முன்வைத்த அறிக்கையில் திரிபுவாத நிலைப்பாடுகளுக்கு எதிராகப் போராடியதன் விளைவாக பல முக்கிய கொள்கை மாற்றங்கள் அறிக்கையில் செய்யப்பட்டன.

அக்டோபர், நவம்பர் ஆகிய இரு கூட்டங்களிலும் ரசியக் கட்சி முன்வைத்த ''மூன்று சமாதான'' திரிபுவாதக் கொள்கைகள் நிராகரிக்கப்பட்டன. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமை கருதி முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச்செல்லும் வடிவம் பற்றிய பகுதி 1957-ம் ஆண்டு அறிக்கையில் உள்ளதைப் போல் மாற்றியமைக்கப்பட்டதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் — ஒரு ஆனால் இறுதியான சமரசம் எனக் கூறி— ஏற்றுக்கொண்டது.

ஆனால் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சி 1957-ம் ஆண்டு பிரகடனம், 1960 ஆம் ஆண்டு அறிக்கை ஆகியவற்றில் இணைக்கப்பட்ட புரட்சிகர நிலைப்பாடுகளில் ஊன்றி நிற்கவில்லை. அதன் 20-வது காங்கிரசின் திரிபுவாத நிலைப்பாடுகளிலேயே ஊன்றி நின்றது.

1961-ம் ஆண்டு நடந்த அதன் 22-வது காங்கிரசில் குருச்சேவ் திரிபுவாதிகள் 1957-ம் ஆண்டு பிரகடனம், 1960 ஆம் ஆண்டு அறிக்கைகளின் புரட்சிகர நிலைப்பாடுகளை முற்றிலும் புறக்கணித்தனர். 1957-ம் ஆண்டு பிரகடனமும்,1960-ம் ஆண்டு அறிக்கையும் புறக்கணித்த

மூன்று 'சமாதான' திரிபுவாதக் கொள்கைகளையும், 20-வது காங்கிரசின் அனைத்து திரிபுவாதக் கொள்கைகளையும் அப்படியே உயர்த்திப் பிடித்ததுடன் 'அனைத்து மக்கள் அரசு', 'அனைத்து மக்கள் கட்சி' என்ற திரிபுவாத கோட்பாடுகளையும் சேர்த்துக்கொண்டனர்.

22-வது காங்கிரஸ் திட்டம் முதலாளித்துவத்தைப் பாதுகாக்கின்ற, முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டு வருகின்ற திட்டம் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் ரசியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களிடம் நேரிலேயே விமர்சித்தனர்.

ஆனால் குருச்சேவ் இவ்விமர்சனங்களுக்கு செவிமடுப்பவராக இல்லை. 'சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் சமீபகாலத்திய முழுமையான லெனினியக் கொள்கை' என்றும், 'நம் காலத்தின் உண்மையான கம்யூனிசஅறிக்கை' என்றும், 'கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் தொழிலாளர் கட்சிகளுக்கும், சோசலிச முகாமைச் சேர்ந்த அனைத்து நாட்டு மக்களுக்குமான 'பொதுத் திட்டம்' என்றும் குருச்சேவ் திரிபுவாதிகள் தமது திரிபுவாதப் பாதையை தொடர்ந்து பிரச்சாரம் செய்தனர். அவர்களுடைய திரிபுவாத வழியை விமர்சிப்பவர்களை எதிரிகளாகக் கருதினர். தொடர்ந்து குருச்சேவின் திரிபுவாதத்தை எதிர்த்து வந்த அல்பேனியாவுடன் எல்லாவித உறவுகளையும் துண்டித்துக்கொண்டனர்.

இந்த நேரத்தில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைப் பேண வேண்டும் என்ற நோக்கத்துடன் வியட்னாம், இந்தோனேசியா, நியூசிலாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த சகோதரக் கட்சிகள், சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்ற யோசனையையும், சகோதரக்கட்சிகளின் கூட்டத்தை கூட்டுவதற்கான தயாரிப்புக்காக சீனக்கட்சி 1962 ஏப்ரலில் முன்வைத்த 5 ஆலோசனைகளையும் ரசியக் கட்சி நிராகரித்துவிட்டது.

மேலும் சீனாவுக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் ரசியா இந்தியாவை ஆதரித்ததுடன் அதற்கு ஆயுத உதவியும் அளித்தது. 1957 பிரகடனம், 1960 அறிக்கை ஆகியவற்றின் முடிவுகளுக்கு மாறாக யூகோஸ்லாவியாவை சோசலிச நாடு எனக்கூறி அதனுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டது. 40-க்கும் மேற்பட்ட சகோதரக் கட்சிகளை சீனாவுக்கு எதிராக அறிக்கை விடும்படி தூண்டிவிட்டதுடன் அவற்றின் காங்கிரஸ் மேடைகளை சீன எதிர்ப்பு பிரச்சார மேடையாகப் பயன்படுத்தியது.

இந்நிலையில் அவற்றுக்கு பகிரங்கமாக பதிலளிக்கும் அவசியம் சீனக் கட்சிக்கு நேர்ந்தது. அப்போது கூட ரசியக் கட்சியைப் பெயர் குறிப்பிட்டு விமர்சனம் செய்வதைத் தவிர்த்தது. 1963 ஜுன் 14-ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு எழுதிய பதில் கடிதத்தில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய ஆலோசனையை தோழமையுடன் முன்வைத்தது.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய சீனக் கட்சியின் ஆலோசனையை விமர்சித்து ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தனது கட்சி அணிகளுக்கு ஒரு பகிரங்கக் கடிதத்தை எழுதி வெளியிட்ட பின்பே சீனக் கட்சி ரசியாவின் திருத்தல்வாத நிலைப்பாடுகளை எதிர்த்து பகிரங்கமாக பெயர் குறிப்பிட்டு ஒன்பது விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டது.

இக்கட்டுரைகள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தைப் பிளவுபடுத்திய குருச்சேவ் கும்பலின் வஞ்சகத்தனமான துரோகத்தனத்தை அம்பலப் படுத்துவதுடன் அதன் திரிபுவாதத்தை சகல கோணங்களிலும் தோலுரித்துக் காட்டுகின்றன. ஸ்டாலின் தவறுகள் மீதான விமர்சனங்கள் என்ற பெயரில் ஸ்டாலின் சாதனைகள் மீதும் மார்க்சிய கோட்பாடுகள் மீதும் குருச்சேவ் கும்பல் தொடுத்த தாக்குதலை முறியடிக்கின்றன. யுத்தம், சமாதானம், ஏகாதிபத்தியம் பற்றிய லெனினிய கோட்பாடுகளை குருச்சேவ் கும்பல் திரித்துப் புரட்டுவதை அம்பலப்படுத்தி பாதுகாக்கின்றன. யூகோஸ்லாவியாவில் திரிபுவாதி டிட்டோ துரோகக் கும்பலால் முதலாளித்துவம் மீட்டமைக்கப்பட்டிருப்பதை நிறுவுவதுடன் சமாதான சகவாழ்வு பற்றிய லெனினிய கோட்பாட்டை குருச்சேவ் கும்பல் திரித்து தனது மேலாதிக்க நோக்கங்களுக்காக மூன்று சமாதானக் கொள்கைகளை முன் வைப்பதை அம்பலப்படுத்துகின்றன. குருச்சேவ் கும்பலின் வர்க்க சாராம்சம் ரசியாவில் உள்ள சலுகை பெற்ற சுரண்டும் கூட்டமே என்பதையும், அதன் திரிபுவாதக் கோட்பாடு முதலாளித்துவ கோட்பாடே என்பதையும் தெளிவுபடுத்துகின்றன. சோசலிசத்தில் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும், இருபாதைகளுக்கு இடையிலான போராட்டமும், முதலாளித்துவ மீட்சிக்கான அபாயமும் நீண்ட காலத்துக்கு நிலவும் என்பதை எடுத்துக்காட்டுவதுடன் குருச்சேவின் அனைத்து மக்களுக்குமான அரசு, அனைத்து மக்களுக்குமான கட்சி என்ற திரிபுவாதக் கோட்பாடுகளை முறியடித்து பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளைப் பாதுகாக்கின்றன. மொத்தத்தில் இந்த ஒன்பது விமர்சனக் கட்டுரைகளும் மார்க்சிய-லெனினிய பெட்டகத்தில் சேர்க்கப் பட்ட ஒப்பற்ற புதிய செல்வங்களாகும்.

அந்த ஒன்பது கட்டுரைகளில் கூட முதல் எட்டுக் கட்டுரைகள் தோழமைப் பூர்வமாக ரசியக் கட்சியின் திரிபுவாத நிலைப்பாடுகளை கோட்பாட்டு நிலைகளிலிருந்து எதிர்த்து முறியடிப்பதாகவே இருந்தன. ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை திருந்துவதற்கான எந்த அறிகுறியும் இறுதிவரை தென்படாத நிலையிலேயே 9-வது விமர்சனக் கட்டுரை திரிபுவாத குருச்சேவ் கும்பல் என்றும், அது ரசியாவில் சலுகை பெற்ற சுரண்டும் பிரிவின் பிரதிநிதி என்றும், ரசியாவில் அது முதலாளித்துவத்தை மீட்டமைக்கிறது என்றும் நேரடியாக விமர்சனம் செய்தது.

ஒன்பதாவது விமர்சனக் கட்டுரை வெளிவந்த சில மாதங்களிலேயே குருச்சேவ் வீழ்ச்சியடைந்தார். ஒரு ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் பிரஸ்னேவ், கோஷிஜின் கும்பல் கட்சியிலும், அரசாங்கத்திலும் குருச்சேவை விரட்டி விட்டு அதிகாரத்தைக் கைப்பற்றியது. குருச்சேவ் வீழ்ந்தவுடன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி குருச்சேவ் ஏன் வீழ்ந்தார் என்ற கட்டுரை ஒன்றை வெளியிட்டது. குருச்சேவிற்குப் பின் அதிகாரத்துக்கு வந்த பிரஷ்னேவ் கும்பல் குருச்சேவின் திரிபுவாதக் கொள்கைகள் எதிலும் மாற்றம் கொண்டு வரவில்லை. குருச்சேவின் திரிபுவாதப் பாதையையே பின்பற்றியது என்பதோடு மேலாதிக்க நோக்கங்களுடன் திட்டமிட்டு செயல்படத் தொடங்கியது. இந்த நிலையில் 1970-ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ''லெனினியமா, சமூக ஏகாதிபத்தியமா?'' என்ற கட்டுரை ஒன்றை வெளியிட்டு திருத்தல்வாத ரசியா ஒரு சமூக ஏகாதிபத்தியமே என்று பிரகடனப்படுத்தியது.

சுருங்கச் சொன்னால் ரசிய குருச்சேவ் திரிபுவாதத்துக்கு எதிரான மாவோவின் போராட்டம் உலகின் கபடத்தனம் வாய்ந்த ஒரு மாபெரும் வஞ்சகனுக்கு எதிரானதாய் இருந்தது. எனவே அவருடைய அணுகு முறை மிகவும் கவனமிக்கதாய் இருந்தது. சர்வதேச அரங்கில் ரசிய குருச்சேவ் திருத்தல்வாதத்துக்கு எதிரான போராட்டம் சர்வதேச கம்யூனிச இயகக்த்தின் ஒற்றுமையைப் பாதிப்பதாக இருந்துவிடக் கூடாது என்ற கவலையுடன் கூடியதாக இருந்தது. எனவே அது அவசியமான சமரசங்களைச் செய்துகொள்வதாக இருந்தது.

முற்றிலும் திரிபுவாதப் பாதையைத் தேர்வு செய்துகொண்ட குருச்சேவ் கும்பல் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் முற்றிலும் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப் போகாமல் இருப்பதற்காக வஞ்சகத் தனமாக 1957 பிரகடனம், 1960 அறிக்கை ஆகியவற்றில் புரட்சிகர நிலைப்பாடுகளை இணைப்பதை ஏற்றுக்கொண்டது. என்றாலும் அது தனது திருத்தல்வாதப் பாதையிலேயே ஊன்றிநின்றது. அதன் 22-வது

காங்கிரசிலும் அதன் பின்னரும் தனது திருத்தல்வாதப் பாதையையே நடைமுறைப்படுத்தி உலக கம்யூனிச இயக்கத்தைப் பிளவுபடுத்தியது. உலகம் முழுவதும் முதலாளித்துவ கம்யூனிஸ்ட் கட்சிகளை உருவாக்கியது

ரசிய கட்சியின்பால் தனது அணுகுமுறை குறித்து தோழர்கள் விமர்சித்தால் தாம் சுயவிமர்சனம் செய்துகொள்வதாக சீனக்கட்சி தனது விமர்சனக் கட்டுரையொன்றில் கூறியிருக்கிறது. ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த அணுகுமுறை சரியா, தவறா என்பதை நாம் இங்கு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவில்லை. இங்குள்ள பிரச்சினையும் அதுவல்ல. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அணுகுமுறை சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கவலையும், பொறுப்பும் கொண்டதாக இருந்தது; புரட்சிகர மார்க்சிய கோட்பாடுகளை உயர்த்திப்பிடிக்கும் அக்கறையும் உத்வேகமும் கொண்டதாக இருந்தது. இதற்கு மாறாக ரசியக் கட்சியின் அணுகுமுறை கபடத்தனமானதாகவும், பிளவுவாதமாகவும், துரோகத்தனமாகவும் இருந்தது என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும்.

3

1957-70ஆம் ஆண்டுகளில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நடைபெற்ற மாபெரும் விவாதம் புரட்சி குறித்த இரண்டு பிரச்சினைகளை மையங்கொண்டிருந்தது. முதலாவதாக, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றியது. அதாவது தயாராய் இருக்கும் முதலாளித்துவ அரசு எந்திரத்தை நொறுக்கி எறிந்துவிட்டு பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதா அல்லது பாராளுமன்றப் பாதையைப் பின்பற்றி முதலாளி வர்க்கத்துக்கு சரணடைவதா என்பதாகும். இரண்டாவது, பாட்டாளிவர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியபின் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி சமுதாயத்தை கம்யூனிச சமுதாய கட்டத்திற்கு வளர்த்துச் செல்வதா அல்லது வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டமைப்பதா என்பதாகும்.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளை எதிர்த்து லெனின் போராடியபோது உலகில் சோசலிசநாடு எதுவும் இல்லை. எனவே முதல் பிரச்சினை மட்டுமே

அப்போது நிகழ்ச்சிநிரலில் இருந்தது. ஆனால் குருச்சேவ் புரட்டல் வாதத்துக்கு எதிரான போராட்டம் தொடங்கியபோது உலகின் மூன்றில் ஒரு பங்கு மக்கள் சோசலிச நாடுகளில் இருந்தனர். அங்கு முதலாளித்துவ மீட்சிக்கான முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன. எனவே இயல்பாகவே குருச்சேவ் புரட்டல்வாதத்துக்கு எதிரான போராட்டம் இரண்டு பிரச்சினைகளையும் நிகழ்ச்சி நிரலில் கொண்டிருந்தது.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்தனர். உள்நாட்டுப் புரட்சி யுத்தத்தைக் கைவிட்டனர். இதன்மூலம் பாட்டாளி வர்க்கத்தை முதலாளி வர்க்கத்துக்கு சரணடையச் செய்தனர். 'அதீத ஏகாதிபத்தியம்'என்றகொள்கையின் மூலமும்,'சோசலிசத்தில் காலனியம் நன்மை பயக்கும்' என்ற கொள்கையின் மூலமும் உலக யுத்தத்தின் போது 'தாயாகத்தைப் பாதுகாப்போம்' என்ற முழக்கத்தின் மூலமும் ஏகாதிபத்தியத்தையும் ஏகாதிபத்திய கொள்கைகளையும் ஆதரித்தனர்; சோசலிசம் பேசிக்கொண்டே புரட்சி யுத்தத்தை எதிர்ப்பவர்களாகவும், ஏகாதிபத்தியத்தையும், ஏகாதிபத்திய கொள்கைகளையும் ஆதரிப்பவர்களாகவும் இருந்த இவர்களை சமூக தேசிய வெறியர்கள் என்றும் சமூக ஏகாதிபத்தியவாதிகள் என்றும் லெனின் அடையாளம் காட்டினார்.

இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளைப்போலவே அறுபதாம் ஆண்டுகளில் குருச்சேவ் புரட்டல்வாதிகள் உள்நாட்டு புரட்சி யுத்தங்களைக் கைவிடும் கோட்பாடுகளை முன்வைத்தனர். 'முதலாளித்துவ பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதன் மூலம் பாராளுமன்றத்தை மக்களின் விருப்பத்திற்கான கருவியாக மாற்றுவது' பாராளுமன்றப்பாதைமூலம் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு 'சமாதான முறையில் மாறுவது' போன்ற கோட்பாடுகளை முன்வைத்ததன்மூலம் குருச்சேவ் உள்நாட்டு புரட்சி யுத்தங்களை எதிர்த்தார்; பாட்டாளிவர்க்கத்தை முதலாளிவர்க்கத்துக்கு சரணடையச் செய்தார். தனது ஏகாதிபத்திய, மேலாதிக்க நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மூன்று சமாதான கோட்பாடுகளை' முன்வைத்தார். அதன் மூலம் ஏகாதிபத்தியத்தையும், ஏகாதிபத்திய கொள்கைகளையும் ஆதரிக்கும் சமூக ஏகாதிபத்தியவாதியாக இருந்தகர்.

குருச்சேவின் இந்த திரிபுவாதக் கொள்கைகளை எதிர்த்து மாவோ போராடினார். முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச் செல்வதற்கு ஒவ்வொரு நாட்டின் பாட்டாளி வர்க்கமும் தமது சொந்த

நாட்டில் புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தை நடத்த வேண்டியதின் அவசியத்தை அவர் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தார். உலகமெங்கும் பாட்டாளி வர்க்கம் நடத்தும் புரட்சிகர யுத்தங்கள் மூலமாக மட்டுமே ஏகாதிபத்தியங்கள் ஒழிக்கப்பட முடியும், மூன்று சமாதான கோட்பாடுகளினால் அல்ல என்பதை எடுத்துரைத்தார்.

சோசலிசம் பற்றிய மார்க்சிய—லெனினிய கோட்பாடுகளையும் குருச்சேவ் திரித்துப் புரட்டினார். சோசலிசம் என்பது முதலாளியத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையிலான ஒரு காலகட்டம்; பாட்டாளி வர்க்க சர்வாதிகரத்துக்கான காலகட்டப்; புரட்சிகர மாற்றத்திற்கான காலகட்டம் என்று மார்க்சும், மடிந்துவரும் முதலாளித்துவத்துக்கும், இளம் பருவத்திலிருக்கும் கம்யூனிசத்திற்கும் இடையிலான போராட்ட காலகட்டம் என்று லெனினும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் குருச்சேவ் ரசியாவில் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் இல்லை என்றும் அரசும், கட்சியும் அனைத்து மக்களுக்குமானதாக மாறிவிட்டதென்றும் புரட்டல்வாதக் கொள்கையை முன்வைத்தார். இதன் மூலம் உள்நாட்டில் சோசலிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை மீட்டமைப்பவராகவும், அதன் பாதுகாவலராகவும் இருந்தார். குருச்சேவின் இந்த திரிபுவாதக் கொள்கைகளையும் எதிர்த்துப் போராடிய மாவோ சோசலிச சமுதாயத்தில் நீண்டகாலத்திற்கு வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும், இருபாதைகளுக்கு இடையிலான போராட்டமும் நீடிக்கும் என்றும், எது வெல்லும் சோசலிசமா முதலாளித்துவமா என்பது நீண்ட காலத்திற்குத் தீர்மானிக்க பட முடியாது என்றும், முதலாளித்துவம் மீட்டமைக்கப் படுவதற்கான அபாயம் நீடிக்கும் என்றும் எடுத்துரைத்தார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் புரட்சியை தொடர்வது பற்றிய கோட்பாட்டையும் வளர்த்தெடுத்தார்.

4

லெனினுக்குப் பின் சர்வதேச பாட்டாளிவர்க்கத்தின் ஒப்புயர்வற்ற தலைவராகவும் ஆசானாகவும் திகழ்ந்தவர், ரசியாவில் சோசலிச கட்டுமானத்தில் நிகரற்ற சாதனைகள் நிகழ்த்தியவர் ஸ்டாலின். அவர் ரசியாவில் உற்பத்தி சாதனங்களில் தனியுடமையை ஒழித்து கூட்டுறவு மயமாக்கத்தை நிறைவேற்றினார். அதற்கு எதிரான எல்லா முதலாளித்துவப் பாதையாளர்களையும் முறியடித்தார். ஆனால் கூட்டுறவு மய்மாக்கத்திற்குப் பின் சமுதாயத்தில் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் இருப்பதைக் காணத்தவறினார். புதிய

நிலைமைகளில் வர்க்க ஆய்வு செய்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தை, புரட்சியை வழிநடத்தத் தவறினார். கூட்டுறவு மயமாக்கத்திற்குப் பின்னும் சோசலிச சமுதாயத்தில் தொடர்ந்து முதலாளித்துவப் பாதைக்கும், சோசலிசப் பாதைக்கும் இடையிலான போராட்டம் தொடர்கிறது. முதலாளித்துவ மீட்சிக்கான அபாயம் நிலவுகிறது என்பதைக் காணத் தவறினார். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும், உர்பத்திப் பெருக்கமும் சமுதாயத்தை தாமே கம்யூனிசத்திற்கு இட்டுச் செல்லும் எனக் கருதினார். இதுவே ஸ்டாலின் செய்த தவறுகளிலேயே மிகப் பெரியதாகும்.

ஸ்டாலின் மறைவுக்குப் பின் அதிகாரத்திற்கு வந்த குருச்சேவ் ரசியக் கட்சியின் 20-22-வது காங்கிரசுகளில் திரிபுவாதத்தை அரங்கேற்றினார். சோசலிசத்தில் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும் இருப்பதை மறுத்தார். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், பாட்டாளிவர்க்கக் கட்சி ஆகியவற்றுக்குப் பதிலாக அனைத்து மக்கள் அரசு, அனைத்து மக்கள் கட்சி என்ற கருத்தை முன் வைத்தார். இருபத்தைந்து ஆண்டுகளில் உற்பத்தியையும் உற்பத்தி சக்திகளையும் பிரமாண்டமான அளவுக்கு வளர்த்து கம்யூனிச சமுதாயத்தைக் கட்டிவிடப்போவதாகப் பகட்டினார்.

அந்த ஆண்டுகளில் சீனத்திலும் இதே போன்ற திருத்தல்வாதப் போக்குகள் வெளிப்பட்டன. 1956-ல் ரசியக் கட்சியின் 20-வது காங்கிரசுக்குப் பின் சீனத்தில் நடைபெற்ற சீனக் கட்சியின் 8-வது காங்கிரசில் லியூசோஷி சீனத்தில் கூட்டுறவு மயமாக்கம் ஏறக்குறைய நிறைவேற்றப்பட்ட நிலையில் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு அடிப்படையில் தீர்ந்து விட்டது என்றும், முன்னேறிய உற்பத்தி உறவுகளுக்கும் பின்தங்கிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடாக இருக்கிறது என்றும் எனவே உற்பத்தி சக்திகளை வளர்ப்பதே தற்போதைய பிரதான பணி என்றும் அறிவித்தார். இதே கோட்பாடுகளே பின்னர் லின்பியாவோவாலும், டெங்சியாவோ பிங்காலும் முன்வைக்கப்பட்டன.

உண்மையில் உற்பத்தி சக்திகள் பற்றிய இவர்களுடைய கோட்பாடு முதலாளித்துவ உறவுகளைப் புகுத்தும் கோட்பாடாகும். உற்பத்தியைப் பெருக்குவதற்காக இவர்கள் பொருளாதார ஊக்கம், லாபத்தோடு இணைந்த உற்பத்தி, உற்பத்தியோடு இணைந்த ஊதியம் போன்ற முதலாளியக் கோட்பாடுகளையே முன்வைக்கிறார்கள்.

உற்பத்திப் பெருக்கத்திற்காகவும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்காகவும் என்ற பெயரில் சோசலிச உற்பத்தி உறவுகளை பின்னுக்குத் தள்ளி முதலாளித்துவ உறவுகளைக் கட்டமைக்கிறார்கள்.

இது மேலும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக மாறி மேலும் மேலும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை விரிவடையச் செய்யும் அவசியத்தை ஏற்படுத்துகின்றன. இந்த விஷச் சுழல் இறுதியில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை உடைத் தெறிந்து மீண்டும் சோசலிச உறவுகளை நிறுவும் புரட்சியின் அவசியத்தை முன்னிறுத்துகிறது.

ரசியாவிலும், சீனாவிலும் முதலாளித்துவப் பாதையாளர்களான திரிபுவாதிகள் அதிகாரத்துக்கு வந்த பின்னர் தொடர்ந்து ஏற்படும் நெருக்கடிகள் காரணமாக மேலும் மேலும் முதலாளித்துவ உறவுகள் விரிவாக்கப்படுவது இந்த உண்மையைப் புலப்படுத்துவதாகும்.

ஆனால் சோசலிசம் என்பது இத்தகையதல்ல. இங்கு உற்பத்தி மற்றும் உற்பத்தி சக்திகளின் தங்குதடையற்ற வளர்ச்சிக்காக உற்பத்தி உறவுகள் மேலும் மேலும் புரட்சிகரமாக மாற்றியமைக்கப்படுகின்றன. உற்பத்திப் பெருக்கத்திற்கும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும் பொருளாதார ஊக்கமும், லாபத்தோடு இணைந்த உற்பத்தியும், உற்பத்தியோடு இணைந்த ஊதியமும் தூண்டுதல் இலக்குகளாக வைக்கப்படுவதில்லை. மாறாக சோசலிச உற்பத்தி உறவுகளும், சோசலிச ஆன்மிக ஊக்கமுமே இலக்குகளாக வைக்கப்படுகின்றன. இதற்காக தொடர்ந்து சோசலிச கல்வியாலும், கலாச்சாரப் புரட்சியாலும் மக்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இந்தப் புரட்சிகர மாற்றம் பெரும்பாலும் அமைதிவழி மாற்றமே எனினும் சில சமயங்களில் 'உற்பத்தி சக்தி' கோட்பாட்டாளர்கள் உள்ளிருந்தே அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு முதலாளித்துவ பாதையில் சமுதாயத்தை வழிநடத்த முனையும் போது சோசலிச சமுதாயத்திற்குள்ளாகவே பாட்டாளி வர்க்கம் மீண்டும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான புரட்சிப் போராட்டமாகவும் இது வெடிக்கும். சீனத்தில் லியூசோஷி தலைமையை தூக்கியெறிவதற்காக நடத்தப்பட்ட கலாச்சாரப் புரட்சி உண்மையில் பாட்டாளி வர்க்கம் மீண்டும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான புரட்சியாகவே இருந்தது என்பது இதற்கு உதாரணமாகும்.

உற்பத்தி சாதனங்களில் தனியுடமை முறையை ஒழிப்பது; அரசு முதலாளித்துவம் மற்றும் கூட்டுறவு முறைமூலம் கூட்டுடமை முறைக்கும் அரசுடமை முறைக்கும், இறுதியாக அரசுடமை முறைக்கு கொண்டு

வருவது; நகர்ப்புறத்திற்கும் கிராமப்புறத்திற்கும் இடையிலான வேறுபாட்டையும், மூளை உழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையிலான வேறுபாட்டையும், விவசாயத்திற்கும் தொழிற்துறைக்கும் இடையிலான வேறுபாட்டையும் களைவது; சோசலிச கல்வி, கலாச்சாரப் புரட்சி மூலம் மக்களின் சோசலிச உணர்வை வளர்ப்பது; சோசலிச ஆன்மீக நாகரிகத்தில் பயிற்றுவிப்பது; இவ்வாறு சோசலிசத்தில் உற்பத்தி உறவுகள் மேலும் மேலும் புரட்சிகரமாக மாற்றியமைக்கப்பட்டு கம்யூனிச சமுதாயம் நிறுவப்படும். இது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் முதலாளித்துவ வர்க்கத்துக்கும், முதலாளித்துவ பாதைக்கும் எதிரான போரட்டமும் இன்றி சாத்தியமற்றதாகும்.

ரசிய, சீன அனுபவங்களையும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அனுபவங்களையும் தொகுத்த மாவோ சோசலிச சமுதாயம் கம்யூனிச சமுதாயமாக மாறுவதற்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது பற்றியும், அரசியலை ஆணையில் வைப்பது பற்றியும், வர்க்கப் போராட்டத்தை பிரதான கண்ணியாகக் கொள்வது பற்றியும் உலகப் பாட்டாளி வர்க்கத்துக்குப் போதித்திருக் கிறார்.

5

மாவோவின் மறைவுக்குப்பின் சீனத்தில் டெங்சியாவோ பிங் தலைமையில் முதலாளித்துவப் பாதையாளர்கள் கட்சியிலும் ஆட்சியிலும் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். ரசியாவில் குருச்சேவின் வாரிசாக பிரஷ்னேவுக்குப்பின் கோர்பசேவ் பதவியேற்றிருக்கிறார். மாபெரும் 'லெனினாலும் ஸ்டாலினாலும் தலைமை தாங்கப்பட்ட ரசியாவில் கோர்பசேவும், தோழர் மாவோவால் தலைமை தாங்கப்பட்ட சீனத்தில் டெங்சியாவோ பிங்கும் மிக துரித வேகத்தில் முதலாளித்துவ உறவுகளை விரிவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மறுசீரமைப்பு, பகிரங்கப்படுத்துதல், ஜனநாயகப்படுத்துதல் என்றெல்லாம் பெருத்த கூச்சலுடன் கோர்பசேவ் செய்து வருவது அனைத்தும் உற்பத்தியிலும் நிர்வாகத்திலும் முதலாளித்துவ உறவுகளை முழு அளவுக்கு விரிவு படுத்துவதாயிருக்கிறது.

நான்கு நவீனமயமாக்கலுக்காக சீனத்தில் டெங்சியாவோ பிங் உற்பத்தியிலும், நிர்வாகத்திலும் முழுவேகத்தில் முதலாளித்துவ உறவுகளைக் கொண்டு வருகிறார்.

இவற்றைப் பார்த்து உலகம் முழுவதும் முதலாளித்துவவாதிகள் மகிழ்ச்சிக் கூக்குரல் இடுகிறார்கள். குருச்சேவுக்கு அவர்கள் தெரிவித்த வரவேற்பையும் மகிழ்ச்சியையும் விட கோர்பசேவுக்கும், டெங்குக்கும் தெரிவிக்கின்றார்கள். கோர்பசேவ் மாபெரும் 'புரட்சி'யை நிகழ்த்தியிருக்கிறார் என்றும், அவர் மாபெரும் 'புரட்சியாளர்' என்றும் அவருடைய முதலாளித்துவ நடவடிக்கைகளை அவர்களுடைய மொழியில் வர்ணிக்கிறார்கள்.

கோர்பசேவின் முதலாளித்துவ சீர்திருத்த வேகம் நமது நாட்டின் 'மார்க்சிஸ்ட்' கட்சியினரையே நிலைகுலையச் செய்திருக்கிறது. ரணதிவே அறைகுறையாக கண்டனம் தெரிவிக்கிறார். இ. எம். எஸ். அதை எதிர்ப்பதா ஆதரிப்பதா என்று தெரியாமல் விழிக்கிறார். கட்சியின் உள்ளூர் பத்திரிகைகளோ உற்சாகமாக வரவேற்று எழுதுகின்றன. இவ்வாறு நவீன திரிபுவாதிகளையே நிலைதடுமாறச் செய்துவிட்ட கோர்பசேவின் சீர்திருத்தங்களை வி. மி. போன்ற சில முன்னாள் மா-லெ புரட்சியாளர்கள் முற்போக்கானதென்று வர்ணிக்கிறார்கள்.

உண்மையில் கோர்பசேவ், குருச்சேவின் விரிவாக்கம் என்பதற்குமேல் வேறு எதுவும் இல்லை.

குருச்சேவ் முன்வைத்த 'மூன்று சமாதனக் கோட்பாடுகள்' என்ற திரிபுவாதக் கொள்கைளை கோர்பசேவ் ரத்து செய்து விடவில்லை. யுத்தம், சமாதானம், ஏகாதிபத்தியம் பற்றிய குருச்சேவ் திரிபுவாத கோட்பாடுகள் எதிலும் அவர் மாற்றம் செய்து விடவில்லை. குருச்சேவ் முன்வைத்த அனைத்து மக்கள் அரசு, அனைத்து மக்கள் கட்சி பற்றிய முடிவுகள் எதையும் கோர்பசேவ் மாற்றிவிடவில்லை. லாபத்துடன் இணைந்த உற்பத்தி, பொருளாதார ஊக்கம், உற்பத்தியுடன் இணைந்த ஊதியம் என்பது போன்ற குருச்சேவின் கொள்கைகளே கோர்பசேவின் கொள்கைகளாயிருக்கின்றன.குருச்சேவின் திரிபுவாதக் கொள்கைகள்அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொண்டு பின்பற்றுகின்றவர்தான் கோர்பசேவ். அவர் செய்யும் சீர்திருத்தம் என்பதெல்லாம் உள்நாட்டில் குருச்சேவின் முதலாளித்துவக் கொள்கையால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் காரணமாக மேலும் முதலாளித்துவ கொள்கையை விரிவுபடுத்துவதன்றி வேறல்ல. கால்நூற்றாண்டில் நாட்டில் கம்யூனிசத்தை அமைக்கப் போவதாக திரிபுவாதத்தை அரங்கேற்றிய குருச்சேவ் 22வது காங்கிரசில் அறிவித்தார். கால் நூற்றாண்டு கடந்துவிட்ட பின்பு அவருடைய வாரிசாக வந்திருக்கும் கோர்பசேவ் நாடு கடும் பொருளாதார நெருக்கடியிலும் தேக்கத்திலும் சிக்கியிருப்பதாக 27-வது காங்கிரசில் அறிவித்து குருச்சேவ் வழியிலேயே மிகந்தீவிரமான சீர்திருத்தங்களை மேற்கொண்டிருக்கிறார். முதலாளித்துவம் மேலும் முதலாளித்துவ உறவுகளையே உருவாக்கும் என்பது முதலாளித்துவத்தின் பொது விதியே.

சர்வதேச ரீதியில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ஆயுதக் குறைப்பு ஒப்பந்த முயற்சியில் ஈடுபடுவதையும் ஆப்கானிஸ்தானத்திலிருந்து இராணுவத்தைத் திரும்பப் பெறுவதையும்(வியட்நாமிலிருந்து அமெரிக்கா வெளியேறியது, இந்தியாவிலிருந்து பிரிட்டன் வெளியேறியது போன்றதே இது)சமாதானத்துக்கான ஆர்வம் என்பதாக இந்த மாஜி புரட்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்து திரிபுவாதிகளும் அழைக்கிறார்கள். ஆனால் ரசியாவின் இந்த நடவடிக்கைகள் உள்நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கான ஒரு தற்காலிக நடவடிக்கையே. ஏகாதிபத்தியங்களுக்குள் இத்தகைய நடவடிக்கைகள் சாத்தியமே என்பதை லெனின் நீண்ட காலத்துக்கு முன்பே சுட்டிக்காட்டி இருக்கிறார். இதனால் ஏகாதிபத்தியங்களுக்குள் ஆயுதப் போட்டி மறைந்து விட்டது என்றோ, ஏகாதிபத்தியங்கள் அவற்றின் பண்பை இழந்து விட்டன என்றோ அர்த்தமல்ல. ஏகாதிபத்தியங்களுக்கிடையே ஏற்படும் இத்தகைய ஒப்பந்தங்களின் உண்மைத் தன்மையை மக்களுக்கு அம்பலப்படுத்துவதற்கு பதிலாக அவற்றை உலக அமைதிக்கான வழி முறையாகக் காட்ட முயற்சிப்பது ஏகாதிபத்தியங்களைப் பற்றிய பொய்யான மாயையை ஏற்படுத்துவதேயாகும்.

மாவோவின் மறைவுக்குப் பின், அல்பேனியா மாவோவுக்கும் மாசேதுங் சிந்தனைக்கும் எதிராக மாறியதையும், சீனத்தில் அதிகாரத்தை டெங்சியாவோ பிங் கைப்பற்றி விட்டதையும், ரசியாவில் கோர்பசேவ் செய்து வரும் தீவீரமான சீர்திருத்தங்களையும் கண்டு நிலை தடுமாறிவிட்ட நமது முன்னாள் புரட்சியாளர்கள் ரசியா ஒரு சோசலிச நாடுதான் என்றும், அதை சமூக ஏகாதிபத்தியம் என்று அழைத்து வந்தது தவறு என்றும் திடீரென்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ரசியாவில் முதலாளித்துவம் மீட்டமைக்கப்பட்டுவிட்டதென்றால் அங்கே முதலாளி எங்கே இருக்கிறான்? என்று வழக்கமாக திரிபுவாதிகள் கேட்கும் அதே கேள்வியை நமது மாஜி புரட்சியாளகள் வேறொரு வகையில் கூறுகிறார்கள். ஒரு சமுதாயம் அதன் பொருளாதார அடித் தளத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்றும் அவ்வாறு பார்த்தால் ரசியாவில் பொருளாதார அடித்தளம் பிரதானமாக சோசலிச பொருளாதார அடித்தளமாகவே இருப்பதால் அது சோசலிசநாடே என்றும் இவர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு நாடும் அவற்றுக்கே உரிய சோசலிச கட்டுமான மாதிரிகளைக் கொண்டிருக்கும் என்றும் எனவே அதற்கென்று பொதுவழி எதுவும் இல்லை என்றும், எனவே கோர்பசேவின் ரசியா, டெங்கின் சீனா உட்பட திரிபுவாதிகளின் தலைமையாதிக்கத்தில் இருக்கும் அத்தனை நாடுகளுமே சோசலிச நாடுகள்தான் என்றும் இவர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு கூறுவது சோசலிசத்தின் அரசியல் பொருளாதாரம் பற்றிய அரிச்சுவடிகூட தெரியாத பாமரத்தனமாகும்.

சோசலிசம் என்பது பாட்டாளிவர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து தொடங்கி முழுநிறை கம்யூனிச சமுதாயம் அமையும்வரை உள்ள சமுதாயஅமைப்பு ஆகும். சோசலிச பொருள் உற்பத்தி உறவு என்பது இடைவிடாது கம்யூனிசத்தை நோக்கி புரட்சிகர மாற்றத்திற்குள்ளாகிக் கொண்டிருப்பதாகும். இது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதன்மூலம் சாதிக்கப்படுகிறது. எனவே சோசலிசப் பொருளா தார அடித்தளம் என்பதை பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திலிருந்தும், அதன்கீழ் தொடரும் வர்க்கப் போராட்டத்திலிருந்தும் நீக்கிப் பார்க்க முடியாது. எனவே சோலிசப் பொருளாதார அடித்தளம் என்பது புரட்சிகர மாற்றத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கும் பொருளாதார அடித் தளமாகும். இங்கு முதலாளித்துவ தனியுடமை இருக்கிறதா, கூட்டுடமை இருக்கிறதா என்பதல்ல முதன்மையான கேள்வி, மாறாக பாட்டாளி வர்க்க அரசால் முதலாளித்துவத்துக்கும், முதலாளித்துவ பாதைக்கும் எதிரான போராட்டம் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறதா என்பதே முதன்மையான கேள்வியாகும். அத்தகைய போராட்டம் நடத்தப்படவில்லையெனில், அந்நாட்டின் பொருளாதார அடித்தளம் சோசலிச பொருளாதார அடித்தளமாக அல்ல, முதலாளித்துவ பொருளாதார அடித்தளமாகவே இருக்கிறது என்று உறுதிபடக் கூறலாம்.

சுருங்கச்சொன்னால் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்தும் நாடுகள் மட்டுமே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தைப் பிரதான கண்ணியாக கொண்டு, அரசியலை ஆணையில் வைத்து சமுதாயத்தை வழிநடத்தும் நாடுகள் மட்டுமே சோசலிச நாடுகள் ஆகும்.

ஆனால் ரசியாவின் நிலைமை என்ன? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், கட்சியையும், வர்க்கப் போராட்டத்தையும் பகிரங்கமாக கைவிட்டு கால்நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. சீனத்தின் நிலை என்ன? நான்கு நவீன மயமாக்கல் அவர்களுடைய தாரகமந்திரமென்றும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது, அரசியலை ஆணையில் வைப்பது, வர்க்கப் போராட்டத்தை கேந்திரக் கண்ணியாகக் கொள்வது போன்ற கோட்பாடுகள் தவறானவை என்றும் அவர்கள் கூரைமேல் ஏறிநின்று பிரகடனப்படுத்திவிட்டார்கள். இந்நிலையில் இந்நாடுகளை சோசலிச நாடுகள் என்றும், இந்நாடுகளின் கட்சிகளை கம்யூனிஸ்ட் கட்சிகள் என்றும் கூறுவது பாட்டாளிவர்க்கத்தை ஏமாற்றுவதேயாகும்.

சோசலிசத்தில் சீன மாடல் என்றும், ரசிய மாடல் என்றும் நாட்டுக்கு ஒரு மாடல் பற்றி பேசுவது எல்லா நாட்டுக்கும் பொதுவான பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தையும் அதன்கீழ் வர்க்கப் போராட்டத்தையும் மறுத்து 'உற்பத்தி சக்திகள்' பற்றிய முதலாளித்துவ கோட்பாட்டை எல்லா நாடுகளுக்குமான பொதுவிதியாக்கி இருப்பதை மறைப்பதற்கன்றி வேறெதற்காகவும் அல்ல.

அடுத்து ரசியாவை சமூக ஏகாதிபத்தியம் என்று அழைப்பது தவறு என்று இவர்கள் கண்டுபிடித்திருப்பது வேடிக்கையானதாகும். ஏனெனில் அது புதிய கண்டுபிடிப்பல்ல. நீண்டகாலத்துக்கு முன்பே திரிபுவாதிகள் கண்டுபிடித்துக்கூறிய அதே துருப்பிடித்துப்போன காரணங்களையே இவர்கள் இவ்வளவு காலதாமதமாக தூக்கிக்கொண்டு வந்து கூரைமேல் நின்று கூவுகிறார்கள்.

ஏகாதிபத்தியம் என்றால் நிதிமூலதன ஆதிக்கம் என்றும், ரசியாவில் அது நிரூபிக்கப்படவில்லையாதலால் ரசியாவை ஒரு சமூக ஏகாதிபத்தியம் என்று கூறமுடியாது என்றும் நீண்டகாலத்திற்கு முன்பே திரிபுவாதிகள் கூறியதை இவர்கள் ஏதோ புதிதாகக் கூறுவதுபோல் கூறுகிறார்கள்.

'சொல்லில் சோசலிசம் செயலில் ஏகாதிபத்தியம்' என்று சமூக ஏகாதிபத்தியத்திற்கு விளக்கம் அளித்த லெனின் இரண்டாம் அகில சந்தர்ப்பவாதிகளை சமூக ஏகாதிபத்தியவாதிகள் என்று அழைத்தார். இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள் சோசலிசம் பேசிக்கொண்டே உள்நாட்டுப் புரட்சி யுத்தத்தையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் எதிர்த்தனர். தமது சொந்தநாட்டு ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தையும் அதன் காலனியாதிக்கத்தையும் ஆதரித்தனர். அவர்களை சமூக ஏகாதிபத்தியவாதிகள் என்று லெனின் அடையாளம் காட்டினார். அப்போது அவர்களிடம் அதிகாரம் எதுவும் இல்லை. அவர்கள் சோசலிசம் பேசிக்கொண்டே புரட்சியைக் கைவிட்டு ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்தார்கள் என்பதாலேயே அவர்கள் சமூக ஏகாதிபத்தியவாதிகள் என்றார் லெனின். அவர்களிடம் நிதிமூலதன ஆதிக்கம் இருந்தது என்பதால் அல்ல. அந்த ஆராய்ச்சிக்கும் சமூக ஏகாதிபத்தியத்திற்கும் சம்மந்தமேதும் இல்லை. அவர்களின் வர்க்க அடிப்படை பற்றியும் அவர் கூறினார். பாட்டாளி வர்க்கத்துள் இருக்கும் சலுகைபெற்ற பிரிவினர். 'தொழிலாளிவர்க்கப் பிரபுகுலத்தோர்.' உண்மையில் இவர்கள் பாட்டாளிவர்க்க இயக்கத்துள் இருக்கும் 'முதலாளி வர்க்கத்தினர்', 'வர்க்க விரோதிகள்' இவர்களிடம் இருந்து தீர்மானகரமாக முறித்துக்கொண்டு அவர்களுடைய சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்துவதால் மட்டுமே பாட்டாளிவர்க்க புரட்சி இயக்கம் வளரமுடியும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

குருச்சேவ்-கோர்பசேவ் திரிபுவாதிகள் ரசியாவில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தையும் வர்க்கப்போராட்டத்தையும் கைவிட்டுவிட்டார்கள் என்பதை அவர்களே பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். 'பாராளுமன்றப் பாதை' பற்றிய போதனைமூலம் உலகம் முழுவதும் 'முதலாளித்துவ கம்யூனிஸ்ட் கட்சி'களை அமைத்து எல்லா நாடுகளின் புரட்சியையும் காட்டிக்கொடுத்து அவற்றின் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுடன் கூட்டமைத்துக் கொண்டிருக்கிறார்கள். ''மூன்று சமாதான கொள்கை''கள் மூலம் தமது உலக மேலாதிக்கத்திற்கான முழுத் திட்டத்தையும் வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள். இவர்களுடைய வர்க்க அடிப்படை சுரண்டும் சலுகைபெற்ற பிரிவு என்றும், அது ரசியாவின் மிகப் பரந்துபட்ட மக்களுக்கு எதிரி என்றும், சமூக ஏகாதிபத்தியம் என்றும் மாவோ அம்பலப்படுத்தி இருக்கிறார்.

நமது முன்னாள் புரட்சியாளர்கள் ரசிய சமூக ஏகாதிபத்தியவாதி களும் சீன முதலாளித்துவப் பாதையாளர்களும் ஒன்றுபட்டு சர்வதேச கம்யூனிச இயக்கத்தைப் பலப்படுத்தவேண்டும் என்று எல்லாத் திரிபுவாதி களையும் போல தமது சொந்த முகாமின் ஒற்றுமை பற்றி கவலைப்படு கிறார்கள். ஆனால் இத்தகையவர்களிடமிருந்து முற்றாக முறித்துக் கொள்வதன்மூலம் மட்டுமே, அவர்களை முற்றாக அம்பலப்படுத்தி தூக்கியெறிவதன்மூலம் மட்டுமே சர்வதேச கம்யூனிச இயக்கத்தை ஒன்றுபடுத்தவும், பலப்படுத்தவும் முடியும் என்று லெனினியம் நமக்குப் போதிக்கிறது.

6

இன்றைய உலகின் மார்க்சியம் என்பது மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையேயாகும்.

மார்க்சியம் உலகைப் புரிந்துக் கொள்வதற்கு மட்டுமல்ல அதை மாற்றியமைப்பதற்கும் வழிகாட்டும் தத்துவமாகும். பல்வேறு தத்துவப் போக்குகளுக்கிடையே முதன்முதலாக உலகைப் புரிந்து கொள்ளவும், மாற்றியமைக்கவும் வழிகாட்டிய தத்துவம் மார்க்சியமே. மார்க்சியம் என்பது வறட்டுக் கோட்பாடல்ல. அது வளரும் விஞ்ஞானமாகும். உலகில் புதிய நிலைமைகள் தோன்றும் போது அதைப் புரிந்து கொள்ளவும், புரட்சிகரமாக மாற்றியமைக்கவும் அது வழிகாட்டுவ தோடு அதுவும் வளர்ச்சியடைகிறது. உலகில் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சியடைந்த ஒரு புதிய நிலை தோன்றிய போது அதை மார்க்சிய அடிப்படையில் விளக்கி புரட்சிக்கு வழி காட்டியது லெனினியம். அப்போது மார்க்சியம், மார்க்சிய-லெனினிய மாக வளர்ச்சியடைந்தது. அறுபதாம் ஆண்டுகளிலிருந்து உலகில் சோசலிச

நாடுகளில் முதளாளித்துவ மீட்சியும் அதற்கு எதிரான போராட்டமும் தொடங்கியிருக்கிறது. ரசியாவில் குருச்சேவ் புரட்டல்வாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றி முதலாளித்துவத்தை மீட்டமைத்து சமூக ஏகாதிபத்தியமாக சீரழித்திருக்கிறார்கள். இதை மார்க்சிய-லெனினிய அடிப்படையில் புரிந்து விளக்கி புரட்சிக்கு வழிகாட்டியது மாசேதுங் சிந்தனை. அப்போது மார்க்சிய - லெனினியம் மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையாக வளர்ச்சியடைந்தது.

மாசேதுங் சிந்தனை சோசலிச நாடுகளில் முதலாளித்துவப் பாதையாளர்களுக்கு எதிராகவும், முதலாளித்துவ மீட்சிக்கு எதிராகவும் பாட்டாளி வர்க்கத்தை தயார்ப்படுத்துகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டமைக்க வழிகாட்டுகிறது.

மாசேதுங் சிந்தனை சோசலிசப் போர்வையில் வரும் ஏகாதிபத்தியத்தை— சமூக ஏகாதிபத்தியத்தை— உலக மக்களுக்கும், நாடுகளுக்கும் அடையாளம் காட்டுகிறது. அவற்றின் கபடத்தனமான சோசலிசம் மற்றும் சமாதான முழக்கங்களை அம்பலப்படுத்தி சகல நாட்டு மக்களின் புரட்சிப்பாதையையும் பாதுகாக்கிறது.

மாசேதுங் சிந்தனை இன்றைய உலகைப் புரிந்துகொள்வதற்கும், புரட்சிகரமாக மாற்றியமைப்பதற்கான போராட்டத்தை நடத்துவதற்கும் பாட்டாளிவர்க்கத்துக்கு அவசியமான ஆயுதமாகும்.

எனவே இன்று பாட்டாளி வர்க்கம் மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை தனது தத்துவார்த்த ஆயுதமாக ஏந்திக் கொண்டிருக்கிறது.

திரிபுவாதம் என்பது முதலாளித்துவ சித்தாந்தம் என்று மாவோ சொன்னார். மாசேதுங் சிந்தனையை எதிர்ப்பதில் பல வண்ணத் திரிபுவாதிகளும் தத்தமக்கு உரிய முறையில் செயல்படுகிறார்கள்.

கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களுக்கு எதிராக, வர்க்க எதிரிகளும், ஏகாதிபத்தியவாதிகளும் பயன்படுத்தும் அதே இழி மொழிகளையும், பழி மொழிகளையும் தோழர் மாவோவுக்கு எதிராகப் பயன்படுத்துவதன் மூலம் மாசேதுங் சிந்தனையை மறுத்துவிட முயல்கிறார்கள் மாஸ்கோ சமூக ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் அடிவருடிகளாக உலகம் முழுவதும் இருக்கும் CPI போன்ற முதலாளித்துவ கம்யூனிஸ்டுகளும்,

மற்றொரு பிரிவினர் இருக்கிறார்கள். CPM, SUCI, MCPI வகையறாக்கள் இவர்கள். மாசேதுங்கை மாபெரும் பாட்டாளி வர்க்கத் தலைவர்களில் ஒருவர் என்று புகழ்பாடி அதே நேரத்தில் மாசேதுங் சிந்தனை என்ற பாட்டாளிவர்க்க தத்துவ ஆயுதத்தை தூக்கியெறிந்து விடுவதை இவர்கள் ' தந்திரமாகக் கொண்டிருக்கிறார்கள்.

சீனத்தின் டெங், இந்தியாவின் வி. மி. போன்ற மற்றொரு பிரிவினர் இருக்கிறார்கள். லெனினியத்தைத் தூக்கியெறிந்து விட்டு லெனினியத்தையே பின்பற்றுவதாக குருச்சேவ்-கோர்பசேவ் கும்பல் கூறுவது போல் இவர்கள் மாசேதுங் சிந்தனையை உண்மையில் தூக்கியெறிந்து விட்டு அதைப் பின்பற்றுவதாக கபடத்தனமாக அறிவிக்கிறார்கள்.

இவர்களை எல்லாம் தவிர்த்து மற்றொரு பிரிவினர் மார்க்சிய-லெனினியப் புரட்சியாளர்களிடையே இருக்கிறார்கள். மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை உணர்வுப்பூர்வமாக உயர்த்திப் பிடிக்க விரும்பும்இவர்கள் உண்மையில் மாசேதுங் சிந்தனையை கிரகித்து கொள்ளாமல் சீனப் புரட்சிப்பாதையும், கலாச்சாரப் புரட்சி நடவடிக்கைகளுமே மாசேதுங் சிந்தனை என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஏன், புதிய ஜனநாயக புரட்சிக் கட்டம், நீண்டகால மக்கள் யுத்தம், அரைக்காலனி என்பன போன்றவற்றைக் கூறுவதே மாசேதுங் சிந்தனை என்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். நக்சல்பாரி விவசாயிகளின் பேரெழுச்சிக்குப்பின் கட்சியைக் கட்டும் முயற்சியில் தத்துவார்த்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தைப் புறக்கணித்ததன் எச்சங்களே இவை. இவை கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் சித்தாந்த ஒற்றுமைக்குத் தடையாக இருப்பதுடன் திரிபுவாதத்துக்குப் பலியாகும் அபாயம் கொண்டதும் ஆகும்.

மார்க்சிய-லெனினிய மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடித்து சகல வண்ணத் திரிபுவாதத்துக்கும் எதிராக தீர்க்கமான போராட்டத்தை நடத்துவதன் மூலம் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களிடையே சித்தாந்த ஒருமைப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். தேசிய, சர்வதேசிய ரீதியில் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களை அய்க்கியப்படுத்த வேண்டும். இது இன்றுள்ள மிகமுக்கியமான கடமையாகும்.

'மாபெரும் விவாதமும்' பிற தத்துவார்த்த ஆவணங்களும் வெளியிடப்படுவது இதற்கு உதவும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

வெல்க மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனை.

விவாதத்திற்குள்ளான
சர்வதேச கம்யூனிச இயக்கத்தின்
இரண்டு ஆவணங்கள்

சோசலிச நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரகடனம்

(மாஸ்கோ - 1957)

1957 நவம்பர் 14-16 தேதிகளில் மாஸ்கோ மாநகரில் சோசலிச நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றது.

அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, வியட்னாம், ஜெர்மனி, சீனா, கொரியா, மங்கோலியா, போலந்து, ருமேனியா, செக்கோஸ் லோவாக்கியா, ரசியா ஆகிய 12 நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சி களின் பிரதிநிதிகள் கூடி, தங்களுக்கிடையிலான உறவுகள் பற்றியும் தற்போதைய பிரச்சினைகள் பற்றியும் சர்வதேச நிலைமைகள் பற்றியும் சமாதானம் மற்றும் சோசலிசத்திற்கான போராட்டம் பற்றியும் விவாதித் தனர். இவ்விவாதத்தின் விளைவாக எல்லா முக்கியப் பிரச்சினைகளைப் பற்றியும் கருத்து ஒற்றுமை உள்ளது என்பது தெளிவாயிற்று. மேலும் விவாதத்தில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவான பிரச்சினை களும் இடம்பெற்றன.

இப்பிரகடனத்தை வெளியிடுவதற்கு முன் முதலாளித்துவ நாடு களிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக் கப்பட்டது. இக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத சகோதரக் கட்சிகள் இப்பிரகடனத்தில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களை ஒட்டி எந்த வகையில் செயல்படுவது என்பதை தாங்களே மதிப்பிட்டுத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

I

நமது சகாப்தத்தின் பிரதான அம்சம் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச் செல்வதுதான். இந்த சகாப்தத்தை ரசியாவின் அக்டோபர் சோசலிசப் புரட்சிதான் துவங்கி வைத்தது. உலக மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கிற்கு மேற்பட்டோர்-அதாவது 95 கோடி மக்களுக்கு மேல் - சோசலிசப்பாதையை மேற்கொண்டு ஒரு புதிய வாழ்க்கையைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் சோசலிச சக்திகளின் பிரம்மாண்டமான வளர்ச்சி ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய இயக்கங்கள் விரைந்து பரவுவதற்குத் தூண்டுகோலாக இருந்துள்ளது. சீன மக்கள் குடியரசு, வியட்னாம் ஜனநாயகக் குடியரசு, கொரிய மக்கள் ஜனநாயகக்குடியரசு ஆகியவற்றைத்தவிர கடந்த பன்னிரண்டாண்டுகளில் 70 கோடி மக்கள் காலனி ஆட்சியைத் தூக்கியெறிந்து தேசிய சுதந்திர அரசை நிறுவி உள்ளனர். இன்னும் அடிமைத்தனத்தில் உழன்று கொண்டிருக்கும் காலனி மற்றும் சார்பு நாடுகளைச் சேர்ந்த மக்கள் தங்கள் தேசிய விடுதலைப் போர்ராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

சோசலிச முன்னேற்றமும், தேசிய விடுதலை இயக்கமும் ஏகாதிபத்தியம் சிதைவுறுவதை மிகவும் துரிதப்படுத்தியுள்ளன. மனித வர்க்கத்தின் பெரும் பகுதியினரைப் பொறுத்த வரையில், முன்னாள் ஆதிக்க நிலைமையை ஏகாதிபத்தியம் இன்று இழந்துவிட்டது. ஏகாதிபத்திய நாடுகளில் வர்க்க முரண்பாடுகள் சமுதாயத்தில் ஆழமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்திய நாடுகளுக்குள்ளேயே பகைமை வளர்ந்து வருகிறது. ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகளின் கொள்கைகளைத் தொழிலாளிவர்க்கம் மென்மேலும் எதிர்த்துத் தடுத்து வருகிறது. நல்வாழ்வுக்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும், சமாதானத்திற்காகவும், சோசலிசத்திற்காகவும் அவர்கள் போராடி வருகிறார்கள்.

முற்றிலும் நேரெதிரான இரு சமுதாய அமைப்புக்களிடையில் நடைபெறும் போட்டிகளின் போக்கையும், விளைவையும் வைத்துத்தான் உலக வளர்ச்சி நமது சகாப்தத்தில் நிர்ணயிக்கப்படுகின்றது. முதலாளித்துவத்தைவிட சோசலிசம் மிக உயர்தரமான சமூக அமைப்பு என்பது கடந்த 40 ஆண்டுகால சோசலிசத்தினால் நிரூபிக்கப்பட்டுவிட்டது. அது முதலாளித்துவத்தினால் சாத்தியமில்லாத முன் கண்டிராத வளர்ச்சி வேகத்தில் பொருளுற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை உத்திரவாதம் செய்துள்ளது. உழைக்கும் மக்களின் பொருளாயத கலாச்சார, வாழ்க்கைத்தரத்தில் ஒரு தொடர்ச்சியான, உறுதியான முன்னேற்றத்தை சாத்தியமாக்கியுள்ளது.

பொருளாதாரத்திலும், விஞ்ஞானத்திலும், தொழில்நுட்பத் துறையிலும் ரசியா அடைந்துள்ள துரித முன்னேற்றமும், சோசலிசக் கட்டுமானப் பணியில் இதர சோசலிச நாடுகள் ஈட்டியுள்ள சாதனைகளும்

சோசலிசத்தின் மகத்தான சக்திக்குத் தீர்மானகரமான ஆதாரங்களாகும். சோசலிச நாடுகளிலுள்ள உழைப்பாளிப் பெருமக்கள் உண்மையான சுதந்திரத்தையும், ஜனநாயக உரிமைகளையும் அனுபவித்து வருகின்றனர். மக்கள் அதிகாரம் பொதுமக்களின் அரசியல் ஒற்றுமையை உறுதிப்படுத்துகிறது; தேசங்களிடையே சமத்துவத்தையும், நட்புறவையும் உத்தரவாதம் செய்கிறது; உலக சமாதானத்தைப் பாதுகாப்பதையும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கு உதவுவதையுமே குறிக்கோளாகக் கொண்ட அயல் நாட்டுக் கொள்கையை உத்தரவாதம் செய்துள்ளது. நாளுக்கு நாள் வளர்ந்தும், பலமடைந்தும் வருகின்ற உலக சோசலிச அமைப்பானது சமாதானம், முன்னேற்றம், மக்கள் விடுதலை ஆகியவற்றின் நலன்களுக்காக சர்வதேச நிலைமைகளில் மென்மேலும் தனது செல்வாக்கைச் செலுத்தி வருகிறது.

சோசலிசம் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும்போது ஏகாதிபத்தியம் வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. காலனிமுறை சிதைவுற்றதன் காரணமாக, ஏகாதிபத்தியத்தின் நிலை மிகவும் பலவீனமானதாகிவிட்டது. காலனி ஆதிக்க நுகத்தடியைத் தூக்கியெறிந்துள்ள நாடுகள், தமது இறையாண்மைக்காகவும் பொருளாதார சுதந்திரத்திற்காகவும் சர்வதேச சமாதானத்திற்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றன. சோசலிச அமைப்பொன்றிருப்பதும், இந்த நாடுகளுக்கு சமத்துவ அடிப்படையில் சோசலிச நாடுகள் உதவி புரிவதும், சமாதானம் மற்றும் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் இந்நாடுகளுக்கும் சோசலிச நாடுகளுக்கும் இருக்கின்ற ஒத்துழைப்பும் இந்நாடுகள் ஆக்கிரமிப்பை எதிர்க்கவும் தேச சுதந்திரத்தைப் பேணிக்காக்கவும் சமுதாயத்தில் முன்னேறிச் செல்லவும் உதவுகின்றன.

ஏகாதிபத்திய நாடுகளில் பொருளுற்பத்தி சக்திகளுக்கும் பொருள் உற்பத்தி உறவுகளுக்கும் உள்ள முரண்பாடுகள் மேலும் தீவிரமாகியுள்ளன. மனிதகுலத்தின் சமுதாய முன்னேற்றத்தின் நலன்களுக்காக நவீன விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் பல துறைகளில் பயன்படுத்தப்படுவதில்லை. ஏனெனில் சமுதாயத்தின் பொருளுற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடைக்கல்லாகவும், முட்டுக்கட்டையாகவும் முதலாளித்துவம் நிற்கிறது. உலக முதலாளித்துவப் பொருளாதாரம் ஆட்டம் கண்டுவிட்டது. நிலையற்றதாகிவிட்டது. பல முதலாளித்துவ நாடுகளில் இன்றும் ஒப்பீட்டு அளவில் நல்ல பொருளாதார நடவடிக்கைகள் காணப்படுவதற்குக் காரணம் ஆயுதப் போட்டி ஏற்படுத்தியுள்ள பாதுகாப்பற்ற நிலைமையும் இன்னும் சில தற்காலிகக் காரணங்களுமே ஆகும்.

எனினும் முதலாளித்துவப் பொருளாதாரம் மேலும் பல புதிய ஆழமான நெருக்கடிகளையும் சரிவுகளையும் எதிர்நோக்கிச் செல்வதைத்

தடுக்கமுடியாது. அதன் தற்காலிக உயர்ந்த வர்த்தக நடவடிக்கைகள் முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஒரு பகுதி தொழிலாளர்களிடையில் சீர்திருத்த மாயை நீடித்திருப்பதற்கு உதவுகின்றன. யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில், வளர்ச்சியுற்றுள்ள முதலாளித்துவ நாடுகளிலுள்ள சில தொழிலாளி வர்க்கப் பகுதிகள் மேலும் சுரண்டப்படுவதை எதிர்த்தும், வாழ்க்கைத்தர உயர்வுக்காகவும் போராடி கூலி உயர்வு பெற முடிந்தது; என்றாலும் இந்த நாடுகள் பலவற்றிலும் தொழிலாளர்களின் உண்மையான கூலி, யுத்தத்திற்கு முந்திய காலத்தைவிடக் குறைவாகவேயிருக்கின்றது. முதலாளித்துவ உலகின் பெரும்பகுதியில், குறிப்பாகக் காலனி நாடுகளிலும் சார்பு நாடுகளிலும் கோடிக்கணக்கான உழைப்பாளி மக்கள் இன்னமும் வறுமையிலேயே உழன்று வருகின்றனர். விவசாயத்துறையில் ஏகபோக முதலாளித்துவம் விரிவாக ஊடுருவிவிட்டதாலும், அவர்கள் திணித்துள்ள விலைவாசிக் கொள்கையினாலும், அவர்களால் நிர்ப்பந்திக்கப்படும் வங்கிப் பற்று மற்றும் கடன் முறையினாலும், ஆயுதப்போட்டி காரணமாக ஏற்பட்ட அதிக வரிப்பளுவினாலும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மிகப் பெரும்பான்மையான மக்கள் சீரழிந்து, மென்மேலும் ஓட்டாண்டிகளாகி வருகின்றனர்.

முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு மட்டுமின்றி ஏகபோக முதலாளித்துவத்திற்கும், சகல மக்கள் பகுதிகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளும் முற்றி வருகின்றன. அமெரிக்காவின் ஏகபோக முதலாளித்துவத்திற்கும் மக்கள் பகுதிக்குமிடையிலுள்ள முரண்பாடுகள் அதிகரித்து வருவதுடன், அமெரிக்க ஏகபோக முதலாளிகளுக்கும், இதர முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளும் தீவிரமடைந்து வருகின்றன. முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் மக்கள் தங்களுடைய படுமோசமான நிலையிலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி சோசலிசமே என்பதை மென்மேலும் உணர்ந்து வருகின்றனர். அவர்களுடைய வாழ்க்கை நிலை இந்த உணர்வைத்தான் அவர்களுக்கு ஏற்படுத்தி வருகிறது. இவ்வாறு சோசலிசத்திற்கான தீவிரப் போராட்டத்தில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு சாதகமான வாய்ப்புகள் மேலும் அதிகரித்த அளவில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியக் கூட்டத்தினர், தங்களுடைய சொல்லிக்கொள்ளப்படும் ''ஆயுத பல'' (Positions of Strength) கொள்கையைப் பின்பற்றுவதன் மூலம் உலக நாடுகளில் பெரும்பாலானவற்றைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் சமுதாய வளர்ச்சி விதிகளின்படி மனிதகுலம் முன்னேறிச் செல்வதைத் தடைசெய்வதற்கும் முயற்சி செய்கிறார்கள். ''கம்யூனிச எதிர்ப்பு'' என்ற பெயரில் மேலும் பல நாடுகளைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வருவதற்கு தூண்டில் போட்டு வருகின்றனர். ஜனநாயக சுதந்திரத்தை அழிப்பதற்குத் தூண்டிவிடுகின்றனர். வளர்ச்சி பெற்ற சுதந்திர

முதலாளித்துவ நாடுகளின் தேசீய சுதந்திரத்தை அச்சுறுத்துகின்றனர். புதிதாக விடுதலைபெற்ற மக்களை காலனியமுறையின் புதிய வடிவங்களில் சிக்க வைப்பதற்கு முயற்சித்து வருகின்றனர். சோசலிச நாடுகளுக்கு எதிராக திட்டமிட்ட சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். முதலாளித்துவ உலகிலுள்ள எல்லா பிற்போக்கு சக்திகளையும் தம்பின்னால் அணிதிரட்டுவதே அமெரிக்காவிலுள்ள யுத்த வெறிக் கூட்டத்தின் கொள்கையாக இருக்கிறது. இவ்வாறு செயல்படுவதின் காரணமாக, உலகப் பிற்போக்கின் மையமாகவும், உலக மக்களின் பரம எதிரியாகவும் அவர்கள் உருவாகி வருகின்றனர். இத்தகைய கொள்கையைக் கடைப்பிடிப்பதன் காரணமாக இந்த மக்கள் விரோத, ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய சக்திகள் தமது அழிவைத் தாமே தேடிக் கொள்கின்றன. தங்களுக்கு சவக்குழிதோண்டுபவர்களை தாமே உருவாக்கி கொள்கின்றன.

ஏகாதிபத்தியம் இருக்கும் வரையில் ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கான அடித்தளம் எப்பொழுதும் இருந்து கொண்டுதான் இருக்கும். யுத்தத்திற்குப் பிந்திய ஆண்டுகள் முழுவதும் அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு, ஏகாதிபத்தியவாதிகளும், இதர ஏகாதிபத்தியங்களும், அவர்களின் கையாட்களும், இந்தோ-சீனாவிலும், இந்தோனேசியா, கொரியா, மலேசியா, கௌதிமாலா, எகிப்து, அல்ஜீரியா, ஓமன், ஏமன் ஆகிய நாடுகளிலும் யுத்தங்களை நடத்தினார்கள்; அல்லது நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய சக்திகள் ஆயுதக் குறைப்பு செய்ய ஒரேயடியாக மறுக்கின்றனர்; அணு ஹைட்ரஜன் ஆயுதங்களை உற்பத்தி செய்வது, உபயோகிப்பது தடைசெய்யப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்; இந்தஆயுதங்களைப் பரிசோதனை செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்; தங்களின் கெடுபிடிப்போரையும், ஆயுதப்போட்டியையும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்; மேலும் அதிக ராணுவத் தளங்களை ஏற்படுத்தி வருகின்றனர்; சமாதானத்தை ஒழித்து, ஒரு புதிய யுத்தத்தை ஏற்படுத்தும் அபாயகரமான ஆக்கிரமிப்புக் கொள்கையை கடைப்பிடித்துவருகின்றனர். அணு ஆயுதங்களைத் தடை செய்வது சம்பந்தமான ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன் ஒர் உலக யுத்தம் ஏற்படுமானால், அது நிச்சயமாக அணு ஆயுத யுத்தமாக மாறும், இதற்கு முன் கண்டிராத பெரும் அழிவிற்கு நம்மை இட்டுச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை.

மேற்கு ஜெர்மனி மீண்டும் ஆயுதபாணியாக்கப்படுகிறது. அமெரிக்காவின் உதவியுடன் இது நடைபெறுகிறது. ஐரோப்பாவின் மத்திய பாகம் யுத்தகளமாக மாறுவதற்கு இது வழிவகுக்கிறது. சமாதானத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற மேற்கு ஜெர்மனியின் ராணுவ வெறியையும், பழிவாங்கும் மனப்பான்மையையும் எதிர்த்துப் போராடுவது ஜெர்மனியிலுள்ள சமாதானசக்திகளையும், ஐரோப்பாவிலுள்ள எல்லா தேசங்களையும் எதிர்நோக்கியுள்ள முக்கியக்கடமையாகும். இப்போராட்டத்தில் சிறப்பாக பெரும் பங்கு வகிக்கவேண்டியது ஜெர்மன் ஜனநாய

க் குடியரசேயாகும். ஜெர்மன் வரலாற்றிலேயே முதன் முதலாக தொழிலாளி-விவசாய அரசாக விளங்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள யாவரும் தங்களது ஒருமைப்பாட்டைத் தெரிவித்தனர். அதற்குத் தங்களின் ஆதரவையும் தெரிவித்தனர்.

இதே நேரத்தில் மத்திய கிழக்கு பிரதேசத்திலுள்ள விடுதலை விரும்பும் மக்கள் மீது ''ஐஸன்ஹோவர்-டல்லஸ் திட்டத்தை'' திணித்து அதன் மூலம் இந்தப் பகுதியில் யுத்த அபாயத்தை ஏற்படுத்துவதற்கு ஏகாதிபத்தியவாதிகள் முயற்சித்து வருகின்றனர். சுதந்திர சிரியாவுக்கு எதிராக சதித் திட்டங்களையும், ஆத்திரமூட்டும் செயல்களையும் செய்து கொண்டிருக்கின்றனர். சிரியாவுக்கும் எகிப்துக்கும் இதர அரபு நாடுகளுக்கும் விரோதமாக ஆத்திரமூட்டும் செயல்களை அவர்கள் செய்வதன் நோக்கம் அரேபிய நாடுகளை பிளவுபடுத்தித் தனிமைப் படுத்துவதன் மூலம் அவர்களின் சுதந்திரத்தையும் சார்பின்மையையும் ஒழித்துவிட வேண்டும் என்பதேயாகும்.

ஆக்கிரமிப்புக் கூட்டணியான ''சியாட்டோ'' (தென்கிழக்காசிய ஒப்பந்த நாடுகள் அமைப்பு) தென்கிழக்காசியாவில் யுத்த அபாயத்திற்கு அடிப்படையாக இருக்கிறது.

சமாதான சகவாழ்வு என்ற பிரச்சினைதான் உலகக் கொள்கையின் முக்கியமான பிரச்சினையாக இன்று உள்ளது. ஏகாதிபத்தியத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள யுத்த அபாயத்தைப் பொறுத்த மட்டில் எல்லா நாடுகளும் மிகுந்த கண்காணிப்புடன் இருப்பது அவசியம்.

யுத்தத்தைத் தவிர்ப்பதற்குரிய உண்மையான சாத்தியப்பாடுகள் இன்று உள்ளன. சமாதான சக்திகள் இன்று அவ்வளவு பிரம்மாண்டமாக வளர்ந்துள்ளன. யுத்தத்தைத் தவிர்க்க முடியும் என்பது எகிப்தில் ஏகாதிபத்தியவாதிகளின் சதிகளைத் தகர்த்தெறிந்ததன் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளது. எதிர்ப்புரட்சி சக்திகளைப் பயன்படுத்திக் கொண்டு ஹங்கேரியிலுள்ள மக்கள் ஜனநாயக அரசமைப்பைக் கவிழ்ப்பதற்கு ஏகாதிபத்தியவாதிகள் செய்த சதியும் தோல்வி கண்டது.

நமது சகாப்தத்தின் வலிமை மிக்க சக்திகள், சமாதான லட்சியத்தை உயர்த்திப் பிடித்துள்ளன. ரசியாவால் தலைமைதாங்கப்படும் சோசலிச நாடுகளைக்கொண்ட வெல்லற்கரிய முகாம்; ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையை கடைப்பிடிக்கின்ற ஆசிய-ஆப்பிரிக்காவில்உள்ள சமாதானம் விரும்பும் நாடுகளையும், சோசலிச நாடுகளையும் கொண்ட விரிவான சமாதான மண்டலம்; சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், எல்லாவற்றுக்கும் மேலாக அதன் முன்னணிப்படையாகிய கம்யூனிஸ்ட்கட்சிகள்; காலனி, அரைக் காலனி நாடுகளில் உள்ள மக்களின் விடுதலை இயக்கம்; மக்களின் பரந்த சமாதான இயக்கம்; நடுநிலைமைக் கொள்கையைப்

பிரகடனம் செய்துள்ள ஐரோப்பிய நாடுகளிலுள்ள மக்கள், லத்தீன் அமெரிக்காவிலுள்ள மக்கள், ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள பொது மக்கள் இவர்கள் யாவரும் ஒரு புதிய யுத்தத்தை ஏற்படுத்தும் திட்டத்தை உறுதியாக எதிர்த்து வருகின்றனர். மென்மேலும் இதைத் தடுத்து வருகின்றனர். ஆனால்எதையும் பொருட்படுத்தாமல் ஏகாதிபத்திய யுத்த வெறியர்கள் ஒரு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவார்களானால் ஏகாதிபத்தியம் தனக்குத்தானே அழிவைத் தேடிக் கொள்ளும். ஏனெனில் சொல்லொண்ணாத்துன்பங்களை அளித்து பயங்கர நாசங்களை ஏற்படுத்தும் ஒரு அமைப்பை உலக மக்கள் சகித்துக்கொள்ளமாட்டார்கள்.

வெவ்வேறு சமுதாய அமைப்புடைய நாடுகளிடையே சமாதான சகவாழ்வு என்ற லெனினியக் கோட்பாடு ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ் முடிவுகளின் மூலம் மேலும் செழுமைப்படுத்தப்பட்டு இன்றைய நிலைமைக்கேற்ப வளர்க்கப்பட்டுள்ளது. இதுவே சோசலிச நாடுகளின் அயல் நாட்டுக் கொள்கைக்கு உறுதியான அடிப்படையாக அமைந்துள்ளது என்றும் உலக நாடுகளின் மக்களிடையே சமாதானமும் நட்புறவும் நிலவுவதற்கு நம்பகமான பற்றுக்கோடாக அமைந்துள்ளது என்றும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் பிரகடனப் படுத்துகின்றன. இந்த சமாதான சகவாழ்வுக் கருத்து சீனமக்கள் குடியரசும், இந்தியக் குடியரசும் கூட்டாக முன்வைத்த பஞ்சசீலக் கோட்பாடுகளுக்கும், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் பாண்டுங் மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கும் ஒத்ததாக விளங்குகின்றது. சமாதானமும், சமாதான சகவாழ்வும் சகல நாடுகளிலும் உள்ள பொதுமக்களின் கோரிக்கையாக மாறிவிட்டது.

சமாதானத்திற்கான போராட்டமே தமது முதன்மையான கடமையென கம்யூனிஸ்ட் கட்சிகள் கருதுகின்றன. அவை சமாதானத்தை விரும்பும் அனைத்து சக்திகளுடனும் இணைந்து யுத்தத்தைத் தடுப்பதற்காகத் தம்மாலான அனைத்தையும் செய்யும்.

II

இன்றுள்ள நிலைமையில் சோசலிச நாடுகளுக்கும், கம்யூனிஸ்ட்-தொழிலாளர் கட்சிகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையையும், சகோதர ஒத்துழைப்பையும் பலப்படுத்துவதும் சர்வதேசத் தொழிலாளர் வர்க்க ஒருமைப்பாடும், தேசியவிடுதலை இயக்கமும், ஜனநாயக இயக்கங்களும் சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றன என்று இக்கூட்டம் கருதுகிறது.

உலக சோசலிச அமைப்பின் நாடுகளுக்கிடையிலான மற்றும் அனைத்து கம்யூனிஸ்ட்-தொழிலாளர் கட்சிகளுக்கிடையிலான உறவுகளின் அடிப்படையாக வாழ்க்கையில் அனுபவ பூர்வமாகச் சோதிக்கப்பட்டுள்ள மார்க்சிய-லெனினிய மற்றும் பாட்டாளிவர்க்க சர்வதேசிய கோட்பாடுகள் அமைந்துள்ளன.

உலகம் பூராவிலும் சமாதானத்தைப் பாதுகாத்து நிலைநிறுத்தக் கூடிய கொள்கைகளை ரசியாவும் எல்லா சோசலிச நாடுகளும் கடைப் பிடித்து வருகின்றன. இந்த நாடுகள்தான் சமாதானத்தின், சமுதாய முன்னேற்றத்தின் முக்கியத் தூண்களாக உள்ளன. இந்த நாடுகளுக்கு ஆதரவளிப்பதென்பது எல்லா நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக்களின் ஜீவாதார நலன்களுக்கே அவசியமாகிவிட்டது. தொழிலாளி வர்க்கமும் ஜனநாயக சக்திகளும் உலகின் எல்லா பாகங்களிலுமுள்ள உழைக்கும் மக்களும் பொதுநலன் கருதி சகோதரத் தொடர்புகளை இடைவிடாது பலப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ளனர்.

முதன் முதலாக ஏற்பட்ட வல்லமை வாய்ந்த சோசலிச நாடான ரசியா வும், சீன மக்கள் குடியரசும், இதர சோசலிச நாடுகளும் அடைந்துள்ள வரலாற்று அரசியல்-சமுதாய பலன்களைப் பகைவர்கள் அபகரித்துக் கொள்வதினின்றும் காப்பதில் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டுள் ளனர். இந்த நன்மைகளை மேலும் விரிவாக்கி உறுதிப்படுத்துவதிலும் அவர்கள் சிரத்தை கொண்டிருக்கின்றனர்.

நாடுகளுக்கிடையே முழுமையான சமத்துவம், பிரதேச ஒருமைப் பாடு, தேச சுதந்திரம், இறையாண்மை ஆகியவற்றை மதித்து நடத்தல், பிறருடைய விவகாரங்களில் தலையிடாதிருத்தல் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் சோசலிச நாடுகள் தங்களுக்கிடையேயுள்ள உறவுகளை அமைத்துக் கொண்டுள்ளன. இக்கொள்கைகள் ஜீவாதாரமானவை யாகும். என்றாலும், சோசலிச நாடுகளுக்கிடையேயுள்ள உறவின் அம்சங்கள் இவைமட்டும் அல்ல. பரஸ்பர சகோதர உதவி இந்த உறவு களின் பிரிக்க முடியாத அம்சமாகயிருக்கிறது. சோசலிச சர்வதேசியத் துக்குத் தெளிவான எடுத்துக்காட்டாக இந்த உதவி விளங்குகிறது.

முழுமையான சமத்துவம், பரஸ்பர தோழமை உதவி, பரஸ்பர நலன் என்ற அடிப்படையில் சோசலிச நாடுகள் தங்களுக்கிடையில் விரிவான பொருளாதார, கலாச்சார ஒத்துழைப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்த பொருளாதார, கலாச்சார ஒத்துழைப்பானது ஒவ்வொரு சோசலிச நாட்டின் பொருளாதார, அரசியல் சுதந்திரத்தை மட்டுமின்றி சோசலிச நாடுகள் அனைத்தின் பொதுநலன் முழுமையையும் பலப்படுத்துகிறது. சோசலிச நாடுகள் தங்களுக்கிடையேயுள்ள பொருளாதார, கலாச்சார ஒத்துழைப்பை மேலும் செழுமைப்படுத்தவும், விரிவுபடுத்த வும் தொடர்ந்து நடவடிக்கையெடுக்கவேண்டும்.

இதர எல்லா நாடுகளுடனும் அவர்கள் விரும்பினால் அனைத்து வகையான பொருளாதார, கலாச்சார உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளலாமென்று சோசலிச நாடுகள் கூறுகின்றன. சமத்துவம், பரஸ்பர நன்மை, பிறருடைய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடா திருத்தல் போன்ற கொள்கைகளின் அடிப்படையில் இந்த உறவு ஏற்பட

வேண்டும் என்று அவை கூறி வருகின்றன. சோசலிச நாடுகளின் ஒருமைப்பாடு எந்த ஒரு பிறநாட்டிற்கும் எதிரானதல்ல. மாறாக அது சமாதானம் விரும்பும் சகல மக்களின் நலன்களை பாதுகாக்கிறது; யுத்த வெறியர்களான ஏகாதிபத்தியக் கூட்டங்களின் ஆக்கிரமிப்பு முயற்சிகளை தடுத்துநிறுத்துகிறது; வளர்ந்து வரும் சமாதான சக்திகளுக்கு ஊக்கமூட்டுகிறது. சோசலிச நாடுகள் உலகம் இராணுவ கூட்டணிகளாகப் பிரிக்கப்படுவதை எதிர்க்கின்றன. ஆனால், இராணுவக் கூட்டணிகளை இருதரப்பினரும் ஒழித்துவிடலாம் என்ற சோசலிச நாடுகளின் யோசனைகளை மேற்கத்திய வல்லரசுகள் ஏற்கமறுத்துள்ளன. இதன் காரணமாக இன்று ஒருபுதிய நிலைமை உருவாகியுள்ளது. பாதுகாப்பையே அடிப்படையாகக் கொண்ட வார்சா ஒப்பந்தக் கூட்டணி ஐரோப்பிய மக்களின் சமாதானத்தைப் பாதுகாத்து நிற்கிறது. உலகம் முழுவதும் சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதை ஆதரித்து நிற்கிறது. ஆதலின் இந்த வார்சா கூட்டணி பாதுகாக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட வேண்டும்.

சோசலிச நாடுகள் அனைத்தும் பொதுவான சோசலிசப் பாதையை மேற்கொண்டுள்ளன. அவற்றின் சமூக,பொருளாதார அமைப்பின் வர்க்க சாரமும், அரசு அதிகாரத்தின் வர்க்க சாரமும் பொதுவானவை. அவை ஒன்றுக்கொன்று பரஸ்பரம் உதவி செய்வதும், ஆதரவு தருவதும் தேவையாக உள்ளன. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் அவற்றின் நலன்களும், லட்சியமும் ஒன்றே. சோசலிச வெற்றிக்காகவும் கம்யூனிச வெற்றிக்காகவும் அவை ஒன்றுபட்டிருப்பதுடன் எல்லோருக்கும் பொதுவான மார்க்சிய—லெனினிய சித்தாந்தத்தினாலும் அவை ஒன்றுபட்டிருக்கின்றன. இவ்வாறு சோசலிச நாடுகள் அனைத்தும் ஒரே சமூகமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

சோசலிச நாடுகளின் ஒருமைப்பாடும், நெருங்கிய ஒற்றுமையும் அவை ஒவ்வொன்றின் தேசிய இறையாண்மைக்கும், சுதந்திரத்திற்கும் நம்பத்தகுந்த உத்தரவாதமாகவுள்ளன. சோசலிச நாடுகளிடையே உள்ள சகோதர உறவுகளையும் நட்புறவையும் பலப்படுத்துவதற்கு கம்யூனிஸ்டு கட்சிகளும், தொழிலாளர் கட்சிகளும் மார்க்சிய—லெனினிய சர்வதேசியக் கொள்கையை வகுத்துக் கொள்ளவேண்டும். சர்வதேசியத்துடன் இணைந்த நாட்டுப் பற்றுணர்வுடன் எல்லா உழைக்கும் மக்களையும் பயிற்றுவிக்க வேண்டும். முதலாளித்துவ தேசியவாதம் மற்றும் தேசியவெறி மிச்ச சொச்சங்களிலிருந்து மீளுவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சோசலிச நாடுகளின் உறவுகளைப் பற்றிய விவகாரங்கள் அனைத்தையும், சோசலிச சர்வதேசியக் கோட்பாடுகளைப் பிறழாமல் பின்பற்றி தோழமைப்பூர்வமான விவாதங்கள் நடத்துவதன் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும்.

ரசியாவில் சோசலிசம் வெற்றி பெற்றுள்ளதும் மக்கள் ஜனநாயக நாடுகள் சோசலிசக் கட்டுமானத்தில் முன்னேறியுள்ளதும், எல்லா நாடுகளிலுமுள்ள தொழிலாளிவர்க்கத்தினரிடத்திலும், உழைக்கும் மக்களி

டத்திலும் அவைகளின்பால் பெருத்த ஆதரவை ஏற்படுத்தியுள்ளன. சோசலிசக் கருத்துக்கள் மேலும் பல லட்சக்கணக்கான மக்களைத் தன் பக்கம் ஈர்த்துள்ளன. இத்தகைய நிலைமையில், பொதுமக்களைச் சித்தாந்த ரீதியாகக் குழப்புவதை மிக முக்கியமானதொரு கடமையாக ஏகாதிபத்தியமுதலாளிகள் கருதுகின்றனர். அவர்கள் சோசலிசத்தைத் தவறாக வியாக்கியானம் செய்கின்றனர். மார்க்சிய—லெனினியத்தை அவதூறு செய்கின்றனர். மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்து கின்றனர். அவர்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்லுகின்றனர். எனவே வெகுஜனப்பகுதிகளிடையில் மார்க்சிய—லெனினியப் போதனை யைத் தீவிரப்படுத்துவதும் முதலாளித்துவச் சித்தாந்தத்தை எதிர்த்துப் போராடுவதும், சோசலிசத்தைப் பற்றியும், கம்யூனிச இயக்கத்தைப் பற்றியும் கூறப்படும் பொய்யான அவதூறான திரித்துக்கூறுகின்ற ஏகாதிபத்தியப் பிரச்சாரங்களை அம்பலப்படுத்துவதும், சோசலிசம், சமாதானம், தேசங்களுக்கு இடையில் நட்புறவு முதலிய கருத்துக்களை எளிமையான, ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் விரிவாகப் பிரச்சாரம் செய்வதும் இன்றுள்ள முக்கியக் கடமையாகும்.

சோசலிசப் புரட்சி, சோசலிசக் கட்டுமானம் தொடர்பான தலையாய பிரச்சினைகளில் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள் ஒருமித்த கருத்துக் கொண்டிருப்பதை இக்கூட்டம் உறுதிப்படுத்தியது. சோசலிசப் புரட்சி யின் போக்குகளும், சோசலிசத்தைக் கட்டியமைப்பது பற்றிய நிகழ்ச்சிப் போக்குகளும் பல அடிப்படை விதிகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன வென்றும் இவ்வடிப்படை விதிகள் சோசலிசப்பாதையில் சென்று கொண்-டிருக்கும் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும் என்றும் மார்க்சியம்-லெனினி-யம் கூறுவது முற்றிலும் பிழையற்றதாகும் என்பதை ரசிய நாட்டின் அனுபவமும், இதர சோசலிச நாடுகளின் அனுபவமும் நிருபித்துள்ளன. இந்த விதிகள் எல்லாவிடங்களிலும் செயல்படுகின்றன. ஆனால் அவற்-றுடன் கூடவே நிலவும் பல்வேறு வரலாற்று தேசியச்சிறப்பியல்புகளும், சிறப்பான பாரம்பரிய சூழ்நிலைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

அடிப்படை விதிகளாவன: தொழிலாளி வர்க்கத்தின், அதன் கருக் குழுவாகிய மார்க்சிய-லெனினிய கட்சியின் வழிகாட்டுதலில் உழைக்கும் மக்கள் ஒரு வடிவிலோ அல்லது மற்றொரு வடிவிலோ பாட்டாளிவர்க்கப் புரட்சியை நடத்தி பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது; விவசாயப் பெருமக்களுடனும் இதர உழைக்கும் மக்களுடனும் தொழிலாளி வர்க்கம் கூட்டணி கொண்டிருப்பது; முதலாளித்துவச் சொத்துரிமையை ஒழித்து, அடிப்படை உற்பத்தி சாதனங்களை பொதுச் சொத்துடைமையாகமாற்றுவது; விவசாயத்தைப் படிப்படியாக சோசலிச புனரமைப்புக்கு மாற்றுவது; உழைக்கும் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடனும் சோசலிசம், கம்யூனிசத்தைக்

கட்டும் நோக்கத்துடனும் தேசியப் பொருளாதாரத்தைத் திட்டமிட்டு முன்னேறச் செய்வது; சித்தாந்தம் மற்றும் கலாச்சாரத் துறையில் சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுவது; தொழிலாளி வர்க்கத்தின்பாலும் உழைக்கும் மக்களின்பாலும், சோசலிசத்தின் லட்சியத்தின்பாலும் பற்றுக் கொண்டுள்ள எண்ணற்ற அறிவாளிகளை உருவாக்குவது தேசிய இன ஒடுக்கு முறையை ஒழித்து மக்களிடையே சமத்துவத்தையும், சகோதர நட்புறவையும் ஏற்படுத்துவது; உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு எதிரிகளிடமிருந்து சோசலிச சாதனைகளைக் காப்பாற்றுவது; பாட்டாளிவர்க்க சர்வதேசியம், அதாவது ஒரு நாட்டின் தொழிலாளி வர்க்கத்திற்கும், பிறநாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்திற்குமுள்ள ஒருமைப்பாடு.

ஒவ்வொரு நாட்டின் பருண்மையான நிலைமைகளைப் பொறுத்தே சோசலிசப் புரட்சி பற்றிய, சோசலிசக் கட்டுமானம் பற்றிய பொதுக் கோட்பாடுகளை ஆக்கரீதியான முறையில் அமுல் நடத்த வேண்டுமென்று மார்க்சிய—லெனினியம் போதிக்கிறது. இதர நாடுகளிலுள்ள கம்யூ னிஸ்டு கட்சிகளின் கொள்கைகளையும், போர்த்தந்திரங்களையும் அப்படியே யாந்திரீகமான முறையில் பின் பற்றுவதை மார்க்சிய—லெனினியம் நிராகரிக்கிறது. ஒரு தேசத்தின் சிறப்பியல்புகளையும், தேசிய நிலைமையையும் கணக்கிலெடுத்துக் கொண்டே கம்யூனிச அடிப்படைக் கொள்கைகளைச் சரியான முறையில் பிரயோகிக்க வேண்டும் என்று லெனின் மீண்டும் மீண்டும் நினைவு படுத்தியுள்ளார். தேசியச் சிறப்பியல்புகளைப் பாட்டாளி வர்க்கக் கட்சி புறக்கணிக்குமானால் எதார்த்த நிலையிலிருந்தும், பொதுமக்களிடத்திலிருந்தும் பிரிந்துசெல்ல நேரிடுவது தவிர்க்க முடியாதது. இதனால் சோசலிசத்தின் லட்சியத் திற்கே தீங்கு நேருவது உறுதி. அதே நேரத்தில் தேசியச் சிறப்புகளின் போக்கை மிகைப்படுத்தினாலும் அல்லது தேசியச் சிறப்பியல்புகள் என்ற பெயரில் சோசலிசப் புரட்சி, சோசலிச கட்டுமானம் பற்றியஅனைத்துந் தழுவிய மார்க்சிய—லெனினிய உண்மைகளைப் புறக்கணித்துவிட்டுத் தனிவழியிற் சென்றாலும் சோசலிச லட்சியத்திற்குத் தீங்கே விளையும். இந்த இருவிதப்போக்குகளும் சேர்ந்தாற் போல் முறியடிக்கப்பட வேண்டும் என்று இக்கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட பிரதிநிதிகள் கருதுகிறார்கள். சோசலிச நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகள், மேற்குறிப்பிட்ட அனைத்துந்தழுவிய மார்க்சிய—லெனினிய உண்மையையும், தங்கள் நாடுகளில் உள்ள பிரத்தியேகப் புரட்சிகர நடைமுறைகளையும் இணைத்துப் பார்க்கும் கொள்கையை உறுதியுடன் பின்பற்றி, சோசலிசப் புரட்சி சம்பந்தமாகவும், சோசலிசக் கட்டுமானம் தொடர்பாகவும் உள்ள பொது விதிகளை தங்கள் நாடுகளிலுள்ள பருண் மையான நிலைமைகளுக்கேற்ப ஆக்கரீதியான முறையில் பிரயோகிக்க வும், பரஸ்பரம் கற்றுக்கொள்ளவும் பரஸ்பரம் அனுபவத்தைப் பறிமாறிக் கொள்ளவும் வேண்டும்.

அனுபவத்தால் முயற்சி செய்யப்பட்டு பரிசோதிக்கப்பட்டு, ஆக்கப் பூர்வமாக பிரயோகிக்கப்பட்ட சோசலிசக் கட்டுமானத்தின் பொது விதி களும், சோசலிசக் கட்டுமானத்தில் வெவ்வேறு நாடுகளில் பயன்படுத்தப் பட்ட பல்வேறுவகையான வடிவங்களும், முறைகளும் மார்க்சிய—லெனி னியக் கோட்பாட்டிற்கு ஒரு கூட்டுப் பங்களிப்பாகும். இயக்க இயல் பொருள் முதல் வாதத்திலிருந்து வந்ததே மார்க்சிய—லெனினிய கோட்பாடு. இந்த உலக கண்ணோட்டமானது இயற்கை—சமுதாயம் மனித சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சியின் அனைத்துந்தழுவிய விதிகளைப் பிரதிபலிக்கிறது. இந்த விதிகள் கடந்த காலத்திற்கும் இக் காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் பொருந்துவனவாகும். இயக்க இயல் பொருள் முதல் வாதத்திற்கு எதிரானது இயக்க மறுப்பியலும், கருத்து முதல்வாதமும். மார்க்சிய அரசியல் கட்சியானது பிரச்சினைகளை ஆரா- யும் போது இயக்க இயல் பொருள் முதல்வாதத்தை அடிப்படையாகக் கொள்ளாவிட்டால் அதன் விளைவு ஒருதலைப்பட்ச போக்கை ஏற்படுத் தும், அகநிலைப் போக்கை அதிகரிக்கும், மனித சிந்தனை தடைப்பட்டுப் போகும். வாழ்க்கையிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு, பல்வேறு விசயங் களையும், நிகழ்வுகளையும் அவசியமான ஆய்வுக்கு உட்படுத்தும் திறமை குன்றிப் போகும். மார்க்சியத்தை திருத்த முயலும் தவறுகளும், வறட்டுச் சூத்திரவாதத்தைக் கடைப்பிடிக்கும் தவறுகளும், கொள்கை தவறுகளும், ஏற்படும். நடைமுறை வேலைகளில் இயக்கஇயல் பொருள் முதல்வாதத்தைப் யிரயோகிப்பதும், கட்சி ஊழியர்களுக்கும், பரந்துபட்ட மக்களுக்கும் மார்க்சிய-லெனினிய உணர்வுடன் கல்வி போதிப்பதும் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் அவசரமான கடமையாகும்.

தொழிலாளி வர்க்கம் மற்றும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சந்தர்ப்ப வாதப் போக்குகளுக்கு எதிராகத் தீவிரப் போராட்டம் நடத்த வேண்டியது இன்றைய கட்டத்தில் பிரதானமான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கம்யூனிஸ்ட்-தொழிலாளர் கட்சிகளின் அணிகளில் திரிபுவாதத்தையும் வறட்டுச் சூத்திரவாதத்தையும் தீர்மானகரமாக எதிர்த்துப் போராட வேண்டிய அவசியத்தை இக்கூட்டம் வலியுறுத்துகிறது. தொழிலாளி வர்க்கம் மற்றும் கம்யூனிஸ்டு இயக்கங்களின் திரிபுவாதமும், வறட்டுச் சூத்திரவாதமும் (Dogmatism) கடந்த காலத்தில் போலவே இன்றும் சர்வதேச நிகழ்வுகளாக உள்ளன. வறட்டுச் சூத்திரவாதமும், குறுங்குழு -வாதப் போக்கும் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் வளர்ச்சியைத் தடைப்படுத்துகின்றன. மாறுபட்ட சூழ்நிலைகளுக்கேற்ப அவற்றை ஆக்க ரீதியான முறையில் பிரயோகிப்பதற்கு முட்டுக்கட்டையாகவுள்ளன. இந்த வறட்டுச் சூத்திரவாதமும், குறுங்குழுவாதமும் யதார்த்த நிலைமை களை ஆராய்வதற்குப் பதிலாக, வேதங்களைப் போல் புத்தகங்களை மட்டுமே மேற்கோள் காட்டுகின்றன. இது மக்களிடமிருந்து கட்சியைத் தனிமைப்படுத்துவதற்கு இட்டுச் செல்கிறது. குறுங்குழுவாதம் என்ற குறுகிய கூட்டிற்குள் முடங்கிவிட்ட ஒரு கட்சியானது, பொது மக்களுடன்

தொடர்பிழந்துள்ள ஒரு கட்சியானது நிச்சயமாக தொழிலாளி வர்க்கத்தின் இலட்சியங்களுக்கு வெற்றி தேடித்தர முடியாது.

வறட்டுச் சூத்திரவாதத்தை கண்டிக்கின்ற பொழுதே இன்றுள்ள பிரதான அபாயம் ''திரிபுவாதம்'' தான் என்று கம்யூனிஸ்ட் கட்சிகள் கருதுகின்றன. வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர சக்தியை ஸ்தம்பிக்கச் செய்து முதலாளித்துவத்தை பேணிப் பாதுகாக்க வேண்டுமென்றோ, அல்லது மீண்டும் முதலாளித் துவத்தைக் கொண்டுவர வேண்டுமென்றோ கோரும் முதலாளித்துவ சித்தாந்தமான வலதுசாரி சந்தர்ப்பவாதப் போக்கே இன்றுள்ள பிரதான அபாயமாகும். எனினும் வறட்டுச் சூத்திரவாதமும், குறுங்குழுவாதமும் கூடஒரு கட்சியின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களில் பிரதான அபாயமாக இருக்க முடியும் என்பது மெய்யே. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் எந்த அபாயம் அதிகமாக அச்சுறுத்துகின்றது (வறட்டுச் சூத்திரவாதமா? திரிபு வாதமா?) என்று முடிவு செய்ய வேண்டியது அந்தந்தக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடமையாகும்.

தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது புரட்சியின் ஆரம்பம் மட்டுமே, புரட்சியின் முடிவல்ல என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும். அதிகாரத்தைக் கைப்பற்றியபின்,தேசியப் பொருளாதாரத்தை சோசலிச மறுநிர்மாணம் செய்யும் மிகப்பெரிய கடமையும், சோசலிசத் திற்கான பொருளாதாரத் தொழில் நுட்ப அடித்தளத்தை நிறுவும் கடமை யும் தொழிலாளி வர்க்கத்தை எதிர்நோக்கியுள்ளன. அதே நேரத்தில் ஆட்சிபீடத்திலிருந்து அகற்றப்பட்ட முதலாளிகள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு முயற்சித்துக்கொண்டே இருப்பார்கள். சமுதாயத்தில் முதலாளிகள், குட்டி முதலாளிகள், அறிவாளிகள் கூட்டத்திற்கு உள்ள செல்வாக்கு இன்னும் பெருமளவிலேயே இருக்கிறது. இதன் காரணமாக வெற்றி பெறுவது யார்? முதலாளித்துவமா, சோசலிசமா என்ற பிரச் சினைக்கு முடிவு காண்பதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது. முதலாளித்துவ செல்வாக்கு நீடித்திருப்பது திரிபுவாதம் தோன்றுவதற் கான அகக்காரணமாகும். ஏகாதிபத்தியப் பயமுறுத்தல்களுக்கு சரணடைவது அதற்கான புறக்காரணமாகும்.

மார்க்சிய-லெனினியம் காலாவதியாகிவிட்டதென்றும் இக்காலத் திற்கு ஒவ்வாதது என்றும், சமுதாய முன்னேற்றத்திற்கான அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டதென்றும் கூறுவதன் மூலம் மார்க்சிய-லெனினியத்தின் மகத்தான போதனைகளைக் கறைப்படுத்துவதற்கு நவீன திரிபுவாதம் முயற்சித்து வருகிறது. திரிபுவாதிகள் மார்க்சியத்தின் புரட்சிகர உணர்வை மழுங்கடிக்கவும், தொழிலாளி வர்க்கத்திற்கும், உழைக்கும் மக்களுக்கும் சோசலிசத்தின் மீதுள்ள நம்பிக்கையைச் சிதறடிக்கவும் முயலுகின்றனர். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான வரலாற்றுப்பூர்வமான அவசியத்தையும், முதலாளித்துவத்திலிருந்து

சோசலிசத்திற்கு மாறிச் செல்லும் காலத்தில் இருக்கவேண்டிய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றுப்பூர்வமான அவசியத்தையும் அவர்கள் மறுக்கிறார்கள். அவர்கள் மார்க்சிய-லெனினிய கட்சிகளின் தலைமைப் பாத்திரத்தை மறுக்கின்றனர். பாட்டாளிவர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளையும் கட்சி அமைப்பு பற்றிய லெனினியக் கொள்கைகளை யும் நிராகரிக்க கோருகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக போர்க்குண மிக்க புரட்சிகர அமைப்பாக இருப்பதினின்றும் கம்யூனிஸ்ட் கட்சியை ஒருவித விவாத அரங்கமாக மாற்றுவதற்காக ஜனநாயக மத்தியத் துவத்தையே நிராகரிக்கக் கோருகின்றனர்.

கம்யூனிஸ்ட்-தொழிலாளர் கட்சிகள் தங்கள் அணிகளின் மார்க்சிய-லெனினிய ஒற்றுமையை உறுதியாகப் பாதுகாப்பதன் மூலமும், ஒற்றுமையை சிதறடிக்கும் கோஷ்டிகளையும், குழுக்களையும் கட்சியி லிருந்து அகற்றுவதன் மூலமுமே சோசலிசப் புரட்சியின் கடமைகளையும், சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் ஏற்படுத்தும் கடமைகளையும் வெற்றிகரமான முறையில் உத்தரவாதம் செய்ய முடியும் என்பதை சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் அனுபவமும் காட்டுகிறது.

கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் மகத்தான வரலாற்று கடமைகளை எதிர்நோக்கியிருக்கின்றன. இந்தக் கடமைகளை நிறை வேற்றுவதற்கு கம்யூனிஸ்ட்-தொழிலாளர் கட்சிகளுக்கிடையில் நெருங்கிய ஒற்றுமை இருக்க வேண்டியது அவசியமாகும். அதுமட்டுமின்றி சகல தொழிலாளி வர்க்கத்திடையிலும் நெருங்கிய ஒற்றுமை இருக்க வேண்டி யது அவசியமாகும். மேலும் விவசாயிகள் மற்றும் தொழிலாளி வர்க்கத் திடையேயான கூட்டணியைப் பலப்படுத்துவதும், அனைத்து உழைக்கும் மக்களையும், முற்போக்கு மனிதர்களையும், சுதந்திரத்தையும் சமாதானத்தையும் விரும்பும் உலகில் உள்ள சக்திகள் அனைத்தையும் அணிதிரட்ட வேண்டியதும் அவசியமாகும்.

சமாதானத்தைப் பாதுகாக்கும் கடமையே இன்றுள்ள மிக முக்கிய மான உலகு தழுவிய கடமையாகும். எல்லா நாடுகளிலுமுள்ள கம்யூ னிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் யுத்தத்திற்கு எதிராக சமாதானம் விரும்பும் எல்லா சக்திகளுடனும் சேர்ந்து கூடுமானவரை விரிந்த அளவில் கூட்டு நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். யுத்தத்தை எதிர்த்து சமாதானத்திற்காகப் போராடு கின்ற, சமாதான சகவாழ்வை விரும்புகின்ற, அய்ரோப்பாவிலும் ஆசியாவிலும் கூட்டுப்பாதுகாப்பு முறையையும் ஆயுதக் குறைப்பையும் விரும்புகின்ற, அணு ஹைட்ரஜன் ஆயுதங்கள் சோதனைகளும் உபயோகமும் தடைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக நிற்கின்ற அனைத்து நாடுகள், கட்சிகள், ஸ்தாபனங்கள், இயக்கங்கள், தனிநபர்களின் முயற்சிகளுக்கு இக்கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட பிரதிநிதிகள் ஆதரவு தெரிவிக்கின்றனர்.

கம்யூனிஸ்ட்-தொழிலாளர் கட்சிகள், எல்லா நாடுகளிலுமுள்ள மக்களின் தேசிய, ஜனநாயக நலன்களுக்கு விசுவாசமான பாதுகாவலர்களாக விளங்குகின்றன. காலனி ஆக்கிரமிப்புக்கும், நிலப்பிரபுத்துவ ஒடுக்கு முறைக்கும் எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்தவேண்டிய வரலாற்று கடமை பல்வேறு நாடுகளிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தையும், மக்களையும் எதிர்நோக்கியுள்ளது. தொழிலாளர், விவசாயிகள், நகர்ப்புற குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள், இதர தேசபக்த, ஜனநாயக சக்திகளைக் கொண்ட ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கூட்டணியே இங்கு தேவைப்படுகிறது. பல்வேறு தேசபக்த, ஜனநாயக சக்திகளின் ஒற்றுமை எவ்வளவு பரந்த அளவினதாகவும் பலம் பெற்றதாகவும் இருக்குமோ, அந்த அளவுக்குப் பொதுப் போராட்டத்தின் வெற்றியும் உத்தரவாதம் செய்யப்படும் என்ற உண்மையைப் பல சான்றுகள் நிரூபிக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் யுத்த அபாயத்தை எதிர்த்தும், தங்களுடைய உயிராதாரமான நலன்களுக்காகவும் தொழிலாளி வர்க்கமும், பொதுமக்களும் நடத்துகின்ற போராட்டமானது ஏகபோக முதலாளித்துவக் கும்பலுக்கு நேரெதிரான போராட்டமாக வளர்ந்துள்ளது. இந்த ஏகபோகக் கும்பல்தான் ஆயுதப் போட்டிக்கு முக்கிய பொறுப்பாளிகள் ஆவர்; ஒரு புதிய யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு, அதைத் தூண்டி விடுவதற்குத் திட்டத்தைத் தயாரித்து வருவதும் அவர்கள்தான், இவர்கள்தான் ஆக்கிரமிப்பின் இருப்பிடமாகவும், பிற்போக்கின் அரணாகவும் இருக்கிறார்கள். இந்த ஒரு சில ஏகபோக முதலாளிகளின் நலன்களும், கொள்கைகளும் தொழிலாளி வர்க்க நலன்களோடு மட்டுமின்றி முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள விவசாயிகள், மத்தியதர வர்க்கத்தினர், குட்டி முதலாளிகள், மத்தியதர நகர்ப்புற முதலாளிகள் போன்ற இதர பிரிவினர் நலன்களோடும் முரண்பட்டு மேலும் முற்றிவருகிறது. அமெரிக்க ஏகபோக முதலாளித்துவம் தன்னுடைய மேலாதிக்கத்தை நிலைநாட்டிட முயன்று வருகிற முதலாளித்துவ நாடுகளிலும், ஏற்கனவே அமெரிக்காவின் பொருளாதார கொள்கையாலும், இராணுவ விஸ்தரிப்புக் கொள்கையினாலும் பாதிக்கப்பட்டிருக்கும் நாடுகளிலும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் - அதன் புரட்சிகர கட்சிகளின் தலைமையில்-சமாதானத்துக்காகப் போராடுவதற்காகவும், தேசிய சுதந்திரத்தையும் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாப்பதற்காகவும், வாழ்க்கைத்தர உயர்விற்காகவும், தீவிர நிலச்சீர்திருத்தங்களுக்காகவும், தேசிய நலன்களைக் காட்டிக் கொடுக்கின்ற ஏகபோக முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கியெறிவதற்காகவும் பரந்துபட்ட மக்களை ஒன்றுபடுத்துவதற்கான யதார்த்த நிலைமை உருவாகியுள்ளது.

சர்வதேச அரங்கில் ஏற்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாறுதல்களும், சக்திகளின் பரஸ்பர பலத்தில் சோசலிசத்துக்கு ஆதரவாக

ஏற்பட்டுள்ள முக்கிய திருப்பமும், தொழிலாளி வர்க்கத்திலும் உழைக்கும் விவசாயிகளிடத்தும் உழைக்கும் அறிவாளிகளிடத்தும் சோசலிசக் கருத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள பெருத்த செல்வாக்கும் ஆதரவும் சோசலிசத்தின் வெற்றிக்கு மேலும் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

வெவ்வேறு நாடுகளிலும் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறிச் செல்லும் வடிவங்கள் வேறுபடலாம். தொழிலாளி வர்க்கமும், அதன் முன்னணிப்படையாகிய மார்க்சிய-லெனினியக் கட்சியும் சமாதான வழியிலேயே சோசலிசப் புரட்சியைச் சாதிப்பதற்கு முயற்சித்து வருகின்றனர். தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும், எல்லா மக்களுடைய நலன்களுக்கும், ஒரு நாட்டின் தேசிய நலனுக்கும் இது ஒத்ததாகவே இருக்கும்.

இன்று, பல முதலாளித்துவ நாடுகளில் (மார்க்சிய-லெனினியக் கட்சியினால் தலைமை தாங்கப்படும்) தொழிலாளி வர்க்கமானது பெரும்பான்மையான மக்களை அய்க்கியப்படுத்தி உள்நாட்டு யுத்தமில்லாமல் அரசாங்க அதிகாரத்தை வென்று, அடிப்படையான பொருளுற்பத்தி சாதனங்களை மக்களுடைய உடமையாக ஆக்குவதற்குள்ள வாய்ப்புகள் உள்ளன. தொழிலாளி வர்க்கமும், பிறரும் சேர்ந்த ஒரு பொதுமக்கள் அணி உருவாகுமானால், அல்லது நடைமுறை வேலைத் திட்டத்தைப் பற்றிய ஒப்பந்தமும் வெவ்வேறு கட்சிகளுடைய பொது ஸ்தாபனங்களுடைய ஒத்துழைப்பும் ஏற்பட்டு, பெரும்பான்மை மக்களை ஒன்றுபடுத்துவது சாத்தியமானால் உள்நாட்டு யுத்தமின்றியே அரசாங்க அதிகாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகளுண்டு. பெரும்பான்மை மக்களின் ஆதரவை நம்பியும், முதலாளிகளுடனும் நிலப்பிரபுக்களுடனும் சமரசக் கொள்கையை விட்டுக்கொடுக்க முடியாதவர்களாகிய சந்தர்ப்பவாத நபர்களை உதறித்தள்ளுவதன் மூலமும் தொழிலாளி வர்க்கம் பிற்போக்கு மக்கள் விரோதச் சக்திகளை முறியடிக்க முடியும்; பாராளுமன்றத்தில் உறுதியான பெரும்பான்மையை அடையமுடியும்; முதலாளிவர்க்க நலனுக்கு உதவும் சாதனமாக பாராளுமன்றம் பயன்படுத்தப்படுவதினின்று மாற்றி அதை உழைப்பாளி மக்களுக்கு உதவும் சாதனமாக மாற்றமுடியும்; பாராளுமன்ற முறையல்லாத வேறுமுறைகளில் மக்கள்திரள் போராட்டத்தை ஆரம்பித்து, பாராளுமன்ற பிற்போக்குச் சக்திகளின் எதிர்ப்பை முறியடித்து, சோசலிசப் புரட்சியை சமாதான முறையில் நிறைவேற்றுவதற்கான அவசியமான யதார்த்த நிலைகளை உருவாக்கமுடியும். பெரும் ஏகபோக முதலாளிகளை எதிர்த்தும் பிற்போக்காளர்களை எதிர்த்தும், பெரும் சீர்திருத்தங்களுக்காகவும், சமாதானத்திற்காகவும், சோசலிசத்திற்காகவும், தொழிலாளர்களுடைய நகர்ப்புற விவசாயப் பெருமக்களுடைய, நகர்ப்புற மத்தியதர மக்களுடைய வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்தும்,விரிவாகவும் வளர்த்துச் செல்வதன் மூலமே இவை அனைத்தும் சாத்தியமாகும்.

சுரண்டும் வர்க்கங்கள் பலாத்காரத்தைப் பிரயோகிக்கத்தலைப்பட்டால், சமாதான வழிகளல்லாத இதர வழிகளில் சோசலிசத்தை வந்தடைய வேண்டியிருக்கும் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஆளும் வர்க்கங்கள் தங்கள் அதிகாரத்தைத் தாங்களாகவே துறந்து விட மாட்டார்கள் என்பதை லெனினியம் நமக்குப் போதிக்கிறது; அனுபவம் அதை உறுதிப்படுத்துகிறது, வர்க்கப் போராட்டத்தின் தன்மையும், முறையும் எப்படி இருக்கும் என்பது தொழிலாளி வர்க்கத்தைப் பொறுத்ததல்ல. பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு விரோதமாகப் பிற்போக்குக் கும்பல்கள் எவ்விதத் தடையை உபயோகிக்கிறார்கள், சோசலிசத்திற்கான போராட்டத்தில் ஒரு கட்டத்தில் அல்லது இன்னொரு கட்டத்தில் எவ்வளவு பலாத்காரத்தைப் பிரயோகிக்கிறார்கள் என்பதைப் பொறுத்ததுதான் அது. எந்த வழியில் சோசலிசத்தை அடைவதென்பது அந்தந்த நாடுகளின் பருண்மையான நிலைமைகளைப் பொறுத்ததே.

உழைப்பாளி மக்களின் நல்வாழ்வுக்கான போராட்டத்திலும், ஜனநாயக உரிமைகளைக் காத்து மேலும் உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்திலும், தேசிய சுதந்திரத்தையும், நாடுகளிடையே சமாதானத்தையும் ஏற்படுத்திப் பாதுகாப்பதற்கான போராட்டத்திலும், அரசாங்க அதிகாரத்தை வென்று சோசலிசத்தைக் கட்டமைப்பதற்கான போராட்டத்திலும் சோசலிஸ்டு கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்குக் கம்யூனிஸ்டு கட்சிகள் விரும்புகின்றன. வலதுசாரி சோசலிஸ்டுகட்சித் தலைவர்கள் இந்த ஒத்துழைப்பு ஏற்படுத்துவதற்குத் தங்களாலான இடையூறுகளையெல்லாம் செய்து வருகின்ற போதிலும், பல பிரச்சினைகளில் கம்யூனிஸ்டுகளுக்கும் சோசலிஸ்டுகளுக்கும் ஒத்துழைப்பு ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. கம்யூனிஸ்டு, சோசலிஸ்டு கட்சிகளுக்கிடையில் உள்ள சித்தாந்த வேறுபாடுகள், தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பாதிக்கக்கூடிய பல நெருக்கடியான பிரச்சினைகளில் இக்கட்சிகளிடையில் ஒற்றுமை ஏற்படாதிருப்பதற்குக் குறுக்கே நிற்கக்கூடாது.

தொழிலாளி வர்க்கம் அதிகாரத்திலுள்ள சோசலிச நாடுகளில் பொதுமக்களிடையே நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதற்கு வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிகள், பொதுமக்களை உறுதியாக சார்ந்து நின்று, தாங்கள்தான் தமது நாட்டின் எஜமானர்கள் என்பதை முழுமையாக உணர்ந்துள்ள லட்சக்கணக்கான மக்களுக்காக சோசலிசத்தை கட்டமைப்பதும், பாதுகாப்பதும் அவசியம். பொது மக்களின் நடவடிக்கைகளையும், ஆக்கப்பூர்வமான செயல்களையும், ஒருமைப்பாட்டையும் உயர்த்துவதற்காகவும், சோசலிச கட்டுமானத்தை துரிதப்படுத்துவதற்காகவும் சமீபகாலத்தில் சோசலிச நாடுகள் எடுத்த நடவடிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சோசலிச ஜனநாயகத்தை விரிவுபடுத்துவதற்கும், விமர்சனத்தையும்,

சுய விமர்சனத்தையும் ஊக்குவிப்பதற்கும் எடுத்துள்ள இந்த நடவடிக்கைகள் மிக முக்கியமானவையாகும்.

உண்மையான தொழிலாளி வர்க்க ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கும், எல்லா உழைக்கும் மக்களின், அனைத்து முற்போக்கு மனிதர்களின், உலகிலுள்ள சுதந்திரம், சமாதானம் விரும்பும் சக்திகளின் ஒருமைப்பாட்டை உண்டாக்குவதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக எல்லா நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டு - தொழிலாளர் கட்சிகளிடையே ஒற்றுமையை போற்றுவதும், ஒருமைப்பாட்டை வளர்ப்பதும் மிகவும் அவசியமாகும்; இந்த ஒருமைப்பாடு மேலும் உயர்ந்த ஒருமைப்பாட்டுக்கு அடிப்படையாக அமைகிறது. தொழிலாளி வர்க்கத்தின் லட்சிய வெற்றிக்கு இந்த ஒருமைப்பாடுதான் உத்தரவாதமானதாகும். உலக சோசலிச அமைப்பின் எதிர்காலத்தை குறித்தும் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் எதிர்காலத்தைக் குறித்தும் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளுக்கு குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்புண்டு. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் நலனை முன்னிட்டும், சமாதான, சோசலிச லட்சியங்களைக் கருதியும், சோசலிச நாடுகளின் கூட்டுறவைப் பலப்படுத்துவதற்கும், ஒற்றுமையையும் சகோதர ஒத்துழைப்பையும் வளர்ப்பதற்கும் சோர்வின்றி உழைப்பதாக இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கம் முன்னேற்றமடைந்துள்ளது, பல கடினமான சோதனைகளையும் அது தாண்டியுள்ளது, பல பிரதான வெற்றிகளையும் அது ஈட்டியுள்ளது என்பதை இக்கூட்டம் நிறைவுடன் குறிப்பிடுகிறது. சோசலிசத்தின் மகத்தான லட்சியங்களைப் பிரச்சாரம் செய்வது மட்டுமல்ல, அவைகளை மிகவும் கடினமான நிலைமைகளில் கூட நடைமுறையில் நிறைவேற்றி வைக்க முடியும் என்பதையும் தங்கள் செயல்களால் உலகரீதியில் கம்யூனிஸ்டுகள் நிரூபித்துக் காட்டி விட்டனர். மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் உயிராதார தன்மையை அவர்கள் தம் செயல் மூலம் நிரூபித்துக் காட்டிவிட்டனர்.

மனிதகுல வரலாற்றில் மற்றெந்த முற்போக்கு இயக்கங்களையும் போலவே, கம்யூனிச இயக்கமும் பல இடையூறுகளையும், தடைக்கற்களையும் தாண்டிச் செல்ல வேண்டியிருக்கிறது. அதன் பாதை நேரான பாதையாக இல்லை. என்றாலும் இவ்விடையூறுகளும் தடைக்கற்களும் கடந்த காலத்தில் எவ்வாறு பழைய உலகத்தை மாற்றி ஒரு புதிய உலகத்தைச் சமைக்க வேண்டுமென்ற தொழிலாளி வர்க்கத்தின் உறுதிப்பாட்டை மாற்றமுடியவில்லையோ, அது போலவே எதிர்காலத்திலும் அவர்களின் உறுதிப்பாட்டை மாற்றமுடியாது என்பது திண்ணம். எப்பொழுது போராட்டத்தை தொடங்கினார்களோ அன்று முதலே கம்யூனிஸ்டுகள் பிற்போக்கு சக்திகளால் துன்புறுத்தப்படுவதும் அடக்கு முறைக்கு ஆளாவதும் தொடர்கின்றன. ஆனால் கம்யூனிஸ்டு

இயக்கம் எல்லாத் தாக்குதல்களையும் வீரதீரமாக எதிர்த்து உறுதியாக முறியடித்துள்ளது. பல சோதனைகளுக்குப்பின் மேலும் பலம் பெற்றதாயும், எஃகு உறுதியுடனும் எழுந்து நிற்கிறது. கம்யூனிஸ்டுகள் தங்களுடைய ஒற்றுமையை மேலும் உறுதிப்படுத்துவதன் மூலம் ஒரு புது யுகத்திற்கு மனித சமுதாயம் முன்னேறிச்செல்வதைத் தடைசெய்யும் பிற்போக்கு சக்திகளின் முயற்சிகளை தகர்த்தெறிகிறார்கள்.

கம்யூனிசத்திற்கு நெருக்கடி ஏற்பட்டுவிட்டதென்று ஏகாதிபத்தியங்கள் முட்டாள்தனமாகக் கூறி வருகிறார்கள். ஆனால் கம்யூனிஸ்டு இயக்கம் நாளுக்கு நாள் வளர்ந்துவருகிறது; பலம் அடைந்து வருகிறது. ரசிய கம்யூனிஸ்டு கட்சியின் 20-வது மாநாட்டின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள் ரசியக் கம்யூனிஸ்டு கட்சிக்கும், ரசியாவில் கம்யூனிசத்தை ஏற்படுத்துவதற்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையென்பது மட்டும் அல்ல, உலக கம்யூனிச இயக்கத்தில் ஒரு புதிய கட்டத்தை அவை திறந்து விட்டுள்ளன. மார்க்சிய - லெனினிய வழியில் உலக கம்யூனிச இயக்கம் மேலும் முன்னேற வழிவகை செய்திருக்கின்றன. சீனா, பிரான்சு, இத்தாலி நாடுகளில் சமீப காலத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்டு கட்சி மாநாடுகள், கட்சி அணிகளின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் தெளிவாக உணர்த்துகின்றன. பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கைகளின் பால் அவர்களுக்குள்ள விசுவாசத்தை நிரூபித்துள்ளன. கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளுடைய இக்கூட்டம் கம்யூனிச ஒருமைப்பாட்டிற்கு மேலும் ஒரு அத்தாட்சியாகும்.

இன்றைய நிலையில், இருதரப்பின் முக்கிய தலைவர்கள் கூடிப் பேசுவதும், கருத்துக்களைப் பறிமாறிக் கொள்வதும் அவசியம். அது மட்டுமின்றி, அவசியப்பட்ட போதெல்லாம் தற்காலப் பிரச்சினைகளை விவாதிப்பதற்காகவும், அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்காகவும், ஒருவருடைய கருத்துக்களையும், போக்குகளையும் பிறர் புரிந்து கொள்வதற்காகவும், சமாதானம், ஜனநாயகம், சோசலிசம் ஆகிய பொது லட்சியங்களுக்கான கூட்டுப் போராட்டத்தில் திட்டமிட்ட ரீதியில் செயலாற்றுவதற்காகவும் தேவையேற்படும்போது மேலும் பல கம்யூ-னிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளின் மாநாடுகளைக் கூட்டுவது அவசியம் என்று கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் யாவரும் முடிவு செய்துள்ளனர். தங்களுடைய வேற்றுமைகளைக் களைந்து எல்லா நாடுகளிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தையும், மக்களை-யும் ஒன்று திரட்டுவதன் மூலம் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் தங்கள் முன்னேற்றப் பாதையில் வரும் எல்லா முட்டுக்கட்டைகளை-யும் உடைத்தெறிந்து உலகுதழுவிய அளவில் சமாதானம், ஜனநாயகம், சோசலிச லட்சியங்களை அடைவதில் மேலும் பெரிய வெற்றிகளைத் துரிதமாகப் பெறமுடியும் என்பதில் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும், ஒருமனதாக நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

81 நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் கூட்டறிக்கை

(மாஸ்கோ - 1960)

1960 நவம்பர் மாதத்தில் மாஸ்கோ மாநகரில் உலகிலுள்ள 81 நாடுகளின் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் தலைவர்கள் மாபெரும் மாநாடாகக் கூடினர். இக்கூட்டத்தில் 1957—ல் மாஸ்கோ மாநகரில் அங்கீகரிக்கப்பட்ட பிரகடனம் விவாதிக்கப்பட்டது. இவ்விவாதத்தின் அடிப்படையில், இறுதியில் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. இக்கூட்டறிக்கை உலகிலுள்ள எல்லா கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளுக்கும் வழிகாட்டியாக விளங்கியது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளாவன:

1. ஆஸ்திரேலியக் கம்யூனிஸ்டுக் கட்சி
2. ஆஸ்ட்ரியக் கம்யூனிஸ்டுக் கட்சி
3. அல்பேனிய தொழிலாளர் கட்சி
4. அல்ஜிரியன் கம்யூனிஸ்டுக் கட்சி
5. அர்ஜென்டினா கம்யூனிஸ்டுக் கட்சி
6. பெல்ஜியம் கம்யூனிஸ்டுக் கட்சி
7. பர்மா கம்யூனிஸ்டுக் கட்சி
8. பல்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சி
9. பொலிவியா கம்யூனிஸ்டுக் கட்சி
10. பிரேஸில் கம்யூனிஸ்டுக் கட்சி

11. பிரிட்டன் கம்யூனிஸ்டுக் கட்சி
12. ஹங்கேரி சோசலிசத் தொழிலாளர் கட்சி
13. வெனிசுலா கம்யூனிஸ்டுக் கட்சி
14. வியட்னாம் உழைப்பாளி மக்கள் கட்சி
15. ஹைதி மக்கள் ஒற்றுமைக் கட்சி
16. காதிலோப் கம்யூனிஸ்டுக் கட்சி
17. கெளதிமாலா தொழிலாளர் கட்சி
18. ஜெர்மானிய சோசலிச ஒற்றுமைக் கட்சி
19. ஜெர்மானிய கம்யூனிஸ்டுக் கட்சி
20. ஹான்டுராஸ் கம்யூனிஸ்டுக் கட்சி
21. கிரீஸ் கம்யூனிஸ்டுக் கட்சி
22. டென்மார்க் கம்யூனிஸ்டுக் கட்சி
23. டொமினிகன் மக்கள் சோசலிசக் கட்சி
24. இஸ்ரேல் கம்யூனிஸ்டுக் கட்சி
25. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி
26. இந்தோனேஷியக் கம்யூனிஸ்டுக் கட்சி
27. ஜோர்டான் கம்யூனிஸ்டுக் கட்சி
28. ஈராக் கம்யூனிஸ்டுக் கட்சி
29. ஈரான் கம்யூனிஸ்டுக் கட்சி
30. ஐரீஸ் தொழிலாளர் கழகம்
31. வடக்கு அயர்லாந்து கம்யூனிஸ்டுக் கட்சி
32. ஸ்பெயின் கம்யூனிஸ்டுக் கட்சி
33. இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி
34. கனடா கம்யூனிஸ்டுக் கட்சி
35. சைப்ரஸ் உழைப்பாளி மக்கள் முற்போக்குக் கட்சி
36. சீன கம்யூனிஸ்டுக் கட்சி
37. கொலம்பியா கம்யூனிஸ்டுக் கட்சி
38. கொரியா லேபர் கட்சி
39. கோஸ்டாரிக்கா மக்கள் முன்னணி கட்சி
40. கியூபா பாப்புலர் சோசலிசக் கட்சி
41. லெபனான் கம்யூனிஸ்டுக் கட்சி
42. லக்ஸம்பர்க் கம்யூனிஸ்டுக் கட்சி
43. மலேயா கம்யூனிஸ்டுக் கட்சி
44. மொராக்கோ கம்யூனிஸ்டுக் கட்சி
45. மார்ட்னிக் கம்யூனிஸ்டுக் கட்சி
46. மெக்ஸிகோ கம்யூனிஸ்டுக் கட்சி
47. மங்கோலிய மக்கள் புரட்சிகரக் கட்சி
48. நேபாளம் கம்யூனிஸ்டுக் கட்சி
49. நெதர்லாந்து கம்யூனிஸ்டுக் கட்சி
50. நிகரகுவா சோசலிசக் கட்சி
51. நியூஸிலாந்து கம்யூனிஸ்டுக் கட்சி
52. நார்வே கம்யூனிஸ்டுக் கட்சி

53. பனாமா மக்கள் கட்சி
54. பராகுவே கம்யூனிஸ்டுக் கட்சி
55. பெரு கம்யூனிஸ்டுக் கட்சி
56. போலந்து அய்க்கியத் தொழிலாளர் கட்சி
57. போர்ச்சுகல் கம்யூனிஸ்டுக் கட்சி
58. ரியூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி
59. ருமேனியத் தொழிலாளர் கட்சி
60. சால்வடார் கம்யூனிஸ்டுக் கட்சி
61. ஜான் மரினோ கம்யூனிஸ்டுக் கட்சி
62. சிரியா கம்யூனிஸ்டுக் கட்சி
63. ரசியக் கம்யூனிஸ்டுக் கட்சி
64. சூடான் கம்யூனிஸ்டுக் கட்சி
65. தாய்லாந்து கம்யூனிஸ்டுக் கட்சி
66. டுனீசியா கம்யூனிஸ்டுக் கட்சி
67. துருக்கி கம்யூனிஸ்டுக் கட்சி
68. உருகுவே கம்யூனிஸ்டுக் கட்சி
69. பின்லாந்து கம்யூனிஸ்டுக் கட்சி
70. பிரான்ஸ் கம்யூனிஸ்டுக் கட்சி
71. இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சி
72. செக்கோஸ்லோவாகிய கம்யூனிஸ்டுக் கட்சி
73. சிலி கம்யூனிஸ்டுக் கட்சி
74. சுவிட்சர்லாந்து தொழிலாளர் கட்சி
75. ஸ்வீடன் கம்யூனிஸ்டுக் கட்சி
76. ஈக்வேடார் கம்யூனிஸ்டுக் கட்சி
77. தென்னாப்பிரிக்க யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி
78. ஜப்பான் கம்யூனிஸ்டுக் கட்சி

79, 80, 81 ஆகியமூன்று கட்சிகள் தத்தம்நாட்டில் தலை மறைவாக இயங்கி வருவதால் அவைகளின் பெயர்கள் வெளியிடப்படவில்லை.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டோர் அனைவரும் தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டனர். மற்றவர்களுடைய கருத்துக்களையும் நிலைகளையும் அறிந்து கொண்டனர். இன்றைய மிகமுக்கியமான சர்வ தேசப் பிரச்சினைகளையும் கம்யூனிஸ்டு இயக்கத்தின் முன்னுள்ள முக்கிய பிரச்சினைகளையும் விவாதித்தனர். சமாதானம், ஜனநாயகம், தேசிய சுதந்திரம், சோசலிசம் ஆகிய பொது லட்சியங்களுக்கான போராட்டங்களின் நலனை முன்னிட்டு இந்த விவாதம் நடைபெற்றது. கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் அனைத்தும் ஏகமனதாக ஒரு அறிக்கையையும், உலக மக்களுக்கு ஒரு வேண்டுகோளையும் வெளியிட்டனர். அனைத்துப் பிரச்சினைகள் பற்றிய விவாதமும் மார்க்சிய-லெனினியம், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்ற அழிக்க முடியாத கோட்பாடுகளின் அடிப்படையில், சகோதர-நட்புறவு சூழ்நிலையில் நடைபெற்றது.

கூட்டறிக்கை

கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள், இக் கூட்டத்தில் இன்றுள்ள சர்வதேச நிலைமை பற்றியும், சமாதானம், தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சோசலிசம் இவற்றிற்காக தொடர்ந்து நடத்தப்பட வேண்டிய போராட்டம் குறித்தும் உள்ள அவசரப் பிரச்சினை களை விவாதித்தனர்.

விவாதிக்கப்பட்ட பிரச்சினைகளைக் குறித்து விவாதத்தில் கலந்து கொண்டவர்களிடையே கருத்தொற்றுமை நிலவியது. 1957-ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட (மாஸ்கோ) பிரகடனம், சமாதான அறிக்கை இவற்றில் தமக்குள்ள விசுவாசத்தைக் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் ஒருமுகமாக மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன. ஆக்கப்பூர்வமான மார்க்சிய-லெனினிய வேலைத் திட்ட ஆவணங்களான இவை நமது கால கட்டத்தில் உள்ள பிரதான பிரச்சினைகளின் பேரில் சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கம் மேற்கொள்ள வேண்டிய அடிப்படையான நிலைப் பாடுகளை வகுத்து நிர்ணயம் செய்துள்ளன. அதோடு பொது லட்சியங் களை நிறைவேற்றுவதற்கான போராட்டத்தில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் முயற்சிகளை ஒருமுகப்படுத்தப் பெரிய அளவுக்கு உதவி உள்ளன. இவை சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் முழுவதற்கும் போராட்டப் பதாகையாகவும், வழிகாட்டியாகவும் இருக்கின்றன.

இந்தப் பிரகடனத்திலும் சமாதான அறிக்கையிலும் கண்டுள்ள சர்வ தேச நிலை குறித்த ஆய்வுரையும், உலக வளர்ச்சிப்போக்கின் எதிர்காலம் பற்றிய நிர்ணயிப்பும் எவ்வளவு சரியானவை என்பதை கடந்த மூன்றாண்டு காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் போக்கு எடுத்துக்காட்டி விட்டது. அதோடு ஆக்கபூர்வமான மார்க்சிய-லெனினியத்தின் மாபெரும் விஞ்ஞான பூர்வ பலத்தையும் தீர்மானகரமான பாத்திரத்தையும் அது எடுத்துக்காட்டிவிட்டது.

உலக சோசலிஸ்ட் அமைப்பின் பலமும் சர்வதேசச் செல்வாக்கும் துரிதமாக வளர்ந்து வருவதையும், தேசிய விடுதலை இயக்கத்தின் மோதல் காரணமாக காலனியாதிக்க அமைப்பு வேகமாக நொறுங்கிவரும் போக்கையும், முதலாளித்துவ உலகத்தில் வர்க்கப் போராட்டங்கள் தீவிர மடைந்து வருவதையும், உலக முதலாளித்துவ அமைப்பு தொடர்ச்சியாகத் தேய்வுற்று நசிந்து வருவதையும் இந்த ஆண்டுகளில் பிரதான விளைவு களாக நாம் காண்கிறோம். உலக அரங்கில், ஏகாதிபத்திய சக்திகளை விட சோசலிச சக்திகள், யுத்த சக்திகளைவிட சமாதான சக்திகள் மேலோங்கி வருவது மேலும் திட்டவட்டமாகியுள்ளது.

இருந்த போதிலும், தனது நிலைகளைப் பேணிக்காக்கும் நோக்கத் துடன் ஏகாதிபத்தியம் படைக்குறைப்பைச் சீர்குலைக்கிறது. கெடுபிடிப்

போரை நீடிக்க முயலுகிறது. முடிந்த அளவில் அதை உக்கிரமாக்குகிறது. ஒரு புதிய உலக யுத்தத்திற்குத் தொடர்ந்து தயார் செய்கிறது. இந்த நிலையில், யுத்தத்தைத் தடுக்கவும், மக்களுக்குச் சமாதான வாழ்வை உத்தரவாதம் செய்யவும் சோசலிச நாடுகள், சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய இயக்கம், சமாதானத்தை விரும்பும் சகல நாடுகள், சகல சமாதான வீரர்கள் ஆகிய எல்லோருடைய மிக நெருங்கிய கூட்டு முயற்சிகளும் உறுதியான நடவடிக்கைகளும் மிகவும் அவசியமாகிறது. ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், தேசிய விடுதலைக்காகவும், சோசலிசத்திற்காகவும் நடைபெறும் போராட்டத்தில் சகல புரட்சிகர சக்திகளையும் மேலும் ஒன்று திரட்ட வேண்டியது அவசிய மாகிறது.

நமது காலம் மகத்தான அக்டோபர் சோசலிஸ்ட் புரட்சியால் துவக்கி வைக்கப்பட்ட, முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச் செல்லுகின்ற காலம்; ஒன்றை ஒன்று எதிர்க்கும் இரு சமூக அமைப்புகளின் போராட்ட காலம்; சோசலிஸ்ட் புரட்சிகளும் தேசவிடுதலைப் புரட்சிகளும் நடைபெறும் காலம்; ஏகாதிபத்தியம் முடிவடையும் காலம்; காலனி அமைப்பு ஒழிக்கப்படும் காலம்; மேலும் அதிகமான மக்கள் சோசலிசப் பாதையை மேற்கொள்ளும் காலம்; உலக ரீதியாக சோசலிசமும் கம்யூனிசமும் வெற்றி வாகை சூடும் காலம். இதுவே நம் சகாப்தத்தின் பிரதான உள்ளடக்கமாகும்.

சமுதாய வளர்ச்சியில் உலக சோசலிச அமைப்பு ஒரு தீர்மானகரமான சக்தியாகி வருவதே நமது காலகட்டத்தின் பிரதான குணாம்சமாகும்.

கடந்த சில பத்தாண்டுகளில் பழைய உலகுக்கும், புதிய உலகுக்கும் இடையே நடைபெற்ற அசுரத்தனமான போராட்டங்களில் சோசலிசத்தின் சக்தியும் அதன் வெல்ல முடியாத வல்லமையும் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது. வரலாற்று வளர்ச்சியின் போக்கை ஆயுத பலத்தின் மூலம் தடுத்து நிறுத்துவதற்கு ஏகாதிபத்தியங்களும் அதன் அதிரடிப்படையான பாசிசமும் நடத்திய முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. ஐரோப்பாவும் ஆசியாவிலும் ஏற்பட்ட சோசலிசப் புரட்சிகளைத் தடுத்து நிறுத்தும் வல்லமை ஏகாதிபத்தியத்திற்கு இல்லை என்பது நிரூபணமாயுள்ளது. சோசலிசம் உலக அமைப்பாகியுள்ளது. சோசலிச நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோட ஏகாதிபத்தியவாதிகள் முயன்றார்கள். ஆனால் அவர்களது திட்டங்கள் முறியடிக்கப் பெற்றன. காலனிய அடிமை அமைப்பைப் பாதுகாப்பதற்கு ஏகாதிபத்தியவாதிகள் தங்களால் ஆன மட்டும் சகல முயற்சிகளையும் செய்து பார்த்தார்கள். ஆயினும் அந்த அமைப்பு தகர்ந்து விழுந்து வருகிறது. சோசலிச அமைப்பு வலுவடையும் தோறும் சர்வதேச நிலைமை சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் போராடி வரும் மக்களுக்குச் சாதகமாக மேலும் மேலும் மாறி வருகிறது.

இன்று உலக சோசலிச அமைப்பும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிவரும் சக்திகளும், சமுதாயத்தில் சோசலிச மாற்றத்திற்காகப் போராடும் சக்திகளும்தான் சமுதாயத்தின் வரலாற்றுப் பூர்வமான வளர்ச்சியின் பிரதான உள்ளடக்கத்தை, பிரதான போக்கை, பிரதான அம்சங்களை நிர்ணயித்து வருகின்றன. ஏகாதிபத்தியம் என்ன தான் முயற்சி செய்தாலும் வரலாற்றின் முன்னேற்றத்தை அதனால் தடுத்துவிட முடியாது. மேலும் பல தீர்மானகரமான வெற்றிகளை சோசலிசம் பெறுவதற்கு நம்பிக்கையான அடிப்படை ஏற்பட்டுள்ளது. சோசலிசத்தின் முழுமையான வெற்றி தவிர்க்க முடியாதது.

சோசலிசம் வெற்றி பெற்றுள்ள நாடுகள், பிரதானமாகத் தமது பொருளாதார கட்டுமானப் பணிகள் மூலம் உலகப்புரட்சி உருவாகி வருவதற்கு தமது செல்வாக்கைச் செலுத்தும் என்ற லெனினது தீர்க்க தரிசனம் சரியானது என்று சமூக வளர்ச்சியின் போக்கு நிரூபித்துள்ளது. சோசலிச உற்பத்தி, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளிலும் ஒரு புதிய சுதந்திர மக்கள் சமுதாயத்தை நிறுவி, மக்களது பொருளாயத ஆன்மீகத் தேவைகளை எல்லாம் மேலும் அதிகமாகத் திருப்திப்படுத்தும் துறையிலும் முன்பு என்றுமே கண்டிராத அளவு ஆக்க பூர்வமான முன்னேற்றத்தைச் சாதித்திருக்கிறது. உலக உற்பத்தியில் சோசலிச நாடுகளின் பங்கு முதலாளித்துவ நாடுகளின் பங்கைவிட அதிகமாகும் காலம் தூரத்தில் இல்லை. மனித முயற்சியின் நிர்ணயமான துறையான பொருள் உற்பத்தித் துறையில் முதலாளித்துவம் முறியடிக்கப்படும்.

சோசலிச அமைப்பு வலுவடைந்துவருவதும், வளர்ச்சியுற்று வருவதும் முதலாளித்துவ நாடுகளின் மக்கள் நடத்தி வரும் போராட்டத்தின் மீதுமேலும் மேலும் செல்வாக்கைச்செலுத்திவருகிறது. உலக சோசலிச அமைப்பு தனது உதாரணத்தின் மூலம் முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைப்பாளி மக்களின் சிந்தனையைப் புரட்சிகரமாக்குகிறது; முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராட அவர்களுக்கு உத்வேகமளிப்பதுடன், அந்த போராட்டத்திற்கு பேராதரவும் அளிக்கிறது. முதலாளித்துவ நாடுகளில் சமாதானத்திற்காகவும், தேசிய விடுதலைக்காகவும், ஜனநாயகத்தின் வெற்றிக்காகவும், சோசலிசத்தின் வெற்றிக்காகவும் போராடி வரும் சக்திகள் எண்ணிக்கையிலும், பலத்திலும் ஓங்கி வளர்ந்து வருகிறது.

உலக முதலாளித்துவ அமைப்பு மிகவும் கடுமையான வகையில் தகர்ந்து நொறுங்கும் போக்கில், நசிவுப் போக்கில் சென்று கொண்டிருக்கிறது. அதன் முரண்பாடுகள் ஏகபோக முதலாளித்துவம் அரசு ஏகபோக முதலாளித்துவமாக மாறி வருவதைத் துரிதப்படுத்தியுள்ளன. அரசு ஏகபோக முதலாளித்துவம் நாட்டின் வாழ்வில் ஏகபோக முதலாளிகளின் பிடிப்பை இறுகவைப்பதன் மூலம் ஏகபோக முதலாளிகளின் அதிகாரங்களுடன் அரசாங்கத்தின் அதிகாரங்களை மிக நெருக்கமாக இணைக்கிறது; முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாப்பதும் தொழிலாளி வர்க்கத்தை

சுரண்டி, மக்கள் தொகையில் பெரும் பகுதிகளைச் சூறையாடி ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தின் லாபத்தை ஆனவரை பெருக்குவதுமே இதன் நோக்கமாகும்.

ஆனால் எந்த முறை கையாளப்பட்டாலும் சரி, ஏகபோக முதலாளிகளால் முதலாளித்துவத்தை மீட்க முடியாது. விரல் விட்டெண்ணக்கூடிய ஒருசில ஏகபோக முதலாளிகளின் நலன்கள் தேசத்தினுடைய நல உரிமைகளுக்கு முற்றிலும் விரோதமான முரண்பாடுகளைக் கொண்டுள்ளன. வர்க்க மற்றும் தேசியப் பகைமைகளும்,முதலாளித்துவ சமூகத்தின் அக மற்றும் புற முரண்பாடுகளும் பெருமளவில் கூர்மைப்பட்டுள்ளன. ராணுவ மயமாக்குவதன் மூலம் முதலாளித்துவத்தின் உளுத்துப்போன தூண்களை முட்டுக்கொடுத்து நிறுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இந்த முரண்பாடுகளை மேலும் தீவிரமாக்குகின்றன.

முதலாளித்துவ நாடுகளில் உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள மோதல் இவ்வளவு தீவிரமாக என்றுமே இருந்தது இல்லை. நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப சாதனைகளை சமூக முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துவதை முதலாளித்துவம் மேலும் மேலும் தடை செய்து வருகிறது. மனித மேதா விலாசத்தால் ஏற்பட்ட கண்டுபிடிப்புகளை நாசகர யுத்தத்தின் பயங்கர ஆயுதங்களாக மாற்றி மனித வர்க்கத்திற்கு எதிராகவே ஏவ முயல்கிறது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நிலையற்ற தன்மை மேலும் அதிகரிந்து வருகிறது சில முதலாளித்துவ நாடுகளில் உற்பத்தி ஓரளவுக்கு அதிகரித்து வந்த போதிலும், முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் தேசிய ரீதியிலும் சர்வதேசிய ரீதியிலும் மேலும் கூர்மையாகி வருகின்றன. சில முதலாளித்துவ நாடுகள் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கும் போதே புதிய பொருளாதார நெருக்கடிகளையும் எதிர் கொண்டிருக்கின்றன. முதலாளித்துவ உற்பத்தியின் அராஜகத் தன்மை மேலும் மேலும் தெளிவாகி வருகிறது. முதலாளித்துவத்தின் மூலதனக் குவியல், முன்னென்றுமில்லாத அளவு பெரிதாகி, ஏகபோகத்தின் லாபமும் கொள்ளை லாபமும் பெருகி வருகின்றன. ஏகபோக முதலாளித்துவம் புதிய வடிவங்களில், குறிப்பாக உழைப்பைக் கடுமையாக்குவதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தை மிகவும் தீவிரமாகச் சுரண்டுகிறது. முதலாளித்துவத்தின் கீழ் தானியங்கி இயந்திரங்கள், சிக்கன சீரமைப்பு (வேலைப்பளு) ஆகியவை உழைக்கும் மக்களுக்கு மேலும் பல பேரிழப்புகளைக் கொண்டு வருகின்றன. சில நாடுகளில் தொழிலாளி வர்க்கம், உறுதியாகப் போராடியதன் மூலமே அதன் அவசரக் கோரிக்கைகள் சிலவற்றை நிறைவேற்றிக் கொண்டுள்ளது. இருப்பினும் பல முதலாளித்துவ நாடுகளில் வாழ்க்கைத்தரம் யுத்தத்திற்கு முந்திய காலத்தில் இருந்ததை விட மோசமாகவே உள்ளது. முதலாளி வர்க்கம் வாக்குறுதிகள் கொடுத்திருந்தும் எல்லோருக்கும் வேலை என்பது

ஒருசில முதலாளித்துவ நாடுகளில் மட்டுமே சாத்தியமாயிற்று. அதுவும் தற்காலிகமாக மட்டுமேதான். ஏகபோக முதலாளிகளின் ஆதிக்கத்தால் பரந்துப்பட்ட விவசாயப் பொதுமக்களும், சிறிய நடுத்தர முதலாளிகளில் பெரும் பகுதியினரும் மேலும் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர் அதிக வளர்ச்சி அடைந்துள்ள சில நாடுகள் உட்பட எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் பொருளாதாரத் துறையில் வளர்ச்சி குன்றிய பிரதேசங்கள் இருக்கின்றன. இங்கு பொதுமக்களின் வறுமை படுகோரமாக இருப்பதோடு அத்தகைய பகுதிகள் தொடர்ந்து விரிவடைந்து வருகின்றன.

நவீன முதலாளித்துவம் ''மக்கள் முதலாளித்துவ'' மாகிவிட்டது எனவும், அது ''மக்கள் நல அரசாங்க''த்தை (welfare state) நிறுவி அராஜக உற்பத்தி, பொருளாதார நெருக்கடிகள் ஆகியவற்றைச் சமாளித்து, சகல உழைப்பாளி மக்களுக்கும் நலன் தருகிறது எனவும் முதலாளித்துவ சித்தாந்தவாதிகளும் திரிபுவாதிகளும் பரப்ப முயலும் பொய்களை மேலே குறிப்பிட்ட உண்மைகள் மீண்டும் நிராகரிக்கின்றன.

முதலாளித்துவ வளர்ச்சியில் காணப்படும் ஏற்றத்தாழ்வான போக்கு ஏகாதிபத்திய நாடுகளிடையே உள்ள பலாபல சமநிலையை தொடர்ச்சியாக மாற்றிக் கொண்டே இருக்கிறது. ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் எல்லைகள் குறுகக்குறுக ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையே முரண் -பாடுகள் மேலும் வலுவடைகின்றன. சந்தைப் பிரச்சினைகள் எப்போதையும்விட அதிகமாகத் தீவிரமடைந்துள்ளன. நாடுகளுக் கிடையே 'ஒருங்கிணைப்பு' என்ற முழக்கத்தின் பெயரால் நிறுவப்படும் புதிய அமைப்புகள் உண்மையில் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையே எதிர்ப்பையும் போராட்டத்தையும் அதிகரிக்கவே செய்துள்ளன. இவை மிகப்பெரிய முதலாளித்துவக் கூட்டணிகள் உலக முதலாளித்துவ சந்தையை தமக்குள் பிரித்துக் கொள்ளக் கையாளும் புதிய முறையாகும். இது பலம் பொருந்திய ஏகாதிபத்திய நாடுகள் பலவீனமான தமது கூட்டாளி நாடுகளின் பொருளாதாரத்தில் ஊடுருவல் செய்யும் முறையாகும்.

இன்று பிரதான ஏகாதிபத்திய நாடாக இருக்கும் அமெரிக்காவில் முதலாளித்துவம் சீரழிந்து வருவதைக் குறிப்பாக காணலாம். அமெரிக்க ஏகபோக முதலாளித்துவம் தன்கைவசம் உள்ள எல்லா உற்பத்தி சக்திகளையும் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பது தெளிவு. உலகில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் செல்வம் நிறைந்த நாடான அமெரிக்கா தீராத பெரும் வேலையில்லாத் திண்டாட்டம் உள்ள நாடாக இருக்கிறது.

அமெரிக்கா தொழில் நிறுவனங்களில் உற்பத்தி சக்தி முழுமையையும் பயன்படுத்த முடியாத நிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது; ராணுவச் செலவுகளுக்காக ஏராளமான பணம் செலவிடப்படுவதால் உழைக்கும்

மக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்து வருகிறது; யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் உற்பத்தி வளர்ச்சி விகிதம் குறைந்து வருகிறது; மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தைவிட உற்பத்தி வளர்ச்சி விகிதம் மிகச்சிறிதே அதிகமாக உள்ளது. அபரிமிதமான உற்பத்தியினால் ஏற்படும் நெருக்கடிகள் அடிக்கடி நிகழ்கின்றன. முதலாளித்துவ நாடுகளில் மிகவும் வளர்ச்சியடைந்த நாடு மிகவும் சீரழிந்த ராணுவ மயமாக்கப்பட்ட பொருளாதாரத்தை கொண்டிருக்கிறது. அமெரிக்கா இதர முதலாளித்துவ நாடுகள் எதையும் விட அதிகமாக, ஆசிய நாடுகள், மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் செல்வங்களை உறிஞ்சுகிறது. அவற்றின் முன்னேற்றத்தை தடை செய்கிறது. ஆப்பிரிக்காவில் அமெரிக்க முதலாளித்துவ ஊடுருவல் அதிகரித்திருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம் சர்வதேசச் சுரண்டலில் முதன்மை வகிக்கிறது.

பிரதானமாக ராணுவக் கூட்டணிகள், பொருளாதார ''உதவி'' ஆகிய கொள்கைகளைக் கையாள்வதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் பல்வேறு நாடுகளையும் தம் பிடியின் கீழ் கொண்டு வர முயல்கின்றனர். அவர்கள் வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளின் இறையாண்மையைக்கூட மீறுகிறார்கள். அதிகவளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளின் ஆதிக்கம் வகிக்கும் ஏகபோக முதலாளிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து நிற்கிறார்கள்; புரட்சிகரமான விடுதலை சக்திகளை ஒடுக்கவும், உழைப்பாளி மக்களின் ஜனநாயக சுதந்திரங்களை பறிக்கவும், சமூக முன்னேற்றத்திற்காக மக்கள் நடத்தும் போராட்டத்தைத் தடுக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்த ஏகபோக முதலாளிகள் தமது நாடுகளின் இறையாண்மையை அடகு வைக்கிறார்கள். புதியதோர் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்குத் தயார் செய்து கொள்வது, சோசலிச நாடுகளிலும் நடுநிலைமை நாடுகளிலும் சீர்குலைவு சதி வேலைகளை நடத்துவது என்ற கொள்கையின் அடிப்படையில் இந்த நாடுகளை அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆயுதப் போட்டியிலே ஈடுபடுத்துகிறது.

பல நாடுகளிலுமுள்ள ஏகாதிபத்திய முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தனது சொந்த சக்தியை வைத்துக்கொண்டே இந்த நாடுகளில் வலிவும் விரிவும் பெற்றுவரும் ஜனநாயக முற்போக்கு சக்திகளைதடுத்து நிறுத்த முடியாத அளவிற்கு முதலாளித்துவ அமைப்பின் தூண்கள் மிகவும் சீரழிந்து போய்விட்டன. ஏகாதிபத்தியவாதிகள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் அரசியல் ராணுவ கூட்டணிகளை ஏற்படுத்திக் கொண்டு சோசலிச முகாமை கூட்டாக எதிர்க்கவும் தேச விடுதலை இயக்கம் தொழிலாளி வர்க்க சோசலிச இயக்கங்களை நெருக்கவும் முனைந்துள்ளனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் உலக பிற்போக்கின் கோட்டை, சர்வதேச ராணுவப் போலீஸ் படை, உலகம் முழுவதிலுமுள்ள மக்களின்

விரோதி என்பதற்கு சமீப ஆண்டுகளில் ஏற்பட்ட சர்வதேசிய நிகழ்ச்சிகள் பல புதிய சான்றுகளை அளித்துள்ளன.

அமெரிக்கா நிறுவியுள்ள ராணுவக் கூட்டணி அமைப்புகள், அவற்றிலுள்ள உறுப்பு நாடுகளுக்குஇடையில் நடக்கும் மோதல்களாலும், இந்த கூட்டணிகளை ஒழிக்க, மக்கள் நடத்திவரும் போராட்டங்களின் விளைவாகவும் பலவீனமடைந்து வருகின்றன. அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் ஆக்கிரமிப்பு கூட்டணிகளை பலப்படுத்த முயற்சி செய்கிறார்கள். இதன் விளைவாக மக்களின் எதிர்ப்பு மேலும் அதிகரித்து வருகிறது. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அமெரிக்காவின் பங்கு குறைந்து வந்த போதிலும், அது நவீன ஏகாதிபத்தியத்தின் பிரதான பொருளாதார, நிதி, ராணுவ சக்தியாக விளங்குகிறது. பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் தமது நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்ள விடாப்பிடியாக முயன்று வருகிறார்கள். மேற்கு ஜெர்மனி மற்றும் ஜப்பான் நாட்டு ஏகபோக முதலாளிகள் தமது பலத்தை மீட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க ஏகபோக முதலாளிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் இவர்கள் தமது விஸ்தரிப்பு வேலையை அதிகரித்து வருகிறார்கள். மேற்கு ஜெர்மன் ஏகபோக முதலாளிகள், தங்களின் ஏகாதிபத்தியக் கொள்கைகளின் மூலம் வளர்ச்சி குறைந்துள்ள நாடுகளை மேலும் சுரண்ட முயல்கிறார்கள்.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதற்கு மக்கள் மேலும் உறுதியுடன் முன் வருகின்றனர். தொழிலாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ சக்திகளுக்கும் இடையே, ஜனநாயகத்திற்கும் பிற்போக்குக்கும் இடையே, சுதந்திர சக்திகளுக்கும் காலனியாதிக்கத்திற்கும் இடையே ஒரு மாபெரும் போராட்டம் நடைபெற்று வருகிறது. கியூபாவில் வெற்றி பெற்ற மக்கள் புரட்சி, லத்தீன் அமெரிக்க நாட்டு மக்களுக்கு ஒரு சிறப்பான உதாரணமாகத் திகழ்கிறது. ஆப்பிரிக்காவில் விடுதலைக்காகவும், தேசிய சுதந்திரத்துக்காகவும் நடைபெறும் காலனி-யாதிக்க எதிர்ப்பு போராட்டம் தடுக்க முடியாத வகையில் விரிவடைந்து வருகிறது. ஈராக்கில் எழுந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு-தேசிய புரட்சி வெற்றி வாகை சூடியுள்ளது. ஜப்பானிய - அமெரிக்க ராணுவக் கூட்டணியை எதிர்த்துச் சமாதானம், ஜனநாயகம், தேசிய சுதந்திரம் ஆகியவற்றுக்காக ஜப்பானிய மக்கள் பலம் பொருந்திய இயக்கத்தை நடத்தி வருகிறார்கள். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக இத்தாலி மக்கள் உத்வேகத்துடன் போராடி வருவது அந்த நாட்டு உழைப்பாளி மக்களின் தீவிரமான உறுதியை எடுத்துக்காட்டுகிறது. பிரான்சில் தனிநபர் ஆதிக்கத்துடன் கூடிய பிற்போக்கு ஆட்சியை எதிர்த்து ஜனநாயகத்திற்கான போராட்டம் வேகம் பெற்று வருகிறது. அமெரிக்கா, அர்ஜென்டினா, உருகுவே, சிலி, இந்தியா, பிரிட்டன், கனடா, பெல்ஜியம் இன்னும் இதர முதலாளித்துவ நாடுகளில் பெரிய அளவிலான தொழிலாளி வர்க்க வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுள்ளன. அமெரிக்கா

வில் நீக்ரோ மக்கள் தமது அடிப்படை உரிமைகளுக்காக நடத்தும் போராட்டம் வெகுஜனத் தன்மை அடைந்து வருகிறது. ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகளில் உள்ள பாசிச சர்வாதிகாரத்துக்கு எதிராக தேசிய சக்திகளை ஒன்று திரட்டும் ஆர்வம் வளர்ந்து வருகிறது. கிரீஸில் ஜனநாயக இயக்கம் வலுவடைந்து வருகிறது. கொலம்பியாவிலும் வெனிசுலாவிலும் கொடுங்கோன்மை ரா்ணுவ ஆட்சி தூக்கியெறியப் பட்டுள்ளது. வெளிப்படையான அமெரிக்க ஆதரிப்பு போக்கில் சென்று வரும் தென்கொரியா மற்றும் துருக்கிய அமெரிக்கப் பொம்மை அரசுகளுக்குப் பலத்த அடி கிடைத்திருக்கிறது. தென்வியட்னாம், லாவோஸ் நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கும் அவர்களது கைப் பொம்மைகளுக்கும் எதிரான தேசிய ஜனநாயக இயக்கம் வளர்ந்து வருகிறது. இந்தோனேசிய மக்கள் அவர்களது நாட்டில் ஏகாதிபத்திய வாதிகள் இன்னும் தக்கவைத்துக்கொண்டிருக்கும் பொருளாதாரப் பிடிப்புகளை, குறிப்பாக டச்சு காலனியாதிக்கத்தின் பிடிப்பை அகற்றி வருகிறார்கள். சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான வெகு ஜன இயக்கம் எல்லாக் கண்டங்களிலும் வலுவடைந்து வருகிறது. இவை அனைத்தும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய விடுதலை இயக்க, யுத்த எதிர்ப்பு, வர்க்கப் போராட்ட அலைகள் நாளுக்கு நாள் ஓங்கி வருகின்றன என்பதற்குரிய தெளிவான சான்றுகளாகும்.

முதலாளித்துவப் பொது நெருக்கடியின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டம் துவங்கியிருக்கிறது. மனித குலத்தில் மூன்றில் ஒரு பகுதியைத் தழுவி நிற்கும் ஐரோப்பிய, ஆசிய நாடுகள் பலவற்றில் சோசலிசத்தின் வெற்றி யும், உலகம் முழுவதிலும் சோசலிசத்திற்காகப் போராடி வரும் சக்தி களின் பலம் மிக்க வளர்ச்சியும், சோசலிசத்துடன் நடத்தும் பொருளாதாரப் போட்டியில் ஏகாதிபத்தியத்தின் நிலைகள் தொடர்ந்து பலவீனமடைந்து வருவதும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள மகத்தான புதிய எழுச்சியும் காலனிய அமைப்பு மேலும் மேலும் நொறுங்கி வருவதும் முதலாளித்துவத்தின் உலகப் பொருளாதார அமைப்பு முழுவதிலும் வளர்ந்து வரும் ஸ்திரமற்ற நிலையும் அரசு ஏகபோக முதலாளித்துவமும் ராணுவ ஆதிக்கமும் வளர்வதால் முதலாளித்துவ முரண்பாடுகள் மேலும் தீவிரம் அடைந்து வருவதும், ஏகபோக முதலாளிகளுக்கும் தேசத்தின் நலன்களுக்கும் இடையே வளர்ந்து வரும் முரண்பாடுகளும், முதலாளித் துவ ஜனநாயகம் சிதைக்கப்பட்டு எதேச்சதிகார பாசிச ஆட்சிமுறைகள் கடைபிடிக்கப்படும் போக்கும், முதலாளித்துவ அரசியலிலும் சித்தாந்தத் திலும் ஏற்பட்டுள்ள ஆழமான நெருக்கடியும் முதலாளித்துவப் பொது நெருக்கடி அதிகரித்து வருவதையே எடுத்துக்காட்டுகின்றன. இக் கட்டத் தின் சிறப்பம்சம் என்னவென்றால் இது உலக யுத்தத்தின் விளைவாக ஏற்பட்டதல்ல. மாறாக இரு அமைப்புகளுக்கு இடையே நடைபெறும் போட்டி மற்றும் போராட்ட சூழ்நிலையிலும், சோசலிசத்திற்கு சாதக மாக உலக சக்திகளின் பலம் அதிகரித்து வரும் நிலைமைகளிலும், ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகள் எல்லாம் உக்கிரமாகி காட்சியளிக்கும்

கட்டத்திலும் இது ஏற்பட்டிருக்கிறது. சமாதானத்தை விரும்பும் சக்திகள் வெற்றிகரமாகப் போராடி சமாதான சகவாழ்வை வளர்த்து, ஏகாதிபத்திய வாதிகள் தமது ஆக்கிரமிப்புச் செயல்களால் உலக சமாதானத்தை சீர் குலைத்துவிடாமல் தடுத்து நிறுத்தியுள்ள காலகட்டத்தில், பரந்துபட்ட மக்கள் விரிவான அளவில் ஜனநாயகம், தேசிய விடுதலை, சோசலிசம் இவற்றுக்காக நடத்தும் போராட்டம் வளர்ச்சியடைந்துள்ள சூழ்நிலையில் இது ஏற்பட்டிருக்கிறது.

அனைத்து புரட்சிகர சக்திகளும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிராக அணிவகுத்து வருகின்றன. சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் கட்டி வளர்த்து வரும் மக்கள், முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கம், ஒடுக்கப்பட்ட மக்களின் தேச விடுதலைப் போராட்டம், பொதுவான ஜனநாயக இயக்கம், நமது காலகட்டத்தில் உள்ள இந்த மகத்தான சக்திகள் யாவும் ஒரே பேராறுபோல ஒன்றிணைந்து உலக ஏகாதிபத்திய அமைப்பை நிலை குலையச் செய்து அழித்து வருகின்றன. நமது காலகட்டத்தில் உள்ள மையமான அம்சங்கள் சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் அதன் பிரதான படைப்பான உலக சோசலிச அமைப்புமே. அவை சமாதானம், ஜனநாயகம், தேசிய விடுதலை, சோசலிசம், மனித குல முன்னேற்றம் ஆகியவற்றுக்கான போராட்டத்தில் வெற்றிக்கான அடிப்படையாகத் திகழுகின்றன.

சோசலிச அமைப்பின் வளர்ச்சியில் புதிய கட்டம்

உலக சோசலிச அமைப்பின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டம் துவங்கி விட்டது. கம்யூனிஸ்ட் சமுதாயத்திற்கான முழுஅளவிலான கட்டுமானப் பணிகளை ரசியா வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது. சோசலிச முகாமிலுள்ள இதர நாடுகள் சோசலிசத்திற்கான அடித்தளத்தை வெற்றி கரமாக அமைத்து வருகின்றன. இவற்றில் சில நாடுகள் ஏற்கெனவே வளர்ச்சியடைந்த சோசலிச சமுதாயத்திற்கான கட்டுமானக் கட்டத்தில் நுழைந்து விட்டன.

சோசலிச அமைப்பு ஒட்டுமொத்தமாக பல நிர்ணயமான வெற்றி களைச் சாதித்திருக்கிறது. இந்த வெற்றிகள் மார்க்சிய—லெனினியத் தின் வெற்றியை எடுத்துக்காட்டுகின்றன. இந்த சித்தாந்தங்களின் அடிப்படையில் உருவாகும் சமூகத்தில் பொருளாதாரமும் கலாச்சாரமும் முழுமையான வளர்ச்சி பெறவும், உயர்ந்தவாழ்க்கைத்தரமும், சமாதான மும், மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வு கிடைக்கவும் மகத்தான வாய்ப்புகள் உள்ளன என்பதை முதலாளித்துவ ஆதிக்கத்தின் கீழ் உள்ள மக்களுக்கு இவை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

ஏழாண்டுப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வரும் ரசிய மக்கள் கம்யூனிசத்துக்கான பொருளாயத மற்றும் தொழில் நுட்ப அடிப்படைகளை வேகமாக நிர்மாணித்து வருகிறார்கள். ரசிய விஞ்ஞானம் உண்மையிலேயே உலக நாகரிகத்தில் ஒரு புதிய சகாப்தத்தை துவக்கியுள்ளது. விண்வெளி ஆராய்ச்சியை இது துவக்கிவைத்துள்ளது. இதன் மூலம் சோசலிச முகாமின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வலிமையை அழுத்தந்திருத்தமாக எடுத்துக் காட்டிவிட்டது.

மனிதகுலம் முழுவதற்கும் முதன் முதலாக வரலாற்றுப் பாதையில் ஒளி காட்டி கம்யூனிசத்தை நோக்கி அழைத்துச் செல்லும் நாடு ரசிய நாடே. உலக மக்கள் சமாதானத்திற்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும்,தேசிய சுதந்திரம், சமூக முன்னேற்றத்திற்காகவும் நடத்தும் போராட்டத்திற்கு அற்புதமான உதாரணமாகவும் பலம் பொருந்திய கோட்டையாகவும் திகழ்வதும் ரசிய நாடே.

சீனாவில் நடைபெற்ற மக்கள் புரட்சி ஆசியாவில் ஏகாதிபத்தியத்திற்கிருந்த பலத்தைத் தகர்க்கும் அடியாக இருந்தது. அதோடு சோசலிசத்திற்குச் சாதகமாக உலக சக்திகளின் பலாபலங்கள் மாறுவதற்கும் பெருமளவில் உதவியது. தேச விடுதலை இயக்கத்திற்கு மேலும் பலம் வாய்ந்த உத்வேகத்தை ஊட்டியதின் மூலம் மக்களிடையில், குறிப்பாக ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்க மக்களிடையே இப் புரட்சி பிரம்மாண்டமான செல்வாக்குப் பெற்றது.

அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி-மக்கள் குடியரசுகளும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, வியட்னாம் ஜனநாயகக் குடியரசு, சீன, கொரிய-மக்கள் ஜனநாயகக் குடியரசு, மங்கோலியா, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லோவேகியா-சோசலிச குடியரசு ஆகியனவும் ரசிய நாட்டுடன் சேர்ந்து பலம் வாய்ந்த சோசலிச முகாமாகின்றன. வரலாற்றின் மிகக் குறுகிய காலத்திற்குள் இந்த நாடுகள் சோசலிச கட்டுமானத்தில் போற்றுதற்குரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

இந்த நாடுகளிலுள்ள மக்கள் அரசுகள் தமது அசைக்க முடியாத உறுதித் தன்மையை நிரூபித்து விட்டன. தேசிய பொருளாதாரத்தில் சோசலிச உற்பத்தி உறவுகள் (முறைகள்) மேலோங்கியுள்ளன. மனிதனை மனிதன் சுரண்டும் போக்கு என்றென்றைக்குமாக ஒழிக்கப்பட்டு விட்டது; அல்லது வெற்றிகரமாக ஒழிக்கப்பட்டு வருகிறது. சோசலிச தொழில் வளர்ச்சிக் கொள்கையின் வெற்றியின் விளைவாக சோசலிச நாடுகளில் பெரிய பொருளாதார எழுச்சி ஏற்பட்டுள்ளது. இந்த நாடுகள் தமது பொருளாதாரத்தை முதலாளித்துவ நாடுகளை விட அதிவேகமாக அபிவிருத்தி செய்துவருகின்றன. இந்த நாடுகள் எல்லாம் வளர்ச்சியடைந்த தொழில் துறையை அமைத்து விட்டன. முன்பு விவசாய நாடாக இருந்த

இவை இப்போது தொழிலும் விவசாயமும் சேர்ந்த நாடுகளாகிவிட்டன; அல்லது ஆகிவருகின்றன.

விவசாயிகளின் சுயவிருப்பத்தின் அடிப்படையில் சிறிய அளவிலான தனியார் துறை விவசாயத்திலிருந்து சோசலிச வழியிலமைந்த பெரிய அளவிலான கூட்டுறவு விவசாயத்திற்கான பாதைக்கு மாறிச் செல்வதே சோசலிச கட்டுமானத்தின் கடினமான பிரச்சினையாகும். சமீப ஆண்டுகளில் எல்லா மக்கள் ஜனநாயக அரசுகளும் இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டன; அல்லது வெற்றிகரமாகத் தீர்வு கண்டுவருகின்றன.

லெனினுடைய கூட்டுறவு விவசாயிகள் திட்டம், நீண்ட காலமாக விவசாயிகள் நிலத்தில் தனிச் சொத்துரிமை கொண்டாடும் நாடுகளிலும் சரி, அண்மையில் நிலப் பிரபுத்துவ உறவுகளுக்கு (முறைகளுக்கு) முடிவு கட்டிய நாடுகளிலும் சரி மாபெரும் உயிர் நாடியாக விளங்கியுள்ளது. தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளர், விவசாயிகளின் சகோதர நேச அணியைப் பேணி வளர்த்து வலுப்படுத்துவதுதான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் உன்னதமான கோட்பாடு என்று லெனின் போதித்தது வலுப்பெற்று வளர்ந்து உள்ளது. சோசலிச அமைப்பின் அரசியல் அடிப்படையாக உள்ள இந்த இரு உழைக்கும் வர்க்கத்தினரின் இணைப்பு, சோசலிச கட்டுமானப் பணி நடைபெறும் காலத்தில் தொடர்ந்து வளர்கிறது; தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலுள்ள மக்கள் ஆட்சியைப் பலப்படுத்துகிறது; விவசாயிகள் சுய விருப்பத்துடன் கூட்டுறவில் பங்கேற்க வேண்டும் என்ற லெனின் கோட்பாட்டின்படி விவசாயத்தை சோசலிச முறையில் திருத்தியமைக்க உதவுகிறது.

சமுதாயத்தின் சமூக அமைப்பில் வரலாற்று பூர்வமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. மக்கள் ஜனநாயகங்களில் நிலப்பிரபுக்கள், முதலாளிகள் என்ற வர்க்கமே இல்லை. தொழிலாளி வர்க்கமே சமூகத்தின் பிரதான சக்தியாகிவிட்டது; அதன் அணிகள் வளர்ந்து வருகின்றன; அதன் அரசியல் உணர்வும் முதிர்ச்சியும் அதிகரித்துள்ளன. சோசலிசம் விவசாயிகளைக் காலகாலமாக இருந்த வறுமையிலிருந்து விடுவித்து சமூக முன்னேற்றத்தில் ஒரு செயலூக்கமுள்ள சக்தியாக ஆக்கியுள்ளது. உழைப்பாளி மக்களின் உதிரத்தில் உதித்த புதிய சோசலிச அறிவாளிக் கூட்டம் உருவாகி வருகிறது. அனைத்து குடிமக்களுக்கும் அறிவு, கலாச்சாரம் இவற்றைப் பெற சுதந்திரமான வசதிகள் உள்ளன. சோசலிசம் சமூகத்தின் கலாச்சார வளர்ச்சிக்கு அவசியமான அரசியல் சூழ்நிலைமைகளை மட்டுமன்றி மனிதனின் ஆற்றல்கள் சிறப்பியல்புகள் முழுமையான வளர்ச்சி பெற்று மலர்வதற்குரிய பொருளாயத சூழ்நிலைமைகளையும் ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார முன்னேற்றத்தின் விளைவாக மக்களின் வாழ்க்கைத்தரம் திடமாக முன்னேறி வருகிறது.

பல்வேறு தேசிய இனங்கள் வாழும் சோசலிச நாடுகளில் எல்லா தேசிய இனங்களையும் சேர்ந்த உழைக்கும் மக்களிடையே தகர்க்க முடியாத ஒற்றுமை உருவாகி வலுவடைந்துள்ளது. சோசலிச நாடுகளில் மார்க்சிய-லெனினிய தேசிய கொள்கையின் வெற்றி, தேசிய இனங்கள் உண்மையில் பெற்றுள்ள சமத்துவம், அவர்களின் பொருளாதார-கலாச்சார முன்னேற்றம் ஆகியவை, தேசிய ஒடுக்கு முறைகளை எதிர்த்துப் போராடும் மக்களுக்கு எழுச்சியூட்டும் உதாரணங்களாகத் திகழ்கின்றன.

மக்கள் ஜனநாயக நாடுகளில் முதலாளித்துவ சித்தாந்தத்தின் மீது சோசலிச சித்தாந்தம் குறிப்பிடத் தகுந்த வெற்றியை ஈட்டியுள்ளது. முதலாளித்துவ சித்தாந்தத்தின் மீதமிச்சங்களிலிருந்து மக்களின் உள்ளம் முழுமையாக விடுதலை அடையும் வரைக்கும் நீண்ட நெடும் போராட்டம் தொடர்ந்து நடக்கும்.

சமூகத்தின் தார்மீக-அரசியல் ஒற்றுமை, வரலாற்றிலேயே முதல் தடவையாக ரசிய நாட்டில் தோன்றி உறுதியாக நிறுவப்பட்டுவிட்டது. இப்போது இது இதர சோசலிச நாடுகளிலும் வளர்ந்து வருகிறது. இதன் மூலம், சுதந்திரமான தொழிலாளர்களின் படைப்பு சக்தியை-உற்பத்தி சக்திகளை வளர்ப்பதற்கும், சோசலிச சமூகத்தின் சுபிட்சத்தை வளர்ப்ப தற்கும் பயன்படுத்துவது சாத்தியமாகிறது.

சோசலிச சமூகம் திடமாக முன்னேறி மேன்மேலும் பக்குவம் பெற்றும் வருகிறது. நாளுக்கு நாள் இது உழைப்பு குறித்தும், எதிர்கால கம்யூனிச சமுதாயத்தின் இதரஅம்சங்கள் குறித்தும் கம்யூனிச கண்ணோட்டத்தை தோற்றுவிக்கிறது. சோசலிச பொருளாதார நிர்வாக முறையும் பொருளாதாரத் திட்டங்களும் தொடர்ந்து அபிவிருத்தி அடைந்து வருகின்றன. சோசலிச ஜனநாயகம் தொடர்ந்து வளர்ச்சியுற்று வருகிறது; பொருளாதார-கலாச்சார வளர்ச்சியை இயக்கும் பணியில் பொதுமக்களின் பாத்திரம் அதிகரித்து வருகிறது; அரசாங்கத்தின் சில பணிகள் படிப்படியாக வெகுஜன அமைப்புகளுக்கு மாற்றப்பட்டு வருகின்றன.

இன்று ரசிய நாட்டில் மட்டுமல்லாமல்,இதர சோசலிச நாடுகளிலும் கூட முதலாளித்துவத்தை (அதிகாரத்திற்கு) மீட்டமைப்பது என்பது சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாத்தியமற்றதாகிவிட்டது. சோசலிச முகாமின் ஒன்றுபட்ட சக்திகள் ஏகாதிபத்தியப் பிற்போக்கின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒவ்வொரு சோசலிச நாட்டையும் உறுதியாகப் பாதுகாத்து வருகின்றன. இவ்வாறு சோசலிச நாடுகள் ஒரு முகாமில் அணிவகுத்து நிற்பதும், அந்த முகாமின் வளர்ந்து வரும் ஐக்கியமும், திடமாக அதிகரித்து வரும் இதன் வலிமையும் இந்த அமைப்பு முழுவதிலும் சோசலிசத்தின் முழுமையான வெற்றியை உத்தரவாதப் படுத்துகின்றன.

தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாய மக்களின் வீரஞ்செறிந்த முயற்சிகளின் பலனாகவும், கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளி வர்க்க கட்சிகளின் பிரமாண்டமான பணிகளின் விளைவாகவும், கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி சக்திகளை மேலும் துரிதமாக வளர்க்கவும், முதலாளித்துவத்துடன், சமாதான பூர்வமான பொருளாதாரப் போட்டியில் சோசலிச நாடுகள் வெற்றியடைவதற்கான அதிகபட்ச கால அவகாசம் பெறவும் சாதகமான பருண்மையான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த வாய்ப்புகளைச் சரிவரப் பயன்படுத்துவது தமது கடமை என்று சோசலிச நாடுகளில் தலைமை தாங்கும் மார்க்சிய-லெனினிய கட்சிகள் கருதுகின்றன.

பெரு வெற்றிகளை ஈட்டியும், கடுமையான சோதனைகளைச் சமாளித்தும் வந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் சோசலிசக் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதில், பலவகையான அனுபவங்களைப் பெற்றுள்ளன. சோசலிச நாடுகளும், சோலிச முகாம் முழுவதும் இத்தகைய வெற்றிகள் பெற்றதற்குக் காரணம், ஒவ்வொரு நாட்டின் வரலாற்று ரீதியான குறிப்பான தன்மைகளையும், சோசலிச முகாம் முழுவதினுடைய நலன்களையும் சரிவரக் கணக்கிலெடுத்துக் கொண்டு சோசலிசக் கட்டுமானப் பணிகளுக்கு அவசியமான விதிகளைச் சரியாகக் கடைப்பிடிப்பதேயாகும். இந்த நாடுகளுடைய மக்களின் முயற்சிகளும், இம் மக்களின் நெருங்கிய சகோதரத்துவ ஒத்துழைப்பும், பரஸ்பர சர்வதேச உதவியும், எல்லாவற்றுக்கும் மேலாக ரசியாவின் சகோதரத்துவ சர்வதேசிய உதவியும் இதற்கு உதவின.

சோசலிச முகாமிலுள்ள நாடுகளிடையே ஏற்பட்டுள்ள ஐக்கியம், ஒருமைப்பாடு ஆகிவற்றால் கிடைத்துள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வது, பரஸ்பர உதவி, ஆதரவு - இவையே சோசலிச நாடுகளின் வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும் அவசியமான சர்வதேச நிபந்தனை என்பதற்குச் சோசலிச நாடுகளின் வளர்ச்சியில் கிடைத்த அனுபவம் கூடுதல் சான்றாகும். சோசலிச முகாமில் பிளவு ஏற்படும் என்று ஏகாதிபத்தியவாதிகள், துரோகிகள், திரிபுவாதிகள் ஆகியோர் கொண்டுள்ள நம்பிக்கைகள் வெறும் மணல் வீடுபோல படுதோல்வியடைவது நிச்சயம். எல்லா சோசலிச நாடுகளும் சோசலிச முகாமின் ஐக்கியத்தைத் தம் கண்ணின் கருமணிபோலக் காப்பாற்றுகின்றன.

சோசலிசத்தின் உலகப் பொருளாதார அமைப்பு பொதுவான சோசலிச உற்பத்தி உறவுகள் மூலம் ஒன்றிணைந்து, சோசலிசப் பொருளாதார விதிகளின் படி வளர்ந்து வருகிறது. சோசலிசக் கட்டுமானப்பணியில் திட்டமிட்ட சீரான வளர்ச்சி விதியை உறுதியாக அமுல்படுத்தல், மக்களின் ஆக்கப்பூர்வமான சக்தியை உற்சாகப்படுத்தல், தேசியப் பொருளாதாரத் திட்டங்களை கூட்டாக இணைத்து சர்வதேச ரீதியில் வேலைப் பங்கீட்டு அமைப்பில் அபிவிருத்தி காண்பது, சுய விருப்பத்துடன் கலந்து

கொள்ளும் அடிப்படையில் உலக சோசலிச அமைப்புக்குள்ளேயே உற்பத்தியில் சிறப்புத் தேர்வும் ஒத்துழைப்பும் காண்பித்தல், பரஸ்பர நலன், விஞ்ஞானத் தொழில் நுட்பத் தரத்தை தீவிரமாக உயர்த்துவது ஆகிய இவை யாவும் சோசலிச பொருளாதார அமைப்பின் வளர்ச்சிக்கு அவசிய மாகும். இதற்கு, கூட்டாக ஏற்படும் அனுபவங்களைப் பற்றிக் கற்ற -றிவது, விரிவாக்கப்பட்ட ஒத்துழைப்பு, சகோதர பரஸ்பர உதவி பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள வரலாற்று ரீதியிலான வேறுபாடுகளைப் படிப்படியாக அகற்றுவது, சோசலிச அமைப்புக்குள் இருக்கும் அனைத்து மக்களுக்கும் கிட்டத்தட்ட ஒரே காலக்கட்டத்தில் கம்யூனிசத்தை நோக்கி கடந்துசெல்ல ஒரு பொருளாயத அடிப்படையை ஏற்படுத்துவது, இவை யாவும் அவசியமாகிறது.

பல்வேறு நாடுகளில் நடைபெற்றுவரும் சோசலிச கட்டுமானப் பணிகள், சோசலிச முகாம் முழுவதற்கும் ஒரு கூட்டு அனுபவத்தை அளிக்கும் ஊற்றாக இருக்கின்றன. இந்த அனுபவங்களை சகோதரக் கட்சிகள் முழுமையாகக் கற்றறிந்து கொள்வதும், இவற்றைச் சரியாகப் பயன்படுத்தி தமது தேசியச் சிறப்பியல்புகள் மற்றும் குறிப்பான நிலை மைகளுக்கு ஏற்ப இவற்றை விரிவுபடுத்த வேண்டியதும் ஒவ்வொரு சோசலிச நாட்டின் வளர்ச்சிக்குமுரிய மாற்ற முடியாத விதியாகும்.

தமது சாத்தியப்பாடுகளைக் கருத்தில் கொண்டு தமது தொழில்துறை விவசாய உற்பத்தியை வளர்த்து வரும் சோசலிச நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிகள் சோசலிச அமைப்பிலுள்ள எல்லா சாதக வசதிகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள உள்நாட்டுச் செல்வாதாரத்தைப் பயன்படுத்த வேண்டும். இத்தகைய கூட்டு முயற்சியின் மூலம் வெகு விரைவாக மொத்த தொழில்—விவசாய உற்பத்தியில் உலக முதலாளித்துவ அமைப்பை மிஞ்சிவிட வேண்டும். பிறகு தனி மனிதர் சராசரி உற்பத்தியிலும், வாழ்க்கைத்தரத்திலும் பொருளாதாரத் துறையில் மிகவும் அபிவிருத்தியடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளைக் கடந்து முன் செல்ல வேண்டும். இந்தக் கடமையை நிறைவேற்ற அரசியல், பொருளாதாரப் பணிகளையும் பொருளாதார நிர்வாகத்தையும் தொடர்ந்து அபிவிருத்தி செய்வதும், சோசலிச பொருளாதாரத்தை விஞ்ஞான ரீதியான வழிகளில் செயற்படுத்துவதும் அவசியமாகும். இதைச் சாதிக்க வேண்டுமானால் தொடர்ச்சியாகத் தொழில் நுட்பத்தை முன்னேற்றுவது பொருளாதாரத் திட்டமிடல், மக்களின் அரசியல் உணர்வை உயர்த்தி பொருளாயத சலுகைகள் மற்றும் தார்மீகத் தூண்டுதல்களின் மூலம் அவர்களைச் சமூகத்தின் நலனுக்காக உழைக்கச் செய்வது பற்றிய லெனினிய கோட்பாடுகளைக் கடைபிடிப்பது ஆகியவற்றின் மூலம் உழைப்பின் உற்பத்தி திறனை உயர்த்துவதும், உழைப்பு மற்றும் நுகர்வின் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் அவசியமாகும்.

சோசலிச நாடுகள் கம்யூனிச அமைப்புக்கு மாறுவதற்குரிய பொருளாயத அடிப்படை ஏற்பட வேண்டுமானால், மிகவும் நவீன காலத்திய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தியில் உயர்ந்த மட்டத்தை எட்டுவது, தேசியப் பொருளாதாரத்தை மின்சார மயமாக்குவது, உற்பத்தியில் தானியங்கி இயந்திரங்கள் இதர இயந்திர முறைகளைப் புகுத்துவது ஆகிய இவை யாவும் இன்றியமையாததாகும். இவையின்றி கம்யூனிஸ்ட் சமூகத்திற்குத் தேவையான அபரிமிதமான நுகர்வுப் பொருட்களை அளிப்பது சாத்தியமில்லை. அந்த அடிப்படையில் கம்யூனிச சமூக உறவுகளை வளர்ப்பதும், மக்களின் அரசியல் உணர்வை வீரியத்துடன் வளர்த்தெடுப்பதும், புதிய கம்யூனிச சமூகத்தின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிப்பதும் அவசியமாகும்.

சோசலிச முகாம் என்பது சர்வதேச சோசலிச ஒருமைப்பாடு என்ற நெருங்கிய பந்தத்தால் ஒன்று சேர்ந்து நின்று, பொதுநல நோக்கங்களைக் கொண்ட, சோசலிச, கம்யூனிசப் பாதையை அனுசரிக்கும் இறையாண்மையுள்ள சுதந்திரமான மக்களின் சமூகப்-பொருளாதார-அரசியல் அமைப்பாகும். சோசலிச நாடுகள் தமது பரஸ்பர உறவில் மார்க்சிய லெனினியக் கோட்பாடுகளையும், சோசலிச சர்வதேசியத்தையும் கட்டுப்பாடாகக் கடைப்பிடித்து வரவேண்டும் என்பது மீற முடியாத ஒரு விதியாகும். சோசலிச முகாமிலுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் உண்மையான சம உரிமையும், சுதந்திரமும் உத்தரவாதம் செய்யப்படுகிறது. சோசலிச நாடுகள், முழுமையான சமத்துவம், பரஸ்பர நலன்கள், தோழமை பூர்வமான பரஸ்பர உதவி ஆகிய கோட்பாடுகளால் வழிகாட்டப் பெற்று தமது பொருளாதார, அரசியல், கலாச்சார ஒத்துழைப்பை எல்லா வகைகளிலும் அபிவிருத்தி செய்து கொண்டிருக்கின்றன. இது ஒவ்வொரு சோசலிச நாட்டின் நலனுக்கும், முழு சோசலிச முகாமின் நலனுக்கும் உகந்ததாக இருக்கிறது.

உலக சோசலிச அமைப்பின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்று என்னவென்றால் வர்க்கப் பகைமை குறையும் போது தேசிய பகைமைகளும் குறையும் என்ற மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டை நடைமுறையில் உறுதி செய்திருப்பதேயாகும். முதலாளித்துவ அமைப்பின் விதிகளின்படி வர்க்கங்களிடையில், தேசங்களிடையில், அரசுகளிடையில் பகைமையைக் கிளப்பும் முரண்பாடுகள் உள்ளன. இவை ஆயுதம் தாங்கிய மோதல்களுக்கு இட்டுச் செல்கின்றன. ஆனால், இதற்கு நேர் மாறாக சோசலிச அமைப்பின் இயல்பிலேயே இந்த அமைப்பைச் சேர்ந்த மக்களிடையேயும், அரசுகளிடையேயும் எவ்வித முரண்பாடுகளோ, மோதல்களோ எழுவதற்கான பருண்மையான காரணங்கள் எதுவும் இல்லை. இதன் வளர்ச்சியால் அரசுகளிடையிலும், தேசங்களிடையிலும் மேலும் அதிக ஒற்றுமை ஏற்படுகிறது. இவற்றிற்கிடையே எல்லா விதமான ஒத்துழைப்பு முறைகளும் வலுவடைகின்றன. சோசலிசத்தின்

கீழ் தேசியப் பொருளாதாரம், கலாச்சாரம், அரசுரிமை ஆகியவை உலக சோசலிச அமைப்பின் வளர்ச்சியோடு கைகோர்த்து வளர்ந்து செல்வ-துடன் தேசங்களிடையில் மேலும் முன்காணாத அளவு ஒற்றுமை வலுவடைகிறது. ஒட்டுமொத்த சோசலிச அமைப்பின் நலவுரிமைகளும், தேசிய நலவுரிமைகளும் இணக்கமான முறையில் இணைந்துள்ளன. இந்த அடிப்படையில்தான் மகத்தான சோசலிச சமுதாயத்தில் இருக்கும் அனைத்து மக்களின் தார்மீக, அரசியல் ஐக்கியம் உருவாகி வளர்ந்து வருகிறது. சோசலிச நாட்டு மக்களிடையேயான நட்புறவு, பரஸ்பர உதவி ஆகியன, முதலாளித்துவ பண்பான அரசியல் தனிமைவாதத்தை யும் தேசியவாதப் போக்கையும் ஒழித்துவிடுகிறது.

சோசலிச நாடுகளிலுள்ள மக்களின் பொது நலன்களும், சமாதானம், சோசலிசம் ஆகியவற்றின் நலவுரிமைகளும் பாதுகாக்கப்பட சோசலிச சர்வ தேசியமும், சோசலிச தேசபக்தியும், அரசியலில் சரிவர இணைந்து இயங்க வேண்டும். தனது நாட்டில் ஆளும் கட்சியாக வந்துள்ள ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியும் தனது நாட்டின் தலைவிதிக்கு மட்டுமின்றி முழு சோசலிச முகாமின் தலைவிதிக்கும் வரலாற்று ரீதியான பொறுப்பேற்கின்றது.

சோசலிசப் புரட்சி, சோசலிச கட்டுமானம் சம்பந்தமாக, தேசிய சிறப்பம்சங்களைப் பற்றி அளவுக்கு அதிகமாக வலியுறுத்துவதோ, மார்க்சியம்-லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையிலிருந்து விலகிச் செல்வதோ சோசலிசத்தின் பொது லட்சியத்திற்குத் தீங்கு விளை விப்பதாகும் என்பதை 1957 ம் ஆண்டு (மாஸ்கோ) பிரகடனம் மிகவும் சரியாக சுட்டிக் காட்டியது. ஒரு நாட்டின் குறிப்பிட்ட வரலாற்று பூர்வ -மான நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச கட்டுமானத்தின் பொதுக் கொள்கைகளை ஆக்கப்பூர்வ மாகப் பிரயோகிக்க வேண்டும் என்றும், பிற நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கைகளை, அப்படியே பிரயோகிக்கக் கூடாது என்றும், மார்க்சிய-லெனினியம் வலியுறுத்துவதாக அப்பிரகடனம் சரியாக விளக்கிக் கூறியது. தேசியத் தனித் தன்மைகளை அலட்சியப்படுத்துவது தொழிலாளி வர்க்கக் கட்சியை உண்மையினின்றும், மக்களிடமிருந்தும் தனிமைப் படுவதற்கு இட்டுச் சென்று, சோசலிச லட்சியத்திற்கே தீங்கு விளைவிக்கலாம்.

சோசலிச அமைப்பை ஏற்படுத்தியவுடனே, தேசிய வாதத்தின் வெளிப்பாடுகளும் குறுகலான தேசியப் பார்வையும் தாமாகவே மறைந்து விடாது. சோசலிச நாடுகளிடையே நேச பூர்வமான உறவும், நட்புரிமை யும் பலப்பட வேண்டுமானால், கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் மார்க்சிய-லெனினிய சர்வதேசக் கொள்கையை பின்பற்றுவது அவசியமாகும்; சர்வதேசியம், தேச பக்தி என்ற உணர்வில் எல்லாத் தொழிலாளர்களும் பயிற்றுவிக்கப்பட வேண்டும்; முதலாளித்துவ தேசிய

வாதத்தையும், தேசிய முதலாளித்துவ வெறியையும் நீக்குவதற்கு உறுதியான போராட்டம் நடத்த வேண்டும்.

கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள், சோசலிச சர்வதேசியம் என்ற உணர்வில் உழைப்பாளி மக்களை சோர்வின்றி பயிற்றுவிப்பதோடு, தேசிய வாதம்,தேசிய வெறி ஆகியவற்றின் எல்லா வெளிப்பாடுகளையும் சகிக்கக் கூடாது என்றும் அறிவுறுத்துகின்றன. கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளிடையேயும் சோசலிச நாடுகளிலுள்ள மக்களிடையேயும் உள்ள திடமான ஒற்றுமையும், மார்க்சிய-லெனினியக் கொள்கையின்பால் அவர்கள் கொண்டுள்ள விசுவாசமும்தான் ஒவ்வொரு சோசலிச நாடு மற்றும் முழு சோசலிச முகாமின் பலத்திற்கும் வெல்லற்கரிய வலிமைக்கும் பிரதான ஆதாரமாக இருக்கிறது.

கம்யூனிசத்தை நோக்கி ஒளி வீசும் பாதையில், சோசலிச நாடுகள் முன்னேறும்போது அந்நாட்டு மக்கள் மனித குலம் முழுவதற்கும் முன் மாதிரியான ஒரு புதிய சமுதாயத்தைச் சமைக்கின்றனர்.

முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் மக்கள், சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் மக்களின் முயற்சிகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இது சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் வெற்றிகரமாக நிர்மாணிப்பதில் சோசலிச நாடுகளிலுள்ள மார்க்சிய-லெனினிய கட்சிகளையும், மக்களையும் சர்வதேசத்தொழிலாளி வர்க்க இயக்கத்திற்குப் பொறுப்பாக்குகிறது.

உலக நிகழ்ச்சிகளில், தங்களுடைய சர்வதேச பாத்திரத்தையும், செல்வாக்கையும் ஆண்டிற்கு ஆண்டு வளர்த்துக்கொண்டுவரும் மகத்தான சோசலிச சமூகத்திலுள்ள நாடுகளைச் சளைக்காது பலப்படுத்துவது தான் தங்களுடைய பணியென்பதை கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் உணர்ந்துள்ளன. ஒரு உலக அமைப்பை உருவாக்குவதன் மூலம் உலக மாறுதல்களில் சக்தி வாய்ந்த செல்வாக்கைப் பிரயோகிக்கக் கூடிய சர்வதேச சக்தியாக சோசலிச நாடுகள் விளங்கக்கூடிய காலம் வந்திருக்கிறது. சமாதானம், ஜனநாயகம், சோசலிசம் ஆகியவற்றின் நலன் கருதி நவீன காலத்தின் பிரதான பிரச்சினைகளை புதிய வழியில் தீர்த்துக் கொள்வதற்கு இப்பொழுது உண்மையான வாய்ப்புகள் இருக்கின்றன.

சமாதானத்திற்கும், சமாதான சக வாழ்விற்குமான போராட்டம் குறித்து.

யுத்தம்,சமாதானம் என்ற பிரச்சினைதான் நம்முடைய காலத்தின் எரிகின்ற பிரச்சினையாகும்.

முதலாளித்துவத்தின் நிரந்தர நண்பன் யுத்தம் தான். மனிதனை மனிதன் சுரண்டுவதும், மனிதனை மனிதன் அழிப்பதும் முதலாளித்துவ அமைப்பின் இரு அம்சங்களாகும். ஏகாதிபத்தியம் ஏற்கனவே மனித குலத்தின் மீது நாசகரமான இரு உலக யுத்தங்களை சுமத்தியிருக்கிறது. இப்போது பயங்கர சர்வ நாசத்தை விளைவிக்கக்கூடிய மற்றொரு யுத்தத்தில் உலகத்தை மூழ்கடிக்க அச்சுறுத்தி வருகிறது. வெகுஜன அழிவையும் நாசத்தையும் விளைவிக்கக் கூடிய மற்றொரு யுத்தத்தில் உலகத்தை தள்ள முயற்சிக்கிறது. வெகுஜன அழிவையும் நாசத்தையும் விளைவிக்கக்கூடிய பயங்கர ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு புதிய யுத்தத்தில் இவை பயன்படுத்தப்படுமாயின் எல்லா நாடுகளும் இது வரை கேட்டிராத அளவில் அழிவிற்குள்ளாகும்; உலகத்தில் பிரதான தொழில் மற்றும் கலாச்சார கேந்திரங்களை நாசப்படுத்தும்; அத்தகைய யுத்தம் கோடானு கோடி மக்களைப் பலி கொள்ளும்; யுத்தத்தில் சம்பந் தப்படாத நாடுகளிலுள்ள மக்களும் பலியாவார்கள். ஏகாதிபத்தியம் மனிதகுலம் முழுமைக்குமே பெரும் அபாயத்தை ஏற்படுத்த முனைகிறது.

என்றுமில்லாத அளவிற்கு இன்று மக்கள் மிகுந்த விழிப்போடு இருக்க வேண்டும். ஏகாதிபத்தியம் இருக்கும் வரையிலும் ஆக்கிரமிப்பு யுத்தங்களும் இருக்கும்.

ஒரு புதிய உலக யுத்த அபாயம் தொடர்ந்து நீடிக்கிறது என்பதை எல்லா நாடுகளிலுமுள்ள மக்களும் அறிவார்கள். ஆக்கிரமிப்பிற்கும் யுத்தத் துக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியமே பிரதான சக்தியாக இருக்கிறது. அதனுடைய கொள்கை தீவிர பிற்போக்கு சித்தாந்தத்தை கொண்டதாக இருக்கிறது. ''கம்யூனிச அபாய எதிர்ப்பு'' என்ற போர்வையின் கீழ் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி ஆகிய இதர ஏகாதிபத்தியவாதிகளோடு சேர்ந்து நின்று பல நாடுகளை நேட்டோ, செண்டோ, சியாட்டோ முதலான ராணுவ கூட்டணி களுக்குள் இழுக்கிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியம் சொல்லிக்கொள்ளப் படும் ''சுதந்திர உலக'' நாடுகளை-அதாவது தம்மைச் சார்ந்திருக்கும் முதலாளித்துவ நாடுகளை-ராணுவ தளங்கள் என்ற வலையில் சிக்க வைக்கிறது. இந்த ராணுவ தளங்கள் சோசலிச நாடுகளைத் தாக்கும் நோக்கங்கொண்டவை. இந்த ராணுவக் கூட்டணிகளும் ராணுவ தளங் களும் இருப்பது உலக சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் ஆபத்தை விளைவிப்பதாகும். அமெரிக்க ராணுவ வெறியர்களின் கையில் தங்கள் பிரதேசங்களை ஒப்படைத்திருக்கிற நாடுகளின் இறையாண்மை பறிக்கப் பட்டிருப்பது மட்டுமல்லாமல், அந்த நாடுகளின் வாழ்விற்கே அபாயமும் ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய ஏகாதிபத்திய சக்திகள் மேற்கு ஜெர்மன் ஏகாதிபத்தியத்துடன் சதிகாரத்தனமான உறவு கொண் டிருக்கின்றன; மேற்கு ஜெர்மனியின் ராணுவ வெறிக்கொள்கை மீண்டும்

புத்துயிர் பெற்றிருக்கிறது. ஹிட்லரின் ராணுவ தளபதிகளின் தலைமையில் இருந்த பெரிய நிரந்தர ராணுவத்தை விட பலமான ராணுவ அமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. அதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அணு ஆயுதங்களையும், ராக்கெட்டுகளையும், மக்களை பெருமளவில் கொன்று குவிக்கும் இதர நவீன ஆயுதங்களையும் அளித்து வருகின்றனர். சமாதானம் விரும்பும் மக்கள் இதற்கு எதிராகத் தங்கள் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றனர். பிரான்சிலும் இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள இத்தகைய ஆக்கிரமிப்பு ராணுவத்திற்கு ராணுவ தளங்கள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளின் சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் மேற்கு ஜெர்மன் ஏகாதிபத்தியத்திடமிருந்து அச்சுறுத்தல்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வகுக்கப்பட்ட நாடுகளின் எல்லைகள் மீண்டும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற தங்கள் விருப்பத்தை மேற்கு ஜெர்மனியின் பழிவாங்கும் நோக்கமுடையோர் பகிரங்கமாகவே கூறிவருகிறார்கள். ஹிட்லர் கும்பல் அன்று செய்ததைப் போலவே சோசலிச நாடுகளுக்கும், இதர ஐரோப்பிய நாடுகளுக்கும் எதிராக மேற்கு ஜெர்மன் ராணுவ வெறியர்கள் யுத்தம் தொடுக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய ஆக்கிரமிப்பு திட்டங்களை செயல்படுத்துவதிலேயே நாட்டம் கொண்டிருக்கிறார்கள். சர்வதேச ஆத்திரமூட்டும் தளமாக மேற்கு பெர்லின் மாற்றிமைக்கப்பட்டிருக்கிறது. சமாதான சகவாழ்வு, படைபலக் குறைப்பு, ஐரோப்பாவில் கெடுபிடி நிலையைத் தளர்த்துவது ஆகியவற்றின் பிரதான எதிரியாக 'பான்' அரசு திகழ்கிறது.

மேற்கு ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் அனைத்து சமாதானம் விரும்பும் நாடுகள், ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றின் ஒன்றுபட்ட சக்தியால் எதிர்க்கப்பட வேண்டும். மேற்கு ஜெர்மன் ராணுவ வெறியர்களின் ஆக்கிரமிப்புத் திட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் கிழக்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுதான் சிறப்பான பெரும் பங்கு வகிக்கிறது. எனவே சோசலிச முகாமிலுள்ள அனைத்து நாடுகளும், சமாதானத்தை விரும்பும் அனைத்து நாடுகளும், மேற்கு ஐரோப்பாவில் சோசலிசத்தின் எல்லைக் காவல் முகாமாக விளங்கும் கிழக்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசையும், ஜெர்மானிய மக்களின் சமாதான ஆர்வத்தின் உண்மையான பிரதிபலிப்பையும் பாதுகாக்க வேண்டும் என்று இக் கூட்டம் கருதுகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தூர கிழக்கிலுள்ள யுத்த கேந்திரங்களுக்குப் புத்துயிரளிப்பதில் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். ஜப்பானிய மக்களின் தேசிய சுதந்திரத்தைக் காலில் மிதித்து அந்நாட்டு மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஜப்பானின் பிற்போக்கு ஆளும் வட்டாரங்களுடன் கள்ளக் கூட்டு சேர்ந்து கொண்டு, ஜப்பான் மீது ஒரு புதிய ராணுவ உடன்பாட்டை திணித்திருக்கிறார்கள். இந்த உடன்பாடு ஏசியா,

மக்கள் சீனக் குடியரசு, இதர சமாதானம் விரும்பும் நாடுகள் ஆகியவற்றிற்கு எதிரான ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டதாகும். தென் கொரியாவையும் மக்கள் சீனக் குடியரசிற்குச் சொந்தமான தைவான் தீவையும், அமெரிக்கப் படையெடுப்பாளர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள்; தென் வியட்னாம் விவகாரங்களில் மேலும் மேலும் தலையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்நாடுகளையெல்லாம் அபாயகரமான ராணுவ ஆத்திர மூட்டல்களுக்கும், சூதாட்டங்களுக்குமான கேந்திரங்களாக மாற்றியிருக்கிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கியூபாவை ஆக்கிரமிப்போம் என்று அச்சுறுத்தியும், லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள மக்களின் விவகாரங்களில் தலையிட்டும், உலகின் பல்வேறு பகுதிகளில் புதிய யுத்த கேந்திரங்களை ஏற்படுத்த முனைகிறார்கள். தங்களுடைய பொருளாதார, அரசியல் ஆதிக்கங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், தங்களுடைய ஆக்கிரமிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதில் லத்தீன் அமெரிக்க மக்களை ஈடுபடுத்துவதற்காகவும் பிரதேச கூட்டுகளை (சங்கங்களை)ப் பயன்படுத்துகிறார்கள்; உதாரணமாக அமெரிக்க நாடுகளின் ஸ்தாபனத்தைப் (Organisation of American states) பயன்படுத்துகிறார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பெரும் யுத்த தளவாடங்களை அமைத்திருக்கிறார்கள்; அவைகளைக் குறைப்பதற்கும் மறுக்கிறார்கள். ஏசியா மற்றும் இதர சமாதானம் விரும்பும் நாடுகளின் ஆக்க பூர்வமான படைக்கலக் குறைப்பு ஆலோசனைகளுக்கு ஏகாதிபத்தியவாதிகள் முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள். ஆயுதப் போட்டி நடந்து கொண்டேயிருக்கிறது. அணு ஆயுதக் குவியல்கள் ஆபத்தான அளவிற்குப் பெருகிவிட்டன. தங்கள் சொந்த நாட்டு மக்களின் எதிர்ப்பையும், இதர நாடுகளுடைய மக்கள், குறிப்பாக ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பிரான்சின் ஆளும் வட்டாரம் அணுகுண்டுச் சோதனைகளைச் செய்கிறது; அணு ஆயுதங்களை உற்பத்தி செய்கிறது. அமெரிக்க ராணுவ நிபுணர்கள் அபாயகரமான அணுகுண்டுச் சோதனைகளை மீண்டும் செய்யத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்; கடுமையான சர்வதேச மோதல்களை ஏற்படுத்தக்கூடிய ராணுவ ஆத்திர மூட்டல்களுக்கான அச்சுறுத்தலும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் தங்களின் ஆத்திரமூட்டும் கொள்கைகளைக் கடைப்பிடித்தும், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டும் பாரிசில் நடக்கவிருந்த நான்கு வல்லரசுத் தலைவர்களின் உச்சகட்ட மாநாட்டை உடைத்திருக்கின்றன. அதன் மூலம் சர்வதேச கெடுபிடி நிலைமையை அதிகரிக்கச் செய்திருக்கின்றன. கெடுபிடிப் போரை முடுக்கி விட்டிருக்கின்றன. யுத்த அபாயமும் வளா்ந்திருக்கிறது.

சமாதானத்திற்கு எதிராக ஏகாதிபத்தியவாதிகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மக்களின் வெறுப்பையும் எதிர்ப்பையும் கிளப்பி விட்டிருக்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னை மேலும் அம்பலப் படுத்திக் கொண்டுள்ளது. உலகில் அதனுடைய செல்வாக்கிற்குப் புதிய, கடுமையான அடிகள் விழுந்திருக்கின்றன.

ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை மாறவில்லை. ஆனால் அதன் ஆக்கிரமிப்புத் திட்டங்களைத் தோற்கடிக்கும் வல்லமையுடைய உண்மையான சக்திகள் தோன்றியிருக்கின்றன. யுத்தம் சாவைப் போல் தவிர்க்க முடியாததல்ல. ஏகாதிபத்தியவாதிகள் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதனைச் செய்வதற்கு அவர்களால் முடிந்திருக்குமானால், இதற்குள் அவர்கள் மனித குலத்தை ஒரு புதிய, உலக யுத்தக் கொடுமையிலும், துன்பப்படுகுழியிலும் தள்ளியிருப்பார்கள். ஆனால் யுத்தம் வேண்டுமா வேண்டாமா என்பதை ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் விருப்பம்போல் தீர்மானித்த காலம் மலையேறிவிட்டது. கடந்த பல வருடங்களில் ஏகாதிபத்தியவாதிகள் பிரதேச யுத்தங்களை ஆரம்பித்து மனிதகுலத்தை பேராபத்தின் விளிம்பிற்கே கொண்டு சென்றார்கள். ரசியாவும் இதர சோசலிச நாடுகளும், அனைத்து சமாதான சக்திகளும் எடுத்த உறுதியான நடவடிக்கை, எகிப்தில் ஆங்கிலேய-பிரெஞ்சு மற்றும் இஸ்ரேல் தலையீட்டிற்கு முற்றுப்புள்ளி வைத்தது; சிரியா, ஈராக் மற்றும் சில நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகளின் ராணுவப் படையெடுப்புக்களைத் தடுத்து நிறுத்தியது. விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் அல்ஜீரிய விடுதலைவீரர்கள் தொடர்ந்து வீரம் செறிந்த போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏகாதிபத்தியவாதிகளின் கொலைகாரத்தனமான நடவடிக்கைகளை காங்கோ, லாவோஸ் மக்கள் மிகுந்த உறுதியோடு எதிர்த்துக் கொண்டு வருகிறார்கள். ஏகாதிபத்தியவாதிகளால் ஆரம்பிக்கப்படும் பிரதேச யுத்தங்களை வலிமையோடு எதிர்த்துப் போராட முடியும் என்றும், அத்தகைய யுத்தத் தீ பற்றியுள்ள இடங்களை வெற்றிகரமாக அணைக்க முடியும் என்றும் அனுபவம் காட்டுகிறது. ஒரு உலக யுத்தத்தை ஆரம்பிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்கள் செய்யும் முயற்சிகளையெல்லாம் தடைசெய்யமுடியும் என்ற காலம் வந்திருக்கிறது. உலக சோசலிச முகாம், சர்வதேச தொழிலாளி வர்க்கம், தேசிய விடுதலை இயக்கம், யுத்தத்தை எதிர்க்கும் அனைத்து நாடுகள், சமாதானத்தை விரும்பும் அனைத்து சக்திக்ள் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் உலக யுத்தத்தைத் தடுக்க முடியும்.

இரு சமூக அமைப்புகளின் போராட்டம்தான் - ஏகாதிபத்திய பிற்போக்கு, ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு எதிராக சோசலிச சமாதான, ஜனநாயக சக்திகள் நடத்தும் போராட்டம்தான் - நம்முடைய காலத்தில் சர்வதேச உறவுகளில் ஏற்படும் மாறுதல்களை நிர்ணயிக்கிறது. இந்தப் போராட்டத்தில் சோசலிச, சமாதான, ஜனநாயக சக்திகள் மேலோங்கி வருவது மேலும் மேலும் தெளிவாகி வருகிறது.

வரலாற்றில் முதன்முறையாக மகத்தான, ஒன்று திரட்டப்பட்ட சக்திகள் யுத்தத்தை எதிர்க்கின்றன. விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் தீர்மானமான துறைகளில் உலகில் முன்னணியில் நிற்கும் மகத்தான ரசியா, தனது அபரிமித பொருளுற்பத்தியையும், அரசியல் வலிமையையும் சமாதான சேவைக்காகவே பயன்படுத்தும் சோசலிச முகாம், சமாதானத்தை காப்பதில் ஜீவாதார அக்கறையுள்ள மென் மேலும் எண்ணிக்கையில் அதிகரித்துவரும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள், சர்வதேச தொழிலாளி வர்க்கம், அதன் ஸ்தாபனங் கள், எல்லாவற்றிற்கும் மேலாக கம்யூனிஸ்டுக் கட்சிகள், காலனி, சார்பு நாட்டு மக்கள் நடத்தும் தேசிய விடுதலை இயக்கம், உலக சமாதான இயக்கம், ஏகாதிபத்திய யுத்தக் கொள்கையில் பங்கு பெற விரும்பாத சமாதான சகவாழ்விற்காக நிற்கும் நடுநிலைமை நாடுகள் ஆகிய அனைத்தும் யுத்தத்திற்கெதிராக ஒன்று திரண்டுள்ளன. சக்திகளுக் கிடையேயுள்ள உறவுகளைப் பற்றியும் நவீன யுத்தத்தால் ஏற்படும் பயங்கர விளைவுகளைப் பற்றியும் நிதான நோக்குடைய, வளர்ச்சி பெற்றுள்ள முதலாளித்துவ நாடுகளிலுள்ள முதலாளிவர்க்கத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் சமாதான சகவாழ்வுக் கொள்கைக்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

உலக சமாதானத்தைப் பாதுகாக்க சமாதான ஆதரவாளர்களையும், அமெரிக்க ஏகாதிபத்தியம் தூண்டிவிடும் ஆக்கிரமிப்பு யுத்தக் கொள் கையை எதிர்த்துப் போராடுவோர்களையும் கொண்ட, முடிந்த அளவு விரிவான ஒரு ஐக்கிய முன்னணி அவசியமாகும். சமாதானத்திற்கு ஆதரவான சகல சக்திகளின் ஒன்றுபட்ட தீவிர நடவடிக்கைகளின் மூலம் சமாதானத்தைப் பாதுகாக்க முடியும்; ஒரு புதிய யுத்தத்தைத் தடுக்க முடியும். உலக ரீதியான அணு ஆயுத நாசத்தில் இருந்து மனித குலத்தைக் காப்பாற்றுவதைத் தவிர வேறு முக்கிய கடமை ஜனநாயக, சமாதான சக்திகளுக்கு இன்று இல்லை. என்றுமே கண்டிராத அளவிற்கு அழிவு சக்தி படைத்த யுத்த சாதனங்கள் இன்று இருப்பது, சமாதான சக்திகள் மற்றும் யுத்த எதிர்ப்பு சக்திகளின் பிரதான நடவடிக்கை, யுத்தத்தை தடுப்பதற்காகச் செலுத்தப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. யுத்தம் ஏற்படும் வரை யுத்த எதிர்ப்புப் போராட்டத்தை ஒத்திவைக்க இயலாது. ஏனென்றால் உலகின் பல பகுதிகளும், அப்பகுதியிலுள்ள மக்களும் அப்போது யுத்தத்தை எதிர்ப்பது காலங்கடந்ததாகிவிடும். ஒரு புதிய யுத்த அச்சுறுத்தலுக்கு எதிரான போராட்டம் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகள் வீசப்பட்ட பின்னர் அன்றி இப்பொழுதே தொடங்கப்பட வேண்டும். அந்தப் போராட்டம் நாளுக்குநாள் பலம்பெற்று வரவேண்டும். முக்கியமான விசயம் என்ன வெனில், யுத்தம் ஏற்பட்ட பின்னர் அல்லாமல் சரியான நேரத்திலேயே ஆக்கிரமிப்பாளர்களை முறியடித்து யுத்தத்தைத் தடுக்கவேண்டும்.

இன்றைக்கு சமாதானத்திற்காகப் போராடுவதென்பது மிகுந்த விழிப்புடன் இருப்பதாகும்; ஏகாதிபத்தியவாதிகளின் கொள்கைகளைத்

தளர்வின்றி அம்பலப்படுத்துவதாகும்; யுத்த வெறியர்களின் தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருப்பதாகும்; போர் வெறிபிடித்து அலைபவர்களுக்கு எதிராக மக்களின் நியாயமான கோபாவேசத்தைக் கிளப்பி விடுவதாகும்; மேலும் சிறப்பான முறையில் சமாதான சக்திகளைத் திரட்டுவதும் சமாதானத்திற்காகத் தொடர்ந்து வெகுஜன நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதுமாகும்; புதிய யுத்தங்களை விரும்பாத எல்லா நாடுகளுடனும் மேலும் ஒத்துழைப்பை வளர்ப்பதென்பதாகும். ஏகாதிபத்தியவாதிகள் தமது ராணுவத் தளங்களை நிறுவியிருக்கும் நாடுகளில், அந்தத் தளங்களை ஒழிப்பதற்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்துவது தேசிய சுதந்திரத்தை உறுதிபடுத்துவதற்கும், இறையாண்மையைக் காப்பதற்கும், யுத்தத்தை தடுப்பதற்கும் மிகவும் முக்கியமான அம்சமாகும். தங்கள் நாடுகள் ராணுவ மயமாக்கப்படுவதை எதிர்த்து அந்தந்த நாட்டு மக்கள் நடத்தும் போராட்டங்களையும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளோடு தொடர்பு கொண்டுள்ள முதலாளித்துவ ஏகபோகங்களுக்கு எதிரான போராட்டங்களையும் இணைக்க வேண்டும். இன்று முன் என்றுமில்லாதவாறு சமாதான இயக்கம் நகரங்களுக்கும், கிராமங்களுக்கும், ஆலைகளுக்கும், அலுவலகங்களுக்கும் விரிந்து பரவ எல்லா நாடுகளிலும் இடைவிடாது பாடுபடுவது மிகவும் முக்கியமாகும்.

சமாதான இயக்கம் நம்முடைய காலத்தின் மிகப் பரந்த இயக்கமாகும். இந்த இயக்கத்தில் பல்வேறுபட்ட அரசியல், மதக்கொள்கைகளுடையவர்கள் மற்றும் சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் புதிய யுத்தங்களைத் தடுத்து நிரந்தர சமாதானத்தைக் காக்கும் உன்னத நோக்கத்தில் ஒன்று பட்டிருக்கிறார்கள்.

உலக சோசலிச அமைப்பை மேலும் பலப்படுத்துவது நீடித்த சமாதானத்தை பாதுகாப்பதற்கு மிகவும் அவசியமாகும். படைகலக் குறைப்பு ஏற்படாத வரையில் சோசலிச நாடுகள் தங்கள் பாதுகாப்பு சக்திகளை போதுமான அளவில் வைத்திருக்கவேண்டும்.

சமாதானம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், கீழ்க்கண்ட பணிகள் தாம் முதன் முதலாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கம்யூனிஸ்ட்கள் கருதுகிறார்கள். ஆயுதப்போட்டியை நிறுத்துவது, அணு ஆயுதங்களுக்கும் அணு ஆயுதச் சோதனைகள் மற்றும் உற்பத்திக்கும் தடைவிதிப்பது, வெளிநாடுகளிலுள்ள அன்னிய ராணுவத்தளங்களைக் கலைத்து அங்குள்ள அன்னியத் துருப்புகளை திரும்பப் பெறுவது, ராணுவக் கூட்டணிகளைக் கலைப்பது, ஜெர்மனியோடு ஒரு சமாதான ஒப்பந்தம் செய்து கொள்வது மேற்கு பெர்லினை ராணுவமற்ற சுதந்திரமான நகரமாக்குவது, பழிவாங்கும் நோக்குடைய மேற்கு ஜெர்மானிய யுத்த வெறியர்களின் ஆக்கிரமிப்புத் திட்டங்களை உடைத்தெறிவது மற்றும்

ஜப்பானின் ராணுவ வெறி புத்துயிர் பெறுவதைத் தடைசெய்வது ஆகியனவாகும்.

ஒரு புதிய உலக யுத்தம் ஏற்படுவதைத் தடுக்கும் பெரும் பொறுப்பை வரலாறு சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் மீது சுமத்தியிருக்கிறது. அணுஆயுத யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு ஏகாதிபத்தியவாதிகள் சதி செய்வதோடு அதற்கான சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி வருகிறார்கள். ஒரு புதிய உலக யுத்த அபாயத்திலிருந்து மனித குலத்தைக் காப்பாற்ற சர்வதேசத் தொழிலாளிவர்க்கம் தனது அணிகளையெல்லாம் ஒன்று திரட்ட வேண்டும். யுத்த அபாயத்திற்கெதிராக அனைத்து தொழிலாளி வர்க்க சக்திகளும் ஒன்றுபடுவதற்கு அரசியல், மத மற்றும் பிற வேறுபாடுகள் எதுவும் தடையாக இருக்கக் கூடாது. உலகத் தொழிலாளி வர்க்கத்தின் அனைத்து அணிகள் மற்றும் ஸ்தாபனங்களின் ஒன்றுபட்ட நடவடிக்கைகளின் மூலமும் அவற்றின் வலிமை மிக்க சக்தியின் மூலமும் யுத்த சக்திகளை எதிர்த்து முறியடிப்பதற்கான காலம் வந்துவிட்டது; உலக யுத்தத்தைத் தவிர்த்து சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான காலம் வந்துவிட்டது. சமாதானத்திற்காகப் போராடுவதைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்கள் தலையாய கடமையாகக் கருதுகின்றன. ஏகாதிபத்தியவாதிகள் செய்யும் அனைத்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் மக்கள் போராட்டங்களினால், உறுதியாக முறியடிக்க வேண்டும். அதற்காகத் தொழிலாளி வர்க்கம், தொழிற் சங்கங்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், மாதர், வாலிபர் ஸ்தாபனங்கள், கழகங்கள் ஆகியவற்றையும், பல தரப்பட்ட அரசியல் மற்றும் மதக் கோட்பாடுகளைப் பின்பற்றும் அனைத்து உழைக்கும் மக்களையும் கம்யூனிஸ்ட் கட்சிகள் அறைகூவி அழைக்கின்றன. இவ்வளவையும் மீறி, ஏகாதிபத்திய வெறியர்கள் யுத்தத்தை ஆரம்பிப்பார்களானால் மக்கள், முதலாளித்துவத்தை முற்றிலுமாக துடைத்தெறிந்து அதைப் புதைத்து விடுவார்கள்.

சமாதான சகவாழ்வு, சோசலிச-முதலாளித்துவ நாடுகளுக்கிடையே பொருளாதாரப் போட்டி ஆகிய லெனினியக் கொள்கைகளின் அடிப்படையில் சோசலிச நாடுகளின் வெளி நாட்டுக் கொள்கை அமைந்திருக்கிறது. சமாதான சூழ்நிலைகளில், பொருளாதாரம், கலாச்சாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய எல்லாத் துறைகளிலும் முதலாளித்துவ அமைப்பைவிட சோசலிச அமைப்பு தனது சிறப்பியல்புகளை மேலும் வெளிப்படுத்துகிறது. சமீப எதிர்காலத்தில் சமாதான, சோசலிச சக்திகளுக்கு புதிய வெற்றிகள் கிட்டும். ரசியா, உலகின் முன்னணித் தொழில் வல்லரசாக விளங்கும்; சீனம் வல்லமை வாய்ந்த தொழில் மயமான நாடாகத் திகழும். உலகத் தொழில்துறை உற்பத்தியில் பாதிக்கு மேற்பட்ட பங்கினை சோசலிச அமைப்பு உற்பத்தி செய்யும். சமாதான மண்டலம் விரிவடையும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் இயக்கங்களுக்கும், காலனி, சார்பு நாடுகளில் நடைபெறும்

தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் புதிய வெற்றிகள் கிட்டும். காலனிய ஆதிக்க அமைப்பு முற்றிலுமாகத் தகர்க்கப்படும். சமாதான-சோசலிச சக்திகள் தீர்மானகரமாக மேலோங்கும்.

இந்நிலைமைகளில், சோசலிசம், உலகில் முழு வெற்றி பெறுவதற்கு முன்னரே, உலகின் ஒரு பகுதியில் முதலாளித்துவம் இருக்கும் பொழுதே சமுதாய வாழ்க்கையிலிருந்து யுத்தத்தை தவிர்ப்பதற்கான உண்மையான சாத்தியப் பாடுகள் ஏற்பட்டுவிடும். சோசலிசத்தின் உலகளாவிய வெற்றி, எல்லா யுத்தங்களுக்கான சமூக மற்றும் தேசிய காரணங்களை முற்றிலுமாக அகற்றிவிடும்.

உலகம் முழுமையிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் ஒருமனதுடனும், உறுதியுடனும் சமாதான சகவாழ்வுக் கொள்கையை உயர்த்திப் பிடிக்கின்றனர். யுத்தத்தைத் தடுப்பதற்கு உறுதியாகப் போராடுகின்றனர். ஒரு உலக யுத்தத்தை தவிர்ப்பதற்கான சாத்தியப்பாடுகளையும் சமாதான சக வாழ்விற்கான சாத்தியப்பாடுகளையும் குறைத்து மதிப்பிடுவதைத் தடுக்கும், அதே சமயத்தில் யுத்த அபாயத்தை குறைவாக மதிப்பிடுவதை தடுப்பதற்கும் கம்யூனிஸ்டுகள் மக்கள் மத்தியில் சோர்வின்றி வேலை செய்ய வேண்டும்.

லெனினால் முன்வைக்கப்பட்டதும் 1957-ம் ஆண்டு வெளியான மாஸ்கோ பிரகடனம் மற்றும் சமாதான அறிக்கை, ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபது, இருபத்தோராவது காங்கிரஸ், இதர கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்கட்சிகளின் ஆவணங்கள் ஆகியவற்றால் மேலும் விரிவுபடுத்தப்பட்டதுமான ''வேறுபட்ட சமூக அமைப்புகளுக்கிடையேயான சமாதான சகவாழ்வு'' என்ற கொள்கைதான் இருவேறு அமைப்புகளாகப் பிளவுண்டுள்ள நாடுகளிடையே கடைப்பிடிக்கப்படவேண்டிய சரியான சர்வதேச உறவுக்கான கொள்கையாகும்.

மக்கள் சீனக் குடியரசும், இந்தியக் குடியரசும் கூட்டாக முன்வைத்த பஞ்சசீலக் கொள்கைகளும், பாண்டுங் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் சமாதான நலன்களுக்கும் சமாதானத்தை விரும்பும் மக்களின் நலன்களுக்கும் பொருந்துவனவாகும்.

வெவ்வேறு சமூக அமைப்புகளுடைய நாடுகளிடையே சமாதான சகவாழ்வா அல்லது படுநாசம் விளைவிக்கக்கூடிய யுத்தமா என்பதே இன்றுள்ள பிரச்சனை; இதனைத் தவிர வேறு வழி கிடையாது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ''கெடுபிடி போர்க்கொள்கை'', ''யுத்த விளிம்புக் கொள்கை'' ஆகியவற்றை கம்யூனிஸ்டுகள் அழுத்தமாக நிராகரிக்கிறார்கள். ஏனெனில் இந்தக் கொள்கை அணுஆயுதப் பேரழிவுப் பாதைக்குத்தான் கொண்டு செல்கிறது. சமாதான சகவாழ்வுக் கொள்கையை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் கெடுபிடிப் போரை அடியோடு ஒழிப்பதற்கும், ராணுவ கூட்டணிகளை கலைப்பதற்கும்,

ராணுவத் தளங்களை மூடுவதற்கும், சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழ் பொதுவான முழுமையான ஆயுத ஒழிப்பிற்கும் சர்வதேசக் தகராறு களுக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண்பதற்கும் அனைத்து நாடு களையும் அவற்றின் பிரதேச ஒருமைப்பாட்டையும் சமமாக மதிப்பதற் கும், அனைத்து நாடுகளின் சுதந்திரம் மற்றும் இறையாண்மையை மதிப்பதற்கும், ஒருநாடு பிறிதொரு நாட்டின் உள்நாட்டு விவகாரங் களில் தலையிடாமல் இருப்பதற்கும், நாடுகளிடையே வியாபார, கலாச் சார, விஞ்ஞான உறவுகள் விரிவாக வளர்வதற்கும் கம்யூனிஸ்டுகள் போராடுகிறார்கள்.

புதிய கொடுமையான யுத்தங்களை வெறுத்து நிலையான சமா தானத்தைக் காண விரும்பும் அனைத்து மக்களின்-அடிப்படை நலன் களுக்கும் சமாதான சகவாழ்வுக் கொள்கை பொருந்துகிறது. இந்தக் கொள்கை சோசலிசத்தின் நிலைகளைப் பலப்படுத்துகிறது; சோசலிச நாடுகளின் புகழையும், சர்வதேச செல்வாக்கையும் உயர்த்துகிறது; முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் புகழையும், செல்வாக்கையும் வளர்க்கிறது. சோசலிசத்தின் விசுவாசமான தோழன் சமாதானமேயாகும். ஏனெனில், காலம் முதாலாளித்துவத்திற்கு எதி ராகவும், சோசலிசத்திற்குச் சாதகமாகவும் வேலை செய்து கொண்டிருக்கிறது.

சமாதான சகவாழ்வுக் கொள்கை, மக்களை ஒன்று திரட்டி, சமா தானத்தின் எதிரிகளுக்கு எதிரான தீவிர நடவடிக்கை எடுக்கக்கூடிய கொள்கையாகும். நாடுகளிடையே சமாதான சகவாழ்வு என்பது, திரிபு வாதிகள் கூறுவது போன்று வர்க்கப்போராட்டத்தைக் கைவிடுவது என்று அர்த்தமல்ல. வேறுபட்ட சமூக அமைப்புடைய நாடுகள் சமாதான சக வாழ்வு நடத்துவதென்பது சோசலிசத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் இடையில் நடைபெறும் ஒரு வகை வர்க்கப் போராட்டமாகும். சமாதான சகவாழ்வுச் சூழ்நிலையில், முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட் டம் ஓங்குவதற்கும் காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் மக்களின் தேசிய விடுதலை இயக்கம் வளருவதற்கும் சாதகமான வாய்ப்புக்கள் ஏற் படுகின்றன. மறுபுறத்தில் புரட்சிகரமான வர்க்கப் போராட்டம், தேசிய விடுதலைப் போராட்டம் ஆகியவற்றின் வெற்றிகள் சமாதானச் சக வாழ்வை மேலோங்கச் செய்கின்றன. சமாதான சகவாழ்வுக் கொள் கையை மேலோங்கச் செய்வதும், உலக யுத்தத்தைத் தடுக்க முடியும் என்ற உறுதியை மக்கள் மத்தியில் மேலும் பலப்படுத்துவதும் தங்க ளுடைய தலையாய கடமையென கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்கள். சமாதானம், ஜனநாயகம், தேசிய விடுதலை ஆகியவற்றிற்கான தீவிர போராட்டத்தின் மூலம் ஏகாதிபத்தியத்தை பலவீனப்படுத்தவும், அதனுடைய செயல்பாட்டு எல்லைகளைக் கட்டுப்படுத்தவும் கம்யூனிஸ் டுகள் தம்மால் இயன்றதனைத்தையும் செய்வர்.

வெவ்வேறு சமூக அமைப்புகளுடைய நாடுகளிடையே சமாதான சக வாழ்வு என்பது சோசலிச முதலாளித்துவ தத்துவங்களுக்கிடையேயான சமரசம் என்று பொருளல்ல. மாறாக, சோசலிச கருத்துக்களின் வெற்றிக்காக தொழிலாளிவர்க்கம் மற்றும் அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளினுடைய போராட்டத்தை தீவிரப்படுத்துவது என்று பொருளாகும். ஆனால், நாடுகளிடையேயுள்ள சித்தாந்த, அரசியல் தகராறுகளை யுத்தத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளக்கூடாது.

ரசியாவால் முன்வைக்கப்பட்டுள்ள பொதுவான முழுமையான படைபலக் குறைப்பு திட்டத்தை அமுல் நடத்துவது மனிதவர்க்கத்தின் தலைவிதியை நிர்ணயிக்கத்தக்க வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததென்று இக்கூட்டம் கருதுகிறது. இத்திட்டத்தை செயல் படுத்துவது என்பது, நாடுகளிடையே யுத்தங்கள் தோன்றுவதற்கான சாத்தியப்பாடுகளையே அகற்றுவது என்பதாகும். ஏகாதிபத்தியவாதிகளின் பிடிவாதமான எதிர்ப்பின் காரணமாக இத்திட்டத்தை நிறைவேற்றுவது எளிதல்ல. எனவே, இந்த திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கத்துடன், ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்து உறுதியான தீவிரமான போராட்டத்தை நடத்துவது அவசியமாகும். அணு ஆயுத உற்பத்தியையும், சோதனையையும் தடை செய்வது, அன்னிய நாடுகளிலுள்ள ராணுவத் தளங்களைக் கலைப்பது, ராணுவக் கூட்டணிகளைக் கலைப்பது, படைகள், படைக் கருவிளைப் பெருமளவுக்குக் குறைப்பது-ஆகியவைகளில் சாத்தியமான முடிவுகள் ஏற்படுவதற்கு இந்தப் போராட்டத்தை அதிக அளவில் இடைவிடாது நடத்துவது அவசியமாகும். இவையாவும் பொதுவான முழுமையான படைபலக் குறைப்பிற்கு வழி வகுக்கும். சோசலிச நாடுகள் மற்றும் இதர சமாதானம் விரும்பும் நாடுகளின் தீவிரமான, உறுதியான போராட்டத்தின் மூலமும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், அனைத்து நாடுகளிலுள்ள பரந்துபட்டமக்கள் ஆகியோரின் தீவிரமான, உறுதியான போராட்டத்தின் மூலமும் ஆக்கிரமிப்பு வட்டாரங்களைத் தனிமைப்படுத்துவது சாத்தியம்; ஆயுதப் போட்டியையும், யுத்தத் தயாரிப்புகளையும் தவிர்ப்பதும், பொதுவான படைபலக் குறைப்புக்கான உடன்பாடு ஒன்றிற்கு வருமாறு ஏகாதிபத்தியவாதிகளை நிர்ப்பந்திப்பதும் சாத்தியமாகும்.

ஆயுதப் போட்டி, யுத்தத்தைத் தடுத்து நிறுத்தப் போவதில்லை; மக்களுக்கு பெருமளவு வேலை வாய்ப்புகளைத் தந்து அவர்களின் நலன்களுக்கு உதவப் போவதில்லை. அது யுத்தத்திற்கே இட்டுச் செல்லும். ஆயுதப் போட்டியில் அக்கறை உள்ளவர்கள் ஒரு சில ஏகபோகக்காரர்களும், யுத்தச் சூதாடிகளும் தான். ராணுவச் செலவுகள் குறைக்கப்பட வேண்டும். அந்த நிதிகள் சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்குப் பயன் படுத்தப்பட வேண்டுமென்று முதலாளித்துவ நாடுகளிலுள்ள மக்கள் இடைவிடாது வற்புறுத்துகின்றனர். படைபலக் குறைப்பின் மூலம் மீதமாகும் நிதிகளும் இதர மூலாதாரங்களும்

மக்களின் உபயோகப் பண்ட உற்பத்தி, வீட்டு வசதிகள், சுகாதாரம், பொதுக் கல்வி, சமூகப் பாதுகாப்பு, விஞ்ஞான ஆராய்ச்சி முதலியவற்றுக்காக உபயோகப்படுத்தப்பட வேண்டும். இதற்காக ஒவ்வொரு நாட்டிலும் பரந்துபட்டமக்கள் இயக்கத்தை ஓங்கச் செய்வது அவசியம். படைபலக்குறைப்பு இப்பொழுது மக்களின் போராட்ட முழக்கமாக இருக்கிறது; அம்முழக்கம் இன்று வரலாற்றுத் தேவையாகி விட்டது. தீவிரமான உறுதியான போராட்டத்தின் மூலம் மக்களின் இந்தக் கோரிக்கையை ஏகாதிபத்தியவாதிகள் நிறைவேற்றுமாறு செய்ய வேண்டும்.

வேறுபட்ட சமூக அமைப்புகளிடையே நாடுகளின் சமாதான சக வாழ்வுக் கொள்கையை சோசலிச நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் உறுதியுடன் தொடர்ந்து பின்பற்றிச் செல்லும் புதிய யுத்தமொன்றின் பயங்கரங்கள், நாசங்களினின்றும் மக்களைக் காக்க தம்மால் இயன்றதனைத்தையும் செய்யும். அவர்கள் ஏகாதிபத்தியத்தின்பால் மிகுந்த விழிப்புணர்ச்சியைக் காட்டுவார்கள்; சோசலிச முகாம் முழுவதினுடைய பலத்தையும் தற்காப்பையும் அதிகரிப்பார்கள்; இதன் மூலம் சமாதானத்தைக் காக்கவும் மக்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தவும் எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பார்கள். உலக ரீதியில் சுரண்டலையும், வறுமையையும் ஒழிப்பதும், மனித சமுதாயத்தின் வாழ்விலேயே எந்தக் காலத்திலும் எந்தவிதமான யுத்த சாத்தியப்பாடுகளையும் இல்லாமல் செய்வது மட்டுமல்லாமல் நம்முடைய காலத்திலேயே ஒரு புதிய யுத்தம் என்ற பயங்கரத்திலிருந்து மனித குலத்தை விடுவிப்பதும் தங்கள் வரலாற்று பூர்வமான பணி என்று கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்கள். இந்த மகத்தான வரலாற்று லட்சியத்திற்காக கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்களுடைய முழுமையான வல்லமையையும் சக்தியையும் பயன்படுத்தும்.

தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றிகள்

உலகத்தின் பெரும் பகுதியில் தேசிய விடுதலைப் புரட்சிகள் வெற்றி பெற்றிருக்கின்றன. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னால் கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் நாற்பதுக்கு மேற்பட்ட புதிய சுதந்திர நாடுகள் உதயமாகியிருக்கின்றன. கியூபா புரட்சியின் வெற்றி, முழுமையான தேசிய விடுதலைக்கான லத்தீன் அமெரிக்க மக்களின் போராட்டங்களுக்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்திருக்கிறது. மனித குலத்தின் வாழ்வில் ஒரு புதிய வரலாற்று சகாப்தம் ஏற்பட்டிருக்கிறது; விடுதலை பெற்ற ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் உலக அரசியலில் தீவிர பங்கெடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

காலனி ஆதிக்கம் முற்றமுழுக்க அழிந்தொழிவது உடனடியாக நிகழக்கூடியதாகும். தேசிய விடுதலை இயக்கங்களின் தீவிர மோதல்களின் காரணமாக காலனி அடிமை முறை உடைந்திருக்கிறது. இந்த மாறுதல், உலக சோசலிச அமைப்பு உருவாகியதற்கு அடுத்தாற்போல் இரண்டாவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மகத்தான அக்டோபர் சோசலிசபுரட்சி கிழக்குலக நாடுகளை எழுச்சி பெறசெய்தது; காலனி நாடுகளிலுள்ள மக்களை பொதுவான உலகளாவிய புரட்சிகர நீரோட்டத்தில் இணைத்தது. இரண்டாம் உலகப் போரில் ரசியா பெற்ற வெற்றியும், பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளின் மக்கள் ஜனநாயகக் குடியரசுகள் அமைந்ததும், சீனாவில் சோசலிச புரட்சி வெற்றி பெற்றதும், உலக சோசலிச அமைப்பு உருவாகியதும் இந்த மாறுதல்களுக்குப் பெரிதும் துணைபுரிந்தன. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலையடைவதற்காக காலனி நாட்டு, சார்பு நாட்டு மக்கள் நடத்திய போராட்டங்களுக்கு உலக சோசலிச சக்திகள் திட்டவட்டமாக உதவி செய்தன. விடுதலையடைந்த மக்களின் சுதந்திரமான தேசிய வளர்ச்சிக்கு சோசலிச அமைப்பு நம்பகமான கேடயமாக இருக்கிறது. சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்திலிருந்து தேசிய விடுதலை இயக்கம் சக்தி மிக்க ஆதரவு பெறுகிறது.

ஆசியாவின் முகத்தோற்றமே தீவிரமாக மாறியுள்ளது. ஆப்பிரிக்காவில் காலனி ஆதிக்கம் தகர்ந்து வருகிறது. லத்தீன் அமெரிக்காவில் ஏகாதிபத்தியத்திற்கெதிரான தீவிரப் போராட்டம் துவங்கியுள்ளது. ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் உலகின் இதர பகுதிகளிலும் லட்சோப லட்சக் கணக்கான மக்கள் ஏகாதிபத்தியத்துடன் தீவிரமாகப் போராடி சுதந்திரம் பெற்றிருக்கின்றனர். தேசிய விடுதலைப் போராட்டங்களின் முற்போக்கான, புரட்சிகர முக்கியத்துவத்தைக் கம்யூனிஸ்டுகள் என்றுமே அங்கீகரித்து வந்திருக்கின்றனர்; அவர்களே தேசிய சுதந்திரத்தின் மிகத் தீவிரமான ஆதரவாளர்களாவர். உலக சோசலிச அமைப்பு ஏற்பட்டிருப்பதும், ஏகாதிபத்தியத்தின் நிலை பலவீனமடைந்திருப்பதும் ஒடுக்கப்பட்ட மக்கள் சுதந்திரம் பெறுவதற்கு புதிய வாய்ப்புகளை அளித்திருக்கின்றன. அந்தந்த நாடுகளின் குறிப்பான நிலைமைகளுக்கேற்ப ஆயுதம் தாங்கிய போராட்டம் அல்லது ராணுவ ரீதியல்லாத முறைகள் மூலம், காலனி நாட்டு மக்கள் விடுதலை பெற்றிருக்கின்றனர். வலிமைமிக்கதொரு தேசிய விடுதலை இயக்கத்தின் மூலம் அவர்கள் நிலையான வெற்றி பெற்றிருக்கின்றனர். காலனி ஆதிக்க நாடுகள் காலனி நாட்டு மக்களுக்கு மனமுவந்து சுதந்திரம் வழங்கியதேயில்லை; தாம் சுரண்டிக் கொழுக்கும் நாடுகளிலிருந்து அவர்கள் தாமாகவே விரும்பி வெளியேறியதில்லை.

இன்று, காலனி ஆதிக்கத்தின் பிரதான ஆதாரமாக விளங்குவது அமெரிக்கா தான். அமெரிக்காவின் தலைமையிலுள்ள ஏகாதிபத்தியவாதிகள் புதிய வழிகளிலும், புதிய வடிவங்களிலும், முன்னாள் காலனி நாடு

களில் காலனிய சுரண்டலைப் பாதுகாக்க வெறித்தனமான முயற்சிகள் செய்து வருகிறார்கள். ஏகபோக முதலாளிகள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதாரத்தின் மீது தங்கள் கட்டுப் பாட்டையும், அரசியலில் தமது செல்வாக்கையும் நீடித்து வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். சுதந்திரமடைந்த நாடுகளின் பொருளாதார அமைப்பில் தமது நிலைகளை உறுதி செய்யும் நோக்கத்துடன் இந்த முயற்சிகள் செய்யப்படுகின்றன.

பொருளாதார 'உதவி' என்ற போர்வையில் புதிய இடங்களைப் பிடித்துக்கொள்ளும் நோக்கத்துடன் இந்த முயற்சிகள் செய்யப்படு கின்றன; ராணுவக் கூட்டணிக்குள் அவற்றை இழுத்தும், ராணுவ சர்வாதிகாரங்களைப் புகுத்தியும் அங்கெல்லாம் ராணுவத் தளங்கள் நிறுவும் நோக்கத்துடன் இந்த முயற்சிகள் செய்யப்படுகின்றன. புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் தேசிய இறையாண்மையைப் பலவீனப் படுத்தவும், அதற்குக் குழிபறிக்கவும் ஏகாதிபத்தியவாதிகள் முயன்று வருகின்றனர். நாடுகளின் சுயநிர்ணய உரிமைக் கொள்கையைத் தவறாக வியாக்கியானம் செய்ய முனைகின்றனர். ''பரஸ்பரச் சார்பு'' என்ற போலியான முழக்கத்தின் கீழ் காலனி ஆதிக்கத்தின் புதிய வடிவங்களைத் திணிக்க முயன்று வருகின்றனர். அந்நாடுகளின் ஆட்சிப் பீடங்களில் தமது கைப்பாவைகளை அமர்த்தவும், அங்குள்ள முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பகுதியை விலைக்கு வாங்கவும் முயன்று வருகின்றனர். இன்னும் பலம் பெறாத இளம் நாடுகளைப் பலவீனப்படுத்த உள்நாட்டுக் கலகம் என்ற நச்சு ஆயுதத்தை அவர்கள் பயன்படுத்துகின்றனர். இத்தகைய தமது நோக்கங்களைச் சாதித்துக் கொள்ள ஆக்கிரமிப்பு ராணுவக் கூட்டுக்களையும் ராணுவ முகாம்களையும் அவர்கள் பெரு-மளவில் பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் சுரண்டும் வர்க்கங்களில் மிகப் பிற்போக்கான பகுதிகளே, ஏகாதிபத்தியவாதி களின் துணைவர்களாக இருக்கின்றனர்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், நிலப்பிரபுத்துவத்தின் மீதமிச்சங் களுக்கு எதிராகவும், ஒரு தேசிய ஜனநாயக அணியின் கீழ் ஒன்றுபட்ட சகல தேசபக்த சக்திகளின் உறுதியான போராட்டம் இன்றி, காலனி ஆதிக்க நுகத்தடியிலிருந்து விடுபட்ட நாடுகளை எதிர்நோக்கியுள்ள தேசிய மறுமலர்ச்சிக்கான அவசரமான பணிகளை பயன் தரத்தக்க வகையில் நிறைவேற்ற முடியாது. அரசியல் சுதந்திரத்தைப் பலப்படுத்து தல், விவசாயிகளுக்கு நன்மையளிக்கத்தக்க விதத்தில் நிலச் சீர்திருத்தங் களைச் செய்தல், நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களை அகற்றுதல், ஏகாதிபத்தியப் பொருளாதார ஆதிக்கத்தை வேருடன் களைந்தெறிதல், அன்னிய ஏகபோகங்களைக் கட்டுப்படுத்துதல், தேசிய பொருளாதார அமைப்பிலிருந்து அன்னிய ஏகபோகங்களை அப்புறப்படுத்துதல், தேசியத் தொழில்களைக் கட்டி வளர்த்தல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், சமூக வாழ்க்கையை ஜனநாயகப் படுத்துதல், சுதந்திரமான, சமாதான

வழியிலான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தல், சோசலிச மற்றும் இதர நேச நாடுகளுடன் பொருளாதார, கலாச்சார ஒத்துழைப்பை வளர்த்தல் ஆகியவைதான் தேசிய ஜனநாயகக் கடமைகளாகும். இவற்றின் அடிப்படையில்தான் சுதந்திரம் பெற்ற ஒவ்வொரு நாட்டிலுமுள்ள முற்போக்கு சக்திகள் ஒன்றுபட முடியும்; ஒன்றுபடுகின்றன.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் மிகச் சிறந்த பங்காற்றியுள்ள தொழிலாளி வர்க்கம், தேசியக் கடமைகளும், ஏகாதிபத்திய எதிர்ப்பு கடமைகளும், ஜனநாயகப் புரட்சிக் கடமைகளும் முழுமையாகவும் உறுதியாகவும் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறது; சமூக முன்னேற்றத்தைத் தடுப்பதற்குப் பிற்போக்குவாதிகள் செய்யும் முயற்சிகளைத் தொழிலாளி வர்க்கம் எதிர்க்கிறது. மக்கள் தொகையின் மிகப் பெரும்பாலோரின் நலன்களை நேரடியாகப் பாதிக்கும் விவசாயப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இந்த நாடுகளுக்கு மிகவும் முக்கியமானதாகும். தீவிர விவசாயச் சீர்திருத்தங்கள் செய்யப்படாமல் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பது சாத்தியமல்ல; விவசாயத்திலும், தொழிலிலும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை முடக்குகின்ற மத்திய காலத்தின் மிச்ச சொச்சங்களை அறவே அகற்றுவதும் சாத்தியமாகாது. இந் நாடுகளின் தேசியப் பொருளாதாரத்தில் குறிப்பாக தொழில் துறையில் அன்னிய ஏகபோகங்களின் மீது சார்ந்திராததும், நாட்டின் பொருளாதாரத்தில் படிப்படியாக தீர்மானகரமான பங்கு வகிக்கக்கூடியதுமான ஜனநாயக அடிப்படையில் அமைந்த அரசுத்துறை உருவாக்கப்பட்டு விரிவுபடுத்தப்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

தேசிய சுதந்திரத்தை வெல்வதிலும், அதை பாதுகாப்பதிலும் பெரும் ஜனநாயக மாறுதல்களைப் பெறுவதிலும், சமூக முன்னேற்றத்தை உறுதி செய்வதிலும் மிக முக்கியமான சக்தியாக விளங்குவது தொழிலாளி-விவசாயி வர்க்க நேச அணியாகும். இந்த நேச அணிதான் விரிவான தேசிய அணியின் அடிப்படையாக அமைகிறது. தேசிய முதலாளிகள் விடுதலைப் போராட்டத்தில் எந்த அளவிற்குப் பங்கு கொள்கிறார்கள் என்பது இந்த நேச அணியின் பலத்தையும், நிலையான தன்மையையும் பெரும் அளவிற்குப் பொறுத்துள்ளது. தேச பக்த சக்திகளும், தேசிய சுதந்திரத்திற்காகப் போராடத் தயாராகவுள்ள சகல நபர்களும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் பெரும் பங்கு வகிக்க முடியும்.

இன்றைய சூழ்நிலைமைகளில், ஏகாதிபத்திய வட்டாரங்களோடு சம்பந்தம் வைத்துக்கொண்டிராத,காலனி சார்பு நாடுகளிலுள்ள தேசிய முதலாளிகள் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவத்திற்கெதிரான புரட்சிக் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதில் யதார்த்த ரீதியான அக்கறை கொண்டுள்ளனர். ஆகவே அவர்கள் ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிரான புரட்சிகரப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். இந்த வகையில் தேசிய

முதலாளி வர்க்கம் முற்போக்கானதாகும். ஆனாலும் அது நிலையற்றது. அது முற்போக்கானதாயிருப்பினும், ஏகாதிபத்தியத்துடனும், நிலப்பிரபுத்துவத்துடனும் சமரசம் செய்துகொள்ள விரும்புகிறது. அதன் இரட்டைத்தன்மை காரணமாக, தேசிய முதலாளி வர்க்கம் புரட்சியில் எந்த அளவிற்குப் பங்கு கொள்ள முடியும் என்பது நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. இது பருண்மையான சூழ்நிலைமைகளைப் பொறுத்துள்ளது. வர்க்க சக்திகளின் உறவில் ஏற்படக் கூடிய மாறுதல்களைப் பொறுத்துள்ளது. ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்துடன் மக்களுக்கு உள்ள முரண்பாடுகளின் கூர்மையைப் பொறுத்துள்ளது; ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்துடன் தேசிய முதலாளி வர்க்கத்திற்கு முரண்பாடுகள் எவ்வளவு ஆழமாக இருக்கின்றன என்பதைப் பொறுத்துள்ளது.

அரசியல் சுதந்திரம் வென்றபின், வாழ்க்கையில் எழும் சமூகப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் தேசியசுதந்திரத்தை பலப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் மக்கள் முயலுகின்றனர். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வெவ்வேறு வர்க்கங்களும், கட்சிகளும் வெவ்வேறு வழிகளைக் கூறுகின்றன. எந்த வழியைத் தேர்ந்தெடுப்பதென்பது அந்தந்த நாட்டு மக்களின் உள் நாட்டு விவகாரம் ஆகும். சமூக முரண்பாடுகள் வளர்ச்சியடையும்பொழுது தேசிய முதலாளி வர்க்கம் உள்நாட்டிலுள்ள பிற்போக்கு சக்தியுடனும், ஏகாதிபத்தியத்துடனும் மென்மேலும் சமரசம் செய்து கொள்ளவே விரும்புகிறது. என்றாலும் நெடுங்காலமாக இருந்து வரும் பின்தங்கிய நிலைமையை ஒழிப்பதற்கும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் மிகச் சிறந்த வழி முதலாளித்துவமல்லாத பாதையேயென்பதை மக்கள் உணர ஆரம்பிக்கிறார்கள். இந்த வழியின் மூலம் மட்டுந்தான் மக்கள் சுரண்டலிலிருந்தும் வறுமை, பசி ஆகியவற்றிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்ள முடியும். இந்த அடிப்படையான சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தொழிலாளி வர்க்கமும், பரந்த விவசாயப் பெரு மக்களும் தலையாய பங்காற்றுவர்.

இன்றுள்ள வரலாற்று நிலைமையில், பல நாடுகளில் ஒரு சுதந்திர தேசியஜனநாயகத்தை (Independent National Democracy)ஏற்படுத்துவதற்குச் சாதகமான தேசிய-சர்வதேச சூழ்நிலைமைகள் எழுகின்றன. இந்த சுதந்திர தேசிய ஜனநாயக அரசு தனது அரசியல், பொருளாதார சுதந்திரத்தை உறுதியாகநிலைநாட்டும்; ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும் அதன் ராணுவ கூட்டணிகளுக்கெதிராகவும் போராடும்; தனது பிரதேசத்தில் ராணுவ தளங்கள் அமைக்கப்படுவதை எதிர்த்துப் போராடும்; இந்த அரசாங்கம் காலனி ஆதிக்கத்தின் புதிய வடிவங்களையும், ஏகாதிபத்தியத்தின் மூலதன ஊடுருவலையும் எதிர்த்துப் போராடும்; சர்வாதிகார கொடுங்கோல் ஆட்சி முறைகளை இது நிராகரிக்கும். (பேச்சுரிமை, எழுத்துரிமை; கூட்டங்கூடும் உரிமை, ஆர்பாட்டங்கள் நடத்துவதற்கும், அரசியல் கட்சிகள், சமூக ஸ்தாபனங்கள் ஆகியவற்றை அமைத்துக்

கொள்வதற்கும் உரிமை ஆகிய)விரிவான ஜனநாயக சுதந்திரங்களையும் உரிமைகளையும் இந்த அரசாங்கம் மக்களுக்கு உத்தரவாதம் செய்யும்; மக்கள் இந்த அரசாங்கத்தின் கீழ் விவசாயச் சீர்திருத்த சட்டங்களுக்காக பாடுபடவும், இதர ஜனநாயக சமூக மாறுதல்களுக்காக வேலை செய்யவும், அரசின் கொள்கையை உருவாக்குவதில் பங்கு கொள்ளவும் வாய்ப்பு உண்டு. தேசிய ஜனநாயக அரசாங்கங்கள் உருவாகி, பலப்பட்டு வருவது, சம்பந்தப்பட்ட நாடுகள் துரிதமான முறையில் சமூக முன்னேற்றம் காண்பதற்கு உதவி புரிகிறது; சமாதானத்திற்காகவும், ஏகாதிபத்திய முகாமின் ஆக்கிரமிப்பு கொள்கைகளுக்கு எதிராகவும் காலனிய நுகத்தடியை முற்றிலும் ஒழிப்பதற்காகவும் நடைபெறும் மக்கள் போராட்டத்தில் இந்த நாடுகள் தீவிரப் பங்காற்றுவதற்கு இது துணை புரிகிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியை முழுமையாக நிறைவேற்றுவதற்காகவும், தேசிய ஜனநாயக அரசாங்கங்களை ஏற்படுத்துவதற்காகவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஒரு தீவிரமா முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் கம்யூனிஸ்டு கட்சிகள் உறுதியாக பாடுபட்டு வருகின்றன. ஏற்கனவே பெற்றுள்ள நலன்களைப் பேணி உறுதிப்படுத்தவும், ஏகாதிபத்தியவாதிகளின் நிலைகளை தகர்க்கவும் தேசிய அரசாங்கங்கள் எடுக்கும் நடவடிக்கைகளைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதரிக்கின்றன. அதே வேளையில் ஆளும் வட்டாரங்களின் ஜனநாயக விரோத, மக்கள் விரோத சட்டங்களையும், தேசிய சுதந்திரத்துக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய நடவடிக்கைகளையும், கம்யூனிஸ்ட் கட்சிகள் உறுதியாக எதிர்க்கின்றன. தங்களின் சொந்த குறுகிய வர்க்க நலன்களையே தேசம் முழுவதின் நலன் என்று காட்டுவதற்கு முதலாளி வர்க்கத்தின் பிற்போக்கு பகுதியினர் எடுத்து வரும் முயற்சிகளை கம்யூனிஸ்ட்டுகள் அம்பலப்படுத்துகின்றனர். இதே நோக்கத்துடன் முதலாளித்துவ அரசியல்வாதிகள் சோசலிச முழக்கங்களை வாய்ஜால்மாகக் கையாண்டு வருவதைக் கம்யூனிஸ்டுகள் அம்பலப் படுத்துகின்றனர். சமுதாய வாழ்வு உண்மையாக ஜனநாயகமாக்கப்படல் வேண்டும் என்பதற்காக கம்யூனிஸ்டுகள் பாடுபடுகின்றனர். சர்வாதிகார ஆட்சிகளை எதிர்த்து முறியடிக்கவும், அல்லது இத்தகைய ஆட்சிகள் ஏற்படுவதற்கான போக்குகளைக் கட்டுப்படுத்தவும் அனைத்து முற்போக்கு சக்திகளையும் கம்யூனிஸ்டுகள் அணிதிரட்டி வருகின்றனர்.

கம்யூனிஸ்டுகளின் லட்சியங்கள் நாட்டின் உயர்ந்த நலன்களுக்கு உகந்தனவாக இருக்கின்றன. ''கம்யூனிஸ்டு எதிர்ப்பு'' என்ற முழக்கத்தின் கீழ் தேசிய அணியை உடைப்பதற்கும் விடுதலை இயக்கத்தின் முன்னணிப்படையாக விளங்கும் கம்யூனிஸ்டுகளைத் தனிமைப்படுத்துவதற்கும் பிற்போக்காளர்கள் செய்யும் முயற்சி தேசிய இயக்கத்தைப் பலவீனப்படுத்துகிறது. மக்களின் தேசிய நலன்களுக்கு இது மாறானது. தேசிய நலன்களை இழப்பதற்கான ஆபத்தை இது ஏற்படுத்துகிறது.

விடுதலைக்காகப் போராடும் மக்களுக்கும், ஏகாதிபத்திய நுகத் தடியைத் தூக்கி எறிந்துள்ள மக்களுக்கும் சோசலிச நாடுகள், உண்மை யான, உளப்பூர்வமான நண்பர்களாக விளங்குகின்றன. விடுதலை யடைந்த தேசிய அரசாங்கங்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடு -வதைக் கொள்கை ரீதியில் அவை நிராகரிக்கின்றன. அதே வேளையில் சுதந்திரத்தை பலப்படுத்துவதில் இந்த மக்களுக்கு உதவிபுரிவதை சோசலிச நாடுகள் தங்கள் சர்வதேசக் கடமையாக கருதுகின்றன. இந்த நாடுகள் முன்னேறுவதற்கும், ஒரு தேசியத் தொழிலை உருவாக்கு வதற்கும், அவற்றின் தேசியப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற் கும், தேசிய நிர்மாணத்திற்கான ஊழியர்களுக்குப் பயிற்சிஅளிப்பதற்கும் சோசலிச நாடுகள், அந்நாடுகளுக்கு உதவியும், ஆதரவும் தருகின்றன. உலக சமாதானத்திற்காகவும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்க்கவும் சோசலிச நாடுகள் இந்நாடுகளுடன் ஒத்துழைக்கின்றன.

காலனி ஆதிக்க நாடுகளிலுள்ள வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள், ''பிற நாடுகளை அடக்கியொடுக்கும் எந்தவொரு நாடும் தானும் ஒரு சுதந்திர நாடாகத் திகழ முடியாது'' என்பதை உணர்ந்துள்ளனர். அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளால் அடக்கியொடுக்கப்பட்ட நாடுகளின் சுயநிர்ணய உரிமைக்காக இடைவிடாது போராடினார்கள். இப்பொழுது இந்நாடுகள் தேசிய விடுதலைப் பாதையை மேற்கொண்டுள்ள நிலையில், ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் இந்த நாடுகளுக்கு தீவிரமாக உதவிசெய்வது, தொழில் துறையில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் ஜனநாயக சக்திகளுடைய சர்வதேசக்கடமையாகும். இந்த நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டத்திலும், அதைப் பலப்படுத்துவதற்கான போராட்டத்திலும், அவைகளின் பொருளாதார, கலாச்சார மறுமலர்ச்சி பற்றிய பிரச்சினைகளுக்கு பயனுள்ள முறையில் தீர்வுகாண்பதிலும் இவைகளுக்கு உதவிபுரிவதும் அவர்களின் கடமையாகும். இதைச் செய்யும் போது, தொழில் துறையில் முன்னேறியுள்ள முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் தங்கள் நாட்டு மக்களின் நலன்களையும் பாதுகாக்கிறார்கள்.

சமீப கால உலக வரலாற்றுப் போக்கு காலனி முறையையும் அதன் எல்லா வடிவங்களையும் முழுவதுமாகவும், இறுதியாகவும் ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது. இன்னும் காலனி அடிமைத்தளையில் கட்டுண்டு அவதியுறும் சகல மக்களுக்கும், அவர்கள் தேசிய சுதந்திரத்தை வெல்வதற்காக எல்லா உதவியும் செய்ய வேண்டும். காலனி அடக்குமுறையின் சகல வடிவங்களும் ஒழிக் கப்படவேண்டும். காலனி ஆதிக்கம் ஒழிக்கப்படுவது சர்வதேச கெடு பிடியைத் தணிப்பதற்கும், உலகசமாதானத்தை உறுதி செய்வதற்கும் மிக முக்கியமானதாகும். ஏகாதிபத்தியத்திற்கெதிராக வீரஞ்செறிந்த போராட்டம் நடத்திவரும் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க, ஓசியா

-னியா மக்களுக்கு இந்த மாநாடு தன் ஒருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொள்கிறது. அரசியல் சுதந்திரம் பெற்றுள்ள இளம் ஆப்பிரிக்க நாடு களின் மக்களை இந்த மாநாடு வாழ்த்துகிறது; இந்த அரசியல் சுதந் திரம் முழு விடுதலை பெறுவதற்கான ஒரு முக்கியமான படியாகும். விடு தலைக்காவும், தேசிய சுதந்திரத்திற்காகவும் போராடிக் கொண்டிருக்கும் வீரமிக்க அல்ஜீரிய மக்களுக்கு இந்த மாநாடு தனது மனப்பூர்வமான வாழ்த்துகளையும், ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறது. அல்ஜீரி யாவுக்கெதிராக நடைபெறும் ஆக்கிரமிப்புப் போர் உடனடியாக நிறுத்தப் பட வேண்டும் என்றும் இந்த மாநாடு கோருகிறது. தென் ஆப்பிரிக்க யூனியனில் நடைபெறும் மனிதத் தன்மையற்ற நிறபேத அடக்குமுறை யையும், கொடுமையையும் (இன ஒதுக்கல் முறையையும்) இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. விடுதலைக்காகவும் சமஉரிமைக்காகவும் போராடிவரும் தென் ஆப்பிரிக்க மக்களுக்கு உலகிலுள்ள அனைத்து ஜனநாயக வாதிகளும் தங்களின் தீவிர ஆதரவைத் தரவேண்டும் என்று இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது. கியூபா, காங்கோ மக்களின் இறையாண்மையிலும் சுதந்திரம் பெற்றுள்ள இதர நாடுகள் அனைத் தின் இறையாண்மையிலும் யாரும் தலையிடக் கூடாது என்றும் இந்த மாநாடு கோருகிறது.

ஏகாதிபத்திய, காலனி ஆட்சிக் கொடுமையிலிருந்து தங்களை விடுவிப்பதற்காகப் போராடிவரும் மக்களுக்கு முழுமையான தார்மீக மற்றும் பொருளாதார உதவிகளையும் கொடுப்பது தங்கள் கடமையென் பதை அனைத்து சோசலிச நாடுகளும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும், உலகக் கம்யூனிச இயக்கமும் அங்கீகரிக்கின்றன.

புதிய காலகட்டத்தில் புதிய வாய்ப்புக்கள்

உலக சக்திகளின் பலாபலத்தில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமையின் காரணமாக, கம்யூனிஸ்ட் கட்சிகளும், தொழிலாளர் கட்சிகளும் சமா தானம், தேசியசுதந்திரம், ஜனநாயகம், சோசலிசம் ஆகியவற்றிற்கான போராட்டத்தில் தங்கள் முன்னுள்ள வரலாற்றுக் கடமைகளை நிறை வேற்றுவதற்குப் புதிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

கம்யூனிஸ்டு கட்சிகள், தத்தம் நாடுகளிலுள்ள பருண்மையான வரலாற்று பூர்வமான சமூக நிலைமைகளுக்கேற்பவும், சர்வதேச நிலை மையைச் சரிவரக் கவனத்தில் எடுத்துக் கொண்டும் புரட்சியின் கடமை கள் மற்றும் அதன் எதிர்கால வேலைகள் குறித்து முடிவு செய்கின்றன. தொழிலாளி வர்க்கத்தின் நலன்களையும் மக்களின் நலன்களையும் பாதுகாப்பதற்கும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும், மக்களின் ஜனநாயக உரிமைகளையும், சுதந்திரங்களையும் விரிவாக்குவதற்கும் சோசலிசம் வெற்றி பெறும் வரையில் காத்திராமல், இன்றுள்ள சூழ்

நிலைமைகளிலேயே கம்யூனிஸ்டுகள் தங்களாலான அனைத்தையும் தன்னலமற்ற முறையில் செய்து வருகின்றனர்; முதலாளித்துவ அடக்கு முறையிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான போராட்டத்தின் கடமை தன்மீதே சார்ந்திருக்கிறது என்பதை தொழிலாளி வர்க்கமும், அதன் புரட்சிகர முன்னணிப்படையும் உணர்ந்து கொண்டுள்ளனர். ஒடுக்கு முறையாளர்கள், சுரண்டுபவர்கள் ஆகியோரின் ஆதிக்கத்திற்கெதிராக, ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும், தத்துவார்த்த நடவடிக்கையிலும் தனது தாக்குதலை மென்மேலும் முழு பலத்துடன் செலுத்திவரும் இந்தப் போராட்டத்தின் போக்கில் முதலாளித்துவத்தைத் தூக்கியெறிவதற்காகவும், சோசலிசப் புரட்சியின் வெற்றிக்காகவும் நடைபெறும் தீர்மானகரமான போராட்டங்களுக்கு மக்கள் தயாராக்கப்படுகிறார்கள்; இதற்கான சூழ்நிலைமைகளும் உருவாகின்றன.

இன்றைய சூழ்நிலைமைகளில் ஆயுதப் போட்டிக்கு முக்கிய பொறுப்பாளியாகவும், பிற்போக்கிற்கும், ஆக்கிரமிப்பிற்கும் அரணாகவும் விளங்கும் முதலாளித்துவ ஏகபோகங்களுக்கெதிரான பிரதான தாக்குதல் மேலும்அதிக சக்தியுடன் செலுத்தப்படுகிறது. ஏகபோகங்களைப் பாதுகாக்கின்ற அரசாங்க ஏகபோக முதலாளித்துவ அமைப்புக்கெதிராக இத் தாக்குதல் தொடுக்கப்படுகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அரசியல், பொருளாதார, ராணுவ ஆதிக்கத்திற்குட்பட்ட ஐரோப்பிய நாடுகளல்லாத சில வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில், தொழிலாளி வர்க்கமும், மக்களும் தங்களுடைய பிரதான தாக்குதலை அமெரிக்க ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கெதிராகவும், அத்துடன் ஏகபோக முதலாளித்துவத்திற்கெதிராகவும், நாட்டு நலன்களைக் காட்டிக் கொடுக்கின்ற இதர உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளுக்கெதிராகவும் செலுத்துகின்றனர். இந்தப் போராட்டத்தின் போக்கில், நாட்டில் உள்ள எல்லா ஜனநாயக, தேசபக்த சக்திகளும் உண்மையான தேசிய சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் அடைவதற்கான நோக்கத்துடன் நடைபெறும் ஒரு புரட்சியின் வெற்றிக்காக போராடும் ஐக்கிய முன்னணியில் ஒன்றுபடுகின்றனர். இது, சோசலிசப் புரட்சிக் கடமைகளை நோக்கிச் செல்வதற்கான சூழ்நிலைமைகளை உருவாக்குகிறது.

பெரும் ஏகபோகங்கள் தொழிலாளி வர்க்க நலன்களையும், மக்களின் நலன்களையும் முழுக்க முழுக்க அத்துமீறிப் பறித்து வருகின்றன. உழைக்கும் மக்கள் சுரண்டப்படுவது அதிகரித்து வருகிறது. இதே போன்று பரந்துபட்ட விவசாயப் பெருமக்களின் வாழ்வும் நசிவடைந்து வருகிறது. அதேவேளையில் நகர்ப்புறத்திலுள்ள சிறு மற்றும் நடுத்தர முதலாளி வர்க்கம் அனுபவிக்கும் தொல்லைகளும் மிகத் தீவிரமாகி வருகின்றன. பெரும் ஏகபோகங்களினால், நாட்டின் அனைத்து பகுதியினரும்

அடக்கியொடுக்கப்படுவது மென்மேலும் அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக, விரல்விட்டு எண்ணக்கூடிய ஏகபோக முதலாளிகளுக்கும் இதரஅனைத்து மக்கட்பகுதியினருக்கும் இடையிலுள்ள முரண்பாடு மேலும் தெளிவாக வெளிப்படுகின்றது. அத்துடன், முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படை வர்க்க முரண்பாடான உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைந்து வருகிறது.

ஏகபோகங்கள் பொது மக்களின் ஜனநாயக உரிமைகளை அழிப்பதற்கோ, அல்லது மிகக் குறைந்த அளவிற்கு அவற்றைக் குறைப்பதற்கோ முயற்சிக்கின்றன. சில நாடுகளில் அப்பட்டமான பயங்கர பாசிச ஆட்சி தொடர்ந்து நடைபெறுகிறது. பல நாடுகளில் பாசிசப் போக்கு புதிய வடிவங்களில் வளர்ந்து வருகின்றது. ஜனநாயக சாரம் அனைத்தும் களையப்பட்டு முற்றிலும் சம்பிரதாய முறையிலான போலி பாராளுமன்ற நடை முறைகளுடன் கூடிய சர்வாதிகார அரசு முறைகள் இந்நாடுகளில் ஏற்பட்டு வருகின்றன. பல ஜனநாயக அமைப்புகள் சட்ட விரோதமாக்கப்பட்டுள்ளன. அவை தலைமறைவாகச் செயல்படுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. தொழிலாளி வர்க்க லட்சியத்திற்காகவும் சமாதானத்திற்காகவும் போராடும் ஆயிரக்கணக்கான போராட்ட வீரர்கள் சிறையில் இருக்கின்றனர்.

அமெரிக்கா, ஸ்பெயின், போர்ச்சுக்கல், ஜப்பான், மேற்குஜெர்மனி, கிரீஸ், ஈரான், பாகிஸ்தான், ஐக்கிய அரபுக்குடியரசு, ஜோர்டான், ஈராக், அர்ஜென்டினா, பராகுவே, டொமினியன் குடியரசு, மெக்ஸிகோ, தென் ஆப்பிரிக்கா, சூடான் மற்றும் இதர நாடுகளில் உள்ள சிறையில் வாடும் தொழிலாளி வர்க்கத்தின் வீரமிக்க புதல்வர்களுக்கும், புதல்விகளுக்கும் ஜனநாயகப் போராட்டவாதிகளுக்குப், உலகிலுள்ள அனைத்து கம்யூனிஸ்டுகளின் சார்பில் இந்த மாநாடு தனது பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொள்கிறது. சமாதானம், தேசிய சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றின் காவலர்களான இப்போராட்ட வீரர்களை விடுதலை செய்வதற்கு உலகு தழுவிய சக்திவாய்ந்ததொரு இயக்கத்தை நடத்த வேண்டுமென்று இந்த மாநாடு வற்புறுத்துகிறது.

தொழிலாளி வர்க்கம், விவசாயி வர்க்கம், அறிவாளிகள், நகர்ப்புறத்திலுள்ள சிறிய நடுத்தர முதலாளிகள் ஆகியோர் ஏகபோகங்களின் ஆதிக்கம் ஒழிக்கப்படவேண்டும் என்பதில் பிரதான அக்கறை கொண்டுள்ளனர். எனவே இந்த சக்திகளை ஒன்று சேர்ப்பதற்கு சாதகமான சூழ்நிலைமைகள் உள்ளன.

சமாதானம், தேசிய சுதந்திரம், ஜனநாயகத்தைப் பாதுகாப்பது, விரிவாக்குவது, பொருளாதாரத்தின் கேந்திரமான துறைகளைத் தேசியமயமாக்குவது; அவற்றின் நிர்வாகத்தை ஜனநாயகப்படுத்துவது;

மக்களின் தேவைகளைத் திருப்தி செய்வதற்குப் பொருளாதாரம் முழுவதையும் சமாதான நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது; தீவிர விவசாய சீர்திருத்தங்களை நிறைவேற்றுவது; உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வது; ஏகபோகங்களின் கொடுமைக்கெதிராக விவசாயிகள், சிறிய, நடுத்தர, நகர்ப்புற முதலாளிகள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாப்பது—ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஒற்றுமை ஏற்படுவது சாத்தியம் என்று கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்கள்.

சமூக முன்னேற்றப் பாதையில் இந்த நடவடிக்கைகள் ஒரு முக்கியமான படியாகும்; இவை நாட்டின் பெரும்பகுதி மக்களின் நலன்களைப் பூர்த்தி செய்யும். இந்த நடவடிக்கைகள் யாவும் ஜனநாயகத் தன்மை வாய்ந்தவை. இவை மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழிப்பதில்லை. ஆயினும், இந்த நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுமானால், ஏகபோகங்களின் அதிகாரம் மட்டுப்படுத்தப்படும்; நாட்டு விவகாரங்களில் தொழிலாளி வர்க்கத்தின் அந்தஸ்தும் அரசியல் செல்வாக்கும் அதிகரிக்கும்; மிகப்பிற்போக்கு சக்திகளை தனிமைப்படுத்தி, அனைத்து முற்போக்கு சக்திகளையும் ஒன்றுபடுத்துவதற்கும் இது உதவிபுரியும். ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தில் பங்கு கொள்ளும் போது பெரும் பகுதி மக்கள் தொழிலாளி வர்க்கத்துடன் சேர்ந்து ஒன்றுபட்ட நடவடிக்கையெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணருகின்றனர்; அரசியல் ரீதியாக மேலும் செயலூக்கம் பெறுகின்றனர். ஜனநாயக சீர்திருத்தங்களுக்காகவும், ஏகபோகங்களின் அதிகாரத்தைத் தூக்கியெறிவதற்காகவும் மக்கள் நடத்தும் பொருளாதார, அரசியல் போராட்டத்தில் தலைமைதாங்குவதும், இப்போராட்டத்தின் வெற்றியை உத்திரவாதம் செய்வதும், தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் கம்யூனிஸ்ட் முன்னணிப் படை ஆகியவற்றினுடைய தலையாய கடமையாகும்.

பொருளாதார, சமூகத்துறையும், அனைத்து நிர்வாக, அரசியல், கலாச்சார அமைப்புக்களும், நிறுவனங்களும் பொதுவாக ஜனநாயகமயமாக்கப்பட வேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் கோருகிறார்கள்.

ஜனநாயகத்திற்கான போராட்டத்தை, சோசலிசத்திற்கான போராட்டத்தின் ஒரு பகுதியாகவே கம்யூனிஸ்டுகள் கருதுகின்றனர். இப்போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள், மக்களுடன் தங்களின் உறவுகளைத் தொடர்ந்து பலப்படுத்திக் கொள்கின்றனர். மக்களின் அரசியல் உணர்வைப் பெருக்கி, சோசலிசப்புரட்சிக் கடமைகளைப் புரிந்து கொள்ளவும், அப்புரட்சி நிறைவேற்றப்படுவதன் அவசியத்தை உணர்ந்து கொள்ளவும் அவர்களுக்கு உதவி புரிகின்றனர். இது சீர்திருத்தவாதிகளிடமிருந்து மார்க்சிய—லெனினிய கட்சிகளை முற்றிலும் வேறுபடுத்திக்காட்டுகிறது. சீர்திருத்தவாதிகள் முதலாளித்துவ அமைப்பின் கட்டுக்கோப்பிற்குள்

சீர்திருத்தங்கள் செய்வதையே தங்களின் இறுதி லட்சியமாகக் கொண்டுள்ளனர். அவர்கள் சோசலிசப் புரட்சிக்கான அவசியத்தையே மறுக்கின்றனர். முதலாளித்துவ நாடுகளிலுள்ள மக்கள் தங்களுடைய அன்றாடப் போராட்டத்தின் போக்கில் சோசலிசம் ஒன்றே தங்களுக் குள்ள ஒரே உண்மையான வழியென்பதை இறுதியாக உணருவார்கள் என்று மார்க்சிய—லெனினியவாதிகள் உறுதியாக நம்புகின்றனர்.

தீவிரமான வர்க்கப் போராட்டத்தில் மேலும் பல மக்கட்பகுதியினர் சேர்ந்து கொண்டு வருகின்றனர். இக்காலத்தில், கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்களிலும், கூட்டுறவு அமைப்புக்களிலும், விவசாயிகள் மத்தி யிலும், இளைஞர்கள், பெண்கள் மத்தியிலும், விளையாட்டு அமைப்பு களிலும், அமைப்பு ரீதியாகத் திரட்டப்படாத மக்கட்பகுதியினர் மத்தி யிலும் தங்களுடைய வேலையை விரிவாக்கிக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும். சமாதானம் மற்றும் ஜனநாயகத்திற்கான போராட்டத்திலும், உன்னதமான கம்யூனிச லட்சியங்களின் பாலும் இளம் தலைமுறையினரை ஈர்ப்பதற்கான புதிய வாய்ப்புகள் இப்பொழுது இருக்கின்றன. பொது மக்கள் மத்தியில் நெருங்கி ஆழ மாகப் பழகுங்கள்; மக்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் வேலைசெய்யுங்கள்; மக்களுக்கு வழிகாட்டும் பொருட்டு அவர்களுடன் உள்ள தொடர்பைப் பலப்படுத்துங்கள் என்று லெனின் நமக்கிட்ட கட்டளையை நிறைவேற்றுவது ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியின் பெரும் கடமையாக இருத்தல் வேண்டும்.

அரசியல் வாழ்க்கையில் தொழிலாளி வர்க்கத்தின் பங்கை அதிகப் படுத்தவும், தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைப் பயனுள்ள முறையில் பாதுகாக்கவும் தொழிற்சங்க இயக்கம் பிளவுண்டிருக்கும் நாடுகளிலும், சர்வதேச ரீதியிலும் தொழிற் சங்க ஒற்றுமை மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டியது அவசியமாகும். வெவ்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்த வர்களாக இருப்பினும், உழைக்கும் மக்களின் நலன்கள் பொதுவானவை. சமீப ஆண்டுகளில் நடைபெற்ற மாபெரும் வர்க்கப் போராட்டங்களில், எங்கெல்லாம் பல்வேறு தொழிற்சங்க அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து போராடினவோ அங்கெல்லாம் உழைக்கும் மக்களின் கோரிக்கையை பெறுவதில் அவை பொதுவாக வெற்றி பெற்றுள்ளன. இதற்குக் காரணம் அவைகளின் ஒற்றுமை யேயாகும். தொழிற்சங்க ஒற்றுமையை திரும்பவும் நிலைநாட்டுவதற்கான உண்மையான முன்தேவைகள் உள்ளனவென்று கம்யூனிஸ்டுகள் நம்பு கின்றனர். இந்த ஒற்றுமையைக் கொண்டுவருவதற்காகக் கம்யூனிஸ்டு கள் சளையாத உறுதியுடன் பாடுபடுவார்கள். தொழிற்சங்க ஜனநாயகமே நடைமுறையில் இல்லாத நாடுகளில், தொழிற்சங்க சுதந்திரத்தைப் பெறுவதற்காகவும்; அனைத்து உழைக்கும் மக்களின் தொழிற்சங்க உரிமைகள் அங்கீகாரம் பெற்று அமுல் நடத்தப்படுவதற்கா கவும் அரசியல் மற்றும் இதர பாரபட்சம் எதுவுமின்றி தொழிற்சங்க ஒற்றுமைக்கான போராட்டம் நடத்தப்பட வேண்டும்.

இதர வெகுஜன, ஜனநாயக இயக்கங்களின் ஒற்றுமை தேசிய, சர்வதேச ரீதியில் மீண்டும் நிலைநாட்டப்படுவது சமாதானத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் அவசியமானதாகும். சமாதானம், தேசிய விடுதலை ஆகியவற்றிற்கான போராட்டம், ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காகவும், விஸ்தரிப்பதற்காகவும் நடைபெறும் போராட்டம், வாழ்க்கை நிலைமைகளில் முன்னேற்றம் காண்பதற்கும் உழைக்கும் மக்களின் சமூக உரிமைகளை விரிவுபடுத்துவதற்கும் நடைபெறும் போராட்டம் ஆகிய போராட்டங்களில் கூட்டாக நடவடிக்கையெடுப் பதன் மூலம் வெகுஜன அமைப்புக்களின் ஒற்றுமையைச் சாதிக்க முடியும்.

தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் விவசாயி மக்களும் சேர்ந்த நேசஅணி தனது கடமைகளை நிறைவேற்றும் வகையில் முதலாளித்துவ நாடுகளிலுள்ள மக்கள் நடத்தும் போராட்டத்தில் தீர்மானகரமான பங்காற்றுகிறது. இந்த நேச அணியே சமூகப் புரட்சியின் பிரதான உந்து சக்தியாகத் திகழ்கிறது.

தொழிலாளி வர்க்க அணியில் ஏற்பட்டுள்ள பிளவை, தேசிய ரீதி யிலும், சர்வதேச ரீதியிலும் நீடிக்கச் செய்வதற்கு ஆளும் வர்க்கங்களும், வலதுசாரி சமூக ஜனநாயகத் தலைமையும், பிற்போக்கு தொழிற்சங்கத் தலைவர்களும் அக்கரை கொண்டுள்ளனர். தொழிலாளர் வர்க்க லட்சி யங்களை அடைவதற்கு இந்தப் பிளவு, பிரதான முட்டுக்கட்டையாக திகழ்கிறது. இந்தப் பிளவை அகற்றுவதற்கு கம்யூனிஸ்டுகள் உறுதி யுடன் பாடுபட்டு வருகின்றனர்.

பல்வேறு நாடுகளிலுள்ள ஏகாதிபத்தியவாதிகளும், பிற்போக்குவாதி களும் தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்துவதற்கும், அதன் ஒருமைப் பாட்டைச் சீர்குலைப்பதற்கும், அடக்குமுறையுடன், ஏமாற்றுவது, லஞ்சங்கொடுப்பது போன்ற முறைகளையும் கையாளுகின்றனர். இந்தப் பிளவு, தொழிலாளி வர்க்க நிலைகளைப் பலவீனப்படுத்துகிறது என்ப தையும், ஏகாதிபத்தியப் பிற்போக்கிற்கே இது சாதகமாயிருக்கிறதென் பதையும் கடந்த சில ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் உறுதி செய்கின்றன.

சில வலதுசாரி சமூக ஜனநாயக தலைவர்கள் ஏகாதிபத்தியக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர்; அவர்கள் முதலாளித்துவ அமைப்பிற்கு வக்காலத்து வாங்குகின்றனர்; தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்துகின்றனர். கம்யூனிசத்தின்மீதுள்ள விரோதத்தினாலும், உலக விவகாரங்களில் சோசலிசத்தின் செல்வாக்கு வளருவதைக் கண்டு அவர்கள் அஞ்சுவதினாலும் அவர்கள் பிற்போக்கு, பழமைவாத சக்திகளிடம் அடிபணிகின்றனர். மார்க்சியம், வர்க்கப் போராட்டம், மரபுமிக்க சோசலிச முழக்கங்கள் யாவற்றையும் வெளிப்படையாக விட்டொழித்துள்ள திட்டங்களை வலதுசாரி சமூக ஜனநாயக கட்சி

களைக் கொண்டு நிறைவேற்றச் செய்வதில் சில நாடுகளிலுள்ள வலதுசாரி தலைமையினர் வெற்றிபெற்றுள்ளனர். இதன் மூலம் அவர்கள் மீண்டும் முதலாளி வர்க்கத்திற்குச் சேவை புரிந்துள்ளனர். வலதுசாரி தலைவர்களின் இத்தகைய கொள்கைக்கு சமூக - ஜனநாயகக்கட்சிகளுக்குள்ளேயே எதிர்ப்பு வளர்ந்து வருகிறது. இக்கட்சியின் நிர்வாகிகள் சிலரும் இந்த எதிர்ப்பாளர்களில் அடங்குவர். சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்கான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கமும், இதர உழைக்கும் மக்களும் கூட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை ஆதரிக்கும் சக்திகள் வளர்ந்து வருகின்றன. சமூக-ஜனநாயக கட்சிகளின் மிகப் பெரும்பாலானோர் குறிப்பாக தொழிலாளர்கள் சமாதானம் மற்றும் சமூக முன்னேற்றத்தின் நண்பர்களாவர். சமூக ஜனநாயகவாதிகளின் சித்தாந்த நிலைப்பாடுகளையும் வலதுசாரி சந்தர்ப்பவாத நடைமுறைகளையும் கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து விமர்சனம் செய்வார்கள். முதலாளித்துவத்திற்கெதிராகவும், சோசலிசத்தின் வெற்றிக்காகவும் சமூக-ஜனநாயக கட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் இடைவிடாத வர்க்கப் போராட்ட நிலையை மேற்கொள்வதற்குத் தூண்டும் முறையில் கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து வேலை செய்வார்கள். கம்யூனிஸ்டுகளுக்கும், சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் இடையில் இருக்கின்ற சித்தாந்த வேறுபாடுகள், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மிக அவசியமான பிரச்சினைகளைப் பற்றி அபிப்பிராயத்தைப் பரிமாறிக் கொள்வதற்கும், கூட்டுப் போராட்டத்திற்கும், குறிப்பாக, யுத்த அபாயத்தை எதிர்த்துக் கூட்டுப் போராட்டம் நடத்துவதற்கும் தடையாக இருக்கக்கூடாது என்பது கம்யூனிஸ்டுகளின் உறுதியான கருத்தாகும்.

உழைக்கும் மக்கள் மத்தியில் உள்ள சமூக-ஜனநாயகவாதிகளைக் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய வர்க்க சகோதரர்களாகவே கருதுகின்றனர். தொழிற்சங்கங்களிலும், இதர அமைப்புக்களிலும் அவர்கள் அநேகமாக ஒன்றுபட்டு வேலை செய்கின்றனர். தொழிலாளி வர்க்க நலன்களுக்காவும் அனைத்து மக்களின் நலன்களுக்காகவும் அவர்கள் இருவரும் கூட்டாகப் போராடுகின்றனர்.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதையும் சோதனை செய்வதையும் உபயோகிப்பதையும் உடனடியாகத் தடைசெய்வதற்கும், அணு ஆயுதங்களே இல்லாத மண்டலங்கள் அமைப்பதற்கும் சர்வதேச கட்டுப்பாட்டின் கீழ் பொதுவான முழுமையான படைபலக் குறைப்பிற்கும், அன்னிய மண்ணில் வைக்கப்பட்டுள்ள ராணுவ தளங்களை ஒழிப்பதற்கும், அன்னியத் துருப்புகளை திரும்பப் பெறுவதற்கும், காலனி மற்றும் சார்பு நாடுகளிலுள்ள மக்களின் தேசிய விடுதலை இயக்கத்திற்கு உதவி செய்வதற்கும், தேசிய இறையாண்மையைப் பாதுகாப்பதற்கும், ஜனநாயகத்தை வளர்த்து பாசிச ஆபத்தைத் தடுப்பதற்கும், உழைப்பாளி மக்களின் வாழ்க்கைத் தரங்களை முன்னேற்றுவதற்கும்,

சம்பள வெட்டில்லாமல் குறைந்த நேர வேலையைப் பெறுவதற்கும், இன்னபிற காரியங்களுக்கும்-கம்யூனிஸ்டு கட்சிகளும், சமூக ஜனநாயகக் கட்சிகளும் கூட்டு நடவடிக்கையெடுப்பது தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஜீவாதார நலன்களுக்கு அவசியமானது. லட்சக்கணக்கான சமூக ஜனநாயகவாதிகளும் சில சமூக ஜனநாயக கட்சிகளும் எற்கெனவே ஒரு வடிவத்தில் அல்லது மற்றொரு வடிவத்தில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வந்துள்ளனர். தங்களுடைய அணிகளில் உள்ள பிளவை நீக்குவதன் மூலமும் அதன் அனைத்து பிரிவுகளின் நடவடிக்கையிலும் ஒற்றுமையை ஏற்படுத்துவதின் மூலமும், பல முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம் அந்நாடுகளிலுள்ள ஆளும் வட்டாரங்களின் கொள்கைக்கு பலத்த அடி கொடுக்க முடியும் என்று துணிந்து கூறலாம். முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஆளும் வட்டாரங்கள் ஒரு புதிய யுத்தத்திற்குத் தயார் செய்வதைத் தொழிலாளி வர்க்கம் நிறுத்தச்செய்ய முடியும்; ஏகபோக முதலாளித்துவத்தின் தாக்குதலை முறியடிக்க முடியும்; அதன் அன்றாட ஜீவாதாரமான ஜனநாயகக் கோரிக்கைகளைப் பெற முடியும்.

உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளில் அபிவிருத்தி காண்பது, அவர்களின் ஜனநாயக உரிமைகளை விரிவாக்கி பாதுகாப்பது, தேசிய சுதந்திரத்தைப் பெற்று அதைப் பாதுகாப்பது, நாடுகளிடையே சமாதானததை நிலைநாட்டுவது, ஆகியவற்றிற்கான போராட்டத்திலும், அதிகாரத்தைக் கைப்பற்றி சோசலிசத்தைக் கட்டியமைப்பதற்கான போராட்டத்திலும் கூட கம்யூனிஸ்டு கட்சிகள் சமூக ஜனநாயக கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோருகிறார்கள். கம்யூனிஸ்டுகள் உன்னதமான மார்க்சிய-லெனினிய தத்துவத்தைக் கொண்டுள்ளனர். இத்தத்துவம் முரணற்றது. விஞ்ஞான ரீதியாகச் சரியென நிரூபிக்கப்பட்டது. வாழ்க்கையும் இது சரியான தென்பதற்குச் சான்றாகும். சோசலிசப் புனர்நிர்மாணம் பற்றிய சிறந்த சர்வதேச அனுபவம் கம்யூனிஸ்டுகளுக்கு உண்டு. சமூக ஜனநாயகவாதிகளுடன் விவாதங்கள் நடத்துவதற்கு கம்யூனிஸ்டுகள் தயாராக இருக்கிறார்கள். ஏனெனில், உழைப்பாளி மக்களிடையே ஆழமாக வேரூன்றியுள்ள தவறான முன் அனுமானங்களையும் பிளவையும் அகற்றும் நோக்கத்துடனும், ஒத்துழைப்பை நிலைநாட்டும் நோக்கத்துடனும் கருத்துக்களையும், கொள்கைகளையும், அனுபவத்தையும் பரிமாறிக் கொள்வற்கு இதுவே மிகச்சிறந்த வழி என்பது கம்யூனிஸ்டுகளின் உறுதியான கருத்தாகும்.

ஏகாதிபத்தியப் பிற்போக்குவாதிகள், கம்யூனிச இயக்கத்தின் மீதும் அதனுடைய சித்தாந்தத்தின் மீதும் வெறுப்பை உண்டுபண்ண முயற்சிக்கிறார்கள். முதலாளித்துவ அமைப்பைத் தூக்கியெறிந்துவிட்டு சோசலிசஅமைப்பை ஏற்படுத்துவதற்கும் அரசுகளிடையே யுத்தங்கள் அவசியம் என்று கம்யூனிஸ்டுகள் கருதுவதாகக்கூறி, இவர்கள் தொடர்ந்து மக்களைப் பயமுறுத்தி வருகின்றனர்.

இந்த அவதூறைக் கம்யூனிஸ்டு கட்சிகள் திட்டவட்டமாக நிராகரிக்கின்றன.

ஏகாதிபத்தியவாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு உலக யுத்தங்களும் சோசலிசப் புரட்சியில் முடிவடைந்தன. உலக யுத்தத்தின் மூலமே சமூகப் புரட்சிக்கு வழிகாணமுடியும் என்பது இதன் அர்த்தமல்ல; குறிப்பாக சக்திமிக்க உலக சோசலிச அமைப்பு இன்று நிலவும் போது இது கட்டாய அவசியமல்ல. அரசாங்கங்களிடையே யுத்தங்கள் நடைபெறுவதே சமூகப் புரட்சிக்கான வழியென்று மார்க்சிய--லெனினியவாதிகள் என்றுமே கருதியதில்லை.

எத்தகைய சமூக அமைப்பைத் தேர்ந்தெடுப்பது என்பது ஒவ்வொரு நாட்டு மக்களின் பிரிக்கமுடியாத உரிமையாகும். சோசலிசப் புரட்சியை இறக்குமதி செய்யவோ அல்லது வெளியிலிருந்து திணிக்கவோ முடியாது. ஒரு நாட்டின் உள்நாட்டு வளர்ச்சிப் போக்குகளின் விளைவாகவும், அங்குள்ள சமூக முரண்பாடுகள் மிகவும் கூர்மையாவதன் காரணமாகவும் சோசலிசப் புரட்சிகள் ஏற்படுகின்றன. மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தினால் வழிகாட்டப்படும் கம்யூனிஸ்ட் கட்சிகள், புரட்சியை ஏற்றுமதி செய்வதற்கு எப்பொழுதுமே எதிராக இருக்கின்றன; அதே வேளையில் ஏகாதிபத்தியவாதிகள் எதிர்ப் புரட்சியை ஏற்றுமதி செய்வதற்கெதிராகவும் கம்யூனிஸ்டு கட்சிகள் உறுதியுடன் போராடுகின்றன.

புரட்சியில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டு மக்களின் விவகாரங்களில் ஏகாதிபத்தியம் தலையிடுவதை உறுதியுடன் எதிர்ப்பதற்கும், அத்தலையீட்டைத் தடுப்பதற்கும், தங்கள் நாட்டிலுள்ள சக்திகள் அனைத்தையும் அணி சேர்த்துக் கொண்டும், உலக சோசலிச அமைப்பின் வல்லமையை நம்பி நின்றுகொண்டும் தீவிரமாகச் செயலாற்றும்படி அனைத்து நாட்டு மக்களுக்கும் அறைகூவல் விடுப்பதை கம்யூனிஸ்டு கட்சிகள் தங்களின் சர்வதேசக் கடமையாகக் கருதுகின்றன.

சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுவதற்கும் ஒரு வடிவத்தில் அல்லது மற்றொரு வடிவத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதற்கும் தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் நடத்தும் போராட்டத்திற்கு மார்க்சிய-லெனினியக் கட்சிகள் தலைமை தாங்குகின்றன. சோசலிசப் புரட்சியின் வடிவங்களும், வளர்ச்சிப் போக்கும் அந்தந்த நாட்டிலுள்ள வர்க்க சக்திகளின் குறிப்பான பலாபலத்தைப் பொறுத்தும், தொழிலாளி வர்க்கம், அதன் முன்னணிப் படை ஆகியவற்றின் அமைப்பையும், முதிர்ச்சியையும் பொறுத்தும் ஆளும் வர்க்கங்களின் எதிர்ப்பின் அளவைப் பொறுத்தும் இருக்கின்றன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எந்த வடிவத்தில் அமைந்தாலும், அது எப்பொழுதும், ஜனநாயகம் விரிவாக்கப் படுவதையும், பெயரளவிலான

முதலாளித்துவ ஜனநாயகத்திலிருந்து உண்மையான உழைக்கும் மக்களுக்கான ஜனநாயகத்துக்கு மாறிச்செல்வதையுமே குறிக்கும்.

வெவ்வேறு நாடுகள் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்குச் செல்லும் மாற்றத்தின் வடிவங்கள் குறித்து 1957 மாஸ்கோ பிரகடனத்தில் முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளைக் கம்யூனிஸ்டு கட்சிகள் மீண்டும் உறுதி செய்கின்றன.

தொழிலாளிவர்க்கமும், அதன்முன்னணிப் படையாகிய மார்க்சிய—லெனினியக் கட்சியும் சோசலிசப் புரட்சியை சமாதானப் பூர்வமான வழிகளில் அடைவதற்காகவே பாடுபடுகின்றன என்று அப்பிரகடனம் சுட்டிக்காட்டுகிறது. இது தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும், மக்கள் அனைவரின் நலன்களுக்கும், நாட்டின் தேசிய நலன்களுக்கும் உகந்ததாகும்.

ஒன்றுபட்ட தொழிலாளி வர்க்கமும், பொதுஜன முன்னணியும் ஏற்படுமானால், அல்லது வெவ்வேறு கட்சிகளுக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் இடையில் அரசியல் ஒத்துழைப்பும் நடைமுறை சாத்தியமான உடன்பாடும் ஏற்படுமானால், இன்று பல முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையில் உள்ள தொழிலாளிவர்க்கம், பெரும்பான்மையான மக்களை ஒன்றுபடுத்தவும், உள்நாட்டு யுத்தம் இல்லாமலேயே அரசாங்க அதிகாரத்தைப் பெறவும், அடிப்படை உற்பத்தி சாதனங்களை மக்களின் கைக்கு மாற்றுவதற்கும் வாய்ப்பு உள்ளது. பெரும்பான்மை மக்களைச் சார்ந்து நின்று கொண்டும், முதலாளிகளோடும் நிலப்பிரபுக்களோடும் சமரசக் கொள்கையைக் கைவிடுவதற்குத் திறனற்ற சந்தர்ப்பவாத நபர்களை உறுதியாக ஒதுக்கித்தள்ளியும், தொழிலாளிவர்க்கம் பிற்போக்காளரையும் மக்கள் விரோத சக்திகளையும் முறியடிக்க முடியும்; பாராளுமன்றத்தில் உறுதியான பெரும்பான்மையை பெறமுடியும்; முதலாளிகளின் வர்க்க நலன்களைப் பாதுகாக்கும் கருவியாக இருக்கும் பாராளுமன்றத்தை உழைக்கும் மக்களின் நலன் பேணும் கருவியாக மாற்ற முடியும்; பாராளுமன்ற முறையல்லாத வெகுஜனப் போராட்டத்தை நடத்தி, பிற்போக்கு சக்திகளின் தாக்குதலை முறியடித்து சோசலிசப் புரட்சியை சமாதானப் பூர்வமான வழிகளில் சாதிப்பதற்குத் தேவையான சூழ்நிலைமைகளை உருவாக்க முடியும். பெரும் ஏகபோக முதலாளிகள் மற்றும் பிற்போக்காளர்களுக்கு எதிராகவும், தீர்க்கமான சமூக சீர்திருத்தங்கள், சமாதானம், சோசலிசம் ஆகியவற்றிற்காகவும் தொழிலாளர்களும், விவசாயிகளும், நகர்ப்புற நடுத்தரப் பகுதியினரும் இடைவிடாது நடத்தும் விரிவான வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியின் மூலமே இவை யாவும் சாத்தியமாகும்.

மக்களுக்கு விரோதமாக சுரண்டும் வர்க்கங்கள் பலாத்காரத்தில் ஈடுபடுவார்களானால், சமாதான பூர்வமல்லாத வழிகளில் சோசலிசத்திற்குச் செல்வதற்கான சாத்தியப்பாட்டையும் மனதிற்கொள்ள வேண்டும். ஆளும் வர்க்கங்கள் ஒருபொழுதும் அதிகாரத்தைத் தாங்களாகவே துறந்துவிடமாட்டார்கள் என்று லெனினிசம் நமக்குப் போதிக்கிறது; அனுபவமும் இதை உறுதி செய்கிறது. இதைப் பொறுத்தமட்டில் வர்க்கப் போராட்டத்தின் வடிவமும், கடுமையும் தொழிலாளி வர்க்கத்தைப் பொறுத்திருப்பதைக் காட்டிலும், மிகப்பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கெதிராகப் பிற்போக்கு வட்டாரங்கள் தொடுக்கும் தாக்குதலையே பொறுத்திருக்கிறது; சோசலிசப் போராட்டத்தின் ஒரு கட்டத்திலோ அல்லது மற்றொரு கட்டத்திலோ இந்த வட்டாரங்கள் பலாத்காரத்தை உபயோகிப்பதைப் பொறுத்திருக்கிறது.

ஒவ்வொரு நாட்டிலும் ஒரு வழியில் அல்லது மற்றொரு வழியில் சோசலிசத்துக்குச் செல்வதற்கான சாத்தியப்பாடு, அந்த நாட்டின் பருண்மையான வரலாற்று சூழ்நிலைகளைப் பொறுத்திருக்கிறது.

நமது காலத்தில், கம்யூனிசம், மிக முன்னேற்றமடைந்த சித்தாந்தம் மட்டும் அல்லாமல் நடப்பிலிருக்கும் ஒரு சமூக அமைப்புமாகும்; முதலாளித்துவத்தைவிட சிறப்பானது என்று நிரூபித்துவிட்ட ஒரு சமூக அமைப்பாகும். எனவே, கம்யூனிஸ்டு கட்சிகளின் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்குச் சாதகமான சிறப்பான சூழ்நிலைமைகள் உள்ளன; கம்யூனிச எதிர்ப்பு என்ற முழக்கத்தின்கீழ் முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்திற்கு விரோதமாக நடத்திவரும் போராட்டத்தை அம்பலப்படுத்துவதற்கும், உழைக்கும் மக்களின் பெரும் பகுதியினரைக் கம்யூனிசக் கருத்துக்களுக்கு ஆதரவாகத் திரட்டுவதற்கும் சாதகமான சூழ்நிலைகள் உள்ளன.

தொழிலாளிவர்க்க இயக்கம் தோன்றியபொழுது, தொழிலாளி வர்க்கத்திற்கும் மார்க்சியத் தத்துவத்திற்கும் எதிராக முதலாளி வர்க்கம் நடத்தும் போரட்டத்தில் கம்யூனிச எதிர்ப்பு என்பதே முதலாளி வர்க்கத்தின் பிரதான சித்தாந்த ஆயுதமாக விளங்கியது. வர்க்கப் போராட்டம் தீவிர மடைந்த பொழுது குறிப்பாக உலக சோசலிச அமைப்பு ஏற்பட்ட பொழுது கம்யூனிச எதிர்ப்பு மேலும் கபடமும், துன்மார்க்கமும் நிறைந்ததாக மாறியது. முதலாளித்துவ சித்தாந்தம் மிகவும் சீரழிந்துவிட்டதாலும் அதன் ஆழமான தத்துவார்த்த நெருக்கடியினாலும் கம்யூனிச எதிர்ப்பு, மார்க்சிய தத்துவத்தைக் கோரமாகத் திரித்துக் கூற முற்படுகிறது. சோசலிச அமைப்புக்கெதிராக குரூரமான அவதூறைக் கிளப்பி விடுகிறது; கம்யூனிசத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் பொய்யான வழிகளில் சித்தரிக்கிறது; ஜனநாயக, சமாதான சக்திகளுக்கும், அமைப்புகளுக்கும் எதிராகத் தொடர்ந்து துஷ்பிரச்சாரம் செய்து வருகிறது.

மக்கள் சோசலிசத்தை அண்டவிடாமல் தடுக்க முதலாளி வர்க்கம் உபயோகப்படுத்தும் நச்சு ஆயுதமான கம்யூனிச எதிர்ப்பிற்கெதிராக தீர்க்கமான போராட்டம் நடத்தப்பட வேண்டும்; உழைப்பாளி மக்களின் நலன்களைத் தீவிரமான முறையில் பாதுகாப்பதற்கும், சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும், தொழிலாளி வர்க்கம் சோசலிச இலட்சியத்தை அடைவதற்கும் இந்தப் போராட்டம் அவசியமானதாகும். உழைக்கும் மக்களுக்கு சோசலிசக் கருத்துக்களை விளக்கிச் சொல்வதற்கும், அவர் களுக்குப் புரட்சிகர உணர்வை ஊட்டுவதற்கும், அவர்களுடைய புரட்சிகர வர்க்க உணர்வை வளர்ப்பதற்கும் மேலும் அதிகமான முயற்சிகள் தேவை. உலக சோசலிச அமைப்பு நாடுகளின் அனு பவத்தை எடுத்துக் கூறியும், சோசலிசம் எத்தகைய நன்மைகளைச் செய்கிறது என்பதை ஒவ்வொரு நாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், இதர மக்கட்பகுதியினருக்கும் பருண்மையான உதாரணங்களுடன் விளக்கிக் கூறியும், சோசலிசத்தின் மேம்பட்ட தன்மையை உழைக்கும் மக்களுக்கு எடுத்துக் காட்டுவது அவசியமாகும்.

கம்யூனிசம் மக்களுக்கு யுத்த பயத்தினின்றும் விடுதலையை உத்தர வாதம் செய்கிறது; நிரந்தர சமாதானத்தை அது ஏற்படுத்துகிறது; ஏகாதிபத்திய ஒடுக்கு முறையிலிருந்தும் சுரண்டலிலிருந்தும், வேலை யில்லாத் திண்டாட்டம், வறுமை ஆகியவற்றிலிருந்தும் மக்களுக்கு விடு -தலையளிக்கிறது; கம்யூனிசம் பொதுவான சுபிட்சத்திற்கும், உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கும் இட்டுச் செல்கிறது;பொருளாதார நெருக்கடிகளி லிருந்து விடுதலையளிக்கிறது; சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான நலனுக்காக உற்பத்தி சக்திகளின் துரித வளர்ச்சிக்கு வழி செய் கிறது; கம்யூனிசம் செல்வந்தர்களின் கொடுமையிலிருந்து மனிதனை விடுவிக்கிறது; மனிதன் சகல துறைகளிலும் ஆன்மீக வளர்ச்சியடை வதற்கும் வழிவகுக்கிறது; மனிதனின் திறமை முழுமையான வளர்ச்சி யடைவதற்கும் சமுதாயத்தில் தங்குதடையற்ற விஞ்ஞான, கலாச்சார முன்னேற்றம் ஏற்படுவதற்கும் அது வழி காட்டுகிறது. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சுரண்டல் பேர்வழிகளைத் தவிர இதர எல்லா மக்கட் பகுதியினரும் இந்த புதிய சமூக அமைப்பின் வெற்றியின் மூலம் நன்மை அடைகிறார்கள். இந்த உண்மை முதலாளித்துவ நாடு களிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு உணர்த்தப்பட வேண்டும்.

உலக கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையும் அய்க்கியமும்

உலக கம்யூனிச இயக்கம் நம் காலத்தின் மிகச் செல்வாக்கு பெற்ற அரசியல் சக்தியாகிவிட்டது. சமூக முன்னேற்றத்தின் ஒரு மிக முக்கிய மான அம்சமாகிவிட்டது. ஏகாதிபத்தியப் பிற்போக்காளரை எதிர்த்துத் தீவிரமாகப் போராடும் பொழுதும், தொழிலாளி வர்க்கத்தின்

நலன்களுக்காகவும், அனைத்து உழைக்கும் மக்களின் நலன்களுக்காகவும், சமாதானம், தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சோசலிசம் ஆகியவற்றிற்காகவும் போராடும் பொழுதும் கம்யூனிச இயக்கம் உறுதியாக முன்னேறிவருகிறது; புடம்போட்டு எடுக்கப்பட்டு வலுவடைந்து வருகிறது.

இப்போது உலகத்தின் 87 நாடுகளில் கம்யூனிஸ்டு கட்சிகள் இயங்கி வருகின்றன; அதன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 3 கோடியே 60 லட்சத்திற்கு அதிகமாகும். இது மார்க்சிய-லெனினியத்திற்குக் குறிப்பிடத்தக்க ஒரு வெற்றியாகும்; தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் சாதனையாகும். காலனிக் கொடுங்கோலாட்சியை உதறித்தள்ளி, சுதந்திரமான வளர்ச்சிப் பாதையை மேற்கொண்டுள்ள நாடுகளில் ஒத்த கருத்துள்ள மார்க்சியவாதிகள் ஒன்றுசேர்ந்து வருகின்றனர். ஏகாதிபத்தியத்தை எதிர்த்த பொதுப் போராட்டத்தில் விடுதலை பெற்றுள்ள நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கும் தங்கள் நாட்டின் தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையில் உள்ள நட்புறவையும், ஒருமைப்பாட்டையும் வளர்த்துக்கொள்வது தங்களின் சர்வதேசக் கடமை என கம்யூனிஸ்டு கட்சிகள் கருதுகின்றன.

கம்யூனிஸ்டு கட்சிகளின் வளர்ச்சியும், அவற்றின் அமைப்பு ரீதியான உறுதிப்பாடும், திரிபுகளை எதிர்ப்பதிலும், தனி நபர் வழிபாட்டின் தீய விளைவுகளை நீக்குவதிலும் பல நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகள் பெற்ற வெற்றிகளும், உலகக் கம்யூனிச இயக்கத்தின் மேலான செல்வாக்கும், கம்யூனிஸ்டுக் கட்சிகளை எதிர்நோக்கியுள்ள கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி உள்ளன.

ஜனநாயக மத்தியத்துவம் என்ற கோட்பாட்டிற்குட்பட்டு, கட்சி வாழ்க்கையில் லெனினிய விதிகளைக் கண்டிப்பான முறையில் கடைப்பிடிப்பதும், கண்ணின் மணிபோலக் கட்சியின் ஒற்றுமையைப் பேணுவதும், கட்சி ஜனநாயகம், கூட்டுத்தலைமை என்ற கோட்பாட்டில் கண்டிப்பாக இருப்பதும், கட்சி அங்கத்தினர்களுடனும் விரிவான உழைப்பாளி மக்கட் பகுதியினருடனும், தங்கள் உறவைப் பலப்படுத்திக் கொள்ள சளையாது பாடுபடுவதும், கம்யூனிஸ்டுகளின் ஆக்கபூர்வமான சிந்தனையையும், முன்முயற்சியையும் முடக்குகின்ற தனிநபர் வழிபாட்டிற்கு இடங்கொடாதிருப்பதும், கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கையைத் தீவிரமாக அதிகப்படுத்-துவதும், கட்சி அணிகளில் விமர்சனம்-சுயவிமர்சனம் நடப்பதை ஊக்குவிப்பதும், தங்கள் நடவடிக்கைகளின் மீற முடியாத விதியென மார்க்சிய-லெனினியக் கட்சிகள் கருதுகின்றன. லெனினியத்தின் அமைப்புக் கோட்பாடுகளுக்கேற்ற வகையில் கூட்டுத்தலைமை, கட்சி வாழ்க்கையில் முக்கிய கட்சி அமைப்புகளின் பாத்திரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.

கம்யூனிஸ்டு கட்சிகளை மார்க்சிய-லெனினியப் பாதையிலிருந்து தடம்புரளச் செய்யமுயன்ற கட்சி அணிகளில் இருந்த திரிபுவாதிகளை கம்யூனிஸ்டுக் கட்சிகள் சித்தாந்த ரீதியாக முறியடித்து விட்டன. திரிபு வாதத்திற்கும், வலதுசாரி சந்தர்ப்பவாதத்திற்கும் எதிரான போராட்டத்தில் ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும், மற்றும் சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கம் முழுவதுமே சித்தாந்த ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் மேலும் வலுவடைந்துள்ளன.

கம்யூனிஸ்டு கட்சிகள் அனைத்தும் யூகோஸ்லாவிய பாணியிலான சர்வதேச சந்தர்ப்பவாதத்தை ஏகமனதாகக் கண்டித்துள்ளன. அது நவீன திரிபுவாதக் கோட்பாடுகளின் ஒருங்கிணைக்கப்பட்ட ரகம் ஆகும். மார்க்சிய-லெனினியம் காலாவதியாகிவிட்டது என்று கூறி மார்க்சிய-லெனினியத்திற்குத் துரோகம் செய்துவிட்ட யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டு கழகத்தின் தலைவர்கள், 1957 மாஸ்கோ பிரகடனத்துக்கு எதிராக தங்களின் லெனினியத்திற்கு விரோதமான திரிபுவாதத் திட்டத்தை வைத்தனர். சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் முழுமைக்கும் விரோதமாக யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டு கழகம் முடுக்கி விடப்பட்டுள்ளது. அவர்கள் சோசலிச முகாமிலிருந்து தங்கள் நாட்டைத் துண்டித்துக் கொண்டு அமெரிக்க ''உதவி''யின் மீதும், இதர ஏகாதிபத்திய நாடுகளின் ''உதவி''யின் மீதும் அதைச் சார்ந்திருக்கச் செய்தனர். இதன் மூலம் யூகோஸ்லாவிய மக்கள் வீரஞ்செறிந்த போராட்டத்தின் மூலம் பெற்ற புரட்சிகர நன்மைகளை இழந்துவிடக் கூடிய ஆபத்தையும் உண்டு பண்ணியுள்ளனர். யூகோஸ்லாவிய திரிபுவாதிகள், சோசலிச முகாமிற்கும், உலக கம்யூனிஸ்டு இயக்கத்திற்கும் எதிராக நாசவேலைகள் செய்து வருகின்றனர். கூட்டுகளுக்கு அப்பால் இருப்பதாகக் கூறிக்கொண்டு, அனைத்து சமாதான சக்திகளின் ஒற்றுமையையும், சமாதானம் விரும்பும் நாடுகளின் ஒற்றுமையையும் பாதிக்கத்தக்க நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். யூகோஸ்லாவிய திரிபுவாதத் தலைவர்களை மேலும் அம்பலப்படுத்துவதும், கம்யூனிஸ்டு இயக்கத்தையும், தொழிலாளி வர்க்க இயக்கத்தையும், யூகோஸ்லாவிய திரிபுவாதிகளின், லெனினியத்திற்கு விரோதமான கருத்துக்களிலிருந்து பாதுகாப்பதற்காக மேலும் தீவிரமான போராட்டத்தை நடத்துவதும், மார்க்சிய - லெனினியக் கட்சிகளின் பிரதானக் கடமையாக இருக்கின்றன.

தொழிலாளிவர்க்கத்தின் நடைமுறைப் போராட்டங்களும், சமூக வளர்ச்சியின் ஒட்டுமொத்தமான போக்கும் மார்க்சிய-லெனினியத்தின் ஜீவனுள்ள தன்மையையும், எல்லாவற்றையும் வெற்றி கொள்ளும் சக்தியையும் சிறப்பான முறையில் எடுத்துக்காட்டும் புதிய நிரூபணங்களாகும். இவை நவீனதிரிபுவாதக் ''கோட்பாடுகளை'' முற்றிலும் நிராகரிக்கின்றன.

1957 மாஸ்கோ பிரகடனத்தில் குறிப்பிட்டது போன்று, பிரதான ஆபத்தாக விளங்கும் திரிபுவாதத்தை எதிர்த்தும், வறட்டுச் சூத்திரவாதம் குறுங்குழுவாதம் (Sectarianism) ஆகியவற்றை எதிர்த்தும் இரண்டு முனைகளிலும் தொடர்ந்து உறுதியாகப் போராடுவது கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளி வர்க்க இயக்கங்கள் மேலும் வளர்ச்சியடைவதற்கு அவசியமாகும்.

வலதுசாரி சந்தர்ப்பவாதமாகிய திரிபுவாதம், கோட்பாட்டிலும் நடைமுறையிலும் முதலாளித்துவ சித்தாந்தத்தையே பிரதிபலிக்கிறது. மார்க்சிய-லெனினியத்தைத் திரித்து அதன் புரட்சிகர சாரத்தை அகற்றி விடுகிறது. அதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர எண்ணத்தைச் செயலற்றதாக்குகிறது.

தொழிலாளர்களையும், சகல உழைக்கும் மக்களையும், அவர்கள் ஏகாதிபத்தியவாதிகள், சுரண்டுபவர்கள் ஆகியோரின் அடக்குமுறையை எதிர்த்து நடத்தும் போராட்டத்திலும், சமாதானம், ஜனநாயகம், தேசியவிடுதலை, சோசலிசத்தின் வெற்றி ஆகியவற்றிற்காக நடத்தும் போராட்டத்திலும் நிராயுதபாணியாக்குகிறது; அவர்களை நிலைகுலையச் செய்கிறது.

வறட்டு சூத்திரவாதமும், குறுங்குழுவாதமும் (Sectarianism) சளையாது எதிர்த்துப் போரிடப்படாவிட்டால் கோட்பாட்டு ரீதியிலும் நடைமுறையிலும் தனிப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சில வளர்ச்சிக் கட்டங்களில் பிரதான ஆபத்தாக மாறக்கூடும்; இவை (வறட்டுச்சூத்திர வாதமும் குறுங்குழுவாதமும்) மார்க்சிய-லெனினியத்தை விஞ்ஞான பூர்வமான ஆய்வின் மூலம் வளர்ப்பதிலும் பிரத்தியேக சூழ்நிலைமைகளுக்கேற்ப ஆக்கபூர்வமான முறையில் அதைப் பிரயோகிப்பதிலும் புரட்சிகரக் கட்சிகளுக்குள்ள திறமையை அகற்றி விடுகின்றன; பரந்துபட்ட உழைக்கும் மக்கட் பகுதியினரிடமிருந்து கம்யூனிஸ்டுகளை தனிமைப்படுத்துகின்றன; செயலற்று, சம்பவங்களை எதிர்பார்த்து நிற்கும் நிலைக்கும் அல்லது புரட்சிகரப் போராட்டத்தில் இடதுசாரி, துணிச்சல்வாதச் செயல்களுக்கும் கம்யூனிஸ்டுகளை இட்டுச் செல்கின்றன; மாறிவரும் நிலைமையையும், புதிய அனுபவத்தையும் தக்க சமயத்தில் சரியாகக் கணிப்பதிலிருந்தும், ஏகாதிபத்தியம், பிற்போக்கு, யுத்த அபாயம் ஆகியவற்றிற்கு எதிராக நடைபெறும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம், இதர சகல ஜனநாயக சக்திகள் ஆகியோரின் வெற்றிக்கு எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்துவதிலிருந்தும் கம்யூனிஸ்டுக் கட்சிகளை தடுக்கின்றன; இதன் மூலம் மக்கள் தங்கள் நியாயமான போராட்டத்தில் வெற்றி காண்பதற்கு குறுக்கே நிற்கின்றன.

கம்யூனிசத்திற்கெதிராகப் போரிடுவதற்குத் தங்கள் சக்திகளை எல்லாம் ஏகாதிபத்தியப் பிற்போக்காளர்கள் சேர்த்துக் கொண்டுவரும்

தருணத்தில், உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தை உத்வேகத்துடன் பலப் படுத்துவது மிகவும் அவசியமாகும். ஒற்றுமையும், உறுதிப்பாடும் நமது இயக்கத்தின் பலத்தை இரட்டிப்பாக்குகின்றன; இவை கம்யூனிசத்தின் மாபெரும் இலட்சியம் வெற்றியுடன் முன்னேறுவதற்கும், எதிரிகளின் தாக்குதல்கள் அனைத்தும் உறுதியான முறையில் முறியடிக்கப்படுவதற் கும் நம்பிக்கையான உத்தரவாதமாகத் திகழுகின்றன.

உலகம் முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் மகத்தான மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் மூலமும், அதன் வெற்றிக்கான கூட்டுப் போராட்டத்தின் மூலமும் ஒன்றுபட்டிருக்கிறார்கள். ஏகாதிபத்தியத்திற் கெதிரான போராட்டத்திலும், சமாதானம், ஜனநாயகம், சோசலிசம் ஆகியவற்றுக்கான போராட்டத்திலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குள்ள பொதுவான கடமைகளின் மதிப்பீடுகள் குறித்து சகோதரக் கட்சிகளின் கூட்டங்களில் கூட்டாக எடுக்கப்படும் முடிவுகளின்படி ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும் நடப்பது கம்யூனிஸ்டு இயக்கத்தின் நலன்களுக்கு அவசியமானது.

தொழிலாளி வர்க்க இலட்சியத்திற்கான போராட்டத்தின் நலன்களை முன்னிட்டு ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும், அனைத்து நாடுகளிலு-முள்ள கம்யூனிஸ்டுகளும் தங்கள் எண்ணத்திலும், செயலிலும் மிக நெருங்கிய ஒற்றுமை கொள்ள வேண்டியது அவசியமாகும். உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மகத்தான ஒற்றுமைக்காகத் தொடர்ந்து பாடுபடுவது ஒவ்வொரு மார்க்சிய-லெனினியக் கட்சியின் உன்னதமான சர்வதேசக் கடமையாகும்.

மார்க்சிய - லெனினியக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய கோட்பாடுகளின் அடிப்படையிலும், உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையை உறுதியாகப் பாதுகாப் பதும், இந்த ஒற்றுமையைச் சீர்குலைக்கக்கூடிய எந்த செயல்களையும் தடுப்பதும்-தேசிய சுதந்திரம், சமாதானம் ஆகியவற்றிற்காகவும் சோசலிசப் புரட்சிக் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற் காகவும், சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் கட்டியமைப்பதற்காகவும் நடைபெறும் போராட்டத்தின் வெற்றிக்கு அவசியமான நிபந்தனை யாகும். இக்கோட்பாடுகளை மீறுவது கம்யூனிச சக்திகளைக் கூறுபோடுவதாகும்.

மார்க்சிய-லெனினியக் கட்சிகள் அனைத்தும் சுயேச்சையானவை; அவற்றிற்குச் சம உரிமைகள் உண்டு. மார்க்சிய-லெனினியக் கொள்கை களுக்கேற்ப அந்தந்த நாடுகளிலுள்ள குறிப்பான சூழ்நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் தங்கள் கொள்கை களை உருவாக்குகின்றன; ஒன்றுக்கொன்று அவை ஆதரவாய் இருக் கின்றன. எல்லா மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் சர்வதேச ஒருமைப்

பாடு இல்லாமல் எந்த ஒரு நாட்டிலும் தொழிலாளி வர்க்க இலட்சியம் வெற்றி பெறுவதென்பது நினைத்துப் பார்க்க முடியாததாகும். ஒவ்வொரு மார்க்சிய-லெனினிய கட்சியும் தனது நாட்டின் தொழிலாளி வர்க்கத்திற்கும், உழைக்கும் மக்களுக்கும், சர்வதேச தொழிலாளி வர்க்கத்திற்கும், கம்யூனிஸ்டு இயக்கம் முழுமைக்கும் பொறுப்பானதாகும்.

அவசரப் பிரச்சினைகள் பற்றி விவாதிப்பதற்கும், அனுபவத்தைப் பரிமாறிக் கொள்வதற்கும், ஒருவர் மற்றொருவருடைய கருத்துக்களையும், நிலைகளையும் தெரிந்துகொள்வதற்கும், ஒருவரையொருவர் கலந்து ஆலோசிப்பதன் மூலம் பொதுவான அபிப்பிராயங்களை வகுத்துக் கொள்வதற்கும், பொது இலட்சியங்களுக்கான போராட்டத்தில் கூட்டு நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வதற்கும், தேவைப்படும்பொழுது கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் கூட்டங்களை நடத்துகின்றன.

ஒரு கட்சி, மற்றொரு சகோதரக் கட்சியின் நடவடிக்கைகள் பற்றிய பிரச்சினையில் தெளிவு காண விரும்பினால், அக்கட்சியின் தலைமை, சம்பந்தப்பட்ட கட்சித் தலைமையை அணுகுகிறது; அவசியப்பட்டால் அவை கூட்டங்கள் நடத்துகின்றன; கலந்தாலோசிக்கின்றன.

சமீப ஆண்டுகளில் நடைபெற்ற கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டங்களின்-குறிப்பாக 1957 நவம்பரில் நடைபெற்ற கூட்டம், தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கூட்டம் ஆகியவற்றின்-முடிவுகள், இன்றைய நிலைமைகளில், இத்தகைய கூட்டங்கள் கருத்துக்களையும், அனுபவத்தையும் பரிமாறிக் கொள்வதற்கும், கூட்டு முயற்சிகள் மூலம் மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டைச்செழுமைப்படுத்துவதற்கும், பொது இலட்சியங்களுக்கான போராட்டத்தில் பொதுவான கொள்கையை வகுத்துக் கொள்வதற்கும் பயனுள்ள முறையாகும் என்பதை எடுத்துக்காட்டியுள்ளன.

சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் மிக அதிக அனுபவம் பெற்றதும், புடம்போட்டெடுக்கப்பட்டதுமான ரசியக் கம்யூனிஸ்டுக் கட்சி உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் யாவராலும் அங்கீகரிக்கப்படும் முன்னணிப்படையாக இருந்து வருகிறது, இருக்கிறது என்பதை அனைத்து கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளும் ஏகமனதாகப் பிரகடனம் செய்கின்றன.

சோசலிசக் கட்டுமானத்திலும், கம்யூனிசத்தை முழுமையாகப் படைப்பதிலும், தொழிலாளிவர்க்க வெற்றிக்கான போராட்டத்திலும் ரசியக் கம்யூனிஸ்டுக் கட்சி பெற்றுள்ள அனுபவம் உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் முழுவதிற்கும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ரசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்னுதாரணமும், அதன் சகோதர ஒருமைப்பாடும் எல்லா கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும் சமாதானம், சோசலிசம்

ஆகியவற்றிற்கானப் போராட்டத்தின் தூண்டுகோலாக விளங்குகின்றன; பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தின் புரட்சிகரக் கொள்கைகள் நடைமுறையில் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றன என்பதை இவை சித்தரிக்கின்றன. ரசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 20-வது மாநாட்டு முடிவுகள் ரசியக் கம்யூனிஸ்டு கட்சிக்கும் ரசியாவின் கம்யூனிச கட்டுமானத்திற்கும் மட்டும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல; உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் இவை ஒரு புதிய கட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளன; மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சிக்கு இந்த முடிவுகள் உதவியிருக்கின்றன.

கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் அனைத்தும் மகத்தான மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டின் வளர்ச்சிக்குப் பங்காற்றுகின்றன. அனைத்து சகோதர மார்க்சிய-லெனினியக் கட்சிகளுக்கிடையிலும் பரஸ்பர உதவியும், ஆதரவும் இருப்பது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் புரட்சிகரக் கொள்கைகளின் நடைமுறையாகும்.

சித்தாந்த பிரச்சினைகள் இன்று சிறப்பான முக்கியத்துவம் வகிக்கின்றன. மக்களை முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு ஆன்மீக ரீதியில் அடிமையாக வைத்துக் கொள்வதற்கு சுரண்டும் வர்க்கம் அவர்கள் மீது முன்பு என்றுமில்லாதவாறு சித்தாந்த ரீதியான நிர்ப்பந்தம் கொண்டு வருவதன் மூலம் சோசலிசத்தின் சாதனைகளை எதிர்க்க முயற்சிக்கிறது. சித்தாந்த அரங்கில் தீர்மானமான தாக்குதலை தொடுப்பதும், சீர்திருத்த வாதத்தின் தீங்குபயக்கத்தக்க செல்வாக்கு உட்பட, முதலாளித்துவ சித்தாந்தத்தின் சகல வகையான தளைகளிலிருந்தும் மக்களை விடுவிப்பதற்குப் பாடுபடுவதும் சமூக முன்னேற்றம் காண்பதற்கான முற்போக்கு கருத்துக்களையும், ஜனநாயக சுதந்திர கருத்துக்களையும், விஞ்ஞான சோசலிசக் கருத்துக்களையும் மக்கள் மத்தியில் பரப்புவதும் தங்கள் கடமையெனக் கம்யூனிஸ்டுகள் கருதுகின்றனர்.

சோசலிச அமைப்பு நிறுவப்பட்டதற்கு வெகு காலத்திற்குப் பின்னும் கூட முதலாளித்துவக் கருத்துக்களின் மிச்சசொச்சங்கள் மக்கள் மனதில் நிலைத்திருக்கின்றன என்பதை வரலாற்று அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. மக்களுக்கு கம்யூனிசக் கல்வி புகட்டுவதற்கும், கட்சி ஊழியர்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்கும் மேம்பட்ட மார்க்சிய-லெனினியப் பயிற்சி வழங்குவதற்கும் கட்சி விரிவான வேலை செய்யவேண்டும் என்பதை இது உணர்த்துகிறது.

மார்க்சிய-லெனினியம் முழுமையான மகத்தானதொரு புரட்சிகர சித்தாந்தம் ஆகும்; உலக முழுவதிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்திற்கும், உழைக்கும் மக்களுக்கும் வழிகாட்டும் ஒளியாகும்; அவர்களுடைய சமாதானம் சுதந்திரம் நல்வாழ்வு ஆகியவற்றிற்கான போராட்டத்திலும்,

மிகவும் நியாயப் பூர்வமான சமுதாயமாகிய கம்யூனிச சமுதாயத்தை நிறுவுவதற்கான போராட்டத்திலும், இந்த மாபெரும் போராட்டங்களின் எல்லாக்கட்டங்களிலும் மார்க்சிய-லெனினியம் வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்குகிறது. மார்க்சிய-லெனினியம் வாழ்க்கையுடன் கொண்டுள்ள பிரிக்கமுடியாத தொடர்பிலும், யதார்த்தத்தைப் பற்றிய விரிவான பரிசீலனையின் மூலம் அது தன்னைத் தொடர்ச்சியாக வளப்படுத்திக் கொள்வதிலும் அதன் ஆக்கப்பூர்வமான புரட்சிகர சக்தி அடங்கியிருக்கிறது. மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில் எல்லா சோசலிச நாடுகளும், சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கமும், சர்வதேச தொழிலாளி வர்க்கமும், விடுதலை இயக்கங்களும் வரலாற்றுப் பூர்வமான மாபெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளன. மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில் மட்டும்தான் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளை எதிர்நோக்கியுள்ள எல்லாக் கடமைகளும் தீர்க்கமான முறையில் நிறைவேற்றப்பட முடியும்.

தொழிலாளி வர்க்கம், ஜனநாயக சக்திகள், முற்போக்கு சக்திகள் ஆகிய அனைத்தும் ஒன்றுபடுத்தப்படுவதற்கும், மனிதகுலம் முழுவதற்கும் ஒரு மகிழ்ச்சியான எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்கும், சமாதான சோசலிச இலட்சியம் வெற்றி காண்பதற்கும், உலகக் கம்யூனிஸ்ட் இயக்கமும், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கமும் நடத்திவரும் மகத்தான போராட்டத்தின் புதிய வெற்றிகளுக்கும் உத்தரவாதமாக மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையிலும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையிலும் கம்யூனிஸ்டு கட்சிகள் மேலும் வலுப்படுத்தப்படுவது அவசியம் என்று இக்கூட்டம் கருதுகிறது. ●

ரசிய - சீனக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மத்திய கமிட்டிகளுக்கிடையிலான கடிதப் பரிமாற்றம்

ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடிதம்

ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு எழுதிய கடிதம் 21, பிப்ரவரி - 1963

அன்புள்ள தோழர்களே,

ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, நமது பொது இலட்சியத்தின் உயர்ந்தபட்ச நலன்களால் உந்தப்பட்டு மார்க்சிய-லெனினியக் கொள்கைகள், பாட்டாளி வர்க்க சர்வதேசியம், மாஸ்கோ கூட்டங்களது அறிக்கை மற்றும் பிரகடனம் ஆகியவற்றிற்கேற்ப உலக கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைப் பலப்படுத்தக்கூடிய கூட்டு முயற்சிகளின் அவசியத்தைப் பற்றிய எங்கள் கருத்துக்களை தெரிவிக்கும் பொருட்டே இக் கடிதத்தை உங்களுக்கு எழுத முடிவு செய்தது.

தற்போதைய சூழ்நிலைமைகளில் நமது அணிகளின் ஒற்றுமைக்காகவும், அனைத்து சோசலிச நாடுகளின் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்காகவும் போராடுவதைவிட வேறு முக்கியமான கடமை எதுவும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளுக்கு இருக்க முடியாது என்பதை ஆழமாக உணர்ந்து, உங்களுக்கு இக் கடிதத்தை எழுதுகிறோம்.

சமாதானம், சோசலிசம் என்ற உயர்ந்த இலட்சியங்களை நேசிக்கும் எவரும் அண்மைக் காலத்தில் கம்யூனிச இயக்கத்தில் தோன்றியுள்ள நிலைமைகள் பற்றி ஆழ்ந்த கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

தொடர்ந்து தீவிரமடைந்து வரும் பகிரங்கமான வாதப்பிரதிவாதங்கள் சகோதரக் கட்சிகளின் ஒற்றுமையைப் பாதித்து, நமது பொது நலன்களுக்கு கடுமையான சேதங்களை விளைவித்துக் கொண்டிருக்கின்றன. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அணிகளுக்குள் ஏற்பட்டுள்ள இந்த பூசல்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வெற்றிகரமான போராட்டத்திற்கு தடையாக உள்ளன. சர்வதேச அரங்கில் சோசலிச நாடுகளின் முயற்சிகளை பலவீனப்படுத்துகின்றன; சகோதரக் கட்சிகளின்-குறிப்பாக சிக்கலான அரசியல் சூழ்நிலை தோன்றியுள்ள முதலாளித்துவ நாடுகளில் உள்ள சகோதரக் கட்சிகளின் - நடவடிக்கைகளை மோசமாக பாதிக்கின்றன.

சோசலிசத்தின் எதிரிகள், கம்யூனிச இயக்கத்துக்குள் எழுந்துள்ள வேறுபாடுகளை, சோசலிச நாடுகளைப் பிளவுபடுத்தவும், தேசிய விடுதலை இயக்கத்தை பிளவுபடுத்தவும், தங்களது சொந்த நிலைமைகளை பலப்படுத்திக் கொள்ளவும் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயன்று வருகின்றனர்.

உலகில் இன்றுள்ள சக்திகளின் புதிய பலாபல நிலையில், நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ள சோசலிச சமூகத்தை இராணுவ ரீதியில் வெல்லக்கூடிய நிலையில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்கள் இல்லை. எனவே அவர்கள் நமது ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சியில் தங்கள் முக்கிய கவனத்தை செலுத்துகிறார்கள்.

ஆகவே, நமது பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் நமக்குள் ஒற்றுமை இல்லாவிட்டால், ஏகாதிபத்தியத்திற்கெதிராக நாம் தனித்தனியாகச் செயல்பட்டால் அது நமது முயற்சிகளை பலவீனப்படுத்தி சோசலிசத்தின் எதிரிகளின் நிலையைப் பலப்படுத்திவிடும்.

கம்யூனிச இயக்கத்தைக் கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளாக்கி விடக்கூடிய நிகழ்ச்சிகளை வளரவிடக்கூடாது. தற்போதைய அசாதாரண நிலையை ஒழித்துக்கட்டி, கம்யூனிச இயக்கத்தின் அணிகளிடையே ஒற்றுமையைச் சாதிப்பதற்குத் தேவையான எல்லாவற்றையும் செய்தாக வேண்டியது மார்க்சிய - லெனினியக் கட்சிகளது-குறிப்பாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற மிகப் பெரிய கட்சிகளது நேரடிக் கடமையாகும்.

கம்யூனிச இயக்கம் தற்போது எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தற்காலிகமானவை; அவற்றை நிச்சயமாக வெற்றி கண்டுவிட முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். நமது ஒற்றுமையும், இணக்கத்தையும் பலப்படுத்துவதற்குத் தேவையான எல்லாவற்றையும் நாம் பெற்றிருக்கிறோம். தற்போதைய சூழலை, உலக சோசலிச இயக்கத்தின் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் பற்றிய வரலாற்று ரீதியான

கண்ணோட்டத்திலிருந்து மதிப்பிடும் போது, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அனைத்து மார்க்சிய-லெனினியக் கட்சிகள் ஆகியவற்றை ஒன்றுபடுத்தக் கூடிய பொதுவான பிரதான அம்சங்களே தற்போது நிலவும் வேறுபாடுகளை விட உயர் முக்கியத் துவம் வாய்ந்தவையாகும்.

நாம் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலன்களின் ஒற்றுமை, உலகெங்குமுள்ள உழைக்கும் மக்களின் ஒற்றுமை, மாபெரும் மார்க்சிய -லெனினிய போதனைகள் ஆகியவற்றால் பிணைக்கப்பட்டிருக்கிறோம். நமது வேறுபாடுகள் எவ்வளவு தீவிரமானவையாக இருந்த போதிலும், முதலாளித்துவ சக்திகளுக்கு எதிரான சோசலிச சக்திகளின் மாபெரும் வரலாற்று சிறப்புமிக்க போராட்டத்தில் நாங்கள் உங்களுடன் ஒரே பாசறையில்தான் தோள் சேர்த்து நிற்கிறோம் என்பதை யாரும் மறந்து விட முடியாது.

தற்போதைய சிக்கலான நிலையை முழுமையாக உணர்ந்துள்ள அதே சமயத்தில், தற்போது நிலவும் வேறுபாடுகள் மிகைப்படுத்தப் படவோ, அவற்றுக்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப் படவோ கூடாது என்று நாங்கள் கருதுகிறோம். கம்யூனிச இயக்கத்தில் நடந்து கொண்டிருக்கும் விவாதத்தை ஆய்ந்து பார்த்தால் இத்தகைய விவாதங்களின் போக்கில் தோன்றுகின்ற வேறுபாடுகள் பல சமயங்களில் செயற்கையாக மிகைப்படுத்தப்பட்டும் தீவிரப்படுத்தப் பட்டும் இருப்பதோடு, பிரச்சினைக்குள்ளான விசயங்களுக்கு அதிக அழுத்தம் தரப்படுவதும் தெரியவரும்.

சில சமயங்களில், இத்தகைய விவாதங்களின் கடுமை நமது ஒற்றுமைக்கு அடிப்படையாக இருக்கும் முக்கியமான அம்சங்களை மறைத்து விடுகிறது; பிரச்சினைகளின் சாராம்சத்தை உணர்ச்சிகளுக்கு ஆட்படாமல் அமைதியாக மதிப்பிடுவதற்கும் தடையாகிவிடுகிறது.

மாஸ்கோ கூட்டங்களில், கூட்டாக நிறைவேற்றப்பட்ட அறிக்கை மற்றும் பிரகடனம் பற்றிய ஆவணங்கள் மார்க்சிய-லெனினிய கட்சி களிடம் உள்ளன; அந்த ஆவணங்களுக்கு விசுவாசமாக இருக்க வேண்டு மென்று இக்கட்சிகள் அனைத்தும் வலியுறுத்துகின்றன.

உலக கம்யூனிச இயக்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட பொது வழியை உறுதியாகப் பற்றி நிற்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி, உலகெங்கிலும் சோசலிசம் மற்றும் கம்யூனிசம் ஆகியவற்றின் உயர்ந்த இலட்சியங்கள் வெற்றியடைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தீவிரமான போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

சமாதானத்தையும் மக்களின் பாதுகாப்பையும் பலப்படுத்தவும், ஒரு புதிய உலக யுத்தத்தை தடுத்து நிறுத்தவும் நடக்கின்ற போராட்டத்தில் எங்கள் கட்சி எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும், ரசிய அரசாங்கமும் அரசியல், பொருளாதாரம் மற்றும் ஆயுத உதவி ஆகிய எல்லா வழிகளிலும் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரித்து வருகின்றன. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கு விசுவாசத்துடன் இருக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற போர்க்குணமிக்க முழக்கத்தை எப்போதும் பின்பற்றி வருகிறது. உலக சோசலிச சமூகத்தை உறுதிப்படுத்தவும், வரலாற்று வளர்ச்சிப்போக்கு முழுவதிலும் அதன் செல்வாக்கைப் பலப்படுத்தவும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பணியாற்றி வருகிறது. ரசியாவில் கம்யூனிச கட்டுமானத்தின் வெற்றிகள் உலக சோசலிசத்தைப் பலப்படுத்தவும், அதன் செல்வாக்கையும் ஈர்ப்பு சக்தியையும் உயர்த்தவும் எங்கள் மக்கள் செலுத்திய பங்களிப்பாகும்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தன் பங்கிற்கு, மாஸ்கோ கூட்டங்களது அறிக்கை மற்றும் பிரகடனத்தின் நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கிறது என்றும், அதில் காணப்படும் கருத்துகள் மற்றும் முடிவுகள் ஆகியவற்றை பின்பற்றுவதில் உறுதியாக நிற்கிறது என்றும் தனது முக்கிய நோக்கம் சோசலிசம், கம்யூனிசம் ஆகியவற்றின் உலகு தழுவிய வெற்றிக்காக ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவது தான் என்றும் தொடர்ந்து கூறிவந்துள்ளது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி வேறுபட்ட சமுதாய அமைப்புக்களைக் கொண்ட அரசுகளுடன் சமாதான சகவாழ்வு கொள்கையைப் பின்பற்றுவதாக வலியுறுத்துகிறது; ஒரு புதிய உலக யுத்தத்தைத் தடுக்கும் சாத்தியக் கூறுகள் பற்றிய அறிக்கையின் முடிவை சரியென ஏற்றுக் கொள்கிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடே கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் சோசலிச நாடுகளின் பரஸ்பர உறவுகளுக்கு வழிகாட்டும் முதன்மையான கோட்பாடாக இருக்கிறது என்பதை அங்கீகரிக்கிறது; மேலும் 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற முழக்கத்தின் மீதான தனது விசுவாசத்தையும் உறுதிப்படுத்துகிறது.

இத்தகைய பிரச்சினைக்குரிய விசயங்களில் ஒத்த நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது, தோன்றியுள்ள நெருக்கடிகளை வெல்வதற்கும் இணக்கத்தை அதிகரிப்பதற்கும் நல்ல அடிப்படையாகும். மாஸ்கோ கூட்டங்களின் ஆவணங்களை உறுதியாகப் பின்பற்றும் பட்சத்தில் தற்போதைய வேறுபாடுகளைக் கண்டு சோர்வடைவதற்கு எவ்வித காரணமும் இல்லை. ஏனென்றால், அவற்றுக்கு ஒரு சரியான தீர்வு காண முடியும்.

உலக நடப்பில் எழும் ஒரு சில பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதில் கம்யூனிச இயக்கத்திற்குள் பல்வேறு அணுகுமுறைகள் எழுவது தவிர்க்க முடியாதது. அவ்வாறு எழுகிறது என்பதும் உண்மைதான். உலக கம்யூனிச இயக்கத்தின் ஒவ்வொரு பிரிவும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வேறுபட்ட சூழ்நிலைமைகளைக் கொண்டு இதை விளக்க முடியும். அத்தகைய கருத்து வேறுபாடுகள் செயற்கையாக மிகைப் படுத்தப்படாவிட்டால் கடுமையான சச்சரவுகளுக்கு எந்த விதத்திலும் இட்டுச் செல்லாது; அவ்வேறுபாடுகள் கூட்டாக தோழமை பூர்வமான ஆலோசனைகள் மூலம் களையப்பட முடியும்.

இவை யாவற்றையும் கருத்தில் கொண்டுதான், எல்லா சகோதரக் கட்சிகளிடையேயும் உள்ள உறவுகளில் சுமுகமான சூழலை வளர்க்கவும், நமது ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் உடனடியாக சாத்தியப்பாடான, திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுப்பது மிகவும் அவசியம் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கருதுகிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் முதல் செயலர் தோழர் என். எஸ். குருச்சேவ் ஜெர்மனியின் சோசலிச அய்க்கியக் கட்சியின் ஆறாவது பேராயத்தில் இக் கருத்துக்களை பின்பற்றித்தான் உரையாற்றினார்.

கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே நடைபெறும் வாதப்பிரதிவாதங்கள் மற்றும் ஒரு கட்சிக்குள்ளேயே மற்ற கட்சிகளைப்பற்றிய விமர்சனம் ஆகியவை நிறுத்தப்பட வேண்டும் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அவர் முன்மொழிந்தார். இது, உலககம்யூனிச இயக்கத்தில் விரிவான வரவேற்பையும் ஆதரவையும் பெற்றது என்பது தெரிந்தது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, தற்போதைய பிரச்சினைகளைப் போக்க ஒரு புதிய முயற்சியை இக் கடிதத்தின் மூலம் மேற்கொள்ள விரும்புகிறது. நமது நட்பை பலப்படுத்தவும், சரியான பரஸ்பர புரிதலை ஏற்படுத்தவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளது கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு முன்மொழிகிறோம். இந்த சந்திப்பின் முக்கியத்துவம் கருதியும் அதன் நோக்கங்களை அடைவதை உத்தரவாதம் செய்யவும் மேற்குறிப்பிட்ட சந்திப்பை ஒரு உயர்மட்ட அளவில் நடத்துவது நன்றாக இருக்கும். பேச்சுவார்த்தையின் போது, நம் இரு கட்சிகளுக்கும் அக்கறையுள்ள, விவாதத்திற்குரிய அனைத்து பிரச்சினைகளையும் - குறிப்பாக நமது போராட்டத்தின் பொதுவான கடமைகள் தொடர்பானவற்றை - ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ள முடியும். வேறுபட்ட கண்ணோட்டத்தைக் கொண்ட பிரச்சினைகள் இருப்பது நிரூபணமானால் நமது நிலைப்பாட்டை மேலும் நெருக்கமாக கொண்டு வருவதற்கு உதவும் நடவடிக்கைகள் பற்றி உடன்பாடு

காணப்பட வேண்டும். அப்படிப்பட்ட சந்திப்புக்கு நீங்கள் ஒப்புக் கொள்வீர்களானால் அதை நடத்துவதற்கான இடமும் காலமும் நிர்ணயிக்கப்பட முடியும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதி களது சந்திப்பின் முக்கியத்துவம் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும். அத்தகைய சந்திப்பு, மார்க்சிய-லெனினிய கட்சிகளின் மாநாட்டுக்கு தயாரிப்பு செய்வதிலும், அதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கு வதிலும் ஒரு முக்கியப் பங்காற்றும். அப்படிப்பட்ட சூழ்நிலையின்றி இம் முயற்சி வெற்றி பெற முடியாது.

மற்ற பல சகோதரக் கட்சிகளைப் போலவே, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும், அத்தகைய மாநாட்டைக் கூட்டுவதற்கான போதுமான காரணங்கள் உள்ளன என்று கூறி வந்திருக்கிறது. ஏகாதிபத்தியம் மற்றும் அதன் ஆக்கிரமிப்புத் திட்டங்களுக்கு எதிரான போராட்டத்தில் பொதுவான கடமைகள், மக்களின் விடுதலை இயக்கத்தை மேலும் முன்னேற்றமடையச் செய்வது, உலக சோசலிச சமூகத்தை அணி திரட்டி அதன் அனைத்துத்துறை வளர்ச்சிக்கும் உதவுவது, அதன் உலகுதழுவிய செல்வாக்கை வளர்ப்பது, கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைப் பலப் படுத்துவது ஆகியவற்றைப் பற்றி அம் மாநாடு பிரதான கவனம் செலுத்த வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

நாங்கள் ஏற்கனவே இத்தகைய ஒரு மாநாட்டை கூட்டுவதன் அவசியம் பற்றிய எங்களது கருத்தை 1962 மே 31-ம் தேதியிட்ட கடிதத் தில் உங்களுக்குத் தெரிவித்துள்ளோம். அதை மீண்டும் உறுதி செய் கிறோம். மார்க்சிய-லெனினிய கட்சிகள் மேலும் சிறப்பாக அணிவகுப் பதற்கும், மென்மேலும் ஒன்றுபடுவதற்கும் வழிவகுக்கக் கூடிய வகையில் மாநாட்டை நடத்துவதற்குத் தேவையான அனைத்தையும் செய்ய வேண்டியது நமது பொதுவான கடமையாகும்.

தற்போது நிலவும் பிரச்சினைகளைக் களைவதைக் குறிக்கோளாகக் கொண்ட எந்த ஒரு முன்முயற்சியையும் நாங்கள் கவனமாகப் பரிசீலிக்க-வும் ஆதரிக்கவும் தயாராக உள்ளோம். நமது ஒற்றுமையைப் பலப்படுத்-துவதைத் தடை செய்யும் எந்த ஒரு நடவடிக்கையையும்அனுமதிக்காமல், தோன்றியுள்ள பிரச்சினைகளை மார்க்சிய-லெனினிய அடிப்படையில் தீர்த்துக் கொள்ள விரும்பும் நல்லெண்ணமே இப்போது முக்கியத் தேவை யாகும்.

அன்புள்ள தோழர்களே;

அனைத்து மார்க்சிய-லெனினிய கட்சிகளும், உலக கம்யூனிச இயக் கத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமான தருணம் வந்துள்ளதை உணர்ந்து

இருக்கின்றன. நாம் ஒரே அணியில் இணைந்து நமது பயணத்தைத் தொடரப் போகிறோமா, அல்லது நமது நட்பைக் கெடுக்கக்கூடியதேவை யற்ற கடுமையான போராட்டங்களில் ஈடுபட்டு, உலக சோசலிச சக்தி களை பலவீனப்படுத்தக் கூடிய, உலக கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்குக் குழிபறிக்கும் பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளப் போகிறோமா என்பது நம்மையும் நமது கட்சிகளையும், நமது கொள்கைகளின் சரியான தன்மையையும் சார்ந்திருக்கிறது.

ரசிய மற்றும் சீன மக்களை சகோதரர்களாக வாழச் செய்யும் வரலாற்றுப் பொறுப்பு நமது இரு கட்சிகளின் மீதும் சுமத்தப்பட்டிருக் கிறது. ரசிய-சீனக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒற்றுமை சோசலிச சமூகத்துக் கும், கம்யூனிச இயக்கம் முழுமைக்கும் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும். இரு அமைப்புக்களுக்கிடையே தீவிரமான போராட்டம் நடந்து கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில், நம்மிடையே தோன்றியுள்ள வேறுபாடுகளை, மார்க்சிய-லெனினியம் மற்றும் பாட்டாளிவர்க்க சர்வ தேசியம் ஆகியவற்றின் அடிப்படையில் களைவதற்குப் போதுமான தைரியத்தையும் வலிமையையும் நமக்குள் காணத்தவறுவோமேயானால் எதிர்காலச் சந்ததிகள் நம்மை மன்னிக்காது. ஒரு புதிய வகையான சகோதர மற்றும் நட்பு உறவுகளை, மக்களிடையே உருவாக்கி வளர்ப்பது; மனித இனம் அனைத்திற்கும் ஒரு முன் மாதிரியான எதிர்கால சோசலிச சமுதாயத்தை உருவாக்குவது ஆகிய மாபெரும் வரலாற்றுக் கடமைகள் முதலாளித்துவ நுகத்தடியில் இருந்து முதன் முதலாகத் தம்மை விடுவித்துக் கொண்ட புரட்சிகர இயக்கத்தின் படைப்பிரிவுகள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

தற்போதைய நிலையில் இருந்து மீள்வதற்கு வழிகாணவும் நமது நட்புறவுக்கு இடையூறானவற்றை தைரியமாகவும், தீர்மானகரமாகவும் துடைத்தெறியவும் நமது கட்சிகள் கடமைப்பட்டிருக்கின்றன. இதுவே மார்க்சிய - லெனினியவாதிகள் பின்பற்றக்கூடிய - பின்பற்ற வேண்டிய ஒரே பாதையாகும்.

தற்போது எழுந்துள்ள வேறுபாடுகளைக்களைவது, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் நலன்களுக்கு மட்டுமல்லாது சமாதானம், தேசிய விடுதலை, ஜனநாயகம் மற்றும் சோசலிசம் ஆகியவற்றுக்கான சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுப் போராட்டங்களின் அடிப்படை நோக்கங்களுக்கும் உகந்ததாகும். நமது போராட்டத்தின் நோக்கங்களும் நலன்களும் பற்றிய ஆழமான புரிதலும் நல்லெண்ணமும் மட்டும் இருந்தால் போதும் எந்த இடையூறும் நமது நட்புறவு வளர்ந்து பலப்படுவதையும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையையும் தடுக்க முடியாது.

கம்யூனிஸ்ட் வாழ்த்துக்களுடன்,

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பதில் கடிதம்

21-2-1963ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய கடிதத்துக்கு 9-3-1963ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய பதில் கடிதம்

அன்புள்ள தோழர்களே,

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, 1963 பிப்ரவரி 21-ம் தேதி அனுப்பிய கடிதத்தைப் பெற்றுக் கொண்டோம்.

தோழர் மாசேதுங், சீனாவுக்கான சோவியத் தூதர் தோழர் செர்வோனென்கோவுடன் பிப்ரவரி 23-ம் தேதி பேசிய போது தங்களுடைய கடிதம் பற்றிய எங்கள் மதிப்பீட்டைத் தெரிவித்துள்ளார்.

உங்கள் கடிதத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஒற்றுமை மற்றும் இணக்கத்துக்கான உங்கள் ஆர்வத்தை நாங்கள் வரவேற்கிறோம். சகோதரக் கட்சிகளுக்கிடையே சமத்துவம் என்ற வழக்கமான அணுகு முறை அதில் காணப்படுவதை வரவேற்கிறோம். உலகத் தொழிலாளர் கட்சிகள் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளது மாநாட்டைக் கூட்டுவதற்கான ஆலோசனைக்கு நீங்கள் அளிக்கும் உறுதியான ஆதரவை வரவேற்கிறோம்.

சோசலிச முகாமின் ஒற்றுமையைப் பாதுகாப்பது, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைப் பாதுகாப்பது, நமது இரு கட்சிகள் மற்றும் இரு நாடுகளையும் பாதுகாப்பது, ஆகிய இவையே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முரணற்ற நிலைப்பாடாய் எப்போதும் இருந்து வருகிறது. ஒற்றுமைக்காக எந்த முயற்சியையும் எடுக்க நாங்கள் எப்போதும் தயங்கியதில்லை. எப்போதும் ஒற்றுமைக்கு எதிரானவற்றை கண்டு வேதனை அடைந்துள்ளோம்; அவற்றை எதிர்த்தும் வந்துள்ளோம். ஒற்றுமையின் நலன்களைக் காக்கும் அனைத்தையும் நாங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

தற்போது சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் முக்கியமான, கொள்கை ரீதியான, பல விஷயங்களில் தீவிர வேறுபாடுகள் பல உள்ளன என்ற உண்மையை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த வேறுபாடுகளுக்கான காரணங்களை 'சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் இந்த அல்லது அந்த படைப்பிரிவு செயல்பட்டுக் கொண்டிருக்கும் வேறுபட்ட நிலைமைகளின் மூலம் விளக்க முடியும்' என்று உங்கள் கடிதம் குறிப்பிடுகிறது. இந்த வேறுபாடுகளுக்கான காரணங்களைப் பொறுத்தவரை மார்க்சிய-லெனினியம் எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது, அதன்பால் என்ன அணுகுமுறை மேற்கொள்ளப்படுகிறது என்ற கேள்வியும், மாஸ்கோ பிரகடனம் மற்றும் அறிக்கை எவ்வாறு புரிந்துகொள்ளப்படுகின்றன, அவற்றின்பால் என்ன அணுகுமுறை மேற்கொள்ளப்படுகிறது என்ற கேள்வியும்தான் எங்கள் கருத்துப்படி முக்கியமான அம்சங்களாக இருக்கின்றன.

கொள்கை ரீதியான பிரச்சினைகளில் சகோதரக் கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடு தோன்றுகிறபோது, சகோதரக் கட்சிகள் ஒற்றுமைக்கான விருப்பத்துடன், தோழமை பூர்வமான விவாதங்களையும் பரஸ்பர விமர்சனங்களையும் நடத்தி, சரியானவற்றையும், தவறானவற்றையும் பிரித்தறிய வேண்டும் என்றும், மார்க்சிய-லெனினிய அடிப்படையில் ஒற்றுமை என்னும் இலட்சியத்தை அடையவேண்டும் என்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் கூறி வந்துள்ளது. அதாவது, சகோதரக் கட்சிகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை சர்வதேசக் கம்யூனிச இயக்கத்திற்குள்ளாகவே தீர்த்துக்கொள்ள வேண்டும்; மாஸ்கோ அறிக்கை மற்றும் மாஸ்கோ பிரகடனம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள கொள்கைகள் மற்றும் முறைகளுக்கேற்ப, சமவாய்ப்புள்ள இருதரப்பு அல்லது பலதரப்புப் பேச்சுவார்த்தைகளின் மூலமாகவோ, அல்லது சகோதரக் கட்சிகளின் கூட்டத்தின் மூலமாகவோ, இவ்வேறுபாடுகள் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியானது சகோதரக் கட்சிகளிடையே இருக்கும் வேறுபாடுகளை எதிரிக்கு முன்னால் பகிரங்கமாக்குவதை எப்போதும் எதிர்த்து வந்திருக்கிறது. கட்சிப் பேராயத்தைக் கூட்டுவது, கட்சியின் மத்திய கமிட்டிகள் அறிக்கைகளை வெளியிடுவது,

கட்சி மற்றும் அரசுத் தலைவர்களின் சொற்பொழிவுகள் மற்றும் கட்டுரைகளை வெளியிடுவது போன்ற முறைகளால் விவாதத்தை சூடு பிடிக்கச் செய்வதையும் விவகாரங்களை சிக்கலாக்குவதையும் நாங்கள் மிகவும் கடுமையாக எதிர்க்கிறோம். இத்தகைய நடைமுறைகள் நமது அணிகளுக்கு, குறிப்பாக முதலாளித்துவ நாடுகளிலுள்ள சகோதரக் கட்சிகளுக்கு சங்கடங்களை ஏற்படுத்தி நமது எதிரிகளை மகிழ்விக்கும் என்பதை நாங்கள் நன்கறிந்திருப்பதோடு பலமுறை இதை சொல்லி வந்திருக்கிறோம். நாங்கள் கவலைப்பட்டது தேவையற்ற ஒன்று அல்ல என்பதையே நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன. மேலும் மேலும் பல சகோதரக் கட்சிகள், பகிரங்கமான வாதப்பிரதிவாதங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற தங்கள் கருத்தை வெளியிட்டுள்ளன. இது ஒரு நல்ல அறிகுறியாகும். சகோதரக் கட்சிகளிடையேயான இத்தகைய வெளிப்படையான விவாதங்கள் வெகுவிரைவில் நிறுத்தப்பட்டுவிடும் என்று உறுதியாக நம்புகிறோம்.

சர்வதேச கம்யூனிச இயக்கம் உண்மையிலேயே ஒரு கடுமையான காலகட்டத்தில் உள்ளது. சகோதரக் கட்சிகளிடையிலான வேறுபாடுகள் களையப்பட வேண்டிய தருணம் வந்து விட்டது.

உலகப் புரட்சிக்கு மிகவும் சாதகமான ஒரு நல்ல சர்வதேசச் சூழ்நிலை நம்முன் உள்ளது. நமக்கிடையே உள்ள வேறுபாடுகளைக் களைந்து நமது ஒற்றுமையை ஏன் பலப்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதற்கு ஒரு காரணமும் இல்லை.

உலக சக்திகளின் பலாபல நிலைமையில் உயர்நிலை ஓங்கி இருப்பது சோசலிச மற்றும் புரட்சிகர மக்களின் பக்கமே; ஏகாதிபத்தியம் மற்றும் அதன் ஏவல் நாய்களின் பக்கம் அல்ல.

அமெரிக்காவினால் தலைமை தாங்கி நடத்தப்படும் ஏகாதிபத்தியப் பிற்போக்கு ஆட்சியின் கோட்டையானது, ஆப்பிரிக்க, ஆசிய, தென் அமெரிக்க நாடுகளின் தேசிய மற்றும் ஜனநாயக புரட்சிகர சக்திகள் மற்றும் சோசலிச சக்திகள் என்ற இரு மாபெரும் வரலாற்று நீரோட்டங்களால் தகர்க்கப்பட்டு வருகிறது.

ஏகாதிபத்திய வாதிகளிடையிலேயான முரண்பாடுகள், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், பிற ஏகாதிபத்திய சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் மேலும் ஆழமானதாகவும், கூர்மையானதாகவும் உருவாகி வருவதோடு அவர்களுக்கிடையே புதிய சச்சரவுகளும் வளர்ந்து வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் உலகப் பாட்டாளிவர்க்க இலட்சியத்திற்கு மிகவும் தீர்மானகரமான முக்கியத்துவம் வாய்ந்தது என்னவென்றால், அமெரிக்காவினால் தலைமை தாங்கப்படும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடுவதும் ஒடுக்கப்பட்ட ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் மக்களின் புரட்சிகரப் போராட்டத்தை ஆதரிப்பதும் ஆகும்.

இத்தகைய சூழலில் சோசலிச நாடுகளின் வலிமை தொடர்ந்து வளர்ச்சியுறுவதும், தேசிய விடுதலை இயக்கத்தின் தொடர்ந்த முன்னேற்றமும், ஒடுக்கப்பட்ட மக்களின் தொடர்ந்த புரட்சிகர போராட்டமும், உலக சமாதான இயக்கத்தின் தொடர்ந்த வளர்ச்சியும், ஒரு புதிய உலக யுத்தத்தை தடுப்பதற்கும், உலக சமாதானத்தை பாதுகாப்பதற்குமான வாய்ப்புகளை அதிகரித்துள்ளன. இதே சமயம் ஏகாதிபத்திய முகாமில் நிலவும் முரண்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் சோசலிச முகாமின் ஒற்றுமையையும், சர்வ தேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையையும் பலப்படுத்த வேண்டியது முதன்மையான தேவையாகும். மார்க்சிய - லெனினியவாதிகளின் ஒற்றுமையை மையமாகக் கொண்டு உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையை பலப்படுத்துவது, உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கும், ஒடுக்கப்பட்ட தேசங்கள் மற்றும் மக்களுக்கும் இடையிலான ஒற்றுமையை பலப்படுத்துவது, ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் உலக மக்களது மாபெரும் ஒற்றுமையை பலப்படுத்துவது ஆகியன நமது பொது இலட்சியத்தின் வெற்றிக்கு உத்தரவாதம் அளிப்பவையாகும்.

மாஸ்கோ பிரகடனமும் அறிக்கையும், நமது பொது போராட்டத்திற்கான பொதுவழியையும் போக்கையும் கொள்கையையும் தெளிவாக வரையறுத்துள்ளன.

இந்த இரண்டு ஆவணங்களும் தற்போதைய வரலாற்றுக் கட்டத்தின் தன்மையைப் பற்றியும், சோசலிச முகாமைப் பற்றியும், சோசலிசக் கட்டுமானம் மற்றும் சோசலிசப் புரட்சி பற்றிய பொதுவிதிகள் பற்றியும், ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டம் பற்றியும், யுத்தம் மற்றும் சமாதானம் பற்றியும், முதலாளித்துவ நாடுகளில் உள்ள பாட்டாளிவர்க்க இயக்கத்தின் கடமைகள், போர்த்தந்திரங்கள் பற்றியும், தற்போதைய பிரதான அபாயமாகிய திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டம் பற்றியும் வறட்டுவாதத்திற்கு எதிரான போராட்டம் பற்றியும், மார்க்சிய— லெனினியத்தை காட்டிக் கொடுத்துள்ள யூகோஸ்லாவிய திரிபுவாதத்திற்கு எதிராகத் தொடரப்படும் போராட்டம் பற்றியும், தோழமை கட்சிகளிடையேயும், தோழமை நாடுகளிடையேயும் உள்ள உறவுகளுக்கு வழிகாட்டும் கொள்கைகள் பற்றியும், சுதந்திரம், சமத்துவம்,

ஆலோசனைகள் மூலம் ஒருமித்த கருத்தை வந்தடைவது பற்றியும் தெளிவான முடிவுகளை வரையறுத்திருக்கின்றன. சீனக் கம்யூனிஸ்ட்டுகளாகிய நாங்கள் எங்களது சொல்லிலும் செயலிலும் இந்தச் சரியான பாதையை, சரியான போக்கினை, சரியான கொள்கையினை வழுவாமல் கடைப்பிடித்தும், பின்பற்றியும் வந்திருக்கிறோம். ரசியத் தோழர்களும் தங்கள் கடிதத்தில் இந்த இரு திட்டரீதியான (Programatic) ஆவணங்களுக்கும் விசுவாசம் தெரிவித்திருப்பது குறித்து நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

மார்க்சிய—லெனினியத்தின் அடிப்படையிலும், மாஸ்கோ பிரகடனம் மற்றும் மாஸ்கோ அறிக்கைகளின் அடிப்படையிலும் வேறுபாடுகளைக் களைந்து, ஒற்றுமையைப் பலப்படுத்துவது என்பது உலக மக்களின் நலன்களுடனும், அனைத்து நாடுகளின் கம்யூனிஸ்ட்டுகளுடைய நலன்களுடனும், சோசலிச முகாமைச் சேர்ந்த மக்களது நலன்களுடனும், ரசிய மற்றும் சீன மக்களது நலன்களுடனும் ஒன்றியதாகும். அதற்கு மாறாக வேறுபாடுகள் மேலும் பெரிதுபடுத்தப்படுமானால் எதிர்காலத் தலைமுறையினரால் மட்டுமல்லாது, நமது கால மக்களாலும்கூட நாம் மன்னிக்கப்படமாட்டோம்.

வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையைப் பலப்படுத்தும் நோக்குடன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு 1962 ஏப்ரல் 7-ம் தேதி ஒரு கடிதத்தை எழுதியது.

அந்தக் கடிதத்தில் இந்தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சி, வியட்னாம் தொழிலாளர் கட்சி, ஸ்வீடன் கம்யூனிஸ்ட் கட்சி, பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி, நியூசிலாந்து கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகள் முன்வைத்த தோழமைக்கட்சிகளின் மாநாட்டைக் கூட்டும் ஆலோசனைக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகமிட்டி தனது ஆதரவைத் தெரிவித்தது. மேலும் பொதுவான பிரச்சினைகளைப்பற்றி விவாதிப்பதற்கு அனைத்து நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் நாங்கள் தெளிவாக முன்மொழிந்தோம். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியும் தனது சமீபத்திய கடிதத்தில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் மாநாட்டைக் கூட்டுவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

1962 ஏப்ரல் 7-ம் தேதியிட்ட எங்கள் கடிதத்தில் சகோதரக் கட்சிகளது கூட்டத்தைக் கூட்டுவதற்கும், அதை வெற்றிகரமாக நடத்துவதற்கும் ஏற்றவகையில் பல தடைகள் முன்னதாகவே அகற்றப்பட வேண்டும் என்றும், ஏராளமான தயாரிப்பு வேலைகள் செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம். அதே சமயத்தில் கீழ்க்கண்ட அம்சங்களையும் முன்வைத்தோம்.

1. தங்களுக்கிடையே வேறுபாடுகளுள்ள சகோதரக் கட்சிகளும், சகோதர நாடுகளும் உறவுகளை சுமுகமாக்கக் கூடிய, ஒற்றுமையை மீட்கக்கூடிய நடவடிக்கைகளை - அவை எவ்வளவு அற்பமானதாயிருப்பினும்—எடுக்கவேண்டும். அதன் மூலம், சகோதரக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டவும், அதை வெற்றிகரமாக நடத்துவதற்குறிய வகையில் சூழலை அபிவிருத்தி செய்யவும், நிலைமைகளைத் தயாரிக்கவும் முடியும்.

2. பகிரங்கமான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற வியட்னாம் தொழிலாளர் கட்சியின் ஆலோசனைகளை நாங்கள் ஆதரிக்கிறோம்.

3. தேவையான சமயங்களில் சகோதரக் கட்சிகள் இரு தரப்பு மற்றும் பலதரப்புப் பேச்சு வார்த்தைகளின் மூலம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

4. ரசியத் தோழர்களும், அல்பேனியத் தோழர்களும் தங்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகளை அகற்றவும், தங்களிரு நாடுகளுக்கிடையேயும் கட்சிகளுக்கிடையேயும் சுமுக உறவுகளை மீட்கவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று உண்மையில் எதிர்பார்க்கிறோம். இந்த விசயத்தில் ரசியத் தோழர்கள் முன் முயற்சி எடுப்பது அவசியம் என்று தெரிகிறது.

5. 1957ல் நடைபெற்ற சகோதரக் கட்சிகளின் கூட்டத்தின் முடிவுப்படி, சகோதரக் கட்சிகளைக் கலந்தாலோசித்து கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளது பிரதிநிதிகள் மாநாட்டைக் கூட்டவேண்டியது ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொறுப்பாகும்.

சகோதரக் கட்சிகளின் கூட்டம் வெற்றிபெற மேற்கூறிய அம்சங்கள் முக்கியமானவை என்று நாங்கள் இன்னும் கருதுகிறோம். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிகூட தனது சமீபத்திய கடிதத்தில் சகோதரக் கட்சிகளது கூட்டத்தை வெற்றிகரமாக நடத்த மிக முக்கிய ஆலோசனைகளை முன்வைத்துள்ளது கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

நமது ஒற்றுமையை உத்தரவாதப் படுத்தவும், சகோதரக் கட்சிகளிடையே பரஸ்பர உறவுகளில் நிலவும் சூழலை மேம்படுத்தவும், உறுதியான, நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகளைத் தாமதமின்றி எடுப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

சகோதரக் கட்சிகளது கூட்டத்தைக் கூட்டுவதற்குச் சாதகமான ஒரு சூழலை உருவாக்க நாங்கள் ஏற்கனவே பதில்களாக வெளியிட்டுள்ள கட்டுரைகளைத் தவிர புதிதாக எதுவும் வெளியிடுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறோம். இப்போதிலிருந்து, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பிற சகோதரக் கட்சிகள், சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக பெயர் குறிப்பிட்ட பகிரங்க தாக்குதலுக்கும் கட்டுரைகளுக்கும் எங்களது பத்திரிகைகள் மற்றும் பருவ இதழ்களில் பகிரங்கமாக பதிலளிப்பதை நாங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறோம்.

சகோதரக் கட்சிகளிடையே சமத்துவம் மற்றும் ஒருவருக்கொருவர் பதிலளித்துக் கொள்ளும் உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பெயர் சொல்லித் தாக்கும் சகோதரக் கட்சிகளின் அறிக்கைக்கு பகிரங்கமாகப் பதில் சொல்ல எங்களுக்கு உரிமை உள்ளது என்பது சொல்லாமலே விளங்கும். வெளிப்படையான வாதப்பிரதி வாதங்களை நிறுத்திய பின்பு நமது இரு கட்சிகளும் சம்பந்தப்பட்ட பிற சகோதரக் கட்சிகளும் கலந்து பேசி நேர்மையான, எல்லோரும் ஒத்துக் கொள்ளக் கூடிய ஒரு உடன்பாட்டை அடைய வேண்டும்.

ரசிய மற்றும் சீனக்கட்சிகளுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட வேண்டும் என்று தங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம். அத்தகைய பேச்சுவார்த்தைகள், அனைத்து நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளது பிரதிநிதிகள் கூட்டத்தைக் கூட்டுவதற்குத் தேவையான தயாரிப்புப் பணியாக அமையுமென்று நாங்கள் கருதுகிறோம். தோழர் மாவோ, தோழர் செர்னென்கோவுடன் பேசியபோது, கம்போடியாவுக்கு வருகை தரும் தோழர் குருச்சேவ், நமது இரு கட்சிகளுக்கிடையேயான பேச்சுவார்த்தைகளுக்காகவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற் காகவும் பீகிங்கில் தங்கிச் செல்வார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது தங்களுக்கு வசதியாகப்படவில்லையென்றால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பொறுப்புள்ள வேறு ஒரு தோழரின் தலைமையில் பீகிங்கிற்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பலாம் அல்லது நாங்கள் மாஸ்கோவுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்புகிறோம்.

''பேச்சு வார்த்தைகளின்போது நமது இருகட்சிகளும் அக்கறை கொண்டுள்ள அனைத்து முக்கிய பிரச்சினைகள் பற்றியும்—குறிப்பாக நமது போராட்டத்தின் பொதுவான கடமைகள் பற்றியும்—ஒவ்வொரு அம்சமாக விவாதிக்கப்பட வேண்டும்'' என்ற தங்களது கருத்தினை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். ரசிய மற்றும் சீனக் கட்சிகளிடையே விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள், அனைத்து நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்கள் கட்சி பிரதிநிதிகளது கூட்டத்திலும் விவாதிக்கப்பட வேண்டியவையே என்று நாங்கள் கருதுகிறோம்.

அவற்றில் பிரதானமானவை கீழ்க்கண்டவைகளாகும்.

—நிகழ்கால உலகில் புரட்சியின் யுத்த தந்திரம் மற்றும் போர்த் தந்திரம் பற்றிய பிரச்சினை;

—ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் உலக சமாதானத்தைப் பாது காப்பது பற்றிய பிரச்சினை;

—ஒடுக்கப்பட்ட தேசங்கள், மற்றும் மக்களின் விடுதலைப் போராட்டங்கள் பற்றிய பிரச்சினை;

—சோசலிச முகாமின் சக்தியையும் ஒற்றுமையையும் பற்றிய பிரச்சினை;

—சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைப் பலப்படுத்துவது பற்றிய பிரச்சினைகள்.

இப்பிரச்சினைகள் அனைத்தும் தோழமை பூர்வமாகவும், ஒவ்வொரு அம்சமாகவும், முழுமையாகவும், நுணுக்கமாகவும், மார்க்சிய-லெனினிய அடிப்படை போதனைகளுக்கு இசையவும், மாஸ்கோ அறிக்கை மற்றும் பிரகடனங்களின் புரட்சிகரக் கொள்கைகளின் அடிப்படையிலும் விவாதிக் கப்பட வேண்டும். விவாதங்கள் வெறும் சம்பிரதாய முறையில் இல்லாமல் உண்மையான சமத்துவத்தின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். எவையெல்லாம் இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டனவோ அவை உடனடியாகத் தீர்க்கப்பட்டு ஒரு ஒப்பந்தத்தின் மூலம் இறுதியாக்கப்பட வேண்டும். உடனடியாகத் தீர்க்கப்பட முடியாத வேறுபாடுகள் பிறகு தீர்ப் பதற்காக ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். ஒரே அமர்வில் நமது விவாதங் கள் முடியவில்லையென்றால் பலமுறை இவை நடத்தப்பட வேண்டும் அல்லது நமது இருகட்சிகளும் இருதரப்பு பேச்சு வார்த்தைகளை நடத்த வேண்டும் என்று நாங்கள் முன்மொழிகிறோம்.

சோசலிச முகாமின் ஒற்றுமை பலப்படுத்தப்படுவது, குறிப்பாக நம் இரு கட்சிகள், நாடுகளது ஒற்றுமை பலப்படுத்தப்படுவது, சீன மற்றும் ரசிய மக்கள், சோசலிச முகாமைச் சேர்ந்த மக்கள், அனைத்து நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்ட்டுகள் மற்றும் உலகிலுள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட நாடுகள், மக்கள் ஆகியோரின் பொது விருப்பம் ஆகும்.

நமது இரு கட்சிகளின்மீதும் சுமத்தப்பட்டுள்ள பொறுப்பு பற்றி நாங்கள் உணர்ந்திருக்கிறோம். இந்த எதிர்பார்ப்புகளை நாம் ஏமாறச் செய்துவிடக் கூடாது. மார்க்சிய—லெனினிய அடிப்படையிலும் பாட் டாளிவர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையிலும் மாஸ்கோ பிரகடனம் மற்றும் மாஸ்கோ அறிக்கையின் அடிப்படையிலும் நாம் ஒன்று படுவோமாக!

கம்யூனிஸ்ட் வாழ்த்துக்களுடன்

மத்திய கமிட்டி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பதில் கடிதம்

9-3-1963 ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய கடிதத்துக்கு 30-3-1963 ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய பதில் கடிதம்

அன்புள்ள தோழர்களே,

கம்யூனிச இயக்கத்தின் அணிகளிடையே அய்க்கியத்தையும், ஒற்றுமையையும் பலப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்த ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்மொழிவுகளுக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியிடமிருந்து அனுகூலமான பதில் கிடைத்திருப்பதில் திருப்தியடைகிறோம். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகளது கூட்டம் நடத்துவதற்கு நீங்கள் ஒப்புக்கொண்டுள்ளதை நாங்கள் வரவேற்கிறோம். உலக கம்யூனிச இயக்கத்தில் சமீப காலத்தில் எழுந்துள்ள வேறுபாடுகளை இலகுவாக்குவதிலும், சகோதரக் கட்சிகளிடையே உள்ள உறவுகளில் சாதகமான சூழலை உருவாக்குவதிலும் இந்தக் கூட்டம் ஒரு முக்கிய பங்காற்றும் என்றும், இந்த கூட்டத்தின் விளைவாக தற்போது நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க ஆக்கப் பூர்வமான பல நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்றும் நாங்கள் கருதுகிறோம்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தனது கடிதத்தில் தோழர் என். எஸ். குருச்சேவ் அவர்கள் கம்போடியா செல்லும் வழியில்

பீகிங் வருமாறு அழைப்பு விடுத்திருந்தது. தோழர் என்.எஸ். குருச்சேவ் அவர்களும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியும் இந்த அழைப்புக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். நமது கட்சிகளிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தவும், நமது கடமைகளைப் பற்றிய ஒரு பொதுவான புரிதலை ஏற்படுத்தவும், கம்யூனிச இயக்கம் மற்றும் சர்வதேச சூழ்நிலை பற்றிய உடனடிப் பிரச்சினைகளில் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையை சந்திக்க சீன மக்கள் குடியரசுக்கு வருகைதர தோழர் என்.எஸ். குருச்சேவ் மகிழ்ச்சியுடன் இசைந்துள்ளார். இருந்தபோதிலும் தோழர் என்.எஸ். குருச்சேவ் கம்போடியாவுக்கு பயணம் செல்வதாக தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி உண்மையில் திட்டம் எதுவும் இல்லை. நாம் எல்லோரும் அறிந்தபடி 1963 பிப்ரவரி 12-ல் எங்களது தலைமை அமைப்புகளால் நிறைவேற்றப்பட்ட முடிவின் அடிப்படையில் ரசிய ஒன்றியங்களின் தலைமை அமைப்பின் தலைவர் தோழர் எல். ஐ. பிரஷ்னேவ் கம்போடியாவுக்கு செல்வார். இது கம்போடியா அரசு குறிப்பிலும், பத்திரிகைகளிலும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. சீன மக்கள் குடியரசுக்கு ஏற்கெனவே மூன்று முறை வருகை தந்துள்ள தோழர் என். எஸ். குருச்சேவ் சீனாவுக்கு வரவும், சீனத் தோழர்களைச் சந்திக்கவும் நீங்கள் விடுத்துள்ள அழைப்பை எதிர்காலத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை இழக்கவில்லை.

தோழர் மாசேதுங் 1957-ல் மாஸ்கோவில் தங்கியிருந்தபோது, சோவியத் ஒன்றியத்துக்கு தாம் இரண்டு முறை மட்டுமே வருகை தந்துள்ளதாகவும், மாஸ்கோ மற்றும் லெனின்கிராடு ஆகிய நகரங்களை மட்டுமே கண்டதாகவும் கூறியதை நினைவுபடுத்துகிறோம். எங்கள் நாட்டை பற்றி மேலும் நன்றாக புரிந்து கொள்ள ரசியாவுக்கு மீண்டும் வருகை தர வேண்டும் என்ற தனது ஆவலை அப்போது அவர் வெளிப்படுத்தினார். அவர் எமது நாட்டின் தூரக்கிழக்கு எல்லையிலிருந்து மேற்கு எல்லை வரையிலும், வடக்கு எல்லையிலிருந்து தெற்கு எல்லை வரையிலும் பயணம் செய்ய விரும்புவதாக கூறினார். தோழர் மாசேதுங் அவர்களின் இந்த விருப்பத்தை நாங்கள் வரவேற்கிறோம்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, தோழர் மாசேதுங் அவர்களுக்கு ரசியாவில் ஒரு விடுமுறை காலத்தை கழிக்கவும், ரசிய மக்களின் வாழ்க்கை பற்றி நன்கு பரிச்சயப்படுத்திக் கொள்ளவும் அழைப்பு விடுத்து 1960 மே 12 தேதியிட்டு ஒரு கடிதம் அனுப்பியது. துரதிர்ஷ்டவசமாக அன்று தோழர் மாவோ எங்களுடைய அழைப்பை பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தோழர் மாசேதுங் அவர்களின் வருகையை வரவேற்கிறது. எதிர்வரும் வசந்த காலமோ அல்லது கோடைகாலமோ அத்தகைய ஒரு பயணத்துக்கு மிகவும் ஏற்புடையதாக இருக்கும். வேறு எந்த நேரத்திலும்கூட ஒரு சகோதரக் கட்சி மற்றும் சகோதர நாட்டுமக்களின் பிரதிநிதியாக

தோழர் மாசேதுங் அவர்களுக்கு ஒரு சிறந்த வரவேற்பைத் தர தயாராக இருக்கிறோம். எங்கள் நாட்டில் சுற்றுப் பயணத்தின்போது தோழர் மாசேதுங் அவர்கள் நிச்சயமாக தனியாக இருக்க வேண்டியிருக்காது. எங்கள் கட்சியின் தலைமையைச் சேர்ந்த தோழர்கள் உடன் வருவார் கள். பல்வேறு பிரச்சினைகள் பற்றி கருத்துக்களை பரிமாறிக் கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாகும். தோழர் மாசேதுங் அவர்கள், ரசிய மக்கள் எவ்வாறு உழைக்கிறார்கள் என்பதையும், கம்யூனிச கட்டுமானத்தில் அவர்கள் எத்தகைய வெற்றிகளை ஈட்டியிருக்கிறார்கள் என்பதையும், எங்கள் கட்சியின் திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதையும் நேரில் காண முடியும்.

தோழர் மாசேதுங் அவர்களின் மாஸ்கோ வருகை தற்போதைக்கு சாத்தியமில்லையென்றால், உயர்மட்ட அளவிலான ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகளது சந்திப்பு பற்றிய தங்கள் கருத்துக்களின்படி மாஸ்கோவில் பேச்சுவார்த்தைகளை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். இத்தகைய ஒரு சந்திப்பை 1963 மே 15 வாக்கில்—அதாவது அந்தத் தேதி உங்களுக்கு ஏற்புடைய தாக இருந்தால்—வைத்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறோம்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பிரதி நிதிகளது சந்திப்பு 'அனைத்து நாடுகளது கம்யூனிஸ்ட் மற்றும் தொழி லாளர் கட்சிகளது பிரதிநிதிகள் மாநாட்டுக்கான தயாரிப்பிற்கு ஒரு தேவையான நடவடிக்கை' என்று எங்களைப்போலவே சீனத் தோழர் களும் கருதுவது பற்றி நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். உண்மையாகவே பிற சகோதரக் கட்சிகளது நலன்களுக்கு குந்தகம் விளைவிக்காமலும், சமத்துவக் கொள்கையை மீறாத வகையிலும், இந்த சந்திப்பானது மாநாடு நடத்தப்படுவதற்கும், அதற்கான சிறப் பான தயாரிப்பிற்கும் உதவும். இத்தகைய ஒரு சந்திப்பில்லாமல், வாதப் பிரதிவாதங்களை வெளிப்படையாக பத்திரிகைகளில் நடத்துவதையும் சகோதரக் கட்சிகள் பற்றி உட்கட்சி விமர்சனம் செய்வதையும் நிறுத்தாமல், மாநாட்டுக்குத் தயார் செய்வதோ சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒற்றுமையை பலப்படுத்துவது என்ற அதன் முக்கிய குறிக்கோளை அடைவதோ சிரமமானது. குறிப்பாக இந்த காரணத்துக் காகவே வியட்னாமிய, இந்தோனேசிய, பிரிட்டிஷ், ஸ்வீடன் மற்றும் பிற தோழர்கள் 1962-ன் துவக்கத்தில் அனைத்து நாடுகளது சகோதரக் கட்சிகளின் உச்சமாநாட்டை கூட்டுவது தொடர்பான ஆலோசனைகளை ஏற்றுக் கொண்ட அதே சமயம் உலக கம்யூனிஸ்ட் அமைப்பு செயல் படுவதற்கு சாதகமான ஒரு சூழலை உருவாக்குவதற்கான நடவடிக்கை களை எடுக்க வேண்டியதன் அவசியத்தை ரசிய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியது.

''நாம் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பான தேவையற்ற விவாதங்கள் நிறுத்தப்பட வேண்டும்; நமது வேறுபாடுகளைக் களைவதற்குப் பதிலாக அவற்றைத் தீவிரப்படுத்தும் வெளிப்படையான அறிக்கைகள் வெளியிடப்படுவது கைவிடப்பட வேண்டும்'' என்று 1962 பிப்ரவரி 22 தேதியிட்ட கடிதத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி வலியுறுத்தியது. 1962 மே 31-ம் தேதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு எழுதிய கடிதத்தில் நாங்கள் எழுதினோம்: ''உலக கம்யூனிச இயக்கத்தின் முக்கிய பிரச்சினைகளைப் பற்றிய ஒரு கூட்டு விவாதத்திற்கு எங்கள் கட்சி எப்போதும் முன் வந்திருக்கிறது, இப்போதும் முன் வருகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிதான் 1957-லும் 1960-லும் சகோதரக் கட்சிகளின் சந்திப்புக்கு முன் முயற்சி எடுத்தது. சர்வதேச சூழலில் ஏற்பட்ட தீவிர மாறுதல்கள் தொடர்பாகவும், கம்யூனிச இயக்கத்தில் அதற்கு ஏற்ற போர்த்தந்திரங்களை வகுக்கவேண்டிய தேவையுடனும் இந்த இரண்டு சந்திப்புகளும் இணைந்திருந்தன. இப்போதும் அனைத்து சகோதரக் கட்சிகளின் சந்திப்புக்கான ஆலோசனையை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம்.''

சகோதரக் கட்சிகள் நமது இயக்கத்தின் கூட்டு முடிவுகளை நிறைவேற்றுவதில் தங்களது சொந்த நடவடிக்கை பற்றியும், சர்வதேச விவகாரங்களில் நிலவும் புதிய அம்சம் பற்றியும் முழுமையாகவும் ஆழமாகவும் பகுப்பாய்வு செய்வதும் அத்தகைய ஒரு கூட்டத்துக்கான தயாரிப்புகள் செய்வதற்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நாங்கள் கருதினோம். அந்தக் கூட்டமானது வேறுபாடுகளைத் தீவிரப்படுத்தி விடக்கூடாது; மாறாக அவற்றை எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு தீர்ப்பதற்கு உதவவேண்டும் என்று எல்லா கம்யூனிஸ்ட்களும் சரியாக புரிந்து கொள்ளக் கூடிய அக்கறையை ரசிய கம்யூனிஸ்ட் கட்சி வெளிப்படுத்தியது.

அந்த மாநாட்டுக்கு முன்பு கம்யூனிச இயக்கத்தில் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கவும், கருத்து வேறுபாடுகளை தோழமை பூர்வமான கட்சி விவாதத்திற்குள் அனுமதிக்கத்தக்க எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தவும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றிய எங்கள் கருத்துக்களை, சமீப காலங்களில் பெரும் பாலான சகோதரக் கட்சிகளது தலைவர்கள் நியாய பூர்வமாகவே அறிவித்துள்ளனர். தங்கள் கடிதத்தை பார்க்கும் போது நீங்களும் தற்போது இதை ஒப்புக்கொள்கிறீர்கள் என்று தெரிகிறது. எனவே வரப்போகும் மாநாட்டுக்கான தயாரிப்புகளில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூற முடியும்.

நமது இரு கட்சிகளும் அனைத்து சகோதரக் கட்சிகள் சம்பந்தப் பட்ட பிரச்சினைகளை விவாதித்தாலும் கூட அது பூர்வாங்க பேச்சுக்கள் தான் என்பது சொல்லாமலே விளங்கும். அனைத்து சகோதரக் கட்சிகளும் கூட்டாகப் பங்கெடுத்துக் கொள்ளும் போதும், ஒவ்வொரு பிரிவினரது விரிவான அனுபவத்தையும் ஆழ்ந்து ஆய்வு செய்வதன் மூலமும் மட்டுமே சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் கொள்கைகளை விரிவாக விளக்கு வதை வெற்றிகரமாகச் செய்ய முடியும் என்பதை 1957 மற்றும் 1960-ல் நடந்த கூட்டங்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதி நிதிகளது சந்திப்பில் விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைக்குரிய விசயங்கள் பற்றிய உங்கள் கருத்துக்களை நாங்கள் கவனமாகப் பரி சீலித்தோம். அவை முக்கியமானவையாதலால் அவற்றை விவாதிக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

எங்கள் பங்கிற்கு சகோதரக் கட்சிகள் கவனம் செலுத்தக்கூடிய மையமான பிரச்சினைகள் பற்றியும், நமது பொது இலட்சியத்திற்கான அவர்களின் போராட்டம் பற்றிய விசயங்கள் என்று நாங்கள் கருதும் சில கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றியும் இந்தக் கடிதத்தில் விவரிக்க விரும்புகிறோம். இந்தப் பிரச்சினைகள் பற்றிய எங்கள் கருத்துக்களை ஒரு நீண்ட அறிக்கையாக முன்வைப்பது எங்கள் நோக்கமல்ல. சர்வதேச அரங்கில் எங்கள் கொள்கைகளுக்கும் சகோதரக் கட்சிகளுடனான எங்கள் உறவுகளுக்கும் வழிகாட்டும் பிரதான முக்கியத் துவம் வாய்ந்ததாக கருதுவதை மட்டுமே நாங்கள் குறிப்பிட விரும்பு கிறோம்.

எங்களின் கண்ணோட்டம் பற்றிய இந்த அறிக்கை, இரு தரப்பு சந்திப்பு ஒன்றில் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள வேண்டிய அவசி யமுள்ள பிரச்சினைகளை வரையறுக்கவும், நிலவும் வேறுபாடுகளைக் களையவும் உதவும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். உலக கம்யூனிச இயக்கம் முழுவதின் சித்தாந்த நிலைப்பாட்டையும், மாஸ்கோ பிரகடனம் மற்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் பொது வழியையும் உறுதியாகவும் முரண்பாடு இன்றியும் உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்ற எங்கள் பற்றுறுதியை மீண்டும் வலியுறுத்தவே இதைச் செய்கிறோம்.

அறிக்கை நிறைவேற்றப்பட்டது முதல் இன்றுவரைக்கான அனுப- வம், அதன் முக்கிய முடிவுகள் எதையும் செல்லத்தகாததாக்கிவிட வில்லை என்பது மட்டுமல்ல, மாறாக அது இன்றைய அனுபவங்களைப் பொதுமைப்படுத்தியதன் மூலமும், மார்க்சிய - லெனினியத்தின் ஆக்கபூர்வமான வளர்ச்சியின் மூலமும், உலக கம்யூனிச இயக்கத்தினால் கூட்டாக வரையறுக்கப்பட்ட பாதையின் சரியான தன்மையை முழுமையாக உறுதி செய்துள்ளது.

மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சியினால் தொடங்கி வைக்கப் பட்டு, முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச் செல்வதை பிரதான உள்ளடக்கமாகக் கொண்ட நமது சகாப்தம்-சோசலிசப்புரட்சிகள் மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகளது சகாப்தமாகும்; ஏகாதிபத்தியத் தின் அழிவின் சகாப்தமாகும்; காலனியாதிக்கத்துக்கு முடிவுகட்டும் சகாப்தமாகும்; மேலும் மேலும் அதிகமான நாடுகள் சோசலிசத்துக்கு மாறிச்செல்லும் சகாப்தமாகும்; உலகஅளவில் சோசலிசமும் கம்யூனிசமும் வெற்றியடையும் சகாப்தமாகும் என்ற அடிப்படையை ஏற்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பணியாற்றி வருகிறது.

உலகில் வளர்ந்துள்ள சூழ்நிலையும், சர்வதேச அரங்கில் வர்க்க சக்திகளின் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் நமது இயக்கத்தில் புதிய வாய்ப்புகளுக்கு வழி திறந்துவிட்டுள்ளன. இந்த சூழ்நிலை யானது உலக கம்யூனிச இயக்கத்துக்கு ஒரு பொது வழியை—இன் றைய கட்டத்தின் அடிப்படைக் கடமைகளுக்கு பொருத்தமான ஒரு பொது வழியை—உருவாக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாம் உலகயுத்தத்திற்குப் பிறகு அய்ரோப்பாவில் பல நாடுகள் சோசலிசப் பாதையை மேற்கொண்டன. சீனாவிலும் பிற ஆசிய நாடு களிலும் சோசலிசப் புரட்சி வெற்றியடைந்து ஒரு உலக சோசலிச அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த புதிய அமைப்பு மக்கள் ஜனநாயக நாடுகளில் பலமாக வளர்ந்து, சோசலிசப் பாதையைப் பின் பற்றும் நாடுகளில் அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத் துறை களில் வேகமான வளர்ச்சி விகிதத்தை உத்தரவாதம் செய்தது. சோசலிச சமூகமானது அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் மிகவும்நெருக்க மாக இணைந்துள்ளது. சோவியத் யூனியன் மற்றும் பிற தோழமை நாடுகளின் சாதனைகளின் காரணமாக உலகசக்திகளின் பரஸ்பர சார்புத் தன்மையானது கணிசமான அளவுக்கு சோசலிசத்துக்கு சாதகமாகவும் ஏகாதிபத்தியத்துக்கு பாதகமாகவும் மாறியுள்ளது. அணு மற்றும் ஹைட்ரஜன் ஆயுதங்களில் அமெரிக்க ஏகபோகத்துக்கு முடிவு கட்டப் பட்டதும் ரசியா ஒரு வலிமை வாய்ந்த இராணுவ ஆற்றல் பெற்றதும் இதில் ஒரு முக்கியமான பங்கு வகித்துள்ளது.

ஒரு உலக சோசலிச அமைப்பு உருவாக்கப்பட்டது சர்வதேச உழைக் கும் வர்க்கம் மற்றும் அனைத்து உழைக்கும் மக்களது சிறப்புமிக்க வரலாற்றுச் சாதனையாகும். இந்த சாதனை புதிய சமுதாயம் பற்றிய மனித இனத்தின் கனவுகளின் படைப்பாகும். சோசலிச நாடுகளின் உற்பத்தி வளர்ச்சியும், அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில் ஈட்டிய பரந்த சாதனைகளும், சோசலிசத்தின் அனுகூலங்களைப் பாது காத்துக் கொள்வதற்குரிய பொருளாதார மற்றும் இராணுவ பலத்தைப் பெறுவதற்கு சோசலிச சமூகத்திற்கு உதவியுள்ளதோடு, உலக மக்களின் பாதுகாவலனாகவும் சமாதானத்தின் பலம் வாய்ந்த அரணாகவும் திகழ்கிறது.

சக்திகளின் பலாபலத்தில் ஏற்பட்டுள்ள அடிப்படை மாற்றமானது, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்துவதோடும், அதன் அனைத்து முரண்பாடுகளையும் தீவிரப்படுத்துவதோடும் தொடர்புடையது ஆகும். இரண்டாம் உலகப் போரின் முடிவுக்குப் பிறகு ஏகாதிபத்திய முகாமுக்குள்ளேயே சக்திகளின் அணிவகுப்பிற்குள் ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. பொருளாதார மையத்தை தொடர்ந்து, ஏகாதிபத்தியத்தின் அரசியல் மற்றும் இராணுவ மையங்களும் அய்ரோப்பாவிலிருந்து அமெரிக்க அய்க்கிய நாடுகளுக்கு மாறி உள்ளது. அமெரிக்க ஏகபோக முதலாளித்துவம் சர்வதேச பிற்போக்கின் அரணாகவும் முதலாளித்துவத்தின் பாதுகாவலனாகவும் மாறி இருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம்சர்வதேச போலீஸ்காரன் பணிகளை மேற்கொண்டுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இராணுவ மண்டலக் கொள்கையைப் பயன்படுத்தி பிற முதலாளித்துவ அரசுகளை தங்கள் ஆளுகைக்கு உட்படுத்த முயன்று வருகின்றனர். இது அமெரிக்க அய்க்கிய நாடுகளுக்கு பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஜப்பான் மற்றும் இதர பெரிய முதலாளித்துவ அரசுகளிடமிருந்து எதிர்ப்பை தோற்றுவித்துள்ளது. உலக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார மீட்சியும் அவற்றின் வளர்ச்சி விகிதமும் அமெரிக்காவைக் காட்டிலும் அதிக வேகமாக உள்ளன.

இத்தகைய நாடுகளில் அமெரிக்கப் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் தீவிரமடைந்திருக்கிறது. இவை யாவும் ஏகாதிபத்தியப் போட்டியும், முரண்பாடுகளும் நிலவும் மையங்களில் அதை மேலும் கூர்மையடையச் செய்வதோடு புதியவற்றையும் தோற்றுவித்து ஒட்டுமொத்த முதலாளித்துவ அமைப்பையே பலவீனப் படுத்துகின்றன. ஏகாதிபத்தியத்தின் மக்கள் விரோத கொள்ளையடிக்கும்தன்மை மாறவில்லை. ஆனால் உலக சோசலிசஅமைப்பின் தோற்றத்தினாலும், அதன் பொருளாதார இராணுவ வல்லமையின் காரணமாகவும் வரலாற்று வளர்ச்சியின் மீது ஏகாதிபத்தியத்தின் செல்வாக்கு செலுத்தும் தகுதி மிகப் பெருமளவுக்கு குறுகிவிட்டது. அதே வேளையில் சோசலிச நாடுகள், உலக புரட்சிகர இயக்கம், தேசிய விடுதலை இயக்கம் ஆகியவற்றுக்கெதிராக அதன் போராடும் முறைகளும், வடிவங்களும் மாறியுள்ளன. அவர்கள் சோசலிசம் மற்றும் தேசிய விடுதலை இயக்க சக்திகளின் சூறாவளி வேக வளர்ச்சியைக் கண்டு நடுநடுங்கிப் போயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சக்திகளை அய்க்கியப்படுத்தி தங்கள் சுரண்டும்நோக்கத்திற்கான போராட்டத்தை தொடர்வதற்கு ஆர்வமுடன் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் சோசலிச நாடுகள் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தை சீர் குலைக்கவும் அவற்றின் செல்வாக்கை பலவீனப்படுத்தவும் எல்லா இடங்களிலும் முயன்று வருகின்றனர்.

நமது காலத்தில் மனித சமுதாயத்தின் வரலாற்று வளர்ச்சியின் முக்கிய உள்ளடக்கமும், பிரதான போக்குகளும் இனிமேலும் ஏகாதிபத்தி

யங்களால் தீர்மானிக்கப்படுவனவல்ல. மாறாக உலக சோசலிச அமைப்பாலும், ஏகாதிபத்தியத்திற்கெதிராக, சோசலிச பாதையில் சமுதாயத்தை மறு ஒழுங்கமைக்க போராடிக் கொண்டிருக்கும் அனைத்து முற்போக்கு சக்திகளாலும்தான் தீர்மானிக்கப்படும் என்பது தெட்டத் தெளிவான விசயமாகும். சோசலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையே உள்ள முரண்பாடுதான் நமது சகாப்தத்தின் தலையாய முரண்பாடாகும். இரண்டு உலக அமைப்புக்களின் போராட்டத்தின் முடிவை ஒட்டியே சமாதானம், ஜனநாயகம் மற்றும் சோசலிசம் ஆகியவற்றின் எதிர்காலம் மிகப் பெரிய அளவுக்கு சார்ந்திருக்கிறது. மேலும் உலக அரங்கில் சக்திகளின் பலாபலன் இடைவிடாது சோசலிசத்துக்கு சாதகமாகவே மாறிக்கொண்டு இருக்கிறது.

தேசிய மற்றும் சமூக விடுதலைக்கான ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் போராட்டமும், இத்துறையில் ஏற்கனவே ஈட்டப்பட்டுள்ள வெற்றிகளும், உழைக்கும் வர்க்கத்தின் வளர்ந்துவரும் போராட்டமும், முதலாளித்துவ நாடுகளிலுள்ள அனைத்து உழைக்கும் மக்களின் சமுதாய வளர்ச்சிக்காகவும், சுரண்டலுக்கெதிராகவும், ஏக போகத்திற்கெதிராகவும் நடத்தப்பட்டுவரும் போராட்டமும் மனித குல வரலாற்று வளர்ச்சியின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் மிக அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். சோசலிசப் புரட்சிகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் காலனிய எதிர்ப்பு தேசிய விடுதலைப் புரட்சிகள், மக்கள் ஜனநாயகப் புரட்சிகள், பரந்துபட்ட விவசாய இயக்கங்கள், பாசிச மற்றும் கொடுங்கோல் ஆட்சிகளைத் தூக்கியெறிவதற்கான மக்களின் போராட்டங்கள், தேசிய ஒடுக்கு முறைக்கு எதிரான பொதுவான ஜனநாயக இயக்கங்கள்—இவை யாவும் நமது காலத்தில், முதலாளித்துவத்தை வேரறுத்து அழிப்பதில் ஒரே புரட்சிகர உலக நீரோட்டமாக இணைகின்றன.

உலக கம்யூனிச இயக்கமானது புதிய உலக நிலைமைகளுக்கு ஏற்ப தனது கொள்கைகளை வகுக்கும் போது முன்னெப்போதும் கண்டிராத அளவு அழிவு சக்தியை உள்ளடக்கியிருக்கும் அணு ஆயுதங்களின் தோற்றத்தையும் குவிப்பையும் அதன் காரணமாக யுத்தத்தை நடத்துவதற்கான இராணுவ தொழில்நுட்ப சாதனங்களில் தோன்றியுள்ள அடிப்படையான குணாம்ச ரீதியான மாற்றங்களையும் மிகவும் கவனமாக கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது.

படைக்கலக் குறைப்பு நிறைவேற்றப்படும் வரையில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சோசலிச சமூகம் தன்னுடைய ஆயுதப் படைகளின் மேலாண்மையை தொடர்ந்து பேணி வரவேண்டும். மனிதகுலம் எந்தப் பாதையில் முன்னேறுவது, முதலாளித்துவப் பாதையிலா, சோசலிசப் பாதையிலா என்பதை ஆயுத பலத்தைக் கொண்டு தீர்மானிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஒரு யுத்தத்தை கட்டவிழ்த்து விடுவார்களேயானால்

அதுவே கடைசி யுத்தமாகவும், ஏகாதிபத்தியம் இறுதியாக முறியடிக்கப் படுவதாகவும் இருக்கும் என்பதை ஏகாதிபத்தியவாதிகள் மறந்துவிட நாம் எப்போதும் அனுமதிக்கக் கூடாது. இன்றைய சூழ்நிலையில் சோசலிசத்தின் வெற்றிக்கு சாதகமாக நிலவும் வாய்ப்புக்களை முழுமை யாகப் பயன்படுத்துவதும் ஏகாதிபத்தியம் ஒரு உலக யுத்தத்தைக் கட்ட விழ்த்து விட அனுமதிக்காதிருப்பதும் சமாதானம் மற்றும் சோசலிசத்தின் ஆதரவாளர்கள் அனைவரது கடமையாகும்.

உலக அரங்கில் வர்க்க சக்திகளின் அணி சேர்க்கையைப் பற்றிய சரியான பகுப்பாய்வும், மாஸ்கோ கூட்டங்களில் உருவாக்கப்பட்ட சரியான மார்க்சிய—லெனினியக் கொள்கையும் உலக சோசலிச அமைப்பை வளர்ப்பதில் சகோதரக் கட்சிகள் பெரும் வெற்றிகளை ஈட்டு வதைச் சாத்தியமாக்கியிருக்கின்றன. அத்துடன் தேசிய விடுதலை இயக்கம் மற்றும் முதலாளித்துவ நாடுகளில் புரட்சிகர வர்க்கப் போராட்டம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் வழிவகுத்துள்ளன.

சோசலிச அமைப்பு உலக வளர்ச்சிப் போக்கின் மீது தொடர்ந்து அதிகரித்துவரும் செல்வாக்கைச் செலுத்தி வருகிறது. இன்று உலகப் புரட்சிகர இயக்கம் முழுவதும் சோசலிச நாடுகளில் உருவாகி வரும் முன்னுதாரணமான புதிய வாழ்க்கையின் நேரடிதாக்கத்தின் கீழ் வளர்ந்து வருகிறது. எவ்வளவுக்கெவ்வளவு பொதுவுடைமை இயக்கக் கருத் துக்கள் பொதுமக்களின் உணர்வுகளையும் எண்ணங்களையும் கவர் கின்றனவோ, அந்த அளவுக்கு சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தைக் கட்டமைப்பதில் நமது சாதனைகள் மிகவும் உயர்ந்ததாகவும், முக்கியத் துவம் வாய்ந்ததாகவும் இருக்கின்றன. எனவே உலகம் முழுவதும் சோசலிசத்தின் வெற்றியை மேலும் துரிதப்படுத்த விரும்புகிறவர்கள் முதலில் மாபெரும் சோசலிச சமூகத்தையும் அதன் பொருளாதார வலிமையையும் உறுதிப்படுத்துவதிலும், சொந்த மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், அறிவியல், பொறியியல் மற்றும் கலாச் சாரத்தை வளர்ப்பதிலும், அதன் ஒற்றுமையையும் நெருக்கத்தையும் உறுதிப்படுத்துவதிலும் அதன் சர்வதேச செல்வாக்கை வளர்ப்பதிலும் அக்கறை காட்ட வேண்டும்.

சோசலிசத்தையும், கம்யூனிசத்தையும் வெற்றிகரமாக கட்டமைக்க வேண்டிய சர்வதேச தொழிலாளிவர்க்க இயக்கத்தின் பொறுப்பை மாஸ்கோ கூட்டத்தின் அறிக்கை, சோசலிச நாடுகளின் மார்க்சிய—லெனினிய கட்சிகள் மற்றும் மக்களின் மீது சுமத்தியுள்ளது.

உலக சோசலிச அமைப்பைத் தளர்வின்றி பலப்படுத்திவரும் சகோதரக் கட்சிகளும், நமது நாட்டு மக்களும், சர்வதேச பாட்டாளி வர்க்கத்தினுடைய அனைத்து உழைக்கும் மக்களுடைய போராட்டத்தின் உன்னதமான இலட்சியத்திற்கும் இன்றைய அடிப்படைப் பிரச்சினை

களைத் தீர்ப்பதற்கான அனைத்து விடுதலை இயக்கங்களுக்கும், சமாதானம், ஜனநாயகம் மற்றும் சோசலிசம் ஆகியவற்றின் நலன் களுக்கும் தங்களது பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

உலக அரங்கில் சக்திகளின் தற்போதைய பலாபல நிலைமை சமாதானத்தை விரும்பும் அனைத்து சக்திகளுடனும் இணைந்து ஒரு உலக யுத்தத்தைத் தவிர்க்கவும், மக்களின் பாதுகாப்பையும் சமாதானத் தையும் உத்தரவாதப்படுத்தவும் நடைமுறை சாத்தியமான பணியை மேற்கொள்ளும் வாய்ப்பை வரலாற்றில் முதன்முறையாக சோசலிச நாடுகளுக்கு அளித்திருக்கிறது.

மாஸ்கோ அறிக்கை நிறைவேற்றப்பட்டதிலிருந்து இதுவரை கடந்து சென்ற ஆண்டுகள் இந்தக் கோட்பாட்டின் சரியான தன்மையை முழுமையாக நிரூபித்திருக்கின்றன. ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிர மிப்பு மற்றும் யுத்தக்கொள்கைகளுக்கு எதிராக கோடிக்கணக்கான மக்களின் பெருகிவரும் ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெற்றுவரும் சோசலிச நாடுகளின் வலிமை, சமாதானத்தை விரும்பும் அயலுறவுக் கொள்கை ஆகியவற்றின் மிக முக்கிய விளைவாகவே மனித குலத்தை அணு ஆயுத யுத்தம் எனும் படுகுழியில் வீழ்த்த ஆக்கிரமிப்பு சக்திகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றிருக்கின்றன.

ஒன்றன்பின் ஒன்றாக தனது நிலைகளை இழந்துவரும் ஏகாதி பத்தியம் மக்களின் மீதான தனது ஆதிக்கத்தையும், தனது இழந்த நிலைகளையும் திரும்பப் பெற, அனைத்து வழிகளிலும் முயன்று வருகிறது என்பதைப் பற்றி எந்த மார்க்சியவாதிக்கும் சந்தேகமில்லை. தற்போது, சோசலிச நாடுகள் மற்றும் உலக விடுதலை இயக்கத்திற் கெதிராக என்றுமில்லாத அளவுக்கு, மிகப்பெரிய சதி சர்வதேச ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்டு வருகிறது. ஏகாதிபத்திய வாதிகள் ஒரு உலக யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட முயற்சி செய்ய மாட்டார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. கம்யூனிஸ்ட்டுகள் இந்த அபாயத்தைத் தெளிவாகக் காணவேண்டும்.

ஆனால் இன்றைய சூழ்நிலைகளில் ஆக்கிரமிப்பாளர்களின் நிலமை இரண்டாம் உலகப் போருக்கு முன்பு இருந்ததைவிட, இன்னும் சொல்லப் போனால் முதல் உலகப் போருக்கு முன்பு இருந்ததைவிட முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. கடந்த காலத்தில் யுத்தங்கள் வழக்கமாக சில முதலாளித்துவ நாடுகள் மற்றவர்களை தோற்கடிப்பதில் முடிவடைந் துள்ளன. ஆனால் தோற்றுப் போனவர்கள் தொடர்ந்து வாழ்ந்து தங்களு டைய பலத்தை சிலகாலத்திற்குப் பிறகு மீண்டும் பெற்று ஒரு புதிய ஆக்கிர மிப்பைத் துவங்க முடியும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது; குறிப்பாக ஜெர்மனியின் வரலாற்றில் இதைக்காண முடிகிறது. ஒரு அணு ஆயுத யுத்தமானது இத்தகைய ஒரு வாய்ப்பை எந்த ஆக்கிரமிப்பாளருக்கும்

வழங்காது. ஏகாதிபத்தியவாதிகள் இதை அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். ஒரு எதிர்த் தாக்குதலின் அச்சம், பழிவாங் கப்படுவோம் என்ற அச்சம் அவர்களை ஒரு உலக யுத்தத்தை கட்ட விழ்த்து விடுவதிலிருந்து தடுத்து நிறுத்தியிருக்கிறது. ஏகாதிபத்தியம் முன்பு போல் தனது நிபந்தனைகளை மக்கள் மீது திணிக்க இனியும் முடியாது என்ற அளவுக்கு சோசலிச சமூகம் பலம் பெற்றுள்ளது. இது சர்வதேச உழைக்கும் வர்க்கமும், அனைத்து நாடுகளது மக்களும் பெற்றுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகும்.

தனது கொள்ளையடிக்கும் இயல்பின் காரணமாக சர்வதேச அரங்கில் உள்ள முரண்பாடுகளை யுத்தத்தின் மூலம் தீர்க்கும் தன் விருப்பத்தை ஏகாதிபத்தியம் கைவிட முடியாது. ஆனால் அதேசமயம் அது தானே அழித்துக் கொள்ளக் கூடிய அபாயத்திற்கு தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டிய உண்மையை உணராமல் ஒரு உலக அணு ஆயுத யுத்தத்தை கட்டவிழ்த்துவிடவும் முடியாது.

ஏகாதிபத்தியத்தால் மனித குலத்தை மிரட்டிக் கொண்டிருக்கும் ஒரு உலக யுத்தம் தவிர்க்கப்பட முடியாத ஊழ் விதியல்ல. சோசலிசத்திற்கு ஆதரவாகவும் ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும் வளர்ந்து வரும் சக்திகளின் பலாபல நிலையிலும், யுத்த சக்திகளுக்கு எதிராக சமாதானத் துக்கான சக்திகளின் பலம் அதிகரித்துவரும் நிலையிலும், சோசலிசம் உலகில் முழுவதுமாக வெற்றி கொள்வதற்கு முன்பே, முதலாளித்துவம் உலகில் ஒரு பகுதியில் இருந்து கொண்டிருக்கும் போதே, உலக யுத்தத் திற்கான சாத்தியப்பாட்டை மனித சமுதாயத்தின் வாழ்க்கையில் இல்லாததாக்கிவிட முடியும்.

சந்தேகமின்றி, அத்தகைய ஒரு யுத்தத்தைத் தடுப்பதற்கு, சோசலிச அமைப்பை எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு தொடர்ந்து பலப்படுத்துவதும், தேசிய விடுதலை இயக்கம் மற்றும் சர்வதேச உழைக்கும் வர்க்கம் ஆகிய அனைத்து சக்திகளையும் அணிதிரட்டுவதும் அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டுவதும் அவசியமாகும். சோசலிசம் மற்றும் சமாதானத்தின் நலன்களை உயர்வாக மதிக்கிற யாரும் உலக பிற்போக்கின் கொலைகாரத் திட்டங்களை முறியடிக்கவும் அது ஒரு அணு ஆயுத யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதை தடுக்கவும் கோடிக்கணக்கான மக்களை தன்னுடன் கல்லறைக்கு இட்டுச் செல்வதைத் தடுக்கவும் தேவையான அனைத்தையும் செய்ய வேண்டும். ஒரு அணு ஆயுத யுத்தம் மனித குலத்துக்கும் சோசலிச இலட்சியத்திற்கும் உருவாக்கும் தவிர்க்க முடியாத பின்விளைவுகளைப்பற்றிய ஒரு கறாரான மதிப்பீடு ஒரு புதிய உலகப் போரை தடுப்பதற்கு தங்கள் சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்ய வேண்டிய அவசியத்தை மார்க்சிய—லெனினிய வாதிகளின் முன்னிறுத்தியுள்ளது.

''இரு அமைப்புகளாகப் பிளவுபட்டுள்ள ஒரு உலகில், லெனினால் முன்வைக்கப்பட்டதும், மாஸ்கோ அறிக்கையிலும் 1957-ம் ஆண்டின் சமாதான அறிக்கையிலும் மேலும் விரிவுபடுத்தப்பட்டதும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20 மற்றும் 21-வது காங்கிரஸ் தீர்மானங்களிலும் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளது ஆவணங்களில் இடம் பெற்றுள்ளதுமான வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையிலான சமாதான சகவாழ்வுக் கோட்பாடே சர்வதேச உறவுகளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒரே சரியான அறிவுப் பூர்வமான கொள்கையாகும்'' என்ற 1960-ம் ஆண்டு அறிக்கையின் கோட்பாடுகளை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுதியாக கடைப்பிடித்து வருகிறது.

மாபெரும் லெனினால் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இடைவிடாத போராட்ட உணர்வில் பயிற்றுவிக்கப்பட்ட எங்கள் கட்சி, சாகும் தறுவாயிலுள்ள முதலாளித்துவமானது இன்னும்கூட மனித குலத்துக்கு சொல்ல முடியாதஅழிவுகளை ஏற்படுத்தக் கூடிய திறன் பெற்றிருக்கிறது என்ற லெனினின் எச்சரிக்கையை மனதில் இருத்தியுள்ளது. இந்த அடிப்படையில் சோவியத் யூனியன் தனது பொருளாதாரத்தை மேலும் பெருக்கவும், பாதுகாப்பை மேம்படுத்தவும் அனைத்தையும் செய்து வருகிறது. அது தனது ஆயுத பலத்தைக் கட்டமைத்து ஆயுதந்தாங்கிய படைகளை நிரந்தரமாக தயார்நிலையில் வைத்திருக்கிறது. இருப்பினும் நாங்கள் எங்கள் நாட்டின் அதிகரித்துவரும் வலிமையை யாரையும் அச்சுறுத்தவோ, யுத்த வெறியைத் தூண்டிவிடவோ அல்ல, சமாதானத்தை உறுதிப்படுத்தவும், இன்னொரு உலக யுத்தத்தைத் தடுக்கவும், எங்கள் சொந்த நாட்டையும் பிற சோசலிச நாடுகளையும் பாதுகாக்கவும் மட்டுமே பயன்படுத்துகிறோம்; தொடர்ந்து அவ்வாறே பயன்படுத்துவோம்.

சமாதான சகவாழ்வுக் கொள்கை அனைத்து மக்களது அடிப்படை நலன்களோடு இணைந்தது. அது சோசலிசத்தின் நிலைகளை பலப்படுத்த உதவுகிறது; சோசலிச நாடுகள் சர்வதேச செல்வாக்கு பெற உதவுகிறது; பொதுவுடமையாளர்களின் செல்வாக்கும் மேலாண்மையும் அதிகரிக்க உதவுகிறது.

சமாதான சகவாழ்வு என்பதன் பொருள் சோசலிசம் மற்றும் முதலாளித்துவ சித்தாந்தங்களிடையே சமரசம் என்பதல்ல; அப்படிப்பட்ட கொள்கை மார்க்சிய - லெனினியத்தை கைவிடுவதற்கு இட்டுச் சென்று சோசலிச கட்டுமானத்திற்கு இடையூறாக அமையும். முதலாளித்துவ சித்தாந்தம் ஒருவகையான மாயமான் போன்றதாகும். அதன் மூலம் உழைக்கும் வர்க்க இயக்கம் மற்றும் கம்யூனிச இயக்கத்தின் அணிகளுக்குள்ளேயே ஊடுறுவுவதற்கு ஏகாதிபத்தியம் முயற்சி செய்து கொண்டிருக்கிறது. வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட

அரசுகளிடையே 'சமாதான சகவாழ்வு' என்பது, இரண்டு சமூக அமைப்புக்களிடையே ஒரு விட்டுக் கொடுக்காத சித்தாந்த, அரசியல், பொருளாதாரப் போராட்டத்தையும்-தேவை என மக்கள் கருதினால் ஆயுதப் போராட்டத்தையும் உள்ளடக்கிய-முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டத்தையும், காலனிய மற்றும் சார்பு நாடுகளின் மக்களுடைய தேச விடுதலை இயக்கத்தின் தொடர்ச்சியான முன்னேற்றத்தையும் முன் அனுமானிக்கிறது.

ஒரு உலக யுத்தத்தைத் தடுக்கும் முயற்சிகள் எந்தவகையிலும் உலக கம்யூனிச இயக்கத்தின் சக்திகளையும், தேசிய விடுதலை இயக்கத்தின் சக்திகளையும் பலவீனப்படுத்துவதில்லை; மாறாக பரந்து பட்ட மக்களை கம்யூனிஸ்ட்டுகளின் பின் அணிதிரட்டுகிறது என்பதைத் தான் உண்மை நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. குறிப்பாக, வேறுபட்ட சமூக அமைப்புள்ள அரசுகளிடையே சமாதான சகவாழ்வு என்ற சூழ் நிலைமைகளில்தான் கியூபாவில் சோசலிசப்புரட்சி வெற்றியடைந்தது; அல்ஜீரிய மக்கள் தேசிய விடுதலையை அடைந்தனர்; 40-க்கும் மேற்பட்ட நாடுகள் தேசிய விடுதலையை வென்றெடுத்தன; சகோதரக் கட்சிகள் எண்ணிக்கையிலும் பலத்திலும் வளர்ந்தன; உலக கம்யூனிச இயக்கத்தின் செல்வாக்கு அதிகரித்தது.

சமாதான சகவாழ்வு சூழ்நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு தான் சோசலிச நாடுகள் முதலாளித்துவத்துடனான பொருளாதாரப் போட்டியில் மேலும் மேலும் அதிக வெற்றிகளை ஈட்டிக் கொண்டுள்ளன. நமது எதிரிகள் நமக்கு எதிரான போட்டியில் தாம் வெல்வது கடினம் என்பதை உணர்ந்துள்ளார்கள். அவர்களால் சோசலிச நாடுகளின் துரிதமான பொருளாதார முன்னேற்றத்துக்கு ஈடுகொடுக்க இயல வில்லை. முதலாளித்துவ நுகத்தடியில் சிக்கியிருக்கும் மக்களுக்கு சோசலிச நாடுகளது முன்னுதாரணம் உருவாக்கும் ஈர்ப்பின் முன் ஏகாதிபத்தியவாதிகள் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள்.

சோசலிச நாடுகளின் பொருளாதாரம் முன்னேற முன்னேற சோசலிசத்தின் நற்பயன்களும், உயர்வான தன்மைகளும் உழைக்கும் மக்களின் பொருளாயத மற்றும் ஆன்மீக வளங்களில் மேலும் மேலும் தெளிவாக வெளிப்படும். சோசலிச நாடுகளில் வளர்ந்துவரும் வாழ்க்கைத் தரம் அனைத்து முதலாளித்துவ நாடுகளின் உழைக்கும் வர்க்கத்தையும் கவர்ந்திழுக்கும் காந்தமாக இருக்கிறது. சோசலிச நாடுகளின் சாதனைகள் உழைக்கும் மக்கள் முதலாளித்துவத்தை வென்றிடவும், முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டத்தை விரிவுபடுத்தவும் காரணியாகவும் புரட்சிகர மூலக் கூறாகவும் உள்ளது.

சோசலிசத்தை தழுவியுள்ள மக்கள் மரபுரிமையாகப் பெற்றிருக்கும் கடந்த காலப் பொருளாதாரமும், கலாச்சாரமும் வேறுபட்ட

நிலைகளைக் கொண்டவையாகும். இருந்த போதிலும் ரசியாவும், மக்கள் ஜனநாயக நாடுகளும் எடுத்துக் காட்டாக விளங்குவது போல் சோசலிசம் பிரம்மாண்டமான உற்பத்தி சக்திகளை விழிப்படையச் செய்கிறது. சோவியத் யூனியன் ஏற்கனவே அய்ரோப்பாவின் முன்னணி முதலாளித்துவ நாடுகளை பொருளாதார வளர்ச்சியில் விஞ்சி நிற்பதோடு உலகில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. உலகில் அது முதலிடத்தைப் பெறுவதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை. பிற சோசலிச நாடுகளும் இதே போல மாபெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளன. சோசலிசஅமைப்பு முறையானது இயல்பாகவே மிக முற்போக்காக இருப்பதன் காரணமாக மக்கள் மிக வேகமாக தங்களது பின் தங்கிய நிலையை அகற்ற வழிசெய்கிறது; அதிக அளவில் முன்னேறிய நாடுகளை எட்டிப் பிடிப்பதற்கும் அவற்றோடு சேர்ந்து நடைபோடுவதற்கும் கம்யூனிசத்தைக் கட்டமைப்பதற்கும் வழிவகுக்கிறது.

இவை யாவும், வரலாற்று வளர்ச்சியின் பல்வேறு மட்டங்களிலிருந்த மக்களுக்கு, சோசலிசத்திற்கான பாதையில் முன்னேற்றம் காணத் தூண்டுதல் அளித்தன.

சோசலிசக் கட்டுமானத்தில் உலகநாடுகளின் அனுபவங்களையும் அவற்றின் நிறை குறைகளையும் கணக்கிலெடுத்துக்கொண்டு அவற்றிலிருந்து மிகச்சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பதானது மக்கள் புதிய வாழ்க்கையை நோக்கி முன்னேறச்செய்யும்.

சோசலிச நாடுகளின் உற்பத்தி சக்திகள் எவ்வளவு விரைவாக வளர்ச்சியுறுகின்றனவோ அவ்வளவு விரைவாக அந்நாடுகளின் பொருளாதாரமும் வளர்வதோடு, சமாதானம் மற்றும் சோசலிசத்தின் வெற்றி ஆகியவற்றை உள்ளடக்கிய வரலாற்று வளர்ச்சியின் மீது சோசலிச சமூகத்தின் தாக்கமும் வளர்ச்சியுறுகின்றது.

நமது சகாப்தத்தில், நிலவும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சூழ்நிலைகள், மென்மேலும் பல நாடுகள் சோசலிசப் பாதையில் செல்வதற்கு சாதகமாகவே இருக்கின்றன என்ற அடிப்படைக் கொள்கையை எமது கட்சி பற்றிச் செல்கிறது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் மற்றும் அண்மையில் தேசிய விடுதலை பெற்ற நாடுகள் விசயத்திலும் இது உண்மையான கூற்றாகும்.

உலகப் புரட்சிகர இயக்கமானது முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு அனைத்துக் கண்டங்களிலும் வளர்ச்சியடைந்து வருகின்றது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் வர்க்கத்தின் போராட்டமும், தேசிய விடுதலை இயக்கங்களும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டு, அவை ஒன்றுக்கொன்று உதவுகின்றன.

புரட்சிகரப் போராட்டங்கள் எந்த நாட்டில் நடைபெற்றாலும் அது ஏகாதிபத்தியம் மற்றும் ஏகபோக முதலாளித்துவம் என்கிற பொது எதிரிக்கு எதிரானதாகவே உள்ளது.

உழைக்கும் மக்களும் விவசாயிகளும் அரசியலதிகாரத்தைப் பெறுவதற்கும், சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தை நிர்மாணிப்பதற்குமான போராட்டத்தில் அனைத்து சக்திகளையும் அணிதிரட்டுவதே உலகெங்கிலுமுள்ள மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் பொதுவான இலட்சியமாக உள்ளது. தங்களுடைய போராட்டத்திற்கான போர்த் தந்திரக் கொள்கையை வகுக்கும் போது ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியும், உலகக் கம்யூனிச இயக்கம் முழுவதன் அனுபவத்தையும் நமது இயக்கத்தின் ஒட்டுமொத்தமாக வரையறுக்கப்பட்ட நோக்கங்கள், கடமைகள் ஆகியவற்றின் நலன்களையும் தற்காலத்தில் அதன் பொது வழியையும் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும்.

ஆனால் அதே சமயத்தில், ஒவ்வொரு தனிப்பட்ட நாட்டிலும் சோசலிசத்திற்கான போராட்டத்தின் வடிவங்களையும் முறைகளையும் வகுப்பது அந்த நாட்டின் உழைக்கும் வர்க்கம் மற்றும் அதன் கம்யூனிச முன்னணிப் படையின் உள் விவகாரமாகும். வேறு எந்த சகோதரக் கட்சியாயினும் அதன் உறுப்பினர் எண்ணிக்கை, அனுபவம், அதிகாரம், எதுவாக இருப்பினும் பிறநாடுகளின் புரட்சிப் போராட்டத்துக்கான வடிவங்களையும் முறைகளையும் போர்த்தந்திரங்களையும் வகுக்க முடியாது. புரட்சி என்பது மக்களின் சொந்த இலட்சியமாகும். உண்மையான நிலைமைகளின் துல்லியமான பகுப்பாய்வும், சக்திகளின் பலாபலன்கள் பற்றிய சரியான மதிப்பீடும் ஒரு புரட்சியின் அதிமுக்கிய நிபந்தனைகளாகும். சோசலிசப் புரட்சியின் வெற்றிக்கான போராட்டத்தில் புரட்சிகர மக்களின் உணர்ச்சியார்வம் புறநிலை மற்றும் அகவியல் சூழ்நிலைகள் கனிந்துள்ள போது தடுத்து நிறுத்த முடியாததாகும். அப்படிச் செய்வது சாவுக்கு நிகரானதாக இருக்கும். ஆனால் புரட்சி அதற்குரிய சூழ்நிலைகள் கனியாதிருக்கும் போது செயற்கையாகத் தூண்டிவிடப்பட முடியாது. முதிர்ச்சியடையாத எழுச்சியானது, புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் அனுபவம் கற்பிப்பதைப் போல தவிர்க்க முடியாதபடி தோல்விக்கு இட்டுச் செல்வதாகும். இவ்வுலகில் ஒரு சிறப்பான வாழ்க்கைக்கான போராட்டத்தில் வெற்றியடைவதற்கே உழைக்கும் மக்களை செம்பதாகையின் கீழ் கம்யூனிஸ்ட்டுகள் அணி திரட்டுகிறார்கள்; தீரமிக்க வீரசாகசமும், அர்ப்பணிப்பும் புரட்சிகர யுத்தத்தில் தேவையானவையாயிருந்தபோதிலும் சோசலிசத்தின் உயர்ந்த கருத்துக்களின் வெற்றிக்காக என்று இல்லையெனில் அவை பயனற்றவையாகும்.

தங்களுடைய கம்யூனிஸ்ட் முன்னோடிகளால் தலைமைதாங்கப்பட்டு, புரட்சிகர சூழலை வர்க்க எதிரிக்கு பலமான அடி கொடுப்பதற்கும், புதிய

சமூக அமைப்பை நிறுவுவதற்கும் திறமையாக பயன்படுத்திக் கொள்ளும் எந்த நாட்டின் உழைக்கும் மக்களையும், புரட்சிகர உழைக்கும் வர்க்கத்தையும் ரசியகம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் வாழ்த்தி வரவேற்கிறது. இனியும் தொடர்ந்து வாழ்த்தும்.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் போர்த்தந்திரங்களும் கொள்கைகளும் சர்வதேச அரங்கில் வளர்ந்துள்ள சக்திகளின் பலாபல நிலைமைகளுடனும், முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இன்றைய கட்டத்துடனும் தொடர்புடைய பொதுவான பல அம்சங்களைப் பெற்றுள்ளன. அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது முன்பு தோன்றிய முதலாளித்துவ சமுதாயத்தின் முரண்பாடுகளைத் தீவிரப்படுத்துவதோடு, புதிய முரண்பாடுகளையும் தோற்றுவித்துள்ளது. அரசு ஏகபோக முதலாளித்துவம், ஒரு நாட்டில் ஏகாதிபத்தியத்தின் சமூக அடிப்படையை மேலும் குறுக்குவதற்கும் மிக பலம் வாய்ந்த சிறு ஏகபோக குழுக்களின் கரங்களில் அதிகாரத்தைக் குவிப்பதற்கும் இட்டுச் சென்றுள்ளது. இன்னொரு புறத்தில் இது சோசலிசத்துக்கு மாறிச் செல்வதில் விருப்பம் கொண்டுள்ள, சுரண்டலிலிருந்தும் ஏகபோகத்தின் கட்டுக்குள்ளிருந்தும் விடுபடும் ஆர்வம் கொண்ட உழைக்கும் வர்க்கம், விவசாயிகள், குட்டி முதலாளிகள், உழைக்கும் அறிவுஜீவிகள் மற்றும் முதலாளித்துவ சமுதாயத்தின் மற்ற பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒன்றுபட்ட ஏகபோக எதிர்ப்பு இயக்கத்தை தோற்றுவிக்கிறது.

உலக சமாதானத்திற்காகவும், அணுஆயுதங்களால் ஏற்படும் அழிவைத் தடுப்பதற்காகவும், தேசிய அரசுரிமையைப் பாதுகாப்பதற்காகவும் நடக்கும் போராட்டங்கள், பாசிசத் தாக்குதலுக்கு எதிராக ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக நடக்கும் இயக்கங்கள், விவசாய சீர்திருத்தங்களுக்கான போராட்டங்கள், கலாச்சாரத்தையும் அதுபோன்ற பிறவற்றையும் பாதுகாப்பதற்கான இயக்கங்கள் ஆகிய ஜனநாயக இயக்கங்களின் முக்கியத்துவம் கூர்மையாக வளர்ச்சியடைந்து வருவதே நமது காலகட்டத்தின் சிறப்பம்சமாக இருக்கிறது.

சோசலிசப் புரட்சி தவிர்க்கவியலாவண்ணம் யுத்தத்துடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்று கூறும் அதே சமயம் எங்கள் கட்சி லெனினியக் கொள்கைகள் மற்றும் மாஸ்கோ அறிக்கையில் தெளிவாக்கப்பட்டுள்ள கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடித்து வருகிறது. உலக யுத்தமானது வெற்றிகரமான புரட்சிகளைக் கொண்டு வருகிற போதிலும் யுத்தமில்லாத புரட்சிகளும் முற்றிலும் சாத்தியமே.

கம்யூனிஸ்ட்டுகள் சோசலிசப் புரட்சியின் வெற்றியை உலக யுத்தத்தோடு முடிச்சுப் போட்டால் சோசலிசத்துக்கு அது எந்தவித ஆதரவையும் ஏற்படுத்தாது; மாறாக மக்களை அதனிடமிருந்து தூர விரட்டி

விடும். பயங்கரமான சேதங்களை ஏற்படுத்தும். நவீன யுத்த சாதனங்கள் இருக்கையில் இத்தகைய வேண்டுகோள் நமது எதிரிகளின் விருப்பத்திற்கிணங்க செயல்படுவதாகும்.

உழைக்கும் வர்க்கமும், அதன் முன்னணியான மார்க்சிய-லெனினிய கட்சிகளும் உள்நாட்டுப் போரின்றி சமாதான பூர்வமான வழியில் சோசலிசப் புரட்சிகளை நடத்த முயற்சி செய்கின்றனர். அத்தகைய ஒரு சாத்தியப்பாட்டை உணர்வதானது நாட்டின் தேசிய நலன்களுடனும், உழைக்கும் வர்க்கம், மற்றும் அனைத்து மக்கள் நலன்களுடனும் இணைந்ததாகும். அதே சமயத்தில் புரட்சியை எந்தப் பாதையின் மூலமாக வளர்ப்பது என்பதை முடிவு செய்வது உழைக்கும் வர்க்கத்தை மட்டுமே சார்ந்ததல்ல. சுரண்டும் வர்க்கங்கள் மக்களுக்கு எதிராக வன்முறையில் இறங்கும் போது உழைக்கும் வர்க்கம் சமாதானமற்ற வழிகளில் அதிகாரத்தைக் கைப்பற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறது. இவையாவும் உலக அரங்கிலும் உள்நாட்டிலும் வர்க்க சக்திகளின் அணிவகுப்பு மற்றும் குறிப்பான சூழ்நிலைமைகள் ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது.

இயல்பாகவே, முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறிச் செல்வதற்கு என்ன வழிகள் பயன்படுத்தப்படுகின்றன என்பது முக்கியமல்ல, அத்தகைய மாற்றம் சோசலிசப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பல்வேறு வடிவங்களின் மூலமாகத் தான் சாத்தியமாகும். கம்யூனிஸ்டுகளால் தலைமை தாங்கப்படும் உழைக்கும் வர்க்கத்தின் தன்னலமற்ற போராட்டத்தை உயர்வாக மதித்து வரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி அவர்களுக்கு எல்லாவிதமான ஆதரவையும் உதவியையும் தருவதைத் தனது கடமையாகக் கருதுகிறது.

எங்கள் கட்சி, தேசிய விடுதலை இயக்கத்தை, ஏகாதிபத்திய முகாமை அழிக்கும் ஒரு வலிமை வாய்ந்த சக்தியாகவும், உலகப் புரட்சி இயக்கத்தின் போக்கில் பிரிக்க முடியாத பகுதியாகவும் கருதுகிறது. முன்னாளைய காலனிகளின் மக்கள் இன்று சுயமாக வரலாற்றை உருவாக்கும் முழுமையான அந்தஸ்துக்கு உயர்ந்து, தங்களது தேசிய பொருளாதாரத்தையும் கலாச்சாரத்தையும் முன்னேற்ற முயன்று வருகின்றனர். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கும், அவர்கள் பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்கும், தேசிய விடுதலை இயக்கத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கும், வளர்ப்பதற்கும், அனைத்து, வடிவிலான பழைய மற்றும் புதியவகை காலனியத்திற்கு எதிரான மக்களின் போராட்டத்திற்கும், சோசலிச அமைப்பின் சக்திகளின் வளர்ச்சி பயனுள்ள வகையில் உதவுகிறது.

தேசிய விடுதலை இயக்கம் காலனிய ஆட்சியை இறுதியாக ஒழித்துக் கட்டும் கட்டத்தை அடைந்துள்ளது. காலனியவாதிகளின் நுகத்தடியில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து மக்களும் சுதந்திரத்தை

யும் விடுதலையையும் அடையும் காலம் வெகு தொலைவில் இல்லை. விடுதலை அடைந்த மக்கள் தங்கள் அரசியல் சுதந்திரத்தை உறுதிப் படுத்திக் கொள்வது, பொருளாதாரம் மற்றும்கலாச்சாரத்தில் பின்தங்கிய நிலையைப் போக்குவது, அனைத்து வகையான ஏகாதிபத்தியச் சார் புக்கும் முற்றுப்புள்ளி வைப்பது ஆகிய பிரச்சினைகளை எதிர் கொண் டுள்ளார்கள்.

ஏகாதிபத்தியத்திற்கும், நிலப்பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களுக் கும் எதிரான தீரமிக்க போராட்டத்தின் மூலமும், உழைக்கும் வர்க்கம், விவசாய வர்க்கம், தேசிய முதலாளிவர்க்கம் மற்றும் ஜனநாயக அறிவு ஜீவிகள் போன்ற அனைத்து தேசபக்த சக்திகளையும் ஒரு தேசிய முன்ன ணியில் இணைப்பதன் மூலம் காலனிய நுகத்தடியை தூக்கியெறிந்த நாடுகள், தங்களின் தேசிய புனர் நிர்மாணத்துக்கான இன்றியமையாக் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றன.

தேசிய விடுதலைக்காகப்போராடிக் கொண்டிருக்கும் மக்கள், மற்றும் அரசியல் விடுதலையை ஏற்கனவே வென்றுவிட்ட மக்கள், ஏகாதிபத்தி யத்தின் மூலதனப்படையாக சேவை புரிவதை நிறுத்தி விட்டனர்,அல்லது நிறுத்தி வருகின்றனர். சோசலிச அரசுகள் மற்றும் அனைத்து முற் போக்கு சக்திகளது ஆதரவுடன் அவர்கள் ஏகாதிபத்திய சக்திகள் மற்றும் அதன் கூட்டணிகளை அடிக்கடி தோல்வியடையச் செய்து வருகின்றனர்.

இளம் தேசிய அரசுகள் இரண்டு உலக சமூக அமைப்புகள் போட்டி யிட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இச் சூழ்நிலையானது, அவற்றின் அரசியல் பொருளாதார வளர்ச்சியின் மீதும், எதிர் காலத்தில் அவர்கள் பின்பற்றப் போகும் பாதையின் மீதும் பலமான செல்வாக்கை செலுத்துகிறது. அண்மையில் தேசிய விடுதலையடைந்த நாடுகள் சோசலிச அரசு அமைப்பையோ, முதலா ளித்துவ அரசு அமைப்பையோ சேர்ந்தவையல்ல. அவற்றின் பெரும் பகுதி உலக முதலாளித்துவ அமைப்பில் தனித்ததோர் இடம் பெற் றிருந்தாலும் அவை முதலாளித்துவப் பொருளாதார வட்டத்திலிருந்து இன்னும் உடைத்துக் கொண்டு வெளிவரவில்லை. உலகின் இந்தப்பகுதி முதலாளித்துவ ஏகபோகங்களால் இன்னும் சுரண்டப்பட்டு வருகின்றது.

அரசியல் சுதந்திரம் வெல்லப்பட்ட பின்பு இறையாண்மை பெற்ற இளம் நாடுகளின் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டம் அவர்களது இறுதியான தேசிய மறுமலர்ச்சிக்கும் பொருளாதார சுதந்திரத்திற்குமான போராட்டமாக முன்னணிக்கு வந்துள்ளது. வளரும் நாடுகள் முழுமை யான சுதந்திரமடைவதால் ஏகாதிபத்தியம் மேலும் மோசமாக பலவீனப் படும். அதன் பிறகு தற்போதைய சமனற்ற சர்வதேச உழைப்புப் பிரி வினை என்ற கொள்ளைஅடிக்கும் முறை அழிக்கப்பட்டுவிடும். ''உல கத்தின் கிராமப்புறத்தினைச்'' சுரண்டும் ஏகபோக முதலாளித்துவத்தின்

பொருளாதார அடிப்படை தகர்க்கப்படும். சோசலிச அமைப்பின் சிறப்பான உதவியுடன் வளரும் நாடுகளின் சுய சார்பு பொருளாதார வளர்ச்சி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இன்னொருபலமானஅடியைக்கொடுக்கும்.

சுதந்திரத்தை அடைவதற்கும் அதைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் போராட தேசத்தின் அனைத்து சக்திகளையும் அணி திரட்ட வேண்டியது அவசியமாகும். சுதந்திரத்தை அடைந்த பிறகு தமது ஆதிக்க நிலையை பலப்படுத்திக் கொள்வதற்காக செய்யப்படும் முயற்சிகளில் சில சமயங்களில் வலது சாரி தேசிய முதலாளிகள் ஒரு வலதுசாரி எதிர்ப்புரட்சி ஆட்சியை கொஞ்ச காலத்திற்கு நிறுவுவதில் வெற்றி பெறுகிறார்கள். அதன் விளைவாய் கம்யூனிஸ்டுகளையும்,பிற ஜனநாயகவாதிகளையும் கொடுமைகளுக்குள்ளாக்கத் தொடங்குகிறார்கள். இருப்பினும் அத்தகைய ஆட்சிகள் தேசிய முன்னேற்றத்திலும், உயர் நிலையான தேசியபிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் பிரதானமாக பொருளாதார சுயசார்பை அடைவதிலும் உற்பத்தி சக்திகளை வளர்ப்பதிலும் தடையாய் இருக்கிறகாரணத்தினால் அவை அற்ப ஆயுள் உடையனவாய் இருக்கின்றன. அதனால்தான், ஏகாதிபத்தியவாதிகளின் தீவிரமான ஆதரவைப் பெற்றிருந்த போதிலும் கூட இவ்வாட்சிகள் மக்கள் போராட்டங்களின் விளைவாகத் தூக்கியெறியப்படுகின்றன.

காலனிய நுகத்தடியைத் தூக்கியெறிந்துவிட்ட மக்களோடும் அரைக் காலனிய நாடுகளின் மக்களோடும் உள்ள தோழமைக் கூட்டணியை ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தனது சர்வதேசக் கொள்கையின் அடிப்படைகளில் ஒன்றாகக் கருதுகிறது. காலனிய முறையை முழுமையாக ஒழித்துக்கட்டுவதற்குப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கும், தேசிய விடுதலையை வென்று அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பாதையில் பயணப்பட்டுள்ள மக்களுக்கும் உதவுவதைத் தனது சர்வ தேசக் கடமையாக எங்கள் கட்சி கருதுகிறது. மக்களின் சுதந்திரத்துக்கான புனித யுத்தத்திற்கு ரசியா எப்போதும் ஆதரவளித்து வருகிறது. தேசிய விடுதலை இயக்கத்துக்கு எல்லா விதமான தார்மீக,பொருளாதார,இராணுவ மற்றும் அரசியல் ஆதரவை தந்துவருகிறது.

அல்ஜீரிய மக்கள் பிரெஞ்சுக்காலனியவாதிகளை எதிர்த்துப் போராடிய போது ரசிய மக்கள் பேராதரவளித்தனர். அடிமை முறையை எதிர்த்து ஏமன் நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்தபோது அவர்களுக்கு முதன் முதலாக ஆதரவுக் கரம் நீட்டியவர்கள் நாங்களே. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடம் ஆதரவு பெற்றுவந்த டச்சு ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்து மேற்கு ஐரிய விடுதலைக்காகப்போராடிய இந்தோனேசிய மக்களின் போராட்டத்திற்கு நாங்கள் பல வகைகளிலும் உதவி வந்துள்ளோம். வடக்கு கலிமாந்தன் (North Kalimanton) விடுதலைக்காக இந்தோனேசிய மக்கள் நடத்தும் போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்.

புதிய, பழைய காலனியவாதிகள் தென் கிழக்கு ஆசிய மக்களின் விடுதலை இயக்கத்துக்கு எதிராக சூழ்ச்சிகளிலும், சதியாலோசனை களிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். எங்களது அனுதாபமும் ஆதரவும் எப்போதும் தங்களது தேசிய விடுதலைக்காகவும் சுதந்திரத் திற்காகவும் போராடுபவர்களுக்கே மாறாது இருந்து வந்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களது பொம்மை அரசு களின் அனைத்து முயற்சிகளையும் மீறி, தெற்கு வியட்னாம் மற்றும் தென் கொரிய மக்கள் தங்கள் போராட்டத்தில் வெற்றி பெற்று, தங்களுடைய நாட்டுடன் திரும்ப ஒன்றுபடுவார்கள் என்பதில் நாங்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளோம்.

எங்கள் கட்சி புரட்சியை ஏற்றுமதி செய்வதற்கு எதிராக இருக்கும் அதே வேளையில் எதிர்ப்புரட்சி ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடுக்கவும் தேவையான அனைத்தையும் எப்போதும் செய்து வந்துள்ளது. நமது காலத்தின் மாபெரும் புரட்சிகர சக்திகளான சோசலிசம் மற்றும் கம்யூ- னிசத்தை கட்டமைத்துக் கொண்டிருக்கும் மக்கள், சர்வதேச உழைக்கும் வர்க்க இயக்கம், தேசிய விடுதலை இயக்கம் ஆகிய மூன்றின் செயல் பாட்டு ஒற்றுமையும் ஒன்றிணைப்பும்தான் ஏகாதிபத்தியத்திற்கெதிரான மக்கள் போராட்டத்தின் அடிப்படையும், அவர்கள் வெற்றிக்கு உத்தர வாதமளிப்பதும் ஆகும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

சமீப ஆண்டுகளின் உலக வளர்ச்சிப் போக்கு பெற்றுள்ள குறிப்பிடத் தக்க நடை முறை முடிவுகள் கம்யூனிச இயக்கத்தின் கொள்கையின் சரியான தன்மையை முழுமையாக உறுதிப்படுத்தியுள்ளது. இக் கொள் கையை சரியாக புரிந்து கொண்டதன் காரணமாக ஏகாதிபத்தியத்திற் கெதிராக சமாதானத்துக்காகவும், தேசிய சுதந்திரத்திற்காகவும், சோசலிசத்திற்காகவும் போராடிக் கொண்டிருக்கும் சக்திகள் புதிய வெற்றிகளை ஈட்டியுள்ளன. ரசிய கம்யூனிஸ்ட் கட்சி இக் கொள்கையை நிலையாகவும் உறுதியாகவும் பின்பற்றுவதை தனது கடமையாக கருதுகிறது.

இக் கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்கான எந்த அடிப்படை யும் இல்லையென்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

இதைத் தவிர கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சி பிரதிநிதி களது கூட்டத்தயாரிப்பு காலத்திலும், கூட்டத்திலும், மாஸ்கோ அறிக்கை மற்றும் பிரகடனங்களில் குறிப்பிட்டுள்ள உலக கம்யூனிச இயக்கத்தின் கொள்கையினைச் சமீப ஆண்டுகளில் செழுமைப்படுத்தி யுள்ள புதிய அம்சங்களைப் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வது உதவியாக இருக்கும் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கருதுகிறது,

தோழர்களே, உங்கள் கடிதத்தில், சோசலிச நாடுகளின் அய்க்கியத்தின் உறுதியையும் கம்யூனிச இயக்கத்தின் அய்க்கியத்தையும் பலப்படுத்துவதுதான் நமது அனைத்து சாதனைகளுக்கும் உத்தரவாதமாகும் என்று மிகச் சரியாகவே குறிப்பிட்டுள்ளீர்கள். சமீபகாலங்களில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தனது பேராயங்களிலும், சர்வதேச கம்யூனிஸ்ட் கூட்டங்களிலும் மீண்டும் மீண்டும் மார்க்சிய—லெனினிய கட்சிகளிடையே உறவுகள் தொடர்பான கொள்கைகள் பற்றிய தனது கருத்தை வெளிப்படுத்தி வந்துள்ளது. கம்யூனிச இயக்கத்தில், சோசலிச சமூகத்தில் உள்ளதைப் போலவே சோசலிச நாடுகளின் அனைத்து கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளும் எப்போதும் முழுமையான சமத்துவம் உடையவையாக இருந்து வந்திருக்கின்றன என்பதை உலகம்முழுவதும் காண வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். கம்யூனிச இயக்கத்தில் உள்ள கட்சிகளில் ''உயர்ந்தவை', மற்றும் ''தாழ்ந்தவை'' என்று எவையும் இல்லை. அப்படியிருக்கவும் முடியாது. எந்த ஒரு கட்சியின் ஆதிக்கம் அல்லது எந்த ஒரு கட்சியின் மேலாதிக்க வெளிப்பாடுகள் எதுவாக இருந்தாலும் அது சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் இயக்கத்துக்கு நன்மை பயக்காது. அதற்கு மாறாக அது தீங்கையே விளைவிக்கும்; அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளும் சுதந்திரமானவை; சமமானவை; அனைத்துமே கம்யூனிச இயக்கத்தின் எதிர்காலத்துக்கும் அதன் வெற்றிகளுக்கும் பின்னடைவுகளுக்கும் பொறுப்பேற்பவை. அனைத்துமே தங்கள் உறவுகளை பாட்டாளி வர்க்க சர்வதேசியம் மற்றும் பரஸ்பர உதவி அடிப்படையில் கட்டமைத்துக் கொள்ள வேண்டும்.

அனைத்து கட்சிகளிடமும் அவை பெரிதானாலும் சிறிதானாலும் பாட்டாளிவர்க்க சர்வதேசியம் ஒரே மாதிரியான சமமான கோரிக்கைகளை முன் வைக்கிறது; யாருக்கும் எந்த ஒரு விதி விலக்கையும் அளிப்பதில்லை என்ற அடிப்படையிலே நாங்கள் செயல்பட்டு வருகிறோம். சோசலிச நாடுகள், உலக கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் இயக்கம் முழுவதின் ஒற்றுமையின் நலன்களோடு ஒத்திசைந்த மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளின் அடிப்படையில் தங்கள் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் ஒரே மாதிரியான அக்கறையை அனைத்து சகோதரக் கட்சிகளும் காட்ட வேண்டும்.

உலக சோசலிச அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும், மார்க்சிய-லெனினிய கட்சிகளிடையே சரியான உறவுகள் பற்றிய பிரச்சினைக்கு சிறப்பான முக்கியத்துவம் அளிக்கின்றன. சோசலிச நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் மற்றும்தொழிலாளர் கட்சிகள், ஆளும் கட்சிகளாக இருக்கின்றன. இந்த அரசுகளின் வருங்காலத்துக்கும் மக்களின் வருங்காலத்துக்கும் அவை பொறுப்பானவை. இத்தகைய சூழலில் கட்சிகளுக்கிடையே உள்ள உறவுகளில் மார்க்சிய—லெனினிய கோட்பாடுகளை மீறுவ

தென்பது கட்சிகளின் நலன்களை மட்டுமின்றி பரந்துபட்ட மக்களின் நலன்களையும் பாதிக்கக் கூடியதாகும்.

நமது இலட்சியத்தின் உயர்ந்த நலன்களால் வழிகாட்டப்பட்டு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்டாலினின் தனிநபர் வழிபாட்டின் பின்விளைவு களை ஒழித்துக்கட்டி, சகோதரக் கட்சிகளிடையே உறவுகளில் சமத்துவம் மற்றும் சோசலிச நாடுகளின் இறையாண்மையை மதிப்பது என்ற லெனி னியக் கொள்கையை மீட்பதற்கான அனைத்தையும் முழுமையாகச் செய் திருக்கிறது. இது சோசலிச சமூகம் முழுவதின் ஒற்றுமையைப் பலப்படுத் துவதில் மிகப்பெரிய சாதகமான பங்கை ஆற்றியுள்ளது. சமத்துவம், ஒவ் வொரு அரசின் இறையாண்மையையும் மதிப்பது, பரஸ்பர உதவிமற்றும் சகோதரபூர்வமான ஒத்துழைப்பு, ஒவ்வொரு நாடும் தனது சர்வதேசக் கடமையை தானே முன்வந்து நிறைவேற்றுவது ஆகியவற்றின் அடிப் படையில் நமது நட்பை பலப்படுத்துவதற்கு சாதகமான சூழ்நிலை உரு வாக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் சோசலிச சமத்துவம் என்பது பொதுவான கொள்கையைக் கூட்டாக வகுப்பதில் சமமான உரிமையைப் பெற்றிருப்பது என்று மட்டுமல்லாது, சோசலிச சமூகம் முழுவதின் எதிர் காலத்தைப் பற்றியும் சோசலிச நாடுகளின் சகோதரக் கட்சிகளுக்கு சம மான பொறுப்பு உண்டு என்றும் பொருள்படும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

முதலாளித்துவத்திலிருந்து உடைத்துக்கொண்டு வெளிவரும் நாடு களிடையே, தங்களது முயற்சிகளை சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தைக் கட்டமைப்பதில் ஒன்று குவிப்பதற்காக மிக நெருங்கிய ஒத்துழைப்பு அவசியம் என்று தோழமைக் கட்சிகளின் மாஸ்கோ கூட்டத்தின் அறிக்கை வலியுறுத்துகிறது. தேசிய நலன்களும், சோசலிச அமைப் பின் ஒட்டு மொத்த நலன்களும் ஒத்திசைந்து ஒன்றுபடுகின்றன. பிற சோசலிச நாடுகளுடன் பரஸ்பர உதவி மற்றும் உண்மையான சமத்துவம் என்ற அடிப்படையில் நெருக்கமாக ஒத்துழைப்பதன் மூலமே ஒவ்வொரு நாடும் தனது தேசியக் கடமைகளை சிறப்பாக நிறைவேற்ற முடியும் என் பதை சந்தேகத்திற்கிடமற்ற முறையில் வாழ்க்கை நிருபித்துக் காட்டி யுள்ளது.

நமது ஒற்றுமை மற்றும் ஒன்றிணைந்த செயல்பாடுகள் தன்னெழுச்சி யாகத் தோன்றியவையல்ல. அவை நமது புறநிலைத் தேவையின் நிர்ப் பந்தம் காரணமாகவும், உணர்வுபூர்வமான நடவடிக்கைகளின் விளை வாகவும், மார்க்சிய—லெனினியக் கட்சிகளின் சர்வதேசியக் கொள்கை களுக்கு ஏற்பவும் தமது அணிகளை அய்க்கியப்படுத்துவதற்கான அவர்களின் இடைவிடாத அக்கறையின் காரணமாகவும் தோன்றியவை யாகும்.

சோசலிச நாடுகளுக்கிடையேயான உறவுகளில், நமது ஒத்துழைப்பின் வடிவங்கள் மற்றும் முறைகள் பற்றிய பிரச்சினைகளிலும், சர்வதேச கம்யூ

னிஸ்ட் இயக்கம் மற்றும் உள்நாட்டு நிர்மாணப்பணிகள் பற்றிய பிரச்சினைகளிலும் வேறுபட்ட அணுகுமுறைகள் இருக்கலாம்என்றஉண்மையை நாங்கள் உணராமல் இல்லை. உலக சோசலிச அமைப்பைச் சார்ந்த நாடுகள் புதிய சமுதாயத்தைக் கட்டமைப்பதில் பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. அத்துடன் வெளியுலகத்தோடு உறவை வளர்த்துக் கொள்வதில் அவர்களுடைய அனுபவங்கள் எல்லா வகையிலும் ஒன்றாக இல்லை. மார்க்சிய-லெனினியத்தின் சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சில தனிப்பட்ட சகோதரக் கட்சிகள் மேற்கொண்ட வேறுபட்ட அணுகு முறையிலிருந்து இந்த வேறுபாடுகள் தோன்றலாம் என்பதற்கான சாத்தியம் இல்லையென்று ஒதுக்கிவிடக்கூடாது. குறிப்பிட்ட தேசிய அம்சங்களின் பங்கை மிகைப்படுத்துவது மார்க்சிய-லெனினியத்திலிருந்துவிலகிச் செல்வதற்கு இட்டுச் செல்லக்கூடும். தேசிய அம்சங்களைப்புறக்கணிப்பது வாழ்க்கையிலிருந்தும் மக்களிடமிருந்தும் தனிமைப்படுவதற்கும் சோசலிசத்தின் இலட்சியத்திற்கு தீங்கு விளைவிப்பதற்கும் இட்டுச் செல்லக் கூடும்.

நமது பொது இலட்சியத்திற்கு சேதம் விளைவிக்காத வகையிலும் கொள்கை வழியில் நின்றும் வேறுபாடுகளை தீர்ப்பதற்கான வழிகளையும் முறைகளையும் காண்பதற்கு இடைவிடாத முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும் என்பதையே இவை யாவும் உணர்த்துகின்றன.

கம்யூனிஸ்ட்டுகளாகிய நாம் நமக்கிடையே விவாதித்துக் கொள்ள லாம். ஆனால் அனைத்து சூழ்நிலைகளிலும் நமது புனிதமான கடமை, நமது நாட்டு மக்களுக்கு சோசலிச சமூகத்தின் அனைத்து மக்களுடனும் நெருக்கமான ஒற்றுமை உணர்வை போதிப்பதாகவே தொடர்ந்து இருந்து வருகிறது. கம்யூனிஸ்ட்டுகள் மக்களிடையே தங்கள் சொந்த நாட்டை நேசிப்பதை மட்டுமல்லாமல் சோசலிச சமூகம் முழுவதன் மக்களையும் மற்றும் அனைத்து மக்களையும் நேசிக்க பயிற்றுவிக்கவேண் டும். அவர்கள் எந்த சோசலிச நாட்டில் வசித்துக் கொண்டிருந்தாலும் உலக முழுவதுமுள்ள உழைக்கும் மக்களுக்கான தங்களது சகோதரக் கடமையை ஒவ்வொரு ஆண், பெண்ணுக்கும் ஊட்டி வளர்க்கவேண்டும் இதைச் செய்யத் தவறுவது என்பது மார்க்சிய - லெனினியக் கட்சிகள் மற்றும் சோசலிசத்தை நிர்மாணித்து வரும் மக்கள் ஆகியோரது அய்க்கியத்தை-எல்லாவற்றுக்கும் மேலாக நமது அய்க்கியத்தை - போற்றி வளர்க்க வேண்டிய தேவையை உள்ளடக்கிய கம்யூனிஸ்டுகளின் முதல் விதியையே பின்பற்றத் தவறுவதாகும்.

எந்தச் சூழ்நிலையிலும், சித்தாந்த மற்றும் போர்த்தந்திர வேறு பாடுகள், தேசிய உணர்வுகளையும், தவறான எண்ணங்களையும், நம்பிக்கையின்மையையும் கருத்து வேறுபாடுகளையும் தூண்டிவிடு வதற்குப் பயன்படுத்தப் படக் கூடாது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சி எங்களது நாட்டு மக்களிடையே சகோதர சீன மக்களிடமோ

அல்லது பிற மக்களிடமோ விரோதத்தை வளர்க்கக் கூடிய எந்த ஒரு நடவடிக்கையையும் எடுத்ததில்லை; எக்காலத்திலும் எடுக்காது என்பதையும் முழுப்பொறுப்புடன் பிரகடனப்படுத்துகிறோம். மாறாக எல்லா சூழ்நிலைகளிலும் எங்கள் கட்சி சர்வ தேசியக் கருத்துக் களையும், நல்ல நட்புறவையும் உலகின் அனைத்து மக்களிடத்தும், சோசலிச நாடுகளது மக்களிடத்தும் உறுதியாகவும், தொடர்ந்தும் பிரச் சாரம் செய்து வந்திருக்கிறது. இதை வலியுறுத்துவது முக்கியம் என்று நாங்கள் கருதுகிறோம். மேலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியும் இந்தக் கண்ணோட்டத்தைப் பகிர்ந்து கொள்கிறது என்று நம்புகிறோம்.

சர்வதேச கம்யூனிச இயக்கம், உழைக்கும் வர்க்க இயக்கம் மற்றும் தேசிய விடுதலை இயக்கம் ஆகியன ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்திற்காக மக்களைத் திரட்டுவதற்கான அனைத்து முயற்சி களையும் ஒருங்கிணைக்க வேண்டியது அவசியமாகும். மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரால் வடிக்கப்பட்ட 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' என்ற போர்க்குணமிக்க முழக்கம் ஏகாதிபத்திய-எதிர்ப்பு வர்க்க உணர்வின் அடிப்படையில் ஒற்றுமை என்பதைப்பொருள் கொள் கிறதே தவிர தேசிய இன, நிற, புவியியல் பகுதி அடிப்படையில் அல்ல. ஏகாதிபத்தியத்திற்கெதிரானபோராட்டத்தில் மக்களை அய்க்கியப்படுத்து வதற்கு ஒரு குறிப்பிட்ட கண்டத்தை சார்ந்தவர்களா என்பது பிரதான மாக இருந்தால் - ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா அல்லது அய்ரோப்பா எதுவாக இருந்தாலும் சரி-அது போராடும் மக்களுக்கு தீங்கு விளைவிப்பதாகவே அமையும். இது ஒன்றிணைப்பதற்கு மாறாக, அய்க்கியப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி சக்திகளை யதார்த் தத்தில் பிளவுபடுத்துவதாகத்தான் இருக்கும்.

உலக கம்யூனிச இயக்கத்தின் பலம் மார்க்சிய-லெனினியத் திற்கும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் உண்மையாக இருப் பதில் தான் அடங்கியுள்ளது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிய—லெனி னியத்திலிருந்து விலகிச் செல்லும் போக்கையும், சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்துப் போராடி வந்துள்ளது; இனியும் தொடர்ந்து போரா டும். வலது சந்தர்ப்பவாதம் இடது சந்தர்ப்பவாதம் ஆகியவற்றை எதிர்த்து இரண்டு முனைகளிலும் போராடுவதன் அவசியத்தைக் குறிப்பிட்டுக்காட்டும் 1960-ம் ஆண்டு அறிக்கையின் கொள்கைகளை நாங்கள் உறுதியாகப் பின்பற்றி வருகிறோம். உலக கம்யூனிச இயக்கத்தில் பிரதான அபாயம் திருத்தல்வாதம் என்று அறிக்கை மிகச் சரியாகவே கூறும் அதே சமயத்தில் குறுங்குழுவாதம் மற்றும் வறட்டு வாதம் ஆகியவை பிரதான அபாயமாக மாறலாம் என் பதால் அவற்றை எதிர்த்த தீர்மானகரமான போராட்டத்தைத் தொடுக்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டுகிறது.

மார்க்சிய-லெனினிய அடிப்படையில் உலக கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள எங்கள் கட்சி, திரிபுவாதம் எந்த அளவுக்கு அபாயகரமானதோ அந்த அளவுக்கு அபாயகரமான வலது மற்றும் இடது சந்தர்ப்பவாதம் ஆகிய இரண்டையும் எதிர்த்துத் தொடர்ந்து தீர்மானகரமாக போராடும். கம்யூனிச இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடு மற்றும் போர்த்தந்திரம் பற்றிய கொள்கைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் விட்டுக் கொடுக்காது கறாராக இருந்து கொண்டும், திருத்தல்வாதம் மற்றும் குறுங்குழு வாதம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடிக் கொண்டும் இருக்கும் அதே சமயத்தில், நமது ஒற்றுமைக்கு குறுக்கே நிற்கும் அனைத்து தடைகளையும் நீக்கி மாறுபட்ட கருத்துக்கள் கொண்ட பிரச்சினைகள் பற்றி தோழமை ரீதியான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள நாங்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

அவ்வாறு செய்யும் போது மார்க்சிய கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான எந்தத் தவறையும் விமர்சிக்க நேர்ந்தால் சகோதரக் கட்சிகளும், கம்யூனிச இயக்கத்தின் சர்வதேச மாநாடுகளும் அத்தகைய தவறுகளினால் ஏற்படும் அபாயத்தை சுட்டிக்காட்டும் நோக்கத்தை பின்பற்ற வேண்டும், அத்தவறுகளை களைய உதவ வேண்டும், எப்போதும் தவறுகளைப் பற்றியே திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருக்கக் கூடாது என்ற அடிப்படையை பின்பற்றுகிறோம். நமது இயக்கத்தின் ஒன்று அல்லது மற்றொரு பிரிவை சிதைப்பதோ வெட்டிக் குறைப்பதோ அல்ல, மாறாக புரட்சிகர சக்திகளின் முழுமையான அய்க்கியத்தை எளிதாக்கவே நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். இயல்பாகவே கம்யூனிஸ்டுகள் மார்க்சிய—லெனினியக் கோட்பாட்டின் கொள்கை பற்றிய அம்சங்களில் சலுகைகளை அனுமதிக்க முடியாது.

ஒரு சர்வதேச கட்சி என்ற முறையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி அனைத்து நாடுகளிலுமுள்ள மார்க்சிய—லெனினியக் கட்சிகளின் போராட்டங்களில் குவிந்துள்ள அனுபவங்களைக் கவனமாகப் பரிசீலிக்கிறது. பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிற முதலாளித்துவ நாடுகளின் உழைக்கும் வர்க்கத்தாலும் அதன் புரட்சிகர முன்னணியான கம்யூனிஸ்ட் கட்சிகளாலும் நடத்தப்பட்டு வரும் போராட்டத்தை மிக உயர்வாக மதிக்கிறோம். அதே போல ஏகாதிபத்திய ஏக போகங்கள், காலனியம் மற்றும் புதுக்காலனியம் ஆகியவற்றின் ஆதிக்கத்திலிருந்து தேசிய மற்றும் சமூக விடுதலையைப் பெற ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் நடத்திவரும் தீரம் மிக்க போராட்டங்களையும் பெரிதும் மதிக்கிறோம்.

தங்களது மக்களின் மகிழ்ச்சிக்காகப் போராடும் முன்னணிப் படைப் பிரிவுகளாகவும், செல்வாக்கு மிக்க தேசிய சக்திகளாகவும், கம்யூனிஸ்ட்

கட்சிகள் வளர்ந்துள்ளன. கம்யூனிஸ்டுகளின் உறுதியைக் குலைக்கும் முயற்சியில் பிற்போக்காளர்கள் அவர்களுக்கு அடிமேல் அடி கொடுப்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. எதிர்ப்புரட்சியாளர்கள் கம்யூனிஸ்டு இயக்கத்திற்கெதிரான தங்கள் போராட்டத்தில், கம்யூனிஸ்டு கட்சிகள் தேசிய சக்திகள் அல்ல என்றும், இன்னொரு நாட்டின் கொள்கைகளை சுமந்து திரிபவர்கள் என்றும், இன்னொரு நாட்டின் கைக்கருவி என்றும், ''மாஸ்கோவின் கையாட்கள்'' என்றும் விலை போகாத கடைச்சரக் காகிப் போய் விட்ட பொய்களைக் கூறி வருகிறார்கள். பெருகிவரும் கட்சிகளது செல்வாக்கைக் குறைப்பது, மக்கள் அவர்களை சந்தேகிக்கச் செய்வது மற்றும் கம்யூனிஸ்டுகளை கொடுமை செய்வதை நியாயப் படுத்துவது ஆகிய துர்நோக்கங்களுடன் ஏகாதிபத்திய வாதிகள் இதைச் செய்து வருகின்றனர்.

இருந்த போதிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் தேசிய நலன்களின் பாதுகாவலர்கள், அதை உயர்த்திப் பிடிப்பவர்கள், மக்களின் நலனுக்கான போராட்டத்தில் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தையும், தேச பக்தியையும் இணைக்கும் உறுதிமிக்க தேசபக்தர்கள் என்பதை நேர்மையுள்ள அனைத்து ஆண்களும் பெண்களும் அறிவார்கள். ரசிய கம்யூனிஸ்ட் கட்சி முதலாளித்துவ நாடுகளில் வீரமிக்க போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் தனது சகோதரர்களுக்கு எல்லாவகையிலும் உதவுவதையும் அவர்களுடனான சர்வதேச ஒற்றுமையைப் பலப்படுத்து வதையும் தனது கடமையாகக் கருதுகிறது.

இவையாவும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் யுத்ததந்திர, போர்த் தந்திரக் கோட்பாடுகள் பற்றி தற்போது நிலவும் முக்கியமான கேள்விகள் மீது எமது பொதுவான—இந்தக் கடிதத்தில் தொட்டுக்காட்டுவது அவசியம் என்று கருதிய—சில கருத்துக்களாகும்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் தற்போதைய கொள்கை பற்றி தோழமைக் கட்சிகளின் பிரகடனத்திலும், அறிக்கையிலும் வெளிப்படுத்தி யிருப்பது மட்டுமே சரியானது என்ற உறுதியான நம்பிக்கையுடன், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகளிடை யிலான பேச்சுவார்த்தைகளில் கீழ்க்கண்ட அவசரப் பிரச்சினைகள் பற்றி விவாதிப்பது பொருத்தமானதாக இருக்கும் என்று நாங்கள் கருது கிறோம்.

அ) நமது சகாப்தத்தின் பிரத்தியேகமான பிரதான அம்சமாகிய உலக சோசலிச அமைப்பின் ஆற்றலை மேலும் பலப்படுத்துவதற்கான போராட்டமும் அது மனித சமுதாய வளர்ச்சியில் தீர்மானகரமான காரணியாக மாறுவதும் தொடர்பான பிரச்சினைகள். முதலாளித் துவத்துடனான சமாதானபூர்வமான பொருளாதாரப் போட்டியில் சோசலிச நாடுகள் வெற்றியை ஈட்டுவதை எவ்வாறு துரிதமாகவும் சிறப்பாகவும் செய்வது என்பதை நாம் கூட்டாக விவாதிக்க முடியும்.

ஆ) சமாதானத்துக்கும், சமாதான சகவாழ்வுக்குமானபோராட்டம் தொடர்பான பிரச்சினைகள். உலக அணு ஆயுத யுத்தத்தைத் தடுப் பதற்கான போராட்டத்திற்கு அனைத்து சமாதானத்தை விரும்பும் சக்திகளின் முயற்சிகளையும் ஒருங்கிணைக்க வேண்டுவதன் அவசியம். சமாதானத்தின் ஆதரவாளர்களின் பரந்துபட்ட முன்னணியை உருவாக் குவது, பலப்படுத்துவது, ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புரட்சி சாரத்தை அம்பலப்படுத்துவது, ஏகாதிபத்தியத்தின் ஒரு புதிய உலகயுத்தத்துக் கான தயாரிப்பு வேலைகளுக்கு எதிராகப் போராடுவதற்கு பரந்துபட்ட மக்களை அணிதிரட்டுவது, விழிப்புணர்வை உயர்த்துவது, பிற்போக்கு மற்றும் யுத்த சக்திகளை தனிமைப்படுத்தி அவர்களுடைய ஆக்கிரமிப்புத் திட்டங்களை முறியடிப்பது, வேறுபட்ட சமூக அமைப்பைக் கொண்ட அரசுகளிடையே சமாதான சகவாழ்வு என்ற லெனினியக் கொள்கையை சர்வதேச உறவுகளில் வலியுறுத்துவது, பொதுவான முழுமையான படைபலக்குறைப்புக்கும் இரண்டாம் உலக யுத்தத்தின் மிச்ச சொச்சங் களை அழித்தொழிப்பதற்கும் போராடுவது.

இ) அமெரிக்காவினால் தலைமைதாங்கப்படும் ஏகாதிபத்தியத்திற் கெதிரான போராட்டம் பற்றிய பிரச்சினைகள். உலக பொருளாதாரத்தில் முதலாளித்துவ அமைப்புமுறை முழுவதிலும் வளர்ந்துவரும் நிலையற்ற தன்மை முதலாளித்துவத்தின் பலவீனமடைந்து வரும் நிலை, முதலாளித்துவத்தின் தீவிரமடைந்துவரும் முரண்பாடுகள், எல்லாவற்றுக் கும் மேலாக மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையே உள்ள முரண் பாடுகள் மற்றும் முதலாளித்துவத்தில் தீவிரமடைந்துவரும் சித்தாந்த மற்றும் அரசியல் நெருக்கடிகள் ஆகியவற்றை நமது இலட்சியத்திற்காக பயன்படுத்திக் கொள்வது. முதலாளித்துவ நாடுகளில் ஏகபோகங் களுக்கு எதிராகவும், சமூக விடுதலைக்காகவும், மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழிப்பதற்காகவும், மக்களின் சுதந்திரத்தையும் ஜனநாயக உரிமைகளையும் விரிவுபடுத்துவதற்காகவும் போராடும் உழைக்கும் மக்களின் புரட்சிகரப் போராட்டத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் ஆதரிப்பது.

ஈ) தேசிய விடுதலை இயக்கம் தொடர்பான பிரச்சினைகள் பற்றி. மக்களின் தேசிய விடுதலை இயக்கத்திற்கு ஆதரவும் அதன் அதிகபட்ச வளர்ச்சியும். அனைத்து வடிவங்களிலுமுள்ள காலனியம் மற்றும் நவீன காலனியம் ஆகியவற்றின் முழுமையான இறுதியானமுடிவுக்கான போராட்டம். தேசிய விடுதலை அடைந்த நாடுகளுக்கும், காலனியத் துக்கெதிராக போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கும் ஆதரவளிப்பது. இந்த நாடுகளுடனான பொருளாதார மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை அதிகரிப்பது.

உ) சோசலிச சமூகம் மற்றும் கம்யூனிச இயக்கத்தின் அணி களிடையே இணைப்பையும் அய்க்கியத்தையும் உறுதிப்படுத்துவது

தொடர்பான பிரச்சினைகள் பற்றி, கம்யூனிசத்திற்கெதிரான போராட்டத்தில் ஏகாதிபத்திய பிற்போக்குவாதிகள் ஒன்று திரண்டிருக்கும் குறிப்பான சூழ்நிலைகளில் நமது காலத்தின் மாபெரும் செல்வாக்கு பெற்ற அரசியல் சக்தியான சர்வதேச கம்யூனிச இயக்கத்தை எல்லாவழிகளிலும் உறுதிப்படுத்துவதன் அவசியம். இந்த ஒற்றுமையைக் குலைக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் தடுப்பது, கூட்டாக வகுக்கப்பட்ட முடிவுகளையும், மதிப்பீடுகளையும் அனைத்து சகோதரக் கட்சிகளும் உறுதியாகப் பின்பற்றுவது, மார்க்சிய—லெனினியத்தின் ஆக்கபூர்வ வளர்ச்சி மற்றும் பொதுவுடமை இயக்கத்தின் தொடர்ந்த வெற்றிகளுக்கான போராட்டம், மார்க்சிய—லெனினியத்தை அதன் தூயவடிவில் பாதுகாப்பதற்கு அத்தியாவசிய நிபந்தனையாய் இருக்கும் திரிபுவாதம் மற்றும் வறட்டுசூத்திரவாதத்திற்கெதிரான போராட்டத்தைத் தொடர்வது, பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய கோட்பாடுகளின் அடிப்படையில் சகோதரக் கட்சிகளிடையே உறவுகளை வளர்ப்பது, ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும் பிற்போக்கிற்கு எதிராகவும் சித்தாந்த அரசியல் போராட்டத்தை தீவிரப்படுத்துவதற்கான கூட்டு நடவடிக்கைகளை வகுப்பது.

உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த அனைத்துப் பிரச்சினைகளையும், மாஸ்கோ கூட்டங்களது முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான போராட்டக் கடமைகளிலிருந்து தோன்றும் நமக்குப் பொதுவான அக்கறையுள்ள அனைத்து பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகளின் போது விவாதிப்பது சாத்தியமாகும். சீன மக்கள் குடியரசு மற்றும் ரசியா நாடுகளிடையேயான அய்க்கியத்தை உறுதிப்படுத்துவது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப்பற்றிய விவாதம், ஒரு முக்கியப் பங்காற்றும்.

உங்கள் கடிதத்தில் நீங்கள் அல்பேனியா மற்றும் யூகோஸ்லாவிய பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறீர்கள். இப்பிரச்சினைகள் அடிப்படையானவை என்ற போதிலும் நமது காலத்தின் முதன்மையான பிரச்சினைகள் பற்றிய விவாதத்தை இவை பின்னுக்குத் தள்ளிவிட முடியாது, தள்ளிவிடக் கூடாது.

எங்கள் கட்சி அல்பேனியத் தலைவர்களின் பிளவு நடவடிக்கைகளைக் கண்டிக்கிற அதே சமயத்தில் அல்பேனியத் தொழிலாளர் கட்சி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர கட்சிகளுக்கு இடையிலான உறவுகளை இயல்பான நிலைக்குக் கொண்டுவர பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ரசிய மக்கள் மீதும் எங்கள் கட்சி மீதும் அல்பேனியத் தொழிலாளர் கட்சித் தலைவர்கள் அவதூறு பொழிந்து தாக்குதல் தொடுத்து வருகிறார்கள் என்ற போதிலும் உன்னதமான குறிக்கோள்களால் வழிகாட்டப்படும் நாங்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அல்பேனியத் தொழிலாளர் கட்சிக்கும் இடையில் உறவுகள் முன்னேற்றமடையும் என்ற நம்பிக்கையை இழந்து விடவில்லை. இந்த ஆண்டின்

பிப்ரவரி மாத இறுதியில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அல்பேனிய தொழிலாளர் கட்சியின் மத்திய கமிட்டிக்கு இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று மீண்டும் ஒருமுறை முன் முயற்சி எடுத்து ஆலோசனை கூறியது. இருந்த போதிலும் எங்களுடைய இந்த தோழமை பூர்வமான நடவடிக்கையானது அல்பேனியத் தலைமையிடமிருந்து போதுமான பிரதிபலிப்பைப் பெறவில்லை. இருதரப்பு பேச்சுவார்த்தைக்கான ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி முன்மொழிவுகளடங்கிய எங்கள் கடிதத்தைப் பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்க வேண்டும் என்று கூட அவர்கள் நினைக்க வில்லை. மிகத் தாமதமாக தங்கள் உணர்வுக்கு வந்த அல்பேனியத் தலைவர்கள் எங்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பினார்கள். சில தயக்கங்கள் நிபந்தனைகளுடன் அத்தகைய ஒரு சந்திப்பு பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையான விருப்பம் காட்டப்படுமானால் சந்திப்புக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

யூகோஸ்லாவியாவைப் பொறுத்தவரை, அந்த நாட்டில் உள்ள எதார்த்தமான பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகளைப்பற்றிய மதிப்பீடு மற்றும் பகுப்பாய்விலிருந்து அது ஒரு சோசலிச நாடு என்று நாங்கள் கருதுகிறோம். உலகின் அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும் ஒன்றிணைப்பது என்ற சகோதரக் கட்சிகளால் பின்பற்றப் பட்டுவரும் கொள்கைக்கு ஏற்ப யூகோஸ்லாவியா மக்கள் சமஷ்டிக் குடியரசுக்கும், சோசலிச சமஉரிமை நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய உறவை ஏற்படுத்த முயன்று வருகிறோம். மேலும், நாங்கள் யூகோஸ்லாவியாவின் பொருளாதாரம் மற்றும் சமூக அரசியல் வாழ்க்கைகளில் சமீப காலங்களில் வெளிப்படும் குறிப்பான சாதகமான போக்குகளையும் கவனத்தில் கொண்டுள்ளோம். இதற்கிடையில் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் லீக்குடன் பல்வேறு சித்தாந்தப் பிரச்சினைகளில் தீவிரமான வேறுபாடுகள் நிலவுகின்றன என்பதை உணர்வதோடு யூகோஸ்லாவியத் தோழர்களுக்கு நாங்கள் தவறென்று கருதும் கருத்துக்களை விமர்சித்து வெளிப்படையாகவே சொல்ல வேண்டியது அவசியம் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

1963 மார்ச் 9-ந் தேதியிட்ட தனது கடிதத்தில் இன்று உலகப் பொதுவுடமை இயக்கம் ஒரு நெருக்கடியான காலத்தை எதிர்நோக்கியுள்ளது என்று கூறுவதன் மூலம் சீனக் கம்யூனிஸ்ட்கட்சி மத்திய கமிட்டி எங்களுடன் உடன்படுகிறது. அது (நெருக்கடியான காலம்: மொ-ர்) நாமும் நமது கட்சிகளும் நமது கொள்கைகளின் சரியான தன்மையும் நாம் ஒரே அணியில் ஒன்றிணைந்து முன்னேறுவதைத் தொடருகிறோமா அல்லது உழைக்கும் வர்க்கத்துக்கும், நமது மக்களுக்கும், அனைத்து உழைக்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய பரஸ்பரபகைமையில் முடியும் ஒரு போராட்டத்தில், சோசலிச சக்திகளை பலவீனப்படுத்தக் கூடிய உலக கம்யூனிச இயக்கத்தின் அய்க்கியத்தின் அடிப்படையை

சிதைக்கக்கூடிய ஒரு போராட்டத்தில் ஈடுபட நம்மை நாம் அனுமதிக்கப் போகிறோமா என்பதைச் சார்ந்திருக்கிறது.

இயல்பாகவே வலிமைமிக்க பெரும் கட்சிகளாக இருக்கும் காரணத்தினால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த சூழலிலிருந்து குறைந்தபட்ச இழப்புகளுடன் மீண்டுவிடும். ஆனால் பிற சகோதரக் கட்சிகளைப் பொறுத்தவரை குறிப்பாக சிக்கலான நிலைமைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கும் கட்சிகளைப் பொறுத்தவரை, அவை தேவையற்ற, நாம் விரும்பாத பெரும் சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

இந்த சிக்கல் நிறைந்த முக்கிய சூழலில் நாம் எப்படிச் செயல்படுகிறோம் என்பதைப் பொறுத்தே எல்லாம் இருக்கிறது. நாம் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கப் போகிறோமா? நமது உணர்ச்சிகளுக்கு இரையாகிவிடப் போகிறோமா? சகோதரக் கட்சிகளுக்கு எதிரான விவாதங்களை எதிர் குற்றச் சாட்டுகளாகவும், நிரூபிக்கப்படாத குற்றச் சாட்டுக்களாகவும், புறக் கூற்றுகளாகவும் தொடரப் போகிறோமா? அல்லது நமது மாபெரும் இலட்சியங்களின் வருங்காலத்தை எண்ணி மிகுந்த பொறுப்புணர்வை உணர்ந்து நம்மை இன்று பிளவு படுத்தும் அனைத்தையும் விட்டொழித்து செயல்படும் துணிச்சலை வெளிப்படுத்துவது, தோழமையற்ற விவாதங்களை ஒழிப்பது, உறுதிவாய்ந்த ரசிய-சீனக் கூட்டுறவைப் பலப்படுத்துவதற்கான வழிகளைத்தேடுவதில் கவனம் செலுத்துவது அனைத்து சகோதரக் கட்சிகளுக்கிடையிலான நட்புறவை உறுதிப் படுத்துவது என்ற வேறுபட்ட திசைவழியில் பிரச்சினைகளைத் தீர்க்கப்போகிறோமா ?

கம்யூனிஸ்ட் இயக்கம் உட்பட எந்த இயக்கமும் கருத்து மாறுபாடு இல்லாமலிருப்பதைப் பற்றி சிந்தித்துக் கூட பார்க்க முடியாது என்பதை உணர்கிறோம். இருந்த போதிலும் எந்த வேறுபாடுகளும், எந்த ஒரு கட்சியின் நடத்தையைப்பற்றிய மனக்கசப்புகளும், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் போராட்ட முறைகளை நியாயப்படுத்திவிட முடியாது. சர்வதேச உழைக்கும் வர்க்கத்தின் நோக்கங்கள் கடமைகள் பற்றி நாம் எந்த அளவுக்கு ஆழமாகவும் விரிவாகவும் புரிந்து கொண்டிருக்கிறோமோ, அந்த அளவுக்கு நமது வேறுபாடுகளை, அவை எவ்வளவு கடுமையானதாக இன்று தோன்றினாலும் கூட ஊக்கத்துடனும் அமைதியாகவும் தகுந்த முறையிலும் பகுப்பாய்வு செய்து அவை நமது ஆக்க பூர்வமான பணிகளுக்கு இடையூறு செய்வதையும் சர்வதேச பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிகர நடவடிக்கைகளை சீர்குலைப்பதையும் தடுக்க வேண்டும்.

திரிபு வாதத்திற்கும், வறட்டு வாதத்திற்கும் எதிராக மார்க்சிய—லெனினியத்தை முரணற்று கடைப்பிடிப்பதற்கும், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்க அணிகளிடையே நெருக்கமான அய்க்கியத்தை ஏற்படுத்து

வதற்கும், கூட்டாக விடுக்கப்பட்ட கொள்கைகளைப் பின்பற்றுவதற்கும், அவற்றைத் தன்னிச்சையாக வியாக்கியானம் செய்வதையும், அத்துமீறுவதையும் எதிர்த்தும் ஒன்றிணைந்து போராட உறுதி கொள்வோம்.

எங்கள் கட்சி வாதப்போரின் சூட்டுக்குப் பலியாகி விடவில்லை; மாறாக உலக கம்யூனிச இயக்கத்திற்கு ஆற்ற வேண்டிய பொறுப்பை உணர்ந்து முடிவற்ற புதிய விவாதங்களுக்குள் சரிந்துவிடும் அபாயகரமான போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறது. சீனப் பத்திரிகைகளில் சமீப காலங்களில் தொடுக்கப்படும் அடிப்படையற்ற தாக்குதல்களுக்குப் பதிலாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் லெனினியக் கொள்கைக்கு ஆதரவாகவும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழிக்கு ஆதரவாகவும் நாங்கள் ஏராளமாகக் கூறியிருக்க முடியும் என்பது எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும். நாங்கள் இப்போது அதைச் செய்யாமலிருக்கிறோமென்றால் கம்யூனிச இயக்கத்தின் எதிரிகளைச் சந்தோசப்படுத்துவதற்கு நாங்கள் விரும்பவில்லை என்ற காரணத்தினால் தான். கூர்மையான வாதப்பிரதிவாதத்தினால் ஏற்பட்ட தீங்கு பற்றி உணரப்படும் என்றும் சோசலிச அமைப்பின் நலன்களும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் நலன்களும் எல்லாவற்றிற்கும் மேலானதாக கருதப்படும் என்றும் நாங்கள் நம்புகிறோம். எனவே தகராறுகளைத் தீவிரப்படுத்துவதற்குஅல்லாமல் சர்வதேசபொதுவுடமை இயக்கத்தில் எழுந்துவிட்ட முக்கிய பிரச்சினைகள் பற்றி பரஸ்பர புரிதலை அடையும் பொருட்டு, உங்களுடன் ஒரு சந்திப்பு நடத்த ஆலோசனை கூறுகிறோம்.

அத்தகைய ஒரு சந்திப்பை உலகின் அனைத்து நாடுகளிலுமுள்ள நமது நண்பர்கள் எதிர் பார்க்கின்றனர். அதன்மீது பெரும் நம்பிக்கைகளை வைத்துள்ளார்கள், அந்த சந்திப்பில் நமது நண்பர்களுக்கு மகிழ்ச்சியையும், கம்யூனிசத்தின் எதிரிகளுக்கு நிலை குலைவையும்தரும் முடிவுகள் அடையப்படுமா என்பது நமது விருப்பத்தையும், பகுத்தறிவையும் சார்ந்தது. இந்த முடிவுகள் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கானதாகவும், பூமியில் சமாதானம் மற்றும் சோசலிசத்தின் வெற்றிக்கானதாகவும், மாபெரும் புரட்சிகர சிந்தாந்தமான மார்க்சிய—லெனினியத்தின் வெற்றிக்கானதாகவும் இருக்கும்.

கம்யூனிஸ்ட் வாழ்த்துக்களுடன்,

மத்திய கமிட்டி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி.

சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய ஓர் ஆலோசனை

30-3-1963 ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய கடிதத்திற்கு 14-6-1963 ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய பதில் கடிதம்

அன்புமிக்க தோழர்களே,

1963 மார்ச் 30-ம் தேதியிட்ட ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கடிதத்தை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஆழ்ந்து பரிசீலித்தது.

சோசலிச முகாம், சர்வதேசக் கம்யூனிச இயக்கம் ஆகியவற்றின் ஒற்றுமையை நேசிக்கும் அனைவரும் சீன - ரசிய கட்சிகளிடையே நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தைகளைப் பற்றி ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள். இந்தப் பேச்சு வார்த்தைகள் வேறுபாடுகளைக் களைவதற்கும் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கும் உதவுமென்றும் கம்யூனிஸ்ட், மற்றும் தொழிலாளர் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டுவதற்குச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குமென்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையை உயர்த்திப்பிடிப்பதும் பலப்படுத்துவதும் எல்லா நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்ட் மற்றும்

தொழிலாளர் கட்சிகளின் பொதுவான, புனிதமான கடமையாகும். சோசலிச முகாம் முழுவதின் ஒற்றுமைக்கும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்கும்' சீன - ரசிய கட்சிகளுக்குப் பெரும் பொறுப்புண்டு. எனவே இவ்விரு கட்சிகளும் ஒப்பீட்டளவில் அதிகமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் தற்போது கொள்கை ரீதியில் பல பெரும் வேறுபாடுகள் நிலவுகின்றன. இந்த வேறுபாடுகள் எவ்வளவு தீவிரமானதாயிருப்பினும் சரி, நமது சக்திகளை ஒன்றுபடுத்தவும், நமது பொது எதிரிக்கெதிரான போராட்டத்தைப் பலப்படுத்தவும் ஏற்ற முறையில் நாம் போதுமான பொறுமையைக் கடைப்பிடித்து இந்த வேறுபாடுகளைக் களைவதற்கான வழிகளைக் காண வேண்டும்.

இந்த உளப் பூர்வமான ஆர்வத்துடன் தான், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, சீன - ரசிய கட்சிகளிடையே நடைபெற இருக்கும் பேச்சு வார்த்தைகளை அணுகுகிறது.

மார்ச் 30-ம் தேதியிட்ட தனது கடிதத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, சீன-ரசிய கட்சிகளிடையே நடைபெறும் பேச்சு வார்த்தைகளின் போது விவாதிக்கப் பட வேண்டிய பிரச்சினைகளைப் பற்றிய தனது கருத்துக்களை முறையாக முன் வைத்திருக்கிறது. குறிப்பாக சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொது வழி பற்றிய பிரச்சினையை அது கிளப்பியுள்ளது. இக் கடிதத்தில், நாங்களும் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொது வழி குறித்தும், அத்துடன் சம்பந்தப்பட்ட சில கொள்கைப் பிரச்சினைகள் குறித்தும் எங்களுடைய கருத்துக்களை ஆலோசனைகளாக முன் வைக்க விரும்புகிறோம்.

எமது கருத்துக்கள் பற்றிய இவ்விளக்கம், நம் இரு கட்சிகளும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கும் பேச்சு வார்த்தைகளின்போது ஒவ்வொரு அம்சமாக விரிவான விவாதம் நடைபெறுவதற்கும் ஏற்ற சூழ்நிலையை உருவாக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

சகோதரக் கட்சிகள் எமது கருத்துக்களை புரிந்து கொள்வதற்கும், சகோதர கட்சிகளின் சர்வதேச கூட்டத்தில் கருத்துக்களை முழுமையாக பரிமாறிக் கொள்வதற்கும் இது உதவுமெனவும் நாங்கள் நம்புகிறோம்.

(1) சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொது வழி, பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணி குறித்த மார்க்சிய-லெனினிய புரட்சிகர சித்தாந்தத்தைத் தனது வழிகாட்டும் கொள்கையாகக் கொள்ள வேண்டும்; அதிலிருந்து விலகிச் செல்லக் கூடாது.

1957-லும், 1960-லும் மாஸ்கோவில் நடைபெற்ற மாநாடுகள், முழுமையான கருத்துப் பரிமாற்றத்துக்குப் பின்னும், கலந்து விவாதிப்

பதன் மூலம் ஏகமனதான முடிவிற்கு வருவதென்ற கொள்கைக்கு ஏற்பவும், முறையே பிரகடனத்தையும், அறிக்கையையும் அங்கீகரித்தன. இந்த இரு ஆவணங்களும் நமது சகாப்தத்தின் குணாம்சங்களையும், சோசலிசப் புரட்சி, சோசலிசக் கட்டுமானம் ஆகியவற்றின் பொது விதிகளையும் சுட்டிக் காட்டுகின்றன; எல்லா கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பொது வழியை வகுத்தளிக்கின்றன. இவையே சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொதுவான வேலைத் திட்டமாகும்.

1957 பிரகடனத்தையும், 1960 அறிக்கையையும் புரிந்து கொள்வதிலும் அவற்றின்பால் மேற்கொள்ளும் அணுகு முறையிலும் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்திற்குள் பல ஆண்டுகளாக வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன என்பது உண்மை. பிரகடனம், அறிக்கை ஆகியவற்றின் புரட்சிகரக் கொள்கைகளை ஏற்றுக் கொள்வதா, இல்லையா என்பதே இங்குள்ள மையமான பிரச்சினையாகும். இறுதிப் பரிசீலனையில், மார்க்சிய-லெனினியத்தின் அனைத்துந் தழுவிய உண்மையை ஏற்றுக் கொள்வதா, இல்லையா; அக்டோபர் புரட்சியின் அனைத்தழுவிய முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதா, இல்லையா; இன்னும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ அமைப்பின் கீழ் வாழ்ந்து வரும் உலக மக்கட் தொகையில் மூன்றில் இருபங்கினரான மக்கள் புரட்சியை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொள்வதா, இல்லையா; ஏற்கெனவே சோசலிசப் பாதையை மேற்கொண்டுள்ள, உலக மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பங்கினரான மக்கள் தங்கள் புரட்சியை இறுதி வரை கொண்டு செல்ல வேண்டுமென்ற உண்மையை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பதே மையமான பிரச்சினை.

1957 பிரகடனம், 1960 அறிக்கை ஆகியவற்றின் புரட்சிகரக் கோட்பாடுகளை உறுதியாகப் பாதுகாப்பது சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் அவசரமான, அத்தியாவசியமான பணியாகியிருக்கிறது.

மார்க்சிய - லெனினியத்தின் புரட்சிகரப் போதனைகளையும், அக்டோபர் புரட்சியின் பொது வழியையும் கண்டிப்பாகப் பின்பற்றுவதன் மூலமே-பிரகடனம், அறிக்கை ஆகியவற்றின் புரட்சிகரக் கொள்கைகளைப் பற்றிய சரியான புரிதலுக்கு வருவதும், அவற்றின்பால் சரியான அணுகு முறையை மேற்கொள்வதும் சாத்தியமாகும்.

(2) பிரகடனம், அறிக்கை ஆகியவற்றின் புரட்சிகரக் கொள்கைகள் யாவை? அவற்றை கீழ்க்கண்டவாறு சுருங்கக் கூறலாம்:

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்; உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களுடனும், ஒடுக்கப்பட்ட தேசங்களுடனும் ஒன்று சேருங்கள்; எல்லா நாடுகளிலும் ஏகாதிபத்தியத்தையும், பிற்போக்கையும் எதிர்த்து நில்லுங்கள்; உலக சமாதானத்திற்காகவும், தேசிய விடுதலைக்காகவும், மக்கள் ஜனநாயகத்துக்காகவும், சோசலிசத்

திற்காகவும் பாடுபடுங்கள்; சோசலிச முகாமை வலுப்படுத்தி விரிவடையச் செய்யுங்கள்; பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியைப் படிப்படியாக முழு வெற்றிக்குக் கொண்டு செல்லுங்கள்; ஏகாதிபத்தியம் இல்லாத, முதலாளித்துவமில்லாத, மனிதனை மனிதன் சுரண்டுவதில்லாத ஒரு புதிய உலகத்தை ஏற்படுத்துங்கள்.

இந்தக் கட்டத்தில் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொது வழி இதுவே, என்பது எமது கருத்தாகும்.

(3) இன்றுள்ள யதார்த்தமான உலக நிலைமைகள் பற்றிய ஒட்டு மொத்தமான கணிப்பிலிருந்தும், இன்றைய உலகில் உள்ள அடிப்படை முரண்பாடுகளைப் பற்றிய வர்க்கப் பரிசீலனையிலிருந்தும் தொடங்கு கின்ற இந்தப் பொது வழி, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகுதழுவிய எதிர்ப் புரட்சித் தந்திரங்களுக்கெதிராக செயல்படுத்தப்படுகிறது.

இந்தப் பொது வழி, அமெரிக்காவின் தலைமையிலுள்ள ஏகாதிபத்திய வாதிகளையும் பிற்போக்காளர்களையும் எதிர்ப்பதற்கு, சோசலிச முகாமையும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தையும் மையமாகக்கொண்ட ஒரு விரிவான அய்க்கிய முன்னணியை ஏற்படுத்தும் வழியாகும். பொது மக்களைத் துணிவுடன் எழுச்சியுறச் செய்வது, புரட்சிகரசக்திகளை விரிவு படுத்தி, இடைப்பட்ட சக்திகளை நம் பக்கமிழுத்து, பிற்போக்கு சக்தி களைத் தனிமைப் படுத்துவதற்கான வழியாகும்.

இந்த பொது வழி எல்லா நாட்டு மக்களும் உறுதியான புரட்சிகரப் போராட்டத்தை மேற்கொண்டு பாட்டாளி வர்க்க உலகப்புரட்சியை இறுதிவரை முன்னெடுத்துச் செல்வதற்கான வழியாகும். இப் பொது வழியே, ஏகாதிபத்தியத்தை மிகவும் திறமையோடு எதிர்த்துப் போராடி உலக அமைதியை பாதுகாப்பதாகும்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொது வழி ''சமாதான சகவாழ்வு'', ''சமாதானப் போட்டி'', ''சமாதான மாற்றம்'' என்று ஒரு சார்பாகக் குறுக்கப்படுவது 1957-ஆம் ஆண்டு பிரகடனம், 1960-ஆம் ஆண்டு அறிக்கை ஆகியவற்றின் புரட்சிகரக் கொள்கைகளை மீறுவதாகும்; பாட்டாளி வர்க்க உலகப் புரட்சி என்ற வரலாற்றுக் கடமையை உதா-சீனம் செய்வதாகும்; மார்க்சிய-லெனினியத்தின் புரட்சிகரப் போதனை களிலிருந்து விலகிச் செல்வதாகும்.

சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொது வழி, உலக வரலாற்று வளர்ச்சியின் பொது விதிகளைப் பிரதிபலிக்க வேண்டும். பல்வேறு நாடு களிலுள்ள பாட்டாளி வர்க்கம், மக்கள் ஆகியோரின் புரட்சிகரப் போராட்டங்கள் வெவ்வேறு கட்டங்களினூடே செல்லுகின்றன; அவை யாவும் தத்தம் சொந்த சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கின்றன; ஆயினும், அவை உலக வரலாற்று வளர்ச்சியின் பொது விதிகளை மீறுவ

தில்லை. பொது வழியானது, எல்லா நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம், மக்கள் ஆகியோரின் புரட்சிகரப் போராட்டங்களின் அடிப்படை திசை வழியைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

ஒவ்வொரு கம்யூனிஸ்ட் அல்லது தொழிலாளர் கட்சியும் தனது பிரத்தியேக வழியையும் கொள்கைகளையும் வகுத்துக் கொள்ளும் போது, மார்க்சிய-லெனினியத்தின் அனைத்துந் தழுவிய உண்மையை அந்தந்த நாட்டிலுள்ள புரட்சி மற்றும் நிர்மாணம் ஆகியவற்றின் திட்டவட்டமான நடைமுறையுடன் ஒன்றிணைப்பது மிகவும் முக்கியமானதாகும்.

(4) சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொது வழியை வரையறுப்பதில் தொடக்கப் புள்ளியாக இருப்பது ஒட்டு மொத்தமான உலக அரசியல் பொருளாதாரம் மற்றும் உலக சூழ்நிலைமையைப் பற்றிய பருண்மையான வர்க்கப் பகுப்பாய்வாகும். அதாவது சமகால உலகில் அடிப்படை முரண்பாடுகளைப்பற்றிய பருண்மையான வர்க்கப் பகுப்பாய்வாகும்.

பருண்மையான வர்க்கப் பகுப்பாய்வை தவிர்த்துவிட்டு தொடர்பற்ற ஒரு சில மேலெழுந்த வாரியான நிகழ்ச்சிகளின் அடிப்படையில் அகவயமாக ஆதாரமற்ற முடிவுகளுக்கு ஒருவர் வருவாரானால் அவர் சர்வ தேசக் கம்யூனிச இயக்கத்தின் வழியைப்பற்றிய சரியான முடிவுகளுக்கு வருவது சாத்தியமில்லை. ஆனால் அவர் மார்க்சிய—லெனினியத்திற்கு முற்றும் மாறுபட்ட வழியில் நழுவிச் செல்வது தவிர்க்க முடியாததாகும்.

இன்றைய உலகின் அடிப்படை முரண்பாடுகள் யாவை? அடிப்படையான முரண்பாடுகள் என மார்க்சிய—லெனினியவாதிகள் உறுதியாகக் கொள்வது இவையே:

1. சோசலிச முகாமிற்கும், ஏகாதிபத்திய முகாமிற்குமிடையேயுள்ள முரண்பாடு

2. முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்திற்கும், முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு

3. ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான முரண்பாடு

4. ஏகாதிபத்திய நாடுகளிடையிலும், ஏகபோக முதலாளித்துவப் பிரிவுகளிடையிலுமுள்ள முரண்பாடு.

சோசலிச முகாமிற்கும் ஏகாதிபத்திய முகாமிற்குமிடையிலுள்ள முரண்பாடு, அடிப்படையிலேயே வேறுபட்ட இரு சமூக அமைப்புகளான

சோசலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடா கும். சந்தேகமின்றி இது மிகக் கூர்மையான முரண்பாடுதான். ஆனால் உலகில் உள்ள முரண்பாடுகளை வெறும் சோசலிச முகாமிற்கும் ஏகாதி பத்திய முகாமிற்கும் இடையிலுள்ள முரண்பாடு மட்டும்தான் என்று மார்க்சிய—லெனினியவாதிகள் கருதிவிடக்கூடாது.

சக்திகளின் சர்வதேச பலாபல நிலை மாறியிருக்கிறது. சோசலிசத் திற்கும், உலகிலுள்ள எல்லா ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், நாடுகளுக்கும் மென்மேலும் சாதகமான முறையில் மாறிவருகிறது. ஏகாதிபத்தியத்திற் கும், அனைத்து நாடுகளிலுமுள்ள பிற்போக்காளர்களுக்கும் பாதகமான முறையில் மாறி வருகிறது. இருப்பினும், மேற்குறிப்பிட்டுள்ள முரண் பாடுகள் யதார்த்தத்தில் இன்னும் நிலவுகின்றன.

இந்த முரண்பாடுகளும், இவற்றால் தோற்றுவிக்கப்படும் போராட் டங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டிருக்கின்றன. பரஸ்பரம் ஒன்றின்மீதொன்று செல்வாக்கு செலுத்துகின்றன. இந்த அடிப்படை முரண்பாடுகளில் எதையும் யாரேனும் மறைத்துவிட முடியாது. அல்லது தன் விருப்பப்படி ஒன்றை ஏனைய முரண்பாடுகளுக்குப் பதிலாக மாற்றி வைத்துவிட முடியாது.

இந்த முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவாறு பொதுமக்களின் புரட்சிகளை உருவாக்கும். இப்புரட்சிகள் மட்டுமே இந்த முரண்பாடு களைத் தீர்க்க முடியும்.

(5) நிகழ்கால உலகின் அடிப்படை முரண்பாடுகள் பற்றிய பிரச்சினையில் உள்ள கீழ்க்காணும் தவறான கருத்துக்கள் நிராகரிக்கப் படவேண்டும்.

(அ) சோசலிச மற்றும் ஏகாதிபத்திய முகாம்களுக்கிடையிலுள்ள முரண்பாட்டை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழுள்ள அரசு களுக்கும் ஏகபோக முதலாளிகளின் சர்வாதிகாரத்தின் கீழுள்ள அரசு களுக்கும் இடையிலுள்ள முரண்பாடாகப் பார்க்கத் தவறுவது. இப்படிச் செய்வது இம்முரண்பாட்டின் வர்க்க உள்ளடக்கத்தை மாசு படுத்துவதாகும்.

(ஆ) முதலாளித்துவ உலகிலுள்ள பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடுகளையும், ஒடுக்கப் பட்ட நாடுகளுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலுள்ள முரண்பாடு களையும், ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலுள்ள, ஏகபோக முதலாளித் துவப் பிரிவுகளுக்கிடையிலுள்ள முரண்பாடுகளையும், இந்த முரண்பாடு களால் தோற்றுவிக்கப்படும் போராட்டங்களையும் அலட்சியப்படுத்தி அல்லது குறைத்து மதிப்பிட்டு, அதே வேளையில் சோசலிச மற்றும்

ஏகாதிபத்திய முகாம்களுக்கிடையிலுள்ள முரண்பாட்டை மட்டுமே அங்கீகரிப்பது.

(இ) முதலாளித்துவ உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின்றியே பாட்டாளி வர்க்கத்திற்கும், முதலாளித்துவத்திற்குமிடையிலுள்ள முரண்பாட்டைத் தீர்க்க முடியுமென்றும், ஒடுக்கப்படும் நாடுகளின் புரட்சியின்றியே ஒடுக்கப்படும் நாடுகளுக்கும் ஏகாதிபத்திய நாடுகளுக்குமிடையிலுள்ள முரண்பாட்டைத் தீர்க்கமுடியும் என்றும் கூறுவது.

(ஈ) இன்றைய முதலாளித்துவ உலகின் உள்ளார்ந்த முரண்பாடுகளின் வளர்ச்சி, தவிர்க்க முடியாதபடி ஏகாதிபத்திய நாடுகளை ஒரு தீவிரப் போராட்டத்தில் ஈடுபட வைக்கும் ஒரு புதியசூழ்நிலைக்கு இட்டுச் செல்கிறது என்பதை மறுப்பது. ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலுள்ள முரண்பாடுகள் ''பெரும் ஏகபோகங்களுக்கிடையிலான சர்வதேச ஒப்பந்தங்களின்'' மூலம் சரிக்கட்டப்பட முடியும், அல்லது களையப்பட முடியும் என்று கூறுவது.

(உ) சோசலிசம், முதலாளித்துவம் ஆகிய இரு உலக அமைப்புகளுக்கிடையேயுள்ள முரண்பாடு ''பொருளாதாரப் போட்டி''யின் போக்கில் தானாகவே மறைந்துவிடும் என்றும், இந்த இரு அமைப்புகளுக்கிடையிலுள்ள முரண்பாடுகள் மறையும்பொழுது அதனுடன் இதர அடிப்படை உலக முரண்பாடுகளும் தானாகவே மறைந்துவிடும் என்றும், ''யுத்தங்களேயில்லாத உலகம்'', ''அனைத்துமட்ட ஒத்துழைப்பு'' நிலவும் ஒரு புதிய உலகம் தோன்றும் என்றும் வலியுறுத்துவது.

இத் தவறான கருத்துக்கள் தவிர்க்க முடியாதபடி தவறான, தீங்கு விளைவிக்கின்ற கொள்கைகளுக்கு இட்டுச் செல்கிறது; எனவே இது மக்களின் இலட்சியத்திற்கும், சோசலிச இலட்சியத்திற்கும் ஏதோ ஒரு வித அல்லது மற்றொருவித பின்னடைவுக்கும், இழப்பிற்கும் இட்டுச் செல்வது தவிர்க்க முடியாதது என்பது தெளிவு.

(6) இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏகாதிபத்தியத்திற்கும், சோசலிசத்திற்கும் இடையில் சக்திகளின் பலாபலன் ஒரு அடிப்படையான மாற்றத்தை அடைந்துள்ளது. இந்த மாறுதலின் பிரதானக் குறிப்பு யாதெனில் உலகில் இன்று ஒரே ஒரு சோசலிச நாடு அல்ல, மாறாக பல சோசலிச நாடுகள் ஏற்பட்டு வல்லமை மிக்க சோசலிச முகாம் அமைந்துள்ளது; சோசலிசப் பாதையை மேற்கொண்டுள்ள மக்கள் இப்போது இருபது கோடியல்ல, 100 கோடியாக உள்ளனர்; உலக மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பங்கினராக உள்ளனர்!

சோசலிச முகாமானது சர்வதேசப் பாட்டாளி வர்க்கம், உழைக்கும் மக்கள் ஆகியோரது போராட்டங்களின் விளைவேயாகும். அது சர்வ தேச பாட்டாளி வர்க்கத்திற்கும், உழைக்கும் மக்களுக்கும், சோசலிச நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கும் சொந்தமானது.

சோசலிச முகாமைச் சேர்ந்த நாடுகளில் உள்ள மக்கள், சர்வதேசப் பாட்டாளி வர்க்கம், உழைக்கும் மக்கள் ஆகியோரின் பிரதான, பொது வான கோரிக்கை சோசலிச முகாமிலுள்ள அனைத்து கம்யூ-னிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளும் கீழ்க்காணும் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதாகும். அவையாவன:

1. மார்க்சிய—லெனினிய வழியைப் பின்பற்றி நின்று, சரியான மார்க்சிய—லெனினிய உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

2. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், பாட்டாளி வர்க்கத் தலைமையிலுள்ள தொழிலாளி—விவசாயி நேச அணியையும் வலுப் படுத்தி, பொருளாதார அரசியல் சித்தாந்தத் துறைகளில் சோசலிசப் புரட்சியை இறுதிவரை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

3. பரந்துபட்ட மக்களின் சுய முயற்சியையும், ஆக்க சக்தியையும் வளர்ச்சியும், சோசலிச நிர்மாணத்தைத் திட்டமிட்ட முறையில் நிறை வேற்றவும், உற்பத்தியைப் பெருக்கவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவும், தேசியப் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் வேண்டும்.

4. மார்க்சிய—லெனினிய அடிப்படையில் சோசலிச முகாமின் ஒற்றுமையைப் பலப்படுத்தி, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப் படையில் இதர சோசலிச நாடுகளுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

5. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கைகளை எதிர்த்து, உலக சமாதானத்தைப் பேண வேண்டும்.

6. அனைத்து நாடுகளிலுமுள்ள பிற்போக்காளர்களின் கம்யூனிச எதிர்ப்பு, மக்கள் விரோத, எதிர்ப்புரட்சிக் கொள்கைகளை எதிர்க்க வேண்டும்; உலகிலுள்ள ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள், நாடுகள் ஆகியவற் றின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு உதவவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில், சோசலிச முகாமில் உள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள், தங்களின் சொந்த மக்களுக்கும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்திற்கும், உழைக்கும் மக்களுக்கும் பொறுப்பானவையாகும்.

இக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் சோசலிச முகாம் மனித வரலாற்றுப் போக்கில் தீர்மானகரமான செல்வாக்கைச் செலுத்தும்.

இதே காரணத்தினால்தான், ஏகாதிபத்தியவாதிகளும், பிற்போக்காளர்களும் சோசலிச முகாமிலுள்ள நாடுகளின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் செல்வாக்கைச் செலுத்த ஆயிரம் வழிகளில் இடைவிடாது முயலுகிறார்கள். சோசலிச முகாமைச் சீர்குலைக்கவும், சோசலிச நாடுகளின் ஒற்றுமையை, குறிப்பாக சீன—ரசிய ஒற்றுமையை உடைத்தெறியவும் இடைவிடாது முயலுகின்றனர். சோசலிசநாடுகளில் ஊடுருவவும் அவற்றைக் கவிழ்க்கவும் இடைவிடாது அவர்கள் முயன்று வருகின்றனர். சோசலிச முகாமை அழித்துவிடலாம் என்ற மித மிஞ்சிய நம்பிக்கையையுங்கூட அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

சோசலிச முகாமின்பால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சரியான அணுகுமுறை எதுவென்ற பிரச்சினை எல்லா கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளும் எதிர்கொண்டுள்ள மிகமுக்கியமான கொள்கைப் பிரச்சினையாகும்.

கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் புதிய வரலாற்று நிலைமைகளின் கீழ், பாட்டாளி வர்க்க சர்வதேசிய ஒற்றுமை மற்றும் போராட்டம் என்ற கடமையை இப்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. ஒரேயொரு சோசலிச நாடு மட்டும் இருந்தபொழுது, அந்த நாடு சரியான மார்க்சிய—லெனினியக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்த காரணத்தினால் எல்லா ஏகாதிபத்தியவாதிகள், பிற்போக்காளர்கள் ஆகியோரின் பகைமையையும், ஆபத்தையும் எதிர்நோக்கியிருந்தது. அச் சமயத்தில் ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சிக்கும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உரை கல்லாயிருந்தது யாதெனில் அன்றிருந்த ஒரே ஒரு சோசலிச நாட்டை அவை உறுதியாக ஆதரித்து நின்றதா, இல்லையா என்பதே. இப்பொழுது, அல்பேனியா, பல்கேரியா, சீனா, கியூபா, செக்கோஸ்லோவேகியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஹங்கேரி, கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு, மங்கோலியா, போலந்து, ருமேனியா, ரசியா, வியட்னாம் ஜனநாயகக் குடியரசு ஆகிய பதின்மூன்று சோசலிச நாடுகளைக் கொண்ட சோசலிச முகாம் உள்ளது. இந்தச் சூழ்நிலைமைகளில், ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியின் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உரைகல் யாதெனில், அது சோசலிச முகாம் முழுவதையும் உறுதியாக ஆதரித்து நிற்கிறதா, இல்லையா; மார்க்சிய - லெனினிய அடிப்படையில் சோசலிச முகாமிலுள்ள எல்லா நாடுகளின் ஒற்றுமையை அது பாதுகாக்கிறதா, இல்லையா; சோசலிச நாடுகள் கடைப்பிடிக்க வேண்டிய மார்க்சிய—லெனினிய வழியையும், கொள்கைகளையும் அது பாதுகாத்து நிற்கிறதா, இல்லையா என்பதேயாகும்.

யாரேனும் சரியான மார்க்சிய—லெனினிய வழியையும், கொள்கை களையும் கடைப்பிடிக்காமல், சோசலிச முகாமின் ஒற்றுமையைப் பாதுகாத்து நிற்காமல், அதற்கு மாறாக சோசலிச முகாமினுள் கெடுபிடியையும் பிரிவுகளையும் உண்டுபண்ணுவார்களானால், அல்லது யூகோஸ்லாவியத் திரிபுவாதிகளின் கொள்கைகளைப் பின்பற்றி, சோச லிச முகாமைச் சீர்குலைக்க முயலுவார்களானால், அல்லது சகோதர சோசலிச நாடுகளைத் தாக்குவதற்கு முதலாளித்துவ நாடுகளுக்கு உதவி செய்வார்களானால் அவர்கள் சர்வதேசப் பாட்டாளிவர்க்கம் முழுமையின் நலன்களுக்கும் உலக மக்களின் நலன்களுக்கும் துரோகமிழைக் கிறார்கள்.

சோசலிச நாடுகள் கடைப்பிடிக்கவேண்டிய சரியான மார்க்சிய—லெனினியப் பாதையையும் கொள்கைகளையும் உயர்த்திப் பிடிப்பதற்குப் பதிலாக, குறிப்பிட்ட ஒரு சோசலிச நாடு கடைப்பிடிக்கும் தவறான, சந் தர்ப்பவாத வழியையும், கொள்கைகளையும் மற்றவர்களின் அடிச்சுவடு களைப் பின்பற்றி யாரேனும் ஆதரிப்பார்களேயானால், ஒற்றுமைக்கான கொள்கையை உயர்த்திப் பிடிப்பதற்கு மாறாக பிளவுபடுத்தும் கொள்கையை ஆதரிப்பார்களானால் அவர்கள் லெனினிசத்திலிருந்தும் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்திலிருந்தும் நழுவிச் செல்கிறார்கள்.

7. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், இரண்டாம் உலகப்போருக் குப் பின்னுள்ள நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஜெர்மானிய, இத்தாலிய, ஜப்பானிய பாசிஸ்டுகளின் பாத் திரத்தை ஏற்று இதுவரை கண்டிராத மிகப்பெரும் உலக சாம்ராஜ்யத்தை நிறுவுவதற்கு முயன்று வருகின்றனர். அமெரிக்காவிற்கும் சோசலிச முகாமிற்கும் இடைப்பட்ட பிரதேசங்களை அபகரிப்பதும், ஆதிக்கம் செலுத்துவதும், ஒடுக்கப்பட்ட நாடுகள் மக்கள் ஆகியோரின் புரட்சிகளை நசுக்குவதும், சோசலிச நாடுகளை அழிக்க முற்படுவதும், இவ்வாறு தனது நேச நாடுகள் உட்பட உலகிலுள்ள எல்லா மக்களையும், நாடு களையும் அமெரிக்க ஏகபோக முதலாளித்துவத்தின் ஆதிக்கத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் உட்படுத்துவதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொலைநோக்கு இலட்சியங்களாக இருந்து வருகின்றன.

இரண்டாம் உலகப் போர்க்காலம் முதல், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் சோவியத் யூனியனுக்கும், சோசலிச முகாமிற்கும் எதிராக யுத்தம் நடத்த வேண்டும் எனப் பிரச்சாரம் செய்து வந்திருக்கின்றனர். இப் பிரச்சாரத்தில் இரு அம்சங்களுண்டு. இத்தகைய ஒரு யுத்தத்திற் காக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நடைமுறையில் தயாரிப்பு செய்து வரும் அதே வேளையில், அமெரிக்க மக்களை அவர்கள் ஒடுக்கி வருவதையும், முதலாளித்துவ உலகின் இதர பகுதிகளுக்கெதிரான தங்கள் ஆக்கிரமிப்பை விஸ்தரிப்பதையும் மறைப்பதற்கான மூடுதிரையாக இப்பிரச்சாரத்தை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

1960-ம் ஆண்டு (மாஸ்கோ) அறிக்கை சுட்டிக் காட்டுவதாவது:

''அமெரிக்க ஏகாதிபத்தியம் மிகப்பெரும் சர்வதேசச் சுரண்டல் காரனாக மாறியுள்ளது.''

''அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்றைய காலனி ஆதிக்கத்தின் முக்கிய ஆதாரமாக இருக்கிறது.''

''அமெரிக்க ஏகாதிபத்தியமே ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தங்களின் பிரதான சக்தியாகத் திகழ்கிறது.''

''அமெரிக்க ஏகாதிபத்தியமே உலகப் பிற்போக்கின் முக்கிய அரண். உலக மக்கள் அனைவரின் எதிரியாகவுள்ள சர்வதேசக் கொடுங் கோன்மைப்படை என்பதை உறுதிப்படுத்த சமீப ஆண்டுகளில் நடை பெற்ற சர்வதேச நிகழ்ச்சிகள் பல புதிய நிரூபணங்களைக் கொடுத் துள்ளன.''

அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகம் பூராவும் தனது ஆக்கிரமிப்பு, யுத்தக்கொள்கைகளை வலியுறுத்தி வருகின்றது. ஆனால், இதன் விளைவு அதன் எண்ணத்திற்கு மாறானதாக, எல்லா நாடுகளிலுமுள்ள மக்களும் விழிப்புணர்வு பெறுவதையும், அவர்களின் புரட்சியையும் துரிதப்படுத்து வதாகவே இருக்கும்.

இவ்வாறு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உலக மக்கள் அனை வருக்கும் எதிராகத் தங்களை நிறுத்தியுள்ளனர். அவர்களின் முற்றுகைக் கும் ஆளாகியுள்ளனர். சர்வதேசப் பாட்டாளி வர்க்கம்ஒன்றுபடுத்தக்கூடிய எல்லா சக்திகளையும் ஒன்றுபடுத்த வேண்டும், ஒன்று படுத்தவும் முடியும்; எதிரி முகாமிலுள்ள உள் முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் எதிராக விரிவான அய்க்கிய முன்னணியை நிறுவ வேண்டும்.

மக்கள் மற்றும் மனிதகுலத்தின் தலைவிதியை உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமை மற்றும் போராட்டத்தினிடமும், அனைத்து நாடு-களிலுள்ள மக்களின் ஒற்றுமை மற்றும் போராட்டத்தினிடமும் ஒப்படைப் பதே எதார்த்தமான சரியான நடைமுறை வழியாகும்.

மாறாக, எதிரிகளையும், நண்பர்களையும், நம்மையும் வேறு படுத்திப் பார்க்காதிருப்பதும், மக்களின், மனித குலத்தின் தலைவிதியை அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் ஒப்படைப்பதும், மக்களைத் தவறாக வழி நடத்துவதாகும். கடந்த சில ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் இந்த மாயையைத் தகர்த்தெறிந்துவிட்டன.

(8) இன்றைய உலகின் பல்வேறு வகையான முரண்பாடுகளும் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பரந்த

பகுதிகளில் குவிந்திருக்கின்றன. இப்பகுதிகள் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் உள்ள மிகவும் பலவீனமான பகுதிகளாகும்; ஏகாதிபத்தியத்திற்கு நேரடியாக உதை கொடுக்கும் உலகப் புரட்சியின் புயல் மையங்களாகும்.

இப்பகுதிகளிலுள்ள தேசிய ஜனநாயகப் புரட்சிகர இயக்கமும், சர்வதேச சோசலிசப் புரட்சிகர இயக்கமும் நமது காலத்திய இரு பெரும் வரலாற்றுப் போக்குகளாகும்.

இப்பகுதிகளிலுள்ள தேசிய ஜனநாயகப் புரட்சி இன்றைய பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியின் முக்கியமான ஒரு பகுதியாகும்.

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளிலுள்ள மக்களின் ஏகாதிபத்தியத்திற்கெதிரான புரட்சிகரப் போராட்டங்கள் ஏகாதிபத்தியம் மற்றும் பழைய, புதிய காலனி ஆதிக்கத்தின் அடித்தளங்களைத் தாக்கித் தகர்த்து வருகின்றன. உலக சமாதானத்தைப் பாதுகாப்பதில் இவை வல்லமை மிக்க சக்தியாகத் திகழ்கின்றன.

ஆகவே, ஒரு விதத்தில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற இலட்சியம் முழுவதும் உலக மக்கட் தொகையில் மிகப் பெரும்பாலோராக உள்ள இப்பகுதி மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின் முடிவைச் சார்ந்துள்ளது.

ஆகவே, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடு களிலுள்ள மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிகரப் போராட்டம் வெறும் பிரதேச முக்கியத்துவம் வாய்ந்த விசயம் மட்டுமல்ல; பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியின் இலட்சியம் முழுமைக்குமே ஒட்டு மொத்தமான முக்கியத்துவம் வாய்ந்த விசயமும் ஆகும்.

இப்பொழுது, ஒரு சில நபர்கள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, புரட்சிகரப் போராட்டங் களின் பெரும் சர்வதேச முக்கியத்துவத்தை மறுக்கும் அளவிற்குச் செல்கின்றனர். தேசிய இனம், நிறம், பூகோள அமைப்பு ஆகிய தடைகளைத் தகர்ப்பது என்ற பெயரால் ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசங்களுக்கும், ஒடுக்கும், ஒடுக்கப்படும் நாடுகளுக்கும் இடையிலுள்ள பாகுபாட்டு எல்லைகளைத் துடைத்தெறிந்துவிட்டு இப்பகுதி மக்களின் புரட்சிகரப் போராட்டங்களைத் தடுத்து நிறுத்த தங்களால் ஆன அனைத்து முயற்சிகளையும் செய்து வருகின்றனர். உண்மையில் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். இப்பகுதிகளில் ஏகாதிபத்திய ஆட்சியை நியாயப்படுத்தவும், அதன் பழைய, புதிய காலனி ஆதிக்கக் கொள்கைகளை வளர்க்கவும் ஒரு புதிய ''கோட்பாட்டை'' உருவாக்குகின்றனர். உண்மையில் இந்த கோட்பாடு தேசிய இனம், நிறம், பூகோள அமைப்பு ஆகிய தடைகளை உடைத் தெறிவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, மாறாக ஒடுக்கப்பட்ட

நாடுகளின் மீது ''மேம்பட்ட நாடுகளின்'' ஆட்சியை நிலை நிறுத்துவதற்கே முற்படுகின்றது. இந்த நயவஞ்சக ''கோட்பாட்டை'' இப் பகுதிகளிலுள்ள மக்கள் நிராகரிப்பது இயற்கையே.

ஒவ்வொரு சோசலிச நாட்டிலும் ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் உள்ள தொழிலாளி வர்க்கம், ''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'', ''உலகத் தொழிலாளர்களே ஒடுக்கப்பட்ட நாடுகளுடன் ஒன்றுபடுங்கள்'' என்ற போராட்ட முழக்கங்களை உண்மையாக அமுல் நடத்த வேண்டும்; ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் புரட்சிகர அனுபவங்களை அது கற்றுக்கொள்ள வேண்டும்; அவர்களுடைய புரட்சிகர நடவடிக்கையை உறுதியுடன் ஆதரிக்க வேண்டும்; அவர்களது விடுதலை இலட்சியத்தை தொழிலாளி வர்க்கத்தின் மிக நம்பத்தகுந்த ஆதரவென்றும், தொழிலாளி வர்க்கத்தின் சொந்த நலன்களுக்கு நேரடியாக ஒத்துவரக் கூடியதென்றும் கருதவேண்டும். தேசிய இனம், நிறம், பூகோள அமைப்பு ஆகிய தடைகளை உடைத்தெறிவதற்கு இது ஒன்றே பயனுள்ள வழியாகும்; இது ஒன்றே உண்மையான பாட்டாளி வர்க்க சர்வதேசியமாகும்.

அய்ரோப்பிய, அமெரிக்க முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம் ஒடுக்கப்பட்ட நாடுகளுடன் ஒன்றுபடாமல், இந்த ஒடுக்கப்பட்ட நாடுகள் விடுதலை பெறாமல் தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது. முதலாளித்துவத்திற்கு எதிரான தங்கள் போராட்டங்களை அய்ரோப்பிய, அமெரிக்கத் தொழிலாளர்கள், முதலாளித்துவத்தினால் ஒடுக்கப்பட்ட கோடிக்கணக்ான ''காலனி'' அடிமைகளுடன் நெருக்கமாகவும் முழுமையாகவும் இணைத்துக் கொள்ளவில்லை என்றால் முன்னேற்றமடைந்த நாடுகளிலுள்ள புரட்சிகர இயக்கம் ஒரு அப்பட்டமான மோசடியாகவே இருக்கும்[1] என லெனின் சரியாகக் கூறியுள்ளார்.

சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் உள்ள சில நபர்கள், விடுதலைக்காக ஒடுக்கப்பட்ட தேசங்கள் நடத்தும் போராட்டங்களின்பால் ஒரு செயலற்ற அல்லது வெறுப்புற்ற அல்லது எதிர்மறையான போக்கை மேற்கொண்டு வருகின்றனர். உண்மையில் அவர்கள் ஏகபோக முதலாளித்துவத்தின் நலன்களைப் பேணுகின்றனர். தொழிலாளி வர்க்க நலன்களுக்குத் துரோகமிழைத்து, சமூக ஜனநாயகவாதிகளாக சீரழிந்து வருகின்றனர்.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின்பால் அனுசரிக்கும் போக்கு, புரட்சியை

---

1. வி. இ. லெனின், கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1952, தொகுதி II, பகுதி 2, பக். 472-73

விரும்புபவர்களை புரட்சியை விரும்பாதவர்களினின்றும், உலக சமாதா-னத்தை உண்மையாகப் பாதுகாப்பவர்களை ஆக்கிரமிப்பு சக்திகளை தூண்டி விடுகின்றவர்களிலிருந்தும் பிரித்துக் காட்டுவதற்கு முக்கியமான-தொரு அளவீடாகும்.

(9) ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றின் ஒடுக்கப்பட்ட தேசங்களும் மக்களும் ஏகாதிபத்தியத்தையும், அதன் அடிவருடிகளையும் எதிர்த்துப் போராட வேண்டிய அவசரப் பணியை எதிர்கொண்டுள்ளனர்.

ஏகாதிபத்தியத்திற்கும், பழைய, புதிய காலனி ஆதிக்கத்திற்கும் எதிராகவும் தேசிய சுதந்திரத்திற்காகவும், மக்கள் ஜனநாயகத்திற்காகவும் போராட்டப் பதாகையை உயர்த்திப் பிடிக்கும் மகத்தான பணியையும், தேசிய ஜனநாயகப் புரட்சிகர இயக்கத்தின் முன்னணியில் நின்று சோசலிச எதிர்காலத்திற்காகப் பாடுபடும் மகத்தான பணியையும் இப்பகுதிகளிலுள்ள பாட்டாளி வர்க்கக் கட்சிகளிடம் வரலாறு ஒப்படைத்துள்ளது.

இப்பகுதிகளில், மிக விரிவான மக்கள் பகுதியினர் ஏகாதிபத்தியத்திற்கு அடிமைகளாகயிருக்க ஒப்புக்கொள்ளவில்லை. இவர்களில் தொழிலாளர்கள், விவசாயிகள், படித்த அறிவாளிகள், சிறு முதலாளிகள் மட்டுமல்ல, தேசபக்தி மிக்க தேசிய முதலாளிகளும், தேசபக்தியுள்ள சில மன்னர்களும், இளவரசர்களும், பிரபுக்களும் கூட உள்ளனர்.

பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் பரந்து பட்ட மக்களின் ஆற்றலில் நம்பிக்கை வைக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, விவசாயிகளுடன் ஒன்றுபட்டு ஒரு உறுதியான தொழிலாளி-விவசாயி நேச அணியை உருவாக்க வேண்டும். கிராமப் பகுதிகளில் வேலை செய்வதும், விவசாயிகள் ஸ்தாபன ரீதியாகத் திரளுவதற்கு உதவி செய்வதும், அவர்களுடைய வர்க்க உணர்வையும் தேசிய சுய கௌரவத்தையும் தன்நம்பிக்கையையும் வளர்ப்பதும் பாட்டாளி வர்க்க முன்னணி உறுப்பினர்களின் தலையாய முக்கியத்துவமுடைய பணியாகும்.

தொழிலாளி-விவசாயி நேச அணியின் அடிப்படையில், பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் ஒன்றுபடுத்தப் படக்கூடிய எல்லாப் பகுதிகளையும்ஒன்றுபடுத்தி, ஏகாதிபத்தியத்திற்கும், அதன்அடிவருடிகளுக்கும் எதிராக ஒரு விரிவான அய்க்கிய முன்னணியை அமைப்பது அவசியமாகும். இந்த அய்க்கிய முன்னணியை வலுப்படுத்துவதற்கும், விரிவுபடுத்துவதற்கும், பாட்டாளி வர்க்கக் கட்சி அதன் சித்தாந்த, அரசியல் ஸ்தாபனத் தனித்தன்மையைப் பேணுவதும், புரட்சியில் தன்தலைமையை வலியுறுத்துவதும் அவசியமாகும்.

பாட்டாளி வர்க்கக் கட்சியும், புரட்சிகர மக்களும் ஆயுதந்தாங்கிய போராட்டம் உட்பட எல்லா வகையான போராட்ட முறைகளையும் முற்றும் கற்றுத்தேர்ச்சி பெறவேண்டும். ஏகாதிபத்தியமும், அதன் அடிவருடிகளும் ஆயுதந்தாங்கிய அடக்கு முறையை மேற்கொள்ளும் போது பாட்டாளி வர்க்கக் கட்சியும் புரட்சிகர மக்களும் புரட்சிகர ஆயுதந் தாங்கிய இராணுவ பலத்தின்மூலம் எதிர்ப்புரட்சியின் இராணுவ பலத்தை முறியடிக்க வேண்டும்.

அண்மையில் அரசியல் சுதந்திரம் பெற்றுள்ள தேசங்கள் அதை வலுப்படுத்துவது, ஏகாதிபத்திய சக்திகளையும், உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளையும் ஒழித்துக் கட்டுவது, விவசாய சீர்திருத்தங்களையும் இதர சமூக சீர்திருத்தங்களையும் நிறைவேற்றுவது, தேசிய பொருளா தாரத்தையும், தேசிய கலாச்சாரத்தையும் வளர்ப்பது ஆகிய சிரமமான பணிகளை எதிர்கொண்டுள்ளன. பழைய காலனிவாதிகள் தங்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குக் கடைப்பிடிக்கும் புதிய காலனி ஆதிக்கக் கொள்கைகளுக்கு, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத் தின் புதிய காலனியாதிக்கத்திற்கு எதிராகப் போராடுவதும், அவற்றி னின்று தம்மைப் பாதுகாத்துக் கொள்வதும் இந்நாடுகளுக்கு ஜீவாதார மான நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும்.

இந்த நாடுகள் சிலவற்றில் தேசப்பற்றுள்ள தேசிய முதலாளிகள் ஏகாதிபத்தியத்திற்கும், காலனி ஆதிக்கத்திற்கும் எதிரான போராட் டத்தில் தொடர்ந்து பரந்துபட்ட மக்களுடன் இருந்து வருகின்றனர். சமூக முன்னேற்றத்திற்கான ஒரு சில நடவடிக்கைகளையும் மேற் கொண்டுள்ளனர். எனவே தேசப்பற்றுமிக்க தேசிய முதலாளிகளின் முற்போக்குப் பாத்திரத்தைப்பற்றி முழுமையாக ஆய்வு செய்து அவர்களுடனான ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டியது பாட்டாளி வர்க்கக் கட்சியின் பணியாகும்.

உள்நாட்டு சமூக முரண்பாடுகளும், சர்வதேச வர்க்கப்போராட்டமும் கூர்மையடையும் பொழுது புதிதாக விடுதலை பெற்ற சில நாடுகளிலுள்ள முதலாளிகள், குறிப்பாகப் பெருமுதலாளிகள் ஏகாதிபத்தியத்தின் சேவகர்களாக மாறி, மக்கள் விரோத, கம்யூனிசவிரோத, எதிர்ப் புரட்சிக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் போக்கில் செல்கின்றனர். இந்தப் பிற்போக்குக் கொள்கைகளைப் பாட்டாளிவர்க்கக் கட்சி உறுதியுடன் எதிர்ப்பது அவசியமாகும்.

பொதுவாகக்கூறின், இந்நாடுகளிலுள்ள முதலாளி வர்க்கத்திற்கு இரட்டைத் தன்மை உண்டு. முதலாளித்துவத்துடன் அய்க்கிய முன்னணி ஏற்படுத்தும் போது, பாட்டாளிவர்க்கக் கட்சிகளின் கொள்கை ஒற்றுமையும் போராட்டமுமாக இருக்க வேண்டும். முதலாளிவர்க்கம் முற்போக்கானதாயும், ஏகாதிபத்தியத்திற் கெதிரானதாயும், நிலப்பிரபுத்

துவத்திற்கெதிரானதாயும் செல்லும்போது அதனுடன் ஒன்றுபடுவது, ஏகாதிபத்தியத்துடனும், நிலப்பிரபுத்துவ சக்திகளுடனும் சமரசம் செய்துகொண்டு, அவற்றுடன் ஒத்துழைக்கும் போது அவர்களது பிற்போக்குப் போக்குகளுக்கெதிராகப் போராடுவது என்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

தேசியப் பிரச்சினையில் பாட்டாளிவர்க்கக் கட்சியின் உலகக் கண்ணோட்டம் சர்வதேசியமே, தேசியவாதமல்ல. புரட்சிகரப் போராட்டத்தில் பாட்டாளிவர்க்கக் கட்சி முற்போக்கு தேசியவாதத்தை ஆதரிக்கிறது; பிற்போக்கு தேசியவாதத்தை எதிர்க்கிறது. பாட்டாளி வர்க்கக்கட்சி தனக்கும் முதலாளித்துவ தேசிய வாதத்திற்கும் இடையில் ஒரு தெளிவான பாகுபாட்டை எப்பொழுதும் வரையறுத்துக் கொள்ள வேண்டும். அது முதலாளித்துவ தேசியவாதத்திற்கு ஒரு போதும் சிறைப்பட்டுவிடக்கூடாது.

1960-ம் ஆண்டு அறிக்கை கூறுவதாவது :

''முதலாளி வர்க்கத்தின் பிற்போக்குப் பகுதியானது தனது சுயநல, குறுகிய வர்க்க நலன்களை தேசம் முழுவதன் நலன்களாகக் காட்ட முயற்சிப்பதை கம்யூனிஸ்ட்டுகள் அம்பலப்படுத்துகிறார்கள். அதே காரணத்துக்காக முதலாளித்துவ அரசியல்வாதிகள் சோசலிச முழக்கங்களை சொல் அலங்காரங்களாக பயன்படுத்துவதையும் அம்பலப்படுத்துகிறார்கள்.

புரட்சியில் பாட்டாளிவர்க்கம், நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் வாலாக இருந்தால் தேசிய ஜனநாயகப் புரட்சியில் உண்மையான அல்லது முழுமையான வெற்றி சாத்தியமில்லை. இத்தகைய ஒரு வெற்றி கிடைத்தாலுங்கூட, அதை உறுதிப்படுத்துவது சாத்தியமில்லை.

ஒடுக்கப்பட்ட மக்களின், தேசங்களின் புரட்சிகரப் போராட்டங்களின் போக்கில், பாட்டாளிவர்க்கக் கட்சி ஏகாதிபத்தியத்திற்கும் உள்நாட்டுப் பிற்போக்காளர்களுக்கும் முற்றிலும் எதிரானதும், தேசிய சுதந்திரத்திற்கும் மக்கள் ஜனநாயகத்திற்கும் ஆதரவானதுமான தனது சொந்த வேலைத் திட்டத்தை முன்வைக்க வேண்டும்; பொதுமக்களிடையில் சுயேச்சையாகச் செயல்பட்டு முற்போக்கு சக்திகளை இடைவிடாது விரிவுபடுத்தியும், இடைப்பட்ட சக்திகளைத் தன்பக்கம் வென்றும், பிற்போக்கு சக்திகளைத் தனிமைப்படுத்த வேண்டும். இவ்வாறு செயல்படுவதன் மூலம் மட்டுமே பாட்டாளி வர்க்கக் கட்சி தேசிய ஜனநாயகப் புரட்சியை இறுதிவரை கொண்டுசெல்ல முடியும்; புரட்சியை சோசலிசப் பாதையில் வழிநடத்திச் செல்லமுடியும்.

(10) ஏகாதிபத்திய நாடுகளிலும், முதலாளித்துவ நாடுகளிலும், முதலாளித்துவ சமுதாயத்தின் முரண்பாடுகளுக்கு முழுமையான தீர்வு

காண்பதற்குப் பாட்டாளிவர்க்கப் புரட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் இன்றியமையாதவை.

இப்பணியை நிறைவேற்றும் முயற்சியில், இன்றைய சூழ்நிலைமைகளில் பாட்டாளி வர்க்கக்கட்சி, ஏகபோக முதாளித்துவத்தை எதிர்க்கவும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், பாசிச அபாயத்தை எதிர்க்கவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், ஏகாதிபத்திய ஆயுதப் பெருக்கத்தையும் யுத்தத் தயாரிப்புகளையும் எதிர்க்கவும், உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும், ஒடுக்கப்பட்ட நாடுகளின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு செயலூக்கத்துடன் உதவவும், தொழிலாளி வர்க்கத்தையும் மக்களையும் செயலூக்கத்துடன் தலைமை தாங்கி வழி நடத்த வேண்டும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அல்லது அது தன் கட்டுபாட்டில் கொண்டுவர முயன்று கொண்டிருக்கும் முதலாளித்துவ நாடுகளில், தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் பிரதானமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராகத் தாக்குதல்களைத் தொடுக்க வேண்டும். அதேசமயத்தில் தேசிய நலன்களுக்குத் துரோகமிழைத்துவரும் தங்கள் நாட்டிலுள்ள ஏகபோக முதலாளிகளையும் இதர பிற்போக்கு சக்திகளையும் எதிர்த்தும் தாக்குதல்கள் தொடுக்க வேண்டும்.

சமீப ஆண்டுகளில் முதலாளித்துவ நாடுகளில் பெருமளவில் நடைபெற்றுவரும் வெகுஜனப் போராட்டங்கள், தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் புதியதொரு விழிப்புணர்வு பெற்று வருகின்றனர் என்பதைக் காட்டுகின்றன. ஏகபோக முதலாளித்துவத்திற்கும் பிற்போக்கிற்கும் உதைகள் தரும் அவர்களின் இப்போராட்டங்கள் அவர்களின் சொந்த நாடுகளின் புரட்சிகர இலட்சியங்களுக்கு சிறப்பான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளன. அத்துடன் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாட்டு மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கும் சோசலிச முகாமிலுள்ள நாடுகளுக்கும் சக்தி வாய்ந்த ஆதரவாகவும் திகழ்கின்றன.

ஏகாதிபத்திய அல்லது முதலாளித்துவ நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கக் கட்சிகள் புரட்சிகரப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கும்போது தங்களுடைய சொந்த தத்துவார்த்த, அரசியல், அமைப்புத் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் ஒன்றுபடுத்தப்படக் கூடிய எல்லா சக்திகளையும் ஒன்றுபடுத்தி ஏகபோக மூலதனத்திற்கெதிராகவும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கைகளுக்கு எதிராகவும் ஒரு விரிவான அய்க்கிய முன்னணியைக் கட்டவேண்டும்.

உடனடிப் போராட்டங்களைத் தீவிரமாக வழிநடத்திச் செல்லும் அதே வேளையில் முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகள், இப்போராட்டங்களை நீண்டகாலப் பொது நலன்களுடன் இணைக்க வேண்டும். பரந்துபட்ட மக்களுக்கு, மார்க்சிய—லெனினிய உணர்வில் போதனை அளித்து, அவர்களின் அரசியல் உணர்வை இடைவிடாது உயர்த்தி, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வரலாற்றுக் கடமையை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் இவ்வாறு செய்யத் தவறினால் உடனடி இயக்கம்தான் எல்லாவற்றையும்விட முக்கியம் என்று கருதினால், நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி தங்களின் நடவடிக்கையைத் தீர்மானித்துக் கொண்டால், அன்றாட நிகழ்ச்சிகளுக்கேற்ப தங்களை மாற்றிக்கொண்டு பாட்டாளிவர்க்கத்தின் அடிப்படை நலன்களைக் கைவிட்டால் அது முழுக்க முழுக்க சமூக ஜனநாயகமாகத்தானிருக்கும்.

சமூக ஜனநாயகம் ஒரு முதலாளித்துவ சித்தாந்தப் போக்கு ஆகும். சமூக ஜனநாயகக் கட்சிகள் முதலாளிவர்க்கத்தின் அரசியல் படைப்பகுதிகளென்றும், தொழிலாளி வர்க்க இயக்கத்தில் உள்ள அதன்ஏஜெண்டுகள் என்றும், அதன் பிரதான சமூக ஆதாரம் என்றும் நீண்ட காலத்திற்கு முன்பே லெனின் சுட்டிக்காண்பித்தார். பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற அடிப்படைப் பிரச்சினைகளில் தங்களுக்கும், சமூக ஜனநாயகக் கட்சிகளுக்குமிடையே உள்ள தெளிவான வேறுபாடுகளை கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். மேலும், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்திலும் உழைக்கும் மக்களிடையிலும் உள்ள சமூக ஜனநாயகத்தின் தத்துவார்த்தச் செல்வாக்கை ஒழித்துக்கட்ட வேண்டும். எவ்வித அய்யத்துக்குமிடமின்றி கம்யூனிஸ்டுகள் சமூக ஜனநாயகக் கட்சிகளின் செல்வாக்கிலுள்ள பொதுமக்களை தம்பக்கம் வென்றெடுக்க வேண்டும். சமூக ஜனநாயகக்கட்சிகளில் இருந்து கொண்டே உள்நாட்டு ஏகபோக மூலதனத்தையும் அந்நிய ஏகாதிபத்திய ஆதிக்கத்தையும் எதிர்க்க முன்வரும் இடதுசாரி, நடுநிலை நபர்களையும் கம்யூனிஸ்டுகள் தம்பக்கம் வென்றெடுக்க வேண்டும்; தொழிலாளிவர்க்க இயக்கத்தின் அன்றாடப் போராட்டங்களிலும் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டத்திலும் விரிவான கூட்டு நடவடிக்கைகளுக்காக ஒன்றுபட வேண்டும்.

பாட்டாளிவர்க்கத்தையும் உழைக்கும் மக்களையும் புரட்சியில் வழிநடத்திச் செல்லும் பொருட்டு மார்க்சிய—லெனினியக் கட்சிகள் அனைத்துப் போராட்ட வடிவங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். போராட்ட சூழ்நிலைகள் மாறும்போது ஒரு வடிவத்துக்குப் பதிலாக வேறு ஒரு வடிவத்தை உடனடியாகச் செயல்படுத்தும் திறன் பெற்றிருக்க வேண்டும். சமாதானபூர்வமானதும், இராணுவ ரீதியானதும், வெளிப்படையானதும் இரகசியமானதும், சட்டபூர்வமானதும் சட்டவிரோதமானதும், பாராளுமன்ற ரீதியானதும் வெகுஜன ரீதியானதுமான அனைத்து போராட்ட வடிவங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தால்

மட்டுமே பாட்டாளிவர்க்க முன்னணிப்படை எந்த சூழ்நிலையிலும் வெல்ல முடியாததாகயிருக்கும். பாராளுமன்றம் மற்றும் இதர பயன்படுத்தக் கூடிய சட்டபூர்வமான போராட்ட முறைகளை பயன் படுத்த வேண்டும் என்ற நிலையில் அவற்றைப் பயன்படுத்த மறுப்பது தவறானதாகும். ஆயினும், ஒரு மார்க்சிய—லெனினியக் கட்சியானது சட்ட நியதிக்கும், பாராளுமன்ற சட்டவாதத்திற்கும் இரையாகி, போராட்டத்தை முதலாளிவர்க்கம் அனுமதிக்கும் வரம்புகளுக்குள் மட்டும் குறுக்கிக் கொண்டால் அது பாட்டாளி வர்க்கப் புரட்சியையும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தையும் தவிர்க்க முடியாதபடி கைவிடுவதில் கொண்டுபோய்விடும்.

(11) முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச்செல்லும் பிரச்சினையைப் பொறுத்தவரையில், பாட்டாளிவர்க்கக் கட்சி வர்க்கப் போராட்டம், புரட்சி என்ற நிலைப்பாடுகளிலிருந்து தொடங்க வேண்டும். பாட்டாளிவர்க்கப் புரட்சி, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் ஆகியவை பற்றிய மார்க்சிய—லெனினியப் போதனைகளை அடிப் படையாகக் கொள்ள வேண்டும்.

சமாதானபூர்வமான முறைகளில் சோசலிசத்திற்கு மாறி வருவதையே கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் விரும்புகிறார்கள். ஆனால், சமாதான பூர்வமான இந்த மாற்றத்தை சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் ஒரு புதிய யுத்ததந்திரக் கொள்கையாக்க முடியுமா? கண்டிப்பாக முடியாது.

எல்லாப் புரட்சிகளிலும் அடிப்படைப் பிரச்சினையாக இருப்பது அரசு அதிகாரம் என்பதே மார்க்சிய—லெனினியத்தின் உறுதியான கருத்து. ''ஆளும் வர்க்கம் அதிகாரத்தைத் தானாகவே துறந்து விடுவதில்லை என்பதை லெனினியம் போதிக்கிறது. அனுபவமும் அதை உறுதி செய்கிறது'' என்பதை 1957 பிரகடனமும், 1960 அறிக்கையும் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன. பழைய அரசாங்கங்கள் தூக்கியெறியப் பட்டாலொழிய நெருக்கடி காலத்தில்கூடத் தானாகக் கவிழ்வதில்லை. இது வர்க்கப் போராட்டத்தின் அனைத்துந் தழுவிய விதியாகும்.

மார்க்சும், லெனினும் குறிப்பான அரசியல் சூழ்நிலைமைகளில் புரட்சி சமாதானபூர்வமான பாதையில் செல்வதற்கான சாத்தியப் பாட்டைப்பற்றி கூறியுள்ளனர். ஆனாலும், லெனின் சுட்டிக் காண்பித்ததுபோல், புரட்சி சமாதானபூர்வமாக வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பு ''புரட்சிகளின் வரலாற்றில் மிக அபூர்வமாகக் காணப்படுவதாகும்''.

உண்மையில் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு சமாதானபூர்வமான முறையில் மாறிச் சென்றதற்கு வரலாற்றில் எந்த முன்னுதாரணமும் இல்லை. சோசலிசம் தவிர்க்கமுடியாதபடி முதலாளித்

துவத்தின் இடத்தை நிரப்பும் என்று மார்க்ஸ் தீர்க்க தரிசனத்துடன் கூறிய பொழுது, அதற்கு முன்மாதிரியாக எதுவும் இருக்கவில்லை. அப்படியிருக்க, முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்குச் சமாதான பூர்வமான மாற்றம் ஏற்படுமென முன்னுதாரணமின்றியே நாங்கள் ஏன் ஆருடம் கூறக் கூடாது என சில நபர்கள் கூறுகின்றனர்.

இந்த ஒப்பீடு நகைப்பிற்கிடமானது. இயக்க இயல், மற்றும் வரலாற்றியல் பொருள் முதல் வாதத்தைக் கருவியாகக் கொண்டு மார்க்ஸ் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளைப் பகுத்தாராய்ந்து மனித சமுதாயத்தின் யதார்த்தமான வளர்ச்சி விதிகளைக் கண்டுபிடித்து, விஞ்ஞான பூர்வமான முடிவுகளை அடைந்தார். ஆனால் ''சமாதான மாற்றத்தில்'' மட்டுமே நம்பிக்கை வைத்துள்ள தீர்க்கதரிசிகள் வரலாற்றுப் பூர்வமான கருத்து முதல்வாதத்தைப் பின்பற்றி, முதலாளித்துவத்தின் மிக அடிப்படையான முரண்பாடுகளைப் புறக்கணித்துவிட்டு வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனைகளை மறுத்துவிட்டு, அகவயமான, ஆதாரமற்ற முடிவுக்கு வருகிறார்கள். மார்க்சியத்தை மறுப்பவர்கள் எவ்வாறு மார்க்சிடமிருந்து உதவி பெற முடியும்?

முதலாளித்துவ நாடுகள் தங்களது அரசு இயந்திரத்தை—குறிப்பாக அவர்களது இராணுவ இயந்திரத்தை—பலப்படுத்திக் கொண்டிருப்பதன் பிரதான நோக்கம் தங்கள் நாடுகளிலுள்ள மக்களை அடக்கியொடுக்குவதே என்பது யாவரும் அறிந்த தெளிவான விசயம்.

பாட்டாளி வர்க்கக் கட்சி தனது சிந்தனையையும், புரட்சிக்கான கொள்கைகளையும், மற்றும் தனது அனைத்துப் பணிகளையும் ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்காளர்களும் சமாதான பூர்வமான மாற்றத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளக் கூடாது.

பாட்டாளி வர்க்கக் கட்சி இரு சாத்தியப்பாடுகளுக்கும் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்—புரட்சியின் சமாதான பூர்வமான வளர்ச்சிப் போக்கிற்குத் தயார் செய்யும் அதேவேளையில் சமாதான பூர்வமல்லாத வளர்ச்சிப் போக்கிற்கும் தன்னை முழுமையாகத் தயார் செய்து கொள்ளவேண்டும். புரட்சிக்கான சூழ்நிலைமைகள் பக்குவமாக இருக்கும்போது வெற்றியைக் கைப்பற்றுவதற்கு அல்லது ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்காளர்களும் திடீர் தாக்குதல்களையும், இராணுவத் தாக்குதல்களையும் தொடுக்கும்பொழுது அவர்களுக்குப் பலமான அடிகள் கொடுப்பதற்கு ஏற்றவகையில் பாட்டாளி வர்க்கக் கட்சி தன் புரட்சிகர சக்திகளைத் திரட்டிக் கொள்ளும் கடினமான பணியில் ஊன்றி கவனம் செலுத்த வேண்டும்.

பாட்டாளி வர்க்கக் கட்சி, இத்தகைய ஆயத்தங்களைச் செய்யத் தவறினால், அது பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர உணர்வைக்

குலைத்துவிடும். பாட்டாளி வர்க்கக் கட்சி தத்துவார்த்த ரீதியில் நிராயுதபாணியாக்கப்பட்டு, அரசியல் ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் முற்றிலும் மந்தமான, ஆயத்தமற்ற நிலைக்குத் தள்ளப்படுவதுடன், பாட்டாளிவர்க்கப் புரட்சிகர இலட்சியத்தையே அது குழி தோண்டிப் புதைத்துவிடும்.

(12) மனிதகுல வரலாற்றில் பல்வேறு கட்டங்களிலும் நிகழ்ந்த எல்லா சமூகப் புரட்சிகளும் வரலாற்று ரீதியாகத் தவிர்க்க இயலாதவை. இவையாவும் மனித விருப்பத்திற்கு அப்பாற்பட்ட புறநிலை விதிகளினால் இயக்கப்படுகின்றன. மேலும் எந்த ஒரு புரட்சியும் நெளிவு சுளிவுகளும் தியாகங்களுமில்லாமல் வெற்றிபெற்றதில்லையென்பதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது.

மார்க்சிய—லெனினியக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு, பருண்மையான வரலாற்று சூழ்நிலைமைகளைப் பகுத்தாராய்ந்து, சரியான யுத்த தந்திரத்தையும் போர்த் தந்திரங்களையும் முன்வைத்து, கண்ணுக்குப் புலப்படாத ஆபத்துக்களையும் அவசியமற்ற தியாகங்களையும் தவிர்த்து, படிப்படியாக இலட்சியத்தை அடைவதற்கு பரந்துபட்ட மக்களுக்கு வழிகாட்டுவது பாட்டாளி வர்க்கக் கட்சியின் கடமையாகும். தியாகங்களை ஒரேயடியாகத் தவிர்த்துவிடுவது சாத்தியமா? அடிமைப் புரட்சிகளிலோ, பண்ணை அடிமைப் புரட்சிகளிலோ, முதலாளித்துவப் புரட்சிகளிலோ அல்லது தேசியப் புரட்சிகளிலோ இது சாத்தியமாகவில்லை. பாட்டாளி வர்க்கப் புரட்சிகளிலும் இதே நிலைதான். புரட்சியை வழிநடத்திச் செல்லும் பாதை சரியானதாகயிருப்பினும் புரட்சிப் போக்கில் பின்னடைவுகளுக்கும், தியாகங்களுக்கும் எதிராக உறுதியான உத்தரவாதம் அளிப்பது சாத்தியமில்லை.

சரியான பாதை பின்பற்றப்படுமாயின் புரட்சி இறுதியில் வெற்றி பெறுவது நிச்சயம். தியாகங்களைத் தவிர்ப்பது என்ற பெயரில் புரட்சியைக் கைவிட்டு விடுவது, உண்மையில் மக்கள் எக்காலத்தும் அடிமைகளாகயிருக்க வேண்டும் என்றும் முடிவற்ற வேதனைகளையும் தியாகங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டும் என்றும் கோருவதாகும்,

புரட்சியின் பிரசவ வேதனை பழைய சமுதாயத்தின் தீராத வேதனைகளைக்காட்டிலும் மிகமிகக் குறைவானதே என்பது மார்க்சிய—லெனினியம் போதிக்கும் பாலபாடமாகும். ''மிகச் சமாதான பூர்வமான நிகழ்ச்சிப் போக்கிலும் கூட இன்றைய (முதலாளித்துவ) அமைப்பு தொழிலாளி வர்க்கத்திடமிருந்து தவிர்க்க இயலாதவகையில் எண்ணற்ற தியாகங்களைப் பெறுகிறது''[1] என லெனின் சரியாகக் குறிப்பிட்டார்.

---

1. லெனின், 'மற்றொரு படுகொலை', தொகுப்பு நூல், ஆங்கிலப் பதிப்பு, FLPH, மாஸ்கோ, 1961, தொகுதி 5, பக். 25

எல்லாம் சுமுகமாகச் சென்றால் மட்டுமே, தியாகங்களுக்கும் தோல்விக்கும் எதிராக முன் உத்தரவாதம் இருந்தால் மட்டுமே புரட்சியை நடத்த முடியும் என்று கருதுகிற எவரும் நிச்சயமாக ஒரு புரட்சியாளராக இருக்க முடியாது.

சூழ்நிலைகள் எவ்வளவு கடினமானதாயிருப்பினும் சரி, என்னதான் தியாகங்களையும், தோல்விகளையும் புரட்சி ஏற்கவேண்டியிருப்பினும் சரி, பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்கள் பரந்துபட்ட மக்களுக்கு புரட்சிகர உணர்விலான போதமளிக்கவும் புரட்சிப் பதாகையைத் தூக்கிப் பிடிக்கவும் வேண்டுமே ஒழிய அதைக் கைவிடக்கூடாது.

யதார்த்த சூழ்நிலைமைகள் பக்குவப்படுவதற்கு முன்பே ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி கண்மூடித்தனமான முறையில் புரட்சியைத் தொடங்குமானால், அது ''இடது'' துணிச்சல்வாதமாகும். ஆனால் யதார்த்த சூழ்நிலைகள் பக்குவமாயிருக்கும்பொழுது பாட்டாளி வர்க்கக் கட்சி புரட்சிக்குத் தலைமை தாங்கவும் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றவும் துணிவில்லாதிருந்தால் அது ''வலது'' சந்தர்ப்பவாதமாகும்.

சாதாரண காலங்களில் கூட அன்றாடப் போராட்டங்களில் பரந்துபட்ட மக்களுக்குத் தலைமை தாங்கும்போது பாட்டாளி வர்க்கக் கட்சி தனது சொந்த அணிகளையும், பொது மக்களையும் சித்தாந்த, அரசியல், அமைப்பு ரீதியில் புரட்சிக்கு ஆயத்தப்படுத்தி புரட்சிகரப் போராட்டங்களை வளர்க்க வேண்டும்; அப்பொழுதுதான் புரட்சிக்கான சூழ்நிலைமைகள் பக்குவமாயிருக்கும்பொழுது, பாட்டாளி வர்க்கக் கட்சி பிற்போக்கு ஆட்சியைத் தூக்கியெறிந்து ஒரு புதிய அரசை நிறுவுவதற்கான வாய்ப்பைத் தவறவிடாமலிருக்க முடியும். இல்லையேல், யதார்த்த சூழ்நிலைகள் பக்குவமாயிருக்கும்பொழுது, பாட்டாளி வர்க்கக் கட்சி வெற்றியைக் கைபபற்றும் வாய்ப்பை வெறுமனே தூக்கியெறிந்துவிடும்.

தொழிலாளி வர்க்கக் கட்சி நெளிவு சுளிவாகவும், உயர்ந்த கொள்கைகளை கடைப்பிடிப்பதாகவும் இருக்க வேண்டும். புரட்சியின் நலன் கருதி அவசியமான சமரசங்களைக் கூட சிற்சில சமயங்களில் செய்துகொள்ள வேண்டும். ஆனால் அது கொள்கை ரீதியான தனது அரசியல் வழிமுறைகளையும், புரட்சி இலட்சியத்தையும் நெளிவு சுளிவு மற்றும் தேவையான சமரசம் என்ற பெயரால் ஒருபோதும் கைவிட்டு விடக்கூடாது. எதிரிகளுக்கெதிராக நடக்கும் போராட்டங்களில் பாட்டாளி வர்க்கக் கட்சி மக்களுக்குத் தலைமை தாங்க வேண்டும். எதிரிகளிடையேயுள்ள முரண்பாடுகளை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வதென்றும் அதற்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் இந்த முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் நோக்கம், மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின் இலட்சியத்தை எளிதாக அடைவதற்கேயன்றி, இந்தப் போராட்டங்களை அழிப்பதற்காக அல்ல.

ஏகாதிபத்தியப் பிற்போக்கின் இருளடைந்த ஆட்சி எங்கெங்கு நிலவுகிறதோ, அங்கெல்லாம் மக்கள் தொகையில் தொண்ணூறு சதத்திற்கு மேற்பட்டோரைக் கொண்டுள்ள மக்கள் விரைவிலோ அல்லது காலம்தாழ்த்தியோ புரட்சியை நடத்துவார்கள் என்பதை எண்ணற்ற சம்பவங்கள் நிரூபித்துள்ளன.

கம்யூனிஸ்டுகள், பரந்துபட்ட மக்களின் புரட்சிகரக் கோரிக்கைகளிலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்வார்களானால், அவர்கள் பரந்துபட்ட மக்களின் நம்பிக்கையை இழந்து புரட்சிகர பிரவாகத்தில் கடைக் கோடிக்குத் தூக்கியெறியப்படுவார்கள்.

எந்த ஒரு கட்சியிலுள்ள தலைமைக் குழுவும் புரட்சிகரமல்லாத வழியைக் கடைப்பிடித்துக் கட்சியை சீர்திருத்தவாதக் கட்சியாக மாற்றுமானால், அப்பொழுது கட்சிக்கு உள்ளும், வெளியிலுமுள்ள மார்க்சிய—லெனினியவாதிகள் அவர்களைத் தூக்கியெறிந்துவிட்டு புரட்சியை நடத்துவதில் மக்களுக்குத் தலைமை தாங்குவார்கள். மற்றொருவிதமான சூழ்நிலையில், புரட்சிக்குத் தலைமை தாங்குவதற்கு முதலாளித்துவப் புரட்சியாளர்கள் முன்னுக்கு வருவார்கள்; பாட்டாளி வர்க்கக் கட்சி புரட்சியில் தனது தலைமையை இழந்துவிடும். பிற்போக்கு முதலாளி வர்க்கம் புரட்சியைக் காட்டிக் கொடுத்து மக்களை அடக்கியொடுக்கும்போது ஒரு சந்தர்ப்பவாதப் பாதையானது, கம்யூனிஸ்டுகளுக்கும், புரட்சிகரமான பரந்துபட்ட மக்களுக்கும் துயரம் மிக்க தேவையற்ற இழப்புகளை ஏற்படுத்தும்.

கம்யூனிஸ்டுகள் சந்தர்ப்பவாதப் பாதைக்கு சரிந்து போவார்களானால், அவர்கள் முதலாளித்துவ தேசியவாதிகளாகச் சீரழிந்துபோய், ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் பிற்போக்கு முதலாளிகளுடைய தொங்குசதைகளாக மாறுவர்.

லெனினுக்குப் பின் புரட்சிகர சித்தாந்தத்திற்குத் தாங்கள் மிகப் பெரும் ஆக்க பூர்வமான பங்காற்றியிருப்பதாகவும், தாங்கள் மட்டுமே சரியெனவும் வாதிடும் சில நபர்கள் இருக்கிறார்கள். ஆனால் உலகக் கம்யூனிச இயக்கம் முழுவதின் விரிவான அனுபவத்தை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொண்டார்களா என்பதும், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் ஒட்டுமொத்த நலன்களையும் இலட்சியத்தையும் கடமைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டார்களா என்பதும், மார்க்சிய—லெனினியத்துக்குப் பொருந்தக்கூடிய சர்வதேசக் கம்யூனிச இயக்கத்திற்கான பொது வழி அவர்களுக்கு உண்மையிலேயே உண்டா என்பதும் மிகவும் சந்தேகத்திற்குரிய விசயமே.

கடந்த சில ஆண்டுகளில் சர்வதேசக் கம்யூனிச இயக்கமும், தேசிய விடுதலை இயக்கமும் பல அனுபவங்களையும், பாடங்களையும் பெற்

றிருக்கின்றன. மக்களால் பாராட்டப்படவேண்டிய பல அனுபவங்களும் உண்டு. மக்கள் வருந்த வேண்டிய பல அனுபவங்களுமுண்டு. வெற்றி, தோல்வி பற்றிய இந்த அனுபவங்களிலிருந்து சரியான முடிவுகளையும், பயனுள்ள படிப்பினைகளையும் பெறுவதற்காக, அனைத்து நாடுகளிலு முள்ள கம்யூனிஸ்டுகளும் புரட்சியாளர்களும் அவற்றை ஆழ்ந்து கற்று, தீர்க்கமாக ஆய்வு செய்ய வேண்டும்.

(13) சோசலிச நாடுகளும், ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் தேசங் களின் புரட்சிகரப் போராட்டங்களும் ஒன்றுக்கொன்று ஆதரவும் உதவி யும் தருகின்றன.

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள தேசிய விடுதலை இயக்கங்களும், முதலாளித்துவ நாடுகளிலுள்ள மக் களின் புரட்சிகர இயக்கங்களும் சோசலிச நாடுகளுக்குப் பலம்வாய்ந்த ஆதரவாகும். இதை மறுப்பது முற்றிலும் தவறானதாகும்.

ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் நாடுகளின் புரட்சிகரப் போராட்டங் களின்பால், சோசலிச நாடுகள் அனுசரிக்கவேண்டிய ஒரே அணுகுமுறை, அவற்றிற்கு மனமார்ந்த அனுதாபமும் தீவிர ஆதரவும் தருவதாகும்; அவை அசட்டை செய்யும் போக்கையோ அல்லது தேசிய சுயநலப் போக்கையோ அல்லது பெரு வல்லரசு ஆதிக்க மனோபாவத்தையோ மேற்கொள்ளக் கூடாது.

''பாட்டாளி வர்க்கத்தின்அயலுறவுக் கொள்கை என்பது அனைத்து மற்றும் குறிப்பிட்ட ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக முன்னேறிய நாடு களின் புரட்சியாளர்களுடனும், அனைத்து ஒடுக்கப்பட்ட தேசங்களுட னும் கூட்டுச் சேர்வதாகும்''[1] என்று லெனின் கூறினார்.

இந்த அம்சத்தைப் புரிந்துகொள்ளத் தவறி ஒடுக்கப்பட்ட மக்களுக் கும் தேசங்களுக்கும் சோசலிச நாடுகள் அளிக்கும் ஆதரவையும், உதவி யையும் ஒரு சுமையாகவோ அல்லது தர்மமாகவோ கருதுபவர்கள் மார்க்சிய—லெனினியத்திற்கும் பாட்டாளிவர்க்க சர்வ தேசியத்திற் கும் எதிராக செயல்படுபவர்களாவர்.

சோசலிச அமைப்பின்மேம்பட்ட அம்சங்களும், கட்டுமானப்பணியில் சோசலிச நாடுகளின் சாதனைகளும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், தேசங் களுக்கும் ஒரு ஆதர்சமாக விளங்குவதோடு உத்வேகமூட்டுவதாகவும் இருக்கின்றன.

---

1. லெனின், 'ருஷ்யப்புரட்சியின் அயலுறவுக் கொள்கை', தொகுப்பு நூல், ஆங்கிலப் பதிப்பு, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1954, தொகுதி 25, பக். 87

ஆயினும், இந்த முன்மாதிரியான பாத்திரமும், உத்வேகமும் ஒடுக்கப்பட்ட மக்களின், தேசங்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு மாற்றாக ஒருபோதும் அமைந்துவிட முடியாது. எந்த ஒடுக்கப்பட்ட மக்களும், தேசங்களும் தங்களின் சொந்த உறுதியான புரட்சிகரப் போராட்டமில்லாமல் விடுதலையடைய முடியாது.

ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் தேசங்களின் புரட்சிகரப் போராட்டத்திற்குப் பதிலாக சமாதானப் போட்டியை முன்வைக்கும் முயற்சியில், சில நபர்கள் சோசலிச நாடுகளுக்கும், ஏகாதிபத்திய நாடுகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதான பூர்வமான போட்டியின் பாத்திரத்தை ஒருதலைப்பட்சமாக மிகைப்படுத்துகிறார்கள். அவர்களது அறிவுரையின் படி, இந்த சமாதானப் போட்டியின் போக்கில் ஏகாதிபத்தியம் தானாகவே சரிந்து விழுந்துவிடும்; இந்த நாளின் வருகைக்காக ஒடுக்கப்பட்ட மக்களும், நாடுகளும் அமைதியாகக் காத்திருக்க வேண்டும். மார்க்சிய-லெனினியக் கருத்தோட்டங்களுக்கும், இதற்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா?

மேலும், சீனாவும் மற்றும் சில சோசலிச நாடுகளும் ''யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட'' விரும்புகின்றனவென்றும், ''அரசுகளிடையே யுத்தங்களை மூட்டி விடுவதன்'' மூலம் சோசலிசத்தைப் பரப்ப விரும்புகின்றனவென்றும் சில நபர்கள் வியப்பிற்குரிய கதையை இட்டுக்கட்டியுள்ளனர். 1960-ம் ஆண்டு அறிக்கை கூறுவது போன்று இத்தகைய கதைகள் ஏகாதிபத்திய, பிற்போக்கு அவதூறுகளன்றி வேறல்ல.

அப்பட்டமாகக் கூறினால், இந்த அவதூறுகளைத் திரும்பத் திரும்பக் கூறுபவர்களது நோக்கம், உலகத்திலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் மற்றும் தேசங்களின் புரட்சிகளை இவர்கள் எதிர்க்கின்றனர் என்ற உண்மையையும், இத்தகைய புரட்சிகளுக்கு மற்றவர்கள் ஆதரவு தருவதையும் இவர்கள் எதிர்க்கின்றனர் என்ற உண்மையையும் மூடி மறைப்பதேயாகும்.

(14) கடந்த சில ஆண்டுகளில் யுத்தமா, சமாதானமா என்ற பிரச்சினைகளைப் பற்றி அதிகமாக-உண்மையில் மிக அதிகமாகக் - கூறப்பட்டிருக்கிறது. இப்பிரச்சினையில் எங்களது கருத்துக்களும், கொள்கைகளும் உலகறிந்த ஒன்று; அவற்றை யாரும் திரித்துக் கூற முடியாது.

சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் உள்ள சில நபர்கள் தாங்கள் சமாதானத்தை எந்த அளவு நேசிக்கிறார்கள், யுத்தத்தை எந்த அளவு வெறுக்கிறார்கள் என்பதைப் பேசினாலுங் கூட, யுத்தத்தைப் பற்றி லெனின் சுட்டிக் காண்பித்துள்ள சாதாரண உண்மைகளைக் கொஞ்சங் கூடப் புரிந்து கொள்ள விருப்பமில்லாதவர்களாகவே இருக்கின்றனர்.

லெனின் கூறினார்; ''யுத்தமென்ற பிரச்சினையில் போதுமான கவனம் செலுத்தப்படாமல் வழக்கமாக மறந்துவிடப்படும் முக்கியமான விசயம் என்னவென்றால், இப்பிரச்சினையில் இவ்வளவு அதிகமான சர்ச்சை -அவசியமற்ற, வீணான, குறிக்கோளற்ற சர்ச்சை என்று நான் இதைக் குறிப்பிடுவேன் - இருப்பதற்குப் பிரதான காரணம், யுத்தத்தின் வர்க்கத் தன்மை பற்றிய அடிப்படைப் பிரச்சினையை மக்கள் மறந்துவிடுவதே யாகும்; யுத்தம் ஏன் ஏற்பட்டது; எந்த வர்க்கங்கள் இதைத் தொடுக் கின்றன; இதை தோற்றுவிப்பதற்குக் காரணமான வரலாற்று, பொரு ளாதார சூழ்நிலைமைகள் என்ன என்பதைப் பார்க்க மக்கள் மறந்துவிடு வதேயாகும்''.[1]

மார்க்சிய-லெனினியவாதிகள் பார்ப்பது போன்று, யுத்தம் என்பது பிற வழிகளில் தொடரும் அரசியல். ஒவ்வொரு யுத்தமும் அதைத் தோற்றுவிக்கும் அரசியல் அமைவிலிருந்தும், அரசியல் போராட்டத்திலி ருந்தும் பிரிக்க முடியாததாகும். வர்க்கப் போராட்ட வரலாறு முழு வதினாலும் உறுதி செய்யப்பட்டுள்ள இந்த விஞ்ஞானப் பூர்வமான மார்க்சிய-லெனினியக் கூற்றுக்கு மாறுபட்டு ஒருவர் செல்வாரானால், அவர் யுத்தப் பிரச்சினையைப் பற்றியோ அல்லது சமாதானப் பிரச்சினையைப் பற்றியோ என்றுமே புரிந்து கொள்ள முடியாது.

வெவ்வேறு விதமான சமாதானமும், வெவ்வேறு வகையான யுத்தங் களும் உள்ளன. எந்த வகையான சமாதானம் அல்லது எந்த வகையான யுத்தம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பற்றி மார்க்சிய-லெனினியவாதிகள் தெளிவாக இருக்க வேண்டும். நியாய-மான யுத்தங்களையும் நியாயமற்ற யுத்தங்களையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பி, பாகுபாடின்றி அனைத்தையும் எதிர்ப்பது, முதலாளித்துவ சமா தான இயக்க அணுகுமுறையேயன்றி, மார்க்சிய-லெனினிய அணுகு முறையல்ல.

யுத்தங்களில்லாமலேயே புரட்சிகள் முற்றிலும் சாத்தியம் என சில நபர்கள் கூறுகின்றனர். எந்த வகையான யுத்தத்தை அவர்கள் குறிப்பிடு கின்றனர்? தேசிய விடுதலை யுத்தங்களையா அல்லது புரட்சிகர உள் நாட்டு யுத்தங்களையா அல்லது உலக யுத்தத்தையா?

அவர்கள் தேசிய விடுதலை யுத்தங்களை அல்லது உள்நாட்டுப் புரட்சிகர யுத்தங்களைக் குறிப்பிடுவார்களானால், இத்தகைய வாய்ப்-பாட்டின் விளைவு புரட்சிகர யுத்தங்களுக்கும் புரட்சிக்கும் எதிரானதாக இருக்கும்.

---

1. லெனின், ''யுத்தமும் புரட்சியும்'', தொகுப்பு நூல், ருஷ்ய பதிப்பு, அரசியல் இலக்கியத்துக்கான அரசு வெளியீட்டகம், மாஸ்கோ, 1949, தொகுப்பு 24, பக். 362

அவர்கள் உலக யுத்தத்தைக் குறிப்பிடுவார்களானால், அவர்கள் இல்லாத இலக்கின் மீது குறிவைத்துச் சுடுகின்றார்கள். இரு உலக யுத்தங்களின் வரலாற்றின் அடிப்படையில், உலக யுத்தங்கள் புரட்சிக்கு இட்டுச் செல்வது தவிர்க்க முடியாதது என மார்க்சிய-லெனினியவாதி கள் சுட்டிக் காண்பித்துள்ள போதிலும், உலக யுத்தத்தின் மூலம்தான் புரட்சியை நடத்த வேண்டுமென்று எந்த மார்க்சிய-லெனினியவாதியும் கருதியதில்லை; ஒரு போதும் கருதமாட்டார்.

மார்க்சிய—லெனினியவாதிகள் யுத்தத்தை ஒழிக்க வேண்டுமென்பதையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர்; யுத்தத்தை ஒழிக்க முடியுமென நம்புகின்றனர்.

ஆனால், யுத்தத்தை எவ்வாறு ஒழிக்க முடியும்?

லெனின் இதை இவ்வாறுதான் பார்த்தார். ''மனிதகுலம் வர்க்கங்களாகப் பிளவுண்டிருப்பதை ஒழிப்பதன் மூலமும், மனிதன் மனிதனைச் சுரண்டுவது, ஒரு தேசம் மற்றொரு தேசத்தைச் சுரண்டுவது ஆகியவற்றை ஒழிப்பதன் மூலமும் ஒரு சோசலிச சமூக அமைப்பை நிறுவுவதே நமது நோக்கமாகும். இது தவிர்க்க முடியாதபடி யுத்தத்திற்கான எல்லா சாத்தியப்பாட்டையும் ஒழித்துவிடும்.''[1]

1960-ம் ஆண்டு அறிக்கை இதை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது: ''உலக முழுமையும் சோசலிசம் வெற்றி பெறுவது, எல்லா யுத்தங்களின் சமூக மற்றும் தேசியக் காரணங்களை முற்றிலும் அகற்றிவிடும்.''

என்றாலும் சில நபர்கள் ஏகாதிபத்திய அமைப்பும், மனிதனை மனிதன் சுரண்டுகின்ற அமைப்பும் நிலவும்போதே, ''ஆயுதங்களற்ற இராணுவங்களற்ற, யுத்தங்களற்ற உலகத்தை'' ''பொதுவான முழு ஆயுத ஒழிப்பின்'' மூலம் ஏற்படுத்துவது தற்போது சாத்தியம் என உண்மையில் கருதுகிறார்கள். இது சுத்தப் பிரமையாகும்.

இராணுவங்கள் அரசாங்க இயந்திரத்தின் பிரதான உறுப்பு என்பதை மார்க்சிய—லெனினியத்தின் ஆரம்பக் கல்வி நமக்குப் போதிக்கிறது. ஆகவே,ஆயுதங்களில்லாத உலகம்,இராணுவங்களில்லாத உலகம் என்று சொல்லப்படுவது அரசாங்கங்களற்ற உலகமாகத்தானிருக்க முடியும். லெனின் கூறியதாவது: ''முதலாளி வர்க்கத்தை நிராயுதபாணியாக்கிய பின்னரே, பாட்டாளி வர்க்கம் தனது உலக வரலாற்றுக் கடமைக்குத் துரோகமிழைக்காமல் எல்லா ஆயுதங்களையும் குப்பை மேட்டில் தூக்கியெறிவது சாத்தியமாகும்.பாட்டாளிவர்க்கம் நிச்சயமாக இதைச்செய்யும்;

1. *மேற்படி பக். 363*

ஆனால், இந்த நிபந்தனை நிறைவேற்றப்படும்பொழுது மட்டுமே செய்யும்; நிச்சயமாக அதற்கு முன்பாக அல்ல.''[1]

இன்றைய உலகின் உண்மைகள் என்ன? அமெரிக்காவின் தலைமையிலுள்ள ஏகாதிபத்திய நாடுகள் பொதுவான, முழுமையான படைபலக் குறைப்பை நிறைவேற்றுவதற்குத் தயாராக உள்ளன என்பதற்குச் சிறிதேனும் ஆதாரம் உள்ளதா? அவர்கள் ஒவ்வொருவரும் பொதுவான, முழுமையான ஆயுத விஸ்தரிப்பில் ஈடுபட்டிருக்கவில்லையா?

ஏகாதிபத்திய வாதிகளின் ஆயுத விஸ்தரிப்பையும், யுத்த தயாரிப்புகளையும் அம்பலப்படுத்துவதற்கும், எதிர்த்துப் போராடுவதற்கும் பொதுவான படைக்குறைப்புத் திட்டத்தை முன்வைப்பது அவசியமென்பதை நாங்கள் எப்போதும் கூறிவந்திருக்கிறோம். மேலும் சோசலிச நாடுகள் மற்றும் உலக முழுவதுமுள்ள மக்கள் ஆகியோரின் ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலம் படைபலக் குறைப்புபற்றிய ஒருவகை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஏகாதிபத்தியத்தை நிர்ப்பந்தப்படுத்துவதும் சாத்தியமே.

பொதுவான முழுமையான படை பலக்குறைப்பு உலக சமாதானத்திற்கு அடிப்படை வழி என்று யாரேனும் கருதினால், ஏகாதிபத்தியம் தானாகவே தனது ஆயுதங்களைக் கீழே போட்டுவிடுமென்ற பிரமையை யாரேனும் பரப்பினால், படைபலக் குறைப்பு என்ற சாக்குப்போக்கில் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் நாடுகளின் புரட்சிகரப் போராட்டங்களைச் சீர்குலைக்க முயற்சித்தால் அது உலக மக்களை வேண்டுமென்றே ஏமாற்றுவதாகும்; ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கைகளுக்கு உதவி செய்வதாகும். யுத்தம், சமாதானம் என்ற பிரச்சினையில் சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் தற்போது நிலவும் சித்தாந்தக் குழப்பத்தைப் போக்குவதற்கு, இதுகுறித்த லெனினுடைய கோட்பாடுகள் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இக்கோட்பாடுகள் நவீன திரிபுவாதிகளால் கைவிடப்பட்டுள்ளன. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தக் கொள்கைகளை எதிர்த்துப் போராடுவதன் அவசியத்தை முன்னிட்டும், உலக சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டும் லெனினுடைய கோட்பாடு மீண்டும் நிலைநாட்டப்படுவது அவசியமாகும்.

ஒரு புதிய உலக யுத்தத்தை தவிர்க்க வேண்டுமென்பது உலக மக்களின் ஒருமித்த கோரிக்கையாகும். ஒரு புதிய உலகயுத்தத்தைத் தவிர்ப்பதும் சாத்தியமே.

---

1. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியின் யுத்த திட்டம்'' தேர்வு நூல், ஆங்கிலப் பதிப்பு, FLPH. *மாஸ்கோ, 1952, தொகுதி 1, பகுதி 2, பக். 574*

உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான வழியென்ன என்பது தான் பிரச்சினை. எல்லா நாடுகளிலுமுள்ள மக்களின் போராட்டங்களின் மூலமே உலக சமாதானம் வெல்லப்பட முடியும்- இதற்காக ஏகாதிபத்திய வாதிகளிடம் கெஞ்சுவதன் மூலமல்ல-என்பதே லெனினியக் கருத்து. சோசலிச முகாமின் சக்திகளின் வளர்ச்சியின் மீதும், அனைத்து நாடுகளிலும் உள்ள பாட்டாளி வர்க்கம், உழைக்கும் மக்கள் ஆகியோரின் புரட்சிப் போராட்டங்களின் மீதும்,ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலைப் போராட்டங்களின் மீதும், சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களின், நாடுகளின் போராட்டங்களின் மீதும் சார்ந்து நிற்பதன் மூலமே உலக சமாதானம் பயனுள்ள வகையில் பாதுகாக்கப்பட முடியும்.

லெனினியக் கருத்து இத்தகையதே. இதற்கு மாறான எந்தக் கருத்தும் திட்டவட்டமாக உலக சமாதானத்திற்கு இட்டுச் செல்லாது. மாறாக, ஏகாதிபத்தியவாதிகளின் பேராசைத் திட்டங்களை ஊக்குவித்து உலக யுத்த அபாயத்தை அதிகரிக்கவே செய்யும்.

தேசிய விடுதலைப் போர் அல்லது புரட்சிகர மக்கள் யுத்தம் ஒன்றின் தனியொரு தீப்பொறிகூட பெருந்தீயை உருவாக்கக் காரணமாகி மனித குலம் முழுவதையும் அழித்துவிடும் என்ற வாதத்தைச் சில நபர்கள் சமீப ஆண்டுகளில் பரப்பிக் கொண்டிருக்கின்றனர். உண்மை என்ன? இந்த நபர்கள் கூறுவதற்கு மாறாக, இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் நடைபெற்ற தேசிய விடுதலை யுத்தங்களும், புரட்சிகர மக்கள் யுத்தங்களும் உலக யுத்தத்திற்கு இட்டுச் செல்லவில்லை. இந்தப் புரட்சிகர யுத்தங்களின் வெற்றியானது ஏகாதிபத்திய சக்திகளை நேரடியாகப் பலவீனப்படுத்தியுள்ளதோடு, ஒரு உலக யுத்தத்தைத் தொடுப்பதினின்றும் ஏகாதிபத்தியத்தைத் தடுக்கின்ற சக்திகளையும் சமாதானத்தைப் பாதுகாக்கின்ற சக்திகளையும் பெரிதும் பலப்படுத்தியுள்ளது. அந்த வாதத்தின் அபத்தத்தை இவ்வுண்மைகள் நிரூபிக்கின்றன அல்லவா?

(15) அணு ஆயுதங்களை முற்றிலும் தடை செய்வதும், அழிப்பதும் உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தில் முக்கியமானதொரு பணியாகும். இந்நோக்கம் நிறைவுற நாம் அதிகபட்சம் பாடுபட வேண்டும். அணு ஆயுதங்கள் என்றுமில்லாத அளவு அழிவை ஏற்படுத்துவனவாகவுள்ளன என்பதால், எல்லா நாடுகளிலுமுள்ள மக்களை அடிமைப்படுத்த வேண்டும், உலகில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற பேராசையை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு அணு ஆயுதப் பூச்சாண்டி காட்டும் கொள்கையை பத்தாண்டுகளுக்கு மேலாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கடைப்பிடித்து வருகின்றனர்.

எனினும் ஏகாதிபத்தியவாதிகள் இதர நாடுகளை அணு ஆயுதங்களைக் கொண்டு பயமுறுத்தும்போது, தங்கள் நாட்டிலுள்ள மக்களையும் அதே பயமுறுத்தலுக்கு ஆட்படுத்துகிறார்கள். இவ்வாறு அணு ஆயுதங்களுக்கெதிராகவும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தக் கொள்கை

களுக்கெதிராகவும், அவர்களைக் கிளர்ந்தெழச் செய்கிறார்கள். தங்கள் எதிரிகளை அணு ஆயுதங்களால் அழித்துவிடவேண்டும் என்ற தம் வீண் நம்பிக்கையில் ஏகாதிபத்தியவாதிகள் யதார்த்தத்தில் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளும் அபாயத்துக்கு உள்ளாகிறார்கள்.

அணு ஆயுதங்களைத் தடைசெய்யக்கூடிய சாத்தியப்பாடு உள்ளது. இருப்பினும், ஆயுதங்களைத் தடைசெய்வதற்கான ஒரு உடன்பாட்டை ஏற்றுக்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்படும்போது, ஏகாதிபத்தியவாதிகள் அதை ஏற்றுக்கொள்வார்களானால், அது நிச்சயமாக அவர்கள் ''மனித சமுதாயத்தின் மீது வைத்துள்ள அன்பினால்'' அல்ல; மாறாக எல்லா நாடுகளிலுள்ள மக்களின் நிர்ப்பந்தத்தாலும், அவர்களுடைய இன்றியமையாத சுய நலன்களை முன்னிட்டுமேயாகும்.

ஏகாதிபத்தியவாதிகளுக்கு மாறாக, சோசலிச நாடுகள் மக்களின் நியாயமான பலத்தையும், தங்களின் சரியான சொந்தக் கொள்கைகளையும் நம்பியிருக்கின்றன. உலக அரங்கத்தில் அணு ஆயுத சூதாட்டத்தில் ஈடுபடவேண்டிய அவசியம் சோசலிச நாடுகளுக்கு இல்லை. தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், ஏகாதிபத்தியம் ஒரு அணு ஆயுத யுத்தத்தைத் தொடுப்பதைத் தடுப்பதற்கும் மட்டுமே சோசலிச நாடுகள் அணு ஆயுதங்களை வைத்திருக்கின்றன.

மார்க்சிய—லெனினியவாதிகளின் கருத்துப்படி மக்களே வரலாற்றை உருவாக்குபவர்கள். சென்ற காலத்தைப் போன்றே இன்றும் மனிதனே தீர்மானகரமான அம்சமாகும். மார்க்சிய—லெனினியவாதிகள் தொழில் நுட்ப மாறுதலின் பாத்திரத்திற்கு முக்கியத்துவமளிக்கின்றனர். ஆயினும் மனிதனின் பாத்திரத்தைக் குறைத்து மதிப்பிட்டு, தொழில் நுட்பத்தின் பாத்திரத்தை மிகைப்படுத்துவது தவறாகும்.

எப்படி புதிய தொழில் நுட்பத்தின் தோற்றம் சென்ற காலத்திலும் பழைய அமைப்புகளை அவற்றின் அழிவிலிருந்து காப்பாற்ற முடியவில்லையோ அதுபோலவே அணு ஆயுதங்களின் தோற்றம் மனிதகுல வரலாற்றின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியாது; ஏகாதிபத்திய அமைப்பு அழிவதினின்றும் அது தடுக்க முடியாது.

அணு ஆயுதங்களின் தோற்றம் இன்றைய உலகில் உள்ள அடிப்படை முரண்பாடுகளைத் தீர்க்கமுடியாது; தீர்க்கவுமில்லை. வர்க்கப் போராட்ட விதியை மாற்றமுடியாது; மாற்றவுமில்லை. ஏகாதிபத்தியம், பிற்போக்கு ஆகியவற்றின் இயல்பை மாற்றமுடியாது; மாற்றவுமில்லை. ஆகவே, அணு ஆயுதங்களின் தோற்றத்தினால், சமூக, தேசியப் புரட்சிகளின் சாத்தியப்பாடும் தேவையும் மறைந்து விட்டது; அல்லது மார்க்சிய—லெனினிய அடிப்படைக் கோட்பாடுகள், குறிப்பாக பட்டாளிவர்க்கப் புரட்சி, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்,

யுத்தம், சமாதானம் ஆகியவை பற்றிய கோட்பாடுகள் அணு ஆயுதங்களின் தோற்றத்தினால் காலங்கடந்தவையாகவும் ''வறட்டுத் தத்துவங்களாகவும்'' மாறிவிட்டனவென்று கூறமுடியாது.

(16) சோசலிச நாடுகள் முதலாளித்துவ நாடுகளுடன் சமாதான சகவாழ்வை கடைப்பிடிப்பது சாத்தியம் என்ற கோட்பாட்டை முன் வைத்தவர் லெனின். மகத்தான ரசிய மக்கள் அன்னிய இராணுவத் தலையீட்டை விரட்டியடித்தபிறகு முதலில் லெனின் தலைமையிலும், பிறகு ஸ்டாலின் தலைமையிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும், ரசிய அரசாங்கமும் சமாதான சகவாழ்வுக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்தன. ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகளால் தாக்கப்பட்ட பொழுது தான் அவர்கள் தற்காப்பிற்காகப் போர் தொடுக்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டனர் என்பது யாவரும் அறிந்ததே.

அதன் தோற்றக்காலம் முதல் மக்கள் சீனக் குடியரசுங்கூட பல்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையை உறுதியுடன் கடைப்பிடித்தது. சமாதான சகவாழ்வின் பஞ்சசீலக் கோட்பாடுகளை ஆரம்பித்து வைத்தது சீனர்தான்.

என்றாலும், சில ஆண்டுகளுக்கு முன்பு திடீரென சில நபர்கள் லெனினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கையை தங்களுடைய சொந்த ''மகத்தான கண்டுபிடிப்பு'' என்று உரிமை கொண்டாடினர். இக்கொள்கையைப்பற்றி வியாக்கியானம் செய்ய ஏகபோக உரிமை கொண்டாடுகின்றனர். ''சமாதான சகவாழ்வை'' எல்லாவற்றையும் உள்ளடக்கிய வானத்திலிருந்து இறங்கிவந்த மறைநூல் என அவர்கள் கருதுகின்றனர். உலக மக்கள் தங்களது போராட்டத்தினால் அடையும் ஒவ்வொரு வெற்றியையும் சமாதான சகவாழ்வின் மூலம் அடையப் பெற்றது எனக் கூறுகின்றனர். அதுமட்டுமின்றி லெனினுடைய கருத்துக்களை அவர்கள் திரித்துக் கூறுவதை ஏற்றுக்கொள்ளாத அனைவரையும் சமாதான சகவாழ்வின் எதிரிகள் என்றும், லெனினைப் பற்றியும் லெனினியத்தைப் பற்றியும் ஒன்றுமே தெரியாதவர்கள் என்றும், கழுவேற்றி எரிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் முத்திரை குத்து கின்றனர்.

இக்கருத்தையும், நடைமுறையையும் சீனக் கம்யூனிஸ்டுகள் எவ்வாறு ஒத்துக்கொள்ளமுடியும்? அவர்களால் இதை ஒத்துக்கொள்ள முடியாது. இது சாத்தியமல்ல.

சமாதான சகவாழ்வு பற்றிய லெனினுடைய கொள்கைகள் மிகத் தெளிவானவை. சாதாரண மக்கள் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவை. சமாதான சகவாழ்வு வெவ்வெறு சமூக அமைப்புகளையுடைய நாடு களிடையே உறவைக் குறிப்பிடுகிறது. ஒருவர் விரும்பியதுபோல் அதற்கு விளக்கமளிக்கக் கூடாது.

ஒடுக்கும்—ஒடுக்கப்படும் நாடுகளிடையே, ஒடுக்கும்—ஒடுக்கப்படும் தேசங்களிடையே, ஒடுக்கும்—ஒடுக்கப்படும் வர்க்கங்களிடையேயுள்ள உறவுகளுக்கு இதை ஒரு போதும் விரிவுபடுத்தக்கூடாது. முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்குச் செல்லும் மாற்றத்தின் பிரதான உள்ளடக்கமென இதைப் பொருள் படுத்தக் கூடாது. அதுவுமன்றி, சமாதான சகவாழ்வு சோசலிசத்திற்கான மனித குலப் பாதையென வலியுறுத்தப்படக்கூடாது. காரணம் என்னவெனில், வெவ்வேறு சமூக அமைப்புக்களைக் கொண்ட நாடுகளிடையே சமாதான சகவாழ்வைக் கடைப்பிடிப்பது ஒரு விசயம். (சமாதான சகவாழ்வைக் கடைப்பிடிக்கும் நாடுகளுள் ஒன்று மற்றொன்றின் சமூக அமைப்பின் மிகச் சிறிய அம்சத்தில் தலையிடுவது கூட முற்றிலும் சாத்தியமற்றது, அனுமதிக்கமுடியாதது) தேசிய விடுதலை மற்றும் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறிச் செல்வதற்காகப் பல்வேறு நாடுகளில் நடக்கும் வர்க்கப் போராட்டங்கள் முற்றிலும் வேறொரு விசயமாகும்.

இவை யாவும் சமூக அமைப்பை மாற்றும் இலட்சியம் கொண்ட கடுமையான, வாழ்வா சாவா என்ற புரட்சிகரப் போராட்டங்களாகும். சமாதான சகவாழ்வு மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு மாற்றாகிவிடமுடியாது. எந்தவொரு நாட்டிலும் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்குச் செல்லும் மாற்றம், அந்த நாட்டின் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலமும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலமும்தான் கொண்டுவரப்பட முடியும்.

சமாதான சகவாழ்வுக் கொள்கையை அமுல் நடத்துவதில் சோசலிச நாடுகளுக்கும், ஏகாதிபத்திய நாடுகளுக்குமிடையில் அரசியல், பொருளாதார, சித்தாந்தத்துறைகளில் போராட்டங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது; ''அனைத்துத்துறை ஒத்துழைப்பு'' முற்றிலும் சாத்தியமேயல்ல.

ஏகாதிபத்திய நாடுகளுடன் ஒருவித அல்லது மற்றொருவிதப் பேச்சுவார்த்தைகளில் சோசலிச நாடுகள் ஈடுபடுவது அவசியமே. சோசலிசநாடுகளின் சரியான கொள்கைகளையும், எல்லா நாடுகளிலுள்ள மக்களின் நிர்ப்பந்தத்தையும் சார்ந்து நின்று பேச்சுவார்த்தைகளின் மூலம் சில உடன்பாடுகளை அடைவது சாத்தியமே. ஆயினும் சோசலிச நாடுகளும், ஏகாதிபத்திய நாடுகளும் அவசியமான சமரசங்களைச் செய்து கொள்வதால், ஒடுக்கப்பட்ட நாடுகளும், மக்களும் அதையே பின்பற்றி ஏகாதிபத்தியத்துடனும், அவர்களின் அடிவருடிகளுடனும் சமரசம் செய்துகொள்ள வேண்டுமென்ற தேவையில்லை. சமாதான சகவாழ்வு என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட மக்களும் நாடுகளும் தங்களின் புரட்சிகரப் போராட்டங்களைக் கைவிட்டுவிட வேண்டுமென்று யாரும் ஒரு போதும் கோரக்கூடாது.

சோசலிச நாடுகள் சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப் பிடிப்பது சோசலிச கட்டுமானத்திற்கான அமைதியான சர்வதேசச் சூழலை அடைவதற்கும், ஏகாதிபத்தியவாதிகளின் 'ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கைகளை அம்பலப்படுத்துவதற்கும், ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு, யுத்த சக்திகளைத் தனிமைப்படுத்துவதற்கும் சாதகமான தாகத் திகழ்கிறது. ஆயினும், சோசலிச நாடுகளின் அயல்நாட்டுக் கொள்கையின் பொதுவழி சமாதான சகவாழ்விற்குக் குறுக்கப்பட்டு விட்டால், சோசலிச நாடுகளிடையே உள்ள உறவுகளையோ அல்லது சோசலிச நாடுகளுக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள், தேசங்கள் ஆகியோருக்கு மிடையே உள்ள உறவுகளையோ சரியாகக் கையாள்வது சாத்தியமல்ல. ஆகவே, சமாதான சகவாழ்வை சோசலிச நாடுகளின் அயல்நாட்டுக் கொள்கையின் பொது வழியாக்குவது தவறாகும்.

எங்களது கண்ணோட்டத்தில் சோசலிச நாடுகளின் அயலுறவுக் கொள்கையின் பொது வழியானது பின்வரும் உள்ளடக்கத்தைப் பெற் றிருக்க வேண்டும்:

பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கைக்குகந்த முறையில், சோசலிச முகாமிலுள்ள நாடுகளிடையே நட்புறவுகளை வளர்ப்பது, பரஸ்பரம் உதவி செய்வது, ஒத்துழைப்பது.

வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் பஞ்ச சீலக் கொள்கைகளின் அடிப்படையில் சமாதான சகவாழ்விற்காகப் பாடு படுவது; ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கைகளை எதிர்ப்பது.

அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின், நாடுகளின் புரட்சிகரப் போராட் டங்களுக்கு உதவி செய்வது, ஆதரவளிப்பது.

இந்த மூன்று அம்சங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவை, ஒன்றிலிருந்து மற்றவை பிரிக்கப்பட முடியாதவை, இம் மூன்றில் ஒன்றைக்கூட விட்டுவிடக் கூடாது.

(17) பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிய மிக நீண்ட வரலாற்றுக் காலத்திற்குப் பிறகும் மனித விருப்பத்திற்கு அப்பாற்பட்டு, வர்க்கப் போராட்டம், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னிருந்ததை விட வடிவத்தில் மட்டுமே வேறுபடும் ஒரு புறநிலை விதியாக நீடிக்கிறது; அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் லெனின் பின்வருமாறு சுட்டிக் காட்டினார்.

(அ) பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்ட சுரண்டல்காரர்கள் தங்களின் இழந்து போன ''சொர்க்கத்தை'' மீட்டெடுப்பதற்கு ஆயிரம் வழிகளில் எப்பொழுதும் முயற்சி செய்கிறார்கள்.

(ஆ) புதிய முதலாளித்துவக் கூறுகள், குட்டி முதலாளித்துவ சூழ்நிலையில் இடைவிடாது தன்னெழுச்சியாக உற்பத்தியாகின்றன.

(இ) முதலாளித்துவச் செல்வாக்கின் விளைவாகவும், குட்டி முதலாளிகளின் பரவலான தீங்கு பயக்கும் சூழ்நிலையின் விளைவாகவும், அரசியல் சீரழிவுவாதிகளும், புதிய முதலாளித்துவ கர்த்தாக்களும் தொழிலாளி வர்க்க அணிகளிலும் அரசாங்க நிர்வாகிகள் மத்தியிலும் தோன்றக்கூடும்.

(ஈ) சோசலிச நாட்டினுள் வர்க்கப் போராட்டம் நீடிப்பதற்கு சோசலிச நாடு சர்வதேச முதலாளித்துவத்தினால் சூழப்பட்டிருப்பது, ஏகாதிபத்தியவாதிகளின் இராணுவத் தலையீட்டு அபாயம், நாட்டை சமாதான முறையில் சீர்குலைப்பதற்கான அவர்களின் சதி நடவடிக்கைகள் ஆகியன புறக்காரணங்களாக இருக்கின்றன.

லெனினுடைய இந்த முடிவுகளை வாழ்க்கை உறுதிப்படுத்தியுள்ளது.

சோசலிசத் தொழில்மயமாக்கலும், விவசாயக் கூட்டுப் பண்ணை முறையைப் புகுத்தலும் முடிந்து சில பத்தாண்டுகள் அல்லது அதைவிட அதிகமான காலத்திற்குப் பிறகுங் கூட, லெனின் மீண்டும் மீண்டும் வெறுத்துச்சாடிய முதலாளித்துவ சார்பாளர்கள், புல்லுருவிகள், வர்த்தகச் சூதாடிகள், ஏமாற்றுப்பேர்வழிகள், சோம்பேறிகள், போக்கிரிகள், அரசாங்க நிதிகளைக் கையாடுபவர்கள் போன்ற முதலாளித்துவ மூலக்கர்த்தாக்களிலிருந்து ஒரு சோசலிச நாடு விடுபட்டுவிடும் என்று கூறுவது சாத்தியமல்ல. அல்லது முதலாளித்துவத்திலிருந்து சோசலிசம் சுவீகரித்துக் கொண்டுள்ள இந்தத் தொத்துவியாதியை, இந்தக் கொள்ளை நோயை, இத்தீராத இரத்தக் கட்டியை வெற்றி காண்பதற்கு லெனின் வகுத்த பணிகளை இனி நிறைவேற்ற வேண்டியதில்லை, அவற்றைக் கைவிட்டுவிட முடியும் என்று கூறுவதும் சாத்தியமல்ல.

ஒரு சோசலிச நாட்டில், சோசலிசமா அல்லது முதலாளித்துவமா, எது வெற்றி பெறும் என்ற பிரச்சினையைப் படிப்படியாகத் தீர்ப்பதற்கு மிக நீண்ட வரலாற்றுக் காலம் தேவைப்படும். இந்த வரலாற்றுக் காலகட்டம் முழுவதுமே சோசலிசப் பாதைக்கும், முதலாளித்துவப் பாதைக்கும் இடையே போராட்டம் நடைபெறுகிறது. இந்த போராட்டம் அலையைப் போன்று ஏறி இறங்குகிறது. சில சமயங்களில் மிகத் தீவிரமானதாக மாறுகிறது; போராட்டத்தின் வடிவங்கள் பலவாகவும் வேறுபட்டவையாகவும் இருக்கின்றன.

''தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தை வெல்வது புரட்சியின் ஆரம்பம் மட்டுமே, அதன் முடிவல்ல'' என்று 1957-ம் ஆண்டு அறிக்கை சரியாகக் கூறுகிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார காலகட்டத்தில் வர்க்கப் போராட்டம் இருப்பதை மறுப்பதும், பொருளாதார, அரசியல், சித்தாந்தத் துறைகளில் சோசலிசப் புரட்சியை முற்றும் முழுமையாக்க வேண்டிய அவசியத்தை மறுப்பதும் தவறாகும்; இது புறநிலை யதார்த்தத்துக்குப் புறம்பானதும் மார்க்சிய-லெனினியத்தை மீறுவதும் ஆகும்.

(18) உயர்மட்ட கம்யூனிச சமுதாயம் அமைவதற்கு முந்தியுள்ள காலகட்டம் முழுவதும் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்குச் செல்லும் காலகட்டமாகும் எனவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கால கட்டமாகும் எனவும், மார்க்சும், லெனினும் வலியுறுத்தினர். இந்த மாறுதல் கட்டத்தில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அதாவது பாட்டாளி வர்க்க அரசு நிறுவுதல், உறுதிப்படுத்தல், பலப்படுத்தல், உதிர்ந்து போதல் ஆகிய இயக்கவியல் படிமுறைகளினூடே செல்கின்றது.

''கோதா வேலைத் திட்டம் பற்றிய விமர்சனம்'' (Critique of the Gotha Programme) என்ற தம் நூலில் மார்க்ஸ் இப்பிரச்சினையைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

''முதலாளித்துவ மற்றும் கம்யூனிச-சமுதாயங்களுக்கிடையில் ஒன்று மற்றொன்றாவதற்கான புரட்சிகர மாறுதல் கால கட்டம் உள்ளது. இதற்கு ஏற்றாற்போல் அரசியல் மாறுதல் கட்டமும் உள்ளது. இந்தக் காலகட்டத்தில் அரசு புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரமாகவன்றி வேறெதுவாகவும் இருக்க முடியாது''.[1]

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சின் மாபெரும் கோட்பாட்டை லெனின் அடிக்கடி வலியுறுத்தினார்; அதன் வளர்ச்சியை ஆய்வு செய்தார். குறிப்பாகத் தம் ''அரசும் புரட்சியும்'' (State and Revolution) என்ற தலை சிறந்த நூலில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

''.........முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து—இது கம்யூனிசத்தை நோக்கி வளர்ந்து சென்று கொண்டிருக்கின்றது—கம்யூனிச சமுதாயத்துக்குச் மாறிச்செல்வது ''அரசியல் மாறுதல் காலகட்டம்'' இன்றி சாத்தியம் அல்ல. இக்காலக்கட்டத்தில் அரசு புரட்சிகரப் பாட்டாளி வர்க்க காரமாகத்தான் இருக்க முடியும்''.[2]

லெனின் மேலும் கூறினார்:

---

1. *கார்ல்மார்க்ஸ், ஏங்கெல்ஸ் தேர்வு நூல் ஆங்கிலப் பதிப்பு,* FLPH, *மாஸ்கோ, 1955, தொகுதி* II, *பக் 32-33*

2. *லெனின் தேர்வு நூல் ஆங்கிலப் பதிப்பு,* FLPH, *மாஸ்கோ, 1 52, தொகுதி* II, *பகுதி* I, *பக், 289*

பொதுவாக, ஒவ்வொரு வர்க்க சமுதாயத்திற்கும் மட்டுமல்லாமல், முதலாளி வர்க்கத்தைக் தூக்கியெறிந்துள்ள பாட்டாளி வர்க்கத்திற்கும் மட்டுமல்லாமல், முதலாளித்துவத்தை ''வர்க்கமற்ற'' சமுதாயத்திலிருந்து, அதாவது, கம்யூனிசத்திலிருந்து பிரிக்கின்ற வரலாற்றுக் காலகட்டம் முழுமைக்கும் தனியொரு வர்க்கத்தின் சர்வாதிகாரம் அவசியமானது என்பதை புரிந்துகொள்பவர்கள் மட்டுமே 'அரசு' பற்றிய மார்க்சின் போதனையின் சாரம்சத்தை முற்றும் கிரகித்துக்கொண்டவர்களாவர்.''

மேலே குறிப்பிட்டவாறு, முதலாளித்துவத்திலிருந்து, கம்யூனிசத்திற்கு மாறிச் செல்லும் வரலாற்றுக் காலகட்டம் முழுவதுமே-அதாவது, சகல வர்க்க வேறுபாடுகளும் மறைந்து, வர்க்கமற்ற சமுதாயத்திற்கு, உயர்மட்ட கம்யூனிச சமுதாயத்திற்குள் நுழையும் காலகட்டம் முழுவதுமே—பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தவிர்க்க முடியாதவாறு நீடிக்குமென்பதே மார்க்ஸ், லெனின் ஆகியோரின் அடிப்படை கோட்பாடுகளாகும்.

பட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இனி அவசியமே இல்லையென பாதி வழியிலேயே அறிவித்துவிட்டால் என்ன நேரிடும்?

பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு பற்றிய மார்க்ஸ், லெனின் ஆகியோரின் போதனைகளுக்கு இது அடிப்படையிலேயே முரண்படுகிறதல்லவா?

''முதலாளித்துவத்திலிருந்து சோசலிசம் சுவீகரித்துள்ள தொத்து நோய், கொள்ளை நோய், தீராத இரத்தக் கட்டி நோய்'' ஆகியவை வளர்வதற்கு இது அனுமதி கொடுக்கிறதல்லவா?

வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், இது மிகக் கடுமையான விளைவுகளுக்கு இட்டுசெல்லும்; கம்யூனிசத்திற்குச் செல்லும் மாற்றத்தையே சாத்தியமற்றதாக்கிவிடும்.

''அனைத்து மக்களின் அரசு'' என்று ஒன்று இருக்கமுடியுமா? பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை மாற்றி அதற்குப் பதிலாக அனைத்து மக்களின் அரசு இருப்பது சாத்தியமாகுமா?

இது ஒரு குறிப்பிட்ட நாட்டின் உள்நாட்டு விவகாரங்களைப் பற்றிய பிரச்சினையல்ல. மார்க்சிய-லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மை சம்பந்தப்பட்ட அடிப்படைப் பிரச்சினையாகும்.

மார்க்சிய-லெனினியவாதிகளின் கருத்துப்படி வர்க்க சம்பந்தமற்ற அல்லது வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட அரசு என்ற ஒன்று கிடை-

யவே கிடையாது. அரசு, அரசாக நீடிக்கும் வரையில் அதற்கு வர்க்கத் தன்மை இருந்தாக வேண்டும்; அரசு நீடிக்கும் காலம் வரையிலும் அது ''அனைத்து மக்களின்'' அரசாக இருக்க முடியாது. சமுதாயம் வர்க்க மற்றதாக மாறும் பொழுது அரசு இருக்காது.

அப்படியானால், ''அனைத்து மக்களின் அரசு'' என்பது என்னவாக இருக்கும்? சொல்லிக் கொள்ளப்படும் ''அனைத்து மக்களின் அரசு'' ஒன்றும் புதிதல்ல என்பதை மார்க்சிய—லெனினிய அரிச்சுவடியை அறிந்தவர்கள் புரிந்து கொள்ள முடியும். முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரபல நபர்கள் முதலாளித்துவ அரசை ஒரு 'அனைத்து மக்களின் அரசு' அல்லது 'மக்கள் அனைவருக்கும் அதிகார மிருக்கும் ஒரு அரசு' என்றுதான் எப்பொழுதுமே கூறிவந்திருக்கின்றனர். தங்களின் சமுதாயத்தை ஏற்கெனவே வர்க்கங்கள் இல்லாத ஒரு சமுதாய மென சில நபர்கள் கூறலாம்; நமது பதில் இல்லையென்பதே. எந்த விதிவிலக்குமின்றி எல்லா சோசலிச நாடுகளிலும் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களும் உண்டு.

மீண்டும் பதவிக்கு வருவதற்கு முயன்று கொண்டிருக்கும் பழைய சுரண்டும் வர்க்கங்களின் மிச்ச மீதங்கள் சோசலிச நாடுகளில் இன்னும் இருக்கும் போது, புதிய முதலாளித்துவ சக்திகள் அங்கு இடைவிடாது உருவாகிக் கொண்டிருக்கும் போது, இன்னும் அங்கே புல்லுருவிகளும், வர்த்தகச் சூதாடிகளும், சோம்பேறிகளும், போக்கிரிகளும், அரசாங்க நிதிகளைக் கையாடுவோரும், இன்ன பலரும் இருந்துகொண்டிருக்கும் போது அங்கே வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களும் இல்லையென எவ்வாறு கூறமுடியும்? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இனி அவசிய மில்லையென எவ்வாறு கூறமுடியும்?

சோசலிசத்தைக் கட்டியமைக்கும் போக்கில், எதிரி வர்க்கங்களை அடக்குவதுடன் கூடவே, தொழிலாளி வர்க்கத்திற்கும், விவசாயிவர்க் கத்திற்கும் இடையில் உள்ள உறவுகளைச் சரியாகக் கையாள்வது; அவர்களின் அரசியல், பொருளாதார நேச அணியை உறுதிப்படுத்துவது; தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்குமிடையில் உள்ள வர்க்க வேறு பாடுகளைப் படிப்படியாகக் களைவதற்கான சூழ்நிலைகளை உருவாக் குவது ஆகிய வரலாற்றுப் பூர்வமான பணிகளும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு உண்டு என்பதை மார்க்சிய—லெனினியம் நமக்குப் போதிக்கிறது.

ஒரு சோசலிச சமுதாயத்தின் பொருளாதார அடிப்படையை நாம் நோக்கும்போது, விதிவிலக்கின்றி, எல்லா சோசலிச நாடுகளிலும் மக்கள் அனைவரின் உடைமைக்கும் கூட்டு உடைமைக்கும் இடையே வேறுபாடு நிலவுவதைக் காணுகிறோம்; தனியார் உடைமையுங்கூட இருக்கிறது. மக்கள் அனைவரின் உடைமையும், கூட்டு உடைமையும்

சோசலிச சமுதாயத்தில் உள்ள இருவகையான உடைமையும், இரு வகையான உற்பத்தி உறவுகளும் ஆகும்.

மக்கள் அனைவருக்கும் சொந்தமான தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களும், கூட்டுப்பண்ணைகளில் உள்ள விவசாயிகளும் சோசலிச சமுதாயத்திலுள்ள உழைப்பாளிகளில் இரு வேறு வகையைச் சேர்ந்தவர்கள். ஆகவே, தொழிலாளி, விவசாயிகளுக்கிடையில் வர்க்க வேறுபாடு விதிவிலக்கின்றி எல்லா சோசலிச நாடுகளிலும் நிலவுகிறது. இந்த வேறுபாடு உயர்மட்ட கம்யூனிசத்திற்குச் செல்லும் மாற்றத்தை அடையும் வரையிலும் மறையாது. இன்றுள்ள தத்தம் பொருளாதார வளர்ச்சி அளவில் எல்லா சோசலிச நாடுகளும் ''திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்'' என்ற கோட்பாட்டை அமல் நடத்தும் உயர்ந்த கட்டமான கம்யூனிச கட்டத்திலிருந்து இன்னும் வெகு தொலைவிலேயே உள்ளன. ஆகவே, தொழிலாளி, விவசாயிகளுக் கிடையிலுள்ள வர்க்க வேறுபாட்டைப் போக்குவதற்கு நீண்ட நெடுங் காலம் ஆகும். இந்த வேறுபாடு களையப்படும் வரையில் சமுதாயம் வர்க்கங்களற்றது என்றோ அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத் திற்கு இனி அவசியமில்லையென்றோ கூறுவது சாத்தியமில்லை.

ஒரு சோசலிச அரசை ''அனைத்து மக்களின் அரசு'' என அழைக் கும்போது அரசு குறித்த மார்க்சிய-லெனினிய கோட்பாட்டிற்குப் பதிலாக அரசு குறித்த முதலாளித்துவக் கோட்பாட்டைப் புகுத்த ஒருவர் முயல் கிறாரா? பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசுக்குப் பதிலாக வேறு தன்மையுடைய அரசைப் புகுத்த முயலுகிறாரா?

அப்படியாயின், அது மாபெரும் வரலாற்றுப் பின்னடைவாகும். யூகோஸ்லாவிய சமூக அமைப்பின் சீரழிவு ஒரு வருத்தத்திற்குரிய படிப்பினையாகும்.

(19) சோசலிச நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துடன் பாட்டாளி வர்க்க கட்சியும் தொடர்ந்திருக்க வேண்டுமென்பது லெனினி யத்தின் கருத்து. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றுக் காலக் கட்டம் முழுமைக்கும் பாட்டாளி வர்க்க கட்சி இன்றியமையாதது. கார ணம் யாதெனில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்கம் மற்றும் மக்களின் எதிரிகளுக்கெதிராகப் போராட வேண்டியிருக்கிறது விவசாயிகளையும், இதர சிறு உற்பத்தியாளர்களையும் மறு வார்ப்பு செய்ய வேண்டியிருக்கிறது; தொழிலாளி வர்க்க அணிகளை இடை விடாது உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது; சோசலிசத்தைக் கட்டி யமைத்து கம்யூனிசத்திற்குச் செல்லும் மாறுதலைக் கொண்டுவர வேண்டி யிருக்கிறது. இவை எவற்றையும் பாட்டாளி வர்க்க கட்சியின் தலைமை யில்லாமல் செய்ய முடியாது.

''அனைத்து மக்களின் கட்சி'' என ஒன்றிருக்க முடியுமா? பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையான ஒரு கட்சிக்குப் பதிலாக ''அனைத்து மக்களின் கட்சி'' என்ற ஒன்று இருக்க முடியுமா?

இதுவும் கூட குறிப்பிட்ட ஒரு கட்சியின் உட்கட்சி விவகாரங்கள் குறித்த பிரச்சினையல்ல; இது மார்க்சிய-லெனினியம் சம்பந்தப் பட்ட அடிப்படைப் பிரச்சினையாகும்.

மார்க்சிய - லெனினியவாதிகளின் கண்ணோட்டத்தில் வர்க் கத்தைச்சாராத அல்லது வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட ஒரு அரசியல் கட்சி என்று ஒன்றும் கிடையாது. எல்லா அரசியல் கட்சிகளுக்கும் வர்க்கத் தன்மையுண்டு. கட்சியுணர்வு, வர்க்கத் தன்மையின் ஒருமுனைப் படுத்தப்பட்ட வெளிப்பாடாகும்.

பாட்டாளி வர்க்கக்கட்சி ஒன்றே மக்கள் அனைவரின் நலன் களையும் பிரதிபலிக்கக்கூடிய தகுதிவாய்ந்த கட்சியாகும். இதைப் பாட்டாளி வர்க்கக்கட்சி ஒன்றுதான் செய்யமுடியும்; ஏனெனில், இது பாட்டாளிவர்க்க நலன்களைப் பிரதிபலிக்கிறது; அதன் கருத்துக்களிலும், எண்ணத்திலும் ஒருமுகமான கவனத்தைச் செலுத்துகிறது. அது மக்கள் அனைவரையும் வழி நடத்திச் செல்லமுடியும். ஏனெனில், மனிதகுலம் முழுமையின் விடுதலையோடுதான் பாட்டாளி வர்க்கம் தன்னையும் இறுதியாக விடுவித்துக்கொள்ள முடியும்; தொழிலாளி வர்க்கத்தின் இயல் பானது, பாட்டாளி வர்க்கக்கட்சி, பிரச்சினைகளை அதன் நிகழ்கால, எதிர்கால நலன்களின் அடிப்படையில் அணுகுவதற்கு உதவி செய்கிறது. பாட்டாளி வர்க்கக்கட்சி மக்களுக்கு எல்லையற்ற விசுவாசமுடைய தாகவும் தன்னையே தியாகம் செய்யும் உணர்வுடையதாகவும் இருக் கிறது. ஆகவேதான், அது ஜனநாயக மத்தியத்துவத்தையும் எஃகுப் போன்ற கட்டுப்பாட்டையும் உடையதாகயிருக்கின்றது. இத்தகைய ஒரு கட்சியில்லாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவது சாத்தியமல்ல; மக்கள் அனைவரின் நலன்களையும் பிரதிபலிப்பதும் சாத்தியமல்ல.

எனவே, உயர்மட்ட கம்யூனிச சமுதாயத்திற்குள் நுழைவதற்குமுன், பாட்டாளி வர்க்கக் கட்சி ''மக்கள் அனைவரின் கட்சியாக'' மாறிவிட்ட தென்று பாதிவழியிலேயே அறிவித்தால் என்ன நேரிடும்? பாட்டாளி வர்க்கக் கட்சியின் பாட்டாளி வர்க்கத் தன்மை மறுக்கப்பட்டால் என்ன நேரிடும்?

பாட்டாளி வர்க்கத்தின் கட்சி குறித்த மார்க்ஸ், லெனின் ஆகியோரின் போதனைகளுக்கு இது அடிப்படையில் முரண்பட்டதாக இருக்கிறதல்லவா?

இது பாட்டாளி வர்க்கத்தையும், அனைத்து உழைக்கும் மக்களையும் அமைப்பு ரீதியாகவும், சித்தாந்த ரீதியாகவும் நிராயுதபாணியாக்குகிற தல்லவா? முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு இது உதவுவதாகாதா?

இத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் கம்யூனிச சமுதாயத்திற்குச் செல்லும் மாற்றத்தைப் பற்றிப் பேசுவது தெற்கே செல்வதற்கு இரதத்தை வடக்கே ஓட்டுவது போன்றதாகும்.

(20) தலைவர்கள், கட்சி, வர்க்கம், பரந்துபட்ட மக்கள் ஆகியோ ருக்கிடையேயுள்ள உள்ளுறவுகளைப்பற்றிய லெனினுடைய முழுமையான போதனைகளை, சென்ற சில ஆண்டுகளாக சில நபர்கள் மீறி, ''தனிநபர் வழிபாட்டை எதிர்க்கும்'' பிரச்சினையைக் கிளப்பியுள்ளனர்; இது தவறானதும், தீங்கு பயப்பதும் ஆகும்.

லெனின் வகுத்த கோட்பாடு பின்வருமாறு :

(அ) பரந்துபட்ட மக்கள் வர்க்கங்களாகப் பிளவுபட்டுள்ளனர்.

(ஆ) வர்க்கங்கள், வழக்கமாக அரசியல் கட்சிகளால் தலைமை தாங்கப்படுகின்றன.

(இ) பொதுவாக, அரசியல் கட்சிகள் அதிகாரம் படைத்த, செல்வாக்கு மிக்க, அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களைக் கொண்ட, ஏறத்தாழ நிலையான ஒரு குழுவினால் வழி நடத்திச் செல்லப் படுகின்றன; இந்த உறுப்பினர்கள் மிகப் பொறுப்பான பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்; இவர்கள் தலைவர்கள் என அழைக்கப் படுகிறார்கள்.

''இவை யாவும் அடிப்படையானவை'' என லெனின் கூறினார்.

பாட்டாளி வர்க்கக் கட்சி புரட்சியிலும், போராட்டத்திலும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையகம் ஆகும். ஒவ்வொரு பாட்டாளிவர்க்கக் கட்சியும் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட மத்தியத்து வத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; அமைப்பு ரீதியான, போராட்டத் திற்குத் தகுதியான முன்னணிப் படையாவதற்கு முன் அது பலமான, மார்க்சிய—லெனினியத் தலைமையை நிலை நாட்ட வேண்டும். ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற பிரச்சினையை எழுப்புவது உண்மையில் தலைவர்களைப் பரந்துபட்ட மக்களுக்கு எதிராக நிறுத்து வதாகும்; ஜனநாயக மத்தியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள கட்சியின் ஒன்றுபட்ட தலைமையைச் சீர்குலைப்பதாகும்; கட்சியின்

போராட்ட பலத்தை வீணாக்குவதும், அதன் அணிகளை உடைத் தெறிவதும் ஆகும்.

தலைவர்களைப் பொதுமக்களுக்கெதிராக நிறுத்தும் தவறான கருத்துக்களை லெனின் விமர்சனம் செய்தார். இவர்களை நகைப்புக் குரிய, அசட்டுத்தனமான, அறிவிலிகள் என லெனின் அழைத்தார்.

தனிநபர் பாத்திரத்தை மிகைப்படுத்துவதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்பொழுதும் அங்கீகரிக்கவில்லை; கட்சிக்குள் ஜனநாயக மத்தியத் துவம் வேண்டுமெனக் கோரி அதை இடைவிடாது கடைபிடித்து வந்திருக்கிறது; தலைமைக்கும், பரந்துபட்ட மக்களுக்கும் இணைப்பு வேண்டுமெனக் கோரி வந்துள்ளது. சரியான ஒரு தலைமை பரந்துபட்ட மக்களின் கருத்துக்களை எவ்வாறு ஒருமுனைப்படுத்த வேண்டும் என்றும் கூறிவந்துள்ளது.

சில நபர்கள், சொல்லிக் கொள்ளப்படும் ''தனிநபர் வழிபாட்டை'' எதிர்ப்பதாக உரத்துக் கூறிக்கொண்டிருக்கும் அதே வேளையில், உண்மையில் பாட்டாளி வர்க்கக் கட்சியையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் அவமானப்படுத்துவதற்குத் தங்களால் ஆனதைச் செய்து வருகின்றனர். அதே வேளையில் அவர்கள் சில தனிநபர்களின் பாத்திரத்தைத் தவறாக மிகைப்படுத்துகின்றனர். எல்லாத்தவறு களையும் மற்றவர்கள் மீது சுமத்தி, எல்லாச் சாதனைகளுக்கும் தாங்கள் உரிமை கொண்டாடுகின்றனர்.

இதைவிட ஆபத்தானது யாதெனில், ''தனிநபர் வழிபாட்டை எதிர்க்கும்'' சாக்குப் போக்கில் சில நபர்கள் இதர சகோதரக் கட்சிகள், சகோதர நாடுகள் ஆகியவற்றின் உள்விவகாரங்களில் குரூரமாகத் தலையிடுகிறார்கள். இதர சகோதரக் கட்சிகளின்மீது தங்களின் சொந்தத் தவறான கொள்கையைப் புகுத்துவதற்காக, அவற்றின் தலைமையை மாற்றும்படி நிர்ப்பந்தப்படுத்துகின்றனர். இதெல்லாம் பெருவல்லரசு ஆதிக்கவாதம் அன்றி வேறென்ன? குறுங்குழுவாதம், பிளவுவாதம் இல்லாமல் வேறென்ன? இதெல்லாம் சதிவேலையில்லாது வேறென்ன?

தலைவர்கள், கட்சி, வர்க்கம், பரந்துபட்ட மக்கள் ஆகியோரின் உள்ளுறவுகளைப் பற்றிய லெனினுடைய முழுமையான போதனை களைத் தீவிரமாகவும், விரிவான முறையிலும் பிரச்சாரம் செய்வதற்கு இது மிகவும் ஏற்ற தருணம் ஆகும்.

(21) சோசலிச நாடுகளிலிடையிலுள்ள உறவுகள் புதுவகையான சர்வதேசிய உறவுகள் ஆகும். சோசலிச நாடுகளுக்கிடையில் உள்ள உறவுகள், அவை பெரிதாக இருந்தாலும் சரி, சிறிதாக இருந்தாலும் சரி, பொருளாதார ரீதியில் அதிக வளர்ச்சி பெற்றதாகயிருந்தாலும் சரி,

குறைந்த வளர்ச்சி பெற்றதாகயிருந்தாலும் சரி, முழுமையான சமத்துவம், பிரதேச ஒருமைப்பாடு, இறையாண்மை, சுதந்திரம் ஆகிய வற்றை மதிப்பது, ஒன்று மற்றதன் உள் விவகாரங்களில் தலையிடா திருப்பது முதலான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்குஏற்றாற்போல்பரஸ்பரம் ஒன்றிற்கொன்று ஆதரவளிப்பது, உதவி செய்வது என்ற கொள்கை களின் அடிப்படையில் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு சோசலிச நாடும் தனது கட்டுமானத்திற்குப் பிரதான மாகத் தன்னையே சார்ந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு சோசலிச நாடும், தனது சொந்த பருண்மையான சூழ்நிலைமைகளுக்கேற்ப, முதலாவதாக தனது சொந்த மக்களின் விடா முயற்சியுடன் கூடிய உழைப்பையும் திறனையும் நம்பி நிற்கவேண்டும்; அதற்குள்ள எல்லா செல்வாதாரங்களையும், முற்றிலும், திட்டமிட்ட ரீதியிலும், முழுமையாகவும் பயன்படுத்த வேண்டும்; தனது சகல உள்ளாற்றலையும் சோசலிசக் கட்டுமானத்தில் ஈடுபடுத்தவேண்டும். இவ்வாறு மட்டுமே சோசலிசத்தை திறம்படக் கட்டியமைக்க முடியும்; அதன் பொருளாதாரத்தைத் துரிதமாக வளர்க்கமுடியும்.

சோசலிச முகாம் முழுவதன் வலிமையையும் பலப்படுத்தவும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்திற்கு உதவி செய்யும் ஆற்றலை உயர்த்தவும் ஒவ்வொரு சோசலிச நாடும் கடைப் பிடிக்க வேண்டிய வழி இதுவொன்றே. ஆகவே, கட்டுமானப்பணியில் பிரதானமாகத் தன்னைத்தானே சார்ந்து நிற்கும் கொள்கைகளைக் கடைபிடிப்பது, பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தைப் பருண்மையாகப் பிரயோகிப்பதாகும்.

எந்த ஒரு சோசலிச நாடேனும் தனது சொந்த பகுதி நலன்களை முன்னிட்டு, இதர சகோதரத்துவ நாடுகள் தனது தேவைகளுக்கு உட்பட்டு நடக்கவேண்டுமென்று ஒருதலைப்பட்சமாகக் கோருமானால், இதர சகோதரத்துவ நாடுகள், கட்டுமானத் துறையில் தங்களின் சொந்த முயற்சிகளின் மீது பிரதானமாகச் சார்ந்து நிற்கும் கொள்கையை கடை பிடிப்பதையும், சுயேச்சையாகத் தங்களின் பொருளாதாரத்தை வளர்ப் பதையும் தடுப்பதற்காக, ''தனியாகச் செல்லுவது'' ''தேசிய வாதம்'' என்று கூறி அதை எதிர்க்கும் சாக்குப்போக்கைப் பயன்படுத்துமானால், அல்லது இதர சகோதரத்துவ நாடுகளின் மீது பொருளாதார நிர்ப்பந்தம் கொடுக்கும் அளவிற்குச் செல்லுமானால் - அவையெல்லாம் தேசியத் தன்னகங்காரத்தின் அப்பட்டமான வெளிப்பாடுகளேயாகும்.

சோசலிச நாடுகள் பரஸ்பரப் பொருளாதாரஉதவியும், ஒத்துழைப்பும் பரிமாற்றமும் செய்துகொள்ள வேண்டியது முற்றிலும் அவசியமாகும்.

இத்தகைய பொருளாதார ஒத்துழைப்பு, முழுமையான சமத்துவம், பரஸ்பர நன்மை, பரஸ்பரத்தோழமை உதவி ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

இந்த அடிப்படைக் கொள்கைகளை மறுப்பது,பெருவல்லரசு ஆதிக்க வெறியாகும். ''சர்வதேச ரீதியில் வேலைப் பிரிவு,'' ''பிரத்தியேக உற்பத்தி'' என்ற பெயரில் ஒருவர் விருப்பத்தை மற்றவர்கள்மீது திணிப்பது, சகோதர நாடுகளின் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் மீறுவதாகும்; அல்லது அந்த நாட்டு மக்களின் நலன்களுக்குத் தீங்கு பயப்பதாகும்.

சோசலிச நாடுகளிடையிலுள்ள உறவுகளில், மற்றவர்கள் தலையில் கைவைத்து தான் இலாபம் அடைவதென்ற நடைமுறையைப் பின்பற்றுவது அபத்தமானதாகும்.இது முதலாளித்துவ நாடுகளிடையேயுள்ள உறவுகளின் குணாம்சமாகும். மேலும், சந்தைகளைப் பிடிப்பதற்கும், இலாபத்தை அபகரிப்பதற்கும் ஏகபோக முதலாளித்துவ கும்பல்கள் தோற்றுவித்துள்ள ''பொருளாதாரஇணைப்பு'', ''பொது சந்தை''ஆகிய வற்றைசோசலிச நாடுகள் தங்களின் பொருளாதார ஒத்துழைப்பிலும் பரஸ்பர உதவியிலும் பின்பற்றும் அளவிற்குச் செல்வது விபரீதமானதாகும்.

(22) 1957-ம் ஆண்டுப் பிரகடனமும், 1960-ம் ஆண்டு அறிக்கையும் சகோதரக் கட்சிகளிடையேயிருக்க வேண்டிய உறவுகளுக்கு வழிகாட்டும் கொள்கைகளை வகுத்தன. மார்க்சிய-லெனினியம், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருமைப்பாடு, பரஸ்பர ஆதரவு, பரஸ்பரஉதவி, சுதந்திரம், சமத்துவம், கலந்தாலோசிப்பதன் மூலம் ஒருமனதாக முடிவுக்கு வருவது ஆகியவையே இந்தக் கொள்கைகளாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் மார்ச் 30-ந்தேதிய கடிதம், கம்யூனிச இயக்கத்தில் ''தலைமைக் கட்சிகளென்றோ'' ''கீழ்படியும்'' கட்சிகளென்றோ கிடையாது, அனைத்துக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் சுயேச்சையானவை, சமத்துவமானவையென்றும், பாட்டாளி வர்க்க சர்வ தேசியம், பரஸ்பர உதவி ஆகியவற்றின் அடிப்படையில் அவை தம் உறவுகளை அமைத்து கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிடுவதைக்காண்கிறோம்.

சொல்லிலும் செயலிலும் ஒன்றாயிருப்பது கம்யூனிஸ்டுகளின் சிறந்த பண்பாகும். சகோதரக் கட்சிகளிடையே ஒற்றுமையைப் பேணுவதற்கும், பலப்படுத்துவதற்கும், ஒரே சரியான வழி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை உண்மையாகக் கடைப்பிடிப்பதேயன்றி அதை மீறுவதல்ல. சகோதரக் கட்சிகளிடையேயிருக்க வேண்டிய உறவுகளுக்கு

வழிகாட்டும் கொள்கைகளைச் சீர்குலைக்காமல், சொல்லிலும் செயலிலும் கடைப்பிடிப்பதும் மிகமிக முக்கியமானதாகும்.

சகோதரக் கட்சிகளிடையிலுள்ள உறவுகளில் சுதந்திரம், சமத்துவம் ஆகிய கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அப்பொழுது ஒரு கட்சி இதர கட்சிகளுக்கு மேலாகத் தன்னை வைப்பதும் அவற்றின் உள் விவகாரங்களில் தலையிடுவதும், அவற்றிடையே உள்ள உறவுகளில் தந்தையாதிக்க வழிகளைக் கடைபிடிப்பதும் அனுமதிக்க முடியாததாகும்.

சகோதர கட்சிகளிடையில் உள்ள உறவுகளில் ''தலைமை'' என்றும் ''கீழ்ப்படிபவை'' என்றும் எதுவும் இல்லையென்பதை ஏற்றுக் கொண்டால், அப்பொழுது ஒரு கட்சியின் வேலைத் திட்டத்தை, தீர்மானங்களை, வழியை சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் ''பொது வேலைத் திட்டமாக'' இதர சகோதரக் கட்சிகளின்மீது திணிப்பது அனுமதிக்க முடியாததாகும்.

சகோதரக் கட்சிகளுக்கிடையிலான உறவுகளில் கூடி ஆலோசிப்பதன் மூலம் ஒருமனதான முடிவிற்கு வருவதென்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்படுமானால், அப்பொழுது ''யார்பெரும்பான்மையினர்'' ''யார் சிறுபான்மையினர்'' என்று யாரும் வலியுறுத்தக் கூடாது; தனது தவறான வழியைத் திணிப்பதற்கும் தனது குறுங்குழுவாத, பிளவுவாதக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கும் இந்தப் பெரும்பான்மையை யாரும் சார்ந்திருக்கக் கூடாது.

சகோதரக் கட்சிகளிடையிலுள்ள வேறுபாடுகள் பரஸ்பரம் கலந்தாலோசிப்பதன் மூலம் தீர்க்கப்பட வேண்டுமென்பது ஒத்துக்கொள்ளப் பட்டால், அப்பொழுது தனது சொந்தக் கட்சி மாநாட்டிலோ அல்லது மற்றொரு கட்சியின் மாநாட்டிலோ, கட்சி தலைவர்களின் சொற்பொழிவுகளிலோ, தீர்மானங்களிலோ, அறிக்கைகளிலோ, பிற வழிகளிலோ இதர சகோதரக்கட்சிகளைப் பகிரங்கமாகவும், பெயரைக் குறிப்பிட்டும் தாக்கிப்பேசக் கூடாது. மேலும் சகோதரக் கட்சிகளிடையிலுள்ள சித்தாந்தவேறுபாடுகள், அரசாங்க உறவுகள் பற்றிய துறைக்கு விரிவாக்கப்படக் கூடாது.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் வேறுபாடுகள் உள்ள இன்றைய சூழ்நிலைகளில் பிரகடனத்திலும், அறிக்கையிலும் வகுக்கப்பட்டுள்ள சகோதரக் கட்சிகளுக்கு இடையேயான உறவுகளுக்கு வழி காட்டும் கொள்கைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதை வலியுறுத்துவது முக்கியமாகும்.

சகோதரக் கட்சிகள், சகோதர நாடுகள் ஆகியவற்றின் இடையிலுள்ள உறவுகளைப் பொறுத்தமட்டில் ரசிய - அல்பேனிய உறவுகள்

தற்போதைய முக்கியப் பிரச்சினையாகும். சகோதரக் கட்சியையும் நாட்டையும் நடத்துவதற்கு எது சரியான வழி? சகோதரக் கட்சிகளிடையிலும் நாடுகளிடையிலும் இருக்க வேண்டிய உறவுகள் பற்றி பிரகடனத்திலும் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்ட வழிகாட்டும் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதா, வேண்டாமா? இதுவே இங்குள்ள பிரச்சினை. இப்பிரச்சினைக்குச் சரியான தீர்வு காண்பது சோசலிச முகாமின் ஒற்றுமையையும், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையையும் பேணுவதற்கான முக்கியமான கோட்பாட்டுப் பிரச்சினையாகும்.

மார்க்சிய-லெனினிய சகோதரக் கட்சியான அல்பேனியத் தொழிலாளர் கட்சியை எவ்வாறு நடத்துவது என்பது ஒரு பிரச்சினை. மார்க்சிய-லெனினியத்திற்குத் துரோகிகளான யூகோஸ்லாவியத் திரிபுவாதக் கும்பல்களை எவ்வாறு நடத்துவது என்பது வேறு பிரச்சினை. சாராம்சத்தில் வேறுபட்ட இந்த இருபிரச்சினைகளையும் எக்காரணத்தை முன்னிட்டும் சமமாக வைக்கக் கூடாது.

''ரசியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், அல்பேனியத் தொழிலாளர் கட்சிக்கும் உள்ள உறவுகள் சுமுகமாகும் என்ற நம்பிக்கையை நீங்கள் கைவிட்டுவிடவில்லை'' என உங்கள் கடிதம் கூறுகிறது. ஆனால் அதே வேளையில்''பிளவு படுத்தும் நடவடிக்கைகளில்'' ஈடுபடுவதாகக் கூறி அல்பேனியத் தோழர்களை நீங்கள் தொடர்ந்து தாக்கி வருகிறீர்கள். இது சுய முரண்பாடு என்பது தெளிவு. இது ரசிய-அல்பேனிய உறவுகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்விதத்திலும் உதவி செய்யவில்லை.

ரசிய-அல்பேனிய உறவுகளில் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது யார்? ரசிய-அல்பேனியக் கட்சிகளுக்கிடையிலுள்ள சித்தாந்த வேறுபாடுகளை அரசாங்க உறவுகளுக்கு விரிவாக்கியது யார்? ரசிய-அல்பேனியக் கட்சிகளுக்கும், இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை எதிரிகள் முன்னிலையில் பகிரங்கமாகக் கொண்டு வந்தது யார்?

அல்பேனியக் கட்சித் தலைமையிலும் அரசாங்கத் தலைமையிலும் மாறுதல் கொண்டு வரும்படி பகிரங்க அறைகூவல் விடுத்தது யார்?

இவை யாவும் உலகம் முழுவதற்கும் தெளிவானவை. அப்பட்டமானவை.

ரசிய-அல்பேனிய உறவுகள் இவ்வளவு மோசமாகச் சீர்கெட்டுப் போனதற்கு தங்களுடைய பொறுப்பை, ரசிய கம்யூனிஸ்டு கட்சியின் முக்கியத் தலைவர்கள் உணரவில்லையென்பது சாத்தியமா?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவர்கள், சகோதர கட்சிகள், நாடுகளிடையேயிருக்க வேண்டிய உறவுகள் குறித்த வழி காட்டும் கொள்கைகளை கடைபிடிப்பார்களென்றும், ரசிய-அல்பேனிய உறவுகளைச் சீர்படுத்தப் பயனுள்ள வழியைத் தேடுவதில் முன்முயற்சி எடுப்பார்களென்றும் நாங்கள் எங்கள் நம்பிக்கையை மீண்டும் ஒரு முறை தெரிவிக்கிறோம். சுருங்கக் கூறின் சகோதரக் கட்சிகளுடனும், நாடு களுடனும் உறவுகளை எவ்வாறு கடைபிடிப்பது என்ற பிரச்சினை அக்கறையுடன் கறாராக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ''மாஸ்கோவின் கரம்'' பற்றி ஏகாதிபத்தியவாதிகளும் பிறபோக் காளர்களும் பரப்பிவரும் அவதூறுகளை, சக்தியுடன் முறியடிப்பதற்கு, சகோதரக்கட்சிகளுடனும், நாடுகளுடனும் கொள்ளவேண்டிய உறவு களுக்கு வழி காட்டும் கொள்கைகளை கறாராகப் பின்பற்றுவதொன்றே வழியாகும்.

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் விதிவிலக்கின்றி எல்லாக் கட்சி களிடமிருந்தும், பெரிய கட்சியாயினும் சிறிய கட்சியாயினும், அதிகாரத் தில் இருக்கும் கட்சியாயினும் அதிகாரத்தில் இல்லாத கட்சியாயினும், கோரப்படுகிறது. எனினும் பெரிய கட்சிகளுக்கும், அதிகாரத்திலுள்ள கட்சிகளுக்கும் இந்த அம்சத்தைப் பொறுத்தமட்டில் குறிப்பாக பெரும் பொறுப்புண்டு. சென்ற காலத்தில் சோசலிச முகாமில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான பல கவலை தரக்கூடிய போக்குகள், சகோதரக் கட்சி யின் நலன்களுக்கு மட்டுமல்லாமல் அந்த நாட்டு மக்களின் நலன் களுக்கும் தீங்கு விளைவித்துள்ளன. பெரிய நாடுகளும், பெரிய கட்சி களும் பெரு வல்லரசு ஆதிக்கவெறித் தவறைச் செய்யக் கூடாதென்று லெனின் வழங்கிய அறிவுரைகளை மனத்திற்கொள்வது அவசியம் என் பதை இது தெள்ளத்தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

''எங்கள் நாட்டு மக்களுக்கும், சகோதர சீன மக்களுக்கும் அல்லது இதர மக்களுக்கும் இடையில் பகைமையை விதைக்கக் கூடிய எந்த ஒரு நடவடிக்கையும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி எடுத்ததில்லை, எக்காலமும் எடுக்கப்போவதுமில்லை'' எனத் தங்கள் கடிதத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் குறிப்பிடுகின்றனர். சென்ற காலத்தில் நிகழ்ந்த மனக்கவலைத் தரும் பல சம்பவங்களைத் தொகுத்துக் கூற நாங்கள் விரும்பவில்லை. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் தம் எதிர்கால நடவடிக்கைகளில் தங்களின் வாக்கின்படி கண்டிப்பாக நடப்பார்கள் என மட்டும் நாங்கள் நம்புகிறோம்.

கடந்த சில ஆண்டுகளில் சகோதரக் கட்சிகளுக்கும், நாடுகளுக்கும் உள்ள உறவுகளுக்கு வழிகாட்டும் கொள்கைகளை மீறியுள்ள அடுத் தடுத்த பல கடுமையான சம்பவங்களுக்கு மத்தியிலும், எங்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பல இடையூறுகளுக்கும், இழப்புகளுக்கும் மத்தியிலும் எங்கள் கட்சி உறுப்பினர்களும், மக்களும் மிகப் பெரும் நிதானத்தைக்

கடைப்பிடித்துள்ளனர். சீனக் கம்யூனிஸ்ட்கள், மற்றும் சீன மக்களின் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வு கடுமையான சோதனைகளுக்கிடையில் உறுதியாக நிலைநாட்டப்பட்டுள்ளது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு மிகவும் விசுவாசமாக இருக்கிறது; சகோதர கட்சிகளுக்கும் நாடுகளுக்கும் இடையிலுள்ள உறவுகளுக்கு வழிகாட்டும் 1957 பிரகடனம் மற்றும் 1960-ம் ஆண்டு அறிக்கையின் கொள்கைகளை உயர்த்திப் பிடிக்கிறது; பேணுகிறது. சோசலிச முகாம், சர்வதேசக் கம்யூனிச இயக்கம் ஆகியவற்றின் ஒற்றுமையைப் பாதுகாத்து, வலுப்படுத்துகிறது.

(23) சகோதரக் கட்சிகளால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொதுவான வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, மார்க்சிய-லெனினியத்திலிருந்து வழுவிச் செல்லும் எல்லா வகையான சந்தர்ப்பவாதத்தை எதிர்த்தும் விட்டுக் கொடுக்காத போராட்டம் நடத்துவது அவசியமாகும்.

திரிபுவாதம்-அல்லது வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால் வலது சந்தர்ப்பவாதம், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்திலுள்ள பிரதான அபாயம் என பிரகடனமும், அறிக்கையும் குறிப்பிடுகின்றன. யூகோஸ்லாவியத் திரிபுவாதம், நவீன திரிபுவாதத்தின் வகைப்பட்டதாகும்.

அறிக்கை குறிப்பாக சுட்டிக்காட்டுகிறது: ஒன்றுதிரட்டப்பட்ட வடிவில் உள்ள நவீன திருத்தல்வாதத்தில் ஒருவகை 'கோட்பாடுகளான யூகோஸ்லாவிய வகைப்பட்ட சர்வதேச சந்தர்ப்பவாதத்தை கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒருமனதாக கண்டித்துள்ளன.'

அறிக்கை மேலும் கூறுகிறது:

''மார்க்சிய-லெனினியம் காலாவதியாகிவிட்டது என்று கூறி அதற்கு துரோகமிழைத்த பிறகு யூகோஸ்லாவியக்கம்யூனிஸ்ட்லீகின் தலைவர்கள் 1957-ம் ஆண்டுப் பிரகடனத்துக்கு எதிராகத் தங்களின் லெனினிய விரோதத் திரிபுவாத வேலைத் திட்டத்தை வைத்தனர்; அவர்கள் சர்வ-தேசக் கம்யூனிச இயக்கம் முழுமைக்கும் எதிராக யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்ட் லீகை நிறுத்தினர்; சோசலிச முகாமிலிருந்து தங்கள் நாட்டைத் துண்டித்துக் கொண்டனர். தங்கள் நாட்டை, அமெரிக்காவிலிருந்தும், இதர ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்தும் பெறும் உதவியைச் சார்ந்து நிற்கும்படி செய்தனர்...''

''சோசலிச முகாமிற்கும், உலகக் கம்யூனிச இயக்கத்திற்கும் எதிராக யூகோஸ்லாவியத் திரிபுவாதிகள் தங்களின் சதிவேலையைச் செய்து வருகிறார்கள். முகாம் சாராத கொள்கை என்ற சாக்குப் போக்கில், சமா

தானத்தை விரும்பும் எல்லா சக்திகள் மற்றும் எல்லா நாடுகளுடைய ஒற்றுமைக்கும் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுகிறார்கள்.''

ஆகவே அறிக்கை கீழ்க்கண்ட முடிவுக்கு வருகிறது:

''யூகோஸ்லாவியத் திரிபுவாதத் தலைவர்களை மேலும் அம்பலப் படுத்துவதும், யூகோஸ்லாவிய திரிபுவாதிகளின் லெனினியத்திற்கு விரோதமான கருத்துக்களிலிருந்து கம்யூனிச இயக்கத்தையும், பாட்டாளி வர்க்க இயக்கத்தையும் பாதுகாப்பதற்குத் தீவிரப் போராட்டம் நடத்து வதும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் பிரதானக் கடமையாக இருக்கிறது.''

இங்கு எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை, சர்வதேசக் கம்யூனிச இயக்கத் திற்கு ஒரு முக்கியமான கொள்கைப் பிரச்சினையாகும்.

பிரகடனத்திற்கும் அறிக்கைக்கும் எதிராகத் தங்களது திரிபுவாத வேலைத் திட்டத்திலும், மார்க்சிய-லெனினிய விரோத நிலையிலும் உறுதியாக நிற்பதாக அண்மையில்தான் டிட்டோ கும்பல் பகிரங்கமாகக் கூறியது.

அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் வட அட்லாண்டிக் (NATO) கூட்டாளிகளும் வெகு காலமாக டிட்டோ கும்பலை வளர்த்துவிடுவதில் பல கோடிக்கணக்கான அமெரிக்க டாலர்களைச் செலவிட்டுள்ளனர். மார்க்சிய-லெனினியவாதிகள் என்ற போர்வையில், ''சோசலிச நாடு'' என்ற பதாகையின் கீழ் ஜம்பமடித்துக் கொண்டு டிட்டோ கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விசேசப் படைப் பிரிவாகச் செயல்பட்டு, சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தையும் உலக மக்களின் புரட்சிகர இலட்சி யத்தையும் சீர்குலைத்து வருகிறது.

யூகோஸ்லாவியா ''திட்டவட்டமான ஆக்க பூர்வமான போக்கு களைப் பிரதிபலித்து வருகின்றது'' எனவும், அது ஒரு ''சோசலிச நாடு'' எனவும், டிட்டோ கும்பல் ஒரு ''ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தி'' எனவும் கூறுவது முற்றும் ஆதாரமற்றது; உண்மைகளுக்குப் புறம்பானது.

யூகோஸ்லாவியத் திரிபுவாதக் கும்பலை சோசலிச சமூகத்தினுள்ளும் சர்வதேசக் கம்யூனிச அணிகளுக்குள்ளும் புகுத்துவதற்கு, சில நபர்கள் இப்போது முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர். இது சகோதரக் கட்சி களின் 1960-ம் ஆண்டு கூட்டத்தில் எடுத்த ஒருமனதான உடன்பாட்டைப் பகிரங்கமாகக் கிழித்தெறிவதாகும்; இதனை சற்றும் அனுமதிக்க முடியாது.

கடந்த சில ஆண்டுகளாக சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத் தில் புரண்டோடிக்கொண்டிருக்கும் திரிபுவாதப் போக்கும், சர்வதேசக்

கம்யூனிச இயக்கத்தின் பல படிப்பினைகளும் அனுபவங்களும், தற்போது சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் திரிபுவாதம்தான் பிரதான அபாயம் எனப் பிரகடனத்திலும், அறிக்கையிலும் எடுக்கப்பட்ட முடிவு சரியான தென்பதை முற்றிலும் உறுதி செய்துள்ளன.

ஆயினும் சில நபர்கள், திரிபுவாதமல்ல, வறட்டுச் சூத்திரவாதமே பிரதான அபாயம் என்றோ அல்லது வறட்டுச் சூத்திரவாதம் திரிபு வாதத்தைக் காட்டிலும் எந்த விதத்திலும் குறைந்த அபாயமுள்ளதல்ல வென்றோ பகிரங்கமாகக் கூறிவருகின்றனர். இவையெல்லாம் எந்த வகையான கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன? உறுதியான மார்க்சிய—லெனினியவாதிகளும், உண்மையான மார்க்சிய—லெனினியக் கட்சிகளும் கொள்கைகளை முன்னுக்கு வைக்கவேண்டும். இன்று ஒன்றை அங்கீகரிப்பது, நாளை மற்றொன்றை அங்கீகரிப்பது, இன்று ஒன்று கூறுவது, நாளை வேறொன்று கூறுவது—என்றவகையில் கொள்கைகளை அவர்கள் பணயம் வைக்கக்கூடாது.

மார்க்சிய—லெனினியத்தின் தூய்மையைப் பாதுகாப்பதற்கும் பிரகடனம் மற்றும் அறிக்கையின் கொள்கை ரீதியான நிலையைப் பாதுகாப்பதற்கும் இதர எல்லா மார்க்சிய—லெனினியவாதிகளுடன் ஒன்று பட்டு நின்று சீனக் கம்யூனிஸ்டுகள், நவீனத் திரிபுவாதத்திற்கெதிராக விடாப்பிடியான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவார்கள்.

சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பிரதான அபாயமான திரிபு வாதத்தை எதிர்க்கும் அதே வேளையில், கம்யூனிஸ்டுகள், வறட்டுச் சூத்திரவாதத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

1957 பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று பாட்டாளி வர்க்கக் கட்சிகள் ''அனைத்தும் தழுவிய மார்க்சிய—லெனினிய உண்மையைத் தங்கள் நாடுகளின் புரட்சி, கட்டுமானம் ஆகியவற்றின் குறிப்பான நடைமுறையுடன் இணைக்கும் கொள்கையை உறுதியாகப் பின்பற்ற வேண்டும்.''

அதாவது, ஒருபுறத்தில் எல்லாக் காலங்களிலும் மார்க்சிய—லெனினியத்தின் அனைத்தும்தழுவிய உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு செய்யத் தவறுவது வலது சந்தர்ப்பவாத அல்லது திரிபுவாதத் தவறுக்கு இட்டுச் செல்லும்.

மறுபுறத்தில் யதார்த்த நிலையிலிருந்து செல்வதும், பரந்துபட்ட மக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதும், மக்கள்திரள் போராட்டங்களின் அனுபவத்தை இடைவிடாது தொகுத்துக்கொள்வதும் ஒருவருடைய சொந்த நாட்டின் சூழ்நிலைமைகளுக்கு உகந்த கொள்கைகளையும், போர்த்தந்திரங்களையும் சுயேச்சையாக வகுத்துப் பிரயோ

கிப்பதும் எப்பொழுதும் அவசியமாகும். இவ்வாறு செய்யத்தவறினால், மற்றொரு கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளையும், போர்த்தந்திரங் களையும் அப்படியே இயந்திரகதியாகக்காப்பியடித்தால், மற்றவர்களின் விருப்பத்திற்குக் கண்மூடித்தனமாக அடிபணிந்தால், அல்லது மற்றொரு கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டத்தையும், தீர்மானத்தையும் பகுத்தாராயாமல் தனது சொந்தவழியாக ஏற்றுக்கொண்டால் வறட்டுச் சூத்திரவாதத் தவறுகள் ஏற்படும்.

வெகுகாலத்திற்கு முன்பே பிரகடனத்தில் வற்புறுத்தப்பட்ட இந்த அடிப்படைக் கொள்கைகளை இப்போது சில நபர்கள் மீறிக்கொண்டிருக்கிறார்கள். ''மார்க்சிய—லெனினியத்தை ஆக்கப் பூர்வமாக வளர்ப்பதாக''க் கூறிக்கொண்டு அவர்கள் மார்க்சிய—லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையை அப்பால் தூக்கியெறிகின்றனர். மேலும் அவர்கள், மானசீகமான அனுமானத்தை மட்டுமே அடிப்படையாகச் கொண்ட, யதார்த்ததிற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் அப்பாற்பட்ட தங்களின் சொந்த உபதேசங்களை ''அனைத்தும்தழுவிய மார்க்சிய-லெனினிய உண்மைகள்'' என வர்ணிக்கின்றனர். இந்த உபதேசங்களை மற்றவர்களும் நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ள வேண்டுமென நிர்ப்பந்திக்கின்றனர்.

ஆகவேதான் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் பல கடுமையான சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன.

(24) புரட்சியின் வளர்ச்சியும், வெற்றியும் புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சி இருப்பதைச் சார்ந்துள்ளது என்பதே சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் அனுபவத்திலிருந்து பெறப்படும் மிக முக்கியமான படிப்பினையாகும்.

ஒரு புரட்சிகரக் கட்சி இருக்கவேண்டும்.

மார்க்சிய—லெனினியத்தின் புரட்சிகர கோட்பாட்டிற்கும், புரட்சிகர நடைமுறைக்கும் ஏற்ப கட்டியமைக்கப்பட்ட ஒரு புரட்சிகரக் கட்சி இருக்க வேண்டும்.

மார்க்சிய—லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையை தனது சொந்த நாட்டுப் புரட்சியின் பருண்மையான நடைமுறையுடன் ஒன்றிணைக்கும் திறன்பெற்ற ஒரு புரட்சிகரக் கட்சியிருக்க வேண்டும்.

தலைமையை பரந்துபட்ட மக்களுடன் இணைக்கும் திறன் வாய்ந்த ஒரு புரட்சிகரக் கட்சியிருக்க வேண்டும். உண்மையில் ஊன்றி நிற்கக் கூடியதும், தவறுகளைத் திருத்திக்கொண்டு, விமர்சனம், சுயவிமர்சனம் நடத்தத்தெரிந்துள்ளதுமான ஒரு புரட்சிகரக் கட்சி இருக்கவேண்டும்.

இத்தகைய ஒரு புரட்சிகரக் கட்சிதான் ஏகாதிபத்தியத்தையும், அதன் அடிவருடிகளையும் தோற்கடிக்கும் பொருட்டு பாட்டாளி வர்க்கத்தையும், பரந்துபட்ட மக்களையும் வழி நடத்தமுடியும்; தேசிய ஜனநாயகப் புரட்சியில் முழுமையான வெற்றியை ஈட்டவும், சோசலிசப் புரட்சியில் வெற்றிகாணவும் பாட்டாளி வர்க்கத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் தலைமைதாங்க முடியும்.

ஒரு கட்சி பாட்டாளி வர்க்கப் புரட்சிகரக் கட்சியாக இராமல், முதலாளித்துவ சீர்திருத்தவாதக் கட்சியாக இருந்தால்;

அது ஒரு மார்க்சிய—லெனினியக் கட்சியாக இராமல் திரிபுவாதக் கட்சியாக இருந்தால்;

அது ஒரு பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிக் கட்சியாக இராமல், முதலாளி வர்க்கத்திற்கு வால்பிடிக்கும் கட்சியாக இருந்தால்;

பாட்டாளி வர்க்கம், உழைக்கும் மக்கள் ஆகியோரின் நலன்களைப் பிரதிநிதித்துவத்துவப் படுத்தாமல், பிரபுகுலப் பாட்டாளி வர்க்கத்தின் (Labour Aristocracy) நலன்களைப் பிரதிபலிக்கும் கட்சியாக இருந்தால்;

அது ஒரு சர்வதேசியக் கட்சியாக இராமல், தேசியவாதக் கட்சியாக இருந்தால்;

தனது சொந்த மூளையைப் பயன்படுத்தித் தனக்குதானே சிந்திக்கும் திறனும், தீவிர விசாரணையின் மூலமும், ஆராய்ச்சியின் மூலமும் தனது நாட்டிலுள்ள வெவ்வேறு வர்க்கங்களின் போக்குகளைப்பற்றிய சரியான விசயஞானத்தைக் கிரகித்துக் கொள்ளும் திறனும், தனது நாட்டின் பருண்மையான நடைமுறையுடன் மார்க்சிய—லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மையைப் பிரயோகிக்கும், ஒன்றுபடுத்தும் திறனும் இல்லாமல் அதற்கு பதிலாக மற்றவர்களின் வார்த்தைகளைக் கிளிப்பிள்ளை போல் திருப்பிக் கூறும் கட்சியாகவும், பகுத்தாராயமல் அந்நிய அனுபவத்தை அப்படியே பின்பற்றும் கட்சியாகவும், நாட்டிற்கு வெளியேயுள்ள சில நபர்களின் உத்தரவுகளுக்கேற்ப இங்குமங்கும் ஓடும் கட்சியாகவும், திரிபுவாதம், வறட்டுச் சூத்திரவாதம் மற்றும் மார்க்சிய—லெனினிய கொள்கைகளுக்கு எதிரான அனைத்தினுடைய கூட்டுக் கலவையாக கட்சி இருக்குமானால்;

அப்பொழுது இத்தகைய ஒரு கட்சி, புரட்சிகரப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தையும், பரந்துபட்ட மக்களையும் வழிநடத்திச் செல்லும் திறன் சிறிதுமில்லாததாகயிருக்கும்; புரட்சியை வெல்வதற்கு முற்றும் திறனற்றதாயிருக்கும்; பாட்டாளி வர்க்கத்தின் மகத்தான

வரலாற்றுப் பணியை நிறைவேற்றும் திறன் முற்றிலும் இல்லாததா யிருக்கும்.

அனைத்து மார்க்சிய—லெனினியவாதிகளும், வர்க்க உணர்வு படைத்த அனைத்துத் தொழிலாளிகளும், எங்குமுள்ள சகல முற்போக்கு மக்களும் மிக ஆழமாகச் சிந்திக்கவேண்டிய பிரச்சினை இது.

(25) சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் எழுந்துள்ள வேறுபாடு களைப் பொறுத்தமட்டில் எது உண்மை, எதுபொய்யெனப் பிரித்துப் பார்ப்பது மார்க்சிய—லெனினியவாதிகளின் கடமையாகும். பொது எதிரிக்கெதிரான போராட்டத்தில் ஒற்றுமையின் பொதுநலனை முன்னிட்டு, பிரச்சினைகள் பரஸ்பரம் கலந்தாலோசிப்பதன் மூலம் தீர்க்கப்படவேண்டுமென்றும், எதிரிக்கு முன்பாக வேறுபாடுகளைப் பகிரங்கப்படுத்தக் கூடாதென்வும் நாங்கள் எப்பொழுதும் கோரி வந்திருக்கிறோம்.

சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில், பகிரங்கவாதப் பிரதிவாதங்களை சில சகோதரக் கட்சித் தலைவர்களே தூண்டிவிட்டனர் என்பதையும், அதை எங்கள் மீது திணித்தனர் என்பதையும் ரசிய கம்யூனிஸ்டு கட்சித் தோழர்கள் அறிவார்கள்.

பகிரங்க விவாதம் தூண்டிவிடப்பட்டுள்ளதால், இந்தப் பகிரங்க விவாதம் சகோதரக் கட்சிகளிடையே சமத்துவம் என்ற அடிப்படையிலும், ஜனநாயக அடிப்படையிலும், உண்மைகளைக்கூறியும், காரணகாரியங் களை ஆழ்ந்து பரிசீலிக்கும் வகையிலும் நடத்தப்படவேண்டும்.

ஒரு சில கட்சித்தலைவர்கள் இதர சகோதரக் கட்சிகளைப் பகிரங்கமாகத் தாக்கி, பகிரங்க விவாதத்தைத் தூண்டிவிட்டுள்ளதால், இவ்வாறு தாக்கப்பட்டுள்ள சகோதரக் கட்சிகள் பகிரங்கமாகப் பதில் அளிப்பதைத் தடுப்பதற்கு அவர்களுக்கு எந்தவிதக் காரணமோ, உரிமையோ இல்லையென்பது எமது கருத்து.

ஒரு சில கட்சித் தலைவர்கள் இதர சகோதரக் கட்சிகளைத் தாக்கிப் பல கட்டுரைகளைப் பிரசுரித்துள்ளனர். அப்படியிருக்க, இதற்கு அந்தக் கட்சிகள் அளித்துள்ள பதில் கட்டுரைகளை இவர்கள் தங்கள் பத்திரிக்கை களில் ஏன் வெளியிடக்கூடாது?

அண்மையில் சீனக் கம்யூனிஸ்டு கட்சி நம்பமுடியாத தாக்குதல் களுக்கு ஆளாகியுள்ளது. சீனக் கம்யூனிஸ்டு கட்சியைத் தாக்குபவர்கள் பெரும் கூச்சல் கிளப்பியுள்ளனர். உண்மைகளைப் பற்றிக் கவலைப் படாமல் பல குற்றச் சாட்டுகளை எங்களுக்கு எதிராக பொய்யாக இட்டுக் கட்டியுள்ளனர். எங்களைத் தாக்கும் இந்தக் கட்டுரைகளையும், சொற்

பொழிவுகளையும் எங்கள் பத்திரிகைகளில் நாங்கள் பிரசுரித்துள் ளோம்.

1962 டிசம்பர் 12-ந் தேதியன்று சுப்ரீம் சோவியத் கூட்டத்தில் ரசியத் தலைவர்கள் வெளியிட்ட அறிக்கையையும், 1963 ஜனவரி 7-ம் நாளன்று பிராவ்தா ஆசிரியர்குழு வெளியிட்டுள்ள கட்டுரையையும், 1963 ஜனவரி 16-ந் தேதி ஜெர்மனியின் சோசலிச அய்க்கியக் கட்சியின் ஆறாவது மாநாட்டில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தூதுக்குழுத் தலைவர் ஆற்றிய சொற்பொழிவையும், 1963 பிப்ரவரி 10-ம் நாள் பிராவ்தா ஆசிரியர் குழுவெளியிட்ட கட்டுரையையும் நாங்கள் எங்கள் பத்திரிகையில் முழுமையாகப் பிரசுரித்திருக்கிறோம்.

1963 பிப்ரவரி 21-ம் தேதியன்றும், மார்ச் 30-ம் தேதியன்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அனுப்பிய இரு கடிதங்களின் முழுவாசகத்தையும் நாங்கள் பிரசுரித்துள்ளோம்.

சகோதரக் கட்சிகள் எங்களைத் தாக்கி எழுதிய கட்டுரைகள், ஆற்றிய சொற்பொழிவுகள் சிலவற்றிக்கு நாங்கள் பதில் அளித்துள் ளோம்; மற்றவைகளுக்கு இன்னும் பதில் அளிக்கவில்லை. உதாரண மாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களின் கட்டுரைகள், சொற் பொழிவுகள் பலவற்றிற்கு நாங்கள் நேரடியாகப் பதில் அளிக்கவில்லை.

1962 டிசம்பர் 15-க்கும், 1963 மார்ச் 8-க்கும் இடையில் எங்களைத் தாக்கியவர்களுக்குப் பதில் அளிக்கும் வகையில் ஏழு கட்டுரைகள் எழுதி யுள்ளோம். அவையாவன:

''எல்லா நாடுகளின் தொழிலாளர் வர்க்கங்களே, ஒன்றுபடுங்கள், நம்து பொது எதிரியை எதிர்த்து நில்லுங்கள்.''

''எங்களுக்கும், தோழர் டோக்ளியாட்டிக்குமுள்ள வேறுபாடுகள்.''

''லெனினியமும், நவீன திரிபுவாதமும்.''

''மாஸ்கோ பிரகடனம் மற்றும் மாஸ்கோ அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றுபடுவோம்.''

''வேறுபாடுகள் எப்போதிருந்து?-தோரே, மற்றும் இதர தோழர் களுக்கு பதில்.''

''எங்களுக்கும் தோழர் டோக்ளியாட்டிக்குமுள்ள வேறுபாடுகள் குறித்து மேலும் சில- சமகால உலகில் லெனினியத்தின் சில முக்கிய பிரச் சினைகள்.''

''அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையைப் பற்றிய ஒரு விமர்சனம்.''

இந்தக் கட்டுரைகளைக் குறிப்பிட்டுத்தான் ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி சீனப் பத்திரிகைகள் ஆதாரமற்ற தாக்குதல்களைத்'' தொடுக்கின்றன என்று உங்களுடைய மார்ச் 30-ம் தேதிய கடிதத்தின் இறுதியில் குறிப்பிட்டுள்ளீர்கள் என நாங்கள் எண்ணுகிறோம். எங்களைத் தாக்கியவர்களுக்கு அளித்த பதில் கட்டுரைகளைத் ''தாக்குதல்களாக'' வர்ணிப்பது விசயத்தைத் தலைகீழாகப் புரட்டுவதாகும்.

எங்களுடைய கட்டுரைகளை ''ஆதாரமற்றது'' என்றும் மிகமோசமானதென்றும் வர்ணிக்கிறீர்கள். அப்படியானால் உங்கள் கட்டுரைகளை நாங்கள் பிரசுரித்தது போன்று ஏன் உங்கள் பத்திரிகைகளில் இந்த ஏழு ''ஆதாரமற்ற தாக்குதல்களையும்'' பிரசுரிக்கவில்லை? எல்லா ரசியத் தோழர்களும், ரசிய மக்களும் தாங்களே சிந்தித்து, யார் சரி, யார் தவறு என்பதைப் புரிந்து கொள்வதற்கு உங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்காதது ஏன்? ''ஆதாரமற்ற தாக்குதல்கள்'' என நீங்கள் கருதும் இந்தக் கட்டுரைகளுக்கு ஒவ்வொரு அம்சமாக மறுப்புரை கூறுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

நீங்கள் எங்கள் கட்டுரைகளை ''ஆதாரமற்றதெனவும்'' எங்கள் வாதங்களைத், தவறானவை என்றும் அழைத்தபோதிலும், எங்களுடைய வாதங்கள் என்னவென்பதை நீங்கள் ரசிய மக்களுக்குக் கூறுவதில்லை. இந்த நடைமுறையை சகோதரக் கட்சிகளின் பிரச்சினைகளை விவாதிப்பதன்பாலும், உண்மையின்பாலும், பரந்துபட்ட மக்களின்பால் காட்டும் அக்கறை மிகுந்த அணுகுமுறை எனக் கூறமுடியாது.

சகோதரக் கட்சிகளிடையே பகிரங்க விவாதம் நடத்துவதை நிறுத்த முடியும் என நாங்கள் நம்புகிறோம். இப்பிரச்சினை, சகோதரக் கட்சிகளிடையே சுதந்திரம், சமத்துவம், கூடிப்பேசுவதன் மூலம் ஒருமனதான முடிவிற்கு வருவது போன்ற கொள்கைகளின்படி தீர்க்கப்பட வேண்டும். சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் தான் விரும்பும்போது தாக்குதல்களைத் தொடுக்கவும், அல்லது மறுதரப்பார் பதில் கூறுவதை தடுக்க விரும்பும்போது ''பகிரங்க வாதப்பிரதிவாதங்களை முடித்துக் கொள்ளும்படி'' உத்தரவிடவும் யாருக்கும் உரிமையில்லை.

சகோதரக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டுவதற்கான சுமுக சூழ்நிலையை உண்டாக்கும் பொருட்டு எங்களுக்கு விரோதமாக சகோதரக் கட்சித் தோழர்கள் தொடுக்கும் தாக்குதல்களுக்குப் பகிரங்கமாகப் பதில் அளிப்பதைக்கூட 1963 மார்ச் 9-லிருந்து நாங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம் என்பது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அறிந்ததே. எனினும் பகிரங்கமாகப் பதில் அளிக்கும் உரிமை எங்களுக்கு இருக்கிறது.

எங்களது மார்ச் 9-ந் தேதி கடிதத்தில், பகிரங்க விவாதத்தை நிறுத்தி வைப்பதைக் குறித்து ''நமது இருகட்சிகளும், சம்பந்தப்பட்ட சகோதரக் கட்சிகளும் ஒரு விவாதம் நடத்தி, எல்லோருக்கும் நியாயமான, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருஉடன்பாட்டிற்கு வருவது அவசியம்'' என்று நாங்கள் குறிப்பிட்டு உள்ளோம்.

மேலே கூறியவை, சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி மற்றும் அது தொடர்பான சில கொள்கை ரீதியான பிரச்சினைகள் ஆகியவை குறித்து எங்களது கருத்துக்களாகும். இக்கடிதத்தின் ஆரம்பத்தில் நாங்கள் சுட்டிக்காண்பித்துள்ளது போன்று எங்கள் கருத்துக்களை திறந்த மனதுடன் எடுத்துக் கூறியுள்ளது பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள உதவுமென நம்புகிறோம். இக்கருத்துக்களைத் தோழர்கள் ஏற்றுக்கொள்ளலாம், ஏற்றுக்கொள்ளாமலிருக்கலாம். ஆயினும், எங்கள் கருத்துப்படி இங்கு நாம் விவாதிக்கும் பிரச்சினைகள் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டிய, தீர்வு காணப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினைகளாகும். இந்த, எல்லாப் பிரச்சினைகளும், உங்கள் கடிதத்தில் எழுதியுள்ள பிரச்சினைகளும், நமது இரு கட்சிகளுக்குமிடையே நடக்கும் பேச்சுவார்த்தைகளிலும், சகோதரக்கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்திலும் முழுமையாக விவாதிக்கப்படுமென நம்புகிறோம்.

இதோடு கூட ஸ்டாலின் பற்றிய விமர்சனம், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது, 22-வது மாநாட்டில் எழுதப்பட்ட சர்வதேசக் கம்யூனிச இயக்கம் குறித்த கொள்கை ரீதியான சில முக்கிய விசயங்கள் போன்ற பொதுவான அக்கறையுடைய இதர பிரச்சினைகளும் உள்ளன. இப்பிரச்சினைகள் மீதும் பேச்சுவார்த்தைகளின்போது திறந்த மனத்துடன் கூடிய கருத்துப் பரிமாற்றம் நடைபெறுமென நாங்கள் நம்புகிறோம்.

நமது இரு கட்சிகளுக்கும்இடையில் பேச்சுவார்த்தைகளைப் பொறுத்த வரையில், தோழர் குருச்சேவ் பீகிங்கிற்கு வரலாமென்றும், இது வசதிப்படவில்லையானால் மற்றொரு பொறுப்புவாய்ந்த ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தோழரின் தலைமையில் பீகிங்கிற்குத் தூதுக்குழு வரலாமென்றும் அல்லது நாங்கள் மாஸ்கோவிற்குத் தூதுக்குழு ஒன்று அனுப்புகிறோம் என்றும் எங்களது மார்ச் 9-ம் தேதிய கடிதத்தில் ஆலோசனை கூறியிருந்தோம். உங்களது மார்ச் 30-ம் தேதிய கடிதத்தில் தோழர் குருச்சேவ் சீனாவிற்கு வரமுடியாதென்று கூறியுள்ளதாலும் சீனாவிற்குத் தூதுக்குழுவொன்றை அனுப்ப நீங்கள் விருப்பம் தெரிவிக்காததாலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி மாஸ்கோவுக்கு தூதுக்குழுவொன்றை அனுப்பத் தீர்மானித்துள்ளது.

உங்களது மார்ச் 30-ந் தேதிய கடிதத்தில் தோழர் மாசேதுங்கை ரசியாவுக்கு வருகை தரும்படி அழைத்திருக்கிறீர்கள். பிப்ரவரி 23-ந்

தேதி ரசியத் தூதுவருடன் நடத்திய உரையாடலின் போது இச்சமயத்தில்தான் ரசியாவுக்குச் செல்ல ஏன் தயாராகவில்லையென்ற காரணத்தை தோழர் மாசேதுங் தெளிவாகக் கூறியிருக்கிறார். உங்களுக்கும் இது நன்றாகத் தெரியும்.

மே 9-ந் தேதியன்று ரசியத் தூதரைச் சந்தித்த பொழுது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் பொறுப்பு வாய்ந்த தோழர் ஒருவர், ஜூன் மத்தியில் நாங்கள் ஒரு தூதுக்குழுவை மாஸ்கோவிற்கு அனுப்புவோமெனத் தூதுவரிடம் தெரிவித்தார். பின்பு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் வேண்டுதலுக்கிணங்க இரு கட்சிகளுக்கும் இடையில் நடக்கவிருந்த பேச்சுவார்த்தைகளை ஜூன் 5-ம் தேதிக்கு ஒத்திபோட நாங்கள் ஒப்புக்கொண்டோம்.

சீன-ரசியக் கட்சிகளுக்கிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமான விளைவுகளைத் தரும் எனவும் அனைத்து கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் அனைத்தின் கூட்டத்தைக் கூட்டுவதற்கான தயாரிப்புகளுக்கு இட்டுச்செல்லுமெனவும் நாங்கள் மனப்பூர்வமாக நம்புகிறோம்.

மார்க்சிய-லெனினிய அடிப்படையிலும், பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் அடிப்படையிலும், சகோதரக் கட்சிகள் ஒருமனதாக ஒத்துக்கொண்ட பிரகடனம் மற்றும், அறிக்கையின் அடிப்படையிலும் எல்லா கம்யூனிஸ்டுகளும் ஒன்றுபடுவது எப்போதைக் காட்டிலும் இப்போது அதிக அவசியமாகும்.

மார்க்சிய-லெனினியக் கட்சிகளுடனும், உலகம் முழுவதிலுமுள்ள புரட்சிகர மக்களுடனும் ஒன்றுபட்டு நின்று, சோசலிச முகாமின் நலன்களையும், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் நலன்களையும், ஒடுக்கப்பட்ட தேசங்கள், மக்கள் ஆகியோரின் விடுதலை இலட்சியத்தையும், ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தையும், உலக சமாதானத்திற்கான போராட்டத்தையும் பேணுவதில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து தனது அயராத முயற்சிகளைச் செய்துவரும்.

நமக்கு நெருக்கமானவர்களுக்கும், அன்பானவர்களுக்கும் வருத்தமளிக்கின்ற, எதிரிக்கு மகிழ்ச்சியூட்டுகின்ற நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் மீண்டும் ஏற்படாதென நாங்கள் நம்புகிறோம்.

மார்க்சிய-லெனினியவாதிகளும், பாட்டாளி வர்க்கமும் எங்கணுமுள்ள புரட்சிகர மக்களும் மேலும் நெருங்கி ஒன்றுபடுவார்கள் எனவும், எல்லா இடையூறுகளையும் தடைக்கற்களையும் முறியடித்து ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும், உலக சமாதானத்திற்காகவும் மேலும் பல

வெற்றிகளை அடைவார்கள் எனவும், உலக மக்களின் புரட்சிகர இலட்சியத்திற்காகவும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் புரட்சிகர இலட்சியத்திற்காகவும் நடைபெறும் போராட்டத்தில் அவர்கள் மேலும் பல வெற்றிகளைப் பெறுவார்களெனவும் சீனக் கம்யூனிஸ்டுகள் உறுதியாக நம்புகின்றனர்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! தொழிலாளர்களும், உலகிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களும், ஒடுக்கப்பட்ட தேசங்களும் ஒன்றுபடுங்கள்! நமது பொது எதிரியை எதிர்ப்போம்!

கம்யூனிஸ்ட் வாழ்த்துக்களுடன்,

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின்

மத்திய கமிட்டி.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பகிரங்கக் கடிதமும், அதன்மீது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 9 விமர்சனங்களும்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம்

(ஜூலை 14, 1963)

அன்புள்ள தோழர்களே,

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, மத்திய கமிட்டியின் 1963 ஜூன் 14-ம் தேதிய கடிதம் தொடர்பாக, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அடிப்படை பிரச்சினைகள் மீது தன்னுடைய நிலையைத் தெளிவு படுத்துவதற்கு உங்களுக்கு இந்த பகிரங்கக் கடிதத்தை அனுப்புவது அவசியமென்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கருதுகிறது.

ரசிய மக்கள் அனைவருடைய சித்தத்தையும் பிரதிபலிக்கும் நம்முடைய கட்சியும், அரசாங்கமும் அனைத்து சோசலிச நாடுகளுடைய மக்களுடனும், சீன மக்களுடனும் சகோதர பூர்வமான நட்புறவை பலப் படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுத்துக் கொண்டிருப்பதை ரசிய மக்கள் நன்கு அறிவார்கள். கம்யூனிசத்தின் வெற்றிக்கான பொதுவான போராட்டத்தில் நாம் அய்க்கியப்பட்டுள்ளோம். நம்முடைய நோக்கமும் எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் ஒன்றே.

பல ஆண்டுகளாக நம்முடைய கட்சிகளுக்கு இடையில் நல்லுறவு நிலவி வந்துள்ளது. ஆனால், சில காலத்திற்கு முன்பு, ஒரு பக்கத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், மறு பக்கத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும்

இதர சகோதரக் கட்சிகள் ஆகியவற்றுக்கும் இடையில் ஆழமான வேறுபாடுகள் இருப்பது வெளியாயிற்று. தற்சமயம், சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் அறிக்கைகள், நடவடிக்கைகள் ஆகியவை சம்பந்தமாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி மேலும் மேலும் அதிகமான கவலையடைகிறது. அந்த அறிக்கைகளும் நடவடிக்கைகளும் நம் கட்சிகளின் இணைப்புக்கும், நம் மக்களின் நட்புறவுக்கும் குந்தகம் விளைவித்து வருகின்றன.

தோன்றியுள்ள வேறுபாடுகளை அகற்றுவதற்கு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, தன்னுடைய பங்குக்கு, சாத்தியமான அனைத்தையும் செய்து வருகிறது. பிரச்சினைகளை அமைதியாகவும் கறாராகவும் விவாதிப்பதற்கும், கொள்கை ரீதியான மார்க்சிய—லெனினிய அடிப்படையில் தீர்த்துக் கொள்வதற்கும் கம்யூனிச இயக்கத்தில் பகிரங்கமான வாதப்பிரதிவாதங்களை நிறுத்தவேண்டுமென்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி இவ்வாண்டு ஜனவரியில் யோசனை கூறியது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த ஆலோசனைக்கு அனைத்து சகோதரக் கட்சிகளிடையிலும் மனப் பூர்வமான ஆதரவு கிடைத்தது. அதைத்தொடர்ந்து ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசுவது என்று உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி அந்தப் பேச்சு வார்த்தைகள் மாஸ்கோவில் இப்போது நடந்து வருகின்றன.

சீனத்தோழர்களும், நம்மைப்போலவே நல்லெண்ணத்துடன்நடந்து கொள்வார்களென்றும், நம்முடைய இரு நாடுகளின் மக்களின் நன்மைக்காகவும், கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்காகவும், பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறுவதற்காகவும் பாடுபடுவார்கள் என்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகளும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகளும் மாஸ்கோவில் சந்திப்பதற்கு உடன்பாடு ஏற்பட்டு, பிரதிநிதிக் குழுக்களும் நியமிக்கப்பட்டு, சந்திப்பின் தேதியும் ஒப்புக்கொள்ளப்பட்டபின், சீனத்தோழர்கள் வித்தியாசங்களை அந்தக் கூட்டத்தில் விவாதிப்பதற்குப் பதில் எதிர்பாராதவிதமாக பழைய வேறுபாடுகளையும் உலகறிய பகிரங்கமாக வெளியிட்டார்கள்; அது மட்டுமின்றி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மீதும், இதர கம்யூனிஸ்ட் கட்சிகளின் மீதும் புதிய குற்றச்சாட்டுகளையும் சுமத்தினர் என்பதைக் கண்டு நாம் வருத்தப்படுகிறோம். இவ்வாண்டு ஜூன் 14-ம் தேதியன்று வெளியிட்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கடிதத்தில் இது கூறப்பட்டுள்ளது. இந்தக் கடிதம், கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சி பிரதிநிதிகளின் மாஸ்கோ மாநாடுகளின் பிரகடனம், அறிக்கை ஆகியவற்றுக்குத் தன் விருப்பப்படியான விளக்கத்தைக் கொடுத்துள்ளது. இந்த வரலாற்றுப் புகழ்பெற்ற ஆவணங்களின் அடிப்படையான கொள்கைகளைத் திரித்துக் கூறியுள்ளது சீனக் கம்யூனிஸ்ட்

கட்சி மத்திய கமிட்டியின் கடிதத்தில், நம் கட்சியின் மீதும், இதர கம்யூனிஸ்ட் கட்சிகளின் மீதும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது, 21-வது, 22-வது காங்கிரசுகளின் முடிவுகள், வேலைத் திட்டம் ஆகியவற்றின் மீதும் ஆதாரமற்ற, அவதூறான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் தலைமைக் குழு சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் ஜூன் 14-ம் தேதிய கடிதத்தை ஆய்வு செய்தபின் அந்தச் சமயத்தில் அக்கடிதத்தை ரசியப் பத்திரிகைகளில் வெளியிடுவது உசிதமாக இருக்காது என்ற முடிவுக்கு வந்தது. இவ்வாண்டு ஜூன் 19-ல் பிராவ்தாவில் வெளியான ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கடிதத்திலிருந்து நீங்கள் இதைத் தெரிந்து கொண்டிருந்திருப்பீர்கள். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடிதத்தை வெளியிடுவதென்றால் இயற்கையாகவே, அதற்கு எங்களுடைய பதிலையும் பகிரங்கமாக வெளியிடவேண்டியிருக்கும். அதனால் வாதப் பிரதிவாதங்கள் மேலும் தீவிரமடைந்திருக்கும்; உணர்ச்சிகளைக் கிளறி விட்டிருக்கும்; அதன் மூலம் கட்சிகளுக்கிடையிலுள்ள உறவுகளை மேலும் மோசமாக்கியிருக்கும். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கடிதம் வெளியிடப்பட்டிருந்தால், அது சிறிதும் காலப் பொறுத்தமற்றதாகவும் இருந்திருக்கும். ஏனெனில் அப்போது ரசிய-சீனக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற இருந்தது. எங்களுடைய அபிப்பிராயப்படி, அக்கூட்டத்தின் நோக்கம், இரு கட்சிகளுக்கிடையில் நிலவும் வேறுபாடுகளைத் தோழமை பூர்வமாகப் பரிசீலனை செய்வதன் மூலம், இன்று உலக வளர்ச்சி சம்பந்தப்பட்ட உயிராதாரமான பிரச்சினைகளைப் பற்றி நம் இரு கட்சிகளும் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்து கொள்வதும், அனைத்து கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டமொன்றை நடத்துவதற்கும், அதற்கான தயாரிப்புகள் செய்வதற்கும் ஒரு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த உதவுவதும் ஆகும்.

அதே சமயத்தில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர்களுக்கும், பிளீனக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் கடிதத்தைப் பற்றியும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சித்தலைமைக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர மார்க்சிய—லெனினிய கட்சிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளின் சாராம்சத்தைப் பற்றியும் தெரியப்படுத்துவது அவசியம் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் தலைமைக்குழு கருதியது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் தலைமைக் குழுவும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் முதல் செயலரும், சோவியத் குடியரசுகளின் அமைச்சர்கள் குழுவின் தலைவருமாகிய என்.எஸ். குருச்

சேவும் உலகக் கம்யூனிச இயக்கத்தை மேலும் அய்க்கியப்படுத்தும் நோக்கத்தில் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகள் அனைத்தையும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியுடன்தன்னுடைய உறவுகள் சம்பந்தமாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் தலைமைக் குழு எடுத்துக் கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக அங்கீகரிக்கப்பதென்று மத்திய கமிட்டியின் பிளீனக் கூட்டம் ஒருமனதாக முடிவு செய்தது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப்பிரதிநிதிகளுடன் நடத்தப்படும் கூட்டத்தில் நம் கட்சியின் 20-வது,21-வது,22-வது, காங்கிரசுகளின் வழிமுறையை சிறிதும் வழுவாது கடைப்பிடிக்க வேண்டுமென்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பிளீனக் கூட்டம், மத்திய கமிட்டியின் தலைமைக் குழுவுக்கு ஆணையிட்டது. அந்த வழிமுறை,கம்யூனிஸ்ட் மற்றும் தொழி லாளர் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டு, அவற்றின் பிரகடனம், அறிக்கை ஆகியவற்றில் வெளியிடப்பட்டது மாகும். அந்த வழிமுறையை சர்வதேச நிகழ்ச்சிப்போக்கும், காலமும் முழுமையாக உறுதிப்படுத்தியுள்ளன. நம்முடைய கட்சி மீதும், இதர கம்யூனிஸ்ட் கட்சிகளின் மீதும், 20, 21, 22-வது காங்கிரசுகளின் முடிவு களின் மீதும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டத்தின் மீதும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தொடுத்துள்ள தாக்குதல்கள் ஆதாரமற்றவை என்றும் அவதூறானவை என்றும் மத்திய கமிட்டியின் பிளீனக் கூட்டம் அழுத்தந்திருத்தமாக நிராகரித்தது; கட்சி முழுவதின் விருப்பத்தையும் பிரதிபலிக்கும் வகையில் சகோதரக் கட்சிகளை அய்க்கியப் படுத்தும் போக்கில், தற்பொழுது நிலவும் வேறுபாடுகளைப் போக்கிக் கொள்வது என்ற பாதையைத் தொடர்ந்து, முரணின்றிப் பின்பற்று வதற்குத் தயாராயிருப்பதாகவும், உறுதியுடனிருப்பதாகவும் பிரகடனப் படுத்தியது. மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகள், சோசலிச சர்வதேசி யம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கும், நம்முடைய பொதுவான இலட்சியத்திற்கான போராட்டத்தின் நன்மைக் காகவும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுக் கிடையில் சகோதர பூர்வமாக நட்புறவை பலப்படுத்துவதற்கும் நம்-முடைய கட்சி எதிர் காலத்திலும் பாடுபடும் என்று பிளீனக் கூட்டம் அறிவித்தது.

துரதிர்ஷ்டவசமாக, நம்முடைய நிதானத்தை, சீனத்தோழர்கள் தங்களுடைய சொந்த வழியிலேயே அர்த்தப்படுத்துகிறார்கள் என்பதை சமீபத்திய சம்பவங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. கம்யூனிச இயக்கத்தில் வேறுபாடுகள் கூர்மையடைவதைத் தவிர்க்க வேண்டுமென்ற நம்முடைய உளப்பூர்வமான அக்கறையை, சீனத்தலைவர்களின் கருத்துக்களை ரசிய கம்யூனிஸ்டுகளிடமிருந்தும், மக்களிடமிருந்தும் மறைக்கும் எண்ணம் கொண்டிருப்பதாக அவர்கள் சித்தரிக்கின்றனர். நம்முடைய நிதானத்தை பலவீனம் என்று தவறாக நினைத்துக்கொண்டுள்ள சீனத்

தோழர்கள், சகோதர பூர்வமான சோசலிச நாடுகளுக்கிடையில் நிலவ வேண்டிய நட்புபூர்வமான உறவுகளின் தரத்துக்கு மாறான முறையில், மேலும் மேலும் அதிகமான பிடிவாதத்துடனும், பலவந்தத்துடனும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் ஜுன் 14-ம் தேதிய கடிதத்தை ரசிய மொழியில் ஏராளமான பிரதிகளை அச்சிட்டு அவற்றை சட்ட விரோதமான முறையில் மாஸ்கோவிலும், இதர ரசிய நகரங்களிலும் பரப்புவதற்கு ஆரம்பித்துள்ளனர். இத்துடன் திருப்தியடையாமல், நம்முடைய கட்சியைத்தாக்கும் இந்தக் கடிதத்தினையும், இதர ஆவணங்களையும் உலகம் முழுவதிலும் இடைவிடாது பிரச்சாரம் செய்யவும், பரப்பவும் ஆரம்பித்தனர். அவற்றை வினியோகிப்பதற்கு ஏகாதிபத்தியப் பதிப்பகங்களையும் ஏஜென்ஸிகளையும் உபயோகப் படுத்திக் கொள்ளவும் அவர்கள் தயங்கவில்லை.

இத்தகைய நடவடிக்கைகள் எங்களுடைய நாட்டின் இறையாண்மையை முரட்டுத்தனமாக மீறுவதாகும் என்பதையும் இவற்றை அனுமதிக்க முடியாதென்பதையும் ரசிய அரசின் வெளிவிவகார அமைச்சரகம், ரசியாவிலுள்ள சீனத்தூதரின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, சீனப் பிரதிநிதிகள், அந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு மாறாக, ரசியாவில் அந்தக் கடிதத்தைத் தொடர்ந்து பரப்புவதற்குத் தங்களுக்கு உரிமை உண்டென்று ஆர்ப்பாட்டமான முறையில் பிரகடனப்படுத்தியது நிலைமையை மேலும் மோசமாக்கியது.

ஜுலை 7-ம் தேதியன்று - மாஸ்கோவில் பேச்சுவார்த்தைகள் ஏற்கெனவே ஆரம்பமாகிவிட்ட நிலையில் - எங்கள் கட்சியையும், ரசிய அரசாங்கத்தையும் தாக்கும் ஆவணங்களை சட்ட விரோதமாக வினியோகம் செய்ததற்காக ரசியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட சீனர்கள், பீகிங்கில் நடைபெற்ற பேரணி ஒன்றில் ''வீரர்கள்'' என்று சீன அதிகாரிகளால் வரவேற்கப்பட்டனர். சகோதரபூர்வமான சீன மக்களிடம் ரசியா மீது பகைமை பாராட்டும் மனோபாவங்களையும், உணர்ச்சிகளையும் உசுப்பிவிடும் நோக்கத்துடன் அந்த சீன அதிகாரிகள், அக்கூட்டத்தில், எங்கள் நாட்டின் இறையாண்மையையும், சர்வதேச உறவு சம்பந்தப்பட்ட நெறி முறைகளையும் மீறுவதற்குத் தங்களுக்கு உரிமையுண்டென்று நிரூபிப்பதற்கு முயன்றனர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஜுலை 10-ம்தேதியன்று விடுத்த மற்றொரு அறிக்கையில் இந்த நடவடிக்கைகளை நியாயப்படுத்தியது; ரசியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்குத் தங்களுக்கு உரிமையுண்டென்று வீம்புரிமை கொண்டாடியது. இயற்கையாகவே, ரசியா, இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இத்தகைய நடவடிக்கைகள், தவிர்க்க முடியாமல், உறவுகளை மேலும் சீர்கேடாக்கவே செய்யும்; தீமையைத்தவிர வேறொன்றையும் உருவாக்காது.

ஜூலை 13-ம் தேதியன்று பீகிங் 'மக்கள் தினசரி' தன்னுடைய தலையங்கக் கட்டுரையில் நம்முடைய கட்சியை மீண்டும் தாக்கியது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் ஜூன் 14-ம் தேதிய கடிதத்தை ரசியப் பத்திரிகைகள் வெளியிடாத விசயத்தைத் திரித்துத் தவறாகக் கூறியது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் வெளிப்படையான நட்பு பூர்வமற்ற நடவடிக்கைகள் - சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் வாதப் பிரதிவாதங்களைக் கூர்மையாக்குவதற்கு இடைவிடாது முயற்சிப்பது, எங்கள் கட்சியின் நிலையை வேண்டுமென்றே திட்டமிட்டுத் திரித்துக் கூறுவது, அக்கடிதத்தை வெளியிடுவதைத் தற்காலிகமாக நாம் நிறுத்தி வைத்ததின் நோக்கங்களைத் தவறாக விளக்கப்படுத்துவது ஆகியவை- 1963, ஜூன் 14-ம் தேதிய சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கடிதத்தையும், அதைப் பற்றிய எங்களுடைய மதிப்பீட்டையும் வெளி யிடும்படி எங்களை நிர்ப்பந்தம் செய்தன.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கடிதத்தைப் படிப்பவர் கள் அனைவரும், ஒற்றுமை, பிணைப்பு பற்றிய உன்னதமான சொற் றொடர்களுக்குப் பின்னால், எம் கட்சியின் மீதும், ரசிய நாட்டின் மீதும், நட்புறவற்ற அவதூறான தாக்குதல்கள் இருப்பதையும், ரசியாவில் கம்யூனிசத்தின் வெற்றிக்காகவும், உலகம் முழுவதிலும் சமாதானம், சோசலிசத்தின் வெற்றிக்காகவும் நம் மக்கள் நடத்தும் போராட்டத்தின் வரலாற்றுப் பூர்வமான முக்கியத்துவத்தைக் குறைத்துக் கூறும் முயற்சி கள், அடங்கியிருப்பதையும் காணமுடியும். இந்த ஆவணத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கெதிராகவும், ரசியாவுக்கு எதிராகவும் வெளிப்படை யானதும், மறைமுகமானதும் பல்வேறுவிதமான குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன. ''சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் மற்றும் உலக மக்கள் அனைவருடைய நலவுரிமைகளுக்குத் துரோகம்'', ''மார்க்சிய- லெனினியத்திலிருந்தும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திலிருந்தும் வழுவிச் செல்வது'', ''ஏகாதிபத்தியவாதிகளின் முன்னிலையில் கோழைத்தனம்'' என்று சூசகமாகக் கூறியது. ''வரலாற்று வளர்ச்சிப் போக்கில் பின்னோக்கி அடியெடுத்துவைப்பது'', ''பாட்டாளி வர்க்கத் தையும், சகல உழைப்பாளி மக்களையும் அமைப்பு ரீதியிலும் தார்மீக ரீதியிலும் நிராயுதபாணியாக்குவது'', நம்முடைய நாட்டில் ''முதலாளித் துவம் மீண்டும் உயிர்பெறுவதற்கு சேவை செய்வது'' என்பன போன்ற கம்யூனிஸ்டுகளுக்கு அவமதிப்பான, இழிவான கட்டுக் கதைகளை வெளி யிடுவதற்கு இந்தக் கடிதத்தை எழுதியவர்கள் தங்களை உள்ளாக்கிக் கொண்டுள்ளார்கள். மகத்தான லெனினுடைய கட்சியின் மீது, சோசலிசத் தின் தாயகத்தின் மீது, உலகத்தில் முதன் முதலில் ஒரு சோசலிசப் புரட்சியை நடத்திய மக்களின் மீது, சர்வதேச ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், உள்நாட்டு எதிர்ப் புரட்சிக்கெதிராகவும் நடத்திய வீரமிக்க போர்களில் கிடைத்த மகத்தான இலாபங்களை நிலைநிறுத்திய ஒரு

கட்சிமீது, கம்யூனிசத்தை நிர்மாணிப்பதற்கான போராட்டத்தில் அரிய வீர சாகசச் செயல்களைப் புரிந்து, கம்யூனிசத்திற்காக தியாகம் செய்த ஒரு கட்சி மீது, உலக உழைப்பாளி மக்களுக்குத் தங்களுடைய சர்வதேசக் கடமையை நேர்மையாக நிறைவேற்றிவரும் ஒரு கட்சி மீது இத்தகைய குற்றச்சாட்டுகளை அவர்கள் எப்படிக் கூறமுடியும்?

I

சுமார் அரை நூற்றாண்டாக ரசிய நாடு, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ், உலகம் முழுவதிலுமுள்ள உழைக்கும் மக்களின் சுதந்திரத்திற்காகவும், மகிழ்ச்சியான வாழ்விற்காகவும், மார்க்சிய-லெனினியக் கருத்துக்களின் வெற்றிக்காகவும் போராட்டத்தை நடத்திக் கொண்டு வருகிறது. சோவியத் அரசு ஏற்பட்ட ஆரம்ப நாட்களிலிருந்து, மகத்தான லெனின் நம் நாட்டின் தலைமைப் பொறுப்பிலிருந்த காலத்திலிருந்து இன்றைய நாள்வரை நம்முடைய மக்கள், ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் என்ற நுகத்தடியின் கீழிருந்து விடுதலை பெறவும் ஒரு புது வாழ்வை நிர்மாணிக்கவும் போராடிவரும் சகல நாட்டு மக்களுக்கும் மகத்தான, தன்னலமற்ற உதவியை அளித்துள்ளனர், அளித்து வருகின்றனர்.

இதர நாடுகளின் பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப அபிவிருத்திக்கு ஒரு நாடு இப்படிப்பட்ட பரந்த அளவில் உதவியளித்ததற்கான உதாரணங்கள் உலக வரலாற்றிலேயே கிடையாது.

தங்களுடைய தாயகத்தின் விடுதலைக்காகப் புரட்சிகரமான போராட்டம் நடத்தி வந்த கால கட்டத்திலும், பின்னர் சோசலிசத்தை நிர்மாணிக்கும் காலங்களிலும் ரசிய மக்களும் நம் கட்சியும் சகோதர பூர்வமான ஆதரவை சீன உழைக்கும் மக்களுக்கும், சீனக் கம்யூனிஸ்டுகளுக்கும் முழு அளவில் அளித்துள்ளனர்; மக்கள் சீனக் குடியரசு அமைக்கப்பட்டவுடனேயே, மக்கள் சீனாவின் அரசாங்கத்துடன் ரசிய அரசாங்கம் நட்புறவு, பரஸ்பர உதவி, மற்றும் கூட்டணி உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டது. இது ஏகாதிபத்தியத்தின் ஊடுருவல்களைத் திருப்பியடிக்கும் ஒரு பெரிய சாதனமாக அமைந்தது. தூரக்கிழக்கிலும், உலகம் முழுவதிலும் சமாதானத்தை உறுதிப்படுத்தும் ஒரு அம்சமாக விளங்கியது.

ரசிய மக்கள், சோசலிச நிர்மாணம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் பெற்ற தங்களுடைய நீண்ட கால அனுபவத்தை சீனச் சகோதரர்களுடன் தாராளமாகப் பங்கிட்டுக் கொண்டனர். மக்கள் சீனாவின் பொருளாதார அபிவிருத்திக்கு நம்முடைய நாடு கணிசமான உதவியை அளித்துள்ளது; அளித்து வருகிறது.

ரசியாவின் தீவிர உதவியுடன், மக்கள் சீனம் நவீன இயந்திரங்களுடன் கூடிய 198 தொழில் நிலையங்கள், பணிமனைகள், நிறுவனங்களை அமைத்துக் கொண்டுள்ளது. நம்முடைய நாட்டின் உதவியுடன், மோட்டார் உற்பத்தித் தொழில், டிராக்டர்கள், விமான உற்பத்தி, இன்னும் இதர புதிய தொழில்துறைகள் சீனாவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெரிய தொழில் அமைப்புகளில் 1,400-க்கும் அதிகமான கட்டுமானப் பணிகள் உட்பட, 21,000-க்கு மேற்பட்ட விஞ்ஞான, தொழில் நுட்ப ஆவணங்களை ரசியா மக்கள் சீனக் குடியரசுக்குக் கொடுத்துள்ளது. நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், ஒரு நவீன பாதுகாப்பு தொழிலரங்கத்தை ஏற்படுத்தவும் நாம் சீனாவிற்கு இடைவிடாது உதவியுள்ளோம். ஆயிரக்கணக்கான சீன நிபுணர்களும், தொழிலாளர்களும் ரசிய உயர்நிலைக் கல்விக் கூடங்களிலும் நம்முடைய தொழில் நிலையங்களிலும் பயிற்சி பெற்றுள்ளனர்.

தற்பொழுதும்கூட 88 தொழில் நிலையங்களையும், கட்டுமானப் பணிகளையும் நிர்மாணிப்பதில் ரசியா தொடர்ந்து மக்கள் சீனக் குடியரசுக்கு உதவி அளித்துக் கொண்டுவருகிறது. இவைகளையெல்லாம் தற்பெருமைக்காக நாங்கள் கூறவில்லை; ஆனால் சமீப காலமாக சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், ரசிய உதவியின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கூறுவதற்கு முயற்சி செய்வதாலேயே இதைக்கூற வேண்டியிருக்கிறது.

அது போலவே, ரசியா தனக்கு வேண்டிய பொருள்களை மக்கள் சீனக் குடியரசிடமிருந்து பெற்றுள்ளதையும் நாங்கள் மறக்கவில்லை.

சிறிது காலத்திற்கு முன்னர்தான் சீன மக்களுக்கும், ரசிய மக்களுக்கும் இடையிலுள்ள நட்புறவைப்பற்றியும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையிலான ஒற்றுமையைப் பற்றியும் சீனத் தலைவர்கள் நியாயமாகவும், மிகவும் விரிவாகவும் பேசினர்; ரசிய உதவியைப் பெரிதும் பாராட்டி, ரசியாவின் அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளும்படி தங்கள் மக்களுக்குக் கூறினர்.

1957-ல் தோழர் மாசேதுங் பின்வருமாறு கூறினார்: ''தேச விடுதலைக்கான போராட்டத்தின் போது, சீன மக்களுக்கு ரசிய மக்களின் சகோதர பூர்வமான அனுதாபமும், ஆதரவும் கிடைத்தது. சீனப் புரட்சியின் வெற்றிக்குப் பின் சீனாவில் சோசலிசத்தை நிர்மாணிக்கும் பணியில் ரசியா எல்லாவிதமான உதவிகளையும் அளித்து வருகிறது. சீன மக்கள் இதையெல்லாம் என்றும் மறக்க மாட்டார்கள்.''

சீனத் தலைவர்கள் இதை மறப்பதற்கு ஆரம்பித்துள்ளதைக் கண்டு வருந்த வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது.

ஒரு புதிய வாழ்வை நிர்மாணிப்பதில் மகத்தான சீன மக்களுக்கு கிடைத்த வெற்றிகளைக் கண்டு, நம்முடைய கட்சியும், சகல ரசிய மக்களும் குதூகலமடைந்தனர்; அதில் பெருமையும் கொண்டனர். மக்கள் சீனக் குடியரசின் 10-வது ஆண்டுவிழாவின்போது, பீகிங்கில் ஒரு வரவேற்பில் பேசுகையில் என். எஸ். குருச்சேவ் பின்வருமாறு கூறினார்.

''ஒரு நாட்டு மக்கள் தங்களுடைய கைகளில் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு விடுவார்களேயானால், அவர்களால் என்னென்ன சாதிக்க முடியுமென்பதை, தங்களுடைய புகழ்மிகு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ், வீரம் செறிந்த கடும் உழைப்பாளிகளான சீன மக்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர்...சீன மக்களின் வெற்றிகளை, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றிகளைத் தற்பொழுது அனைவரும் ஒத்துக் கொள்கின்றனர். ஒரு நாட்டு மக்கள் தங்களுடைய ஆக்க சக்திகளை, திறமைகளை எவ்வழியில், எந்த அமைப்பின் கீழ் முழுமையாக அபிவிருத்தி செய்ய முடியுமென்பதையும், தம்முடைய மகத்தான ஆக்க சக்தியை சகல பரிமாணங்களிலும் எப்பொழுது நடைமுறையில் காட்ட முடியுமென்பதையும் ஆசிய, ஆப்பிரிக்க மக்கள் பார்க்கின்றனர்.''

உலகக் கம்யூனிச இயக்கத்தின் பொதுவான இயக்கப்போக்கிலிருந்து சீனத் தலைவர்கள் தடம்புரள ஆரம்பிக்கும் வரையிலும் விசயங்கள் இப்படித்தான் இருந்தன.

1960ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், ''லெனினியம் நீடூழி வாழ்க!'' என்ற தலைப்பின் கீழ், கட்டுரைகளின் தொகுப்பு ஒன்றை வெளியிட்டதன் மூலம் சீனத் தோழர்கள் உலகக் கம்யூனிச இயக்கத்துடன் தங்களுடைய வேறுபாட்டை வெளிப்படையாகக் காண்பித்துக் கொண்டனர். லெனினுடைய பிரபலமான நூல்களிலிருந்து திரித்துக் கூறிய, அரைகுறையான, தவறான விளக்கம் செய்யப்பட்ட வரையறுப்புகளை அடிப்படையாகக் கொண்டதே இந்தத் தொகுப்பு நூல். இதில், 1957-ம் வருடத்திய மாஸ்கோ மாநாட்டு பிரகடனத்தின் அடிப்படைகளைத் தாக்கக்கூடிய வரையறுப்புகள் இருந்தன. மாஸ்கோ மாநாட்டின் பிரகடனத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர் மாசேதுங் கையொப்பமிட்டிருந்தார். ஆனால், அந்தத் தொகுப்பு நூலில் வேறுபட்ட சமூகஅமைப்புகளை உடைய நாடுகளின் சமாதான சகவாழ்வு என்ற லெனினியக் கொள்கைக்கு எதிரான, இன்றைய சகாப்தத்தில் ஒரு உலக யுத்தத்தை தவிர்க்கக்கூடிய சாத்தியக் கூறுகளுக்கெதிரான, சோசலிசப் புரட்சிகளுக்கு சமாதான வழி, சமாதான பூர்வமற்ற வழி ஆகிய இரண்டையும் உபயோகப்படுத்துவதற்கு எதிரான வரையறுப்புகள் இருந்தன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை அனைத்து சகோதரக் கட்சிகளின் மீதும் திணிப்பதற்கு முயற்சித்தனர். 1960 ஜூன் மாதத்தில், பீகிங்கில் நடைபெற்ற

உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின்பொதுச்சபைக் கூட்டத்தின்போது சகோதரக் கட்சிகளின் தலைமைக்குத் தெரியாமல், சீனத் தலைவர்கள் அப்பொழுது பீகிங்கில் இருந்த பல கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்ட மொன்றைக் கூட்டி, ரசிய கம்யூனிட் கட்சி மற்றும் இதர மார்க்சிய-லெனினிய கட்சிகளுடைய நிலைப்பாடுகளையும் 1957-ல் மாஸ்கோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தையும் பகிரங்கமாகவே குறைகூற ஆரம்பித்தனர். மேலும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியுடனும் இதர சகோதரக் கட்சிகளுடனும் தங்களுக்குள்ள வித்தியாசங்களை கட்சி சார்பற்ற ஒரு ஸ்தாபனத்தின் பகிரங்க மேடைக்கே எடுத்துச் சென்றனர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் சகோதரக் கட்சிகளிடையே ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தின. இதை முன்னிட்டு, 1960-ல் புகாரெஸ்டில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டத்தில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களுடன் வேறுபாடுகளை விவாதிப்பதற்கு ஒரு முயற்சி செய்யப்பட்டது. 50 கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள், சீனத் தலைவர்களின் கருத்துக்கள், அவர்களின் செய்கைகள் ஆகியவற்றை தோழமை பூர்வமாக விமர்சித்தனர்; மாஸ்கோ பிரகடனத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமை, ஒத்துழைப்பு என்ற பாதைக்குத் திரும்பும்படியும் வற்புறுத்தினர். துரதிர்ஷ்டவசமாக, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை, இந்தத் தோழமை பூர்வமான ஆலோசனையைப் புறக்கணித்துவிட்டது. தங்களுடைய தவறான பாதையையே, சகோதரக் கட்சிகளுடன் தங்களுக்குள்ள வேறுபாடுகளை ஆழப்படுத்தும் பாதையையே தொடர்ந்து கடைப்பிடித்தது.

சம்பவங்கள் அவ்வாறு வளர்ந்துகொண்டு போவதைத் தவிர்க்கும் பொருட்டு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான ஒரு ஆலோசனையை முன் வைத்தது. 1960 செப்டம்பரில் இந்தப் பேச்சுவார்த்தைகள் மாஸ்கோவில் நடைபெற்றன. ஆயினும் அப்பொழுதுகூட, சகோதரக் கட்சியின் அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுக்க சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக்குழு முரட்டுப் பிடிவாதமாக மறுத்ததால் ஏற்பட்டுள்ள வித்தியாசங்களைப் போக்கிக் கொள்வது சாத்தியமற்றதாயிற்று. 1960 நவம்பரில் நடைபெற்ற 81 கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தில், சகோதரக் கட்சிகளின் மிகப் பெரும்பான்மையினர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் தவறான கருத்துக்களையும், நிலைப்பாடுகளையும் நிராகரித்தனர். இந்தக் கூட்டத்தில் சீனத் தூதுக்குழு, தங்களுடைய சொந்தக் கருத்துக்களையே பிடிவாதமாகக் கூறினர்; தாங்கள் முழுமையாகத் தனிமைப் படுத்தப்பட்டுவிடும் அபாயம் ஏற்பட்ட போதுதான், மாநாட்டின் அறிக்கையில் கையொப்பமிட்டனர்.

1960-ம் வருட அறிக்கையில் சீனத்தலைவர்கள் கையொப்பமிட்டது வெறும் தந்திரம்தான் என்பது தற்பொழுது தெள்ளத்தெளிவாகிவிட்டது. அந்த மாநாட்டுக்குப் பின்னால் அவர்கள் தங்கள் கொள்கை வழிப் பிரச்சாரத்தை மீண்டும் தொடங்கினர். இதற்கு அல்பேனியத் தொழிலாளர் கட்சியின் தலைமையை அவர்கள் தங்களுடைய ஒலிபெருக்கியாக பயன்படுத்திக் கொண்டனர். நம்முடைய கட்சியின் முதுகுக்குப் பின்னால், அவர்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு எதிராகவும், ரசிய அரசாங்கத்துக்கு எதிராகவும் ஒரு இயக்கத்தைத் தொடங்கினர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் உறவுகளை சுமுகமாக்கிக் கொள்வதற்காக ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி 1961 அக்டோபரில் புதிய முயற்சிகளை மேற்கொண்டது. தோழர்கள் என். எஸ். குருச்சேவ், எப். ஆர். கோஸ்லோவ், ஏ. அய். மிகோயன் ஆகியோர் சூயென்-லாய், பெங்சன் மற்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசுக்கு வந்திருந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இதர முன்னணித் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மீது, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் நிலையை, தோழர் என். எஸ். குருச்சேவ், சீனப் பிரதிநிதிகள் குழுவின் முன் விபரமாக வைத்தார். இவைகளெல்லாம் 22-வது காங்கிரசில் விவாதிக்கப்பட்டவை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் நட்புறவையும், ஒத்துழைப்பையும் பலப்படுத்திக் கொள்ளவே நாம் எப்பொழுதும் விரும்புகிறோம் என்பதையும் தோழர் குருச்சேவ் வலியுறுத்தினார்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தன்னுடைய 1962 பிப்ரவரி 22, மே 31-ந் தேதிய கடிதங்களின் மூலம், கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமை பலவீனப்படுவதினால் நம்முடைய பொதுவான இலட்சியத்திற்கு ஏற்படும் அபாயகரமான விளைவுகளை, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கவனத்திற்குக் கொண்டு வந்தது. பின்னர் சீன-ரசிய பரஸ்பர உறவுகளில் எழுந்துள்ள பிரச்சினைகளை ஏகாதிபத்தியவாதிகள் தங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்புக் கொடுக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை சீனத் தோழர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் யோசனை கூறினோம். உட்கட்சி அரசியல் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது சர்வதேச ஜனநாயக அமைப்புகளிலும் இன்னும் இதர விசயங்களிலும் சகோதரக் கட்சிகளின் நிலைகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்துவது போன்ற பிரச்சினைகளில் மேலும் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஆலோசனை கூறியது.

ஆயினும் இந்த கடிதங்களுக்கும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் மக்கள் சீனக் குடியரசுடனும் சகல துறைகளிலும் உறவுகளை அபிவிருத்தி செய்து கொள்ளும் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட இதர நடவடிக்கை களுக்கும் பீகிங்கிலிருந்து சரியான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

கடந்த ஆண்டு இலையுதிர் காலத்தில், ரசியாவிலிருந்த சீனமக்கள் குடியரசின் அன்றைய தூதுவர் தோழர் லியூஷியோ, மாஸ்கோவிலிருந்து புறப்படுவதற்கு முன்னால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி யின் தலைமைக் குழு அவருடன் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தி யது. இந்த உரையாடலின் போது, மத்திய கமிட்டியின் தலைமைக் குழு உறுப்பினர்கள், சீன - ரசிய நட்புறவை பலப்படுத்தும் பிரச்சினையில் மீண்டுமொருமுறை முன் முயற்சி எடுத்துக் கொண்டனர். நம்முடைய கீழ்வரும் யோசனையை தோழர் மாசேதுங்கிடம் எடுத்துச் சொல்லுமாறு தோழர் என்.எஸ். குருச்சேவ், தோழர் லியூஷியோவைக் கேட்டுக் கொண்டார். ''எல்லாத் தகராறுகளையும் வேறுபாடுகளையும் ஒதுக்கித் தள்ளி விடுவோம். யார் தவறு, யார் சரி என்பதை நிலைநாட்டு வதற்கு முயற்சி செய்ய வேண்டாம். கடந்த காலத்தைக் கிளறிக் கொண்டிராமல் நம்முடைய உறவுகளை அப்பழுக்கற்ற முறையில் ஆரம்பிப்போம்'' என்பதே அந்தச் செய்தி. ஆனால் இந்த மனப்பூர்வ மான வேண்டுகோளுக்கு ஒரு பதில் கூட எங்களுக்கு வரவில்லை.

சகோதரக் கட்சிகளுடன் தங்களுக்குள்ள சித்தாந்த வேறுபாடுகளை ஆழப்படுத்தும் வகையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் அந்த வேறுபாடுகளை அரசாங்கங்களுக்கிடையேயுள்ள உறவுகளுக்கும் எடுத்துச் செல்ல ஆரம்பித்தனர். ரசியாவுடனும் இதர சோசலிச நாடு களுடனும் கொண்டிருந்த பொருளாதார வர்த்தக உறவுகளை சீன அரசு நிறுவனங்கள் குறைத்துக் கொள்ள ஆரம்பித்தன. மக்கள் சீனக் குடியரசு அரசாங்கத்தின் முயற்சியின் பேரில், ரசியாவுடன் சீனா நடத்தி வந்த வர்த்தகத்தின் அளவு, கடந்த மூன்று ஆண்டுகளில் அநேக மாக மூன்றிலொரு பங்காகக் குறைக்கப்பட்டது. தொழிற்சாலை இயந் திரங்கள் தருவிக்கப்படுவது நாற்பதில் ஒரு பங்காகக் குறைந்தது. இவை யாவும் சீனத் தலைவர்களின் முயற்சியின் பேரிலேயே செய்யப்பட்டன. மக்கள் சீனக் குடியரசின் தலைமை இப்படிப்பட்ட கொள்கையைக் கடைப் பிடிப்பதற்கு நாங்கள் வருந்துகிறோம். ரசிய-சீன உறவுகளை வளர்த்துக் கொண்டே போவதும், ஒத்துழைப்பை வளர்ப்பதும் அவசியம் என்று நாங்கள் எப்பொழுதும் போல இப்பொழுதும் நம்புகிறோம். இது இருதரப் பாருக்கும் நன்மையாக இருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக, ரசியாவிட மிருந்தும், இதர சோசலிச நாடுகளிடமிருந்தும் பெரிய அளவுக்கு உத வியைப் பெற்றுள்ள மக்கள் சீனத்திற்கு நன்மையாக இருக்கும். கடந்த காலத்தில் ரசியா, சீனாவுடன் பரந்த அளவில் உறவுகளை வளர்த்துக் கொண்டுள்ளது. இன்றும் கூட அந்த உறவுகள் மேலும்

விரிவாக்கப்பட வேண்டுமே தவிர குறைக்கப்படக் கூடாது என்று ரசியா விரும்புகிறது.

சோசலிச நாடுகளுடன் பொருளாதார உறவுகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை முதலில் கவனம் எடுத்துக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்றே யாரும் எதிர்பார்ப்பர். ஆயினும் அது நேர் எதிரான பாதையில் செயல்பட ஆரம் பித்தது. இத்தகைய நடவடிக்கைகளால் மக்கள் சீனக் குடியரசின் பொருளாதாரத்துக்கு ஏற்படும் பாதகத்தையும் அது பொருட்படுத்த வில்லை.

இந்த உறவுகள் குறுக்கப்பட்டதற்கு யார் பொறுப்பு என்கிற உண்மையை சீனத் தலைவர்கள் தங்கள் மக்களிடம் எடுத்துக் கூற வில்லை. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கையை அவதூறு செய்யும் நோக்கத்துடன் பரவலானபிரச்சாரத்தை சீனத் தலைவர்கள் நடத்தினர். சீனக் கம்யூனிஸ்டுகளிடையிலும், சீன மக்களிடையிலும் கூட ரசிய எதிர்ப்பு மனோபாவத்தைத் தூண்டிவிட ஆரம்பித்தனர்.

இந்தத் தவறான நடவடிக்கையை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, சீனத் தோழர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தது. ஏற்படும் தகராறுகள், வேறுபாடுகளின் அடிப்படையில் ஒரு கட்சியைப் புகழ்வதற்கும் அல்லது வேறு கட்சியை இகழ்வதற்கும் மக்களைத் தூண்டிவிடக் கூடாது என்று நாங்கள் சீனத் தோழர்களுக்கு கூறினோம். சகோதரக் கட்சிகளுக்கிடையில் வேறுபாடுகள் ஒரு தற்காலிக மான சம்பவமே என்பதும், ஆனால் அதே சமயம் சோசலிச நாடுகளின் மக்களுக்கிடையில் தற்பொழுது ஏற்படுத்தப்பட்டு வரும் உறவுகள் எல்லாக் காலத்திற்கும் நீடித்திருப்பதற்கானவை என்பதும் ஒவ்வொரு கம்யூனிஸ்டுக்கும் தெளிவாகத் தெரிந்த விசயம். ஆனால் சீனத் தலை வர்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தோழமை பூர்வமான எச்சரிக்கை களை ஒவ்வொரு தடவையும் புறக்கணித்தனர். சீன-ரசிய உறவுகளை மேலும் மேலும் மோசமாக்கினர்.

1961-ம் ஆண்டின் இறுதியிலிருந்து சர்வதேச ஜனநாயக அமைப்பு களில் சீனப் பிரதிநிதிகள் தங்களுடைய தவறான கருத்துக்களை பகிரங் கமாகவே திணிக்க ஆரம்பித்தனர். 1961 டிசம்பரில், உலக சமாதானக் கவுன்சிலின் ஸ்டாக்ஹோம் கூட்டத்தில், சமாதானத்திற்கும் படைபலக் குறைப்புக்குமான உலகக் காங்கிரஸ் ஒன்றைக் கூட்டுவதை சீனத்தூதுக் குழுவினர் எதிர்த்தனர். 1962-ம் வருடத்தில், உலகத் தொழிற்சங்க சம்மேளனம் உலக சமாதான இயக்கம், ஆசிய-ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு இயக்கம், உலக ஜனநாயகஇளைஞர் சம்மேளனம், சர்வதேச ஜனநாயக மாதர் சம்மேளனம் மற்றும் பல அமைப்புகளின் நடவடிக்கைகள் சீனப்

பிரதிநிதிகளின் பிளவுபடுத்தும் செயல்களின் விளைவாக அபாயத்திற் குள்ளாயின. அய்ரோப்பிய சோசலிச நாடுகளிலுள்ள ஆசிய-ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு கமிட்டிகளின் பிரதிநிதிகள் மோஷியில் நடைபெற்ற மூன்றாவது ஆசிய-ஆப்பிரிக்க ஒருமைப்பாட்டு மாநாட்டில் கலந்து கொள்வதை சீனப்பிரதிநிதிகள் எதிர்த்தனர். ''வெள்ளைக்காரர்களுக்கு இங்கே ஒன்றும் வேலையில்லை'' என்று சீனப் பிரதிநிதிகளின் தலைவர், ரசியப் பிரதிநிதிகளிடம் கூறினார். ஜாகர்த்தாவில் நடை பெற்ற பத்திரிகையாளர்கள் மாநாட்டில், ரசியப் பிரதிநிதிகள் முழு உரிமையுள்ள பிரதிநிதிகளாகக்கலந்து கொள்வதைத்தடுக்கும் பாதையை சீனப் பிரதிநிதிகள் பின்பற்றினர். ரசியா ஒரு ஆசிய நாடல்ல...என்று இதற்காக அவர்கள் வாதாடினர்.

சமீபத்திய உலக மாதர் காங்கிரசின் பெரும் பகுதியினரை பிளவு படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், தவறான அரசியல் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகவும் சீனத் தோழர்கள் குற்றம் சாட்டினர். ஆனால் அந்த காங்கிரசில், அனைத்துக் கண்டங்களின் மாதர்களுக்கு விடப்பட்ட வேண்டுகோள் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, காங்கிரசில் பங்கேற்ற 110 நாடுகளில் சீனா, அல்பேனியா ஆகிய இரண்டே இரண்டு நாடுகளின் பிரதிநிதிகள் மட்டும் எதிராக வாக்களித்தார்கள் என்பது விநோதமாகவும், ஆச்சரியமாகவும் இருக் கிறது. சுதந்திரத்தை நேசிக்கும் பல கோடிக்கணக்கான பெண்களின் இயக்கங்களும் தவறாக நடைபோடுகின்றன; இரண்டே இரண்டு மட்டும் சரியாக நடைபோடுகின்றன என்பதுதான் உண்மையா?

இதுதான், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியுடனும், இதர சகோதரக் கட்சி யுடனும், சீனத் தலைமை கொண்டிருக்கும் வேறுபாடுகளின் சுருக்கமான வரலாறு. சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களுடைய சொந்த தனிப்பட்ட வழிமுறையை, கம்யூனிச இயக்கத்தின் பொதுவழிக்கு எதிராக வைக்கிறார்கள் என்பதும், அதன் மீது அவர்களுடைய சொந்தக் கருத்துக்களைத் திணிக்க முயற்சிக்கிறார்களென்பதையும் இது காட்டு கிறது. நம் காலத்தின் கேந்திரமான பிரச்சினைகள் சம்பந்தமாக அவர் களின் கருத்துக்கள் மிகவும் தவறான கருத்துகளாக இருக்கின்றன.

II

ஒரு பக்கத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், மறுபக்கத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி, சர்வதேச கம்யூனிச இயக்கம் ஆகிய வற்றுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளின் முக்கிய அம்சம் என்ன? சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியினுடைய ஜூன் 14-ம் தேதிய கடிதத்தைப் படிப்பவர்கள் அனைவரும் சந்தேகமற இக் கேள்வியைக் கேட்பார்கள்.

எடுத்த எடுப்பில், அந்தக் கடிதத்தின் பல கூற்றுகள் ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். சீனத் தோழர்கள் உண்மையில் யாருடன் வாதம் செய்து கொண்டிருக்கிறார்கள்? உதாரணமாக சோசலிசப் புரட்சியை ஆட்சேபிக்கக் கூடிய கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்களா? அல்லது ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதையும் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதையும் தங்களுடைய கடமை என்று கருதாத கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்களா? இப்படிப்பட்ட கூற்றுகளை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதன் காரணமென்ன?

பல முக்கியமான பிரச்சினைகள் குறித்து சீனத் தோழர்கள் தங்களுடைய கடிதத்தில் முன்வைத்துள்ள நிலைகளை ஒத்துக்கொள்வது அசாத்தியமாய் உள்ளதேன் என்ற கேள்வியும் எழலாம். உதாரணமாக, யுத்தம்-சமாதானம் என்ற ஜீவாதாரமான பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். தன்னுடைய கடிதத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி சமாதானத்தைப் பற்றியும், சமாதான சகவாழ்வு பற்றியும் கூறுகிறது.

விசயத்தின் சாராம்சம் என்னவெனில், இன்றைய ஜீவாதாரமான பிரச்சினைகள் குறித்து மார்க்சிய-லெனினிய கட்சிகள் கொண்டுள்ள கருத்துக்களின் மீது தாக்குதல் ஆரம்பித்ததற்குப் பின்னால், சீனத் தோழர்கள், முதலாவதாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும் இதர மார்க்சிய-லெனினிய கட்சிகளும் என்றுமே கூறாத கருத்துக்களையும், அவர்களுக்கு அந்நியமான கருத்துக்களையும் அவை கூறியதாக குற்றம் சாட்டுகின்றனர்; இரண்டாவதாக, கம்யூனிச இயக்கத்தின் ஆவணங்களிலிருந்து எடுக்கப்பட்ட வரையறுப்புகளையும், கோட்பாடுகளையும் வார்த்தை அளவில் அங்கீகரிப்பதன் மூலம் தங்களுடைய தவறான கருத்துக்களையும், சரியில்லாத நிலைகளையும் மூடி மறைக்க முயற்சிக்கின்றனர்.

மக்களின் சமாதானத்திற்கான போராட்டம் வேறுபட்ட சமூக அமைப்புகளை உடைய நாடுகளின் சமாதான சகவாழ்வு, படை பலக் குறைப்பு ஆகியவற்றுக்கெதிராக வெளிப்படையாக வருவதென்பது, உலக முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்டுகள், சமாதானத்தை விரும்பும் மக்கள் ஆகிய அனைவரின் முன்பும் தங்களுடைய கொள்கையை அப்பட்டமாக அம்பலப்படுத்திக் கொள்வதும், அவர்களுக்கு எதிராக நிற்பதும் ஆகும். ஆகவே, வாதப் பிரதிவாதங்கள் வளர வளர, சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் நிலைகளின் பலவீனம் தெளிவாகத் தெளிவாக, அது இப்படிப்பட்ட உருமாறாட்டத்தை இன்னும் அதிக வெறித்தனத்துடன் மேற்கொள்கின்றது. சீனத் தோழர்களின் இந்த முறையைக் கருத்தில் கொள்ளாவிட்டால், வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு, தகராறு பண்டிதத் தன்மை அடைந்து விட்டதாகவும், ஜீவாதாரமான பிரச்சினைகளினின்றும் மிக மிக அப்பாலுள்ள தனிப்பட்ட சூத்திரங்கள்தான் தகராறிலுள்ள பிரச்சினைகளென்றும் தோன்றலாம்.

ஆயினும் உண்மையில், உலக மக்களின் ஜீவாதாரமான நலன்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்தான் தகராறின் மையமாக உள்ளன. அவையாவன-யுத்தம் மற்றும் சமாதானம் பற்றிய பிரச்சினைகள், உலக சோசலிச அமைப்பின் பாத்திரம் மற்றும் அதனுடைய வளர்ச்சி சம்பந்தப் பட்ட பிரச்சினைகள், ''தனிநபர் வழிபாடு'' பற்றிய சித்தாந்தம் மற்றும் நடைமுறை ஆகியவற்றிற்கெதிரான போராட்டம் சம்பந்தப்பட்ட பிரச் சினைகள், உலகத் தொழிலாளர் இயக்கத்தின் யுத்தத் தந்திரம், போர் தந்திரம் மற்றும் தேச விடுதலைப் போராட்டம் ஆகியவை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்.

வாழ்க்கையே இந்தப் பிரச்சினைகளை முன்னுக்கு வைக்கிறது. சோசலிச நாடுகளிலும், உலகம் முழுவதிலும் ஏற்பட்டுள்ள ஆழமான மாறுதல்கள், கடந்த வருடங்களில் சோசலிசத்திற்கும், ஏகாதிபத்தியத் திற்கும் இடையிலான பலாபலத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள், நம் இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ள புதிய வாய்ப்புகள் ஆகியவையே இந்தப்பிரச் சினைகளை எழுப்புகின்றன. உலக வளர்ச்சியின்தற்போதைய கட்டத்தின் நிலைமைகள், தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொது வழியை உருவாக்கிக் கொள்வதன் மூலம் கம்யூனிச இயக்கம் இந்தப் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்; பதில் சொல்லியும் உள்ளது.

இதில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ் ஒரு மகத் தான பங்கை ஆற்றியுள்ளது என்பது கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒரு மனதான அபிப்பிராயமாகும். இந்தக் காங்கிரஸ், கம்யூனிச இயக்கம் முழுவதின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தைத் தோற்றுவித்தது. இந்த மதிப்பீடு, 1957-ம் வருடத்திய பிரகடனத்திலும், 1960-ம் வருடத்திய அறிக்கையிலும் இடம் பெற்றுள்ளது. கூட்டுமுறையில் தயாரிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிகளின் இந்த ஆவணங்கள் நம்முடைய சகாப்தத்தில் கம்யூனிச இயக்கத்தின் பொதுவான அரசியல் கொள்கையை வரை யறுத்துக் கொடுத்தன.

ஆனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், அதற்கு எதிராக இப்பொழுது வேறு ஒரு பாதையை முன் வைக்கின்றனர். அடிப்படைப் பிரச்சினைகளில் கம்யூனிச இயக்கத்தின் பொதுவழியிலிருந்து அவர் களின் நிலைகள் மேலும் மேலும் தடம் புரண்டு செல்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக இது யுத்தம் மற்றும் சமாதானம் பற்றிய பிரச்சினையில் வெளிப்படுகிறது. யுத்தம்-சமாதானம் பற்றிய பிரச்சினை களின் மதிப்பீட்டிலும் அவைகளின் தீர்வுக்கான அணுகுமுறையிலும் எந்த வகையிலும் தெளிவற்ற தன்மையோ அல்லது தயக்கங்களோ இருக்க முடியாது. ஏனெனில் இது மக்களின் நல்வாழ்வு, மனிதகுலம் முழுவதின் எதிர்காலம் சம்பந்தப்பட்ட விசயமாகும்.

யுத்தம்-சமாதானம் ஆகிய பிரச்சினைகளில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை நம்முடனும், உலகக் கம்யூனிச இயக்கத்துடனும் கோட்பாடு ரீதியான அடிப்படை வேறுபாடுகள் கொண்டுள்ளனர் என்பதை சிறிதும் ஒளிவு மறைவின்றி கட்சிக்கும் மக்களுக்கும் சொல்ல வேண்டியது தன்னுடைய கடமை என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கருதுகிறது. ஒரு உலக அணு ஆயுத யுத்தத்தைத் தவிர்க்கும் சாத்தியக்கூறு, வேறுபட்ட சமூக அமைப்புகளை உடைய நாடுகளின் சமாதான சகவாழ்வு, சமாதானத்திற்கான போராட்டத்திற்கும் உலகப் புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிக்குமிடையிலான பரஸ்பர தொடர்பு போன்ற கேந்திரமான பிரச்சினைகளில் நேர் எதிரான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதுதான் இந்த வேறுபாடுகளின் சாரம்சமாகும்.

20-வது, 22-வது காங்கிரசுகளின் முடிவுகளில் நமது கட்சியும், பிரகடனத்திலும், அறிக்கையிலும் உலகக் கம்யூனிச இயக்கமும், சமாதானத்திற்காகப் போராடும் பணியை, ஒரு உலக அணு ஆயுதப் பேரழிவைத் தவிர்க்கும் பணியை மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த பணியாக கம்யூனிஸ்ட்களின் முன் வைத்தன. உலக சத்திகளின் பலாபலத்தை நாம் யதார்த்த பூர்வமாக மதிக்கிறோம். அதனால்தான் ஏகாதிபத்தியத்தின் தன்மை மாறாவிட்டாலும் கூட, யுத்தம் தோன்றும் அபாயம் தவிர்க்கப்படவில்லையென்றாலும்கூட, தற்கால நிலைமைகளில், சமாதான சக்திகள் தங்களுடைய கூட்டு முயற்சிகளின் மூலம் ஒரு புதிய உலகயுத்தத்தைத் தவிர்க்க முடியும்; என்றும் அதில் சோசலிச நாடுகளின் சக்தி வாய்ந்த முகாம், ஒரு பிரதான அடித்தளமாக விளங்கும் என்றும் முடிவுசெய்கிறோம்.

மேலும், யுத்தத்தை நடத்தும் சாதனங்களில் ஏற்பட்டுள்ள தீவிர, குணாம்ச ரீதியான மாறுதலையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் நாம் நிதானமாக மதிப்பிடுகிறோம்.

இந்நூற்றாண்டின் மத்தியில் உருவாக்கப்பட்ட அணு மற்றும் ஏவுகணை ஆயுதங்கள், யுத்தத்தைப் பற்றிய பழைய கருத்துக்களை மாற்றிவிட்டன. இந்த ஆயுதங்களுக்கு இதுவரை இல்லாத அளவு அழிவு சக்தி இருக்கிறது. ஒரே ஒரு சக்தி வாய்ந்த அணுகுண்டு (Thermo Nuclear Bomb) முதலாவது, இரண்டாவது உலக யுத்தங்கள் உட்பட இதற்குமுன்பு நடைபெற்ற சகல யுத்தங்களின் போதும் உபயோகப் படுத்தப்பட்ட எல்லா வெடி குண்டுகளின் வெடி சக்தியைக் காட்டிலும் அதிக அழிவு சக்தியுள்ளது என்பதே போதுமானது. அத்தகைய குண்டுகள் ஆயிரக்கணக்கில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆபத்தைப் புறக்கணிக்கும் உரிமை, கம்யூனிஸ்டுகளுக்கு உண்டா? ஒரு அணு ஆயுத யுத்தத்தின் விளைவுகளைப் பற்றிய முழு உண்மையையும் நாம் மக்களுக்குச் சொல்ல வேண்டாமா? சந்தேக

மில்லாமல் கண்டிப்பாகச் சொல்ல வேண்டுமென்று நாம் நம்புகிறோம். சீனத் தோழர்கள் அழுத்தமாகக் கூறுவதுபோல் இதனால் மக்களிடம் ''பெரிய பீதி'' ஏற்பட்டு விடாது. அதற்கு மாறாக, நவீனகால யுத்தத்தைப் பற்றிய உண்மை, சமாதானத்திற்காகவும், யுத்த அபாயத் திற்குக் காரணமான ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் போராடும் வகையில் மக்களின் சித்தத்தையும் சக்தியையும் திரட்டுகிறது.

ஒரு உலக அணு ஆயுத யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான மக்களின் போராட்டத்தை உருவாக்குவதும், அதற்குத் தலைமை வகிப்பதும் கம்யூனிஸ்டுகளின் வரலாற்றுக் கடமையாகும்.

ஒரு புதிய உலக யுத்தத்தைத் தவிர்ப்பது ஒரு யதார்த்தமான சாத்தியமான கடமையாகும். நம்முடைய காலத்தில் நாடுகளுக்கிடையில் தவிர்க்க முடியாமல் யுத்தம் ஏற்பட்டுத்தான் தீரும் என்ற நிலைமை யில்லை என்பது, நம் கட்சியின் 20-வது காங்கிரசின் மிகமிக முக்கியான முடிவாகும். இந்த முடிவு நல்லெண்ணங்களின் பயனாக உருவானது மட்டுமல்ல; உலக அரங்கில் உள்ள வர்க்க சக்திகளின் பலாபலத்தைப் பற்றி யதார்த்தபூர்வமான, கறாரான, விஞ்ஞானரீதியான பரிசீலனையின் விளைவும் ஆகும். உலக சோசலிசத்தின் பிரம்மாண்டமான வலிமையை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தப் பிரச்சினை சம்பந்தமான நம்முடைய கருத்துக்களை உலகக் கம்யூனிச இயக்கம் முழுவதும் ஏற்றுக் கொள்கிறது.

''ஒரு உலக யுத்தம் தவிர்க்கப்பட முடியும். உலகத்தில் சோசலிசத் தின் முழு வெற்றி ஏற்படுவதற்கு முன்பேகூட, உலகத்தின் ஒரு பகுதியில் முதலாளித்துவம் இருக்கும்போதேகூட, சமூகத்தின் வாழ் விலிருந்து உலக யுத்தத்தைத் தவிர்க்கும் ஒரு யதார்த்தமான சாத்தியப் பாடுதோன்றும்'', என்று கம்யூனிஸ்ட், மற்றும் தொழிலாளர் கட்சிகளின் அறிக்கை வலியுறுத்துகிறது.

இந்த அறிக்கையில் சீனத் தோழர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

ஆயினும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் நிலையென்ன? ஏகாதிபத்தியம் உள்ளவரை யுத்தங்கள் இல்லாமல் செய்ய முடியாது; சமாதான சக வாழ்வு என்பது ஒரு மாயை; அது சோசலிச நாடுகளின் அயல் நாட்டுக் கொள்கையின் பொதுவான கோட்பாடு அல்ல. சமாதானத்திற்கான போராட்டம் புரட்சிகரமான போராட்டத்திற்கு இடையூறு விளைவிக்கிறது. அவர்கள் முன்வைக்கும் இத்தகைய ஆய்வுரைகளின் பொருள் என்னவாக இருக்க முடியும்?

இந்த ஆய்வுரைக்கு அர்த்தம், சீனத் தோழர்கள், யுத்தம் சமாதானம் பற்றிய பிரச்சினைகளில் உலகக் கம்யூனிச இயக்கத்தின் பொதுவழிக்கு மாறாகச் செயல்படுகின்றனர் என்பதேயாகும். ஒரு புதிய உலக

யுத்தத்தைத் தடுக்கும் சாத்தியப் பாட்டில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. சமாதான, சோசலிச சக்திகளை அவர்கள் குறைவாக மதிப்பிடுகின்றனர். ஏகாதிபத்திய சக்திகளை மிகைப்படுத்தி மதிப் பிடுகின்றனர். ஆகவே, நடைமுறையில் யுத்த அபாயத்திற்கெதிரான போராட்டத்தில் மக்களைத் திரட்டுவதைப் புறக்கணிக்கின்றனர்.

யுத்த வெறியர்களின் திட்டங்களைநிர்மூலமாக்குவதிலும் நம்முடைய தலைமுறைக்கும் எதிர்காலத் தலைமுறைக்கும் சமாதானத்தை நிலை நாட்டுவதிலும், சோசலிச நாடுகளின் மக்கள், சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், அனைத்து ஜனநாயக மற்றும் சமாதானம் விரும்பும் சக்திகள் ஆகியவற்றின் திறமையில் சீனத் தோழர்களுக்கு நம்பிக்கையில்லை யென்றுதான் தெரிகிறது. சீனத் தோழர்களின் உரத்த புரட்சிகர சொற்பிரயோகங்களின் பின்னணி என்ன? தொழிலாளி வர்க்கத்தின் வலிமையிலும் அதன் புரட்சிகரமான திறமைகளிலும் நம்பிக்கையின்மை, சமாதான சகவாழ்வின் சாத்தியப்பாட்டிலும் வர்க்கப்போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் வெற்றியிலும் நம்பிக்கையின்மை ஆகியவையே. யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான போராட்டத்தில் அனைத்து சமாதானம் விரும்பும் சக்திகளும் அய்க்கியப்படுகின்றன. அவை வர்க்க உள்ளடக் கத்திலும் வர்க்க நலன்களிலும் வேறுபட்டவை. ஆனாலும் யுத்தத்தைத் தவிர்ப்பதற்கும், சமாதானத்திற்குமான போராட்டத்தில் அவைகளை அய்க்கியப்படுத்த முடியும். ஏனெனில், அணுகுண்டு, வர்க்கவேறுபாடு ஏதுமின்றித் தன்னுடைய பேரழிவு விளைவின் சுற்று வட்டத்திலுள்ள அனைவரையும் அழித்து விடுகிறது.

சீனத் தோழர்கள் முன் வைக்கும் பாதையில் செல்வதென்பது, சமாதானத்திற்காகத் தங்களுடைய தைரியமான விடாமுயற்சியான போராட்டத்தின் மூலம் மக்களின் அனுதாபங்களைப் பெற்றுள்ள கம்யூனிஸ்டு கட்சிகளிடமிருந்து சாதாரண மக்களை அந்நியப்படுத்துவ தாகும்.

பரந்த மக்கட்பகுதிகளின் மனதில் சோசலிசமும் சமாதானமும் தற்பொழுது பிரிக்க முடியாதவைகளாக இருக்கின்றன.

ஒரு அணு ஆயுத யுத்தத்தின் முழு ஆபத்தை சீனத் தோழர்கள் குறைத்து மதிப்பிடுகிறார்கள் என்பது வெளிப்படை. ''அணுகுண்டு ஒரு காகிதப்புலி'', அது ''ஒன்றும் அவ்வளவு பயங்கரமானதல்ல,'' என்று அவர்கள் கூறுகின்றனர். எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ஏகாதிபத்தியத்திற்கு முடிவு கட்டுவதுதான்

பிரதான வேலையென்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் இதை எப்படி சாதிப்பது, எவ்வளவு இழப்புகளுடன் இதை அடைவது என்பதை அவர்கள் இரண்டாம் பட்சப் பிரச்சினையாகக் கருதுகிறார்கள் என்றே தோன்றுகிறது. யாருக்கு இது இரண்டாம் பட்சப் பிரச்சினை என்று கேட்கலாம். ஒரு அணு ஆயுத யுத்தம் கட்டவிழ்த்து விடப்படுமே யானால் சாவுக்குழியில் விழக்கூடிய கோடிக் கணக்கான மக்களுக்கா? அத்தகைய ஒரு யுத்தத்தின் முதல் சில மணி நேரங்களிலேயே உலகின் பரப்பிலிருந்தே துடைத்தெறியப்பட்டுவிடக் கூடிய நாடுகளுக்கா?

கோடிக் கணக்கான மக்களின் உயிர்களுடன் விளையாடுவதற்கு யாருக்கும்—பெரிய நாடுகளுக்கும்கூட—உரிமையில்லை. மக்களின் வாழ்விலிருந்து உலக யுத்தத்தைத் தவிர்ப்பதற்கும், மக்கள் பெரும் எண்ணிக்கையில் அழித்தொழிக்கப் படுவதையும், மனித நாகரிகத்தின் மதிப்புகள் நிர்மூலமாக்கப் படுவதையும் தவிர்ப்பதற்கும் முயற்சி எடுக்காதவர்கள் கண்டனத்திற்குரியவர்களாவர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் ஜூன் 14-ம் தேதிய கடிதம், ஏதோ புரட்சியின் பெயரால், ''தவிர்க்கப்பட முடியாத தியாகங்கள்'' என்று கூறுகிறது. யுத்தத்தில் கோடிக் கணக்கான மக்களைத்தியாகம் செய்வது சாத்தியம் என்று சில பொறுப்புள்ள சீனத் தலைவர்கள் கூறியும் உள்ளனர்.

''வெற்றி பெற்ற மக்கள், ஒழிக்கப்பட்ட ஏகாதிபத்தியத்தின் அழிவின் மீது முதலாளித்துவ அமைப்பைக் காட்டிலும் ஓராயிரம் மடங்கு மேலான ஒரு நாகரிகத்தை அசாத்திய வேகத்துடன் தோற்றுவிப்பார்கள்; உண்மையாகவே ஒளிமிகுந்த தங்களுடைய எதிர் காலத்தைக் கட்டியமைப்பார்கள்'', என்று ''லெனினியம் நீடூழி வாழ்க!'' என்ற தொகுப்பில் அறுதியிட்டுக் கூறப்பட்டுள்ளது.

இது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு அணு ஆயுத ஏவுகணையுத்தம் எத்தகைய ''அழிவை'' விட்டுச் செல்லும் என்பதை நீங்கள் உணர்கிறீர்களா என்று சீனத் தோழர்களைப் பார்த்துக் கேட்கிறோம்.

கோடிக் கணக்கான மக்களின் பிணக்குவியலின் மீது ''ஆயிரம் மடங்கு உயர்வான நாகரிகத்தை'' உருவாக்குவது சம்பந்தமான சீனத் தலைமையின் கருத்துக்களுடன் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஒன்றுபடமுடியாது. இவ்விசயத்தில் கட்சி முழுமையும், ரசிய மக்கள் அனைவரும் எங்களை ஏகமனதாக ஆதரிக்கிறார்கள் என்பதில் எங்களுக்கு அய்யமில்லை. அப்படிப்பட்ட கருத்துக்கள் மார்க்சிய—

லெனினியக் கருத்துக்களுக்கு அடிப்படையிலேயே முரண்பட்டவை யாகும்.

ஏகாதிபத்தியத்தை அழிப்பதற்கு நீங்கள் என்ன வழி கூறுகிறீர்கள், என்று சீனத் தோழர்களைப் பார்த்து நாம் கேட்கிறோம். ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்துவத்தையும் ஒழிப்பதற்கு நாங்கள் முழுமையாக விரும்புகிறோம். முதலாளித்துவம் தவிர்க்க முடியாமல் அழியும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம் என்பது மட்டுமன்றி, இதை வர்க்கப் போராட்டத்தின் மூலம் சாத்தியமான அளவு விரைவில் சாதிப்பதற்காக அனைத்தையும் செய்து கொண்டுமிருக்கிறோம். இந்த வரலாற்று ரீதியான பிரச்சினையை முடிவு செய்ய வேண்டியது யார்? எல்லாவற்றுக்கும் முதலாவதாக, தன்னுடைய முன்னணிப் படையாகிய மார்க்சிய—லெனினிய கட்சியால் வழிகாட்டப்படும் தொழிலாளி வர்க்கமும், ஒவ்வொரு நாட்டின் உழைப்பாளி மக்களுமே இதை செய்ய வேண்டும்.

சீனத் தோழர்கள் முற்றிலும் மாறான ஒன்றைக் கூறுகின்றனர். ''ஒழிக்கப்பட்ட ஏகாதிபத்தியத்தின் சிதைவுகளின் மீது''—வேறு, வார்த்தைகளில் சொல்லவேண்டுமென்றால், யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதின் விளைவாக,—''ஒரு பிரகாசமான எதிர்காலம் நிர்மாணிக்கப் படும்'' என்று அவர்கள் வெளிப்படையாகவே கூறுகிறார்கள்.

இந்தக் கூற்றை ஏற்றுக் கொள்வதென்றால், உண்மையாகவே சமாதான சகவாழ்வுக் கொள்கைக்கு அவசியமில்லை; சமாதானத்தை பலப்படுத்துவதற்கான போராட்டத்திற்கு அவசியமில்லை. அப்படிப் பட்ட ஒரு முரட்டுத் துணிச்சலான பாதையை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. மார்க்சிய—லெனினியத்தின் சாரத்திற்கே அது முரணானது.

தற்கால நிலைமைகளில் ஒரு உலகயுத்தம், அணு ஆயுத யுத்தமாகத்தான் இருக்கும் என்பது எல்லோரும் அறிந்த விசயம். ஏகாதிபத்திய வாதிகள் தாங்களாகவே பின்வாங்கிச் செல்வதற்கு என்றும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். தங்கள் வசத்திலுள்ள சகல சக்திகளையும் உபயோகப்படுத்துவதற்கு முன்னால், தாங்களே விருப்ப பூர்வமாக தங்கள் சவப்பெட்டியில் போய்ப்படுத்துக் கொள்வதற்கு அவர்கள் என்றும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.

அணு ஆயுதத்தை ஒரு ''காகிதப்புலி'' என்று கூறும் நபர்கள், இந்த ஆயுதத்தின் நாச சக்தியைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள வில்லை என்றுதான் தோன்றுகிறது.

இதை நாம் நிதானமாகப் பரிசீலனை செய்கிறோம். நாமே அணு ஆயுதங்களை உற்பத்தி செய்கிறோம். போதிய அளவு உற்பத்தி செய்து உள்ளோம். அதனுடைய அழிவு சக்தியை நாம் மிகவும் நன்றாக உணர்ந்துள்ளோம்.

நமக்கு எதிராக ஏகாதிபத்தியம் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்குமே-யானால், இந்தக் கொடிய ஆயுதத்தை ஆக்கிரமிப்பாளரின் மீது உபயோகப்படுத்த நாம் தயங்க மாட்டோம். ஆனால், நாம் தாக்கப்படா விட்டால், இந்த ஆயுதத்தை முதலில் உபயோகப்படுத்துபவர்களாக நாம் இருக்க மாட்டோம்,

மார்க்சிய-லெனினியவாதிகள் நிரந்தரமான சமாதானத்தை உத்தர-வாதப்படுத்துவதற்கு முயற்சி செய்கிறார்கள். அதை ஏகாதிபத்தியத் திடமிருந்து கெஞ்சிக் கேட்பதின் மூலமும் அல்ல. ஆனால், புரட்சிகரமான மார்க்சிய-லெனினியக் கட்சிகளை ஒன்று திரட்டுவது; எல்லா நாடு களுடைய தொழிலாளி வர்க்கத்தையும் ஒன்று திரட்டுவது; தங்களுடைய விடுதலைக்கும் தேசிய சுதந்திரத்திற்கும் போராடிக் கொண்டிருக்கும் மக்களைத் திரட்டுவது; சோசலிச நாடுகளின் பொருளாதார, பாதுகாப்பு வலிமையை சார்ந்திருப்பது, ஆகியவற்றின் மூலமாகவே இதைச் சாதிக்க வேண்டும் என்று மார்க்சிய-லெனினியவாதிகள் கருதுகின்றனர்.

ஒரு அணு ஆயுத யுத்தத்தால் அழிக்கப்பட்ட பழைய உலகத்தின் அழிவின் மீது உன்னதமான எதிர் காலத்தைக் கட்டத் தயாராக உள்ள சீனத் தோழர்கள் - இந்த விசயம் பற்றி, ஏகாதிபத்தியம் ஆட்சியிலுள்ள நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தைக் கலந்தாலோசித்தார்களா? என்று கேட்க விரும்புகிறோம். ஏகாதிபத்தியவாதிகளை அழிக்கும் போது ஒரு யுத்தத்தை ஆரம்பித்து எங்களுடைய நாடுகளை அழிக்கும்படி நாங்கள் உங்களைக் கேட்கின்றோமா என்று முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தினர் நிச்சயமாக அவர்களிடம் கேட்பார்கள். ஏகபோக முதலாளிகளும், ஏகாதிபத்தியவாதிகளும் ஒப்பீட்டளவில் ஒரு சிறு கூட்டம்தான் என்பதும், அதே சமயத்தில் முதாளித்துவ நாடுகளின் மக்கள் தொகையில் மிகப்பெரும்பகுதி தொழிலாளி வர்க்கமாகவும், உழைக்கும் விவசாயிகளாகவும், உழைக்கும் அறிவு ஜீவிகளாகவும் தான் இருக்கிறார்கள் என்பதும் உண்மையல்லவா? அணுகுண்டு, ஏகாதிபத்திய வாதியையும், தொழிலாளி மக்களையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. அது பிரதேசங்களை அப்படியே எரிக்கிறது. எனவே, ஒவ்வொரு ஏகபோக முதலாளிக்கும் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் அழிக்கப்படு வார்கள். அப்படிப்பட்ட ''புரட்சிக்காரர்களைப் பார்த்து'' தொழிலாளி வர்க்கமும், தொழிலாளி மக்களும், நாங்கள் உயிருடன் வாழ்வது பற்றி யும் எங்களுடைய வர்க்கப்போராட்டம் பற்றியும் முடிவு எடுப்பதற்கு உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது? என்று கேட்பார்கள். நாங்களும் சோசலிசத்தை விரும்புகிறோம். ஆனால், அதை வர்க்கப்போராட்டத்தில் சாதிப்பதற்கு நாங்கள் விரும்புகிறோம். உலக யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலமாக அல்ல என்று கூறுவார்கள்.

சீனத்தோழர்கள் பிரச்சினையை முன்வைக்கும் விதம், முதலாளித் துவத்தை அழிப்பதற்கான போராட்டத்தில் இது வர்க்க அணுகுமுறை

அல்ல; ஆனால், வேறு ஏதோ முற்றிலும் மாறுபட்ட நோக்கங்களுக்கான தாக இருக்கும் - என்ற நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. சுரண்டல்காரர்கள், சுரண்டப்படுபவர்கள் ஆகிய - இருபகுதியினரும் பழைய உலகத்தின் இடிபாடுகளுக்குக் கீழே புதைக்கப்பட்டுவிடுவார் களேயானால் ''உன்னதமான எதிர் காலத்தை'' நிர்மாணிப்பது யார்?

இது சம்பந்தமாக, ''எல்லா நாடுகளின் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்'' என்ற அறைகூவலில் காணப்படும் வர்க்க, சர்வதேசக் கண்ணோட்டத்திற்குப் பதிலாக, ''மேற்கத்தியக் காற்றை மீறி, கிழக் கத்தியக் காற்று வீசுகிறது'' என்ற முழக்கத்தை சீனத் தோழர்கள் மூர்க்கமாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். இந்த முழக்கத்திற்கு எத்தகைய வர்க்க அர்த்தமும் கிடையாது.

சோசலிசப் புரட்சியைப் பற்றிய பிரச்சினைகளில் நம் கட்சி மார்க்சிய-லெனினிய வர்க்க நிலைகளை உறுதியாகக் கடைப்பிடிக்கிறது. நாம், ஒவ்வொரு நாட்டிலும் புரட்சிகள் தொழிலாளி வர்க்கத்தினாலும், உழைக்கும் மக்களாலும்—வெளியிலிருந்து இராணுவத் தலையீடு இல்லாமல்- நிறைவேற்றப்படுகின்றன என்ற கருத்துக் கொண்டுள்ளோம்.

ஏகாதிபத்திய வெறியர்கள் ஒரு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவார் களேயானால், மக்கள் முதலாளித்துவத்தை அழித்துப் புதைத்துவிடுவார் கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் மக்களின் பிரதிநிதி களாகிய கம்யூனிஸ்டுகள், சோசலிச மனிதாபிமானத்திற்காக உண்மை யாக நிற்பவர்கள்; கோடிக்கணக்கான மக்கள் அழியக்கூடிய மற்றொரு உலகப் போர் ஏற்படாமல் தடுப்பதற்குத் தங்களாலான எல்லாவற்றையும் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மக்களின் நலன்களை உண்மையாகவே உளப்பூர்வமாக நேசிக்கக் கூடிய எந்தக் கட்சியும், மற்றொரு உலக யுத்தத்தைத் தவிர்ப்பதற்கும், வேறுபட்ட சமூக அமைப்புகளை உடைய நாடுகளுக்கிடையில் சமாதான சுவாழ்வை உத்தரவாதம் செய்வதற்குமான போராட்டத்தில் தன்னுடைய பொறுப்பை உணரத் தவறக்கூடாது.

தோழர் என்.எஸ்.குருச்சேவ், நம் கட்சியின் கொள்கையை விளக்கிப் பின்வருமாறு கூறினார்: ''ஏகாதிபத்தியம் நீடிக்கின்ற வரையிலும், காலனியாதிக்கம் இருக்கின்ற வரையிலும், விடுதலைப் போர்கள் இருந்துதான் தீரும். இவையெல்லாம் புரட்சிகரமான யுத்தங்களாகும். இத்தகைய யுத்தங்கள் அனுமதிக்கப்படக் கூடியவை மட்டுமன்றி, தவிர்க்க முடியாதவையுமாகும்; ஏனெனில், காலனியாதிக்கக்காரர்கள் அவர்களாகவே மக்களுக்குச் சுதந்திரம் வழங்குவதில்லை. ஆகவே, ஆயுதமேந்திய போராட்டம் உட்பட, போராட்டத்தின் மூலமாக மட்டுமே மக்கள் தங்களுடைய விடுதலையையும், சுதந்திரத்தையும் பெற முடியும்''

தேச விடுதலை இயக்கத்திற்கு ரசியா மிகப் பரந்த ஆதரவைக்கொடுத்து வருகிறது. வியத்னாம், எகிப்து, ஈராக், அல்ஜீரியா, ஏமன், கியூபா இன்னும் இதர நாடுகளின் மக்களுக்கு நம் நாடு நடைமுறையில் அளித்துள்ள உதவி அனைவருக்கும் தெரிந்த விசயமே.

சமாதான சகவாழ்வு என்ற லெனினியக் கோட்பாட்டை ரசிய வெளிநாட்டுக் கொள்கையின் பொதுவழியாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பிரகடனப்படுத்தியது; சிறிதும் பிறழாமல் அதைக் கடைப்பிடித்துக் கொண்டும் வருகிறது. 1953-லிருந்து, குறிப்பாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்குப் பிறகு, நம்முடைய சமாதானக் கொள்கையின் செயல்பாடும், பொது மக்களுக்கு நன்மைபயக்கும் வகையில் சர்வதேச உறவுகளின் வழிமுறையின் மீதான அதன் செல்வாக்கும் மிகுந்த அளவுக்கு வளர்ந்துள்ளது.

''சமாதான சகவாழ்வு'' என்ற கொள்கை, ஏகாதிபத்திய நாடுகளுடன் மட்டுமல்லாது சோசலிச நாடுகளுடனும், அண்மையில் காலனியாதிக்க நுகத்தடியினின்றும் விடுபட்ட நாடுகளுடனும் கூட நாம் வைத்திருந்த உறவுகளின் சகல கோட்பாடுகளுக்கும் முடிவுகட்டி விடுகிறது. என்று சீனத் தோழர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அது உண்மையல்ல என்பது அவர்களுக்கே நன்கு தெரியும், சோசலிச நாடுகளுக்கிடையிலான உறவுகளில் நட்புறவும் தோழமையான பரஸ்பர உதவியும் மிகவும் முக்கியமான கோட்பாடு என்று முதன் முதலில் பிரகடனப் படுத்தியது நாம்தான் என்பதும், அதை உறுதியாகத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம் என்பதும், விடுதலையடைந்த நாடுகளுக்கு சகலவிதமான உதவிகளையும் அளித்துவருகிறோம்என்பதும் அவர்களுக்கு நன்றாகத்தெரியும். ஆயினும் அவர்கள், சில உள் நோக்கங்களுக்காக, இவற்றையெல்லாம் முற்றிலும் திரித்துத் தங்களுக்குச் சாதகமான விதத்தில் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

சமாதானம் மற்றும், சர்வதேசப் பாதுகாப்பிற்காகவும், பொதுவான மற்றும் முழுமையான படைக்குறைப்புக்காகவும், இரண்டாவது உலக யுத்தத்தின் மீத மிச்சங்கள் அகற்றப்படுவதற்காகவும், சகல சர்வதேசப் பிரச்சினைகளையும் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்வதற்காகவும் ரசியா இடைவிடாது நடத்தி வந்துள்ள போராட்டம் நல்ல பலனைத் தந்துள்ளது. உலக முழுவதிலும் நம்முடைய மதிப்பு எப்பொழுதையும் விட உயர்ந்து நிற்கிறது. நம்முடைய சர்வதேச நிலைமை முன்னெப் பொழுதையும் விட இன்று அதிக பலம் வாய்ந்ததாக இருக்கிறது. இதற்கு நாம் ரசியா மற்றும் பிற சோசலிச நாடுகளின் உறுதி வாய்ந்த பொருளாதார, இராணுவ வளர்ச்சிக்கும் அவற்றின் சமாதான பூர்வமான வெளிநாட்டுக் கொள்கைக்கும் கடமைப்பட்டுள்ளோம்.

வேறுபட்ட சமூக அமைப்புக்களைக் கொண்ட அரசுகளிடையே ''சமாதான சக வாழ்வு'' என்ற லெனினியக் கொள்கையை நாங்கள்

கடைப்பிடித்து வந்துள்ளோம்; இப்போதும் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம்; தொடர்ந்து கடைப்பிடிப்போம் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி பிரகடனப்படுத்துகிறது. இதில், ரசிய மக்களுக்கும் இதர எல்லா நாடுகளின் மக்களுக்கும் நாம் ஆற்ற வேண்டிய கடமை இருக்கிறது என்று நம்முடைய கட்சி கருதுகிறது. சமாதானத்தை உறுதிப்படுத்துவது, சோசலிச அமைப்பு உறுதிப்படுவதற்கு மிகவும் பயனுள்ள முறையில் உதவுவதாகும்; அதன் பயனாக விடுதலைப் போராட்டத்தின் பாதை முழுவதின் மீதும், உலகப் புரட்சி இயக்கத்தின் மீதும் அதனுடைய செல்வாக்கு அதிகரிப்பதற்கும் உதவி செய்வதாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர மார்க்சிய-லெனினிய கட்சிகளின் கருத்துக்களுக்கும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் கருத்துக்களுக்கும் இடையில், யுத்தம்-சமாதானப் பிரச்சினையிலும், சமாதான சகவாழ்வுப் பிரச்சினையிலும் உள்ள ஆழமான வேறுபாடு, 1962-ல் கரிபியன் கடல் நெருக்கடியின் போது மிகவும் தெளிவாகத் தெரிந்தது. அது ஒரு கூர்மையான சர்வதேச நெருக்கடி; கடந்த ஆண்டு அக்டோபரில் ஏற்பட்டது போல் ஒரு அணு ஆயுத யுத்தத்தின் விளிம்புக்கு மிக அருகாமையில் மனித வர்க்கம் முன்னெப்பொழுதும் வந்ததில்லை.

கரிபியன் நெருக்கடியின் போது, கியூபாவுக்கு ஏவுகணைகளை வழங்கியதன் மூலம் நாம் ''முரட்டுத் துணிச்சல்'' தவறைச் செய்ததாகவும் பின்னர், அந்த ஏவுகணைகளை கியூபாவிலிருந்து திரும்பப் பெற்றுக் கொண்ட போது, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ''சரணாகதி'' அடைந்ததாகவும் சீனத்தோழர்கள் குற்றம்சாட்டுகின்றனர். (இத்தகைய குற்றச்சாட்டுகள் 1963, மார்ச் 8-ந் தேதிய மக்கள் தினசரி பத்திரிகையில் ''அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையின் மீது'' என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டுள்ள தலையங்க கட்டுரையில் கூறப்பட்டுள்ளன.)

இத்தகைய கூற்றுகள் உண்மைக்கு நேர்முரணானவை.

உண்மையான நிலைமை என்ன? அமெரிக்க ஏகாதிபத்தியம் விரைவில் கியூபா மீது ஆயுதந்தாங்கிய ஆக்கிரமிப்பு நடத்தப்போகிறது என்ற தகவல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கும் ரசிய அரசாங்கத்திற்கும் முன் கூட்டியே கிடைத்தது. ஆக்கிரமிப்பை முறியடித்து, கியூபா புரட்சியை வெற்றிகரமாகப் பாதுகாப்பதற்காக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று தெளிவாக உணர்ந்தோம். கண்டிப்புகளும். எச்சரிக்கைகளும்—சொல்லப்போனால் 250 தடவைகள் விடப்பட்ட கடுமையான எச்சரிக்கைகளும்—ஏகாதிபத்தியவாதிகளிடம் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை.

கியூபா புரட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்ற அவசியத்தின் அடிப்படையில், ரசிய அரசும் கியூபா அரசும் கியூபாவில் ஏவுகணைகள்

வைத்திருப்பது சம்பந்தமான உடன்பாட்டிற்கு வந்தன; ஏனெனில், அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பு நடத்துவதைத் தடுப்பதற்கு இது ஒன்றே உறுதியான நடைமுறையாக இருந்தது. கியூபாவுக்கு ஏவுகணைகள் அனுப்பி வைத்ததன் மூலம் கியூபாவை ஆக்கிரமிப்போர் மீது ஏவுகணை ஆயுதங்களைப் பயன்படுத்தி கடுமையான எதிர்த் தாக்குதல் நடத்தப்படும் என்பது எடுத்துக்காட்டப்பட்டது. ரசியாவும் கியூபாவும் இத்தகைய உறுதியான நடவடிக்கை எடுத்தது, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அதிர்ச்சியைத் தந்தது; கியூபா மீது ஆயுதந்தாங்கிய படையெடுப்பு நடத்தினால் அவர்களுடைய சொந்த பிரதேசத்தை தகர்த்துவிடக்கூடிய அளவில் பதிலடி கிடைக்கும் என்பதை வரலாற்றி லேயே முதல் தடவையாக அவர்கள் உணரும்படி செய்யப்பட்டது.

இது, அமெரிக்காவுக்கும் கியூபாவிற்கும் இடையிலான மோதல் மட்டுமல்ல; ஆனால், இரு அணுசக்தி வல்லரசுகளிடையிலான மோதல் என்பதால், கரிபியன் கடற்பிரதேசத்தில் ஏற்பட்ட நெருக்கடி ஓர் உலக நெருக்கடியாக மாறியிருக்கும். உலக ரீதியாக ஓர் அணு ஆயுத யுத்தத் திற்கான அபாயம் எழுந்தது.

அப்போதைய நிலைமையில் இரண்டு சாத்தியப்பாடுகள்தான் இருந் தன. ஒன்று, காட்டுமிராண்டிகளின் (அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மிக வும் ஆக்கிரமிப்பு வெறிகொண்ட பிற்போக்காளர்களின் பிரதிநிதிகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர்.) வழியில்உலக அணுஆயுதப்போரைக் கட்டவிழ்த்துவிடும் பாதையில் இறங்குவது; மற்றொன்று ஏவுகணை கள் அனுப்புவதற்குக் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு, நெருக்கடிக்குச் சமாதானப் பரிகாரம் காணும் உடன்பாட்டிற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பது; கியூபா குடியரசின் மீது ஆக்கிர மிப்பு ஏற்படாமல் தவிர்ப்பது.

நாம் இரண்டாவது பாதையினைத் தேர்ந்தெடுத்தோம் என்பது எல்லோருக்கும் தெரியும். சரியானதையே செய்திருக்கிறோம் என்பதில் எங்களுக்குச் சிறிதும் அய்யமில்லை. இந்த விசயத்தில் நமது மக்கள் அனைவரும் ஒருமுகமான ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள் என்பதில் நமக்கு நம்பிக்கை உண்டு. தமது நலன்களைக் காத்துக்கொள்வது எப்படி என்பதையும், புரட்சியின் இலட்சியத்தைப் பாதுகாப்பது எப்படி, சோசலிசத்தின் நோக்கத்தைப் பாதுகாப்பது எப்படி என்பதையும் பல தடவை ரசிய மக்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். யுத்தத்தின் விளைவாக எத்தனை துன்பமும் துயரமும் ஏற்படும், எத்தனை கஷ்டங் களையும், தியாகங்களையும் மக்கள் தாங்க வேண்டியிருக்கும் என்பதை அவர்களைப்போல அந்த அளவுக்கு வேறு யாரும் அறிந்திருக்க முடியாது.

கியூபாவைப் படையெடுத்துத் தாக்குவதில்லை; தனது கூட்டாளி நாடுகளும் இதில் ஈடுபடா என்று அமெரிக்க அரசு வாக்குறுதி அளித்த

தற்குப்பிறகு ஏவுகணைகளை அகற்ற செய்துகொண்ட உடன்பாடு, கியூபா மக்களின் வீரஞ்செறிந்த போராட்டம், சமாதானத்தை விரும்பும் நாடுகள் கியூபாவிற்கு அளித்த ஆதரவு ஆகியவற்றின் காரணமாக முழு மூச்சுடன் யுத்தத்தில் இறங்கத் தயாராக இருந்த முரட்டுத் துணிச்சல் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களை முறியடிப்பது சாத்திய மாயிற்று. இதன் விளைவாக புரட்சிகர கியூபாவைப் பாதுகாக்க முடிந்தது. சமாதானத்தைக் காப்பாற்ற முடிந்தது.

கென்னடி அரசாங்கமும் கியூபா பிரச்சினை பற்றி எழுந்த நெருக்கடியில் ஓரளவு நியாயத்தைக் காட்டியுள்ளது, யதார்த்த உணர்வுடன் அணுகியிருக்கிறது என்று நமது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை ''ஏகாதிபத்தியத்தை சிங்காரித்து அழகு செய்வதாக'' சீனத் தோழர்கள் கருதுகிறார்கள். முதலாளித்துவ அரசுகள் எல்லாம் அவை செய்யும் எல்லாச் செயல்களிலும் முழுதும் நியாயமில்லாமலே நடந்துகொள்கின்றன என்று சீனத்தோழர்கள் நினைக்கிறார்களா?

ரசியாவின் தீரமும் தொலைநோக்கும் கொண்ட கொள்கை, வீரஞ்செறிந்த கியூபா மக்களின் ஊக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றின் மூலமும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு சக்திகளை ஒடுக்கி யுத்த ஆதரவாளர்கள் மீது சமாதானத்தைத் திணிக்க முடியும் என்பதை சோசலிச, சமாதான சக்திகள் நிருபித்துக் காட்டியுள்ளன. இது நியாயமான கொள்கைக்கும் சமாதான சோசலிச சக்திகளுக்கும் கிடைத்த பெரும் வெற்றியும், ஏகாதிபத்திய சக்திகளுக்கும் யுத்த சூதாட்ட கொள்கைகளுக்கும் கிடைத்த தோல்வியுமாகும்.

இதன் விளைவாக, புரட்சிகர கியூபா சமாதானமாக வாழ்கிறது. புரட்சிகர அய்க்கிய சோசலிச கட்சியின் தலைமையில், மக்கள் தலைவரான தோழர் பிடல்காஸ்ட்ரோவின் தலைமையில் கியூபா சோசலிசத்தைக் கட்டி வளர்த்து வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதியுடன் உடன்பாடு ஏற்பட்டு, கரிபியன் பகுதியில் நெருக்கடியை ஒழிக்க ஆரம்ப முயற்சிகள் நடைபெற்றபொழுது ''எந்த விசயத்திலும் ஏகாதிபத்தியவாதிகளை நம்பக்கூடாது'' என்று வாதித்த சீனத் தோழர்கள் ரசியாவை இழிவுபடுத்தியும் அவமதித்தும் வந்தார்கள்.

இரு உலகங்கள், இருவேறு அமைப்புகள், சோசலிசம் ஏகாதிபத்தியம் —இவை நிலவும் கால கட்டத்தில் நாம் வாழ்கிறோம். இந்த இரு அமைப்புகளிலுமுள்ள நாடுகளிடையே உள்ள உறவில் தவிர்க்க முடியாதபடி எழும் பிரச்சினைகள் அனைத்தையும் ஆயுத பலத்தைக் கொண்டு (போராடி) தான் தீர்த்துக்கொள்ள வேண்டும்; பேச்சுவார்த்தைகளுக்கும் உடன்பாடுகளுக்கும் இடமே இல்லையென்று நினைப்பது முற்றிலும்

அபத்தமாகும். அப்படியானால் யுத்தங்களுக்கு முடிவே இருக்காது. அத்தகைய அணுகு முறையை நாம் நிராகரிக்கிறோம்.

எந்த விசயத்திலும் ஏகாதிபத்தியவாதிகளை நம்பக் கூடாது; அவர்கள் நிச்சயமாக ஏமாற்றிவிடுவார்கள் என்று சீனத் தோழர்கள் விவாதிக்கிறார்கள். ஆனால் இது வெறும் நம்பிக்கைப் பிரச்சினையல்ல, அறிவுத் தெளிவுடன் கணக்கிட்டுப் பார்க்க வேண்டிய ஒன்று. கரிபியன் பகுதியில் நெருக்கடிநிலை அகற்றப்பட்டு எட்டு மாதங்களாகிவிட்டன. அமெரிக்க அரசு தன் வாக்கைக் காப்பாற்றி வருகிறது; கியூபா மீது படையெடுக்கவில்லை. நாமும் கியூபாவிலிருந்து ஏவுகணைகளை அகற்ற வாக்களித்தோம்; அதை நிறைவேற்றியுள்ளோம்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தமது வாக்குறுதிப்படி நடக்காமல் கியூபா மீது படையெடுத்தால், நாம் கியூபா மக்களின் உதவிக்கு வருவோம் என்று வாக்குறுதி அளித்திருக்கிறோம் என்பதையும் மறந்துவிடக் கூடாது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிப்புச் செய்தால், நாம் கியூபா பிரதேசத்திலிருந்தே எவ்வாறு கியூபா மக்களுக்கு உதவியாகப் போயிருப்போமோ, அதே வகையில் ரசியப் பிரதேசத்திலிருத்தும் உதவிக்கு வருவோம் என்பதை நிதான புத்தியுள்ள எவரும் நன்றாகப் புரிந்து கொள்வார்கள். இந்த விசயத்தில் ஏவுகணைகள் சற்று நீண்ட தூரம் பறந்துசெல்ல வேண்டியிருக்கும் என்பது உண்மையே; ஆயினும், அவற்றின் குறி தப்பாது.

ரசியாவின் கொள்கை சகோதர ஒருமைப்பாட்டுக் கொள்கை, உண்மையான சர்வதேச கொள்கை என்று கியூபா புரட்சியின் தலைவர்களே மதிப்பீடு செய்திருக்கும்போது அதை சீனத் தோழர்கள் பிடிவாதமாக 'கண்டுகொள்ளாமலிருப்பதற்கு காரணமென்ன? எதைப் பற்றிச் சீனத் தலைவர்கள் அதிருப்திப்படுகிறார்கள்? கியூபா மீது படையெடுக்கப்படுவதையும், உலக யுத்தம் கட்டவிழ்த்து விடப்படுவதையும் தடுப்பது சாத்தியமாகிவிட்டது என்ற உண்மை பற்றியா?

கரிபியன் நெருக்கடியின்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் நடவடிக்கை எந்த வழியில் இருந்தது? இந்த நெருக்கடியான சமயத்தில் சீனத் தோழர்கள் தமது சொந்த நிலைமையிலிருந்து, ரசிய அரசு எடுத்துக்கொண்ட யதார்த்தமான உறுதியான முடிவை எதிர்த்தார்கள். தமது சொந்தக் கருத்துக்களால் வழி நடத்தப்பட்டு வந்த அவர்கள், தமது கண்டனத் தீயினை, ஆக்கிரமிப்பு செய்த அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஏவவில்லை; மாறாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மீதும் ரசியா மீதும் தொடுத்தார்கள்.

எந்த நேரத்திலும் ஏகாதிபத்தியம் ஓர் உலக யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிடும் என்று வாதம் செய்துவந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சித்

தலைமை மிக மிக இக்கட்டான நிலைமையில் உடன் சேர்ந்து போராடும் நண்பன், தோழன் என்ற நிலையில் இல்லாமல் ஒரு விமர்ச கனின் நிலையைக் கைக்கொண்டது, கியூபா புரட்சியைப் பாதுகாப்ப தற்கு அவர்கள் நடைமுறையில் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள் என்பது பற்றி சீனத் தலைவர்கள் எவ்வித அறிக்கையும் விடுத்ததாக யாருமே கேள்விப்படவில்லை. இதற்கு மாறாக கரீபியன் பகுதியில் ஏற்கனவே இருந்த நெருக்கடியான நிலைமையை மேலும் உக்கிரப்படுத்த சீனத் தலைவர்கள் பாடுபட்டது தான் உண்மை. இது, போர்த்தீக்கு மேலும் எண்ணெய் வார்ப்பதாக இருந்தது.

யுத்தம், சமாதானம் என்ற பிரச்சினையில் படைபலக் குறைப்புக் கான போராட்டத்தை முற்றிலும் குறைத்து மதிப்பிடுவது மட்டுமல்லா மல் வேண்டுமென்றே அசட்டை செய்வதில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் உண்மையான நிலை மிகத் தெளிவாக வெளிப்பட்டது. இந்த பிரச்சினையைக் கம்யூனிஸ்டுகள் எழுப்புவதையே தவறு என்று சீனத் தோழர்கள் ஆட்சேபிக்கிறார்கள்; இது மட்டுமா? மார்க்சிய-லெனி னிய மேற்கோள்களை எல்லாம் புரட்டி ஒருபுறம் படைபலக் குறைப்பு என்பது ''நடைமுறை சாத்தியமல்ல'' என்றும் மறுபுறம் அது தேவை யில்லாதது என்றும் எல்லா வழிகளிலும் நிரூபிக்க கிளம்பிவிட்டார்கள். மேற்கோள்களைக் கையாண்டு ஜாலவித்தை நடத்தி, உலக முழுவதிலும் சோசலிசம் வெற்றி பெற்றால்தான் பொதுவான படைபலக் குறைப்பு சாத்தியம் என்பதை நிரூபணம் செய்வதற்கு அவர்கள் முயல் கிறார்கள்.

ஆயுதப் போட்டி என்ற இடுக்கியில் அகப்பட்டு மனித வர்க்கம் மூச்சுத் திணறும்போது, அணுசக்தி ஆயுதங்களைக் குவித்துவரும் ஏகாதி பத்தியவாதிகள் மனிதவர்க்கத்தை உலக யுத்தம் என்ற பாதாளப் படு குழியில் தள்ளுவதற்கு அச்சுறுத்தி வரும் சமயத்தில் உலக முழுவதிலும் சோசலிசம் வெற்றிபெறும் வரையிலும் மார்க்சியவாதிகள் காத்துக் கிடக்க வேண்டுமா?

இப்போக்கு காலத்தின் அவசர அறைகூவலின் முன்பு குற்றகர மான முறையில் செயலற்றுக் கிடப்பதாகும்.

இந்த உண்மையை நீண்ட நெடு நாட்களுக்கு முன்பே மக்களிடத்து தமது பொறுப்பை உணர்ந்த உண்மையான எல்லா மார்க்சிய-லெனினிய வாதிகளும் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே பல ஆண்டு களாக, பொதுவானதும் முழுமையானதுமான படைபலக் குறைப்புக்கா கவும், அணு ஆயுத சோதனைகளைத் தடை செய்யவும், அணு ஆயுதங் களைத் தடை செய்யவும் கோரி இடைவிடாது உறுதியுடன் போராடி வந்துள்ளார்கள். இனிமேலும் போராடி வருவார்கள்.

சமாதானத்திற்காக போராடும்போதும், முழுமையான படை பலக் குறைப்பு வேண்டும் என்ற முழக்கத்தை முன்வைக்கும் பொழுதும் நாம் மக்களின் உயிர் நாடியான நலவுரிமைகளை ஒட்டியே செல்கிறோம்; யதார்த்த நிலையினைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறோம்; இடையூறு களைப்பற்றி கண்ணை மூடிக்கொண்டிருப்பதில்லை. படைபலக் குறைப்பு பற்றிய உடன்பாடு ஏற்படாமல் கால தாமதம் செய்யவும், இம் முயற்சி களைக் குலைக்கவும் ஏகாதிபத்தியவாதிகள் எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறார்கள். இது இயல்பே. இதனால் அவர்களுக்கு இலாபம் உண்டு. இவர்கள் ஆயுதப் போட்டியைப் பயன்படுத்தித் தமது செல் வத்தைப் பெருக்கிக் கொள்கிறார்கள். முதலாளித்துவ நாடுகளிலுள்ள மக்களை அச்சுறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால், நாமும் இந்த நீரோட்டத்தில் செல்ல வேண்டுமா? சமாதானத்திற்கும் படை பலக் குறைப்புக்கும் போராடும் சகல சக்திகளையும் திரட்டுவதை நாம் மறுத்து விட்டு ஏகாதிபத்தியத்தின் வழியில் செல்ல வேண்டுமா?

இல்லை. இதைச் செய்வது, ஆக்கிரமிப்பு சக்திகள், இராணுவ வெறி யர்கள் மற்றும் ஏகாதிபத்தியவாதிகளிடம் சரணாகதியடைவதாக இருக் கும். தொழிலாளி வர்க்கமும் எல்லா நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக் களும் ஏகாதிபத்தியவாதிகளை நிர்ப்பந்தித்து படைபலக் குறைப்புக்குச் சம்மதிக்கச் செய்யும்படியும், யுத்தத்தைக் தடுக்க முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக தொழிலாளி வர்க்கம் தனது பலத்தை உணர்ந்து இதற்காக ஒன்று சேரவேண்டும்.

உலகத் தொழிலாளி வர்க்கத்தின், அமைப்பு ரீதியான பலத்தை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏகாதிபத்திய யுத்தவெறி சக்திகளுக்கு ஏற்பட்டுள்ளது. ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கு சோசலிச நாடு களின் இராணுவ வலிமை மற்றும் பொருளாயத சக்தியை சார்ந்து நிற் கும் சாதகமான நிலை இன்று தொழிலாளி வர்க்கத்திற்கு உள்ளது. ஏகாதிபத்தியம் முழுமையாக ஆதிக்கம் செலுத்திவந்த காலம் மலை யேறிவிட்டது. அக்டோபர் புரட்சியை ஒட்டிய முதற் பத்தாண்டுகளில் நமது நாடு தனியாகவும், இன்றையவிட மிகவும் பலவீனமாகவும் இருந்த காலம் ஒப்பீட்டளவில் தீவிரமாக மாற்றமடைந்துள்ளது. நமது காலத் தில் உலக அரங்கில் காணப்படும் சக்திகளின் பலாபல நிலை முற்றிலும் வேறாக இருக்கிறது. எனவே, ''இன்று யுத்தம் தவிர்க்கமுடியாதது'' என்று கூறுவது-சோசலிச சக்திகளிடம் நம்பிக்கை இல்லாமையைக் காட்டுகிறது; தோல்விமனப்பான்மை, நம்பிக்கையின்மை ஆகிய போக்குகளுக்குச் சரணாகதியடைவதைக் காட்டுகிறது.

யுத்தம் தவிர்க்க முடியாதது என்று ஒருவர் ஓயாது கூறுவதன் மூலம் ''புரட்சிகர உணர்வுக்கு'' ஆதாரமாக இதைக் காட்டிக்கொள்ள லாம். ஆனால், உண்மையில் இந்த அணுகுமுறை தம்முடைய பலத்

தில் நம்பிக்கையின்மை, ஏகாதிபத்தியத்திடம் அச்சம் இவற்றையே காட்டுகின்றது.

ஏகாதிபத்திய முகாமில் படைபலக் குறைப்பை எதிர்க்கும் பலமான சக்திகள் இன்னும் இருக்கின்றன. இந்த சக்திகளை நிர்ப்பந்தப் படுத்திப் பின்வாங்கச் செய்வதற்கு, இவற்றுக்கெதிராக மக்களின் கோபாவேசத்தை மூட்டிவிடவேண்டும்; மக்களின் விருப்பத்திற்கு இணங் குமாறு இந்த சக்திகளைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

மக்கள் படைபலக் குறைப்பை விரும்புகிறார்கள்; இதற்காக நடைபெறும் மக்கள் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளே முன்னணிப் படையாக, அமைப்பாளர்களாக இருக்கிறார்கள் என்றும் நம்பு கிறார்கள்.

படைபலக் குறைப்புக்கான நமது போராட்டம் ஏதோ சமய சஞ்சீ வியான போர்த்தந்திரமல்ல. நாம் மனப்பூர்வமாகவே படைபலக் குறைப்பை விரும்புகிறோம். இந்த இடத்தில் நாம் மார்க்சிய-லெனி னிய கோட்பாட்டின்படி உறுதியாக நிற்கிறோம். சென்ற நூற்றாண் டின் இறுதிக் கட்டத்தின்போதே பிரடெரிக் ஏங்கல்ஸ் படைபலக் குறைப்பு சாத்தியம் என்பதைச் சுட்டிக் காட்டினார். இதை ''சமாதா னத்திற்குரிய உத்தரவாதம்' என்று வர்ணித்தார். நமது காலத்தில் படைபலக் குறைப்பு ஒரு நவைமுறை சாத்தியமான குறிக்கோள் என்ற முழக்கத்தை வி. இ. லெனின் முதன் முதலாக முன்வைத்தார்; முழுமை யான அல்லது பகுதியளவு படைபலக் குறைப்பு பற்றிய ரசிய ஆலோ சனைகள் 1922-லேயே ஜெனீவா மாநாட்டில் முதன்முதலாகச் சமர்ப் பிக்கப்பட்டன. இது நடந்ததும் லெனின் காலத்தில்தான் இந்தப் படை பலக் குறைப்பு யோசனைகளை உருவாக்கியவரும் அவரே.

யுத்தத்தைத் தடுத்து நிறுத்தும் விசயத்தில் படைபலக் குறைப்புக் கான போராட்டம் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. இது, ஏகாதி பத்தியத்தை எதிர்த்து நடத்தப்படும் செயல்பூர்வமான போராட்ட மாகும். இந்தப் போராட்டத்தில் மனிதகுலத்தின் தனிப்பெரும்பான்மை சோசலிச முகாமின் பக்கமுள்ளது.

சர்வதேச நிலைமையில் தணிவு காணவும், ''கெடுபிடி போரு''க்கு முடிவு காணவும், இதர சோசலிச நாடுகள் அனுசரித்து வரும் கொள் கைக்கு எதிராக சீனத் தோழர்கள், ''ஈட்டிமுனைக்கெதிராகஈட்டி முனை' என்ற முழக்கத்தினை முன்வைக்கிறார்கள். இந்த முழக்கம் நடை முறையில் ஏகாதிபத்தியவாதிகளின், ''சற்று சரிந்ததால் யுத்தம்'' என்ற கொள்கைக்குத் தீனியாகிறது. ஆயுதப் போட்டியின் ஆதரவா ளர்களுக்கு உதவுகிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சர்வ தேச நெருக்கடியினை குறிப்பாக, ரசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள நெருக்கடிகளை மேலும் உக்கிரப்படுத்தி வைத்திருப்பது

தமக்குச் சாதகமாக இருக்கும் என்று கருதுகிறார்களோ என்ற எண்ணம் எழுகிறது. ஆத்திரமூட்டல்களுக்கு ஆத்திரமூட்டல்களின் மூலம் ரசியா பதிலளிக்க வேண்டும்; ஏகாதிபத்திய முகாமிலுள்ள காட்டு மிராண்டிகள் வைத்துள்ள கண்ணியில் விழவேண்டும்; முரட்டுத் துணிச்சலி லும், ஆக்கிரமிப்புத் தன்மையிலும் போட்டியிட வேண்டும்; அதாவது, சமாதானத்தை நிலைபெறச் செய்வதற்கு மாறாக, யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிடுவதற்காகப் போட்டியிட்டு - ஏகாதிபத்தியவாதிகளின் அறைகூவலை ஏற்க வேண்டும் என்று நம்புகிறார்கள் போலும்.

இந்தப் பாதையில் செல்வது சமாதானத்திற்கும், தேசங்களின் பாதுகாப்பிற்கும் உலைவைப்பதாகும். மக்களின் நலன்களைப் பேணும் கம்யூனிஸ்டுகள், ஒருபோதும் அப்பாதையில் செல்லமாட்டார்கள்.

சமாதானத்திற்காகவும், வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய நாடுகளிடையே சமாதான சகவாழ்வுக் கொள்கையினை அமுல்படுத்துவதற்காகவும் நடத்தப்படும் போராட்டம் ஏகாதிபத்தி யத்தை எதிர்த்து மக்கள் நடத்தும் போராட்டவடிவங்களில் ஒன்றாகும். இது, ஏகாதிபத்தியம் தயாரித்துவரும் புதிய யுத்தங்களுக்கு எதிராகவும் காலனி நாடுகளில் ஏகாதிபத்தியம் நடத்தி வரும் ஆக்கிரமிப்பு செயல் களுக்கு எதிராகவும், அந்நியப் பிரதேசங்களில் ஏகாதிபத்தியவாதிகள் இராணுவத்தளங்கள் வைத்திருப்பதற்கு எதிராகவும், ஆயுதப் போட்டிக்கு எதிராகவும் நடத்தப்படும் போராட்டமாகும். இந்தப் போராட்டம் தொழிலாளி வர்க்கத்தின் உழைக்கும் மக்கள் அனைவரின் நலனுக்காக வும் நடைபெறும் ஒரு வர்க்கப் போராட்டமாகும்.

அணுகுண்டு மற்றும் ஹைட்ரஜன் குண்டுகள் விழத்தொடங்கு வதற்கு முன்பே புதிய உலகயுத்த அபாயத்தை எதிர்த்துப் போராட் டத்தை வளர்க்கவேண்டும் என்று நமது அறிக்கையின் முடிவுரையில் கூறப்பட்டுள்ளதை நமது கட்சியும் அனைத்து சகோதரக் கட்சிகளும் நினைவில் கொண்டுள்ளன; இந்த முடிவுரையினைத் தமது பணிகளுக்கு வழிகாட்டியாகக் கொண்டுள்ளன. இந்தப் போராட்டம் இப்போது தொடங்கப்பட்டு நாளுக்கு நாள் தீவிரமாக்கப்படவேண்டும். பிரதான மாக உள்ள கடமை ஆக்கிரமிப்பாளர்களைச் சரியான காலத்தில் ஒடுக்கி யுத்தத்தைத் தடுப்பதாகும்; யுத்தம் மூளாது தவிர்க்கவேண்டும். இன்று சமாதானத்திற்காகப் போராடுவது என்றால் மிகவும் கண்காணிப் புடன் இருக்கவேண்டும்; ஏகாதிபத்தியத்தின் கொள்கைகளைச் சோர்வின்றி அம்பலப்படுத்த வேண்டும்; யுத்தத் தீ மூட்டுபவர்களின் தில்லுமுல்லுகள், தந்திரோபாயங்களை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும்; யுத்தக் கொள்கையைக் கொண்டிருப்பவர்களுக்கு எதிராக மக்கள் கோபமுற்று எழுச்சிபெறச்செய்யவேண்டும். சமாதான சக்திகளின் ஸ்தாபனங்களை மேம்படச் செய்யவேண்டும்; சமாதானத்திற்கு ஆதரவாக வெகுஜனப் போராட்டங்களை அடிக்கடி ஊக்குவித்தல் வேண்டும்; புதிய

யுத்தங்களில் அக்கறையில்லாத நாடுகளிடையே கூட்டுறவைப் பலப் படுத்த வேண்டும்.

சமாதானத்திற்காகவும் சமாதான சகவாழ்விற்காகவும் நடைபெறும் போராட்டம், ஏகாதிபத்திய முன்னணியைப் பலவீனப்படுத்தும்; அதன் கடுமையான ஆக்கிரமிப்பு வட்டாரங்களை மக்களிடமிருந்து, தனிமைப் படுத்தும்; தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டங்களும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களும் முன்னேறிச் செல்வதற்கு உதவும்.

சமாதானத்திற்கும், சமாதான சகவாழ்விற்குமான போராட்டம், ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெறும் புரட்சிப் போராட்டத்தின் அங்கமாக இணைந்துள்ளது. ''சமாதான சகவாழ்வுச் சூழ்நிலைமை களில், முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டம் வளர்ச்சியுறவும் காலனி, சார்பு நாடுகளில் மக்களின் விடுதலைப் போராட்டங்கள் வளர்ச்சியடையவும் சாதகமான வாய்ப்புகள் உருவாகின்றன; மறு புறத்தில் புரட்சிகரமான வர்க்கப் போராட்டம், தேச விடுதலைப் போராட்டங்கள் ஆகியவற்றின் வெற்றிகள் சமாதான சகவாழ்வைப் பலப்படுத்துவதற்கு உதவுகின்றன'', என்று 81 கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் அறிக்கை கூறுகிறது.

சமீப ஆண்டுகளில், தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத் திலும், தேச விடுதலைக்கான மக்களின் போராட்டத்திலும், சமாதான சகவாழ்வு சூழ்நிலைமைகளில் முக்கியமான வெற்றிகள் கிட்டியுள்ளன. உலகப் புரட்சிப் போக்கு வெற்றிகரமாக அபிவிருத்தியடைந்து வருகிறது.

இதனால் தான் வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய நாடு களிடையே சமாதான சகவாழ்வுக்காக நடைபெறும் போராட்டத்தை சுதந்திரத்திற்காகவும் சோசலிசத்திற்காகவும் ஏகாதிபத்தியத்தையும் காலனியாதிக்கத்தையும் எதிர்த்து நடத்தப்படும் புரட்சிகரமான போராட் டத்திலிருந்து பிரித்துப் பார்ப்பதோ, சீனத்தோழர்கள் செய்வது போல இவற்றை நேருக்கு நேர் எதிராக வைத்துப் பார்ப்பதோ, சமாதான சகவாழ்வுக்கொள்கையைவெறும் ஏமாற்றுச் சொற்றொட ராக்கிவிடும். உண்மையில் சமாதானத்திற்காகவும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் உறுதியாகப் போராடவேண்டும் என்ற தேவையினைஅசட்டை செய்வதாகிவிடும். இவ்வாறு நடப்பது ஏகாதிபத்தியவாதிகளுக்கு மட்டுமே இலாபகரமாக முடியும்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் ஜூன் 14-ம் தேதிய கடிதத்தில், வேறு சமூக அமைப்புகள் உள்ள நாடுகளிடையில் சமாதான சகவாழ்வு என்ற கொள்கையை சுரண்டுவோர்—சுரண்டப்படுவோர் களுக்கிடையிலும், ஒடுக்குவோர்—ஒடுக்கப் படுவோர்களுக்கிடையிலும் உழைப்பாளி மக்கள்—ஏகாதிபத்தியவாதிகளுக்கு இடையிலும் உள்ள உறவுகளுக்கும் விரிவு படுத்துவதாகப் பிற கம்யூனிஸ்ட் கட்சிகளின் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இது உண்மையில் முதலாளித்துவத்தை

எதிர்த்து வர்க்கப் போராட்டங்களில் தொழிலாளி வர்க்கத்துக்கு தலைமை தாங்கி வருகின்ற, ஏகாதிபத்தியத்திற்கெதிரான புரட்சிகரமான போராட்டங்களை நடத்தி வருகின்ற, நியாயமான விடுதலைப் போர்களை எப்பொழுதும் ஆதரித்துவருகின்ற சகோதரக் கட்சிகளை எதிர்த்து நடத்தப்பட்ட பேய்த்தனமான புனைசுருட்டு அவதூறாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இதர சகோதரக் கட்சிளுக்கும் எதிராக நடத்தும் போராட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் வாதங்கள் மிகவும் பலவீனமாக இருப்பதால் அவர்கள் பலவிதமான ஏமாற்று வழிகளைக் கையாள்கின்றனர். முற்றிலும் அடிப்படையில்லாத புனைவுகளை அவர்களே கற்பனையில் உருவாக்கி, எம்மீது சுமத்திப் போராடுவதன் மூலம் அவர்களுடைய புனைவுகளை அவர்களே அம்பலப்படுத்திவிடுகிறார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும் இதர சகோதரக் கட்சிகளும் புரட்சியைக் கைவிட்டு வர்க்கப் போராட்டத்திற்குப் பதிலாக சமாதான சகவாழ்வை வைத்துக் கொண்டிருப்பதாக அவர்கள் அபத்தமாகக் குற்றம் சாட்டியிருப்பதே இதற்கான சான்றாகும். சமாதான — சகவாழ்வு என்பது சோசலிச நாடுகள் முதலாளித்துவ நாடுகள் ஆகியவற்றின் அரசுகளுக்கிடையிலான உறவுகளையே குறிப்பிடுகிறது என்பது எந்த ஒரு அரசியல் மாணவருக்கும் தெளிவாக தெரியும். சமாதான சகவாழ்வுக் கொள்கையானது, முதலாளித்துவ நாடுகளிலுள்ள பரஸ்பரம் விரோதமான வர்க்கங்களின் உறவுகளுக்கு எந்த வழியிலும் விஸ்தரிக்கப்படக்கூடாது. முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துத் தன் வர்க்க நலனுக்காகத் தொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்திலும், காலனியாதிக்க சக்திகளை எதிர்த்து ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்தும் போராட்டத்திலும் இக்கொள்கையைப் பின்பற்றுவதை அனுமதிக்க முடியாது. சித்தாந்த ரீதியில் சமாதான சகவாழ்வு கிடையாது என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக எடுத்துக் கூறியுள்ளது. இது மார்க்சிய—லெனினிய வாதிகள் என்று தம்மைக் கருதி வருபவர்கள் அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டிய உண்மை.

III

ஸ்டாலின் தனிநபர் வழிபாட்டுக் கொள்கையின் பின்விளைவுகளை எதிர்த்து நடத்தும் போராட்டம் தொடர்பான பிரச்சினைகளில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர மார்க்சிய—லெனினிய கட்சிகளுக்குமிடையில் கடுமையான கருத்துவேறுபாடுகள் இருக்கின்றன.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், இந்த தனிநபர்வழிபாட்டின் காவலர்களாகவும், ஸ்டாலினுடைய தவறான கருத்துக்களைப் பரப்பு

வோராகவும் இருக்கின்றனர். தனிநபர் வழிபாட்டுக் காலத்தில் கொடி கட்டிப் பறந்த அமைப்பு முறை, சித்தாந்தங்கள், ஒழுக்கக்கோட்பாடுகள், தலைமைப் பதவியின் வடிவங்கள், முறைகள் இவற்றை எல்லாம் மற்ற கட்சிகள் மீது திணிக்க அவர்கள் முயற்சி செய்கிறார்கள்; இது கௌரவமோ, புகழோ கொண்டுவராத விரும்பத்தகாத வேலை என்பதை நாம் திட்டவட்டமாகக் கூறிவிட வேண்டும். மார்க்சிய—லெனினிய வாதிகளும் முற்போக்காளர்களும் தனிநபர் வழிபாட்டுக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதில் யாரும் வெற்றி காணமுடியாது.

தனிநபர் வழிபாட்டுக் கொள்கையின் பின்விளைவுகளை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் என். எஸ். குருச்சேவின் தலைமையில் நமது கட்சியும், மத்திய கமிட்டியும் காட்டிய தீரம், துணிச்சல்—கொள்கை விசயத்தில் உண்மையான லெனினிய உறுதி—இவற்றை ரசிய மக்களும் உலக கம்யூனிச இயக்கமும் வெகுவாகப் பாராட்டியுள்ளன.

நமது கட்சி இதைத் தடுத்ததற்குக் காரணம், உழைப்பாளி மக்களின் பலம் பொருந்திய சக்திகளுக்குத் தடையிட்டிருந்த கனத்த சுமைகளை அகற்ற வேண்டும்; இதன் மூலம் ரசிய சமூக அமைப்பின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் என்பதை அனைவரும் அறிவார்கள். லெனின் நமக்கு விட்டுச் சென்ற சோசலிசக் கருத்துக்களின் புனிதத் தன்மையை, தனிநபர் அதிகாரதுஷ் பிரயோகம், யதேச்சதிகாரம் ஆகியவற்றின் இழுக்கிலிருந்து பாது காக்கவே கட்சி இதைச் செய்தது. தனிநபர் வழிபாட்டுக் கொள்கையின் விளைவாக ஏற்பட்ட துன்ப நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறுவதைத் தடுக்கவும், நமது அனுபவத்திலிருந்து சோசலிசத்திற்காகப் போராடும் அனைவரும் படிப்பினை பெறவுமே கட்சி இதைச் செய்தது.

மார்க்சிய—லெனினியத்திற்கு அந்நியமான தனிநபர் வழிபாட்டுக் கொள்கையின் தீய விளைவுகளுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத் தினைக் கம்யூனிச இயக்கம் முழுவதுமே சரியாகப் புரிந்து கொண்டு ஆதரவளித்தது. சீனத் தலைவர்களும் இதை அங்கீகரித்தனர். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசின் பிரம்மாண்டமான சர்வதேச முக்கியத்துவத்தைப்பற்றி அவர்கள் பேசினார்கள்.

1956-ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரசைத்துவக்கி வைத்துப் பேசும் போது தோழர் மாசேதுங் கூறினார்: ''ரசியத் தோழர்களும், ரசிய மக்களும் லெனினுடைய யோசனைகளுக்கேற்பச் செயல் பட்டார்கள். மிகக் குறைந்த கால அளவிற்குள் அவர்கள் அபாரமான வெற்றிகளை ஈட்டியிருக்கிறார்கள். அண்மையில் நடை பெற்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ் பல சரியான நிலைகளை வகுத்தளித்தது. கட்சியின் வேலைகளில் ஏற்படும் குறை பாடுகளைக் கண்டித்தது. எதிர் காலத்தில் அவர்களது வேலை மிகவும்

சிறந்த அளவிற்கு மகத்தான அபிவிருத்தியைக் காணும் என்று நம்பிக்கையுடன் கூறமுடியும்.''

அதே காங்கிரசில் தோழர் லியோசோசியால் சமர்ப்பிக்கப்பட்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் அரசியல் அறிக்கையில் இந்த மதிப்பீடு மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது. அதில் கூறப் பட்டுள்ளதாவது:

''இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் உலகு தழுவிய முக்கியத்துவம் வாய்ந்த பிரதான அரசியல் நிகழ்ச்சியாகும். இந்த மாநாடு அற்புதமான ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டத்தினையும், சோசலிச இலட்சியத்தை மேலும் வளர்ப்பதற்குரிய நோக்கத்துடன் மிக முக்கியமான அரசியல் ஆணைகளையும் வகுத்துக் கொடுத்துள்ளது. கட்சியில் கடுமையான விளைவுகளைக் கொண்டு வந்துள்ள தனிநபர் வழிபாட்டுக் கொள்கை யினையும் கண்டித்துள்ளது. அதுமட்டுமன்றி, சமாதான சகவாழ்வு மற்றும் சர்வதேசக் கூட்டுறவு ஆகியவற்றை மேலும் மேம்படச் செய்வதற்குரிய யோசனைகளை முன்வைத்துள்ளது. சர்வதேச நெருக்கடி தணிவதற்குரிய தலை சிறந்த பங்களிப்பையும் செய்துள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் விதிகளில் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரசில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்த தோழர் டெங்சியோ பிங் கூறியதாவது: ''எல்லா முக்கிய பிரச்சினைகள் பற்றியும் கட்சிக்குள் முடிவெடுப்பது சரியான கூட்டு முறையில் இருக்க வேண்டும்; தனிப்பட்ட முறையில் அல்ல என்று லெனினியம் வலியுறுத்துகிறது. கூட்டுத் தலைமை என்ற கொள்கை வழுவாது கடைப்பிடிக்கப்படவேண்டும்; தனிநபர் வழிபாட்டுக் கொள்கைக்கு எதிரான போராட்டம் நடக்கிறது. இவற்றின் மிகப் பிரதானமான முக்கியத்துவத்தை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ், கிரகித்து ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தெளிவுபடுத்தியுள்ளது. இது ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டுமின்றி உலகிலுள்ள எல்லா நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் மீதும் பிரம்மாண்டமான செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது.''

''மக்கள் தினசரி'' செய்தித்தாளில், (1956 டிசம்பரில்) ''பாட் டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவம் பற்றி மீண்டும் ஒருமுறை'' என்ற பிரபலமான தலையங்கத்தை தீட்டிய சீனத் தோழர் கள் எழுதியதாவது :

''ஸ்டாலினுடைய தனிநபர் வழிபாட்டை இல்லாதகற்றுவதிலும், ஸ்டாலினுடைய கடுமையான தவறுகளை அம்பலப்படுத்துவதிலும், அதனால் ஏற்பட்ட விளைவுகளைத் துடைத்தெறிவதிலும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் பிரமாதமான உறுதியும் தைரியமும் காட்டியது. இந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்காக

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துவரும் முயற்சிக்கு உலக முழுவதிலுமுள்ள எல்லா மார்க்சிய—லெனினியவாதிகளும் கம்யூனிச இலட்சியத்தின் அனுதாபிகளும் ஆதரவளிப்பார்கள்; ரசியத் தோழர்களின் இந்த முயற்சிகள் முழுமையாக வெற்றிவாகை சூடவேண்டும் என்று வாழ்த்து வார்கள்''.

உண்மையும் இதுதான்.

சீனத் தலைவர்களின் இந்தப் பேச்சுக்களையும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஜூன் 14-ல் எழுதியுள்ள கடிதத்தில் கூறப் பட்டிருப்பதையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் நடுநிலையாளர் எவரும், அவர்கள் நமது கட்சியின் 20-வது காங்கிரஸ் பற்றிய மதிப்பீட்டில் முழுக்கரணம் அடித்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுணர முடியும்.

இத்தகைய கொள்கை சம்பந்தமான விசயங்களில் ஊசலாட்டங்களும் உறுதியின்மையும் அனுமதிக்கப்படலாமா? நிச்சயமாக அனுமதிக்கப் படக்கூடாது. ஒன்று, இந்தக் கொள்கைகள் பற்றிய பிரச்சினைகளில் சீனத் தலைவர்களுக்கு ரசிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் எவ்வித வேறுபாடும் இல்லாதிருந்திருக்க வேண்டும் அல்லது இந்த அறிக்கைகள்அனைத்துமே பொய்யாக இருக்க வேண்டும்.

நடைமுறைதான் உண்மைக்குச் சிறந்த உரைகல் என்பது நன்கு தெரிந்ததே.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20, 21, 22-வது காங்கிரசுகள் காட்டிய வழியில் வேலைகள் நிறைவேற்றப்பட்டதால் நமது நாட்டின் வாழ்வில் ஏற்பட்டுவந்த அற்புதமான விளைவுகள் நடைமுறையில் இவை சிறந்தவையே என்பதைத் தெளிவாக நிருபித்துவிட்டன. கட்சி வாழ்க் கையில் லெனினியக் கொள்கைகளையும், விதிகளையும் மீட்டு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய நமது கட்சி, கடந்த பத்தாண்டு காலத்தில் ரசிய சமூக அமைப்பின் பொருளாதார வளர்ச்சியிலும், விஞ்ஞானம், கலாச்சாரம் இவற்றைப் பேணிவளர்ப்பதிலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும், பாதுகாப்பு பலத்தைக் கட்டி வளர்ப்பதிலும், வெளிவிவகாரக் கொள்கையில் வெற்றிகளைச் சாதிப்பதிலும் உண்மை யிலேயே கம்பீரமான பலன்களைப் பெற்றுள்ளது.

தனிநபர் வழிபாட்டுக் கொள்கை இருந்த காலத்தில் மக்கள் வாழ்வில் நஞ்சைப் பொழிந்து வந்த அச்சம், சந்தேகம், உறுதியின்மை என்ற சூழ்நிலை மலையேறிவிட்டது. இப்போது ரசிய மக்கள் மேலும் நன்றாக வாழத்துவங்கியுள்ளார்கள், சோசலிசத்தின் பலன்களை அனுபவிக்கிறார்கள் என்ற உண்மையை மறுப்பது சாத்தியமல்ல. புதிய வீடு கிடைத்துள்ள தொழிலாளியைக் கேளுங்கள் (லட்சக்கணக்கில் இவர்கள் இருக்கிறார்கள்.); வயதான காலத்தில் நல்ல வசதிகள் பெற்றுவரும்-ஓய்வூதியம் பெறுபவரைக் கேளுங்கள்; நல்ல வசதியுடன்

வாழும் கூட்டுப்பண்ணை விவசாயியைக் கேளுங்கள்; தனிநபர் வழிபாட்டுக் கொள்கைக் காலத்தில் பல்வேறு தவறான பழிவாங்கல் முறைகளால் அவதியுற்றுக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களைக் கேளுங்கள்; அவர்களுக்கு சுதந்திரமும் நற்பெயரும் மீண்டும் கிடைத்துள்ளன. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசில் வகுக்கப்பட்ட லெனினியப் பாதை எத்தகைய வெற்றிகளைக் கொண்டு வந்திருக்கிறது, ரசிய மக்களுக்கு நடைமுறையில் என்ன பயன் விளைந்துள்ளது என்பதை அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

தனிநபர் வழிபாட்டுக் காலத்தில் தமது தாய், தந்தையர்கள் அடக்குமுறைகளுக்கு ஆளாக நேர்ந்த மக்களைக் கேட்டுப்பாருங்கள். அவர்கள்—தாய், தந்தையர், சகோதரர்கள்—அனைவரும் நேர்மையானவர்களாக இருந்தார்கள்; அவர்கள் சமூகத்தில் தீண்டத்தகாதவர் அல்ல; மாறாக மதிப்புள்ள ரசியத் தாயகத்தின் புதல்வர் புதல்வியர்களே ஆவர்.

தொழில், விவசாயம், கலாச்சாரம், விஞ்ஞானம், கலை ஆகிய எத்திசையில் பார்வையைத் திருப்பினாலும் துரிதமான முன்னேற்றத்தையே காண்கிறோம். நமது விண்வெளிக் கப்பல்கள் பிரபஞ்சத்தையே வலம் வருகின்றன. இதுவும், ரசிய மக்களை நமது கட்சி வழிநடத்திச் செல்லும் பாதை சரியானது என்பதை உறுதிசெய்கிறது.

ரசிய குடிமகனுக்கு அவன் வாழ்வை மேம்படுத்த எல்லாவற்றையும் செய்துவிட்டோம் என்று நாம் வாதிடவில்லை. இந்தக் கொள்கை வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால், அது நமது விருப்பத்தை மாத்திரம் பொறுத்த ஒன்றல்ல என்பதை ரசிய மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நாம் ஒரு கம்யூனிச சமூகத்தை நிர்மாணிக்க வேண்டும். பொருளாயத வசதிகளை அமோகமாக உருவாக்கிக் குவிக்கவேண்டும். இதனால்தான் நமது மக்கள் மேலும் துரிதமாக பொருளாயத ஆன்மீக மதிப்புகளைப் படைக்கவும், கம்யூனிசத்தின் வெற்றியை அருகில் கொண்டுவரவும், விடாமுயற்சியுடன் உழைத்து வருகிறார்கள். நாம் சரியான வழியைப் பின்பற்றி வருகிறோம்; நமது அபிவிருத்தியின் எதிர்காலக் காட்சியைத் தெளிவாகப் பார்க்கிறோம் என்பதை எல்லோரும் காணலாம்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத்திட்டம், கம்யூனிச நிர்மாணத்திற்கான பருண்மையான திட்டத்தைத் தீட்டித் தந்துள்ளது. இதுஅமுல் நடத்தப்பட்டால் ரசிய மக்களுக்கு மிக உயர்ந்த வாழ்க்கைத் தரம் உறுதிப்படுத்தப்படும். எல்லோரும் விரும்பும் கம்யூனிசக் கொள்கையான ''சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற பங்கீடு'' என்பதை நோக்கிப் படிப்படியாக மாற்றம் அடைவதற்குரிய நடவடிக்கை தொடங்கும்.

கம்யூனிச சமூகத்தை நிர்மாணம் செய்வதற்குரிய இந்த அற்புதமான திட்டத்தை, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டத்தை, சீனத்

தோழர்கள் அவதூறு செய்ய முயல்வதை ரசிய மக்கள் விசித்திரமாகவும், விபரீதமாகவும் பார்க்கிறார்கள்.

மக்களுக்கு மேலும் சிறந்த வாழ்வு பெற்றுத் தருவதற்கான போராட்டமே நமது கடமை என்று நமது கட்சி பிரகடனம் செய்வதைச் சுட்டிக்காட்டி ரசிய சமூகத்தில் ஏதோ ஒருவிதமான ''முதலாளியத் தன்மை''யும், ''சீரழிவும்'' ஏற்பட்டு வருவதாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கோடிட்டுக் காட்டுகிறார்கள். அவர்களது தர்க்கப் படி மக்கள் ஓலைச் செருப்புடன் நடப்பதும், பொதுவான கிண்ணத் திலிருந்து தண்ணீர் போன்ற 'சூப்' எடுத்து அருந்துவதும் தான் கம்யூனிசமாகும்; ஒரு தொழிலாளி நன்றாக வாழ்ந்து, நாளை மேலும் நன்றாக வாழவேண்டும் என்று விரும்புவது—முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டு வருவதற்கு சமமாகும் போலும்.

இந்தத் தத்துவத்தை மார்க்சிய—லெனினியத்தின் சமீபகால (புத்தம் புது) ஞானமாக அவர்கள் நமக்கு அளிக்கப் பார்க்கிறார்கள். இத்தகைய ''கோட்பாடுகளின்'' மூல கர்த்தாக்கள், தன் சொந்தக் கரங்களில் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, தனது சொந்த சோசலிச அரசைப் படைத்துக்கொண்ட தொழிலாளி வர்க்கத்தின் பலத்திலும், ஆற்றலிலும் நம்பிக்கையில்லாதவர்கள் என்பதை முற்றிலும் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

நமது நாட்டின் வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டத்தைப் பார்த்தால் லெனின் தலைமையில் நாம் ஆட்சி அதிகாரத்தை நமது கரத்தில் ஏற்றபோது எங்கு தொடங்கினோம் என்பதையும், ரசிய மக்கள் எத்தகைய சாதனைச் சிகரங்களை எட்டியிருக்கிறார்கள் என்பதையும் எளிதில் பார்க்கலாம். நமது நாடு ஒரு மாபெரும் சோசலிச அரசாகியுள்ளது. தொழில்துறை உற்பத்தியில் ரசியா அய்ரோப்பாவில் முதலிடமும், உலகில் இரண்டாவது இடமும் பெறுகிறது. விரைவில் அமெரிக்காவைக் கடந்து சென்று முதலிடத்தைப் பெற்று உயரும். நமது வெற்றிகள் அனைத்தையும் படைத்துத் தந்தவர்கள் ரசியத் தொழிலாளிவர்க்கம், ரசிய கூட்டுப் பண்ணை விவசாயிகள், ரசிய அறிவு ஜீவிகள் ஆகியவர்களேயாவர்.

ரசியமக்கள் மட்டுமின்றி இதர சோசலிச நாடுகளின் மக்களும் மாபெரும் தொழில்துறை மாற்றங்களை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றவர்கள் என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். தொழிலாளி, விவசாயி மக்களுக்குச் சரியான வழிகாட்டுதல்; இந்த வழிகாட்டுதலை அமுல் நடத்துவோர் யதார்த்தமாகச் சிந்தித்தல் சரியான பாதையில் உழைப்பாளி மக்களின் பலமும் சக்தியும் இயக்கப் படுவதைச் சாத்தியமாக்குதல் ஆகியவையே இன்றைய தேவைகளாகும்.

தனி நபர் வழிபாட்டுக் கொள்கைக்கு நியாயம் கற்பிக்கும் முயற்சியில் சீனத் தலைவர்கள், ரசியாவில் வர்க்கப் போராட்டம் இருக்கிறது,

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டத்திலுள்ள அனைத்து மக்களுக்குமான ஆட்சி, அனைத்து மக்களின் கட்சி என்ற கூற்று தவறானது என்பன போன்ற, மார்க்சியத்திற்கு மிகவும் அப்பாற்பட்ட குற்றச்சாட்டுகளைப் போட்டு நிரப்பியிருக்கிறார்கள்.

அவர்களது வாதங்களை எல்லாம் இக்கடிதத்தில் விபரமாக ஆய்வு செய்யும் உத்தேசம் நமக்கு இல்லை. ஜூன் 14-ம் தேதியன்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எழுதியுள்ள கடிதத்தினைப் படிக்கும் எவரும் அவர்களுடைய வாதம் ஆதாரமற்றது என்பதையும், ரசிய மக்களின் வாழ்க்கையைப் பற்றி அறியாமல் இருக்கிறார்கள் என்பதையும் நிச்சய மாகக் காண்பார்கள். ரசிய சமூகத்தில் இன்னும் பழைய வர்க்கங்கள் இருக்கின்றன என்றும் எனவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தேவையிருக்கிறது என்றும் எங்களுக்கு போதனை செய்யப்படுகிறது. இந்த வர்க்கங்கள் எவை? சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கடிதத்தின்படி பார்த்தால் இந்த வர்க்கங்கள் ''முதலாளிய ஆதரவாளர்கள் ஒட்டுண்ணிகள், கள்ளச்சந்தைக்காரர்கள், மோசடிக்காரர்கள், சோம் பேறிகள், காவாலிகள், திருடர்கள்'' ஆகியோர்களேயாகும்.

சீனத் தோழர்களுக்கு வர்க்கங்கள், வர்க்கப் போராட்டங்கள் பற்றி நிச்சயமாக ஒரு விநோதமான கருத்து இருக்கிறது. இந்த ஒட்டுண்ணிக் கூட்டங்கள் எப்பொழுதிருந்து வர்க்கமாகக் கருதப்பட்டு வருகின்றன? எத்தகைய வர்க்கம்? சோம்பேறிகள் வர்க்கம், காவாலிகள் வர்க்கம், பொதுச்சொத்துக்களை மோசடி செய்யும் வர்க்கம் அல்லது ஒட்டுண்ணி வர்க்கம் ஆகிய இவையா? எந்த சமூக அமைப்பிலும் குற்றவாளிகள் ஒரு வர்க்கமாக அமைவதில்லை. ஒரு பள்ளிமாணவனுக்குக்கூட இது தெரியும். சோசலிச சமூகத்திலும் இவர்கள் ஒரு வர்க்கமாக அமைவ தில்லை என்பது உண்மை. முதலாளித்துவத்தின் மீத மிச்சங்களின் வெளித்தோற்றங்களே இவை.

இத்தகைய ஆட்களுடன் போராடுவதற்குப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியமில்லை. அனைத்து மக்கள் அரசு இந்தக் கடமையினைச் சமாளித்துவிட முடியும்; சமாளித்தும் வருகிறது. கட்சி, தொழிற்சங்கங்கள் பொது அமைப்புகள் ஆகியவற்றின் கல்விப் பணிகள் சிறக்கச் சிறக்க, பொதுமக்களின் பங்கு பணிகள் உயர உயர, ரசியக் காவல்துறையின் பணிகள் மேலும் நன்கு நடக்க, நடக்க, குற்றங்களை எதிர்த்து நடத்தும் போராட்டம் மேலும் உறுதியாகப் பலன் தரும் என் பதை நமது அனுபவத்திலிருந்து நாம் அறிகிறோம்.

இன்றுள்ள ரசிய சமூக அமைப்பில் இரு பிரதானமான வர்க்கங்கள் இருக்கின்றன. தொழிலாளர், விவசாயிகள்-அதோடு அறிவு ஜீவிகளும் உள்ளனர். மற்றும் வர்க்கங்களைச் சுரண்டும் நிலையில் ரசிய சமூகத் தில் எந்த வர்க்கமும் கிடையாது. இந்த உண்மையை யாரும் மறுக்க முடியாது. சர்வாதிகாரம் என்பது ஒரு வர்க்கக் கருத்தோட்டம்; ரசியா

வில் யார்மீது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினை அமுல்நடத்த சீனத் தோழர்கள் உத்தேசித்திருக்கிறார்கள். கூட்டுப்பண்ணை விவசாயிகள் மீதா? அல்லது மக்களிடையேயுள்ள அறிவு ஜீவிகள் மீதா? சோசலிச சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கமும் விவசாயி வர்க்கமும் கணிசமான மாறுதலை அடைந்துள்ளன. அவைகளிடையேயுள்ள வேற்றுமைகள் மேலும் மேலும் மறைந்து வருகின்றன என்ற உண்மையை யாரும் மறந்து விடமுடியாது.

சோசலிசம் முழுமையாகவும் இறுதியாகவும் வெற்றி பெற்றதற்குப் பிறகு தொழிலாளி வர்க்கம் தனது வழி காட்டும் பணியைப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலம் செய்வதில்லை. கம்யூனிச நிர்மாணத்திற்கு முழு மூச்சுடன் இறங்கியுள்ள சூழ்நிலைமைகளிலும் சமூகத்தில் தொழிலாளர் வர்க்கமே முன்னணியில் நிற்கும் வர்க்கமாகத் தொடர்ந்து இருக்கிறது. இதன் முன்னணிப் பாத்திரம்-அதன் பொருளாதார நிலைமையின் மூலமும், சோசலிச சொத்துடமையின் உயர்ந்த வடிவத்துடன் நேரடித் தொடர்பு கொண்டிருப்பதன் மூலமும், பல பத்தாண்டுகளாக வர்க்கப் போராட்டம் புரட்சி அனுபவம் ஆகியவற்றால் உருக்கேறி இருப்பதன் மூலமும் நிர்ணயிக்கப்படுகிறது.

முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறும் இடைக்காலத்தின் உள்ளடக்கம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தவிர வேறு எதுவாகவும் இருக்கமுடியாது என்ற மார்க்சின் கூற்றை சீனத் தோழர்கள் காட்டுகிறார்கள். ஆனால் மார்க்ஸ் இவ்வாறு கூறும்போது, கம்யூனிசம் என்பது ஒரு முழுமையான சமூகப் பொருளாதார அமைவு என்ற கருத்தை (இதில் முதல் கட்டம் சோசலிசம்) மனதில் கொண்டிருந்தார். இந்தக் கட்டங்களுக்குக் கடந்து செல்வதற்கு சோசலிசப் புரட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் இன்றியமையாதவை. குறிப்பாக, சுரண்டும் வர்க்கத்தின் எதிர்ப்பை முறியடிக்கவும், சோசலிச நிர்மாணப் பணியை ஒழுங்கமைக்கவும், கம்யூனிசத்தின் முதற்கட்டமான சோசலிசத்தின் வெற்றியை உறுதிப்படுத்தவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியம் என்பதை முற்றிலும் தெளிவாக வலியுறுத்தும் லெனினுடைய வாசகங்கள் பல உள்ளன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தேவை சோசலிசத்தின் வெற்றிக்குப் பிறகு மறைந்துவிடுகிறது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. சோசலிசம் வெற்றி பெற்ற பிறகு தங்களது இயல்பை முற்றிலும் மாற்றிக்கொண்ட உழைக்கும் மக்களும், நட்பு வர்க்கங்களும் மட்டுமே சமூகத்தில் வாழ்கிறார்கள்; ஒடுக்குவதற்கென்று யாரும் இருப்பதில்லை.

இந்தப் பிரச்சினைகளின் மீது சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எடுத்துக் கூறியுள்ள போலிக் கோட்பாட்டு ஆய்வுரைகளின் குவியலிலிருந்து அப்பட்டமான உள்ளடக்கத்தை வெளிக் கொண்டு வந்தால் அது பின்வருமாறு இருக்கும்: சோசலிச ஜனநாயகத்தை வளர்ப்பது

என்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் நோக்கத்திற்கு எதிராக சீனத் தோழர்கள் வருகிறார்கள். இந்தக் கொள்கை, கட்சியின் 20,21,22-வது காங்கிரசுகளின் முடிவுகளிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டத்திலும் மிகவும் பலமாகப் பிரகடனம் செய்யப்பட்டதாகும். அவர் களுடைய நீண்ட கடிதத்தில், சோசலிச சூழ்நிலையிலும், கம்யூனிச நிர்மாணக் கால கட்டத்திலும் ஜனநாயகம் வளர்ச்சியடைவது பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்பது தற்செயலாக நேர்ந்த ஒன்றல்ல.

சீனத் தோழர்கள் தனிநபர் வழிபாட்டுக் கொள்கையை தூக்கிப் பிடிப்பதன் உள்நோக்கத்தை முழு அளவில் மதிப்பிடுவது கடினம். சர்வ தேசக் கம்யூனிச இயக்கத்தில் முதல் தடவையாக தனிநபர் வழி பாட்டுக் கொள்கையைப் பகிரங்கமாக ஏற்றிப் போற்றும் சம்பவத்தை நாம் எதிர் கொள்கிறோம். தனிநபர் வழிபாட்டுக் கொள்கை நமது நாட்டில் உச்சத்திலிருந்த கால கட்டத்தில் கூட, ஸ்டாலினே சொல்லளவிலா யினும் இந்தக் கோட்பாடு ''சோசலிசப் புரட்சியாளர்'' களிடமிருந்து தோன்றியதாகக் கூறி, இந்த குட்டி முதலாளிய வர்க்க கோட்பாடுடன் எவ்வித உறவும் கூடாது என்று மறுக்க வேண்டிய நிர்பந்தம் இருந்தது.

தனிநபர் வழிபாட்டுக் கொள்கைக்கு நியாயம் தேட மார்க்ஸ், லெனின் ஆகியோரது செல்வாக்கைத் துணைக்கழைப்பது அதிசயமே. நமது கட்சி பிறந்த காலத்திலேயே நரோத்னிக்வாதிகளின் ''வீரர்கள் மற்றும் மக்கள் கூட்டம்'' என்ற கோட்பாடுகளை எதிர்த்து லெனின் உத்வேகமான போராட்டம் நடத்தினார். நமது கட்சியின் மத்திய கமிட்டியிலும் ரசிய அரசிலும் தலைமை விசயத்தில் உண்மையான கூட்டுமுறைகள் லெனினால் அமுல் செய்யப்பட்டன. லெனின் அசா தரணமான ஒரு அடக்கமுள்ள மனிதராக இருந்தார். தன்னைச் சுற்றி தாசத்தன்மையோ, அடிமைத்தனமோ ஒரு துளியாவது வெளிப் படுமானால் அதைத் தாட்சண்யமின்றிக் கண்டித்தார். இவை பற்றி எல்லாம் உண்மையில் சீனத் தோழர்களுக்கு ஒன்றுமே தெரியாதா?

தனிநபர் வழிபாட்டுக் கொள்கையை எதிர்த்து நடத்திய போராட் டம், கட்சியின் அல்லது அரசின் தலைவர்களுடைய அதிகாரத்திற்கு மறுப்பு என்று நமது கட்சியோ இதர மார்க்சிய—லெனினிய கட்சிகளோ எப்பொழுதும் கருதியதில்லை.

கட்சி, தனது தலைமையின் அதிகாரத்திற்கு மதிப்பு தருகிறது. தனிநபர் வழிபாட்டுக் கொள்கையைக் கண்டித்து அதன்பின் விளைவு களுக்கு எதிராகப் போராடி வரும்பொழுதே மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் கம்யூனிசத்திற்கான போராட்டத்தில், தமது சர்வபலத்தை யும் அர்ப்பணித்து இதன் காரணமாக உரிய மதிப்பைப் பெற்றுள்ள தலைவர்களை உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கிறது என்பதை ரசிா

கம்யூனிஸ்ட் கட்சி, தனது 20,22-வது காங்கிரசுகள் உட்பட பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ளது.

IV

நமக்கிடையில் கருத்து வேறுபாடுள்ள அடுத்த முக்கியமான பிரச்சினை, முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கம் நடத்தும் புரட்சிப் போராட்டத்தின் வழிகள், நடைமுறைகள்; தேசியவிடுதலைப் போராட்டம்; மனித குலம் முழுவதும் சோசலிசத்தை நோக்கி மாற்றமடையும் வழிகள் ஆகியவையே.

சீனத் தோழர்கள் சித்தரித்துக் காட்டியுள்ளபடி இந்தப் பிரச்சினையில் பின்வருமாறு வேறுபாடுகள் எழுந்துள்ளன. அவர்கள் மட்டுமே உலகப் புரட்சிக்கு நிற்கிறார்களாம்; ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும், பிற மார்க்சிய-லெனினிய கட்சிகளும் புரட்சியை மறந்துவிட்டனவாம். அவை புரட்சியைக் கண்டு ''பயப்படுகின்றன''வாம். புரட்சிப் போராட்டங்களுக்குப் பதிலாக, உண்மையான புரட்சி வீரரின் ''தகுதிக்கு ஒவ்வாத'' சமாதானம், சோசலிச நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, தம் மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு, முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் மக்களின் ஜனநாயக உரிமைகள், ஜீவாதார நலன்கள் ஆகியவற்றிற்காகப் போராடுவதில் கவனம் செலுத்துகின்றனவாம்.

உண்மையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்திற்கும் இடையேயுள்ள கருத்துவேறுபாடு முற்றிலும் வேறு அடிப்படையில் அமைந்துள்ளது. அதாவது, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், அவசியம் இருக்கிறதோ இல்லையோ உலகப் புரட்சி பற்றி பேசுகிறார்கள். எந்த சந்தர்ப்பத்திலும் பெரும்பாலும் சந்தர்ப்பமே இல்லாத போதும் ''புரட்சி'' பற்றிய சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறார்கள். அதே பொழுதில், மற்றவர்கள்—சீனத் தோழர்களின் விமர்சனத்திற்குள்ளானவர்கள்—புரட்சி என்ற பிரச்சினையினை, வெறும் சொல்லடுக்குகளை வீசாமல், மிகவும் பொறுப்புடன் அணுகுகிறார்கள். கம்யூனிசத்தின் வெற்றிக்கான சிறந்த வழிகளை, இந்த சகாப்தத்தின் சூழ்நிலைமைகளுக்குச் சிறப்பாகப் பொருந்தும் முறைகளைக் கண்டு பிடிக்க கடுமையாக உழைக்கிறார்கள், தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சோசலிசம் ஆகியவற்றிற்காக அர்ப்பணிப்புடன் போராடுகிறார்கள்.

இன்றுள்ள புரட்சிகர இயக்கத்தின் பிரச்சினைகள் மீது சீனத் தோழர்களுக்குள்ள பிரதானக் கருத்துக்களை ஆராய்வோம்.

''உலகப் புரட்சியின்'' பேரால் சமாதானத்திற்கான போராட்டத்தை கைவிடுவதோ அல்லது சமாதான சக வாழ்வுக் கொள்கை, சமாதான

பொருளாதார போட்டி, தொழிலாளி மக்களின் ஜீவாதார நலன்களுக்கா கவும், முதலாளித்துவ நாடுகளில் ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடுவது ஆகிவற்றைக் கைவிடுவதோ, நாடுகளும் மக்களும் சோசலிசத்தை நோக்கிமாற்றமடைய உதவுமா? சமாதானத்திற்காகவும், சமாதான சகவாழ்வுக் கொள்கைக்காகவும் பாடுபடுவதின் விளைவாக சோசலிச நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகள் தம்மைப் பற்றி மட்டுமே நினைக்கிறார்கள், முதலாளித்துவ நாடுகளில் உள்ள தமது வர்க்கத் தோழர்களைப் பற்றி மறந்து விட்டார்கள் என்பது உண்மையா?

இன்று சமாதானத்திற்காகவும், அணு ஆயுத யுத்தத்தை எதிர்த்தும் நடைபெற்று வரும் போராட்டம் குறித்து ஆழ்ந்து சிந்தித்து பார்க்கும் எவரும், ரசிய கம்யூனிஸ்டுகளும், இதர சோசலிச நாடுகளின் சகோதர கட்சிகளும் தமது சமாதான கொள்கையின் மூலம் தொழிலாளி வர்க்கத்திற்கும், முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளிவர்க்கத்திற் கும் உழைக்கும் மக்களுக்கும் அளவிடற்கரிய உதவியினை அளிக்கிறார் கள் என்பதை உணர முடியும். இதற்குக் காரணம், அணு ஆயுத யுத்தத் தினை தவிர்ப்பதால் தொழிலாளி வர்க்கத்தையும் எல்லா நாடுகளிலு முள்ள மக்களை, கண்டங்களிலுள்ள மக்களைக்கூட அழிவிலிருந்து காக்க முடியும் என்பது மட்டுமல்ல, இருந்தாலும் நமது கொள்கையினை நியாயப்படுத்த இது ஒன்றே போதுமானது.

வேறொரு காரணம்—இந்தக் கொள்கைதான் புரட்சிகரமான சர்வ தேசத் தொழிலாளி வர்க்கம் தனது பிரதான வர்க்க இலட்சியங்களை நிறைவேற்றிக்கொள்ளச் சிறந்த வழியாகும். தாமே வென்று பெற்றுள்ள சமாதானச் சூழ்நிலையில், சோசலிச நாடுகள் பொருளாதார வளர்ச்சி யில் அபாரமான வெற்றிகளைப் பெற்றுள்ளதும், விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் ஒவ்வொரு நாளும் புதுமையான சாதனைகளைப் புரிவதும், மக்களின் வாழ்க்கைத்தரம், வேலைநிலைகளை இடைவிடாது மேம்படுத்தி வருவதும், சோசலிச ஜனநாயகத்தை வளர்த்து மேம்படுத்து வதும் தொழிலாளி வர்க்கப் போராட்டத்திற்கு அளிக்கும் பிரமாண்ட மான உதவியாகும் அல்லவா?

இந்த வெற்றிகளையும் சாதனைகளையும் பார்த்து முதலாளித்துவ நாட்டிலுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் கூறுவது இதுதான்: சோசலிசம் தனது செயல்முறை மூலம் முதலாளித்துவத்தைவிட அது மேலானது என்பதை நிரூபித்துள்ளது. இந்த அமைப்புக்காகப் போராடுவது அவசி யம்; சோசலிசம், புத்தகங்களின் மூலம் மட்டுமின்றி, அதனுடைய செயல் முறைகளாலும், ஜீவனுள்ள உதாரணத்தின் மூலமும் மக்களின் மனதைக்கவர்ந்து வருகிறது.

1960-ம் வருடத்திய அறிக்கை, மனித குலத்தின் வளர்ச்சியில் உலக சோசலிச அமைப்பு தீர்மானகரமான சக்தியாகிவிட்டது என்பதே நமது சகாப்தத்தின் பிரதான அம்சமாகும் என்று கூறுகிறது. 1960-ம் வருடக் கூட்டத்தில் கலந்து கொண்ட எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும் நமது சகாப்தத்தின் ஒரு மைய அம்சமாக சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும், அதன் படைப்பான உலக சோசலிச அமைப்பும் இருக்கின்றன என்ற பொதுவான முடிவுக்கு வந்தன.

புரட்சி இயக்கத்தின் மற்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும் பரிகாரம் காண்பது என்பது, உலக சோசலிச அமைப்பு வலுப்பெற்று வருவதையே பெருமளவுக்குச் சார்ந்திருக்கிறது. இதனால்தான், கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் ''மக்களின் மகத்தான சோசலிச சமூகத்தை ஓய்வு ஒழிச்சலின்றி வலுப்படுத்தச் சபதம் ஏற்றுள்ளன. இந்த நாடுகளின் சர்வதேச பாத்திரமும், உலக மாறுதல்களின் போக்கில் அவற்றின் செல்வாக்கும் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து வருகின்றன''. மிகவும் பிரதானமான இக்கடமையினை நிறைவேற்றுவது தனது தலையாய சர்வதேசியக் கடமை என்று நமது கட்சி கருதுகிறது.

''சர்வதேசப் புரட்சியின் மீது நமது செல்வாக்கை வலியுறுத்துவது நமது பொருளாதாரக் கொள்கையின் மூலமேயாகும்......இந்தத் துறையில் போராட்டம் சர்வதேச அளவில் தொடுக்கப்படுகிறது. இந்தக் கடமையில் நாம் வெற்றி கண்டோமானால் சர்வதேச அளவில் நாம் இறுதியாகவும் உறுதியாகவும் வெற்றி பெறுவோம்.''-(தொ. நூல். 32, பக் 413) என்று வி. இ. லெனின் நமக்குப் போதித்துள்ளார்''.

மாபெரும் லெனினுடைய இந்தப் பிரமாணத்தை ரசிய கம்யூனிஸ்டுகள் உறுதியாகக் கற்றுணர்ந்திருக்கிறார்கள். இதர சோசலிச நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகள் இதைப் பின்பற்றுகிறார்கள். ஆனால், லெனின் தவறு செய்து விட்டார் என்று முடிவு செய்துள்ள சில தோழர்கள் இருப்பது இப்போது தெரியவருகிறது.

இது என்ன—பொருளாதாரப் போட்டியில் முதலாளித்துவத்தை முறியடிக்குமளவு சோசலிச நாடுகள் ஆற்றல் பெற்றுள்ளனவா என்பது பற்றிய நம்பிக்கைக் குறைவா? அல்லது சோசலிசத்தைக் கட்டி வளர்ப்பதில் கஷ்டங்களை எதிரிட நேர்ந்து ஏமாற்றமடைந்தவர்கள் தமது பொருளாதார வெற்றிகள் மூலம் தமது நாடுகளில் சோசலிசத்தை வெற்றிகரமாகக் கட்டி வளர்த்து அதன் மூலம் சர்வதேசப் புரட்சி இயக்கத்தின் மீது பிரதான செல்வாக்கைச் செலுத்தும் சாத்தியக் கூறு இருக்கிறதா என்பதைப் பார்க்க முடியாதவர்கள் எடுக்கும் நிலையா? தாங்கள் குறுக்குவழி என்று கருதும் வேறு வழிகளில் விரைவில் புரட்சியை நிறைவேற்ற அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், உழைப்பின் மூலம் மட்டுமே, மக்களின் உழைப்பு முயற்சி மூலம் மட்டுமே,

வெற்றிபெற்ற புரட்சி உறுதிப்படவும், தனது சாதனைகளை விரிவாக்கவும், முதலாளித்துவத்தின் மீதான சோசலிசத்தின் மேம்பாட்டை நிரூபிக்கவும் முடியும்.

வளர்ச்சி குன்றிய பொருளாதாரத்தைச் சுகவீரித்துக்கொண்டுள்ள நாடுகளில் புரட்சிகள் நிறைவேற்றப்பட்டால் சோசலிசத்தை மேம்படுத்துவது எளிதான காரியமில்லை. ஆனால், ரசியாவும் வேறு பல சோசலிச நாடுகளும் தமது உதாரணம் மூலம் இந்தச் சூழ்நிலையிலும் கூட சரியான தலைமை அளிக்கப்பட்டால், மாபெரும் வெற்றிகளைச் சாதிக்க முடியும் என்பதைத் தீர்க்கமாக நிரூபித்துவிட்டன. உலக முழுவதற்கும் முதலாளித்துவ அமைப்பை விட சோசலிச அமைப்பு உயர்ந்தது என்பதையும் எடுத்துக்காட்டி விட்டன.

மேலும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம் புரட்சிகரப் போராட்டம் நடத்துவதற்கு எத்தகைய நிலை மிகவும் சாதகமானது? சமாதானம், சமாதான சகவாழ்வு சூழ்நிலையா அல்லது இடைவிடாது சர்வதேச நெருக்கடியும் கெடுபிடிப் போருமுள்ள சூழ்நிலையா?

இந்தக் கேள்விக்கு உரிய பதில் என்ன என்பது பற்றிச் சந்தேகமே இருக்கமுடியாது. ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள ஆளும் வட்டாரங்கள், கெடுபிடிப் போர்ச் சூழ்நிலையினைப் பயன்படுத்தி குறுகிய தேசிய வெறி, யுத்த வெறி, கம்யூனிஸ்ட் எதிர்ப்பு ஆகியவற்றை மூட்டுகின்றன. இதன் மூலம், வெறிபிடித்த பிற்போக்காளர்களையும் பாசிச ஆதரவாளர்களையும் ஆட்சிப் பீடத்திலேற்றி ஜனநாயகத்தை ஒழித்துக்கட்டவும், அரசியல் கட்சிகளை, தொழிற்சங்கங்களை, இதர தொழிலாளிவர்க்க வெகுஜன அமைப்புகளை ஒழித்துவிடவும் முயல்கின்றன—என்பதை அறியாதார் யார் ?

சமாதானத்திற்காக கம்யூனிஸ்டுகள் போராட்டம் நடத்துவதன் மூலம் அவர்கள் மக்களிடையில் நெருக்கத்தை வலுப்படுத்திக் கொள்கிறார்கள். தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் பெருக்கிக் கொள்கிறார்கள். இது, புரட்சிக்கான ''அரசியல் படை''யொன்றினை உருவாக்க உதவியாக இருக்கிறது.

சமாதானத்திற்காகவும், வேறுபட்ட சமூக அமைப்புடைய அரசுகளின் சமாதான சகவாழ்விற்காகவும், நடைபெறும் போராட்டம், சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் இறுதி இலட்சியங்களை அடைவதற்கான போராட்டத்தைத் தடைசெய்வதோ தாமதப்படுத்துவதோ இல்லை. மாறாக, முழு அளவிற்கு வளர்ச்சி அடைவதைச் சாத்தியமாக்குகிறது.

தாமே புரட்சியை வெற்றிகரமாக நடத்தியுள்ள அனுபவமிக்க சீனத் தோழர்கள் பிரதான விசயத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்பதை நம்புவது கடினம். அதாவது இன்று உலக சோசலிச அமைப்பு வலுப் படுவதன் மூலமும், நாடுகளிலுள்ள தொழிலாளர்களின் புரட்சிகரமான வர்க்கப் போராட்டங்கள் மூலமும், தேசிய விடுதலைப் போராட்டங்கள் மூலமும், அண்மையில் விடுதலைபெற்ற ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் அரசியல் பொருளாதார சுதந்திரத்தைப் பலப்படுத்துவதன் மூலமும், ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கு எதிரான சமாதானப்போராட்டங்கள் மூலமும் ஏகபோக முதலாளிகளை எதிர்த்து பொதுமக்கள் நடத்தும் போராட்டம் மூலமும் வளர்ந்து வருகிறது. மேலும் பல வழிகளில், ஒன்றுக்கொன்று எதிராக இல்லாமல் ஒன்றுபட்டு ஒரே நோக்கத்திற்காக ஏகாதிபத்திய ஆதிக்கத்தை தூக்கியெறிவதற்காக நடக்கும் போராட்டங்கள் மூலமாக வும் வளர்ந்து வருகிறது.

சீனத் தோழர்கள், பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா இதர நாடு களிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் சந்தர்ப்பவாதம் மற்றும் சீர்திருத்த வாதத்திற்குப்போய்விட்டதாயும் ''பாராளுமன்ற கோளாறு'' மட்டுமல்ல ''முதலாளித்து வசோசலிசத்''திற்கு சரிந்துவிட்டதாயும் அகம்பாவத்துட டனும் கேவலப்படுத்தும் முறையிலும் குற்றம் சாட்டப்படுகிறார்கள், எந்த அடிப்படையில்? உடனடியான பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற முழக்கத்தை இக்கட்சிகள் முன்வைக்கவில்லை என்ற காரணத்தால்தான். புரட்சிகர சூழ்நிலை இல்லாமல் இது சாத்தியமில்லை என்பதை சீனத் தலைவர்களும் உணரவேண்டும்.

நாட்டில் புரட்சிக்குகந்த சூழ்நிலை இல்லாதபோது ஆயுதந்தாங்கிய புரட்சி என்ற முழக்கத்தை முன்வைப்பது தொழிலாளி வர்க்கத்தின் தலையில் தோல்வியைக் கட்டுவதாகும் என்பதை மார்க்சிய-லெனினி யத்தில் அறிவுள்ள அனைவரும் அறிவார்கள். இந்தப் பிரச்சினையை வி. இ. லெனின் எவ்வளவு எச்சரிக்கையுடன் அணுகினார்; புரட்சியில் இறங்குவதற்கான நேரத்தைத் தேர்ந்தெடுப்பதில் எத்தகைய அரசியல் தீர்க்க தரிசனத்துடன், பருண்மையான நிலை பற்றிய அறிவுடன் நடந்து கொண்டார் என்பது எல்லோரும் அறிந்த விசயம். அக்டோபர் புரட்சிக் கட்டத்திலேயே, அக்டோபர் 24-ந் தேதி செயலில் இறங்குவது மிகவும் அவசரமாகிவிடும் என்றும் அக்டோபர் 26-க்கு காத்திருப்பது மிகவும் தாமதமாகிவிடும், அதற்குள் நாம் அனைத்தையும் இழந்துவிடு வோம் என்றும் சுட்டிக் காட்டி, இதன் விளைவாக அக்டோபர் 25-ந் தேதியே அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்றார். வர்க்க முரண் பாடுகளின் உக்கிரத்தன்மையினை, புரட்சி சூழ்நிலை இருப்பதை, புரட் சிக்கான தருணத்தைத் தேர்ந்தெடுப்பதை யார் செய்வது? ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தால், அதன் முன்னணிப் படை யாகிய மார்க்சிய—லெனினிய கட்சியால் மட்டுமே, இது செய்யப்பட முடியும்.

ஒரு கட்சி தொழிலாளி வர்க்கக் கட்சி என்று தன்னை அழைத்துக் கொண்டே பொருளாதாரப் பிரச்சினைகளை மாத்திரம் கவனித்து, தொழிலாளி வர்க்கத்திற்குப் புரட்சிகர உணர்வு பெறும் வகையில் போதனை அளிக்காமல், அரசியல் போராட்டங்களுக்கு, அதிகாரத்தை கைப்பற்றும் போராட்டங்களுக்குத் தயார் செய்யாமல் இருக்குமானால் அத்தகைய கட்சி மோசமானது என்பதை சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாறு காட்டுகிறது. இந்த நிலை இருக்குமானால் இக்கட்சி தவிர்க்க முடியாத வகையில் சீர்திருத்தவாதத்திற்கு சரிந்து விடும். இதே போல தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் மற்றும் அனைத்து உழைக்கும் மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்த நடத்தும் போராட்டங்களிலிருந்து ஒதுங்கி தனிமைப்படுத்தப்பட்டு, அரசியல் போராட்டக் கடமையை மட்டுமே வலியுறுத்தும் கட்சியும் மோசமானதே. இத்தகைய கட்சி தவிர்க்க முடியாத வகையில் பொது மக்களிடமிருந்து விலகி நிற்கும். எல்லா வடிவங்களிலான வர்க்கப் போராட்ட முறைகளையும் சரியான முறையில் பயன்படுத்தி அவற்றை திறமையாக இணைத்துச் செயல்படுவதன் மூலமே ஒரு கட்சி உண்மை யான புரட்சிகரக்கட்சியாக ஆகிறது; மார்க்சிய-லெனினியகட்சியாகிறது. பொது மக்களின் தலைவனாக விளங்கும் இக் கட்சி முதலாளித்து வத்தைத் தகர்த்தொழித்து அதிகாரத்தைக் கைமேல் பெற தொழிலாளி வர்க்கத்திற்கு வழிகாட்ட முடியும்.

முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் இருக்கும் கம்யூ னிஸ்ட்டு கட்சிகள் உழைக்கும் மக்களின் பொருளாதார சமூக நலன்களுக் கான போராட்டத்தில் தமக்கு உடனடிக் கடமை இருப்பதை உணர்கின் றன; முதலாளித்துவத்தின் கீழேயே சாத்தியமான ஜனநாயக சீர்திருத் தங்களுக்குப் போராடுகின்றன; தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், சிறு முதலாளிகள் ஆகியோரின் வாழ்க்கை நிலைமைகளைஉயர்த்தப் பாடு படுகின்றன; விரிவான ஒரு ஏகபோக முதலாளித்துவ எதிர்ப்பு முன்ன ணியை கட்டுவதற்கு உழைக்கின்றன; இது, மேலும் போராட்டங்கள் நடத்தி, சோசலிசப் புரட்சி வெற்றியடைவதற்குரிய அடிப்படையாக அமைகிறது. அதாவது 1960 மாஸ்கோ அறிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்தையும் இக்கட்சிகள் செய்து வருகின்றன. இதனைப் பயங்கர மான பாவச்செயல் என்று சீனத் தலைவர்கள் கருதுகிறார்கள்.

முதலாளித்துவம் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் செய்து வரும் வேலைகள் அனைத்தையும் சீனத் தலைவர்கள் எதிர்த்து ஆட்சேபித்ததின் மூலம் வர்க்கப் போராட்டத்தின் முன்வரிசை யில் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடி வரும் இந்த கம்யூனிஸ்டு களுடன்தமக்குள்ளஒருமைப்பாட்டின் ஒரு சாதாரணஉணர்ச்சியைக் கூடக் காட்டவில்லை; இந்த நாடுகளின் பருண்மையான நிலைமைகள் பற் றியோ இவற்றில் தொழிலாளி வர்க்கப் புரட்சி இயக்கம் எத்தகைய

குறிப்பிட்ட வழிகளில் முன் செல்கிறது என்பது பற்றியோ சீனத்தலைவர்கள் புரிந்துகொண்டதாகக் காட்டவில்லை; உண்மையில் 'புரட்சியின் பெயரில், புரட்சிக்கு வழி நடத்திச் செல்லும் வழிகளை நடைமுறையில் நிராகரிக்கிறார்கள்; கம்யூனிஸ்ட் கட்சியை மக்களிடமிருந்து தனிமைப் படுத்தி, ஏகபோக ஆதிக்கத்திற்கு எதிராக நடத்தும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தனது நேச சக்திகளை இழக்கும் வழியில் கொண்டு செல்லும் ஒரு பாதையை நிர்ப்பந்தமாகத் திணிக்கிறார்கள்.

பல்வேறு நாடுகள் சோசலிசத்திற்கான மாற்றத்தை எந்த முறைகளில் கொண்டுவரும் என்ற விசயத்திலும் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்திலிருந்து சீனத் தோழர்கள் வேறுபட்ட கருத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாஸ்கோ கூட்டங்களில் வெளியிடப்பட்ட ஆவணங்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத்திட்டம் இவற்றில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருப்பது போல ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும் இதர மார்க்சிய லெனினிய கட்சிகளும்—சோசலிசத்திற்கான மாற்றம் சமாதான பூர்வமாயும்-சமாதான பூர்வமல்லாத முறையிலும் சாத்தியம் என்ற நிலையிலிருந்து செயல்படுகின்றன. அப்படியிருந்த போதிலும் நமது கட்சியும் இதர சகோதரக் கட்சிகளும் சமாதான முறையினை மாத்திரமே அங்கீகரிப்பதாக சீனத் தோழர்கள் பிடிவாதமாகச் சாதித்து வருகின்றனர்.

இந்த விசயம் குறித்து ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, 1963 மார்ச் 30-ம் தேதியன்று எழுதிய கடிதத்தில் மீண்டும் எடுத்துக் கூறியுள்ளது.

''தொழிலாளி வர்க்கமும் அதன் முன்னணிப் படையான மார்க்சிய—லெனினிய கட்சிகளும் சோசலிசப் புரட்சிகளை உள்நாட்டுப் போர் இல்லாமல் சமாதான வழிதனில் நடத்தி முடிக்கப் பாடுபடும். இத்தகைய சாத்தியக்கூறினை நிறைவேற்றுவது, தொழிலாளி வர்க்கம் மற்றும் அனைத்து மக்களின் நலன்களுக்கும், நாட்டின் பொதுவான தேசிய நலன்களுக்கும் உகந்ததாக இருக்கும். அதே சமயத்தில் புரட்சியை வளர்ப்பதற்குரிய பாதையைத் தேர்ந்தெடுப்பது தொழிலாளி வர்க்கத்தினை மட்டும் பொருத்தல்ல—சுரண்டும் வர்க்கங்கள் மக்களுக்கு எதிராக பலாத்காரத்தைப் பயன்படுத்துமானால், தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்ற சமாதானமல்லாத பாதையைப் பயன்படுத்தும் நிர்ப்பந்தம் ஏற்படும். இவையாவும், பருண்மையான சூழ்நிலைகள் நாட்டிற்குள்ளும் உலக அரங்கத்திலும் வர்க்க சக்திகள் எவ்வாறு பிரிந்து நிற்கின்றன என்பதையே சார்ந்திருக்கின்றன.''

''எனவே, முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கான மாற்றம் எந்த முறையில் நடைபெற்றாலும் சரி, இத்தகைய மாற்றம் சோசலிசப்

புரட்சியின்மூலமும், பல்வேறு வடிவங்களிலுள்ளபாட்டாளிவர்க்கசர்வாதிகாரத்தின் மூலமுமே சாத்தியம். எல்லா முதலாளித்துவ நாடுகளிலும், கம்யூனிஸ்டுகளின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் தன்னலமற்ற போராட்டம் நடத்தி வருவதைப் பெரிய அளவுக்குப் பாராட்டி, அவர்களுக்கு எல்லாவிதமான உதவியும் ஆதரவையும் அளிக்க வேண்டியது நம் கடமையென்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது''.

நமது கருத்தை நாம் திரும்பத்திரும்ப விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறோம். இங்கு இன்னும் அதிக விபரமாக விளக்கத் தேவையில்லை.

ஆனால் இந்தப் பிரச்சினையில் சீனத் தோழர்கள் எடுக்கும் நிலை என்ன? அவர்களது எல்லாக் கூற்றுகளிலும், ஜூன் 14-ந் தேதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய கடிதத்திலும் முழுவதுமாக வெளிப்படுவது இதுதான்; புரட்சிக்கு விசுவாசமாக இருப்பதன் பிரதான அம்சமாக எப்பொழுதும் எல்லாவற்றிலும் எங்கும் ஆயுதந் தாங்கிய எழுச்சியை அங்கீகரிப்பதுதான் என்று சீனத் தோழர்கள் கருதுகிறார்கள். இதன்மூலம், சோசலிசப் புரட்சியின் வெற்றிக்கு சமாதான முறையிலுள்ள போராட்ட வழிகளைப் பயன்படுத்தும் சாத்தியக்கூறுகளை முற்றிலும் நிராகரிக்கிறார்கள். அதே சமயத்தில் பலாத்காரம், பலாத்காரமின்மை என்ற எல்லாவிதமான புரட்சிகரமான வர்க்கப் போராட்ட முறைகளிலும் கம்யூனிஸ்டுகள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று மார்க்சிய—லெனினியம் நமக்குப் போதிக்கிறது.

இன்னொரு முக்கியமான பிரச்சினை—சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்திற்கும், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளிலுள்ள மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் இடையில் உள்ள உறவு பற்றியதாகும்.

இன்று, சர்வதேசப் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கம், உலக சோசலிச அமைப்பு, முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாட்டு மக்களின் தேச விடுதலை இயக்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. நமது யுகத்தின் மகத்தான சக்திகள் இவை. இவற்றினிடையே உள்ள சரியான உறவு, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெற்றி காண்பதற்குரிய ஒரு பிரதான நிபந்தனையாகும்.

இந்தப் பிரச்சினைகளுக்கு சீனத் தோழர்கள் எப்படிப் பரிகாரம் காண்கிறார்கள்? இதை அவர்களது புதிய 'கோட்பாட்டில்' இருந்து காணலாம்; இதன்படி நமது கால கட்டத்தின் பிரதான முரண்பாடு சோசலிசத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலானதல்ல; மாறாக, தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையி

லானது என்று நமக்குக் கூறுகிறார்கள். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் தீர்மானகரமான சக்தி—சீனத் தோழர்கள் கருத்துப்படி உலக சோசலிச அமைப்பல்ல, சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டமுமல்ல, ஆனால் தேசிய விடுதலை இயக்கங்களேயாகும் என்று மீண்டும் நமக்குக் கூறப்படுகிறது.

இவ்வாறு சீனத் தோழர்கள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களிடம் மிக எளிதான வழியில் பிரபலமடையப் பார்க்கிறார்கள் போலும். ஆனால் இந்தக் ''கோட்பாட்டால்'' யாரும் ஏமாந்துவிட வேண்டாம். சீனக் கோட்பாட்டாளர்கள் விரும்பினாலும், விரும்பா விட்டாலும், இந்தக் கோட்பாட்டின் நோக்கம் தேசிய விடுதலை இயக்கத்தை சர்வதேசத் தொழிலாளிவர்க்கத்திலிருந்தும், அது படைத்த உலக சோசலிச அமைப்பிடமிருந்தும் தனிமைப்படுத்துவதேயாகும். ஆனால் இது தேசிய விடுதலை இயக்கத்திற்கே ஒரு பேராபத்தைக் கொண்டு வந்துவிடும்.

அக்டோபர் புரட்சியும் அதன்பின் ஏற்பட்ட சோசலிச உலக அமைப் பும் ஏகாதிபத்தியத்தின் அடிப்படையையே நிலைகுலையச் செய்திராவிட் டால், காலனியாதிக்க சக்திகளைக் குலைத்திருக்காவிட்டால், ஆசிய மக்களில் பலர்—அவர்களது எல்லாவிதமான வீரமும், தியாகமும் இருந்த போதிலும்—வெற்றி பெற்றிருக்க முடியுமா?

இப்போதும்கூட விடுதலை பெற்றுவிட்ட தேசங்கள் தமது போராட் டத்தில் புதிய கட்டத்திற்குப் பிரவேசித்துவிட்டார்கள். தமது அரசியல் வெற்றிகளையும், பொருளாதார சுதந்திரத்தையும் வலுப்படுத்தும் முயற்சிகளில் முற்றாக ஈடுபட்டிருக்கிறார்கள். சோசலிச நாடுகளின் உதவி இல்லாவிட்டால் இந்த கடமைகளை நிறைவேற்றுவது சாத்திய மற்றதாக இல்லாவிட்டாலும் அளவிட முடியாத அளவுக்கு கடினமாக இருந்திருக்கும் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா?

மார்க்சிய—லெனினியவாதிகள், தேசிய விடுதலை இயக்கங்களின் வருங்காலத்தையும் அவற்றின் யுக முக்கியத்துவத்தையும் எப்பொழுதும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், இந்த இயக்கம் மேலும் வெற்றி களைப் பெற—ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் பிரதான சக்தி என்ற முறையில் உலக சோசலிச நாடுகளுடனான உறுதியான இணைப்பும், முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளர் இயக்கத்துட னான உறுதியான உறவும் முதன்மையான நிபந்தனைகள் என்பதை உணர்கின்றனர். இந்த நிலை 1960-ம் வருடத்திய அறிக்கையில் எடுத்துக் கூறப்பட்டது; இது, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு அத்தியாவசியமான தேவையான தொழிலாளி வர்க்கத் தலைமை (மேலாதிக்கம்) என்ற லெனினது கருத்தை அடிப் படையாகக் கொண்டது. இத்தகைய மேலாதிக்கம் இருந்தால்தான்

இந்த இயக்கம் தனது இறுதிக் கட்டத்தில் உண்மையான சோசலிசத் தன்மையினைப் பெற்று, சோசலிசப் புரட்சிப் பாதையில் முன்னேறும்.

லெனினுடைய கருத்துக்கள், அக்டோபர் புரட்சியின் அனுபவங்களின் மூலமும் — இதர நாடுகளின் அனுபவங்கள் மூலமும் சரி என்று நிரூபிக்கப்பட்டு விட்டன. யாருடைய மனதிலும் இதைப்பற்றிய சந்தேகங்கள் எழவில்லை. இருந்தபோதிலும், சீனத் தோழர்கள், லெனின் கருத்தில் 'திருத்தம்' செய்து ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெறும் உலகப் போராட்டத்தில் தலைமை வகிப்பது தொழிலாளி வர்க்கம் அல்ல; ஆனால்,குட்டி முதலாளிய வர்க்கம் அல்லது தேசிய முதலாளிகள், அல்லது ''சில தேச பக்தி மனப்பான்மையுள்ள மன்னர்கள், இளவரசர்கள், பிரபுக்கள்''கூட இருக்கலாம் என்று நிரூபிக்க முயல்கிறார்கள். இத்தனைக்கும் பின்னால், என்றும் எந்தச் சூழ்நிலையிலும் பிரச்சினைகள் பற்றிய பாட்டாளி வர்க்க அணுகுமுறையைக் கைவிட்டு விடக் கூடாது என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை, உலகக் கம்யூனிச இயக்கத்திற்குப் போதனை செய்கிறது.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், தேசிய விடுதலை இயக்கம் ஆகியவற்றின் எதிர்கால வெற்றிகள் உறுதிப்படுத்தப்படுவது அவற்றின் உறுதியான இணைப்பையும் ஒற்றுமையையும் பொருத்துள்ளன; தமது பொது நலன்களால் உந்தப்பட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அவை நடத்தும் கூட்டான போராட்டத்தைப் பொருத்து இருக்கின்றன. இந்தப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம், அனைத்து மக்களின் நலன்களுக்கும், தன்னலமற்ற சேவை செய்வதன் மூலம், அதன் தலைமைப் பாத்திரத்திற்கு அங்கீகாரம் பெறுகிறது; தனது தலைமை, தனக்கும், தன்னுடைய நேச சக்திகளுக்கும் வெற்றியை உத்தரவாதம் செய்கிறது என்பதைத் தன் நேச சக்திகள் உணருமாறு செய்கிறது.

நமது லெனினியக் கட்சி, தேசிய விடுதலை இயக்கத்தை உலகப் புரட்சி இயக்கத்தின் ஒரு பகுதியாகவே—ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்கும் ஒரு மாபெரும் சக்தியாகவே கருதுகிறது. விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மாபெரும் நிறுவனர்களான மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகியோரின் மகத்தான முழக்கமான ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்ற முழக்கம் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் போர்ப்பதாகையாகிவிட்டது. மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகியோரின் பாதையைத்தொடர்ந்து விளாடிமிர் இலியிச் லெனின், மகத்தான அக்டோபர் புரட்சிக்குப் பிறகு எழுந்த புதிய வரலாற்றுச் சூழ்நிலையில் சோசலிச புரட்சிக்கும் தேசிய விடுதலை இயக்கத்திற்கும் இடையேயுள்ள பிரிக்க முடியாத தொடர்பைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டினார்.

''அனைத்து நாடுகளின் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்ற முழக்கம் உலகப் புரட்சியின் வெற்றிக்கான போராட்டத்தின்

பிரதானமுழக்கமாக இருந்தது; இப்போதும் இருக்கிறது. புதிய சூழ்நிலையில் இந்த முழக்கத்தின் உள்ளடக்கம் விரிவடைந்துவிட்டது. ''அனைத்து நாடுகளிலுமுள்ள தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள்!'' என்ற முழக்கத்தை லெனின் அங்கீகரித்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இந்த முழக்கம் பாட்டாளிவர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும், தேசிய விடுதலை இயக்கத்தின் அதிகரித்த முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. தனது நடவடிக்கைகள் அனைத்திலும் நமது கட்சி இந்த மார்க்சிய—லெனினிய சர்வதேசக் கோட்பாட்டினை உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறது.

நமது கால கட்டத்தின் தீர்மானகரமான பிரச்சினைகள்பற்றி சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை வகுத்துள்ள தவறான நிலைக்கு விளக்கம் என்ன என்ற கேள்வி எழுகிறது. சீனத் தோழர்கள் யதார்த்த நிலையிலிருந்து முற்றிலும் விலகியிருக்க வேண்டும்; அல்லது யுத்தம், சமாதானம், புரட்சி இவை பற்றி வறட்டுவாத புத்தக பூச்சி அணுகுமுறைகளைக் கொண்டிருக்கவேண்டும். அல்லது இன்றுள்ள யுகத்தின் பருண்மையான நிலைமைகளைப்பற்றிப் புரிந்துகொள்ளத் தவறியிருக்கவேண்டும்; அல்லது உலகப் புரட்சி பற்றிச் சீன தோழர்களை எழுப்பியுள்ள ஆரவாரம் புரட்சியுடன் எவ்வித சம்பந்தமும் இல்லாத உள்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம்.

இவையாவும், உலகக் கம்யூனிச இயக்கத்தின் மீது சீனக் கம்யூனிஸ்ட் தலைமை திணிக்க விரும்பும் கொள்கையானது நாசகரமானது, தவறானது என்பதையே எடுத்துக்காட்டுகின்றன. ''பொதுவழி'' என்ற போர்வையின் கீழ் சீனத் தலைவர்கள் முன்வைத்துள்ள திட்டம்—தொழிலாளி வர்க்கத்தின் மிகப் பொதுவான கடமைகளை வரிசைப்படுத்திக் காட்டியிருக்கிறதே தவிர வேறு எதுவுமில்லை. இதிலும் நாம் வாழும் காலத்தைப் பற்றியோ, வர்க்க சக்திகளின் உண்மையான சேர்க்கை பற்றியோ, வரலாற்றின் இன்றைய கட்டத்தின் விசேச அம்சங்கள் பற்றியோ எவ்வித அக்கறையும் காட்டப்படவில்லை. இன்றுள்ள யுகத்தின் நிலைமைகளுக்கேற்ப நமது இயக்கத்தின் கடமைகள் எவ்வாறு மாறுகின்றன என்பதை சீனத் தோழர்கள் பார்ப்பது இல்லை அல்லது பார்க்க விரும்பவில்லை. முதலாளித்துவத்திலிருந்து சோசலித்தை நோக்கி மாறும் போது எல்லாக் கட்டங்களுக்கும் செல்லுபடியாகத்தக்க பொதுக்கடமைகளுக்கு பொது வழியைத் தாழ்த்தி இதன் பருண்மையான தன்மையினையும், பயன்பாட்டுத்தன்மையும், திறனையும் இழக்கச் செய்கின்றனர்.

சகோதரக் கட்சிகள் தமது இன்றைய கொள்கையை வகுப்பதில், தனித்தனி நாடுகளிலும் சரி, உலக ரீதியிலும் சரி, வர்க்க சக்திகளின் அணி சேர்க்கையையும், இரு நேர் எதிரான அமைப்புகளின் வளர்ச்சியிலுள்ள விசேசத் தன்மையையும் தேசிய விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியில் இன்றைய கட்டத்தையும் பருண்மையாக ஆய்வு செய்துள்ளன.

உலக நிலையில் ஏற்பட்டு வரும் மாறுதல்களை கவனமாக பகுப்பாய்வு செய்ததன்விளைவாக உலகிலுள்ள சகோதரக்கட்சிகள் இன்றைய சகாப்தத்தைப்பற்றிய மார்க்சிய-லெனினிய வரையறுப்புக்குவந்துள்ளன. நமது சகாப்தம் மகத்தான அக்டோபர் புரட்சியால் தொடங்கி வைக்கப்பட்ட முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிவரும் சகாப்தம். அது ஒன்றை ஒன்று எதிர்க்கும் இரு சமூக அமைப்புகளிடையே போராட்டம் நடைபெறும் சகாப்தம், சோசலிச புரட்சிகளின் தேசிய விடுதலைப் புரட்சிகளின் சகாப்தம், ஏகாதிபத்தியம் சரிந்து சாய்வதன் காலனியாதிக்கம் ஒழித்துக் கட்டப்படுவதன் சகாப்தம்-மேலும் மேலும் புதிய புதிய மக்கள் சோசலிச பாதையில் காலடி எடுத்து வைக்கும் சகாப்தம். உலக ரீதியாக சோசலிசமும் கம்யூனிசமும் வெற்றிவாகை சூடும் சகாப்தம்.

நமது சகாப்தத்தின் வரையறுப்பு மூலம் உலகக் கம்யூனிச இயக்கத்தின் யுத்தத் தந்திரம், போர்த்தந்திரம் இவற்றை வகுப்பதற்குரிய சரியான அணுகுமுறைக்கான அடிப்படை கிடைத்தது.

நமது சகாப்தத்தின் உள்ளடக்கம் பற்றிய இத்தகைய வரையறுப்பு, உலகக் கம்யூனிச இயக்கத்தின் யுத்த தந்திரம், போர்த்தந்திரம் ஆகியவற்றைச் சரியான முறையில் வகுத்தளிப்பதற்கான அடிப்படையாகத் திகழ்கிறது.

மார்க்சிய—லெனினியக் கட்சிகள் தமது பொது வழியை வரையறுத்துக் கொண்டுவிட்டன. இதன் பிரதான அம்சங்கள் பின்வருமாறு:-

— இன்றுள்ள சகாப்தத்தில் உலகப் புரட்சி இயக்கத்தின் இயல்பையும் சாரத்தையும் வரையறுப்பதற்கு—சோசலிசம், கம்யூனிசத்தைக்கட்டியமைக்கும் மக்கள், ஏகாதிபத்தியத்திற்கெதிராக நடத்தும் போராட்டத்தையும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கத்தையும், ஒடுக்கப்பட்ட மக்களின் தேச விடுதலைப் போராட்டத்தையும் பொதுவான ஜனநாயக இயக்கங்களையும் ஒரே ஆற்றொழுக்காக இணைத்தல்வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்புசக்திகளின் நேச அணியில் நிர்ணயகரமான பாத்திரம் வகிப்பது சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் அதன் பிரதானப் படைப்பான உலக சோசலிச அமைப்புமாகும். உலக சோசலிச அமைப்பு தனது முன் உதாரணத்தின் மூலமும் பொருளாதார வளர்ச்சியின் மூலமும் உலக சோசலிச புரட்சியின் மீது தனது பிரதான செல்வாக்கைச் செலுத்துகிறது.

. — நடப்பிலுள்ள புறநிலை வரலாற்றுச் சூழ்நிலைமைகளின் காரணமாக (ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மையில் ஏற்பட்டுள்ள பெரிய வளர்ச்சி ஆகியன பிரம்மாண்டமான நாச சக்தி வாய்ந்த ஆயுதங்களின் தோற்றம்). இன்றுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் முன்னுள்ள பிரதானக் கடமை, அணு ஆயுத யுத்தத்தைத் தடுப்பதற்குரிய போராட்டமே ஆகும். சமாதானத்தைப் பாதுகாக்கவும், அணு ஆயுத சர்வ நாசகத்திலிருந்து மனித குலத்தைக் காக்கவும், சமாதானத்தை

விரும்பும் அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்ட வேண்டியது கம்யூனிஸ்ட் கட்சிகளின் முதன்மையான கடமையாகும்.

— உள்நாட்டில் வர்க்கப் போராட்டம் வளர்ச்சியடைவதன் விளைவாகவே சோசலிசப் புரட்சி நடைபெறுகிறது; ஒவ்வொரு நாட்டிலுள்ள பருண்மையான நிலைமைகளையொட்டி இதன் வடிவங்களும் வழிமுறைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. எல்லா நாடுகளுக்குமான பொது விதி, முதலாளித்துவத்தின் அதிகாரத்தைப் புரட்சிகரமாக அகற்றுவதும் ஏதாவது ஒரு வடிவத்தில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதும் ஆகும். உள்நாட்டுப் போருடன் தொடர்பற்ற சமாதானப் பாதையின் மூலம் சோசலிசப் புரட்சியை நடத்துவதற்கு, இப்போது கிடைத்துள்ள வாய்ப்புகளை அதிகபட்சமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது, தொழிலாளி வர்க்கம் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கடமையாகும். அதேசமயத்தில், சமாதானமல்லாத முறைக்கும், முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பை ஆயுதந்தாங்கி ஒடுக்குவதற்கும், தயாராக இருத்தல் வேண்டும். பொதுவான ஜனநாயகப் போராட்டம், சோசலிசத்திற்கான போராட்டத்தின் இன்றியமையாத பகுதியாகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சிக் கடமைகளை இறுதி வரையில் நிறைவேற்றுவது; விவசாயி மக்களுடனும், தேசபக்த மனப்பான்மையுள்ள தேசிய முதலாளிகளுடனும் சேர்ந்து ஒரு தேசிய முன்னணியை வளர்த்து வலுப்படுத்துவது; தேசிய ஜனநாயக ஆட்சியை நிறுவி, முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதைக்கு மாறிச் செல்வதற்குரிய சூழ்நிலைகளைத் தயாரிப்பது ஆகியவையே தேசிய விடுதலை இயக்கத்தில், தொழிலாளி வர்க்கம் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் இலட்சியமாகும்.

சோசலிச நாடுகளிடையே கூட்டுறவு; பரஸ்பர உதவிக்கான உறவுகள்; சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் இயக்கத்தின் இணைப்பு மற்றும் ஒற்றுமை; கூட்டாக உருவாக்கப் பெற்ற நிலைப்பாடுகளுக்கும், மதிப்பீடுகளுக்கும் விசுவாசமாக நடப்பது; கட்சி வாழ்க்கை, கட்சிகளுக்கிடையேயுள்ள உறவு ஆகியவற்றில் லெனினியக் கொள்கைகளை உறுதியுடன் பற்றி நிற்பது ஆகியவையே, கம்யூனிஸ்டுகள் முன்னுள்ள வரலாற்றுக் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான முன் நிபந்தனைகளாகும்.

இவையே, நமது சகாப்தத்தில், உலகப் புரட்சி இயக்கத்தின் அடிப்படை வளர்ச்சிப் பாதைகளாகும். இன்றைய கட்டத்தில், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொதுவழியின் அடிப்படை விதிகள் இவ்வாறு இருக்கின்றன.

சமாதானம், ஜனநாயகம், தேசிய சுதந்திரம், சோசலிசம் ஆகியவற்றிற்கான போராட்டமே இப் பொதுவழியின், சாரம் என்று சுருங்கக்

கூறலாம். இந்த வழியை நடைமுறையில் வழுவாது கடைபிடிப்பதன் மூலம் உலகக் கம்யூனிச இயக்கத்தின் வெற்றிகள் உறுதிப்படுத்தப்படு கின்றன.

இன்றுள்ள சூழ்நிலையில் சகோதரக் கம்யூனிஸ்ட் மற்றும் தொழி லாளர் கட்சிகளால்—பிரகடனத்திலும் அறிக்கையிலும் கூட்டாக வகுத் தளிக்கப்பட்டுள்ள சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் இந்த கேந் திரக் கொள்கைகள் எல்லாம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய வேலைத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இது நமது நாட்டிலும் சர்வதேசிய ரீதியிலும் பெற்ற புரட்சிகர அனுபவங்களை மார்க்சிய—லெனினிய அடிப்படையில், பொதுமைப்படுத்தியதன் அடிப்படையில் வகுக்கப்பட்டதாகும்.

நமது காலக்கட்டத்தில் மூலாதாரமான அரசியல் மற்றும் கோட் பாட்டுப் பிரச்சினைகள் பற்றிய சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் களின் தவறான கண்ணோட்டம், உலக சோசலிச முகாம்—உலக கம்யூனிச இயக்கம், ஆகியவற்றின் ஒற்றுமையைக் குலைக்கும் நடை முறை வேலையுடன் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளது.

ரசியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒற்றுமைதான், சோச லிச சமுதாயம் முழுமைக்குமே ஆதார சுருதி என்பதை சீனத் தோழர்கள் சொல்லளவில் ஒப்புக் கொண்டாலும், நம் கட்சியுடனான உறவையும் நம் நாட்டுடனான எல்லாவகைத் தொடர்புகளையும், நடைமுறையில் குலைத்து வருகிறார்கள்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அடிக்கடி சோசலிச நாடுகளிட முள்ள விசுவாசம் பற்றிப் பேசுகிறது. ஆனால், சீனத் தோழர்கள் இந் நாடுகளின்பால் கடைபிடிக்கும் அணுகுமுறை அவர்களின் அழுத்த மான பிரகடனங்களையே மறுத்து விடுகிறது.

சீன மக்கள் குடியரசு, கடந்த மூன்றாண்டுகளில், சோசலிச நாடு களுடனான தனது வியாபாரத்தை 50 சதவீதத்துக்கும் அதிகமாகக் குறைத்துக் கொண்டதாகப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. சில சோசலிச நாடுகளுக்கு சீனத் தோழர்கள் கடைப்பிடித்த இக்கொள்கை யின் விளைவுகள் மிகவும் வேதனையளிப்பதாக இருந்தது.

சீனத் தலைமையின் நடவடிக்கைகள், சோசலிச நாடுகளிடையே உள்ள பரஸ்பர உறவு பற்றிய கொள்கைகளுக்கு மட்டுமல்ல, அனைத்து நாடுகளாலும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று ஒத்துக்கொள்ளப் பட்ட விதிகளுக்கும் நெறிமுறைகளுக்கும் கூட அப்பட்டமான முரண் பாடாக இருக்கின்றன.

நடப்பிலிருக்கும் ஒப்பந்தங்களை மீறியதன் விளைவாக சில சோச லிச நாடுகளின் தேசியப் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட் டுள்ளது. இந்தப் பொருளாதாரத் தொடர்புகளை அறுத்துக் கொண்டதன்

மூலமாக, சீனாவின் சொந்த பொருளாதாரமும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வித நடவடிக்கைகளை மக்களிடம் நியாயப்படுத்தும் முயற்சியில், சீனத் தலைமை ''சொந்த சக்தியின் மீதே நம்பிக்கை வைப்பது'' என்ற கோட்பாட்டை முன் வைக்கிறது. பொதுவாக, ஒவ்வொரு நாட்டிலும் சோசலிசத்தைக் கட்டியமைக்க அந்தந்த நாட்டிலுள்ள மூலாதாரங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதையும், அம்மக்களின் சொந்த முயற்சியையும் பிரதானமாகச் சார்ந்திருப்பது சோசலிசத்துக்கான பொருளாதார, தொழில் நுட்ப அடிப்படையை அமைப்பதற்கு சரியான கொள்கை ஆகும். ஒவ்வொரு நாட்டிலும் சோசலிசத்தைக் கட்டியமைப்பது என்பது பிரதானமாக அந்நாட்டு மக்கள், தொழிலாளி வர்க்கம், கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் சொந்த விவகாரமாகும்.

சோசலிசத்தை முதன் முதலாகக் கட்டியமைத்த ரசியா தனது சொந்த சக்தி, தனது உள் நாட்டுச் செல்வாதாரம் இவற்றைச் சார்ந்துதான் இருக்க நேரிட்டது. ஆனால், இப்பொழுது சோசலிச நாடுகள் இருக்கின்ற காரணத்தால் ஒரு நாட்டு மக்கள் கைகட்டி உட்கார்ந்துகொண்டு மற்ற சோசலிச நாடுகளின் உதவியையே முழுக்கச் சார்ந்து இருந்துவிட முடியாது. ஒவ்வொரு சோசலிச நாட்டிலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சி, உள்நாட்டிலுள்ள எல்லாச் செல்வாதாரங்களையும் வெற்றிகரமான பொருளாதார வளர்ச்சிக்காக ஒன்றுதிரட்ட வேண்டியது தன்னுடைய கடமை என்று கருதுகிறது. சொந்த சக்தியை வைத்தே சோசலிசத்தைக் கட்ட வேண்டும் என்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் அறிக்கையைப் பொதுவாகப் பார்த்தால் ஆட்சேபணைக்கு இடமில்லாத ஒன்று போலத்தோன்றும்.

எனினும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் முழுக்கடிதமும், சீனப் பத்திரிகைகளில் வெளியான ஏராளமான அறிக்கைகளும், இந்தக் கூற்றுக்கு நடைமுறையில் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத விளக்கங்களையே அளிக்கின்றன. ''சொந்த சக்தியையே பிரதானமாகக் கொண்டு சோசலிசத்தைக் கட்டுவது'', என்ற சூத்திரம், பிறநாடுகளுடனான பொருளாதார உறவுகளைக் கொண்டு தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தைக் கட்டியமைக்க வேண்டும் என்ற கருத்தை, வெறும் வியாபாரத்தொடர்புடையதாகக் குறுக்கிவிட்டதை மூடிமறைக்கிறது. மற்ற சோசலிச நாடுகளின் மீதும் இதே அணுகுமுறையைத் திணிக்க முயல்கின்றனர் சீனத்தோழர்கள்.

சீனத் தலைவர்கள் தங்களுடைய ''சொந்த சக்திகளையே சார்ந்திருத்தல்'' என்ற பிரகடனத்தின் மூலம், சோசலிச நாடுகளுக்கிடையிலான நெருக்கமான நட்புறவைப் பலவீனப்படுத்த முயற்சிக்கின்றனர் என்றே தோன்றுகிறது. இந்தக் கொள்கைக்கும், சோசலிச சர்வதேசியக்

கோட்பாடுகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது சொல்லாமலே விளங்கும். சோசலிச முகாமின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முயற்சியாக அன்றி, இதனை வேறு எவ்வகையிலும் அர்த்தப்படுத்த முடியாது.

பொருளாதார உறவுகளைக் குறைத்துக் கொள்வதுடன் கூடவே, ரசியாவுடனான உறவை மேலும் மோசமாக்கக்கூடிய, திட்டமிட்ட பல நடவடிக்கைகளை சீனக் கம்யூனிஸ்ட் கட்சித்தலைமை மேற்கொண்டது.

சீனத் தலைவர்கள், சோசலிச முகாமின் ஒற்றுமையை மட்டுமன்றி, உலக கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையையும் சீர்குலைக்கிறார்கள் பாட்டாளி வர்க்க சர்வதேசியக்கோட்பாடுகளைக் காலில் போட்டு மிதிக்கின்றனர்; சகோதரக் கட்சிகளுக்கிடையிலான உறவுகளில் கடைப் பிடிக்கப்பட வேண்டிய, ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளையும் மீறுகின்றனர்.

அமெரிக்கா, பிரேசில், இத்தாலி, பெல்ஜியம், ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளை எதிர்க்க கூடிய பல்வேறு கட்சி விரோதக் குழுக்களை சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை உருவாக்கி அவற்றை ஆதரிக்கிறது.

உதாரணமாக, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை, பெல்ஜியத்தில் கடந்த பேராயத்தில் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட கிரிப்பா குழுவை ஆதரிக்கிறது; அமெரிக்காவில், (அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்ப்பதையே தனது முக்கிய கடமையாகக் கொண்டுள்ள ''ஹாம்மர் அண்ட் ஸ்டீல்'' என்ற சந்தர்ப்பவாத இடதுசாரிக் குழுவின் நாசவேலைகளுக்கு ஆதரவு தருகிறது. பிரேசிலில், வெளியேற்றப்பட்ட ஒரு குழுவாதக் கூட்டத்தை சீனத் தோழர்கள் ஆதரிக்கிறார்கள். (உதாரணமாக அமாசானஸ்—கிரேபாய்ஸ் குழு.)

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, ஆஸ்திரேலியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதனுடைய தலைமைக்கும் எதிரான ஒரு பிளவு வேலையை, முன்னர் தலைமையிலிருந்த இ. ஹில் என்பவரின் துணையுடன் செய்ய முயன்றது. மக்கள் சீனக் குடியரசுக்கு ஒரு முறை சென்று திரும்பிய ஹில், ஆஸ்திரேலியக் கட்சிக்கு எதிராக, பகிரங்கமாகச் செயல்பட்டு, தன்னையொத்த பலரைத் திரட்டவும் முயன்றார். ஆஸ்திரேலியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவிலிருந்து ஹில் விலக்கப்பட்டவுடன், அவர் பீகிங்கிற்குப் புறப்பட்டார்.

இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சியின், பாடுவா கிளையின் முன்னாள் நிர்வாகிகள் குழு ஆத்திரமூட்டக்கூடிய வகையில் ஒரு ''புரட்சிகரமான'' கலகத்திற்குத் தயாராகுமாறு துண்டுப் பிரசுரமொன்றைப் பகிரங்கமாக வெளியிட்டது. அதன் நடவடிக்கைகளுக்கெல்லாம் சீனப் பிரதிநிதிகள் ஊக்கமூட்டி வந்தனர்.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளில் சீர்குலைவு, அழிவு வேலை செய்வதில் சீனத் தலைவர்கள் குறிப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கம்யூனிச இயக்கத்தின் அணிகளிலிருந்து வெளியேறியவர்கள், ஓடுகாலிகள் ஆகியோர்களைப் புகழ்ந்து போற்றுகின்றனர்; இவ்வாறு ஓடிய ஓடுகாலிகள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையையும், உலக கம்யூனி இயக்கம் முழுவதையுமே இழித்தும் பழித்தும் வெளியிட்ட பல கட்டுரைகளை எடுத்துச் செய்தித்தாள்களிலும், பத்திரிகைகளிலும் மறு பிரசுரம் செய்கின்றனர்.

இலங்கையில் சீனப் பிரதிநிதிகள், டிராட்ஸ்கியின் ''நான்காவது அகிலத்தின்'' கைக்கருவியான இ. சமரக்கொடி குழுவோடு மிக நெருக்கமான தொடர்பு வைத்துள்ளனர்.

சீனத் தோழர்களின் நிலையை நான்காம் அகிலத்தின் டிராட்ஸ்கிய வாதிகள் தங்கள் சொந்த நோக்கங்களுக்கு பயன்படுத்திக்கொள்ள முயல்வதோடல்லாமல், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு ஒரு பகிரங்கக் கடிதமே எழுதினார். ''நான்காம் அகிலம் தனது பிறப்பிலிருந்து எந்தக் கருத்துக்களுக்கெதிராகப் போராடி வருகிறதோ... அப்போராட்டத்தைத்தான் இன்று நீங்கள் நடத்த முன்வந்துள்ளீர்கள்... நான்காம் அகிலம் இன்று உங்கள் பக்கம் நிற்கிறது... இன்று உலகம் முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்ட் இயக்கத்தில் நீங்கள் தொடங்கியுள்ள இந்த விவாதத்தை நான்காம் அகிலத்தின் செயலகம் வரவேற்கிறது. இதனைத் தொடர்ந்து வளர்க்குமாறு வேண்டுகிறது'', என்று அதில் வெளிப்படையாகவே அறிவித்தனர்.

உலக கம்யூனிச இயக்கத்தின் பொதுவழியிலிருந்து வழுவ விரும்பாத சகோதரக் கம்யூனிஸ்ட் கட்சிகளையும், அதன் தலைவர்களையும் சீனத் தலைவர்கள் கடுமையாகத் தாக்குகின்றனர். அமெரிக்கா, பிரான்சு, இத்தாலி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் நடவடிக்கைகளை அவமானப்படுத்தக்கூடிய கட்டுரைகளை பல மொழிகளில் அச்சிட்டுப் பிரசுரித்து விநியோகித்துள்ளனர். நேசக் கட்சிகளின் தலைவர்களுக்கு எதிராக இந்தக் கட்டுரையாளர்கள், எல்லாவகை தவறான சொற்களையும் உபயோகித்திருக்கிறார்கள். 'இரட்டை வேட வேலை', 'வலது சந்தர்ப்பவாதம்', 'திரிபுவாதம்', 'கம்யூனிச நெறிமுறைக்கு ஒவ்வாத ஒழுக்க முறைகள்', 'சமூக—ஜனநாயக சீரழிவு', 'தொடை நடுங்கித்தனம்', 'பொறுப்பில்லாதவர்கள்', 'கிளிப்பிள்ளைகள்', ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க புரட்சிகர மக்களிடம் வெறுத்தொதுக்கும் அகம்பாவ அணுகுமுறையை மேற்கொள்ளுதல் ஆகிய இவையாவும் சகோதரக் கட்சித் தலைவர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள சொற்களில் சிலவாகும்.

அமெரிக்க, மேற்கு அய்ரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகள் ''மிகவும் முரட்டுத் துணிச்சலான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன்'' ஒன்றுபடுவதாகச் சீனத் தலைவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை ஒரு ''சதிக்கும்பல்'' என்றே அழைக்கிறார்கள். பிரான்ஸ், இத்தாலி, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை ''ஏகாதிபத்தியவாதிகள், பிற்போக்காளர்கள் ஆகியோரின் நலன்களுக்காகக் கவலைப்படுகிறவர்கள்'' என்று கடுமையாக வசைமாறி பொழிந்திருக்கிறார்கள். ஜூன் 14-ந் தேதிய தனது கடிதத்தில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும் கூட, ''ஏகாதிபத்தியத்தின் கூட்டாளியாகப் பாத்திரமேற்றுள்ளதாகத்'' தாக்குமளவிற்கு சீனத் தலைமை தரம் தாழ்ந்து போயுள்ளது. டிராட்ஸ்கியவாதிகளைத் தவிர வேறுயாருமே லெனினுடைய மாபெரும் கட்சியின் மீது இவ்வளவு மோசமாகக் குற்றம்சாட்டத் துணிந்ததில்லை.

சீனத் தோழர்களின் இந்த நடவடிக்கையைக் கேட்டு ஏகாதிபத்தியம் மகிழ்வதில் ஏதாவது ஆச்சரியமுண்டா? முதலாளித்துவப் பத்திரிகைகள், உலக கம்யூனிச இயக்கத்தில் ஒரு ''நெருக்கடி''பற்றி கூச்சலிட்டு வருவதும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் நிலைபாட்டினால் எழுந்துள்ள வேறுபாடுகளைத் தங்கள் சொந்த நலன்களுக்காக ஏகாதிபத்திய அரசுகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று வலியுறுத்துவதும் தற்செயலானதல்ல.

உலக மார்க்சியத் திறனாய்வு (WORLD MARXIST REVIEW)என்ற இதழின் ஆசிரியர் குழுவிலிருந்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள் விலகிக்கொண்டார்கள். இது கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் கூட்டானகோட்பாட்டுத்தகவல் இதழாகும். சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய யதார்த்தமான தகவல் ஆதாரமான இந்த இதழ் சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு கிடைக்காதவாறு செய்யும் வகையில் சீன மொழியில் இதனை வெளியிடுவதையும் நிறுத்தி விட்டார்கள்.

சீனத் தலைமை உலகக் கம்யூனிச இயக்கத்தின் அணிகளில் பிளவு ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சகோதர மார்க்சிய—லெனினியக் கட்சிகளிடையே மிக நியாயமான கோபத்தையும் எதிர்ப்பையும் தோற்றுவித்துள்ளது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் கடிதம் சகோதரக் கட்சிகளுடன் கொள்ளும் உறவு பற்றிக் கூறுகையில், ''ஒரு கட்சி மற்ற சகோதரக் கட்சிகளுக்கு மேலான கட்சியாக இருப்பதற்கு அனுமதிக்க முடியாது... ஒரு கட்சி மற்றொரு கட்சியின் உள்விவகாரத்தில் தலையிடுவதையும் அனுமதிக்க முடியாது'' என்கிறது. இது முழுவதும் சரியானதே. ஆனால், சீனத் தோழர்கள் மட்டுமே இவ்விதம் அனுமதிக்க முடியாத செயல்களில் ஈடுபடுகிறார்கள். உலகக் கம்யூனிச இயக்கத்தின்

பிரகடனம், அறிக்கை ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ள கொள்கைகள், நெறிமுறைகள் இவற்றையெல்லாம் மீறி பிற கட்சிகளைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தி தங்கள் செல்வாக்கு மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயல்கின்றனர்.

உலக கம்யூனிச இயக்கத்திலும், சோசலிச முகாமிலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை கடைப்பிடிக்கும் தனது சொந்த வழிமுறைக்கு நல்ல எடுத்துக்காட்டு அல்பேனிய விசயத்தில் அவர்கள் எடுக்கும் நிலையாகும். 1960 பிற்பகுதியில் அல்பேனியத் தலைவர்கள் எல்லோருக்கும் தெரிந்தவாறு இன்றைய முதன்மையான பல பிரச்சினைகளில் இடது சந்தர்ப்பவாத போக்கைப் பகிரங்கமாகக் கடைப்பிடித்தனர்; ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பிற சகோதரக் கட்சிகளுக்கும் விரோதமான கொள்கையைப் பின்பற்ற ஆரம்பித்தனர். தங்கள் நாட்டில் ரசிய எதிர்ப்புப் பிரச்சாரத்தை அல்பேனியத் தலைவர்கள் ஆரம்பித்தனர். அதன் விளைவு ரசியாவுடன் அரசியல், பொருளாதார, கலாச்சார உறவுகளை முறித்துக் கொள்வதில் கொண்டுபோய்விட்டது.

பெருவாரியான கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள், அல்பேனியத் தலைவர்களின் இந்த லெனினிய விரோதப் போக்கைக் கடுமையாகக் கண்டித்துள்ளன. இதற்கு முற்றிலும் மாறான போக்கை சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் கடைப்பிடித்ததுடன் அல்பேனியாவை தங்களது ஊது குழலாக, ஒலிபெருக்கியாகப் பயன்படுத்திக் கொள்ள தங்களால் இயன்றதனைத்தையும் செய்தார்கள். சீனத் தோழர்கள் தான் அவர்களை ரசியாவுக்கும் மற்ற சோசலிச நாடுகளுக்கும் சகோதரக் கட்சிகளுக்கும் எதிராக வெளிப்படையான போட்டிக்கு கிளப்பிவிட்டனர் என்பது இப்பொழுது தெளிவாகிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் மற்ற மார்க்சிய-லெனினியக் கட்சிகளையும் தாக்கும்பொழுது சீனத் தலைவர்கள், யூகோஸ்லாவிய விவகாரத்துக்குத் தனி இடம் ஒதுக்குகிறார்கள். யூகோஸ்லாவியாவுக்கும் ரசியாவுக்கும் இதர சோசலிச கட்சிகளுக்கும் இடையே உறவு சீரடைவது தான், உலக கம்யூனிச இயக்கத்தில் சிக்கல்கள் ஏற்படுவதற்குக் காரணம் என்று சித்தரிக்க முயற்சி செய்கின்றனர். உண்மைக்கு மாறாக யூகோஸ்லாவியா ஒரு சோசலிச நாடு அல்ல என தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். பொதுவாக அறியப்பட்டதைப்போல பெரும்பாலும் ஸ்டாலினுடைய தவறின் காரணமாக, நீண்டகாலமாக இருந்து வந்த தகராறைத் தவிர்த்து, உறவைச் சீர்படுத்துவதற்கு 1955ஆம் ஆண்டிலேயே ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும், இதர சகோதரக் கட்சிகளும் முன் முயற்சி எடுத்துக்கொண்டன. யூகோஸ்லாவியாவில் உள்ள சோசலிச அமைப்பின் தன்மை பற்றி சீனத் தலைவர்களுக்கு அப்பொழுதெல்லாம் சந்தேகமே கிடையாது. மக்கள் தினசரி என்ற பத்திரிகை 'யூகோஸ்லாவியா சோசலிசத்தைக் கட்டுவதில் ஏற்கனவே பல முக்கிய வெற்றிகளை ஈட்டியுள்ளதாக அப்போது எழுதிற்று.

யூகோஸ்லாவிய சமூகப் பொருளாதார நிலைமைகளையும் வளர்ச்சிப் போக்கையும் யதார்த்தமாக ஆய்வு செய்யும் யாருக்கும், தொடர்ந்து வந்த ஆண்டுகளில் அங்கு சோசலிசம் மேலும் பலமடைந்திருப்பது விளங்கும். 1958-இல் தொழிற்துறையில் 100 சதவீதமும், விவசாயத்தில் 6 சதவீதமும், வியாபாரத்தில் 97 சதவிதமும், சோசலிசப்பகுதியாக இருந்தது. இப்பொழுது, தொழிற்துறையில் 100 சதவீதம், விவசாயத்துறையில் 15 சதவீதம் வியாபாரத்துறையில் 10 சதவீதம் என்றாகியுள்ளது. யூகோஸ்லாவியாவுடன் உறவுகளை சுமுகமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பிறகு, அயலுறவுப் பிரச்சினைகளில், ரசியா மற்றும் பிற சோசலிச நாடுகளின் நிலைக்கு யூகோஸ்லாவியா நெருங்கி வந்திருக்கிறது.

யூகோஸ்லாவியா பிரச்சினையில் சீனத் தலைவர்கள் தங்கள் நிலைமையை இவ்வளவு தீவிரமாக மாற்றிக்கொள்ள வேண்டியதன் அவசியமென்ன? அவர்கள் கருத்துப்படி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும், மற்ற மார்க்சிய-லெனினிய கட்சிகளும் கடைப்பிடிக்கும் கொள்கைகளைக் குறைகூற இது மிக சாதகமான முறையில் உதவக் கூடிய ஒன்று என்று நம்பியிருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு காரணம் எதுவும் இருக்க முடியாது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் இடையே பல அடிப்படை தத்துவார்த்த விசயங்களில் வேறுபாடுகள் நீடிக்கின்றன என்பது ரசிய கம்யூனிஸ்டுகளுக்குத் தெரியும். இதனை யூகோஸ்லாவியத் தோழர்களுக்கு வெளிப்படையாக சொல்லியிருக்கிறோம்; தொடர்ந்தும் சொல்லுவோம். ஆனால், இதற்காக யூகோஸ்லாவியாவை சோசலிசத்திலிருந்து தள்ளி வைப்பதோ, சோசலிச நாடுகளிலிருந்து துண்டித்து ஏகாதிபத்திய முகாமுக்குள் தள்ளுவதோ நல்லதல்ல; இதனைதான் சீனத் தோழர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஏகாதிபத்தியவாதிகளுக்கு இதைவிட சிறப்பானது வேறு ஒன்றும் இருக்கமுடியாது.

இன்று உலகில் 14 சோசலிச நாடுகள் இருக்கின்றன. இந்த எண்ணிக்கை மிக விரைவில் பெருமளவில் அதிகரிக்கும் என்பதில் எங்களுக்கு ஆழமான நம்பிக்கையுண்டு.

அரசுகளை வழி நடத்தும் பொறுப்பில் உள்ள சகோதரக் கட்சிகள் சந்திக்க நேரிடும் பிரச்சினைகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே இருக்கின்றன; அத்துடன் அக்கட்சிகள் ஒவ்வொன்றும் பணியாற்றும் சூழ்நிலைமைகளும் மாறுபடுகின்றன.

எனவே சகோதரக் கட்சிகள், ஒரு பிரச்சினையைத் தீர்க்க மாறுபட்ட அல்லது வெவ்வேறான அணுகுமுறைகளை மேற்கொள்ளக் கூடும் என்பது இயற்கையே; மார்க்சிய-லெனினியவாதிகள் இதுபோன்ற விசயங்

களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? ஏதாவதொரு பிரச்சினையில் அல்லது பிரச்சினைகளில் ஒரு சோசலிச நாட்டின் தலைவர்கள் மாறு பட்ட கருத்துக்களை கொண்டிருந்தால் அந்நாடு சோசலிச நாடே இல்லை என்று சொல்லிவிடலாமா? இது முதல்தரமான ஆணவச் செயலா கும். இவ்விதச் செயல்களுக்கும் மார்க்சிய-லெனினிசத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

சீனத் தலைவர்களின் இந்த உதாரணத்தை நாம் கடைப்பிடிப்பதாக இருந்தால், அல்பேனியத் தொழிலாளர் கட்சித் தலைவர்களுடன் நமக்கு உள்ள கடுமையான வேறுபாடுகள் காரணமாக நாம், அதனை ஒரு சோசலிச நாடு அல்ல என்று வெகுகாலத்திற்கு முன்பே சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இது பிரச்சினைகள்பால் ஒரு தவறான தன் னோக்குப் பார்வையாகஇருக்கும். அல்பேனியத் தலைவர்களுடன் நமக்கு வேறுபாடுகள் இருந்தாலும்கூட அல்பேனியாவை சோசலிச நாடு என்று கருதுவதுடன் அவர்கள் சோலிச முகாமிலிருந்து துண்டித்துக் கொண்டு போய்விடாமல் இருக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை, தொன்றுதொட்டு இருந்து வந்துள்ள சீன-ரசிய நட்புறவை குலைப்பதையும், சோசலிச நாடுகளின் ஒற்றுமையைப் பலவீனப் படுத்துவதையும் பார்க்கும்போது நாம் மிகவும் கவலைப்படுகிறோம்.

சோசலிச சமூகத்தின் ஒற்றுமைக்கும், ஒன்றிணைந்த பணிக்காகவும் உலக கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்காகவுமே ரசிய கம்யூனிஸ்ட் கட்சி நிற்கிறது; இனியும் எப்பொழுதும் அதற்காகவே நிற்கும்.

VI

யாவற்றையும் தொகுத்துப் பார்ப்போமாக:

1960-ம் வருடத்திய அறிக்கை நிறைவேற்றப் பட்டதிலிருந்து இது வரை உலக கம்யூனிச மற்றும் தொழிலாளிவர்க்க இயக்கத்தின் மார்க் சிய—லெனினியத் திட்டம் மிகவும் சரியானதென்று காலம் முழுமை யாக நிரூபித்துள்ளது. கம்யூனிசத்தைக் கட்டுவதில் ரசியாவுக்கு கிடைத்த வெற்றிகளும் இதர சோசலிச நாடுகளில் சோசலிசத்தைக் கட்டுவதில் கிடைத்த வெற்றிகளும், உலக முழுவதிலுமுள்ள மக்களின் சிந்தனையில் மேலும் மேலும் புரட்சிகரமான தாக்கத்தை ஏற்படுத்து வருகின்றன. புரட்சிகரமான கியூபா, மேற்கு உலகில் ஒரு சோசலிசக் கலங்கரை விளக்கை ஏற்றியிருக்கிறது. அந்திம காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் காலனி அமைப்பின் மீது தீர்மானமான அடி கொடுக் கப்பட்டுவருகிறது.

ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம் புதிய வெற்றி களைப் பெற்று வருகிறது. உலகப் புரட்சி இயக்கம் உறுதியாக முன் னேறி வருகிறது.

இவையனைத்தும், உலக கம்யூனிச இயக்கத்தின் பொதுவழியை 1960-ம் வருடத்திய அறிக்கை சரியாக நிர்ணயத்தையே காட்டுகின் றன. இந்தப் பொது வழியின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற் கொண்டு செயல்பட வேண்டும்; ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியும் தன் குறிப்பான வேலை நிலைமைகளுக்கு ஏற்ப இதை வளர்த்து பயன்படுத்த வேண்டும். எனவே ஒரு புதிய வழி முறையை உலக கம்யூனிச இயக்கத் தின் மீது—சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் ஜூன் 14 கடி தத்தில் உள்ளதுபோல்—திணிக்க முயல்வது தவறானதும் தீங்கானது மாகும்.

அப்படிப்பட்ட பொதுவழியை ஒப்புக்கொள்வது 1960 அறிக்கையை மீறுவதாகும். 81 கட்சிகள் நிறைவேற்றிய அறிக்கைக்கு முரணான நடைமுறை பற்றிய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதாகும். எமது கட்சி இப்பாதையை மேற்கொள்ளாது.

நமது மகத்தான லெனினியக் கட்சி தனது வரலாற்றுக் காலம் முழுவதும் வலது-இடது சந்தர்ப்பவாதம், டிராட்ஸ் கீயவாதம், திரிபுவாதம், வறட்டுவாதம், குறுங்குழுவாதம், தேசிய வாதம், குறுகிய தேசிய வெறி ஆகிய போக்குகளை உள்நாட்டி லும், உலக அரங்கிலும் விட்டுக்கொடாமல் எல்லா முறைகளிலும் ஓய்வு ஒழிச்சலின்றி எதிர்த்துப் போராடி வந்துள்ளது. மார்க்சிய—லெனினியத் தூய்மையைக் காக்கும் போராட்டத்தில் வளர்ந்து உருக்கேறியுள்ள நம் கட்சி, பிளவுவாதிகள், சந்தர்ப்பவாதிகள் ஆகியோரின் தாக்குதல் எந்தத் திக்கிலிருந்து வந்தாலும் அதைக்கண்டு நாம் அஞ்சப் போவதில்லை.

எல்லா மக்களின் அரசியல் அமைப்பாக மாறிவிட்ட ரசிய கம்யூ னிஸ்ட் கட்சி மக்களிடமுள்ள தொடர்பை மேலும் பலப்படுத்தியுள்ளது; மேலும் சக்தியைப் பெருக்கிக்கொண்டுள்ளது; இன்னும் இறுக்கமான ஒழுங்குக் கட்டுப்பாட்டை நிலைநிறுத்தியுள்ளது என்பதை வாழ்க்கை நிதர்சனமாக்குகிறது. சோசலிசம் வெற்றியடைந்ததின் பயனாக, தொழி லாளி வர்க்கத்தின் சித்தாந்தமான மார்க்சிய—லெனினியம், அனைத்து மக்களுடையவும், அதன் முன்னேறிய பகுதியினுடையவும் சித்தாந்த மாக மாறிவிட்டது. கம்யூனிசத்தைக் கட்டவேண்டும் என்ற தொழிலாளி வர்க்கத்தின் குறிக்கோள் அனைத்து மக்களின் குறிக்கோளாக மாறி விட்டது. கம்யூனிச சித்தாந்தத்தின் செல்வாக்கின் இந்த வளர்ச்சி குறித்து, மார்க்சிய-லெனினியவாதிகள் மகிழ்ச்சியடையத்தான் செய்வர். தோழர் லெனின் மறைவுக்கு பின், நம் கட்சி இன்றுபோல் என்றும் பலம் பெற்றிருந்ததில்லை என்றும், புத்துலகைப் படைக்கும் தீரம்மிக்க கடமையை நிறைவேற்றும் ஆற்றலை இந்த அளவுக்குப் பெற்றிருந்த தில்லை என்றும் கூறலாம்.

நமது நாட்டில் சோசலிசம் இறுதியாகவும் தீர்மானகரமாகவும் வெற்றியடைந்திருக்கும் தற்போது, ஒவ்வொரு கல்லாக அடுக்கி ஒரு எழில்மிகு கம்யூனிச சமுதாயத்தை நாம் நிர்மாணித்துக்கொண்டுள்ளோம். அதே வேளையில் நமது கட்சியும், மக்களும் மார்க்சிய—லெனினியத்தின் மகத்தான கருத்துக்கள் உலகம் முழுவதிலும் வெற்றி பெறும் என்பதில் முன் எப்போதும் இல்லாத அளவு அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

எல்லா சோசலிச நாடுகளின் மக்களும் உலகம் முழுவதிலுமுள்ள உழைக்கும் மக்களும் இவ்வாறே நம்மைப் போன்றே நம்பிக்கைகொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் சமாதானத்திற்காகவும், ஜனநாயகத்திற்காவும், தேசிய விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும், சோசலிசத்திற்காகவுமான பொதுவான போராட்டத்திற்கு ரசியா ஆற்றியுள்ள மகத்தான பங்கு குறித்து மிக உயர்வாகப் பாராட்டுகின்றனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் முன் எப்போதும் போலவே இப்பொழுதும் நெருங்கிய நட்புறவையே விரும்கிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், நமக்குமிடையே பலத்த கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட, ஒரு புதிய கம்யூனிச சமுதாயத்தைப் படைக்கும் பொது இலட்சியம் இருப்பதையும் ஏகாதிபத்தியம் நமது பொது எதிரி என்பதையும் உணர்ந்து, அந்த அடிப்படையில் நம் இரு கட்சிகளுக்கும், நம் மக்களுக்கும் இடையில் உறவுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறோம். இருபெரும் நாடுகளான ரசியாவும், சீனக் குடியரசும் கூட்டு முயற்சிகள் மூலம் கம்யூனிசத்தின் வெற்றிக்காக பெரும் பணி ஆற்றமுடியும். இதை நமது நண்பர்கள், பகைவர்கள் இருவருமே நன்கு உணர்ந்துள்ளனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம் இப்பொழுது மாஸ்கோவில் நடைபெறுகிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள், துரதிர்ஷ்டவசமாக இந்தக் கூட்டத்தையும் கெடுக்க முயல்கின்றனர். இருப்பினும், மிகவும் அதிகபட்ச ரசியப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை வெற்றிபெற வேண்டும் என்பதற்காக பொறுமையையும் அடக்கத்தையும் கடைப்பிடிக்கின்றனர். மார்க்சிய—லெனினிய கோட்பாடுகளின் அடிபடையில் நம்மைப்பிரிக்கும் விசயங்களின் அடிப்படையில் அல்லாமல், நம்மை ஒன்றுபடுத்தும் விசயங்களின் அடிப்படையில் நம் உறவுகளை அமைத்துக் கொள்வதற்கு சீனத் தோழர்கள் இணங்குவார்களா என்பது வெகுவிரைவில் தெரிந்துவிடும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே காணப்படும் முரண்பாடுகள் ஆழமாக வேண்டும் என்று நம் எதிரிகள் விரும்புகின்றனர். அதிலிருந்து ஏதாவது வசதியாக ஒன்று கிடைக்காதா எனத் தேடுகின்றனர். அமெரிக்காவின், 'டெய்லி நியூஸ்' என்ற பத்திரிகை ''சிவப்பு ரசியாவும், செஞ்சீனாவும் முட்டி மோதி ஒருவரை

யொருவர் பிய்த்தெறியட்டும்'' என்று எழுதியது. கம்யூனிஸ்டுகளாகிய நாம், ஏகாதிபத்தியவாதிகளின் இத்தகைய வஞ்சத்திட்டங்களை மறந்து விடக்கூடாது.

உலக கம்யூனிச இயக்கத்துக்கும், உலக மக்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமையை உணர்ந்துள்ள நம் கட்சி, மார்க்சிய—லெனினிய கோட்பாடுகள், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவற்றின் அடிப்படையில் வேற்றுமைகளைக் களைந்து நம் கட்சிகளின் உண்மை யான ஒற்றுமையைப் பலப்படுத்தக்கூடிய பாதையைக் கடைப்பிடிக்கும் படி சீனத் தோழர்களை வற்புறுத்துகிறது.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின், அனைத்து உழைக்கும் மக்களின் ஒற்றுமைக்காகவும், சமாதானம், ஜனநாயகம், தேசிய சுதந்திரம், சோசலிசம் ஆகியவற்றுக் காகவும் நமது லெனினியக் கட்சி மற்ற சகோதரக் கட்சிகளுடன் சேர்ந்து பணியாற்றியது, பணியாற்றிவருகிறது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கும், காலனியாதிக்கத்தை எதிரித்துப்போராடும் எல்லா மக்களுக்கும் பயனுள்ள உதவியை அளிப்பதற்கும், உலகம் முழுவதிலும் கம்யூனிசத்தின் மகத்தான கருத்துக்கள் வெற்றியடைவதற்கும், சாமாதானத்திற்கான பணியை பலப்படுத்துவதற்கும், உலக கம்யூனிச இயக்கத்தை லெனினது பதாகையின் கீழ் திரட்டுவதற்கும், சோசலிச நாடுகளை ஓரணியில் திரட்டுவதற்கும் நாங்கள் எங்களால் இயன்ற அனைத்தையும் செய்துள்ளோம்; எதிர்காலத்திலும் செய்வோம் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் கட்சியின் முன்னும் ரசிய மக்கள் அனைவரின் முன்னும் பிரகடனப்படுத்துகிறது.

ரசியாவில் உள்ள எல்லா உழைக்கும் மக்களும் தங்களது கம்யூனிஸ்ட் கட்சியோடும் அதனுடைய லெனினிய மத்திய கமிட்டியுடனும் மேலும் நெருக்கமாக இணைந்து நின்று, மகத்தான கம்யூனிச நிர்மாணப்பணியை நிறைவு செய்ய தங்களது சக்தி முழுவதையும் ஈடுபடுத்துவார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின்
மத்திய கமிட்டி.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக்கும் நமக்கும் இடையே உள்ள வேறுபாடுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் விமர்சனம்

'மக்கள் தினசரி', 'செங்கொடி' பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்கள் (செப்டம்பர் 6, 1963)

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, தனது கட்சி அமைப்புகளுக்கும், ரசியாவில் உள்ள கம்யூனிஸ்டுகளுக்கும் ஜுலை 14ம் தேதி எழுதிய பகிரங்கக் கடிதத்தை வெளியிட்டு ஒரு மாதத்திற்குமேல் ஆகிறது. அந்த பகிரங்கக் கடிதமும், அதற்குப் பின்பு ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை மேற்கொண்ட நடவடிக்கைகளும் சீன-ரசிய உறவை முறிக்கின்ற பிளவின் விளிம்புக்குத் தள்ளிவிட்டன. மேலும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் உள்ள வேறுபாடுகளை முன் எப்போதும் இல்லாத அளவு கடுமையான கட்டத்திற்கு இட்டுச் சென்றுள்ளன.

இப்போது மாஸ்கோ, வாஷிங்டன், புதுடெல்லி, பெல்கிரேடு ஆகியவை கூடிக்குலாவி வருகின்றன; ரசியப் பத்திரிகைகள் சீனாவைத் தாக்கி முடிவில்லாத கட்டுக் கதைகளையும், கோட்பாடுகளையும் கட்ட விழ்த்து விட்டுள்ளன. மார்க்சிய-லெனினியத்திற்கும், பாட்டாளி வர்க்க

சர்வதேசியத்திற்கும் பகிரங்கத் துரோகம் இழைத்தும். 1957ம் வருடத்திய பிரகடனம், 1960ல் வெளியிட்ட அறிக்கை ஆகியவற்றைத் தூக்கி எறிந்தும் நட்புறவு, கூட்டுவாழ்வு, சக உதவி ஆகியவைகளுக்கான சீன-சோவியத் ஒப்பந்தத்தை மீறியும் ரசியகம்யூனிஸ்ட் கட்சித் தலைமை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளோடும், இந்திய பிற்போக்கு வாதிகளோடும், துரோகி டிட்டோ கும்பலோடும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

தற்போது, சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் உள்ள வேறுபாடுகளும் சீன-ரசியக் கட்சிகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளும், கோட்பாட்டு ரீதியான முக்கியக் கேள்விகளை உள்ளடக்கியவையாகும். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு எழுதிய ஜூன் 14ம் தேதியிட்ட தனது கடிதத்தில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இந்த வேறுபாடுகளின் சாராம்சத்தை முறையாகவும், தெளிவாகவும் விவாதித்துள்ளது. அந்த ஆய்வின் இறுதியில், தற்போது சர்வதேசக் கம்யூனிச இயக்கத்திலும், சீன-ரசியக் கட்சிகளுக்கு இடையிலும் நிலவுகின்ற வேறுபாடுகள், கீழ் வரும் கேள்விகளை உள்ளடக்கியவை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

—1957ஆம் ஆண்டு பிரகடனத்திலும் 1960ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட அறிக்கையிலும் கூறப்பட்ட புரட்சிகரக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வதா? இல்லையா?

—மார்க்சிய - லெனினியத்தையும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் ஏற்றுக் கொள்வதா, இல்லையா?

—புரட்சிக்கு அவசியம் இருக்கிறதா? இல்லையா?

—ஏகாதிபத்தியம் எதிர்க்கப்பட வேண்டியதா, இல்லையா?

—சோசலிச முகாமிலும், சர்வதேசக்கம்யூனிச இயக்கத்திலும் ஒற்றுமை அவசியமா, இல்லையா?

சர்வதேசக் கம்யூனிச இயக்கத்திலும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நமக்கும் இடையிலும் வேறுபாடுகள் எப்படித் தோன்றின? இன்றுள்ள தீவிரத் தன்மைக்கு அவை எப்படி வளர்ந்தன? ஒவ்வொருவரும் இக் கேள்விகளுக்கான பதில்களை அறிவதில் அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றனர்.

''எப்போதிருந்து வேறுபாடுகள்'' [1] என்ற நமது கட்டுரையில் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் வேறுபாடுகளின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் பற்றிய பொதுவான சித்திரத்தைத் தந்தோம். அதில் இந்தப் பிரச்சினை பற்றிய சில உண்மைகளை, குறிப்பாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை சம்பந்தமான சில முக்கிய உண்மைகளைத் தருவதை வேண்டுமென்றே தவிர்த்திருந்தோம். முழுச் சித்திரத்தைத்

1. ரென்மின் ரிபாவோ தலையங்கம், பிப்ரவரி 27, 1963

தருவதற்கும், தேவைப்பட்டால் சரியானவற்றையும் தவறானவற்றையும் உடைத்து முன்வைக்கவும், நாம் தயாராக இருந்தபோதிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தனது நிலையிலிருந்து மீள்வதற்குச் சில வழிகளை விட்டு வைத்திருந்தோம். இப்போது ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம், வேறுபாடுகளின் தோற்றம், வளர்ச்சி பற்றிப் பல பொய்களையும் உண்மைகளை முற்றிலும் திரித்தும் கூறியுள்ளது. எனவே, விசயத்தை மேலும் தெளிவாக விளக்குவதற்காக சில உண்மைகளை முன்வைப்பது நமக்கு அவசியமாகி உள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகமிட்டி தனது பகிரங்க கடிதத்தில் தன் கட்சி உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் உண்மைகளைத் தெரிவிக்க அஞ்சுகிறது. ஒளிவு மறைவின்றியும், வெளிப்படையாகவும் உண்மையை மதிக்கும் மார்க்சிய—லெனினியவாதிகளைப் போல் இருப்பதற்கு மாறாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைமை முதலாளித்துவ அரசியல் வாதிகளைப் போல உண்மைகளைத் திரித்தும், உண்மைகளையும் பொய்களையும் போட்டுக் குழப்பியும் வருகிறது. இதன் மூலம் வேறுபாடுகளின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்குமான மொத்தப்பழியையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது சுமத்த முயன்றுள்ளது.

''அரசியலில், பலத்தின் விளைவு உண்மை; பலவீனத்தின் விளைவு கபடத்தனம்'' [1] என்று லெனின் ஒருமுறை கூறினார். நேர்மையாக இருப்பதும், உண்மைக்கு மதிப்பளிப்பதும், மார்க்சிய—லெனினிய வாதிகளின் நோக்கமாகும். அரசியல் ரீதியாகச் சீரழிந்து போனவர்கள் தான் பிழைப்புக்காகப் பொய்சொல்கிறார்கள்.

உண்மைகளே சொல்வன்மை மிக்கவை. உண்மைகளே சிறந்த சாட்சிகள். உண்மை விவரங்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசிலிருந்து வேறுபாடுகள் துவங்கின

''மூன்றடி ஆழத்திற்கு ஆறு உறைவதற்கு ஒரு குளிர் நாளுக்கு மேல் ஆகிறது'' என்று ஒருபழமொழி உண்டு. சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் தற்போது நிலவுகின்ற வேறுபாடுகளும் ஏதோ இன்று உருவானது அல்ல;

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்தியகமிட்டியின் பகிரங்கக் கடிதம், ''லெனினியம் நீடு வாழ்க'' என்ற கட்டுரையாலும், ஏப்ரல் 1960-ல் நாங்கள் வெளியிட்ட மற்ற இரு கட்டுரைகளாலும் தான் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் வேறுபாடுகள் தோன்றின என்ற கருத்தைப் பரப்பி உள்ளது. இது ஒரு பெரிய பொய்யாகும்.

---

1. வி. இ. லெனின், அரசியல் விவாதக் குறிப்புகள், நூல் திரட்டு, தொகுதி 17, பக்-166, ஆங்கிலப் பதிப்பு, மாஸ்கோ

உண்மை என்ன?

சர்வதேச கம்யூனிச இயக்கத்திலுள்ள வேறுபாடுகள் அனைத்தும் ஏழு ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டன.

குறிப்பாகச் சொல்வதென்றால் 1956-ல் நடைபெற்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசிலிருந்து துவங்கின.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை திரிபுவாதப் பாதையில் எடுத்துவைத்த முதல் அடிதான், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ். 20-வது காங்கிரசிலிருந்து இன்றுவரை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் திரிபுவாதப் போக்கு, தோற்றம், உருவாக்கம், வளர்ச்சி, முறைப்படுத்தல் என்ற பல்வேறு கட்டங்களைத் கடந்துள்ளது. அதே போல, மக்களும் படிப்படியாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் திரிபுவாத வழியை மேன்மேலும் ஆழமாகப் புரிந்து கொள்ளலாயினர்.

தற்போதைய சர்வதேசப் போராட்டம் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கம் ஆகியவை பற்றி 20-வது காங்கிரசில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் தவறானவை என்றும் மார்க்சிய—லெனினியத்திற்குப் புறம்பானவை என்றும் தொடக்கத்திலிருந்தே நாம் கருதி வந்தோம். குறிப்பாக, ''தனிமனித வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற சாக்கில் ஸ்டாலினை முற்றாக மறுப்பதும், ''பாராளுமன்றப்பாதை'' மூலமாக சோசலிசத்திற்கு சமாதான முறையில் மாற்றம் என்ற கருத்தும் கொள்கை ரீதியாக முற்றிலும் தவறானவையாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் ஸ்டாலின் மீது வைக்கப்பட்ட விமர்சனம், கொள்கை மற்றும் முறை ஆகிய இரண்டிலும் தவறானது.

ஸ்டாலினின் வாழ்க்கை, ஒரு சிறந்த மார்க்சிய—லெனினியவாதி யினுடையதும், ஒரு சிறந்த பாட்டாளிவர்க்கப் புரட்சியாளருடையது மாகும். லெனின் மறைவுக்குப் பின் முப்பது ஆண்டுகள் ஸ்டாலின்தான் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ரசிய அரசாங்கம் ஆகிய இரண்டிற்கும் முன்னணித் தலைவர். அது மட்டுமல்ல, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அங்கீகரிப்பட்ட தலைவர்; உலகப் புரட்சியின் வழிகாட்டி. அவருடைய வாழ்க்கைக்காலத்தில், அவர் சில கடுமையானத் தவறுகளைச் செய்தார். ஆனால், அவருடைய மாபெரும் சாதனைகளோடு ஒப்பிடும்போது அவ ருடைய தவறுகள் இரண்டாம்பட்சமானவையே.

ரசிய நாட்டின் வளர்ச்சிக்கும் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும் ஸ்டாலின் மாபெரும் சேவைகள் புரிந்துள்ளார். ஏப்ரல் 1956-ல் வெளி யிடப்பட்ட ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவம் பற்றி'' என்ற எமது கட்டுரையில், நாங்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந் தோம்:

''லெனின் மறைவுக்குப் பின் கட்சி, அரசுஆகியவற்றின் முதன்மைத் தலைவராக இருந்த ஸ்டாலின், மார்க்சிய-லெனினியத்தை ஆக்கப்பூர்வ மாக நடைமுறைப்படுத்தி செழுமைப்படுத்தினார்; மக்களின் விருப்பங் களையும் எதிர்பார்ப்புகளையும் பிரதிபலித்தார். லெனினிய பாரம்பரி யத்தைப் பாதுகாப்பதற்காக அதன் எதிரிகளான டிராட்ஸ்கியவாதிகள் ஜினோவிஸ்ட்டுகள் மற்றும் பிற முதலாளி வர்க்க ஏஜெண்டுகளுடனான போராட்டத்தில் தன்னை மிகச் சிறந்த மார்க்சிய-லெனினிய போராளி யாக நிரூபித்தார். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிற தலைவர்களுடன் இணைந்து ரசியாவைத் தொழில்மயப்படுத்துவதிலும், விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்குவதிலும் லெனினின் வழிமுறையைக் காத்து நின் றதால், ரசிய மக்களின் ஆதரவைப் பெற்று, வரலாற்றில் ஒரு முக்கியப் பங்காற்றினார். இந்த வழிமுறையைப் பின்பற்றி ரசிய கம்யூனிஸ்ட் கட்சி சோசலிசத்தின் வெற்றியை நிலைநாட்டியது. ஹிட்லருக்கு எதி ரான யுத்தத்தில் ரசியநாடு வெற்றி பெறுவதற்கான நிலைமைகளை உருவாக்கியது. ரசிய மக்களின் இந்த வெற்றிகள், உலகத் தொழி லாளி வர்க்கத்தினுடைய, எல்லா முற்போக்கு மனிதகுலத்தினுடைய நோக்கங்களுடன் ஒன்றுபட்டன. எனவே, உல்கம் முழுவதும் ஸ்டாலி னுடைய பெயர் கவுரவிக்கப்பட்டது இயற்கையே'' 1

ஸ்டாலினுடைய தவறுகளை விமர்சனம் செய்வது அவசியம்தான். ஆனால், தோழர் குருச்சேவ் 20-வது காங்கிரசுக்கான தனது ரகசிய அறிக்கையில் ஸ்டாலினை முற்றாக மறுதலித்துவிட்டார். இவ்வாறு செய்ததன் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை இழிவு செய்தார்; சோசலிச முறையையும், மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும், மாபெரும் ரசிய நாட்டையும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தையும் இழிவுபடுத்திவிட்டார். நேர்மையான, தீர்க்கமான, ஆய்வினை மேற் கொள்வதிலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுப வத்தைத் தொகுப்பதிலும், புரட்சிகரப் பாட்டாளி வர்க்க கட்சி கடைப் பிடிக்க வேண்டிய விமர்சன-சுயவிமர்சன முறையைப் பயன்படுத்து வதற்குப் பதிலாக அவர் ஸ்டாலினை ஒரு விரோதியாகப் பாவித்தார்; எல்லா தவறுகளுக்குமான பழியையும் ஸ்டாலின் மீதே சுமத்தினார்.

குருச்சேவ் தன்னுடைய ரகசிய அறிக்கையில் தீயநோக்குடனும் மக்களிடையே தவறான கருத்துக்களை உருவாக்கும் நோக்குடனும் ஸ்டாலினைப் பற்றி ஏராளமான பொய்களைக் கூறியுள்ளார். ஸ்டாலி னுக்கு 'குரோதமனோபாவம்' உண்டு என்றும், ''இரக்கமின்றி ஆணவ மாக''ச் செயல்பட்டார் என்றும், மக்கள் மீது ''அடக்குமுறை பயங் கரவாதத்தை''க் கட்டவிழ்த்து விட்டார் என்றும், ''தேசத்தையும் விவசாயத்தையும் திரைப்படங்களின் மூலம் மட்டுமே அறிந்தவர்''

1. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று படிப்பினைகள், ஆங்கிலப் பதிப்பு, பீகிங், 1964, பக்-7.

என்றும், ''ஒருகோளத்தின் மீது நின்று யுத்த நடவடிக்கைகளைத் திட்டமிட்டார்'' என்றும், ''ஸ்டாலினின் தலைமை, ரசிய சமூக வளர்ச்சிப் பாதையின் பெரும் தடைக்கல்லாக மாறிவிட்டது'' என்றும் பலவாறான குற்றச்சாட்டுக்களை வீசியுள்ளார். அனைத்து உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளையும் எதிர்த்த உறுதியான போராட்டத்தில் மக்களை வழிநடத்தி சோசலிச மாற்றத்திலும், சோசலிச கட்டுமானத்திலும் யார் பெரும் வெற்றிபெற்றாரோ, உலகின் முதல் சோசலிச நாட்டினைப் பாதுகாப்பதிலும், உறுதிப்படுத்துவதிலும் பாசிச எதிர்ப்பு யுத்தத்தில் மகத்தான வெற்றி ஈட்டுவதிலும், யார் ரசிய மக்களை வழிநடத்தினாரோ யார் மார்க்சிய—லெனினியத்தை வளர்த்தெடுத்துப் பாதுகாத்தாரோ, அந்த ஸ்டாலினின் மகத்தான செயல்களை எல்லாம் குருச்சேவ் முற்றாகத் துடைத்தெறிந்து விட்டார்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் ஸ்டாலினை முற்றாக மறுப்பதின் மூலம் அவர் வளர்த்தெடுத்துப் பாதுகாத்த மார்க்சிய—லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் குருச்சேவ் மறுக்கிறார். அதே காங்கிரசில் தான் குருசேவ் தன்னுடைய அறிக்கையில், பல கொள்கை பற்றிய பிரச்சினைகளில் மார்க்சிய—லெனினியத்தை மறுதலிக்கத்தொடங்கினார்.

அவருடைய 20-வது காங்கிரஸ் அறிக்கையில், உலக நிலைமைகளில் ''புரட்சிகர மாற்றங்கள்'' ஏற்பட்டுள்ளன என்ற சாக்குப்போக்கின் அடிப்படையில், குருச்சேவ் ''சமாதான வழியில் மாற்றம்'' என்ற கோட்பாட்டை முன் வைக்கிறார். ''அப்போதைய வரலாற்று நிலைமைகளில் ஒரே சரியான பாதை'' அக்டோபர் புரட்சிப் பாதைதான்; ஆனால், நிலைமைகள் மாறியிருப்பதால், ''பாராளுமன்றபாதையின் மூலம்'' இப்போது முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச் செல்வது சாத்தியமாகியுள்ளது என்று கூறினார். சாராம்சத்தில், இந்தத் தவறான கோட்பாடு, அரசு மற்றும் புரட்சி பற்றிய மார்க்சிய—லெனினிய போதனைகளின் தெளிவான திரிபு ஆகும். மேலும், இது அக்டோபர் புரட்சிப் பாதையின் சர்வதேச முக்கியத்துவத்தை முற்றாக மறுப்பதும் ஆகும்.

அவருடைய அறிக்கையில், உலக நிலைமையில் ''புரட்சிகர மாற்றங்கள்'' நிகழ்ந்துள்ளன என்ற அதே சாக்குப்போக்கின் அடிப்படையில், ஏகாதிபத்தியம், போர், அமைதி பற்றிய லெனினிய போதனைகளின் பொருத்தத்தையும் குருச்சேவ் கேள்விக்குள்ளாக்குகிறார். உண்மையில், லெனினிய போதனைகளைத் திரிக்கிறார்.

அமெரிக்க அரசாங்கமும், அதன் தலைமையும் யுத்தத்தை எதிர்க்கும் சக்திகளேயன்றி, அவை யுத்தத்தை உருவாக்கும் ஏகாதிபத்திய சக்திகளின் பிரதிநிதிகள் அல்ல என்று சித்தரிக்கிறார், குருசேவ் ''கடினமான பிரச்சினைகளை யுத்தத்தின் மூலம்தான் தீர்த்துக் கொள்ள

முடியும் என்று சொல்பவர்கள் அங்கு (அமெரிக்காவில்) பலமாக உள்ளனர்; அவர்கள் ஜனாதிபதியின் மீதும் நிர்வாகத்தின் மீதும் தொடர்ந்து நிர்ப்பந்தம் கொடுத்து வருகின்றனர்'' என்று அவர் கூறுகிறார். ''பலத்தின் நிலைக்கேற்ப'' என்ற கொள்கை தோற்று விட்டது என்பதை ஏகாதிபத்தியவாதிகள் ஏற்றுக் கொள்ளத் துவங்கி யுள்ளனர் என்றும், ''மிதமான போக்கின் அறிகுறிகள் தோன்றி வருகின்றன'' என்றும் அவர் மேலும் கூறுகிறார். இப்படி சொல்வது, அமெரிக்க அரசாங்கமும், அதன் தலைமையும் அமெரிக்க ஏகபோக மூலதனத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாமல் இருப்பதும் அவர்களுடைய போர், ஆக்கிரமிப்புக் கொள்கைகளைக் கைவிடுவதும் சாத்தியமானது என்றும், அவர்கள் அமைதியின் பாதுகாவலர்களாக மாறிவிட்டார்கள் என்றும் சொல்வதற்குச் சமமானது ஆகும்.

''நாங்கள், அமெரிக்காவுடன் நண்பர்களாக இருப்பதற்கு, சமாதானத்திற்காகவும், சர்வதேச பாதுகாப்பிற்காகவும் மட்டுமன்றி பொருளாதார, கலாச்சார அரங்குகளில்கூட அதனுடன் ஒத்துழைப் பதற்கு விரும்புகிறோம்'' என குருச்சேவ் அறிவித்தார். இந்த தவறான கண்ணோட்டம்தான், பின்னர், ''உலகப் பிரச்சினைகளைத் தீர்க்க ரசிய—அமெரிக்கக் கூட்டுறவு'' என்ற பாதையாக வளர்ந்தது.

வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வு என்ற சரியான லெனினிய கொள்கையைத் திரித்து சமாதான சகவாழ்வை ரசியாவின் ''வெளிநாட்டுக் கொள்கையின் பொதுவழியாக'' குருச்சேவ் அறிவித்தார். இதன்பொருள் சோசலிச நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையின் பொதுவழியான பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு, ஒடுக்கப்பட்ட நாடுகள் மற்றும் மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு உதவி ஆகியவற்றைக் கைவிட்டுவிடுவது அல்லது இவை எல்லாவற்றையும், ''சமாதான சகவாழ்வு'' என்ற கொள்கைக்குக் கீழ்ப்படுத்துவது ஆகும்.

20-வது காங்கிரசில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை எழுப்பிய பிரச்சினைகள், குறிப்பாக ஸ்டாலின் பற்றியும் ''சமாதான முறையில் மாற்றம்'' பற்றியும் எழுப்பப்பட்ட பிரச்சினைகள், எந்த விதத்திலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் உள்விவகாரம் மட்டுமல்ல; அவை, எல்லா சகோதரக் கட்சிகளுக்கும் அக்கரையுள்ள பொதுவான ஜீவாதாரப் பிரச்சினைகள் ஆகும். சகோதரக் கட்சிகளுடன் எந்தவித முன் ஆலோசனைகளையும் நடத்தாமல், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை இந்தத்தன்னிச்சையான முடிவுகளை எடுத்தது. இவைகளை அப்படியே எந்த கேள்வியுமில்லாமல் ''நடந்து முடிந்தவற்றைப் பற்றி விவாதம் எதற்கு'' என்று கூறி, இவற்றை ஏற்றுக் கொள்ளும்படி

சகோதரக் கட்சிகளைக் கட்டாயப்படுத்தியது. 'தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது' என்ற சாக்குப்போக்கில் சகோதரக் கட்சிகளின், நாடுகளின் உள்விவகாரங்களில் முரட்டுத்தனமாகத் தலையிட்டது. அவைகளின் தலைமைகளைக் கவிழ்க்க முயற்சி செய்தது. இதன் மூலம் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் குறுங்குழுவாதம், பிளவுவாதம் என்ற அதன் கொள்கைகளைப் புகுத்தியது.

மேற்சொல்லப்பட்ட தவறுகளின் விளைவாகத்தான், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மார்க்சிய—லெனினியத்திற்கும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் துரோகமிழைத்தும் அவற்றைத் திரித்தும் வருகிறார்கள்; தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகள் இதைத் தெளிவாக நிரூபிக்கின்றன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசின் கண்ணோட்டத்திலிருந்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் கொள்கைஅடிப்படையில் மாறுபட்டே வந்துள்ளது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தோழர்கள் இதை நன்கு அறிவார்கள். இருந்தபோதிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, 20-வது காங்கிரசுக்கு முதலில் முழு ஆதரவுதந்ததாகவும், ஆனால் இப்போது 20-வது காங்கிரஸ் பற்றிய மதிப்பீட்டில் நாம் 180 டிகிரிக்கு மாறிவிட்டதாகவும், நம்முடைய நிலைப்பாடுகள் முற்றிலும் ''ஊசலாட்டமும் தடுமாற்றமும்'' கொண்டதாகவும், தவறானதாகவும் உள்ளதாகக் கூறுகிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை, உள்ளங்கையினால் வானத்தை மூடிவிட முடியாது; உண்மைகள் தமக்காகவே பேசட்டும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்குப் பிறகு பல சந்தர்ப்பங்களில், சீனக்கம்யூனிஸ்டு கட்சி மத்திய கமிட்டியின் முன்னணித் தோழர்கள் உள்விவாதங்களில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் தவறுகளை விமர்சனம் செய்துள்ளனர்.

ஏப்ரல் 1956-ல், 20-வது காங்கிரஸ் நடந்து முடிந்த இரண்டு மாத காலத்திற்குள்ளாகவே ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் தலைமைக் குழு உறுப்பினரான தோழர் மிக்கோயனுடனும், சீனாவில் உள்ள ரசியத் தூதருடனும் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது தோழர் மாவோ, ஸ்டாலின் பற்றிய பிரச்சினையில் எங்களுடைய கருத்துக்களைக் கூறியுள்ளார்; ''ஸ்டாலினுடைய சாதனைகள் அவருடைய தவறுகளை விஞ்சி நிற்கின்றன'' என்றும் ஸ்டாலின் பற்றிய ஒரு ''பருண்மையான ஆய்வையும்'', ஒரு ''முழுமையான மதிப்பீட்டையும்'' செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

1956 அக்டோபர் 23-ம் தேதி சீனாவில் ரசியத் தூதரை வரவேற்ற போது, ''ஸ்டாலின் விமர்சிக்கப்படவேண்டியவர்தான்; ஆனால் அவர் விமர்சிக்கப்படுகின்ற முறையில் எங்களுக்கு உடன்பாடில்லை, வேறு சில விசயங்களிலும் நாங்கள் உடன்படவில்லை'' என்று தோழர் மாசேதுங் கூறினார்.

1956 நவம்பர் 30-ம் தேதி, சீனாவில், ரசியத் தூதரை வரவேற்ற போது, ஸ்டாலின் தன் ஆட்சி காலத்தில் பின்பற்றிய பாதையும் அடிப் படைக் கொள்கைகளும் சரியானவையே; ஆனால், எதிரிகளுக்கு எதிரா கப் பயன்படுத்தும் அதே முறைகளையே தோழர்களுக்கு எதிராகவும் கடைப்பிடித்திருக்கக் கூடாது என்று தோழர் மாவோ மீண்டும் சுட்டிக் காட்டினார்.

தோழர் லியூ-சோ-சி 1956 அக்டோபரில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடன் உரையாடியபோதும் சரி, 1956 அக்டோபர் முதல் தேதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரசுக்கு வந்தரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளோடும்,1957 ஜனவரி18-ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களோடு தோழர் சூ-என்-லாய் உரையாடியபோதும் சரி, அவர்கள் இருவருமே ஸ்டாலின் மீதான பிரச் சினையில் எங்கள் கருத்துக்களைத் தெரியப்படுத்தினர். அவர்கள் இருவ ருமே, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் தவறுகளுக்குக் காரணம் ஸ்டாலின் பற்றிய ''ஒட்டுமொத்த ஆய்வு இல்லாததும்'' ''சுய விமர்சனம் இல்லாததும்'', ''சகோதரக் கட்சிகளுடன் முன்கூட் டியே ஆலோசனை செய்யாததுமே'' ஆகும் என்று விமர்சனம் செய் தார்கள்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் முன்னணித் தோழர் கள், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களோடு நடத்திய உள்விவா தங்களின்போது சமாதான வழியிலான மாற்றம் என்ற பிரச்சினையிலும் நாங்கள் எங்கு மாறுபடுகிறோம் என்பதைச் சொன்னார்கள். மேலும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, ''சமாதான வழியில் மாற்றம் என்ற பிரச்சினையின் மீது ஒரு சுருக்கமான பார்வை'' என்ற எழுத்து மூலமான அறிக்கையின் மூலம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கண்ணோட்டங்களைத் தெளிவாகவும், விளக்கமாகவும் அளித்தது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களோடு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் முன்னணித் தோழர்கள் நடத்திய பல உள் விவாதங்களின்போது, சர்வதேச நிலைமை பற்றியும், சர்வதேச கம்யூ னிச இயக்கத்தின் யுத்த தந்திரம் பற்றியும் எங்களுடைய கண்ணோட் டத்தை, 20-வது காங்கிரசின் தவறுகளோடு நேரடியாகப் பொருத்தி முறையான விளக்கங்களை அளித்துள்ளனர்.

இவைதான் தெளிவான உண்மைகள். அப்பட்டமான பொய்கள் மூலம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை இவற்றை எவ்வாறு அழிக்க முடியும்?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, இந்த முக்கிய உண்மைகளை மறைக்கும் முயற்சியில் தோழர்கள் மாசேதுங், லியூ-சோ-சி, டெங்-சியோ-பிங் ஆகியோரின் கருத்துக்களை தன்னுடைய பகிரங்கக் கடிதத்தில் தவறாக மேற்கோள் காட்டி, ஒரு காலத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசை முழுமையாக அங்கீகரித்தார்கள் என்று காட்ட முயற்சி செய்கிறது. இது வீண் முயற்சியே.

எந்தக் காலத்திலும், எந்த இடத்திலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுடன் முற்றிலும் ஒத்துப் போகவில்லை; அது ஸ்டாலினை முற்றாக மறுப்பதை ஏற்றுக்கொண்டதில்லை; ''பாராளுமன்றப் பாதையின்'' மூலம் சோசலிசத்திற்கு சமாதான வழியில் மாறுகின்ற கருத்தையும் அங்கீகரித்ததில்லை என்பதுதான் உண்மை.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ் நடந்து முடிந்த சிறிது காலத்திற்குள்ளாக அதாவது, 1956 ஏப்ரல் 5-லேயே, ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவத்தைப்பற்றி'' என்ற கட்டுரையை வெளியிட்டோம்; பிறகு 1956 டிசம்பர் 27-ல், ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவம்பற்றி மேலும்சிலகருத்துக்கள்'' என்ற கட்டுரையை வெளியிட்டோம். ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் பிற்போக்குவாதிகளின் கம்யூனிச எதிர்ப்பு அவதூறுகளுக்குப் பதில் சொல்கின்ற அதே சமயத்தில், அந்த இரு கட்டுரைகளுமே, ஸ்டாலின் வாழ்க்கையைப் பற்றி முழுமையான ஆய்வை மேற்கொண்டன; அக்டோபர் புரட்சிப் பாதையின் சர்வவியாபக முக்கியத்துவத்தை உறுதி செய்தன; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவங்களைத் தொகுத்தளித்தன; அதே சமயத்தில் 20-வது காங்கிரசின் தவறான கருத்துக்களை திறமையாகவும் அய்யத்திற்கிடமின்றியும் விமர்சனம் செய்தது. இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை அல்லவா?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசிலிருந்து, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்டாலினை, மற்ற மாபெரும் புரட்சிகரத் தலைவர்களான மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் வரிசையில் வைத்துப் போற்றுகிறது.

ஒன்றுமட்டும் அவசியம் சொல்ல வேண்டும். பகைவர்களுக்கு எதிரான ஒற்றுமையின் பொருட்டும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இருந்த இக்கட்டான நிலையின் பொருட்டும், 20-வது காங்கிரசின்

தவறுகளைப் பற்றி அந்நாட்களில் பகிரங்கமாக விமர்சனம் செய்வதைத் தவிர்த்திருக்கிறோம். ஏனெனில், ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்கு வாதிகளும் இந்தத் தவறுகளை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்; ரசியாவுக்கு எதிராகவும், கம்யூனிசத்திற்கு எதிராக வும், மக்களுக்கு எதிராகவும்; வெறித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட் டிருந்தார்கள்; அதோடு கூட, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் களும் பின்னாளில் அவர்கள் செய்ததைப் போல், அப்போது மார்க்சிய—லெனினியத்திலிருந்து மிக அதிக தூரம் விலகிச் சென்றிருக்கவில்லை. அந்தச் சமயத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களுடைய தவறுகளை சரிசெய்துவிடுவார்கள் என்று ஆர்வமுடன் எதிர்பார்த்தோம். இதன் விளைவாக, நாங்கள் எப்போதுமே அவர்களுடைய சரியான அம் சங்களையே பார்த்துக் கொண்டிருந்தோம்; பொது நிகழ்ச்சிகளில் அவர் களுக்குத் தேவையான, பொருத்தமான அனைத்துஆதரவையும் அளித்து வந்தோம்,

இருந்தபோதிலும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி யின் முன்னணித் தோழர்கள் தங்கள் பொது மேடைப் பேச்சுகளின் போது சரியான படிப்பினைகளையும் கொள்கைகளையும் வலியுறுத்துகின்ற அதேசமயத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ் பற்றிய நிலைபாடுகளையும் விளக்கினர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரசில் தோழர் லியூ-சோ-சி அளித்த அரசியல் அறிக்கையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுடன் முற்றாக உடன்பட்டார் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் உறுதியாக தெரிவிக்கிறது. ஆனால், அதே அறிக்கையில்தான் தோழர் லியூ-சோ-சி சீனப் புரட்சி யின் படிப்பினைகளைப் பற்றி பேசியதோடு ''சமாதான வழியில் மாற் றம்'' என்ற பாதை தவறானது, நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும் விளக்கினார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரசில், கட்சி விதி களை மாற்றுவது பற்றி தோழர் டெங்-சியோ-பிங் வெளியிட்ட அறிக்கை யில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் நடத்தப்பட்ட ''தனிநபர் வழிபாட்டுக்கு எதிரான போராட்டத்தோடு'' முற்றாக உடன் பட்டார் என ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தன் பகிரங்க கடிதத்தில் கூறுகிறது. ஆனால், அதே அறிக்கையில்தான், தோழர் டெங்-சியோ-பிங் கட்சியின் ஜனநாயக மத்தியத்துவத்தைப் பற்றியும், மக்களுக்கும் தலைமைக்கும் உள்ள தொடர்பு பற்றியும் விளக்கமாக விவரித்தார். நம்முடைய கட்சியின் முரணற்ற சரியான வேலைமுறையைப் பற்றி விளக்கினார்; அதன் மூலம் ''தனி நபர் வழிபாட்டுக்கு எதிரான போராட்டத்தில்'' 20-வது காங்கிரசின் தவறுகளை விமர்சனம் செய்தார்

நாங்கள் இவ்வாறு செயல்பட்டதில் ஏதேனும் தவறிருக்கிறதா? கொள்கையைப் பற்றிநின்றும், ஒற்றுமையை உயர்த்திப் பிடித்தும் ஒரு மார்க்சிய-லெனினியக் கட்சி என்ன செய்ய வேண்டுமோ, அதை நாங்கள் சரியாகச் செய்யவில்லையா?

20-வது காங்கிரஸ் பற்றி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி கொண்டிருந்த உறுதியான, சரியான அணுகுமுறையை, ''ஊசலாட்டமும், தடுமாற்றமும் கொண்டது'' என்றும் ''பொய்யானது'' என்றும் ''180 டிகிரி திருப்பத்தைக்'' குறிக்கிறது என்றும் எவ்வாறு கூறமுடியும்?

பகிரங்கக் கடிதத்தில் இக் குற்றச்சாட்டுகளைக் கூறுவதன் மூலம் ஒருவேளை எங்களுடைய விமர்சனங்களை மறுத்துவிட முடியும் என ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி நினைத்திருக்கலாம். ஏனெனில் அவை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு சில தலைவர்களுக்கு மட்டுமே தெரிந்தவை. எனவே ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களையும் பரந்துபட்ட ரசிய மக்களையும் ஏமாற்ற இந்தப் பொய்களைப் பயன்படுத்தலாம் என்று நினைத்திருக்கலாம். ஆனால், இவையாவும் அவர்களுடைய பொய்களையே நிரூபிக்கவில்லையா?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசின் தீவிர விளைவுகள் :

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதம், 20-வது காங்கிரசின் ''அருமையான'' ''சிறப்புமிக்க'' விளைவுகளைப் பற்றித் தம்பட்டமடித்துக் கொள்கிறது.

ஆனால் வரலாற்றை மாற்ற முடியாது. 20-வது காங்கிரசின் தவறுகளால் ஏற்பட்டவை ''அருமையான'', மற்றும் ''சிறப்பான விளைவுகள்'' அல்ல; ஆனால், அதன் விளைவுகள், ரசிய நாட்டிற்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும், சோசலிசத்திற்கும், கம்யூனிசத்திற்கும் களங்கம் ஏற்படுத்தியதுடன், ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்குவாதிகளும் மற்றும் கம்யூனிச எதிர்ப்பாளர்களும், சர்வதேச கம்யூனிச இயக்கத்துக்கு மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்பளித்தது என்பதை ஞாபக மறதியற்ற மக்கள் அனைவருமே எளிதில் நினைவு கூர்வார்கள்.

இந்த காங்கிரசுக்குப் பின், ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்குவாதிகளும் மிகுந்த ஆணவத்துடன் ரசியாவுக்கு எதிராகவும், கம்யூனிசத்திற்கு எதிராகவும், மக்களுக்கு எதிராகவும், உலகளாவிய எதிர்ப்பலையை முடுக்கிவிட்டுள்ளனர். ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுடைய ஸ்டாலினுக்கு எதிரான தாக்குதலை ''தம்முடைய நோக்கங்களுக்கு மிகவும் பொருத்தமான

ஒன்று''[1] என்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கருதுகின்றனர்; குருச்சேவின் ரகசிய அறிக்கையை ''கம்யூனிச இயக்கத்தின் மதிப்பையும், செல்வாக்கையும் சிதைப்பதற்கான ஓர் ஆயுதமாக''[2] பயன்படுத்துவதைப்பற்றி பகிரங்கமாகப் பேசியிருக்கிறார்கள்; ரசியாவில் ''அமைதிவழி மாற்றத்தைப்''[3] பற்றிப் பேசுவதற்கான வாய்ப்பையும் பெற்றுக் கொண்டார்கள்.

டிட்டோவாதிகள் மிகுந்த வேகம் உடையவர்களானார்கள். ''ஸ்டாலின் எதிர்ப்பு'' என்ற அவர்களுடைய பிற்போக்குத்தனமான முழக்கத்தை உயர்த்திப் பிடித்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் சோசலிச அமைப்பையும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினார்கள். யூகோஸ்லாவியா துவக்கியுள்ள ''புதிய முறை''க்குப் ''போதுமான பக்கபலங்களை'' 20-வது காங்கிரஸ் உருவாக்கியுள்ளதாக அவர்கள் அறிவித்தார்கள். ''இப்போதுஉள்ளபிரச்சினை இந்த பாதை வெல்லுமா அல்லது மீண்டும் ஸ்டாலினின் பாதை வெல்லுமா என்பதுதான்''[4] என்று பிரகடனப்படுத்தினார்கள்.

நம்பிக்கையற்று இக்கட்டான நிலையில் இருந்த கம்யூனிச எதிரிகளான டிராட்ஸ்கியவாதிகள் மீண்டும் தீவிர நடவடிக்கையில் இறங்கினர். சொல்லிக் கொள்ளப்படும் 'நான்காவது அகிலம்' தனது அறிக்கையில் உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கும் மக்களுக்கும் கூறியதாவது:-

இன்று கிரெம்ளின் தலைவர்களே ஸ்டாலினுடைய குற்றங்களை ஒப்புக் கொள்கிறார்கள். இதன் மூலம் அவர்கள், தொழிலாளி வர்க்க அரசின் சீரழிவுக்கெதிராக உலக டிராட்ஸ்கியவாதிகளின் இயக்கம் நடத்திய உறுதியான போராட்டம் முற்றிலும் நியாயமானதே என்பதை மறைமுகமாக அங்கீகரிக்கின்றார்கள்.

20-வது காங்கிரசின் தவறுகள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் பெரும் தத்துவார்த்த குழப்பத்தை ஏற்படுத்தி அதில் திரிபுவாத கருத்துக்களைப் புகுத்தியுள்ளது. பிற்போக்குவாதிகளும், டிட்டோ கும்பலும், பல்வேறு நாடுகளின் கம்யூனிசத் துரோகிகளும் ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து கொண்டு மார்க்சிய—லெனினியத்தையும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தையும் தாக்கினர்.

---

1. டி. சி. ஸ்டரீட்பெர்ட் என்பவரின் வானொலி உரை, இவர் அமெரிக்க செய்தித்துறை ஏஜென்சியின் இயக்குனர், ஜுன் 11, 1956.
2. ''கம்யூனிச நெருக்கடி'', நியூயார்க் டைம்ஸ் இதழின் தலையங்கம், ஜுன் 23, 1956.
3. ஜே. எஃப். டல்லஸ், பத்திரிகை நிருபர் கூட்டத்தில் அறிக்கை, ஏப்ரல் 3,1956.
4. ஜே.பி. டிட்டோ புலா என்னுமிடத்தில் நிகழ்த்திய உரை, நவம்பர் 11, 1956.

இந்தக் காலக் கட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மிக முக்கிய மானவை, ரசிய-போலந்து உறவில் ஏற்பட்ட பூசல்களும், ஹங்கேரியில் நடைபெற்ற எதிர்ப்புரட்சி கிளர்ச்சியுமாகும். இந்த இரண்டு நிகழ்ச்சிகளுமே குணாம்சத்தில் வேறுபட்டவை. ஆனால், இரண்டிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை கடுமையான தவறுகளை இழைத்துள்ளது. போலந்து தோழர்களை ஆயுதங்களின் மூலம் பணிய வைக்க எண்ணி இராணுவத்தை அனுப்பியதன் மூலம், பெரும் வல்லரசு ஆதிக்க வெறி என்ற தவறை செய்துள்ளது. ஹங்கேரிய எதிர்ப் புரட்சியாளர்கள் புடாபெஸ்ட்டை ஆக்கிரமித்த சிக்கலான சமயத்தில் சரணாகதிக் கொள்கையைக் கடைபிடிக்க எண்ணி கொஞ்ச காலம் சோசலிச ஹங்கேரியை எதிர்ப் புரட்சியாளர்களிடம் கைவிட்டது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் இந்த தவறுகள் எல்லா கம்யூனிச எதிரிகளின் ஆணவத்தை அதிகரித்து தோழமைக் கட்சிகளுக்கு பெரும் சிக்கல்களை உருவாக்கியது. சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்குப் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது.

இந்த சூழ்நிலையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், மற்ற சகோதரக் கட்சிகளும் மார்க்சிய-லெனினியத்தில் ஊன்றிநின்று, ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்களுக்கும் பதிலடி கொடுக்கவும் சோசலிச முகாமையும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தையும் பாதுகாக்கவும் உறுதியாகக் கோரின. ஹங்கேரியில் எதிர்ப்புரட்சி கிளர்ச்சியை முறியடிக்க எல்லாவித நடவடிக்கைகளையும் எடுக்கும்படி நாங்கள் வலியுறுத்தினோம். சோசலிச ஹங்கேரியை கைவிடுவதை கடுமையாக எதிர்த்தோம். சகோதரக் கட்சிகளிடையேயும் நாடுகளிடையேயும் உள்ள பிரச்சினைகளைக் கையாள்வதில் சரியான கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் அத்தகைய கொள்கைகள் சோசலிச முகாமைப் பலப்படுத்துவதாக இருக்கவேண்டும் என்றும் வற்புறுத்தினோம். பெரும் வல்லரசு ஆதிக்க வெறி போன்ற தவறான நடைமுறைகளை எதிர்த்தோம். அதே சமயத்தில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் கௌரவத்தைப் பாதுகாக்கவும் பெரும் முயற்சிகள் செய்தோம்.

அந்த சமயத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், எங்கள் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு 1956 அக்டோபர் 30-ல் ''ரசியாவுக்கும், இதர சோசலிச நாடுகளுக்குமிடையிலான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், மேலும் பலப்படுத்துவதற்குமான அடிப்படைகள் பற்றிய பிரகடனத்தை'' வெளியிட்டார்கள்.

அதில் சகோதர நாடுகளுடனான அவர்களுடைய உறவுகளைக் கையாள்வதில் கடந்த காலத்தில் அவர்கள் செய்த சில தவறுகளை ஆய்வு செய்திருந்தனர். ரசிய அரசாங்கத்தின் அறிக்கைக்கு ஆதரவு

தெரிவித்து சீன அரசாங்கம் நவம்பர் முதல் தேதி ஓர் அறிக்கையை வெளியிட்டது.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் நலன்களை முன்னிட்டும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சரியான நேரத்தில் சரியான படிப்பினைகளைப் பெற்று தங்களுடைய தவறுகளைச் சரி செய்து கொள்ளும் பொருட்டும், அவர்கள் மார்க்சிய-லெனினியத்திலிருந்து மேலும் விலகிச் செல்லாதிருக்கும் பொருட்டும் நாங்கள் இவை யாவற்றையும் செய்தோம். ஆனால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில், ஊன்றி நிற்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை அவர்களுடைய தவறான பாதைக்கு மிகப் பெரும் தடைக் கல்லெனக் கருதுகிறார்கள் என்பதையும் எங்களுக்கு எதிராக குரோத மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள் என்பதையும் பின் நடந்த நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

1957-ல் மாஸ்கோவில் நடைபெற்ற சகோதரக் கட்சிகளின் கூட்டம்

ஏகாதிபத்தியவாதிகளும், பல்வேறு நாடுகளில் உள்ள பிற்போக்கு வாதிகளும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் மீது தொடுத்த பலமான தாக்குதல்களை முறியடித்தபின், மாஸ்கோவில் 1957-ம் ஆண்டு கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்றது.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழியை வரையறுப்பதில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ் 'பெரும்பங்கு' ஆற்றியிருப்பதாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக்கடிதம் கூறுகிறது. ஆனால் உண்மைகள் அதற்கு நேர்மாறாக உள்ளன. பல்வேறு முக்கியக் கொள்கை பிரச்சினைகள் மீது, 20-வது காங்கிரஸ் கொண்டிருந்த தவறான கருத்துக்கள் 1957-ல் நடைபெற்ற சகோதரக் கட்சிகளின் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டு அவை சரி செய்யப்பட்டன.

மாஸ்கோ கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பிரசித்தி பெற்ற 1957-ம் ஆண்டு பிரகடனம் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அனுபவங்களைத் தொகுத்தது; எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் பொதுவான போராட்டப் பணிகளை வகுத்தளித்தது; அக்டோபர் புரட்சிப் பாதையின் சர்வவியாபக முக்கியத்துவத்தை அங்கீகரித்தது; சோசலிச புரட்சி மற்றும் சோசலிச கட்டுமானம் பற்றிய பொது விதிகளை வகுத்தது; சகோதரக் கட்சிகள், நாடுகளுக்கிடையிலான உறவுகளைத் தீர்மானிக்கும் வழிகாட்டு நெறிகளை வகுத்தது; அக்கூட்டத்தில்வகுக்கப்

பட்ட சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொது வழி புரட்சிகர மார்க்சிய-லெனினியக் கொள்கைகளை உள்ளடக்கியது; 20-வது காங்கிரசில் வைக்கப்பட்ட, மார்க்சிய—லெனினியத்திலிருந்து விலகிச் செல்கின்ற தவறான கருத்துக்களை எதிர்த்தது. பிரகடனத்தில் முன் வைக்கப்பட்ட, சகோதரக் கட்சிகள் மற்றும் நாடுகளுக்கிடையேயான உறவு பற்றி வழி காட்டும் கொள்கைகள், பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கையின் பருண்மையான வெளிப்பாடுகள் ஆகும்; அவை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் குறுங்குழுவாதத்திற்கும், பெரும் வல்லரசு ஆதிக்க வெறிக்கும் எதிரானவை.

அந்த கூட்டத்தின்போது, தோழர் மாசேதுங் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக்குழு பெரும்பங்காற்றியது. இக்குழு, ஒரு பக்கம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களுடன் முழுமையாக ஆலோசனை நடத்திய அதே சமயத்தில், அவர்களுடைய தவறுகளைக் களைவதற்காக அவ்சியப்பட்ட போதெல்லாம், சரியான முறையில் அவர்களுடன் போராட்டம் நடத்தியது. இன்னொரு பக்கம், எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு பொதுவான அறிக்கையை உருவாக்கும் பொருட்டு மற்ற தோழமைக் கட்சிகளின் தலைவர்களுடனும் திரும்பத் திரும்ப கருத்துக்களை பரிமாறிக் கொண்டது.

இந்தக் கூட்டத்தில் எங்களுக்கும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளுக்குமிடையிலான தலையாய கருத்துமுரண்பாடு முதலாளியத்திலிருந்து சோசலிசத்திற்கான மாற்றம் பற்றியதுதான். அவர்களுடைய பிரகடனத்தின் மூல நகலில், சமாதான வழியிலான மாற்றம் பற்றிய 20-வது காங்கிரசின் தவறான கருத்துக்களைச் சேர்க்க வேண்டும் என ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை வற்புறுத்தியது. சமாதான வழியில் அல்லாத மாற்றம் பற்றி ஒரு வார்த்தை கூட மூல நகல் அறிக்கையில் இல்லை; சமாதான வழியிலான மாற்றம் பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது; மேலும் சமாதான வழியிலான மாற்றத்தை, ''பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று, பாராளுமன்றம் முதலாளிய சர்வாதிகாரத்தின் கருவியாக இருப்பதை மாற்றி மக்களின் உண்மை அரசியல் அதிகாரக் கருவியாக மாற்றுவது'' என விளக்கியிருந்தது. இது உண்மையில் அக்டோபர் புரட்சிப் பாதைக்குப் பதிலாக இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள் செய்ததுபோல ''பாராளுமன்ற பாதையை'' முன் வைப்பதாகும். இதன் மூலம் அரசு, புரட்சி பற்றிய மார்க்சிய-லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளைச் சிதைத்தது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையால் சமர்ப்பிக்கப்பட்ட மூல நகல் அறிக்கையில் இருந்த தவறான கருத்துக்களை சீனக்

கம்யூனிஸ்ட் கட்சி உறுதியுடன் எதிர்த்தது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து முன் வைத்த இரண்டு நகல் அறிக்கைகள் மீதும் எங்கள் கருத்துக்களை முன் வைத்தோம். அதில் கொள்கையளவிலான பெரும் மாற்றங்கள் பலவற்றைச் செய்து, அந்த அறிக்கையை எங்களுடைய திருத்தப்பட்ட அறிக்கையாகவே சமர்ப்பித்தோம். சீன—ரசிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கிடையே திருத்தப்பட்ட எங்கள் அறிக்கையின் மீது பல முறை விவாதம் நடத்தப்பட்ட பின்னரே, ரசிய—சீனக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டு நகல் அறிக்கை தயாரிக்கப்பட்டு, அது பிற சகோதரக் கட்சிகளின் கருத்துக்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பிற சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் மேற்கொண்ட பெரும் முயற்சியின் விளைவாக, அக்கூட்டத்தில் இப்போதுள்ள பிரகடனம் இறுதியாக நிறைவேற்றப்பட்டது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை முன்மொழிந்த நகலறிக்கையொடு ஒப்பிடும்போது, இந்த பிரகடனம் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிச்செல்லும் பிரச்சினைப் பற்றி, இரண்டு பெரும் மாற்றங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, சமாதான வழியிலான மாற்றத்திற்கான சாத்தியப்பாட்டைப் பற்றிக் குறிப்பிடும் அதே வேளையில், இப்பிரகடனம் சமாதானமல்லாத பாதையைச் சுட்டிக்காட்டி, ''ஆளும் வர்க்கம் தானாகவே ஒருபோதும் அதிகாரத்தை விட்டுக் கொடுக்காது என்பதைத் தான் லெனினியம் போதிக்கிறது; அனுபவங்களும் உறுதி செய்கின்றன'' என்பதை வலியுறுத்தியது. இரண்டாவதாக, பாராளுமன்றத்தில் ''உறுதியான பெரும்பான்மை பெறுவது'' பற்றிக் குறிப்பிடும் அதே சமயத்தில் ''பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட வழிகளில் மக்கள் போராட்டத்தை நடத்தவும், எதிர்ப் புரட்சியாளர்களின் எதிர்ப்பை முறியடிக்கவும், சோசலிசப் புரட்சியை சமாதான வழியில் பெற அவசியமான நிபந்தனைகளை உருவாக்கவும்'' வேண்டும் என்று வலியுறுத்தியது.

இவ்வளவு மாற்றங்கள் செய்யப்பட்டபோதிலும் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்தற்கான மாற்றம் பற்றிய பிரகடனத்தின் கருத்துக்கள் இன்னும் திருப்தியற்றதாகத்தான் இருந்தன. பிரகடனத்தின் கருத்துக்கள் 20-வது காங்கிரசுடன் கொஞ்சமாவது தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தியதால்தான் இறுதியாக இதற்கு நாங்கள் விட்டுக்கொடுத்து ஒப்புக் கொண்டோம்.

இருந்தபோதிலும், சமாதான வழியிலானமாற்றம் பற்றிய பிரச்சினையின்மீது, எங்களுடைய கருத்துக்களின் சாராம்சத்தை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு நாங்கள் சமர்ப்பித்தோம். அதில்,

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்கள் முழுமையாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டிருந்தன. அதன் சாராம்சம் வருமாறு:

''இப்போது உள்ள சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் சூழ்நிலையில், சமாதான மாற்றத்திற்கான விருப்பத்தை பற்றிக் குறிப்பிடுவது, போர் தந்திர அடிப்படையில் சாதகமாக இருக்கிறது. ஆனால், சமாதான மாற்றத்திற்கான சாத்தியப்பாட்டை அளவுக்கதிகமாக வலியுறுத்துவது சரியல்ல''.

''அவர்கள் (பாட்டாளி வர்க்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும்) எல்லா நேரங்களிலும் எதிர்ப்புரட்சித் தாக்குதல்களை முறியடிக்கவும் புரட்சியின் சிக்கலான கட்டத்தில் அதாவது தொழிலாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றும் சமயத்தில், முதலாளி வர்க்கம் மக்கள் புரட்சியை ஒடுக்க ஆயுத பலத்தைப் பயன்படுத்தினால் (பொதுவாக, முதலாளி வர்க்கம் அப்படி செய்வது தவிர்க்க முடியாது) அதை ஆயுத பலத்தின் மூலம் தூக்கி எறியவும் தயாராக இருக்க வேண்டும்''

''பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவது என்பதும் பழைய அரசு எந்திரத்தை உடைத்தெறிந்து (குறிப்பாக ஆயுதப்படைகள்), புதிய அரசு எந்திரத்தை உருவாக்குவதும் (குறிப்பாக ஆயுதப்படைகள்) ஒன்றல்ல. முதலாளி வர்க்கத்தின் இராணுவ—அதிகார வர்க்க அரசு எந்திரத்தை உடைத்தெறியாமல், பாட்டாளி வர்க்கமும் அதன் நம்பகமான நட்பு சக்திகளும் பாராளுமன்றப் பெரும்பான்மை பெறுவது சாத்தியமல்ல. அப்படியே பெற்றாலும் அது நம்பகமானதல்ல...'' (பார்க்க பின் இணைப்பு [1])

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பிற சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டு முயற்சியின் விளைவாக 1957-ம் ஆண்டு பிரகடனம் 20-வது காங்கிரசில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி முன் வைத்த ஏகாதிபத்தியம், யுத்தம், சமாதானம் பற்றிய பிரச்சினைகள் தொடர்பான தவறான கருத்துக்களைச் சரி செய்தது; கொள்கை பற்றிய பலமுக்கியமான பிரச்சினைகளில் பல புதிய அம்சங்களையும் சேர்த்தது. உலகம் முழுவதுமுள்ள பிற்போக்கின் மையம் அமெரிக்க ஏகாதிபத்தியம்தான்; அது மக்களுடைய முதன்மையான எதிரி; ஏகாதிபத்தியம் ஒருயுத்தத்தைத் தொடுக்குமானால் அதுவே அதன் அழிவுக்கு வழிவகுக்கும் என்ற ஆய்வு; சோசலிசப் புரட்சி மற்றும், சோசலிச கட்டுமானம் பற்றிய பொதுவிதிகள்; பல்வேறு நாடுகளில் புரட்சி மற்றும் கட்டுமானம் பற்றிய பருண்மையான நடைமுறைகளை மார்க்சிய-லெனினியத்தின்அனைத்தும் தழுவிய உண்மைகளுடன் இணைப்பதற்கான நெறிமுறைகள்; நடைமுறைப் பணிகளில் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை இணைக்க வேண்டியதன் அவசியம்; பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக்

கைப்பற்றுவது என்பது புரட்சியின் தொடக்கம் தானே தவிர அதுவே முடிவல்ல; முதலாளியமாசோசலிசமா எது வெல்லும் என்ற பிரச்சினையைத் தீர்க்க நீண்டகாலம் ஆகும்; முதலாளிய செல்வாக்கு நிலவுவது திரிபுவாதத்தின் உள்ளிருக்கும் மூலாதாரமாகவும், ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிவது வெளியே உள்ள மூலாதாரமாகவும் இருக்கின்றது; இது போன்ற கருத்துக்கள் தான் புதிதாக சேர்க்கப்பட்டவைகளில் முக்கியமானவை.

அதே சமயத்தில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் சில அவசியமான சமரசங்களையும் செய்தார்கள். சமாதான வழியிலான மாற்றம் பற்றிய விதிமுறைகளை மட்டுமின்றி ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ் பற்றிய குறிப்புக்களை சேர்க்க வேண்டும் என்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆலோசனையையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை; மாற்றங்களைச் செய்யும் படி ஆலோசனை கூறினோம். ஆனாலும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் இக்கட்டான நிலையையென்னி நாங்கள் அவற்றை வலியுறுத்தவில்லை.

ஒட்டுமொத்த நலனைக் கருதி நாங்கள் விட்டுக்கொடுத்த இந்த சலுகைகள் பின்னர், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையினால் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் பிளவையும், வேறுபாடுகளையும் தீவிரமாக்குவதற்கான சாக்குப்போக்குகளாகப் பயன்படுத்தப்படும் என்று யார் தான் கற்பனை செய்திருக்க முடியும்?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம், 20-வது காங்கிரசின் தீர்மானத்தை 1957-ம் ஆண்டு பிரகடனத்துக்குச் சமமாகவே கருதுகிறது. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொது வழிக்குப் பதிலாக 20-வது காங்கிரசின் தவறான வழியை நிலைநாட்டுவதற்கான முயற்சியே இது. சகோதரக் கட்சிகள் அனைத்தும் சுதந்திரமானவை, சமமானவை என்ற கொள்கையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட கட்சியின் காங்கிரஸ் தீர்மானங்களையோ அல்லது வேறுஎதையோ ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிற சகோதர கட்சிகளை யாரும் நிர்ப்பந்திக்க இயலாது என்பதை வெகு காலத்துக்கு முன்பே சுட்டிக் காட்டி உள்ளோம்; மீண்டும் அதையே வலியுறுத்திக் கூறுகிறோம்; அது மட்டுமல்ல ஒரு கட்சிக் காங்கிரசின் தீர்மானங்களை-அது எந்தக் கட்சியாக இருந்த போதிலும்-சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழியாகக் கருத முடியாது. அவை பிற சகோதரக் கட்சிகளைக் கட்டுப்படுத்தவும் முடியாது. மார்க்சிய-லெனினியமும், ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான ஆவணங்களும் மட்டுமே சகோதரக் கட்சிகளைக் கட்டுப்படுத்தும் பொது விதிகளாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையினுடைய திரிபுவாதத்தின் வளர்ச்சி

1957-ல் நடைபெற்ற மாஸ்கோ கூட்டத்தின் பிரகடனத்தை ஒருமனதாக ஏற்றுக்கொண்ட பிறகு, அந்த பிரகடனத்தில் வகுக்கப்பட்ட வழியைப் பின்பற்றி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை தன்னுடைய தவறுகளைக் களைந்து கொள்ளும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், நாங்களும் மற்ற மார்க்சிய-லெனினிய சகோதரக் கட்சிகளும் எதிர்பார்த்ததற்கு மாறாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை, பிரகடனத்தின் புரட்சிகரக் கொள்கைகளையும், தோழமைக் கட்சிகள், நாடுகளுக்கிடையிலான உறவு பற்றிய கொள்கைகளையும் தொடர்ந்து கடுமையாக மீறி பாட்டாளி வர்க்க சர்வதேசியம் மற்றும் மார்க்சிய-லெனினியப் பாதையிலிருந்து வெகுதூரத்திற்கு விலகிவிட்டது என்பதை வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் திரிபுவாதம் வளர்ந்துவிட்டது. இந்த வளர்ச்சி, சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் வேறுபாடுகளை மேலும்தீவிரமாக்கியிருப்பதுடன், அவற்றை ஒரு புதிய கட்டத்திற்கு இட்டுச் சென்றுள்ளது.

உலகம் முழுவதுமுள்ள மக்களின் பொது எதிரி அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் என்ற 1957-ம் ஆண்டு பிரகடனத்தின் பொதுமுடிவை ரசிய கம்யூனிஸ்ட் கட்சி, முழுமையாகப் புறக்கணித்துவிட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டுறவை வளர்க்கவும் அமெரிக்கத் தலைவர்களோடு ரசியநாட்டுத் தலைவர்களும் சேர்ந்து உலகப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஆர்வம் காட்டி வருகிறது. குறிப்பாக, 1959 செப்டம்பர் மாதம் நடைபெற்ற கேம்ப் டேவிட் பேச்சுவார்த்தையின்போது குருச்சேவ், அய்சனோவரை வானளாவப் புகழ்ந்தார், அவர் ''தன்நாட்டு மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்றவர்'' [1] என்றும், ''நம்மைப் போலவே அவரும் சமாதானத்தைக் காப்பதில் அக்கறை கொண்டவர்'' [2] என்றும் பாராட்டினார். சொல்லிக்கொள்ளப்படும் ''கேம்ப் டேவிட் உணர்வுகளை'' ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் ''சர்வதேசிய உறவுகளில் புதிய சகாப்தம்'' [3] ''வரலாற்றின் திருப்புமுனை'' [4] என்று விளம்பரப்படுத்தினார்கள். ஆனால் ''கேம்ப் டேவிட் உணர்வுகள்'' என ஒன்று இருப்பதை அய்சனோவரே கூட மறுத்துவிட்டார்.

---

1. என். எஸ். குருச்சேவ், மாஸ்கோ பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை, செப்டம்பர் 28, 1959.
2. என்.எஸ். குருச்சேவ், வாஷிங்டனில் பத்திரிகை நிருபர் கூட்டம், செப்டம்பர் 27, 1959.
3. ஏ. ஏ. குரோமிகோ, ரசிய சுப்ரீம் சோவியத் கூட்டத் தொடரில் ஆற்றிய உரை, அக்டோபர் 31, 1959.
4. என்.எஸ். குருச்சேவ் மற்றும் கே.ஒய். வோரோஷிலோவ், டி. டி. அய்சனோவருக்கு அனுப்பிய புத்தாண்டு வாழ்த்துச் செய்தி, ஜனவரி 1, 1960.

1957-ம் ஆண்டு பிரகடனத்தின் புரட்சிகரப் பாதையை முற்றாகப் புறக்கணித்துவிட்டு, குருச்சேவ் தன்னுடைய அறிக்கைகளிலும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ரசியப் பத்திரிகைகளில் வெளியிடும் அறிக்கைகளிலும், அவர்களுடைய திரிபுவாதப் பாதையான, ''சமாதான சகவாழ்வு'' ''சமாதான போட்டி'', ''சமாதான மாற்றம்'' ஆகியவைகளைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தனர். ஏகாதிபத்தியவாதிகளின் ''மேதாவிலாசத்தையும்'' ''நல்லெண்ணத்தையும்'' புகழ்ந்தனர். உலகத்தின் பெரும்பகுதி ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தில் இருக்கும் போதே ''ஆயுதங்களில்லாத, ஆயுதப்படைகள் இல்லாத, போர்கள் இல்லாத ஓர் உலகத்தை உருவாக்க முடியும்'' [1] என்றும், உலகம் முழுவதுமான ஒட்டுமொத்தப் படைக்குறைப்பு, ''ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தத்தைத் துவக்கும்'' [2] என்றும் பிரச்சாரம் செய்தனர்.

மார்க்சிய-லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளைத் தவறாகக் கையாண்டும் அவற்றின் புரட்சிகர அம்சங்களை நீக்கியும் திரிபுவாதக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தும், தத்துவம், அரசியல் பொருளாதாரம், சோசலிசம் மற்றும் கம்யூனிசக்கோட்பாடுகள், வரலாறு, இலக்கியம், கலை ஆகிய பல்வேறு துறைகளில் முக்கிய பிரச்சினைகளைப் பற்றி ஏராளமான புத்தகங்களையும், கட்டுரைகளையும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டது.

சர்வதேச ஜனநாயக அமைப்புகளில் தன்னுடைய தவறானகருத்துக்களைத் திணிக்கவும், அவைகளின் சரியான வழிகளை மாற்றவும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை சுறுசுறுப்பாக செயல்பட்டது. ஜூலை 1960-ல் பீகிங்கில் நடைபெற்ற சர்வதேசத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் பொதுக்குழுக் கூட்டத்தில் ரசியத் தோழர்கள் நடந்து கொண்ட விதம் இதற்கு ஓர் உதாரணம்.

1957 பிரகடனத்தில் முன்வைக்கப்பட்ட சகோதரக் கட்சிகள் மற்றும் நாடுகளுக்கிடையிலான உறவுகளுக்கு வழிகாட்டும் கொள்கைகளை முற்றாகப் புறக்கணித்துவிட்ட ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், சீனாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து ஆதாயம் பெறுவதில் ஆர்வமாக உள்ளனர். மார்க்சிய-லெனியத்தைப் பின்பற்றும்,

---

1. என். எஸ். குருச்சேவ், கிளேரின் எனும் அர்ஜெண்டினா நாட்டுப் பத்திரிகையின் இயக்குனரான ரொபர்ட்டோ ஜே. நோபில் என்பவரின் கேள்விகளுக்குப் பதில்கள், டிசம்பர் 30, 1959.
2. என். எஸ். குருச்சேவ், அய்.நா. பொதுச்சபையில் ஆற்றிய உரை, செப்டம்பர் 18, 1959.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை தம்முடைய திரிபுவாதப் பாதைக்குத் தடைகல்லாகக் கருதுகின்றனர். தங்களுடைய உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து விட்டதாகவும், தங்களுடைய சொந்த நிலையை ''உறுதிப்படுத்திக் கொண்டதாக''வும் அவர்கள் நினைத்தார்கள். எனவே, ''எதிரிகளுடன் நட்பாகவும், நண்பர்களுடன் கடுமையாகவும்'' இருக்கும் அவர்களுடைய கொள்கையைப் பின்பற்றத் துவங்கி விட்டார்கள்.

சீனாவை ரசிய இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கத்துடன் 1958-ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் நேர்மையற்ற கோரிக்கைகளை முன்வைத்தார்கள். இந்த நேர்மையற்ற கோரிக்கைகள் சீன அரசாங்கத்தால் சரியாகவும், உறுதியாகவும் நிராகரிக்கப்பட்டன. அதற்குப் பின் சீனாவுக்கும் ரசியாவுக்குமிடையே 1957-ல் அக்டோபரில்முடிவுசெய்யப்பட்ட தேசிய பாதுகாப்புக்கான புதிய தொழில் நுணுக்கம் பற்றிய ஒப்பந்தத்தை ரசிய அரசாங்கம், ஜூன் 1957 ஒரு தலைப்பட்சமாகக் கிழித்தெறிந்தது. ஒரு அணுகுண்டு மாதிரியையும், அதன் உற்பத்தி தொடர்பான தொழில் நுணுக்க விவரங்களையும் சீனாவுக்குத் தரமறுத்து விட்டது.

பிறகு, அமெரிக்காவுக்கு குருச்சேவ் விஜயம் செய்யவிருந்த நேரத்தில், திரும்பத்திரும்ப வலியுறுத்தப்பட்ட சீனாவின் ஆட்சேபணைகளை அலட்சியப்படுத்தி விட்டு, சீன—இந்திய எல்லை தொடர்பாக இந்திய பிற்போக்குவாதிகளுக்கு ஆதரவாக செப்டம்பர் 9-ம் தேதி டாஸ் அறிக்கையை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை வெளியிட்டது. இதன் மூலம் சீனாவுக்கும், ரசியாவுக்கும் உள்ள வேறுபாடுகளை உலகம் முழுவதும் பகிரங்கமாக்கியது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை, தேசிய பாதுகாப்புக்கான நவீன தொழில் நுட்ப ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தது; குருச்சேவின் அமெரிக்க விஜயத்தின் போது, சீன—இந்திய எல்லைத் தகராறு பற்றி அறிக்கை வெளியிட்டது; இவை இரண்டும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சலுகையைப் பெறுவதற்காகவும், சொல்லிக்கொள்ளப்படும் ''கேம்ப் டேவிட் உணர்வை'' உருவாக்குவதற்காகவும் அய்சனோவருக்குத் தரப்பட்ட அன்பளிப்புகள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், ரசிய வெளியீடுகளும், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் மீது தீவிரமான தாக்குதல்கள் பலவற்றைத் தொடுத்தன. இந்த தாக்குதல்கள் அனைத்துமே குருச்சேவினால் தலைமை ஏற்று நடத்தப்பட்டவை. சீன சோசலிச கட்டுமானம் ''ஒரு கட்டத்தைத் தாவிச் செல்கிறது'',

''சமநிலைக் கம்யூனிச''[1] கட்டத்துக்குச் செல்கிறது என்றும், சீனாவின் மக்கள் கம்யூன்கள் ''சாராம்சத்தில் பிற்போக்கானவை''[2] என்றும் அவர் இழிவுப்படுத்தினார். சீனா யுத்தத்தை விரும்புகிறது என்றும், ''சாகசவாத''[3] குற்றமிழைத்தது என்றும் பலவாறு அவதூறு செய்தார். கேம்ப் டேவிட் பேச்சு வார்த்தை முடிந்து திரும்பி வந்ததும், ''இரண்டு சீனா'' என்ற அமெரிக்க சதியை, சீனாவிடம் விற்க முயற்சி செய்யும் அளவுக்குச் சென்று விட்டார். மக்கள் சீன குடியரசு அமைக்கப்பட்ட 10-வது ஆண்டு நிறைவு விழாவில் ''முதலாளித்துவ அமைப்பு முறையின் உறுதியை வன்முறை மூலம் சோதிப்பதற்கு'' எதிராக சீனாவுக்கு ஒரு பிரசங்கம் செய்தார்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை பின்பற்றிய திரிபுவாத, பிளவு வாதப் பாதை சர்வதேச கம்யூனிச இயக்கத்தைச் சேர்ந்தஅணிகளிடையே கடுமையான குழப்பத்தை விளைவித்தது. உலக மக்களின் பிரதான எதிரி என்ற நிலையிலிருந்து அமெரிக்க ஏகாதிபத்தியம் மாறிவிட்டது போன்ற தோற்றம் உருவாகியது. சில கம்யூனிஸ்டுகள் அய்சனோவரை ''சமாதானத் தூதராக'' வரவேற்றனர். அவர்களுக்கு மார்க்சிய—லெனினியமும், 1957-ம் ஆண்டு பிரகடனமும் காலாவதியாகிவிட்டது போல் தோன்றியிருக்கிறது.

இந்த சூழலில், மார்க்சிய—லெனினிசத்தையும் 1957-ம் ஆண்டுப் பிரகடனத்தையும் பாதுகாப்பதற்கும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நிலவுகின்ற குழப்பங்களை போக்குவதற்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1960 ஏப்ரலில் ''லெனினியம் நீடூழிவாழ்க'' என்ற கட்டுரையையும், வேறு இரு கட்டுரைகளையும் வெளியிட்டது. கொள்கையைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையை நிலை நிறுத்துவதிலும் நமக்குள்ள உறுதியான நிலைப்பாட்டின் அடிப்படையில், 1957-ம் ஆண்டு பிரகடனத்தின் புரட்சிகர அம்சங்களையும், ஏகாதிபத்தியம், யுத்தம், சமாதானம், பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவை பற்றிய அடிப்படை மார்க்சிய—லெனினிய கோட்பாடுகளையும் விளக்குவதில் கவனம் செலுத்தினோம். இந்த மூன்று கட்டுரைகளிலும் இருந்த கருத்துக்கள்; ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து பரப்பி வரும் தவறான கருத்துக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. இருந்த

1. என். எஸ். குருச்சேவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 21-வது பேராயத்திற்கு சமர்ப்பித்த அறிக்கை, ஜனவரி, 1959.
2. என். எஸ். குருச்சேவ், அமெரிக்க செனட்டரான ஹெச்.ஹெச். ஹம்ஃப்ரேயுடன் உரையாடல், டிசம்பர் 1, 1958.
3. என். எஸ். குருச்சேவ், ரசிய சுப்ரீம் சோவியத் கூட்டத் தொடருக்கு சமர்ப்பித்த அறிக்கை, அக்டோபர், 1959.

போதிலும், ஒட்டுமொத்த நலன் கருதி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை பகிரங்கமாக விமர்சனம் செய்வதைத் தவிர்த்திருந்தோம்; போராட்டத்தினை ஏகாதிபத்தியவாதிகளுக்கும், யூகோஸ்லாவிய திரிபு வாதிகளுக்கும் எதிராக மட்டுமே முனைந்து நடத்தினோம்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, தன்னுடைய பகிரங்கக் கடிதத்தில் ''லெனினிசம் நீடூழிவாழ்க'' என்ற கட்டுரையையும், மற்ற இரு கட்டுரைகளையும் தாக்குவதிலும் கருத்துக்களைப் புரட்டுவதிலும் அதிக சக்தியைச் செலவிட்டுள்ளது. ஆனால், அதன் தாக்குதல்களுக்கு ஆதாரமாக நம்பத்தகுந்த வாதம் எதையும் அவர்களால் முன் வைக்க முடியவில்லை. நாங்கள் இந்தக் கேள்வியை முன் வைக்கவிரும்புகிறோம், அந்த சூழ்நிலைகளில் நிலவிவந்த தவறான கருத்துக்கள் மற்றும் அபத்தமான வாதங்கள் பற்றி நாங்கள் மவுனம் சாதித்திருக்க வேண்டுமா? மார்க்சிய—லெனினியத்தையும் 1957 ஆம் ஆண்டு பிரகடனத்தையும் பாதுகாக்க முன்வருவது எங்களுடைய உரிமையும், கடமையும் அல்லவா?

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீது, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை நடத்திய எதிர்பாராத தாக்குதல்

''லெனினியம் நீடூழி வாழ்க'' என்ற கட்டுரையும் எங்களுடைய மற்ற இரண்டு கட்டுரைகளும் வெளியான ஒரு வாரத்திற்குப் பிறகு ரசிய வானவெளியில் அமெரிக்காவின் யு-2 ரக விமானம் அத்துமீறி நுழைந்தது. அமெரிக்கா, கூடவிருந்த நான்கு வல்லரசுகளின் உச்சி மாநாட்டைத் தடுத்துவிட்டது. ''கேம்ப் டேவிட் உணர்வுகள்'' முற்றாக மறைந்தன. இத்தகைய நிகழ்ச்சிகள் நம்முடைய கருத்துக்களை முற்றாக உறுதி செய்தன.

இந்நிலையில், சீன—ரசிய கம்யூனிஸ்ட் கட்சிகளும், உலகின் அனைத்து சகோதரக் கட்சிகளும் தங்களுக்கிடையே உள்ள வேறுபாடு களைக் களைந்து, ஒற்றுமையைப் பலப்படுத்தி, பிரதான எதிரிக்கு எதிராக ஒரு ஒன்றுபட்ட போராட்டத்தை நடத்துவது அவசியமானதாக இருந்தது. ஆனால், நடந்தது அதுவல்ல. 1960-ஆம் ஆண்டு கோடை காலத்தில், சர்வ தேசிய கம்யூனிச இயக்கத்தின் வேறுபாடுகள் விரிவடைந்தன; சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராகப் பெருமளவில் பிரச்சாரம் நடத்தப்பட்டது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமை, சீன-ரசிய கட்சிக்களுக்கிடையிலான சிந்தாந்த வேறுபாடுகளை அரசு உறவு களுக்கும் விரிவுபடுத்தியது.

1960 ஜூன் ஆரம்பத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஒரு யோசனையை முன் வைத்தது. ஜூன் இறுதியில் புக்கா ரஸ்ட்டில் நடைபெறவிருந்த ருமேனியத் தொழிலாளர் கட்சியின் மூன்ற

வது காங்கிரசில், நான்கு வல்லரசுகளின் உச்சி மாநாட்டை அமெரிக்க ஏகாதிபத்தியம் தோல்வியுறச் செய்ததற்குப்பின், உருவாயுள்ள சர்வதேச நிலைமையைப் பற்றி எல்லா சோசலிச நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்பதுதான் அந்த யோசனை. இத்தகைய ஒரு அவசர கூட்டம் பற்றிய திட்டத்தையோ அல்லது சோசலிச நாடுகளைச் சேர்ந்த கட்சிகளின் பிரதிநிதிகளை மட்டுமே உள்ளடக்கிய கூட்டம் பற்றிய திட்டத்தையோ, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, அங்கீகரிக்கவில்லை. உலகமுழுவதுமுள்ள கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கியக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்ற ஆக்கபூர்வமான ஆலோசனையை நாங்கள் முன் வைத்தோம்; மேலும் அக்கூட்டம் வெற்றியடைவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய போதிய தயாரிப்புகள் செய்ய வேண்டும் என்றும் கூறினோம். எங்கள் திட்டம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ருமேனிய தொழிலாளர் கட்சியின் மூன்றாவது கங்கிரசுக்கு வருகின்ற சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் அத்தகைய சர்வதேசக் கூட்டத்திற்கான தேதி, இடம் முதலியவைப் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம் என்றும், ஆனால், எந்த முடிவுகளையும் எடுக்கக்கூடாது என்றும் இரு கட்சிகளுமே ஒத்துக்கொண்டன.

புக்காரஸ்ட்டில், எங்களுக்கு ஆச்சரியம் தரத்தக்க வகையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், அவர்களுடைய வாக்கை மீறினார்கள்; எதிர்பாராத வகையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது தாக்குதல் தொடுத்தார்கள்; அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அல்லாமல் எங்களுக்கு எதிராகப் போராட்டத்தைத் தொடுத்தார்கள்.

சகோதரக் கட்சிகளின் கூட்டம் புக்காரஸ்ட்டில் ஜூன் 24 முதல் 26 வரை நடைபெற்றது. அந்த கூட்டம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு ''தோழமை பூர்வமான உதவி'' யாகும் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதம் வர்ணிக்கிறது. இது ஒரு அப்பட்டமான பொய்யாகும்.

உண்மையில், அந்த கூட்டத்தின்போது, குருச்சேவினால் தலைமை தாங்கப்பட்ட ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தி கமிட்டி எழுதிய ஜூன் 21 தேதியிட்ட ஒரு செய்திக் கடிதத்தை சில சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு வினியோகம் செய்தார்கள்; மற்றவர்களுக்கும் படித்துக் காட்டினார்கள். அந்த செய்திக் கடிதம் முழுவதும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை ஆதாரம் இல்லாமல் அவதூறு செய்தும், தாக்கியும் இருந்தது. அக்கடிதம், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையினால் துவக்கப்பட்டுள்ள சீன எதிர்ப்பு பிரச்சாரத்திற்கான திட்டத்தைக் கொண்டிருந்தது.

அந்தக் கூட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது ஒருமுகப்படுத் தப்பட்ட பெரும் தாக்குதலை குருச்சேவ் தலைமை ஏற்றுவழிநடத்தினார். அவருடைய உரையில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை ''பைத்திக்கார மனிதர்கள்'' என்றும்''யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட விரும்புகிறார்கள்'' என்றும் ''ஏகாதிபத்திய, ஏகபோக முதலாளிகளின் பதாகையைத் தூக்கிப்பிடிக்கிறார்கள்'' என்றும், சீன-இந்திய எல்லைப் பிரச்சினையில் ''சுத்த தேசியவாதிகள்'' என்றும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக ''டிராட்ஸ்கியமுறைகளை'' கடைப்பிடிப்பவர்கள் என்றும் வேண்டும் என்றே இழிவுபடுத்தினார். சில சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகளும் குருச்சேவுக்கு கீழ்ப்படிந்து, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது ''வறட்டு வாதிகள்'' என்றும், ''இடது துணிகரவாதிகள்'' என்றும், ''போலிப் புரட்சியாளர்கள்'' என்றும், ''பிளவுவாதிகள்'' என்றும், ''யூகோஸ்லா வியாவை விட மோசம்'' என்றும் பலவாறாகக் குற்றம் சாட்டினர்.

இந்தக் கூட்டத்தில் குருச்சேவ் நடத்திய சீன எதிர்ப்புப் பிரச்சாரம் பல சகோதரக் கட்சிகளுக்கும் கூட ஆச்சரியத்தைத் தந்தது. பல்வேறு சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை யின் தவறான நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்தனர்.

இந்த கூட்டத்தில், அல்பேனிய தொழிலாளர் கட்சியின் பிரதிநிதி கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் அதிகாரத்திற்குப் பணிய மறுத்து அவர்களுடைய குறுங்குழுவாத நடவடிக்கைகளைக் கடுமை யாக எதிர்த்தனர். இதன் விளைவாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலை வர்கள் அல்பேனியத் தொழிலாளர் கட்சியை, தங்கள் தொல்லைகளுக் கான ஊற்றுக் கண்ணாகக் கருதினர். அதன்பிறகு அல்பேனிய கட்சிக்கு எதிராக மேலும் தீவிர நடவடிக்கைகளை எடுத்தனர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தொடுத்த இந்த கோழைத்தனமான தாக்குதலை ''தோழமை பூர்வமான உதவி'' என்றழைக்க முடியுமா? நிச்சயம் முடியாது. இது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் முன்கூட்டியே திட்டமிட்டு அரங் கேற்றப்பட்ட சீன எதிர்ப்பு நாடகம் ஆகும். இது, 1957-ம் ஆண்டு பிரகடனத்தில் முன் வைக்கப்பட்ட, சகோதரக் கட்சிகளின் உறவு பற்றிய வழிகாட்டும் கொள்கைகளைக் கொடூரமாக மீறிய செயல் ஆகும். இது, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட திரிபுவாதிகள் ஒரு மார்க்சிய—லெனினியக் கட்சி மீது நடத்திய பெரும் தாக்குதலாகும்.

இந்த சூழ்நிலையில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக்கெதிராக மார்க்சிய—லெனினிய நிலைப்பாடுகளையும் பிரகடனத்தில் முன்வைக் கப்பட்ட சகோதரக் கட்சிகளின் உறவு பற்றிய வழிகாட்டும் கொள்கை களையும், பாதுகாக்கும் பொருட்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, தனது

எதிர்ப்போராட்டத்தை நடத்தியது. விரிவான நலன் கருதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள், புக்காரஸ்ட் கூட்டத்தின் அதிகார பூர்வ அறிவிப்பில் கையெழுத்திட்டார்கள். அதே சமயத்தில் 1960, ஜூன் 26-ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் அறிவுறுத் தலின்படி ஒரு எழுத்து மூலமான அறிக்கையை கூட்டத்தில் வினியோகம் செய்தார்கள். அந்த அறிக்கையில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதி நிதிகள் புக்காரஸ்ட் கூட்டத்தில் குருச்சேவின் நடத்தை சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் ஒரு மோசமான முன்னுதாரணத்தை உருவாக் கியது என சுட்டிக் காட்டினார்கள். அந்த அறிக்கை மிகுந்த பொறுப் புணர்வுடன் அறிவித்தது:

''எங்களுக்கும் தோழர் குருச்சேவிற்கும் இடையே மார்க்சிய—லெனினியத்தின் பல்வேறு அடிப்படைக் கொள்கைகள் பற்றி வேறுபாடுகள் நிலவுகின்றன''. ''சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் எதிர்காலம் அனைத்து நாடுகளின் மக்களுடைய தேவையையும், போராட்டங்களையும், மார்க்சிய—லெனினிய வழிகாட்டுதல்களையும் பொறுத்ததே ஒழிய எந்த ஒரு தனிநபரின் அதிகாரத்தினாலும் தீர்மானிக்கப்படுவதில்லை''. ''......எங்கள் கட்சி மார்க்சிய—லெனினிய உண்மைகளை மட்டுமே நம்புகிறது; அதற்குக் கீழ்ப்படிகிறது. மார்க்சிய—லெனினியத்திற்கு எதிரான, தவறான கருத்துகளுக்கு என்றும் அடிபணிய மாட்டோம்'' (பார்க்க பின் இணைப்பு **2**).

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் புக்காரஸ்ட்டில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை அடிபணிய வைப்பதில் தோல்வி கண்டதோடு நின்று விடவில்லை. புக்காரஸ்ட் கூட்டம் முடிந்த உடனேயே, சீன—ரசிய கட்சிகளுக்கிடையிலான தத்துவார்த்த வேற்றுமைகளை அரசு உறவுகள் அரங்கத்திற்குக் கொண்டு சென்று தொடர்ச்சியான பல நடவடிக்கைகளின் மூலம் சீனாவுக்கு அதிக நெருக்கடிகளை ஏற்படுத் தினர்.

ஒரு மாத காலத்திற்குள் சீனாவில் உள்ள ரசிய தொழில் வல்லுனர்கள் அனைவரும் ரசியா திரும்பவேண்டும் என்று ரசிய அரசாங்கம் ஜூலை மாதத்தில் தன்னிச்சையாக திடீரெனமுடிவெடுத்தது; அதன் அடிப்படையில், நூற்றுக்கணக்கான உடன் படிக்கைகளையும், ஒப்பந்தங்களையும் கிழித்தெறிந்தது. ரசிய வாசகர்களுக்காக ''நட்பு'' என்ற பத்திரிக்கையை சீனா வெளியிடுவதற்கும், சீன வாசகர்களுக்காக ''சீன-ரசிய நட்பு'' என்ற பத்திரிக்கையை ரசியா வெளியிடுவதற்கும், இரு பத்திரிக்கைகளையும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கும் வகை செய்த ஒப்பந்தத்தை ரத்து செய்தது. ரசியாவிலுள்ள சீனத் தூதர கத்தில் பணி புரிந்த ஒருவரை சீன அரசாங்கம் திரும்பப் பெற வேண்டும் என்ற தேவையற்ற நடவடிக்கையை மேற்கொண்டது. சீன—ரசிய எல்லைப் பிரச்சனையைத் தோற்றுவித்தது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு அடிவருடிக் கும்பலைச் சேர்த்து ஒருமுனைப்படுத்திய தாக்குதல் தொடுப்பதன் மூலமும் ஏராளமான அரசியல்—பொருளாதார நிர்ப்பந்தங்களை உருவாக்குவதன் மூலமும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை மார்க்சிய—லெனினியத்திலிருந்தும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திலிருந்தும் விலகச் செய்து தங்களுடைய திரிபுவாத, பெரும்வல்லரசு ஆதிக்கவெறிக்கு அடிபணிய வைக்க முடியும் என்று நினைத்திருப்பார்கள் போலும். ஆனால், நன்றாக வளர்த்தெடுக்கப்பட்ட, நீண்ட காலம் சோதனைகளைத்தாங்கிய சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும், சீன மக்களையும் அழிக்கவோ அடிபணிய வைக்கவோ முடியாது. ஒரு முனைப்படுத்தப்பட்ட தாக்குதல் மூலமும் நெருக்கடிகள் மூலமும் எங்களை அடிபணியவைக்க முயற்சி செய்தவர்கள் முற்றாக தப்புக் கணக்குப் போட்டுள்ளனர்.

சீன—ரசிய உறவுகளை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எப்படி சீரழித்தார்கள் என்ற விவரங்களை வேறுகட்டுரைகளில் தருகிறோம். இங்கு ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம். தத்துவார்த்த வேறுபாடுகளை அரசு உறவுகளுக்கு சீனா கொண்டு வந்ததாகவும், இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக உறவைத் துண்டித்ததாகவும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகமிட்டியின் பகிரங்கக்கடிதம் தவறாக குற்றம் சாட்டுகிறது. சீனாவில் இருந்த தொழில் வல்லுணர்களை ரசிய அரசாங்கம் திரும்பப் பெற்றதையும், நூற்றுக் கணக்கான உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் கிழித்தெறிந்தையும், ரசியாவின் இத்தகைய தன்னிச்சை நடவடிக்கைகள் தான் சீன—ரசிய வர்த்தகம் குறைந்ததற்கு காரணம் என்ற விபரங்களையும் வேண்டுமென்றே அக்கடிதம் மறைக்கிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை தன்னுடைய உறுப்பினர்களையும் ரசிய மக்களையும் அப்பட்டமாக இப்படி ஏமாற்றுவது உண்மையிலேயே வருந்துவதற்குரியதாகும்.

1960-ல் நடைபெற்ற சகோதரக் கட்சிகளின் கூட்டத்தில் இரு பாதைகளுக்கிடையிலான போராட்டம்

1960-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்ற சமயத்தில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் கூர்மையான போராட்டம் உருவானது. இது, மார்க்சிய-லெனினியப் பாதைக்கும், திரிபுவாத பாதைக்கும்இடையிலான போராட்டம்; கொள்கைகளில் ஊன்றி நின்று ஒற்றுமையை உயர்த்திப் பிடிக்கும் கொள்கைக்கும், கொள்கைகளைக் கைவிட்டு பிளவுகளை உருவாக்கும் கொள்கைக்கும் இடையிலான போராட்டமாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை தன்னுடைய தவறான நிலைப்பாட்டில் ஊன்றி நின்று கொண்டு தன்னுடைய தவறான பாதையை

சர்வசதேச கம்யூனிச இயக்கத்தின் மீது திணிப்பதற்கு முயற்சி செய்கிறது என்பதும் இந்த கூட்டம் நடப்பதற்கு முன்பே தெளிவாகத் தெரிந்தது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி வேறுபாடுகளின் தீவிரத் தன்மையை நன்கு உணர்ந்திருந்தது. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் நலன் கருதியும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை தவறான பாதையில் வெகுதூரம் சென்றுவிடாது என்ற நம்பிக்கையிலும் நாங்கள் பல்வேறு முயற்சிகளைச் செய்தோம்.

1960-ஆம் ஆண்டு செப்டம்பர் 10-ம் தேதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஜூன் 21-ல் எழுதிய தகவல் கடிதத்திற்குப் பதில் அளித்தது. அந்தக் கடிதம் உண்மைகளை முன்வைத்து தர்க்கரீதியான விளக்கங்களை அளித்தது. சர்வதேச கம்யூனிச இயக்கம் பற்றியும் சர்வதேச நிலைமை பற்றியும் பல்வேறு கொள்கை சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி முறையாக விளக்கம் தந்தது. எங்கள் மீது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை தொடுத்த தாக்குதல்களுக்கு மறுப்புத் தெரிவித்தது; அதன் தவறான கருத்துக்களை விமர்சனம் செய்தது; வேற்றுமைகளை தீர்த்துக்கொள்ளவும், ஒற்றுமையை உருவாக்கவும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக்கு, அய்ந்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன் வைத்தது. (பார்க்க பின் இணைப்பு 3).

அதைத் தொடர்ந்து, செப்டம்பர் மாதத்தில். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஒரு பிரதிநிதிகள் குழுவை மாஸ்கோவுக்கு அனுப்பியது. அந்த பேச்சுவார்த்தைகளின் போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகள்குழு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அதிகமாக மதிக்கின்ற அதே சமயத்தில், சீனாவை எதிர்ப்பதில் தீவிரமாக இருப்பதையும், கட்சிகளுக்கிடையிலான தத்துவார்த்த வேறுபாடுகளை அரசு உறவு அரங்கத்திற்கு விரிவுபடுத்துவதையும், எதிரிகளை சகோதரர்களாகவும், சகோதரர்களை எதிரிகளாகவும் நடத்துவதையும் சுட்டிக்காட்டியது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகள் குழு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிடம். தவறான நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும்படியும், சகோதரக் கட்சிகள், நாடுகளுக்கிடையே உள்ள உறவுகள் பற்றிய வழிகாட்டும் கோட்பாடுகளைப் பின்பற்றுமாறும், பொது எதிரியை எதிர்த்துப் போராட, சீன-ரசிய கட்சிகளுக்கு இடையேயும் நாடுகளுக்கு இடையேயும் ஒற்றுமையைப் பலப்படுத்துமாறும் திரும்பத் திரும்ப வலியுறுத்தியது. இருப்பினும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள், தங்களுடைய தவறுகளைத் திருத்திக் கொள்வதில் சிறிதுகூட ஆர்வம் காட்டவில்லை.

இவ்வாறு, ஒரு கடுமையான போராட்டம் தவிர்க்க முடியாததாகிவிட்டது. சகோதரக் கட்சிகளின் கூட்டத்திற்கான ஆவணங்களைத் தயாரிக்

கும் பணியில் ஈடுபட்டிருந்த, 26 சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட நகல் அறிக்கை தயாரிக்கும் கமிட்டியில் முதன் முதலாக இந்தப் போராட்டம் வெடித்தது. அதற்குப் பின் 81 சகோதரக் கட்சிகள் கலந்துகொண்ட கூட்டத்தில், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு இப் போராட்டம் கூர்மையடைந்தது.

அக்டோபர் மாதத்தில் மாஸ்கோவில் நடைபெற்ற நகல் அறிக்கை தயாரிப்புக் கமிட்டிக் கூட்டங்களில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களுடைய சொந்த நகல் அறிக்கையைத் திணிக்க முயற்சி செய்தனர். அந்த அறிக்கை தொடர்ச்சியான பல தவறுகளைக் கொண்டிருந்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் வேறுசில சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் நடத்திய கொள்கை ரீதியான போராட்டத்தின் விளைவாக சூடான விவாதங்களுக்குப் பின், நகல் அறிக்கை கமிட்டி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியால் முன்வைக்கப்பட்ட நகல் அறிக்கையில், பல முக்கியமான கொள்கை மாற்றங்களைச் செய்தது, நகல் அறிக்கையின் பெரும்பகுதி கமிட்டியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனாலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை, விவாதத்தைத் தொடரும் முடிவுடன் நகல் அறிக்கையிலிருந்த பல்வேறு பிரச்சினைகள் மீது ஒரு உடன்பாட்டுக்கு வர மறுத்தது. அது மட்டுமல்லாமல் நியூயார்க்கிலிருந்து குருச்சேவ் திரும்பி வந்ததும், சில பிரச்சினைகள் மீது ஏற்கனவே ஏற்பட்டிருந்த உடன்பாடுகளைக் கூட ஏற்க மறுத்துவிட்டது.

81 சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம் மாஸ்கோவில் 1960 நவம்பரில் நடைபெற்றது. வேற்றுமைகளை களைந்து ஒற்றுமையை பலப்படுத்துமாறு சீனா மற்றும் பல நாட்டுப் பிரதிநிதிகளும் தெரிவித்த விருப்பத்தைப் புறக்கணித்துவிட்டு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை மாஸ்கோவில் கூடியிருந்த சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகளிடையே 127 பக்கங்கள் கொண்ட கடிதத்தை வினியோகம் செய்தது. அந்த கடிதம் முன் எப்போதையும்விட காட்டுமிராண்டித்தனமாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கி இருந்தது. இதன் மூலம் பிரச்சினையை மேலும் கூர்மைப்படுத்தியது.

இத்தகைய அசாதாரண சூழ்நிலையில்தான், 81 சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் கீழ்த்தரமான நடத்தையினால் கூட்டம் தோல்வியின் எல்லைக்குச் சென்றது. ஆனாலும் இறுதியாக, கூட்டம் உடன்பாடுகளையும், ஆக்கபூர்வமான முடிவுகளையும் அடைந்தது. இதற்குக் காரணம்சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் வேறுசில சகோதரக்கட்சிகளின் பிரதிநிதிகள் கொள்கைவழிப் போராட்டத்தில் ஊன்றி நின்று, ஒற்றுமையை உயர்த்திப் பிடித்ததும், பெரும்பான்மையான சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் ஒற்றுமையை வலியுறுத்தி, பிளவுக்கு எதிராக இருந்ததும்தான்.

அந்த கூட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள் ''தாங்கள் முழுமையாகத் தனிமைப்பட்டுப் போகும் அபாயம் தெளிவாகத் தெரிந்ததால்தான் அறிக்கையில் கையெழுத்து இட்டதாக'' ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் அறிவிக்கிறது. இது மற்றுமொரு பொய்.

உண்மையில் இருந்த நிலைமை என்ன?

கூட்டத்தின் போதும் அதற்கு முன்பும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது பல்வேறு சகோதரக் கட்சிகளின் தாக்குதல்களைக் குவிப்பதற்கு சதி செய்ததும், சொல்லிக் கொள்ளப்படும் பெரும்பான்மையைச் சார்ந்து நின்று, சீனா மற்றும் பிற மார்க்சிய—லெனினிய கட்சிகளின் பிரதிநிதிகளைத் நிர்ப்பந்தப் படுத்திப் பணியவைத்து, தங்களது திரிபுவாத வழியையும், கருத்துக் களையும் ஏற்றுக் கொள்ளச் செய்ய முயன்றதும் தான் உண்மை. இருப்பினும், மற்றவர்கள் மீது விசயங்களைத் திணிக்க ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை செய்த முயற்சிகள், 26 சகோதரக் கட்சிகள்கொண்ட நகல் அறிக்கைக் கமிட்டியிலும் சரி, 81 சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்திலும் சரி, தோல்வியைத்தான் சந்தித்தன.

அவர்களுடைய நகல் அறிக்கையில், அவர்கள் முன்வைத்த பல தவறான ஆய்வுகள் நிராகரிக்கப்பட்டன என்பதே உண்மை. இங்கே சில உதாரணங்கள்:

சமாதான சகவாழ்வு, பொருளாதாரப் போட்டி இவையே சோசலிச நாடுகளின் அயலுறவுக் கொள்கையின் பொதுவழியாக அமைகிறது என்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தவறான ஆய்வு நிராகரிக்கப் பட்டது.

சமாதான சகவாழ்வு மற்றும் சமாதானப் போட்டியின் விளைவாகவே முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியில் ஒரு புதிய கட்டம் உருவாகி யுள்ளது என்ற அதனுடைய தவறான் ஆய்வு நிராகரிக்கப்பட்டது.

சமாதான முறையில் (சோலிச) மாற்றத்திற்கான சாத்தியம் அதிகரித்து வருகிறது என்ற அதனுடைய தவறான ஆய்வு நிராகரிக்கப் பட்டது.

சோசலிச நாடுகள் ''தனித்துச் செல்வது'' என்ற கொள்கையை எதிர்க்கும் அதனுடைய தவறான ஆய்வு நிராகரிக்கப்பட்டது. ஏனென்னில், ''தனித்துச் செல்வதை'' எதிர்ப்பது என்பது, சோசலிச நாடுகள் கட்டுமானத்தில் தங்களைத் தாங்களே சார்ந்திருப்பதை எதிர்ப்பதாகும்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் சொல்லிக்கொள்ளப்படும் ''குழு நடவடிக்கைகள்'' மற்றும் ''உட்குழு நடவடிக்கைகள்'' ஆகிய வற்றை எதிர்ப்பது தொடர்பான அதனுடைய தவறான ஆய்வு நிராகரிக்கப்பட்டது. நடைமுறையில் இந்த ஆய்வு, சகோதரக் கட்சிகள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரத்திற்குப் பணிய வேண்டும் என்றும் சகோதரக் கட்சிகளுக்கிடையேயான உறவில் சுதந்திரம், சமத்துவம் ஆகிய கொள்கைகளைக் கைவிடுவது என்றும், ஆலோசனை கள் மூலம் ஒருமித்த கருத்திற்கு வருவது என்பதற்குப் பதிலாக, பெரும் பான்மைக்கு சிறுபான்மையை அடிபணியச் செய்வது என்றும் பொருள் படும்.

நவீன திரிபுவாதத்தின் தீவிர அபாயத்தைப் பற்றிக் குறைத்து மதிப்பீடு செய்யும் அதனுடைய தவறான ஆய்வும் நிராகரிக்கப்பட்டது.

உண்மையில், சீனா மற்றும் இதர சகோதரக் கட்சிகளின் பிரதிநிதி கள் முன்வைத்த முக்கியக் கொள்கைகள் பற்றிய கருத்துக்கள் அறிக்கை யில் இடம் பெற்றுள்ளன. ஏகாதிபத்தியத்தின் மாறாத தன்மை; உலக மக்களின் எதிரியாக அமெரிக்க ஏகாதிபத்தியம் உள்ளது; உலக யுத்தத்தைத் தடுக்கும் முக்கிய சக்தியாக தேசிய விடுதலைப் போராட்டங் கள் உள்ளன; புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளின் தேசிய ஜனநாயகப் புரட்சியை முழுமையாக நடத்தி முடிப்பது; தேசிய விடுதலைப் போராட் டத்திற்கு சோசலிச நாடுகளும் சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கமும் ஆதரவளிக்க வேண்டும்; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அரசியல், பொருளாதார, இராணுவ ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்ற வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கமும் மக்களும் தங்களுடைய பிரதான தாக்குதலை அமெரிக்க ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கும், ஏகபோக மூலதனத்திற்கும், தேசிய நலனுக்கு துரோகமிழைக்கின்ற உள்நாட்டில் உள்ள பிற பிற்போக்கு சக்தி களுக்கும் எதிராக தொடுக்க வேண்டியதன் அவசியம்; சகோதரக் கட்சிகளோடு ஆலோசனை செய்வதன் மூலமாக ஒருமித்த கருத்துக்கு வருவது என்ற கொள்கை; மார்க்சிய—லெனினியப் புரட்சிகர உணர்வுக்கு எதிராக திரிபுவாதத்தை புகுத்துவதை எதிர்ப்பது; யூகோஸ்லாவியா கம்யூனிஸ்ட் லீக் தலைவர்கள் மார்க்சிய—லெனினியத்திற்குச் செய்த துரோகம்; ஆகிய இவை அனைத்தையும் பற்றிய ஆய்வுரைகள் இன்ன பிற ஆய்வுகள் சீனா மற்றும் சில பிற பிரதிநிதிகளின் கருத்துக் களை ஏற்றுக் கொண்டதால் அறிக்கையில் இடம் பெற்று உள்ளன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்கள் தவறான கருத்துக் களைக் கைவிடுவதற்கும் மற்ற கட்சிகளின் சரியான கருத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கும் ஒப்புக்கொண்ட பிறகு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சில சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் அவர்களுக்கு சில சலுகைகளை வழங்கினர் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

உதாரணமாக, நாங்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ் பற்றிய பிரச்சினைகளிலும், முதலாளியத்திலிருந்து சோசலிசத்திற்கான மாற்றத்தின் வடிவம் பற்றியும் கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தோம்.

ஆயினும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சில சகோதரக் கட்சிகளின் தேவை கருதி, இந்த இரு பிரச்சினைகள் பற்றி 1957 பிரகடனத்தில் உபயோகிக்கப்பட்ட அதே வார்த்தைகளைச் சேர்ப்பதை ஏற்றுக் கொண்டோம். ஆனால், 20-வது காங்கிரஸ் பற்றி அவ்வாறு குறிப்பிடப் படுவதை நாங்கள் ஏற்றுக் கொள்வது இதுதான் கடைசித் தடவையாக இருக்கும்; இதைப்போல் மறுபடியும் செய்யமாட்டோம் என்பதை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிடம் அப்போதே தெளிவாகக் கூறிவிட் டோம்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நிலவுகின்ற இரு பாதைகளுக் கிடையிலான போராட்டம் 1960-ல் நடைபெற்ற மாஸ்கோ கூட்டத்தில் முதலிலிருந்து இறுதிவரை ஆதிக்கம் செலுத்தியதை மேற்கூறப்பட்டவை களிலிருந்து உணரலாம். அக்கூட்டத்தில் வெளிப்பட்ட ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் தவறுகள் மேலும் வளர்ச்சி பெற்றுள்ளன. சகோதரக் கட்சிகளின் மீது அவர்கள் திணிக்க முயற்சி செய்கின்ற தவறான பாதையின் அரசியல் உள்ளடக்கம், ''சமாதான சகவாழ்வு'' ''சமாதானப் போட்டி'' ''சமாதான வழியில் மாற்றம்'' என்ற தவறான கோட்பாடுகள்தான் என்பதையும், அதனுடைய அமைப்பு ரீதியான உள்ளடக்கம் தவறான பிளவுவாத கொள்கைதான் என் பதையும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையின் நகல் அறிக்கையிலிருந்தும், கூட்டத்தில் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளிலிருந்தும் உணரலாம். இது மார்க்சிய—லெனினியத்திலிருந்தும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திலிருந்தும் அடிப்படையிலேயே முரண்படுகின்ற திரிபுவாதப் பாதையாகும். சீன மற்றும் பிற சகோதர மார்க்சிய—லெனினியகட்சிகள்இதனை உறுதியுடன் எதிர்த்தன; மார்க்சிய-லெனினியப் பாதையையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் உயர்த்திப் பிடித்தன.

இக்கூட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக, திரிபு வாதப் பாதையும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கருத்துக் களும் முறியடிக்கப்பட்டு மார்க்சிய-லெனினியப் பாதை பெருத்த வெற் றியைப் பெற்றன. இந்தக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிக் கையில் உள்ள புரட்சிகரக் கொள்கைகள், ஏகாதிபத்தியத்தை எதிர்த் தும், உலக அமைதி, தேசிய விடுதலை, மக்கள் ஜனநாயகம் மற்றும் சோசலிசத்திற்காகவும் நடத்தும் போராட்டத்தில் எல்லா சகோதரக் கட்சிகளின் கையில் உள்ள பலமான ஆயுதங்களாகும். அவை; நவீன திரிபுவாதத்தினை எதிர்த்துப் போராடும் உலகம் முழுவதுமுள்ள

மார்க்சிய-லெனினியவாதிகளின் கையில் இருக்கும் பலமான ஆயுதங்களும் ஆகும்;

அந்தக் கூட்டத்தில் மார்க்சிய-லெனினியத்தை உயர்த்திப் பிடிக்கின்ற எல்லா சகோதரக் கட்சிகளுமே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் தவறான கருத்துக்களை உளப்பூர்வமாக விமர்சனம் செய்தன; தங்களின் சரியான கருத்துக்களை ஏற்றுகொள்ளுமாறு அதனை நிர்பந்தித்தன. இவ்வாறு செய்ததன் மூலம், இதற்கு முன் இருந்த மிகவும் அசாதாரணமான நிலைமையை, அதாவது தன்னுடைய தவறுகளுக்கு எதிராக சிறிய விமர்சனத்தைக்கூட ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை பொறுத்துக்கொள்ள முடியாத, அதன் வார்த்தை மட்டுமே இறுதியானது என்றிருந்த நிலைமையை மாற்றினார்கள். சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஆகும்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் அந்தக் கூட்டத்தில் ''முற்றாக தனிமைப்பட்டார்கள்'' என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தனது பகிரங்க கடிதத்தில் கூறுகிறது. இது தன்னுடைய தோல்வியை வெற்றியாகக் காட்டுவதற்கு ரசிய கம்யூனிஸ்ட் கட்சி செய்கின்ற வெட்கக்கேடான முயற்சியாகும். சகோதரக் கட்சிகளுக்கிடையே பரஸ்பர அய்க்கியம், சுதந்திரம், சமத்துவம், ஆலோசனைகள் மூலம் முடிவுகளை அடைதல் போன்ற கொள்கைகள் இந்தக் கூட்டத்தில் கடைபிடிக்கப்பட்டன. பெரும்பான்மையைக் கொண்டு சிறுபான்மைக் கருத்துக்களை நிராகரிப்பது, மற்ற சகோதரக் கட்சிகளின் மீது அதன் கருத்துக்களை திணிப்பது போன்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தவறான முயற்சிகள் தோல்வியடைந்தன. சகோதரக் கட்சிகளிடையே வேறுபாடுகளைத் தீர்ப்பதில் மார்க்சிய-லெனினிய கட்சிகள், கொள்கைகளைச் சார்ந்திருப்பதும் போராட்டத்தில் ஊன்றிநின்று ஒற்றுமையை உயர்த்திப் பிடிப்பதும் மிகவும் அவசியம் என்பதை இக்கூட்டம் மீண்டும் ஒருமுறை நிருபித்துக் காட்டியது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் திரிபுவாதம் முறைப்படுத்தப்படுகிறது

''1960-ஆம் ஆண்டு அறிக்கையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சூழ்ச்சியுடன்தான் கையெழுத்திட்டனர் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பகிரங்கக் கடிதம் கூறுகிறது. இது உண்மையா? இல்லை. மாறாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தான் அத்தகைய சூழ்ச்சி நடவடிக்கைகளில் இறங்கியிருந்தார்களேயொழிய நாங்கள் அல்ல.

1960-ல் நடந்த தோழமைக் கட்சிகள் கூட்டத்தில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களுடைய நகல் அறிக்கையில் இருந்த

தவறான கருத்துக்களை நீக்கவும், மாற்றவும் தங்களுடைய விருப்பத்திற்கு மாறாகத்தான் ஒத்துக் கொண்டனர் என்பதை உண்மைகள் தெளிவாகக் காட்டுகின்றன. சகோதரக் கட்சிகளால் முன் வைக்கப்பட்ட சரியான கருத்துக்களை ஏற்றுக்கொள்வதில் அவர்கள் நேர்மையற்றிருந்தனர். சகோதரக் கட்சிகள் கூட்டாக வெளியிட்ட ஆவணத்தை அவர்கள் பொருட்படுத்தவே இல்லை. 1960 அறிக்கையில் கையெழுத்திட்ட 'மை' உலர்வதற்கு முன்பாகவே, அதை உடைதெறியத் தொடங்கிவிட்டனர். டிசம்பர் முதல் தேதி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் சார்பாக குருச்சேவ் அந்த அறிக்கையில் கையெழுத்திட்டார். கையெழுத்திட்டு 24 மணி நேரம் கழித்து அதே குருச்சேவ் சகோதரக் கட்சிகளுக்கு அளித்த விருந்தில், சகோதரக் கட்சிகளால் ஒத்துக் கொள்ளப்பட்டதை மீறி, யூகோஸ்லாவியாவை சோசலிச நாடு என வெட்கமின்றி வருணித்தார்.

81 சகோதரக் கட்சிகளின் கூட்டத்திற்குப் பிறகு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் 1957 பிரகடனத்தையும் 1960 அறிக்கையையும் உடைத்தெறிவதில் மேன்மேலும் முனைப்பாக உள்ளனர். இந்த அறிக்கையால், உலக மக்களின் எதிரி என்று அறிவிக்கப்பட்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அவர்களுடைய நண்பனாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ''அமெரிக்க ரசிய கூட்டுறவை'' ஆதரித்துப் பேசுகிறார்கள், ''நம்பிக்கை, பரஸ்பரப் புரிதல், நட்பு ஆகிய நிலையான பிணைப்புகளை உருவாக்குவதில்'' [1] கென்னடியுடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவிக்கிறார்கள்; இன்னொரு பக்கம், சில சகோதரக் கட்சிகளையும், நாடுகளையும் தங்களுடைய எதிரிகளாக எடுத்துக் கொண்டார்கள்; அல்பேனியாவுடனான ரசிய நாட்டின் உறவை மிக மோசமாக்கிக் கொண்டார்கள்.

1961 அக்டோபரில் நடைபெற்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரஸ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் மார்க்சிய—லெனினியத்தை எதிர்ப்பதிலும், சோசலிச முகாமையும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தையும் பிளவுபடுத்துவதிலும் முனைப்பாக இறங்கி விட்டார்கள் என்பதையே காட்டுகிறது. 20-வது காங்கிரசுக்குப் பிறகு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையினால் படிப்படியாக வளர்க்கப் பட்டுவந்த திரிபுவாதம் இப்போது முறைப்படுத்தப்பட்டிருப்பதையே இது குறிக்கிறது.

22-வது காங்கிரசில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை, அல்பேனிய தொழிலாளர் கட்சி மீது வெளிப்படையான ஒரு மாபெரும்

---

1. *அமெரிக்க சுதந்திரத்தின் 185-வது ஆண்டு விழாவின்போது ஜே. எஃப். கென்னடிக்கு என்.எஸ். குருச்சேவும் எல்.அய். பிரஷ்னேவும் அனுப்பிய வாழ்த்துச் செய்தி.*

தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டது. தோழர் என்வர் ஹோஜா மற்றும் மெகுமெட்சேகு ஆகியோரின் கீழ் உள்ள அல்பேனியக் கட்சித் தலைமையைத் தூக்கி எறியும்படி தன்னுடைய உரையின்போது வெளிப் படையாக அறைகூவல் விடுக்கும் அளவிற்கு குருச்சேவ் சென்றுவிட்டார். இவ்வாறு ஒரு கட்சி காங்கிரசின் மேடையை பிற சகோதரச் கட்சிகளை தாக்குவதற்குப் பயன்படுத்தும் ஒரு மோசமான முன்னுதாரணத்தை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை உருவாக்கியது.

ஸ்டாலின் மறைவுக்குப் பின் எட்டாண்டுகள் கழித்து, 20-வது காங்கிரசில் ஸ்டாலினை முற்றாக மறுத்து அய்ந்து ஆண்டுகள் கழித்து, மீண்டும் இந்த காங்கிரசில் ஸ்டாலின் மீதான கடும் தாக்குதலைத் தொடங்கியது மற்றுமொரு முக்கிய விசயமாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இவ்வாறு செய்ததன் நோக்கம், பிரகடனத்தையும் அறிக்கையையும் தூக்கி எறிவதும், மார்க்சிய—லெனினியத்தை எதிர்ப்பதும், முறையான திரிபுவாதப் பாதையைப் பின்பற்றுவதும் தான் என்று தெரிகிறது.

அவர்களுடைய திரிபுவாதம் 22-வது காங்கிரசில் நிறைவேற்றப் பட்ட ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய திட்டத்தில் மொத்தமாகத் திரட்டி வெளியிடப்பட்டிருந்தது. 22-வது காங்கிரசின் வழி ''ஏற்கனவே கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டதும், பிரகடனத் திலும், அறிக்கையிலும் சொல்லப்பட்டதும்'' ஆகும் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் கூறுகிறது. இத்தகைய ஓர் அறிவிப்பைச் செய்வது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் பெரும் அஜாக்கிரதை அல்லவா? 1961-ல் நடந்தவைகள் ஏற்கனவே 1960-ல் நடந்த கம்யூனிஸ்ட் மற்றும், தொழிலாளர் கட்சிகளின் கூட்டத்திலோ அல்லது இன்னும் முன்னதாக 1957 லோ ''அங்கீகரிக்கப்பட்டவை'' அல்லது ''சொல்லப்பட்டவை'' என்று எவ்வாறு அவர்கள் வர்ணிக்க முடியும்?

ஆனால், இத்தகைய கீழான தற்புகழ்ச்சிகளைத் தற்போதைக்கு ஒதுக்கிவிட்டு, 22-வது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எத்தன்மை வாய்ந்தது என்பதைப் பார்ப்போம்.

திட்டத்தையும், அதன் மீது குருச்சேவ் அளித்த அறிக்கையையும் மேலோட்டமாகப் படித்தாலே, அது எப்படி முழுக்க முழுக்கத் திரிபுவாதத் திட்டமாகவும், மார்க்சிய—லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளை மீறுவதாகவும், பிரகடனம் மற்றும் அறிக்கையின் புரட்சிகர கொள்கை களைமீறுவதாகவும் உள்ளது என்பதைத் தெளிவாக அறியலாம்.

இது, 1957 பிரகடனத்திலும் 1960 அறிக்கையிலும் கூறப்பட்ட பல்வேறு கொள்கைப் பிரச்சனைகளுக்கும் எதிராக உள்ளது. 1960-ல்

நடைபெற்ற சகோதரக் கட்சிகள் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்ட பல்வேறு தவறான கருத்துக்கள் அதில் மீண்டும் இடம் பெற்றுள்ளன. உதாரணமாக, அது சமாதான சகவாழ்வை வெளிநாட்டுக் கொள்கையின் பொதுக் கோட்பாடாக கூறுகிறது; சமாதான முறையிலான மாற்றத்தைப் பற்றி ஒரு தலைப்பட்சமாக வலியுறுத்துகிறது; ஒரு சோசலிச நாடு தன் முயற்சிகளையே சார்ந்திருக்கும் கொள்கையை ''தனித்துச் செல்வது'' என அவதூறு செய்கிறது.

இந்தத் திட்டம் மேலும் ஒரு படி சென்று 20-வது காங்கிரசிலிருந்து ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை பின்பற்றி வரும் தவறான வழியை முறைப்படுத்துகிறது. அந்தத் தவறான வழியின் பிரதான உள்ளடக்கம், ''சமாதான சகவாழ்வு'', ''சமாதானப் போட்டி'' ''சமாதான மாற்றம்'' என்பதாகும்.

இத்திட்டம், பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்கக் கட்சி ஆகியவற்றைப் பற்றிய மார்க்சிய—லெனினிய போதனைகளின் சாரத்தை மிக மோசமாகத்திருத்தம் செய்கிறது; ரசிய நாட்டில் இனி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியமில்லை எனவும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படை என்ற தன்மை மாறிவிட்டது என்றும் அறிவித்திருக்கிறது; ''அனைத்து மக்களுக்குமான அரசு'' ''அனைத்து மக்களுடைய கட்சி'' என்ற தவறான கருத்துக்களை முன்வைக்கிறது.

வர்க்கப் போராட்டம் என்ற மார்க்சிய-லெனினிய கோட்பாட்டிற்குப் பதிலாக மனிதாபிமானத்தையும், கம்யூனிச நோக்கங்களுக்குப் பதிலாக முதலாளித்துவ முழக்கங்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றையும் முன் வைக்கிறது.

உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்காக இருக்கின்ற இன்னமும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ அமைப்பின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் புரட்சி செய்வதை இத்திட்டம் எதிர்க்கிறது. ஏற்கனவே சோசலிச பாதையில் சென்றுகொண்டிருக்கிற மூன்றில் ஒரு பகுதி மக்கள், புரட்சியை முழுமைப்படுத்துவதை எதிர்க்கிறது. இத்திட்டம், முதலாளித்துவத்தை பாதுகாக்கிற அல்லது முதலாளித்துவத்தை மீட்டமைக்கின்ற திட்டமாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசின் தவறுகளை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதியுடன் எதிர்த்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதி குழுவுக்கு தலைமை ஏற்றுச் சென்ற தோழர் சூ-என்-லாய் எங்கள் நிலையைப் பற்றி அக்காங்கிரசில் பேசினார். குருச்சேவுடனும், மற்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களுடனும் உரையாடும்போது, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் தவறுகளை மனம் திறந்து விமர்சனம் செய்தார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக் குழுவுடன் குருச்சேவ் பேசும் போது, எங்கள் விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் ஏற்றுக் கொள்ள முற்றாக மறுத்ததோடு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருக் கின்ற கட்சி விரோத சக்திகளுக்கு தன்னுடைய மறைமுக ஆதரவையும் கூடத் தெரிவித்தார். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக் குப்பின், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ''ஸ்டாலின் பாதையிலி ருந்து மாறுபட்ட பாதையை'' (அதாவது திரிபுவாதப் பாதையை) மேற்கொள்ளத் தொடங்கியிருந்தபோது, அவர்களுக்கு சகோதரக் கட்சி களின் ஆதரவு தேவைப்பட்டது என்று வெளிப்படையாகச் சொன்னார். ''அப்போது எங்களுக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் குரல் மிக முக்கியத் துவம் வாய்ந்ததாக இருந்தது'' என்றும், ''ஆனால், இப்போது நிலைமைகள் வேறாக உள்ளன'' என்றும், ''நாங்கள் நன்றாக இருக் கிறோம்'', ''எங்கள் வழியில் நாங்கள் செல்ல முடியும்'' என்றும் அவர் கூறினார்.

குருச்சேவின் கருத்துக்கள், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை திரிபுவாதமற்றும் பிளவுவாதப் பாதையில் செல்வதற்கு முடிவு செய்துவிட் டதைத்தான் காட்டியது.சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அவர்களுக்கு அடிக்கடி வழங்கிய தோழமை பூர்வமான ஆலோசனைகளை அவர்கள் மிகச் சாதா ரணமாகப் புறக்கணித்துவிட்டார்கள். தங்கள் வழியை திருத்திக் கொள் வதற்கான சிறு ஆர்வத்தைக் கூட அவர்கள் காட்டவில்லை.

மார்க்சிய-லெனினியத்திற்கு எதிரானதும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தைப் பிளவுபடுத்துவதுமான ஒரு எதிர்ப்போக்கு

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களுடைய பகிரங்கக் கடிதத்தில், 22-வது காங்கிரசுக்குப் பிறகு சீன-ரசிய கட்சிகளுக்கிடையே உறவுகளை *சீர்திருத்தவும்* சகோதரக் கட்சிகள், நாடுகளுக்கிடையிலான ஒற்றுமையைப் பலப்படுத்தவும், ''புதிய முயற்சிகள் மேற்கொண்ட தாக'' மக்களை நம்ப வைக்க வெகுவாக முயற்சித்திருக்கிறார்கள்.

இது மற்றுமொரு பொய்.

உண்மைகள் என்ன?

22-வது காங்கிரசுக்குப் பிறகு ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை சகோதரக் கட்சிகள் நாடுகளுக்கிடையான உறவுகள் பற்றிய வழிகாட்டும் கொள்கைகளை மீறுவதில் மேலும் கட்டற்று நடந்து கொண்டார்கள் என் பதைத்தான் உண்மைகள் தெரிவிக்கின்றன. மேலும், மார்க்சிய-லெனி னியத்திற்குப் புறம்பாக தங்களுடைய திரிபுவாதப் பாதையை வளர்த் தெடுப்பதற்காக பெரும் வல்லரசு ஆதிக்கவாதம், குறுங்குழுவாதம்,

பிளவுவாதம் ஆகிய கொள்கைகளைக் கடைபிடிப்பதில்தான் ஆர்வம்காட்டினார்கள். இது, சீன-ரசிய நட்புறவில்தொடர்ச்சியான சீரழிவையும், சகோதரக் கட்சிகள் மற்றும் நாடுகளின் ஒற்றுமைக்கு கடுமையான சேதத்தையும் விளைவித்தது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் 22-வது காங்கிரசிலிருந்து தொடர்ந்து சீன-ரசிய நட்புறவையும், சகோதரக் கட்சிகள் மற்றும் நாடுகளின் ஒற்றுமையையும் எவ்வாறு சிதைத்தார்கள் என்பதை கீழ்க்காணும் விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

(1) ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களுடைய தவறான பாதையை சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் மீது திணிப்பதற்கும், பிரகடனத்துக்கும் அறிக்கைக்கும் பதிலாக தங்களுடையதிரிபுவாதத் திட்டத்தை வைப்பதற்கும் கடுமையாக முயற்சி செய்தார்கள். அவர்களுடைய தவறான பாதையை, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் சமீப காலத்திய முழுமையான லெனினிய கொள்கைகள்'' [1], என்று வர்ணித்தார்கள் அவர்களுடைய திரிபுவாதத் திட்டத்தை ''நம் காலத்தின் உண்மையான கம்யூனிச அறிக்கை'' [2] என்றும் ''கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும், தொழிலாளர் கட்சிகளுக்கும், சோசலிச முகாமைச் சேர்ந்த அனைத்து நாட்டு மக்களுக்குமான பொதுத் திட்டம்'' [3] என்றும் அழைத்தார்கள்.

எந்த சகோதரக் கட்சியாவது ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தவறான பாதையையும், திட்டத்தையும் நிராகரித்து மார்க்சிய-லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளையும், அறிக்கைகளில் சொல்லப்பட்ட புரட்சிகரக் கொள்கைகளையும் பின்பற்றினால் அந்தக் கட்சி ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தமது எதிரியாகக் கருதுகிறார்கள்; அதன் தலைமையை எதிர்த்துத் தாக்கி, தீங்கு விளைவித்து, அதனைக் கவிழ்க்க எல்லா வழிகளிலும் முயற்சிக்கிறார்கள்.

(2) பின் விளைவுகளை அலட்சியம் செய்துவிட்டு ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை சோசலிச அல்பேனியாவுடன் எல்லாவித தூதரக

1. ஒய். ஆந்த்ரபோவ், ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயமும், உலக சோசலிச முறையின் வளர்ச்சியும்'', பிராவ்தா, டிசம்பர் 2, 1961.

2. என். எஸ். குருச்சேவ், உஸ்பெக் மற்றும் மற்ற குடியரசுகளின் விவசாயத் தொழிலாளர் மாநாட்டில் ஆற்றிய உரை, நவம்பர் 16, 1961.

3. ''கம்யூனிஸ்ட் சக்திகளின் ஒற்றுமை பத்துமடங்கு பெருகுகிறது'', பிராவ்தா தலையங்கம், ஆகஸ்டு 25, 1961.

உறவுகளையும் துண்டித்துக் கொண்டது. சகோதரக் கட்சிகள் மற்றும் நாடுகளுக்கிடையிலான உறவுகளின் வரலாற்றில் இதற்கு முன் எப்போதும் கண்டிராத நடவடிக்கை இது.

(3) சீனாவுக்கு நிர்ப்பந்தம் கொடுப்பதையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீது மானக்கேடான தாக்குதல்களைத் தொடுப்பதையும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை தொடர்ந்து செய்து வருகிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக்கு, 1962 பிப்ரவரி 22-ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி எழுதிய கடிதத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ''அதுவாகவே தனித்த நிலைப்பாட்டை'' எடுப்பதாகவும், சகோதரக் கட்சிகளின் பொதுவழியிலிருந்து மாறுபட்ட வழியைப் பின்பற்றுவதாகவும், மார்க்சிய—லெனினிய அல்பேனியத் தொழிலாளர் கட்சிக்கு ஆதரவளித்ததன் மூலம் ஒரு குற்றத்தைச் செய்ததாகவும் பழி சுமத்துகிறது. சீன—ரசிய உறவை சீர்படுத்துவதற்கு முன்நிபந்தனைகளாக மார்க்சிய—லெனினிய, பாட்டாளி வர்க்க சர்வதேசிய நிலைப்பாட்டைக் கைவிடும்படியும், பிரகடனத்திலும், அறிக்கையிலும் வகுக்கப்பட்ட புரட்சிகரக் கொள்கைகளோடு முழுமையாகப் பொருந்துகின்ற நம்முடைய பாதையைக் கைவிடும்படியும், ரசியாவின் தவறான பாதையை ஏற்றுக் கொள்ளும்படியும் சகோதரக் கட்சிகள் மற்றும் நாடுகளுக்கிடையேயான உறவுகள் பற்றிய வழிகாட்டும் கொள்கைகளை ரசியா அத்துமீறுவதைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடும்படியும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் நிர்ப்பந்தித்தார்கள். 1962 அக்டோபரில் ரசியாவில் உள்ள எங்கள் தூதரிடம், குருச்சேவ் எங்களுடன் ஒற்றுமையாக இருக்க விருப்பம் தெரிவித்தார். அந்த நேரத்தில் சீனக் கம்யூனிஸ்ட்கட்சி மத்தியகமிட்டிக்கு ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய கடிதங்களைக் குறிப்பிட்டு பகிரங்கமாகப் பெருமைப் பட்டுக் கொள்கிறது. ஆனால், உண்மையில் இது அவர்களுடைய நோக்கத்தை அடைவதற்கான ஒரு கீழ்த்தரமான முயற்சியே.

(4) சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என இந்தோனேசியா, வியட்னாம், நியூசிலாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த சகோதரக் கட்சிகள் முன்வைத்த திட்டத்தையும், 1962 ஏப்ரல் 7-ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு எழுதிய கடிதத்தில் சகோதரக் கட்சிகளின் கூட்டத் தயாரிப்புக்காக முன்வைத்த அய்ந்து பயனுள்ள திட்டங்களையும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி நிராகரித்து விட்டது. 1962 மே 31-ம் தேதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய

பதில் கடிதத்தில், ரசிய—அல்பேனிய உறவை சீர்படுத்துவதற்கும், சகோதரக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டுவதற்கும் முன்நிபந்தனையாக அல்பேனியத் தோழர்கள் தங்களுடைய நிலைப்பாட்டைக் கைவிட வேண்டும் என்று சொல்லுமளவிற்குச் சென்றது.

(5) 1962 ஏப்ரல், மே மாதங்களில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இலி பிராந்தியத்தில் பெருமளவில் ஆக்கிரமிப்பு செய்வதற்காக சீனாவின் சிங்கியாங், பகுதியில் உள்ள தங்கள் பத்திரிக்கைகளையும் ஆட்களையும் பயன்படுத்தினர். பல்லாயிரக்கணக்கான சீன மக்களுக்கு ஆசைகாட்டி பலவந்தப்படுத்தி ரசியாவுக்கு இட்டுச் சென்றனர். சீன அரசாங்கம் திரும்பத் திரும்ப இதை எதிர்த்தும், திரும்பத் திரும்ப எடுத்துக்கூறியும் ''ரசிய சட்ட உணர்வு''[1] ''மனிதாபிமானம்''[2] என்ற சாக்குப்போக்குகளைக் கூறி சீனக் குடிமக்களைத் திரும்ப அனுப்ப மறுத்து விட்டனர். இன்றுவரை இப்பிரச்சினை தீர்க்கப்படாமலே உள்ளது. சோசலிச நாடுகளுக்கிடையேயான உறவில் இந்நிகழ்ச்சி இதுவரை கேட்டிராத ஒன்று.

(6) அணு ஆயுதத்தடுப்பு சம்பந்தமாக ரசியா, அமெரிக்காவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளும் என்று 1962 ஆகஸ்ட் மாதத்தில் ரசிய அரசாங்கம் சீனாவுக்கு அதிகாரபூர்வமாகத் தெரிவித்தது. இது அணு ஆயுதங்களைத் தங்கள் ஏகபோக உரிமையாக்கிக் கொள்ளவும் அமெரிக்காவின் அணுஆயுத அச்சுறுத்தலைத் தடுப்பதற்காக சீனா அணு ஆயுதங்களை வைத்துக் கொள்ளும் உரிமையைப் பறிக்கவும் மேற்கொள்ளப்பட்ட ரசிய—அமெரிக்க கூட்டுச் சதியே ஆகும். இதற்கு எதிராக சீன அரசாங்கம் திரும்பத் திரும்ப தன்னுடைய கண்டனத்தைத் தெரிவித்தது.

(7) ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை, அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் அரசியல் பேரங்களை நடத்துவதிலும், சோசலிச முகாம், சர்வதேச கம்யூனிசஇயக்கம் ஆகியவற்றின் நலன்களைப் பலியிட்டாவது, கென்னடியுடன் ஒரு பிற்போக்குக் கூட்டு அமைத்துக் கொள்வதிலும் அதிகமான ஆர்வம் காட்டியது. கரிபியன் சிக்கலின் போது, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து கியூபாவின் இறையாண்மையைப் பறிக்கும் ''சர்வதேசக் கண்காணிப்பு'' என்ற அமெரிக்க அரசாங்கத்தின்

---

1. *சீனாவிலுள்ள ரசிய தூதரகம், சீன அயலுறவு விவகார அமைச்சகத்துக்கு ஆகஸ்டு 9, 1962-ல் சமர்ப்பித்த அறிக்கை.*

2. *ஏப்ரல் 29, 1962-ல் சீனாவிலுள்ள ரசிய தூதரகம், சீன அயலுறவு விவகார அமைச்சகத்துக்கு சமர்ப்பித்த அறிக்கை.*

கோரிக்கையை ஏற்றுக் கொண்டதன் மூலம் இழைத்த சரணடைவுவாதத் தவறு ஒன்றே இதற்குத் தலை சிறந்த சான்றாகும்.

(8) சோசலிச சீனாவுக்கு எதிராக நேருவுடன் பிற்போக்குக் கூட்டு வைத்துக் கொள்வதிலும், இந்தியப் பிற்போக்குக் கும்பலுடன் கூட்டுச் சேர்வதிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை அதிக அளவில் ஆர்வம் காட்டியது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையும் அதன் பத்திரிகைகளும் பகிரங்கமாக இந்தியப் பிற்போக்காளர்களுடன் சேர்ந்துகொண்டு, சீன-இந்திய எல்லைத்தகராறில்சீனாவின் நியாயமான நிலைப்பாட்டைக் கண்டித்தனர்; நேரு அரசாங்கத்தை ஆதரித்தனர்; ரசியப் பொருளாதார உதவியில் மூன்றில் இரண்டு பங்கு இந்தியப் பிற்போக்குவாதிகள் சீன-இந்திய எல்லைத்தகறாரைத் தூண்டிவிட்ட பிறகே இந்தியாவுக்கு அளிக்கப்பட்டது. 1962 இலையுதிர் காலத்தில் சீன-இந்திய எல்லையில் பெருமளவில் போர் வெடித்தபின்னும் கூட ரசிய கம்யூனிஸ்ட் கட்சி இந்தியப் பிற்போக்குவாதிகளுக்கு இராணுவ உதவிகளைத் தொடர்ந்து அதிகரித்த அளவில் வழங்கி வந்தது.

(9) யூகோஸ்லாவியா, டிட்டோ கும்பலுடன் கூட்டு சேர்வதிலும் எல்லா மார்க்சிய-லெனினிய கட்சிகளையும் எதிர்ப்பதற்காக ஓடுகாலி டிட்டோவுடன் பிற்போக்குக் கூட்டணி அமைத்துக் கொள்வதிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை அதிக அளவில் ஆர்வம் காட்டியது. 22-வது காங்கிரசுக்குப் பிறகு டிட்டோ கும்பல் பற்றிய மதிப்பீட்டை மாற்ற பல நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் 1960 அறிக்கையை பகிரங்கமாகக் கிழித்தெறிந்தது.

(10) 1962 நவம்பரிலிருந்து, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராகவும், மற்ற மார்க்சிய-லெனினிய கட்சிகளுக்கு எதிராகவும் சர்வதேச அளவில் மேலும் கடுமையான தாக்குதல்களைத் தொடுத்தது. சோசலிச முகாமையும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தையும் பிளவுபடுத்த புதிய எதிர்ப்புகளைத் தோற்றுவித்தது. எல்லா பிரச்சினைகளிலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கி, குருச்சேவ் அறிக்கைமேல் அறிக்கை விட்டார். ரசிய பத்திரிகைகளும் அத்தகைய கட்டுரைகளை நூற்றுக்கணக்கில் வெளியிட்டன. பல்கேரியா' ஹங்கேரி, செக்கோஸ்லேவியா, இத்தாலி, ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு ஆகிய நாடுகளின் சகோதரக் கட்சிகள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் வழிகாட்டுதலின் பேரில், தங்கள் காங்கிரஸ் மேடைகளை சீன எதிர்ப்புப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தின. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும் மற்ற மார்க்சிய—லெனினிய கட்சிகளையும்தாக்கி 40-க்கும் மேற்பட்ட சகோதரக் கட்சிகள், அறிக்கைகளையும் தீர்மானங்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டன.

மேலே கூறப்பட்டுள்ள விவரங்கள் எதையும் ரசிய கம்யூனிஸ்ட்கட்சித் தலைமையால் மறுக்க முடியாது. 22-வது காங்கிரசுக்குப் பின் உண்மையில் சீன-ரசிய உறவை சீர்படுத்தவோ, அல்லது சகோதரக் கட்சிகள் மற்றும் நாடுகளுக்கிடையிலான ஒற்றுமையைப் பலப்படுத்தவோ, ரசிய கம்யூனிஸ்ட்கட்சித் தலைமை ''புதிய முயற்சிகளை'' எடுக்கவில்லை என்பதையே இந்த திட்டவட்டமான உண்மைகள் தெரிவிக்கின்றன. மாறாக சோசலிச முகாமிலும், சர்வதேச கம்யூனிச இயக்கத்திலும் பிளவுகளை விரிவாக்குவதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடும், இந்தியப் பிற்போக்குவாதிகளோடும், டிட்டோ கும்பலோடும் தன்னுடைய நெருக்கமான உறவைப் பலப்படுத்தி வருகிறது.

இத்தகைய மிக மோசமான சூழலில், சில சகோதரக் கட்சிகளின் தாக்குதல்களுக்கு பகிரங்கமாக பதிலளிப்பதைத் தவிர சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு வேறு வழியில்லை. 1962 டிசம்பர் 15-லிருந்து 1963 மார்ச் 8 வரை ஏழு பதில்களை நாங்கள் வெளியிட்டோம். இந்தக் கட்டுரைகளில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கொஞ்சம் விட்டுக் கொடுத்து, அதன் தலைமையைப் பெயர் சொல்லி விமர்சனம் செய்யாமலிருந்தோம்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் தவறுகளினால், சீன-ரசிய உறவு மிக மோசமாக சீர்குலைந்தபோதிலும், சீன, ரசிய கட்சிகளுக்கிடையேயான பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு பிரதிநிதிக் குழுவை மாஸ்கோவுக்கு அனுப்ப சீனா ஒத்துக்கொண்டது. பேச்சு வார்த்தையில் முறையான கருத்துப் பரிமாற்றம் இருக்கும் என்பதற்காகவும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு ஜூன் 14-ல் பதில் கடிதத்தில் நாங்கள் குறிப்பிட்டிருந்த சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொது வழிப் பற்றிய திட்டங்களை முன்மொழியவுமே இதற்கு ஒப்புக்கொண்டோம்

பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் காட்டியதைப் போல, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையைப் பலப்படுத்துவதில் அக்கறையற்று இருந்தது மட்டுமல்ல; அந்தப் பேச்சு வார்த்தையை, சீன-ரசிய உறவை மேலும் சீர்குலைக்க அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மறைப்பதற்கான ஒரு திரையாகவும் பயன் படுத்திக் கொண்டார்கள்.

பேச்சுவார்த்தைக்குச் சற்று முன்பாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அறிக்கைகள், தீர்மானங்கள் மூலமாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை பெயர் குறிப்பிட்டு வெளிப்படையாகத் தாக்கினார்கள். அதே சமயத்தில், பல சீன தூதரகப் பணியாளர்களையும், ஆராய்ச்சி மாணவர்களையும் ரசிய நாட்டை விட்டு நியாயமற்ற முறையில் வெளியேற்றினார்கள்.

ஜூலை 14-ம் தேதி அதாவது அமெரிக்க-பிரிட்டன்-ரசிய பேச்சு வார்த்தைகள் தொடங்கவிருந்த நேரத்தில், சீன-ரசிய பேச்சு வார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை, தனது மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தை ரசியாவில் இருந்த அனைத்து கட்சி அமைப்புகளுக்கும், எல்லா கம்யூனிஸ்ட்களுக்கும் அவசரமாக வெளியிட்டு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின்மீது தீவிரமான தாக்குதல் தொடுத்தது. இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சலுகையைப் பெறுவதற்காக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அதற்கு அளித்த மற்றுமொரு விலையுயர்ந்த பரிசாகும்.

அதற்குப் பின் உடனடியாக, ரசிய மக்கள், சீன மக்கள் உள்ளிட்ட அனைத்து சோசலிச முகாமையும் சேர்ந்த மக்கள் மற்றும் உலக முழுவதும் உள்ள சமாதானத்தை நேசிக்கின்ற அனைத்து மக்களின் நலன்களுக்கும் பகிரங்கமாக துரோகமிழைத்துவிட்டு ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை, அமெரிக்கா மற்றும் பிரிட்டனுடன் அணுஆயுத சோதனையின் ஒரு பகுதியை நிறுத்தி வைப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில் மாஸ்கோவில் கையெழுத்திட்டது; ரசியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே பல பரபரப்பான தொடர்புகள் நடந்தன; ஒரு ''விடுமுறைக்காக'' குருச்சேவ் யூகோஸ்லாவியா சென்றார்; ரசிய பத்திரிகைகள் தீவிர சீன எதிர்ப்புப் பிரச்சாரத்தை நடத்தின. இவையும் இவை போன்ற இன்ன பிறவும் நடந்தன. இந்தத் தொடர் நிகழ்ச்சிகள் அனைத்துமே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு, சகோதர சோசலிச நாடுகளையும், சகோதர மார்க்சிய-லெனினிய கட்சிகளையும் எதிர்ப்பதற்காக ஏகாதிபத்தியவாதிகளுடனும், எல்லா நாடுகளிலுமுள்ள பிற்போக்குவாதிகளுடனும், துரோகி டிட்டோ கும்பலுடனும் கூட்டுச் சேர்ந்துள்ளது என்பதை தெளிவாக காட்டுகின்றன. இவை யாவும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை பின்பற்றும் திரிபுவாத, பிளவுவாதப் பாதையை அம்பலப்படுத்துகின்றன.

தற்சமயம், ஏகாதிபத்தியவாதிகள் அனைத்து நாட்டுப் பிற்போக்குவாதிகள் மற்றும் திரிபுவாதிகள் ஆகிய அனைவரும் சேர்ந்து பாடும் ''சீன எதிர்ப்புப் பல்லவி'' பெருத்த ஓசையை எழுப்பி வருகிறது. மார்க்சிய—லெனினியத்தை எதிர்ப்பதற்கும், சோசலிச முகாமையும், சர்வதேச கம்யூனிச அணியையும் பிளவுபடுத்துவதற்கும் குருச்சேவ் நடத்தும் இயக்கம் மேலும் முனைப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஏழு ஆண்டு கால உண்மைகள் எதை நிரூபிக்கின்றன?

இதுவரை, வேறுபாடுகளின் தோற்றம், வளர்ச்சி பற்றி விரிவாக மறு ஆய்வு செய்தோம். எங்கள் நோக்கம், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தில் திரித்துச் சொல்லப்பட்ட உண்மைகளைத் தெளிவாக்குவதும், எங்கள் கட்சி உறுப்பினர்களும், எங்கள் மக்களும், உலகம் முழுவதும் உள்ள மார்க்சிய—லெனினியவாதிகளும், புரட்சிகர மக்களும் உண்மைகளை அறிய உதவுவதும் ஆகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை மார்க்சிய—லெனினியத்திலிருந்தும், 1957-ம் ஆண்டு பிரகடனம் மற்றும் 1960-ம் ஆண்டு அறிக்கை ஆகியவற்றின் புரட்சிகரக் கொள்கைகளிலிருந்தும் விலகி, சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் பிளவுவாதம் மற்றும் திரிபுவாதப் பாதையைப் பின்பற்றிய ஒரே காரணத்தினால்தான், சீன—ரசிய கட்சிகளிடையேயும் சர்வதேச கம்யூனிச இயக்கத்திலும் வேறுபாடுகள் தோன்றின என்பதை கடந்த ஏழு ஆண்டு கால உண்மைகள் தெளிவாக நிரூபிக்கின்றன. திரிபுவாத, பிளவுவாதப் பாதையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை தொடர்ந்து போய்க்கொண்டிருப்பதுதான், வேறுபாடுகளை விரிவுபடுத்தியது, தீவிரப்படுத்தியது.

கம்யூனிச, மார்க்சிய—லெனினியப் பாதையைப் பின்பற்றுவதற்கும், திரிபுவாதப் பாதையில் செல்வதற்கும் இடையே உள்ள வேறுபாடுகள்; புரட்சிகரப் பாதைக்கும், புரட்சிகரமற்ற மற்றும் எதிர்புரட்சிப் பாதைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்; ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாதைக்கும், ஏகாதிபத்தியத்துடன் சமரசப் பாதைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் ஆகிய இவையே சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் தற்போது நிலவுகின்ற வேறுபாடுகள் என்பதை கடந்த ஏழாண்டு கால உண்மைகள் தெளிவாக நிரூபிக்கின்றன. இவை பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் பெரும் வல்லரசு ஆதிக்கவாதம், குறுங்குழுவாதம், பிளவுவாதம் ஆகியவற்றிற்கும் இடையிலான வேறுபாடுகளாகும்.

சோசலிசத்திற்கு எதிராக ஏகாதிபத்தியத்தோடு கூட்டு சேர்வது; சீனாவுக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு கூட்டு சேர்வது; உலக மக்களுக்கு எதிராக எல்லா நாடுகளிலுமுள்ள பிற்போக்குவாதிகளோடு கூட்டு சேருவது; சகோதர மார்க்சிய—லெனினிய கட்சிகளுக்கு எதிராக ஓடுகாலி டிட்டோ கும்பலோடு கூட்டு சேருவது ஆகிய இவைதான் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பின்பற்றும் பாதை என்பதை கடந்த ஏழு ஆண்டுகால உண்மைகள் தெளிவாகவே நிரூபித்தன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் இந்த தவறான பாதை, சர்வதேச அளவில் திரிபுவாத வெள்ளத்தைப் புகுத்தியது. சர்வதேச கம்யூனிச இயக்கம் முன் எப்போதும் கண்டிராத அளவு கடுமையான பிளவு அபாயத்தை எதிர்நோக்க வைத்தது; உலக சமாதானம், தேசிய விடுதலை, மக்கள் ஜனநாயகம், சோசலிசம் ஆகிய மக்களுடைய இலட்சியங்களுக்குப் பெரும் சேதத்தை விளைவித்தது.

சூழ்நிலை மிக மோசமாவதைத் தடுப்பதற்கும், கொள்கைகளை உயர்த்திப் பிடிப்பதற்கும், வேறுபாடுகளைக் களைவதற்கும், ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கும், எதிரிகளுக்கெதிரான பொதுப் போராட்டத்தை நடத்துவதற்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து முயற்சிகள் செய்து வந்தது என்பதையும் கூட கடந்த ஏழு ஆண்டுகால உண்மைகள் தெளிவாக நிரூபித்தன. நாங்கள் மிகவும் தன்னடக்கத்துடன் செயல்பட்டு எங்களால் சாத்தியமானவைகளைச் செய்தோம்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, சீன—ரசிய கட்சிகள் மற்றும் நாடுகளின் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை எப்போதுமே வலியுறுத்தி வந்துள்ளது. மாபெரும் லெனினால் உருவாக்கப்பட்ட ரசிய கம்யூனிஸ்ட் கட்சியை அது எப்போதும் மதித்து வந்திருக்கிறது; நாங்கள் மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் மாபெரும் ரசிய மக்களையும் எப்போதும் பாட்டாளி வர்க்க நேசத்துடன் போற்றி வந்தோம். ரசிய மக்களின், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒவ்வொரு சாதனையின் போதும் நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். சோசலிச முகாமுக்கும், சர்வதேச கம்யூனிச இயக்கத்துக்கும் ஊறு விளைவிக்கும் வகையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தவறு செய்யும்போதெல்லாம் நாங்கள் வருத்தம் அடைந்தோம்.

ஏதோ இன்றுதான் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் தவறுகளை சீனக் கம்யூனிஸ்டுகள் கண்டு பிடித்தார்கள் என்பதல்ல. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசிலிருந்தே ரசிய கம்யூனிஸ்ட் கட்சி திரிபுவாதப் பாதையில் செல்வதைக் கவலையுடன் கவனித்து வந்தோம்.

இந்தச் சூழ்நிலையால் எதிர்கொள்ளப்பட்ட எங்கள் கட்சி, நீண்ட காலமாக ''நாம் என்ன செய்ய வேண்டும்?'' என்று யோசித்து வந்தது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் வழியைப் பின்பற்றுவதா, அதனுடைய விருப்பத்திற்கு இணங்க எங்களுடைய அனைத்து நடவடிக்கைகளையும் அமைத்துக் கொள்வதா? என எங்களை நாங்களே கேட்டுக் கொண்டோம். அப்படியானால் நிச்சயம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மகிழ்ச்சி அடையும். ஆனால், நாங்கள் திரிபுவாதிகளாகி விட மாட்டோமா?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் தவறுகளை நாங்கள் கண்டு கொள்ளாமல் மவுனமாக இருக்க வேண்டுமா? எனவும் எங்களை நாங்களே கேட்டுக் கொண்டோம். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் தவறுகள், எதிர்பாராமல் ஏற்பட்டதோ, தனிப்பட்டதோ சிறியதோ அல்ல; மாறாக, அவை தொடர்ந்து நிகழ்த்தப்பட்ட கொள்கை ரீதியான தவறுகள். சோசலிச முகாம் முழுவதையும் சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதையும் பாதிக்கக்கூடிய தவறுகள். சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் உறுப்பினராக இருந்து கொண்டு, இந்த தவறுகளைக் கண்டும் காணாமல் எப்படி நாங்கள் மவுனமாக இருக்க முடியும்? அப்படிச் செய்வது, மார்க்சிய—லெனினியத்தையும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் பாதுகாக்கும் கடமையைக் கைவிடுவது ஆகாதா?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் தவறுகளை விமர்சனம் செய்தால், அவர்கள் பழிவாங்கும் எண்ணத்தோடு எங்கள் மீது பாய்வார்கள், அதன் மூலம் சீனாவில் சோசலிச கட்டுமானத்திற்கு மிகப் பெருமளவில் ஊறு விளைவிப்பார்கள் என்பதை நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், கம்யூனிஸ்டுகள் தேசிய சுயநல நிலைப்பாட்டை எடுக்கலாமா? பழிவாங்கி விடுவார்கள் என்ற அச்சத்திற்காக உண்மைகளை உயர்த்திப் பிடிக்கத் தயங்கலாமா? கம்யூனிஸ்டுகள், ஆதாயத்திற்காகக் கொள்கைகளை விற்று விடலாமா ?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி, லெனினால் உருவாக்கப்பட்டது; முதல் சோசலிச நாட்டின் கட்சி; அக்கட்சி சர்வதேச கம்யூனிச இயக்கத்திலும், உலக மக்கள் மத்தியிலும் பெரும் மதிப்பைப் பெற்றிருக்கிருக்கிறது என்ற உண்மையையும் கணக்கில் எடுத்துக் கொண்டோம். எனவே, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை விமர்சனம் செய்வதில் மிக நீண்டகாலம் ஜாக்கிரதையாகவும், பொறுமையாகவும் இருந்தோம். அத்தகைய விமர்சனங்களை சீன—ரசிய கட்சிகளின் தலைவர்கள் மட்டத்தில் நடைபெற்ற உட்கட்சி பேச்சுவார்த்தைகளின்போது மட்டுமே வைத்துக் கொண்டோம். பொது விவாதங்களாக நடத்தாமல், தனிப்பட்ட பேச்சு வார்த்தைகள் மூலமாகவே தீர்த்துக் கொள்ள முயற்சிகள் செய்தோம்.

சீனக் கம்யூனிஸ்ட்கட்சி மத்தியகமிட்டியின் பொறுப்பானதோழர்கள், இருபதுக்கும் அதிகமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு தோழமை பூர்வமான விமர்சனங்களையும், அறிவுரைகளையும் முன்வைத்தும் கூட அவர்களை சரியான பாதைக்கு திருப்புவதில் வெற்றி பெற இயலவில்லை. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மேலும் மேலும் திரிபுவாத மற்றும்

பிளவுவாதப் பாதையிலேயே சென்று கொண்டிருந்தனர். நல்லெண்ணத்தின் அடிப்படையில் நாங்கள் கூறிய அறிவுரைகளுக்குப் பதிலாக எங்களுக்கெதிராக அரசியல், பொருளாதார, இராணுவ நிர்ப்பந்தங்களைத் தந்தனர்; மிகக் கடுமையான தாக்குதல்களைத் தொடுத்தனர். அது மூர்க்கத்தனமாக வளர்ந்தது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் ஒரு மோசமான பழக்கத்தை வைத்திருக்கிறார்கள்; அவர்களை யார் விமர்சனம் செய்தாலும் உடனே அவர்கள் மீது முறையற்ற முத்திரைகளைக் குத்தி விடுவார்கள்.

அவர்கள் சொல்கிறார்கள், ''நீங்கள் ரசிய விரோதி!'' என்று. இல்லை, நண்பர்களே! எங்கள் மீது ''ரசிய விரோதி'' முத்திரையைக் குத்த முடியாது. உங்களுடைய தவறுகளைப் பற்றிய எங்கள் விமர்சனமே, மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் மாபெரும் ரசிய நாட்டையும் பாதுகாக்கும் பொருட்டுத்தான்; உங்களால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ரசிய நாட்டின் பெருமை சீர்குலைக்கப் படுவதைத் தடுக்கும் பொருட்டுத்தான். சரியாகச் சொல்வதென்றால், உண்மையில் நாங்கள் அல்ல, நீங்கள்தான் ரசிய விரோதிகள். நீங்கள் தான் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் ரசிய நாட்டையும் இகழ்கிறீர்கள்; அவமதிக்கிறீர்கள். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் ஸ்டாலினை முற்றாக மறுத்த நாள் முதல் நீங்கள் எண்ணிலடங்காத தவறுகளைச் செய்திருக்கிறீர்கள். வால்கா நதி தண்ணீர் முழுவதையும் கொண்டு கழுவினால் கூட நீங்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், ரசிய நாட்டிற்கும் கொண்டுவந்து சேர்த்துள்ள பெரும் அவமானத்தைப் போக்க முடியாது.

அவர்கள் சொல்கிறார்கள், ''நீங்கள் தலைமையைக் கைப்பற்ற நினைக்கிறீர்கள்.'' என்று. இல்லை, நண்பர்களே! இந்த அவதூறைச் செய்வது உங்களுடைய கெட்டிக்காரத்தனமாகாது. இதை நீங்கள் சொல்லுகின்ற விதம் ஏதோ உங்களோடு சிலர் ''தலைமைப் பதவி'' என்ற ஏதோ ஒன்றுக்குப் போட்டியிடுவது போன்ற தோற்றத்தை உருவாக்குகிறது. இப்படிச் சொல்வது, சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் ஏதோ ஒரு மாதிரியான ''தலைமைப் பதவி'' இருப்பதாகவும், அந்த ''தலைமைப் பதவி'' உங்களிடம் இருப்பதாகவும் வெட்கமில்லாமல் சொல்வதாகாதா? ஒரு தந்தையாதிக்க பரம்பரைக் கட்சியின் வாரிசு போல உங்களைப் பற்றி பீற்றிக்கொள்வது மிகமிக மோசமானது. இது முற்றிலும் தவறானது. 1957 பிரகடனமும் 1960 அறிக்கையும், எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும் சமமானவை, சுதந்திரமானவை என மிகத் தெளிவாகச் சொல்கின்றன. இந்தக் கொள்கையின்படி, சகோதரக் கட்சிகளுக்கிடையேயான உறவுகளில் எந்த சூழ்நிலையிலும் 'தலைமைக்

கட்சி—அதைப் பின்பற்றும் கட்சிகள்' என்ற உறவோ, 'தந்தை—மகன்' என்ற உறவோ இருக்கக்கூடாது. நாம் எப்போதுமே எந்த ஒரு கட்சியும் மற்ற சகோதரக் கட்சிகளுக்கு ஆணையிடுவதை எதிர்த்துள்ளோம். நாங்கள், சகோதரக் கட்சிகளுக்கு ஆணையிட வேண்டும் என்று எங்களுக்கு ஒரு போதும் தோன்றியதில்லை. எனவே, தலைமைக்குப் போட்டியிடுவது என்ற கேள்வியே எழவில்லை. சர்வதேச கம்யூனிச இயக்கத்தை இப்போது எதிர்நோக்கியுள்ளது இந்தக் கட்சி தலைமை ஏற்கவேண்டுமா அல்லது அந்த கட்சி தலைமை ஏற்க வேண்டுமா என்பது அல்ல; திரிபுவாதத்தின் அதிகாரத்திற்கு அடிபணிய வேண்டுமா அல்லது பிரகடனம், அறிக்கை ஆகியவற்றில் கூறியுள்ள புரட்சிகரக் கொள்கைகளையும், மார்க்சிய—லெனினியத்தையும் உயர்த்திப் பிடிக்க வேண்டுமா என்பதுதான். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை மீதான எங்கள் விமர்சனமே, அது சகோதரக் கட்சிகளிடையே பிரபுத்துவமாக நடந்து கொண்டு அவற்றின் மீது திரிபுவாதப் பாதையையும், பிளவையும் திணிக்கிறது என்பதுதான்.

நாங்கள் விரும்புவது என்னவென்றால், அறிக்கையிலும், பிரகடனத்திலும் கூறப்பட்டதைப் போல் சகோதரக் கட்சிகளிடையே சுதந்திரமான சமமான அந்தஸ்தையும், மார்க்சிய-லெனினிய, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையிலான அவைகளின் ஒற்றுமையையும்தான்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் இப்போது நடந்து வரும் மாபெரும் விவாதத்தை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள்தான் தூண்டிவிட்டு, விரிவாக்கிவிட்டு, இப்போது அதை எங்கள் மீது திணித்துள்ளனர். எங்கள்மீது அவர்கள் பெருமளவிலான தாக்குதல் தொடுத்து, இழிவான அவதூறுகளை கூறியிருப்பதாலும், மார்க்சிய-லெனினியத்திற்கும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் அவர்கள் பகிரங்கமாகத் துரோகமிழைத்திருப்பதாலும், பிரகடனத்தையும் அறிக்கையையும் கிழித்தெறிந்திருப்பதாலும், இவைகளுக்கு நாங்கள் பதிலளிப்பதையும் அவதூறுகளை மறுப்பதையும், பிரகடனத்தையும் அறிக்கையையும் பாதுகாப்பதையும் அவர்கள் தடுக்க முடியாது, விவாதம் நடந்துகொண்டிருக்கிறது; சரியும் தவறும் முற்றாக விளக்கப்பட வேண்டும்.

சீனக் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் கொள்கையில் ஊன்றி நின்று ஒற்றுமையை உயர்த்திப் பிடிக்கின்றோம்; கடந்த காலத்திலும் இவைகளைச் செய்தோம், இப்போதும் செய்கிறோம்; வருங்காலத்திலும் இதை தொடர்வோம். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடன் விவாதங்களில் ஈடுபட்டிருக்கும் போதும் கூட, அவர்கள் புரட்சியை கைவிட்டு உலகத்தின் புரட்சிகர மக்களைக் கைவிட்டு, சோசலிச முகாமின் ஒற்றுமையைக் கைவிட்டு, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின்

ஒற்றுமையைக் கைவிட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும்,எல்லா நாடு களிலுமுள்ள பிற்போக்குவாதிகளுடனும்,ஓடுகாலி டிட்டோகும்பலுடனும் ஆர்வத்துடன் கூடிக் குலாவும் அபாயகரமான பாதையைத் தேர்ந்தெடுப் பதை அவர்கள் உணர்வார்கள் என்று இன்னமும் எதிர்பார்க்கிறோம்.

சீன, ரசிய மக்கள், சோசலிச முகாம், சர்வதேச கம்யூனிச இயக்கம் உலகம் முழுவதும் உள்ள மக்கள் ஆகியோரின் நலன்களைப் பேணு வதற்கு அனைத்து கம்யூனிஸ்டு கட்சிகளும், தொழிலாளர் கட்சிகளும் ஒன்றுபட்டு பொது எதிரியை எதிர்க்க வேண்டியது அவசியமாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை தன்னுடைய தவறுகளைத் திருத்திக் கொண்டு மார்க்சிய-லெனினிய, பாட்டாளி வர்க்க சர்வதேசி யப் பாதைக்கு-1957 பிரகடனமும், 1960 அறிக்கையும் சொல்லுகின்ற பாதைக்குத் திரும்ப வேண்டும் என மீண்டும் ஒருமுறை வேண்டுகோள் விடுக்கிறோம்.

சர்வதேச கம்யூனிச இயக்கம் ஒரு முக்கியக் காலக்கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. இப்போது நடைபெறுகின்ற விவாதம் பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியின் எதிர்காலத்தையும், மனிதகுலத்தின் விதியையும் தீர்மானிக்கின்ற முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த விவா தத்திற்குப் பின் மார்க்சிய-லெனினியம் இன்னும் பிரகாசமாக ஒளி வீசும். சர்வதேசப் பாட்டாளிவர்க்கமும், உலக மக்களும் தங்களுடைய புரட்சிகர நோக்கத்தில் இன்னும் மாபெரும் வெற்றிகளை ஈட்டுவார்கள் என்பதை வரலாறு நிரூபிக்கும்.

•

பின் இணைப்பு 1

சமாதான மாற்றம் என்ற பிரச்சினை மீதான சுருக்கமான கருத்துக்கள் (நவம்பர் 10, 1957)

1. முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கான மாற்றம் என்ற பிரச்சினையைப் பொறுத்தவரை, சமாதான மாற்றம், சமாதானமல்லாத மாற்றம் என்ற இரண்டில், ஒன்றை மட்டும் குறிப்பிடுவதற்கு பதிலாக இரண்டு சாத்தியப்பாடுகளையுமே குறிப்பிடுவது அதிக நெகிழ்வுடைய தாக இருக்கும். இது எந்நேரத்திலும் அரசியல் ரீதியான முன்னுக் கத்தை மேற்கொள்ள உதவியாக இருக்கும்.

(a) சமாதான மாற்றத்திற்கான சாத்தியப்பாடு பற்றி நாம் குறிப் பிடுவது வன்முறைகளைப் பயன்படுத்துவது என்பது முதன்மையாக நமக்கு ஒரு தற்காப்புக்கான விசயமே என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தப் பிரச்சினையில் முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டு கட்சிகள் மீது தாக்குதல் தொடுப்பதை சாத்தியமற்றதாக்குகிறது. அரசியல் ரீதியாகவும் சாதகமானது—பரந்துபட்ட மக்களை வென் றெடுப்பதற்கு இது சாதகமானது. வன்முறையைக் காரணம் கூறி முதலாளிகள் நம்மைத் தாக்குவதற்கு உள்ள வாய்ப்பை அகற்று வதற்கும் அவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் இது சாதகமானது.

(b) எதிர்காலத்தில் சர்வதேச அல்லது உள்நாட்டு சூழ்நிலைகளில் பெருமளவில் தீவிர மாற்றம் ஏற்பட்டு, தனிப்பட்ட நாடுகளில் சமாதான மாற்றத்திற்கு நடைமுறை சாத்தியப்பாடுகள் உருவாகுமானால் நாம் அந்த வாய்ப்பைச் சரியான நேரத்தில் பயன்படுத்தி மக்களுடைய ஆதரவை வென்றெடுத்து சமாதான முறையில் அரசியல் அதிகாரத்தைப் பெறுவது பற்றிய பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

(c) இருந்தபோதிலும், இந்த விருப்பத்தின் காரணமாக நாமே நமது கைகளைக்கட்டிக்கொண்டு சும்மா இருந்துவிடக்கூடாது. வரலாற்று அரங்கிலிருந்து முதலாளிகள் தாமாகவே ஒருபோதும் இறங்கி விட மாட்டார்கள். இது வர்க்கப் போராட்டத்தின் அனைத்தும் தழுவிய விதியாகும். எந்த ஒரு நாட்டிலும், தொழிலாளி வர்க்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும் புரட்சிக்கான தயாரிப்புகளில் எந்தவிதத் தொய்வையும் காட்டக் கூடாது. எல்லா நேரங்களிலும் எதிர்ப்புரட்சித் தாக்குதல்களை முறியடிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் புரட்சியின் நெருக்கடியான இறுதிக் கட்டத்திலும் மக்கள் புரட்சியை ஒடுக்க முதலாளிகள் ஆயுதப்படைகளைப் பயன்படுத்தும் போதும் (பொதுவாகச் சொன்னால் தவிர்க்கமுடியாமல் முதலாளிகள்அப்படித்தான் செய்வார்கள்) ஆயுத சக்தியால் முதலாளிகளைத்தூக்கி எறியத் தயாராய் இருக்க வேண்டும்.

2. தற்போது நிலவுகின்ற சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் நிலைமைகளில், போர்த்தந்திர நோக்கிலிருந்து பார்க்கும்போது சமாதான மாற்றத்திற்கான விருப்பத்தைக் குறிப்பிடுவது சாதகமானது. ஆனால், அதற்காக சமாதான முறையிலான மாற்றத்திற்கு அதிக அழுத்தம் கொடுப்பது பொருத்தமற்றது. அதற்கான காரணங்களாவன.

(a) சாத்தியப்பாடு, யதார்த்தம், விருப்பம் என்பதும் அதுநிறைவேற முடியுமா இல்லையா என்பதும் இரு வெவ்வேறு விசயங்கள். நாம் சமாதான மாற்றத்திற்கான விருப்பத்தைக் குறிப்பிட வேண்டும், ஆனால் நமது நம்பிக்கையை பிரதானமாக அதன் மீது வைத்திருக்கக் கூடாது. எனவே, இதற்கு நாம் அதிக அழுத்தம் தரக்கூடாது.

(b) சமாதான மாற்றத்தின் சாத்தியப்பாடுகளுக்கு குறிப்பாக, பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெறுவதன் மூலம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றும் சாத்தியப்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் தருவது, பாட்டாளி வர்க்கம், உழைக்கும் மக்கள் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகர மனஉறுதியைப் பலவீனப்படுத்தி அவர்களை தத்துவார்த்த ரீதியாக நிராயுதபாணிகளாக மாற்றி விடும்.

(c) நம்முடைய அறிவுக்கெட்டியவரை, இதுவரை எந்த ஒரு நாட்டிலும் இத்தகைய சாத்தியப்பாட்டிற்கு எவ்வித நடைமுறை முக்கியத்துவமும் இருந்ததில்லை. ஒரு குறிப்பிட்ட நாட்டில் இத்தகைய சாத்தியப்பாடு இருப்பதாகத் தோன்றினாலும் கூட அதற்கு அதிக முக்கியத்துவம் தருவது பொருத்தமற்றதாகும். ஏனெனில், இது பெரும்பான்மை நாடுகளின் யதார்த்தத்தோடு பொருந்தவில்லை. அப்படியொரு சாத்தியப்பாடு ஏதாவது ஒரு நாட்டில் உருவானால், அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சி ஒரு பக்கம் அதை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதே சமயத்தில் இன்னொரு பக்கம் முதலாளிகளின் ஆயுதத் தாக்குதலுக்குப் பதிலடி தரத் தயாராக இருக்கவும் வேண்டும்.

(d) இந்த சாத்தியப்பாட்டை வலியுறுத்துவதன் மூலம், முதலாளி வர்க்கத்தின் பிற்போக்குத் தன்மையைக் குறைத்து விடவோ, அல்லது அவர்களைத் தாலாட்டித் தூங்கவைத்து விடவோ முடியாது.

(e) அல்லது அத்தகைய வலியுறுத்தல் சமூக ஜனநாயகக் கட்சிகளை மேலும் புரட்சிகரமாக மாற்றப் போவதுமில்லை.

(f) அத்தகைய வலியுறுத்தலின் மூலம் கம்யூனிஸ்டு கட்சிகளும் புதிதாகப் பலம் பெற்றுவிடப் போவதில்லை. அதற்கு மாறாக, சில கம்யூனிஸ்ட் கட்சிகள் இதன் விளைவாகப் புரட்சிகரப் பண்புகளை இழந்து விடுமேயானால், அவைகளுக்கும் சமூக ஜனநாயகக் கட்சி களுக்கும் உள்ள வித்தியாசம் மக்களுக்குத் தெரியாமல் குழப்பம் அடையும் நிலை ஏற்பட்டால், அது கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பலவீனப்படுத்தும்.

(g) புரட்சிகரமான சக்திகளைச் சேகரிப்பது, அதற்கான தயாரிப்புப் பணியும் மிகக் கடினமானது. இதோடு ஒப்பிடும்போது, பாராளுமன்ற போராட்டம் எளிதானது. பாராளுமன்ற வடிவப் போராட்டத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் அதன் பங்கு வரம்புக்குட்பட்டது. புரட்சிகரமான சக்தியைத் திரட்டுவதற்காக, கடுமையான வேலை செய்யத் துவங்குவதுதான், மிக முக்கியமானது.

3. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதும், பழைய அரசு இயந்திரத்தை (பிரதானமாக ஆயுதப்படைகளை) உடைத்தெறிந்து புதிய அரசு இயந்திரத்தை(பிரதான ஆயுதப் படைகளை) நிறுவுவதும் ஒன்றல்ல முதலாளிகளின், இராணுவ அதிகார வர்க்க அரசு இயந்திரத்தை உடைத் தெறிந்தாலொழிய, பாட்டாளி வர்க்கமும், அதன் நம்பகமான நட்பு சக்திகளும் பாராளுமன்றப் பெரும்பான்மை பெறுவது சாத்தியமல்ல, (ஏனெனில் முதலாளி வர்க்கம் அதனுடைய சர்வாதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள தேவையான சமயங்களில் அரசியல் அமைப்பு விதி களையே திருத்தம் செய்யும்) அப்படியே பெரும்பான்மை பெற்றாலும் அது நம்பகமானதுமல்ல. (உதாரணமாக தேர்தல்களை செல்லாது என அறிவிக்கலாம் அல்லது ரத்து செய்துவிடலாம், கம்யூனிஸ்ட் கட்சியை சட்ட விரோதமாக்கலாம், பாராளுமன்றத்தை கலைத்துவிடலாம் இன்ன பிற)

4. சோசலிசத்திற்கான சமாதான மாற்றம் என்பதை பாராளுமன்ற பெரும்பான்மை மூலமான மாற்றம் என்பதாக மட்டும் விளக்கம் கொடுத்துவிடக்கூடாது. முக்கியமான பிரச்சினை அரசு இயந்திரமா கும். 1870-களில் பிரிட்டனில் சமாதான வழியில் சோசலிசத்தை அடைய முடியும் என்று மார்க்சுக்கு ஒரு கருத்து இருந்தது. ஏனெனில், ''அந்த காலகட்டத்தில் பிரிட்டன் நாட்டில் மற்ற நாடுகளைவிட இராணு வத்துவமும், அதிகாரத்துவமும் குறைவாக இருந்தது'' பிப்ரவரி புரட் சிக்குப் பின், சிறிது காலத்திற்குள் ''எல்லா அதிகாரமும் சோவியத்துக்

களுக்கே'' என்பதன் மூலம் புரட்சி அமைதியாக வளர்ச்சிபெற்று வெற்றி பெறும் என லெனின் நம்பினார். ஏனெனில், அந்த சமயத்தில் ஆயுதங்கள் மக்கள் கையில் இருந்தன. மார்க்சோ அல்லது லெனினோ பழைய அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தி சமாதான வழியில் மாற்றத்தை அடையமுடியும் என்று குறிப்பிடவில்லை. மார்க்ஸ்-எங்கல்ஸின் புகழ் பெற்ற வாசகமான ''தொழிலாளி வர்க்கம் தயாராக உள்ள அரசு இயந்திரத்தை அப்படியே எடுத்துக் கொண்டு தன்னுடைய நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியாது'' என்பதை லெனின் திரும்பத் திரும்ப விளக்கினர்.

5. சமூக ஜனநாயகக் கட்சிகள் சோசலிசத்திற்கான கட்சிகள் அல்ல. சில இடதுசாரிகளைத் தவிர, அவை அனைத்தும் முதலாளிகளுக்கும், முதலாளித்துவத்துக்கும் சேவை செய்வனவாகும். அவை முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் ஒரு போராட்ட வடிவமே. சோசலிசப் புரட்சிப் பற்றிய பிரச்சினையில் நம்முடைய நிலைப்பாடு சமூக ஜனநாயக கட்சிகளின் நிலைப்பாட்டிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டதாகும். இந்த வித்தியாசத்தை மழுங்கடித்துவிடக் கூடாது. இந்த வித்தியாசத்தை மழுங்கடிப்பது சமூக ஜனநாயக கட்சிகளின் தலைவர்கள், மக்களை ஏமாற்றுவதற்குத்தான் பயன்படும்; மக்களை சமூக ஜனநாயகக் கட்சிகளின் செல்வாக்கிலிருந்து வென்றெடுப்பதற்கு நமக்கு தடையாக இருக்கும். இருந்தபோதிலும் சமூக ஜனநாயக கட்சிகளுடானான நமது பணிகளைப் பலப்படுத்துவதும், அவற்றில் உள்ள இடதுசாரி, மற்றும் நடுநிலைக் குழுக்களோடு அய்க்கிய முன்னணி அமைக்க முயற்சி செய்வதும் கேள்விக்கு இடமில்லாமல் மிக முக்கியமானது ஆகும்.

6. இந்த பிரச்சினையைப் பற்றிய எமது புரிதல் இதுதான். இந்த பிரச்சினை மீது வேறுபட்ட கருத்துக்களை நாங்கள் கொண்டிருக்கிறோம். ஆயினும் பல்வேறு காரணங்களுக்காக ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்குப் பின், அவைகளை நாங்கள் வெளிப்படுத்தவில்லை. ஒரு கூட்டுப் பிரகடனத்தை, வெளியிட இருப்பதால் நாங்கள், எங்கள் கருத்துக்களை இப்போது விளக்க வேண்டியுள்ளது. இருந்தபோதிலும், நகல் பிரகடனத்தில் ஒரு பொது உடன்பாட்டை அடைவதிலிருந்து இது நம்மைத் தடுக்க வேண்டியதில்லை. நகல் பிரகடனத்தில் இப்பிரச்சினை பற்றிய உருவாக்கத்துக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20 வது காங்கிரசில் இப் பிரச்சினை பற்றிய உருவாக்கத்துக்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டும் என்பதற்காக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி இன்று முன் வைத்துள்ள நகல் பிரகடனத்தை சில இடங்களில் திருத்தங்களோடு ஏற்றுக் கொள்ள நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்.

பின் இணைப்பு 2

புக்காரஸ்டில் நடைபெற்ற சகோதரக் கட்சிகளின் கூட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக்குழு வெளியிட்ட அறிக்கை (ஜூன் 26, 1960)

1. எல்லோருக்கும் அக்கறையுள்ள பொதுவான பிரச்சினைகளை சகோதரக் கட்சிகளுடன் ஆலோசனை செய்வதன் மூலம்தான் தீர்க்க வேண்டும் என்று நீண்ட காலமாக நிலவி வருகின்ற கொள்கையையும், இந்த கூட்டத்தில் கருத்துப் பரிமாற்றம் இருக்கலாமே தவிர முடிவுகள் எடுக்கக் கூடாது என்ற ஒப்பந்தத்தையும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதியான தோழர் குருச்சேவ் மீறியுள்ளார் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கருதுகிறது. சகோதரக் கட்சிகளைக் கலந்தாலோசிக்காமலும், முன் கூட்டியே ஒரு இயல்பான முழுமையான விவாதத்தை நடத்தாமலும் கூட்டத்திற்கான ஒரு நகல் அறிக்கையைத் திடீரென சுற்றுக்கு விட்டிருப்பது இதற்கு ஒரு உதாரணமாகும். இது சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு இருக்கும் அந்தஸ்தை—லெனின் காலத்திலிருந்து கட்டி வளர்க்கப்பட்ட அந்தஸ்தை—முறைகேடாகப் பயன்படுத்துவதாகும். மேலும், இது ஒருவருடைய விருப்பத்தை மற்றவர்கள் மீது திணிக்கின்ற மோசமான செயலாகும். இத்தகைய அணுகுமுறைக்கும் லெனினிய வேலை முறைக்கும் எந்த சம்பந்தமுமில்லை. இப்படிச் செய்வது சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் மிக மோசமான முன்னுதாரணத்தை உருவாக்கு கிறது. குருச்சேவின் இந்த அணுகுமுறைகளும், இப்படிப்பட்ட செயல் முறைகளும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் துயரமான விளைவு களை உருவாக்கும் என சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கருதுகிறது.

2. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் மார்க்சிய-லெனினியத் திற்கு உண்மையுடன் இருந்து வந்துள்ளது; மார்க்சிய—லெனினிய கோட்பாட்டின் நிலைபாடுகளை உறுதியாகப் பின்பற்றி வந்துள்ளது; கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கும் மேலாக, 1957 மாஸ்கோ பிரகடனத்துக்கு உண்மையுடன் இருந்து வந்துள்ளது; இப்பிரகடனத் தின் மார்க்சிய—லெனினிய ஆய்வுகளை உயர்த்திப் பிடித்துள்ளது. மார்க்சிய—லெனினிய அடிப்படைக் கோட்பாடுகள் மீது எங்களுக்கும்

தோழர் குருச்சேவுக்கும் பல கருத்து வேறுபாடுகள் உண்டு. இந்த வேறுபாடுகள் அனைத்து சோசலிச முகாமின் நலன்கள் மற்றும் உலக முழுவதுமுள்ள பாட்டாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் நலன்கள் ஆகியவற்றின் மீதும், எல்லா நாடுகளையும் சேர்ந்த மக்க ளால் உலக சமாதானத்தைக் காக்கவும், ஏகாதிபத்தியவாதிகளால் உருவாகும் ஒரு உலக யுத்தத்தை தடுக்கவும் முடியுமா என்ற பிரச்சினையின் மீதும், உலக மக்களில் மூன்றில் இரண்டு பகுதியும் மொத்த நிலப்பரப்பில் நான்கில் ஒரு பகுதியுமாக உள்ள முதலாளித் துவ உலகில் சோசலிசம் தொடர்ந்து வெற்றிகளை ஈட்ட முடி யுமா என்ற பிரச்சினையின் மீதும் முக்கியப் பாதிப்பை உருவாக்கக் கூடியவை. எல்லா மார்க்சிய-லெனினியவாதிகளும் இந்த வேறுபாடு களை அக்கறையுடன் அணுகுவதும், அவைகளை அக்கறையுடன் சிந்திப்பதும், தோழமைபூர்வமான விவாதங்களை நடத்துவதும், ஒன்றுபட்ட முடிவுகளை அடைவதற்கு அவசியமானவையாகும்.

இருந்த போதிலும், தோழர் குருச்சேவ் மேற்கொண்ட அணுகுமுறை தந்தையாதிக்க மனப்பான்மை கொண்டதாகவும், தன்னிச்சையான தாகவும், கொடூரமானதாகவும் உள்ளது. உண்மையில் அவர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உள்ள உறவை சகோதரர்களுக்கிடையிலானதைப் போல் அல்லாமல் தந்தை யாதிக்கக்குடும்பத்தின், தந்தை-மகன் உறவைப்போன்று அணுகுகிறார். இந்தக் கூட்டத்தில் அவருடைய மார்க்சிய-லெனினியத்திற்கு புறம்பான கருத்துக்களுக்கு எங்கள் கட்சியை அடி பணிய வைக்கும் முயற்சியில் எங்கள் மீது நிர்ப்பந்தங்களை உருவாக்குகிறார். நாங்கள் மிக உண்மை யுடன் அறிவிக்கிறோம்: எங்கள் கட்சி மார்க்சிய-லெனினிய உண்மை களை மட்டுமே நம்புகிறது; அதற்கு மட்டுமே அடிபணிகிறது; மார்க்சிய-லெனினியத்திற்கு விரோதமான தவறான கருத்துக்களுக்கு ஒருபோதும் அடிபணியாது. ருமேனிய கட்சியின் மூன்றாவது காங்கிரசில் தோழர் குருச்சேவ் தன் உரையில் குறிப்பிட்ட சில கருத்துக்கள் தவறானவை என்றும் மாஸ்கோ பிரகடனத்துக்கு விரோதமானவை என்றும் நாங்கள் கருதுகிறோம். அவருடைய பேச்சை ஏகாதிபத்தியவாதிகளும் டிட்டோ கும்பலும்தான் வரவேற்பார்கள்; உண்மையில் அவர்கள் அதை ஏற் கனவே வரவேற்று விட்டார்கள். சந்தர்ப்பம் கிடைக்குமேயானால் எங்க ளுக்கும் குருச்சேவுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் பற்றி ரசிய கம்யூனிஸ்ட் கட்சியுடனும் மற்ற சகோதரக் கட்சிகளுடனும் விவாதம் நடத்தத் தயாராக இருக்கிறோம். புக்காரஸ்டில் தோழர் குருச்சேவ் வினியோகித்த, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தகவல் கடிதத்திற்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தீர படித்துவிட்டுப் பதிலளிக்கும். அந்தப் பதில், இரு கட்சிகளுக்கும் இடையேயான

கொள்கை வேறுபாடுகளை தக்க ஆதாரங்களுடன் விளக்கும். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, சகோதரக் கட்சிகளுடன் பொறுப்பான, தோழமைபூர்வமான விவாதங்களை மேற்கொள்ளும். இறுதியாக மார்க்சிய-லெனினிய உண்மையே வெல்லும் என்பதை நாங்கள் நம்புகிறோம். உண்மை, விவாதத்திற்கு அஞ்சாது. முடிவாக, உண்மையை தவறானதாகவும் தவறை உண்மையாகவும் சித்தரித்துக் காட்ட முடியாது. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் எதிர்காலம் எல்லா நாடுகளையும் சேர்ந்த மக்களின் தேவைகளையும் போராட்டங்களையும் சார்ந்துள்ளது; மார்க்சிய—லெனினிய வழிகாட்டுதலைச் சார்ந்துள்ளது; எந்தக் காலத்திலும் ஒரு தனி நபரின் அதிகாரத்தைச் சார்ந்தில்லை.

3. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதுமே எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒற்றுமைக்காகவும், சோசலிச நாடுகளின் ஒற்றுமைக்காகவும் பாடுபட்டு வந்திருக்கிறது. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அணிகளுடைய உண்மையான ஒற்றுமைக்காகவும், ஏகாதிபத்தியம், பிற்போக்குவாதம் இவைகளுக்கெதிரான ஒன்றுபட்ட போராட்டத்திற்காகவும் முக்கிய கோட்பாட்டு பிரச்சினைகளின் மீது இயல்பான விவாதம் நடத்தப்படவேண்டும் என நாங்கள் கருதுகிறோம். அசாதாரண முறையில் அவசர அவசரமாகவோ, ஓட்டெடுப்பின் மூலமாகவோ முக்கியமான கொள்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடாது. நடைமுறையில் பரிசோதிக்கப்படாத ஒருவரின் தன்னிச்சையான முடிவுகளை அல்லது கடந்த கால நடைமுறையில் தவறு என நிரூபிக்கப்பட்ட முடிவுகளை எவரும் மற்றவர்கள் மீது திணிக்கக்கூடாது. தோழர் குருச்சேவ் நடந்து கொள்கின்ற முறை, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவிப்பதாகும். ஆனால், தோழர் குருச்சேவ் எப்படி நடந்துகொண்டாலும், சீன—ரசிய கட்சிகளின் ஒற்றுமையும், எல்லா கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் ஒற்றுமையும் மேலும் பலப்பட்டு வளர்ச்சியடைந்தே தீரும். சர்வதேச கம்யூனிச இயக்கமும், மார்க்சிய—லெனினியமும் வளர்ச்சியுறும்போது, நமது அணிகளின் ஒற்றுமையும் தொடர்ச்சியாக மேலும் பலம் பெறும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

4. நமது இரு கட்சிகளின் உறவுகளை முழுமையாக நோக்கும்போது தோழர் குருச்சேவுடன் எங்களுக்குள்ள வேறுபாடுகள் மிகவும் குறைவானவையே. நம்மிரு கட்சிகளின் உறவுகளில் மிக முக்கியமான விசயம், பொது இலட்சியத்திற்கான போராட்டத்தில் நமக்கிடையிலான ஒற்றுமைதான் என கருதுகிறோம். ஏனெனில், எங்கள் இரு நாடுகளுமே சோசலிச நாடுகள்; இரண்டு கட்சிகளுமே மார்க்சிய—லெனினிய கோட்பாடுகளின் அடிப்படையில் கட்டப்பட்டவை. அனைத்து சோசலிச முகாமின் இலட்சியங்களையும் முன்னேற்றுவதற்காகப் போராடி வரு

பவை, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காகப் போராடி வரு பவை, உலக சமாதானத்தை வென்றெடுப்பதற்காகப் போராடி வரு பவை. அமைதியான முறையில் தோழமையான விவாதங்கள் மூலம், எங்கள் வேறுபாடுகளைக் களைந்துகொள்ள ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கும், தோழர் குருச்சேவுக்கும், எங்களுக்கும் சந்தர்ப்பங் கள் கிடைக்கும் என நாங்கள் நம்புகிறோம். இதன்மூலம் சீன-ரசிய கட்சி கள் இன்னும் அதிகமாக ஒன்றுபடவும், அவைகளுக்கிடையேயுள்ள உறவு மேலும் பலப்படுத்தபடவும் முடியும். இது, சோசலிச முகாமிற்கும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து, உலக சமாதானத்திற்காக உலக மக்கள் நடத்தும் போராட்டத்திற்கும் அதிக நன்மை பயக்கும்.

5. மாஸ்கோ பிரகடனத்தின் சரியான தன்மையை, இந்தக் கூட் டத்தில் முன்வைக்கப்பட்ட அதிகாரபூர்வ நகல் அறிக்கை உறுதி செய்வ தைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், இந்த நகல் அறிக்கையில், மாஸ்கோ பிரகடனத்தின் மார்க்சிய-லெனினிய ஆய்வுகள் முன்வைக்கப்பட்டிருக்கும் விதம் சரியானதல்ல; ஒரு சார்பானது ஆகும். நடப்பு சர்வதேச நிலைமையில் உள்ள முக்கியப் பிரச்சினைகளைப் பற்றி நகல் அறிக்கை தெளிவான நிலைப்பாடுகளை எடுப்பதைத் தவிர்த்துள் ளது. இது சரியானது அல்ல. சர்வதேச பாட்டாளி வர்க்க இயக்கத் திற்குப் பெரும் அபாயமாக உள்ள நவீன திரிபுவாதத்தைப்பற்றி இதில் குறிப்பிடப்படவில்லை. எனவே, இந்த நகல் அறிக்கையை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. பொது எதிரியை எதிர்த்த போராட்டத்தில் ஒற்றுமையின் நலன் கருதி, நாங்கள் ஒரு திருத்தப்பட்ட நகல் அறிக் கையை வைத்துள்ளோம். அது விவாதிக்கப்பட வேண்டும் என முன்மொழிகின்றோம். இப்போது உடன்பாட்டை அடைவது சாத்தியம் இல்லையென்றால்,ஒரு விசேஷ நகல் அறிக்கைக் கமிட்டியை அமைத்து, முழு விவாதத்திற்குப்பின் நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு நகல் அறிக்கையைத் தயாரிக்கும் பணியை அக் கமிட்டி மேற்கொள்ள வேண்டும் என்பதை முன்வைக்கிறோம்.

பின் இணைப்பு 3

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் தகவல் கடிதத்திற்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அளித்த பதில் கடிதத்தில், வேறுபாடுகளைத் தீர்த்துக்கொள்ளவும் ஒற்றுமையை அடையவும் முன்வைக்கப்பட்ட அய்ந்து முன்மொழிதல்கள் (செப்டம்பர் 10, 1960)

வேறுபாடுகளை வெற்றிகரமாக தீர்த்துக்கொள்வதற்கும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும் கீழ்க்காணும் திட்டங்களை முன்வைக்கிறோம்:

1. மார்க்சிய-லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளும், 1957 மாஸ்கோ பிரகடனம் மற்றும் அறிக்கையின் கோட்பாடுகளுமே, நம் இரண்டு கட்சிகளின் ஒற்றுமைக்கும் எல்லா சகோதரக் கட்சிகளின் ஒற்றுமைக்குமான சித்தாந்த அடிப்படை ஆகும். நம்முடைய எல்லா அறிவிப்புகளும், நடவடிக்கைகளும் மார்க்சிய-லெனினிய அடிப்படைக் கோட்பாட்டிற்கும், 1957 பிரகடனத்தின் கொள்கைகளுக்கும் முழுமையாக உண்மையுடையதாக இருக்க வேண்டும். அவைகளை மட்டுமே, உண்மையையும் பொய்யையும் மதிப்பிடுவதற்கான அளவுகோலாக நாம் பயன்படுத்த வேண்டும்.

2. சோசலிச நாடுகளுக்கிடையிலான உறவுகளும் சகோதரக் கட்சிகளுக்கிடையிலான உறவுகளும் கண்டிப்பாக மாஸ்கோ பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள சமத்துவம், தோழமை உணர்வு, சர்வதேசியம் ஆகிய கொள்கைகளுக்கு இணங்கியவையாக இருக்கவேண்டும்.

3. சோசலிச நாடுகள் மற்றும் சகோதரக் கட்சிகளுக்கிடையேயான எல்லாத் தகராறுகளும் மாஸ்கோ பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கேற்ப, தோழமை பூர்வமான அவசரமற்ற விவாதங்கள் மூலம் மட்டுமே தீர்க்கப்பட வேண்டும். ரசியா, சீனா இரண்டு நாடுகளும், இந்நாடுகளைச் சேர்ந்த இரண்டு கட்சிகளும், சர்வதேச நிலைமை மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கம் ஆகியவற்றில் பெரும் பொறுப்பேற்கின்றன. பொது அக்கறைக்குரிய எல்லா பிரச்சினைகளிலும் ஒன்றுபட்ட நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அவர்கள் முழுமையாகக் கலந்தா

லோசிக்கவும், அவசரமில்லாமல் விவாதிக்கவும் வேண்டும். இரண்டு கட்சிகளும் கலந்து ஆலோசிப்பதன் மூலம், சீன, ரசிய கட்சிகளுக் கிடையே உள்ள தகராறு தற்போதைக்குத் தீர்க்கப்பட முடியாவிட்டால், பிறகு அவசரமில்லாத விவாதத்தைத் தொடர வேண்டும். தேவைப்பட் டால் எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளிடம், இரு தரப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை யதார்த் தமாகவும் முழுமையாகவும் தெரிவிக்க வேண்டும். இந்தக் கட்சிகள், நீண்ட விவாதம் மற்றும் ஆலோசனையின்மூலம், மார்க்சிய-லெனினியத் திற்கும், மாஸ்கோ பிரகடனத்துக்கும் பொருந்திய முறையில் சரியான முடிவுகளுக்கு வரவேண்டும்.

4. தமக்கும் பகைவர்களுக்கும் இடையே, உண்மைக்கும் பொய்க் கும் இடையே ஒரு தெளிவான எல்லைக் கோட்டினை வகுத்துக் கொள்வது கம்யூனிஸ்டுகளுக்கு மிக முக்கியமானது ஆகும். நம்முடைய இரு கட்சிகளும் நம்முடைய நட்பை, பொன்னென மதித்துக் காக்கவும், பகைவர்களுக்கு எதிராக கைகோர்த்து நிற்கவும் வேண்டும். நம்முடைய இரு கட்சிகளுக்கும், நாடுகளுக்கும் இடையில் ஒற்றுமைக்கு ஊறுவிளை விக்கக்கூடிய எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவதோ, அறிக்கைகள் விடுவதோ கூடாது. இதன்மூலம் நம்மைப் பிரிப்பதற்கான ஒரு வாய்ப்பை பகைவர்களுக்கு கொடுத்து விடக்கூடாது.

5. இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் மாஸ்கோவில் நடைபெற வுள்ள எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் கூட்டம்வெற்றி பெறுவதற்காக, மேலேசொல்லப்பட்ட கோட் பாடுகளின் அடிப்படையில் நம் இரு கட்சிகளும் பிற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளுடன் இணைந்து முழு தயாரிப்புக்கும், கலந்தாலோ சிப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இந்த கூட்டத்தில் மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கும், 1957 மாஸ்கோ அறிக்கையில் உள்ள கொள்கைகளுக்கும் ஏற்ப ஓர் அறிக்கையைத் தயார் செய்ய வேண்டும். இந்த அறிக்கையை ஒரு வேலைத் திட்டமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அது விரோதிக்கு எதிராக ஒன்றுபட்டு ஒரு போராட் டத்தை நடத்துவதற்கான ஒரு திட்டமாக இருக்க வேண்டும்.

ஸ்டாலின் பற்றிய பிரச்சினையின் மீது

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது விமர்சனம்

'மக்கள் தினசரி', 'செங்கொடி' பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்கள் (செப். 13, 1963)

ஸ்டாலின் பற்றிய பிரச்சினை உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கிறது. அது ஒவ்வொரு நாட்டிலும் அனைத்து வர்க்கங்களிடையேயும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள பிரச்சினையாகும். பல்வேறு வர்க்கங்களும் அவற்றின் அரசியல் கட்சிகளும் குழுக்களும் வெவ்வேறு கண்ணோட்டங்களில் இன்றைக்கு பெரும் விவாதத்திற்குள்ளாகியிருக்கிற ஒரு விசயமாக அது இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு இறுதி முடிவு இந்த நூற்றாண்டில் அடைய இயலாது எனத் தோன்றுகிறது. ஆனால் இப்பிரச்சினையில் சர்வதேச உழைக்கும் வர்க்கம் மற்றும் புரட்சிகர மக்களின் பெரும்பான்மையினரிடையே கிட்டத்தட்ட ஒரு ஏகோபித்த உடன்பாடு இருக்கிறது. அதாவது. அவர்கள் ஸ்டாலினை முழுவதுமாக மறுப்பதை அங்கீகரிக்கவில்லை. மாறாக மேலும் மேலும் அவரது நினைவை போற்றிப் பேணி வளர்த்து வருகின்றனர். ரசிய நாட்டின் விசயத்திலும் கூட இதுவே உண்மை. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களுடனான எங்களது கருத்துவேறுபாடுஎன்பது மக்களின் ஒரு பகுதியினருடனானதாகும். புரட்சிகர இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக அவர்களையும் இக்கருத்துக்கு இணங்கச் செய்துவிட

முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தக் கட்டுரையை எழுதுவதன் நோக்கம் இதுவே.

''தனி நபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற சாக்கில் தோழர் குருச்சேவ், ஸ்டாலினை முழுவதுமாக மறுத்தபோது, அவர் (குருச்சேவ்) மிகவும் தவறாகவும், உள்நோக்கம் கொண்டவராகவும் இருந்தார் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் கருதி வந்திருக்கிறது.

இந்த 'தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டம்' என்பது, தலைவர்கள், கட்சி, வர்க்கம், பொதுமக்கள் ஆகியோருக்கிடையிலான பரஸ்பர உறவு பற்றிய முழுமைபெற்ற லெனின் போதனைகளை மீறுவதாகும் என்றும், ஜனநாயக மத்தியத்துவம் என்ற கம்யூனிசக் கொள்கையின் அடிப்படைகளையே அழிப்பதாகும் என்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி ஜூன் 14 தேதியிட்டு எழுதிய தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் கொள்கை வழிப்பட்ட எங்கள் வாதங்களுக்கு பதில் எதுவும் சொல்வதைத் தவிர்க்கிறது; ஆனால் வெறுமனே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை 'தனி நபர் வழிபாட்டின் ஆதரவாளர்கள்', 'ஸ்டாலினுடைய தவறான கருத்துக்களைக் கூவி விற்பவர்கள்' என்று முத்திரை குத்துகிறது.

மென்ஷ்விக்குகளை எதிர்த்துப் போராடியபோது, லெனின் சொன்னார், ''கொள்கை ரீதியான பிரச்சினையில் எதிராளியினுடைய ஒரு வாதத்திற்கு பதில் சொல்லாமல் அவன் மீது 'இரக்கம்' காட்டுவதாகச் சொல்லது விவாதிப்பதாகப் பொருளாகாது மாறாக அவதூறு செய்ய முயல்வது ஆகும்''[1] ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி தனது பகிரங்கக் கடிதத்தில் காட்டியுள்ள மனப்பான்மையானது மென்ஷ்விக்குகளுடைய மனப்பான்மையுடன் துல்லியமாகப் பொருந்துவதாகும்.

பகிரங்கக் கடிதமானது விவாதத்திற்குப் பதிலாக அவதூறு செய்வதை மேற்கொண்ட போதிலும், நாங்கள் கொள்கை ரீதியான விவரங்கள் மூலமாகவும் மறுக்க முடியாத உண்மைகள் மூலமாகவுமே அதற்கு பதிலளிக்க விரும்புகிறோம்.

மாபெரும் ரசிய நாடு பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் முதல் அரசாக இருந்தது. துவக்கத்தில் இந்த நாட்டின் அரசாங்கம் மற்றும்

1. *வி. இ. லெனின், ''பி. மாஸ்லோவின் பதில் மீதான சில குறிப்புகள்'' தொகுப்பு நூல்கள். ஆங்கிலப் பதிப்பு. அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1963, தொகுதி 15, பக்கம் 265.*

கட்சியின் தலைசிறந்த தலைவராக லெனின் இருந்தார். லெனினுடைய மறைவிற்குப் பிறகு, ஸ்டாலின் அவ்வாறிருந்தார்.

லெனினுடைய மறைவுக்குப் பிறகு, ஸ்டாலின் ரசிய நாட்டின் கட்சி மற்றும் அரசாங்கத்தின் தலைவராக ஆனது மட்டுமல்லாமல், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராகவும் ஆனார்.

அக்டோபர் புரட்சியினால் தொடங்கி வைக்கப்பட்ட முதல் சோசலிச அரசு தோன்றி 46 ஆண்டுகள்தான் ஆகின்றன. இதில் கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகள் இந்த அரசின் தலைசிறந்த தலைவராக ஸ்டாலின் இருந்தார். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றிலும் சரி, சர்வதேச கம்யூனிச இயக்க வரலாற்றிலும் சரி ஸ்டாலினுடைய செயல் பாடுகள் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றன.

ஸ்டாலினை எவ்வாறு மதிப்பிடுவது, ஸ்டாலினைப் பற்றி என்ன அணுகுமுறையை மேற்கொள்வது என்பது ஸ்டாலினை மட்டுமே மதிப் பிடும் ஒன்றல்ல; மிக முக்கியமாக, லெனின் மறைவிலிருந்து சர்வதேச கம்யூனிச இயக்கம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வர லாற்று அனுபவங்களை எவ்வாறு தொகுப்பது என்ற பிரச்சினையாகும் என்ற நிலையை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது பேராயத்தில் தோழர் குருச்சேவ் ஸ்டாலினை முழுவதும் மறுதலித்தார். சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதையும் பாதிக்கக்கூடிய இந்த கொள்கைரீதியான பிரச்சினையைப்பற்றி அவர் முன்கூட்டியே சகோதரக் கட்சிகளிடம் கலந் தாலோசிக்கத் தவறினார். ஆனால் பிறகு அக்கட்சிகளின் மீது 'ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட' ஒன்றைத் திணிக்க முயற்சி செய்தார். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கருத்திலிருந்து மாறுபட்ட வகையில் ஸ்டாலின் பற்றிய மதிப்பீட்டுக்கு வந்தவர்களை ''தனிநபர் வழிபாட்டின் பாதுகாவலர்கள்'' என்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் உள் விவகாரங்களில் ''தலையிடுபவர்கள்'' என்றும் வர்ணிக்கப்பட்ட னர். ஆனால் முதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் வரலாற்று அனுபவத்தின் சர்வதேச முக்கியத்துவத்தையோ அல்லது சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் தலைவராக ஸ்டாலின் இருந்தார் என்ற வரலாற்று உண்மையையோ யாரும் மறுக்கமுடியாது. இதன் விளைவாக ஸ்டாலின் பற்றிய மதிப்பீடு சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதையும் பாதிக்கக்கூடிய ஒரு முக்கியகொள்கை பிரச்சினையாகும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அப்படியானால் பிற சகோதரக் கட்சிகள் ஸ்டாலினைப் பற்றிய யதார்த்தமான ஆய்வையும், மதிப்பீட்டையும் மேற்கொள்வதை

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எந்த அடிப்படையில் அனுமதிக்க மறுக்கிறார்கள்?

ஸ்டாலினுடைய சிறப்பு அம்சங்களையும், குறைபாடுகளையும் பற்றி முழுமையான விஞ்ஞானரீதியான ஆய்வை வரலாற்றுப் பொருள்முதல் வாத அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்று, தொடர்ந்து வலியுறுத்திவந்ததோடு, ஸ்டாலினை முழுவதுமாக மறுதலிக்கக்கூடிய அகவயமான, பண்பாடற்ற கருத்து முதல்வாத வரலாற்று ஆய்வு முறையையும், தான்தோன்றித்தனமான வரலாற்று புரட்டலையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது.

ஸ்டாலின் சித்தாந்த மற்றும் சமூக, வரலாற்று வேர்களைக் கொண்ட தவறுகளைச் செய்தார் என்பதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைவிடாது கூறிவந்துள்ளது. ஸ்டாலின் உண்மையாகவே புரிந்த தவறுகளை விமர்சிப்பது அவசியம்; அடிப்படையில்லாமல் அவர்மீது சுமத்தப்பட்ட குற்றங்களை அல்ல; மேலும் ஒரு சரியான நிலைபாட்டிலிருந்து சரியான முறைகளில் அது செய்யப்பட வேண்டும்; ஆனால் நாங்கள் ஸ்டாலின் பற்றிய முறையற்ற விமர்சனத்தையும், தவறான நிலைபாட்டிலிருந்தும் தவறான முறைகளிலும் செய்யப்படும் விமர்சனத்தையும் இடைவிடாது எதிர்த்து வந்துள்ளோம்.

லெனினுடைய வாழ்க்கைக் காலத்தில் ஸ்டாலின் ஜாரிசத்தை எதிர்த்துப் போராடினார். மார்க்சியத்தை பிரச்சாரம் செய்தார்; லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியின் மத்திய கமிட்டியின் உறுப்பினர் ஆன பிறகு 1917 புரட்சிக்கு வழிவகுத்த போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டார். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு அவர் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பலன்களை பாதுகாக்க போராடினார்.

லெனின் மறைவுக்கு பிறகு உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளை எதிர்த்து தீர்மானகரமாகப் போராடுவதிலும், உலகின் முதல் சோசலிச அரசை பாதுகாப்பதிலும், உறுதிப்படுத்துவதிலும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் ரசிய மக்களையும் அவர் வழி நடத்தினார்.

சோசலிச தொழில் மயமாக்கல் பாதை, விவசாயக் கூட்டுப்பண்ணை முறை ஆகியவற்றை உயர்த்திப் பிடிப்பதிலும், சோசலிச மாற்றம் சோசலிச கட்டுமானம் ஆகிய்வற்றில் பெரும் வெற்றிகளை ஈட்டுவதிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் ரசிய மக்களையும் அவர் வழி நடத்திச் சென்றார்.

பாசிச எதிர்ப்பு யுத்தத்தின் மாபெரும் வெற்றிக்கான கடுமையான நெடிய போராட்டத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் ரசிய மக்களையும் ரசிய இராணுவத்தையும் அவர் வழி நடத்திச் சென்றார்.

பல்வேறுவகை சந்தர்ப்பவாதத்திற்கு எதிராகவும், டிராட்ஸ்கியவாதிகள், ஜீனோவ்வாதிகள், புகாரின்வாதிகள் மற்றும் பிற முதலாளித்துவ ஏஜெண்டுகள் ஆகிய லெனினிய விரோதிகளுக்கு எதிராகவும் நடந்த போராட்டத்தில் ஸ்டாலின், மார்க்சிய—லெனினியத்தைப் பாதுகாத்து வளர்த்தார்.

அழிக்க முடியாத மார்க்சிய—லெனினிய படைப்புக்களாக விளங்கும் ஏராளமான கோட்பாட்டு ரீதியான படைப்புகள் மூலமாக ஸ்டாலின் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கு நிரந்தரமான பங்களிப்பை செய்துள்ளார்.

சீன மக்கள் உள்பட அனைத்து மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு பெருமளவு உதவக்கூடிய, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கு முற்றிலும் பொருந்திய அயலுறவுக் கொள்கையைக் கடைபிடிப்பதிலும் ரசிய கட்சி மற்றும் அரசாங்கத்தை ஸ்டாலின் வழி நடத்தினார்.

ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அனைத்து எதிர்புரட்சியாளர்களின் இணக்கமற்ற எதிரியான ஸ்டாலின் அவர்களுக்கெதிரானபோராட்டத்தை வழி நடத்திச் செல்வதில் வரலாற்றுப் பேரலைகளின் முன்னணியில் நின்றார்.

ஸ்டாலினுடைய நடவடிக்கைகள் மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின், மாபெரும் ரசிய மக்களின் போராட்டங்களுடன் மிக நெருக்கமாகவும், உலக முழுவதிலுமுள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுடன் பிரிக்க முடியாத வகையிலும் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்டாலினுடைய வாழ்க்கை ஒரு மாபெரும் மார்க்சிய—லெனினியவாதியின் வாழ்க்கையாகும்; ஒரு மாபெரும் பாட்டாளி வர்க்க புரட்சியாளரின் வாழ்க்கையாகும்.

ஒரு மாபெரும் மார்க்சிய-லெனினியவாதியும், பாட்டாளிவர்க்க புரட்சியாளருமாகிய ஸ்டாலின் ரசிய மக்களுக்கும், சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும் மகத்தான பணிபுரிந்துள்ள அதே வேளையில் சில தவறுகளையும் செய்துள்ளார் என்பது உண்மையே. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தனக்கு முன்னுதாரணமாக பின்பற்றிச் செல்ல எதுவும் இல்லாத காலத்தில் ஸ்டாலின் இழைத்த சில தவறுகள் கொள்கை ரீதியானவை; ஒருசில தவறுகள் நடைமுறை பணிகளின் போக்கில் இழைக்கப்பட்டவை; சில தவிர்க்கப்பட்டிருக்கக்கூடியவை; சில மிக அரிதாகவே தவிர்க்கப்பட்டிருக்க முடியும்.

தனது சிந்தனை முறையில் ஸ்டாலின் ஒருசில பிரச்சினைகளில் இயக்கவியல் பொருள்முதல்வாதத்திலிருந்து விலகி இயக்க மறுப்பியல் மற்றும் அகநிலைப் போக்கிற்கு இறையானார். அதன் விளைவாக சில சமயங்களில் யதார்த்தத்திலிருந்தும் மக்களிடமிருந்தும் விலகிச் சென்றார்; கட்சியின் உள்ளேயும், வெளியேயும் நடந்த போராட்டங்களில் ஒரு சில சமயங்களில் ஒரு சில பிரச்சினைகளில் இயல்பாகவே மாறுபட்டுள்ள இரண்டுவகையான முரண்பாடுகளை-அதாவது நமக்கும் எதிரிக்கும் உள்ள முரண்பாட்டையும், மக்களுக்கிடையே உள்ள முரண்பாட்டையும்-அவர் போட்டு குழப்பிவிட்டார். மேலும் அவற்றை கையாள்வதில் தேவைப்படும் வேறுபட்ட முறைகளையும் குழப்பிக்கொண்டார். ஸ்டாலின், எதிர்ப்புரட்சியை நசுக்குவதில் ஈடுபட்டபோது தண்டிக்கப்படவேண்டிய பல எதிர்புரட்சியாளர்கள் உரிய தண்டனையைப் பெற்றார்கள் அதே சமயத்தில் சில நிரபராதிகளும் தவறாக தண்டிக்கப்பட்டார்கள். 1937லும் 1938லும் எதிர்ப் புரட்சியாளர்களை நசுக்குவதை பெருமளவில் விரிவாக்கும் தவறு நிகழ்ந்தது. கட்சி மற்றும் அரசு அமைப்புகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அவர் பாட்டாளி வர்க்க ஜனநாயக மத்தியத்துவத்தை முழுமையாக கடைபிடிக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதை அவர் மீறினார். சகோதரக் கட்சிகள் மற்றும் நாடுகளது உறவுகளை கையாள்வதில் அவர் சில தவறுகள் புரிந்தார். சர்வதேச கம்யூனிச இயக்கத்திலும் அவர் சில மோசமான ஆலோசனைகளை வழங்கினார். இத்தவறுகள் சர்வதேச கம்யூனிச இயக்கத்துக்கும் ரசிய நாட்டுக்கும் சில இழப்புகளை ஏற்படுத்தின.

ஸ்டாலினுடைய தகுதிகளும், தவறுகளும் வரலாற்று ரீதியான புறநிலை யதார்த்த வகைப்பட்டவை; இரண்டையும் ஒப்பிடும்போது அவருடைய நிறைகள் அவருடைய தவறுகளை காட்டிலும் மிகுதியானவை என்பதைக் காணமுடிகிறது. அவர் பிரதானமாக சரியானவராக இருந்தார். அவருடைய தவறுகள் இரண்டாம் பட்சமானவையாகவே இருந்தன. ஸ்டாலினுடைய சிந்தனைகளையும் பணிகளையும் ஒட்டு மொத்தமாக தொகுத்து பார்க்கும்போது ஒவ்வொரு நேர்மையான கம்யூனிஸ்டும் சந்தேகத்திற்கு இடமின்றி வரலாற்றுக்கு மதிப்புக்கொடுத்து ஸ்டாலினிடம் இருந்த பிரதானமானவற்றை முதலில் கவனிப்பான். எனவே ஸ்டாலினுடைய தவறுகள் சரியானவகையில் மதிப்பிடப்பட்டு, விமர்சிக்கப்பட்டு களையப்படும்போது ஸ்டாலினுடைய வாழ்க்கையில் பிரதானமாக இருந்தவற்றை பாதுகாப்பதும், அவர் பாதுகாத்து வளர்த்த மார்க்சிய-லெனினியத்தைப் பாதுகாப்பதும் அவசியமாகும்.

இரண்டாம் பட்சமானவையாக மட்டுமே இருந்த ஸ்டாலினுடைய தவறுகள் வரலாற்றுப் படிப்பினையாக எடுத்துக் கொள்ளப்படுமாயின் அது பயனுள்ளதாக இருக்கும். ரசியா மற்றும் பிற நாடுகளது கம்யூ

னிஸ்டுகள் அந்த தவறுகளை மீண்டும் இழைக்காமலிருப்பதற்கு அல்லது தவறுகளைக் குறைத்துக்கொள்வதற்கு இந்தப்படிப்பினைகள் எச்சரிக்கையாகப் பயன்படும். நேர்மறை மற்றும் எதிர்மறையான வரலாற்றுப் படிப்பினைகள், அவை வரலாற்று உண்மைகளைத் திரித்துப் புரட்டாமலும், சரியாகத் தொகுத்தும், உறுதி செய்யப்பட்டும் இருப்பின் அவை அனைத்து கம்யூஸ்னிடுகளுக்கும் பயனுள்ளவையாக இருக்கும்.

பல தவறுகள் இருப்பினும் மாபெரும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளராக இருந்த பெபல், ரோசாலுக்சம்பர்க் போன்றவர்களுடன் மார்க்சியவாதிகளின் அணுகுமுறை, இரண்டாவது அகிலத்தின் திரிபுவாதிகளுடனான அணுகுமுறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும் என்று லெனின் பல சமயங்களில் சுட்டிக் காட்டினார். மார்க்சியவாதிகள் இவர்களுடைய தவறுகளை மறைக்கவில்லை. மாறாக அத்தகைய உதாரணங்கள் மூலமாக ''அவற்றை எவ்வாறு தவிர்ப்பது, புரட்சிகர மார்க்சியத்தின் கடும் தேவைகளுக்கு எவ்வாறு ஈடுகொடுப்பது''[1] என்பதை கற்றுக்கொண்டார்கள். அதற்கு மாறாக திரிபுவாதிகள், பெபல் மற்றும் ரோசாலுக்சம்பர்க்கின் தவறுகளைப் பற்றி ''கூவினார்கள்'' ''கொக்கரித்தார்கள்''. திரிபுவாதிகளைக் கேலி செய்த லெனின் இந்தவிசயத்தில் ஒரு ரசிய பழங்கட்டுக்கதையை மேற்கோள் காட்டினார். ''சில சமயங்களில் கழுகுகள் கோழிகளைக் காட்டிலும் தாழ்வாக பறக்கலாம், ஆனால் கோழிகள் ஒருபோதும் கழுகுகளின் உயரத்திற்கு பறக்க முடியாது''[2] பெபலும், ரோசாலுக்சம்பர்க்கும் ''மாபெரும் கம்யூனிஸ்டுகள்'' மேலும் அவர்களுடைய தவறுகளுக்கு பின்பும் ''கழுகுகளாக''வே திகழ்ந்தார்கள். அதே சமயத்தில், திரிபுவாதிகள் ''உழைக்கும் வர்க்க இயக்கத்தின் கொல்லைப்புற சாணக் குவியலிடையே'' ''கோழிகளின்'' கூட்டமாக இருந்தனர்.[3]

பெபல் மற்றும் ரோசாலுக்சம்பர்க்கின் வரலாற்றுப் பாத்திரங்கள் எந்த வழியிலும் ஸ்டாலினுடைய பாத்திரத்துடன் ஒப்பிடப்பட முடியாதவை. ஸ்டாலின் ஒரு வரலாற்று சகாப்தம் முழுவதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின்மாபெரும்

---

1. வி. இ. லெனின், ''தொழிற்சங்கங்கள் மீதான கட்சியின் மனப்பான்மை பற்றி வய்னாவ் (ஏ.வி.லூனாச்சார்ஸ்கி) எழுதிய பிரசுரத்திற்கான முன்னுரை'' ஆங்கிலப் பதிப்பு. அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1962, தொகுதி 13, பக்கம் 165,

2. வி. இ. லெனின் ''பத்திரிகையாளனின் குறிப்புகள்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு இண்டர் நேசனல் பப்ளிசர்ஸ், நியூயார்க் 1943 தொகுதி 13, பக்கம் 312.

3. மேற்கண்ட நூலின் பக்கம் 313,

தலைவராக இருந்தார். அவரைப் பற்றி மதிப்பிடும்போது அதிகக் கவனம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

ஸ்டாலினைப் 'பாதுகாப்பதாக' சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ஆம், நாங்கள் ஸ்டாலினைப் பாதுகாக்கவே செய்கிறோம். குருச்சேவ், வரலாற்றை திரித்து ஸ்டாலினை முழுவதுமாக மறுதலிக்கும்போது இயல்பாகவே நாங்கள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் நலன்களை யொட்டி ஸ்டாலினைப் பாதுகாக்க வேண்டிய தவிர்க்க முடியாத வரலாற்றுக் கடமையை ஏற்றுள்ளோம்.

ஸ்டாலினை ஆதரிக்கும்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அவருடைய சரியான பகுதியை ஆதரிக்கிறது. அக்டோபர் புரட்சியால் உருவாக்கப்பட்ட முதல் பட்டாளி வர்க்க அரசின் புகழ்மிக்க வரலாற்றுப் போராட்டத்தை ஆதரிக்கிறது; ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டத்தின் புகழ்மிக்க வரலாற்றை ஆதரிக்கிறது. உலக முழுவதிலுமுள்ள உழைக்கும் மக்களிடையே சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் மதிப்பை பாதுகாக்கிறது. சுருங்கக் கூறின், அது மார்க்சிய-லெனினியக் கொள்கையையும், நடைமுறைகளையும் ஆதரிக்கிறது. சீனக் கம்யூனிஸ்டுகள் மட்டும் இதைச் செய்து கொண்டிருக்கவில்லை. மார்க்சிய—லெனினியத்தின் மீது பற்றுறுதி கொண்ட அனைத்து கம்யூனிஸ்டுகளும், அனைந்து உறுதிமிக்க புரட்சியாளர்களும், அனைத்து நேர்மையான உள்ளம் கொண்ட மக்களும் இதையே செய்து வருகிறார்கள்.

ஸ்டாலினை ஆதரிக்கும் வேளையில், நாங்கள் அவருடைய தவறுகளை ஆதரிக்கவில்லை. நீண்ட காலத்துக்கு முன்பே சீனக் கம்யூனிஸ்டுகள் ஸ்டாலினுடைய தவறுகளில் சிலவற்றின் நேரடி அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஒருசமயத்திலோ அல்லது மற்றொரு சமயத்திலோ சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் எழுந்த தவறான 'இடது' மற்றும் 'வலது' சந்தர்ப்பவாதப் பாதைகளில் சில, ஸ்டாலினுடைய ஒரு சில தவறுகளின் தாக்கத்தினால் எழுந்தவை என்பது அப்பாதைகள் தோன்றுவதற்கான சர்வதேச அடிப்படைகள் ஆகும். 1920-ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 30-ம் ஆண்டுகளிலும், 40-ம் ஆண்டுகளின் துவக்கத்திலும், மத்தியிலும் தோழர்கள் மாசேதுங், லியோசோஷி ஆகியோர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட, சீன மார்க்சிய-லெனினியவாதிகள், ஸ்டாலினுடைய தவறுகளின் செல்வாக்கை எதிர்த்தனர். அவர்கள் படிப்படியாக 'இடது' மற்றும் 'வலது' சந்தர்ப்பவாதப் பாதைகளைக் களைந்து இறுதியில் சீனப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்றனர்.

ஆனால் ஸ்டாலினால் முன் வைக்கப்பட்ட சில தவறான கருத்துக்கள் சீனத் தோழர்கள் சிலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கையாளப்பட்ட

தற்கான பொறுப்பினை சீனர்களாகிய நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எனவே, 'இடது' மற்றும் 'வலது' சந்தர்ப்பவாதத்திற்கெதிரான தனது போராட்டத்தில் எங்களது கட்சி தவறிழைத்த தனது சொந்த தோழர்களைத்தான் விமர்சித்ததே தவிர ஒருபோதும் ஸ்டாலின் மீது பழியைப் போடவில்லை. தவறையும், சரியையும் பிரித்துப் பார்ப்பதும், தகுந்த படிப்பினைகளைக் கற்றுக் கொள்வதும், புரட்சிகர இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வதும்தான் எங்கள் விமர்சனத்தின் நோக்கமாக இருந்தது. நாங்கள், தவறிழைத்த தோழர்களைத் தங்கள் தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் என்று மட்டும்தான் கேட்டுக் கொண்டோம். அவர்கள் அவ்வாறு செய்யத் தவறினால் அவர்கள் தங்கள் ஒளிவுமறைவான, சீர்குலைவு நடவடிக்கைகளுக்காக ரகசிய குழுக்களை கட்டியமைக்கவில்லையெனில் தங்கள் சொந்த நடைமுறை அனுபவத்தால் படிப்படியாக கற்றுக் கொள்ளும்வரை காத்திருந்தோம். எங்கள் முறையே உட்கட்சி விமர்சனம் மற்றும் சுய விமர்சனத்தின் சரியான முறையாகும். நாங்கள் அய்க்கியத்திற்கான விருப்பத்திலிருந்து தொடங்கி விமர்சனம் மற்றும்போராட்டங்களின் வழியாக ஒரு புதிய அடிப்படையிலான ஒரு புதிய அய்க்கியத்தை வந்தடைந்தோம். இவ்வாறு நல்ல விளைவுகள் பெறப்பட்டன. இந்த முரண்பாடுகளுக்கிடையிலான மக்கள் முரண்பாடுகளே, எதிரிகளுக்கும் நமக்கும் உள்ள முரண்பாடுகள் அல்ல என்று நாங்கள் கருதினோம். எனவே மேற்கூறிய முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாங்கள் கூறினோம்.

தோழர் குருச்சேவும் பிற ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசிலிருந்து ஸ்டாலினைப் பற்றி எத்தகைய மனப்பான்மையைப் பெற்றிருக்கிறார்கள்?

அவர்கள் ஸ்டாலின் வாழ்க்கையைப்பற்றியும், பணிகளைப் பற்றியும் ஒட்டு மொத்த வரலாற்று ரீதியான மற்றும் விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வினைச் செய்யாமல் சரி, தவறுகளை வேறுபடுத்திப் பார்க்காமல் அவரை முழுவதுமாக மறுதலித்துள்ளார்கள்; அவர்கள் ஸ்டாலினை ஒரு தோழராக மதிக்கவில்லை, மாறாக ஒரு எதிரியாகப் பார்க்கிறார்கள்.

அனுபவங்களைத் தொகுப்பதற்கு அவர்கள் விமர்சன, சுய விமர்சன முறையைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாக அனைத்து தவறுகளுக்கும் ஸ்டாலின் மீதுகுற்றம் சாட்டினார்கள். அல்லது தாங்கள் ஒருதலைப் பட்சமாகக் கண்டுபிடித்த 'தவறுகளுக்கு' ஸ்டாலினைக் காரணமாக குறிப்பிட்டார்கள்.

அவர்கள் உண்மைகளையோ, ஆதாரப்பூர்வமானவற்றையோ முன் வைக்கவில்லை. மாறாக, ஸ்டாலினுக்கு எதிராக மக்கள் மனதை நச்சுப்

படுத்தும் பொருட்டு அவர் மீது கீழ்த்தரமான, தனிப்பட்ட தாக்குதல் களைத் தொடுத்தார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு 'கொலைகாரன்' என்றும் ''ஒரு குற்ற வாளி' (criminal) என்றும் ஒரு கொள்ளைக்காரன்''[1] என்றும் ஒரு ''சூதாடி'' என்றும் ''பயங்கர இவான் போன்ற ஒரு கொடுங்கோலன்'' என்றும் ''ரசிய வரலாற்றிலேயே மிகப் பெரிய சர்வாதிகாரி''என்றும் ஒரு ''மடையன்''[2] என்றும் ஒரு ''முட்டாள்''[3] என்றும் இன்ன பிற சொற் களால் அவதூறு செய்தார். இத்தகைய அசிங்கமான, அவக்கேடான, வன்மம் மிக்க வார்த்தைகளை நாங்கள் சுட்டிக்காட்ட நிர்ப்பந்திக்கப்பட் டிருக்கும் அதே சமயம், இது எங்கள் தாளையும், பேனாவையும் அசிங் கப்படுத்தி விடுமோ என்று நாங்கள் அஞ்சுகிறோம். குருச்சேவ், ஸ்டா லினை ''ரசிய வரலாற்றிலேயே மிகப் பெரிய சர்வாதிகாரி'' என்று அவ்தூறு செய்துள்ளார். அப்படியானால் ரசிய மக்கள் முப்பதாண்டு காலம் ''ரசிய வரலாற்றிலேயே மிகப் பெரிய சர்வாதிகாரியின்'' ''கொடுங்கோன்மையின்'' கீழ் வாழ்ந்தார்கள், சோசலிச அமைப்பு முறையின் கீழ் அல்ல என்று இது பொருள்படவில்லையா? மாபெரும் ரசிய மக்களும் உலக முழுவதுமுள்ள புரட்சிகர மக்களும் இந்தப் பழிச் சொல்லை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ''பயங்கர இவான் போன்ற ஒரு கொடுங் கோலன்'' என்று அவதூறு செய்துள்ளார். இது மாபெரும் ரசிய கம்யூ னிஸ்ட் கட்சியும், மாபெரும் ரசிய மக்களும் உலக முழுவதுமுள்ள மக்களுக்கு முப்பதாண்டு காலமாக வழங்கி வந்த அனுபவம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அனுபவமல்ல மாறாக ஒரு நிலபிரபுத்துவக் ''கொடுங்கோலன்'' ஆட்சியில் பெற்ற அனுபவம் என்று பொருள்பட வில்லையா? மாபெரும் ரசிய மக்களும், ரசிய கம்யூனிஸ்டுகளும் உலக முழுவதுமுள்ள மார்க்சிய—லெனினியர்களும் இந்தப் பழிச் சொல்லை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு 'கொள்ளைக்காரன்' என்று அவதூறு செய்துள்ளார். இது உலகின் முதலாவது சோவியத் அரசு ஒரு நீண்டகால அளவுக்கு ஒரு ''கொள்ளைக்காரனால்'' தலைமை தாங்கப் பட்டு வந்தது என்று பொருள்படவில்லையா? மாபெரும் ரசிய மக்களும்

1. என். எஸ். குருச்சேவ், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதி களுடன் உரையாடல் அக்டோபர் 22, 1961.

2. என். எஸ். குருச்சேவ், சோவியத் அரசாங்கத்தால் 1962-ல் கொடுக்கப்பட்ட மே தின வரவேற்பில் ஆற்றிய உரை.

3. என். எஸ் குருச்சேவ், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகளுடன் உரையாடல், அக்டோபர் 22, 1961.

உலக முழுவதுமுள்ள புரட்சிகர மக்களும் இந்தப் பழிச்சொல்லை மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு ''மடையன்'' என்று அவதூறு செய்துள்ளார். வீரமிக்க புரட்சிகரப் போராட்டங்களை நடத்தியுள்ள ரசிய கம்யூனிஸ்ட் கட்சி கடந்த பல பத்தாண்டுகளாக ஒரு ''மடையனை'' தனது தலைவராகக் கொண்டிருந்தது என்று இதனால் பொருள் படவில்லையா? ரசிய கம்யூனிஸ்டுகளும் உலகமுழுவதிலுமுள்ள மார்க்சிய-லெனினியர்களும் இந்த அவதூறை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு ''முட்டாள்'' என்று அவதூறு செய்துள்ளார். இது பாசிச எதிர்ப்பு யுத்தத்தில் வெற்றியீட்டிய மாபெரும் ரசிய இராணுவம் ஒரு ''முட்டாளைத்'' தனது தலைமைத் தளபதியாகக் கொண்டிருந்தது என்று பொருள்படவில்லையா? புகழ்பெற்ற ரசிய கமாண்டர்களும், படை வீரர்களும், உலகின் பாசிச எதிர்ப்பு வீரர்கள் அனைவரும் இந்த அவதூறை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு ''கொலைகாரன்'' என்று அவதூறு செய்துள்ளார். இது சர்வதேச கம்யூனிச இயக்கம் ஒரு ''கொலைகாரனை'' பல பத்தாண்டுகளுக்கு தனது ஆசானாகக் கொண்டிருந்தது என்று பொருள்படவில்லையா? ரசிய கம்யூனிஸ்டுகள் உட்பட உலக முழுவதுமுள்ள கம்யூனிஸ்டுகள் அனைவரும் இந்த அவதூறை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு ''சூதாடி'' என்று அவதூறு செய்துள்ளார். இது புரட்சிகர மக்கள் ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும், எதிர்ப்புரட்சிக்கெதிராகவும் நடந்த போராட்டங்களில் ஒரு ''சூதாடியை'' முன்னணியாளனாகக் கொண்டிருந்தார்கள் என்று பொருள்படவில்லையா? ரசிய மக்கள் உட்பட உலகின் அனைத்து புரட்சிகர மக்களும் இந்த அவதூறை முற்றிலுமாக மறுக்கிறார்கள்.

ஸ்டாலின் மீதான குருச்சேவின் இந்த அவதூறு மாபெரும் ரசிய மக்களை ஒட்டு மொத்தமாக அவமதிப்பதாகும்; ரசிய கம்யூனிஸ்ட் கட்சியை ஒட்டு மொத்தமாக அவமதிப்பதாகும்; ரசிய இராணுவத்திற்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும், சோசலிச அமைப்புமுறைக்கும், சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும், உலக முழுவதிலுமுள்ள புரட்சிகர மக்களுக்கும், மார்க்சிய-லெனினியத்துக்கும் ஒட்டுமொத்தமான அவமதிப்பாகும்.

இப்போது அழுது புலம்பிக் கொண்டு மேசையைக் குத்தி தனது உச்சஸ்தாயியில் ஸ்டாலின் மீது அவதூறு பொழிந்து கூப்பாடு போடும்

குருச்சேவ், ஸ்டாலின் காலத்தில் அரசு மற்றும் கட்சியின் தலைமையில் அங்கம் வகித்தாரே. அப்படியானால் அவர் தனக்கு என்ன தகுதியை வழங்கிக்கொள்கிறார், ஒரு ''கொலைகாரனின்'' அல்லது ''கொள்ளைக்காரனின்'' கூட்டாளி என்ற தகுதியையா? அல்லது ''மடையன்'' அல்லது ''முட்டாள்'' என்ற அதே தகுதியையா?

ஸ்டாலின்மீதான குருச்சேவின் இத்தகைய அவதூறுகளுக்கும், ஏகாதிபத்தியவாதிகள், பல்வேறு நாடுகளில் உள்ள எதிர்ப்புரட்சியாளர்கள், கம்யூனிச கொள்கையைவிட்டு ஓடிப்போனவர்கள் ஆகியோருடைய அவதூறுகளுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? ஸ்டாலின் மீது ஏன் இத்தகைய கண்மூடித்தனமான வெறுப்பு? நீங்கள் ஏன் எதிரியை தாக்குவதைவிட மூர்க்கத்தனமாக அவரைத் தாக்குகிறீர்கள்?

ஸ்டாலினை அவதூறு செய்வதன் மூலம் குருச்சேவ் உண்மையிலேயே சோவியத் அமைப்பு முறையையும் அரசையும் காட்டுத்தனமாக தூற்றுகிறார். இந்த விசயத்தில் அவரது வார்த்தைகள் எந்த வகையிலும் பலவீனமானவையல்ல, மாறாக காவுட்ஸ்கி, டிராட்ஸ்கி, டிட்டோ, ஜிலாஸ் போன்ற ஓடுகாலிகளுடையதைக் காட்டிலும் உண்மையிலேயே கடுமையானவையாக இருக்கின்றன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் கீழ்க்கண்ட பகுதியை மேற்கோள் காட்டி மக்கள் குருச்சேவைக் கேட்க வேண்டும்: மாபெரும் லெனினுடைய கட்சியைப் பற்றி, சோசலிசத்தின் தாயகத்தைப் பற்றி, ஒரு சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுவதில் உலகில் முதலாவதாக இருந்த மக்களைப் பற்றி, சர்வதேச ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் உள்நாட்டு எதிர்ப்புரட்சிக்கு எதிராகவும் நடந்த போராட்டங்களில் அதன் மாபெரும் சாதனைகளை உயர்த்திப்பிடித்த மக்களைப் பற்றி, கம்யூனிசத்தை கட்டமைக்கும் முயற்சியில் வீரசாகச அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டும் அர்ப்பணிப்பைக் காட்டிக் கொண்டும் இருக்கின்ற மக்களைப் பற்றி, உலக உழைக்கும் மக்களுக்கான தங்களின் சர்வதேசக் கடமையை நம்பிக்கையுடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற மக்களைப் பற்றி எப்படி அவர்கள் இவ்வாறு சொல்ல முடியும்?''

'அவதூறின் அரசியல் முக்கியத்துவம்' என்ற கட்டுரையில் லெனின் கூறினார், ''அரசியலில் அவதூறு பல சமயங்களில் சித்தாந்த ஓட்டாண்டித்தனத்தையும், நிர்க்கதியையும், பேடித்தனத்தையும், அவதூறு கூறுபவனின் எரிச்சலூட்டும் பேடித்தனத்தையும் மூடிமறைத்து விடுகிறது'' ஸ்டாலினுடைய ஆவியினால் இடையறாது அலைக்கழிக்கப்படும் உணர்வைக் கொண்டிருக்கிற, ஸ்டாலினை அவமதிப்பதன் மூலம் தங்க

ளது கொள்கை ஓட்டாண்டித்தனத்தையும், எரிச்சல்தரும் பேடித்தனத்தை யும் நிர்க்கதியான நிலையையும் மூடி மறைத்துக் கொள்ள முயற்சிக்கிற ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு இது பொருந்தாதா?

ரசிய மக்களில் மிகப் பெரும்பான்மையினர் ஸ்டாலினை இவ்வாறு அவமதிப்பதை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் மேலும் மேலும் ஸ்டாலி னுடைய நினைவைப் போற்றுகிறார்கள். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மக்களிடமிருந்து தங்களை மிக மோசமாக தனிமைப் படுத்திக் கொண்டு விட்டார்கள். அவர்கள், தாங்கள் ஸ்டாலினுடைய அலைக்கழிக்கிற ஆவியினால் பயமுறுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக உணருகிறார்கள். உண்மையில் அது ஸ்டாலினை முழுவதுமாக மறுக் கும் செயல் மீது பெரும் அதிருப்தி கொண்டுள்ள பரந்துபட்ட மக்களின் பயமுறுத்தலாக இருக்கிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது பேராயத்தில் முன்வைக்கப்பட்ட, ஸ்டாலினை முழுவதுமாக மறுக்கும் ரகசிய அறிக்கையை இதுவரை ரசிய மக்களும் சோசலிச முகாமிலுள்ள பிற மக்களும் தெரிந்து கொள்வதற்காக வெளியிடும் துணிவு இல்லை. ஏனெனில் அது உண்மையின் வெளிச்சத்தை தாங்கமுடியாத, மக்களைத் தீவிரமாக அந்நியப்படுத்திவிடக் கூடிய அறிக்கையாகும்.

சாத்தியப்பட்ட ஒவ்வொரு வழியிலும் ஸ்டாலினை இழிவுபடுத்தும் அதே வேளையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அய்சனோவர், கென்னடி மற்றும் இவர்களைப் போன்றவர்களை ''நம்பிக்கையுடனும் மரியாதையுடனும்''[1] போற்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதா கும். அவர்கள் ஸ்டாலினை ''பயங்கர இவானைப் போன்ற ஒரு கொடுங்கோலன்'' என்றும் ''ரசிய வரலாற்றிலேயே மிகப் பெரிய சர்வாதிகாரி'' என்றும் இழிவுபடுத்துகிறார்கள். ஆனால் அய்சனோவரை யும், கென்னடியையும் ''அமெரிக்க மக்களின் அறுதிப்பெரும்பான்மை ஆதரவைப் பெற்றவர்கள்''[2] என்று பாராட்டுகிறார்கள். அவர்கள் ஸ்டாலினை ஒரு ''மடையன்'' என்று இழிவுபடுத்துகிறார்கள். ஆனால் அய்சனோவரையும் கென்னடியையும் ''விவேகமானவர்கள்'' என்று புகழ் கிறார்கள். ஒருபுறம், ஒரு மாபெரும் மார்க்சிய-லெனினியவாதியை, ஒரு மாபெரும் பாட்டாளி வர்க்க புரட்சியாளனை, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒரு மாபெரும் தலைவனை, அவர்கள் கீழ்த்தரமான முறையில் தாக்குகிறார்கள். மறுபுறம் ஏகாதிபத்தியத்தின் தலைவர்

---

1. என். எஸ். குருச்சேவ், ஜெ. எப். கென்னடிக்கு பதில் கடிதம், அக்டோபர் 28, 1962.

2. என். எஸ். குருச்சேவ், பிராவ்தா, இஸ்பெஸ்தியா பத்திரிகை களின் தலைமை ஆசிரியர்களின் கேள்விகளுக்கு பிராவ்தாவில் அளிக்கப்பட்ட பதில்கள், ஜூன் 15, 1963.

களை வானளாவப் புகழ்கிறார்கள். இந்த குறிப்பிடத்தக்க சம்பவங்களுக்கிடையிலான உறவு, மார்க்சிய-லெனினியத்திற்கு துரோகமிழைத்ததன் தவிர்க்க முடியாத பின்விளைவாகத் தோன்றியது என்பதன்றி, தற்செயலாக நிகழ்ந்தது என்று கருத ஏதேனும் வாய்ப்பு உண்டா?

குருச்சேவின் நினைவு குறுகியதாக இல்லாவிட்டால், அவர் 1937 ஜனவரியில் மாஸ்கோவில் நடந்த ஒரு மக்கள் அணிவகுப்பை நினைத்து பார்க்கட்டும். அந்த அணிவகுப்பில் ஸ்டாலினைத் தாக்கியவர்களை குருச்சேவ் மிகச் சரியாகவே கண்டனம் செய்து கீழ்கண்டவாறு பேசினார்; ''தோழர் ஸ்டாலினுக்கு எதிராகக் கரம் உயர்த்துபவர்கள் நம் அனைவருக்கும் எதிராக உயர்த்துபவர்கள், உழைக்கும் வர்க்கத்துக்கும் மக்களுக்கும் எதிராக கரம் உயர்த்துபவர்கள். தோழர் ஸ்டாலினுக்கு எதிராக கரம் உயர்த்துவதன் மூலம் அவர்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரது போதனைகளுக்கு எதிராகக் கரம் உயர்த்துகிறார்கள்!'' குருச்சேவ் தானே ஸ்டாலினை ''மாபெரும் தோழர் லெனின் அவர்களின் நெருங்கிய நண்பர், போராட்டத் தோழன்''[1] என்றும் ஒரு ''மாபெரும் மேதை, ஆசான். மனிதகுலத்தின் தலைவர்''[2] என்றும்''எப்பொழுதும் வெற்றியீட்டும் மாபெரும்இராணுவத்தளபதி''[3] என்றும் ''மக்களின் உண்மையான நண்பன்''[4] என்றும் தனது ''சொந்த தந்தை''[5] என்றும் திரும்பத் திரும்ப பலவிதமாக புகழ்ந்துள்ளார்.

ஸ்டாலின் உயிரோடு இருந்தபோது குருச்சேவ் கூறிய கருத்துக்களையும் ஸ்டாலின் இறந்த பிறகு குருச்சேவ் கூறிய கருத்துக்களையும் ஒருவர் ஒப்பிட்டுப் பார்த்தால் ஸ்டாலினைப் பற்றிய மதிப்பீட்டில் 180

---

1. என். எஸ். குருச்சேவ், ''ஸ்டாலினும் சோவியத் யூனியன் மக்களின் மாபெரும் நட்புறவும்'' பிராவ்தா, டிசம்பர் 21 1939.

2. என். எஸ் குருச்சேவ்,ரசிய கம்யூனிஸ்ட் கட்சி(போல்ஷ்விக்)யின் 18 வது காங்கிரசில் ஆற்றிய உரை,பிராவ்தா, மார்ச் 15, 1939.

3. என். எஸ். குருச்சேவ் மற்றும் பிறர், சோவியத் செம்படையின் அனைத்து வீரர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கு எழுதிய கடிதம், பிராவ்தா. மே 13, 1945.

4. என். எஸ். குருச்சேவ், ''ஸ்டாலினும் சோவியத் யூனியன் மக்களின் மாபெரும் நட்புறவும்'' பிராவ்தா, டிசம்பர் 21, 1939.

5. என். எஸ். குருச்சேவ், ''மக்களிடையே ஸ்டாலினிய நட்புறவு-நமது தாயகத்தின் வெல்ல முடியாத தன்மைக்கு உத்தரவாதம்'' பிராவ்தா, டிசம்பர் 21, 1949.

டிகிரி தலைகீழாக அவர் மாறியிருப்பதை ஒருவர் காணாமலிருக்க முடியாது.

குருச்சேவ் ஞாபகசக்தி மிகவும் குறைவாக இல்லாதிருந்தால் அவர் நினைவுபடுத்திப் பார்க்கட்டும். ஸ்டாலின் தலைமைக் காலத்தில் எதிர்ப்புரட்சியாளர்களை நசுக்குவதற்கு நடைமுறையிலிருந்த கொள்கையை கடைப்பிடிப்பதிலும், ஆதரிப்பதிலும் குறிப்பாக குருச்சேவ் தானே மிகுந்த சுறுசுறுப்புடன் செயல்பட்டார்.

1937 ஜூன் 6-ம் நாள் மாஸ்கோ பிராந்தியத்தின் ஐந்தாவது கட்சி மாநாட்டில் குருச்சேவ் பிரகடனம் செய்தார்: ''நமது கட்சி, துரோகிகளையும் காட்டிக்கொடுக்கும் கும்பலையும் ஈவு இரக்கமின்றி நசுக்கும். டிராட்ஸ்கிய வலது கழிச்சடைகள் அனைத்தையும் துடைத்தெறியும்......இதற்கான உத்தரவாதம் நமது மத்திய கமிட்டியின் அசைக்க முடியாத தலைமையாகும்; நமது தலைவர் தோழர் ஸ்டாலின் அவர்களின் அசைக்க முடியாத தலைமையாகும். நாம் எதிரிகளை முழுவதுமாக கடைசி மனிதன்வரை அழித்தொழித்து அவர்களுடைய சாம்பலை காற்றில் தூவிவிடுவோம்.''

1938-ம் ஆண்டு ஜூன் 8-ம் தேதி கீவ் பிராந்தியத்தின் நான்காவது கட்சி மாநாட்டில் குருச்சேவ் அறிவித்தார்:

''யாகிர்கள், பலிட்ஸ்கியர்கள், லியுப்செங்கியர்கள், ஜாதோனஸ்கியர்கள் மற்றும் பிற கழிசடைகளும் போலந்து நில உடமையாளர்களை உக்ரெய்னுக்குள் கொண்டுவர விரும்பினர். ஜெர்மன் பாசிஸ்ட்டுகளையும், நிலப் பிரபுக்களையும், முதலாளிகளையும் இங்கே கொண்டுவர விரும்பின. கணிசமான எண்ணிக்கையில் எதிரிகளை நாம் ஒழித்துக் கட்டியுள்ளோம். ஆயினும் இன்னும் எதிரிகள் அனைவரையும் ஒழித்துக்கட்டவில்லை, எனவே நாம் விழிப்புடன் இருப்பது அவசியம். முதலாளித்துவ முற்றுகை இருக்கும்வரை உளவாளிகளும், அழிவு வேலைக்காரர்களும் நமது நாட்டுக்குள் திருட்டுத்தனமாக அனுப்பப்படுவார்கள் என்ற தோழர் ஸ்டாலினுடைய வார்த்தைகளை நாம் நெஞ்சில் உறுதியாக நிறுத்திக்கொள்ளவேண்டும்.

ஸ்டாலின் காலத்தில் கட்சி மற்றும் அரசின் தலைமையில் இருந்த குருச்சேவ், எதிர்ப்புரட்சியாளர்களை நசுக்கும் கொள்கையை ஆதரித்து உறுதியாக நிறைவேற்றிய குருச்சேவ், அந்தக் காலத்தில் நடைபெற்ற எல்லாவற்றையும் ஏன் மறுத்துரைக்க வேண்டும்? தன்னை மட்டும் முற்ற முழுக்க தூய்மையாக்கி காட்டிக்கொண்டு எல்லாத் தவறுகளுக்கும் ஸ்டாலின் மீது மட்டும் ஏன் பழியைச் சுமத்த வேண்டும்?

ஸ்டாலின் தவறான ஒன்றைச் செய்தபோது, அவர் தன்னைத் தானே விமர்சித்துக் கொள்ளும் தகுதியுடையவராக இருந்தார். உதாரணமாக, சீனப் புரட்சிக்கு வழிகாட்டும் வகையில் சில தவறான அறிவுரைகளை அவர் வழங்கியிருந்தார். சீனப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு அவர் தனது தவறை ஒப்புக்கொண்டார். 1939-ல் நடந்த ரசிய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்)யின் 18-வது காங்கிரசில் அவர் முன் வைத்த அறிக்கையில் கட்சி அணிகளை தூய்மைப்படுத்தும் பணியில் தான் செய்த தவறுகளில் சிலவற்றை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் குருச்சேவ் என்ன செய்தார்? சுய விமர்சனம் என்றால் என்ன என்பதையே அவர் கொஞ்சமும் அறியமாட்டார். அவர் செய்தது எல்லாம் அனைத்துப் பழியையும் மற்றவர்கள் மீது போட்டுவிட்டு சாதனைகள் அனைத்துக்கும் தானே சொந்தம் கொண்டாடியதுதான்.

நவீன திருத்தல்வாதம் வெறிகொண்டு திரியும் சமயத்தில் குருச்சேவின் இந்த அசிங்கமான நடவடிக்கைகள் நடந்ததில் ஆச்சரியம் இல்லை. மார்க்சியத்துக்கு துரோகமிழைத்ததற்காக இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளை விமர்சித்து 1915-ல் லெனின் சொன்னதைப்போன்று; ''வார்த்தைகள் மறக்கப்பட்டுவிடும், கொள்கைகள் இழக்கப்பட்டுவிடும், தத்துவங்கள் தூக்கியெறியப்பட்டுவிடும். அனைத்து தீர்மானங்களும் முறைப்படியான வாக்குறுதிகளும் கைவிடப்பட்டுவிடும். இந்தக் காலத்தில் இது ஆச்சரியமளிப்பதாகவே இல்லை'' [1]

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை ஸ்டாலினை முழுமையாக மறுதலித்ததின் மிகக் கடுமையான பின்விளைவுகளை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்குப் பிறகு நடந்த தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் முழுமையாகக் காட்டுகின்றன.

அது ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அனைத்து நாடுகளின் பிற்போக்காளர்களுக்கும் மிதமிஞ்சி வரவேற்கத்தக்க ரசிய எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பு தோட்டாக்களை வழங்கியுள்ளது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்குப் பிறகு வெகு குறுகியகாலத்திலேயே குருச்சேவின், ஸ்டாலின்—எதிர்ப்பு ரகசிய அறிக்கையை ரசிய நாட்டிற்கும் கம்யூனிசத்திற்கும் எதிராக ஒரு உலகு தழுவிய பேரலையை உசுப்பிவிட ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்திக் கொண்டார்கள். ஏகாதிபத்தியவாதிகளும் அனைத்து நாடுகளின் பிற்போக்காளர்களும், டிட்டோ கும்பலும்,

1. *வி. இ. லெனின் ''ஏகாதிபத்தியமும் உலகப் பொருளதாரமும்'' என்ற என். புகாரினுடைய பிரசுரத்திற்கான முன்னுரை, தொகுப்பு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, முன்னேற்ற பதிப்பகம், மாஸ்கோ 1964, தொகுதி 22, பக்கம் 104.*

பல்வேறு ரகமான சந்தர்ப்பவாதிகளும் ரசிய நாட்டை தாக்குவதற்கும், சோசலிச முகாமைத் தாக்குவதற்கும், கம்யூனிஸ்ட் கட்சிகளைத் தாக்குவதற்கும் இந்த வாய்ப்பை தாவிப்பிடித்துக் கொண்டார்கள்; இவ்வாறு பல சகோதரக் கட்சிகளும், நாடுகளும் கடும் சங்கடங்களில் தள்ளப்பட்டன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் ஸ்டாலினுக்கு எதிராக செய்யப்பட்ட வெறித்தனமான பிரச்சாரத்தினால் நீண்ட காலமாக அரசியல் சவங்களாகக் கிடந்த டிராட்ஸ்கியவாதிகள் மீண்டும் உயிர்பெற்று டிராட்ஸ்கிக்கு ''புனர்வாழ்வு'' கொடுக்கக் கூக்குரலிடுகின்றனர். 1961 நவம்பரில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்தின் முடிவில் சொல்லிக் கொள்ளப்படும் நான்காவது அகிலத்தின் சர்வதேச செயலகம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்திற்கும் அதன் புதிய மத்திய கமிட்டிக்கும் எழுதிய கடிதத்தில் ஸ்டாலினால் கொலை செய்யப்பட்டவர்களை கௌரவித்து ஒரு நினைவு சின்னம் எழுப்பப்படும் என்று 1937-ல் டிராட்ஸ்கி சொன்னார் என்று குறிப்பிட்டிருந்தது. அது மேலும் தொடர்ந்து ''இன்று இந்த தீர்க்க தரிசனம் உண்மையாகியிருக்கிறது. உங்களது பேராயத்தின் முன்பு உங்கள் கட்சியின் முதல் செயலாளர் அந்த நினைவுச் சின்னத்தை நிறுவுவதாக உறுதியளித்துள்ளார்'' என்றும் குறிப்பிட்டது. இந்தக் கடிதத்தில், ஸ்டாலினால் பலி கொள்ளப்பட்டவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் நிறுவப்படும் நினைவுச் சின்னத்தின் மீது டிராட்ஸ்கியினுடைய பெயர் ''பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும்'' என்று குறிப்பாகவே கோரப்பட்டுள்ளது. டிராட்ஸ்கியவாதிகள் தங்கள் மகிழ்ச்சியை மறைக்கவில்லை. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையால் துவங்கப்பட்டுள்ள ஸ்டாலின் எதிர்ப்புப் பிரச்சாரம் ''டிராட்ஸ்கியிசத்துக்கு கதவு திறந்து விட்டுள்ளது'' என்றும் ''டிராட்ஸ்கியத்தையும் அதன் நிறுவனமான நான்காவது அகிலத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்கு மாபெரும் உதவியைச் செய்திருக்கிறது'' என்றும் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், ஸ்டாலினை முழுவதுமாக மறுத்ததற்கு வெளியில் சொல்ல முடியாத உள்நோக்கம் இருக்கிறது.

ஸ்டாலின் 1953-ல் இறந்தார். மூன்றாண்டுகளுக்குப் பிறகு 20-வது பேராயத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அவரை மூர்க்கத்தனமாகத் தாக்கினார்கள். அவர் மறைந்து எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு 22-வது பேராயத்தில் மீண்டும் அதே போல் செய்தனர். அவரது பூத உடலை எடுத்து எரித்தனர். ஸ்டாலின் மீதான மூர்க்கத்தனமான தாக்குதலை திரும்பவும் தொடங்குவதன் மூலம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உலகெங்கிலுமுள்ள மக்கள் மத்தியிலும் ரசிய நாட்டிலுள்ள மக்கள் மத்தியிலும் அந்த மாபெரும் பாட்டாளிவர்க்க புரட்சியாளன் பெற்றுள்ள

அழிக்கமுடியாத செல்வாக்கினைத் துடைத்தெறிய முனைகிறார்கள். இதன் மூலம் திருத்தல்வாதப் பாதையை நடைமுறைப்படுத்துவதற்காக, ஸ்டாலின் பாதுகாத்து வளர்த்த மார்க்சிய—லெனினியத்தை மறுத்துவிட முனைகிறார்கள். அவர்களுடைய திருத்தல்வாதப் பாதை குறிப்பாக 20-வது பேராயத்தில் தொடங்கி 22-வது பேராயத்தில் முழுமையாக முறைப்படுத்தப்பட்டு விட்டது. ஏகாதிபத்தியம், யுத்தம் மற்றும் சமாதானம், பாட்டாளிவர்க்கப்புரட்சி, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், காலனி, அரைக் காலனி நாடுகளில் புரட்சி, பாட்டாளிவர்க்கக் கட்சி இன்ன பிற வற்றின் மீதான மார்க்சிய-லெனினியக் கொள்கைகளை அவர்கள் திருத்தியது ஸ்டாலினை அவர்கள் முழுவதுமாக மறுதலித்ததுடன் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருப்பதை நிகழ்ச்சிகள் மேலும் தெளிவாகக் காட்டுகின்றன.

''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற போர்வையில்தான் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை ஸ்டாலினை முழுவதுமாக மறுக்க முயற்சிக்கிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், தலைமை பற்றிய கொள்கைகளிலும், கட்சி வாழ்க்கையிலும் லெனினிய மரபுகளை மீட்பதற்காக ''தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தை'' தொடுக்கவில்லை. மாறாக அவர்கள் தலைவர்கள், கட்சி, வர்க்கம் மற்றும் மக்களுக்கிடையேயான பரஸ்பர உறவுகள் பற்றிய லெனினிய போதனைகளை மீறுகிறார்கள், கட்சியில் ஜனநாயக மத்தியத்துவக் கொள்கைகளுக்கு எதிராக செயல்படுகிறார்கள்.

பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிகரக் கட்சி புரட்சிகரப் போராட்டத்தில் பாட்டாளிவர்க்கத்தின் தலைமையகமாக உண்மையிலேயே பணியாற்ற வேண்டுமெனில், அது தலைவர்கள், கட்சி, வர்க்கம், மக்கள் ஆகியோருக்கிடையேயான பரஸ்பர உறவுகளைச் சரியாகக் கையாளவேண்டும். மேலும், ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று மார்க்சிய—லெனினியவாதிகள் வலியுறுத்தி வருகிறார்கள். அத்தகைய ஒரு கட்சி கிட்டத்தட்ட ஒரு ஸ்திரமான தலைமைக் கருக்குழுவை பெற்றிருக்க வேண்டும். அத்தலைமை மார்க்சிய—லெனினிய சர்வ வியாபக உண்மையை புரட்சியின் பருண்மையான நடைமுறையுடன் இணைப்பதில் சிறந்தவர்களாக விளங்கும் புடம் போட்ட தலைவர்களடங்கிய ஒரு குழுவை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைவர்கள் அவர்கள் உள்ளூர் கமிட்டியைச் சார்ந்தவர்களாயினும் சரி, மத்திய கமிட்டியைச் சார்ந்தவர்களா

யினும் சரி வர்க்கப் போராட்டம் மற்றும் புரட்சிகர வெகுஜன இயக்கங்களின் போக்கில் மக்களிடமிருந்து தோன்றுகிறார்கள். அவர்கள் மக்களிடம் எல்லையற்ற விசுவாசம் கொண்டவர்கள், மக்களுடன் நெருக்கமான உறவு வைத்திருப்பவர்கள், மக்களின் எண்ணங்களை சரியான முறையில் ஒருமுனைப்படுத்தி அவற்றை செயல்படுத்துவதில் வல்லவர்கள். அத்தகைய தலைவர்கள் பாட்டாளிவர்க்கத்தின் உண்மையான பிரதிநிதிகள், மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். அத்தகைய தலைவர்களைப் பெற்றிருப்பது ஒரு பாட்டாளிவர்க்கக் கட்சியின் அரசியல் முதிர்ச்சியின் அடையாளமாகும். பாட்டாளி வர்க்க இலட்சியத்தின் வெற்றிக்கான நம்பிக்கை இதில்தான் இருக்கிறது.

லெனின் மிகச் சரியாகச் சொன்னார்: ''வரலாற்றில் எந்த ஒரு வர்க்கமும் தனது அரசியல் தலைவர்களை—ஒரு இயக்கத்தைக் கட்டி அதற்கு தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லக்கூடிய புகழ்பெற்றுச் சிறந்த தனது பிரதிநிதிகளை—உருவாக்காமல் அரசியல் அதிகாரத்தை வென்றதில்லை.''[1] அவர் மேலும் சொன்னார்: ''அனுபவமிக்க பெரும் செல்வாக்கு பெற்ற கட்சித் தலைவர்களை பயிற்றுவிப்பது என்பது நீண்ட காலம் பிடிக்கக்கூடிய கடினமான பணியாகும். ஆனால் இதில்லாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற அதன் ''ஒன்றுபட்ட விருப்பம்''[2] என்பது ஒரு வெற்றுச் சொல்லாகவே இருக்கும்.

வரலாற்றில் மக்கள், தனிநபர் ஆகியோரது பாத்திரம் மற்றும் தலைவர்கள், கட்சி, வர்க்கம், மக்கள் ஆகியவற்றின் பரஸ்பர உறவு பற்றிய மார்க்சிய—லெனினிய போதனைகளை எப்போதும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பின்பற்றி வந்திருக்கிறது; கட்சியின் ஜனநாயக மத்தியத்துவத்தை உயர்த்திப்பிடித்திருக்கிறது. நாங்கள் எப்போதும் கூட்டுத் தலைமையை கடைப்பிடித்து வந்திருக்கிறோம். அதே சமயத்தில் தலைவர்களின் பாத்திரத்தை சிறுமைப்படுத்துவதை எதிர்க்கிறோம். தலைவர்களின் பாத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேவேளையில் தனி நபர்கள் நேர்மையற்ற முறையில் அளவுக்கதிகமாகப் புகழப்படுவதையும், அவர்களின் பாத்திரம் மிகைப்படுத்தப்படுவதையும் எதிர்க்கிறோம். 1949 லேயே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, தோழர் மாசேதுங்கின் ஆலோசனைப்படி, கட்சித் தலைவர்களின் பிறந்த நாட்களில் எந்த விதமான பொது விழாக்கள் எடுப்பதையும், இடங்கள், தெருக்கள், நிறு

---

1. *வி. இ. லெனின் ''நமது இயக்கத்தின் அவசரக் கடமைகள்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இண்டர் நேசனல் பப்ளிசர்ஸ், நியூயார்க், 1943, தொகுதி 2, பக் 13.*
2. *வி. இ. லெனின் ''ஜெர்மன் கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு கடிதம்'' தொகுப்பு நூல்கள், ரசியப் பதிப்பு எஸ். பி. பி. எல். மாஸ்கோ 1950, தொகுதி 32, பக்கம் 492.*

வனங்களுக்கு அவர்கள் பெயர் சூட்டப்படுவதையும், தடைசெய்யும் ஒரு முடிவை எடுத்துள்ளது.

இந்த முரண்பாடற்ற சரியான எங்களுடைய அணுகுமுறை, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையால் முன்வைக்கப்பட்ட ''தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்திலிருந்து'' அடிப்படையிலேயே மாறுபட்டதாகும்.

'தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தை' முன்வைக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களது நோக்கம் அவர்கள் கூறுவதைப் போல, ஜனநாயகத்தை வளர்ப்பதோ, கூட்டுத் தலைமையை நடைமுறைப்படுத்துவதோ தனிநபர் பாத்திரம் மிகைப்படுத்தப்படுவதை எதிர்ப்பதோ அல்ல. மாறாக அவர்களுக்கு வேறு உள்நோக்கங்கள் இருக்கின்றன. அவர்களின் 'தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தின்' உண்மையான சாராம்சம் என்ன?

ஒளிவுமறைவின்றிச் சொல்ல வேண்டுமானால் கீழ்க்கண்டவற்றைத் தவிர வேறொன்றுமில்லை:

1. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற பெயரில் கட்சியின் தலைவரான ஸ்டாலினை கட்சி அமைப்புக்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் எதிராக நிறுத்துவது.

2. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற பெயரில் பாட்டாளி வர்க்க கட்சியையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், சோசலிச அமைப்பு முறையையும் களங்கப்படுத்துவது.

3. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது''என்ற பெயரில் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வது, மார்க்சிய-லெனினியத்திற்கு விசுவாசமாக இருக்கும் புரட்சியாளர்களைத் தாக்குவது, அதன் மூலம் திரிபுவாத சூழ்ச்சியாளர்களுக்கு கட்சி மற்றும் அரசு தலைமையைக் கைப்பற்ற பாதையமைத்து தருவது.

4. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற பெயரில் தோழமைக் கட்சிகள் மற்றும் நாடுகளது உள்விவகாரங்களில் தலையிடுவது, அவற்றின் தலைமையைத் தமது வசதிக்கேற்ப கவிழ்க்க முயல்வது.

5. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற பெயரில் மார்க்சிய லெனினியத்தைப் பின்பற்றும் சகோதரக் கட்சிகளைத் தாக்குவது, சர்வதேச கம்யூனிச இயக்கத்தை பிளவுபடுத்துவது.

குருச்சேவினால் தொடுக்கப்பட்டுள்ள ''தனிநபர் வழிபாட்டுக்கெதிரான போராட்டமானது'' ஒரு வெறுக்கத்தக்க அரசியல் சதிச்செயலாகும்.

மார்க்ஸால் வர்ணிக்கப்பட்ட ஒருவரைப் போல் ''அவர் தன் இயல்பில் ஒரு சதிகாரர், அதே வேளையில் கோட்பாட்டாளன் என்ற முறையில் ஒரு அனாமதேயம்'' [1]

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம், ''தனிநபர் வழிபாட்டை நிராகரித்து அதன் பின் விளைவுகளை எதிர்த்து போராடும் வேளையில்'' அவர்கள் ''தகுதி வாய்ந்த பெருமைக்குரிய தலைவர்கள் மீது உயர்ந்த மதிப்பை வைத்திருப்பதாகவும்'' குறிப்பிடு கிறது. இதன் பொருள் என்ன? இதன் பொருள், ஸ்டாலினைக் காலில் போட்டு மிதிக்கும் வேளையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் குருச்சேவை வானளாவப் புகழ்கிறார்கள் என்பதாகும்.

அக்டோபர் புரட்சியின்போது இன்னும் ஒரு கம்யூனிஸ்ட்ஆகாமலும், உள்நாட்டுப் போரின்போது ஒரு கீழ்மட்ட அரசியல் பணியாளராகவும் இருந்த குருச்சேவை, அவர்கள் ''செயலூக்கத்துடன் செம்படையை உருவாக்கியவர்'' என்று வர்ணிக்கிறார்கள். [2]

ஸ்டாலின் கிராடு போர்க்களத்தில் ''குருச்சேவின் குரலே அடிக் கடி கேட்டது'' [3] என்றும், அவர் ''ஸ்டாலின் கிராடு வாசிகளின் ஆன் மாவாக'' [4] திகழ்ந்தார் என்றும் சொல்லி அவர்கள் சோவியத் தேச பக்த யுத்தத்தின் தீர்மானகரமான மாபெரும் வெற்றிக்கு முழுவதுமாகக் குருச்சேவ்தான் காரணம் என்று குறிப்பிடுகிறார்கள்.

ஏவுகணை மற்றும் அணு ஆயுத தளவாடங்களில் ஈட்டிய மாபெரும் சாதனைகளுக்கு குருச்சேவ்தான் காரணம் என்று கூறும் அவர்கள் குருச்சேவை ''விண்வெளித் தந்தை'' [5] என்று அழைக்கிறார்கள். ஆனால் அணு மற்றும் ஹைட்ரஜன் குண்டுகள் தயாரிப்பதில் ரசியா

---

1. *''எப். போல்டேக்கு மார்க்ஸ்'', காரல் மார்க்ஸ், பிரடெரிக் எங் கெல்ஸ் ஆகியோரின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், ஜெர் மன் பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1950, தொகுதி 2, பக் 438.*
2. *''மக்களுக்கான வாழ்க்கை'' ஜாரியா வோஸ்டோகா, டிசம் பர் 17, 1961.*
3. *''கட்சியால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்டது'' கிளர்ச்சியா ளன் எண் 2, 1963.*
4. *வி.அய். சுலிகோவ், சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் 20-வது ஆண்டு விழாவைக் குறிக்கும் பேரணியில் ஆற்றிய உரை, பிராவ்தா, ஜூன் 22, 1961.*
5. *ஜி. எஸ். டிடோவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்தில் ஆற்றிய உரை, அக்டோபர் 26, 1961.*

அடைந்த வெற்றிகள், ரசிய விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லு நர்கள் மற்றும் ரசிய மக்கள் ஸ்டாலின் தலைமையின் கீழ் சாதித்த மாபெரும் சாதனைகளாகும் என்பது எல்லோரும் அறிந்ததே. ஏவுகணை உற்பத்திக்கான அஸ்திவாரங்கள் ஸ்டாலின் காலத்தில் போடப்பட்டவை. இந்த முக்கிய வரலாற்று உண்மைகளை எப்படி அழிக்க முடியும்? எல்லாப் பெருமைகளும் குருச்சேவுக்கே எப்படி சேரும்?

லெனினியம் காலாவதியாகிவிட்டது என்று கூறும் குருச்சேவை, மார்க்சிய-லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளைத் திரித்துப் புரட்டிய குருச்சேவை அவர்கள் ''மார்க்சிய-லெனினியக் கொள்கையை ஆக்கபூர்வமாக வளர்த்துச் செழுமைப்படுத்திய புத்திக்கூர்மையுள்ள முன்மாதிரி'' [1] என்று புகழ்கிறார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் 'தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது' என்ற போர்வையில் செய்வது யாவும், லெனின் மிகச் சரியாகச் சொன்னதைப் போல ''சாதாரண விசயங்களைப் பற்றி மிகச் சதாரண கண்ணோட்டங்களைக் கொண்டிருந்த பழைய தலைவர்களுக்கு பதிலாக, இயற்கைக்கு அப்பாற்பட்டு முட்டாள்தனமாகவும் குழப்பமாகவும் பேசுகிற புதிய தலைவர்களை முன்வைக்கிற'' [2] செயலேயாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் மார்க்சிய-லெனினியத்தை பின்பற்றும் எங்கள் நிலைப்பாட்டின் மீது அவதூறு செய்கிறது. ''தனிநபர் வழிபாட்டு காலத்தில் திகழ்ந்துவந்த சித்தாந்தம் மற்றும் நெறிமுறைகள், தலைமைக்கான வடிவங்கள் மற்றும் முறைகள் ஆகிய, நடைமுறையில் இருந்தவற்றை பிற கட்சிகளின் மீது திணிக்க முயல்வதாக'' எங்கள் மீது அவதூறு கூறுகிறது. இந்தக் கூற்று ''தனி நபர் வழிபாட்டை எதிர்த்துப் போராடுவதன்'' முட்டாள்தனத்தை மீண்டும் அம்பலப்படுத்துகிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களின் கூற்றுப்படி அக்டோபர் புரட்சி ரசியாவில் முதலாளித்துவத்துக்கு முடிவுகட்டிய பிறகு அங்கு ஒரு ''தனிநபர் வழிபாட்டுக் காலம்'' தொடங்கியது. அந்தக் காலத்தின் ''சமூக அமைப்பு முறையும்'', ''சித்தாந்தம் மற்றும் நெறி முறைகளும்'' சோசலிசத்திற்கானவை அல்ல என்று தோன்றும். அந்தக் காலத்தில் ரசிய உழைக்கும் மக்கள் ஒரு ''கனத்த சுமையினால்''

1. *ஏ. என். கோசிஜின், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்தில் ஆற்றிய உரை, அக்டோபர் 21, 1961.*

2. *வி. இ. லெனின் ''இடதுசாரிக் கம்யூனிசம் ஒரு இளம்பருவக் கோளாறு'' தேர்வு நூல்கள். ஆங்கிலப் பதிப்பு, இண்டர் நேசனல் பப்ளிசர்ஸ், நியூயார்க், 1943. தொகுதி 10, பக் 82.*

அழுத்தப்பட்டுக் கிடந்தார்கள். அங்கே ''மக்களுடைய வாழ்க்கையை நச்சுப்படுத்திய நிச்சயமின்மையும், சந்தேகமும், அச்சம் நிறைந்த சூழலும்''[1] நிலவியது;இவை ரசிய சமுதாய வளர்ச்சியை தடைசெய்தன.

1963 ஜுலை 19-ல் நடந்த ரசிய-ஹங்கேரி நட்புறவு பேரணியில் குருச்சேவ் ஆற்றிய உரையில் ''ஸ்டாலின் ஒரு கோடாரியைக் கொண்டு தனது அதிகாரத்தை நிலைநிறுத்தினார்'' என்று கூறி ஸ்டாலினுடைய ''பயங்கர'' ஆட்சி பற்றி பேசினார். அந்தக் காலத்தின் சமூக நிலைமை களை கீழ்க்கண்டவாறு வர்ணித்தார். ''அந்தக் காலத்தில் வேலைக்குச் செல்லும் ஒரு மனிதன் அடிக்கடி, மீண்டும் வீட்டுக்குத் திரும்புவோமா, தனது மனைவியையும் குழந்தைகளையும் மீண்டும் காண்போமா என்பதைப் பற்றி நிச்சயமற்றிருந்தான்''.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் வர்ணிப்புப்படி ''தனி நபர் வழிபாட்டுக் காலத்தில்'' சமுதாயம், நிலப்பிரபுத்துவம் அல்லது முதலாளித்துவக் காலத்திலிருந்ததைவிட மிகவும் ''வெறுக்கத்தக்கதாக வும்'' ''காட்டுமிராண்டித்தனமானதாகவும்'' இருந்தது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் கூற்றுப்படி, அக்டோபர் புரட்சியின் விளைவாக நிறுவப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், சோசலிச சமூக அமைப்பு முறையும் உழைக்கும் மக்களின் மீதான ஒடுக்கு முறையை நீக்குவதற்கோ அல்லது ரசிய சமுதாயத்தின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கோ பல பத்தாண்டுகளாகத் தவறிவிட்டன. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது பேராயம் ''தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தை'' நிறைவேற்றிய பின்புதான் உழைக்கும் மக்களின் மீது இருந்த ''கனத்த சுமை'' அகற்றப்பட்டது, ''ரசிய சமுதாயத்தின் வளர்ச்சி'' திடீரென்று ''துரிதப்படுத்தப்பட்டது''[2]

குருச்சேவ் சொன்னார்: ''ஆ! ஸ்டாலின் மட்டும் பத்து வருடங் களுக்கு முன்பே செத்திருந்தால்!''[3] எல்லோருக்கும் தெரிந்தது போல் ஸ்டாலின் 1953-ல் இறந்தார். பத்து வருடங்களுக்கு முன்பு என்பது 1943 ஆக இருந்திருக்கும். அந்த ஆண்டுதான் ரசிய நாடு மாபெரும் தேச

1. அனைத்து கட்சி அமைப்புகளுக்கும் ரசியாவிலுள்ள அனைத்து கம்யூனிஸ்டுகளுக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம், ஜுலை 14, 1963.
2. மேற்கண்டதே.
3. என். எஸ். குருச்சேவ், மாஸ்கோவில் ரசிய-ஹங்கேரி நட்பு றவு பேரணியில் ஆற்றிய உரை, ஜுலை 19, 1963.

பக்த யுத்தத்தில் எதிர்த் தாக்குதலை தொடங்கியிருந்தது. அந்தக் காலத்தில் ஸ்டாலின் இறந்து போக வேண்டுமென்று விரும்பியது யார்? ஹிட்லர்!

சர்வதேச கம்யூனிச இயக்க வரலாற்றில் மார்க்சிய-லெனினியத்தின் எதிரிகள் பாட்டாளி வர்க்க தலைவர்களைக் கொடியவர்களாகக் காட்டுவதும் ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' போன்ற முழக்கங்களைப் பயன்புடுத்தி பாட்டாளிவர்க்க இலட்சியத்திற்கு குழிபறிப்பதும் புதிய விசயமல்ல. நீண்ட காலத்திற்கு முன்பே மக்கள் கண்டு கொண்ட ஒரு அசிங்கமான தந்திரமே இது.

முதலாவது அகிலத்தின் காலக்கட்டத்தில் சதிகாரன் பக்கூனின் மார்க்சை வசைபாட இத்தகைய மொழியைத்தான் பயன்படுத்தினான். முதலில் மார்க்சின் நம்பிக்கையைப் பெறுவதற்கு புழுவைப் போல நெளிந்து ''நான் உங்கள் சீடன்; அதற்காக நான் பெருமைப்படுகிறேன்''[1] என்று எழுதினான். பிறகு முதலாவது அகிலத்தின் தலைமையைக் கைப்பற்றுவதற்கான தனது சதியில் தோல்வியுற்ற அவன் மார்க்சை வசைபாடினான். ''ஒரு ஜெர்மானியனும், யூதனுமான அவன் அடியிலிருந்து முடிவரை ஒரு எதேச்சதிகாரி''[2] மற்றும் ஒரு ''சர்வாதிகாரி''[3] என்று சொன்னான்.

இரண்டாவது அகிலத்தின் காலக்கட்டத்தில் லெனினை வசைபாட ஓடுகாலி காவுத்ஸ்கி இதே மாதிரி மொழியைத் தான் பயன்படுத்தினான். ''ஒரு அரசாங்க மதத்தின் தரத்திற்கு மட்டுமல்ல, மாறாக ஒரு மத்தியக் கால அல்லது கிழக்கத்திய (மதத்தின்) மூடநம்பிக்கையின் தரத்திற்கு''[4] மார்க்சியத்தைக் குறுக்கி விட்ட ''ஏகக்கடவுள் கொள்கையினரின் கடவுள்''[5] என்று லெனினை பழித்துக் கூறினான்.

---

1. எம். ஏ. பக்கூனின் மார்க்சுக்கு எழுதிய கடிதம், டிசம்பர் 22, 1868 நியூ ஜெய்ட், எண் 1, 1900.
2. பிரான்ஸ் மெஹ்ரிங், காரல் மார்க்ஸ், அவரது வாழ்க்கையின் கதை, ஆங்கிலப்பதிப்பு, கோசி பிரிடு பப்ளிசர்ஸ், நியூயார்க் 1935 பக் 429
3. ''ஏ. பெபலுக்கு எங்கெல்ஸ், ஜூன் 20, 1873'' காரல் மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ் ஆகியோரின் தேர்வு நூல்கள், அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1951, தொகுதி 2, பக் 432.
4. காரல் காவுட்ஸ்கி, ''சமூக ஜனநாயகத்திற்கு எதிராக கம்யூனிசம்'' ஆங்கிலப் பதிப்பு ரேண்ட் ஸ்கூல் பிரஸ், நியூயார்க் 1946 பக் 54.
5. மேற்கண்டதில் பக் 29.

மூன்றாவது அகிலத்தின் காலக்கட்டத்தில் ஸ்டாலினை வசைபாட ஓடுகாலி டிராட்ஸ்கி இதே மாதிரி மொழியைத்தான் பயன்படுத்தினான். ஸ்டாலினை ஒரு ''கொடுங்கோலன்'' [1] என்றும் ''ஸ்டாலினிய அதிகார வர்க்கம் தலைவர்களுக்கு தெய்வீக குணாம்சங்களைச் சூட்டும் ஒரு இழிவான தலைவர் வழிபாட்டை உருவாக்கிவிட்டது'' [2] என்றும் கூறினான்.

நவீனத் திரிபுவாத டிட்டோ கும்பலும் ஸ்டாலினை வசைபாட இதே மொழியை பயன்படுத்துகிறது; ஸ்டாலின் ''முற்றமுழுக்க தனிநபர் அதிகாரத்தைக் கொண்ட ஒரு அமைப்பு முறையில்'' ''சர்வாதிகாரியாக'' [3] இருந்தார் என்று கூறுகிறது.

இவ்வாறு ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையினால் எழுப்பப்பட்டுள்ள ''தனிநபர் வழிபாட்டை எதிர்க்கும்'' போக்கு, பாட்டாளி வர்க்க தலைவர்களைத் தாக்கவும், பாட்டாளிவர்க்க புரட்சிகர இயக்கத்துக்கு குழிபறிக்கவும் பக்கூனின், காவுட்ஸ்கி, டிராட்ஸ்கி மற்றும் டிட்டோ போன்ற அனைவரும் பயன்படுத்தியதுதான் என்பது தெளிவாகிறது.

சந்தர்ப்பவாதிகள் சர்வதேச கம்யூனிச இயக்க வரலாற்றில், மார்க்ஸ், எங்கெல்ஸ் அல்லது லெனினை வசைபாடுவதன் மூலம் அவர்களை மறுத்தலிக்க முடியவில்லை. குருச்சேவினாலும் வசைபாடுவதன் மூலம் ஸ்டாலினை மறுதலிக்க முடியாது.

லெனின் சுட்டிக் காட்டியதைப் போல, உயர்ந்த பதவி, இழிவுபடுத்தலின் வெற்றியை உறுதிப்படுத்த முடியாது.

லெனின் அருங்காட்சியகத்திலிருந்து ஸ்டாலினுடைய உடலை அப்புறப்படுத்த குருச்சேவ் தனது உயர்ந்த பதவியைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. ஆனால் அவர் எவ்வளவுதான் முயன்றாலும் உலகெங்குமுள்ள மக்கள் மனதிலிருந்தும் ரசிய மக்களின் மனதிலிருந்தும் ஸ்டாலின்மீதான மாபெரும் பற்றுதலை நீக்குவதில் ஒருபோதும் வெற்றி பெற முடியாது.

1, லியோன் டிராட்ஸ்கி, ''ஸ்டாலின் மனிதனும் அவரது செல்வாக்கும் பற்றிய ஒரு மதிப்பீடு'' ஆங்கிலப் பதிப்பு, ஹார்ப்பர் அண்ட் பிரதர்ஸ், நியூயார்க் அண்ட் லண்டன் 1941, பக் 420

2. லியோன் டிராட்ஸ்கி, ''ஸ்டாலினிய அதிகார வர்க்கமும் கிரோவின் படுகொலையும்'' கிரோவ் படுகொலையைப் பற்றிய ஆங்கிலப் பதிப்பு, பயனீர் பதிப்பகம், நியூயார்க் 1956 பக் 17.

3. எட்வர்ட் கார்டெல்ஜ் ''அய்ந்து ஆண்டுகளுக்குப் பிறகு'' போர்பா, ஜூன் 28, 1953.

மார்க்சிய—லெனினியத்தை ஒரு வழியிலோ அல்லது இன்னொரு வழியிலோ திரித்துப் புரட்டுவதற்கு குருச்சேவ் தன்னுடைய உயர்ந்த பதவியைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் அவர் என்னதான் முயன்றாலும் உலகெங்குமுள்ள மார்க்சிய—லெனினியவாதிகளால் பாது காக்கப்பட்ட, ஸ்டாலினால் பாதுகாக்கப்பட்ட மார்க்சிய — லெனி னியத்தை தூக்கியெறிவதில் ஒருபோதும் வெற்றியடைய முடியாது.

நாங்கள் தோழர் குருச்சேவுக்கு அக்கறையுடன் ஒரு அறிவுரை கூற விருப்புகிறோம். நீங்கள் உங்கள் தவறுகளை உணர்ந்துகொண்டு தவ றான பாதையிலிருந்து மார்க்சிய—லெனினியப் பாதைக்கு திரும்பி வரு வீர்கள் என்று நம்புகிறோம்.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரது மாபெரும் புரட்சிகர போதனைகள் வாழ்க!

யூகோஸ்லாவியா சோசலிச நாடுதானா?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்றாவது விமர்சனம்

'மக்கள் தினசரி', 'செங்கொடி' பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்கள் (செப்டம்பர் 26, 1963)

யூகோஸ்லாவியா சோசலிச நாடுதானா?

இது யூகோஸ்லாவிய அரசின் தன்மை பற்றி அறிந்து கொள்வதற்கான கேள்வி மட்டுமல்ல. சோசலிச நாடுகள் கடைபிடிக்க வேண்டிய பாதை எது? அக்டோபர் புரட்சியின் பாதையை கடைப்பிடித்து, சோசலிச புரட்சியை இறுதிவரை கொண்டு சென்று நிறைவேற்றுவதா, அல்லது யூகோஸ்லாவியாவின் பாதையைக் கடைப்பிடித்து, முதலாளித்துவத்தை மீட்பதா? என்ற கேள்விகளும் இதில் அடங்கியுள்ளன. மேலும், இதில் அடங்கியுள்ள இன்னொரு கேள்வி: டிட்டோ கும்பலை எப்படி மதிப்பிடுவது? அது சகோதரக் கட்சிதானா? ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சக்திதானா? அல்லது சர்வதேச கம்யூனிச இயக்கத்திலிருந்து ஓடிப்போன ஓடுகாலியா, ஏகாதிபத்தியத்தின் அடிவருடியா?

இந்தப் பிரச்சினை குறித்து ஒருபுறம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கொண்டுள்ள கருத்துக்கும் மறுபுறம் நாமும் மற்றெல்லா மார்க்சிய-லெனினியவாதிகளும் கொண்டுள்ள கருத்துக்கும் இடையே அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன.

மார்க்சிய-லெனினியவாதிகள் அனைவரும் யூகோஸ்லாவியா சோசலிச நாடு அல்ல; யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் தலைமைக் கும்பல் மார்க்சிய-லெனினியத்திற்கும், யூகோஸ்லாவிய மக்களுக்கும் துரோகம் இழைத்து விட்டது. இந்தத் தலைவர்கள் சர்வ தேச கம்யூனிச இயக்கத்திலிருந்து ஓடிப்போன ஓடுகாலிகளும், ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளும் ஆவர் என்கின்றனர்.

இதற்கு மாறாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களோ யூகோஸ்லாவியா சோசலிச நாடுதான் என்கின்றனர். யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகம் மார்க்சிய—லெனினியத்தை அடிப்படையாகக் கொண்டதுதான், சகோதரக் கட்சி தான், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சக்திதான் என்கின்றனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தனது ஜூலை 14 தேதியிட்ட பகிரங்க கடிதத்தில் யூகோஸ்லாவியாவை ''சோசலிச நாடு'' என்றும் டிட்டோ கும்பலை ''அரசு என்னும் கப்பலின் சுக்கானை பிடித்திருக்கும்'' ''சகோதரக் கட்சி'' என்றும் பறை சாற்றியது.

சமீபத்தில் தோழர் குருச்சேவ் யூகோஸ்லாவியாவுக்குச் சென்று வந்தார். அங்கே அவர் ஆற்றிய உரைகள் பலவற்றிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் உண்மையான கண்ணோட்டம் முன்னிலும் தெளிவாக வெளிப்பட்டது; அவர்கள் இந்தப் பிரச்சினையில் இதுகாறும் போட்டு வந்த அற்ப சொற்ப வேடமும் அடியோடு கலைந்து விட்டது.

குருச்சேவின் கருத்துப்படி யூகோஸ்லாவியா ஒரு சோசலிச நாடு மட்டுமல்ல, ''முன்னேறிய''சோசலிச நாடும் ஆகும். அங்கே''சோசலிசம் பற்றி வம்பளப்பது'' கிடையாதாம். ''சோசலிச அமைப்பு உள்ளபடியே கட்டியெழுப்பபடுவதைக்'' காணலாமாம். யூகோஸ்லாவியாவின் வளர்ச்சி ''உலகளாவிய புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்துக்கு பருண்மையான பங்களிப்பு'' 1 ஆகுமாம். குருச்சேவ் இந்த பருண்மையான பங்களிப் பின் மீது பொறாமையுற்று, அவர்களோடு போட்டிபோட விரும்பு கிறார் போலும்.

குருச்சேவின் கருத்துப்படி ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் களும் டிட்டோ வகையறாக்களும் ''வர்க்கச் சகோதரர்கள்'', மட்டுமல்ல ''முன்னிற்கும் நோக்கங்களின் ஒற்றுமையில்... கட்டுண்ட சகோதரர்

1. என். எஸ். குருச்சேவ், 1963 ஆகஸ்ட் 30-ல் யூகோஸ்லாவியா வில் வெலெஞ்சி என்ற இடத்தில் நடந்த பேரணியில் பேசியது.

களும்'' ஆவர். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை டிட்டோ கும்பலின் ''உற்ற துணைவன்''[1] ஆகுமாம்

டிட்டோ கும்பலிடம் உண்மையான மார்க்சிய-லெனினியத்தைக் கண்டு கொண்டதாக குருச்சேவ் நம்புகிறார். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அதன் பகிரங்கக் கடிதத்தில்''ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்துக்கும்இடையே அடிப்படையான சித்தாந்தப் பிரச்சினைகள் பலவற்றிலும் இன்னமும் வேறுபாடுகள் உள்ளன'' என்று அறிவிப்பது வெறும் பாசாங்குதான். இப்போது டிட்டோ கும்பலைப் பார்த்து, ''நமது கருத்து ஒன்றே, நம்மை வழிநடத்துகிற கோட்பாடு ஒன்றே''[2] என்று குருச்சேவ் சொல்லிவிட்டார்; இருவருமே மார்க்சிய-லெனினிய அடிப்படை மீது நிற்கிறார்களாம்.

குருச்சேவ் 1960-ஆம் வருட அறிக்கையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டார்.

அறிக்கை கூறுவதாவது:

சர்வதேச சந்தர்ப்பவாதத்தின் யூகோஸ்லாவிய வகையை—ஒருமுகப்படுத்தப்பட்ட நவீன திரிபுவாத 'கோட்பாடுகளின்' இந்த வகையை — கம்யூனிஸ்ட் கட்சிகள் ஏகமனதாய் கண்டித்துள்ளன.

அறிக்கை கூறுவதாவது:

மார்க்சிய-லெனினியம் காலத்துக்கு ஒவ்வாததாகி விட்டதென்று சொல்லி அதற்கு துரோகம் இழைத்த பின்னர், யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் தலைவர்கள் லெனினியத்துக்கு விரோதமான தமது திரிபுவாதச் செயல் திட்டத்தை 1957-ஆம் வருடப் பிரகடனத்துக்கு எதிராய் நிறுத்தினார்கள். யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தை சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதற்கும் எதிராய் ஏவினார்கள்.

---

1. *என். எஸ். குருச்சேவ், 1963 ஆகஸ்ட் 28-ல் யூகோஸ்லாவியாவில் ராக்கோவிக்கா தொழிற்சாலையில் நடந்த கூட்டத்தில் பேசியது.*

2. *என். எஸ். குருச்சேவ், 1963 ஆகஸ்ட் 28-ல் யூகோஸ்லாவியாவில் பிரியோணி என்ற இடத்தில் வெளிநாட்டு நிருபர்களுக்கு அளித்த பேட்டி. 'தாஞ்சுக்' வெளியிட்ட செய்தி.*

அறிக்கை கூறுவதாவது: (யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் தலைவர்கள்) அமெரிக்காவிடமிருந்தும் ஏனைய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்தும் கிடைக்கும் சொல்லிக்கொள்ளப்படும் ''உதவி''யைச்சார்ந்து நின்றார்கள்; அதன் விளைவாக வீரஞ்செறிந்த போராட்டத்தின் வாயிலாய் யூகோஸ்லாவிய மக்கள் பெற்ற புரட்சிகர ஆதாயங்களை இழந்து விடும் ஆபத்தை தோற்றுவித்தார்கள்.

அறிக்கை மேலும் கூறுவதாவது:

யூகோஸ்லாவியத் திரிபுவாதிகள் சோசலிச முகாமுக்கும், உலகக் கம்யூனிச இயக்கத்துக்கும் எதிராய் குழிபறிப்பு வேலைசெய்கிறார்கள்; சமாதானத்தை விரும்பும் சக்திகள், நாடுகள், யாவற்றினதும் அய்க்கியத்தைக் கெடுக்கக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

அறிக்கை தெட்டத் தெளிவாய்ச் சொல்கிறது. ஆனாலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ''1960ஆம் வருட அறிக்கையின்படி யூகோஸ்லாவியாவை சோசலிச நாடாக கருதுகிறோம்''[1] என்று துணிந்து சொல்கிறார்கள். எப்படித்தான் அவர்கள் இப்படிச் சொல்ல முடிகிறதோ!

நாம் கேட்க விரும்புகிறோம்;

அறிக்கை கூறுவதுபோல ஒருவகையான சர்வதேச சந்தர்ப்பவாதத்தால்,ஒருவகையான நவீனத் திரிபுவாதக் கோட்பாடுகளால் வழிநடத்தப்படுகிற நாடு சோசலிச நாடாய் இருக்க முடியுமா?

அறிக்கை கூறுவதுபோல மார்க்சிய-லெனினியத்துக்கு துரோகமிழைத்துவிட்டு, சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதையும் எதிர்த்து நிற்கிற நாடு சோசலிச நாடாய் இருக்க முடியுமா?

அறிக்கை கூறுவதுபோல சோசலிச முகாமுக்கும் உலகக் கம்யூனிச இயக்கத்துக்கும் எதிராய் குழிபறிப்பு வேலை செய்கிற நாடு சோசலிச நாடாய் இருக்க முடியுமா?

அறிக்கை கூறுவதுபோல சமாதானத்தை விரும்பும் சக்திகள், நாடுகள் யாவற்றனிதும் அய்க்கியத்தைக் கெடுக்கக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுகிற நாடு சோசலிச நாடாய் இருக்க முடியுமா?

---

1. ''ஆக்கபூர்வ மார்க்சிய—லெனினியத்தின் வெற்றிக்காகவும், உலகக் கம்யூனிச இயக்கத்தின் பாதையைத் திருத்துவதற்கு எதிராகவும்'' கம்யூனிஸ்ட் ஏட்டில் ஆசிரியர் குழுவின் கட்டுரை, மாஸ்கோ, இதழ் 11, 1963.

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் கோடானு கோடி அமெரிக்க டாலர்களைக் கொட்டி வளர்ந்துள்ள நாடு சோசலிச நாடாய் இருக்க முடியுமா?

இப்படியொரு அதிசயத்தை இதற்குமுன் கேட்டதில்லை.

தோழர் டோக்ளியாட்டி தோழர் குருச்சேவைக் காட்டிலும் வெளிப் படையாக பேசுவதாய்த் தோன்றுகிறது. டோக்ளியாட்டி மென்று விழுங்காமல் சொல்லிவிட்டார்; டிட்டோ கும்பல் குறித்து 1960 ஆம் வருட அறிக்கை எடுத்த நிலை ''தவறு''[1] என்று சொல்லிவிட்டார். டிட்டோ கும்பல் குறித்து அறிக்கை வழங்கிய தீர்ப்பை குருச்சேவ் தலை கீழாக மாற்ற துடிக்கிறார். ஆகவே அவர் இன்னும் வெளிப்படை யாகப் பேசவேண்டும். அறிக்கையைத் தூக்கிப் பிடிப்பது போல் நடிக் கத் தேவையில்லை.

யூகோஸ்லாவியா பற்றி அறிக்கை வழங்கிய தீர்ப்பு தவறானதா? அதனை மாற்றவேண்டுமா? அது தவறானது, அதனை மாற்றவேண் டும் என்கிறார் டோக்ளியாட்டி. குருச்சேவ் சொல்வதன் உட்பொருளும், அது தவறானது, அதை மாற்றவேண்டும் என்பதுதான். அது தவ றானது அல்ல, அதை மாற்றக் கூடாது என்கிறோம் நாம். அதே போல் மார்க்சிய-லெனினியத்தைக் கடைப்பிடிக்கிற, 1960ஆம் வருட அறிக்கையைத் தூக்கிப் பிடிக்கிற எல்லா சகோதரக் கட்சிகளுமே அந்தத் தீர்ப்பு தவறானதல்ல, அதை மாற்றக் கூடாது என்றுதான் சொல் கின்றன.

நாம் இப்படிச் சொல்வது ''வறட்டுத்தனமான சூத்திரத்தையும்'' ''முதலாளித்துவ உலகின்'' ''காட்டுத்தனமான நியதிகளையும்'' பற்றிக்கொண்டு தொங்குவதாயும்[2] ''யூகோஸ்லாவியாவை சோசலிச அமைப்பிலிருந்து நீக்கிவைப்பதாயும்''[3] உள்ளதென்று ரசியகம்யூனிஸ்ட்

1. பாமிரோ டோக்ளியாட்டி, ''விவாதத்தை அதன் மெய்யான வரம்புக்குத் திரும்பக் கொண்டு செல்வோம்'' 'L' Unita, 1963 ஜனவரி 10.
2. என். எஸ். குருச்சேவ், சோவியத் சோசலிசக் குடியரசுகள் ஒன்றியத்தின் உச்ச சோவியத் அமர்வுக்கு அளித்த அறிக்கை, 1962 டிசம்பர்.
3. ரசியாவில் உள்ள எல்லாக் கட்சி அமைப்புகளுக்கும், எல்லா கம்யூனிஸ்டுகளுக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி யின் பகிரங்கக் கடிதம், 1963 ஜூலை 14.

கட்சித் தலைவர்கள் கருதுகிறார்கள். மேலும், யூகோஸ்லாவியாவை சோசலிச நாடாக மதிக்காதவர்கள் எவரானாலும் உண்மை நிலவரத்துக்கு மாறாகச் சென்று அகநிலை வாதத் தவறைச் செய்கிறவர்களாம்'' [1] உண்மை நிலவரத்தைப் பார்க்காமல் கண்ணைமூடிக் கொண்டு, யூகோஸ்லாவியா சோசலிச நாடுதான் என்று அறுதியிட்டுரைக்கிற அவர்கள் மட்டுமே ''புறநிலை விதிகளையும், மார்க்சிய-லெனினிய போதனைகளையும் ஆதாரமாய்க் கொண்டு'' ''எதார்த்த நிலையை ஆழ்ந்து ஆய்வு செய்ததன்'' [2] அடிப்படையில் முடிவுக்கு வந்திருப்பவர்களாம்.

யூகோஸ்லாவியாவில் நிலவும் யதார்த்தங்கள் என்ன? புறநிலை விதிகளையும், மார்க்சிய-லெனினிய போதனைகளையும் ஆதாரமாய்க் கொண்டு, யூகோஸ்லாவியாவில் நிலவும் யதார்த்தங்களை ஆழ்ந்து ஆய்வு செய்தால் எத்தகைய முடிவுக்கு வரவேண்டியிருக்கும்?

இந்தப் பிரச்சினையை சற்றே ஆராய்ந்து பார்ப்போம்.

யூகோஸ்லாவிய நகரங்களில் தனியார் மூலதனத்தின் வளர்ச்சி

யூகோஸ்லாவியா சோசலிச நாடுதான் என்று வலியுறுத்துவதற்காக குருச்சேவ் முன்வைக்கும் வாதங்களில் ஒன்று: தனியார் மூலதனமும், தனியார் தொழில் நிறுவனமும், முதலாளிகளும் யூகோஸ்லாவியாவில் கிடையாது என்பதாகும்.

இது உண்மைதானா? அல்ல.

தனியார் மூலதனமும், தனியார் தொழில் நிறுவனமும் யூகோஸ்லாவியாவில் மிகப் பெரிய அளவில் இருந்து வருகின்றன, துரிதமாய் வளர்ந்து வருகின்றன என்பதே மெய்.

சோசலிச நாடுகள் எல்லாவற்றிலும் நடந்திருப்பதை வைத்துப் பார்த்தால், பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகும் கணிசமான காலத்துக்கு முதலாளித்துவ தனியார் தொழில்துறை உட்பட பல்வேறு துறைகளும் சோசலிச நாட்டின் தேசிய

1. மேற்கூறியது.
2. என். எஸ். குருச்சேவ், சோவியத் சோசலிசக் குடியரசுகள் ஒன்றியத்தின் உச்ச சோவியத் அமர்வுக்கு அளித்த அறிக்கை, 1962 டிசம்பர்.

பொருளாதாரத்தில் இடம் வகிப்பது விசித்திரமல்ல. எது முக்கியமென்றால், தனியார் முதலாளித்துவத்தின்பால் அரசு கடைபிடிக்கும் கொள்கை எத்தகையது என்பதே தனியார் முதலாளித்துவத்தைப் பயன்படுத்திக் கொள்வது, கட்டுப்படுத்துவது, மாற்றியமைப்பது, ஒழித்துக் கட்டுவது என்ற கொள்கையா, அதனை ஊட்டி வளர்த்து ஊக்கப்படுத்தும் அரசு தலையிடா வாணிப கொள்கையா என்பதே. நாடு சோசலிசத்தை நோக்கி முன்னேறுகிறதா, முதலாளித்துவத்தை நோக்கி முன்னேறுகிறதா என்பதைத் தீர்மானிப்பதற்கு இது முக்கியமான அளவுகோல்.

இந்தப் பிரச்சினையில் டிட்டோ கும்பல் சோசலிசத்துக்கு எதிரான திசையில் போய்க் கொண்டிருக்கிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஆரம்ப காலத்தில் யூகோஸ்லாவியா கொண்டு வந்த சமுதாய மாற்றங்கள் முழு நிறைவானவை அல்ல என்பதை முதலில் குறிப்பிட வேண்டும். பகிரங்கத் துரோகத்துக்குப் பிறகு டிட்டோ கும்பல் கடைப்பிடித்து வரும் கொள்கை தனியார் மூலதனத்தையும், தனியார் தொழில் நிறுவனங்களையும் மாற்றியமைப்பதும் ஒழித்துக் கட்டுவதுமான கொள்கையல்ல, மாறாக அவற்றை ஊட்டி வளர்த்து விரிவுபடுத்தும் கொள்கையே.

1953-ல் டிட்டோ கும்பல் வகுத்து வெளியிட்ட விதிமுறைகள் ''குடிமக்கள் குழுக்களுக்கு'' ''தொழில் நிறுவனங்களை நிறுவவும்'' ''உழைப்பாளரைக் கூலிக்கமர்த்தவும்'' உரிமையுண்டு என்று கூறுகின்றன. அதே ஆண்டில், அரசுப் பொருளாதார நிறுவனங்களிடமிருந்து அசையாச் சொத்துக்களை வாங்கிட தனியாருக்கு உரிமையுண்டு என்று விதிக்கும் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

1956-ல் டிட்டோ கும்பல் வரிவிதிப்பின் மூலமும், இதர கொள்கைகளின் மூலமும் உள்ளாட்சி நிர்வாகங்கள் தனியார் மூலதனத்தை ஊட்டி வளர்க்க ஊக்கமளித்தது.

1961-ல் டிட்டோ கும்பல் அந்நியச் செலாவணியை வாங்கிட தனியாருக்கு உரிமையுண்டு என்று ஆணை பிறப்பித்தது.

1963-ல் டிட்டோ கும்பல் தனியார் மூலதனத்தை வளர்க்கும் கொள்கையை அரசியல் சாசனத்தில் சேர்த்தது. அரசியல் சாசன விதிகளின்படி யூகோஸ்லாவியாவில் தனியார்கள் தொழில் நிறுவனங்களை நிறுவலாம், உழைப்பாளரைக் கூலிக்கமர்த்தலாம்.

டிட்டோ கும்பலின் உதவியோடும் ஊக்கத்தோடும், தனியார்தொழில் நிறுவனமும், தனியார் மூலதனமும் யூகோஸ்லாவிய நகரங்களில் பல்கிப் பெருகியுள்ளன.

பெல்கிரேடில் வெளியிடப்பட்ட 1963-ம் ஆண்டுக்கான யூகோஸ்லா வியப் புள்ளிவிவரக் கையேடு என்னும் அதிகாரப்பூர்வப் பிரசுரத்தின்படி, யூகோஸ்லாவியாவில் தனியாருக்குச் சொந்தமான கைவினை நிறுவனங் கள் 1,15,000-த்துக்கு மேல் உள்ளன. ஆனால் உண்மையில் இந்தத் தனியார் தொழில் நிறுவனங்கள் பலவற்றின் உரிமையாளர்களும் ''கைவினைஞர்கள்'' அல்லர், அப்பட்டமான தனியார் முதலாளிகளே.

தனியார் ஒவ்வொருவரும் அதிகபட்சமாய் அய்ந்து தொழிலாளர் களை வேலைக்கமர்த்தவே சட்டம் அனுமதியளிக்கிறது என்றாலும், சிலர் இதைப்போல் பத்து அல்லது இருபது மடங்கு பேரை வேலைக்கமர்த்து கிறார்கள், ''அய்நூறு, அறுநூறு தொழிலாளர்களை'' வேலைக்கமர்த்து வதும் உண்டு என்று டிட்டோ கும்பலே ஒப்புக்கொள்கிறது[1] தனியார் தொழில் நிறுவனங்கள் சிலவற்றின் வருடாந்தர விற்றுமுதல் 10 கோடி தினார்களுக்கும் அதிகமாகும்''. [2]

இந்தத் தனியார் தொழில் அதிபர்களில் பலரும் உள்ளபடியே ''பெரும் தொழில் அதிபர்கள்'' என்பதை *பொலிட்டிக்கா* ஏடு 1961 டிசம்பர் 7-ல் வெளிப்படுத்தியது. அது கூறுவதாது:

இந்தத் தனியார் தொழில் அதிபர்களின் வலைப்பின்னல் எவ்வளவு விரிந்து பரந்த ஒன்று என்பதையும், எத்தனைத் தொழிலாளர்களைக் கொண்டது என்பதையும் அறிவது கடினம். தாம் செய்யும் வேலையில் தமக்கு உதவியாக இருக்க வேண்டி அய்ந்து தொழிலாளர்களை வைத் துக்கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு என்பதுதான் சட்டம். ஆனால் அரசு அதிகாரத் தொடர்பு உள்ளவர்களுக்கு இந்த அய்ந்து பேரும் உண்மையில் ஒப்பந்ததாரர்களே; இவர்களுக்கு ''உள் ஒப்பந்ததாரர் களும்'' உண்டு...வழக்கமாய் நடப்பது என்னவென்றால், இந்த ஒப்பந்த தாரர்கள் உழைப்பில் ஈடுபடுவதில்லை. சரக்காணை தருவது, திட்டம் வகுப்பது, ஒப்பந்தம் செய்வது, காரில் ஏறி நிறுவனம் நிறுவனமாய்ச் செல்வது அவர்கள் செய்வதெல்லாம் இவ்வளவுதான்.

இந்தத் தொழில்அதிபர்கள் சம்பாதிக்கும் இலாபத்திலிருந்தே இவர் கள் நூற்றுக்கு நூறு முதலாளிகள்தான் என்பதை அறியலாம். 1961 டிசம்பர் 8-ல் *ஸ்வெட்* வெளியிட்ட செய்தியின்படி, ''தனியார் கைவினை ஞர்கள் சிலரது நிகர வருமானம் மாதத்துக்குப் பத்து லட்சம் தினார் வரை உள்ளது'' 1961 டிசம்பர் 20-ல் பெல்கிரேடு *வெருசெஞ்சே*

---

1. எம். தோதரோவிக், ''இருமுனைப் போராட்டம்'', *நாஷா ஸ்தவர்னோஸ்ட்*, 1954 மார்ச் இதழ்.
2. *Vesnik U Sredu*, December 27, 1961.

நோவோஸ்தி வெளியிட்ட செய்தியின்படி பெல்கிரேடில் ''சென்ற ஆண்டு 116 தனியார் தொழில் நிறுவன உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் ஒரு கோடி தினாருக்கும் அதிகமாய் வருமானம் பெற்றனர்'' தொழில் நிறுவன அதிபர்களில் சிலர் ஓராண்டில் ''சுமார் 7 கோடி தினார் வருமானம் பெற்றனர்'' இது, அதிகாரபூர்வ செலாவணிமாற்று விகிதப்படி, சுமார் ஒரு லட்சம் அமெரிக்க டாலர்களுக்குச் சமம்.

யூகோஸ்லாவிய நகரங்களில் இந்தத் தனியார் தொழில் நிறுவனங்களும் தனியார் சேவை நிறுவனங்களும், தனியார்வாணிபமும், தனியார் வீட்டு வசதி அமைப்புகளும், தனியார் போக்குவரத்துத் தொழிலும் இருப்பது போதாதென்று, ''தனியார் வங்கித் தொழில் செய்வோர்'' என்ற பெயரில் கடுவட்டிக்காரர்களும் இருக்கிறார்கள். இந்தக் கடுவட்டிக்காரர்கள் பகிரங்கமாகச் செயல்படுவதோடு செய்தித்தாள்களில் வணிக விளம்பரமும் செய்கின்றனர். இவ்வகை விளம்பரம் ஒன்று பின்வருமாறு உள்ளது: ''3 லட்சம் தினார், மூன்று மாதக் கடன்; திருப்பித் தர வேண்டியது 4 லட்சம் தினார். ஈடு அவசியம்'' [1]

இவை யாவும் மறுக்க முடியாத உண்மை.

டிட்டோ கும்பல் குறித்து வழங்கிய தீர்ப்பை ரத்து செய்யத் துடிப்பவர்களைப் பார்த்துக் கேட்கிறோம்: ''உங்கள் நோக்கம் ஏமாற்றுவது அல்ல வென்றால், தனியார் மூலதனமும், தனியார் தொழில் நிறுவனமும், முதலாளிகளும் யூகோஸ்லாவியாவில் இல்லையென்று எப்படிச் சொல்ல முடிகிறது உங்களால்?

முதலாளித்துவத்தில் மூழ்கியுள்ள யூகோஸ்லாவிய கிராமப்புறம்

யூகோஸ்லாவிய கிராமப்புறத்தில் நிலவும் நிலைமையை சற்றே பரிசீலிப்போம்.

அங்கே முதலாளிகள் இல்லை என்கிறாரே குருச்சேவ், உண்மை தானா?

அல்ல, உண்மைகள் நேர்மாறாயுள்ளன.

யூகோஸ்லாவியா முதலாளித்துவத்தில் மூழ்கியிருப்பது கிராமப் புறத்தில் இன்னும் கூட தெளிவாகத் தெரிகிறது.

1. Vesnik U Sredu, December 6, 1961.

தனிநபர் பொருளாதாரம், சிறு உற்பத்தியாளரின் பொருளாதாரம் நாள்தோறும், மணிதோறும் முதலாளித்துவத்தைத் தோற்றுவிக்கிறது என்றும், கூட்டுடைமையாக்கத்தால் மட்டுமே விவசாயத்தை சோசலிசப் பாதையில் கொண்டு செல்ல முடியும் என்றும் மார்க்சிய—லெனினியம் நமக்கு போதிக்கிறது.

ஸ்டாலின் சுட்டிக் காட்டினார்:

''முதலாளிகளையும் முதலாளித்துவத்தையும் தோற்றுவிப்பதான தனிநபர் விவசாயப் பொருளாதாரம் நாட்டில் மேலோங்கியிருக்கும் வரை, முதலாளித்துவம் மீட்கப்படும் ஆபத்து நீடிக்கும் என்று லெனின் சொல்கிறார். இந்த ஆபத்து நீடிக்கும்வரை, நமது நாட்டில் சோசலிசக் கட்டுமானத்தின் வெற்றி பற்றிப் பேசுவதில் பொருளில்லை''[1]

இந்தப் பிரச்சினையில் டிட்டோ கும்பல் சோசலிசத்துக்கு எதிரான வழியைப் பின்பற்றுகிறது.

இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு வந்த ஆரம்ப காலத்தில் யூகோஸ்லாவியாவில் நிலச் சீர்திருத்தம் நடைபெற்றது. விவசாயிகளின் உழைப்புக் கூட்டுறவு அமைப்புகள் உருவாயின. ஆனால் இது பணக்கார விவசாயப் பொருளாதாரத்தைப் பெரும்பாலும் தொடவில்லை.

1951-ல் டிட்டோ கும்பல் விவசாயக் கூட்டுடைமையாக்கப் பாதையைக் கைவிடுவதாக பகிரங்கமாய் அறிவித்ததோடு, விவசாயிகளின் உழைப்புக் கூட்டுறவு அமைப்புகளைக் கலைக்கத் தொடங்கியது. இது சோசலிச இலட்சியத்துக்குத் துரோகமிழைப்பதில் டிட்டோ கும்பல் எடுத்த முக்கிய நடவடிக்கையாகும். 1950-ல் 6,900-க்கும் அதிகமாய் இருந்த இத்தகைய கூட்டுறவு அமைப்புகள் 1953 இறுதியில் 1,200-க்கு சற்றே அதிகம் என்பதாகவும், 1960-ல் 147 ஆகவும் குறைந்து போயின. யூகோஸ்லாவிய கிராமப்புறம் தனிநபர் பொருளாதாரமென்னும் கடலில் மூழ்கிப் போயுள்ளது.

கூட்டுடைமையாக்கம் யூகோஸ்லாவியாவில் செல்லுபடியாகவில்லை என்கிறது டிட்டோ கும்பல்.

---

1. ஜே.வி. ஸ்டாலின், ''தானியக் கொள்முதலும், வேளாண்மை வளர்ச்சிக்கான வாய்ப்புகளும்'', நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1954, தொகுதி 11, பக்கம் 8,

''கூட்டுடமையாக்கமும் உடமைப்பறிப்பும் ஒன்றே''[1] என்றும், கூட்டுடைமையாக்கம் என்பது ''கூடுமானவரை நீண்டகாலத்துக்கு கிராமப்புறத்தில் பண்ணையடிமை முறையையும் வறுமையையும் காப்பாற்றுகிற''[2] பாதையாகும் என்றும் நஞ்சு கலந்த அவதூறு பரப்புகிறது. வேளாண்மையின் முன்னேற்றம் ''பொருளாதாரச் சக்திகளிடையே தடையிலாப் போட்டியை அடிப்படையாக''[3] கொண்டிருக்க வேண்டும் என்ற நகைப்புக்குரிய கருத்துக்காக வாதாடுகிறது.

விவசாயிகளின் உழைப்புக் கூட்டுறவு அமைப்புகள் பலவற்றையும் கலைத்த அதேநேரத்தில், கிராமப் பகுதிகளில் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்திட 1953-ல் தொடங்கி சட்டங்களையும் அரசாணைகளையும் சரமாரியாகப் பிறப்பித்துள்ளது டிட்டோ கும்பல். இந்தச் சட்டங்களும், அரசாணைகளும் நிலம் வாங்கவும், விற்கவும், குத்தகைக்கு விடவும், விவசாயத் தொழிலாளர்களைக் கூலிக்கமர்த்தவும் அனுமதியளிக்கின்றன; திட்டமிட்ட விளைபொருள் கொள்முதலை ரத்துச் செய்துவிட்டு இத்துறையில் தடையிலா வாணிபத்தை நுழைக்கின்றன.

இந்தக் கொள்கையின் துணைகொண்டு முதலாளித்துவ சக்திகள் கிராமப் பகுதிகளில் விரைந்து பரவின; ஏழை—பணக்காரர் இடையிலான வர்க்கப் பிளவு (Polarization) துரிதமடைந்தது. இது டிட்டோ கும்பல் செய்துள்ள முதலாளித்துவ மீட்சிப் பணியில் முக்கிய அம்சமாகும்.

கிராமப்புறத்தில் ஏழை—பணக்காரர் இடையிலான வர்க்கப் பிளவு நிலவுடைமையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களில்தான் முதலில் வெளிப்படுகிறது. யூகோஸ்லாவிய அரசின் வேளாண்மை, வனத்துறைக் காரிய தரிசியாய் இருந்தவரான ஸ்லாங்கோ கோமர் இதனை ஒப்புக்கொண்டார். 1959-ல் ஒவ்வொன்றும் 5 ஹெக்டேருக்கும் குறைவான நிலமுடைய ஏழை விவசாயக் குடும்பங்கள் மொத்தமுள்ள விவசாய குடும்பங்களில் 70 சதவீதமாகும். இவர்களுக்கு, தனியாருக்குச் சொந்தமான மொத்த நிலத்தில் 43 சதவீதம் மட்டுமே சொந்தமாயிருந்தது; அதே

1. *எட்வர்டு கார்தல்ஜ், யூகோஸ்லாவிய உழைப்பாளி மக்களின் சோசலிச நேசக் கூட்டின் நான்காவது கூட்டரசுக் குழுவின் ஒன்பதாவது முழுநிறைக் கூட்டத்தின் துவக்கஉரை, 1959 மே 5.*

2. *விளாதிமிர் பக்காரிக், யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் ஆறாவது பேராயத்தில் ஆற்றிய உரை.*

3. *எட்வர்டு கார்தல்ஜ், ''கிராமங்களில் நமது கொள்கை—சில பிரச்சினைகள்'' கம்யூனிஸ்ட், பெல்கிராடு, இதழ் 4, 1953.*

போது ஒவ்வொன்றும் 8 ஹெக்டேருக்கும் அதிகமான நிலமுடைய பணக்கார விவசாயக் குடும்பங்கள் மொத்தமுள்ள விவசாய குடும்பங்களில் 13 சதவீதம் மட்டுமேயாகும். இவர்களுக்கு தனியாருக்குச் சொந்தமான மொத்த நிலத்தில் 33 சதவீதம் சொந்தமாயிருந்தது. சுமார் 10 சதவீத விவசாயக் குடும்பங்கள் ஆண்டுதோறும் நிலம் வாங்குகின்றன அல்லது விற்கின்றன என்பதையும் கோமர் ஒப்புக்கொண்டார்.[1] நிலத்தை விற்பது பெரும்பாலும் ஏழைக்குடும்பங்களே.

உண்மையில் மேற்கண்ட விவரங்களிலிருந்து வெளிப்படுவதைவிடவும் நிலக்குவிப்பு மிக அதிகமாகும். டிட்டோ கும்பலின் ஏடாகிய *போர்பா* 1963 ஜூலை 19 தேதிய இதழில் வெளியிட்டுள்ள செய்தியின் படி, ஒரு மாவட்டத்தில் மட்டும் ''சட்டபூர்வ உச்சவரம்பாகிய 10 ஹெக்டேருக்கு மேல் மிக அதிகமாய் நிலமுடைய விவசாயக் குடும்பங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன''. பிஜெல்ஜினா கம்யூனில் ''10 முதல் 30 ஹெக்டேர் பண்ணை வைத்துள்ள அய்நூறு விவசாயக் குடும்பங்கள் இருப்பது தெரியவந்தது'' இவை விதி விலக்குகள் அன்று.

கிராமப் பகுதிகளில் ஏழை—பணக்காரர் இடையிலான வர்க்கப் பிளவு இழுவைக் கால்நடைகள் மற்றும் விவசாயக் கருவிகளின் உடைமையிலும் வெளிப்படுகிறது. தானிய விளைச்சலில் முன்னிற்கும் பகுதியான வோஜ்வோதினா மாகாணத்தில் 30,8000 விவசாயக் குடும்பங்களில், 55 சதவீதக் குடும்பங்களிடம் இழுவைக் கால்நடைகள்எதுவும் கிடையாது. ஒவ்வொன்றும் 2 ஹெக்டேருக்கும் குறைவான நிலமுடைய விவசாயக் குடும்பங்கள் மொத்தமுள்ள விவசாயக் குடும்பங்களில் 40.7 சதவீதமாகும். இவர்களிடம் மொத்தமுள்ள கலப்பைகளில் 4.4 சதவீதம் மட்டுமே உள்ளது; அதாவது சராசரியாக 20 குடும்பங்களுக்கு ஒரு கலப்பைதான். மாறாக, பணக்கார விவசாயிகளிடம் 1,300-க்கும் அதிகமான டிராக்டர்களும், ஏராளமான இதரவகை வேளாண்மை இயந்திர சாதனங்களும் மட்டுமல்ல, பெரும் எண்ணிக்கையிலான கலப்பைகளும், மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் போன்றவையும் உள்ளன.[2]

ஏழை—பணக்காரர் இடையிலான வர்க்கப் பிளவு உழைப்பாளரைக் கூலிக்கமர்த்துவது போன்ற முதலாளித்துவச் சுரண்டல் முறைகளின் பெருக்கத்திலும் வெளிப்படுகிறது.

---

1. *ஸ்லாவ் நோ கோமர், ''கிராமப்புறம் மற்றும் விவசாயக் குடும்பங்கள் தொடர்பான சில பிரச்சினைகள்'' சோசலிசம், இதழ் 5, 1962.*

2. *யூகோஸ்லாவிய பத்திரிகைப் பேட்டி, எண் 2, 1962.*

1956-ல் செர்பியாவில் 8 ஹெக்டேருக்கு மேல் நிலமுடைய விவசாய குடும்பங்களில் 52 சதவீதக் குடும்பங்கள் உழைப்பாளரைக் கூலிக்கமர்த்தின என்பதை 1958 பிப்ரவரி 7 தேதிய *கம்யூனிஸ்ட்* இதழ் வெளிப்படுத்தியது.

சில விவசாயக் குடும்பங்களின் தலைவர்கள் சமீப ஆண்டுகளில் ''சக்திவாய்ந்தவர்கள்'' ஆகியிருப்பதாக 1962-ல் ஸ்லாங்கோ கோமர் சொன்னார். ''அவர்களது வருமானம் அவர்களது உழைப்பிலிருந்து வருவதல்ல. அவர்களது கள்ள வர்த்தகம், தமது விளைபொருட்களையும் ஏனையோரின் விளை பொருட்களையும் பதனப்படுத்துதல், கள்ளச் சாராயம் காய்ச்சுதல், நிலம் வாங்குதல் அல்லது இன்னுமதிகமாய் குத்தகை பிடித்தல், போலியான பாகப் பிரிவினை, பொது நிலத்தை அபகரித்தல் அல்லது மறைத்தல், உச்சவரம்பாகிய 10 ஹெக்டேருக்கும் அதிகமாய் நிலம் வைத்துக்கொள்ளுதல், வர்த்தகச் சூதாட்டத்தின் மூலம் டிராக்டர் வாங்குதல், அண்டைப்புற ஏழைகளின் நிலத்தை சாகுபடி செய்வதாகச் சொல்லி அவர்களைச் சுரண்டுதல்—இவையே அவர்களது வருமான வழிகள்'' [1]

1962 ஆகஸ்ட் 30-ல் *போர்பா* கூறியது: ''அன்புள்ளம் கொண்ட உற்பத்தியாளர் என சொல்லிக் கொள்பவர்கள் ... நிலத்தைக் குத்தகை எடுப்பவரும், உழைப்பாளரைக் கூலிக்கமர்த்துபவரும், வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்தவரும் ஆவார்... இவர்கள் உற்பத்தியாளர்கள் அல்லர், தொழில் அதிபர்களே. இவர்களில் சிலர் ஆண்டில் ஒருமுறை கூட ஏர் பிடிக்காதர்கள். இவர்கள் உழைப்பாளரைக் கூலிக்கமர்த்தி வயலில் நடக்கும் வேலையை கண்காணிப்பவர்கள், வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள்''.

யூகோஸ்லாவிய கிராமப் பகுதிகளில் கடுவட்டிக்காரர்களும் புகுந்து விளையாடுகிறார்கள். வட்டியானது பல சந்தர்ப்பங்களில் ஆண்டுக்கு 100 சதவீதம் என்ற அளவையும் மீறிப் போகிறது. வேலையற்றோரின் அவல நிலையைப் பயன்படுத்தி, உழைப்புச் சந்தையில் ஏகபோகம் பெற்று, சுரண்டல் வேட்டை நடத்துகிறவர்களும் இருக்கிறார்கள்.

நிலத்தையும் ஏனைய உற்பத்திச் சாதனங்களையும் பறிகொடுத்துவிட்டு வறுமையில் தத்தளிக்கும் ஏராளமான விவசாயிகள் உழைப்புச் சக்தியை விற்றுத்தான் வாழமுடியும். 1962 ஆகஸ்ட் 20-ம் தேதி *பொலிட்டிக்கா* இதழில் தரப்பட்டுள்ள விவரங்களின்படி, 1961-ல் 2 ஹெக்டேருக்கும் குறைவான நிலமுடைய யூகோஸ்லாவிய விவசாயக் குடும்பங்களின் ரொக்க வருமானத்தில் சுமார் 70 சதவீதம் உழைப்புச்

1. *ஸ்லாவ்கோ கோமர், மேற்கூறியவை.*

சக்தியை விற்றுக் கிடைத்தாகும். இந்த விவசாயிகள் கசக்கிப் பிழியப் பட்டு, அவல வாழ்க்கை வாழ்கிறார்கள்.

யூகோஸ்லாவிய கிராமப்புறம் சுரண்டும் வர்க்கத்தின் ஆதிக்கத்தில் இருப்பதை உண்மை விவரங்கள் தெளிவாக்குகின்றன.

யூகோஸ்லாவியா சோசலிச நாடுதான் என்று வாதாடுகையில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதம், யூகோஸ்லாவிய கிராமப் பகுதிகளில் ''சோசலிசத் துறை'' 6 சதவீதத் திலிருந்து 15 சதவீதமாய் உயர்ந்திருப்பதாக சுட்டிக் கட்டுகிறது.

இந்த சொற்ப சதவீதமும் கூட சோசலிசத் துறையல்ல என்பது வருத்தத்துக்குரியது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் 15 சதவீத சோசலிசத் துறை என்று சொல்வது டிட்டோ கும்பல் ஊக்கி வளர்க்கும் ''வேளாண் மைப் பண்ணைகள்'', ''பொது வேளாண்மைக் கூட்டுறவுகள்'' போன்ற அமைப்புகளைக் குறிப்பதாகத்தான் இருக்கமுடியும். ஆனால் உண்மை யில் இந்த ''வேளாண்மைப் பண்ணைகள்'' முதலாளித்துவப் பண்ணை களே. ''பொது வேளாண்மைக் கூட்டுறவுகள்'' பிரதானமாக வர்த்தகத் தில் ஈடுபட்டுள்ள முதலாளித்துவப் பொருளாதார அமைப்புகளே. இவை நிலத் தனியுடைமையை பாதிக்கவில்லை. அது மட்டுமல்ல இவற்றின் முக்கியப் பணி பணக்கார விவசாயப் பொருளாதாரத்தைப் பேணி வளர்ப்பதே.

பெல்கிரேடில் வெளியிடப்பட்ட *யூகோஸ்லாவியாவில் வேளாண்மைப் பிரச்சினைகள்* என்ற நூல் ''கூட்டுறவுகள் இன்று அமைக்கப்படும் விதத்தையும், செயல்படும் விதத்தையும்'' வைத்துப் பார்க்கும்போது ''வேளாண்மையிலும் கிராமப்புறத்திலும் சோசலிசப் புனர் நிர்மாணத்தைச் சற்றேனும் குறிப்பனவாய் இல்லை என்கிறது. இவை முதலாளித்துவக் கூறுகளை உருவாக்கி வளர்க்கப் பாடுபடும் அளவுக்கு சோசலிச அரண்களை எழுப்பிட உழைப்பனவாய் இல்லை. இந்தக் கூட்டுறவுகள் குலாக்குகளின் கூட்டமைப்புகளாய் இருப்பதும் உண்டு.''

டிட்டோ கும்பல் விவசாயிகளிடமிருந்து விளைபொருட்களை வாங் கும் ஏகபோக உரிமையை ''பொது வேளாண்மைக் கூட்டுறவுகளுக்கு'' வழங்கியுள்ளது. இந்தத் தனிச் சலுகையையும், விவசாய விளைபொருள் விலைகளில் ஏற்படும் வரைமுறையற்ற ஏற்ற இறக்கங்களையும் பயன் படுத்தி ஆதாயம் பெறுகிற இந்தப் பெயரளவுக் கூட்டுறவுகள் ஊக வாணிபத்தில் ஈடுபட்டு, விவசாயிகளை ஏகமாய்ச் சுரண்டுகின்றன. 1958-ல் யூகோஸ்லாவியாவில் மகசூல் மிக குறைவாயிருந்தது. கூட்டு

றவுகளும், இதர வர்த்தக அமைப்புகளும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி விளைபொருளின் விற்பனை விலைகளை உயர்த்திவிட்டன. 1959-ல் நல்ல மகசூல் கண்டது. கூட்டுறவுகள் விவசாயிகளுடனான ஒப்பந்தங்களை முறித்து, கொள்முதலைக் குறைத்தன, விளைந்த பயிரை வயலிலேயே மக்கவிடவும் தயங்கவில்லை.

''பொது வேளாண்மைக் கூட்டுறவுகளும்'' ''வேளாண்மைப் பண்ணைகளும்'' நீண்டகால அடிப்படையிலும், தற்காலிக அடிப்படை யிலும் ஏராளமான தொழிலாளர்களைக் கூலிக்கமர்த்திச் சுரண்டுகின் றன. 1962-ம் வருட யூகோஸ்லாவியக் கூட்டாட்சி மக்கள் குடியரசின் வருடாந்திரப் புள்ளி விவர ஏட்டில் தரப்பட்டுள்ள விவரங்களின்படி 1961-ல் கூட்டுறவுகள் — நீண்டகால அடிப்படையில் கூலிக்கமர்த்திய தொழிலாளர்கள் மட்டும் மொத்தம் ஒரு லட்சத்துக்கும் அதிகமாவர். தற்காலிக அடிப்படையிலும் ஏராளமானோர் கூலிக்கமர்த்தப்பட்டனர். 1962 டிசம்பர் 1-ல் ராத் என்ற ஏடு வெளியிட்ட செய்தியின்படி, கூலிக் கமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் ''மிகப் பல சந்தர்ப்பங்களிலும் மிகக் கடுமையான சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டனர். (வேலை நாள் 15 மணி நேரம் வரை நீள்வதும் உண்டு) வழக்கமாய் அவர்களது சொந்த வரு மானம் மிக மிகக் குறைவு.''

இவ்வாறு, சோசலிசத் துறை எனப்படும் இந்த வேளாண்மை அமைப்புகள் முதலாளித்துவ வேளாண்மை அமைப்புகளே தவிர வேறல்ல என்பது நிதர்சனமாகிறது.

ஏழை எளிய விவசாயிகளை ஓட்டாண்டிகளாக்குவதும், முதலாளித் துவப் பண்ணைகளைப் பேணி வளர்ப்பதுமே வேளாண்மைத் துறையில் டிட்டோ கும்பலின் அடிப்படைக் கொள்கை. 1955-லேயே டிட்டோ சொன்னார்:

''யூகோஸ்லாவியாவில் சிறு பண்ணைகள் ஏதேனுமொரு விதத்தில் ஒன்றிணையும் நாள் வரும் என்ற எண்ணத்தை நாம் கைவிட்டு விட வில்லை. அமெரிக்காவில் இதை ஏற்கனவே செய்துவிட்டனர். நாம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும்.''

முதலாளித்துவப் பாதையில் பயணம் செய்வதற்காக 1959-ல் டிட்டோ கும்பல் பிறப்பித்த சட்டம்தான் சாகுபடி நிலப் பயன்பாட்டுச் சட்டம். சொந்த நிலத்தில் பாடுபடும் விவசாயிகள் குறிப்பிட்ட முறை களில் சாகுபடி செய்ய முடியாவிட்டால் ''பொது வேளாண்மைக் கூட்டுறவுகள்'' மற்றும் ''வேளாண்மைப் பண்ணைகளின்'' ''கட்டாய மேலாண்மைக்கு'' உட்படுவர் என இச்சட்டம் விதிக்கிறது. காரியாம்

சத்தில் இதன் விளைவு என்னவென்றால், ஏழை விவசாயிகளின் உடைமை பறிக்கப்பட்டு, முதலாளித்துவப் பண்ணைகளை வளர்ப்பதற்காக அவர்களது நிலம் பலவந்தமாக கைப்பற்றப்படுகிறது. இது முதலாளித்துவ வேளாண்மைப் பாதையே தவிர வேறல்ல.

சிறு நில விவசாயப் பொருளாதாரத்திலிருந்து பெருவீதப் பண்ணை பொருளாதாரத்துக்கு மாறிச் செல்வது பற்றி ஸ்டாலின் சொன்னார்:

இதிலே இரண்டு பாதைகள் உண்டு; முதலாளித்துவப் பாதை; சோசலிசப் பாதை; சோசலிசத்தை நோக்கிச் செல்லும் முன்னேற்றப் பாதை, முதலாளித்துவத்தை நோக்கிச் செல்லும் சரிவுப் பாதை.

மூன்றாவது பாதை உண்டா? ஸ்டாலின் சொன்னார்: ''மூன்றாவது பாதை என சொல்லிக்கொள்ளப்படுவது உண்மையில் இரண்டாவது பாதைதான், முதலாளித்துவத்தை நோக்கிச் செல்லும் சரிவுபாதைதான்'' ''தனிநபர் விவசாய முறைக்குத் திரும்பிச் செல்வது, குலாக்குகளை மீட்பது என்றால் என்ன பொருள்? குலாக்கு கொத்தடிமைத்தனத்தை மீட்பது, விவசாயிகள் குலாக்குகளால் சுரண்டப்படுவதை மீட்பது, குலாக்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது என்று பொருள். ஆனால், குலாக்குகளை மீட்பதும், அதே நேரத்தில் சோவியத் அதிகாரத்தை காப்பாற்றிக் கொள்வதும் சாத்தியம்தானா? சாத்தியமல்ல. குலாக்குகளின் மீட்சி குலாக்கு அதிகாரத்தை உருவாக்கவும், சோவியத் அதிகாரத்தை ஒழித்துக்கட்டவும் வழிகோலியே தீரும்; முதலாளித்துவ அரசாங்கம் உருவாவது நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் மீட்சிக்கு, முதலாளித்துவத்தின் மீட்சிக்கு வழிகோலியே தீரும்''[1]

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாய் வேளாண்மையில் யூகோஸ்லாவியா கடைப்பிடித்து வரும் பாதை முதலாளித்துவத்தை மீட்கும் பாதையே தவிர வேறல்ல.

இவையாவும் மறுக்கமுடியாத உண்மைகள்.

டிட்டோ கும்பல் குறித்து வழங்கிய தீர்ப்பை ரத்து செய்யத் துடிப்பவர்களைப் பார்த்துக் கேட்கிறோம்: உங்கள் நோக்கம் ஏமாற்றுவது அல்ல என்றால் யூகோஸ்லாவியாவில் முதலாளிகளே இல்லை என்று எப்படி சொல்ல முடிகிறது உங்களால்?

---

1. *ஜே. வி. ஸ்டாலின், ''கூட்டுப்பண்ணை அதிரடிப்படையினரின் மூன்றாவது அகில ஒன்றியப் போராயத்தில் ஆற்றிய உரை'' நூல்கள், ஆங்கிலப் பதிப்பு அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1955, தொகுதி 13, பக்கம் 248.*

அனைத்து மக்களுக்கும் சொந்தமான சோசலிசப் பொருளாதாரம் முதலாளித்துவப் பொருளாதாரமாய் சீரழிந்த கதை

யூகோஸ்லாவியாவில் நடந்துள்ள முதலாளித்துவ மீட்சி நகரங்களிலும், கிராமங்களிலும் தங்குதடையின்றிப் பரவிக் கொண்டிருக்கும் முதலாளித்துவத் தனியுடைமையின் வாயிலாய் வெளிப்படுகிறது. ஆனால், இன்னுங்கூட முக்கியமானது என்னவென்றால், யூகோஸ்லாவியப் பொருளாதாரத்தில் தீர்மானகரப் பங்கு வகிக்கும் ''பொதுத்துறைத்'' தொழில் நிறுவனங்களும் சீரழிந்துள்ளன.

டிட்டோ கும்பல் செயல்படுத்தி வரும் 'தொழிலாளர் சுய நிர்வாகப்' பொருளாதாரம் என்பது தனிவிதமான அரசு முதலாளித்துவமே. இது பாட்டாளி வர்க்க சர்வாதிகார ஆட்சியின் சூழலில் நிலவக் கூடிய அரசு முதலாளித்துவமல்ல; மாறாக டிட்டோ கும்பல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை அதிகாரவர்க்கத் தரகு முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரமாக மாற்றியுள்ள சூழலில் நிலவுக் கூடிய அரசு முதலாளித்துவமாகும். ''தொழிலாளர் சுயநிர்வாகத்தில்'' தொழில் நிறுவனங்களின் உற்பத்திச் சாதனங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனியார் முதலாளிகளுக்குச் சொந்தமல்ல, யூகோஸ்லாவியாவின் புதிய வகை அதிகாரவர்க்கத் தரகு முதலாளிகளுக்குச் சொந்தம். இந்தப் புதிய வகை அதிகாரவர்க்கத் தரகு முதலாளிகளில் அதிகாரவர்க்கத்தினரும் மேலாளர்களும் அடங்குவர். இவர்களைத்தான் டிட்டோ கும்பல் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்த அதிகாரவர்க்கத் தரகு முதலாளி வர்க்கம் அரசின் பெயரை அபகரித்து, அமெரிக்க ஏகாதிபத்தியத்தைச் சார்ந்து நின்று, சோசலிசப் போர்வையில் மறைந்து கொண்டு, உழைக்கும் மக்களுக்குச் சொந்தமாயிருந்த உடைமையைக் கொள்ளையடித்துள்ளது. ''தொழிலாளர் சுயநிர்வாகம்'' எனப்படுவது உண்மையில் அதிகாரவர்க்கத் தரகு மூலதனத்தின் ஆதிக்கத்தில் ஈவிரக்கமற்ற சுரண்டல் நடைபெறும் அமைப்பே ஆகும்.

1950-ல் தொடங்கி, டிட்டோ கும்பல் அரசுக்குச் சொந்தமான எல்லாத் தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும், தகவல் தொடர்பு, போக்குவரத்து,வர்த்தகம், வேளாண்மை, காடுகள், பொதுஜனப் பயன்பாடுகள் போன்ற ஏனைய தொழில் நிறுவனங்களிலும் ''தொழிலாளர் சுயநிர்வாகத்தை'' ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து பல அரசாணைகளைப் பிறப்பித்தது. தொழில் நிறுவனங்களைத் ''தொழிலாளர் கூட்டுகள்'' வசம் ஒப்படைத்தல், ஒவ்வொரு தொழில் நிறுவனமும் சுயேச்சையாக இயங்குதல், கச்சாப் பொருள் கொள்முதல், உற்பத்திப் பொருட்

களின் ரகத்தை தீர்மானித்தல், அளவு மற்றும் விலை நிர்ணயம், விற்பனை, கூலிவிகிதம் பற்றிய முடிவு, லாபத்தின் ஒரு பகுதிக்கான பகிர்வு ஆகியவற்றை அந்தந்தத் தொழில் நிறுவனமே செய்து கொள்ளு தல்-''தொழிலாளர் சுயநிர்வாகம்'' என்பதன் சாரம் இதுதான். மேலும், யூகோஸ்லாவிய அரசாணைகளின் படி, நிலைச் சொத்துக்களை வாங்க வும், விற்கவும், குத்தகைக்கு எடுக்கவும் தொழில் நிறுவனங்களுக்கு உரிமையுண்டு.

''தொழிலாளர் சுயநிர்வாகத்தில்'' உள்ள தொழில் நிறுவனங் களின் உடைமையை ''உயர்வடிவிலான சோசலிச உடைமை'' என்று டிட்டோ கும்பல் வர்ணிக்கிறது. ''தொழிலாளர் சுயநிர்வாகத்தை'' கொண்டுதான் ''மெய்யாகவே சோசலிசத்தைக் கட்ட'' இயலும் என்கிறது.

இது முழு மோசடியாகும்.

சிறிதேனும் மார்க்சிய அறிவுடையவர்களுக்குத் தெரியும்; தத்துவ நோக்கில் கூறுவதானால், ''தொழிலாளர் சுயநிர்வாகம்'', ''தொழி லாளர்களுக்கே தொழிற்சாலைகள்'' போன்ற முழக்கங்கள் அராஜகவாத சிண்டிகலிஸ்டுகளும், முதலாளித்துவ சோசலிஸ்டுகளும், பழையவகை சந்தர்ப்பவாதிகள் மற்றும் திரிபுவாதிகளும் முன் வைக்கும் முழக்கங்களே தவிர ஒரு போதும் மார்க்சிய முழக்கங்களாய் இருந்ததில்லை.

''தொழிலாளர் சுயநிர்வாகம்'' ''தொழிலாளர்களுக்கே தொழிற் சாலைகள்'' என்ற கோட்பாடு அடிப்படையான மார்க்சிய சோசலிச கோட்பாட்டுக்கு விரோதமானது; மார்க்சிய ஆசான்கள் நீண்ட காலத் திற்கு முன்பே அடியோடு மறுதலித்து விட்ட ஒன்று.

மார்க்சும், எங்கெல்சும் கம்யூனிஸ்ட் அறிக்கையில் சுட்டிக்காட்டி யதுபோல், ''பாட்டாளி வர்க்கம் அதன் அரசியல் மேலாதிக்கத்தைப் பயன்படுத்தி முதலாளி வர்க்கத்திடமிருந்து மூலதனம் அனைத்தையும் படிப்படியாக கைப்பற்றி உற்பத்திக்கருவிகள் அனைத்தையும் அரசின் கையில் மையப்படுத்தும்...''

எங்கெல்ஸ்,டூரிங்குக்கு மறுப்பு என்ற நூலில் எழுதினார்:''பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, உற்பத்திச் சாதனங் களை அரசுடைமையாக மாற்றுகிறது.''

பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியபின் உற்பத்திச் சாதனங்களைப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசின் கையில் ஒன்று குவித்தாகவேண்டும். இது சோசலிசத்தின் அடிப்படைக் கொள்கை.

அக்டோபர் புரட்சிக்குப்பின் சோவியத் அதிகாரத்தின் ஆரம்பகாலத்தில் ஆலைகளை உற்பத்தியாளர்களிடம் ஒப்படைத்து, அவர்கள் நேரடியாக ''உற்பத்தியை ஒழுங்கமைக்க'' வழி செய்யுமாறு சிலர் வலியுறுத்தியபோது, லெனின் இந்தக் கருத்தைக் கடுமையாக விமர்சித்தார். யதார்த்தத்தில் இதன் பொருள் பாட்டாளி வர்க்கச் சர்வாதிக்காரத்தை எதிர்த்தலே என்றார்.

அவர் திட்டவட்டமாகச் சொன்னார்;

''நேரடியாகவோ, மறைமுகமாகவோ, தனித்தனி தொழிற்சாலைகள் அல்லது தனித்தனித் தொழில் முறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமது உற்பத்தியைத் தமக்கே உடைமையாக்கிக் கொள்வதையும் அரசதிகாரத்தின் ஆணைகளைப் பலவீனப்படுத்தும், அல்லது தடைப் படுத்தும் உரிமையையும் சட்டபூர்வமாக்குவது சோவியத் அதிகாரத்தின் ஆதாரக் கோட்பாடுகளைப் படுமோசமாகத் திரிப்பதும், சோசலிசத்தை அடியோடு கைகழுவி விடுவதும் ஆகும்''[1]

ஆக, ''தொழிலாளர் சுயநிர்வாகத்துக்கும்'' சோசலிசத்துக்கும் எந்தவித சம்பந்தமில்லை என்பது தெளிவு.

உண்மையில், டிட்டோ கும்பலின் ''தொழிலாளர் சுயநிர்வாகம்'' ஒரு கேலிக்கூத்தே தவிர, தொழிலாளர்களின் சுயநிர்வாகத்துக்கு வழி செய்வதல்ல.

''தொழிலாளர் சுயநிர்வாகத்தில்'' உள்ள தொழில் நிறுவனங்கள் உண்மையில் புதிய அதிகாரவர்க்கத் தரகு முதலாளிவர்க்கத்தின் பிடியில் சிக்கியுள்ளன; டிட்டோகும்பல் இந்த வர்க்கத்தின் பிரதிநிதிதான். இந்த வர்க்கம்தான் தொழில் நிறுவனங்களின் சொத்தினையும், ஆட்களையும் அதன்பிடியில் வைத்துக்கொண்டு, அவற்றின் வருமானத்தில் பெரும் பகுதியை வாரிச் சுருட்டுகிறது.

வங்கிகளின் வாயிலாய், டிட்டோ கும்பல் நாடு முழுவதன் கடன் செலாவணியையும், எல்லாத்தொழில் நிறுவனங்களின் முதலீட்டு நிதி மற்றும் சுழல் மூலதனத்தையும் தன் பிடியில் வைத்துக்கொண்டு, அவற்றின் நிதி விவகாரங்களை மேற்பார்வையிடுகிறது.

வரிவசூல், வட்டிவசூல் போன்ற பல்வேறு வழிகளிலும் டிட்டோ கும்பல் இந்தத்தொழில் நிறுவனங்களின் வருமானத்தை சூறையாடுகிறது. ''1961-ல் நடந்துள்ள வேலைபற்றிய யூகோஸ்லாவியக்

1, *வி. இ. லெனின் ''சோவியத் அதிகாரத்தின் ஜனநாயகம் மற்றும் சோசலித் தன்மை குறித்து''.*

கூட்டரசு நிர்வாக மன்றத்தின் அறிக்கையில்'' தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களின் படி, டிட்டோ கும்பல் தொழில் நிறுவனங்களின் நிகர வருமானத்தில் சுமார் முக்கால்பங்கை இவ்வழியில் எடுத்துக்கொண்ட தாக தெரிகிறது.

டிட்டோ கும்பல் மக்களது உழைப்பின் பலன்களை அபகரித்து, அதிகாரவர்க்கக் கும்பலின் ஆடம்பரச் செலவுகளுக்கும், தமது பிற்போக்கு ஆட்சியை நிலைநிறுத்துவதற்கும், உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்கும் அரசு இயந்திரத்தை வலுப்படுத்துவதற்கும், அந்நியக் கடன்களுக்கு வட்டி செலுத்துவதாகச் சொல்லி ஏகாதிபத்தியவாதிகளுக்கு கப்பம் கட்டுவதற்கும் பெரும்பகுதியைப் பயன்படுத்திக் கொள்கிறது.

மேலும், டிட்டோ கும்பல் இந்தத்தொழில் நிறுவனங்களை அவற்றின் மேலாளர்கள் வாயிலாய்த் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. மேலாளர்கள் போட்டி அடிப்படையில் தொழில் நிறுவனங்களால் தேர்வு செய்யப்படுவது ஒப்புக்குத்தான். உண்மையில் டிட்டோ கும்பல் தான் அவர்களை நியமிக்கிறது. அவர்கள் இந்தத் தொழில் நிறுவனங்களில் அதிகாரவர்க்கத் தரகு முதலாளி வர்க்கத்தின் கையாட்களாகச் செயல்படுகின்றனர்.

''தொழிலாளர் சுயநிர்வாகத்தில்'' உள்ள தொழில் நிறுவனங்களில் மேலாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான உறவுகள் உள்ளபடியே வேலை வாங்குபவர்களுக்கும் வேலை செய்பவர்களுச்கும் இடையிலான, சுரண்டுகிறவர்களுக்கும் சுரண்டப்படுகிறவர்களுக்கும் இடையிலான உறவுகளாகவே உள்ளன.

நடப்பு நிலவரப்படி, இந்தத் தொழில் நிறுவனங்களின் உற்பத்தித் திட்டங்களையும் வளர்ச்சித் திசைவழியையும் தீர்மானிக்கவும், உற்பத்தி சாதனங்களை விற்கவும் வாங்கவும், தொழில் நிறுவனங்களின் வருமானப் பகிர்வு பற்றி முடிவுகள் எடுக்கவும், தொழிலாளர்களைச் சேர்க்கவும் நீக்கவும், தொழிலாளர் மன்றங்கள் அல்லது மேலாண்மை வாரியங்களின் தீர்மானங்களைப் புறக்கணிக்கவும் மேலாளர்களுக்கு அதிகாரம் உண்டு.

தொழிலாளர் மன்றமென்பது சம்பிரதாயபூர்வமானதே, ஒருவிதமான வாக்களிப்பு இயந்திரமே என்பதையும், தொழில் நிறுவனங்களில் அனைத்து அதிகாரமும் மேலாளரின் கையில் இருப்பதையும் நிரூபிக்கக் கூடிய பல செய்திகளும் யூகோஸ்லாவியப் பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன.

தொழில் நிறுவனத்தின் உற்பத்திச் சாதனங்களும், வருமானப் பகிர்வும் அதன் மேலாளரின் கையிலிருப்பதால், அவர் பல்வேறு சிறப்பு உரிமைகளையும் பயன்படுத்தி தொழிலாளரது உழைப்பின் பலன்களைத் தனதாக்கிக்கொள்ள முடிகிறது.

இந்தத்தொழில் நிறுவனங்களில் மேலாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஊதியத்தில் மட்டுமல்லாமல் போனஸிலும் பெருத்த இடைவெளி இருப்பதை டிட்டோ கும்பலே ஒப்புக்கொள்கிறது. சில தொழில் நிறுவனங்களில் மேலாளர்களும் மேலதிகாரிகளும் பெறும் போனஸ்,தொழிலாளர் பெறும் போனஸைப்போல் நாற்பது மடங்காகும். ''சில தொழில் நிறுவனங்களில், தலைவர்கள் பெறும் மொத்த போனஸ் தொழிலாளர் அனைவரும் பெறும் மொத்தக் கூலிக்கு சமமாயுள்ளது''. 1

மேலும், தொழில்நிறுவனங்களின் மேலாளர்கள் பல்வேறு வழிகளிலும் தகிடுதத்தம்செய்து பணம்பண்ணுவதற்குத் தமது சிறப்புரிமைகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். லஞ்சம், கையாடல், திருட்டு ஆகியவற்றின் மூலம் மேலாளர்கள் தமது வருமானத்தை இன்னுமதிகமாய் பெருக்கிக் கொள்கின்றனர்.

பெருந்திரளான தொழிலாளர்கள் வறுமையில் வாடுகின்றனர். வேலை உத்தரவாதம் என்பதே கிடையாது. தொழில் நிறுவனங்கள் மூடப்படுவதால் ஏராளமானோர் வேலை இழக்கின்றனர். அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களின்படி, 1963பிப்ரவரியில் வேலையற்றோர் எண்ணிக்கை 33,9000 என்ற அளவை எட்டியது; அதாவது வேலையிலிருப்போரின் எண்ணிக்கை சுமார் 10 சதவீதம். மேலும், ஆண்டுதோறும் ஏராளமான தொழிலாளர்கள் வேலை தேடி வெளிநாடு செல்கிறார்கள்.

1961 செப்டம்பர் 25 தேதியிட்ட பொலிட்டிக்கா ஒப்புக்கொண்டது போல, ''சில தொழிலாளர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் இடையே பெருத்த இடைவெளி உள்ளது. முன்னவர்கள் பின்னவர்களைத் தமது கூலியைக் 'கபளீகரம்' செய்யும் 'அதிகார வர்க்கத்தினராக'ப் பார்க்கிறார்கள்.

''தொழிலாளர் சுயநிர்வாகத்தில்'' உள்ள யூகோஸ்லாவிய தொழில் நிறுவனங்களில் புதியதொரு சமூகக்குழு—பலரது உழைப்பைத் தமதாக்கிகொள்ளும் சிலரைக் கொண்ட சமூகக்குழு...உண்டாக்கியிருப்பதை இந்த உண்மைகள் காட்டுகின்றன. இது யூகோஸ்லாவியாவில் புதிய அதிகார வர்க்கத் தரகு முதலாளி வர்க்கத்தின் ஒரு முக்கியக் கூறாகும்.

---

1. *யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் மத்தியக் குழு அனைத்து மட்டங்களிலும் உள்ள அதன் அமைப்புகளுக்கும் தலைமைக் குழுக்களுக்கும் எழுதிய கடிதம், 1958, பிப்ரவரி 17.*

டிட்டோ கும்பல் ''தொழிலாளர் சுயநிர்வாகத்தை'' ஊக்கிவளர்த்து அனைத்து மக்களுக்கும் சொந்தமாயிருந்த தொழில் நிறுவனங்களை சோசலிசப் பொருளாதாரப் பாதையை விட்டு அடியோடு விலகச் செய்து விட்டது.

இதன் பிரதான வெளிப்பாடுகள் வருமாறு :

முதலாவது : பொருளாதாரத் துறையில் அரசின் ஒருங்கிணைந்த திட்டமிடல் கைவிடப்பட்டது.

இரண்டாவது : லாபமே தொழில் நிறுவனங்களின் செயல்பாட்டுக் குத் தலையாய ஊக்கமாய்க் கொள்ளப்படுகிறது. வருமானத்தையும் லாபத்தையும் பெருக்கிக் கொள்வதற்காகத் தொழில் நிறுவனங்கள் பல விதமான வழிமுறைகளையும் கையாளலாம். அதாவது, ''தொழிலாளர் சுயநிர்வாகத்தில்'' உள்ள தொழில் நிறுவனங்களில் உற்பத்தியின் நோக்கம் சமூகத் தேவைகளை நிறைவு செய்வதல்ல, எந்த முதலாளித் துவத் தொழில் நிறுவனத்தையும் போலவே லாபம் சம்பாதிப்பதுதான்.

மூன்றாவது : தடையிலா முதலாளித்துவப் போட்டாப் போட்டியை ஊக்கப்படுத்தும் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது. ''உள்நாட்டுப் போட்டி நமது சாதாரண மக்களுக்கு, நுகர்வோர்க்கு நன்மை பயக்கும்'' என்று தொழில் நிறுவனங்களின் மேலாளர்களிடம் டிட்டோ சொல்லி இருக்கிறார். ''போட்டி போடுவதும், லாபம் சம்பாதிப்பதும், ஊக வாணிபமும் இன்ன பிறவும்'' ''உற்பத்தியாளர்களின் செயலூக்கத்தை யும், அவர்களது கூட்டிணைவு, கம்யூன்கள் போன்றவற்றின் செய லூக்கத்தையும் வளர்ப்பதற்கு பயனுள்ள பங்குவகிப்பதால்''[1] அவற்றை அனுமதிப்பதாக டிட்டோ கும்பல் பகிரங்கமாக பறை சாற்றுகிறது.

நான்காவது : தடையிலா முதலாளித்துவப் போட்டாப் போட்டியை வளர்ப்பதற்கு முக்கியக் கருவிகளான கடன் செலாவணியும், வங்கிகளும் பயன்படுத்தப்படுகின்றன. கடன் வழங்குவதற்காக, டிட்டோ ஆட்சியில் கடன் செலாவணி மற்றும் வங்கி அமைப்பு முதலீட்டுக்கான ஒப்பந்தப் புள்ளிகளுக்கு அழைப்பு விடுக்கிறது. மிகக் குறுகிய காலத்திலும், மிக அதிக வட்டியுடனும் கடனைத் திருப்பிச் செலுத்த சக்தியுள்ளவர் யாரோ அவருக்கே கடன் கிடைக்கும். அவர்களது சொற்களில் ''முதலீட்டுக் கடன்களை வழங்குவதற்கு வழக்கமான வழிமுறையாகப் போட்டியைப் பயன்படுத்தும் பொருட்டு'' [2] இப்படிச் செய்யப்படுகிறதாம்.

---

1. *விளாதிமீர் பக்காரிக், குரோசியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் நான்காவது பேராயத்துக்கு அளித்த அறிக்கை, 1959 ஏப்ரல் 7.*

2. *அகுஸ்டின் பாப்பிக், ''யூகோஸ்லாவியாவில் முதலீட்டு நிதியாக் கம், கூட்டுடைமைப் பொருளாதார ஏடுகள், பெல்கிரேடு, 1959 ஏப்ரல்—நவம்பர்.*

அய்ந்தாவது : தொழில் நிறுவனங்களிடையிலான உறவுகள் தடையிலாச் சந்தையில் முட்டி மோதும் முதலாளித்துவப் போட்டாப் போட்டி உறவுகளாய் இருக்கின்றனவே தவிர ஒருங்கிணைந்த அரசாங்கத் திட்டத்திற்குட்பட்டு பரஸ்பர ஆதரவும், இணக்கமும் நல்கும் சோசலிச உறவுகளாய் இல்லை.

இவை அனைத்தும் திட்டமிட்ட சோசலிசப் பொருளாதாரத்தின் அடித்தளத்தையே கீழறுத்து விட்டது.

லெனின் சொன்னார்:

''கோடிக்கணக்கான மக்களை உற்பத்தியிலும் விநியோகத்திலும் ஒரே நியமத்தை கறாராகக் கடைபிடிக்குமாறு செய்யும் திட்டமிட்ட ஒழுங்கமைப்பை அரசு செய்யாவிட்டால், சோசலிசம் பற்றி நினைத்துப் பார்க்கவும் முடியாது''[1]

அவர் மேலும் சொன்னார்:

''எல்லாத் துறைகளிலும் கணக்கு வைத்தல், சரக்குகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை நெறிப்படுத்தல் ஆகியவற்றை அரசு செய்யாவிட்டால், உழைப்பாளரின் அதிகாரத்தை, உழைப்பாளரின் சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியாமற்போகும்... முதலாளித்துவ நுகத்தடியை மீண்டும் சுமப்பது தவிர்க்க முடியாததாகி விடும்''[2]

''தொழிலாளர் சுயநிர்வாகம்'' என்ற பெயர்ப் பலகையின் மறைவில் யூகோஸ்லாவியாவில் பொருளாதாரத் துறைப் பிரிவுகள், தொழில் நிறுவனங்கள் யாவும் கடுமையான முதலாளித்துவப் போட்டாப் போட்டியில் ஈடுபட்டுள்ளன. ''தொழிலாளர் சுயநிர்வாகத்தில்'' உள்ள தொழில் நிறுவனங்கள் கையாடலிலும், ஊக வாணிபத்திலும், பதுக்கலிலும் ஈடுபடுவதும், விலைகளைக் கணக்கு வழக்கின்றி ஏற்றுவதும், லஞ்சம் கொடுப்பதும், தொழில்நுட்ப ரகசியங்களை மறைப்பதும் சர்வசாதாரணமாகி விட்ட சங்கதிகள். சந்தை பிடிக்கவும், லாபம் சம்பாதிக்கவுமான மூர்க்கப்போட்டியில் அவை பத்திரிகைகளிலும் வானொலியிலும் ஒன்றையொன்று தாக்கிக் கொள்வதும் கூட சர்வசாதாரணமாகி விட்டது.

---

1. *வி. இ. லெனின், ''சோவியத் அரசாங்கத்தின் உடனடிக் கடமைகள்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இன்டர்நேஷனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க், 1943, தொகுதி 8, பக்கம் 327.*

2. *வி. இ. லெனின், ''இடதுசாரி'' சிறுபிள்ளைத்தனமும் குட்டி முதலாளித்துவ மனப்பான்மையும், தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேஷனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க், 1943, தொகுதி 7, பக்கம் 365.*

உள்நாட்டுச் சந்தையில் மட்டுமல்லாது அந்நிய வர்த்தகத்திலும் கூட யூகோஸ்லாவியத் தொழில் நிறுவனங்களிடையே கடும் போட்டி நடக்கிறது. யூகோஸ்லாவிய அந்நிய வர்த்தக நிறுவனங்களின் இருபது, முப்பது முகவர்கள் எல்லோரும் ஒரே அயல் நாட்டுச் சந்தைக்குச் சென்று, வியாபாரத்துக்காகப் போட்டியிட்டு, அவர்களில் ஒருவர் மற்றொருவரின் வாடிக்கையாளர்கள் அல்லது வழங்குநர்களைத் தட்டிப் பறிப்பது மாமூல் சங்கதியே என்று யூகோஸ்லாவியப் பத்திரிகைகள் சொல்கின்றன. அந்நிய வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இந்தத் தொழில் நிறுவனங்கள் ''சுயநல நோக்கங்களால் உந்தப்பட்டு'' ''எப்பாடுபட்டும் லாபம் சம்பாதிக்கின்றன'' ''இதை செய்யலாம், இதை செய்யக்கூடாது என்ற வரைமுறையே இல்லாமல் எல்லா வழிகளையும் கையாள்கின்றன.''

இந்த மூர்க்கமான போட்டியினால் யூகோஸ்லாவியச் சந்தை குழப்பமும் குளறுபடியுமாக உள்ளது. வெவ்வேறு நகரங்கள் அல்லது பிராந்தியங்களில் மட்டுமல்லாமல் ஒரே இடத்திலுள்ள வெவ்வேறு கடைகளிலும் கூட விலைகள் கணிசமாய் வேறுபடுகின்றன. ஒரே உற்பத்தியாளர் தயாரித்த ஒரே வகைச் சரக்குகளின் விலைகள் கூட வேறுபடுகின்றன. விலை குறையாமல் பார்த்துக் கொள்வதற்காக, சில தொழில் நிறுவனங்கள் பெருமளவு விவசாய விளைபொருட்களைத் தயங்காமல் அழித்துவிடுகின்றன.

இந்த மூர்க்கமான போட்டியினால் ஏற்பட்டுள்ள இன்னொரு விளைவு: யூகோஸ்லாவியாவில் ஏராளமான தொழில் நிறுவனங்கள் மூடப்படுகின்றன. யூகோஸ்லாவியக் கூட்டாட்சி மக்கள் குடியரசின் அதிகாரப்பூர்வ செய்தியறிக்கை அளித்துள்ள தகவலின்படி, சமீப ஆண்டுகளில் ஆண்டுதோறும் 500 முதல் 600 தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு உள்ளன.

இவையனைத்திலிருந்தும் தெளிவானது என்னவென்றால்: யூகோஸ்லாவியப் ''பொதுத்துறைப்'' பொருளாதாரம், முதலாளித்துவப் போட்டாப் போட்டி மற்றும் உற்பத்தி அராஜகத்தின் விதிகளால் ஆளப்படுவதே அல்லாமல், திட்டமிட்ட சோசலிசப் பொருளாதாரத்தின் விதிகளால் ஆளப்படுவது அல்ல. ''தொழிலாளர் சுயநிர்வாகத்தில்'' உள்ள டிட்டோ கும்பலின் தொழில் நிறுவனங்கள் முதலாளித்துவத் தன்மை வாய்ந்தவையே அல்லாமல், சோசலிசத் தன்மை வாய்ந்தவை அல்ல.

டிட்டோ கும்பல் குறித்து வழங்கிய தீர்ப்பை ரத்து செய்யத் துடிப்பவர்களைப் பார்த்துக் கேட்கிறோம்: உங்கள் நோக்கம் ஏமாற்றுவது அல்லவென்றால், அதிகாரவர்க்கத் தரகு முதலாளி வர்க்கத்தின் பிடியில் உள்ள அரசு முதலாளித்துவப் பொருளாதாரத்தை சோசலிசப் பொருளாதாரம் என்று எப்படி சொல்லமுடிகிறது உங்களால்?

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சார்பு நாடு

யூகோஸ்லாவியாவில் முதலாளித்துவத்தை மீட்கும் நிகழ்வு டிட்டோ கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சேவகனாகி, யூகோஸ்லாவியா அமெரிக்க ஏகாதிபத்தியச் சார்பு நாடாகியுள்ள நிகழ்வோடு பின்னிப் பிணைந்த ஒன்று.

டிட்டோ கும்பல் மார்க்சிய-லெனினியத்துக்கு துரோகமிழைத்த தோடு, அரசின் இறையாண்மையை விற்றுவிட்டு, அமெரிக்க ஏகாதி பத்தியம் போடும் பிச்சையைக் கொண்டு காலந்தள்ளும் மானங்கெட்ட பாதையில் இறங்கியது.

முழுமைபெறாத புள்ளிவிவரங்களின்படி, இரண்டாம் உலகப்போரின் முடிவிலிருந்து 1963 ஜனவரி வரை அமெரிக்காவும் இதர ஏகாதிபத்திய அரசுகளும் டிட்டோ கும்பலுக்கு வழங்கியுள்ள மொத்த ''உதவி'' 546 கோடி அமெரிக்க டாலராகும்; இதில் 60 சதவீதம், அதாவது சுமாராக 350 கோடி டாலர் அமெரிக்க ''உதவி'' ஆகும். இந்த அமெரிக்க உதவியில் மிகப்பெரும் பகுதி 1950-க்குப் பிறகு வழங்கப் பட்டது.

அமெரிக்க உதவிதான் யூகோஸ்லாவியாவின் நிதியாதாரத்துக்கும் பொருளாதாரத்துக்கும் தூணாக இருந்துவருகிறது. அதிகாரப்பூர்வப் புள்ளி விவரங்களின்படி 1961-ல் டிட்டோ கும்பல் அமெரிக்காவிடமிருந் தும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ள பன்னாட்டு நிதியமைப்பு களிடமிருந்தும் பெற்ற கடன்களின் மொத்தத்தொகை 34.6 கோடி அமெரிக்க டாலர்,அதாவது அந்த ஆண்டு யூகோஸ்லாவியக் கூட்டரசின் வரவு செலவுத்திட்ட வருமானத்தில் 47.4 சதவீதம் ஆகும். ஏனைய மேற்கத்திய நாடுகளிலிருந்து பெற்ற உதவியையும் சேர்த்துக்கொண் டால் 1961-ல் டிட்டோ கும்பல் மேற்கத்திய நாடுகளிலிருந்து வாங்கிய மொத்தப்பணம் 49.3 கோடி அமெரிக்க டாலர் அதாவது அந்த ஆண்டு கூட்டரசின் வரவு செலவுத் திட்ட வருமானத்தில் 67.6 சதவீதம் ஆகும்.

அமெரிக்காவிடம் உதவி பெறும் பொருட்டு, டிட்டோ கும்பல் அமெ ரிக்காவுடன் அடுத்தடுத்து பல துரோக ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. பரஸ்பர பாதுகாப்புஉதவி தொடர்பான உடன்படிக்கைகுறித்து 1951-ல் யூகோஸ்லாவியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே பரிமாற்றம் செய்யப் பட்ட குறிப்புகளின், அமெரிக்க இராணுவ உதவிப் பொருட்கள் யூகோஸ் லாவியாவிற்கு வந்து சேருவதையும் அங்கே விநியோகமாவதையும் கண் காணிக்கவும்,மேற்பார்வையிடவும் அமெரிக்க அரசாங்க அதிகாரிகளுக்கு ''தங்குதடையற்ற சுதந்திரம்'' உண்டு; அவர்கள் ''போக்குவரத்து

மற்றும் தகவல் அமைப்புகளைப் பார்வையிட முழு சுதந்திரம்'' உண்டு. இந்த உடன்படிக்கையின்படி, யூகோஸ்லாவியா அமெரிக்காவுக்குப் போர்த்தளவாடங்களுக்குத் தேவையான கச்சாப்பொருட்களையும் வழங்க வேண்டும்.

யூகோஸ்லாவியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே 1951-ல் கையொப்பமான இராணுவ உதவி தொடர்பான உடன்படிக்கையின்படி, யூகோஸ்லாவியா ''சுதந்திர உலகின் பாதுகாப்பு வலிமையை வளர்க்கவும் நிலைநிறுத்தவும் முழு அளவில் பங்கு செலுத்த வேண்டும்'' அய்க்கிய நாடுகள் அமைப்பிற்குத் துருப்புகளை அளித்து உதவத் தயாராயி இருக்க வேண்டும். இந்த உடன்படிக்கையின்படி அமெரிக்கா அனுப்பும் இராணுவத் தூதுக்குழு யூகோஸ்லாவியத் துருப்புகள் பெறும் பயிற்சியை நேரடியாக மேற்பார்வையிடும்.

1952-ம் வருட யூகோஸ்லாவிய-அமெரிக்கப் பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையின்படி, யூகோஸ்லாவியா அமெரிக்க உதவியைப் பயன்படுத்தி, ''அடிப்படையான தனி மனித உரிமைகளையும், சுதந்திரங்களையும் ஜனநாயக நிறுவனங்களையும் வளர்க்க வேண்டும்'' அதாவது முதலாளித்துவத்தை வளர்க்க வேண்டும்.

1954-ல் யூகோஸ்லாவியா நேட்டோ (வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு) உறுப்பு நாடுகளான கிரேக்கத்துடனும், துருக்கியுடனும் நேச உறவு, அரசியல் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவிக்கான ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தம் மூன்று நாடுகளுக்கும் இடையே இராணுவத் துறையிலும் ராஜதந்திரத் துறையிலும் ஒருங்கிணைப்புக்கு வழி செய்தது. இவ்வாறு நடைமுறையில் யூகோஸ்லாவியா அமெரிக்கா கட்டுப்பாட்டில் உள்ள ராணுவக் கூட்டின் அங்கமாக மாற்றப்பட்டது.

1954-ல் தொடங்கி யூகோஸ்லாவியா அமெரிக்காவுடன் வரிசையான பல உடன்படிக்கைகள் செய்து கொண்டதன் மூலம், தனது இறையாண்மையை தாரைவார்த்து விட்டது. 1957-க்கும் 1958-க்கும் இடைப்பட்ட காலத்தில் இத்தகைய உடன்படிக்கைகள் அய்ம்பதுக்கும் மேலே கையொப்பமாகியுள்ளன.

இந்த ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் செய்து கொள்ளப்பட்டதாலும், யூகோஸ்லாவியா அமெரிக்க ஏகாதிபத்தியத்தை சார்ந்திருக்கும் நிலையை டிட்டோ கும்பல் தோற்றுவித்துவிட்டதாலும் , யூகோஸ்லாவியாவில் அமெரிக்கா கீழ்காணும் உரிமைகளைப் பெற்றிருக்கிறது.

(1) அதன் ராணுவ விவகாரங்களைக் கட்டுப்படுத்தல்;

(2) அதன் அயல்துறை விவகாரங்களைக் கட்டுப்படுத்தல்;

(3) அதன் உள் விவகாரங்களில் குறுக்கிடுதல்;

(4) அதன் நிதியமைப்பை ஆட்டிப்படைத்தல்; கண்காணித்தல்;

(5) அதன் அந்நிய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தல்;

(6) அதன் இராணுவ முக்கியத்துவமுடைய செல்வாதாரங்களை சூறையாடுதல்;

(7) இராணுவ மற்றும் பொருளாதார வேவு பார்த்தல்;

இவ்வாறாக, யூகோஸ்லாவியாவின் சுதந்திரத்தையும், இறையான்மையையும் டிட்டோ கும்பல் ஏலம் போட்டு விட்டது.

டிட்டோ கும்பல் அமெரிக்காவுடன் வரிசையான பல சமத்துவமற்ற ஒப்பந்தங்கள் செய்து கொண்டதன் மூலம் யூகோஸ்லாவியாவின் இறையான்மையை தாரை வார்த்தது போதாதென்று, அமெரிக்காவிடம் உதவி பெறுவதற்காக உள்நாட்டு கொள்கையிலும், அயல்துறைக் கொள்கையிலும் அடுத்தடுத்து எடுத்த பல நடவடிக்கைகள் மூலம் மேற்கத்திய ஏகபோக மூலதனம் யூகோஸ்லாவியாவில் ஊடுருவ வகை செய்தது.

1950-ல் தொடங்கி டிட்டோ கும்பல் அந்நிய வர்த்தகத்தின் மீதான அரசு ஏகபோகத்தை ஒழித்து விட்டது.

1953-ல் பிரகடனம் செய்யப்பட்ட அந்நிய வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய சட்டம் தொழில் நிறுவனங்கள் சுயேச்சையாக அந்நிய வர்த்தகம் செய்யவும், மேற்கத்திய ஏகபோக முதலாளித்துவத் தொழில் நிறுவனங்களோடு நேரடியாக வியாபார உறவு கொள்ளவும் அனுமதித்தது.

1961-ல் டிட்டோ ஆட்சி அந்நியச் செலாவணி மற்றும் அந்நிய வர்த்தக அமைப்புகளில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது; அவற்றின் பிரதான உள்ளடக்கம் இறக்குமதி-ஏற்றுமதி வர்த்தகத்தின் மீதான கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவதே, ஓரளவு பதனம் செய்யப்பட்ட முக்கியமான சில மூலப்பொருட்கள் மற்றும் நுகர் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் அடியோடு நீக்கப்பட்டது; இதர சரக்குகளின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் பல்வேறு அளவுகளில் தளர்த்தப்பட்டன. கட்டுப்பாடற்றவை என்று கூறப்படும் இறக்குமதிகளுக்குத் தேவையான அந்நியச் செலாவணி வழங்குதல் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

அந்நிய வர்த்தகத்தில் அரசு ஏகபோகம் என்பது சோசலிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று; இது யாவரும் அறிந்ததே.

லெனின் கூறினார்: தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் ''நமது தொழில் துறையை சீர்படுத்தவும், ரசியாவைத் தொழில்வள நாடாக்கவும் வேண்டுமானால், தொழில்துறைக்குப் பாதுகாப்பு அளித்தாக வேண்டும். இது சுங்கவரிக் கொள்கையின் வாயிலான பாதுகாப்பைக் குறிக்காது; மாறாக முழுக்க முழுக்க அந்நிய வர்த்தக ஏகபோகத்தின் வாயிலான பாதுகாப்பைத்தான் குறிக்கும்''[1]

ஸ்டாலின் கூறியதுபோல, ''அந்நிய வர்த்தக ஏகபோகம் சோவியத் அரசாங்கத்தின் அசைக்க முடியாத அடித்தளங்ககளில் ஒன்றாகும்'' அந்நிய வர்த்தக ஏகபோகத்தை ஒழித்து விடுவோமானால், ''நாட்டின் தொழில்வளர்ச்சி கைவிடப்படும்; ''முதலாளித்துவ நாடுகளின் சரக்குகள் ரசியநாட்டில் பெருக்கெடுக்கும்'' ''நமது நாடு சுயேச்சையானதென்ற நிலை போய் அரைக்காலனி நாடாகிவிடும்.''[2]

டிட்டோ ஆட்சி செய்திருப்பதுபோல் அந்நிய வர்த்தகத்திலான அரசு ஏகபோகத்தை ஒழிப்பது ஏகாதிபத்திய ஏகபோக மூலதனத்துக்கு கதவை அகலத்திறந்து விடுவதாகும்.

டிட்டோ கும்பல் மிகப்பெரிய அளவில் அமெரிக்க உதவிபெற்று, யூகோஸ்லாவியாவின் கதவினை ஏகாதிபத்தியத்துக்கு அகலத்திறந்து விட்டிருப்பதன் பொருளாதார விளைவுகள் யாவை?

முதலாவதாக: ஏகாதிபத்தியம் குவிக்கும் மட்டரக சரக்குகளுக்கு சந்தையாகியுள்ளது யூகோஸ்லாவியா.

ஏகாதிபத்திய நாடுகளின் தொழில்துறைப் பண்டங்களும், விவசாய விளை பொருட்களும் மிகப்பெரிய அளவில் யூகோஸ்லாவியச் சந்தையில் பெருக்கெடுத்து உள்ளன. அந்நிய ஏகபோக மூலதனத்துக்கு சேவகம் புரிந்து ஏராளமாய்ப் பணம் பண்ணும் யூகோஸ்லாவியத் தரகு முதலாளிகள் லாபநோக்கில் தொடர்ந்து சரக்குகளை இறக்குமதி செய்கிறார்கள்;

---

1. *வி. இ. லெனின், ''அந்நிய வர்த்தக ஏகபோகம் குறித்து'' தொகுப்பு நூல்கள், ருஷ்யப் பதிப்பு. SPPL மாஸ்கோ, 1950 தொகுதி 33 பக்கம் 420.*

2. *ஜே. வி. ஸ்டாலின், ''முதல் அமெரிக்கத் தொழிலாளர் தூதுக் குழுவிற்களித்த பேட்டி'' நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1954, தொகுதி 10, பக்கம் 115, 116.*

உள் நாட்டிலேயே உற்பத்திசெய்யக்கூடிய சரக்குகளையும், ஏராளமாய் இருப்பிலிருக்கும் சரக்குகளையும் கூட இறக்குமதி செய்கிறார்கள். யூகோஸ்லாவியத் தொழில்துறை ''அந்நிய தொழில் துறையின் தொடர்ச்சியான, சிக்கல் வாய்ந்த போட்டாப் போட்டியால் அடிமேல் அடி வாங்கிக்கொண்டிருப்பது ''எங்கும் தெளிவாக'' தெரிகிறது என்று 1961 ஜூலை 25-ல் பொலிட்டிக்கா ஒப்புக்கொண்டது.

இரண்டாவதாக: ஏகாதிபத்திய முதலீட்டுக்கு போக்கிடமான யூகோஸ்லாவியா மாறியுள்ளது.

யூகோஸ்லாவியத் தொழில் நிறுவனங்கள் பலவும் அமெரிக்கா முதலான ஏகாதிபத்திய நாடுகளின் ''உதவி'' கொண்டு கட்டப்பட்டவை. அந்நியத் தனியார் ஏகபோக மூலதனம் மிகப்பெரிய அளவில் யூகோஸ்லாவியாவில் ஊடுருவியுள்ளது. யூகோஸ்லாவியா முதலீட்டு வங்கியின் பொது மேலாளர் அகுஸ்டின் பாப்பிக் கூறியுள்ள படி, 1952-க்கும் 1956-க்கும் இடைப்பட்ட காலத்தில் ''அந்நிய நிதிப் பங்கேற்பு பொருளாதார முதலீடுகளின் மொத்த மதிப்பில் 32.5 சதவீதமாயிற்று.''1962 பிப்ரவரி 5 அன்று அமெரிக்க அயல்துறை அமைச்சர் தீன் ரஸ்க் கூறியதுபோல, யூகோஸ்லாவியாவிற்கு மூலதனம் கிடைப்பது ''பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளிலிருந்து தான்.''

மூன்றாவதாக : ஏகாதிபத்தியம் கச்சாப்பொருள் எடுப்பதற்கான விளைநிலமாகியுள்ளது யூகோஸ்லாவியா.

இராணுவ உதவிதொடர்பான உடன்படிக்கையின்படி 1951 முதல் டிட்டோ கும்பல் போர்த்தளவாடங்களுக்குத்தேவையான கச்சாப்பொருட் களை ஏராளமான அளவில் தொடர்ந்து அமெரிக்காவுக்கு வழங்கி யுள்ளது. 1961-ம் ஆண்டுக்கான யூகோஸ்லாவியக் கூட்டாட்சி மக்கள் குடியரசின் வருடாந்தரப் புள்ளிவிவர ஏட்டில் கண்டுள்ளபடி, வெளிமம், ஈயம், துத்தநாகம், அஞ்சனக்கல் போன்ற முக்கியமான உலோகங்களில் தயாரான யூகோஸ்லாவிய எற்றுமதிகளில் ஏறத்தாழ சரிபாதியளவு 1957-லிருந்து அமெரிக்காவுக்கே சென்றுள்ளது.

நான்காவதாக: யூகோஸ்லாவியத் தொழில் நிறுவனங்கள் மேற்கத் திய ஏகபோக முதலாளித்துவ நிறுவனங்களுக்கான இணைப்புக் கூடங்களாகி உள்ளன.

முக்கியமான யுகோஸ்லாவியத் தொழில்கள் பலவும் மேற்கத்திய நாடுகளில் உரிமைப்படி பொருளுற்பத்தி செய்கின்றன. ஓரளவு பதனம் செய்யப்பட்ட கச்சாப்பொருட்கள், இயந்திர உறுப்புகள், உதிரி உறுப்பு கள், ஓரளவு தயாரான செய்பொருட்கள் ஆகியவற்றின் இறக்கு மதியையே இத்தொழில்கள் நம்பியுள்ளன. இத்தொழில்களின் உற்பத்தி மேற்கத்திய ஏகபோக மூலதனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

யூகோஸ்லாவியாவில் உள்நாட்டுத் தயாரிப்புகள் என்று சொல்லி விற்கப்படும் தொழில்துறைப் பண்டங்கள் பலவும் உண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட ஆயத்தநிலை உறுப்புகளை இணைத்து யூகோஸ்லாவிய வர்த்தக முத்திரை குத்தப்பெற்றவை தான். 1962ஏப்ரல் 25 தேதி வெஸ்னிக் யூஸ்ரே கூறியதுபோல ''நமது தொழில் நிறுவனங் களில் சில தனிவிதமானது வாணிப அமைப்பாகி வருகின்றன. இவை பொருளுற்பத்தி செய்யாமல், இணைப்புப் பணி மட்டும் செய்கின்றன; பிறரது உற்பத்திப்பொருள் மீது தமது வர்த்தக சின்னத்தை (லேபிளை) ஒட்டுவதோடு சரி''

இந்நிலையில், யூகோஸ்லாவியா மேற்கத்திய ஏகபோக மூலதனத் தினது உலகச் சந்தையின் பிரிக்கமுடியாத பகுதியாகி விட்டது. நிதித் துறையிலும், பொருளாதாரத்துறையிலும், அது முதலாளித்துவ உலகச் சந்தையோடு இறுக்கமாகப் பிணைப்புண்டு, ஏகாதிபத்தியத்தின், குறிப் பான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சார்பு நாடாகச் சீரழிந்துள்ளது.

சோசலிச நாடு அதன் சுயேச்சையையும், இறையாண்மையையும் தாரை வார்த்துவிட்டு, ஏகாதிபத்தியத் தொங்குசதை ஆகிவிடும்போது முதலாளித்துவ அமைப்பின் மீட்சியைத் தவிர்க்கமுடியாது.

அமெரிக்க உதவியை நம்பி ''சோசலிசத்தை'' கட்டும் தனிப்பாதை என டிட்டோ கும்பல் விளம்பரபடுத்தும் பாதை ஏகாதிபத்தியத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக சோசலிச அமைப்பை முதலாளித் துவ அமைப்பாக மாற்றும் பாதையே தவிர வேறல்ல; சுயேச்சை நாடு என்ற நிலையிலிருந்து அரைக்காலனி நாடாகச் சீரழியும் பாதையே தவிர வேறல்ல.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்தச் சார்புநாடு ''சோசலிசத்தைக் கட்டுகிறது'' என்று அடித்துச் சொல்கிறார் குருச்சேவ். வேடிக்கைதான்! அமெரிக்க உதவியை வியாபாரச் சின்னமாய் கொண்ட சுயவிளம்பர சோசலிசம், மார்க்சும், எங்கெல்சும், லெனினும் விமர்சனம் செய்தபோலி சோசலிச வகைகளில் சேர்ந்துள்ள புதிய சரக்காகும். ''மார்க்சிய-லெனி னியக் கோட்பாட்டை ஆக்கபூர்வமாய் வளர்ப்பதற்கு'' டிட்டோவும், குருச்சேவும் செய்துள்ள மாபெரும் பங்களிப்புகளில் இது ஒன்றுபோலும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எதிர்ப் புரட்சிப் படை பிரிவு

சர்வதேச உறவுகளில் டிட்டோ கும்பல் வகித்துவரும் எதிர் புரட்சிப் பாத்திரத்தையும், அதன் பிற்போக்கு அயல்துறைக் கொள்கைகளையும் அளவுகோலாய்க் கொண்டு பார்க்கும்போது, யூகோஸ்லாவியா சோசலிச நாடல்ல என்பது இன்னுமதிகமாய்த் தெளிவாகிறது.

சர்வதேச அரங்கில் டிட்டோ கும்பல் உலகப்புரட்சியை சீர்குலைப்ப தற்கான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விசேஷ படைப்பிரிவாகச் செயல் படுகிறது.

யூகோஸ்லாவியாவை முதலாளித்துவ மீட்சிக்கான முன்னுதாரணம் ஆக்கியதன் மூலம், டிட்டோ கும்பல் சோசலிச நாடுகளுக்குள் ''அமைதி வழிப்பரிணாம வளர்ச்சி'' என்ற கொள்கையை அமெரிக்க ஏகாதிபத்தியம் நிறைவேற்றுவதற்கு உதவி புரிந்து வருகிறது.

சோசலிச நாடு என்னும் பெயர்ப்பலகையின் கீழ், டிட்டோ கும்பல் வெறித்தனமாக சோசலிச முகாமை எதிர்த்தும், சீர் குலைத்தும் வருவ தோடு, சீன எதிர்ப்புப் பிரசாரத்தில் தீவிர கையாளாக செயல்பட்டு வருகிறது.

கூட்டுச்சேராமை, முனைப்பான சகவாழ்வு என்ற போர்வையில், டிட்டோ கும்பல் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்கா விலும் தேசிய விடுதலை இயக்கத்தை சீர்குலைக்க முயன்று வருகிறது; அமெரிக்காவின் புதிய காலனி ஆதிக்கத்துக்கு சேவகம் செய்துவருகிறது.

டிட்டோ கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அலங்கரித்துக் காட்டவும் ஏகாதிபத்தியத்தின் போர்வெறிக் கொள்கைகளுக்கெதிரான உலகமக்களின் போராட்டத்தை மழுங்கடிக்கவும் செய்யாத முயற்சி இல்லை.

''ஸ்டாலினியத்தை'' எதிர்ப்பதாகச் சொல்லி, டிட்டோ கும்பல் எங்கெங்கும் திருத்தல்வாத நச்சுவிதைகளைத் தூவி வருகிறது; எல்லா நாடுகளிலும் மக்கள் புரட்சியை எதிர்த்து வருகிறது.

டிட்டோ கும்பல் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாய் நடந்துள்ள முக்கியமான சர்வதேச நிகழ்ச்சிகளில் எப்போதுமே அமெரிக்க ஏகாதிபத் தியத்தின் அடிவருடியாகத்தான் செயல்பட்டுள்ளது.

---

1. கிரேக்க நாட்டில் நடந்த புரட்சியின்போது 1949 ஜூலை 10-ல் டிட்டோ, யூகோஸ்லாவிய-கிரேக்க எல்லையை மூடி, கிரேக்க மக்களின்

கொரில்லாக்கள் யூகோஸ்லாவியாவிற்குள் நுழைவதைத் தடுத்தார். அதே சமயம் கொரில்லாக்களைப் பின்னாலிருந்து தாக்குவதற்காக கிரேக்க முடியரசின் பாசிசத் துருப்புகள் யூகோஸ்லாவியப் பிரதேசம் வழியாகச் செல்ல அனுமதித்தார். இவ்விதத்தில் டிட்டோ கும்பல் கிரேக்க மக்களின் புரட்சியை அமெரிக்க-பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் நசுக்குவதற்கு உதவியது.

2. கொரியப் போர். 1950 செப்டம்பர் 6-ல் வெளியிட்ட அறிக்கையில், அப்போது அயல்துறை அமைச்சராயிருந்த எட்வர்டு கார்தல்ஜ் ஆக்கிரமிப்பை எதிர்த்து கொரிய மக்கள் நடத்திய நியாயமான போரை அப்பட்டமாய் தூற்றியதோடு, அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு வக்காலத்தும் வாங்கினார். டிசம்பர் 1-ல் அய்க்கிய நாடுகள் சபை பாதுகாப்பு மன்றத்தில் பேசிய டிட்டோ கும்பலின் பிரதிநிதி, ''கொரியப் போரில் முனைப்புடன் குறுக்கிட்டமைக்காக'' சீனத்தைச் சாடினார். டிட்டோ கும்பல் அய்க்கிய நாடுகள் சபை அமைப்பில் சீனாவுக்கும் கொரியாவுக்கும் எதிரான வாணிபத் தடைக்கு ஆதரவாகவும் வாக்களித்தது.

3. வியட்னாம் மக்களின் விடுதலைப் போர். 1954 ஏப்ரலில் இந்தோ-சீனா பற்றிய ஜெனிவா மாநாடு கூடவிருந்த நிலையில், டிட்டோ கும்பல் வியட்னாமில் மக்களின் நியாயமான போராட்டத்தை வன்மையாய்த் தூற்றியது, மாஸ்கோவும், பீகிங்கும் உலகப்போருக்குப் பின்னர் கடைப்பிடித்து வரும் ''கெடுபிடிப் போர்க் கொள்கையில் ஒரு பகடையாக''[1] வியட்னாமிய மக்களை பயன்படுத்துகின்றன என்கிறது. தியன் பியன் ஃபூவை விடுதலை செய்ய வியட்னாமிய மக்கள் நடத்திய தீரப்போர் ''நல்லெண்ண சமிக்ஞை அல்ல'' என்கிறது.[2]

4. அல்பேனியாவுக்கு எதிரான குழிபறிப்பு வேலை. டிட்டோ கும்பல் நீண்ட காலமாகவே சோசலிச அல்பேனியாவுக்கு எதிராகக் குழிப்பறிப்பு வேலையிலும், ஆத்திரமூட்டும் ஆயுத நடவடிகைகளிலும் ஈடுபட்டு வருகிறது. 1944, 1948, 1956, 1960 ஆண்டுகளில் நான்கு பெரும் தேசத் துரோக முயற்சிகளுக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்தது. 1948 முதல் 1958 வரையிலான காலத்தில் யூகோஸ்லாவிய-அல்பேனிய எல்லையில் 470 தடவைக்கு மேல் ஆத்திரமூட்டும் ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டது. 1960-ல் டிட்டோ கும்பலும்; கிரேக்க பிற்போக்காளர்களும் மத்தியதரைக் கடலிருந்த அமெரிக்க ஆறாவது கடற்படையுடன் சேர்ந்து அல்பேனியாவைத் தாக்க திட்டமிட்டனர்.

---

1. போர்பா, 1954. ஏப்ரல் 23.
2. ஷே கூறியவை, மே 8.

5. ஹங்கேரியில் நடந்த எதிர்ப்புரட்சிக் கலகம். 1956 அக்டோபரில் ஹங்கேரியில் நடந்த எதிர்ப்புரட்சிக் கலகத்தில் தலையிட்டுத் தூண்டிவிடும் வெட்கங்கெட்ட பாத்திரத்தை டிட்டோ கும்பல் வகித்தது. கலகம் வெடித்தபிறகு, துரோகி நேகியின் எதிர்ப்புரட்சி வழிமுறைகளை ஆதரிக்கும் வகையில் டிட்டோ ஒரு கடிதம் வெளியிட்டார். நவம்பர் 3-ல் டிட்டோ கும்பல் ஹங்கேரியிலுள்ள யூகோஸ்லாவிய தூதரகத்தில் நேகியை தஞ்சம் புகச் செய்தது. நவம்பர் 11 அன்று ஆற்றிய உரையில் டிட்டோ இந்த எதிர்ப்புரட்சிக் கலகத்தை ''முற்போக்காளர்களின்'' போராட்டமென வர்ணித்தார்; வெல்லப்போவது ''யூகோஸ்லாவியாவின் பாதையா'' அல்லது ''ஸ்டாலினியத்தின் பாதையா'' என்று துடுக்குத்தனமாய்க் கேள்வி எழுப்பினார்.

6. மத்தியக் கிழக்கு நிகழ்ச்சிகள். 1958-ல் லெபனானை ஆக்கிரமிக்க அமெரிக்க ஏகாதிபத்தியமும், ஜோர்டானை ஆக்கிரமிக்க பிரித்தானிய ஏகாதிபத்தியமும் துருப்புக்களை அனுப்பி வைத்தன. இதை எதிர்த்து உலகெங்கிலும் கிளர்ச்சி அலை பரவியது. அமெரிக்க, பிரித்தானியத் துருப்புக்களை உடனே வாபஸ் பெற வேண்டுமெனக் கோரப்பட்டது. மத்திய கிழக்கு நிலைமை தொடர்பாக கூட்டப்பட்ட அய்க்கிய நாடுகள் பொதுச்சபை அவசரக் கூட்டத்தில் யூகோஸ்லாவிய அயல் துறை அரசுச் செயலர் ஜோக்கா பொப்போவிக் ''அமெரிக்காவும் மகா பிரிட்டனும் மேற்கொண்ட நடவடிக்கைகளை கண்டிக்க அல்லது அங்கீகரிக்க வற்புறுத்துகிறோமா என்பதல்ல பிரச்சினை'' என்று கூறினார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடியிலுள்ள அமைப்பாகிய அய்க்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

7. தைவான் ஜலசந்தியில் நடந்த சம்பவம். 1958 இலையுதிர் காலத்தில் தைவான் ஜலசந்தியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்து வந்த ஆத்திரமூட்டும் காரியங்களுக்குப் பதிலடி கொடுக்கவும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடியான சியாங்கே ஷேக் கும்பலை தண்டிக்கவும், சீன மக்கள் விடுதலை இராணுவம் கிமோய் மீது குண்டு வீசியது. டிட்டோ கும்பல், சீனாவின் நியாயமான போராட்டத்தை ''உலகத்துக்கே ஆபத்து''[1] என்றும் ''சமாதானத்துக்குக் கேடு''[2] என்றும் அவதூறு செய்தது.

8. யு-2 சம்பவம். 1960-ல் அமெரிக்கா ரசிய நாட்டிற்குள் ஊடுருவ யு-2 வேவு விமானத்தை அனுப்பி வைத்தது; பாரிசில் நடைபெறுவதா

---

1. *ஸ்லோபோத்னி டோம், 1958, செப்டம்பர் 4.*
2. *ஸ்லோவென்ஸ்கி போரோசிவாலெக், 1958, செப்டம்பர் 9.*

யிருந்த நான்கரசு உச்சநிலை மாநாட்டை இவ்விதம் சீர்குலைத்தது. அப்போது ரசிய அரசாங்கம் மேற்கொண்ட சரியான நிலையைத் தாக்கியும், ரசிய அரசாங்கம் ''இது போன்ற பெரிய அளவிலான தகராறுகளை'' கிளப்பி விடுவதாகக் கூறியும் மே 17-ல் டிட்டோ அறிக்கை வெளியிட்டார்.

9. அமெரிக்காவை எதிர்த்து ஜப்பானிய மக்கள் நடத்தும் நாட்டுப் பற்று மிக்க போராட்டம். 1960 ஜூனில் ஜப்பானிய மக்கள் அமெரிக்காவை எதிர்த்து முன்னெப்போதும் காணாத அளவில் நியாயமான, நாட்டுப் பற்றுமிக்க போராட்டத்தைத் துவக்கினார்கள். ஆனால் டிட்டோ கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு வக்காலத்து வாங்கியது. ஜப்பான் மீதான அமெரிக்காவின் ஆதிக்கம் ''ஜப்பானின் அரசியல் வாழ்க்கையில் ஜனநாயகத்தை வளர்ப்பதாக''[1] கூறியது. இதையடுத்து, ஜப்பானிய சோசலிஸ்ட் கட்சியின் காலஞ்சென்ற தலைவர் இன்ஜிரோ அசானுமா ''அமெரிக்க ஏகாதிபத்தியம் ஜப்பானிய மக்களுக்கும் சீன மக்களுக்கும் பொது எதிரியாகும்'' என்று கூறியதைக் கண்டித்த டிட்டோ கும்பல் அவர் ''அதி தீவிரவாத வழியை ஆதரிப்பதாகக்''[2] குற்றஞ் சாட்டியது.

10. இந்தோனேசிய மக்களின் போராட்டம். டிட்டோ கும்பல் ஏகாதிபத்தியத்துக்கெதிரான இந்தோனேசிய மக்கள் போராட்டத்தை சீர்குலைக்க முயன்றது. இந்தோனேசியாவில் ''நாசகோம்'' அமைச்சரவை, அதாவது தேசியவாதிகள், மத வட்டாரங்கள் மற்றும் கம்யூனிஸ்டுகள் அடங்கிய தேசிய அய்க்கிய அரசாங்கம் அமையவிடாமல் தடுக்கும் இழிவான முயற்சியில் ஈடுபட்டது.

11. காங்கோ சம்பவம். 1960 கோடைகாலத்தில், அமெரிக்க ஏகாதிபத்தியம் அய். நா. கொடியுடன் காங்கோவில் ஆயுத ஆக்கிரமிப்பு நடத்தியபோது டிட்டோ கும்பல் அய்க்கிய நாடுகள் அமைப்பில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவாக வாக்களித்தது மட்டுமல்ல; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விருப்பத்துக்கு இணங்க விமானப் படையினரை அனுப்பி காங்கோ மக்கள் மீதான அடக்குமுறை ரத்தக்களறியில் நேரடியாகவும் பங்கெடுத்தது.

12. லாவோஸ் பிரச்சினை. அமெரிக்க ஏகாதிபத்தியம் 1961 ஜனவரியில் லாவோஸில் அதன் தலையீட்டைத் தீவிரப்படுத்தியபோது, அமெரிக்கா ''உண்மையிலேயே லாவோஸின் அமைதி குறித்தும், அந்

---

1. *கம்யூனிஸ்ட், பெல்கிரேடு, 1960, ஜூன் 2.*
2. *அயல்துறை அரசியல் செய்திக்கதிர், 1962, பிப்ரவரி 1.*

நாட்டை நடுநிலையாக்குவது குறித்தும் கவலை கொண்டுள்ளது'' [1] என்ற கருத்தை டிட்டோ கும்பல் பரப்பியது. அமெரிக்க ஏகாதிபத்தியம் 1963 மே யில் லாவோஸில் அரசியல் படுகொலைகளையும் ஆயுத மோதல்களையும் உருவாக்கியபோது, ''பழி முழுவதையும் அமெரிக்கா மீது சுமத்தியமைக்காக'' [2] லாவோஸின் நாட்டுப்பற்றுடைய சக்திகளை டிட்டோ கும்பல் சாடியது.

13. அமெரிக்காவின் ''முன்னேற்றத்துக்கான நேசக் கூட்டுத்'' திட்டம். 1961 ஆகஸ்டில் அமெரிக்கா பல்வேறு லத்தீன் அமெரிக்க நாடுகளையும் நிர்ப்பந்தப்படுத்தி, முன்னேற்றத்துக்கான நேசக்கூட்டு என்ற திட்டத்தில் சேர்த்தது; லத்தீன் அமெரிக்க மக்களை அடிமைப் படுத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் கண்டுபிடித்த புதிய சாதனம் இது. இந்த ஆக்கிரமிப்புத் திட்டத்தை லத்தீன் அமெரிக்க மக்கள் கடுமையாக எதிர்த்தனர்; ஆனால் டிட்டோ கும்பல் இத்திட்டத்தை ''லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேவைகளைப் பெரிய அளவில் நிறைவு செய்த தாக'' [3] புகழ்ந்தது.

14. சீன-இந்திய எல்லை மோதல். இந்தியப் பிற்போக்காளர் கள் சீன-இந்திய எல்லையில் 1959-ல் பதட்டத்தைத் தோற்றுவித்ததி லிருந்தே, டிட்டோ கும்பல் சீனாவுக்கெதிரான இந்தியப் பிற்போக் காளர்களின் விஸ்தரிப்பு வாதத்தையும், ஆக்கிரமிப்பையும், ஆத்திரமூட் டும் செயல்களையும் தொடர்ந்து ஆதரித்து வருகிறது. ''எல்லைவரை யறை என்பது இந்த நூற்றாண்டின் துவக்கத்திலேயே முடிந்துவிட்டது, பிரபலமான மக்மோகன் கோடு உருப்பெற்றுவிட்டது''[4] என்றபொய்யை அது வெளிப்படையாகப் பரப்பியது. சரியானதையும் தவறானதையும் குழப்பி குளறுபடி செய்ய தன்னாலியன்றதனைத்தும் செய்தது; சீனா- ''இந்தியாவுடனான எல்லையை வேண்டுமென்றே வன்முறை மூலம் திருத்தியமைக்க உரிமை எடுத்துக்கொள்கிறது'' [5] என்றும், இந்தியா வுக்கெதிராக ''ஆக்கிரமிப்பு செய்ததாகவும்'' [6] தூற்றியது.

15. கியூபா புரட்சியும் கரிபிய நெருக்கடியும். டிட்டோ கும்பல் எண்ணற்ற தடவைகள் கியூபாவைத் தாக்கிப் பேசியுள்ளது; கியூபா

1. போர்பா, 1961, ஜனவரி 13.
2. பொலிட்டிக்கா, 1963, மே 5.
3. கம்யூனிஸ்ட், பெல்கிரேடு, 1961, ஆகஸ்ட் 17.
4. ராத், 1959 செப்டம்பர் 12.
5. போர்பா, 1960 டிசம்பர் 26.
6. பொலிட்டிக்கா, 1959 செப்டம்பர் 3.

''புரட்சியில் மட்டுமே ரம்பிக்கை வைப்பதாகவும்'' [1] கியூபா புரட்சி ''புரட்சிப் பாதைக்கு முன்மாதிரியாய் அமைவதைக் காட்டிலும், விதி விலக்காகவே அமைகிறது'' [2] என்றும் கூறிவருகிறது. 1962இலையுதிர் காலத்தில் ஏற்பட்ட கரிபிய நெருக்கடியின்போது, டிட்டோ கும்பல் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தியது; ''கியூபா புரட்சி அமெரிக்க நியமங்களின் உரிமைகளைக் காலில் போட்டு மிதித்த போதே தொல்லைகள் ஆரம்பமாயின'' [3] என்றும் ''கியூபாவில் ராக்கெட் தளங்கள் நிறுவப்பட்டதால் அமெரிக்கா எரிச்சலுற்றதாக கூறப்படுமே யானால் அது நியாயமானது என்று புரிந்து கொள்ளத்தக்கதாய் இருக்கும்'' [4] என்றும் கூறியது.

இவையனைத்திலிருந்தும், கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாய் டிட்டோ கும்பல் சோசலிச நாடுகளை மூர்க்கத்தனமாய் எதிர்த்து வருவதையும், தேசிய விடுதலை இயக்கத்தை சீர்குலைக்க முயன்றுவருவதையும், அனைத்து நாடுகளிலும் மக்கள் நடத்திவரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப்போராட்டத்தைக் கேவலப்படுத்தி வருவதையும், ஏகாதிபத்தியத்துக்கு, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு முனைந்து சேவகம் செய்து வருவதையும் காணாதிருக்க முடியாது.

சர்வதேசப் பிரச்சினைகள் குறித்து ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக்கும் டிட்டோ கும்பலுக்கும் இடையே ''முழுக் கருத்தொற்றுமையும்'' ''இணக்கமும்'' [5] நிலவுவதாக குருச்சேவ் திரும்பத் திரும்ப கூறியுள்ளார். சரி உங்கள் செயல்பாடுகளுக்கும் டிட்டோ கும்பலின் எதிர்ப்புரட்சிக் குற்றங்களுக்கும் இடையே முழுக்கருத்தொற்றுமை அல்லது இணக்கம் உண்டா இல்லையா என்று கேட்க விரும்புகிறோம். துணிவிருந்தால் பதில் சொல்லுங்கள்.

---

1. கியூபா எழுச்சி, பெல்கிரேடு, 1962 நவம்பர்.
2. பொலிட்டிக்கா, 1963 ஜனவரி 1.
3. கம்யூனிஸ்ட், பெல்கிரேடு, 1962 செப்டம்பர் 13
4. பொலிட்டிக்கா, 1962 நவம்பர் 13.
5. என். எஸ். குருசேவ், 1963 ஆகஸ்ட் 24-ல் யூகோஸ்லாவியாவில் ஸ்பிலிட் என்ற இடத்தில் நடந்த பேரணியில் பேசியது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முதலாளி வர்க்க சர்வாதிகாரமாக சீரழிந்த கதை

இறுதியாகப் பார்த்தால், யூகோஸ்லாவியா—நகரங்களும், கிராமங்களும்—முதலாளித்துவத்தில் மூழ்கிப்போயிருப்பது, அனைத்து மக்களின் உடமையாய் இருந்த பொருளாதாரம் அரசு முதலாளித்துவப் பொருளாதாரமாக சீரழிந்திருப்பது, யூகோஸ்லாவியா அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சார்பு நாடாகத் தாழ்வுற்றிருப்பது— இவையனைத்துக்கும் காரணம் யூகோஸ்லாவியாவில் கட்சியும் அரசும் சீரழிந்துபோனதே.

இரண்டாம் உலகப் போரில் ஜெர்மானிய, இத்தாலிய பாசிச ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து வீரப்போர் புரிந்த யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்ட் கட்சியும் மக்களும், யூகோஸ்லாவியாவில் ஏகாதிபத்தியம் மற்றும் அதன் அடிவருடிகள் நடத்திவந்த பிற்போக்கு ஆட்சியைத் தூக்கியெறிந்துவிட்டு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் மக்கள் ஜனநாயக அரசதிகாரத்தை நிறுவினர்.

அதன் பின் வெகு சீக்கிரத்திலேயே யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை மார்க்சிய-லெனினியத்துக்கு துரோகமிழைத்துவிட்டு, திருத்தல்வாதப் பாதையில் இறங்கி, யூகோஸ்லாவியாவில் கட்சியையும் அரசு அதிகாரத்தையும் சிறுகச் சிறுக சீரழித்துவிட்டது.

புரட்சிகரப் போராட்டங்களின் புகழார்ந்த பாரம்பரியம் யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு. முதலில் டிட்டோ கும்பலின் துரோகத்துக்கு கட்சிக்குள் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. இந்த எதிர்ப்பை ஒடுக்குவதற்காக டிட்டோ கும்பல் அதன் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மார்க்சிய-லெனினியத்துக்கு விசுவாசமான மிகப்பல கம்யூனிஸ்டுகளை வெளியே தள்ளியது. 1948 முதல் 1952 வரையிலான காலத்தில் மட்டும் 2 லட்சத்துக்கும் அதிகமான கட்சி உறுப்பினர்கள், அதாவது யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாய் இருந்தவர்களில் சரிபாதியினர் வெளியேற்றப்பட்டனர். கோமின்ஃபாம் சக்திகள் என்று சொல்லிக் கொள்ளப்படுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்த டிட்டோ கும்பல் ஏராளமான மார்க்சிய-லெனினியவாதிகளையும், புரட்சிகரஊழியர்களையும், பொதுமக்களையும் கைதுசெய்து, ஒழித்துக் கட்டியது. கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட கம்யூனிஸ்டுகள் மற்றும் செயல் துடிப்பு வாய்ந்த புரட்சியாளர்கள் எண்ணிக்கை மட்டும் முப்பதாயிரத்தை தாண்டும். அதே நேரத்தில், டிட்டோ கும்பல் எதிர்புரட்சியாளர்களுக்கும், முதலாளித்துவ சக்திகளுக்கும், சகலவிதமான சோசலிச எதிர்ப்பு சக்திகளுக்கும், கட்சி உறுப்பினர் அட்டையைப் பயன்படுத்தி பதவியும்

சொத்தும் பெற முயலும் பிழைப்புவாதிகளுக்கும் கதவை அகல திறந்து விட்டது. 1952 நவம்பரில் டிட்டோ கும்பல் ''கட்சி என்ற பெயர் இப்போது பொருத்தமில்லை'' என்று அறிவித்தது; யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரை யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகம் என்பதாக மாற்றியது. யூகோஸ்லாவியாவிலுள்ள நேர்மையான கம்யூனிஸ்டுகள் அனைவரின் விருப்பத்தையும் மீறி, யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சியின் தன்மையையே மாற்றி, பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை என்ற நிலையைக் கைவிட்டு, யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தைத் "தனது சர்வாதிகார ஆட்சியைப் பாதுகாக்கும் கருவியாகவே மாற்றிவிட்டது.

சோசலிச நாடுகளின் அரசு அதிகாரம் கம்யூனிஸ்ட் அரசியல் கட்சிகளின் தலைமையில் உள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி முதலாளித்துவ அரசியல் கட்சியாக சீரழிந்திடும்போது, அரசு அதிகாரமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற நிலையிலிருந்து முதலாளி வர்க்க சர்வாதிகாரமாகச் சீரழிந்துவிடுகிறது.

யூகோஸ்லாவியாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு என்பது யூகோஸ்லாவிய மக்களின் நீண்ட நெடிய தீரப் போராட்டத்தில் விளைந்த ஒன்று. ஆனால் டிட்டோ கும்பல் ஓடுகாலியாகிவிட்டதால் இந்த அரசு அதிகாரம் அதன் தன்மையை மாற்றிக் கொண்டுவிட்டது.

''பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வாதிகாரம் என்ற கருவி அதாவது சோசலிச அரசமைப்பு மேலும் மேலும் அவசியமற்றதாகி விட்டது''[1] என்று டிட்டோ கும்பல் பறைசாற்றியது.

ஆனால், யூகோஸ்லாவியாவில் எவ்வித சர்வாதிகாரமும் இல்லாமல் போய்விட்டதா? ஆம். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாமல் போய்விட்ட அதேபோது, முதலாளிவர்க்க சர்வாதிகாரம் இருப்பது மட்டுமல்ல, அது மிருகத்தனமான பாசிச சர்வாதிகாரமாகவும் இருக்கிறது.

டிட்டோ ஆட்சி அமைத்துள்ள ஏராளமான பாசிசச் சிறைகளிலும் சிறைமுகாம்களிலும், ஆயிரக்கணக்கான புரட்சியாளர்கள் சித்திரவதைக்கு ஆளாகி, மனிதத் தன்மையற்ற எல்லாவித தண்டனைகள் மூலமும் கொல்லப்பட்டுள்ளனர். அதே போது ஏராளமான எதிர்ப்புரட்சியாளர்களுக்கும், பாசிச எதிர்ப்புப் போரில் துரோகமிழைத்தவர்களுக்கும், டிட்டோ ஆட்சி மன்னிப்பு வழங்கியுள்ளது. 1951 ஜனவரி 7-ல் யுனைட்டெட் பிரஸ்

1. *எட்வர்டு கார்தெல்ஜ், ''சோசலிச யூகோஸ்லாவியாவின் புதிய அரசியல் சாசனம், போர்பா, 1952, செப்டம்பர் 29.*

நிருபருக்கு பதிலளிக்கையில் டிட்டோ யூகோஸ்லாவியாவில் 11,000 அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டிருப்பதாக ஒப்புக் கொண்டார். நாட்டை விட்டு ஓடிப்போனவர்களான மேலும் 1,50,000 எதிர்ப் புரட்சியாளர்களுக்கு 1962 மார்ச் 13-ல் மன்னிப்பு வழங்கப்பட்டது. இந்த மக்கள் விரோதிகள் மீதான சர்வாதிகாரம் கைவிடப்பட்டு, அவர்களுக்கு ''ஜனநாயகம்'' வழங்கப்பட்டுள்ளது. டிட்டோ கும்பல் என்னதான் அலங்காரமான சொற்றொடர்களைப் பயன்படுத்தினாலும், அதன் ''ஜன நாயகம்'' சிறு எண்ணிக்கையிலான பழைய, புதிய முதலாளித்துவ சக்திகளுக்கு மட்டுமே ஜனநாயகமாகும்; உழைக்கும் மக்களுக்கு முழுக்க முழுக்க சர்வாதிகாரமே. சொற்பச் சிறுபான்மையினரான சுரண்டல்காரர்களை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட புரட்சிகர அரசு இயந்திரத்தை டிட்டோ கும்பல் பாட்டாளி வர்க்கத்தையும், பரந்துபட்ட மக்களையும் ஒடுக்குவதற்கான அரசு இயந்திரமாக மாற்றியுள்ளது.

யூகோஸ்லாவியாவில் அரசு இயந்திரத்தின் சீரழிவு முன்பிருந்த அரசு அதிகாரத்தை வன்முறை வழியில் தூக்கியெறிந்துவிட்டு, புதிய அரசு அதிகாரத்தை நிறுவியதன் மூலம் நடந்தேறியதல்ல. ''அமைதி வழிப் பரிணாமத்தின்'' வாயிலாய் அது நடந்தேறியுள்ளது. தோற்றத்தில் அதே ஆட்கள் அதிகாரத்தில் உள்ளனர்; ஆனால் சாராம்சத்தில், இவர்கள் இப்போது தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் நலன்களது பிரதிநிதிகள் அல்ல; ஏகாதிபத்தியத்தின், பழைய, புதிய யூகோஸ்லாவிய முதலாளி வர்க்கத்தின் நலன்களது பிரதிநிதிகளே.

அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி, நாட்டின் பொருளாதார உயிர்நாடியைக் கைவிலடக்கி டிட்டோ கும்பல் யூகோஸ்லாவிய உழைப்பாளி மக்களை முடிந்தவரை சுரண்டி, அதிகாரவர்க்க முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்றுவித்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை சார்ந்துள்ள இந்த வர்க்கம் அழுத்தமான தரகுத்தன்மை கொண்டதாகையால், தரகு முதலாளி வர்க்கமும் ஆகும். டிட்டோ கும்பலின் பிடியிலுள்ள அரசு அதிகாரம், அதிகாரவர்க்கத் தரகு முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரமாகும்.

டிட்டோ ஆட்சி கடைப்பிடிக்கும் கொள்கை முதலாளித்துவத்தை மீட்பதும் வளர்ப்பதுமான கொள்கையே. அதாவது யூலோஸ்லாவியாவை அரைக்காலனி அல்லது சார்பு நாடாகத் தாழ்த்திவிடும் கொள்கையே என்பதை மேற்கண்ட உண்மைகள் பல்வேறு கோணங்களிலும் வெளிப்படுத்துகின்றன.

யூகோஸ்லாவியாவில் அரசு அதிகாரத்தின் சீரழிவு சோசலிசப் பொருளாதார அமைப்பின் அழிவுக்கும், முதலாளித்துவப் பொருளாதார

அமைப்பின் மீட்சிக்கும் வழிகோலியுள்ளது. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு புதிய வடிவில் மீண்டு வந்ததோடு கூட படிப்படியாய் உருவாகியுள்ள புதிய அதிகார வர்க்கத் தரகு முதலாளி வர்க்கம் தனது ஆளும் வர்க்க நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, முதலாளித்துவ சர்வாதிகாரத்தை மேலும் மேலும் கடுமையாக்குமாறும், முதலாளித்துவப் பொருளாதார அமைப்புக்குப் பொருத்தமான அரசியல் அமைப்பை வளர்க்குமாறும் கோருகிறது.

இப்படித்தான் யூகோஸ்லாவியாவில் கட்சி மற்றும் அரசு அதிகாரத்தின் சீரழிவு சமூக, பொருளாதார அமைப்பு முழுவதிலும் முதலாளித்துவத்தின் மீட்சியாக உருப்பெறும் நிகழ்வு படிப்படியாக நடந்தேறியுள்ளது. சீரழியும் நிகழ்வு பதினைந்து ஆண்டுகளாய்த் தொடர்ந்துள்ளது. சோசலிச அரசு முதலாளித்துவ அரசாக ''அமைதி வழிப் பரிணாமம்'' அடைவது இப்படித்தான்.

டிட்டோ கும்பல் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவையும், அதிகார வர்க்கத் தரகு முதலாளித்துவச் சர்வாதிகாரத்தின் அரசு இயந்திரத்தையும், தன்னால் விலைக்கு வாங்கப்பட்ட தொழிலாளி வர்க்க பிரபுகுலத்தையும் (Labour Aristocracy) கிராமங்களிலுள்ள பணக்கார விவசாயிகளையும் சார்ந்து நின்று, யூகோஸ்லாவியாவில் ஆட்சி நடத்துகிறது. அதே நேரத்தில் தனது பிற்போக்கு முகவிலாசத்தை மூடி மறைத்து வேடமணிந்து, மக்களை ஏமாற்ற பல்வேறு தந்திரங்களையும் கையாள்கிறது. ஆனால் அதன் பிற்போக்குக் கொள்கைகளை மக்கள் மிகவும் வெறுத்தொதுக்குகிறார்கள். சோசலிச அரசு முதலாளித்துவ அரசாக அடைந்துள்ள சீரழிவு, சுயேச்சையான நாடு ஏகாதிபத்தியத்தின் அரைக்காலனி அல்லது சார்பு நாடாக அடைந்துள்ள சீரழிவு யூகோஸ்லாவிய மக்களின் அடிப்படை நலன்களுக்குப் புறம்பானதாகும். நேர்மையான கம்யூனிஸ்டுகள் எல்லோரும், யூகோஸ்லாவிய மக்களில் மிகப் பெரும்பான்மையினரும் இந்தச் சீரழிவை எதிர்க்காமலிருக்க முடியாது.

யூகோஸ்லாவிய மக்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இப்போது ஏற்பட்டுள்ள இந்த இடர்பாடான நிலைக்கு அவர்கள்பால் ஆழ்ந்த பரிவு கொண்டுள்ளோம். டிட்டோ கும்பல் சிறிது காலத்துக்கு மக்களை ஆட்டிப் படைக்கக் கூடுமென்றாலும், மக்களுக்கு எதிராகத் திரும்பிவிட்ட ஆளும் கும்பல் எதுவும்-என்னதான் அடாவடித்தனம் செய்தாலும், என்னதான் கண்கட்டு வித்தை காட்டினாலும்-நல்ல முடிவை அடையாது என்பது நம் திடநம்பிக்கை. டிட்டோ கும்பல் இதற்கு விதிவிலக்கல்ல. ஏமாற்றப்பட்டமக்கள் முடிவில் படிப்படியாய் விழிப்புறுவார்கள். புகழார்ந்த வரலாறுடைய யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகளும் மக்களும் ஓடுகாலி டிட்டோ கும்பலுக்கு அடங்கி நடப்பது நிரந்தரமன்று. யூகோஸ்லாவிய மக்களின் வருங்காலம் ஒளிமயமாய்த் திகழும்.

யூகோஸ்லாவியப் பிரச்சினையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாட்டு ரீதியான நிலைப்பாடு

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம், முன்பு ''யூகோஸ்லாவியாவில் உள்ள சோசலிச அமைப்பின் தன்மை குறித்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை'' என்றும் இப்போது சீனத்தலைவர்கள் ''யூகோஸ்லாவியப் பிரச்சினையில் தங்கள் நிலையினை ஒரேயடியாக மாற்றிக் கொண்டுவிட்டார்கள்'' என்றும் கூறுகிறது.

உண்மைதான், யூகோஸ்லாவியா ஒருகாலத்தில் சோசலிச நாடாகத் தான் இருந்தது. சிறிது காலம் அந்த நாடு சோசலிசப் பாதையில் முன்னேறியது.

ஆனால் வெகுவிரைவில், டிட்டோகும்பலின் துரோகத்தால், யூகோஸ்லாவிய சமூக அமைப்பு படிப்படியாய் சீரழியத் தொடங்கியது.

1954-ல் குருச்சேவ் யூகோஸ்லாவியாவுடன் உறவுகளை மேம்படுத்திக் கொள்ள உத்தேசித்தபோது, அந்நாட்டை சோசலிசப் பாதைக்கு மீண்டும் கொண்டு வருவதற்காகவும், டிட்டோ கும்பல் எப்படி வளர்ந்து செல்லும் என்பதைக் கவனிப்பதற்காகவும் அதனை சகோதர சோசலீச நாடாகக் கருத ஒப்புக்கொண்டோம்.

அப்போதே கூட டிட்டோ கும்பலைப்பற்றி நமக்கு அவ்வளவாய் நம்பிக்கை இல்லை. 1954 ஜுன் 10 தேதியிட்டு ரசிய கம்யூனிஸ்ட்கட்சியின் மத்திய கமிட்டிக்கு எழுதிய கடிதத்தில், சீனக் கம்யூனிஸ்ட்கட்சியின் மத்திய கமிட்டி ஒன்றை சுட்டிக்காட்டியது. அதாவது யூகோஸ்லாவியத் தலைவர்கள் ஏகாதிபத்தியத்துடனான தொடர்புகளில் ஏற்கனவே மிக நெருக்கமாக போய்விட்டதால், வென்றெடுப்பதற்கான நமது முயற்சியை அவர்கள் நிராகரித்துவிடக்கூடும், சோசலிசப் பாதைக்கு திரும்பிவர மறுக்கக்கூடும் என்பதைக் கணக்கில் கொள்ளவேண்டுமென சுட்டிக் காட்டியது. ''இப்படி நிகழ்ந்துவிட்டாலும் கூட அதனால் சமாதான, ஜனநாயக, சோசலிச முகாமுக்கு எவ்வித அரசியல் இழப்புமில்லை. மாறாக யூகோஸ்லாவிய மக்களின் எதிரிலும் உலக மக்களின் எதிரிலும் யூகோஸ்லாவியத் தலைவர்களின் போலித்தனத்தை அது மேலும் தோலுரித்துக் காட்டும்''

வருத்தப்படவேண்டிய முறையில், தாம் சொன்னது போலவே நடந்துவிட்டது. வென்றெடுப்பதற்கான நமது முயற்சியை டிட்டோ கும்பல் ஒரேயடியாக நிராகரித்துவிட்டு, திரிபுவாதப் பாதையில் வெகு தூரம் போய்விட்டது.

டிட்டோ கும்பல் 1957-ம் வருடப் பிரகடனத்தில் ஒப்பமிட மறுத்து விட்டு முழுக்க முழுக்க திரிபுவாதத் திட்டமாகிய அதன் திட்டத்தை 1928-ல் முன்வைத்தது. இந்த நவீனத் திரிபுவாதக் கொடியை, கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் யாவும் ஏற்றுக் கொண்ட பொதுத் திட்டமாகிய 1957-ம் வருடப் பிரகடனத்துக்கெதிராகப் பறக்கவிட்டது. யூகோஸ்லாவியாவில் முதலாளித்துவ மீட்சிப் பணி படிப்படியாக நடந்தேறியுள்ளது. சர்வதேச அரங்கில், டிட்டோ கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புரட்சி தனிப்படையாக மேலும் மேலும் ஊக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், டிட்டோ கும்பலின்பால் ஒவ்வொரு மார்க்சிய-லெனினியக் கட்சியும் மேற்கொள்ள வேண்டிய போக்கு முன்போல் சகோதரக் கட்சி அல்லது சகோதர நாட்டின்பால் மேற்கொள்ள வேண்டிய போக்கல்ல; டிட்டோ கும்பலை வென்றெடுக்கும் போக்காகவும் அது இருக்கக் கூடாது; இந்த ஓடுகாலி கும்பலை முழுமையாக அம்பலப்படுத்தி, உறுதியாக எதிர்த்துப் போராடும் போக்காகவே இருக்க வேண்டும். 1960-ம் வருட அறிக்கை இந்த அம்சம் குறித்து அதன் தெளிவான முடிவைத் தந்துள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் 1957 நவம்பரில் நடந்த சகோதரக் கட்சிகளின் கூட்டத்திற்குப் பிறகு நடந்த வரிசையான பல முக்கிய நிகழ்ச்சிகளையும் வேண்டுமென்றே தவிர்த்து விடுகிறது; 1960-ல் நடந்த சகோதரக் கட்சிகளின் கூட்டத்தில் ஏகமனதாய் அடையப்பட்ட முடிவுகளையும் அதுகண்டு கொள்ளவில்லை. 1957 செப்டம்பர் 12 தேதிய ரென்மின் ரிபோவில் யூகோஸ்லாவியா பற்றி எழுதப்பட்ட தலையங்கத்திலிருந்து ஒரு வாக்கியத்தை எடுத்துக் காட்டி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் தவறான நிலையை நியாயப்படுத்த முயல்கிறது. இது வீண் முயற்சியே.

டிட்டோ கும்பல் தொடர்பான எனது நிலை யதார்த்த நிலைமைக்கு இசைவானது, கொள்கைப்பூர்வமானது, 1960-ல் நடந்த சகோதரக் கட்சிகளின் கூட்டத்தின் பொது உடன்பாட்டுக்கு இணக்கமானது என்பதை உண்மைகள் நிரூபிக்கின்றன. மாறாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் டிட்டோ கும்பல் பற்றிய தீர்ப்பை ரத்து செய்ய ஆயிரம் வழிகளில் முயற்சித்துள்ளார்கள். அவர்கள் மார்க்சிய-லெனினியத்துக்கு துரோகமிழைக்கிறார்கள் என்பதற்கும், 1960-ம் வருட அறிக்கையைக் கைகழுவுகிறார்கள் என்பதற்கும் யூகோஸ்லாவிய மக்களையும் உலக மக்களையும் வஞ்சிப்பதில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அவர்களது அடிவருடிகளுக்கும் உதவுகிறார்கள் என்பதற்கும் இவை சான்று பகர்கின்றன.

டிட்டோ ''தனது தவறுகளைப் போக்கிக் கொண்டாரா''? அல்லது குருச்சேவ், டிட்டோவை தனது ஆசானாய் கருதுகிறாரா?

தவறுகளாய்க் கருதப்பட்டவற்றில் மிகப் பலவற்றையும் யூகோஸ்லாவியத் தலைவர்கள் போக்கிக் கொண்டு விட்டதாக குருச்சேவ் சொல்கிறார். ஆனால் டிட்டோ வகையறாக்கள் தவறுகளைப் போக்கிக் கொள்வது இருக்கட்டும், தவறுகளேதும் செய்ததாக கூட ஒப்புக்கொள்ள வில்லை. தாங்கள் எந்தத் தவறையும் திருத்திக் கொள்ள வேண்டிய ''தேவையே இல்லை'' [1] என்றும் தாங்கள் அப்படிச் செய்வோம் என எதிர்பார்ப்பது ''நேரத்தை வீணாக்குவதே'' [2] ஆகும் என்றும் ''கிஞ்சிற்றும் தேவையில்லாததும், பரிகசிக்கத்தக்கதும்'' [3] ஆகும் என்றும் டிட்டோ வகையறாக்கள் சொல்கிறார்கள்.

உண்மைகளைப் பார்ப்போம். டிட்டோ வகையறாக்கள் தமது திரிபுவாதத் திட்டத்தை மாற்றிக் கொண்டு விட்டார்களா? இல்லை. 1957ஆம் வருடப் பிரகடனத்தையும், 1960ஆம் வருட அறிக்கையையும் ஒப்புக் கொண்டு விட்டார்களா? இல்லை. உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளில் தமது திரிபுவாதக் கொள்கைகளை மாற்றிக் கொண்டு விட்டார்களா? மீண்டும் இல்லை.

டிட்டோ கும்பல் அதன் திரிபுவாத நிலைப்பாட்டைக் கொஞ்சம்கூட மாற்றிக் கொள்ளவில்லை என்பது, 1963 ஏப்ரலில் யூகோஸ்லாவிய கூட்டாட்சி மக்கள் குடியரசின் பேரவை நிறைவேற்றிய புதிய அரசியல் சாசனத்திலிருந்து தெளிவாய்த் தெரிகிறது. இந்த அரசியல் சாசனம் முழுக்க முழுக்க டிட்டோ கும்பல் முன்வைத்த திரிபுவாதத் திட்டத்தின் சட்ட உருவம்தான். இது யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் திட்டத்திலுள்ள கருத்துக்களின் ''சட்ட-அரசியல்-ஸ்தாபன உருவம் தான்'' என்று எட்வர்டு கார்தெல்ஜ் புதிய அரசியல் சாசன நகல் பற்றிய அறிக்கையில் சொல்கிறார்.

---

1. ஜே. பி. டிட்டோ, பெல்கிரேடு ரயில் நிலையத்தில் பேசியது, 1962 டிசம்பர் 20.

2. ஜே.பி. டிட்டோ, யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தில் ஏழாவது பேராயத்தில் பேசியது, 1958 ஏப்ரல்.

3. ஜே.பி. டிட்டோ, பெல்கிரேடு ரயில் நிலையத்தில் பேசியது, 1962 டிசம்பர் 20.

டிட்டோ கும்பலோடு குருச்சேவ் அன்புடன் உறவாடுவதற்கு அது தனது தவறுகள் எதையும் திருத்திக் கொண்டதல்ல காரணம்; அவரும் டிட்டோவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சென்று கொண்டிருப்பதே காரணம்.

கீழ்க்காணும் உண்மைகளை பரிசீலனை செய்வோம்:

1. மார்க்சிய—லெனினியத்தின் அடிப்படைகளையே எதிர்க்கும் பொருட்டு ஸ்டாலினை டிட்டோ குறை சொல்கிறார். குருச்சேவும் இதே நோக்கத்துக்காக ஸ்டாலினை அடியோடு மறுதலிக்கிறார்.

2. டிட்டோ, குருச்சேவ் இருவருமே மார்க்சிய—லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நிராகரிக்கிறார்கள். மார்க்சிய—லெனினியத்தை உறுதியாக உயர்த்திப் பிடிக்கும் சீனக் கம்யூனிஸ்டுகளையும் இதர கம்யூனிஸ்டுகளையும் வறட்டுவாதிகள் என்று இருவருமே தூற்றுகிறார்கள். தங்களுடைய மார்க்சிய—லெனினியத் திரிபை மார்க்சிய-லெனினியத்தின் ''ஆக்கபூர்வ வளர்ச்சி'' என்று இருவருமே சொல்லிக் கொள்கிறார்கள்.

3. டிட்டோ, குருச்சேவ் இருவருமே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பெருந்தலைவர்களைப் போற்றிப் புகழ்கிறார்கள். அய்சனோவர் ''விடாப்பிடியான சமாதானக் காவலர்''[1] என்றும் கென்னடியின் முயற்சி ''சர்வதேச உறவுகளை மேம்படுத்தவும், நெருக்கிப் பிடிக்கும் உலகப் பிரச்சினைகளை அமைதி வழியில் தீர்க்கவும் உதவிகரமாய் இருக்கும்''[2] என்றும் டிட்டோ சொல்கிறார். அய்சனோவர் ''சமாதானத்தை மனப்பூர்வமாய் விரும்புகிறவர்''[3] என்றும் கென்னடியிடம் ''சமாதானத்தைப் பாதுகாக்கும் பேராவலைக் காணமுடிகிறது''[4] என்றும் குருச்சேவ் சொல்கிறார்.

4. டிட்டோ, குருச்சேவ் இருவருமே உலகமக்களை பயமுறுத்தி புரட்சிப்போராட்டத்தைக் கைவிடச் செய்யும் பொருட்டு, அணு ஆயுதப்

---

1. ஜே. பி. டிட்டோ, நியூயார்க் டைம்ஸ் விமர்சகருடன் உரையாடல், 1958 பிப்ரவரி 28.

2. ஜே. பி. டிட்டோ, ஜே. எஃப். கென்னடிக்கு வாழ்த்துச் செய்தி, போர்பா, 1961 ஜனவரி 21.

3. என். எஸ். குருச்சேவ், சோவியத் சோசலிசக் குடியரசுகள் ஒன்றியத்தின் உச்ச சோவியத் அமர்வில் பேசியது, 1960 மே.

4. என். எஸ். குருச்சேவ், ஜே. எஃப். கென்னடிக்கு எழுதிய கடிதம், 1962 அக்டோபர் 27.

போரின் கொடுமைகளை மிகைப்படுத்திச் சொல்கிறார்கள். அணுஆயுதப் போர் மூண்டால் ''மனிதஇனம் அழிந்துபோகும்''[1] என்கிறார் டிட்டோ. அணுஆயுதப்போர் மூண்டால் ''நமது கிரகம்-நோவாவின் தோணியாம் பூவுலகம் — அழிந்துபோகும்'' [2] என்கிறார் குருச்சேவ்.

5. ஏகாதிபத்தியம் என்ற ஒன்று இருக்கும்போதே ஆயுதங்களற்ற, ஆயுதப்படைகளற்ற, போர்களற்ற உலகைத்தோற்றுவிக்கமுடியும் என்று டிட்டோ, குருச்சேவ் இருவருமே போதனை செய்கிறார்கள்.

6. ''முனைப்பான சமாதான சகவாழ்வுதான்'' யூகோஸ்லாவிய அயல்துறைக் கொள்கையின் அச்சாணி என்று டிட்டோ கும்பல் பறை சாற்றுகிறது''[3] சமாதான சகவாழ்வு ரசிய அரசின் ''அயல்துறைப் பொதுவழி'' [4] ஆகும் என்று குருச்சேவ் அறிவிக்கிறார்.

7. டிட்டோ, குருச்சேவ் இருவருமே முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு அமைதி வழியில் மாறிச்செல்லும் சாத்தியப்பாடு அதிகரித்திருப்பதாகப் பறை சாற்றுகிறார்கள். ''மனிதகுலம் தடுத்து நிறுத்த முடியாதபடி பல்வேறு வழிகளிலும் சோசலிச சகாப்தத்தினுள் பெரிய அளவில் நுழைந்துகொண்டிருக்கிறது''[5] என்று டிட்டோ கும்பல் சொல்கிறது அக்டோபர் புரட்சியின் பாதைக்கு பதிலாய் ''நாடாளுமன்ற பாதையில்'' செல்லமுடியும் என்று குருச்சேவ் சொல்கிறார்.

8. ''அமைதி வழிப்போட்டியின்'' மூலமாய் உலகத்தின் ''அரசியல், பொருளாதார ஒருமைப்பாட்டை'' உண்டாக்குமாறு டிட்டோ வலியுறுத்து

---

1. ஜே. பி. டிட்டோ, யூகோஸ்லாவியக் கூட்டரசு மக்கள் பேரவை அமர்வுக்கு அளித்த அறிக்கை, *1958 ஏப்ரல்* 19.

2. *என். எஸ். குருசேவ், ஆஸ்திரிய-சோவியத் சங்கக் கூட்டத்தில் பேசியது, 1960 ஜூலை 2.*

3. *கோக்கா பொப்போவிக், யூகோஸ்லாவியக் கூட்டரசு மக்கள் பேரவை அமர்வுக்கு அயல்துறைக் கொள்கை பற்றி அளித்த அறிக்கை, போர்பா, 1957, பிப்ரவரி 27.*

4. *என். எஸ். குருசேவ், சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது பேராயத்துக்கு அளித்த அறிக்கை, 1956 பிப்ரவரி.*

5. *யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகத்தின் திட்டம்.*

கிறார்.[1] ''அமைதிவழிப் பொருளாதார போட்டியின்'' மூலமாய் முழுமையான ஒத்துழைப்பை' உண்டாக்குமாறு குருச்சேவும் வலியுறுத்து கிறார்.

9. டிட்டோ கும்பல் தேசிய விடுதலை இயக்கத்தையும், தேசிய விடுதலைப் போர்களையும் சகல வழிகளிலும் சீர்குலைக்கிறது. சிறிய ''வட்டார அளவிலான போரே கூட உலகப் போரென்னும் பெருந் தீயை மூட்டிவிடக் கூடும்'' [2] என்று சொல்லி தேசிய விடுதலை இயக்கத் தையும், தேசிய விடுதலைப் போர்களையும் குருச்சேவ் எதிர்க்கிறார்.

10. டிட்டோ கும்பல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைகழுவிவிட்டது. ''அனைத்து மக்களின் அரசு'' என்ற முழக்கத்தின் வாயிலாய் குருச்சேவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைகழுவு கிறார்.

11. கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை யாகத் திகழ வேண்டும் என்பதை டிட்டோ கும்பல் மறுக்கிறது. இதே போல் குருச்சேவும் சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்ட் கட்சி ''அனைத்து மக்களின் கட்சியாகி விட்டது'' [3] என்கிறார்.

12. ''கூட்டுச் சேராமை'' முத்திரையைக் குத்திக் கொண்டுள்ள டிட்டோ கும்பல் சோசலிச முகாமை எதிர்த்து வருகிறது. குருச்சேவும் ''கூட்டுகள் என்பன போன்ற வெளிப்பாடுகள் தற்காலிகநிகழ்வுகளே'' [4] என்கிறார். இருவருமே சோசலிச முகாமை ஒழித்துக்கட்ட விரும்பு கிறார்கள்.

இந்த உண்மைகளைப் பரிசீலிக்கையில், உள்நாட்டுக் கொள்கை, அயல்துறைக் கொள்கை இரண்டிலுமே குருச்சேவ் டிட்டோவைஉண்மை ம

---

1. ஜே. பி. டிட்டோ, வாஷிங்டன், போஸ்ட் நிருபர் ட்ரு பியர்சன் கேட்ட கேள்விகளுக்கு அளித்த பதில்கள், போர்பா, ஆகஸ்ட் 12.

2. என். எஸ். குருச்சேவ், வியன்னாவில் செய்தியாளர் கூட்டத்தில் வெளியிட்ட அறிக்கை, 1960 ஜூலை.

3. என்.எஸ். குருசேவ் ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம்'' குறித்து, சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்தில் ஆற்றிய உரை 1961 அக்டோபர்.

4. என்.எஸ். குருச்சேவ், யூகோஸ்லாவியாவில் பிரியோணி என்ற இடத்தில் வெளிநாட்டு நிருபர்களுக்கு அளித்த பேட்டி, 1963 ஆகஸ்ட் 28.

யில் தமது ஆசானாகவே மதித்து, டிட்டோவின் அடியொற்றி திரிபுவாதப் பாதையில் சரிந்து சென்று கொண்டிருக்கிறார் என்ற முடிவுக்குத்தான் வந்தாக வேண்டும்.

குருச்சேவ் மார்க்சிய-லெனினியத்தைக் கைகழுவிவிட்டார். 1960-ம் வருட அறிக்கையை வீசியெறிந்து விட்டார்; ரசிய நாட்டின் நலனையும், ரசிய மக்களின் நலனையும், அனைத்துலக மக்களின் நலனையும் அடியோடு புறக்கணித்துவிட்டு ஓடுகாலி டிட்டோ கும்பலுடன் சேற்றில் புரள்கிறார். மாபெரும் ரசிய மக்களும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களில் மிகப் பெரும்பான்மையினரும், பல்வேறு படிநிலைகளிலும் இருந்து வரும் ஊழியர்களும் புகழார்ந்த புரட்சிப் பாரம்பரியம் உடையவர்கள்; இவர்கள் இதனை சகித்துக்கொள்ள மாட்டார்கள்.

மார்க்சிய-லெனினியத்தை உயர்த்திப் பிடிக்கும் சகோதரக் கட்சிகளுக்கு எதிராக டிட்டோ கும்பலுடன் குருச்சேவ் கூடிக் குலாவுவதை மாபெரும் ரசிய மக்களும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் ஒரு போதும் ஏற்கமாட்டார்கள்.

சோசலிச சீனாவையும், அல்பேனியாவையும், ஏனைய சகோதர நாடுகளையும் எதிர்ப்பதிலும், சோசலிச முகாமை சீர்குலைப்பதிலும் டிட்டோ கும்பலுடன் குருச்சேவ் கூடிக் குலாவுவதையும், ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேருவதையும் மாபெரும் ரசிய மக்களும் ரசியகம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்.

உலக மக்களுக்கும் புரட்சிக்கும் எதிராக டிட்டோ கும்பலுடன் குருச்சேவ் கூடிக் குலாவுவதையும், அனைத்து நாடுகளையும் சேர்ந்த பிற்போக்காளர்களுடன் கூட்டுச் சேருவதையும் மாபெரும் ரசிய மக்களும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்.

யூகோஸ்லாவியத் திரிபுவாதிகளை முன்னுதாரணமாய்க் கொண்டு கட்சி மற்றும் அரசின் இயல்பை மாற்றி, முதலாளித்துவ மீட்சிக்கு வழி கோல, குருச்சேவ் செய்யும் முயற்சிகளை மாபெரும் ரசிய மக்களும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்.

உலகின் முதல் சோசலிச நாடான ரசியாவின் மீது கரிய மேகங்கள் குவியச் செய்துவிட்டார் குருச்சேவ். ஆனால் இது ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றிலும், ரசிய நாட்டின் வரலாற்றிலும் இடையிலே வந்துபோகின்ற நிகழ்வாய் மட்டுமே இருக்கமுடியும். சிறிதுகாலம் வஞ்சிக்கப்பட்டு ஏமாற்றப்படுகிற மக்கள் முடிவில் படிப்படியாக விழித்

தெழுவார்கள். ரசிய மக்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தி பின்னுக்குத் தள்ள விரும்புகிறவர்கள் யாரானாலும் பழங்கதை ஒன்றில் தேரைத் தடுத்து நிறுத்த விரும்புகிற வெட்டுக்கிளியைப் போன்றவரே. அவரது நோக்கம் ஒரு போதும் ஈடேறாது.

முடிவுரை

யூகோஸ்லாவியாவில் நடந்துள்ள முதலாளித்துவ மீட்சி சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கு ஒரு புதிய வரலாற்றுப் படிப்பினையைத் தருகிறது.

தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகும் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே போராட்டம் தொடர்கிறது; முதலாளித்துவப் பாதை, சோசலிசப் பாதை ஆகிய இரு பாதைகளுக்கும் இடையே வெற்றிக்கான போராட்டம் தொடர்கிறது; முதலாளித்துவம் மீட்கப்படும் ஆபத்து உள்ளது—இதுதான் அந்தப் படிப்பினை. யூகோஸ்லாவியா முதலாளித்துவ மீட்சிக்குத் தலைசிறந்த உதாரணமாகும்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன் தொழிலாளி வர்க்கக் கட்சி தொழிலாளி வர்க்க பிரபுகுலத்தின் பிடியில் சிக்கி முதலாளித்துவக் கட்சியாக சீரழிந்து, ஏகாதிபத்திய ஏவலாளாக மாறும் என்பது மாத்திரம் அல்ல, அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகும்கூட தொழிலாளி வர்க்கக் கட்சி புதிய முதலாளித்துவ சக்திகளின் பிடியில் சிக்கி, முதலாளித்துவக் கட்சியாக சீரழிந்து, ஏகாதிபத்திய ஏவலாளாகிப் போவது சாத்தியமே என்பதை யூகோஸ்லாவியப் படிப்பினை நமக்கு உணர்த்துகிறது. யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் கழகம் இத்தகைய சீரழிவுக்கு எடுத்துக் காட்டாகும்.

சோசலிச நாட்டில் முதலாளித்துவம் மீட்கப்படுவதென்பது எதிர்ப் புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பு அல்லது ஏகாதிபத்திய ஆயுதப் படையெடுப்பின் வாயிலாகத்தான் நடைபெற வேண்டுமென்ற கட்டாயமில்லை; அந்த நாட்டு தலைமைக் குழுவினது சீரழிவின் வாயிலாகவும், முதலாளித்துவ மீட்சி நடைபெறலாம் என்பதை யூகோஸ்லாவியப் படிப்பினை நமக்கு உணர்த்துகிறது. கோட்டையைக் கைப்பற்ற மிகச் சுலபமான வழி கோட்டைக்குள்ளிருந்தே கைப்பற்றும் வழிதான். இதற்கு யூகோஸ்லாவியா எடுத்துக் காட்டாகும்.

திரிபுவாதம் ஏகாதிபத்தியக் கொள்கையின் விளைபொருள் என்பதை யூகோஸ்லாவியப் படிப்பினை நமக்கு உணர்த்துகிறது. பழையவகைத்

திரிபுவாதம் தொழிலாளி வர்க்க பிரபுகுலத்தை விலைக்கு வாங்கி ஊட்டி வளர்க்கும் ஏகாதிபத்தியக் கொள்கையின் விளைவாய் எழுந்தது. நவீன திரிபுவாதமும் அதே முறையில்தான் எழுந்துள்ளது. இப்போது ஏகாதிபத்தியம் முழுமுச்சாய் இறங்கி, தனது நடவடிக்கைகளின் எல்லையை விரிவாக்கி, சோசலிச நாடுகளின் தலைமைக் குழுக்களை விலைக்கு வாங்கி, அவர்கள் மூலமாய் தனக்கு விருப்பமான ''அமைதிவழிப் பரிணாமக்'' கொள்கையை நிறைவேற்ற முயல்கிறது. இந்த அம்சத்தில் முன்னுதாரணமாகியுள்ள யூகோஸ்லாவியாவை ''வழிகாட்டியாக அமெரிக்க ஏகாதிபத்தியம் கருதுகிறது.

யூகோஸ்லாவியாவில் நடந்துள்ள முதலாளித்துவ மீட்சியானது நவீன திரிபுவாதத்தை எதிர்த்துப் போராடும் அவசர அவசியத்தை எல்லா மார்க்சிய - லெனினியவாதிகளும் இன்னும் தெளிவாய்ப் பார்க்கவும், மேலும் தீர்க்கமாய் உணரவும் செய்யும்.

ஏகாதிபத்தியம் என்ற ஒன்று இருக்கும்வரை, சோசலிச நாடுகளில் முதலாளித்துவம் மீட்கப்படும் ஆபத்து மறைந்துவிட்டதாகச் சொல்வதற்கு ஆதாரம் ஒன்றுமில்லை.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் முதலாளித்துவ மீட்சியின் ஆபத்தை ஏற்கனவே ஒழித்துவிட்டதாகவும், கம்யூனிச அமைப்பைக் கட்டிக் கொண்டிருப்பதாகவும் பறைசாற்றுகிறார்கள். இது உண்மையானால் மகிழ்ச்சிக்குரியதே. ஆனால். உண்மையில் அவர்கள் யூகோஸ்லாவியாவை சகல வழிகளிலும் பின்பற்றி மிகமிக ஆபத்தான பாதையில் பயணம் தொடங்கியுள்ளனர் என்பதைப் பார்க்கிறோம். இது நமக்கு ஆழ்ந்த கவலையும் வேதனையும் தருகிறது.

மாபெரும் ரசிய நாட்டின்பாலும், மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின்பாலும் நாம் கொண்டுள்ள பேரன்பினால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை உளமார வேண்டிக் கொள்கிறோம்: தோழர்களே, நண்பர்களே! யூகோஸ்லாவியப் பாதையில் போகாதீர்கள். உடனே திரும்பி விடுங்கள். இல்லையேல் காலந்தாழ்ந்து விடும்!

புதிய காலனியத்தின் ஆதரவாளர்கள்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நான்காவது விமர்சனம்

'மக்கள் தினசரி', 'செங்கொடி' பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்கள் (அக்டோபர் 22, 1963)

இரண்டாம் உலகப் போரிலிருந்தே ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் ஒரு மாபெரும் புரட்சிப் புயல் பரவி வந்திருக்கிறது. அய்ம்பதுக்கும் மேற்பட்ட ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் சுதந்திர மடைந்துள்ளன. சீனா, வியட்னாம், கொரியா, கியூபா நாடுகள் சோசலிசப் பாதையில் நடைபோடத் தொடங்கியிருக்கின்றன. ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன.

முதலாம் உலகப் போருக்குப் பின், ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களது அடிவருடிகளின் அடக்குமுறைக்கு உள்ளானதால், காலனிய, புதிய காலனிய நாடுகளின் புரட்சி, கடும் பின்னடைவுகளைச் சந்தித்தது. ஆனால்; இரண்டாம் உலகப்போருக்குப் பின்னால் உருவான நிலைமை, அடிப்படையிலேயே வேறுபட்டதாயிருக்கிறது. ஏகாதிபத்தியவாதிகள், தேசவிடுதலை என்ற காட்டுத்தீயை அணைப்பது சாத்தியமற்றதாகி உள்ளது. அவர்களது பழைய காலனிய அமைப்பு வேகமாக

நொறுங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய பாதுகாப்பான தளப் பிரதேசங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத் தீ கொழுந்துவிட்டெரியும் யுத்தகளமாக மாறியுள்ளது. சில காலனிய மற்றும் சார்பு நாடுகளில் ஏகாதிபத்திய ஆட்சி தூக்கி எறியப்பட்டிருக்கிறது. பிற நாடுகளில் ஏகாதிபத்திய ஆட்சி எழுந்து நிற்க முடியாத அளவுக்கு அடி வாங்கி தள்ளாடிக் கொண்டிருக்கிறது. இது தவிர்க்க முடியாதபடி ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள ஆட்சியை பலவீனப்படுத்தி உலுக்கிக்கொண்டிருக்கிறது.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் மக்கள் புரட்சியின் வெற்றியும், சோசலிச முகாமின் வளர்ச்சியும் நமது காலத்துக்கும் சகாப்தத்திற்கும் வெற்றிப்போர்ப் பரணி பாடுகிறது.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் வீசும் புரட்சிப் புயல் உலகின் அனைத்து அரசியல் சக்திகளையும் ஏதாவதொரு நிலைப்பாட்டை எடுக்குமாறு நிர்பந்திக்கிறது. இந்த வலிமைமிக்க புரட்சிப்புயல் ஏகாதிபத்தியவாதிகளையும், காலனியவாதிகளையும் நடுநடுங்கச் செய்கிறது; உலகெங்குமுள்ள புரட்சிகர மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது. ஏகாதிபத்தியவாதிகளும், காலனியவாதிகளும் ''பயங்கரம், பயங்கரம்'' என்று கூச்சலிடுகிறார்கள். புரட்சிகர மக்களோ ''அற்புதம், அற்புதம்'' என்று ஆர்ப்பரிக்கிறார்கள். ஏகாதிபத்தியவாதிகளும், காலனியவாதிகளும் ''இது கலகம், இது தடை செய்யப்படவேண்டும்'' என்று சொல்கிறார்கள். புரட்சிகர மக்களோ, ''இது புரட்சி, மக்களின் உரிமை, தவிர்க்க முடியாத வரலாற்றுப் போக்கு'' என்று முழங்குகிறார்கள்.

இன்றைய உலக அரசியலின் மிகக் கூர்மையான இவ்விசயத்தைப் பற்றிய நிலைப்பாடு, மார்க்சிய-லெனினியவாதிகளையும், நவீன திரிபுவாதிகளையும் வேறுபடுத்திக் காட்டக் கூடிய முக்கிய எல்லைக்கோடு ஆகும். மார்க்சிய-லெனினியவாதிகள் ஒடுக்கப்பட்ட தேசங்களோடு சேர்ந்துநின்று தேசவிடுதலை இயக்கத்தை உறுதியாக ஆதரிக்கிறார்கள். நவீன திரிபுவாதிகளோ ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் காலனியவாதிகளுடன் சேர்ந்துகொண்டு சாத்தியப்பட்ட வகையிலெல்லாம் தேச விடுதலை இயக்கத்தை மறுக்கவும், எதிர்க்கவும் செய்கிறார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், தேச விடுதலை இயக்கத்துக்கு ஆதரவான முழக்கங்களை முழுமையாக விலக்கிவிடத் துணியவில்லை. அவ்வப்போது தங்களது சொந்த நலன்களுக்காக, தேச விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதுபோல் தோற்றமளிக்கும் சில நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள். ஆனால் நாம் அவற்றின்

சாரத்தைத் துருவிப்பார்த்தால்-பல ஆண்டுகாலமாக அவர்கள் மேற்கொண்டிருக்கும் கண்ணோட்டங்களையும் கொள்கைகளையும் வைத்துப் பார்த்தால்-ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவைச் சார்ந்த ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலைப் போராட்டங்களைப் பற்றிய அவர்களது கருத்து செயலிழந்த ஆதரவாகவோ, அதிருப்தியாகவோ, எதிரானதாகவோதான் இருக்கிறது. புதிய காலனியத்துக்கு ஆதரவாகவே அவர்கள் செயல்படுகின்றனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின், 1963ஆம் ஆண்டு ஜூலை 14 தேதியிட்ட பகிரங்க கடிதத்திலும், எண்ணற்ற கட்டுரைகள் மற்றும் அறிக்கைகளிலும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் தங்கள் தவறான கருத்துக்கள் சரியானதென்று நிரூபிப்பதற்கும், தேச விடுதலை இயக்கம் பற்றிய விசயத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்குவதற்கும் கடுமையாக முயன்றிருக்கிறார்கள். ஆனால், அதன் ஒரே விளைவு மார்க்சிய - லெனினியத்துக்கு விரோதமான. புரட்சிக்கு விரோதமான தங்களுடைய நிலைப்பாட்டை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மேலும் உறுதிப்படுத்தியிருப்பதுதான்.

தேசிய விடுதலை இயக்கம் பற்றிய ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் கோட்பாட்டையும், நடைமுறைகளையும் கீழே பார்ப்போம்.

ஏகாதிபத்தியத்தையும் காலனியத்தையும் எதிர்த்துப் போராடும் கடமையைக் கைவிடுதல்

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய விடுதலை இயக்கம் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிகளை ஏற்கனவே சாதித்திருக்கிறது. இதனை யாரும் மறுக்க முடியாது. ஆனால், ஏகாதிபத்தியம், காலனியும் மற்றும் அவர்களின் அருவருடிகளை எதிர்த்துப் போராடும் கடமையை ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் முழுமையாக நிறைவேற்றிவிட்டார்கள் என்று யாரேனும் கூறமுடியுமா?

இல்லை என்பதே எமது பதில் ஆகும். இந்தப் போராட்டக் கடமை முழுமையாக நிறைவேற இன்னும் நீண்டகாலம் பிடிக்கும்.

ஆனால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், தற்கால உலகில் இருந்து காலனியம் மறைந்துவிட்டது அல்லது மறைந்துக்கொண்டிருக்கிறது என்ற கருத்தை அடிக்கடி பரப்பிவருகின்றனர். ''உலகில் 500

லட்சம் மக்கள் இன்னும் காலனிய ஆட்சியின்கீழ் நசுக்கப்படுகிறார்கள்''[1] என்று பேசி வருகின்றனர். போர்ச்சுக்கல், அங்கோலா, மொசம்பிக் ஆகிய ஆப்பிரிக்க பகுதிகளில் மட்டுமே காலனியத்தின் மிச்ச சொச்சங்கள் இருப்பதாகவும் காலனிய ஆட்சி ஒழிப்பு அதன் ''இறுதிக் கட்டத்தை''[2] ஏற்கனவே அடைந்துவிட்டிருப்பதாகவும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

உண்மை என்ன ?

ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் நிலைமையைப் பாருங்கள். அங்கே பெருவாரியான நாடுகள் தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனம்செய்துள்ளன. ஆனால், அவற்றில் பலநாடுகள், ஏகாதிபத்திய மற்றும் காலனிய கட்டுப்பாட்டையோ, அடிமைத்தனத்தையோ முழுமையாகத் தூக்கி எறியவில்லை. அந்நாடுகள், ஏகாதிபத்தியக்கொள்ளை மற்றும் ஆக்கிரமிப்பின் இலக்காகவும், பழைய காலனியவாதிகளுக்கும் புதிய காலனியவாதிகளுக்கும் நடக்கும் போட்டியின் நிலைக்களனாகவும் நீடிக்கின்றன. சில நாடுகளில் பழைய காலனியவாதிகளே புதிய காலனியவாதிகளாக மாறி, தங்களது பயிற்சி பெற்ற ஏஜென்டுகள் மூலம் தங்கள் காலனி ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர். வேறு சில நாடுகளில் ஓநாய் முன்வாசல் வழியாக வெளியேற, வஞ்சகப்புலி கொல்லைப்புற வழியாக நுழைந்திருக்கிறது. ஆம்! பழைய காலனியத்துக்குப் பதிலாக புதிய அதிக வலுவுள்ள, அதிக அபாயகரமான அமெரிக்க காலனியம் நுழைந்திருக்கிறது. ஆசிய, ஆப்பிரிக்க மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் புதிய காலனியத்தின் கோரப் பிடியில் சிக்கித் துன்புறுகின்றனர்.

அடுத்து, லத்தீன் அமெரிக்க மக்களின் குரலைக் கேளுங்கள்.

இரண்டாவது ஹவானா பிரகடனம் கூறுகிறது, ''ஸ்பானிஸ் காலனிய சாம்ராஜ்யத்தைவிட அதிக கொடூரமானதும், அதிக வலிமை வாய்ந்ததும், ஈவிரக்கமற்றதுமான ஏகாதிபத்தியத்தின்கீழ் இன்றைய லத்தீன் அமெரிக்கா உள்ளது''

அது மேலும் கூறுகிறது:

---

1. *மூன்றாவது ஆப்ரோ—ஆசிய மக்களின் ஒற்றுமை மாநாட்டில் (பிப்ரவரி 5, 1963) ரசிய குழுவின் தலைவர் மிர்சோ சர்சான்-ஜேட் ஆற்றிய உரை.*

2. *என். எஸ். குருச்சேவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசில் (அக்டோபர் 1961) முன் வைக்கப்பட்ட''ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் திட்டத்தின்மீதான அறிக்கை.''*

''இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதிலிருந்து...வட அமெரிக்க முதலீடுகள் 10 பில்லியன் டாலரையும் தாண்டிவிட்டன. மேலும் லத்தீன் அமெரிக்கா குறைந்த விலைக்கு கச்சாப் பொருட்களைக் கொடுத்து, அதிக விலைக்கு உற்பத்திப் பொருட்களை வாங்குகிறது.''

மேலும் அது கூறுகிறது:

''...லத்தீன் அமெரிக்காவிலிருந்து அமெரிக்க அய்க்கிய நாடுகளுக்குத் தொடர்ச்சியாக வெள்ளம்போலப் பணம் செல்கிறது. ஒரு நிமிடத்தில் 4 ஆயிரம் டாலர், ஒரு நாளில் 50 லட்சம் டாலர், ஒரு வருடத்தில் 20 கோடி டாலர், ஒவ்வொரு அய்ந்து வருடமும் 100கோடி டாலர் பணம் செல்கிறது. நம்மை விட்டுச் செல்லும் ஒவ்வொரு ஆயிரம் டாலருக்கும் இங்கே ஒரு மனிதன் செத்துப் பிணமாகிறான். ஆம். ஒரு சாவுக்கு ஆயிரம் டாலர் என்பதுதான் ஏகாதிபத்தியத்தின் விலை.''

உண்மைகள் தெளிவாக இருக்கின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏகாதிபத்தியவாதிகள், காலனியாதிக்கத்தைக் கைவிடவில்லை. புதிய காலனியம் என்ற வடிவத்தை மட்டுமே புதிதாக மேற்கொண்டிருக்கிறார்கள். ஏகாதிபத்தியவாதிகள் சில இடங்களில், தங்களது பழைய முறையான நேரடி காலனி ஆட்சி வடிவத்தைக் கைவிடுமாறும், தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்ட ஏஜென்டுகள் மூலம் ஒரு புதிய வகை காலனியாட்சியையும் சுரண்டலையும் மேற்கொள்ளுமாறும் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது, புதிய காலனியாதிக்கத்தின் ஒரு முக்கிய குணாம்சமாகும். அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள், இராணுவ முகாம்களை உருவாக்கியும், இராணுவ தளங்களை அமைத்தும், 'கூட்டமைப்புக்கள்', 'பொருளாதார சமூகங்கள்' ஆகியவற்றை நிறுவியும், பொம்மை அரசுகளை வளர்த்துவிட்டும், தங்கள் காலனி நாடுகளையும் சுதந்திரமடைந்த நாடுகளையும் அடிமைப்படுத்துகிறார்கள் அல்லது கட்டுப்படுத்துகிறார்கள். பொருளாதார 'உதவி'யின் மூலமாகவோ அல்லது வேறு வடிவங்களிலோ இந்நாடுகளைத் தங்கள் பொருட்களை விற்பதற்கான சந்தையாகவும், கச்சாப் பொருட்களைப் பெறுவதற்கான ஆதாரமாகவும் தங்களது மூலதன ஏற்றுமதிக்கான வாசலாகவும் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள்; இந்நாடுகளின் செல்வங்களைக் கொள்ளையடித்துச் செல்கிறார்கள்; இந்நாட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள். மேலும் அந்நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதற்கும், அந்நாடுகளின் மீது இராணுவ, பொருளாதார, கலாச்சார ஆக்கிரமிப்புத் தொடுப்பதற்கும் அய்க்கிய நாடுகள் சபையை அவர்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். அந்நாடுகளில், 'சமாதான' முறைகளிலான தங்களுடைய ஆட்சியைத் தொடர முடியவில்லையெனில் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகளைச்

செய்து ஆட்சிகளை மாற்றுகிறார்கள், சீர்குலைவு வேலைகளில் ஈடுபடு கிறார்கள், அல்லது நேரடியான இராணுவத் தலையீட்டையோ, ஆக்கிர மிப்பையோ நடத்துகிறார்கள்.

புதிய காலனியத்தை உருவாக்குவதில் மிகுந்த திறமையுடனும், தந்திரத்துடனும் அமெரிக்கா செயல்படுகிறது. இதனை ஆயுதமாகக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், பிற ஏகாதிபத்தியங்களின் காலனிகளையும் செல்வாக்கு மண்டலங்களையும் பறித்துக் கொள்ள கடுமையாக முயன்று வருகின்றனர். உலக மேலாதிக்கத்தை நிறுவ முயன்று வருகின்றனர்.

இந்த புதிய காலனியம் என்பது மிகமிக அபாயகரமானதும் கொடூர மானதுமான காலனிய வடிவம் ஆகும்.

இத்தகைய சூழ்நிலைகளில் காலனிய ஆட்சி ஒழிப்பு ஏற்கனவே 'இறுதிக் கட்டத்தை' அடைந்துவிட்டதாக எவ்வாறு சொல்லமுடியும் என்று நாம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைக் கேட்க விரும்பு கிறோம்?

இத்தகைய பொய்களுக்கு முட்டுக்கொடுக்க, 1960-ம் ஆண்டு அறிக்கையின் உதவியை நாடுவதில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கள் மிகுந்த தைரியம் காட்டியிருக்கிறார்கள். காலனிய அமைப்பு வேகமாகச் சிதைந்து வருகிறது என்று 1960-ம் ஆண்டு அறிக்கை குறிப்பிடவில்லையா? என்று அவர்கள் கேட்கிறார்கள். பழைய காலனி யத்தின் வேகமான சிதைவு என்ற இந்த ஆய்வுரை காலனியத்தின் மறைவு என்ற அவர்களது வாதத்திற்கு உதவ முடியாது. ''அமெரிக் காவே இன்றைய காலனியத்தின் முதன்மையான அரண்'' என்று அறிக்கை தெளிவாக குறிப்பிடுகின்றது. ''அமெரிக்காவினால் தலைமை தாங்கப்படும் ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் பழைய காலனி நாடுகளின் மக்களை புதிய முறைகளிலும், புதிய வடிவங்களிலும் சுரண்டுவதற்கு மூர்க்கத்தனமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர்'' என்றும், அவர்கள் ''ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மீது பொருளாதாரக் கட்டுப்பாடு, அரசியல் செல்வாக்கு என்ற நெம்புகோல் களைத் தங்கள் கையில் தக்க வைத்துக் கொள்வதற்கு முயல்கிறார்கள்'' என்றும் அறிக்கை தெளிவாகக் குறிப்பிடுகிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கஷ்டப்பட்டு மூடிமறைக்க முயல்கின்ற அந்த விசயத்தை அறிக்கையின் இந்த வரிகள் அம்பலப்படுத்துகின்றன.

தேசிய விடுதலை இயக்கம், பொருளாதாரக் கடமைகளை மைய மாகக் கொண்ட 'புதிய கட்டத்தை' அடைந்துவிட்டது என்ற கோட்

பாட்டை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உருவாக்கியிருக்கிறார் கள். ''முன்பு, போராட்டம் அரசியல் தளத்திலேயே முக்கியமாக நடத்தப்பட்டது'' ஆனால் இன்று பொருளாதாரப் பிரச்சினை ''மையக் கடமையாகவும்'' ''புரட்சியின் தொடர்ந்த வளர்ச்சிக்கான அடிப்படைக் கண்ணி'' [1] யாகவும் மாறியிருக்கிறது என்பது அவர்கள் வாதம்.

தேசிய விடுதலை இயக்கம் ஒரு புதிய கட்டத்தை அடைந்திருக் கிறது. ஆனால், இது எவ்வகையிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் குறிப்பிடுகிற ''புதிய கட்டம்'' அல்ல. புதிய கட்டத்தில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் அரசியல் உணர்வு மட்டம் முன்னெப்போதும் இல்லாதஅளவுக்கு உயர்ந்திருக்கிறது, புரட்சிஇயக்கம் முன்னெப்போதும் கண்டிராத அளவு வேகத்துடன் முன்னோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. ஏகாதிபத்திய சக்திகளும், தங்கள் சொந்த நாடுகளிலுள்ள ஏகாதிபத்திய அடிவருடிகளும் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டுமென்பதே, இந்நாட்டு மக்களின் உடனடிக்கோரிக்கையாக இருக்கிறது. இம்மக்கள், தங்களுடைய முழுமையான அரசியல், பொரு ளாதார சுதந்திரத்துக்காகப் பாடுபடுகிறார்கள். ஏகாதிபத்தியம் பழைய மற்றும் புதிய காலனியம், இவர்களுடைய அடிவருடிகள் ஆகியோருக் கெதிரான போராட்டத்தை மேலும் வலுப்படுத்துவதே இந்நாடுகளின் முதன்மையான, அவசரக் கடமையாக உள்ளது. இந்தப் போராட்டம் அரசியல், பொருளாதார, இராணுவ, கலாச்சார, சித்தாந்த மற்றும் பிற தளங்களிலும் தொடர்ந்து தீவிரமாக நடத்தப்பட்டு வருகிறது. எல்லாத் தளங்களிலும் நடைபெறும் இப்போராட்டங்கள், தீவிர அரசியல் போராட் டமாக வெளிப்படுகின்றன. ஏகாதிபத்தியவாதிகள், நேரடியான அல்லது மறைமுகமான இராணுவ ஒடுக்குமுறையை மேற்கொள்ளும்போது இப் போராட்டங்கள் தவிர்க்க முடியாதபடி ஆயுதப் போராட்டங்களாக மாறு கின்றன. புதிதாக சுதந்திரமடைந்த நாடுகள் தங்களது சுதந்திரமான பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வதும் முக்கியமானது. ஆனால், ஏகாதிபத்தியம், பழைய, புதிய காலனியம் மற்றும் அவர்களின் அடிவருடிகளுக்கு எதிரான போராட்டத்திலிருந்து இந்தக் கடமையை ஒருபோதும் பிரித்து விடக்கூடாது.

''காலனியத்தின் மறைவு'' என்ற கோட்பாட்டைப் போலவே, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் முன்வைக்கப்படும் ''புதிய கட்டம்'' என்ற கோட்பாட்டின் நோக்கம், அமெரிக்காவினால் பிரதிநிதித் துவப்படுத்தப்படும் புதிய காலனியத்தால் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் ஆக்கிரமிக்கப்படுவதையும் கொள்ளையடிக்கப்படு

1. *''மக்கள் போராட்டத்தின் சேதத்துக்கு'' பிராவ்தா, செப்டம் பர் 17, 1963.*

வதையும் பூசி மெழுகுவதாகும். ஏகாதிபத்தியத்துக்கும் ஒடுக்கப்பட்ட நாடுகளுக்குமிடையிலான கூர்மையான முரண்பாட்டை மூடி மறைத்து இக்கண்டங்களின் மக்கள் நடத்தும் புரட்சிகரப் போராட்டங்களை செயல் இழக்கச் செய்வதாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களின் இந்தக் கோட்பாட்டின்படி, ஏகாதிபத்தியம், பழைய மற்றும் புதிய காலனியம் மற்றும் இவர்களின் அடிவருடிகளுக்கு எதிரான போராட்டம் இனிமேல் தேவையில்லை—ஏனெனில் காலனியம் மறைந்து கொண்டிருக்கிறது; பொருளாதார வளர்ச்சியே தேசவிடுதலை இயக்கத்தின் மையக் கடமையாக மாறியிருக்கிறது. இது தேச விடுதலை இயக்கத்தையே ஒட்டுமொத்தமாகக் கைவிட்டுவிடச் சொல்வதாகாதா? ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் சித்தரிக்கப்படும் பொருளாதாரக் கடமைகளையே மையமாகக் கொண்ட 'புதிய கட்டம்' என்பது,ஏகாதிபத்தியத்தையும், பழைய மற்றும் புதிய காலனியத்தையும், அவர்களது அடிவருடிகளையும் எதிர்க்காத, ஒடுக்கப்படும் தேசிய விடுதலைப் போராட்டம் இனிமேலும் தேவைப்படாத ஒரு கட்டமே என்பது தெளிவு.

ஒடுக்கப்பட்ட நாடுகளில் புரட்சியை கைவிடுவதற்கான பரிந்துரைகள்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஒடுக்கப்பட்ட நாடுகளின் எல்லா குறைகளையும் தீர்ப்பதற்கான ஏராளமான பரிந்துரைகளை தமது தவறான கோட்பாடுகளுக்குப் பொருந்துகிற விதத்தில் தயாரித்திருக்கிறார்கள். அவற்றை நாம் பரிசீலிப்போம்.

முதலாவது பரிந்துரை, சமாதான சகவாழ்வு மற்றும் சமாதானப் போட்டி என்பதாகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் தேசிய விடுதலை இயக்கம் பெற்ற மாபெரும் வெற்றிகளை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் தாங்கள் குறிப்பிடும் 'சமாதான சகவாழ்வு' 'சமாதான போட்டி' இவற்றின் வெற்றியாக அடிக்கடி குறிப்பிடுகிறார்கள். ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்தியகமிட்டியின் பகிரங்கக் கடிதம் கூறுவதாவது :

''சமாதான சகவாழ்வு சூழ்நிலைகளில், பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்திலும், தேச விடுதலைக்கான மக்கள் போராட்டத்திலும், முக்கியமான புதிய வெற்றிகள் சமீப வருடங்களில் ஈட்டப்

பட்டுள்ளன. உலகப் புரட்சிகர இயக்கம் வெற்றிகரமாக வளர்ந்து கொண்டிருக்கிறது''

மேலும், வேறுபட்ட சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வு, எதிரெதிரான இரண்டு சமூகஅமைப்புகளுக்கிடையிலான சமாதான பொருளாதார போட்டி ஆகிய சூழ்நிலைகளில் தேசவிடுதலை இயக்கம் வளர்ந்துக்கொண்டிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.[1] சமாதான சகவாழ்வும், சமாதானப் போட்டியும் ''அந்நிய ஏகபோகங்களின் ஆதிக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளப் போராடும் மக்களிடையே ஒரு விடுதலை இயக்கத்தை கட்டவிழ்த்துவிட உதவும்''[2] என்றும் ''முதலாளித்துவ உறவுமுறைகள் முழுமைக்கும்'' ''மரண அடி''[3] கொடுக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

வேறுபட்ட சமூக அமைப்புகள் கொண்ட நாடுகளுக்கிடையே சமாதான சகவாழ்வு என்ற லெனினியக் கொள்கையை எல்லா சோசலிச நாடுகளும் கடைபிடிக்கவேண்டும். ஆனால், சமாதான சகவாழ்வும் சமாதான போட்டியும், மக்களின் புரட்சிக்கரப் போராட்டங்களுக்கு மாற்றாகிவிட முடியாது. எல்லா காலனி மற்றும் சார்பு நாடுகளின் தேசியப் புரட்சியின் வெற்றியும், அந்தந்த நாட்டு மக்களின் புரட்சிகரப் போராட்டத்தின் மூலமே சாதிக்கப்படவேண்டும்; அதனை வேறு எந்த நாட்டு மக்களின் போராட்டமும் ஈடுசெய்துவிட முடியாது.

தேசிய விடுதலைப் புரட்சியின் வெற்றிகளுக்கு முக்கிய காரணம் மக்களின் புரட்சிகரப் போராட்டங்கள் அல்ல என்றும், மக்கள் தாங்களாகவே தங்களை விடுவித்துக் கொள்ள முடியாது என்றும் சமாதான சகவாழ்வு மற்றும் சமாதானப் போட்டியின் மூலம் ஏகாதிபத்தியம் இயற்கையான அழிவைச் சந்திக்கும் வரை அவர்கள் பொறுத்திருக்க வேண்டும் என்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் கருதுகிறார்கள். உண்மையில் இது, ஏகாதிபத்தியக் கொள்ளையையும் அடக்குமுறையையும் காலமெல்லாம் சகித்துக்கொள்ள வேண்டுமென்றும், எதிர்த்துப் போராடவும் புரட்சி செய்யவும் வேண்டாமென்றும் ஒடுக்கப்பட்ட நாடுகளிடம் சொல்வதற்குச் சமமாகும்.

---

1. *''சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழியும் சீனத் தலைவர்களின் பிளவு மேடையும்'', ஆசிரியர் குழுவின் கட்டுரை, கம்யூனிஸ்ட், மாஸ்கோ, எண் 14, 1963.*

2. *மேற்படி கட்டுரை.*

3. *பி எண். போனோமரியோவ், ''புரட்சிகர இயக்கத்தின் சிலபிரச்சினைகள்'' வோர்ல்ட் மார்க்சிஸ்ட் ரிவ்யூ எண் 12, 1962.*

இரண்டாவது பரிந்துரை 'பின்தங்கிய நாடுகளுக்கு உதவி' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளுக்கு தாங்கள் வழங்கிய பொருளாதார உதவியின் பாத்திரம் பற்றி ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தற்புகழ்ச்சியோடு பேசுகிறார்கள். அத்தகைய உதவி, இந்த நாடுகள் ''ஒரு புதிய அடிமைத்தனத்துக்கான அபாயத்தைத் தவிர்க்க'' உதவும் என்றும் ''அது அந்நாடுகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும்; அந்நாடுகளின் இயல்பான முன்னேற்றத்திற்குத் துணை புரியும்; சோசலிசத்துக்குச் செல்லுகின்ற நெடும்பாதைக்கு இந்நாடுகளை இட்டுச் செல்லக் கூடிய விதத்தில் உள்ளார்ந்த இயக்கங்களை வேகப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யும்'' [1] என்றும் தோழர் குருச்சேவ் கூறியிருக்கிறார்.

சர்வதேசியம் என்ற அடிப்படையில் சோசலிச நாடுகள், புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளுக்கு பொருளாதார உதவி வழங்குவது அவசியமானதும் முக்கியமானதும் ஆகும். ஆனால், அந்நாடுகளின் தேசிய சுதந்திரமும், சமூகமுன்னேற்றமும் பிரதானமாக அந்நாடுகளின் சொந்த மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின் மூலம் அல்லாது, சோசலிச நாடுகளிடமிருந்து அவர்கள் பெறும் பொருளாதார உதவியின் மூலமே சாதிக்கப்படும் என ஒருபோதும் சொல்ல முடியாது.

வெளிப்படையாகச் சொன்னால், புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளுக்கு உதவி வழங்குவது பற்றிய ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் கொள்கையும் நோக்கமும் சமீப ஆண்டுகளில் சந்தேகத்துக்குரியவையாக இருக்கின்றன. புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளுக்கு உதவி என்பது பற்றிய விசயங்களில் அவர்கள் அடிக்கடி பெரும் வல்லரசு ஆதிக்கவாதமும், தேசியத் தற்பெருமைவாதமும் கொண்ட அணுகுமுறையையே மேற்கொள்கிறார்கள். உதவிபெறும் நாடுகளின் பொருளாதார அரசியல் நலன்களுக்கு ஊறுவிளைவிக்கிறார்கள்; அதன் விளைவாக சோசலிச நாடுகளுக்கு அவப்பெயரைத் தேடித் தருகிறார்கள். உதாரணமாக இந்தியாவுக்கு அவர்கள் அளிக்கும் உதவியின் உள்நோக்கம் தெளிவாகத் தெரிகிறது.

ரசியாவிடமிருந்து பொருளாதார உதவி பெறும் புதிதாக சுதந்திரம் அடைந்த நாடுகளின் வரிசையில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. கம்யூனிசத்துக்கு எதிரான, மக்களுக்கு எதிரான, சோசலிச நாடுகளுக்கு எதிரான அதன் கொள்கைகளில் நேரு அரசாங்கத்தை ஊக்குவிப்பதே

1. என்.எஸ். குருச்சேவ் ''சோசலிச உலக அமைப்பின் வளர்ச்சி பற்றிய முக்கிய கேள்விகள்'' வோர்ல்ட் மார்க்சிஸ்ட் ரிவ்யூ, எண் 9, 1962.

இந்த உதவியின் நோக்கம். ரசியாவின் இத்தகைய உதவி ''எங்கள் (அமெரிக்க) நலனுக்கு மிகவும் உகந்தது''[1] என்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கூட குறிப்பிட்டிருக்கின்றனர்.

மேலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள், ''பின் தங்கிய நாடுகளுக்கு உதவி அளிப்பதற்கு'' அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைப்பது பற்றிய கருத்தை வெளிப்படையாக முன்வைக்கிறார்கள். 1959-ல் அமெரிக்காவில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் குருச்சேவ் குறிப்பிடுகிறார்:

''பொருளாதார வளர்ச்சியில் பல நூற்றாண்டுகள் பின் தங்கியிருக்கிற மக்கள் அதிவிரைவில் தங்கள் சொந்தக்காலில் எழுந்து நிற்பதற்கு நம் இரு வல்லரசுகளும் உதவி செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிற இந்த உலகம் முழுவதிலும் உங்களுடைய பொருளாதார வெற்றிகளும், எங்களுடைய பொருளாதார வெற்றிகளும் போற்றப்படும்''

பாருங்கள்! புதிய காலனியத்தின் முக்கிய அரண் (அமெரிக்க ஏகாதிபத்தியம்) ஒடுக்கப்பட்ட நாடுகள் ''அதி விரைவில் தங்கள் சொந்தக்கால்களில் எழுந்து நிற்பதற்கு'' உதவி செய்யுமாம்! ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் புதிய காலனியத்தின் பங்காளிகளாக இருப்பதற்கு விருப்பம் கொண்டிருப்பது மட்டுமல்ல பெருமைப்படவும் செய்கிறார்கள் என்பது உண்மையில் வியப்பைக் கொடுக்கிறது.

மூன்றாவது பரிந்துரை 'படைபலக் குறைப்பு' என்று கூறப்படுகிறது

''படைபலக் குறைப்பு'' என்பது யுத்த சக்திகளிடமிருந்து ஆயுதங்களை அகற்றுவது, இராணுவவாதத்தை ஒழிப்பது, எந்த நாட்டின் உள் நாட்டு விவகாரங்களிலும் இராணுவத்தலையீடு இல்லாமல் செய்வது, காலனியத்தின் எல்லா வடிவங்களையும், முழுமையாகவும் இறுதியாகவும் அழிப்பது''[2] என்று குருச்சேவ் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் சொல்கிறார்: ''புதிதாக நிறுவப்பட்ட தேசிய அரசுகளுக்கு வழங்கப்படும் உதவியின் அளவை மிக அதிகமாக உயர்த்துவதற்கான சூழல்களை படைபலக்குறைப்பு உருவாக்கும். உலகம் முழுவதும், இராணுவத்திற்காக செலவிடப்படும் 12000 கோடி டாலர் தொகையில் 8-10 சதவீதம் இந்த நோக்கத்துக்காக திருப்பப்பட்டாலே உலகின் இடர்பட்ட பகுதிகளின் பசி, நோய், கல்வியின்மை ஆகியவற்றை 20 வருடங்களுக்குள் இல்லாமல் செய்துவிடலாம்''[3]

1. டபிள்யு.ஏ.ஹாரிமன்,வானொலி & வானொளி பேட்டி, டிசம்பர் 9, 1962.
2. என். எஸ். குருசேவ், பொது படைபலக்குறைப்பு மற்றும் சமாதானம் பற்றிய உலக மாநாட்டில் ஆற்றிய உரை, ஜூலை 10, 1962.
3. மேற்படி உரை

ஏகாதிபத்தியத்தின் ஆயுதப் பெருக்கத்தையும் யுத்த தயாரிப்புகளையும் அம்பலப்படுத்துவதற்கும், எதிர்ப்பதற்கும் பொது படைபலக் குறைப்புக்கான போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்று நாம் எப்போதும் கூறி வந்திருக்கிறோம். ஆனால் படைபலக் குறைப்பின் மூலம் காலனியம் ஒழிக்கப்பட்டுவிடும் என்று யாரும் கூறிவிட முடியாது.

குருச்சேவ் இங்கே ஒரு போதகரைப் போலப் பேசுகிறார். உலகின் தாழ்த்தப்பட்ட மக்களே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், நீங்கள் பொறுமையாக இருந்தால் மட்டுமே, ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் ஆயுதங்களைக் கீழே போடும் வரை நீங்கள் காத்திருந்தால் மட்டுமே, உங்கள் சுதந்திரம் மேலிருந்து இறங்கி வரும். ஏகாதிபத்தியவாதிகள் கருணை காட்டும் வரை காத்திருங்கள், உலகின் வறுமையால் பாதிக்கப்பட்ட பகுதிகளெல்லாம் பாலும் தேனும் பாய்கிற பூலோக சொர்க்கமாய் மாய் மாறும்...

இது மாயத்தோற்றத்தை விதைக்கிற செயல்மட்டுமல்ல, மக்களை போதை மயக்கத்தில் வீழ்த்துகிற செயலும் ஆகும்.

நான்காவது பரிந்துரை அய்க்கிய நாடுகள் சபையின் மூலம் காலனியத்தை ஒழிப்பது என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

குருச்சேவின் கருத்துப்படி, காலனிய முறையை வேரோடு வீழ்த்த அய்க்கிய நாடுகள் சபை முயற்சிகள் மேற்கொண்டால், 'அந்நிய ஆதிக்கத்தால் துயருறும் மக்கள் அந்நிய ஒடுக்குமுறையிலிருந்து சமாதான முறையில் விடுதலை பெறுவதற்கு ஒரு தெளிவான உடனடி வாய்ப்பைப் பெறுவார்கள்''[1]

1960 செப்டம்பரில் அய்க்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் பேசும் போது ''காலனிய முறை அரசாங்கத்தை ஒழிப்பதற்கு அய்க்கிய நாடுகள் சபை முன் வராவிட்டால் வேறு யார் அதைச் செய்ய முடியும்'' என்று குருச்சேவ் கேட்டார்.

இது ஒரு விநோதமான கேள்வி. குருச்சேவின் கருத்துப்படி, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவின் புரட்சிகர மக்கள் அவர்களாகவே காலனியத்தை விரட்டிவிடக்கூடாது, விரட்டிவிடவும் முடியாது; அதற்குப் பதிலாக அவர்கள் அய்க்கிய நாடுகள் சபையின் உதவியை நாடவேண்டும்.

---

1. என். எஸ். குருச்சேவ், அய்-நா. சபையில் ஆற்றிய உரை, செப்டம்பர் 23, 1960.

அய்க்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் குருச்சேவ் மேலும் கூறினார்: இதனால்தான் ''காலனிய முறை அரசாங்கத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் இணக்கம் காண்போம்; அதன் மூலம் இயல்பான வரலாற்று வளர்ச்சியைத் துரிதப்படுத்துவோம்'' என்று அறிவார்ந்த, தொலை நோக்குடன் கூடிய மேலை நாட்டு மக்களுக்கும், அவர்களின் அரசாங்கங்களுக்கும், அவர்களின் பிரதிநிதிகளாக அய்க்கிய நாடுகள் சபையின் இவ்வுயர் மட்டக் கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பவர்களுக்கும் நாங்கள் வேண்டுகோள் விடுகிறோம்'' அய்க்கிய நாடுகள் சபையின் உதவியை எதிர்ப்பார்ப்பதன் மூலம் குருச்சேவ் ஏகாதிபத்தியவாதிகளின் உதவியை எதிர்பார்க்கிறார் என்பது தெளிவு. ஆனால் ஏகாதிபத்தியவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் அய்க்கிய நாடுகள் சபையால் காலனிய ஆட்சியைப் பாதுகாக்கவும் பலப்படுத்தவும் முடியுமேயல்லாது அதை அழிக்க ஒருபோதும் முடியாது என்பதையே உண்மைகள் காட்டுகின்றன.

சுருங்கச் சொன்னால், ஏகாதிபத்தியவாதிகள் காலனியத்தை கைவிட்டு அடக்கப்பட்ட நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரத்தையும் விடுதலையையும் அளிப்பார்களென்றும் அதனால் எல்லாவித புரட்சிகர கோட்பாடுகளும், கொள்கைகளும், போராட்டங்களும் காலம் கடந்தவையாகவும்,அவசியமற்றவையாகவும், மாறியுள்ளன என்றும் எனவேஅவை கைவிடப்பட வேண்டும் என்றும் மக்களை நம்பச் செய்வதற்காகவே தேசிய விடுதலை இயக்கத்துக்கான பரிந்துரைகளை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் புனைந்துள்ளனர்.

தேசிய விடுதலைப் போர்களுக்கு எதிர்ப்பு

தேசிய விடுதலை இயக்கங்களையும், போர்களையும் ஆதரிப்பது பற்றி ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பேசியபோதும், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் தங்களது புரட்சிகரப் போராட்டத்தைக் கைவிடுமாறு செய்வதற்கே அவர்கள் எல்லா வகையிலும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், அவர்களே புரட்சிகரப் புயலைப் பார்த்து மிகவும் பயப்படுகிறார்கள். ''சிறு பொறி கூட உலக யுத்தம் என்கிற பெருந்தீயை மூட்டிவிடும்'' [1] என்ற கோட்பாட்டையும், ''உலக யுத்தம் என்பது மனிதகுலத்தையே அழிக்கக்கூடிய அணு ஆயுத யுத்தமாகத்தான் (Thermonuclear War) நிச்சயம் இருக்க முடியும்'' என்ற கோட்பாட்டையும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கொண்

1. என்.எஸ்,குருச்சேவ், யு.எஸ்.எஸ்.ஆர்.சுப்ரீம் சோவியத் கூட்டத்தில் அளித்த அறிக்கை, அக்டோபர் 1959.

டிருக்கிறார்கள். எனவே ''நமது காலத்தில், ''பகுதிப்போர்கள்'' (Local Wars) கூட மிக அபாயகரமானவை''[1] என்றும் 'போர்த் தீயை மூட்டுகிற சிறுபொறிகளை அணைக்க நாம் கடினமாக உழைப் போம்''[2] என்றும் குருச்சேவ் கூச்சலிடுகிறார். நீதிப்போர்களையும் அநீதிப்போர்களையும் வேறுபடுத்தாமல் விட்டுவிடுகிற குருச்சேவ், நீதிப் போர்களை ஆதரிப்பது என்ற கம்யூனிச நிலைப்பாட்டுக்கு துரோகம் செய்கிறார்.

இரண்டாம் உலக யுத்தத்துக்கு பிந்திய பதினெட்டு வருடங்களின் வரலாறு காட்டுகிறபடி, ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது அடிவருடி களும் தங்களுடைய காட்டுமிராண்டித்தனமான ஆட்சிகளைத் துப்பாக்கி முனைகளில் நீடித்துக்கொண்டிருக்கும் வரை ஒடுக்கப்பட்ட நாடுகளின் புரட்சியை நசுக்குவதற்கு பலாத்காரத்தை உபயோகிக்கும் வரை தேச விடுதலைப் போர்கள் தவிர்க்க முடியாதவை. ஏகாதிபத்தியவாதிகளுக் கும் அவர்களது அடிவருடிகளுக்கும் எதிரான தொடர்ச்சியான சிறிய மற்றும் பெரிய புரட்சிகரப் போர்கள் ஏகாதிபத்தியத்தின் போர்ச் சதி களுக்கு கடுமையான அடிகொடுத்துள்ளன; உலக சமாதானத்தைக் காக்கும் சக்திகளைப் பலப்படுத்தியுள்ளன; உலகயுத்தத்தை ஆரம்பிப் பதற்கான ஏகாதிபத்தியவாதிகளின் திட்டம் நிறைவேறாதபடி தடுத் துள்ளன. வெளிப்படையாகக் கூறினால் சமாதானத்திற்காகப் புரட்சிப் பொறிகளை ''அணைப்பதன்'' தேவை பற்றிய குருச்சேவின் கூக்குரல், சமாதானத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில் புரட்சியை எதிர்ப்பதே ஆகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களுடைய இத்தகைய தவறான கண்ணோட்டங்கள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் விடுதலைக்கான புரட்சிகரப் போராட்டங்களை கைவிட்டு, ஏகாதிபத்திய வாதிகளுடன் 'சமாதான சகவாழ்வு' நடத்துமாறு ஒடுக்கப்பட்ட நாடு களின் மக்களிடம் கோருகிறார்கள். அதுமட்டுமின்றி, ஏகாதிபத்தியத் துடன் சேர்ந்துகொண்டு, ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடு களின் புரட்சிப்பொறிகளை அணைக்க பல வழிகளிலும் முயற்சிக் கின்றனர்.

---

1. என். எஸ். குருச்சேவ், வியன்னா பத்திரிகையாளர் கூட்டத்தில் ஆற்றிய உரை ஜூலை 8, 1960.
2. என். எஸ். குருச்சேவ், வாஷிங்டனிலுள்ள யு. எஸ். நேஷனல் பிரஸ் கிளப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பதில்கள் செப் டம்பர் 16, 1959.

தேசிய விடுதலைக்கான அல்ஜீரிய மக்கள் போரை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமை நீண்டகாலம் அதனை ஆதரிக்காமலிருந்தது மட்டுமல்லாமல் உண்மையில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை ஆதரித்தது. அல்ஜீரியாவின் தேசிய விடுதலையை பிரான்சுடன் பிறநாட்டின் ''உள்நாட்டு விவகாரமாக'' கருதினார் குருச்சேவ். 1955 அக்டோபர் 3-ல் அல்ஜீரிய விசயம் குறித்த உரையில் அவர் கூறினார், ''ரசியா பிறநாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பதை எல்லாவற்றுக்கும் முதலாவதாக நான் கருத்தில் வைத்திருந்தேன், வைத்திருக்கிறேன்''. 1958 மார்ச் 19-ல் பிகாரோ செய்தியாளரை வரவேற்கும்போது அவர்கூறினார்: ''பிரான்ஸ் பலவீனமடைவதை நாங்கள் விரும்பவில்லை, பிரான்ஸ் இன்னும் மகத்தானதாக மாறவேண்டும் என்பதே எங்கள் விருப்பம்''

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் பிரெஞ்சு ஏகாதிபத்திபவாதிகளின் நட்பிற்காக கெஞ்சிக்கொண்டு அல்ஜீரிய குடியரசின் இடைக்கால அரசை நீண்டகாலம் அங்கீகரிக்கத் துணிவின்றி இருந்தனர். பிரெஞ்சு ஆக்கிரமிப்புக்கு எதிரான அல்ஜீரிய மக்களின் எதிர்ப்புப் போரில் வெற்றி நிச்சயமாகும் வரை, அவர்கள் அதை அங்கீகரிக்கவில்லை. அல்ஜீரிய சுதந்திரத்தை அங்கீகரிக்கா பிரான்ஸ் நிர்ப்பந்திக்கப்பட்ட பின்னரே அவர்கள் அல்ஜீரியாவை அவசர அவசரமாக அங்கீகரித்தனர். இந்த நாகரிகமற்ற அணுகுமுறை சோசலிச நாடுகளுக்கு இழுக்கைத் தேடித் தந்தது. இருப்பினும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் தங்கள் வெட்கக்கேடான செயலுக்குப் பெருமை பாராட்டிக்கொள்கிறார்கள். அல்ஜீரிய மக்கள் தங்கள் இரத்தத்தை விலையாகத் தந்து பெற்ற விடுதலையில் 'சமாதான சகவாழ்வு' கொள்கைக்கும் பங்கு இருந்தது என்பதை ஏற்க வேண்டுமென்கிறார்கள்.

காங்கோ விசயத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் பங்கைப் பார்ப்போம். காலனியத்துக்கு எதிரான காங்கோ மக்களின் ஆயுதமேந்திய போராட்டத்திற்கு செயலூக்கமுள்ள ஆதரவு வழங்க மறுத்தது மட்டுமல்லாமல், காங்கோவில் போராட்டத் தீயை அணைப்பதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் 'ஒத்துழைக்க'வும் அவர்கள் ஆர்வமாயிருந்தார்கள்.

1960 ஜுலை 13-ல் அய்க்கிய நாடுகள் சபையின் இராணுவத்தை காங்கோவுக்கு அனுப்புவதற்கான பாதுகாப்பு சபையின் தீர்மானத்தில் அமெரிக்காவுடன் சேர்ந்து ரசியாவும் ஓட்டுப்போட்டது. இவ்வாறு காங்கோ மீதான இராணுவ ஆக்கிரமிப்பில் அய்க்கிய நாடுகள் சபையின் கொடியை உபயோகிக்க அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு ரசியா உதவியது. ரசிய, அய்க்கிய நாடுகள் சபை இராணுவத்துக்கு

போக்குவரத்து வசதிகள் செய்து கொடுத்து உதவியது. ஜூலை 15-ல் கசாவுபுக்கும், லுமும்பாவுக்கும் குருச்சேவ் அனுப்பிய தந்திச் செய்தியில் ''அய்க்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை ஒரு உபயோககர மான காரியத்தைச் செய்திருக்கிறது'' என்று கருத்துத் தெரிவித்தார். அதன் பிறகு ''காங்கோ குடியரசின் சுதந்திரத்தையும் இறையாண்மை யையும் பாதுகாப்பதற்கு அந்நாட்டு அரசாங்கத்திற்கு உதவியதற் காக''[1] அய்க்கிய நாடுகள் சபையை ரசிய பத்திரிகைகள் புகழ்ந்து தள்ளின. ''தீர்மானகரமான நடவடிக்கைகளை''[2] அய்க்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் என அவை நம்பிக்கை தெரிவித்தன. காங்கோ மக்களை ஒடுக்கிக் கொண்டிருந்த அய்க்கிய நாடுகள் சபையை ஆகஸ்ட் 21 மற்றும் செப்டம்பர் 10 அறிக்கைகளில் ரசிய அரசாங்கம் தொடர்ந்து புகழ்ந்தது.

1961-ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், அய்க்கிய நாடுகள் சபை துருப்புக்களின் 'பாதுகாப்புடன்' நடத்தப்பட்ட காங்கோ பாராளு மன்றத்தில் கலந்து கொள்ளுமாறும், பொம்மை அரசாங்கத்தில் சேர்ந்து கொள்ளுமாறும் கைசெங்காவிடம் வலியுறுத்தினர். காங்கோ பாராளு மன்றக் கூட்டம் ''அந்த இளம் குடியரசின் வாழ்க்கையில் ஒரு முக்கிய மான நிகழ்ச்சி'' என்றும் ''தேசிய சக்திகளின் ஒரு வெற்றி''[3] என்றும் தவறான கருத்துக்களை முன் வைத்தார்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் இந்த தவறான கொள்கை கள் காங்கோ மீதான ஆக்கிரமிப்பில் அமெரிக்கஏகாதிபத்தியத்துக்கு மிகப் பெரியசேவை செய்துள்ளன. லுமும்பா கொல்லப்பட்டார்; கைசெங்கா சிறையிலிடப்பட்டார். வேறு பல தேச பக்தர்கள் துன்புறுத்தப்பட்டனர், தேசிய சுதந்திரத்துக்கான காங்கோ மக்களின் போராட்டம் ஒரு பின்னடைவை சந்தித்தது. இதற்கெல்லாம் ரசிய கம்யூனிஸ்ட் தலைமை எந்தப் பொறுப்பையும் உணரவில்லையா?

தற்கால உலக முரண்பாடுகள் குவிந்திருக்கும் பகுதிகள்

தேசிய விடுதலை இயக்கங்கள் மற்றும் யுத்தங்கள் பற்றி ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் சொற்களையும், செயல்களையும்

1. இஸ்வெஸ்தியா, ஜூலை 21, 1960.
2. கோம்ஸோமால்ஸ்கியா பிராவ்தா, ஜூலை 30, 1960.
3. பிராவ்தா, ஜூலை 18, 1961.

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவின் புரட்சிகர மக்கள் நிராகரித்திருப்பது இயல்பான விசயமே. ஆனால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சரியான பாடத்தைக் கற்றுக்கொள்ளவும், தங்களுடைய தவறான வழியையும், கொள்கைகளையும் மாற்றிக் கொள்ளவும் தவறியிருக்கிறார்கள். பதிலாக தாங்கள், அவமானப்பட்டுவிட்டதற்காக கோபமடைந்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீதும் பிற மார்க்சிய-லெனினிய கட்சிகள் மீதும் வசைமாறி பொழிகின்றனர்.

ஒரு 'புதிய கோட்பாட்டை' முன்வைத்துவிட்டதாக, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் குறை கூறுகிறது. அது கூறுவதாவது :

''...சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய கோட்பாட்டின்படி, நமது காலத்தின் முதன்மையான முரண்பாடு, சோசலிசத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலானது அல்லவாம். தேசியவிடுதலை இயக்கத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலானதாம். சீனத் தோழர்களின், கருத்துப்படி, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் தீர்மானகரமான சக்தி சோசலிச அமைப்பு அல்ல, தேசிய விடுதலை இயக்கம் தான்''.

முதலாவதாக, இது ஒரு கட்டுக்கதையாகும். எமது ஜூன் 14 கடிதத்தில், சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் இடையிலான முரண்பாடு, முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கத்துக்கும், முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு, ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான முரண்பாடு, ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலும், ஏகபோக முதலாளியக் குழுக்களுக்கு இடையிலுமான முரண்பாடு ஆகியவையே தற்கால உலகின் அடிப்படை முரண்பாடுகள் என்று குறிப்பிட்டுள்ளோம்.

மேலும், சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் இடையிலான முரண்பாடு என்பது அடிப்படையிலேயே வேறுபட்ட இரு சமூக அமைப்புகளுக்கு-சோசலிசம், முதலாளியம் என்ற சமூக அமைப்புகளுக்கு-இடையிலான முரண்பாடு. சந்தேகத்துக்கு இடமின்றி, அது மிகக் கூர்மையானதே. மார்க்சிய—லெனினியவாதிகள், உலகில் உள்ள முரண்பாடுகள் சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் உள்ள முரண்பாடு மட்டும் என்று மிகச் சாதாரணமாக கருதிவிடக்கூடாது என்றும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

எமது கண்ணோட்டம் மிகவும் தெளிவானது.

எமது ஜூன் 14 கடிதத்தில், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் உள்ள புரட்சிகர நிலைமையையும், தேசிய விடுதலை இயக்

கத்தின் முக்கியத்துவத்தையும், பாத்திரத்தையும் நாங்கள் விளக்கினோம். நாங்கள் கூறியவை கீழ்வருமாறு:

1. ''சமகால உலகின் பல்வேறு வகை முரண்பாடுகள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்காவின் பரந்த பகுதிகளில் குவிந்துள்ளன; இப்பகுதிகள் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் உள்ள பலவீனமான பகுதிகளாகும், ஏகாதிபத்தியத்தின் மீது நேரடித் தாக்குதல் தொடுக்கக்கூடிய உலகப் புரட்சியின் புயல் மையங்களாகும்''.

2. ''இப்பகுதிகளில் உள்ள தேசிய ஜனநாயகப் புரட்சி இயக்கமும், சர்வதேச சோசலிசப் புரட்சி இயக்கமும், நமது காலத்தின் இரு பெரும் வரலாற்றுப் போக்குகளாகும்''.

3. ''இந்தப் பகுதிகளில் தேசிய ஜனநாயகப் புரட்சி இக்காலப் பாட்டாளிவர்க்க உலகப் புரட்சியின் ஒரு முக்கியமான அங்கமாகும்''.

4. ''ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிகரப் போராட்டங்கள் பழைய, புதிய ஏகாதிபத்திய மற்றும் காலனிய ஆட்சியின் அடித்தளங்களைத் தாக்கிச் சிதைத்து வருகின்றன. இவை தற்போது உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான வலிமை மிக்க சக்தியாக விளங்குகின்றன''.

5. ''எனவே, ஒருவகையில், சர்வதேசப் பாட்டாளிவர்க்கப் புரட்சியின் இலட்சியம் அனைத்தும், உலக மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையினரான இப்பகுதி மக்கள் நடத்தும் புரட்சிகரப் போராட்டங்களின் விளைவுகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது''.

6. ''எனவே, ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிப் போராட்டம் நிச்சயமாக வெறும் பிரதேச முக்கியத்துவம் வாய்ந்த விசயமல்ல. மாறாக, பாட்டாளிவர்க்க உலகப் புரட்சி என்ற இலட்சியத்தை முழுமையாக சாதிப்பதற்கான விசயங்களில் ஒன்றாகும்''.

இவைதான் நமது காலத்தின் விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்து பெற்ற மார்க்சிய—லெனினிய ஆய்வுரைகள்.

மிக மிகச் சாதாரணமான புரட்சிகரச் சூழல் தற்போது ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் நிலவுவதை யாரும் மறுக்க முடியாது. ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவின் தேசிய விடுதலைப் புரட்சிகளே இன்று ஏகாதிபத்தியத்தை நேரடியாகத் தாக்கும் மிக முக்கியமான சக்திகள். உலகின் முரண்பாடுகள் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் குவிந்துள்ளன.

உலக முரண்பாடுகளின் மையமும் உலக அரசியல் போராட்டங்களின் மையமும் ஒரே இடத்தில் நிலையாக இருப்பதில்லை. சர்வதேசப் போராட்டம் மற்றும் புரட்சிகரச் சூழலில் ஏற்படும் மாற்றத்தை ஒட்டி இவை இடம் மாறுகின்றன. மேற்கு அய்ரோப்பா மற்றும் வடஅமெரிக்காவிலுள்ள பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடும் போராட்டமும் வளர்ச்சியுறும் போது முதலாளியத்தின் தாயகத்திலும், ஏகாதிபத்திய மையங்களிலும் யுத்தம் நடக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த நாள் வரும் என்று நம்புகிறோம். அந்த நாள் வரும் போது மேற்கு அய்ரோப்பாவும், வட அமெரிக்காவும் உலக அரசியல் போராட்டங்களின் உலக முரண்பாடுகளின் மையமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

1913-ல் லெனின் கூறினார்: ''பெரும் உலகப் புயலுக்கான ஒரு புதிய ஊற்றுக்கண் ஆசியாவில் தோன்றியுள்ளது. இப்பகுதிகளில் தோன்றும் புயல்களையும் அய்ரோப்பாவில் அவற்றின் ''எதிரொலிகளையும்'' கொண்ட சகாப்தத்தில் நாம் இன்று வாழ்கின்றோம்'' [1]

1925-ல் ஸ்டாலின் கூறினார்.

''ஏகாதிபத்தியத்தின் பிரதான பின்தளமாக இருப்பது காலனிய நாடுகளே. இந்த பின்தளத்தைப் புரட்சிகரமாக மாற்றுவது, ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்திவிடும் ஏகாதிபத்தியம் தனது பின்தளத்தில் இருந்து துண்டிக்கப்பட்டுவிடும் என்பது மட்டுமல்ல, கிழக்கைப் புரட்சிகரமாக மாற்றுவது என்பது மேற்கின் புரட்சிகர நெருக்கடிகளைத் தீவிரப்படுத்துவதிலும் சக்திமிக்க பங்காற்றும் என்றும் கூறலாம்'' [2]

லெனின், ஸ்டாலின் இருவரது கூற்றுகளும் தவறாக இருக்க முடியுமா? அவர்கள் முன்வைத்த ஆய்வுரைகள் மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படை அறிவாக நீண்டகாலமாக இருந்திருக்கின்றன. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தேசிய விடுதலை இயக்கத்தை குறைத்து மதிப்பிடுகிறார்கள் என்பதும், அடிப்படை மார்க்சிய-லெனினியத்தையும் தங்கள் கண்ணெதிரிலிருக்கும் உண்மைகளையும் புறக்கணிக்கிறார்கள் என்பதும் தெளிவு.

---

1. *வி.இ. லெனின் ''காரல் மார்க்சின் தத்துவத்துக்கு வரலாற்றில் விதிக்கப்பட்ட இடம்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேஷனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க், 1973, வால்யூம்* 11, *பக்கம்* 51.
2. *ஜே.வி. ஸ்டாலின், ''கிழக்கில் புரட்சிகர இயக்கம்'' தொகுப்பு, ஆங்கிலப் பதிப்பு, எப். எல். பி. எச். மாஸ்கோ, 1954, வால்யூம்7, பக்கம்* 169.

புரட்சியில் தலைமை பற்றிய லெனினியக் கருத்தைப் புரட்டுதல்

தேச விடுதலை இயக்கத்தில் பாட்டாளி வர்க்கத் தலைமை பற்றிய பிரச்சினையிலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாட்டை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தனது ஜுலை 14 பகிரங்க கடிதத்தில் தாக்குகிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பகிரங்கக் கடிதம் கூறுகிறது:

''... சீனத் தோழர்கள் லெனினைத் 'திருத்த' விரும்புகிறார்கள்.
ஏகாதிபத்தியத்துக்கெதிரான உலகப்போராட்டத்தின் கூட்டுத் தலைமை
பாட்டாளிவர்க்கத்தின் கையில் சேரக்கூடாது, மாறாக, அது குட்டி முத
லாளிகள் அல்லது தேசிய முதலாளிகள் அல்லது ''தேசபக்தியுள்ள சில
அரசர்கள், இளவரசர்கள் மற்றும் பிரபுக்களுக்கும்'' கூடக் கிடைக்க
லாம் என்று நிரூபிக்க முயலுகிறார்கள்.''

இது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களை வேண்டுமென்றே திரிப்பது ஆகும்.

தேச விடுதலை இயக்கத்தின் தலைமை பாட்டாளி வர்க்கத்தின் கையில் இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவதன் அவசியம்பற்றி விவாதிக்கையில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் ஜுன் 14-ம் தேதி கடிதம் கூறுவதாவது:

''ஏகாதிபத்தியத்துக்கு எதிரான, பழைய மற்றும் புதிய காலனியத்
துக்கு எதிரான, தேசிய சுதந்திரத்துக்கும், மக்கள் ஜனநாயகத்துக்கு
மான தேசிய ஜனநாயகப் புரட்சிகர இயக்கத்தின் முன்னணியில் நின்று
சோசலிச எதிர்காலத்துக்கான போராட்டப் பதாகையை உயர்த்திப் பிடிக்
கும் பெருமை மிக்க கடமையை இந்த நாடுகளின் (ஆசிய, ஆப்பிரிக்க,
லத்தீன் அமெரிக்க) கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் வரலாறு ஒப்படைத்திருக்
கிறது.''

''...பாட்டாளி வர்க்கமும், அதன் கட்சியும், தொழிலாளர்—விவசாயிகள் கூட்டின் அடிப்படையில், இணைக்கப்படக்கூடிய எல்லாப் பகுதி மக்களையும் இணைத்து, ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிரான ஓர் விரிவான அய்க்கிய முன்னணியை அமைக்க வேண்டும். இந்த அய்க்கிய முன்னணியை உறுதிப்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் பாட்டாளிவர்க்கக் கட்சி அதன் சித்தாந்த, அரசியல், அமைப்பு சுதந்திரத்தைக் கட்டிக் காப்பதும், புரட்சியின் தலைமை பற்றி வலியுறுத்துவதும் அவசியமாகும்''.

தேசிய விடுதலை இயக்கத்தில் ஒரு விரிவான ஏகாதிபத்திய எதிர்ப்பு அய்க்கிய முன்னணியை நிறுவுவதன் தேவைபற்றி விவாதிக்கையில்

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கடிதம் கூறுகிறது: ''ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவின் ஒடுக்கப்பட்ட நாடுகளும், மக்களும் ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும் எதிர்த்துப்போராடும் உடனடிக் கடமையை எதிர்கொண்டிருக்கிறார்கள்''

''இத்தப் பகுதிகளில், மிகமிக விரிவான மக்கள் பிரிவினர் ஏகாதிபத்தியத்தின் அடிமைகளாக இருப்பதற்கு மறுக்கின்றனர். அப்பிரிவுகளில் தொழிலாளர், விவசாயிகள், அறிவு ஜீவிகள், குட்டி முதலாளிகள் மட்டுமன்றி, தேசப்பற்றுள்ள தேசிய முதலாளிகளும், தேசப்பற்றுள்ள சில அரசர்களும், இளவரசர்களும், பிரபுக்களும்கூட இருக்கிறார்கள்.''

எமது கண்ணோட்டங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றன. தேசிய விடுதலை இயக்கத்தில், பாட்டாளி வர்க்கத் தலைமையை வலியுறுத்துவது, ஒரு விரிவான ஏகாதிபத்திய எதிர்ப்பு அய்க்கிய முன்னணியை நிறுவுவது ஆகிய இரண்டுமே அவசியமானவை. இந்தக் கண்ணோட்டங்களில் என்ன தவறு இருக்கிறது? ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை இந்த சரியான கண்ணோட்டங்களை ஏன் திரித்தும் தாக்கியும் வருகிறது?

புரட்சியில் பாட்டாளி வர்க்கத் தலைமை பற்றிய லெனினிய கண்ணோட்டங்களை கைவிட்டது நாங்களல்ல மாறாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களே.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் தவறான வழி, ஏகாதிபத்தியத்தையும், காலனியத்தையும் எதிர்த்துப் போராடும் கடமையை முற்றிலும் கைவிட்டு, தேசிய விடுதலைப் போர்களை எதிர்க்கிறது; இதன் பொருள் ஒடுக்கப்பட்ட தேசங்கள் மற்றும் நாடுகளின் பாட்டாளி வர்க்கமும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தேசிய சுதந்திரத்துக்காகப் போராடும் தேசபக்த பதாகைகளைச் சுருட்டி மற்றவர்களிடம் ஒப்புடைத்துவிடவேண்டுமா என்பதாகும். இப்படிச் செய்துவிட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு அய்க்கிய முன்னணி பற்றியோ, அல்லது பாட்டாளி வர்க்கத் தலைமை பற்றியோ ஒருவர் எப்படிப் பேசமுடியும்?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் அடிக்கடி பிரச்சாரம் செய்யப்படும் மற்றொரு விசயம், ஒரு நாடு எந்தத்தலைமையின் கீழும், ஒரு பிற்போக்கு தேசியவாதியான நேரு போன்றவர்களின் தலைமையின் கீழ்கூட சோசலிசத்தைக் கட்ட முடியும் என்பதாகும். பாட்டாளி வர்க்கத் தலைமை என்ற கருத்திலிருந்து இது வெகு தூரம் விலகிய கருத்தாகும்.

சோசலிச முகாம், முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளர் வர்க்க இயக்கம் ஆகியவற்றிற்கும், தேசிய விடுதலை இயக்கத்துக்கும்

இடையில் பரஸ்பர உதவி என்ற சரியான உறவு நிலவ வேண்டும் என்பதை ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கடிதம் தவறாக வியாக்கியானம் செய்கிறது. தேசிய விடுதலை இயக்கம் சோசலிச நாடுகளாலும், வளர்ந்த நாடுகளின் தொழிலாளர் வர்க்க இயக்கத்தாலும் வழிநடத்தப்பட வேண்டுமென்கிறது. இதை பாட்டாளி வர்க்கத் தலைமை பற்றிய லெனினிய கண்ணோட்டத்தின் அடிப்படையிலானது என்று கூறும் துணிச்சலையும் அவர்கள் பெற்றிருக்கின்றனர். இது லெனினிய சிந்தனையை முழுமையாகப் புரட்டுவதும் திரிப்பதுமான செயல் என்பது தெளிவு. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் புரட்சியைக் கைவிடுவது பற்றிய தங்களது வழியை, ஒடுக்கப்பட்ட நாடுகளின் புரட்சிகர இயக்கத்தின் மீது திணிக்க விரும்புகிறார்கள் என்பதையே இது காட்டுகிறது.

தேசியவாதப் பாதையும், சீரழிவுப் பாதையும்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களது ஜூலை 14-ந் தேதிய பகிரங்க கடிதத்தில் ''சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்திடமிருந்தும், அதன் படைப்பான சோசலிச உலக அமைப்பிடமிருந்தும் தேசிய விடுதலை இயக்கத்தைத் தனிமைப்படுத்துவதாக'' சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது குற்றம் சுமத்த முயன்றிருக்கிறார்கள். தேசிய விடுதலை இயக்கத்தை சோசலிச அமைப்பிடமிருந்தும் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கத்திடமிருந்தும் 'பிரித்துவிடுவதாகவும்' முதலாவதையும் இரண்டாவதையும் 'ஒன்றுக்கெதிரான ஒன்றாக நிறுத்துவதாக'வும் அவர்கள் எம்மீது மேலும் குற்றம் சுமத்துகிறார்கள். பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைப் போலவே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் குரலைப் பலமாக எதிரொலிக்கின்ற வேறு சில கம்யூனிஸ்டுகளும் இருக்கிறார்கள்.

ஆனால் உண்மைகள் என்ன? தேசிய விடுதலைஇயக்கத்தை ஆதரிக்காதது மட்டுமின்றி எதிர்க்கவும் செய்கின்ற ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அவர்களைப் பின்பற்றுபவர்களும்தான் தேசிய விடுதலை இயக்கத்தை சோசலிச முகாமுக்கும் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளுக்கும் எதிராக நிறுத்துகிறார்கள்.

எல்லா மக்களின் புரட்சிகரப் போராட்டங்களும் ஒன்றுக்கொன்று உதவுகின்றன என்பதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. நாங்கள் எப்பொழுதுமே, தேசிய விடுதலை இயக்கத்தை மார்ச்சிய — லெனினிய கண்ணோட்டத்தில் இருந்தும் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் மற்றும் முழுமையான பாட்டாளி வர்க்க

உலகப் புரட்சி என்ற கண்ணோட்டங்களிலிருந்தும்தான் கருதி வந்துள்ளோம். தேசிய விடுதலைப் புரட்சியின் வெற்றிகர வளர்ச்சி, சோசலிச முகாமிற்கும், முதலாளிய நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கும், உலக அமைதியைப் பாதுகாக்கும் நோக்கத்திற்கும் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கருதுகிறோம்.

ஆனால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களும் அவர்களைப்பின் பற்றுபவர்களும் இந்த முக்கியத்துவத்தை அங்கீகரிக்க மறுக்கிறார்கள். அவர்கள் தேசிய விடுதலை இயக்கத்துக்கு சோசலிச முகாமின் ஆதரவைப் பற்றி மட்டுமே பேசுகிறார்கள். தேசிய விடுதலை இயக்கம், சோசலிச முகாமிற்கு அளிக்கும் ஆதரவைப் பற்றிக் கண்டுகொள்ளவில்லை. அவர்கள் ஏகாதிபத்தியத்துக்கு அடி கொடுப்பதில் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் பங்குபற்றி மட்டுமே பேசுகிறார்கள். அதே விசயத்தில் தேசிய விடுதலை இயக்கத்தின் பங்கைச் சிறுமைப்படுத்தி வருகிறார்கள் அல்லது கண்டு கொள்ளாமல் விடுகிறார்கள். அவர்களது நிலைப்பாடு மார்க்சிய — லெனினியத்திற்கு முரண்படுகிறது; உண்மைகளைப் புறக்கணிக்கிறது; எனவே தவறாக இருக்கிறது.

சோசலிச நாடுகளுக்கும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் புரட்சிக்கும் இடையிலான உறவு பற்றியும், முதலாளிய நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் புரட்சிக்கும் இடையிலான உறவு பற்றியும் என்ன நிலைப்பாட்டை மேற்கொள்வது என்ற விசயம், மார்க்சிய-லெனினியமும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் உயர்த்திப் பிடிக்கப்படவேண்டுமா அல்லது கைவிடப்படவேண்டுமா என்ற முக்கிய கொள்கையை உள்ளடக்கியதாகும்.

மார்க்சிய-லெனினியம், மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் படி, தமது புரட்சியில் வெற்றியைச் சாதித்துவிட்ட ஒவ்வொரு சோசலிச நாடும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலைப் போராட்டங்களை செயலூக்கத்துடன் ஆதரிக்கவும், அவற்றிற்கு துணை நிற்கவும் வேண்டும். உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட நாடுகள் மற்றும் மக்களின் புரட்சியை ஆதரிப்பதற்கும் வளர்ப்பதற்குமான தளப்பிரதேசங்களாக சோசலிச நாடுகள் மாறவேண்டும்; அந்நாடுகளுடன் நெருக்கமான பிணைப்பை உருவாக்கிக்கொள்ளவேண்டும்; பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியை இறுதி வெற்றிக்கு இட்டுச்செல்லவேண்டும்.

ஆனால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களோ ஒரு நாட்டிலோ அல்லது பல நாடுகளிலோ சோசலிசம் வெற்றி பெறுவதையே பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியின் முடிவாகக் கருதுகிறார்கள். தேசிய விடுதலை புரட்சியை சமாதான சகவாழ்வு என்ற அவர்களது பொதுவழிக்கும்,

அவர்களது சொந்த நாட்டின் தேசிய நலன்களுக்கும் உட்பட்டதாக் முன்வைக்க விரும்புகின்றனர்.

1925-ல் டிராஸ்கியவாதிகள் மற்றும் ஜினோவியவாதிகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட கலைப்புவாதிகளை எதிர்த்து ஸ்டாலின் போராடியபோது, கலைப்புவாதத்தின் அபாயகரமான பண்புகளில் ஒன்று என்று அவர் சுட்டிக் காட்டியதாவது:

... ''சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் நம்பிக்கையின்மை, அதன் வெற்றியில் நம்பிக்கையின்மை, காலனி மற்றும் சார்பு நாடுகளின் தேசிய விடுதலை இயக்கம் பற்றிய சந்தேகக் கண்ணோட்டம் ஆகியவை ஒரு நாட்டில் சோசலிசத்தின் வெற்றி என்பது முடிவான ஒன்றல்ல மாறாக மற்ற நாடுகளின் புரட்சியை வளர்ப்பதற்கும் ஆதரிப்பதற்குமான வழி என்ற சர்வதேசியத்தின் கோரிக்கைகளைக்கூட புரிந்துகொள்ளாமல் இருப்பதாகும்'' [1]

மேலும் அவர் கூறினார்:

''அது தேசியம் மற்றும் சீரழிவின்பாதை, பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கையை முழுமையாகச் சீரழிக்கும்பாதை. ஏனெனில், இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள், உலகப் புரட்சி இயக்கம் என்ற முழு மையின் ஒருபகுதியாக நமது நாட்டைப் பார்ப்பதற்குப் பதிலாக அந்த இயக்கத்தின் தொடக்கமும் முடிவுமென்று பார்க்கிறார்கள். ''நமது நாட்டின் நலன்களுக்காக மற்ற எல்லா நாடுகளின் நலன்களும் அர்ப் பணிக்கப்பட வேண்டுமென்று கருதுகிறார்கள்'' [2]

கலைப்புவாதிகளின் சிந்தனை முறையை ஸ்டாலின் கீழ்க்காணுமாறு விளக்கினார்:

''சீனாவின் விடுதலை இயக்கத்திற்கு ஆதரவா? எதற்காக? அது ஆபத்தானதாக இருக்காதா? அது நமக்கு பிறநாடுகளுடன் தகராறு களைக் கொண்டு வந்துவிடாதா? ''முன்னேறிய'' சக்திகளுடன் கூட்டாக சீனாவில் நாம் ''செல்வாக்கு மண்டலங்களை'' நிறுவுவதும், நமது சொந்த நலனுக்காக சீனாவிடமிருந்து சிலவற்றைப் பறித்துக் கொள் வதும் இன்னும் சிறந்தது ஆகாதா? அது பயனுள்ளதாகவும், பாதுகாப் பானதாகவும் இருக்குமே...இதே போல இன்னும் பல'' [3]

1. ஜே. வி. ஸ்டாலின், ''கேள்விகளும் பதில்களும்'' தொகுப்பு, ஆங்கிலப் பதிப்பு, எப். எல். பி. எச். மாஸ்கோ 1954, வால்யூம் 7, பக்கம்-169.
2. மேற்படி நூல் பக்கம் 169-170
3. மேற்படி நூல் பக்கம்-170

''புதிய வகை தேசியவாத 'சிந்தனை முறை' அத்தகையது. அது அக்டோபர் புரட்சியின் வெளிநாட்டுக் கொள்கையை அழித்து, சீரழிவின் அடிப்படைகளை விதைக்கிறது'' [1] என்று அவர் முடிக்கிறார்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தற்போதைய தலைவர்கள் பழைய கலைப்புவாதிகளை விட நீண்ட தூரம் சென்றுவிட்டார்கள். அவர்களுடைய புத்திசாலிதனத்தைப்பற்றி அவர்களே பெருமைப்பட்டுக்கொண்டு, 'பயனுள்ளதும் பாதுகாப்பானதுமான' வழியை மட்டுமே மேற்கொள்கிறார்கள். ஏகாதிபத்திய நாடுகளுடன் முரண்படுவதற்குப் பயந்து செத்துக்கொண்டு தேசிய விடுதலை இயக்கத்தை எதிர்ப்பதற்குத் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் செல்வாக்கு மண்டலங்களை நிறுவுகிற இரண்டு 'மேலாதிக்க வல்லரசுகள்' என்ற கருத்தால் அவர்கள் போதையூட்டப்பட்டிருக்கிறார்கள்.

கலைப்புவாதிகள் பற்றிய ஸ்டாலின் விமர்சனம், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் இன்றைய தலைவர்களை அப்படியே சித்தரிக்கும் விதத்தில் உள்ளது. கலைப்புவாதிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் அவர்கள் அக்டோபர் புரட்சியின் அயலுறவுக் கொள்கையைச் சீர்குலைத்திருக்கிறார்கள், தேசியம் மற்றும் சீரழிவு வழியை மேற்கொண்டிருக்கிறார்கள்.

ஸ்டாலின் கீழ்க்காணுமாறு எச்சரித்தார்.

'' ...... முதலில் வெற்றியடைந்த நாடு, உலகப் புரட்சி இயக்கத்தின் முன்னுதாரணமாகத் தொடர்ந்து இருப்பது என்பது முரணற்ற சர்வதேசியம் மற்றும் அக்டோபர் புரட்சியின் அயலுறவுக் கொள்கையின் அடிப்படையில் மட்டுமே சாத்தியம் என்பது வெளிப்படை. அயலுறவுக் கொள்கையில் மிகக்குறைந்த எதிர்ப்பு மற்றும் தேசியவாதம் என்ற பாதை தனிமைப்படுவதற்கும், முதலில் வெற்றியடைந்த நாடு சிதைந்து போவதற்குமான பாதை ஆகும்'' [2]

ஸ்டாலினுடைய இந்த எச்சரிக்கை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் இன்றைய தலைவர்களுக்கு நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்த கடும் எச்சரிக்கையாகும்.

---

1. மேற்படி நூல், பக்கம்-170
2. மேற்படி நூல், பக்கம்-171

சமூக-ஆதிக்கவாதத்தின் ஓர் உதாரணம்

அதே போல, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின்படி, ஒடுக்கும் நாடுகளின் பாட்டாளி வர்க்கமும், கம்யூனிஸ்டுகளும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் தேசிய சுதந்திர உரிமையையும், விடுதலைக்கான அவர்களின் போராட்டங்களையும் செயலூக்கத்துடன் ஆதரிக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட நாடுகளின் உதவியுடன், ஒடுக்கும் நாடுகளின் பாட்டாளி வர்க்கம் தனது புரட்சியில் எளிதாக வெற்றிபெற முடியும்.

கலைப்புவாதத்திற்கு மிகச்சரியான இலக்கணம் கூறினார் லெனின்:

''மூலதனத்துக்கு எதிரான தங்கள் போராட்டத்தில் அய்ரோப்பா மற்றும் அமெரிக்காவின் தொழிலாளர்கள், மூலதனத்தால் ஒடுக்கப்படும் கோடானுகோடி 'காலனிய' அடிமைகளுடன் நெருக்கமாகவும் முழுமையாகவும் அய்க்கியப்படாவிட்டால், வளர்ச்சியடைந்த நாடுகளின் புரட்சி இயக்கம் வெறும் ஏமாற்றமாகவே இருக்கும்''[1]

எனினும், சில போலி மார்க்சிய-லெனினியவாதிகள் இந்த அடிப்படைக் கொள்கையில் மார்க்சிய-லெனினியத்தையே கைவிட்டிருக்கிறார்கள். பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இவ்விசயத்தில் பொருத்தமான உதாரணமாவார்கள்.

பிரான்சின் அரசியல், பொருளாதார, இராணுவத் துறைகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டையும் தடைகளையும் எதிர்த்து உறுதியாகப் போராட மறுத்ததன் மூலம் அமெரிக்காவுக்கு எதிரான பிரெஞ்சு தேசிய போராட்டப் பதாகையை டிகாலே போன்றவர்களின் காலடியில் சமர்ப்பித்ததன் மூலமும் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தை நீண்ட காலமாகக் கைவிட்டிருக்கிறார்கள். அதே சமயம் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் காலனிய நலன்களைக் காப்பதற்காக பல்வேறு வழிகளையும் சாக்குபோக்குகளையும் உபயோகிக்கிறார்கள்; பிரெஞ்சுக் காலனிகளில் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதற்கு மறுப்பதோடு அதை விமர்சித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, தேசிய விடுதலைப் போர்களை எதிர்க்கிறார்கள். ஆதிக்கவாதச் சேற்றுக்குள் மூழ்கியிருக்கிறார்கள்.

லெனின் கூறினார், ''காலனிய மக்களும் தேச உணர்வு கொண்டவர்கள் என்பதை அய்ரோப்பியர்கள் அடிக்கடி மறந்துவிடுகிறார்கள்.

1. *வி. இ. லெனின், ''கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, எப்.எல்.பி.எச். மாஸ்கோ, 1959, வால்யூம்-2, பகுதி-2, பக்கம்-472-73.*

அத்தகைய மறதியை சகித்துக் கொள்வது என்பது ஆதிக்கவாதத்தைச் சகித்துக்கொள்வதே ஆகும்''[1] இருப்பினும் தோழர் தோரேயால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் பிரெஞ்சுகம்யூனிஸ்ட் கட்சித்தலைமைஇந்த 'மறதி'யைச் சகித்துக்கொண்டது மட்டுமல்ல,பிரெஞ்சு காலனிகளின் மக்களை''சுவீகரிக்கப்பட்ட பிரெஞ்சுக்காரர்கள்''[2] என்று வெளிப்படையாக கூறியது, பிரான்சிலிருந்து பிரிந்து தேசிய சுதந்திரம் பெறுவதற்கான அம்மக்களின் உரிமையை அங்கீகரிக்க மறுத்து பிரெஞ்சு ஏகாதிபத்திய வாதிகளால் பின்பற்றப்படும் ''தேசியத் தன்வயப்படுத்தல்'' கொள்கையை வெளிப்படையாக ஆதரித்தனர்.

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் காலனிய கொள்கையை பின்பற்றி வந்திருக்கிறார்கள்; பிரெஞ்சு ஏகபோக மூல தனத்தின் தொங்கு சதையாகவே செயல்பட்டு வந்திருக்கிறார்கள். பிரெஞ்சு ஏகபோக முதலாளித்துவ ஆட்சியாளர்கள் 1946-ல் பிரெஞ்சு சங்கம் ஒன்றை நிறுவப்போவதாக ஒரு புதிய காலனியத் தந்திரத்தை முன் வைத்தபோது, பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ''பிரெஞ்சு சங்கம் எப்போதும் 'சுதந்திரமான' மக்களின் சுதந்திரமான சங்கமாகவே, இருக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்''[3] என்றும் ''பிரெஞ்சு மக்களுக்கும், கடந்த காலத்தில் பிரெஞ்சுடன் இணைக்கப் பட்டிருந்த கடல் கடந்த மக்களுக்கும் இடையிலான உறவுகளில் புதிய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளை பிரெஞ்சு சங்கம் அனுமதிக் கும்''[4] என்றும் கூறினார். 1958-ல் பிரெஞ்சு சங்கம் சிதைவடைந்த போது, பிரான்சின் காலனிய முறையைப் பாதுகாப்பதற்கு 'பிரெஞ்சு சமூகத்தை' நிறுவுவதைப் பற்றி பிரெஞ்சு அரசாங்கம் முன்மொழிந்த போது, பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், ''ஒரு நேர்மையான

---

1. வி. இ. லெனின், ''ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம்—மார்க்சியத்தை இழிவுபடுத்தும் ஒரு கேலிச்சித்திரம்'', தொகுப்பு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, இண்டர்நேஷனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க் 1942, வால்யூம்-19 பக்கம்-250.

2. மாரிஸ்தோரே, அல்ஜீயர்ஸ் உரை, பிப்ரவரி 1939.

3. லியோன் பெயிக்ஸ், பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் 15-வது மாநாட்டு உரை, ஜூன் 1959.

4. மாரிஸ்தோரே, பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கட்சிப் பள்ளியில் புதிய ஆண்டின் தொடக்க விழாவில் ஆற்றியஉரை, அக்டோபர் 10, 1955.

சமூகம் உருவாக்கப்படுவது ஒரு சாதகமான நிகழ்ச்சியாகவே அமையும் என நாங்கள் நம்புகிறோம்''[1] என்று அறிவித்தார்கள்.

மேலும், பிரெஞ்சு காலனிகளில் உள்ள மக்களின் தேசிய சுதந்திரத்துக்கான கோரிக்கைகளை எதிர்க்கும் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அம்மக்களை மிரட்டவும் முயற்சிக்கிறார்கள். ''பிரெஞ்சு யூனியனிலிருந்து பிரிந்து செல்வதற்கான எந்த முயற்சியும் ஏகாதிபத்தியத்தைப் பலப்படுத்தவே பயன்படும், சுதந்திரம் வெல்லப்பட்டாலும் கூட அது தற்காலிகமானதாக, பெயரளவிலானதாக, போலியானதாகவே இருக்கும் என்று கூறி இருக்கின்றனர்.

மேலும் அவர்கள்:

''ஏற்கனவே தவிர்க்க முடியாததாகிவிட்ட சுதந்திரம், பிரான்சுடன் இருக்க வேண்டுமா அல்லது பிரான்சுடன் இல்லாமல் பிரான்சுக்கு எதிராக இருக்கவேண்டுமா'' என்பதுதான் கேள்வி. ''அவர்களுடைய சுதந்திரம் பிரான்சுடன் இணைக்கப்பட்டிருப்பதுதான் நமது நாட்டு நலனுக்கு உகந்தது''[2] என்று அவர்கள் வெளிப்படையாக பிரகடனம் செய்தார்கள்.

அல்ஜீரிய விசயத்தில் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் ஆதிக்கவாத நிலைப்பாடு மிகவும் வெளிப்படையான ஒன்று. அல்ஜீரிய மக்களின் சுதந்திரத்துக்கான சரியான கோரிக்கையை நீண்டகாலத்திற்கு முன்பே அங்கீகரித்ததாக அவர்கள் தங்களை நியாயப்படுத்திக் கொள்ள சமீப காலமாக முயற்சிக்கின்றனர். ஆனால் உண்மை என்ன?

வெகுகாலமாக அல்ஜீரியாவின் தேசிய விடுதலைக்கான உரிமையை அங்கீகரிக்க பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மறுத்துவந்துள்ளனர். ''அல்ஜீரியா பிரான்சின் ஒரு பிரிக்க முடியாத பகுதி''[3] என்றும் பிரான்சு ''ஆப்பிரிக்காவில் ஒரு மிகப்பெரிய சக்தியாக இப்பொழுதும் எதிர்காலத்திலும் இருக்கவேண்டும்''[4] என்றும் பிரெஞ்சு ஏகபோக

---

1. லியோன் பெசிஸ், பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் 15-வது காங்கிரசில் ஆற்றிய உரை, ஜூன் 1959. பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் டெமாக்ரடிக் நோவிலி, எண் 11, 1958.
2. ரேமான்ட் பார்பே ''சினியா காலத்தில் கறுப்பு ஆப்பிரிக்கா''
3. பிரான்சின் கான்ஸ்ட்டியூட் நேசனல் அசெம்பளியின் செப்டம்பர்-24, 1946 கூட்ட ஆவணங்கள், பின்இணைப்பு 2, எண் 1013
4. பிளோரிமான்ட் போந்தே, பிரான்சு கான்ஸ்ட்டியூட் அசெம்பளியில் ஆற்றிய உரை, 1944

முதலாளிகளைப் பின்பற்றி அவர்கள் கூக்குரலிடுகிறார்கள். பிரான்சின் ''மாமிசப் பற்றாக்குறையை'' போக்கவும் ''நமது தானியப்பற்றாக் குறையை'' சரிக்கட்டவும் ''ஒரு மில்லியன் ஆடுகளையும்''[1] ஏராள மான கோதுமையையும் ஒவ்வொரு வருடமும் அல்ஜீரியா பிரான்சுக்கு கொடுக்கமுடியும் என்ற விசயத்தில் தோரேயும் மற்றவர்களும் மிக அதிக அக்கறையுடனிருக்கிறார்கள்.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிடம் எந்த அளவுக்கு ஆதிக்கவெறி உள்ளது பாருங்கள்! அவர்களிடம் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் கூறுகள் கிஞ்சிற்றும் உண்டா? இந்த ஆதிக்கவாத நிலைப் பாட்டை எடுத்ததன் மூலம் அவர்கள் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களையும் பிரெஞ்சு பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களையும் காட்டிக்கொடுத்துள்ளனர்.

''இனவாதக் கோட்பாட்டுக்கும்'' ''மஞ்சள் அபாய கோட்பாட்டுக்கும்'' எதிராக

தேசிய விடுதலை இயக்கத்தை எதிர்ப்பதில் தங்களது எல்லா மந்திராயுதங்களையும் உபயோகித்து முடித்துவிட்ட ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஏகாதிபத்தியக் கோட்பாடுகளிலேயே மிகமிகப் பிற்போக்கானதாகிய இனவாதக் கோட்பாட்டின் உதவியை நாடும் அளவுக்குத் தாழ்ந்து விட்டனர். தேசிய விடுதலை இயக்கத்தை உறுதி யாக ஆதரிக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சரியான நிலைப்பாடு, ''இன,பூகோள தடைகளை உருவாக்குகிறது''என்றும்,''வர்க்கஅணுகு முறைக்குப் பதில் இன அணுகுமுறையை முன் வைக்கிறது'' என்றும், ''ஆசிய, ஆப்பிரிக்க மக்களின் தேசிய மற்றும் இன உணர்வுகளைப் பயன்படுத்துகிறது'' என்றும் விமர்சிக்கிறார்கள்.

மார்க்சிய—லெனினியம் நிலவவில்லையெனில் இத்தகைய பொய்கள் மக்களை ஏமாற்றப் பயன்படும். துரதிர்ஷ்டவசமாக இந்தப் பொய்களின் தயாரிப்பாளர்கள் தவறான காலகட்டத்தில் வாழ்கிறார்கள். ஏனெனில், மக்களின் இதயங்களில் மார்க்சிய—லெனினியம் ஆழமாக இடம் பிடித்து கொண்டுவிட்டது. ஸ்டாலின் சரியாகச் சுட்டிக்காட்டியது போல லெனினியம் வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்குமிடையிலும், நாகரிக அய்ரோப்பியர்களுக்கும் ஆசியாக்காரர்களுக்குமிடையிலும், நாகரிக

---

1. *மாரிஸ்தோரே, பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் 10-வது மாநாட்டு அறிக்கை 1945.*

மானவர்களுக்கும் 'நாகரிகமற்ற' ஏகாதிபத்திய அடிமைகளுக்கு இடையிலும் இருந்த தடுப்புச் சுவரை உடைத்துவிட்டது''[1] ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் அந்த இனவாதச் சுவற்றை மீண்டும் கட்டி எழுப்ப முயற்சிப்பது பயனற்றது.

இறுதி ஆய்வில், தற்கால உலகில் தேசியப் பிரச்சினையானது, வர்க்கப் போராட்டம் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் பற்றிய பிரச்சினை ஆகும். இன்று தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர அறிவுஜீவிகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் தேசபக்த முதலாளிய சக்திகள், வெள்ளை, கறுப்பு, மஞ்சள் அல்லது பழுப்பு என்ற எல்லா இனங்களிலுமுள்ள பிற தேசபக்த, ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு கொண்ட மக்களாகிய அனைவரும் அமெரிக்காவினால் தலைமை தாங்கப்படும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் எதிராக ஒரு விரிவான அய்க்கிய முன்னணியை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த அய்க்கிய முன்னணி விரிவடைந்தும் வலுவடைந்தும் வருகிறது. இங்கே எழும் கேள்வி வெள்ளை இன மக்களோடு சேர்வதா, கறுப்பு இன மக்களோடு சேர்வதா என்பதல்ல. ஒடுக்கப்பட்ட நாடுகளுடனும், மக்களுடனும் சேர்வதா அல்லது விரல் விட்டு எண்ணக்கூடிய அளவேயுள்ள ஏகாதிபத்தியவாதிகள், பிற்போக்குவாதிகளுடன் சேர்வதா என்பதே ஆகும்.

மார்க்சிய—லெனினிய வர்க்க நிலைப்பாட்டின்படி, ஒடுக்கப்பட்ட நாடுகள், தமக்கும் ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் காலனியவாதிகளுக்கும் இடையில் ஒரு தெளிவான பிரிவினைக் கோட்டை வரைந்து கொள்ள வேண்டும். இந்த கோடு மறைந்துபோகச் செய்வது என்பது ஏகாதிபத்தியத்துக்கும் காலனியத்துக்கும் சேவை செய்யும் ஆதிக்கவாதப் பார்வையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

லெனின் கூறினார்:

''...சமூக ஜனநாயகத் திட்டத்தில் மையமான விசயம், ஒடுக்கும் நாடுகளையும் ஒடுக்கப்படும் நாடுகளையும் வேறுபடுத்திக் காட்டுவதே ஆகும். அதுவே சமூக ஆதிக்கவாதிகளாலும் காவுட்ஸ்கியினாலும் தவறாக தட்டிக்கழிக்கப்படும் ஏகாதிபத்தியத்தின் சாரமான விசயமாகும்.''[2]

---

1. ஜே. வி. ஸ்டாலின் ''லெனினியத்தின் அடிப்படை அம்சங்கள்'' தொகுப்பு, ஆங்கிலப்பதிப்பு, எப்.எல்.பி.எச்., மாஸ்கோ 1953, வால்யூம் 6, பக்கம்-144
2. வி.இ.லெனின் ''புட்சிரகரப் பாட்டாளி வர்க்கமும், தேசங்களின் சுய நிர்ணய உரிமையும்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேசனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க் 1943, வால்யூம் 5 பக்கம்-284.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஆசிய, ஆப்பிரிக்க மக்களின் ஒற்றுமையை ''பூகோள மற்றும் இனக் கொள்கைகளின் அடிப் படையிலானது'' என்று அவதூறு செய்வதன் மூலம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சமூக ஆதிக்கவாதிகள், மற்றும் காவுட்ஸ்கி ஆகியோரின் இடத்தில் தங்களை அமர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய விடுதலை இயக்கத்தை வெள்ளை இனத்துக்கெதிரான கறுப்பினப் போராட்டமாகக் காட்டி 'இனவாதக் கோட்பாட்டிற்கு' கடைவிரிக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், அய்ரோப்பா, அமெரிக்காவின் வெள்ளை இன மக்களிடையே இன வெறுப்பை தூண்டி விடுவதையும், ஏகாதிபத்தியத் துக்கெதிரான போராட்டத்திலிருந்து உலக மக்களை 'திசை திருப்புவ தையும்' நவீன திரிபுவாதத்துக்கெதிரான போராட்டத்திலிருந்து சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தை வேறு திசையில் திருப்புவதை யுமே தங்களது நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் 'மஞ்சள் அபாயம் பற்றியும்' 'ஜெங்கிஸ்கான் அபாயம்' பற்றியும் பெருங்கூச்சல் எழுப்பியிருக்கிறார் கள். இது உண்மையிலே பதிலுரைக்கத் தகுதியானதல்ல, ஜெங்கிஸ்கா னின் வரலாற்றுப் பாத்திரம் பற்றியோ, மங்கோலிய, ரசிய, சீன நாடுகளின் வளர்ச்சி, அவற்றின் அரசுகள் உருவானமுறை ஆகியவை பற்றியோ இந்தக் கட்டுரையில் விவாதிக்கும் நோக்கம் எமக்கு இல்லை. இத்தகைய கட்டுக்கதைகளை உருவாக்குவதற்கு முன்னால் வரலாற்றுப் பாடங்களைத் திரும்பிப் பார்க்குமாறு ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் களுக்கு ஞாபகமூட்ட மட்டுமேவிரும்புகிறோம். ஜெங்கிஸ்கான் மங்கோலி யாவின் ஒரு கான். அவனது நாட்களில் சீனா, ரசியா இரண்டுமே மங்கோலிய ஆக்கிரமிப்புக்கு உள்ளாயின. வடமேற்கு மற்றும் வடக்கு சீனாவின் மீது 1215-லும் ரசியாவின் மீது 1223-லும் அவன் படை யெடுப்பு நடத்தினான். அவன் இறந்தபிறகு அவனது வாரிசுகள் 1240-ல் ரசியாவைத் தங்கள் ஆட்சிக்குட்படுத்தினார்கள். பின் 39 வருடம் கழித்து 1279-ல் முழு சீனாவையும் வெற்றி கொண்டனர்.

பிரபல சீன எழுத்தாளரான லூசுன் 1934-ல் எழுதிய ஒரு கட்டுரை யில் ஜெங்கிஸ்கானைப் பற்றி ஒருபத்தி எழுதியுள்ளார். அது உங்களுக்கு உபயோகமாக இருக்குமென்பதால் அதை நாங்கள் இங்கே இணைத்திருக்கிறோம்.

இளைஞராக இருந்த அவர் எழுதுகிறார்:

''நமது ஜெங்கிஸ்கான் அய்ரோப்பாவை வெற்றி கொண்டு 'நமது' வரலாற்றில் பொற்காலத்தைப் படைத்தான் என்று எனக்குச் சொல்ல

பட்டிருந்தது. 'நமது' வரலாற்றின் பொற்காலம் என்று சொல்லப் பட்ட காலம், மங்கோலியர்கள் சீனாவை வெற்றி கொண்ட காலம் என் பதையும் நாம் அடிமைகளாக்கப்பட்ட காலம் என்பதையும் இருபத்தைந் தாவது வயதில்தான் நான் கண்டுபிடித்தேன். சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வரலாற்றுக் கதைகளுக்கான மங்கோலிய வரலாறு பற்றிய மூன்று வரலாற்று நூல்களைப் படித்துக் கொண்டிருந்த போதுதான் மங்கோலியர்கள் சீனாவை வெற்றி கொள்ளும் முன்னரே, ரசியாவை வென்றனர் என்பதையும், ஆஸ்திரியா, ஹங்கேரி நாடுகள் மீது படை யெடுத்தனர் என்பதையும், அப்போதைய ஜெங்கிஸ்கான் இன்னும் நமது கான் ஆகியிருக்கவில்லை என்பதையும் அறிந்துகொண்டேன். நாம் அடிமைப்படுத்தப்படும் முன்னமே ரசியர்கள் அடிமைப்படுத்தப்பட்டுள்ள னர்.எனவே, ''நமது ஜெங்கிஸ்கான் சீனாவை வெற்றி கொண்டபோது நமது வரலாற்றின் பொற்காலத்தைப் படைத்தான்'' என்று ரசியர்கள் கூறுவதுதான் இன்னும் பொருத்தமாயிருக்கும்''.[1]

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கூச்சல் எழுப்புகிற ''மஞ்சள் அபாயக்கோட்பாடு'' ஜெர்மனியின் இரண்டாம் கெய்சர் வில்லியம் விட்டுச் சென்ற எச்சமே என்பதை நவீன உலக வரலாற்றில் மிகக் குறைந்த அறிவுள்ளவர்கள் கூட அறிவர். அரை நூற்றாண்டுக்கு முன்பு, ''மஞ்சள் அபாயம் பற்றிய நம்பிக்கை உடையவன் நான்'' என்று இரண்டாம் வில்லியம் கூறினான்.

''மஞ்சள் அபாயக் கோட்பாட்டினை'' இரண்டாம் கெய்சர் பரப் பியதன் நோக்கம், சீனப் பிரிவினையை மேலும் தீவிரமாக்கவும், ஆசியா மீது படையெடுக்கவும், ஆசியாவில் புரட்சியை ஒடுக்கவும், புரட்சி யிலிருந்து அய்ரோப்பிய மக்களின் கவனத்தை திசை திருப்பவும், ஏகாதி பத்திய உலகப் போருக்கான அவனது தீவிர தயாரிப்புகளுக்கும் உலக மேலாதிக்கத்தைப் பெறுவதற்கான அவனது முயற்சிகளுக்கும் அதனை மூடுதிரையாகப் பயன்படுத்தவும்தான்.

இரண்டாம் வில்லியம், 'மஞ்சள் அபாயக் கோட்பாட்டினைப்' பரப் பியபோது, அய்ரோப்பிய முதலாளிய வர்க்கம் ஆழமான வீழ்ச்சியிலும் மிகமிகப் பிற்போக்கானதாகவும் இருந்தது. 1905-ல் ரசியப் புரட்சிக்கால மான அக்கால கட்டத்தில் சீனா, துருக்கி, பெர்சியா ஆகிய நாடுகளில் ஜனநாயகப் புரட்சி முன்னேறிக் கொண்டிருந்தது, இவற்றால் இந்தியா வும் பாதிக்கப்பட்டிருந்தது. அந்தக் கால கட்டத்தில்தான் 'பின்தங்கிய

1. லூசுன் தொகுப்பு நூல்கள், சீன பதிப்பு, மக்கள் இலக்கிய வெளியீடு நிறுவனம், பீகிங் 1958, வால்யூம் 6, பக்கம் 109.

அய்ரோப்பாவும் முன்னேறிய ஆசியாவும்'' என்ற தனது புகழ்பெற்ற கருத்தைக் கூறினார் லெனின்.

இரண்டாம் வில்லியம் அவனது நாட்களில் ஒரு பெரும் புள்ளியாக இருந்தான். ஆனால், உண்மையில் அவன் சூரியனுக்கு முன்னால் நிறுத்தப்பட்ட பனி மனிதனே என்பதை அவன் நிரூபித்து விட்டான். மிகக் குறைந்த காலத்தில் இந்த பிற்போக்குத் தலைவன் தான் கண்டு பிடித்த பிற்போக்கு கோட்பாட்டுடன் மறைந்து போய் விட்டான். மாபெரும் லெனினும் அவரது அறிவுக்கூர்மையுள்ள போதனைகளும் காலமெல்லாம் வாழுகின்றன.

அய்ம்பது வருடங்கள் கழிந்து விட்டன. மேற்கு அய்ரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் உள்ள ஏகாதிபத்தியம் மேலும் அழுகிப் போனதாகவும், பிற்போக்கானதாகவும் ஆகியிருக்கிறது, அதன் நாட்கள் எண்ணப்படுகின்றன. அதே வேளையில், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் வீசும் புரட்சிப்புயல் லெனின் காலத்தில் இருந்ததையும் விட பல மடங்கு பலம் மிக்கதாக வளர்ந்திருக்கிறது. இன்றைக்கும் இரண்டாம் வில்லியம்மின் பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக சிலர் இருக்கிறார்கள் என்பது வியப்புக்குரியதாயிருக்கிறது. உண்மையிலே இது வரலாற்றைக் கேலி செய்வது ஆகும்.

புதிய வேடத்தில் அவதரித்துள்ள பழைய திரிபுவாதம்

தேசிய-காலனிய விசயத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கொள்கை, இரண்டாவது அகில திரிபுவாதிகளின் ஓட்டாண்டித்தனமான கொள்கைக்கு ஒப்பானதே ஆகும். ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால் பழைய திரிபுவாதிகள் ஏகாதிபத்தியத்தின் பழைய காலனியவாதத்துக்கு சேவை செய்தனர். நவீன திரிபுவாதிகள் ஏகாதிபத்தியத்தின் புதிய காலனியவாதத்துக்கு சேவை செய்கின்றனர்.

பழைய திரிபுவாதிகள், பழைய காலனியவாதிகளின் தாளத்திற்கேற்ப பாடினார்கள், குருச்சேவ் புதிய காலனியவாதிகளின் தாளத்திற்கேற்ப பாடுகின்றார்.

பெர்ன்ஸ்டைன் மற்றும் காவுட்ஸ்கியால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இரண்டாவது அகிலத்தின் கதாநாயகர்கள், ஏகாதிபத்தியத்தின் பழைய காலனிய ஆட்சியின் பாதுகாவலர்களாக விளங்கினர். காலனிய

ஆட்சி முற்போக்கானதென்றும், அது காலனி நாடுகளுக்கு உயர்ந்த நாகரிகத்தைக் கொண்டு வந்தது என்றும் அங்குள்ள உற்பத்தி சக்திகளை வளரச் செய்தது என்றும் அவர்கள் வெளிப்படையாகப் பிரகடனம் செய்து வந்தார்கள்''காலனிகளை அழிப்பது என்பது காட்டுமிராண்டித் தனமாகும்'' [1] என்று கூட அவர்கள் வலியுறுத்தி வந்தனர்.

இந்த வகையில் குருச்சேவ் பழைய திரிபுவாதிகளிடமிருந்து சிறிது வேறுபட்டிருக்கிறார். பழைய காலனிய முறையை நிராகரிக்குமளவுக்கு அவருக்கு துணிச்சல் இருக்கிறது.

குருச்சேவுக்கு எப்படி இவ்வளவு துணிச்சல் வந்தது? ஏனெனில், ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் தாளத்தை மாற்றிக் கொண்டார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் சோசலிசப் புரட்சி, தேசிய விடுதலைப் புரட்சி என்ற இரண்டு அடிகளை வாங்கியிருக்கும் ஏகாதிபத்தியவாதிகள் ''காலனிய வாதத்தின் கௌரவத்தை மேலும் பரப்புவதற்கு மேலை நாடுகள் முயற்சித்தால், அது பலாத்காரப் புரட்சியைத் தவிர்க்க முடியாததாக்கிவிடும்; தோல்வி தவிர்க்க முடியாததாகிவிடும்''[2] என்பதை அங்கீகரிக்க நிர்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். பழைய காலனிய ஆட்சி வடிவம் ''...தேசத்தின் வாழ்வில் பொருளாதார, ஆன்மீக சக்தியை அழிக்கக்கூடிய புரையோடிய புண்கள் என்று நிரூபனமாகும் நிலையிலிருந்தது'' [3] எனவே வடிவத்தை மாற்றுவதும், புதிய காலனியத்தை நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகிவிட்டது.

புதிய காலனியவாதிகளின் தாளத்திற்கேற்ப பாடும் குருச்சேவ்' புதிய காலனிய வாதத்தை மூடி மறைப்பதற்காக, ''காலனியத்தின் மறைவுக் கோட்பாட்டை'' முன் வைத்துள்ளார். இதற்கும் மேலாக, புதிய காலனியத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஒடுக்கப்பட்ட நாடுகளைத் தூண்டுவதற்கு முயற்சிக்கிறார். ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும் 'நாகரிக' ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான ''சமதான சகவாழ்வு'', ''தேசியப் பொருளாதாரத்தை வேகமாக வளர்ச்சியடைய'' செய்யுமென்றும், ''அவற்றின் உற்பத்தி சக்திகளில் வளர்ச்சியை''கொண்டு வருமென்றும், ஒடுக்கப்பட்ட நாடுகளின் உள்நாட்டுச் சந்தையை ''ஒப்பிட முடியாத

1. எட்வர்டு டேவிட்,ஸ்டுட்கார்ட் சர்வதேச சோசலிச காங்கிரஸ் [1907] காலனிய பிரச்சினை பற்றிய உரை, வெர்லாக் புக்கன்ட்லங் லோர்வாட்ஸ், பெர்லின் 1907, பக்கம்-30.
2. ஜே.எப். டல்லஸ், போரா - சமாதானமா, ஆங்கிலப் பதிப்பு, மாக்மில்லன் கம்பெனி, நியூயார்க் 1957, பக்கம்-26.
3. ஜான் ஸ்ட்ரெச்சி, சாம்ராஜ்யத்தின் மறைவு, ஆங்கிலப் பதிப்பு, லண்டன், 1959, பக்கம் 154.

அளவு வளர்ச்சியடைய'' செய்யுமென்றும், மேலும் அதிகக் கச்சாப் பொருட்களும், தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளின் பொருளாதாரத் துக்கு அவசியமான பல்வேறு பொருட்களும், செய்பொருட்களும் கிடைக் கச் செய்யும்'' [1] என்றும், அதே நேரத்தில் ''உயர்வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாட்டிலுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை குறிப்பிடத் தக்க அளவு உயர்த்தும்'' [2] என்றும் குருச்சேவ் தீவிரமாகப் பிரச்சாரம் செய்கிறார்.

இரண்டாவது அகில திரிபுவாதிகளின் பாசறையிலிருந்து சில துருப் பிடித்த ஆயுதங்களை எடுத்துக் கொள்ளவும் குருச்சேவ் மறுக்கவில்லை. இதோ சில உதாரணங்கள்:

பழைய திரிபுவாதிகள் தேசிய விடுதலைப் போர்களை எதிர்த்தனர். தேசியப் பிரச்சினை ''சர்வதேசிய உடன்பாடுகள் மூலமாக மட்டுமே தீர்க்கப்பட முடியும்'' [3] என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். இவ் விசயத்தில் இரண்டாவது அகில திரிபுவாதிகளின் வழியையே குருச்சேவ் மேற்கொண்டிருக்கிறார். ''காலனிய முறையின் அமைதியான சவ அடக்கத்தை'' [4] அவர் சிபாரிசு செய்கிறார்.

பழைய திரிபுவாதிகள் புரட்சிகர மார்க்சியவாதிகளைத் தாக்கினார் கள். ''போல்ஷ்விசம் என்பது சாராம்சத்தில் யுத்த வடிவிலான சோசலிசம்'' [5] என்றும் ''தொழிலாளர்களின் விடுதலை, செம்படையின் துப்பாக்கியால்தான் வெற்றிகரமாகச் சாதிக்கப்பட முடியுமென்றும் உலகப் புரட்சிக்கு ஒரு புதிய உலகயுத்தம் அவசியமென்றும் கம்யூனிஸ்ட் அகிலம் மாயைகளைப் பரப்புகிறது'' என்றும் புரட்சிகர மார்க்சியவாதி கள் மீது அவதூறு பேசினார்கள். இந்த நிலை ''ஒரு புதிய உலக யுத்தத்

1. என்.எஸ். குருச்சேவ், அய். நா. பொது சபையில் ஆற்றிய உரை, செப்டம்பர் 23, 1960.
2. 'காலனியத்தின் அழிவு-நமது காலத்தின் கட்டளை' கம்யூனிஸ்ட், மாஸ்கோ, எண் 2, 1961.
3, எல்லைப் பிரச்சினை பற்றிய தீர்மானம் பெர்னே சர்வதேசிய சோசலிச மாநாட்டில் ஏற்கப்பட்டது, 1919, முதலாவது, இரண்டாவது அகிலம் பற்றிய விசயங்கள், ரசிய பதிப்பு, மாஸ்கோ, 1926 பக்கம் 380.
4. என்,எஸ். குருச்சேவ் அய். நா. பொது சபையில் ஆற்றிய உரை செப்டம்பர் 23 1960.
5, ஒட்டோ பாவர், மார்செல்ஸ் சர்வதேச சோசலிச காங்கிரசில் [1925] கிழக்கு நாடுகள் குறித்த பேச்சு, முதலாவது, இரண்டாவது அகிலம் பற்றிய விசயங்கள் ரசிய பதிப்பு, மாஸ்கோ 1926, பக்கம் 468.

தத்திற்கான மாபெரும் அபாயத்தை உருவாக்கியிருக்கிறது''[1] என்ற கட்டுக் கதையையும் அவர்கள் பரப்பினார்கள். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும் பிற சகோதர மார்க்சிய-லெனினியக் கட்சிகளையும் அவதூறு செய்வதற்கு இன்று குருச்சேவ் கையாளும் வழி, போல்ஷ்விக்குகளை அவதூறு செய்வதற்கு பழைய திரிபுவாதிகள் கையாண்ட அதே வழி தான், அதில் எந்த வேறுபாட்டையும் காணமுடியவில்லை.

ஏகாதிபத்தியவாதிகளின் புதிய காலனியவாதத்துக்கு குருச்சேவ் செய்யும் சேவை, ஏகாதிபத்தியவாதிகளின் பழைய காலனியவாதத்துக்கு பழைய திரிபுவாதிகள் செய்த சேவையிலிருந்து இம்மியளவும் குறைந்ததல்ல.

ஏகாதிபத்தியவாதிகளின் கொள்கை சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தை எவ்வாறு புரட்சிப் பகுதி, சந்தர்ப்பவாதப்பகுதி என இரண்டாகப் பிளவுப்படுத்தியது என்று சுட்டிக்காட்டினார் லெனின். புரட்சிகரப் பகுதிஒடுக்கப்பட்ட நாடுகளுடன் இணைந்து ஏகாதிபத்தியவாதிகளையும் காலனியவாதிகளையும் எதிர்த்தது, இதற்கு மாறாக சந்தர்ப்பவாதப் பகுதி காலனி, அரைக்காலனி மக்களிடமிருந்து ஏகாதிபத்தியவாதிகளும், காலனியவாதிகளும் அடித்தக் கொள்ளையின் எச்சில் பருக்கைகளை உண்டு வாழ்ந்தது. அது ஏகாதிபத்தியவாதிகளுடனும் காலனியவாதிகளுடனும் சேர்ந்து கொண்டு ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலைக்கான புரட்சியை எதிர்த்தது.

லெனினால் விளக்கப்பட்டதுபோல, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் புரட்சியாளர்கள் மற்றும் சந்தர்ப்பவாதிகளுக்கிடையிலான பிரிவினை நிலவுகிறது; இத்தகைய பிரிவினை இப்பொழுது முதலாளிய நாடுகளின் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் மட்டுமல்லாது, பாட்டாளி வர்க்கத்தின் கையில் ஆட்சிஅதிகாரம் இருக்கும் சோசலிச நாடுகளிலும் உருப்பெற்று வருகிறது.

தேசிய விடுதலை இயக்கம் முழுவெற்றிபெற வேண்டுமெனில், அது புரட்சிகர பாட்டாளி வர்க்க இயக்கத்துடன் உறுதியான நேச அணியை உருவாக்கவேண்டும் என்றும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும், காலனியவாதிகளுக்கும் சேவை செய்யும் திரிபுவாதிகளுக்கும் தனக்கும் இடையிலான வேறுபாட்டைத் தெளிவாக வரையறுக்கவேண்டும் என்றும் அவர்களின் செல்வாக்கை உறுதியுடன் ஒழிக்கவேண்டும் என்றும் வரலாற்று அனுபவம் உணர்த்துகிறது.

---

1. கிழக்கு நாடுகள் பிரச்சினை பற்றிய தீர்மானம் மார்செல்ஸ் சர்வதேச சோசலிச காங்கிரசில் [1925] ஏற்கப்பட்டது, முதலாவது, இரண்டாவது அகிலம் பற்றிய ரசிய பதிப்பு, மாஸ்கோ 1926 பக்கம் 474.

மேற்கு அய்ரோப்பா மற்றும் வடஅமெரிக்காவிலுள்ள முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்க இயக்கம் முழு வெற்றி பெறவேண்டுமானால், அது ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் உள்ள தேசியவிடுதலை இயக்கங்களுடன் நெருக்கமான கூட்டை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். தங்களுக்கும் திரிபுவாதிகளுக்கும் இடையிலான வேறுபாட்டைத் தெளிவாக வரையறுக்கவேண்டும்; அவர்களின் செல்வாக்கை உறுதியுடன் ஒழிக்கவேண்டும் என்று வரலாற்றுஅனுபவம் உணர்த்துகிறது.

திரிபுவாதிகள், சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அணிகளிடையில் ஒளிந்துகொண்டிருக்கும் ஏகாதிபத்திய ஏஜெண்டுகளாவர். லெனின் கூறினார்: ''... சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான போராட்டத்துடன் பிரிக்கமுடியாதபடி இணைக்கப்பட்டாலன்றி ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டம் போலியானதாகவும், ஏமாற்றுவதாகவுமே இருக்கும்''1 இவ்வாறு ஏகாதிபத்தியம், மற்றும் பழைய, புதிய காலனியத்துக்கெதிரான இன்றைய போராட்டம் புதிய காலனியத்தின் பாதுகாவலர்களுக்கு எதிரான போராட்டத்துடன் நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது.

ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் நோக்கங்களை எவ்வளவுதான் திறமையாக மறைத்துக்கொண்டு ஆர்ப்பரித்தாலும் அவர்களின் பாதுகாவலர்கள் எவ்வளவு திறமையாக புதிய காலனியத்துக்கு உதவினாலும் ஏகாதிபத்தியமும் காலனியமும் தங்கள் அழிவிலிருந்து தப்பமுடியாது. தேசிய விடுதலைப் புரட்சியின் வெற்றி தடுக்கப்பட முடியாது. விரைவிலோ தாமதமாகவோ புதிய காலனியத்தின் பாதுகாவலர்கள் ஓட்டாண்டியாவது நிச்சயம்.

உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட நாடுகளே ஒன்றுசேருங்கள்!

---

1. வி. இ. லெனின், ''ஏகாதிபத்தியம்-முதலாளித்துவத்தின் உச்சகட்டம்,'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, எப். எல். பி. எச். மாஸ்கோ 1952 வால்யூம் 1, பகுதி 2, பக்கம்-566.

யுத்தம், சமாதானம் பற்றிய பிரச்சினையில் இரண்டு வேறுபட்ட வழிகள்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அய்ந்தாவது விமர்சனம்

'மக்கள் தினசரி', 'செங்கொடி' பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்கள் (நவம்பர் 19, 1963)

யுத்தம்-சமாதானம் பற்றிய பிரச்சினையை உலகம் முழுவதும் விவாதித்துக்கொண்டிருக்கிறது.

குற்ற இயல்புள்ள ஏகாதிபத்திய முறை இரு நாசகர உலக யுத்தங்கள் உள்ளிட்ட எண்ணிலடங்காத யுத்தங்களை உலக மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டு வந்துள்ளது. ஏகாதிபத்தியத்தால் கட்டவிழ்த்துவிடப்பட்ட யுத்தங்கள், மக்களுக்குக் கடும் துயரங்களை விளைவித்துள்ளன. அதே சமயத்தில் அவர்களுக்குப் பல படிப்பினைகளையும் கற்றுத் தந்துள்ளன.

இரண்டாவது உலகப் போரிலிருந்து எல்லா இடங்களிலும் உள்ள மக்கள், உலக சமாதானத்திற்கான கோரிக்கையைத் தீவிரமாக எழுப்பி

வருகின்றனர். உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கைகளை எதிர்த்துப் போராடுவது மிகவும் அவசியம் என்பதை மேலும் மேலும் அதிகமான மக்கள் புரிந்து கொண்டு வருகின்றனர்.

சமாதானம் வேண்டும் என்ற மக்களின் உணர்வுகளை மதிப்பதும், உலக சமாதானத்திற்கான போராட்டத்தில் முன்னணியில் நிற்பதும் உலகெங்கும் உள்ள மார்க்சிய-லெனினியவாதிகளின் கடமையாகும். ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்த கொள்கைகளுக்கு எதிராகப் போராடுவதும், அவர்களின் ஏமாற்றுத் தன்மையை அம்பலப் படுத்துவதும், அவர்களின் யுத்த திட்டங்களை முறியடிப்பதும் மார்க்சிய-லெனினியவாதிகளின் கடமையாகும். மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதும், அவர்களுடைய அரசியல் உணர்வை வளர்ப்பதும் உலக சமாதானத்திற் கான போராட்டத்தை சரியான திசையில் நடத்திச் செல்வதும் உலகெங் கும் உள்ள மார்க்சிய-லெனினியவாதிகளின் கடமையாகும்.

மார்க்சிய-லெனினியவாதிகளுக்கு நேர்மாறாக, நவீன திரிபுவாதி கள், மக்களை ஏமாற்றுவதற்கும், மக்களின் கவனத்தைத் திசை திருப்பு வதற்கும், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான மக்களின் போராட்டத்தைத் தளர்வுறச் செய்து வீழ்ச்சியடையச் செய்வதற்கும், ஒரு புதிய உலகப் போருக்கான தமது திட்டங்களை மறைப்பதற்கும் இவ்வாறு ஏகாதிபத் தியக் கொள்கையின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் ஏகாதிபத்திய வாதிகளுக்கு உதவி வருகின்றனர்.

யுத்தம், சமாதானம் பற்றிய பிரச்சினை குறித்த மார்க்சிய - லெனி னிய பாதை திரிபுவாதிகளின் பாதைக்கு நேரெதிரானது.

உலக சமாதானத்தை சாதிப்பதற்கு உதவக்கூடிய, சரியான வழி மார்க்சிய-லெனினிய வழியே. இந்த வழிதான், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட எல்லா மார்க்சிய-லெனினிய கட்சிகளாலும், மார்க்சிய-லெனினியவாதிகளாலும் தொடர்ந்து உறுதியாக உயர்த்திப் பிடிக்கப் படுகிறது.

திரிபுவாதிகளின் வழியோ, ஒரு புதிய யுத்தத்திற்கான அபாயத்தை மேலும் அதிகரிப்பதற்கு உதவுகிற தவறான வழியாகும். இந்த வழி ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால், அதன் 20-வது காங்கிரசி லிருந்தே படிப்படியாக வளர்க்கப்பட்டுள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதத் திலும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் பல்வேறு அறிக்கை

களிலும் யுத்தம்-சமாதானம் பற்றிய பிரச்சினையில் சீனக் கம்யூனிஸ்டு களை அவதூறு செய்வதற்காக பல பொய்கள் ஜோடிக்கப்பட்டுள்ளன. ஆனால் இப்பொய்கள், இரண்டு வழிகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு களின் சாராம்சத்தை மறைத்துவிட முடியாது.

இனி, யுத்தம்-சமாதானம் பற்றிய பிரச்சினையில் மார்க்சிய-லெனினியவாதிகளின் வழிக்கும் நவீன திரிபுவாதிகளின் வழிக்கும் உள்ள முக்கிய வேறுபாடுகளை ஆய்வு செய்வோம்.

வரலாற்றின் படிப்பினைகள்

முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாகப் பரிணமித்த காலம் முதல், யுத்தம்-சமாதானம் பற்றிய பிரச்சினை மார்க்சிய-லெனினியவாதிகளுக் கும், திரிபுவாதிகளுக்கும் இடையிலான போராட்டத்தில் மிக முக்கியமானதொன்றாக இருந்து வந்திருக்கிறது.

நவீன காலத்தில், ஏகாதிபத்தியம், யுத்தங்களின் ஊற்றுக்கண் ணாக இருந்து வருகிறது. சமாதானம் பற்றிய ஒரு ஏமாற்றுக் கொள்கை யையும்,ஒரு யுத்தக் கொள்கையையும் ஏகாதிபத்தியவாதிகள் மாறி மாறி பயன்படுத்தி வருகின்றனர். தங்களது ஆக்கிரமிப்புக் குற்றங்களையும் ஒரு புதிய யுத்தத்துக்கான தயாரிப்புக்களையும், சமாதானம் பற்றிய பொய்களின் மூலம் அவ்வப்போது மூடி மறைக்கின்றனர்.

ஏகாதிபத்தியவாதிகளின் சமாதானம் பற்றிய மோசடிகளை எதிர்த் துப் போராட லெனினும், ஸ்டாலினும் அனைத்து நாட்டு மக்களுக்கும் இடைவிடாது அழைப்பு விடுத்தனர்.

''ஏகாதிபத்திய அரசாங்கங்கள் அமைதி, நேர்மை பற்றி உதட் டளவில் பேசுகின்றன; ஆனால், உண்மையில் அவை ஆக்கிரமிப்பு மற்றும் கொள்ளைக்கான யுத்தங்களை நடத்துகின்றன'' [1] என்றார் லெனின்.

ஏகாதிபத்தியவாதிகள் ''சமாதானக் கோட்பாட்டில் புகலிடம் தேடு வதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கிறது. ஒரு புதிய யுத்தத்திற்கு

1. வி.இ. லெனின், ''சமாதானம் குறித்த அறிக்கை'', தொழிலாளர் மற்றும் படை வீரர்களின் சோவியத் பிரதிநிதிகளுக்கான இரண்டாவது அகில ரசிய காங்கிரசில் ஆற்றிய உரை, தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அ.மொ.பதிப்பகம், மாஸ்கோ 1952 தொகுதி 11, பகுதி 1, பக்கம்-332.

தயாரிப்புச் செய்வதற்காக சமாதானம் பற்றிய வார்த்தை ஜாலங்களில் மக்களை ஏமாற்றுவதுதான் அது'' [1] என்றார் ஸ்டாலின்.

ஸ்டாலின் மேலும் கூறினார்: ''ஏகாதிபத்தியத்தின் சமாதானக் கோட்பாடு சமாதானத்திற்கான கருவி எனப் பலரும் நினைக்கின்றனர். இது முற்றிலும் தவறு. யுத்தத்துக்கான தயாரிப்புச் செய்து கொள்வதற்கும், இந்தத் தயாரிப்பை சமாதானம் பற்றிய போலித்தனமான பேச்சினால் மூடிமறைப்பதற்குமான கருவிதான் ஏகாதிபத்தியத்தின் சமாதானக் கோட்பாடு. இந்த சமாதானக் கோட்பாடும் அதன் கருவியான சர்வதேச சங்கமும் (League of Nations) இல்லாவிட்டால் இன்றைய நிலைமைகளில் யுத்தத்துக்கான தயாரிப்புச் செய்வது சாத்தியமற்றதாகும்''. [2]

லெனினுக்கும் ஸ்டாலினுக்கும் நேர்மாறாக, உழைக்கும் வர்க்கத்திடமிருந்து ஓடிப்போனவர்களான இரண்டாவது அகிலத்தின் திரிபுவாதிகள், ஏகாதிபத்தியவாதிகள் மக்களை ஏமாற்றுவதற்குத் துணை நின்று, இரண்டு உலக யுத்தங்களைக் கட்டவிழ்த்து விடுவதில் ஏகாதிபத்தியவாதிகளுக்கு உடந்தையானவர்களாகவும் மாறினர்.

முதல் உலகப் போருக்குமுன் பெர்ன்ஸ்டைன் மற்றும் காவுட்ஸ்கியால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட திரிபுவாதிகள், சமாதானம் பற்றிய போலியான பேச்சுக்கள் மூலம் மக்களின் புரட்சிகரப் போர் குணத்தை முடக்கவும், ஓர் உலக யுத்தத்துக்கான ஏகாதிபத்தியத்தின் திட்டங்களை மூடிமறைக்கவும் பெரும் முயற்சி செய்தார்கள்.

முதல் உலக யுத்தம் மூளத்தொடங்கியதும் பழைய திரிபுவாதிகள் தங்களின் சமாதான முகத்திரைகளை மிக விரைவாகக் கலைத்து விட்டு, அவரவர்களின் ஏகாதிபத்திய அரசாங்கங்களின் பக்கம் சேர்ந்து விட்டனர். உலகத்தை மறுபங்கீடு செய்வதற்கான ஏகாதிபத்திய யுத்தத்தை ஆதரித்தனர். இராணுவத்துக்கான அதிகநிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாகப் பாராளுமன்றத்தில் வாக்களித்தனர். ''தாய்நாட்டைக் காப்போம்'' என்ற போலித்தனமான முழக்கத்தின் கீழ் தம் நாட்டு உழைக்கும் வர்க்கத்தினரை யுத்தத்தில் மூழ்கடிக்கவும், மற்ற நாடுகளிலுள்ள தங்களின் வர்க்க சகோதரர்களைப் படுகொலை செய்யவும் தூண்டினர்.

---

1. ஜே.வி. ஸ்டாலின், ''சர்வதேச நிலைமை பற்றி படைப்புகள்'', ஆங்கிலப் பதிப்பு, அ.மொ.ப. மாஸ்கோ 1953, தொகுதி 6, பக்கம் 297.
2. ஜே. வி. ஸ்டாலின், ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சி [போ], மத்திய கமிட்டியின் ஜூலை பிளீனத்தின் முடிவுகள்'', படைப்புகள், ஆங்கிலப் பதிப்பு, அ. மொ. ப., மாஸ்கோ 1954, தொகுதி 6, பக்கம்-209.

ஏகாதிபத்தியவாதிகளுக்கு அவர்களின் சொந்த நலன் காரணமாகப் போர் ஓய்வு தேவைப்பட்டபோது, காவுட்ஸ்கி போன்ற திரிபுவாதிகள் ''வாழுங்கள், வாழவிடுங்கள்' என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்த சமரசமான சமாதானத்தை விட என்னை மகிழ்ச்சியடையச் செய்யக்கூடிய வேறு எதுவும் கிடையாது'' [1] என்பது போன்ற வழவழப் பான வெற்றுப் பேச்சுக்களில் புரட்சியை எதிர்த்தார்கள், மக்களின் மனங் களை நச்சுப்படுத்தினார்கள்.

முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு ஓடுகாலி காவுட்ஸ்கியும், அவரது வாரிசுகளும் ஏகாதிபத்தியவாதிகளின் சமாதான மோசடிகளைப் பற்றி புகழ்பாடும் வெட்கங்கெட்ட மனிதர்களாக மாறினார்கள்.

யுத்தம்—சமாதானம் பற்றிய பிரச்சினை குறித்து இரண்டாவது அகிலத்தின் திரிபுவாதிகள் ஏராளமான பொய்களைப் பரப்பினார்கள்.

1. ஏகாதிபத்தியத்தை அழகுபடுத்தி மக்களை அவர்களுடைய போராட்டங்களிலிருந்து திசைதிருப்பினார்கள். ''ஏகாதிபத்தியத்தினால் உலக சமாதானத்திற்கு ஏற்படும் அபாயம் என்பது மிக அற்பமானது. பெரிய அபாயம் கிழக்கில் நடைபெறும் தேசிய போராட்டங்களிலிருந்தும் பல்வேறு சர்வாதிகார அரசுகளிடமிருந்தும்தான் வருவதாகத் தெரிகிறது'' [2] என்று காவுட்ஸ்கி கூறினார்.

இவ்வாறு யுத்தங்களின் மூலகாரணம் ஏகாதிபத்தியம் அல்ல, மாறாக கிழக்கிலுள்ள ஒடுக்கப்பட்ட தேசங்களும், சமாதானத்தின் மாபெரும் பாதுகாவலர்களான சோவியத் ரசியாவும்தான் என்று மக்களை நம்பச்சொன்னார்கள்.

2. அவர்கள் ஒரு புதிய யுத்தம் பற்றிய அபாயத்தை ஏகாதிபத்திய வாதிகள் மறைப்பதற்கு உதவினர்; மக்களின் போராட்டத் துணிவாற் றலை மழுங்கச்செய்தனர். 1928-ல் காவுட்ஸ்கி கூறினார், ''இன்று நீங்கள் ஏகாதிபத்திய யுத்தம் பற்றி ஓயாது பேசிக்கொண்டிருந்தால் நீங்கள் தொன்மையான சூத்திரத்தையே நம்பிக்கொண்டிருக்கிறீர்கள்; நிகழ்கால ஆய்வுகளை அல்ல'' [3] காவுட்ஸ்கி வகைப்பட்ட பழைய திரிபு வாதிகள், ஏகாதிபத்திய யுத்தங்களின் தவிர்க்கமுடியாமையில் நம்பிக்கை

1. *கார்ல் காவுட்ஸ்கி, தேசியப் பிரச்சினைகள், ரசிய பதிப்பு, பெட்ரோ கிரேட், 1918, பக்கம், 88.*
2. *கார்ல் காவுட்ஸ்கி, பாதுகாப்பு மற்றும் சமூக ஜனநாயகம் குறித்த கேள்வி, ஜெர்மன் பதிப்பு, பெர்லின், 1928, பக்கம், 37.*
3. *மேற்படி நூல் 3, பக்கம் 28.*

வைத்திருப்பவர்களை ''வரலாறு பற்றிய நாசகரமான கோட்பாட்டை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள்'' [1] என வர்ணித்தார்கள்.

3. அவர்கள் யுத்தம் மனித இனத்தை அழித்துவிடும் என்ற கருத்தின் மூலம் மக்களை அச்சுறுத்தினார்கள். காவுட்ஸ்கி கூறினார், ''...அடுத்து ஏற்படும் யுத்தம் கடுந்துயரை மட்டும் கொண்டுவராது, அடிப்படையில் மனித நாகரிகத்திற்கே ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடும். அது அய்ரோப்பாவில் புகைபடிந்த அழிவுகளையும், அழுகிப்போன பிணங்களையும் தவிர வேறு எதையும் விட்டுச்செல்லாது'' [2] ''நடந்து முடிந்த யுத்தம் உலகம் முழுவதையும் அழிவின் விளிம்பிற்கே கொண்டு சென்றது. அடுத்துவரும் புதிய யுத்தம் உலகத்தை முற்றிலும் அழித்துவிடும்'' [3] என்று இந்த பழைய திரிபுவாதிகள் கூறினார்கள்.

4. அவர்கள் நீதி மற்றும் அநீதி யுத்தங்களை வேறுபடுத்தாமல் புரட்சியை எதிர்த்தனர். 1914-ல் காவுட்ஸ்கி கூறினார், ''இன்றைய சூழ்நிலையில் பொதுவாக தேசங்களுக்கும் குறிப்பாக பாட்டாளி வர்க்கத்துக்கும் இடர்பாடு அளிக்காத யுத்தம் என்று எதுவும் இல்லை. இது வரை நாம் விவாதித்தது, பயங்கரமான யுத்தத்தை எவ்வழிகளில் தடுப்பது என்பதையே, எந்தப் போர் பயனுள்ளது, எது தீங்கானது என்பதை அல்ல''. [4]

மேலும் அவர் கூறினார்: ''நிலையான சமாதானத்திற்கான ஆவல் பெரும்பாலான பண்பட்ட தேசங்களை மேலும் ஊக்குவிக்கிறது. அது நமது காலத்தின் முக்கியமான பெரும்பிரச்சினைகளைத் தற்காலிகமாகப் பின்னுக்குத் தள்ளுகிறது''. [5]

---

1. ஹ்யூகோ ஹாசே, கெம்னிட்ஸில் நடந்த ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி காங்கிரசில் ஏகாதிபத்தியம் பற்றிய கேள்வி குறித்த உரை, 1912, 1910-1913 ஆண்டுகளில்சமூக ஜனநாயகக் கட்சி காங்கிரசின் கையேட்டில் பிரசுரிக்கப்பட்டது, ஜெர்மன் பதிப்பு, மூனிச். தொகுதி 2, பக்கம். 234.
2. கார்ல் காவுட்ஸ்கி, 'போரும் ஜனநாயகமும்' முகவுரையில், ஜெர்மன் பதிப்பு, பெர்லின், 1932, பக்கம் XII.
3. ''சர்வதேச சங்கம் மீதான தீர்மானம்'' பெர்னில் சர்வதேச சோசலிஸ்ட் மாநாட்டில் நிறைவேற்றியது, 1919, முதல், இரண்டாம் அகிலங்களின் மீதான குறிப்பு, ரசியப் பதிப்பு மாஸ்கோ 1926, பக்கம்-378.
4. கார்ல் காவுட்ஸ்கி, ''போரில் சமூக ஜனநாயகம்'' டை நெயூ செய்ட், அக்டோபர் 2, 1914.
5. கார்ல் காவுட்ஸ்கி, ''போரும் ஜனநாயகமும்'' முகவுரையில், ஜெர்மன்பதிப்பு, பெர்லின், 1932, பக்கம்-XII

5. ஆயுதங்களே அனைத்தையும் நிர்ணயிக்கின்றன என்ற கொள்கையை அவர்கள் பிரச்சாரம் செய்கின்றனர். புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை எதிர்க்கின்றனர். காவுட்ஸ்கி சொன்னார், ''... அடிக்கடி சொல்லப்பட்டது போல, எதிர்காலத்தில் புரட்சிகரப் போராட்டங்கள் மிக அபூர்வமாகவே இராணுவப்போராட்ட வழியில் நடைபெறும். ஏனென்றால் சாதாரண மக்களிடம் உள்ள ஆயுதங்களைக் காட்டிலும், நவீன அரசுகளின் இராணுவங்கள் வைத்துள்ள ஆயுதங்கள் மிக நவீனமானதாக இருக்கிறது. இந்த நவீன ஆயுதங்கள் பொதுவாக மக்களின் எந்த ஒரு எதிர்ப்பையும் தொடக்கத்திலேயே நம்பிக்கையற்றதாகச் செய்கின்றது''.[1]

6. படைபலக் குறைப்பின் மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாக்க முடியும் என்றும் தேசங்களிடையே சமத்துவத்தை அடைய முடியும் என்றும் அபத்தமான கோட்பாட்டைப் பரப்பினார்கள். பெர்ன்ஸ்டைன் கூறினார், ''... உலகத்தில் அமைதியும், அனைத்து மக்களுக்கும் நல்லெண்ணமும் உண்டாகட்டும்! சர்வதேச உடன்படிக்கை மற்றும் படைபலக் குறைப்பு மூலமாக அனைவரின் நலனையும் முன்னிறுத்தும் வளமையை நோக்கியும், தேசங்களுக்கு இடையிலான சமத்துவத்தை நோக்கியும் சமுதாயம் தடையின்றி முன்னேற நாம் ஓய்வின்றிச் செயல்பட வேண்டும்''.[2]

7. படைபலக் குறைப்பின் மூலம் சேமிக்கப்படும் பணத்தை, பின்தங்கிய நாடுகளுக்கு உதவி செய்வதற்குப் பயன்படுத்தலாம் என்ற பொய்யான வாதத்தைப் பரப்பினார்கள். காவுட்ஸ்கி கூறினார், ''... மேற்கு அய்ரோப்பாவில் இராணுவச் செலவுகளின் சுமையைக் குறைப்பதன் மூலம் சீனா, பெர்சியா, துருக்கி மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் ரயில்பாதை அமைப்பதற்கான நிதி வசதிகளைப் பெருக்கலாம். போர்க்கப்பல்களை கட்டுவதைவிட இப்பொதுப்பணிகள் தொழில்துறையை வளர்ப்பதற்கான சிறந்த வழிமுறையாகும்''[3]

---

1. கார்ல் காவுட்ஸ்கி, ''சமூக ஜனநாயகம் குறித்து கேள்வி பதில் வடிவ விளக்கம்'' டை நெயூ ஸெய்ட், டிசம்பர் 13, 1893.

2. எட்வர்ட் பெர்ன்ஸ்டைன், கெம்னிட்ஸில் நடந்த ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி காங்கிரசில் 'படைக்குறைப்பு பற்றிய கேள்விகள்' குறித்து ஆற்றிய உரை, 1912, சமூக ஜனநாயகக் கட்சி காங்கிரசின் 1910—1913 வருட கையேட்டில் பிரசுரமானது, ஜெர்மன் பதிப்பு, முனிச், தொகுதி 2, பக்கம்-9.

3. கார்ல் காவுட்ஸ்கி, ''படைக் குறைப்பு பற்றி மீண்டும் ஒருமுறை'', டை நெயூ ஸெய்ட், செப்டம்பர் 6, 1912.

8. ஏகாதிபத்தியவாதிகளின் சமாதான 'யுத்த தந்திரங்களுக்கான' திட்டங்களை அவர்கள் சமர்ப்பித்தார்கள். காவுட்ஸ்கி சொன்னார், '...நாகரிகஅய்ரோப்பாவின் தேசங்கள்(அதுபோன்றே அமெரிக்கர்களும்) ஆயுதக் கப்பல்கள், விமானங்கள் ஆகியவற்றைவிட ஆற்றல்மிக்க முறையில், தங்களின் பொருளாதார மற்றும் அறிவாற்றல் வளத்தின் மூலம் அன்மை மற்றும் தூரக்கிழக்கு நாடுகளின் சமாதானத்தை நிலைநாட்ட முடியும்''.[1]

9. அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளால் கட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச சங்கத்தை வானளாவப் புகழ்ந்தார்கள். காவுட்ஸ்கி கூறினார், ''சர்வதேச சங்கம் (League of Nations) என்று இருப்பது என்பதே சமாதான இலட்சியத்திற்கு ஒரு பெரும் வெற்றியாகும். சமாதானத்தைப் பாதுகாப்பதில் இந்நிறுவனம் வேறெந்த நிறுவனத்தையும் விட ஒரு சிறந்த தூண்டுகோலாக விளங்கமுடியும்.''[2]

10. உலக சமாதானத்தைப் பாதுகாப்பதில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீது நம்பிக்கை வைக்கலாம் என்ற மாயையை அவர்கள் பரப்பினார்கள். காவுட்ஸ்கி சொன்னார் ''...இன்று அமெரிக்கா உலகின் மிக வலிமை வாய்ந்த சக்தியாகும். அது போர்களைத் தடுப்பதற்காக சர்வதேச சங்கத்தின் உள்ளிருந்து அல்லது உடன் இணைந்து பணியாற்றும்போது சர்வதேசசங்கம் எதிர்க்கப்படமுடியாத ஒன்றாக விளங்கும்.''[3]

காவுட்ஸ்கி மற்றும் அவர் போன்றவர்களின் அருவருக்கத்தக்க அம்சங்களை இரக்கமின்றி அம்பலப்படுத்தினார் லெனின். இரண்டாவது அகிலத் திரிபுவாதிகளின் அமைதி பற்றிய வார்த்தைகள் ''மக்களுக்கு ஆறுதல் சொல்வதற்கும், ஏகாதிபத்தியங்களின் படுகொலைகள் தொடர்வதற்காக பொதுமக்களை அரசாங்கங்களுக்கு பணியவைக்க உதவும் ஒரு கருவியாகவும் மட்டுமே பயன்படுகின்றன''[4] என லெனின் சுட்டிக் காட்டினார்.

---

1. கார்ல் காவுட்ஸ்கி, பாதுகாப்பு மற்றும் சமூக ஜனநாயகம் குறித்த கேள்வி'' ஜெர்மன் மதிப்பு, பெர்லின். 1928, பக்கம்-33.
2. மேற்படி நூல் பக்கம் 25.
3. கார்ல் காவுட்ஸ்கி, போரும் சோசலிஸ்டுகளும், ஜெர்மன் பதிப்பு, பிரேக், 1937, பக்கம்-630.
4. வி.இ. லெனின், தங்கள் அரசாங்கத்தின் பக்கம் ஓடிப்போன சோசலிஸ்டுகளுக்கும், போருக்கும் எதிரான போராட்டங்களை ஆதரிக்கும் தொழிலாளர்களுக்கு தொகுப்பு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, சர்வதேசப் பதிப்பகம், நியூயார்க், 1942, தொகு 9 பக்கம்-435.

''ஏகாதிபத்தியத்தின் ஏமாற்றுத்தனமான அமைதிக்கோட்பாடு (Pacifism) உழைக்கும் வர்க்கத்தினுள் ஊடுருவுவதற்கான பிரதான ஏஜெண்ட் சமூக ஜனநாயகமே. மேலும் யுத்தங்கள் மற்றும் ஊடுருவலுக்கான தயாரிப்பில் முதலாளித்துவத்தை ஆதரிப்பதற்கு உழைக்கும் வர்க்கத்தின் மத்தியில் உள்ள முக்கிய சக்தி இதுவே''[1] என்று ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

யுத்தம் - சமாதானம் பற்றிய பிரச்சினையில் தோழர் குருச்சேவின் அறிக்கையை பெர்ன்ஸ்டைன், காவுட்ஸ்கி மற்றும் இதர நபர்களின் கூற்றுகளோடு மேலோட்டமாக ஒப்பிட்டாலே, அவருடைய கருத்தில் புதிதாக ஒன்றும் இல்லை, அது இரண்டாவது அகிலத் திரிபுவாதத்தின் மாற்று வடிவம்தான் என்பது தெளிவாகும்.

மனித குலத்தின் தலைவிதியுடன் மிகுந்த தொடர்புடைய யுத்தம் — சமாதானம் பற்றிய பிரச்சினையில் பெர்ன்ஸ்டைன் மற்றும் காவுட்ஸ்கியின் அடிச்சுவடுகளையே குருச்சேவ் பின்பற்றுகிறார். இது உலக சமாதானத்திற்கு மிகவும் அபாயகரமான பாதையாகும் என்பதையே வரலாறு காட்டுகின்றது.

மிகவும் பயனுள்ள வகையில் உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும், புதிய உலக யுத்தத்தை தவிர்க்கவும், மார்க்சிய-லெனினிய வாதிகளும் உலகம் முழுவதும் உள்ள சமாதானத்தை விரும்பும் மக்களும் குருச்சேவின் தவறான வழிமுறையை மறுதலிக்கவும், எதிர்க்கவும் வேண்டும்.

மிகப் பெரிய மோசடி

உலக சமாதானத்தின் முதல் எதிரியை, சமாதானத்தை நேசிக்கும் தேவதை என வர்ணிப்பதைவிட மிகப்பெரிய பொய் எதுவும் இல்லை.

இரண்டாவது உலக யுத்தத்திலிருந்தே ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பாசிஸ்டுகளின் வழியைப் பின்பற்றி இதுவரை கண்டிராத ஒரு பெரிய உலக சாம்ராஜ்யத்தை நிறுவ அமெரிக்க ஏகாதிபத்தியம் முயற்சி செய்து வருகிறது. அமெரிக்க நாட்டிற்கும் சோசலிச முகாமுக்கும்

---

1. ஜே. வி. ஸ்டாலின். ''ரசிய கம்யூனிஸ்ட் (போ) மத்திய கமிட்டியின் ஜூலை பிளீனத்தின் முடிவுகள்'' படைப்புகள், ஆங்கிலப் பதிப்பு, அ. மொ. ப. மாஸ்கோ 1964, தொகுதி 11, பக்கம் 210.

இடைப்பட்ட பகுதிகளைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்துவது, ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் தேசங்களின் புரட்சிகளை ஒடுக்குவது, சோசலிச நாடுகளை அழிப்பது, இவ்வாறு முழு உலகத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்துவதே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ''உலக யுத்தத் தந்திரமாகும்''

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, கடந்த 18 வருடங்களில், உலகத்தை ஆதிக்கம் செய்யும் தன்னுடைய ஆசையை நிறைவேற்ற அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகின் பல பாகங்களில் ஆக்கிரமிப்புப் போர்களையும், எதிர்ப்புரட்சி ஆயுதத் தலையீடுகளையும் நடத்தி வருகின்றது, ஒரு புதிய உலக யுத்தத்திற்கான தயாரிப்பில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

நவீன யுத்தங்களுக்கு மூலகாரணம் ஏகாதிபத்தியமே என்பதும், இன்றைய உலகில் அமெரிக்க ஏகாதிபத்தியமே ஆக்கிரமிப்பையும், யுத்தங்களையும் தூண்டும் முக்கிய சக்தியாக விளங்குகிறது என்பதும் வெளிப்படையான ஒன்று. 1957 பிரகடனத்திலும் 1960 அறிக்கையிலும் இது மிகத் தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முக்கியப் பிரதிநிதிகள் சமாதானத்தை நேசிப்பதாக கூறுகிறார்கள். சூழ்நிலையை அடக்கத்துடன் மதிப்பீடு செய்வதில் தகுதிபடைத்த 'நேர்மையான' குழு ஒன்று உருவாக்கியுள்ளது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

குருச்சேவ், அய்சனோவரை ''அவரது மக்களின் முழுமையான நம்பிக்கையைப் பெற்றவர்'' என்றும், ''சமாதானத்தில் உண்மையான ஆர்வம் உடையவர்'' என்றும் ''சமாதானத்தை உறுதிபடுத்துவது பற்றி நம்மைப்போலவே அவரும் கவலை கொள்கிறார் என்றும் புகழ்ந்தார்.

இப்போது குருச்சேவ், ''உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்பதற்கு அய்சனோவரை விட அதிகத்தகுதி வாய்ந்தவர் என்று கென்னடியைப் பாராட்டுகிறார். அவர் ''சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு உள்ளார்ந்த கவனம் காட்டினார்''[1] என்றும் ''பூமியில் அமைதியான வாழ்விற்கும் ஆக்கப்பூர்வமான உழைப்புக்கும் ஏற்ற

---

1. என். எஸ், குருச்சேவ், ஜே.எஃப். கென்னடிக்கு எழுதிய கடிதம், அக்டோபர் 27, 1962.

நிலைமைகளை அவர் உருவாக்குவார் என்று எதிர்பார்ப்பது நியாய மானது''[1] என்றும் பாராட்டுகிறார்.

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய பொய்களைக் கூறுவதிலும் அதனை ஜோடனை செய்வதிலும் இரண்டாவது அகிலத்தின் திரிபுவாதிகளைப் போலவே குருச்சேவும், கடினமாக உழைக்கிறார்.

இந்தப் பொய்களை நம்பாதவர்களிடம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் இவ்வாறு கேட்கிறது: ''எல்லா முதலாளித்துவ அரசாங்கங்களும் தங்களது எல்லா நடவடிக்கைகளிலும் நியாயம் இன்றி நடப்பதாக நீங்கள் உண்மையிலேயே நினைக்கிறீர்களா?''

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், மார்க்சிய-லெனினியத்தின் அரிச்சுவடிகளையே புறக்கணிக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. ஒரு வர்க்க சமுதாயத்தில் வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட நியாயம் எதுவும் இல்லை. பாட்டாளி வர்க்கம் பாட்டாளி வர்க்க நியாயத்தையும், முதலாளி வர்க்கம் முதலாளி வர்க்க நியாயத்தையும் கொண்டிருக்கின்றன. நியாயம் என்பது ஒருவர் தனது சொந்த வர்க்கத்தின் அடிப்படை நலன்களைப் பேணும் கொள்கைகளை வகுப்பதிலும், தனது வர்க்கத்தின் அடிப்படை நலன்களுக்கு ஏற்பசெயல்படுவதிலும் சிறந்தவனாக இருப்பதையே குறிக்கிறது. கென்னடி மற்றும் அவரைப் போன்றவர்களின் நியாயம் என்பது, அமெரிக்க ஏகபோக மூலதனத்தின் அடிப்படை நலனுக்காகச் செயல்படுவதே. இதுதான் ஏகாதிபத்திய நியாயம்.

சர்வதேச வர்க்க சக்திகளுக்கிடையிலான பலமின்மை ஏகாதிபத்தி யத்திற்கு மேலும் மேலும் பாதகமாக மாறிக் கொண்டிருக்கும்போதும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கை கள் தொடர்ந்து தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கும்போதும் அமெ ரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அடிக்கடி சமாதானம் என்ற போர்வையின் கீழ் உருமாறிக் கொள்ள வேண்டியுள்ளது.

சமாதானம் பற்றிய வார்த்தை ஜோடனையிலும், சமாதானப் போர்த் தந்திரங்களைக் கையாளுவதிலும் கென்னடி மிகவும் கைதேர்ந் தவர் என்பது உண்மையே. ஆனால் அவருடைய யுத்தக் கொள்கை போன்றே அவருடைய ஏமாற்றுத்தனமான சமாதானக் கொள்கையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ''உலக யுத்தத் தந்திரத்துக்கு'' சேவை செய்வதேயாகும்.

---

1. ஜே. எப். கென்னடிக்கு என். எஸ். குருச்சேவும், எல். அய். பிரஷ்னேவும் அனுப்பிய புத்தாண்டு வாழ்த்துச் செய்தி, இஸ்வெஸ்தியா, ஜனவரி 3, 1963.

கென்னடியின் சமாதானத்திற்கான யுத்த தந்திரம், அமெரிக்க ஏகாதிபத்திய 'சட்டம் மற்றும் நீதியின்படி உலகம் முழுவதையும்' 'சுதந்திர தேசங்களின் சமூகமாக' ஒன்றுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

கென்னடியின் 'சமாதானத்திற்கான யுத்த தந்திரத்தின்' முக்கிய அம்சங்கள் வருமாறு:

—ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்காவில் சமாதான முறைகளில் அமெரிக்காவின் புதிய காலனியத்தை வளர்ப்பது.
பிற—ஏகாதிபத்திய மற்றும் முதலாளித்துவ நாடுகளில் சமாதான முறைகளில் ஊடுருவி ஆதிக்கம் செலுத்துவது.

—யூகோஸ்லாவியாவின் ''சமாதான பரிணாமப்'' பாதையை மற்ற சோசலிச நாடுகளும் மேற்கொள்ளுமாறு சமாதான முறைகளில் தூண்டுவது.

—உலக மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை சமாதான முறைகளில் வலுவிழக்கச் செய்து முறியடிப்பது.

கென்னடி சமீபத்தில் அய்க்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத்தில் ஆற்றிய உரையில் அமெரிக்காவுக்கும் ரசியாவுக்கும் இடையிலான சமாதானத்திற்குப் பின்வரும் நிபந்தனைகளை ஆணவத்துடன் அறிவித்தார்.

1) ஜெர்மன் ஜனநாயக குடியரசு மேற்கு ஜெர்மனியுடன் இணைக்கப்பட வேண்டும்.

2) சோசலிச கியூபா நீடித்திருக்க அனுமதிக்கக் கூடாது.

3) கிழக்கு அய்ரோப்பாவிலுள்ள சோசலிச நாடுகளுக்கு ''சுதந்திர வாய்ப்பு'' வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் இந்த நாடுகளில் மீண்டும் முதலாளித்துவம் நிலைநாட்டப்பட வேண்டும்.

4) ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் தேசங்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு சோசலிச நாடுகள் ஆதரவு அளிக்கக் கூடாது.

தங்கள் நோக்கங்களை சாதித்துக் கொள்வதற்கு எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் 'சமாதான முறைகளை' கையாள்வது ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் காலனியவாதிகளின் வழக்கமான தந்திரமாகும்.

தங்கள் ஆட்சியை நீடிக்கச் செய்யவும், அந்நிய நாடுகளில் தங்கள் நலம் பேணவும், பிற்போக்கு வர்க்கங்கள் எப்போதும் இரண்டு தந்திரங்களைக் கையாளுகின்றன. ஒன்று, பாதிரியார் உருவத்தில் ஏமாற்றும் தந்திரம். மற்றொன்று கொலைகாரன் வடிவில் ஒடுக்கும் தந்திரம். ஏகாதிபத்தியம், தனது சமாதானம் பற்றிய ஏமாற்றுக் கொள்கையையும், யுத்தக் கொள்கையையும் ஒன்றையொன்று வலுவூட்டுவதற்குப் பயன்படுத்துகிறது. ஒன்று இன்னொன்றிற்கு உதவி புரிகிறது. அமெரிக்க ஏகபோக மூலதனத்தின் பிரதிநிதியான கென்னடியின் நியாயம், இந்த இரு தந்திரங்களையும் மேலும் சூழ்ச்சிகரமாகப் பயன்படுத்துவதன் மூலமே வெளிப்பட முடியும்.

வன்முறையே எப்போதும் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களின் முதன்மையான தந்திரமாகும். பாதிரியார் போன்ற வேடம் ஒரு துணைப் பங்கையே ஆற்றுகிறது. ஏகாதிபத்தியங்கள் தங்கள் செல்வாக்குப் பிரதேசங்களை உருவாக்குவதற்குத் தங்கள் பலத்தில்தான் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். கென்னடி இக்கருத்தை நன்றாகத் தெளிவுபடுத்தியுள்ளார். அவர் கூறினார்: ''இறுதியில் நிலைமைகள் வேறுவிதமாக மாறினால் நமது நாட்டிற்காகப் போராடத் தயாராக இருப்பதே சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான ஒரே வழி''[1] என்றும் அவர் கூறினார். அமெரிக்கா தான் விரும்பும் எந்த ஒரு யுத்தத்தையும்-பொதுவான யுத்தமோ அல்லது வரையறுக்கப்பட்ட யுத்தமோ; அணு ஆயுத யுத்தமோ அல்லது பழைமையான யுத்தமோ; பெரியதோ அல்லது சிறியதோ—எதை வேண்டுமானாலும் நடத்துவதற்கு ஏற்ற ''பல்வேறு திறமைகள் படைத்த இராணுவப் படைகளை'' விரைந்து திரட்டுவதையும், எல்லா வகையிலும் செயலாற்றும் திறனை பலப்படுத்துவதையும் கருத்தில் கொண்டு, ''நெளிவுசுழிவான யுத்த தந்திரத்தை'' கென்னடி தான் பதவியேற்ற காலம் முதல் பின்பற்றி வருகிறார். கென்னடியின் இந்த வெறித்தனமான திட்டம் அமெரிக்காவின் இராணுவ விரிவாக்கத்தையும் அதன் யுத்த தயாரிப்புகளையும் என்றுமில்லாத அளவிற்கு அதிகரிக்கச் செய்கிறது.

அமெரிக்காவின் அதிகாரபூர்வ பிரசுரங்களில் உள்ள பின்வரும் உண்மைகளைப் பார்ப்போம்.

1. அமெரிக்க அரசாங்கத்தின் இராணுவச்செலவு 1960-ம் நிதி ஆண்டில் 46,700 மில்லியன் டாலர்களாக இருந்தது. 1964-ம் நிதி ஆண்டில்

---

1. ஜே. எப். கென்னடி, முன்னாள் இராணுவ வீரர்கள் தினத்தின் எட்டாவது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை, நவம்பர் 11, 1961.

60,000 மில்லியன் டாலராக உயர்ந்திருக்கிறது. இது சமாதான காலத்தில் இதுவரை கண்டிராததும், கொரியப் போர்க் காலத்தில் இருந்ததை விட அதிகமானதுமான தொகை ஆகும்.

2. கென்னடி அண்மையில் வெளியிட்ட அறிக்கையின்படி கடந்த இரண்டு ஆண்டுகளில் அமெரிக்காவின் கேந்திரப் படைப்பிரிவுகளின் ஆயுதங்களின் எண்ணிக்கை 100சதவீதம் அதிகரித்திருக்கிறது; யுத்தத்திற்குத் தயாராகியுள்ள இராணுவப் பிரிவுகளின் எண்ணிக்கை 45 சதவீதம் அதிகரித்திருக்கிறது; கொள்முதல் செய்யப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை 175 சதவீதம் அதிகரித்துள்ளது; ''சிறப்பு கொரில்லா மற்றும் எதிர்க் கிளர்ச்சிப் படைகள்''[1] சுமார் அய்ந்து மடங்கு அதிகரித்துள்ளன.

3. ரசிய மற்றும் பிற சோசலிச நாடுகளுக்கு எதிரான அணுஆயுதப் போர் குறித்த திட்டங்களை அமெரிக்காவின் கூட்டு யுத்த தந்திர இலக்குத் திட்டக்குழு (Joint Stratigic target Planning Staff) வகுத்துள்ளது. அமெரிக்க பாதுகாப்புத் துறை செயலாளர் ராபர்ட் மெக்நமாரா இந்தஆண்டின் துவக்கத்தில் கூறினார், ''...கருத்தில் கொண்டுள்ள காலம் முழுவதும், ரசிய நாட்டிலுள்ள 'மென்மையான' (தரைமேல் உள்ள) மற்றும் 'பாதி கடினமான' (பாதியளவு பாதுகாப்புடைய) இராணுவ இலக்குகளையும், முற்றிலும் கடினமாக்கப்பட்ட ஏவுகணைத் தளங்களையும் அழிக்கும் வல்லமையை நாம் பெற்றிருக்கிறோம்; மேலும் நகரங்கள் மற்றும் ஆலைகள் உள்ள பகுதிகளை அழிக்கக்கூடிய சக்தியை நாம் உடனே பயன்படுத்தவும் முடியும்; அல்லது எதிர்காலத்தில் பயன் படுத்தும் பொருட்டு சேமித்து வைக்க முடியும்''.[2]

அமெரிக்கா தன் அணு ஆயுத ஏவுகணைத் தளங்களை சோசலிச முகாமுக்கு எதிராக வலுப்படுத்தியுள்ளது. மேலும், ஏவுகணைகளைக் கொண்ட அணு ஆயுத நீர்மூழ்கிப் போர்க் கப்பல்களை தொலை தூரத் தளங்களில் நிறுத்தி வைப்பதை வலுப்படுத்தியுள்ளது.

அதே சமயத்தில் அமெரிக்காவின் கட்டளைப்படி செயல்படும் நேட்டோ (NATO) அணியின் துருப்புகள் இந்த வருடம் கிழக்கே நெருங்கிச் சென்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு மற்றும் செக்கோஸ்லோவாகியாவின் எல்லைகளை நெருங்கியுள்ளது.

4. கென்னடியின் நிர்வாகம் ஆசியா, லத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்காவில் உள்ள தன் இராணுவத் தளங்களை மேலும் பலப்படுத்தி

---

1. ஜே.எப். கென்னடி, ஜனநாயக் கட்சியின் நிதி திரட்டும் விருந்தில் ஆற்றிய உரை, அக்டோபர் 30, 1963.

2. ஆர். எஸ். மெக் நமாரா, அமெரிக்கப் பிரதிநிதிகள் அவையின் ஆயுதத்துறைக் கமிட்டியின் முன் தந்த அறிக்கை, ஜனவரி 30,1963

யுள்ளது. மேலும், அங்குள்ள மக்களின் புரட்சிகர இயங்கங்களைச் சமாளிப்பதற்காகத் தரையிலும், கடலிலும், வானத்திலும் செயல்படும் தன் ''தனிச் சிறப்புப் படைகளை' விஸ்தரிக்கப் பெருமுயற்சி எடுத்துள்ளது. அமெரிக்கா தன் ''சிறப்புப் போர்முறை''யின் சோதனைக் களமாக தென் வியட்னாமை மாற்றியுள்ளது. அங்குள்ள தன் துருப்புகளின் எண்ணிக்கையை 16,000-மாக உயர்த்தியுள்ளது.

5. அதன் யுத்தக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தியுள்ளது; யுத்தங்களைத் தூண்டுவதற்காக உலகில் உள்ள எந்த பகுதிக்கும் உடனே செல்லக்கூடியதும் அமைதிக் காலங்களில் எப்போதும் யுத்தத்திற்குத் தயார் நிலையிலுள்ளதும் தரை மற்றும் விமானப் படைகளை கட்டுப்படுத்தக் கூடியதுமான 'அமெரிக்க தாக்குதல் பிரிவை' (U.S. Strike Command) நிறுவியுள்ளது. பூமிக்கு அடியிலும் நிலப்பரப்பிலும் தேசிய இராணுவப் பிரிவு மையங்களை நிறுவியுள்ளது. விமானங்களிலிருந்து செயல்படும் அவசர கால ஆகாயப் படைப் பிரிவுத் தளத்தை (Emergency Airborne Command Post) யும், போர்க் கப்பல்களிலிருந்து செயல்படும் அவசர காலக்கடல் பிரிவுத் தளத்தையும் (Emergency Sea Command Post) நிறுவியுள்ளது.

இந்த உண்மைகள், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளே நவீன காலத்தின் கொடூரமான இராணுவ வெறியர்கள் என்பதையும், ஒரு புதிய உலக யுத்தத்திற்குத் திட்டமிட்டுவரும் கொடூரமான சதிகாரர்கள் என்பதையும், உலக அமைதியின் மிகக் கொடிய பகைவர்கள் என்பதையும் மெய்ப்பிக்கின்றன.

குருச்சேவ் பைபிள் வாசித்து பஜனை பாடியபோதிலும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அழகிய தேவதைகளாக மாறவில்லை என்பதும், குருச்சேவ் சாம்பிராணி கொளுத்தி பிரார்த்தனை செய்தபோதிலும் அவர்கள் இரக்க குணமுள்ள புத்தர்களாக மாறவில்லை என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது. குருச்சேவ் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு சேவை செய்ய எவ்வளவுதான் கடினமாக முயன்றபோதிலும் அவர்கள் எந்தவித சிறு பாராட்டுதலையும் வெளிப்படுத்தவில்லை. அவர்கள் தங்களுடைய எண்ணற்ற ஆக்கிரமிப்பு மற்றும் யுத்த நடவடிக்கைகள் மூலம் தங்களின் சமாதான வேடங்களை அம்பலப்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு அவர்கள் தொடர்ந்து குருச்சேவின் முகத்தில் அறைந்து ஏகாதிபத்தியத்தை ஜோடனை செய்யும் குருச்சேவின் கேலிக்குரிய கொள்கைகளின் ஓட்டாண்டித்தனத்தை வெளிப்படுத்துகிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்காக வக்காலத்து வாங்குபவர்களின் நிலைமை உண்மையில் பரிதாபத்திற்குரியதே.

புதிய உலக யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறு பற்றிய பிரச்சினை

அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள் ஒரு புதிய உலக யுத்தத்திற்கு சுறுசுறுப்புடன் தயாரிப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதும், அத்தகைய யுத்தத்துக்கான அபாயம் நிலவுகின்றது என்பதும் உண்மையே. நாம் இந்த உண்மையை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். ஆனால் ஒரு புதிய உலக யுத்தம் தடுக்கப்பட முடியுமா?

இக்கேள்வி குறித்த சீனக் கம்யூனிஸ்டுகளின் கருத்து எப்போதும் மிகத் தெளிவானதாக இருந்து வந்திருக்கிறது.

இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு, தோழர் மாசேதுங் யுத்தத்துக்குப் பிந்திய சர்வதேச நிலைமையை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து, ஒரு புதிய உலக யுத்தம் தடுக்கப்பட முடியும் என்ற கருத்தையும் முன்வைத்தார்.

1946-ல் அன்னா லூயி ஸ்ட்ராங் என்ற அமெரிக்க பத்திரிகை நிருபருக்கு அளித்த பிரபலமான பேட்டியில் அவர் கூறினார்:

''இரண்டாவது உலக யுத்தம் முடிவு பெற்ற சில நாட்களிலேயே அமெரிக்கப் பிற்போக்குவாதிகள் அமெரிக்க-ரசிய யுத்தம் பற்றி உரக்கப் பறைசாற்றுவதும், முடைநாற்றம் வீசும் சூழ்நிலையை உருவாக்கியிருப்பதும், நம்மை அவர்களின் உண்மையான நோக்கம் பற்றி அறிந்து கொள்ளக் கட்டாயப்படுத்துகின்றது. அவர்கள் ரசிய எதிர்ப்பு முழக்கத்தின் போர்வையில் அமெரிக்காவிலுள்ள தொழிலாளர்களையும் ஜனநாயக வட்டாரங்களையும் மூர்க்கத்தனமாகத் தாக்குகிறார்கள் என்பதும், அமெரிக்க வெளிநாட்டு விஸ்தரிப்புக்கு இலக்கான நாடுகளை அமெரிக்காவின் சார்பு நாடுகளாக மாற்றுகின்றனர் என்பதும் வெளிப்படையாகி வருகிறது. அமெரிக்காவிலுள்ள மக்களும் அமெரிக்க ஆக்கிரமிப்பினால் அச்சுறுத்தப்படும் நாடுகளில் உள்ள மக்களும் இணைந்து அமெரிக்க பிற்போக்குவாதிகளின் தாக்குதல்களையும், இந்த நாடுகளில் உள்ள அவர்களின் ஏவல் நாய்களையும் எதிர்த்துப் போராட வேண்டும் என நான் நினைக்கிறேன். ஒரு மூன்றாவது உலக யுத்தத்தை இந்தப் போராட்டத்தின் வெற்றியின் மூலமாக மட்டுமே தவிர்க்க முடியும்; இல்லையெனில் அது தவிர்க்க முடியாத ஒன்றாகும்''[1]

---

1. *மாசேதுங், தேர்வுநூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப., பீகிங், 1961, தொகுதி 4, பக்கம்-100.*

தோழர் மாவோவின் இந்தக் கருத்து அந்நாளில் நிலவிய சர்வ தேச சூழ்நிலை பற்றிய அவநம்பிகையாளர்களின் மதிப்பீட்டிற்கு எதிராக எழுப்பப்பட்டது. அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய வாதிகள் மற்ற நாடுகளிலுள்ள பிற்போக்குவாதிகளுடன் இணைந்து ரசியாவிற்கு எதிரான, கம்யூனிசத்துக்கு எதிரான, மக்களுக்கு எதிரான தங்களின் நடவடிக்கைகளைத் தினந்தோறும் தீவிரப்படுத்திக் கொண்டிருந்தனர்.

''அமெரிக்காவுக்கும் ரசியாவுக்கும் இடையிலான யுத்தம் தவிர்க்க முடியாதது'' என்றும், ''மூன்றாவது உலகப்போர் வெடிப்பது தவிர்க்க முடியாதது'' என்றும் எக்காளமிட்டுக் கொண்டிருந்தனர். சியாங்-கே-ஷேக்-பிற்போக்குவாதிகள் சீன மக்களை அச்சுறுத்துவதற்காக இதற்கு மிகப்பெரிய விளம்பரம் அளித்தார்கள். இந்த அச்சுறுதலுக்கு அஞ்சிய சில தோழர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவோடு சியாங்-கே-ஷேக் பிற்போக்குவாதிகள் மேற்கொண்ட ஆயுதம் தாங்கிய தாக்குதலை எதிர்கொண்டபோது நம்பிக்கை இழந்தார்கள். எதிர்ப்புரட்சி யுத்தத்தைப் புரட்சி யுத்தத்தால் எதிர்க்கத் துணிவிழந்தார்கள். ஆனால்,தோழர் மாவோ இதிலிருந்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தார். உலக பிற்போக்குக்கு எதிராக உறுதியான, செயலூக்கம் மிக்க போராட்டங்களை நடத்துவதன்மூலம் ஒரு புதிய உலகயுத்தத்தை தவிர்க்கமுடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

அவரது விஞ்ஞானபூர்வமான ஆய்வு சீனப் புரட்சியின் மாபெரும் வெற்றியின் மூலம் நிரூபிக்கப்பட்டது.

சீனப்புரட்சியின் வெற்றி சர்வதேச வர்க்க சக்திகளின் பலாபல நிலையில் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. 1950 ஜூனில் தோழர் மாவோ சுட்டிக்காட்டினார்: ''ஏகாதிபத்திய முகாமின் யுத்தம் பற்றிய அச்சுறுத்தல் தொடர்ந்து நிலவுகிறது. மூன்றாவது உலக யுத்தத்திற்கான சாத்தியக் கூறும் தொடர்ந்து நிலவுகிறது. ஆனால், யுத்த அபாயத்தை முறியடிக்கும் சக்திகளும், மூன்றாவது உலக யுத்தத்தைத் தடுக்கும் சக்திகளும் வேகமாக வளர்ந்து வருகின்றன. உலகின் பரந்துபட்ட மக்களின் அரசியல் உணர்வு மட்டம் உயர்ந்து வருகிறது. சமாதானத்திற்காகவும்,ஜனநாயகத்திற்காகவும் ஒன்றுபடுத்தப்படக்கூடிய அனைத்து சக்திகளையும் உலகில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள், தொடர்ந்து ஒன்று திரட்டி அவற்றை வலுப்படுத்துமானால் ஒரு புதிய உலகயுத்தம் தவிர்க்கப்படமுடியும்''[1] என்றார்.

---

1. மாசேதுங், ''சீனாவின் நிதி மற்றும் பொருளாதார நிலைமைகளில் மேம்பாடு அடைவதற்கான அடிப்படை மாற்றத்திற்கு போராடுங்கள்'' ரென்மின் ரிபாவோ, ஜூன் 13, 1950.

1957 நவம்பரில் நடந்த சகோதரக்கட்சிகளின் கூட்டத்தில், தோழர் மாவோ இரண்டாவது உலகப் போருக்குப் பின் சர்வதேச உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்தார். சர்வதேச சூழ்நிலை ஒரு புதிய திருப்புமுனையை அடைந்திருப்பதைச் சுட்டிக்காட்டினார். ''கீழைக்காற்று, மேலைக்காற்றின் மீது செல்வாக்குப் பெற்றுள்ளது'' என்ற சீன நாவலின் ஓர் உருவகத்தைச் சுட்டிக்காட்டி சூழ்நிலையை அவர் தெளிவாக விளக்கினார்.

''கீழைக்காற்று மேலைக்காற்றின் மீது செல்வாக்குப் பெற்றுள்ளது என்பதை இன்றைய சூழ்நிலையின் தனிச்சிறப்பு என நான் நம்புகிறேன். அதாவது, சோசலிச சக்திகள், ஏகாதிபத்திய சக்திகளை விட மிக அதிக வலிமை பெற்றிருக்கின்றன''[1] என்று அவர் கூறினார்.

அவர் சர்வதேச வர்க்க உறவுகளைப் பற்றிய ஆய்வின் மூலம் இந்த முடிவுக்கு வந்தார். சோசலிச நாடுகள், சர்வதேச தொழிலாளி வர்க்கம், கம்யூனிஸ்ட் கட்சிகள், ஒடுக்கப்படும் மக்கள் மற்றும் தேசங்கள், அமைதியை விரும்பும் மக்கள் மற்றும் நாடுகள் ஆகியவற்றையே 'கீழைக் காற்று' என்ற பிரிவில் அவர் தெளிவாகக் குறிப்பிட்டார். மறுபுறம் யுத்தத்தை உருவாக்கும் ஏகாதிபத்தியம் மற்றும் பிற்போக்கு சக்திகளை 'மேலைக்காற்று' என வரையறுத்தார். இந்த உருவகத்தின் அரசியல் பொருள் மிகத் தெளிவானதும் திட்டவட்டமானதுமாகும். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் இந்த உருவகத்தை பூகோளரீதியான அல்லது இன ரீதியான அல்லது வானிலையியல் ரீதியான கருத்தாகத் திரிப்பது, அவர்கள் ஏகாதிபத்திய வாதிகளை மகிழ்விப்பதற்காகவும், அய்ரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் தேசிய ஆதிக்க வெறியைத் தூண்டுவதற்காகவும், தங்களை மேற்குப் பிரிவில் குறுக்கிக் கொள்ள விரும்புகிறார்கள் என்பதையே காட்டுகிறது.

''கீழைக்காற்று மேலைக் காற்றின் மீது செல்வாக்குப் பெற்றுள்ளது'' என்று மாவோ குறிப்பிட்டதன் முக்கிய நோக்கம் ஒரு புதிய உலக யுத்தத்தைத் தவிர்க்க முடியும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் வளர்ந்து வருவதையும், சோசலிச நாடுகள் அமைதியான சூழ்நிலையில் தங்கள் கட்டுமானப் பணியைத் தொடர இயலும் என்பதையும் சுட்டிக்காட்டுவதேயாகும்.

மாவோவின் இக்கருத்துக்கள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முரணற்ற கண்ணோட்டங்களாக இருந்திருக்கின்றன, இப்போதும் இருக்கின்றன.

---

1. தோழர் மாசேதுங், ''ஏகாதிபத்தியம் மற்றும் அனைத்து பிற்போக்குவாதிகளும் காகிதப் புலிகளே'' - ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப., பீகிங், 1963, பக்கம் 35.

''சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு புதிய உலக யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான சாத்தியப்பாட்டில் நம்பிக்கை இல்லை''[1] எனக் குற்றம் சாட்டும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், வேண்டுமென்றே திட்டமிட்டுப் பொய் புனைகிறார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

மேலும் ஒரு மூன்றாவது உலக யுத்தத்தை தவிர்ப்பதற்கான சாத்தியப்பாடு பற்றியஆய்வை பலஆண்டுகளுக்கு முன்பாகவே மார்க்சிய-லெனினியவாதிகள் முன்வைத்தார்கள் என்பதும், அது ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் முதன் முதலாக முன்வைக்கப்படவில்லை என்பதும், அது குருச்சேவின் ''படைப்பு'' அல்ல என்பதும் தெளிவாகிறது.

அப்படியானால், குருச்சேவ் எதையும் உருவாக்கவில்லை என்பது உண்மையா? இல்லை, அவர் சிலவற்றைப் படைத்தார். துரதிர்ஷ்டவசமாக அந்த படைப்புகள் எந்த வகையிலும் மார்க்சிய-லெனினிய வகைப்பட்டதாயில்லாமல் திரிபுவாதப் படைப்புகளாக உள்ளன.

முதலாவதாக, குருச்சேவ் ஒரு புதிய உலக யுத்தத்துக்கான சாத்தியக்கூறு இல்லை என்றும் ஒரு புதிய உலக யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறு மட்டுமே இன்றுள்ள ஒரே சாத்தியக்கூறு என்றும் தான்தோன்றித்தனமாக வியாக்கியானம் செய்கிறார்.

மார்க்சிய—லெனினியவாதிகள், ஒரு புதிய உலக யுத்தத்தைத் தவிர்க்கும் சாத்தியக்கூறு பற்றிக் குறிப்பிடும் அதே வேளையில், ஏகாதிபத்தியம் ஒரு புதிய உலக யுத்தத்தை கட்டவிழ்த்துவிடுவதற்கான சாத்தியக்கூறு இருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கருதுகிறார்கள். இந்த இரு சாத்தியக் கூறுகளையும் சுட்டிக்காட்டி சரியான கொள்கைகளைப் பின்பற்றி இந்த இரு நிகழ்வுகளுக்கும் தயார்ப்படுத்திக் கொள்வதன் மூலமே, உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டங்களை நடத்துவதற்கு, பொதுமக்களை நாம் மிகுந்த ஆற்றலுடன் திரட்ட இயலும். இதன் மூலமாக மட்டுமே, உலக மக்களின் மீது ஏகாதிபத்தியம் உலக யுத்தத்தை திணிக்க நேர்ந்தால் சோசலிச நாடுகளும் அவற்றின் மக்களும், சமாதானம் விரும்பும் நாடுகளும் அவற்றின் மக்களும் எதிர்பாராத நிலையிலும் முற்றிலும் தயாரற்ற நிலையிலும் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்க முடியும்.

எனினும் குருச்சேவும் மற்றவர்களும் ஏகாதிபத்தியவாதிகள், ஒரு புதிய யுத்தத்திற்காகச் செய்துவரும் சதித் திட்டங்களைப் பற்றிய

---

1. அனைத்து கட்சி அமைப்புகளுக்கும் சோவியத்யூனியனின் அனைத்து கம்யூனிஸ்டுகளுக்கும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதம், ஜூலை 14, 1963.

அபாயத்தை அம்பலப்படுத்த மறுக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், ஏகாதிபத்தியம் உண்மையில் சமாதானத்தை விரும்புவதாக மாறியிருக்கிறது. இது ஏகாதிபத்தியவாதிகள் பொது மக்களை ஏய்ப்ப தற்கும், மக்களின் போராட்ட மனப்பான்மையை வஞ்சகமாக அழிப்ப தற்கும், ஏகாதிபத்தியவாதிகளின் வஞ்சகத் திட்டத்தால் உருவாகும் யுத்த அபாயத்திற்கு எதிரான மக்களின் விழிப்புணர்வை மழுங்கடிக்கச் செய்வதற்கும் துணை புரிவதாகும்.

இரண்டாவதாக, ஏகாதிபத்தியம் நீடிக்கும்வரை யுத்தம் தவிர்க்க முடியாத ஒன்று என்ற லெனினியக் கூற்று காலங்கடந்ததாகி விட்டது எனக் கொண்டு, ஒரு புதிய உலக யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறு என்பதை அனைத்து யுத்தங்களையும் தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறு என்பதாகத் தான்தோன்றித்தனமாக வியாக்கியானம் செய்தார் குருச்சேவ்.

ஒரு புதிய உலக யுத்தத்தை தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறு என்பது ஒரு விசயம்; புரட்சிகர யுத்தம் உள்ளிட்ட அனைத்து யுத்தங்களையும் தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறு என்பது இன்னொரு விசயம். இவை இரண்டையும் குழப்புவது முற்றிலும் தவறானது.

ஏகாதிபத்தியம் நிலவும் வரையிலும், மனிதனை மனிதன் சுரண்டிப் பிழைக்கும் முறை நிலவும் வரையிலும் போருக்கான விளைநிலம் இருக்கிறது. இந்த, புறநிலை விதியை லெனின் ஏராளமான விஞ்ஞானபூர்வ ஆய்வுகளிலிருந்து கண்டறிந்தார்.

1952-ல் ஸ்டாலின், ஒரு புதிய உலக யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறை சுட்டிக் காட்டிய பின்பு ''யுத்தத்தின் தவிர்க்க முடியாத தன்மையை ஒழிப்பதற்கு ஏகாதிபத்தியத்தை ஒழிப்பது அவசியம்''[1] என்றார்.

லெனினும் ஸ்டாலினும் சரியாகவே சொன்னார்கள். குருச்சேவ் தான் தவறாகச் சொல்கிறார்.

இரு உலக யுத்தங்களைக் கட்டவிழ்த்துவிடுவதில் வெற்றி பெற்ற ஏகாதிபத்தியவாதிகள் எண்ணற்ற பிறவகை யுத்தங்களையும் நிகழ்த்தி உள்ளனர் என்பதை வரலாறு காட்டுகிறது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் உலகத்தின் பல பகுதிகளில் குறிப்பாக ஆசியா,

---

1. *ஜே. வி. ஸ்டாலின், சோவியத் ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள், ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப., மாஸ்கோ, 1952, பக்கம் 41.*

ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள் தங்களின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கையினால் இடைவிடாத பல பகுதி யுத்தங்களையும் (Local Wars) எல்லா வகைப்பட்ட ஆயுதம் தாங்கிய கலகங்களையும் நடத்தியுள்ளனர்.

தேசிய சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட தேசங்கள், நாடுகள் மீது இரத்தவெறி கொண்ட அடக்குமுறை நடத்த ஏகாதிபத்தியவாதிகள், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் துருப்புக்களை அனுப்புவது, அல்லது தங்கள் அடிவருடிகளைப் பயன்படுத்துவது நீடிக்கும் வரை தேசிய விடுதலை யுத்தங்கள் தவிர்க்க முடியாதவை என்பது தெளிவு.

லெனின் கூறினார்: ''ஏகாதிபத்தியத்தின் கீழ் தேசிய யுத்தங்களுக்கான அனைத்து சாத்தியக்கூறுகளையும் மறுப்பது, கோட்பாட்டு ரீதியாகவும் வரலாற்று பூர்வமாகவும் தவறாகும் என்பது தெளிவு. இது நடைமுறையில் அய்ரோப்பிய தேசிய வெறிக்கு ஒப்பானது.''[1]

முதலாளித்துவ பிற்போக்குவாதிகள் தங்கள் நாட்டு மக்களை ஆயுத பலத்தின் மூலம் அடக்கும் போது, மக்களின் புரட்சிகர உள்நாட்டு யுத்தங்கள் தவிர்க்க முடியாதவை என்பதும் தெளிவாகிறது.

லெனின் கூறினார்: ''உள்நாட்டு யுத்தங்களும் கூட யுத்தங்களே. வர்க்கப் போராட்டத்தை அங்கீகரிக்கின்றவர்கள் எவரும் உள்நாட்டு யுத்தத்தை அங்கீகரிக்க தவறமாட்டார்கள். அனைத்து வர்க்க சமுதாயத்திலும் உள்நாட்டு யுத்தங்கள் இயற்கையானவையென்பதையும், சில நிலைகளில் இவை வர்க்கப் போராட்டத்தின் தவிர்க்க முடியாத தொடர்ச்சி, வளர்ச்சி மற்றும் தீவிரமடைதலாக உள்ளன என்பதையும் அங்கீகரிக்கமாலிருக்க முடியாது. எல்லா மகத்தான புரட்சிகளும் இதை மெய்ப்பித்துள்ளன. உள்நாட்டு யுத்தத்தை மறுதலிப்பது அல்லது அதை மறப்பது என்பது தீவிரமான சந்தர்ப்பவாதத்தில் மூழ்குவதையும் சோசலிசப் புரட்சியைக் கைகழுவி விடுவதையும் குறிக்கும்.''[2]

வரலாற்றின் மாபெரும் புரட்சிகள் அனைத்தும் பெரும்பாலும் புரட்சிகரப் போர்களின் மூலமே நடத்தப்பட்டன. அமெரிக்க சுதந்திர

---

1. வி. இ. லெனின், ''பாட்டாளிவர்க்கப் புரட்சியின் போர்த் திட்டம்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப. மாஸ்கோ, 1952, தொகுதி 1, பகுதி 2, பக்கம் 571.
2. மேற்படி நூல்.

போரும், அதன் உள்நாட்டுப் போரும் இதற்கு சான்று. பிரெஞ்சுப் புரட்சி மற்றொரு சான்று. ரசியப் புரட்சியும், சீனப்புரட்சியும் இதற்கு சான்றுகளே. வியட்னாம், கியூபா, அல்ஜீரியா ஆகிய புரட்சிகளும் கூட பிரசித்திப்பெற்ற சான்றுகளே.

1871-ல் முதல் அகிலம் நிறுவப்பட்ட 7-வது ஆண்டு விழாவை ஒட்டிய நிகழ்ச்சியில் பாரிஸ் கம்யூன் படிப்பினைகளைத் தொகுத்து கூறும் போது மார்க்ஸ் வர்க்க ஆதிக்கம் மற்றும் வர்க்க ஒடுக்குமுறையை அகற்றுவதற்கான சூழ்நிலைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் சொன்னார்:

''...அத்தகைய மாற்றம் முழுமையடைவதற்கு முன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இன்றியமையாதது. அதற்கு பாட்டாளி வர்க்க இராணுவம் முதல் தேவை. உழைக்கும் வர்க்கம் தன் விடுதலைக்கான உரிமையைப் போர்க்களத்தில் பெறவேண்டும்.''[1]

1938-ல் ரசிய, சீனப் புரட்சிகளின் படிப்பினைகளைப் பற்றிய விவாதத்தின் போது, மார்க்சிய--லெனினியத்தின் அடிப்படையில், ''துப்பாக்கிக்குழலில் இருந்துதான் அரசியலதிகாரம் பிறக்கிறது'' என்ற புகழ்மிக்க ஆய்வுக்கருத்தை தோழர் மாவோ முன்வைத்தார். இன்று இந்த ஆய்வுக்கருத்தும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் எதிர்ப்பிற்கு இலக்காக மாறியுள்ளது. இதுவே சீனா 'போரை விரும்பு கிறது' என்பதற்கான ஆதாரம் என்கிறார்கள் அவர்கள்.

மதிப்பிற்குரிய நண்பர்களே, உங்களுடைய இதுபோன்ற அவதூறு கள் 25 ஆண்டுகளுக்கு முன்பாகவே தோழர் மாவோவினால் மறுக்கப் பட்டுள்ளன.

''அரசு பற்றிய மார்க்சியக் கோட்பாட்டின்படி, அரசு அதிகாரத்தின் முக்கியமான உறுப்பு இராணுவமாகும். அரசு அதிகாரத்தைக்கைப்பற்ற வும், தக்க வைத்துக்கொள்ளவும் விரும்புபவர்கள் வலிமையான இராணு வத்தைப் பெற்றிருக்கவேண்டும். சிலர் நம்மை ''யுத்தத்தின் சர்வ வல்லமை''க்கு வக்காலத்து வாங்குபவர்கள் என்று கேலி செய்கிறார்கள்; ஆம்... நாம் புரட்சிகர யுத்தத்தின் சர்வ வல்லமைக்காக வக்காலத்து வாங்குகிறவர்கள்தான். அது நல்லதுதான். தவறானதல்ல. அதுதான் மார்க்சியம்.''[2]

---

1. *மார்க்ஸ், எங்கெல்ஸின் படைப்புகள், ஜெர்மன்பதிப்பு, டைட்ஸ் வெர்லாக், பெர்லின், 1962, தொகுதி, 17 பக்கம் 423.*
2. *மாசேதுங், ''போர் மற்றும் யுத்ததந்திரம் பற்றிய பிரச்சினைகள்'' தேர்வு செய்த இராணுவப் படைப்புகள், ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப, பீகிங், 1963, பக்கம் 273.*

தோழர் மாவோவின் கூற்றில் என்ன தவறு இருக்கிறது? கடந்த சில நூறு ஆண்டுகளாக நடைபெற்ற முதலாளித்துவ மற்றும் பாட்டாளி வர்க்கப்புரட்சிகளின் வரலாற்று பூர்வமான அனுபவத்தை மறுப்பவர்கள் தான் மாவோவின் இக்கருத்தை மறுப்பார்கள்.

சீனமக்கள் தங்கள் துப்பாக்கிகளைக் கொண்டு, சோசலிச அரசியல் அதிகாரத்தை நிறுவினார்கள். ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் அடிவருடிகளையும் தவிர மற்ற அனைவரும் இது சிறப்பானது என்பதையும் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கும் ஒரு மூன்றாம் உலக யுத்தத்தைத் தடுப்பதற்கும் இது ஒரு முக்கிய சாதனம் என்பதையும் எளிதில் புரிந்துகொள்வார்கள்.

மார்க்சிய—லெனினியவாதிகள் எப்போதும் தங்கள் கருத்துக்களை மூடி மறைக்கமாட்டார்கள். நாங்கள் அனைத்து மக்களின் புரட்சிகரப் போர்களையும் முழு மனதுடன் ஆதரிக்கிறோம். இத்தகைய புரட்சிகரப் போர்கள் பற்றி லெனின் கூறியது போல ''வரலாற்றில் நாமறிந்த அனைத்துப் போர்களிலும் இது ஒன்றுதான் சட்டபூர்வமானது. சரியானது, நியாயமானது, உண்மையிலே மகத்தானது''[1] இதன் காரணமாக நாங்கள் ''போரை விரும்புகிறவர்கள்'' என்று குற்றம் சாட்டப்பட்டால் நாங்கள் உண்மையிலே ஒடுக்கப்பட்ட மக்கள், தேசங்களின் பக்கம் நிற்கிறோம் என்றும், நாங்கள் உண்மையான மார்க்சிய-லெனினியவாதிகள் என்றும் நிருபணமாகின்றன.

ஏகாதிபத்தியவாதிகளும், திரிபுவாதிகளும், போல்ஷ்விக்குகளையும், லெனின், ஸ்டாலின் போன்ற புரட்சிகர தலைவர்களையும் 'போரை விரும்புகிறவர்கள்' என்று எப்போதும் குறைகூறினர். இன்று நாங்களும் அவ்வாறே ஏகாதிபத்தியவாதிகளாலும், திரிபுவாதிகளாலும் அவதூறுக்கு உள்ளாகியிருக்கிறோம் என்பது நாங்கள் மார்க்சிய—லெனினியத்தின் புரட்சிகர பதாகையை உயர்த்திப் பிடித்திருப்பதைக் காட்டுகின்றது.

குருச்சேவும் மற்றவர்களும் அனைத்துப் போர்களையும் தவிர்க்க முடியும் என்ற கருத்தையும், ஏகாதிபத்தியம் நிலவும்போதே ''ஆயுதம் இல்லாத, இராணுவப் படைகள் இல்லாத, போர்கள் இல்லாத உலகை'' உருவாக்க இயலும் என்ற கருத்தையும் தீவிரமாகப் பரப்பி வருகிறார்கள். இது காவுட்ஸ்கியின் 'அதீத ஏகாதிபத்தியம்'என்ற நெடுநாளைக்கு முன்பே ஒட்டாண்டியாகிவிட்ட கோட்பாடேயன்றி வேறொன்றுமில்லை. ஏகாதிபத்தியத்தின் கீழ் நிரந்தர அமைதியை அடைய முடியும் என மக்களை நம்பவைப்பதும் அதன் மூலம் ஏகாதிபத்தியத்தையும் அதன்

1. வி. இ. லெனின், ''புரட்சிகர நூல்கள்'' தொகுப்புகள், ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப, மாஸ்கோ, 1962, தொகுதி 8, பக்கம், 107.

அடிவருடிகளையும் எதிர்த்த புரட்சிகளையும், தேசிய விடுதலைப் போர் களையும் புரட்சிகர உள்நாட்டும்போர்களையும் ஒழிப்பதையும், உண்மை யில் ஒரு புதிய யுத்தத்துக்கான தயாரிப்பில் ஏகாதிபத்தியவாதிகளுக்குத் துணைபோவதும்தான் அவர்களது நோக்கம் என்பது இதிலிருந்து தெளி வாகிறது.

அணு ஆயுதங்கள் பற்றிய நம்பிக்கையும், அணு ஆயுத அச்சுறுத்தலுமே நவீன திரிபுவாதத்தின் கோட்பாட்டு அடிப்படையாகவும் வழி நடத்தும் கொள்கையாகவும் விளங்குகின்றன

அணு ஆயுத போர்க் கருவிகளின் தோற்றம், வர்க்கப் போராட்ட விதிகள் உள்ளிட்ட அனைத்தையும் மாற்றியுள்ளது என்ற கருத்தே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் யுத்தம்—சமாதானம் பற்றிய கோட்பாட்டின் மையக்கருவாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் ''இந்த நூற்றாண்டின் மத்தியில் உருவாக்கப்பட்ட அணு ஆயுதங்களும், ஏவுகணைகளும், யுத்தம் பற்றி முன்பு இருந்த கருத்துக்களை மாற்றி யுள்ளன'' என்கிறது. அவை எந்த வகையில் மாற்றப்பட்டுள்ளன?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், அணு ஆயுதங்களின் தோற் றத்தினால் நீதி யுத்தங்களுக்கும் அநீதி யுத்தங்களுக்கும் இடையிலான வேறுபாடு இல்லாதொழிந்துவிட்டது என்று கருதுகிறார்கள். அவர்கள் ''அணுகுண்டுகள் வர்க்க பேதம் பார்ப்பதில்லை'' என்றும் அணுகுண்டு கள் ஏகாதிபத்தியவாதிகளையும் உழைக்கும் மக்களையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. ஒரு பகுதி தாக்கப்படும்போது, ஒரு ஏகபோக முதலா ளியை அழிக்கும் அதே நேரத்தில் அது, பல இலட்சக்கணக்கான உழைப் பாளர்களையும் கொன்றுவிடுகிறது''[1] என்றும் கூறுகிறார்கள்.

அணு ஆயுதங்களின் தோற்றம் காரணமாக ஒடுக்கப்பட்ட மக்களும், தேசங்களும் புரட்சியைக் கைவிட வேண்டும் என்றும், மக்களின் நியாய மான புரட்சிகரப் போர்களையும் தவிக்க வேண்டும் என்றும், இல்லை யேல் இத்தகைய போர்கள் மனித இனத்தையே அழித்துவிடும் என்றும்,

---

1. அனைத்து கட்சி அமைப்புகளுக்கும், ரசியாவின் அனைத்து கம்யூனிஸ்டுகளுக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி யின் பகிரங்கக் கடிதம், ஜூலை 14, 1963

அவர்கள் கருதுகிறார்கள். ''எந்த ஒரு சிறு 'பகுதி யுத்தமும், ஒரு உலக யுத்தம் என்ற காட்டுத் தீயை மூட்டி விடும்'' எனவும் ''இன்று அணு ஆயுதமற்ற சாதாரணப் போராக உருவெடுக்கும் எந்தவிதமான போரும் சர்வநாசம் விளைவிக்கும் பெரும் அணு ஆயுத ஏவுகணை யுத்தமாக வளர்ச்சி பெறும்''[1] என்றும் கூறுகிறார்கள். இவ்வாறு, ''நாம் நம்முடைய நோவாவின் பேழையை - நம் பூமியை - அழித்து விடுவோம்'' என்கிறார்கள்.

ஏகாதிபத்தியவாதிகளின் அணு ஆயுத அச்சுறுத்தலையும் யுத்த மிரட்டல்களையும் சோசலிச நாடுகள் எதிர்க்கக் கூடாது, மாறாக அதற்கு வளைந்து கொடுக்க வேண்டும் என ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கூறுகிறார்கள். குருச்சேவ் கூறினார்:

''ஏகாதிபத்திய வெறியர்களால் ஒரு அணு ஆயுத உலக யுத்தமானது தொடங்கப்படுமெனில் அது தவிர்க்க முடியாதபடி யுத்தங்களை தோற்றுவிக்கும் முதலாளித்துவ முறையின் விழ்ச்சியில் முடியும் என்பதில் எந்தவித அய்யமும் இல்லை. ஆனால் ஒரு உலக அணு ஆயுத விபரீதத்தால் உலகம் முழுவதும் உள்ள சோசலிச நாடுகளும் சோசலிச இலட்சியமும் பயன்பெற முடியுமா? வேண்டுமென்றே உண்மையைக் காண மறுப்பவர்கள்தான் அவ்வாறு நினைக்க முடியும். மார்க்சிய-லெனினியவாதிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் உலகக் கலாச்சார மையங்களின் இடிபாடுகளின் மேல் அணு ஆயுதங்களினால் நச்சுப்படுத்தப்பட்ட இடிபாடுகளின் மேல் கம்யூனிச நாகரிகத்தை உருவாக்கும் ஆலோசனையை முன்வைக்க முடியாது. பலரைப் பொறுத்தவரை இந்த கிரகத்திலிருந்தே அடியோடு அழிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு சோசலிசம் என்ற பிரச்சினையே இவ்வாறு நீக்கப்பட்டுவிடும் என்பதை கூறத் தேவையில்லை''[2]

சுருக்கமாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் கருத்துப்படி அணு ஆயுங்களின் தோற்றத்துடன் சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளும், முதலாளித்துவ நாடுகளின் பாட்டாளி வர்க்கத்துக்கும், முதலாளி வர்க்கத்துக்கும் இடையே உள்ள முரண்பாடுகளும், ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளும் மறைந்துவிட்டன.

---

1. என். எஸ். குருச்சேவ் ரேடியோ மற்றும் தொலைக்காட்சியில் ஆற்றிய உரை, ஜுன் 15, 1961.
2. என். எஸ் குருச்சேவ், ஜெர்மன் சோசலிஸ்ட் யூனிட்டி கட்சியின் 6-வது காங்கிரசில் ஆற்றிய உரை, ஜனவரி 16, 1963.

இனி உலகில் எந்தவித வர்க்க முரண்பாடுகளும் இல்லை. இன்றைய உலகத்தில் உள்ள அனைத்து முரண்பாடுகளும் ஒரே ஒரு முரண்பாடாக உருமாறிவிட்டது என்று அவர்கள் கருதுகிறார்கள். அதாவது சொல்லிக் கொள்ளப்படும் பொதுவான ஏகாதிபத்திய தேசங்களும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும் மற்றும் தேசங்களும் ஒருபுறம் அவைகளின் முழுமையயான அழிவை மற்றொருபுறமும் கொண்ட அவர்களின் கற்பனை முரண்பாடே அது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைப் பொறுத்தவரையில், மார்க்சிய—லெனினியமும், பிரகடனமும், அறிக்கையும், சோசலிசமும், கம்யூனிசமும் எல்லாம் காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டன.

''ஒருவரின் தலை துண்டிக்கப்பட்ட பிறகு கொள்கைகளால் பயன் என்ன?''[1] என்று பிராவ்தா வெளிப்படையாகப் பேசுகிறது.

இது, ரசியப் புரட்சிகள் மற்றும் அக்டோபர் புரட்சியின் வெற்றிக்காக பிற்போக்குவாதிகளின் கொடுவாளின் கீழ் இறந்த புரட்சியாளர்களையும், பாசிச எதிர்ப்பு போரில் வீரமுடன் உயிர்துறந்த வீரர்களையும் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகவும் தங்கள் நாட்டின சுதந்திரத்துக்காகவும் நடந்த போராட்டத்தில் இரத்தம் சிந்திய தியாகிகளையும் புரட்சிகர நோக்கத்திற்காக நீண்டகாலம் போராடி உயிர்நீத்த வீரத் தியாகிகளையும் முட்டாள்கள் என்று கூறுவதற்கும், கொள்கைகளைக் கடைப்பிடிப்பிடிப்பதற்காக அவர்கள் ஏன் தங்கள் தலைகளை இழந்திருக்க வேண்டும்?

இது முழுக்க முழுக்க ஓடுகாலிகளின் தத்துவமாகும். இது ஓடுகாலிகளின் வாக்குமூலங்களின் மட்டுமே காணப்படக்கூடிய ஒரு வெட்கமற்ற கூற்றாகும்.

இத்தகைய அணுஆயுதப் போலி வழிபாடு மற்றும் ஆணு ஆயுத அச்சுறுத்தல் கோட்பாட்டினால் வழிகாட்டப்படும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், உலக அமைதியைப் பாதுகாப்பதற்கான வழி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிராக நிலவும் அனைத்து சமாதானத்திற்கான சக்திகளையும் உள்ளடக்கிய ஒரு பரந்த அய்க்கிய முன்னணியை கட்டுவதல்ல; மாறாக இரு அணு ஆயுத வல்லரசு நாடுகளான அமெரிக்காவும் ரசியாவும் உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஒத்துழைப்பதேயாகும் என்று கருதுகின்றனர்.

1. ''பகுத்தறிவைத் துறந்துவிட்டு''. பிராவ்தா, ஆகஸ்ட் 16, 1963.

குருச்சேவ், ''நாம் (ரசியாவும், அமெரிக்காவும்) உலகிலேயே மிக வலிமை வாய்ந்த நாடுகள், நாம் சமாதானத்திற்காக இணைந்தால் எந்த யுத்தமும் நடக்காது. பின் எந்தப் பைத்தியக்காரனாவது போரை விரும்பினால் அவனை எச்சரிப்பதற்காக நாம் விரல்களை அசைத்தால் போதும்'' [1] எனக் கூறியிருக்கிறார்.

இதிலிருந்தே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எதிரியை தங்கள் நண்பனாக ஏற்க எவ்வளவு தூரம் சென்றுள்ளனர் என்பது அனைவருக்கும் தெளிவாகிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களின் தவறுகளை மறைப்பதற்காக பொய்களையும் அவதூறுகளையும் கூறி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின், சரியான பாதையைத் தாக்கி வருகிறார்கள். தேச விடுதலைக்கான மக்களின் போர்களுக்கும்,புரட்சிகர உள்நாட்டுப் போர்களுக்கும் ஆதரவு அளிப்பதன் மூலம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு அணு ஆயுத உலக யுத்தத்தைத் தூண்டிவிட விரும்புகிறது என அடித்துக் கூறுகிறார்கள்.

இது ஒரு விநோதமான பொய்.

தேசவிடுதலைப் போர்கள், புரட்சிகர உள்நாட்டுப் போர்கள் உள்ளிட்ட மக்களின் சகல புரட்சிகரப் போராட்டங்களுக்கும் சோசலிச நாடுகள் செயல் ஆர்வம் மிக்க ஆதரவு அளிக்க வேண்டும் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் கருதுகிறது. அவ்வாறு செய்யாமல் இருப்பது பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கடமையைக் கைவிடுவதாகும். அதே நேரத்தில் ஒடுக்கப்பட்ட மக்களும், தேசங்களும் தங்களின் உறுதியான புரட்சிகரப் போராட்டத்தின் மூலம் மட்டுமே விடுதலையைச் சாதிக்க முடியுமேயன்றி வேறு யாரும் அவர்களுக்காக அதனை செய்து கொடுக்க முடியாது என்பதும் எமது கருத்தாகும்.

தேச விடுதலைக்கான மக்கள் போர்களையும், புரட்சிகர உள்நாட்டுப் போர்களையும் ஆதரிப்பதற்கு சோசலிச நாடுகள் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடாது என்றும் அதற்கான தேவை இல்லை என்றும் நாங்கள் எப்போதும் கூறி வந்திருக்கிறோம்.

---

1. *என். எஸ். குருச்சேவ், செப்டம்பர் 5, 1961 அன்று அமெரிக் செய்தியாளர் சி. எல். சல்ஸ்பெர்ஜருக்கு அளித்த பேட்டி, பிராவ்தா, செப்டம்பர் 10, 1961.*

சோசலிச நாடுகள் அணு ஆயுதங்களில் முதன்மைப் பெற்று விளங்க வேண்டும் என்பதையும் நாங்கள் எப்போதும் கூறிவந்துள்ளோம். இது மட்டுமே ஏகாதிபத்தியவாதிகள் ஒரு அணு ஆயுத யுத்தத்தைத் துவக்குவதைத் தடுக்கவும், முழுமையான அணு ஆயுதத் தடையைப் பெறவும் வழி வகுக்கும்.

ஏகாதிபத்திய அணு ஆயுத அச்சுறுத்தலைத் தடுப்பதற்கான தற்காப்பு ஆயுதங்களாகவே சோசலிச நாடுகள் அணு ஆயுதங்களைக் கையாள வேண்டும் என்பது எங்களுடைய கருத்தாகும். சோசலிச நாடுகள் ஒரு போதும் அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்தக் கூடாது. எந்த சூழ்நிலையிலும் அணு ஆயுதங்களுடன் விளையாடுவதோ அல்லது அணு ஆயுத அச்சுறுத்தலிலும், அணு ஆயுத சூதாட்டத்திலும் ஈடுபடுவதோ கூடாது.

மக்களின் புரட்சிகர போராட்டங்களுக்கு ஆதரவு தர மறுக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் தவறான நடைமுறையையும் அணு ஆயுதம் குறித்து அவர்கள் கொண்டிருக்கும் தவறான அணுகு முறையையும் நாங்கள் எதிர்க்கிறோம். அவர்கள் தங்களின் தவறுகளை ஆராய்வதற்குப் பதிலாக, நாங்கள் ரசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ''நேரடி மோதல்'' [1] உண்டாக்க விரும்புவதாகவும், ஒரு அணு ஆயுத யுத்தத்தில் அவர்களைத் தள்ள முயற்சிப்பதாகவும் குறை கூறுகிறார்கள்.

எங்களின் பதில் இதுதான்; இல்லை நண்பர்களே, நீங்கள் உங்கள் பரபரப்பூட்டும் அவதூறுகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ரசியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான மோதலை உறுதியாக எதிர்க்கிறது. இது வெறும் வார்த்தையளவிலானது அல்ல. அது, அவர்களுக்கு இடையிலான நேரான இராணுவ மோதலை விர்க்க செயலளவிலும் கடினமாக உழைத்திருக்கிறது. இதற்கு உதாரணம் கொரியத் தோழர்களுடன் நாங்கள் இணைந்து அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்திய கொரியப்போரும், தைவான் ஜலசந்தியில் அமெரிக்காவுக்கு எதிராக நாங்கள் நடத்திய போராட்டமுமாகும். தேவையான மிகப்பெரிய தியாகங்களை நாங்களே விரும்பி எற்றுக் கொண்டோம். சோசலிச முகாமைப் பாதுகாப்பதில், நாங்கள் முன் வரிசையில் நின்றுகொண்டு ரசியாவை இரண்டாவது வரிசையில் இருக்க செய்தோம். எனவே, பொய்களைத் திரிக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்

---

1. *''சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொது வழியும், சீனத் தலைவர்களின் பிளவு மேடையும்'', ஆசிரியர் குழுவின் கட்டுரை, 'கம்யூனிஸ்ட்', எண். 14 ,மாஸ்கோ 1963.*

தலைவர்களுக்கு சிறிதேனும் பாட்டாளி வர்க்க பண்பாட்டு உணர்வு இருக்கிறதா? என்று கேட்கிறோம்.

ஒருநாட்டின்ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துக்கு உதவ அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம் என்று அடிக்கடி மார்தட்டிப்பேசுவது உண்மையில் நாங்கள் அல்ல;ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களே.

ஒடுக்கப்பட்ட மக்களிடமோ அல்லது தேசங்களிடமோ அணு ஆயுதங்கள் கிடையாது என்பதும், புரட்சிகளை நடத்த அவர்கள் அவற்றைப் பயன்படுத்தமுடியாது என்பதும்,அவ்வாறு செய்வதற்கான தேவையும் இல்லை என்பதும், எல்லோரும் அறிந்ததே. பெரும்பாலும் தேசிய விடுதலைப் போர்களிலும் உள்நாட்டுப் போர்களிலும் போரிடும்இருதரப்பினருக்கும் இடையில் தெளிவான போர் எல்லை இருப்பதில்லை என்பதையும் எனவே அணுஆயுதங்களைப் பயன்படுத்துவது சாத்தியமற்றது என்பதையும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அப்படியானால்,ஒருசோசலிசநாடு மக்களின் புரட்சிகரப்போராட்டங்களுக்கு அணுஆயுதங்கள் மூலம் ஆதரவு அளிக்கவேண்டிய தேவை என்ன இருக்கிறது? என்று நாங்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைக் கேட்க விரும்புகிறோம்.

அவர்களை மேலும் கேட்கவிரும்புகிறோம்: ''ஒடுக்கப்பட்ட மக்களின் அல்லது தேசங்களின் புரட்சிகரப் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்க ஒரு சோசலிச நாடு எவ்வாறு அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும்? தேசிய விடுதலைப் போர் அல்லது புரட்சிகர உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருக்கும் பகுதிகளில் அணு ஆயுதங்களை பயன்படுத்தி புரட்சிகர மக்களையும், ஏகாதிபத்தியவாதிகளையும் சேர்த்துத் தாக்குமா? அல்லது ஏதோ ஒரு இடத்தில் பழைமையான போர்முறைகளைப் பயன்படுத்தி ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தும் ஒரு ஏகாதிபத்திய நாட்டுக்கு எதிராக அணுஆயுதத்தைப் பயன்படுத்துவதில் முதல் ஆளாக இருக்குமா?

எந்தவகையில் பார்த்தாலும் இந்த இரு சந்தர்ப்பங்களிலும் ஒரு சோசலிச நாடு அணுஆயுதங்களைப் பயன்படுத்துவதைக் கண்டிப்பாக அனுமதிக்க முடியாது.

உண்மை என்னவெனில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் அணு ஆயுதங்களை சுழற்றுவது மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக அல்ல என்பதேயாகும்.

சில சமயங்களில் அவர்கள், தாங்களே கூட ஒருபோதும் நடைமுறைப்படுத்த விரும்பாத சில அறிவிப்புகளை மலிவான செல்வாக்கை தேடிக்கொள்வதற்காக வெளியிடுகிறார்கள்.

வேறு சில சமயங்களில், உதாரணமாக கரிபியன் பிரச்சினையின் போது, தங்களுடைய உள்நோக்கங்களுக்காக குருட்டுந்தனமான சந்தர்ப்ப வாதமிக்க பொறுப்பற்ற அணு ஆயுதச் சூதாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அவர்களது அணு ஆயுத அச்சுறுத்தல் அடையாளம் காணப்பட்டு எதிர்க்கப்பட்டவுடன் அவர்கள் ஒவ்வொரு அடியாகப் பின்வாங்குகிறார் கள். சாகசவாதத்திலிருந்து சரணடைவுவாதத்திற்குத் தாவுகிறார்கள் தங்கள் அணு ஆயுதச் சூதாட்டத்தில் எல்லாவற்றையும் இழக்கிறார்கள்.

ரசிய மக்களும் செம்படையும் உலக அமைதியைக் காப்பதற்கான மாபெரும் சக்தியாக இருந்தனர். தொடர்ந்தும் இருக்கின்றனர் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஆனால் அணு ஆயுத மூடநம்பிக்கையை யும் அணு ஆயுத அச்சுறுத்தலையும் அடிப்படையாகக் கொண்ட குருச்சே வின் இராணுவக் கருத்துக்கள் முற்றிலும் தவறானவை.

குருச்சேவ் அணு ஆயுதங்களை மட்டுமே பார்க்கிறார். அவரின் கருத்துப்படி, ''இராணுவ நுணுக்கங்களின் தற்போதைய நிலையின் காரணமாக விமானப்படையும், கப்பற்படையும் தங்களின் முந்தைய முக்கியத்துவத்தை இழந்துவிட்டன. இந்த ஆயுதங்கள் அகற்றப்படுகின் றன, குறைக்கப்படவில்லை.''[1]

ஆம், தரையில் யுத்தம் செய்யும் பணிகளைக் கொண்ட படைப் பிரிவுகளும், வீரர்களும் மிகக்குறைந்த முக்கியத்துவம் உடையவர்கள் அவரின் கூற்றுப்படி ''நம்முடைய காலத்தில் ஒரு நாட்டின் பாதுகாப் திறன் ஆயுதங்களைக் கையாளும் நபர்கள் மற்றும் சீருடை அணிந் நபர்களின் எண்ணிக்கையைப் பொருத்தது அல்ல...ஒரு நாட்டின் பாது காப்பு ஆற்றல் ஆயுதங்களின் சுடுதிறமையும். ஆயுதங்களை பிரயோகிப் பதற்கு அந்த நாடு வைத்திருக்கும் வழிமுறைகளையுமே பொருத்தது''

குடிப்படையையும் (miltia) மக்களையும் பொறுத்தவரையில் அவர்கள் இன்னும் அதிக அற்பமானவர்களாக இருக்கின்றனர் ''நவீன ஆயுதங்களைக் கையில் வைத்திருப்பவர்களுக்கு குடிப்படை என் பது ஒரு இராணுவம் அல்ல மாறாக வெறும் மனித தசையே''[3] என்று ஒரு பிரபலமான குறிப்புரையை குருச்சேவ் தந்துள்ளார்.

---

1. என். எஸ். குருச்சேவ், சோவியத் ரசியாவின் சுப்ரீம் சோவியத் தின் கூட்டத்தொடரில் அளித்த அறிக்கை, ஜனவரி 1960.
2. மேற்படி நூல்.
3. என். எஸ். குருச்சேவ், புகாரஸ்ட்டில் நடந்த சகோதர கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஆற்றிய உரை ஜூன் 24, 1960.

குருச்சேவின் இராணுவக் கோட்பாடுகள் அனைத்தும் யுத்தம் மற்றும் இராணுவம் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனைகளுக்கு முற்றிலும் ்திராக உள்ளன. அவருடைய தவறான கோட்பாடுகளைப் பின்பற்று வது என்பது இராணுவத்தைச் சீரழிப்பதும், தார்மீக ரீதியாக ஒருவர் நம்மை நிராயுதபாணியாக்கிக் கொள்வதும் ஆகும்.

ஏதேனும் ஒரு சோசலிச நாடு குருச்சேவின் தவறான இராணுவ ுத்த தந்திரத்தை ஏற்குமெனில், அந்நாடு தவிர்க்க முடியாதபடி மிக அபாயகரமான நிலைக்குத் தள்ளப்படும் என்பது தெளிவு.

குருச்சேவ் ''மாபெரும் சமாதானக் காவலன்'' என்பது போன்ற ட்டங்களைத் தனக்குத்தானே அரிந்துங் கொள்ளலாம், சமாதான ிருதை தனக்குத்தானே வழங்கிக் கொள்ளலாம், வீரப்பதக்கங்களைத் னக்குத்தானே சூட்டிக்கொள்ளலாம். ஆனால் எந்த அளவு அவர் ன்னைத்தானே புகழ்ந்து கொண்டாலும் அணு ஆயுதங்களுடன் பாயகரமான முறையில், அலட்சியமாக, அவர் நிகழ்த்திய விளை ாட்டுக்களையோ அல்லது ஏகாதிபத்திய அணுஆயுத அச்சுறுத்தலுக்கு டிபணிந்து கெஞ்சிக் கூத்தாடியதையோ அவரால் மறைக்க முடி ாது.

போராட்டமா? அல்லது சரணடைவா?

ஏகாதிபத்தியவாதிகளிடம் பிச்சை கேட்பதன் மூலம் அல்ல, னைத்து நாடுகளில் உள்ள மக்களின் போராட்டத்தின் மூலமாகவே லக சமாதானம் வென்றெடுக்கப்பட முடியும். பொது மக்களைச் ார்ந்திருப்பதன் மூலமும், ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு ற்றும் யுத்த கொள்கைகளுக்கு எதிராக 'பழிக்குப் பழி' 'அடிக்கு அடி' Tit-for-tat) என்ற வகையில் போராட்டங்களை நடத்துவதன் லமும்தான் சமாதானத்தை உறுதியுடன் பாதுகாக்க முடியும். இது ான் சரியான கொள்கையாகும்.

'பழிக்குப் பழி' போராட்டம் என்பது சீன மக்கள், ஏகாதிபத்தி ம் மற்றும் அதன் அடிவருடிகளுக்கு எதிரான தங்கள் நீண்ட போராட் த்திலிருந்து பெற்ற ஒரு முக்கியமான முடிவாகும்.

தோழர் மாசேதுங் கூறினார்: ''சியாங் கே ஷேக் எப்போதும் மக்க டமிருந்து ஒவ்வொரு துளி அதிகாரத்தையும் ஒவ்வொரு துளி லாபத் தயும் பறிக்க முயற்சிக்கிறான். ஆனால் நாம்? அவனுக்கு எதிராக அடிக்கு அடி' கொடுப்பதும் ஒவ்வொரு அங்குல நிலத்துக்காகவும்

போராடுவதுமே நமது கொள்கை. அவனது முறையிலேயே நாம் செயலாற்றுகிறோம்.''[1]

அவர் மேலும் கூறினார்: ''அவன் எப்போதும் இடது கையில் ஒரு வாளுடனும் வலது கையில் மற்றொரு வாளுடனும் மக்களின்மீது போரை திணிக்க முயற்சிக்கிறான். அவனது உதாரணத்தைப் பின்பற்றி நாமும் வாள்களை எடுத்துள்ளோம்.''[2]

1945-ல் உள்நாட்டு அரசியல் சூழ்நிலையைப் பற்றி ஆராய்ந்து தோழர் மாசேதுங் கூறினார்:

'அடிக்கு அடி' ''எவ்வாறு கொடுப்பது என்பது சூழ்நிலையைப் பொறுத்தது. சில சமயங்களில் சமரசப் பேச்சுவார்த்தைக்குப் போகாமல் இருப்பது ''அடிக்கு அடி'' ஆகும். மற்றும் சில சமயங்களில் சமரச பேச்சுவார்த்தைக்கு செல்வது கூட ''அடிக்கு அடி'' ஆகும்... அவர்கள் தாக்க ஆரம்பித்தால், நாம் திருப்பித் தாக்குகிறோம், அமைதியைச் சாதிப்பதற்காக நாம் தாக்குகிறோம். விடுதலை செய்யப்பட்ட பிரதேசங் களைத் தாக்குவதற்குத் துணிகிற பிற்போக்காளர்களை வன்மையாக அடித்து வீழ்த்தாமல் அமைதியைப் பெற முடியாது''[3]

1924-27-ல் நடந்த சீனப் புரட்சியின் தோல்வியிலிருந்து பெற்ற வரலாற்றுப்படிப்பினைகளை அவர் கீழ்கண்டவாறு எடுத்துக்காட்டினார்:

''மக்கள் மீது நடத்தப்பட்ட எதிர்ப்புரட்சி தாக்குதல்களை எதிர் கொண்ட சென்ட்யூசி, 'அடிக்கு அடி' கொடுக்கும் கொள்கையையும், ஒவ்வொரு அங்குல நிலத்திற்கும் போராடுவது என்ற கொள்கையும் கடைப்பிடிக்கவில்லை. அதன் விளைவாக 1927-ல் மக்கள் வென்ற உரிமைகள் அனைத்தையும் ஒருசில மாதங்களிலேயே இழந்தனர்.''[4]

---

1. மாசேதுங், ''ஜப்பானுக்கெதிரான யுத்தத்தின் வெற்றிக்குப் பின் இன்றைய நிலைமையும், நமது கொள்கையும்'' தேர்வு நூல் கள், ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப., பீகிங், 1961, தொகுதி 4, பக்கம் 14.
2. மேற்படி நூல்.
3. மாசேதுங், ''சுங்கிங் பேச்சுவார்த்தைகள் குறித்து'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அ. மொ. ப., பீகிங், 1961, தொகுதி 4, பக்கம். 56.
4. மாசேதுங், ''ஜப்பானுக்கெதிரான யுத்தத்தின் வெற்றிக்குப் பின் இன்றைய நிலையும், நமது கொள்கையும்''தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப., பீகிங், 1961, தொகுதி 4, பக்கம் 16.

சீன கம்யூனிஸ்டுகள் 'அடிக்கு அடி' கொடுக்கும் கொள்கையை நன்கு புரிந்து அதன்படி நடந்துகொள்கிறார்கள். நாங்கள் சரணடைவு வாதம் மற்றும் சாகசவாதம் ஆகிய இரண்டையும் எதிர்க்கின்றோம். இந்த சரியான கொள்கையே, சீனப்புரட்சியில் வெற்றியையும், அதைத் தொடர்ந்து ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் சீன மக்களுக்கு பெரும் வெற்றியையும் சாத்தியமாக்கியது.

சீனக் கம்யூனிஸ்டுகளால் முன்வைக்கப்பட்ட இந்த சரியான போராட்டக் கொள்கையை அனைத்து புரட்சிகர மக்களும் ஏற்று வரவேற்கிறார்கள். அனைத்துப் பிற்போக்காளர்களும், ஏகாதிபத்திய வாதிகளும் இதைக் கண்டு அஞ்சி வெறுக்கிறார்கள்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த 'அடிக்கு அடி' கொடுக்கும் கொள்கையை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கொடிய வெறுப்புடன் தாக்குகிறார்கள். அது அவர்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க சிறிதும் விரும்புவதில்லை என்பதையே காட்டுகிறது. அவர்கள் அடிக்கு அடி என்ற கொள்கையைத் தாக்குவதற்கும் தூற்றுவதற்கும் காரணம் ஏகாதிபத்தியத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வது, அதற்கு சரணடைவது என்ற தங்களின் தவறான வழியை மூடிமறைப்பதற்கே ஆகும்.

ஏகாதிபத்தியத்திற்கெதிரான 'அடிக்கு அடி' கொடுக்கும் போராட்டம் சர்வதேசப் பதட்ட நிலையை உருவாக்கும் என ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கூறுகிறார்கள். என்ன கொடுமை!

அவர்கள் வாதத்தின்படி ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிப்பு நடத்தவும், மற்றவர்களுக்கு எதிராக பயமுறுத்தல் செய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள்; ஆனால் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்குப் பலியானவர்கள் போராட அனுமதிக்கப்படுவதில்லை. ஏகாதிபத்தியவாதிகள் மற்றவர்களை ஒடுக்க அனுமதிக்கப்படுகிறார்கள்; ஆனால் ஒடுக்கப்பட்டவர்கள் அவர்களை எதிர்க்க அனுமதிக்கப்படுவதில்லை. இது ஏகாதிபத்தியவாதிகளை அவர்களுடைய ஆக்கிரமிப்புக் குற்றங்களிலிருந்து விடுவிப்பதற்கான அப்பட்டமான முயற்சியேயாகும். இது மாசுமறுவற்ற, காட்டுமிராண்டிக் கொள்கையாகும்.

சர்வதேசப் பதட்டநிலை என்பது ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக்கொள்கைகளின் விளைவாகும். ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு மற்றும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக மக்கள் உறுதியாகப் போராட வேண்டும். போராட்டத்தின் வாயிலாகவே ஏகாதிபத்தியம் பின்வாங்க வேண்டிய கட்டாயத்துக்குட்படும் என்பதையும் சர்வதேசப் பதட்டநிலை உண்மையிலே தளர்த்தப்படும் என்பதையும் உண்மைகள் நிரூபித்துள்

என. ஏகாதிபத்தியவாதிகள் முன்னால் தொடர்ச்சியாகப் பின்வாங்குவது என்பது உண்மையிலே பதட்ட நிலையைத் தணிப்பதற்கு வழிவகுக்காது; மாறாக, அவர்களின் ஆக்கிரமிப்புச் செயல்களுக்கு ஊக்கம் தரும்.

ஏகாதிபத்தியம் சர்வதேசப் பதட்ட நிலையை உருவாக்குவதை நாங்கள் எப்போதும் எதிர்த்து வந்துள்ளோம். அத்தகைய பதட்டநிலையைத் தணிப்பதற்காகவே போராடுகிறோம். ஆனால் ஏகாதிபத்தியவாதிகள், ஆக்கிரமிப்புகளை நடத்தவும் அனைத்து இடங்களிலும் பதட்டநிலையை உருவாக்கவும் உறுதி பூண்டுள்ளனர். அது அவர்கள் ஆசைப்படுவதற்கு எதிரான நிலைக்கே அவர்களை இட்டுச் செல்லும்.

தோழர் மாசேதுங் கூறினார், ''அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பதட்டநிலையின் காரணமாக எப்போதும் தாங்கள் பயனடையலாம் என நம்புகிறார்கள். ஆனால், அமெரிக்கா உருவாக்கிய பதட்டநிலை அவர்கள் ஆசைப்பட்டதற்கு எதிரான நிலைக்கே இட்டுச் சென்றுள்ளது என்பதே உண்மை. இது அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக அனைத்துலக மக்களையும் திரட்டுவதற்கு உதவுகிறது'' [1]

மேலும் அவர் கூறினார், ''அமெரிக்க ஏகபோகக் குழுக்கள் தங்கள் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கைகளைத் தொடர்ந்தால் உலகிலுள்ள மக்கள் அவர்களைத் தூக்கிலேற்றும் நாள் வரும் என்பது உறுதி'' [2]

1957 பிரகடனம் சரியாகவே சொல்கிறது ''இந்தக் கொள்கையினால் மக்கள் விரோத ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள ஏகாதிபத்திய சக்திகள் தங்களின் அழிவைத் தாங்களே தேடிக் கொள்கிறார்கள்; தங்களின் சவக்குழிகளைத் தோண்டுபவர்களைத் தாங்களே உருவாக்குகிறார்கள்.''

இதுவே வரலாற்றின் இயக்க இயல் ஆகும். ஏகாதிபத்தியவாதிகளைப் போற்றுபவர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்வது கடினமாகும்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 'அடிக்கு அடி' என்ற போராட்டத்தை ஆதரிப்பதன் மூலம் பேச்சுவார்த்தைகளை மறுப்பதாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கூறுகிறார்கள். இதுவும் முட்டாள்தனமானதே.

1. மாசேதுங் உயர்மட்ட அரசு மாநாட்டில் (Supreme State Conference) ஆற்றிய உரை, ரென்மின் ரிபாவோ, செப்டம்பர் 9, 1958.
2. மேற்படி நூல்.

எல்லா சூழ்நிலைகளிலும் பேச்சுவார்த்தைகளை மறுப்பவர்கள் கட்டாயமாக மார்க்சிய-லெனினியவாதிகள் அல்ல என நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

புரட்சிகர உள்நாட்டுப் போரின்போது பலமுறை கோமிங்டாங்குடன் சீன கம்யூனிஸ்டுகள் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். நாடு தழுவிய விடுதலை அடைய இருந்த நேரத்திலும் பேச்சுவார்த்தைகள் நடத்த அவர்கள் மறுக்கவில்லை.

மார்ச் 1949-ல் தோழர் மாசேதுங் கூறினார், ''சமாதானப் பேச்சுவார்த்தைகள் பரந்த அளவிலானதாகவோ, அல்லது பகுதி அளவிலானதாகவோ இருப்பினும் கூட நாம் அதற்குத் தயாராக இருக்க வேண்டும். நாம் தொந்தரவுகளுக்கு அஞ்சியும் சிக்கலான நிலையைத் தவிர்க்க விரும்பியும் பேச்சுவார்த்தைகளுக்கு செல்லாமல் இருக்கக் கூடாது. அதே நேரத்தில் குழப்பமான மனநிலையில் பேச்சுவார்த்தைகளுக்கு செல்லக் கூடாது. கொள்கையில் உறுதியாக நிற்க வேண்டும். மேலும் கொள்கைகளை நடைமுறைப்படுத்த தேவையான அனுமதிக்கத்தக்க அனைத்து நெளிவு சுளிவுகளையும் மேற்கொள்ள வேண்டும்''. [1]

சர்வதேச ரீதியிலும், ஏகாதிபத்தியத்திற்கும் பிற்போக்குவாதத்திற்கும் எதிரான போராட்டத்தில் பேச்சுவார்த்தைகள் குறித்து அதே நிலைப்பாட்டையே சீனக் கம்யூனிஸ்டுகள் மேற்கொண்டுள்ளனர்.

1951, அக்டோபரில் கொரியப் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் குறித்து தோழர் மாசேதுங் கூறியதாவது:

''கொரியப் பிரச்சினை அமைதியான வழியிலேயே தீர்க்கப்பட வேண்டும் என வெகுகாலமாகவே நாம் கூறி வருகிறோம். தற்போதும் அதுவே சரியானது. நேர்மையாகவும் ஏற்றுக்கொள்ளத் தக்க வகையிலும் இப்பிரச்சினையைத் தீர்க்க அமெரிக்க அரசாங்கம் விரும்புமானால், முன்போல பேச்சுவார்த்தையை நிறுத்தவோ, உடைக்கவோ அசிங்கமான வழிமுறைகளைப் பின்பற்றாதிருக்க வேண்டும். அப்போதுதான் கொரியப் போர் நிறுத்த ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியடையும். இதற்கு மாறாக செயல்பட்டால் அது சாத்தியமில்லை'' [2]

---

1. *மாசேதுங், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது மத்திய கமிட்டியின் இரண்டாவது பிளனக் கூட்டத்தொடருக்குத் தந்த அறிக்கை'', தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப., பீகிங், 1961, தொகுதி 4, பக்கம் 372.*
2. *மாசேதுங், ''சீன மக்களின் அரசியல் ஆலோசனை மாநாட்டின் முதல் தேசியக் கமிட்டியின் மூன்றாவது கூட்டத் தொடரில் ஆற்றிய உரை'' ரென் மின் ரிபாவோ, அக்டோபர் 24, 1951.*

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான உறுதியான போராட்டமே, பேச்சுவார்த்தையின் போது கொரியப் போர் நிறுத்த உடன்படிக்கையை அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தது.

நாங்கள் 1954-ல் ஜெனிவா மாநாட்டில் ஊக்கத்துடன் பங்கு கொண்டு இந்தோ-சீனாவில் அமைதியை நிலைநாட்டப் பெரும் பங்காற்றினோம்.

எங்களது தைவான் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் அமெரிக்காவுடன் கூட பேச்சுவார்த்தைகள் நடத்த நாங்கள் விரும்புகிறோம். எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக சீன-அமெரிக்க அரசு தூதரகங்களுக்கிடையே பேச்சுக்கள் நடந்து வருகின்றன.

1961-ல் லாவோஸ் பிரச்சினை பற்றிய ஜெனிவா மாநாட்டில் ஊக்கமுடன் பங்குபெற்றோம். லாவோசின் சுதந்திரம் மற்றும் நடுநிலையை மதிக்கும் ஜெனிவா உடன்படிக்கை கையெழுத்தாவதில் உதவினோம்.

சீனக் கம்யூனிஸ்டுகள் மட்டும் ஏகாதிபத்திய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட தங்களை அனுமதித்துக்கொண்டு ரசிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் ஏகாதிபத்திய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதை எதிர்க்கிறார்களா? இல்லை, கட்டாயமாக இல்லை.

உண்மையிலேயே ரசிய அரசாங்கத்தின்,பயனுள்ள, உலக அமைதிக்குத் தீங்கிழைக்காத, ஏகாதிபத்தியங்களுடனான பேச்சுவார்த்தைகளை எப்போதும் ஊக்கத்துடன் ஆதரித்துள்ளோம்.

1960 மே 14-ல் மாசேதுங் கூறினார்:

''உச்சி மாநாடுகள் எதையாவது சாதிக்கின்றனவோ இல்லையோ, அல்லது அச்சாதனைகள் பெரிதோ சிறிதோ இதுபோன்ற மாநாடுகள் நடத்துவதை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால், உலக சமாதானத்தை அடைவது என்பது பிரதானமாக அனைத்து உலக மக்களின் உறுதியான போராட்டத்தையே சார்ந்துள்ளது'' [1]

ஏகாதிபத்தியங்களுடனான பேச்சுவார்த்தையை நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால், குருச்சேவ் செய்தது போன்று, உலக சமாதானத்திற்கு பேச்சுவார்த்தைகளையே முழுமையாக சார்ந்திருப்பதும் அவற்

---

1. *''ஆசிய, லத்தீன் அமெரிக்க விருந்தினர்களுடன் தலைவர் மாசேதுங் பேசியது, ரென்மின் ரிபாவோ, மே 15 .1960,*

றைப் பற்றிய பிரமையைப் பரப்புவதும் அதன் மூலம் மக்களின் உறுதியான போராட்ட உணர்வை முடமாக்குவதும் முற்றிலும் அனுமதிக்கப் பட முடியாதவை.

உண்மையில், பேச்சுவார்த்தைகள் குறித்த குருச்சேவின் தவறான அணுகுமுறையே பேச்சுவார்த்தைகளுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியது. குருச்சேவ் ஏகாதிபத்தியவாதிகளின் முன் எந்த அளவுக்கு பின்வாங்குகிறாரோ, எந்த அளவுக்கு யாசிக்கிறாரோ அந்த அளவுக்கு ஏகாதிபத்தியவாதிகளின் பசியும் அதிகரிக்கும். வரலாற்றில் பேச்சுவார்த்தைகளின் மிகப் பெரிய பக்தனாகக் காட்டிக் கொள்ளும் குருச்சேவ் எப்போதும் கைம்மாறு செய்யப்படாத காதலனாகவும் பெரும்பாலான சமயங்களில் கேலிப் பொருளாகவும் காணப்படுகிறார். ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்குவாதிகளும் சரணடைவுவாதிகளின் மரியாதையைக் காப்பாற்றுவதில் ஒருபோதும் அக்கரை காட்டமாட்டார்கள் என்பதையே எண்ணிலடங்காத வரலாற்று உண்மைகள் காட்டுகின்றன.

சமாதானத்தைப் பாதுகாக்கும் பாதையும் யுத்தத்திற்கு இட்டுச் செல்லும் பாதையும்

அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும்போது, யுத்தம் மற்றும் சமாதானம் பற்றிய பிரச்சினையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுடன் எங்களுக்குள்ள வேறுபாடு ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதா? வேண்டாமா? புரட்சிகர போராட்டங்களை ஆதரிப்பதா? வேண்டாமா? ஏகாதிபத்தியவாதிகளின் யுத்த சூழ்ச்சிகளுக்கு எதிராக உலக மக்களை ஒன்று திரட்டுவதா? வேண்டாமா? மார்க்சிய-லெனினியப் பாதையைப் பின்பற்றுவதா? வேண்டாமா? என்ற இரு வேறுபட்ட வழிமுறைகளுக்கிடையிலானதே என்பது தெளிவாகிறது.

அனைத்து உண்மையான புரட்சிகர கட்சிகளையும் போலவே, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திலும் உலக சமாதானத்திற்கான போராட்டத்திலும் எப்போதும் முன்னணியில் நின்று வருகிறது. உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு ஏகாதிபத்தியத்தைத் தொடர்ந்து அம்பலப்படுத்துவதும் அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிரான போராட்டத்திற்கு மக்களை எழுச்சியூட்டி ஒருங்கிணைப்பதும் அவசியமானதாகும். மேலும் சோசலிச முகாமினுடைய சக்தியின் வளர்ச்சியின் மீதும் பாட்டாளிகள் மற்றும் அனைத்து நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக்களின் போராட்டங்களின் மீதும், ஒடுக்கப்படும் தேசங்களின் விடுதலைப்

போராட்டங்களின் மீதும், சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களின் மற்றும் நாடுகளின் போராட்டங்களின் மீதும், அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் அதன் அடிவருடிகளுக்கெதிரான பரந்துபட்ட அய்க்கிய முன்னணியின் மீதும் நம்பிக்கை வைப்பது அவசியமாகும்.

எமது இவ்வழிமுறை, 1957 பிரகடனத்திலும், 1960 அறிக்கையிலும் அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் முன் வைக்கப்பட்ட பொது வழிக்கு ஏற்புடையதாக உள்ளது.

இந்த வழிமுறையின் மூலம் மக்களின் அரசியல் உணர்வை இடைவிடாது உயர்த்துவதும், உலக சமாதானத்திற்கான போராட்டத்தைச் சரியான திசை வழியில் விரிவுபடுத்துவதும் சாத்தியமானது.

இந்த உலக சமாதானத்திற்காக சோசலிச முகாமை மையமாகக் கொண்டு சமாதான சக்திகளை வலுப்படுத்துவதும் ஏகாதிபத்திய யுத்த சக்திகளைத் தாக்குவதும் பலவீனப்படுத்துவதும் இவ்வழிமுறையின் மூலம் சாத்தியமாகும்.

இந்த வழிமுறையின் மூலம் தொடர்ந்து மக்களின் புரட்சியை விரிவாக்குவதும் ஏகாதிபத்தியத்திற்கு விலங்கிடுவதும் சாத்தியமாகும்.

இந்த வழிமுறையின் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் மற்ற ஏகாதிபத்திய சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் உள்ளிட்ட அனைத்து காரணிகளையும் கணக்கிலெடுத்துக்கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை முழு அளவில் தனிமைப்படுத்துவதும் சாத்தியமாகும்.

இந்த வழிமுறையின் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் கையாளும் அணு ஆயுத அச்சுறுத்தல்களை உடைத்தெறிவதும், ஒரு புதிய உலக யுத்தத்தைத் துவங்க முயற்சிக்கும் அதன் திட்டத்தை முறியடிப்பதும் சாத்தியமாகும்.

இதுவே அனைத்து நாட்டு மக்களுடைய புரட்சியின் வெற்றி, உலக சமாதானம் ஆகிய இரண்டையும் அடைவதற்கான வழிமுறையாகும் இதுவே உலக சமாதானத்தைப் பாதுகாக்கக்கூடிய நிச்சயமான, பயனுள்ள வழியாகும்.

ஆனால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பின்பற்றும் வழிமுறை, எமது வழிமுறைக்கும், எல்லா மார்க்சிய-லெனினியவாதிகள், புரட்சிகர மக்களும் பின்பற்றுகிற பொது வழிமுறைக்கும் நேர்எதிரானது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்கள் போராட்ட முறைகளை உலக சமாதானத்தின் எதிரியை நோக்கி நிறுத்தாமல் சோசலிச

முகாமிற்கு எதிராகவே திருப்புகிறார்கள். இவ்வாறாக உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் சக்தியின் ஆதாரத்தையே வலுவிழக்கச் செய்து அதன் அடிப்படையையே தகர்த்து வருகிறார்கள்.

சோசலிச நாடுகளின் மக்களை மிரட்டுவதற்கும், ஒடுக்கப்படும் மக்கள் மற்றும் நாடுகளின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு அவர்கள் ஆதரவு தருவதைத் தடை செய்வதற்கும் அவர்கள் அணு ஆயுத அச்சுறுத்தலைப் பயன்படுத்துகிறார்கள்; இவ்வாறு சோசலிச முகாமைத் தனிமைப் படுத்துவதிலும், மக்கள் புரட்சிகளை ஒடுக்குவதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு உதவுகிறார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களையும், தேசங்களையும் மிரட்டுவதற்கும் அவர்கள் புரட்சி செய்வதைத் தடுப்பதற்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அணு ஆயுத அச்சுறுத்தலைப் பயன்படுத்துகிறார்கள். புரட்சிப் பொறிகளை அணைக்க அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேருகிறார்கள். இதன் மூலம் அமெரிக்காவுக்கும் சோசலிச முகாமுக்கும் இடைப்பட்ட பிரதேசங்களில் அமெரிக்கா தன் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கையை இடையூறின்றிச் செயல்படுத்த வழிவகுக்கிறார்கள்.

அமெரிக்காவின் கூட்டாளி நாடுகளைக் கூட மிரட்டி அவைகள் மீது அமெரிக்கா விதித்துள்ள கட்டுப்பாடுகளை எதிர்த்து அவை போராடாமல் தடுக்கிறார்கள். இவ்வாறு, அமெரிக்க ஏகாதிபத்தியம் அந்நாடுகளை மேலும் அடிமைப்படுத்தி அதன் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ள உதவுகிறார்கள்.

இந்நடைமுறைகள் மூலம், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கைகளை எதிர்க்கும் போராட்டத்தை முழுமையாக கைவிட்டுவிட்டனர்.

இந்த நடைமுறை அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் அதன் அருவருடிகளுக்கெதிராக, உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் அய்க்கிய முன்னணியை மறுதலிக்கிறது.

இது உலக சமாதானத்தின் பிரதான எதிரியை அதிகபட்சமாகத் தனிமைப்படுத்துவதற்கு மாறாக சமாதான சக்திகளைத் தனிமைப்படுத்த முயல்கிறது.

இதன்பொருள் உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் போராட்டப் பணியைச் சீர்குலைப்பதாகும்.

இந்த வழியானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ''உலக யுத்தத் தந்திர''த்திற்கு சேவை செய்கிறது.

இது உலக சமாதானத்திற்கான பாதையல்ல; மாறாக யுத்த அபாயத்திற்கும், யுத்தத்திற்கும் இட்டுச்செல்லும் பாதையாகும்.

இரண்டாம் உலகயுத்தத்திற்கு முன்பாக இருந்தது போன்று இன்றைய உலகம் இல்லை. வலுவான சோசலிச முகாம் இங்கே இருக்கிறது. ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் தேசிய விடுதலை இயக்கங்கள் முன்னேறி வருகின்றன. மக்களின் அரசியல் உணர்வு மிகவும் உயர்ந்துள்ளது. புரட்சிகர மக்களின் சக்தி பெருமளவு பலமடைந்துள்ளது. ரசிய மற்றும் பிற சோசலிச நாடுகளில் உள்ள மக்களும் மற்றும் உலக மக்கள் முழுவதும் தங்கள் தலைவிதியை ஏகாதிபத்திய சக்திகளும், அவர்களின் ஊதுகுழல்களும் தீர்மானிக்க இனி கண்டிப்பாக அனுமதிக்கமாட்டார்கள்.

ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் பிற்போக்குவாதிகளின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்த நடவடிக்கைகள், உலகில் உள்ள மக்கள், படிப்படியாகத் தங்கள் அரசியல் உணர்வை வளர்த்துக் கொள்ள கற்றுக் கொடுத்துள்ளன., சமூக நடைமுறை மட்டுமே உண்மைக்கான உரைகல்லாகும். ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் பிற்போக்குவாதிகளின் போதனைகளினால் யுத்தம் சமாதானம் பற்றிய பிரச்சினை குறித்துத் தவறான கருத்து கொண்டிருக்கும் பலர், தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்வார்கள் என நம்புகிறோம். இவ்விசயத்தில் எங்களுக்கு மிக அதிக நம்பிக்கை இருக்கிறது.

ஏகாதிபத்தியவாதிகளின் மோசடியை அம்பலப்படுத்துவதன் மூலமும், திரிபுவாதிகளின் பொய்க்கூற்றுக்களை இனம் காண்பதன் மூலமும் உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் கடமையைத் தோளில் ஏற்பதன் மூலமும், ஒரு புதிய யுத்தத்தைத் தொடங்குவதற்கான ஏகாதிபத்திய திட்டங்களை கம்யூனிஸ்டுகளும், உலக மக்களும் கண்டிப்பாக முறியடித்து உலக சமாதானத்தைப் பாதுகாப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

சமாதான சகவாழ்வு - இரண்டு நேரெதிரான கொள்கைகள்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆறாவது விமர்சனம்
'மக்கள் தினசரி', 'செங்கொடி' பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்கள் (டிசம்பர் 12, 1963)

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசிலிருந்து குருச்சேவும் மற்ற தோழர்களும், மற்ற எதையும்விட சமாதான சகவாழ்வு பிரச்சினை பற்றி அதிகமாக பேசி வருகிறார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், தாங்கள் லெனினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கைக்கு உண்மையாக இருப்பதாகவும் அதை ஆக்கபூர்வமாக வளர்த்திருப்பதாகவும் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்கின்றனர். உலக மக்கள் தங்களுடைய நெடிய புரட்சிகரப் போராட்டங்களின் மூலம் ஈட்டிய வெற்றிகள் அனைத்திற்குமான பெருமை தங்களுடைய ''சமாதான சகவாழ்வு'' கொள்கைக்கே சாரும் என்று கூறுகின்றனர்.

ஏகாதிபத்தியம், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியம், சமாதான சகவாழ்வை ஆதரிக்கிறது எனும் கருத்தை அவர்கள் பிரச்சாரம் செய்கின்றனர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றும் எல்லா மார்க்சிய—

லெனினியக் கட்சிகளும் சமாதான சகவாழ்வின் எதிரிகளாக இருக்கின்றன என்று இழிவுபடுத்த விரும்புகின்றனர். ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதமானது, ஏகாதிபத்தியவாதிகளுடன் ''போரைக் கட்டவிழ்த்து விடும் போட்டிக்கு'' சீனா ஆதரவாக இருக்கிறது என்று கூட அவதூறு செய்கின்றது.

மார்க்சியம்-லெனினியம், பாட்டாளி வர்க்க உலகப் புரட்சி மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் நாடுகளின் புரட்சிகர நலன் ஆகியவற்றை எந்த வார்த்தைகளையும் செயல்களையும் கொண்டு காட்டி கொடுத்தார்களோ, அந்த வார்த்தைகளும் செயல்களும் லெனினின் சமாதான சகவாழ்வுக் கொள்கைக்கு பொருத்தமானவை என்று வர்ணிக்கின்றனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மார்க்சிய-லெனினியத்துக்கு இழைத்த துரோகத்திற்கு ''சமாதான சகவாழ்வு'' என்ற வார்த்தைகள் ஒரு தாயத்தைப்போல் உதவ முடியுமா? நிச்சயமாக முடியாது.

நாம் இப்போது இரண்டு நேரெதிரான சமாதான சகவாழ்வுக் கொள்கைகளை எதிர் கொண்டுள்ளோம்.

ஒன்று, சீனக் கம்யூனிஸ்டுகள் உட்பட அனைத்து மார்க்சிய—லெனினியவாதிகளும் ஏற்றுக்கொள்ளும் லெனின் மற்றும் ஸ்டாலினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கை.

மற்றொன்று, குருச்சேவாலும் மற்றவர்களாலும் பொதுவழி என்று எடுத்துரைக்கப்படும் லெனினிய விரோத சமாதான சகவாழ்வுக் கொள்கை.

இப்போது, லெனின் மற்றும் ஸ்டாலினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கையையும் குருச்சேவும் மற்றவர்களும் பொதுவழி என்றழைக்கும் சமாதான சகவாழ்வு என்ற சரக்கையும் நாம் ஆய்வு செய்வோம்.

லெனின் மற்றும் ஸ்டாலினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கை

ஒரு சோசலிச அரசு வேறுபட்ட சமுதாய அமைப்புகள் கொண்ட நாடுகளுடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைபிடிக்கவேண்டும் என்ற கருத்தை லெனின்தான் முன்வைத்தார். இந்த சரியான கொள்கை, லெனின் மற்றும் ஸ்டாலின் தலைமையின்கீழ் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியாலும் அரசாங்கத்தாலும் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்தது.

சோசலிச நாடுகளுக்கும் முதலாளிய நாடுகளுக்குமிடையிலான சமாதான சகவாழ்வு என்ற பிரச்சினை அக்டோபர் புரட்சிக்கு முன்னதாக எழுந்திருப்பதற்கான வாய்ப்பு இல்லை. ஏனென்றால், அப்போது எந்த சோசலிசநாடும் இருக்கவில்லை. இருந்தபோதிலும் ஏகாதிபத்தியம் பற்றிய தன்னுடைய விஞ்ஞானபூர்வமான ஆய்வின் அடிப்படையில், ''சோசலிசம் எல்லா நாடுகளிலும் ஒரே நேரத்தில் வெற்றி அடைய முடியாது. அது முதலில் ஒன்று அல்லது பல்வேறு நாடுகளில் வெற்றி பெறும். அதே நேரத்தில் மற்றவை முதலாளிய அல்லது முதலாளியத் திற்கு முந்தைய அமைப்புகளாகவே சில காலத்திற்கு நீடிக்கும்''[1] என்று லெனின் 1915-1916-லேயே தொலைநோக்குடன் பார்த்தார். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், ஒரு குறிப்பிட்ட காலத் திற்கு, முதலாளிய அல்லது முதலாளியத்திற்கு முந்தைய நாடுகளுடன் சோசலிச நாடுகள் அக்கம் பக்கமாக நிலவும். சோசலீச நாடுகள் சமா தான அயலுறவுக் கொள்கையைக் கட்டாயம் கடைபிடிக்கவேண்டும் என சோசலிச அமைப்பு முறையின் இயல்பு தீர்மானிக்கிறது. லெனின் கூறியதாவது : ''பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே, அது அதிகாரத்தை வென்றபின் சமாதான கொள்கையைக் கடைபிடிக்கமுடியும், வெறும் வார்த்தைகளிலல்ல... உண்மையான செயல்களில்''[2] லெனினுடைய இந்த கருத்தோட்டங்கள் சமாதான சகவாழ்வு கொள்கையின் கோட் பாட்டு அடிப்படையாக அமைகிறது என்று கூறமுடியும்.

அட்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, சமாதானமே ரசிய அரசின் அயலுறவுக் கொள்கையென்று பல சந்தர்ப்பங்களில் உலகிற்கு அறிவித்திருக்கிறார் லெனின். ஆனால் ஏகாதிபத்தியவாதிகளோ, புதி தாக தோன்றிய சோசலிச குடியரசை அதன் தொட்டிலிலேயே கழுத்தை நெறித்துக் கொல்வதில் குறியாக இருந்தனர். ரசிய அரசிற்கு எதிராக அவர்கள் இராணுவத் தலையீட்டைத் தொடுத்தார்கள். இது போன்ற சூழ்நிலைமையை எதிர்கொள்ளும்போது ''சோசலிச குடியரசை ஆயுத பலத்தால் பாதுகாக்கவில்லையெனில் நாம் நீடித்திருக்க முடியாது''[3] என்று லெனின் சரியாகவே சுட்டிக் காட்டினார்.

---

1. *வி. இ. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போர்த் திட்டம்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1950, தொகுதி 1, பகுதி 2, பக்கம் 571.*
2. *வி. இ. லெனின், ''அரசியலில் நிலவும் இந்த கணத்தின் மீதான தீர்மானநகல்'', தொகுப்பு நூல்கள், ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1949, தொகுதி-25, பக்கம் 291-92.*
3. *வி. இ. லெனின், ''எட்டாவது கட்சிப் பேராயத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி [போல்ஷ்விக்] மத்திய கமிட்டியின் அறிக்கை'' தேர்வுநூல்கள், ஆங்கிலப்பதிப்பு, இண்டர்நேசனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க் 1943, தொகுப்பு 8, பக்கம் 422.*

1920-க்குள் மகத்தான ரசிய மக்கள் ஏகாதிபத்திய இராணுவ தலையீட்டை முறியடித்தார்கள். ரசிய அரசுக்கும் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் இடையில் சக்திகளின் ஒப்பீட்டளவிலான சமநிலை ஏற்பட்டது. பல ஆண்டு பலப்பரீட்சைகளுக்குப் பிறகு, ரசிய அரசு தன் நிலையைத் தக்க வைத்துக்கொண்டது. அது போரிலிருந்து அமைதியான கட்டுமானப் பணிகளுக்குத் திரும்பத் தொடங்கியது. இந்த சூழ்நிலைமைகளில்தான் சமாதான சகவாழ்வுக் கொள்கை பற்றிய கருத்தோட்டத்தை லெனின் முன்வைத்தார். உண்மையில், அந்த சமயத்திலிருந்து ரசிய அரசுடன் ஏகாதிபத்தியவாதிகள்''சகவாழ்வு''டன் இருப்பதைத்தவிர அவர்களுக்கு வேறு எந்த வழியுமிருக்கவில்லை.

லெனினுடைய வாழ்நாளில் இந்த சமநிலை எப்போதும் மிகவும் உறுதியற்றதாகவே இருந்தது; ரசிய குடியரசானது முதலாளிய முற்றுகைக்குக் கடுமையாக ஆட்பட்டிருந்தது. ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை காரணமாக நீண்ட காலத்துக்கு சோசலிசமும் முதலாளியமும் அமைதியாக வாழ முடியும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை என லெனின் மீண்டும் சுட்டிக்காட்டினார்.

அன்று நிலவிய சூழ்நிலைமைகளில் வேறுபட்ட சமுதாய அமைப்புகளுடன் கூடிய நாடுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வுக் கொள்கையின் உள்ளடக்கத்தை முழுமையாக அவரால் வரையறுக்க முடியவில்லை. ஆனால் மாபெரும் லெனின் முதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசுக்கான சரியான அயலுறவுக் கொள்கையை நிறுவினார். சமாதான சகவாழ்வுக் கொள்கையின் அடிப்படைக் கருத்தோட்டங்களை முன்வைத்தார்.

இந்தக் கொள்கை பற்றிய லெனினுடைய அடிப்படைக் கருத்தோட்டங்கள் யாவை?

முதலாவதாக, ஏகாதிபத்தியவாதிகளின் விருப்பத்திற்கு நேரெதிராக சோசலிச அரசு நிலவுகிறது என்பதை லெனின் சுட்டிக்காட்டினார். சமாதான அயலுறவுக் கொள்கையில் அது ஊன்றி நின்றிருந்தாலும், இதனுடன் சமாதானமாகவாழ்வதற்கு ஏகாதிபத்தியவாதிகளுக்கு விருப்பமில்லை; சோசலிச அரசை எதிர்க்க அல்லது அழிப்பதற்குக் கூட அவர்கள் சாத்தியமான எல்லாவற்றையும் செய்வார்கள், ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தப் பார்ப்பார்கள்.

லெனின் கூறினார்:

''ஏகாதிபத்தியத்தின் யதார்த்தமான நிலைமை,முதலாளிய வர்க்கத்தின் இயற்கையான பொருளாதாரநலன் ஆகிய இரண்டினாலும் சர்வ தேசிய ஏகாதிபத்தியம் சோவியத் குடியரசுடன் அக்கம்பக்கமாக வாழ முடியாது...''[1]

மேலும் அவர் கூறினார் :

''...ஏகாதிபத்திய அரசுகளுடன் சோவியத் குடியரசு அக்கம்பக்கமாக மிக நீண்ட காலத்துக்கு நிலவுவதை நினைத்து கூடப் பார்க்கமுடியாது. ஒன்று அல்லது மற்றையது இறுதியில் வெற்றியடைந்தாகவேண்டும். ஆனால் அந்த முடிவு ஏற்படுவதற்கு முன்னால் சோவியத் குடியரசுக்கும் முதலாளிய வர்க்கத்துக்கும் இடையில் தொடர்ச்சியான கடுமையான பல மோதல்கள் தொடர்ச்சியாக நடப்பது தவிர்க்கமுடியாததாகும்.''[2]

எனவே ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நிரந்தரமான கண்காணிப்பை சோசலிச அரசு மேற்கொள்ளவேண்டும் என அவர் மீண்டும் வலியுறுத்தி வந்தார்.

''...தொழிலாளர்களும் விவசாயிகளும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்னவெனில், நாம் தாக்குதலுக்கு எதிராக விழிப்புணர்வுடன் இருந்தாகவேண்டும்; நமக்கெதிராக எல்லையற்ற வெறுப்பை வெளிப் படையாகவே காட்டுகிற ஆட்களாலும், வர்க்கங்களாலும், அரசாங்கங் களாலும் நாம் சூழப்பட்டிருக்கிறோம் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். எல்லாவித ஆக்கிரமிப்புகளிலிருந்தும் நாம் எப்போதும் மயிரிழை அளவு தூரத்திலேயே இருக்கிறோம் என்பதை நாம் நினைவிற் கொண்டாகவேண்டும்.''[3]

---

1. *வி. இ. லெனின், ''போர் மற்றும் அமைதி பற்றிய அறிக்கை, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்) யின் ஏழாவது பேராயத்தில் ஆற்றியஉரை'', மார்ச்7, 19189 தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப., மாஸ்கோ, 152, தொகுதி-2, பகுதி-1, பக்கம் 422.*
2. *வி. இ. லெனின், ''எட்டாவது கட்சிப் பேராயத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி(போல்ஷ்விக்)மத்திய கமிட்டியின் அறிக்கை'' மார்ச் 18, 1919, தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, இன்டர் நேசனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க்,1943, தொகுதி-8, பக்கம்-33.*
3. *வி. இ. லெனின், ''குடியரசின் உள்நாட்டு மற்றும் அயலுறவுக் கொள்கைகளைப் பற்றி சோவியத்துக்களின் ஒன்பதாவது அகில ரசியப் பேராயத்தில் ஆற்றியஉரை'', தொகுப்பு நூல்கள், மாஸ்கோவின் ரசியப்பதிப்பு, 1950, தொகுதி-33, பக்கம்-122.*

இரண்டாவதாக, ஏகாதிபத்திய நாடுகளுடன் போராட்டங்களின் மூலம் மட்டுமே ரசிய அரசு அமைதியுடன் வாழமுடிகிறது என்று லெனின் சுட்டிக்காட்டினார். சரியான கொள்கையைக் கடைப்பிடித்தும், பாட்டாளி வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் ஆதரவைச் சார்ந்தும், ஏகாதிபத்தியவாதிகளுக்கிடையேயான முரண்பாடுகளைப் பயன்படுத்தியும் சரியான கொள்கையை கடைப்பிடித்துவந்த ரசிய அரசுக்கும், ஏகாதிபத்திய நாடுகளுக்கும் இடையே மீண்டும் மீண்டும் நடந்துவந்த பலப் பரீட்சைகளின் முடிவாகும் இது.

லெனின் 1919 நவம்பரில் சொன்னார்:

''அது எப்போதும் இப்படித்தான் இருக்கிறது - எதிரி உதை வாங்கும்போது அவன் சமாதானத்தைப் பற்றி பேசத் தொடங்குகிறான். சமாதானத்தை உருவாக்க நாம் ஒப்புக்கொள்கிறோம் என்று மீண்டும் மீண்டும் இந்த அய்ரோப்பிய ஏகாதிபத்திய கனவான்களுக்குச் சொல்லிவந்திருக்கிறோம், ஆனால் அவர்கள் ரசியாவை அடிமைப்படுத்துவதைப் பற்றியே தொடர்ந்து கனவு கண்டுவந்தார்கள். இப்போது தங்கள் கனவுகள் நனவுகளுக்கு இட்டுச்செல்லாது என்று புரிந்து கொண்டுள்ளார்கள்''.[1]

1921-ல் அவர் சுட்டிக் காட்டினார்:

''...ஏகாதிபத்திய சக்திகள் எல்லையற்ற வெறுப்புடன் ரசியாவை மிருகத்தனமாகத் தாக்க விரும்பிய போதிலும், அந்த சிந்தனையை அவர்கள் கைவிட வேண்டியுள்ளது. ஏனென்றால், முதலாளிய உலகத்தின் அழிவு அதிகரித்த அளவில் நடந்து வருகிறது, அதன் ஒற்றுமை மேலும் மேலும் குறைந்து கொண்டு வருகிறது. 100 கோடி மக்கட்தொகையை கொண்ட ஒடுக்கப்பட்ட காலனிய நாட்டு மக்கள் சக்தியின் நிர்ப்பந்தம் ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வாரமும் அதிகரித்து வருகிறது''[2]

---

1. *வி. இ. லெனின், ''நாட்டுப்புறத்தில் கட்சியின் வேலை பற்றிய முதல் அகில ரசிய மாநாட்டில் ஆற்றிய உரை'', தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் கூட்டு, ஆங்கிலப்பதிப்பு, மாஸ்கோ, 1959, பக்கம்-326.*
2. *வி.இ. லெனின், ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்)யின் பத்தாவது தேசிய மாநாட்டு முடிவின்போதான உரை'' தொகுப்பு நூல்கள், ரசியப் பதிப்பு, மாஸ்கோ, 1950, தொகுதி 32, பக்கம் 412-13.*

மூன்றாவதாக, சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைபிடிக்கும்போது, முதலாளிய உலகிலுள்ள வெவ்வேறு வகைப்பட்ட நாடுகளைப் பொறுத்தவரை வெவ்வேறு கொள்கைகளை லெனின் கையாண்டார்.

ஏகாதிபத்தியவாதிகளால் கொடுமைப்படுத்தப்படுகின்ற, ஒடுக்கப்படுகின்ற நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ள அவர் குறிப்பான முக்கியத்துவம் செலுத்தினார். ''ஏகாதிபத்திய நுகத்தடியின் கீழ் துன்புறும் அனைத்து மக்களின் அடிப்படை நலன்களும் ஒத்ததாக இருக்கின்றன'' என்றும், ''ஏகாதிபத்தியத்தின் உலகக் கொள்கையானது எல்லா ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கிடையே நெருங்கிய உறவுகளையும், கூட்டையும், நட்புறவையும் நிறுவுவதற்கு இட்டுச் செல்கின்றது'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரசிய அரசின் சமாதானக் கொள்கையானது ''ரசிய சோவியத் கூட்டமைப்பு சோசலிச குடியரசுக்கும் (Russian Soviet Federatea Socialist Republic) மேலும் அதிகமான அண்டை அரசுகளுக்கும் இடையில் மேலும் நெருங்கிய உறவுகள் ஏற்பட நிர்ப்பந்திக்கும்'' [1] என்று அவர் சொன்னார்.

லெனின் மேலும் சொன்னார்:

''நாம் இப்போது நமக்கு நாமே முக்கியக் கடமையை வரையறுத்துக் கொண்டுள்ளோம். சுரண்டலாளர்களைத் தோற்கடிக்க வேண்டும், ஊசலாடுபவர்களை நம்பக்கம் வென்றெடுக்க வேண்டும். இந்தக் கடமை உலகளவிலான ஒன்றாகும். ஊசலாடுபவர்களில் எல்லா முதலாளிய அரசுகளும் உள்ளடங்கும், முதலாளிய அரசுகள் என்பதால் அவை ஒரு புறம் நம்மை வெறுக்கலாம், ஆனால் மறுபுறம் அவை ஒடுக்கப்பட்ட அரசுகள் என்ற வகையில் நம்முடன் சமாதானத்தை விரும்புகின்றன.'' [2]

---

1. *வி. இ. லெனின், ''மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் பணி, சோவியத்தின் எட்டாவது அகில ரசிய பேராயத்தில் முன் வைக்கப்பட்ட அறிக்கை'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேசனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க், 1943, தொகுதி 8, பக்கம் 251, 252.*

2. *வி. இ. லெனின், ''அகில ரசிய மத்திய நிர்வாகக் கமிட்டி மற்றும் மக்கள் கமிசார் கவுன்சலின் வேலை பற்றிய அறிக்கை'', தொகுப்பு நூல்கள், ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1950, தொகுதி 30, பக்கம் 299.*

அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளுடன் சமாதானத்துக்
கான அடிப்படையை பொறுத்தவரைக்கும் அவர் சொன்னார், ''நம்மை
சீண்டுவதை அமெரிக்க முதலாளிகள் தவிர்க்கட்டும்'' ''அத்தகைய
சமாதானத்துக்குத் தடையா? நம் தரப்பில் அத்தகைய தடை
எதுவுமில்லை. அமெரிக்க (மற்றும் எல்லா) முதலாளிகளின் தரப்பிலும்
தடைக்கல்லாக இருப்பது ஏகாதிபத்தியமே''[1]

நான்காவதாக, வேறுபட்ட சமுதாய அமைப்பு முறைகளைக்
கொண்டுள்ள நாடுகளின்பால், அதிகாரத்திலிருக்கும் பாட்டாளி வர்க்கம்
கடைபிடிக்கவேண்டிய கொள்கையான சமாதானசகவாழ்வு கொள்கையை
லெனின் முன் வைத்தார். அவர் ஒரு சோசலிச நாட்டின் ஒட்டு
மொத்தஅயலுறவுக் கொள்கையாக அதை எப்போதும் ஆக்கவில்லை.
இந்த அயலுறவுக் கொள்கையின் அடிப்படை விதி பாட்டாளி வர்க்க
சர்வதேசியமே என லெனின் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தினார்.

அவர் சொன்னார், ''முதலாளியத்தை தூக்கியெறிவதற்கான தங்க
ளின் கடுமையான போராட்டத்தில் உலக முழுவதுமுள்ள தொழிலாளர்
களுக்கு உதவுவதை சோவியத் ரசியா மிகவும் சிறந்த பெருமையாகக்
கருதுகிறது''[2]

அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் விடுத்த சமாதானம் குறித்த
ஆணையில் பிராந்திய இணைப்பின்றியும் யுத்த நஷ்ட ஈடு இன்றியும்
உடனடி சமாதானத்திற்கான திட்டத்தை போரில் ஈடுபட்ட அனைத்து
நாடுகளுக்கும் முன்வைத்த லெனின், முதலாளித்துவ நாடுகளில் உள்ள
வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளர்கள் ''சமாதான குறிக்கோளை
வெற்றிகரமான முடிவுக்கு கொண்டு வரவும், அதே சமயத்தில்
அடிமைத்தனத்தின் எல்லா வடிவங்களிலிருந்தும், சுரண்டலின் எல்லா
வடிவங்களிலிருந்தும் பரந்துபட்ட உழைக்கின்ற, சுரண்டப்படுகின்ற
மக்களின் விடுதலை நோக்கத்தை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு

---

1. வி.இ. லெனின், ''நியூயார்க் மாலை சஞ்சிகை எனும் அமெரிக்க
செய்தித்தாள் நிருபரின் கேள்விகளுக்குப் பதில்'' தொகுப்பு
நூல்கள், ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1950, தொகுதி 30,
பக்கம் 340.
2. வி. இ. லெனின், ''கோமின்டான் மற்றும் பெட்ரோகிராட்
தொழிலாளர்கள் செம்படை பிரதிநிதிகளின் சோவியத் ஆகிய
வற்றின் நான்காவது உலக மாநாட்டுக்கு'', தொகுப்பு நூல்கள்,
ரசியப் பதிப்பு, மாஸ்கோ, 1950, தொகுதி 33, பக்கம் 379.

வரவும்''[1] பலதரப்பட்ட தீர்மானகரமான வலிமைமிக்க, நடவடிக்கைகள் மூலம் உதவவேண்டும் என அறைகூவல் விடுத்தார்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது பேராயத்திற்கு லெனின் வகுத்தளித்த கட்சித் திட்டத்தின் நகலானது, ''முன்னேறிய நாடுகளிலுள்ள சோசலிசப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்திற்கு ஆதரவு'' ''பொதுவாக எல்லா நாடுகளிலும் குறிப்பாக காலனிகள் மற்றும் சார்பு நாடுகளிலும் நடக்கும் ஜனநாயக இயக்கத்திற்கும் புரட்சிகர இயக்கத்திற்கும் ஆதரவு''[2] ஆகியவற்றை கட்சியின் சர்வதேசியக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக மிகத் தெளிவாக முன்வைத்தது.

அய்ந்தாவதாக, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும், தேசங்களும், ஒடுக்குகின்ற வர்க்கங்களுடனும் தேசங்களுடனும் சமாதான சகவாழ்வை மேற்கொள்வது சாத்தியமே இல்லை என்று லெனின் எப்போதும் கருதி வந்துள்ளார்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் அடிப்படைக் கடமைகள் பற்றிய ஆய்வறிக்கையில் அவர் சுட்டிக்காட்டினார்:

...''முதலாளிகள், அவர்கள் மெத்தப் படித்தவர்களாகவும், ஜனநாயக வாதிகளாகவும் இருந்தால்கூட எந்த மோசடியையும் எந்த குற்றத்தையும் மேற்கொள்ளவோ கோடிக்கணக்கான தொழிலாளர்களையும், விவசாயிகளையும் படுகொலை செய்யவோ இப்போதெல்லாம் தயங்குவதில்லை''[3]

லெனினுடைய முடிவுகளாவன :

''பெருவாரியான சுரண்டப்படுபவர்களின் விருப்பத்திற்கிணங்க முதலாளிகளை அமைதியாகக் கீழ்படிய வைப்பது என்ற சிந்தனை,

---

1. *வி. இ. லெனின், ''அமைதி குறித்த அறிக்கை'', தொழிலாளர் மற்றும் படை வீரர்களின் பிரதிநிதிகளது சோவியத்துக்களின் அகில ரசியப் பேராயத்தில் ஆற்றிய உரை, தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அ. மொ. ப., மாஸ்கோ, 1952, தொகுதி 2, பகுதி 1, பக்கம் 331.*
2. *வி.இ.லெனின்''திட்டத்தின் முதல்* (Rough Draft of a Programme) *நகல்'', ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்) ஏழாவது பேராயத்தில் ஆற்றிய உரை, தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இன்டர்நேசனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க், 1943, தொகுதி 8, பக்கம் 334.*
3. *வி. இ. லெனின், தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, இண்டர்நேசனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க், 1943, தொகுதி-10, பக்கம் 164.*

சோசலிசத்துக்கு அமைதியான சீர்திருத்த வழியிலான மாற்றம் என்ற சிந்தனை, கடைக்கோடித்தனமான, அற்பவாத முட்டாள்தனம் மட்டும் அல்ல, தொழிலாளர்களை அப்பட்டமாக ஏமாற்றுவதும், முதலாளியத்தின் கூலியடிமை முறையை அழகானதாக ஜோடிப்பதும் உண்மையை மூடிமறைப்பதுமாகும்''.[1]

தேசங்களின் சமத்துவம் பற்றி ஏகாதிபத்தியவாதிகள் கூறுவது கபடத்தனமானது என்று திரும்ப திரும்ப அவர் சுட்டிக்காட்டினார். அவர் சொன்னார்:

''சர்வதேசிய சங்கமும் (League of Nations) முதல் உலகப் போருக்குப் பிந்திய நேசநாடுகளின் கொள்கை முழுமையும் இந்த உண்மையை முன்னெப்போதைக் காட்டிலும் மிகத்தெளிவாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்தியுள்ளது; அவை முன்னேறிய நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கத்தினதும், காலனிய மற்றும் சார்பு நாடுகளிலுள்ள உழைக்கும் மக்கள் திரளினதும் புரட்சிகரமான போராட்டங்களை எல்லா இடங்களிலும் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கின்றன; முதலாளியத்தின் கீழ் தேசங்கள் ஒன்றுடன்ஒன்று சமாதானத்துடனும் வாழமுடியும் என்ற குட்டி முதலாளிய தேசியமாயை நொறுங்குவதை விரைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.''[2]

மேற்கண்டவை, சமாதான சகவாழ்வுக்கொள்கை பற்றிய லெனினுடைய அடிப்படை கருத்தாக்கங்களை உள்ளடக்குகின்றன.

லெனினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கையை ஸ்டாலின் உயர்த்திப்பிடித்தார். அவர் ரசிய நாட்டின் தலைவராக இருந்த முப்பது ஆண்டு காலமும் தொடர்ந்து இக்கொள்கையை கடைபிடித்து வந்தார். ஏகாதிபத்தியவாதிகளும், பிற்போக்குவாதிகளும் ரசியாவுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய ஆத்திரமூட்டங்களில் ஈடுபட்டபோது அல்லது ஆக்கிரமிப்புப் போர்களைத் தொடுத்தபோது மட்டுமே ரசியா மாபெரும் தேசபக்தப் போரை தொடுத்தது, தற்காப்புக்காக திருப்பித் தாக்கியது.

''முதலாளிய நாடுகளுடனான நமது உறவுகள், இரு நேரெதிரான சமுதாய அமைப்புக்கள் ஒருங்கே நிலவுவது சாத்தியமே என்ற அனுமானத்தின் அடிப்படையிலானவை'' என்றும், ''முதலாளிய நாடு

1. வி.இ. லெனின், தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, இண்டர் நேசனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க், 1943, தொகுதி 10, பக்கம் 164

2. வி. இ. லெனின், ''தேசிய மற்றும் காலனிய பிரச்சினைகள் பற்றிய ஆய்வுகளின் தொடக்க (Preliminary Draft) நகல்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப., மாஸ்கோ, 1952, தொகுதி-2, பகுதி-2, பக்கம் 464.

களுடன் சமாதான உறவுகளை மேற்கொள்வது எமது கட்டாயமான கடமை''[1] என்றும் ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் சுட்டிக்காட்டினார்:

''ஒத்துழைப்பதில் பரஸ்பர விருப்பமும், ஏற்றுக்கொண்ட கடமைகளை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வமும், சமத்துவம் மற்றும் மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதும் நிலவுமானால், முதலாளியத்துடன் கம்யூனிசத்தின் சமாதான சகவாழ்வு நிச்சயம் சாத்தியமே.''[2]

லெனினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கையை உயர்த்திப் பிடிக்கும் அதே வேளையில் ஏகாதிபத்தியத்திற்கு பணிந்து ஆதரவு பெறும் பொருட்டு, மற்ற மக்களுடைய புரட்சிகளுக்கு ஆதரவளிப்பதை கைவிடுவதை ஸ்டாலின் உறுதியாக எதிர்த்தார். அயலுறவுக் கொள்கையின் இரு நேரெதிரான வழிகள் இருப்பதையும் அவற்றில், ''இதுவா அல்லது அதுவா'' எதைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் ஆணித்தரமாக சுட்டிக்காட்டினார்.

ஸ்டாலின் எழுதிய வரிகளில் ஒன்று சொல்வதாவது: ''நமது முன்னேற்றத்தைத் தடுக்க சர்வதேச மூலதனம் தன்னால் இயன்றதனத்தையும் செய்யும் என்பதால் ரசியத் தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றி எல்லா நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தையும் ஒடுக்கப்பட்டோரையும் ஒன்று திரட்டும் புரட்சிகர கொள்கையை நாம் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றோம்.

இன்னொருவரி சொல்வதாவது: ''நமது புரட்சிகர கொள்கையை கைவிட்டு சர்வதேச மூலதனத்திற்கு பல சலுகைகளை அளிக்க சம்மதித்தால்-அந்த நிலைமையில், நமது சோசலிச நாட்டை 'நல்ல' முதலாளித்துவ குடியரசாக மாற்ற 'உதவி' செய்வதற்கு சர்வதேச மூலதனத்திற்கு சந்தேகத்திற்கிடமின்றி எவ்வித ஆட்சேபனையும் இருக்காது.''

ஸ்டாலின் ஓர் உதாரணத்தைக் காட்டினார்: ''மற்ற நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் விடுதலை இயக்கத்தை ஆதரிக்கும் கொள்

1. ஜே. வி. ஸ்டாலின், ''மத்திய கமிட்டியின் அரசியல் அறிக்கை'' ரசிய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்)யின் பதினைந்தாவது பேராயத்தில் ஆற்றிய உரை, ஆங்கிலப்பதிப்பு. அ.மொ.ப., மாஸ்கோ, தொகுதி-10, பக்கம் 296.
2. ஜே. வி, ஸ்டாலின், ''அமெரிக்கப் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதில்கள்'', பிராவ்தா, ஏப்ரல் 2,1952.

கையை நாம் கொள்கையளவில் கைவிட வேண்டும் என்று அமெரிக்கா கோருகிறது; இச்சலுகையை நாம் செய்தோமெனில், எல்லாம் எளிதாகிவிடும் என்று அது சொல்கிறது...இச்சலுகையை நாம் செய்து தர வேண்டுமா?''

அதற்கு எதிர்மறையில் அவர் பதிலளித்தார், ''...நமக்கு நாமே நேர்மையற்றவர்களாக மாறாமல், நாம் இந்த அல்லது இது போன்ற சலுகைகளை அளிக்க சம்மதிக்க முடியாது''.[1]

ஸ்டாலினுடைய இந்தக் கருத்துரைகள் இன்றைக்கும் மாபெரும் நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்தவை. உண்மையில் இரண்டு நேரெதிரான அயலுறவுக் கொள்கைகள், இரண்டு நேரெதிரான சமாதான சகவாழ்வுக் கொள்கைகள் இருக்கின்றன. இவற்றை வேறு படுத்திப் பார்ப்பது அனைத்து மார்க்சிய-லெனினியவாதிகளின் முக்கிய கடமையாகும். லெனின், ஸ்டாலின் ஆகியோருடைய கொள்கையை உயர்த்திப் பிடிக்க வேண்டும். ஸ்டாலின் மறுதலித்த கொள்கைகளான காட்டிக் கொடுக்கும் கொள்கை, சரணடைவுக் கொள்கை, புரட்சியை ஆதரிப்பதைக் கைவிடும் கொள்கை, சோசலிச அரசை ஒரு ''நல்ல'' முதலாளியக் குடியரசாக மாற்றும் கொள்கை ஆகியவற்றை உறுதியாக எதிர்க்க வேண்டும்.

லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கையை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உயர்த்திப் பிடிக்கிறது

''சமாதான சகவாழ்வுக்கான சாத்தியப்பாட்டில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அவநம்பிக்கை கொண்டிருக்கிறது'' என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் குற்றஞ்சாட்டுகிறது, லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கையை அது எதிர்ப்பதாகவும் அக்கடிதம் அவதூறாகக் குற்றஞ்சாட்டுகிறது.

இது உண்மையா? இல்லை நிச்சயமாக இல்லை.

உண்மைகளை மதிக்கும் யாரொருவரும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், சீன மக்கள் குடியரசின் அரசாங்கமும் லெனினிய சமாதான சக

1. ஜே.வி. ஸ்டாலின், ''மத்திய கமிட்டி மற்றும் மத்திய கட்டுப்பாட்டுக் கமிசனின் ஏப்ரல் கூட்டுப் பிளீனத்தின் பணி'', ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப., மாஸ்கோ 1954, தொகுதி 11, பக்கம் 58, 59-60.

வாழ்வுக் கொள்கையை ஊசலாட்டமின்றி வெற்றிகரமாக கடைப்பிடித்து வந்துள்ளன என்பதைத் தெளிவாக காணமுடியும்.

இரண்டாம் உலகப் போரிலிருந்து, சர்வதேச வர்க்க சக்திகளின் பலாபல நிலையில் ஓர் அடிப்படையான மாற்றம் ஏற்பட்டுள்ளது. எண்ணற்ற நாடுகளில் சோசலிசம் வெற்றியடைந்துள்ளது. சோசலிச முகாம் உருவாகியுள்ளது. தேசிய விடுதலை இயக்கம் விரைவாக வளர்ந்து வருகிறது. அரசியல் சுதந்திரத்தைப் புதிதாக அடைந்துள்ள பல தேசிய அரசுகள் உதித்துள்ளன. ஏகாதிபத்திய முகாம் மிகவும் பலவீனமாக்கப்பட்டிருக்கிறது. ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள் மிக அதிகமாகக் கூர்மையடைந்து வருகின்றன. இந்த நிலைமையானது, சோசலிச நாடுகளுக்கு வேறுபட்ட சமுதாய அமைப்பு முறைகளைக் கொண்ட நாடுகளின்பால் சமாதான சகவாழ்வுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு இன்னும் சாதகமான சூழ்நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்தப் புதிய வரலாற்றுச் சூழல்களில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், சீன அரசாங்கமும் லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கையை நடைமுறையில் பொருத்துவதன் மூலம் செழுமைப்படுத்தியுள்ளன.

மக்கள் சீனக் குடியரசு உதித்தபோது தோழர் மாசேதுங் கூறினார் :

''...நாங்கள் முழுக்க முழுக்க ஏகாதிபத்திய அமைப்பு முறையையும் சீன மக்களுக்கு எதிரான அதன் சதித்திட்டங்களையும்தான் எதிர்க்கிறோம் என்பதை உலகம் முழுவதற்கும் பிரகடனப்படுத்துகிறோம். சீன பிற்போக்குவாதிகளுடனான உறவுகளை முறித்துக்கொள்ளவும், அவர்களுடன் சேர்ந்து சதி செய்வதை அல்லது அவர்களுக்கு உதவுவதை நிறுத்திக்கொள்ளவும், மக்கள் சீனத்தின்பால் கபடத்தனமாக அல்ல, உண்மையான நட்புறவைக் கடைப்பிடிக்கவும் தயாராக இருந்தால் நாங்கள் சமத்துவம், பரஸ்பர நலன், பிரதேச ஒருமைப்பாட்டையும் இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் ராஜதந்திர உறவுகளை நிறுவ எந்த அயல்நாட்டு அரசாங்கத்துடனும் விவாதிக்கத் தயாராக இருக்கிறோம். எல்லா நாட்டு மக்களுடனும் நட்புபூர்வமான ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்ளவும், உற்பத்தியையும் பொருளாதார வளத்தையும் மேம்படுத்தும் பொருட்டு சர்வதேச வணிகத்தைத் தொடங்கவும் விரிவாக்கவும் சீன மக்கள் விரும்புகின்றனர்''[1]

தோழர் மாவோவால் முன்வைக்கப்பட்ட இக்கொள்கைகளுக்கேற்ப முதலில் சீன மக்களின் அரசியல் ஆலோசனை மாநாட்டால் 1949

---

1. மாசேதுங், ''புதிய அரசியல் ஆலோசனை மாநாட்டின் தயாரிப்பு கமிட்டிக்கு ஆற்றிய உரை'', தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு அ.மொ.ப., பீகிங் 1961, தொகுதி-4, பக்கம்-408.

செப்டம்பரில் நிறைவேற்றப்பட்ட பொதுத்திட்டத்திலும், பின்னர் தேசிய மக்கள் காங்கிரசால் 1954 செப்டம்பரில் நிறைவேற்றப்பட்ட மக்கள் சீனக் குடியரசின் அரசியல் சட்டத்திலும் சமாதானத்தை அடிப்படையாக கொண்ட எங்கள் அயலுறவுக் கொள்கையை நாங்கள் மிகத்தெளிவான சொற்களில் முன்வைத்தோம்.

1954-ல் சீன அரசாங்கம் புகழ்பெற்ற சமாதான சகவாழ்வின் பஞ்ச சீலக் கொள்கைகளைத் தொடக்கிவைத்தது. அவை, பிரதேச ஒருமைப் பாடு மற்றும் இறையாண்மையை பரஸ்பரம் மதித்தல், பரஸ்பர அனாக்கிரமிப்பு, ஒருவர் மற்றவர்களின் உள்விவகாரங்களில் தலை யிடாமை, சமத்துவம் மற்றும் பரஸ்பரநலன், சமாதான சகவாழ்வு ஆகியனவாகும். மற்ற ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுடன் இணைந்து 1955-ல் நடைபெற்ற பாண்டுங் மாநாட்டில் பஞ்சசீலக்கொள்கை விதிகளின் அடிப்படையில் பத்து கொள்கை விதிகளை நாங்கள் உருவாக்கினோம்.

1956-ல் சர்வதேச விவகாரங்களில் எமது நாட்டின் அனுபவங்களை தோழர் மாவோ தொகுத்து, எமது அயலுறவுக் கொள்கையின் பொதுக் கொள்கைகளை மேலும் விளக்கினார்.

''நிரந்தரமான உலக அமைதியை அடைவதற்கு, சோசலிச முகாமில் உள்ள சகோதர நாடுகளுடன் நாம் நமது நட்புறவையும் கூட்டுறவையும் மேலும் வளர்க்கவேண்டும்; அமைதியை விரும்பும் எல்லா நாடுகளுடனும் நமதுஒருமைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்தவேண்டும். நம்முடன் அமைதியோடு வாழவிரும்பும் அனைத்து நாடுகளுடனும், பிரதேச ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை பரஸ்பரம் மதித்தல், சமத்துவம் மற்றும் பரஸ்பரநலன் ஆகியவற்றின் அடிப்படையில் சகஜமான ராஜதந்திர உறவுகளை நிறுவ நாம் முயற்சிக்க வேண்டும். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெறும் தேசிய சுதந்திரம் மற்றும் விடுதலை இயக்கத்திற்கும், சமாதான இயக்கத்திற் கும், உலகம் முழுவதிலுமுள்ள எல்லா நாடுகளிலும் நடக்கும் நியாய மான போராட்டங்களுக்கும் நாம் செயல்துடிப்பான ஆதரவு தர வேண்டும்.''[1]

1957-ல் அவர் சொன்னார்:

''ரசியாவுடன் நமது ஒற்றுமையை உறுதியாக்குவது, அனைத்து சோசலிச நாடுகளுடனும் நமது ஒற்றுமையை உறுதியாக்குவது-இதுவே

1. மாசேதுங் ''சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது தேசியப் பேராயத்தில் ஆற்றிய துவக்க உரை''.

நமது அடிப்படைக் கொள்கை, இதில்தான் நமது அடிப்படை நலன் அடங்கியுள்ளது.''

''அடுத்து, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுடனும், அமைதியை விரும்பும் எல்லா மக்கள் மற்றும் நாடுகளுடனும் நமது ஒற்றுமையை உறுதிப் படுத்தவும் வளர்க்கவும் வேண்டும்.''

''ஏகாதிபத்திய நாடுகளைப் பொறுத்தவரை, அவற்றின் மக்களுடன் நாம் இணைய வேண்டும், இந்நாடுகளுடன் சமாதானத்துடன் வாழ முயற்சிக்கவேண்டும், அவற்றுடன் வணிகம் செய்ய வேண்டும், சாத்திய மானவரை அவற்றுடன் யுத்தத்தைத் தவிர்க்க வேண்டும், ஆனால் எத் தகைய சூழ்நிலைகளிலும் நாம் அவற்றைப் பற்றிய எவ்வித யதார்த்த துக்கு புறம்பான கருத்துக்களுக்கும் இடமளிக்கக் கூடாது.''[1]

கடந்த பதினான்கு ஆண்டுகளாக எமது அயலுறவு விவகாரங்களில் வெவ்வேறுவிதமான நாடுகளின்பால் நாங்கள் வேறுபட்ட கொள்கை களைக் கடைபிடித்து வந்திருக்கிறோம், ஒரே மாதிரியான நாடுகளில் வேறுபட்ட சூழ்நிலைமைகளுக்கேற்ப எமது கொள்கைகளை நாங்கள் மாற்றி வந்துள்ளோம்.

1. நாங்கள் சோசலிச நாடுகளுக்கும் முதலாளிய நாடுகளுக்கும் இடையே வேறுபாட்டைப் பார்க்கிறோம். சோசலிச நாடுகளைப் பொறுத் தவரை பரஸ்பர உதவி என்ற பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட் பாட்டில் நாங்கள் தொடர்ந்து உறுதியாக இருக்கிறோம், சோசலிச முகாமில் உள்ள அனைத்து நாடுகளின் ஒற்றுமையை உயர்த்திப் பிடிப் பதையும் உறுதிப்படுத்துவதையும் எமது அயலுறவுகளில் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ளோம்.

2. நாங்கள், புதிதாக அரசியல் சுதந்திரத்தை அடைந்துள்ள தேசிய நாடுகளுக்கும் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் இடையே வேறுபாட்டைப் பார்க்கிறோம்.

சோசலிச நாடுகளிலிருந்து தங்களுடைய சமூக மற்றும் அரசியல் அமைப்பு முறைகளில் தேசிய நாடுகள் அடிப்படையிலேயே வேறுபட்டி ருந்தபோதிலும், அவைகள் ஏகாதிபத்தியத்துடன் ஆழமான முரண்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. அவை சோசலிச நாடுகளுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய சுதந்திரத்தைப் பாதுகாப்பது உலக சமாதானத்தைக் காப்பது ஆகிய பொது

1. மாசேதுங், ''மக்களிடையே நிலவும் முரண்பாடுகளை சரியாகக் கையாள்வது பற்றி.''

நலன்களைக் கொண்டுள்ளன. எனவே, இந்நாடுகளுடன் சமாதான சகவாழ்வு, நட்புபூர்வமான கூட்டுறவு ஆகியவற்றின் அடிப்படையில் உறவுகளை நிறுவுவது சோசலிச நாடுகளுக்கு முற்றிலும் சாத்திய மானதும், செய்யக் கூடியதும் ஆகும். இத்தகைய உறவுகளை நிறுவுவ தானது, ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஒற்றுமையை உறுதிப் படுத்துவதற்கும், ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மக்களின் பொதுவான போராட்டத்தின் முன்னேற்றத்திற்கும் மிகுந்த முக்கியத்துவம் உடைய தாகும்.

ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றிலுள்ள நாடு களுடன் சமாதான சகவாழ்வு, நட்பு பூர்வமான கூட்டுறவு ஆகியவற்றை மேலும் வளர்ப்பதும் உறுதிப்படுத்துவதுமான கொள்கையை நாங்கள் முரண்பாடின்றி உறுதியுடன் பின்பற்றி வந்துள்ளோம். அதே சமயத்தில் பஞ்சசீலக் கொள்கை விதிகளை மீறி உடைத்தெறிந்துள்ள இந்தியா போன்ற நாடுகளுக்கு எதிராக சரியானதும் தேவையானதுமான போராட்டங்களை நாங்கள் தொடுத்திருக்கிறோம்.

3. நாங்கள் சாதாரண முதலாளிய நாடுகளுக்கும் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் இடையே வேறுபாட்டைப் பார்க்கிறோம். பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலும் கூட வேறுபாட்டைப் பார்க் கிறோம்.

சர்வதேச வர்க்க சக்திகளின் பலாபலநிலை சோசலிசத்திற்கு ஆதர வாக அதிகரித்த அளவில் வளர்ச்சியுறுவதாலும் ஏகாதிபத்திய சக்திகள் நாளும் பலவீனமடைவதாலும், அவற்றுக்கிடையேயான முரண்பாடுகள் நாளும் கூர்மையடைவதாலும், சோசலிச நாடுகள் வளர்ந்துவரும் தம் சொந்த வலிமையைச் சார்ந்தும், புரட்சிகர மக்கள் சக்தியின் வளர்ச்சியை சார்ந்தும், தேசிய நாடுகளுடனான ஒற்றுமையைச் சார்ந்தும், அமைதியை விரும்பும் எல்லா மக்களின் போராட்டங்களைச் சார்ந்தும், ஏகாதிபத்தியத்தின் உள் முரண்பாடுகளைப் பயன்படுத்தியும் ஒரு அல்லது இன்னொரு ஏகாதிபத்திய நாட்டை நிர்ப்பந்தப்படுத்தி அவற் றுடன் ஏதாவது ஒரு வகையிலான சமாதான சகவாழ்வை மேற்கொள்ள முடியும்.

வேறுபட்ட சமுதாய அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமா தான சகவாழ்வை தொடர்ந்து உறுதியாகக் கடைப்பிடிக்கும் அதே வேளையில் நாங்கள் எமது பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கடமையை வழிபிறழாமல் நிறைவேற்றி வருகிறோம். ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவின் தேசிய விடுதலை இயக்கங்களையும், மேற்கு அய்ரோப்பா, வட அமெரிக்கா மற்றும் ஓசியானியாவின் தொழிலாளி

வர்க்க இயக்கங்களையும் மக்களின் புரட்சிகரப் போராட்டங்களையும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் போர்க் கொள்கைகளுக்கு எதிராகவும், உலக சமாதானத்திற்காகவும் நடக்கும் மக்கள் போராட்டங்களையும் நாங்கள் ஆக்கபூர்வமாக ஆதரிக்கிறோம்.

இவை யாவற்றிலும் சோசலிச முகாமையும் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தையும் மையமாகக் கொண்டு, அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிரான ஒரு பரந்த அய்க்கிய முன்னணியை உருவாக்கும் பொருட்டு, அய்க்கியப்படுத்த முடிகின்ற எல்லா சக்திகளையும் ஒன்றுபடுத்தும் ஒரேயொரு நோக்கத்தைத்தான் கொண்டுள்ளோம்.

சமாதான சகவாழ்வின் பஞ்சசீலக் கொள்கைகளின் அடிப்படையில், கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக சீன அரசாங்கம் வேறுபட்ட சமுதாய அமைப்புகளைக் கொண்ட பல நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தியுள்ளது. அவற்றுடன் பொருளாதார மற்றும் கலாச்சார பரிவர்த்தனைகளை வளர்த்துள்ளது. ஏமன், பர்மா, நேபாளம், ஆப்கானிஸ்தான், கினியா, கம்போடியா, இந்தோனேசியா, கானா ஆகிய நாடுகளுடன் சீனா சமாதான மற்றும் நட்புறவு ஒப்பந்தம் அல்லது நட்புறவு, பரஸ்பர ஒத்துழைப்பு, பரஸ்பர அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஆகிய நட்புறவு ஒப்பந்தங்களை செய்துள்ளது. வரலாற்றின் எச்சங்களாக விடப்பட்ட பிரச்சினைகளான பர்மா, நேபாளம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடனான எல்லைப் பிரச்சினைகளை சீனா வெற்றிகரமாகத் தீர்த்துள்ளது.

லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கையை உயர்த்திப் பிடிப்பதில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், சீன அரசாங்கமும் அடைந்துள்ள மாபெரும் வெற்றிகளை யாராலும் துடைத்தெறிந்துவிட முடியாது.

சமாதான சகவாழ்வை சீனா எதிர்க்கிறது என்ற பொய்யை உருவாக்கியதில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் நேர்மையற்ற நோக்கங்களைக் கொண்டுள்ளனர். வெளிப்படையாகச் சொல்வதானால், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்குத் துரோகமிழைப்பதிலும், ஏகாதிபத்தியத்துடன் கூடிக்குலாவுவதிலும் உள்ள அவர்களுடைய சொந்த அசிங்கத்தை திரையிட்டு மறைப்பதே அவர்களின் நோக்கமாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் ''சமாதான சகவாழ்வுப்'' பொதுவழி

லெனினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கையை உண்மையில் மீறுவது நாங்களல்ல, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களே.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களுடைய சமாதான சகவாழ்வு பற்றிய கருத்தாக்கத்தை மிக உயர்வாக புகழ்ந்து மெச்சிக் கொள்கிறார்கள். சமாதான சகவாழ்வுப் பிரச்சினை பற்றிய, அவர் களுடைய முக்கியக் கண்ணோட்டங்கள் யாவை?

1. சமாதான சகவாழ்வானது நிகழ்கால சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மிக உயர்ந்த கொள்கை என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சொல்கிறார்கள். அது ''நவீன காலத்தின் மறுப்புக்கிட மற்ற உடனடித்தேவை'' என்றும் ''சகாப்தத்தின் உடனடித்தேவை''[1] என்றும் அவர்கள் வற்புறுத்திக் கூறுகிறார்கள். ''சமுதாயம் எதிர் கொண்டுள்ள மிகமிக முக்கியமான பிரச்சினைகளைத் தீர்க்க, சமாதான சகவாழ்வு மட்டுமே ஒத்துக்கொள்ளக்கூடிய சிறந்த ஒரேவழி''[2] என்றும் சமாதான சகவாழ்வுக் கொள்கையானது ''நவீன கால சமுதாயம் முழுமைக்கும் வாழ்க்கையின் அடிப்படை விதியாக''[3] ஆக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

2. சமாதான சகவாழ்வை ஒத்துக்கொள்வதற்கு ஏகாதிபத்தியம் விருப்பமுடையதாக ஆகிவிட்டது என்றும், இனியும் அதற்குத் தடையாக அது இருக்கவில்லை என்றும் அவர்கள் கருதுகிறார்கள். ''தற்போது சமாதானம் மற்றும் சகவாழ்வுக்காக மேற்கத்திய நாடுகளின் அரசாங்கங் களும், பல அரசுத்தலைவர்களும் முன்வருகிறார்கள் என்பது மட்டு மல்ல''[4] அவர்கள் ''சமாதான சகவாழ்வின் அவசியத்தை மேலும் மேலும் தெளிவாகப் புரிந்துகொண்டு வருகிறார்கள்''[5] என்று அவர்கள் கூறுகின்றனர். குறிப்பாக ஒரு அமெரிக்க ஜனாதிபதி ''வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையில் சமாதான

---

1. *பி. என். போனோமரியோவ், ''உலகக் கம்யூனிஸ்டுகளின் வெற்றிகரமான பதாகை'', ''பிராவ்தா, நவம்பர் 18, 1962.*
2. *ஏ. ரூம்யன்ட்ஸெவ், ''நமது பொதுவான சித்தாந்த ஆயுதம்'', வோர்ல்டு மார்க்சிஸ்ட் ரிவ்யூ எண்-1, 1962.*
3. *என். எஸ். குருச்சேவ், அய்.நா.பொதுச்சபையில் ஆற்றிய உரை, செப்டம்பர் 23, 1960.*
4. *என். எஸ். குருச்சேவ், இந்தோனேசியாவிலுள்ள டிஜோக் ஜகார்த்தா என்னுமிடத்திலுள்ள கட்ஜாஹ்மாடா பல்கலைக் கழகத்தில் ஆற்றியஉரை, பிப்ரவரி - 21, 1960.*
5. *என். எஸ். குருச்சேவ், ரசியாவின் தலைமை சோவியத்கூட்டத் தொடருக்கு அளித்த அறிக்கை, ஜனவரி, 1960.*

சகவாழ்வின் பகுத்தறிவுக்கு ஒத்த தன்மையையும் நடைமுறை சாத்தியப்பாட்டையும் அங்கீகரித்ததை''[1] அவர்கள் டமாரம் அடித்து அறிவிக்கின்றனர்.

3. அவர்கள் ஏகாதிபத்திய நாடுகளுடன், குறிப்பாக அமெரிக்காவுடன் ''அனைத்து வகையிலுமான கூட்டுறவை'' ஆதரிக்கிறார்கள். ரசியாவும் அமெரிக்காவும் ''மனிதகுலம் முழுமையின் நன்மைக்கான உருப்படியான நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் மேற்கொள்வதற்கான ஓர் அடிப்படையை உருவாக்கமுடியும்''[2] என்றும், ''அமைதியை உறுதிப்படுத்தும் பொருட்டும், எல்லா அரசுகளுக்கிடையிலும் உண்மையான சர்வதேச கூட்டுறவை நிறுவும் பொருட்டும் கையோடுகைகோர்த்து முன்செல்ல முடியும்''[3] என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

4. சமாதான சகவாழ்வானது ''ரசியா மற்றும் சோசலிச முகாமில் உள்ள நாடுகளின் அயலுறவுக் கொள்கையின் பொதுவழி''[4] என்றும் அவர்கள் பிரகடனப்படுத்துகிறார்கள்.

5. ''சமாதான சகவாழ்வுக் கொள்கை, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர மார்க்சிய—லெனினியக் கட்சிகளின் அயலுறவுக்கொள்கையின் பொதுவழியைத் தீர்மானிக்கிறது''[5] என்றும், அது இன்றைய உலகின் ''கம்யூனிச யுத்ததந்திரத்தின் அடிப்படை'' என்றும் எல்லா கம்யூனிஸ்டுகளும்''சமாதான சகவாழ்வுக்கான போராட்டத்தைத் தங்கள் பொதுக்கொள்கையாக வகுத்துக் கொண்டுள்ளனர்''[6] என்றும் கூட அவர்கள் பிரகடனப்படுத்துகிறார்கள்.

6. மக்களுடைய புரட்சிகரப் போராட்டங்களின் வெற்றிக்கான முன்தேவையாக சமாதான சகவாழ்வை அவர்கள் கருதுகிறார்கள். பல்வேறு நாட்டு மக்களால் அடையப்பெற்ற வெற்றியானது,''வேறுபட்ட சமுதாய

---

1. ''அமெரிக்க ஜனாதிபதி ஜே. கென்னடியின் பேட்டி பற்றி'' இஸ்வெஸ்தியாவில் வெளியான ஆசிரியர் குழுக்கட்டுரை, டிசம்பர்-4, 1961.
2. என். எஸ். குருச்சேவ் மற்றும் எல். அய். பிரஷ்னேவிடமிருந்து ஜே. எஃப். கென்னடிக்கு வாழ்த்துத்தந்தி, டிசம்பர்-30, 1961.
3. என். எஸ். குருச்சேவ், அய்.நா.பொதுச்சபையில் ஆற்றியஉரை, செப்டம்பர்-23, 1960.
4. என். எஸ். குருச்சேவ், சோவியத் யூனியனிலுள்ள கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் தூதரகத்தால் அளிக்கப்பட்ட வரவேற்பில் ஆற்றிய உரை,ஜுலை-5, 1961.
5. பி. என். போனோமரியோவ், ''புரட்சிகர இயக்கத்தின் சில பிரச்சினைகள்'',வோர்ல்டுமார்க்சிஸ்ட் ரிவ்யூ,எண்-12,1962.
6. ''சமாதானசகவாழ்வும்புரட்சியும்'',கம்யூனிஸ்ட்,எண்-2,1962.

அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கிடையில் நிலவிய சமாதான சகவாழ்வு சூழ்நிலைமைகளின்'' [1] கீழ் அடையப்பெற்றதே என்று அவர்கள் கருதுகிறார்கள். ''நிச்சயமாக, வேறுபட்ட சமுதாய அமைப்புகளைக் கொண்ட அரசுகளுக்கிடையில் நிலவிய சமாதான சகவாழ்வு சூழ்நிலைமைகளிலேயே, கியூபாவில் சோசலிசப் புரட்சி வெற்றியடைந்தது, அல்ஜீரிய மக்கள் தேசிய சுதந்திரத்தைப் பெற்றார்கள், நாற்பதுக்கும் மேலான நாடுகள் தேசிய சுதந்திரத்தை வென்றன, எண்ணிக்கையிலும் வலிமையிலும் சகோதரக் கட்சிகள் வளர்ந்தன, உலகக் கம்யூனிச இயக்கத்தின் செல்வாக்கு வளர்ந்தது'' [2] என்று அவர்கள் பிரகடனப்படுத்துகிறார்கள்.

7. சமாதான சகவாழ்வுக் கொள்கையானது, ''சர்வதேசிய புரட்சிகரத் தொழிலாளர் இயக்கம் அதன் அடிப்படை வர்க்க நோக்கங்களை அடைவதற்கு உதவும் மிகச் சிறந்த வழி'' [3] என்று அவர்கள் சொல்கிறார்கள். சமாதான சகவாழ்வின் கீழ் முதலாளிய நாடுகளில் சோசலிசத்துக்கு அமைதி வழியின் மூலம் மாற்றமடைவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது என்று அவர்கள் பிரகடனப்படுத்துகிறார்கள். மேலும் பொருளாதாரப் போட்டியில் சோசலிசம் அடையும் வெற்றியானது, ''முதலாளிய உறவுகளின் அமைப்பு முறை முழுவதற்கும் மரணஅடி கொடுப்பதாகும்'' [4] என்று அவர்கள் நம்புகிறார்கள். கம்யூனிசத்தின் மகிழ்ச்சிகளை ''ரசிய மக்கள் அனுபவிக்கும் போது, பூமியில், புதிய பல கோடிக் கணக்கான மக்கள் 'நாங்கள் கம்யூனிசத்திற்காக நிற்கிறோம்' எனச் சொல்வார்கள்'' [5] என்றும், அதற்குள் முதலாளிகள் கூட 'கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து விடலாம்' என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சற்று பரிசீலித்துப் பாருங்கள். லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கையுடன் இக்கருத்துக்கள் எவ்வகையிலாவது ஒத்துள்ளனவா?

---

1. *பி. என். போனோமரியோவ், ''முதலாளியத்தின் பொது நெருக்கடியில் ஒரு புதிய கட்டம்'', பிராவ்தா, பிப்ரவரி-8' 1961.*
2. *சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு ரசியகம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கடிதம், மார்ச்-30, 1963.*
3. *எல்லா கட்சி உறுப்பினர்களுக்கும், ரசியாவின் எல்லா கம்யூனிஸ்டுகளுக்கும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம், ஜூலை-14, 1963.*
4. *பி. என். போனோமரியோவ், ''புரட்சிகர இயக்கத்தின் சில பிரச்சினைகள்'', வோர்ல்டு மார்க்சிஸ்டு ரிவ்யூ, எண்-12, 1962,*
5. *ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்தில் நிறைவேற்றப்பட்டது.*

லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கை என்பது, வேறுபட்ட சமுதாய அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் ஒரு சோசலிச நாடு தன்னுடைய உறவுகளில் பின்பற்றக்கூடியதாகும்; ஆனால் குருச்சேவ் நவீன சமுதாயத்தின் வாழ்க்கையை நெறிப்படுத்தும் மிக உயர்ந்த கொள்கை என சமாதான சகவாழ்வை விவரிக்கிறார்.

லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கை, அதிகாரத்திலுள்ள பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசக் கொள்கையின் ஓர் அம்சமாக அமைந்துள்ளது; ஆனால் சோசலிச நாடுகளின் அயலுறவுக் கொள்கையின் பொதுவழி என்று சமாதான சகவாழ்வை வலிந்து பொருள் கொள்கிறார் குருச்சேவ். அதை எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளினதும் பொதுவழி என்று கூட மேலும் நீட்டித்துப் பொருள் கொள்கிறார் அவர்.

லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கை ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் போர்க் கொள்கைகளுக்கு எதிராக வரையறுக்கப் பட்டது. ஆனால் குருச்சேவின் சமாதான சகவாழ்வு, ஏகாதிபத்தியத் திற்கு சேவை செய்வதாகவும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் போர்க் கொள்கைகளுக்கு உதவுவதாகவும் உள்ளது.

லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கை சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், குருச்சேவின் சமாதான சகவாழ்வு, சர்வதேச வர்க்கப் போராட்டத்திற்குப் பதிலாக சர்வதேச வர்க்க சமரசத்தை முன்வைப்பதற்கு முயற்சிக்கிறது.

லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள்கை சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப்பூர்வமான இலட்சியத்திலிருந்து தொடங்கு கிறது; எனவே இக்கொள்கையை கடைப்பிடிக்கையில் எல்லா ஒடுக்கப்பட்ட மக்களின், தேசங்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு சோசலிச நாடுகள் உறுதியான ஆதரவைத் தருவது தேவையாகிறது; ஆனால் குருச்சேவின் சமாதான சகவாழ்வானது பாட்டாளி வர்க்க உலகப் புரட் சிக்குப் பதிலாக ஏமாற்றுத்தனமான அமைதிக் கோட்பாட்டை (Pacifism) முன்வைப்பதாகவும், அதன் மூலம் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் கைவிடுவதாகவும் உள்ளது.

சமாதான சகவாழ்வுக் கொள்கையை, வர்க்க சரணாகதியாக குருச்சேவ் மாற்றிவிட்டார். சமாதான சகவாழ்வு என்ற பெயரில், 1957-ம் ஆண்டு பிரகடனம் மற்றும் 1960-ம் ஆண்டு அறிக்கை ஆகியவற்றின் புரட்சிகரக் கோட்பாடுகளை அவர் கைவிட்டு விட்டார். மார்க்சிய—லெனினியத்தின் புரட்சிகர ஆன்மாவையே கொள்ளையடித்து அதை அடையாளம் காணமுடியாத அளவுக்குப் புரட்டி சிதைத்துவிட்டார்.

இது மார்க்சிய-லெனினியத்துக்கு இழைக்கப்பட்ட ஒரு வெட்கங் கெட்ட துரோகமாகும்!

கொள்கை விதியில் மூன்று வேறுபாடுகள்

சமாதான சகவாழ்வுப் பிரச்சினையைப் பொறுத்தவரை, ஒரு பக்கத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கும், மறுபக்கத்தில் நமக்கும், அனைத்து மார்க்சிய-லெனினிய கட்சிகளுக்கும், உண்மையில் எல்லா மார்க்சிய-லெனினியவாதிகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் சோசலிச நாடுகள் சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமா இல்லையா என்பதல்ல. அது லெனினியசமாதானசகவாழ்வுக் கொள்கையின்பாலான சரியான அணுகுமுறை பற்றிய பிரச்சினையாகும். அது முக்கியமாக மூன்று கேள்விகளில் வெளிப்படுகிறது.

முதல்கேள்வி: சமாதான சகவாழ்வை அடையும் பொருட்டு ஏகாதிபத்தியம் மற்றும் முதலாளியப் பிற்போக்கு ஆகிய வற்றுக்கு எதிராகப் போராடுவது அவசியமா? சமாதான சகவாழ்வின் மூலம், சோசலிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான பகைமையையும், போராட்டத்தையும் ஒழிப்பது சாத்தியமா?

சோசலிச நாடுகளைப் பொறுத்தவரை வேறுபட்ட சமுதாயஅமைப்பு களைக் கொண்ட நாடுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வை நடைமுறைப்படுத்துவதில் எவ்விதத்தடையும் இல்லையென மார்க்சிய-லெனினியவாதிகள் தொடர்ந்து கூறி வந்துள்ளனர். தடைகள் எப்போதுமே ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்தும் முதலாளியப் பிற்போக்கு வாதிகளிடமிருந்தும்தான் வருகின்றன.

சமாதான சகவாழ்வின் பஞ்சசீலக் கொள்கைவிதிகள் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக்கொள்கைகளை எதிர்த்துப் போராடவே முன்வைக்கப்பட்டன. இக்கொள்கை விதிகளின்கீழ், மற்ற நாடுகளின் பிரதேசங்களையும் இறையாண்மையையும் மீறுவது, அவற்றின் உள்விவகாரங்களில் தலையிடுவது, அவற்றின் நலன்களுக்கும் சமத்துவ அந்தஸ்துக்கும் பங்கம் விளைவிப்பது அல்லது அவற்றுக்கு எதிராக ஆக்கிரமிப்பு யுத்தங்களைத் தொடுப்பது ஆகியவை சர்வதேச உறவுகளில் அனுமதிக்கமுடியாததாகும். ஆனால் மற்ற நாடுகளுக்கும் தேசங்களுக்கும் எதிராக ஆக்கிரமிப்புக்களை நடத்துவதும், அவற்றை

அடிமைப்படுத்த முயற்சிப்பதும் ஏகாதிபத்தியத்தின் இயல்பாகும். ஏகாதிபத்தியம் நிலவும்வரை, அதன் இயல்பு என்றுமே மாறாது. அதனால்தான் இயல்பாகவே ஏகாதிபத்தியவாதிகள் சமாதான சக வாழ்வின் பஞ்சசீலக்கொள்கை விதிகளை ஏற்றுக்கொள்ள விருப்பமற்ற வர்களாக இருக்கின்றனர். எப்போதெல்லாம் சாத்தியமோ, அப்போ தெல்லாம் அவர்கள் சோசலிச நாடுகளை சீர்குலைக்கவும் அழிக்கவும் முயல்கிறார்கள். மற்ற நாடுகளுக்கும் தேசங்களுக்கும் எதிராக ஆக்கிர மிப்புக்களை நடத்துகிறார்கள்; அவற்றை அடிமைப்படுத்த முயற்சிக் கிறார்கள்.

சாதகமற்ற புறநிலைக் காரணங்களாலேயே, ஏகாதிபத்தியவாதிகள் சோசலிசநாடுகளுக்கு எதிராக ஒருயுத்தத்தை தொடங்கத் துணிவதில்லை அல்லது ஒரு போர் நிறுத்தத்துக்கு உடன்படுவதற்கும் ஏதோ ஒருவகை சமாதான சகவாழ்வை ஏற்றுக்கொள்ளவும் அவர்கள் நிர்பந்திக்கப் படுகிறார்கள் என்பதை வரலாறு காட்டுகிறது.

ஏகாதிபத்திய நாடுகளுக்கும் சோசலிச நாடுகளுக்கும் இடையே எப்போதுமே கூர்மையான, சிக்கலான போராட்டங்கள் இருந்து வந்திருக்கின்றன எனவும், அவை சில சமயங்களில் நேரடியான இராணுவ மோதல்களிலோ அல்லது யுத்தங்களிலோ முடிவடைந்திருக் கின்றன எனவும் வரலாறு மேலும் காட்டுகிறது. நேரடியான யுத்தங்கள் நடைபெறாதபோது ஏகாதிபத்தியவாதிகள் கெடுபிடி யுத்தத்தை நடத்துகின்றனர். அதை அவர்கள் இரண்டாம் உலகப்போர் முடிவடைந்ததிலிருந்து இடைவிடாமல் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர். உண்மையில் ஏகாதிபத்திய நாடுகளும் சோசலிச நாடுகளும் கெடுபிடி யுத்த சகவாழ்வு சூழ்நிலைமையிலேயே வாழ்ந்து வருகின்றன. அந்த சமயத்தில் ஏகாதிபத்தியங்கள் தளவாடங்களை தீவிரமாகப் பெருக்குகின்றன. போருக்கான தயாரிப்பு செய்வதில் ஈடுபடு கின்றன.

சோசலிச நாடுகளை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியா கவும், சிந்தாந்த ரீதியாகவும் எதிர்க்க ஒவ்வொரு வாய்ப்பையும் ஏகாதிபத்திய நாடுகள் பயன் படுத்துகின்றன; சோசலிச நாடுகளுக்கு எதிராக இராணுவ ஆத்திரமூட்டல்களையும் யுத்த அச்சுறுத்தல்களையும் கூட அவை மேற்கொள்கின்றன. சோசலிச நாடுகளுக்கு எதிரான ஏகாதிபத்தியத்தின் கெடுபிடிப்போரும், அவற்றை எதிர்த்து சோசலிச நாடுகள் போராடுவதும் சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் வெளிப் பாடுகளாகும்.

சோசலிச நாடுகளுக்கு எதிராக மட்டுமல்ல, உலகம் முழுவதுமே ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தத் திட்டங்களுடன் தீர்மானகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்களின், நாடுகளின் புரட்சிகர இயக்கங்களை அடக்குவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

இந்த சூழ்நிலைமைகளில், சோசலிச நாடுகள் மற்ற எல்லா நாட்டு மக்களுடனும் இணைந்து கொண்டு, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கைகளைத் தீர்மானகரமாக எதிர்த்துப் போராடவேண்டும். ஏகாதிபத்தியத்திற்கு எதிராக பழிக்குப் பழி (Tit for tat) என்ற வகையில் எதிர்த்துப் போராட வேண்டும். இந்த வர்க்கப் போராட்டம் தவிர்க்க இயலாதவாறு சில நேரங்களில் கூர்மையாகவும் சில நேரங்களில் தளர்ந்த வடிவத்திலும் நடக்கிறது.

ஆனால் குருச்சேவ் இந்த மாற்றமுடியாத உண்மைகளுக்கு செவி சாய்ப்பதாயில்லை. ஏகாதிபத்தியம் ஏற்கனவே சமாதான சகவாழ்வின் அத்தியாவசியத்தை ஏற்றுக் கொண்டது என்று அவர் எங்கும் பறை சாற்றி வருகிறார்; சோசலிச நாடுகள் மற்றும் உலக மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் சமாதான சகவாழ்வுக் கொள்கைக்குப் பொருத்தமற்றவை என அவர் கருதுகிறார்.

சோசலிச நாட்டை ஏகாதிபத்தியமும், முதலாளியப் பிற்போக்குவாதிகளும், இராணுவ அச்சுறுத்தல்களுக்கும், ஆயுதத் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கும்போதும், அல்லது அதன் இறையாண்மையையும் மதிப்பையும் பாதிக்கக் கூடிய வெட்ககரமான கோரிக்கைகளை முன் வைக்கும் போதும் கூட, அவர்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாக சலுகைகளை அளிக்க வேண்டும் என்றும் அவர்களுக்குத் தொடர்ந்து பணிந்து போகவேண்டும் என்றும் கருதுகிறார் குருச்சேவ்.

இந்த வாதப்படி குருச்சேவ் தனது தொடர்ச்சியான பின்னடைவுகளையும், கோட்பாடற்ற பேரங்களையும், கரிபியன் நெருக்கடியின்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கேவலப்படுத்தும் கோரிக்கைகளை அடிமையைப் போல் ஒத்துக்கொண்டதையும் கூட ''சமாதான சகவாழ்வின் வெற்றி'' என்று வர்ணிக்கிறார்.

அதே வாதத்தின்படி, சீன-இந்திய எல்லைப்பிரச்சினையில் சரியான கொள்கைகளில் சீனா உறுதியாக நின்றதையும், இந்தியப் பிற்போக்காளர்களின் இராணுவத் தாக்குதலுக்கு எதிராக சீனா திருப்பித் தாக்கியதையும், அதாவது நிலைமை சகித்துக்கொள்ள முடியாததாக மாறியபோது சீனா மேற்கொண்ட தற்காப்பு நடவடிக்கையையும் ''சமாதான சகவாழ்வை மீறிய செயல்'' என்று குருச்சேவ் வர்ணிக்கிறார்.

சில சமயங்களில், இரு வேறுபட்ட சமுதாய அமைப்புகளுக்கு இடையிலான போராட்டத்தைப் பற்றியும் குருச்சேவ் பேசுகிறார். ஆனால் இந்தப் போராட்டத்தை அவர் எவ்வாறு பார்க்கிறார்?

அவர் சொல்லியிருக்கிறார் ''இரண்டு சமுதாய அமைப்புகளுக்கு இடையிலான தவிர்க்க இயலாத போராட்டம் முற்றிலும் கருத்துப் போராட்டம் என்ற வடிவத்தை மட்டுமே மேற்கொள்ளச் செய்ய வேண்டும்...''[1]

இங்கு அரசியல் போராட்டம் மறைந்துவிட்டது.

அவர் மேலும் சொல்லியிருக்கிறார்:

''வேறுபட்ட சமூக பொருளாதார, அரசியல் அமைப்பு முறைகளைக் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வு எனும் லெனினியக்கொள்கை யானது, வெறும் யுத்தமில்லாத நிலையை மட்டும், அதாவது நிலையற்ற போர் நிறுத்தத்தின் தற்காலிக நிலைமையை மட்டும் பொருள்படுத்த வில்லை. அரசுகளுக்கிடையில் நட்பு ரீதியான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகள் நிலவுவதை அது முன் அனுமானிக்கிறது. அமைதி யான சர்வதேசக் கூட்டுறவு பல்வேறு வடிவங்களில் நிறுவப்படுவதையும் வளர்க்கப்படுவதையும் அது முன் அனுமானிக்கிறது.''[2]

இங்கு போராட்டம் ஒட்டுமொத்தமாக மறைந்துவிட்டது!

ஒரு மந்திரவாதியைப்போல், ஒரு தந்திரத்துக்குப்பின் இன்னொரு தந்திரத்தைக் காட்டுகிறார் குருச்சேவ்; முதலில் பெரிய பிரச்சினைகளை சிறியதாக்குகிறார், பிறகு சிறிய விசயங்களை ஒன்றுமில்லாததாக ஆக்குகிறார். சோசலிச அமைப்பு முறைக்கும் முதலாளிய அமைப்பு முறைக்கும் இடையிலான அடிப்படையான பகைமையை அவர் மறுக்கிறார், சோசலிச முகாமுக்கும் முதலாளிய முகாமுக்கும் இடையிலான அடிப்படை முரண்பாட்டை அவர் மறுக்கிறார். சர்வதேச வர்க்கப் போராட்டம் நிலவுவதை அவர் மறுக்கிறார். எனவே இரண்டு சமுதாய அமைப்பு முறைகள் மற்றும் இரு முகாம்களுக்கு இடையிலான சமாதான சகவாழ்வை, ''அனைத்து வகையிலுமான கூட்டுறவாக'' அவர் மாற்றுகிறார்.

---

1. *என். எஸ். குருச்சேவ், சோவியத்யூனியனின் சுப்ரீம் சோவியத் கூட்டத்தொடருக்கு அறிக்கை, ஜனவரி, 1960.*
2. *என். எஸ். குருச்சேவ், ''ஆஸ்திரியப் பேராசிரியர் ஹான்ஸ் திர்ரிங்கின் கேள்விகளுக்குப் பதில்கள்'', பிராவ்தா, ஜனவரி-3, 1962.*

இரண்டாவது கேள்வி: சமாதான சகவாழ்வை சோசலிச நாடுகளின், அயலுறவுக் கொள்கையின் பொது வழியாக ஆக்க முடியுமா?

சோசலிச நாடுகளின் அயலுறவுக் கொள்கையின் பொதுவழியானது, அவற்றின் அயலுறவுக் கொள்கையின் அடிப்படைக் கொள்கை விதியை உட்கொண்டிருக்க வேண்டும் என்றும், அந்தக் கொள்கையின் அடிப்படை சாராம்சத்தை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்றும் நாங்கள் கருதுகிறோம்.

இந்த அடிப்படைக் கொள்கை விதி என்ன? அது பாட்டாளி வர்க்க சர்வதேசியமாகும்.

லெனின் கூறினார், ''பாட்டாளி வர்க்கத்தின் அயலுறவுக் கொள்கையானது, எல்லா ஏகாதிபத்தியங்களுக்கும் மற்றும் எந்தவொரு ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக முன்னேறிய நாடுகளின் புரட்சியாளர்களுடனும் அனைத்து ஒடுக்கப்பட்ட தேசங்களுடனும் நேசஉறவு கொள்வதாகும்.''[1] லெனினால் முன்வைக்கப்பட்ட இந்த பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கையே சோசலிச நாடுகளின் அயலுறவுக் கொள்கைக்கான வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

சோசலிச முகாம் உருவானதிலிருந்து, ஒவ்வொரு சோசலிச நாடும் தன் அயலுறவுக் கொள்கையில் மூன்றுவித உறவுகளைக் கையாள வேண்டியிருக்கும்; அவை மற்ற சோசலிச நாடுகளுடனான அதன் உறவுகள், வேறுபட்ட சமுதாய அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடனான அதன் உறவுகள், ஒடுக்கப்பட்ட மக்களுடனும் நாடுகளுடனுமான அதன் உறவுகள் ஆகியனவாகும்.

எனவே எமது கண்ணோட்டத்தில், பின் வருவனவே சோசலிச நாடுகளுக்கான அயலுறவுக் கொள்கையின் பொது வழியினுடைய உள்ளடக்கமாக இருக்க வேண்டும்: பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கை விதிக்கேற்ப சோசலிச முகாமைச் சேர்ந்த நாடுகளுக்கிடையே நட்பு, பரஸ்பர உதவி மற்றும் கூட்டுறவு ஆகிய உறவுகளை வளர்ப்பது; வேறுபட்ட சமுதாய அமைப்பு முறைகளுடன் கூடிய நாடுகளுடன் பஞ்சசீலக் கொள்கைகளின் அடிப்படையில் சமாதான சகவாழ்வுக்காக முயற்சிப்பதும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக்கொள்கைகளை எதிர்ப்பதும்; அனைத்து ஒடுக்கப்பட்ட மக்கள், நாடுகளின் புரட்சிகரப் போராட்டங்

---

1. வி. இ. லெனின், ''ரசியப் புரட்சியின் அயலுறவுக் கொள்கை'' தொகுப்பு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ 1964, தொகுதி 25, பக்கம் 87.

களுக்குஆதரவளிப்பதும்,துணைபுரிவதும். இந்த மூன்று அம்சங்களும் ஒன்றுடன்ஒன்று இணைந்ததாகும்; அதில் ஒன்றைக்கூட விட்டுவிடமுடியாது.

சோசலிச நாடுகளின் அயலுறவுக் கொள்கையின் பொது வழியை சமாதான சகவாழ்வாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் ஒருதலைப் பட்சமாகக் குறுக்கிவிட்டார்கள். நாங்கள் இவ்வாறு கேட்க விரும்புகிறோம்: ஒரு சோசலிச நாடு மற்ற சோசலிச நாடுகளுடன் எவ்வாறு தன்னுடைய உறவுகளைக் கையாள வேண்டும்? அவற்றுடன் வெறும் சமாதான சகவாழ்வு உறவுகளை மட்டுமே அது மேற்கொள்ள வேண்டுமா?

சோசலிச நாடுகளும் கூட தங்களுடைய பரஸ்பர உறவுகளில் பஞ்சசீலக் கொள்கைவிதிகளின்படி நிச்சயம் நடந்துகொள்ள வேண்டும்தான். அவற்றில் எது ஒன்றும் மற்றொரு சகோதர நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டை பலவீனப்படுத்தவோ, அதன் சுதந்திரத்தையும், இறையாண்மையையும் பாதிக்கவோ,அதன்உள்விவகாரங்களில் தலையிடவோ அதனுள் சீர்குலைவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ, அல்லது மற்றொரு சகோதர நாட்டுடனான தன்னுடைய உறவுகளில் சமத்துவம் மற்றும் பரஸ்பர நலன் எனும் கொள்கை விதியை மீறவோ நிச்சயமாக அனுமதிக்க முடியாது. ஆனால் இக் கொள்கை விதிகளை மட்டும் நடைமுறைப்படுத்துவது கொஞ்சம் கூடப் போதாது. 1957 பிரகடனம் அறிவிப்பதாவது:

''இவை மிக முக்கியமான கொள்கைவிதிகளாகும். இருப்பினும் அவற்றுக்கிடையிலான உறவுகளின் சாராம்சத்தை இவை முழுமையாக வெளியிடவில்லை. சகோதர பரஸ்பர உதவியானது நட்புறவுகளின் முக்கிய பகுதியாகும் (Part and Parcel). இந்த உதவியானது சோசலிச சர்வதேசியத்தின் மகத்தான வெளிப்பாடாகும்.''

சமாதான சகவாழ்வை அயலுறவுக் கொள்கையின் பொதுவழியாக ஆக்கியதில் சோசலிச நாடுகளுக்கிடையிலான பரஸ்பர உதவி மற்றும் கூட்டுறவு என்னும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உறவுகளை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உண்மையில் ஒழித்துக்கட்டிவிட்டனர். சகோதர சோசலிச நாடுகளை முதலாளிய நாடுகளுடன் சமப்படுத்தி விட்டார்கள். இது சோசலிச முகாமைக் கலைப்பதேயாகும்.

சோசலிச நாடுகளின் அயலுறவுக் கொள்கையின் பொதுவழியை சமாதான சகவாழ்வாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் ஒருதலைப் பட்சமாக தாழ்த்தி விட்டார்கள். நாங்கள் கேட்க விரும்புகிறோம்: ஒரு சோசலிச நாடு, ஒடுக்கப்பட்ட மக்களுடனும், தேசங்களுடனும் தன்னுடைய உறவுகளை எவ்வாறு கையாள வேண்டும்? அதிகாரத்திலுள்ள பாட்டாளி

வர்க்கத்துக்கும், இன்னும் விடுதலை செய்து கொள்ளாத தங்களுடைய வர்க்க சகோதரர்களுக்கும் இடையிலான உறவு அல்லது அதற்கும் எல்லா ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் தேசங்களுக்கும் இடையிலான உறவு, பரஸ்பர உதவி என்றில்லாமல், சமாதான சகவாழ்வு என்ற ஒன்றாக மட்டுமே இருக்க வேண்டுமா?

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவியுள்ள சோசலிச பூமியானது பாட்டாளி வர்க்க உலகப் புரட்சி முன்னேற உதவும் ஒரு தளம் என்று அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் லெனின் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளார். ஸ்டாலினும் கூட சொன்னார்:

''ஒரு நாட்டில் வெற்றிகரமாக நிறைவேறிய புரட்சியானது, தன்னை சுய நிறைவடைந்த ஒன்றாகக் கருதவேகூடாது. மாறாக எல்லா நாடுகளிலுமுள்ள பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியை விரைவு படுத்த உதவுவதற்கான சாதனமாகக் கருதவேண்டும்.''[1]

அவர் மேலும் சொன்னார், ''தனது வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்வதற்கான (அதாவது, உலகப் புரட்சிக்கான) ஒரு வலுமிக்க தளமாக... அது அமைந்திருக்கிறது.''[2]

எனவே, தங்களுடைய அயலுறவுக் கொள்கையில், சோசலிச நாடுகள் மற்ற வேறுபட்ட சமுதாய அமைப்பு முறைகளைக் கொண்ட நாடுகளுடன் உறவுகளைக் கையாள்வதோடு மட்டும் தங்களை ஒருபோதும் கட்டுப்படுத்திக்கொள்ளக்கூடாது. மாறாக தங்களுக்கிடையிலான உறவுகளையும், ஒடுக்கப்பட்ட மக்களுடனும் தேசங்களுடனுமான தங்களின் உறவுகளையும் சரியாகக் கையாளவேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களின், தேசங்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு ஆதரவளிப்பதை தங்களுடைய சர்வதேசியக் கடமையாகவும் தங்களுடைய அயலுறவுக் கொள்கையின் முக்கியமான கூறாகவும் கொள்ளவேண்டும்.

லெனினுக்கும், ஸ்டாலினுக்கும் மாறாக, சோசலிச நாடுகளின் அயலுறவுக் கொள்கையின் பொதுவழியாக சமாதான சகவாழ்வை குருச்சேவ் ஆக்கியிருக்கிறார்; அவ்வாறு செய்வதின் மூலம், ஒடுக்கப்பட்ட மக்களின், தேசங்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு உதவும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய கடமையை அக்கொள்கையிலிருந்து ஒதுக்கிவிடுகிறார். இது சமாதான சகவாழ்வுக் கொள்கையின் 'ஆக்கபூர்வமான வளர்ச்சி'யல்ல, மாறாக சமாதான சகவாழ்வு என்ற பெயரில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கு இழைக்கப்படும் துரோகமாகும்.

---

1. ஜே. வி. ஸ்டாலின், ''அக்டோபர் புரட்சியும் ரசிய கம்யூனிஸ்ட்களின் போர்தந்திரமும்'' ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப.. மாஸ்கோ, 1953, தொகுதி 6, பக்கம் 415.
2. மேற்கண்ட புத்தகம், பக்கம் 419.

மூன்றாவது கேள்வி: சோசலிச நாடுகளின் சமாதான சகவாழ்வுக் கொள்கை, எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளினதும், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தினதும் பொது வழியாக இருக்க முடியுமா? மக்கள் புரட்சிக்கு மாற்றாக இதை முன் வைக்க முடியுமா?

வேறுபட்ட சமுதாய அமைப்புகளுடன் கூடிய நாடுகளுக்கு இடையிலான உறவுகளையும், சுதந்திரமான இறைமையுடன் கூடிய அரசுகளுக்கு இடையிலான உறவுகளையும் சமாதான சகவாழ்வு பொருள் படுத்துகிறது என்று நாங்கள் கருதுகிறோம். கட்சியின் வெற்றிக்குப் பிறகு மட்டுமே சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடிக்க பாட்டாளி வர்க்கத்துக்கு சாத்தியமும் அவசியம் இருக்கிறது. ஒடுக்கப் பட்ட மக்கள் மற்றும் தேசங்களைப் பொறுத்தவரை அவர்களது கடமையானது, தங்களது சொந்த விடுதலைக்காக முயற்சிப்பதும், ஏகாதிபத்தியம் மற்றும் அதன் அடிவருடிகளது ஆட்சியைத் தூக்கி யெறிவதுமாகும். அவர்கள் ஏகாதிபத்தியத்துடனும், அதன் அடிவருடி களுடனும் சமாதான சகவாழ்வை மேற்கொள்ள முடியாது. அவர்கள் அவ்வாறு செய்வதும் சாத்தியமானதல்ல.

எனவே, ஒடுக்கப்படும் வர்க்கங்களுக்கும் ஒடுக்கும் வர்க்கங்களுக்கும் இடையிலும், ஒடுக்கப்படும் தேசங்களுக்கும் ஒடுக்கும் தேசங்களுக்கும் இடையிலும் சமாதான சகவாழ்வைப் பொருத்துவதும், சோசலிசநாட்டின் சமாதான சகவாழ்வுக் கொள்கையை முதலாளிய உலகத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் புரட்சிகர மக்களின் கொள்கையாக விரிவு படுத்துவதும் அல்லது ஒடுக்கப்படும் மக்கள் மற்றும் நாடுகளின் புரட்சிகர போராட்டங்களை இதற்கு உட்பட்டதாக்குவதும் தவறாகும்.

லெனினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கையை சோசலிச நாடுகள் சரியாக நடைமுறைப்படுத்தும் போது, அது அவற்றின் வலிமையை வளர்க்கவும், ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக் கொள்கைகளை அம்பலப் படுத்தவும், அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் மற்றும் நாடுகளை அய்க்கியப்படுத்தவும் உதவுகிறது என்றும், அதன் மூலம் ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிரான மக்கள் போராட்டங்களுக்கு உதவுகிறது என்றும் நாங்கள் எப்போதுமே கருதி வந்திருக்கிறோம். அதே சமயத்தில், ஆக்கிரமிப்பு, யுத்த மற்றும் பிற் போக்கு சக்திகளை நேரடியாகத் தாக்குவது, பலவீனப்படுத்துவது ஆகிய வற்றின் மூலம், ஏகாதிபத்தியம் மற்றும் அதன் அடிவருடிகளுக்கு எதிரான மக்களின் புரட்சிகரப் போராட்டங்கள் உலக சமாதானத்தின் நலனுக்கும் மனிதகுல வளர்ச்சிக்கும் உதவுகிறது; இவ்வாறு வேறுபட்ட சமுதாய அமைப்பு முறைகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான

சகவாழ்வைக் காப்பதற்கான சோசலிசநாடுகளின் போராட்டத்திற்குஅது உதவுகிறது. இவ்வாறாக லெனினுடைய சமாதான சகவாழ்வுக்கொள்கை சரியாக நடைமுறைப்படுத்தபடுவதானது, அனைத்து நாடுகளிலும் மக்களின் புரட்சிகரப் போராட்ட நலன்களுக்கு இசைவானதாக உள்ளது.

இருந்தபோதிலும், வேறுபட்ட சமுதாய அமைப்பு முறைகளுடன் கூடிய நாடுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வுக்காக சோசலிச நாடுகள் நடத்தும் போராட்டமும், பல்வேறு நாடுகளில் நடைபெறும் மக்களின் புரட்சியும் முற்றிலும் இரு வெவ்வேறான விசயங்களாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்தியகமிட்டிக்கு ஜூன் 14-ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய கடிதம் கூறுவதாவது:

''...வேறுபட்ட சமுதாய அமைப்பு முறைகளுடன் கூடிய நாடுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வை நடைமுறைப்படுத்துவது ஒரு விசயம். சமாதான சகவாழ்வைக் கடைப்பிடிக்கும் நாடுகளில் ஒரு நாடு மற்றொரு நாட்டின் சமுதாய அமைப்பு முறையின் ஒரு தலைமுடியைக் கூடத் தொடுவது அறவே அனுமதிக்க முடியாததும், சாத்தியமற்றதும் ஆகும். பல்வேறு நாடுகளில் நடைபெறும் வர்க்கப் போராட்டம், தேசிய விடுதலைக்கான போராட்டம், முதலாளியத்திலிருந்து சோசலிசத்துக்கு மாற்றமடைவது ஆகியவை முற்றிலும் வேறு விசயம்.

இவையாவும், சமுதாய அமைப்பு முறையை மாற்றுவதை நோக்கமாகக்கொண்ட கசப்பான, வாழ்வா சாவா எனும் புரட்சிகரப் போராட்டங்களாகும். சமாதான சகவாழ்வு மக்களின் புரட்சிகரப் போராட்டங் டங்களுக்கு மாற்றாக முடியாது. எந்தவொரு நாட்டிலும் முதலாளியத்திலிருந்து சோசலிசத்துக்கு மாற்றமடைவது அந்த நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலமும் மட்டுமே நடக்க முடியும்.

ஒரு வர்க்க சமுதாயத்தில் சமாதான சகவாழ்வை ''சமுதாயம், எதிர் கொள்ளும் உயிர் நாடியான முக்கியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மிகச் சிறந்ததும், ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரே வழி'' என்றும் ''நவீன சமுதாயம் முழுமைக்குமான வாழ்வின் அடிப்படை விதி'' என்றும் கருதுவது முழுக்க முழுக்க தவறானதாகும். இது வர்க்கப் போராட்டத்தை மறுக்கும் ஏமாற்றுத்தனமான சமூக அமைதிக்கோட்பாடு ஆகும் (Social Pacifism) . இது மார்க்சிய-லெனினியத்துக்கு இழைக்கப்படும் மானக்கேடான துரோகமாகும்.

1946-ல் தோழர் மாவோ இரண்டு பிரச்சினைகளையும் வேறுபடுத்தினார். சில விசயங்களில் சோவியத் யூனியனும், அமெரிக்கா,

பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் செய்து கொள்ளும் சமரசங்களை "முதலாளிய உலகத்தில் உள்ள மக்கள் அப்படியே பின்பற்றி தங்கள் நாட்டில் சமரசங்களைச் செய்ய வேண்டியதில்லை. அந்நாடுகளிலுள்ள மக்கள் தங்களுடைய வேறுபட்ட சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப வேறுபட்ட போராட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்வர்"[1] என்று அவர் மிகத் தெளிவாகவே குறிப்பிட்டார்.

இது ஒரு சரியான மார்க்சிய-லெனினியக் கொள்கையாகும். தோழர் மாசேதுங்கின் இந்த சரியான கொள்கையால் வழிகாட்டப் பட்டு, சீன மக்கள் உறுதியாகவும் தீர்மானகரமாகவும் புரட்சியை இறுதி வரைக்கும் கொண்டு சென்று தங்களுடைய புரட்சியின் மாபெரும் வெற்றியை சாதித்தார்கள்.

இந்த மார்க்சிய-லெனினியக் கொள்கைக்கு எதிராக ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், வேறுபட்ட சமுதாய அமைப்பு முறைகளைக் கொண்ட நாடுகளுடன், அதிகாரத்திலுள்ள பாட்டாளி வர்க்கம் தன் அரசு உறவுகளில் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கையின் ஓர் அம்சத்தை எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளின் பொதுவழியுடன் சமப்படுத்துகிறார்கள். அவர்கள் முந்தியதை பிந்தியதற்கு ஒரு மாற்றாகப் பொருத்த முயற்சிக்கிறார்கள். அவர்கள் சமாதான சகவாழ்வுப் பொதுவழி என்று சொல்லிக் கொள்வதை எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும், எல்லா புரட்சிகர மக்களும் பின்பற்றவேண்டும் என்று கோருகிறார்கள். புரட்சியை விரும்பாத அவர்கள், மற்றவர்கள் அதை செய்வதையும் தடுக்கிறார்கள். ஏகாதிபத்தியத்தை எதிர்க்காத அவர்கள், மற்றவர்கள் அதை எதிர்ப்பதையும் தடுக்கிறார்கள்.

இதை ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதமும், குருச்சேவின் சமீபத்திய பேச்சுக்களும் பெருமுயற்சியுடன் மறுத்திருக்கின்றன. ஒடுக்கப்படும் வர்க்கங்களுக்கும் ஒடுக்கும் வர்க்கங்களுக்கும் இடையிலான உறவுகளிலும், ஒடுக்கப்படும் தேசங்களுக்கும், ஒடுக்கும் தேசங்களுக்கும் இடையிலான உறவுகளிலும் சமாதான சகவாழ்வை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் நீட்டித்துப் பொருத்துகிறார்கள் என்று குற்றஞ்சாட்டுவது ஒரு "குரூரமான அவதூறு" என்று அறிவிக்கின்றனர். சமாதான சகவாழ்வை "முதலாளிய நாடுகளில் மூலதனத்துக்கு எதிரான வர்க்கப்போராட்டத்துக்கும், தேசிய விடுதலை இயக்கத்துக்கும் நீட்டித்துப் பொருத்த முடியாது" என்று போலித்தனமாகக்கூட அவர்கள் அறிவிக்கிறார்கள்.

---

1. *மாசேதுங், "தற்போதைய சர்வதேசிய நிலைமைகளைப் பற்றிய மதிப்பீடுகளில் சில குறிப்புகள்", தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு. அ. மொ. ப., பீகிங், 1961, தொகுதி 4, பக்கம்-87.*

ஆனால் இத்தகைய மழுப்பல்கள் பயனற்றதே.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை நாங்கள் இவ்வாறு கேட்க விரும்புகிறோம்: சமாதான சகவாழ்வுக் கொள்கையானது, சோசலிச நாடுகளின் அயலுறவுக் கொள்கையின் ஒரே ஒரு அம்சமாக இருக்கும் போது ''உலக அளவில் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறிச் செல்லும் காலம் முழுமைக்குமான யுத்த தந்திர வழியை''[1] அது பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்று சமீப காலம் வரையிலும் ஏன் நீங்கள் அறிவித்து வந்தீர்கள்?எல்லாமுதலாளிய நாடுகளினதும் ஒடுக்கப் படும் தேசங்களினதும் கம்யூனிஸ்ட் கட்சிகள் சமாதான சகவாழ்வைத் தங்களுடைய பொதுவழியாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று சொல் கையில் கம்யூனிஸ்ட் கட்சிகளினது புரட்சிகர வழிக்குப் பதிலாக உங்களது ''சமாதான சகவாழ்வு'' கொள்கையைப் பொருத்திக் கொள்ளவும், ஒடுக் கப்படும் வர்க்கங்களுக்கும் ஒடுக்கும் வர்க்கங்களுக்மிடையிலும், ஒடுக்கப் படும் தேசங்களுக்கும் ஒடுக்கும் தேசங்களுக்கிடையிலும்தான் தோன் றித்தனமாக அக்கொள்கையை செயல் படுத்தவும் நீங்கள் முயல வில்லையா?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை இவ்வாறும் நாங்கள் கேட்க விரும்புகிறோம்: மக்கள் தங்களின் புரட்சிகளின் வெற்றியை பிர தானமாக தங்களுடைய சொந்தப் போராட்டங்களைச் சார்ந்தே வெல்லும்போது,அத்தகைய வெற்றி எவ்வாறு சமாதான சகவாழ்வையே சாரும் என்று சொல்ல முடியும் அல்லது அதன் விளைவே என்று எப்படி விவரிக்க முடியும்? இத்தகைய உங்கள் கூற்றானது, மக்களின் புரட்சிகரப் போராட்டங்களை உங்களுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கைக்கு கீழ்படியச் செய்வதாக அர்த்தமாகாதா?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை மேலும் கேட்க விரும்பு கிறோம்: சோசலிச நர்டுகளின் பொருளாதார வெற்றிகளும், முதலாளிய நாடுகளுடனான பொருளாதாரப் போட்டியில் அவை பெறும் வெற்றி களும் ஓர் எடுத்துக் காட்டான பாத்திரத்தை ஆற்றுகின்றன, ஒடுக்கப் பட்ட மக்களுக்கும் தேசங்களுக்கும் உற்சாகமூட்டுகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின் மூலம் அல்லாது, சமாதான சகவாழ்வு மற்றும் அமைதியான போட்டியின் மூல மாக உலகந்தழுவிய அளவில் சோசலிசம் வெற்றிபெறும் என்று எவ்வாறு சொல்ல முடியும்?

---

1. ''சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்காகவும் ஒருமைப்பாட்டிற்காகவும்'', பிராவ்தாவில் வெளியிடப்பட்ட ஆசிரியர் குழு கட்டுரை, டிசம்பர் 6, 1963.

சமாதான சகவாழ்வு மற்றும் அமைதியான போட்டியைச் சார்ந்திருப்பதே ''முதலாளிய உறவுகளின் அமைப்புமுறை முழுமைக்கும் ஒரு தீர்மானகரமான அடியைக் கொடுப்பதற்கும்'', உலக அளவிலான அமைதிவழி மாற்றத்தின் மூலமாக சோசலிசத்தைக் கொண்டு வருவதற்கும் போதுமானது என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் விளம்பரம் செய்கின்றனர். இது ஒடுக்கப்பட்ட மக்களும் தேசங்களும் போராட்டங்களைத் தொடுக்க வேண்டிய அவசியமில்லை; புரட்சியைச் செய்ய வேண்டியதில்லை; ஏகாதிபத்தியத்தினதும், காலனியத்தினதும், அவற்றின் அடிவருடிகளினதும் பிற்போக்குத்தனமான ஆட்சியைத் தூக்கியெறிய வேண்டியதில்லை; ரசியாவின் உற்பத்தி அளவும் வாழ்க்கைத் தரமும் மிகவும் வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளைத் தோற்கடிக்கும்வரை அவர்கள் அமைதியாகக் காத்துக் கொண்டிருக்க வேண்டும்; அப்போது உலகம் முழுவதிலுமுள்ள ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட அடிமைகள் தங்களுடைய ஒடுக்குமுறையாளர்களுடனும் சுரண்டலாளர்களுடனும் சேர்ந்து ஒன்றாக கம்யூனிசத்தினுள் பிரவேசிக்க முடியும் என்று சொல்வதற்கு சமமாகும்இது. சமாதான சகவாழ்வு என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சொல்லிக் கொள்வதை மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு மாற்றாக வைக்கும் முயற்சியாக இல்லையா? அத்தகைய போராட்டங்களுக்கு முடிவுகட்டுவதாக இல்லையா?

இந்த மூன்று கேள்விகளைப் பற்றிய ஆய்வானது, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களுடனான எமது வேறுபாடு, கொள்கை விதிகள் மீதான ஒருபெரியவேறுபாடு என்பதை தெளிவாக்குகிறது.சாராம்சத்தில் இவ்வாறு அதை சுருக்கிச் சொல்லலாம். எமது சமாதான சகவாழ்வுக் கொள்கையானது லெனினியக் கொள்கையாகும்.பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கையின் அடிப்படையிலானதாகும். ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதிலும், உலக அமைதியைக் காப்பதிலும், அது பங்கு செலுத்துறது; உலகம் முழுவதிலுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள், தேசங்களினுடைய புரட்சிகரப் போராட்ட நலன்களுடன் பொருந்துகிறது; ஆனால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் கடைப்பிடிக்கப்படும் சமாதான சகவாழ்வுப் பொதுவழி என்று சொல்லப்படுவது லெனினிய விரோதக் கொள்கையாகும் இது பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கை விதிகளை கைவிடுகிறது. ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பது உலக அமைதியைப் பாதுகாப்பது ஆகிய நோக்கங்களுக்கு ஊறுவிளைவிக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் தேசங்களின் புரட்சிகரப் போராட்ட நலன்களுக்கு எதிராக இருக்கிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் ''சமாதான சகவாழ்வுப்'' பொதுவழி அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்கிறது

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் கடைப்பிடிக்கப்படும் சமாதான சகவாழ்வுப் பொதுவழியானது எல்லா மார்க்சிய-லெனினியக் கட்சிகளாலும், புரட்சிகர மக்களாலும் உறுதியாக நிராகரிக்கப்படுறது; ஆனால் ஏகாதிபத்தியவாதிகளால் மிகவும் புகழப்படுகிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் இந்தப் பொதுவழியைப் பற்றிய தமது புகழ் மொழிகளை, மேற்கத்திய ஏகபோக மூலதனத்தின் பிரதிநிதிகள் இரகசியமாக வைத்திருக்கவில்லை. அவர்கள்''மேற்கத்திய நாடுகளின் சிறந்த மாஸ்கோ நண்பர்'' [1] என்று குருச்சேவைப் பார்க்கின்றார்கள். ''சோவியத் பிரதமர் நிகிடா குருச்சேவ் அமெரிக்க அரசியல்வாதியைப் போல் நடந்துகொள்கிறார்'' [2] என்று அவர்கள் சொல்கிறார்கள், ''சுதந்திர உலகத்தைப் பொறுத்தவரை, இதுவரை ரசியர்கள் கொண்டிருந்த பிரதமர்களில் மிகச் சிறந்த பிரதமராக தோழர் குருச்சேவ் கருதப்படுகிறார், சமாதான சகவாழ்வை அவர் உண்மையில் நம்புகிறார்'' [3] என்று அவர்கள் கூறுகிறார்கள். ''சோவியத்-அமெரிக்க உறவுகளை உயர்த்துவதற்கான இந்த சாத்தியப்பாடானது, குறிப்பிட்ட எல்லைக்குள் குருச்சேவின் பணிகளை அமெரிக்கா எளிதாக்க வேண்டும் என்று அமெரிக்க அரசு வட்டாரங்கள் சிந்திக்குமளவிற்கு இட்டுச் சென்றுள்ளது'' [4] என்று அவர்கள் கூறுகின்றனர்.

''சகவாழ்வு'' என்ற சொல்லே புதிரானதும் உத்தேசமானதும் ஆகும்'' என்றும்''மாறும் தன்மையும் அமைதியற்றதுமான சகவாழ்வை

---

1. ''நிகிடாவுடன் நாம் எவ்வளவு நன்றாக நட்புடன் இருக்க வேண்டும்?'' டைம் அமெரிக்கப் பத்திரிகையில் வெளியான கட்டுரை, மார்ச் 9, 1962.

2. டபிள்யூ. ஏ. ஹாரிமன், டெலிவிசன் பேட்டி, ஆகஸ்ட் 18, 1963.

3. ''குருச்சேவுக்கு கென்னடி உதவுகிறார்'', டைம் அண்டு டைடு என்ற பிரிட்டிஷ் பத்திரிகையில் வெளியான கட்டுரை, ஏப்ரல்-18-24, 1963.

4. வாஷிங்டனிலிருந்து ஏஜன்ஸ் பிரான்ஸ் பிரஸ்ஸால் அனுப்பப்பட்ட செய்தி, ஜூலை-14,1963,ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பகிரங்கக் கடிதத்தின் மீது அமெரிக்க அரசாங்கஅதிகாரிகளின் கருத்துக்கள் தொடர்பாக இது அனுப்பப்பட்டது.

குப்பை மேட்டில் தூக்கி எறிவோம்''[1] என்றும் உரக்கக் கூச்சலிட்டுக் கொண்டு சோசலிச நாடுகளின் சமாதான சகவாழ்வுக் கொள்கைக்கு எப்போதுமே ஏகாதிபத்தியவாதிகள் விரோதமாக இருந்து வந்திருக் கின்றனர். ஏன் இப்போது அவர்கள் இந்த அளவுக்கு குருச்சேவின் சமாதான சகவாழ்வுப் பொதுவழியில் ஆர்வம் காட்டுகின்றனர்?ஏனெனில் அது அவர்களுக்குப் பயன்படக்கூடியது என்பது பற்றி ஏகாதிபத்திய வாதிகள் தெளிவாக இருக்கிறார்கள்.

மக்கள் புரட்சிகளை அழிப்பது, சோசலிச முகாமை அழிப்பது, உலகத்தை ஆதிக்கம் செலுத்துவது ஆகிய தங்களின் யுத்த தந்திர நோக்கங்களை அடைவதற்காக யுத்தம் மற்றும் சமாதானம் எனும் இரட்டைத் தந்திரங்களை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தொடர்ந்து மேற்கொண்டு செயல்படுத்தி வந்திருக்கிறார்கள். தங்களுடைய ஆயுத விரிவாக்கத்தையும், யுத்த தயாரிப்புகளையும் தொடரும்போதே சர்வதேச நிலைமை தங்களுக்கு பாதகமாக மாறும்போது அமைதிக்கான தந்திரங் களை மிகுதியாகச் சாரவேண்டியது அவர்களுக்குத் தேவையாகிறது.

1958-ல் ஜான் பாஸ்டர் டல்லஸ் அமெரிக்கா ஒரு ''சமாதான பூர்வமான வெற்றிக்காக''[2] ''ஓர் உன்னதமான திட்டத்துக்கு'' தன்னை அர்ப்பணித்துக்கொள்ளவேண்டும் என்று முன்மொழிந்தார்.

கென்னடி ஜனாதிபதி பதவியை ஏற்றபிறகு, டல்லஸின் ''சமாதானத்துக்கான திட்டத்தை'' தொடரவும், அதை வளர்க்கவும் செய்தார். ''சமாதான சகவாழ்வு'' பற்றி ஏராளமாகப் பேசினார். அவர், ''ஹைட்ரஜன் குண்டைவிட இன்னும் ஒரு மேலான ஆயுதம் நமக்குத் தேவை... அந்த மேலான ஆயுதம் சமாதான கூட்டுறவு''[3] என்று கூறினார்.

இது சமாதான சகவாழ்வை அமெரிக்க ஏகாபத்தியவாதிகள் நேர்மை யாக ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று பொருள்படுமா? அல்லது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கூறுவதைப்போல ''சமாதான சக வாழ்வின் நியாயத்தையும் நடைமுறை சாத்தியப்பாட்டையும்'' அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர் என்று பொருள்படுமா? நிச்சயமாக இல்லை.

---

1. அமெரிக்காவின் முன்னாள் அரசு கீழ்நிலைச் செயலாளர் டக்லஸ் டில்லானுடைய அமெரிக்க அயலுறவுக் கொள்கை பற்றிய உரை, ஏப்ரல்-20, 1960.
2. ஜே. எப். டல்லஸ், கலிபோர்னிய மாநிலத்து முதலாளிகள் சங்கத்தில் ஆற்றிய உரை, டிசம்பர்-4, 1958.
3. ஜே. எப். கென்னடி, அய். நா. பொதுச்சபையில் ஆற்றிய உரை, செப்டம்பர்-20, 1963.

கொஞ்சம் ஆழ்ந்து ஆய்வு செய்தோமானால், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளால் முன்வைக்கப்படும் ''சமாதான சகவாழ்வின்'' உண்மைப் பொருளையும் நோக்கத்தையும் எளிதாகக் காணலாம்.

அதனுடைய உண்மையான பொருளும் நோக்கமும் என்ன?

1. சமாதான சகவாழ்வு என்ற பெயரில் ரசியா மற்றும் பிற சோசலிச நாடுகளின் கைகளைக் கட்டிப்போடவும், முதலாளிய உலகில் உள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு அவை ஆதரவு தருவதைத் தடுக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் முயல்கின்றனர்.

டல்லஸ் கூறினார்:

''ரசிய அரசாங்கத்தைப் பொறுத்தவரை சர்வதேசிய கம்யூனிச இலட்சியங்களிலிருந்து விலகிக்கொண்டு ரசிய நாடு மற்றும் ரசிய மக்களின் நலன்களில் பிரதான கவனத்தைச் செலுத்தினால், ரசிய அரசாங்கம் 'கெடுபிடிப் போருக்கு' முடிவு கட்டமுடியும். சர்வதேச கம்யூனிச இயக்கம் தன் உலகந்தழுவிய நோக்கத்தை கைவிட்டு விட்டால்கூட 'கெடுபிடிப் போர்' முடிவுக்கு வந்துவிடும்...''[1]

அமெரிக்க-ரசிய உறவுகள் முன்னேற்றப்படவேண்டுமானால், ரசியா ''உலகம் முழுவதையும் கம்யூனிச மயப்படுத்தும்'' திட்டத்தைக் கைவிட்டு ''தன்னுடைய தேசிய நலன்களை மட்டுமே கவனிக்க வேண்டியிருக்கும், சமாதான சூழ்நிலைமைகளின்கீழ் தன் மக்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையைத் தருவதை மட்டுமே அது கவனிக்க வேண்டியிருக்கும்''[2] என்று கென்னடி கூறினார்.

இந்த அம்சத்தை டீன் ரஸ்க் மிக வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார். ''உலகப் புரட்சி எனும் தங்களுடைய இலக்கை கம்யூனிஸ்ட் தலைவர்கள் கைவிடும்வரை சமாதானம் உறுதி செய்யப்படுவது என்பதும், நிலையான சமாதானம் என்பதும் இருக்கமுடியாது''. ''உலகக் கம்யூனிச இயக்கத்திற்குத் தாங்கள் அளித்துள்ள உறுதிமொழிகளின் சுமைகளையும் அபாயங்களையும்'' ''மீறத்துடிக்கிற அறிகுறிகள்'' ரசியத் தலைவர்களிடையே உள்ளன என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

---

1. *ஜே. எப். டல்லஸ், அமெரிக்க அயலுறவு விவகாரக் கமிட்டி பிரதிநிதிகளின் சபை முன் நிகழ்த்திய உரை, ஜனவரி-28, 1959.*
2. *ஜே. எப். கென்னடி, இஸ்வெஸ்தியா இதழின் தலைமை ஆசிரியரான ஏ. அய். அட்ழுபெய் என்பவருடன் பேட்டி, நவம்பர்-25, 1961.*

''உலகக் கம்யூனிச வெற்றி எனும் மாயையை ஒரு பக்கத்தில் தள்ளி விட்டு முன் செல்லுங்கள்''[1] என்று கூட அவர் ரசியத் தலைவர்களைக் கோரியிருக்கிறார்.

இவ்வார்த்தைகளின் பொருள் மிகத் தெளிவாக உள்ளது. முதலாளிய உலகிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களாலும் தேசங்களாலும் தங்களுடைய சொந்த விடுதலைக்காக நடத்தப்படும் புரட்சிகரப் போராட்டங்கள் யாவும் ''உலகம் முழுவதையும் கம்யூனிச மயமாக்குவதற்கு'' சோசலிச நாடுகள் செய்யும் முயற்சிகளின் விளைவே என்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வர்ணிக்கின்றனர். அவர்கள் ரசியத் தலைவர்களுக்கு சொல்கிறார்கள்: அமெரிக்காவுடன் அமைதியாக வாழ நீங்கள் விரும்புகிறீர்களா? மிக நல்லது. ஆனால், அது இந்த நிபந்தனைக்குட்பட்டதாகும். முதலாளிய உலகிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களுடைய, தேசங்களுடைய புரட்சிகரப் போராட்டங்களை நீங்கள் ஆதரிக்கக்கூடாது, அவர்கள் புரட்சிக்கு ஆதரவாக எழுச்சியடையாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தீய எண்ணப்படியே இது, முதலாளிய உலகிலுள்ள புரட்சிகர இயக்கங்களை முறியடிப்பதையும், அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் உலக மக்கட்தொகையின் மூன்றில் ஒரு பகுதியினரை ஆதிக்கம் செலுத்துவதையும், அடிமைப் படுத்துவதையும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எளிதாக்கும்.

2. சமாதான சகவாழ்வின் பெயரில், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ''அமைதிவழிப் பரிணாமம்'' எனும் தங்கள் கொள்கையை ரசியாவிலும் மற்ற சோசலிச நாடுகளிலும் திணித்து, அங்கு முதலாளியத்தைத் திரும்ப நிலைநாட்ட முயற்சிக்கிறார்கள்.

டல்லஸ் கூறினார்: ''வன்முறையைக் கைவிடுவது என்பது... தற்போது நிலவும் நிலைமைகளை அப்படியே தொடர்ந்து வைத்துக் கொண்டிருப்பது என்று பொருள்படாது, மாறாக அமைதி வழி மாற்றத்தைப் பொருள்படுத்தும்''[2], ''தற்காப்போடு நின்றுகொள்வது போதுமானதல்ல. சுதந்திரம் என்பது ஊடுருவத்தக்க வகையில்

---

1. *டீன் ரஸ்க், முன்னாள் அமெரிக்க இராணுவ வீரர்களின் சங்க தேசிய மாநாட்டில் ஆற்றிய உரை, செப்டம்பர் 10, 1963.*

2. *ஜே. எப். டல்லஸ், நியூயார்க் மாநில வக்கீல் சங்கப் பரிசளிப்பு விருந்தில் நிகழ்த்திய உரை, ஜனவரி, 31, 1959.*

சாதகமான சக்தியாக இருக்கவேண்டும்''[1] சோவியத் உலகத்திற்குள்ளாக ஒரு பரிணாம வளர்ச்சி நிகழ்வதை ஊக்குவிக்கவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.''[2]

''கொடூரமான சர்வாதிகாரத்தினால் கட்டுண்டு கிடக்கும் மக்கள், தங்களுடைய சொந்த சுதந்திரமான ஓட்டுக்களின் மூலம் தங்களுடைய விதிகளைத் தாங்களே தீர்மானித்துக்கொள்ளும் உரிமையை இறுதியாகப் பெறும் பொருட்டு''[3] அமெரிக்கா எதையெல்லாம் சமாதான வழியில் செய்யமுடியுமோ அதையெல்லாம் செய்யும் என்று அய்சனோவர் அறிவித்திருக்கிறார்.

''சோவியத் பேரரசிலும், மற்ற எல்லா கண்டங்களிலும் மாற்றங்கள் நிகழ்வதற்கும்...மிக அதிகபட்சமான மக்களுக்கு மிகஅதிகமான சுதந்திரம் ஏற்படுவதற்கும், உலக சமாதானத்துக்கு இட்டுச்செல்வதறகும்... நம் சக்திக்குட்பட்ட எல்லாவற்றையும் செய்யவேண்டியது நம் கடமை''[4] என்று கென்னடி சொல்லியிருக்கிறார். கிழக்கு அய்ரோப்பாவிலுள்ள சோசலிச நாட்டு மக்களுக்கு ''சுதந்திர தேர்வு''க்கு வாய்ப்பளிக்கும் வகையில் அந்நாடுகளின்பால் ''சுதந்திரத்தை பொறுமையாக ஊக்குவிப்பது மற்றும் சர்வாதிகாரத்துக்கு எதிராக நிர்ப்பந்தம் கொடுப்பது''[5] எனும் கொள்கையை கடைப்பிடிக்கப் போவதாகஅவர் அறிவித்துள்ளார்.

இவ்வார்த்தைகளின் பொருளும் மிகத்தெளிவாகவே உள்ளது, சோசலிச அமைப்பு முறையை ''சர்வாதிகாரம்'' என்றும், ''கொடூரமானது'' என்றும் கூறி பித்தலாட்டம் செய்கின்றனர் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள்; முதலாளியத்தை மீண்டும் நிலைநாட்டுவதை அவர்கள் 'சுதந்திரத் தேர்வு' என்று வர்ணிக்கின்றனர். அவர்கள் ரசியத் தலைவர்களுக்கு சொல்கிறார்கள்: நீங்கள் அமெரிக்காவுடன் அமைதியாக வாழ விருப்புகிறீர்களா? மிக நல்லது! ஆனால்

---

1. ஜே. எப். டல்லஸ், கலிபோர்னிய மாநிலத்து முதலாளிகள் சங்கத்தில் ஆற்றிய உரை, டிசம்பர்-4, 1958.
2. ஜே. எப். டல்லஸ், அமெரிக்க அயலுறவு விவகாரக் கமிட்டி கூட்டத்தில் அறிவிப்பு, ஜனவரி-28, 1959.
3. டி. டி. அய்சனோவர், சிகாகோவில் நடைபெற்ற போலந்து-அமெரிக்க காங்கிரசில் ஆற்றியஉரை, செப்டம்பர்-30, 1960.
4. ஜே. எப். கென்னடி, சமாதானத்துக்கான திட்டம், ஹார்ப்பர் சகோதரர்கள், நியூயார்க், 1960, பக்கம்-199.
5. ஜே. எப். கென்னடி, சிகாகோவில் நடைபெற்ற போலந்து-அமெரிக்க காங்கிரசில் ஆற்றியஉரை, அக்டோபர்-1, 1960.

தற்போது சோசலிச நாடுகளில் நிலவும் நிலைமையை நாங்கள் அங்கீகரிக்கிறோம் என்பது இதற்கு பொருள் அல்ல; அதற்கு மாறாக, அங்கு முதலாளியம் மீண்டும் நிறுவப் படவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், உலக மக்கட்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் சோசலிசப்பாதையை தேர்ந் தெடுத்துக்கொண்ட நிலைமையை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் என்றுமே நடந்துவிட்ட ஒன்றாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; அவர்கள் எப்போதுமே எல்லா சோசலிச நாடுகளையும் அழிக்கவே முயல்வார்கள்.

சமாதான சகவாழ்வு என்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சொல்வதை இவ்வாறு சுருக்கமாகச் சொல்லலாம்: ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழும், அடிமைப்பட்ட நிலையிலும் வாழும் எந்த மக்களும் விடுதலைக்காக முயற்சிக்கக்கூடாது, ஏற்கனவே தங்களை விடுதலை செய்துகொண்டவர்கள் மீண்டும் ஏகாதிபத்தியத்தின்கீழும், அடிமைப்பட்ட நிலைக்கும் வந்தாக வேண்டும், உலகம் அனைத்தும் அமெரிக்க வகைப் பட்ட ''சுதந்திர நாடுகளின் உலக சமூகமாக'' ஆக்கப்படவேண்டும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் சமாதான சகவாழ்வுப் பொதுவழியானது ஏன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விருப்பத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது என்று பார்ப்பது மிக எளிது.

சமாதான சகவாழ்வு என்ற போர்வையில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தயவைப் பெற தம்மால் முடிந்ததையெல்லாம் செய்கிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள், ''சமாதானத்தைப் பற்றி கவலைப்படுகிறார்கள்'' என்று தொடர்ந்து பறைசாற்றி வருகிறார்கள்; இது அதனுடைய மோசடித்தன மான சமாதானக் கொள்கைக்கு மிகச் சரியாக சேவை செய்கிறது.

சமாதான சகவாழ்வு என்ற போர்வையில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சமாதான சகவாழ்வுக் கொள்கையை, ஒடுக்கப்படும் வர்க்கங் களுக்கும், ஒடுக்கும் வர்க்கங்களுக்குமிடையிலுள்ள உறவுகளுக்கும், ஒடுக்கப்படும் தேசங்களுக்கும் ஒடுக்கும் தேசங்களுக்குமிடையிலுள்ள உறவுகளுக்கும் பொருத்துகிறார்கள்; அவர்கள் புரட்சியை எதிர்க் கிறார்கள், அதை அழிக்க முயல்கிறார்கள்; இது, முதலாளிய உலகிலுள்ள மக்கள் புரட்சிகளை சோசலிச நாடுகள் ஆதரிக்கக் கூடாது என்ற அமெ ரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தேவைக்கு மிகச் சரியாகப் பொருந்து கிறது.

சமாதான சகவாழ்வு என்ற போர்வையில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சர்வதேச வர்க்க சமரசத்தை, சர்வதேச வர்க்கப் போராட்

டத்திற்குப் பதிலாகப் பொருத்த முயற்சிக்கிறார்கள். சோசலிசத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையில்''எல்லாவகையிலுமான கூட்டுறவை''ப் பிரச்சாரம் செய்கிறார்கள். இவ்வாறு சோசலிச நாடுகளுக்குள் ஏகாதிபத்திய ஊடுருவலுக்குக் கதவைத் திறந்து விடுகிறார்கள்; இது,அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ''சமாதான வழிப் பரிணாமம்'' எனும் கொள்கையின் தேவைக்கு மிகச் சரியாகப் பொருந்துகிறது.

ஏகாதிபத்தியவாதிகள் எப்போதுமே எதிர்மறை உதாரணங்கள் மூலம் நமது சிறந்த ஆசான்களாக இருந்து வந்திருக்கிறார்கள். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்குப் பின் டல்லஸால் ஆற்றப்பட்ட இரண்டு உரைகளிலிருந்து சில பகுதிகளை இங்கு நாம் முன் வைப்போம்.

அவர் சொன்னார்:

''...நான் சொல்லியிருக்கிறேன்...ரசியாவுக்குள் இன்னும் அதிக அளவிலான தாராளவாதக் கொள்கையை விரும்புகிற சக்திகள் இருக்கின்றன என்பதற்கு சான்றுகள் உள்ளன...

''இந்த சக்திகள் தொடர்ந்து வளர்ச்சியுற்று ரசியாவில் தானாக இயங்க துவங்கினால் நமது கொள்கையின் மிகப்பெரிய இலக்கை ஒரு பத்தாண்டுக்குள்ளாக அல்லது ஒரு தலைமுறைக்குள்ளாக அடைய முடியும் என்று நான் கூறியதை நாம் நினைத்துப் பார்க்க முடியும், ஒத்துக்கொள்ளத்தக்க விதத்தில் காரண காரியத்துடன் எதிர்பார்க்க முடியும். அதாவது ரசிய மக்களின் விருப்பங்களுக்கு இணங்கிச் செயல்படுகிற மனிதர்களால், கொள்ளைக்காரத் தனமான உலக அளவில் ஆட்சி நடத்தும் பேராசைகளை விட்டுவிட்ட மனிதர்களால், நாகரிகமடைந்த தேசங்களின் கொள்கைகளுடன் பொருந்தி வருகிற மனிதர்களால், அய். நா. சாசனத்தில் உள்ளடங்கிய கொள்கைகளுடன் பொருந்தி வருகிற மனிதர்களால் ஆளப்படும் ஒரு ரசியா என்பதுதான் நமது கொள்கையின் மிகப்பெரிய இலக்கு.'' [1]

அவர் மேலும் சொன்னார்:

''...நீண்ட காலக் கண்ணோட்டத்தில் — ஆம், நீண்ட காலக் கண்ணோட்டத்தில் நிச்சயம் என்று நான் சொல்வேன்—அவர்கள் இன்னும் அதிகமாக தேசியவாதிகளாக மாறிவிடுவதற்கும், இன்னும்

1. ஜே. எப். டல்லஸ், பத்திரிகையாளர் மாநாடு, மே 15, 1956.

குறைவான சர்வதேசியவாதிகளாகி விடுவதற்கும் ஏற்ற வகையில் ரசிய ஆட்சியாளர்களின் இன்றைய கொள்கைகளின் பரிணாம வளர்ச்சி இருக்கும்.'' [1]

மார்க்சிய-லெனினியத்துக்கும் பட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கும் துரோகமிழைப்பவர்கள் மீது டல்லஸ்ஸின் ஆவி சுற்றிக் கொண்டிருக்கிறது என்பது தெளிவு. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விருப்பங்களுடன் தங்கள் நடவடிக்கைகள் எந்த அளவுக்கு சரியாகப் பொருந்துகிறது என்பதைப் பரிசீலிக்க சிறிது நேரம்கூட எடுத்துக்கொள்ள முடியாத அளவிற்கு, சமாதான சகவாழ்வுப் பொதுவழி என்று சொல்லிக் கொள்ளப் படுகின்ற கொள்கையினால் அவர்கள் ஆட்டிப்படைக்கப்படுகிறார்கள்.

ரசிய - அமெரிக்க துரோகக் கூட்டே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் ''சமாதான சகவாழ்வுப்'' பொதுவழியின் இதயமும் ஆன்மாவும்

சமீப காலங்களில் சமாதான சகவாழ்வைப் பற்றித் திரும்ப திரும்பப் பேசிவந்தபோதிலும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உண்மையில் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கை விதிகளை மீறியது மட்டுமல் லாமல், சீனா மற்றும் பல்வேறு சோசலிச நாடுகளின்பால் தங்கள் அணுகு முறையில் சமாதான சகவாழ்வின் பஞ்சசீலக் கொள்கை விதிகளுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளவும் தவறியிருக்கிறார்கள். வெளிப்படை யாகச் சொல்வதனால், அவர்கள் சமாதான சகவாழ்வைத் தங்களுடைய அயலுறவுக் கொள்கைப் பொதுவழியாக இடைவிடாமல் முன்வைப் பதானது, தங்களுடைய நீண்டகாலக் கனவான ரசிய-அமெரிக்கக் கூட்டுச் செயல்பாடுகளுக்கு எல்லா சோசலிச நாடுகளும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் கீழ்ப்படிய வேண்டும் எனக் கோருகிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் கடைபிடிக்கப்படும் சமாதான சகவாழ்வுப் பொதுவழியின் இதயமும், ஆன்மாவும் உலக ஆதிக்கத்திற்கான ரசிய-அமெரிக்கத் துரோகக் கூட்டேயாகும்.

அவர்கள் வெளியிட்டுள்ள வினோதமான அறிக்கைகளைச் சற்றுப் பாருங்கள்:

---

1. ஜே. எப். டல்லஸ், பத்திரிகையாளர் மாநாடு, அக்டோபர் 28, 1958.

''மிகப்பெரிய நவீன வல்லரசுகளான ரசியாவும், அமெரிக்காவும் உலகிலுள்ள மற்ற எல்லா நாடுகளையும் மிகவும் பின்னுக்கு விட்டுவிட்டு முன்னேறிவிட்டன.''[1]

''இவ்விரு வல்லரசுகளில் ஒவ்வொன்றும் பல நாடுகளைக் கொண்ட குழுவிற்குத் தலைமை தாங்குகின்றன-ரசிய உலக சோசலிச அமைப்பு முறைக்கும், அமெரிக்க முதலாளிய முகாமுக்கும் தலைமை தாங்கு கின்றன.''[2]

''நாங்களே (ரசியாவும், அமெரிக்காவும்) உலகில் வலிமைமிக்க நாடுகளாக இருக்கிறோம். நாங்கள் அமைதிக்காக ஒன்று சேர்ந்தால் உலகில் யுத்தம் என்பதே இருக்காது. அப்போது எந்தப் பைத்தியக் காரனாவது போரை விரும்பினால், நாங்கள் அவனை எச்சரிக்க எங்கள் விரல்களை மட்டுமே அசைக்க வேண்டி இருக்கும்.''[3]

''...ரசிய அரசாங்கத்தின் தலைவரான என். எஸ். குருச்சேவுக்கும் அமெரிக்காவின் ஜனாதிபதியான ஜான் கென்னடிக்கும் இடையில் உடன்பாடு உருவாகுமானால், மனித இனத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சர்வதேசப் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும்.''[4]

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை நாங்கள் கேட்க விரும்பு கிறோம்: 1957 பிரகடனமும், 1960 அறிக்கையும், அமெரிக்க ஏகாதி பத்தியத்தை, உலக மக்களின் பகிரங்கமான இணக்கம் காண முடியாத எதிரியென்றும், ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தங்களை உருவாக்கும் முக்கிய சக்தி என்றும் தெளிவாக சொல்லியிருக்கையில், ''அமைதியைப் பாது காக்க'' உலக அமைதியின் முக்கிய எதிரியுடன் நீங்கள் எப்படி ''ஒன்றுபட'' முடியும்?

அவர்களை நாங்கள் கேட்க விரும்புகிறோம்: ஒரு நூறுக்கும் அதிகமான நாடுகளும், முன்னூறு கோடிக்கும் அதிகமான மக்களும் தங்களுடைய சொந்த தலைவிதியைத் தீர்மானித்துக் கொள்ளும் உரிமை

---

1. என். என். யாகோவ்லெவ், ''30 ஆண்டுகளுக்குப் பிறகு...'' சோவியத்-அமெரிக்க இராஜதந்திர உறவுகளின் 30-வது ஆண்டு நிறைவு விழாவுக்காக எழுதப்பட்ட பிரசுரம்,
2. மேற்கூறிய நூல்.
3. என். எஸ். குருச்சேவ், ''அமெரிக்கப் பத்திரிகையாளரான- சி. எல், சுல்ஸ்பெர்கர் என்பவருடன் பேட்டி, செப்டம்பர் 5, 1961, பிராவ்தா, செப்டம்பர் 10, 1961.
4. ஏ. ஏ. குரோமிகோ, ரசிய சுப்ரீம் சோவியத் கூட்டத் தொடரில் ஆற்றிய உரை, டிசம்பர் 13, 1962,

யற்ற நிலையில் இருக்க முடியுமா? ரசியா, அமெரிக்கா எனும் இரண்டு பெரிய ''சத்திகளினதும்'' இரண்டு ''மாபெரும் வல்லரசுகளினதும்'' இழுப்புக்கெல்லாம் அவர்கள் கீழ்ப்படிந்தாக வேண்டுமா? உங்களது இந்த செருக்குத்தனமான முட்டாள்தனம் உங்களுடைய பெரும் - வல்லரசு வெறித்தனத்தையும் பலவந்த அரசியலையும் வெளிப்படுத்துகிறது என்பது அப்பட்டமாகத் தெரியவில்லையா?

அவர்களை இவ்வாறும் நாங்கள் கேட்க விரும்புகிறோம்: ரசியாவும், அமெரிக்காவும் ஒப்பந்தம் செய்து கொண்டாலேயே, இரண்டு ''மாபெரும் மனிதர்கள்'' ஒப்பந்தம் செய்து கொண்டாலேயே, மனித குலத்தின் தலைவிதி தீர்மானிக்கப்பட்டுவிடும் என்றும், எல்லா சர்வதேச பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விடும் என்றும், நீங்கள் உண்மையிலேயே கற்பனை செய்திருக்கிறீர்களா? நீங்கள் தவறிழைக்கிறீர்கள், நம்ப முடியாத தவறிழைக்கிறீர்கள். நினைத்துப் பார்க்க முடியாத காலத்திலிருந்தேகூட, இவ்வாறு நிகழ்ச்சிகள் எப்போதும் நடந்தது கிடையாது. அதுவும் 1960களில் நிச்சயம் நடக்கப்போவதில்லை. சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் இடையில் முரண்பாடு, முதலாளிய நாடுகளில் பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்குமிடையில் முரண்பாடு, ஒடுக்கப்படும் தேசங்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையில் முரண்பாடு, ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலும் ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள ஏகபோக முதலாளியக் குழுக்களுக்கிடையிலும் முரண்பாடு, என்றவாறு சிக்கலான முரண்பாடுகள் நிறைந்ததாக இன்று உலகம் இருக்கிறது. இந்த முரண்பாடுகள் யாவும் ரசியாவும் அமெரிக்காவும் ஒரு உடன்பாடு செய்து கொண்டவுடனே மறைந்து போய்விடுமா?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மதிக்கும் ஒரே நாடு அமெரிக்கா மட்டுமே. அமெரிக்க-ரசிய கூட்டுக்கான தமது செயல்பாடுகளினால் ரசிய மக்களின் உண்மையான நட்பு சக்திகளுக்கு தங்களுடைய வர்க்க சகோதரர்கள் உள்ளிட்டு இன்னும் ஏகாதிபத்திய - முதலாளிய அமைப்பு முறையின் கீழ் வாழும் எல்லா ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் தேசங்களுக்கும் துரோகமிழைப்பதற்கு அவர்கள் சற்றும் வெட்கப்படவில்லை.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சோசலிச முகாமை அழிக்கக் கடும் முயற்சியை மேற்கொள்கிறார்கள். சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக எல்லாலவிதப் பொய்யையும், அவதூறையும் அவர்கள் பயன்படுத்துகிறார்கள்; சீனாவின் மீது அரசியல் மற்றும் பொருளாதார நிர்ப்பந்தங்களை திணிக்கிறார்கள். சோசலிச அல்பேனியாவைப் பொறுத்தவரை அதை அழிப்பதற்குக் குறைவான எதுவும் அவர்களைத் திருப்திப் படுத்தாது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன்

கைகோத்துக் கொண்டு புரட்சிகர கியூபாவின் மீது அவர்கள் நிர்ப்பந்தத்தைக் கொண்டு வருகிறார்கள். அதன் இறையாண்மையையும் அந்தஸ்தையும் விலையாகக் கோருகிறார்கள்.

ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிரான மக்களின் புரட்சிகரப் போராட்டங்களைச் சீர்குலைக்க ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கடுமையாக முயற்சிக்கிறார்கள். சமூக சீர்திருத்தவாதத்தின் போதகர்களாகவும், பல்வேறு நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தினதும் அதன் அரசியல் கட்சியினதும் புரட்சிகரப் போராட்ட உணர்வுகளை அழிப்பவர்களாகவும் அவர்கள் செயல்படுகிறார்கள். ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்வதற்காக, தேசிய விடுதலை இயக்கத்தை அவர்கள் பலவீனப்படுத்துகிறார்கள், மேலும் மேலும் வெட்கமற்ற முறையில் அமெரிக்க நவீன காலனியத்துக்கு வக்காலத்து வாங்குபவர்களாக மாறி வருகிறார்கள்.

ரசிய-அமெரிக்கத் துரோகக் கூட்டை உருவாக்க அவர்கள் மேற்கொள்ளும் கடினமான முயற்சிகளுக்குப் பதிலாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்து ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எதைப் பெறுகிறார்கள்?

1959-லிருந்து, ரசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உச்சமட்ட சந்திப்புகளைப் பற்றிய சிந்தனையே குருச்சேவை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. அவற்றைப் பற்றி அவர் பல அதீதக் கனவுகளைக் கண்டுகொண்டிருக்கிறார், பல மாயைகளைப் பரப்பி வருகிறார். அய்சனோவரை ''உயர்ந்த அரசியலைப் புரிந்து கொள்ளும் ஒரு பெரிய மனிதர்'' [1] என்று அவர் மிகவும் புகழ்ந்துள்ளார். கென்னடியை ''இரண்டுசக்திமிக்க நாடுகளின் அரசாங்கங்களின் மாபெரும்பொறுப்பை புரிந்து கொள்பவர்'' [2] என்று உற்சாகமாகப் புகழ்ந்துள்ளார். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், கேம்ப் டேவிட் உணர்வு என்று சொல்லப்படும் ஒன்றை மிகுந்த ஆரவாரத்துடன் மெச்சினார்கள். வியன்னா கூட்டம் ''வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி'' யாக இருக்கும் என்று பறைசாற்றினார்கள். ரசியா மற்றும் அமெரிக்கத் தலைவர்கள் ஒரே மேசையில் உட்கார்ந்து விட்டார்களானால் வரலாறு ஒரு ''புதிய திருப்புமுனையை'' அடைந்துவிடுமென்றும், இரு ''பெரும்

---

1. என். எஸ். குருச்சேவ், நியூயார்க் மேயரால் தரப்பட்ட விருந்தில் ஆற்றிய உரை, செப்டம்பர் 17, 1959.
2. என். எஸ். குருச்சேவ், வானொலி மற்றும் தொலைக்காட்சி உரை, ஜூன் 15-1961.

மனிதர்களுக்கு''இடையில் ஒரு கைகுலுக்கல் நடந்துவிட்டதென்றால் சர்வ தேசிய உறவுகளில் ஒரு ''புதிய சகாப்தம்'' தோன்றிவிடும் என்றும் சோவியத் பத்திரிகைகள் அறிவித்தன.

ஆனால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் எவ்வாறு நடத்துகிறது? கேம்ப் டேவிட் பேச்சுக்கள் நடந்த ஒரு மாதத்திற்குள்ளாக ''கேம்ப் டேவிட் உணர்வு எனப்படும் எதுவும் எனக்குத் தெரியாது'' என்று அய்சனோவர் அறிவித்தார். இந்தப் பேச்சுக்கள் நடந்து ஏழு மாதங்களுக்குப் பின்னர் ரசியாவுக்குள் ஊடுருவ ஒரு யு2 உளவு விமானத்தை அவர் அனுப்பினார், இவ்வாறு நான்கு வல்லரசுகளின் உச்சகட்ட மாநாட்டை உடைத்தார். வியன்னா சந்திப்பு முடிந்த சிறிது காலத்திலேயே, ரசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இருபதாண்டுகளுக்கான சமாதான ஒப்பந்தத்திற்காகப் பின்வரும் கேவலப்படுத்தும் நிபந்தனைகளை கென்னடி முன் வைத்தார்; மக்களின் எந்தப் புரட்சிகரப் போராட்டங்களுக்கும் ரசியா ஆதரவளிக்கக் கூடாது. கிழக்கு அய்ரோப்பாவிலுள்ள சோசலிச நாடுகளில் முதலாளியம் மீண்டும் நிலைநாட்டப்படவேண்டும். வியன்னா சந்திப்பிற்குப் பின்னர் ஒரு ஆண்டு அல்லது அதற்கும் சற்று அதிக காலத்திற்குள் கியூபாவைச் சுற்றி கடற்கொள்ளைக்காரனைப் போல் இராணுவ முற்றுகைக்கு ஆணையிட்டு, கரிபியன் நெருக்கடியை உருவாக்கினார் கென்னடி.

வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தில் எங்கெங்கு தேடினாலும் ''கேம்ப் டேவிட் உணர்வு'' ''மனிதகுல வரலாற்றில் திருப்புமுனை'', சர்வதேசிய உறவுகளில் புதிய சகாப்தம்'' என்று மிகவும் பீற்றிக் கொள்ளப்படுவனவற்றை யாரால் கண்டுபிடிக்க முடியும்?

அணு ஆயுத சோதனையில் பகுதித்தடை பற்றிய முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட பிறகு ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மாஸ்கோ உணர்வு என்று சொல்லிக் கொள்ளப்படுகின்ற ஒன்றைப் பற்றி பெரும் விளம்பரம் செய்தனர். ''சந்தர்ப்பம் நன்றாகயிருக்கும்போதே செயல்படு'' என்பதின் தேவையைப்பற்றி அவர்கள் பேசினார்கள். மேலும் ஒப்பந்தங்களை அடைய ரசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ''எல்லாவிதமான சாதகமான சூழ்நிலைமைகளும் உள்ளது'' என்று அறிவித்தார்கள். ''காலம் காத்திருக்கமுடியும்'' அல்லது ''அவசரப் படுவதற்கு ஒன்றுமில்லை'' [1] என்ற அணுகுமுறையைக் கையாள்வது தவறானது என்று அறிவித்தார்கள்.

---

1. ''காலம் காத்திருக்க முடியாது'', இஸ்வெஸ்தியா இதழில் ஒரு பார்வையாளரின் கட்டுரை, ஆகஸ்டு-21, 1963.

''மாஸ்கோ உணர்வு'' என்றால் என்ன? சமீபத்திய நிகழ்ச்சிகளை நாம் பார்ப்போம்.

''ரசிய-அமெரிக்கக் கூட்டுறவின்'' சாதகமான சூழ்நிலைமையை உருவாக்க, ரசியாவுக்கும் அமெரிக்காவிற்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டதன் முப்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு ரசிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் மாஸ்கோவில் ஒரு பேரணியை நடத்தினார்கள். அதே சமயத்தில் அவர்கள் அமெரிக்காவில் அவ்விழாவைக் கொண்டாடுவதற்கு ஒரு கலாச்சாரக்குழுவை அனுப்பி வைத்தனர். ஆனால் ரசிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களின் உற்சாகத்தின் விளைவாக என்ன பலன் ஏற்பட்டது? ரசியாவிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் அனைத்து அலுவலர்களும் மாஸ்கோ பேரணியில் கலந்து கொள்வதற்கு மறுத்தனர். ரசிய கலாச்சாரக்குழுவை ''மிகவும் அபாயகரமான சந்தேகத்திற்குரியவர்கள்'' என்று கூறி, ஒரு சிறப்பு அறிக்கையை வெளியிட்டு அக்குழுவை அமெரிக்கப் பொதுமக்கள் புறக்கணிக்கவேண்டும் என்று அமெரிக்க அரசுத்துறை கேட்டுக் கொண்டது.

''ரசிய-அமெரிக்கக் கூட்டுறவை'' ரசிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் முன்வைக்கும் அதேசமயம், ரசியாவில் உளவு நடவடிக்கையை மேற்கொள்ள பர்கூர்ன் என்ற உளவாளியை அமெரிக்கா அனுப்பியது. இந்த உளவாளியை ரசிய அரசாங்கம் மிகச்சரியாகவே கைது செய்தது; ஆனால் அமெரிக்காவுக்கும் ரசியாவுக்கும் இடையில் கோதுமை வியாபாரம் வெற்றிகரமாக நடைபெறுவது, ''இரு நாடுகளிலும் சாதகமான சூழ்நிலைமை நிலவுவதைச் சார்ந்தே உள்ளது'' என்றும், தற்போது இந்த சூழ்நிலைமை ''பர்கூர்ன் கைது செய்யப்பட்டதால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது'' என்றும் கென்னடி கூறினார். கென்னடி மிரட்டியவுடன், சோவியத் அரசாங்கம் எவ்வித விசாரணையுமின்றி அந்த அமெரிக்க உளவாளியை அவசர அவசரமாக விடுவித்துவிட்டது. ''ரசியாவுக்கெதிரான உளவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக... விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது'' என்று எந்த உளவாளியைப் பற்றி தீர்மானிக்கப்பட்டதோ அந்த ஏஜெண்டான ''எஃப்.சி.பர்கூர்னின் தலைவிதியைப் பற்றி அமெரிக்க உயர் அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளதன்'' அடிப்படையில் விடுவித்துவிட்டது.

இவையாவும் ''மாஸ்கோ உணர்வின்'' வெளிப்பாடுகளா? அப்படியானால் அது உண்மையில் வருந்தத்தக்கது.

மாஸ்கோ! முதல் சோசலிசநாட்டின் பிரகாசமான தலைநகரம்! மாபெரும் அக்டோபர் புரட்சிக்குப்பின் உலகம் முழுவதுமுள்ள பல கோடிக் கணக்கானமக்கள் மகிழ்ச்சியுடன் நெஞ்சில் இருத்தி வைத்திருக்கும்

மகத்தான பெயர்! ஆனால் தற்போது, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் கூடிக்குலாவும் இழிவான தங்கள் நடைமுறையை மூடிமறைப்பதற்காக ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எத்தகைய முன்பின் கண்டிராத அவமானம்!

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைப்பற்றி ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அடிக்கடி புகழ்ந்து வந்தார்கள். சலுகைகளுக்காக அதனிடம் யாசித்தார்கள். சகோதர நாடுகளுடனும் கட்சிகளுடனும் தங்கள் நிதானத்தை மிக அடிக்கடி இழந்துவந்தார்கள். அவற்றின் மீது நிர்ப்பந்தம் செலுத்தினார்கள். ஏகாதிபத்தியத்திடமிருந்து ''நட்புறவையும்'' ''நம்பிக்கையையும்'' யாசித்துப் பெறும் ஒரே காரணத்திற்காக பல்வேறு நாடுகளிலுள்ள புரட்சிகர மக்களிடம் மிகப்பல சூழ்ச்சிகளையும் ஏமாற்றுதல்களையும் செய்தார்கள். ஆனால், ''மலர்கள் வளைந்து அன்பிற்காக ஏங்குகையில், இதயமற்ற ஓடை நீர் கற்களின் மீது சலசலத்துக்கொண்டே இருக்கிறது.'' ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து பெற்றுக்கொண்டதெல்லாம் அவமானம், மீண்டும் அவமானம், எப்போதுமே அவமானம்!

ரசிய கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்களுக்கு சில அறிவுரைகள்

ஏகாதிபத்திய இராணுவத் தலையீட்டுக்கெதிரான தற்காப்புப் போரின் கடுமையான நாட்களின்போதும், தேசபக்தப்போர் கொழுந்துவிட்டெரிந்தபோதும் லெனின் மற்றும் ஸ்டாலின் தலைமையின் கீழிருந்த மாபெரும் ரசிய மக்கள் துன்பங்களுக்காக பின்வாங்கினார்கள் என்பது போல் ஒரு நிகழ்ச்சியேனும் இருக்கிறதா? எதிரிக்கு அவர்கள் என்றேனும் மண்டியிட்டிருக்கிறார்களா? இன்று உலக நிலைமையானது முன் எப்போதையும் விட புரட்சிக்கு மிகவும் சாதகமாக உள்ளது. சோசலிசம் முன்னெப்போதையும் விட பலம்பொருந்தியதாக உள்ளது. அதே சமயத்தில் ஏகாதிபத்தியத்திற்கு இத்தகைய கடினமான நிலைமை எப்போதும் இருந்ததில்லை. இருந்தாலும், முதல் சோசலிசநாடு, லெனினால் நிறுவப்பட்ட அரசு எவ்வளவு வெட்ககரமான முறையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் மிரட்டப்படுகிறது. சோசலிச முகாமானது எந்த அளவு ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களால்அவமானப்படுத்தப்பட்டு விட்டது! நாங்களும், எந்த ஒரு மார்க்சிய-லெனினியவாதியும் அல்லது புரட்சிகர மக்களும் இதைக்கண்டு வருத்தமடையாமலிருப்பது எவ்வாறு சாத்தியம்?

இங்கு, கபடமற்ற இதயபூர்வமான அறிவுரைகளை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு வழங்க நாங்கள் விருப்பப்படுகிறோம்.

மிகவும் கொடூரமான ஏகாதிபத்திய நாடான அமெரிக்கா, உலகை வெற்றி கொள்ளும் பைத்தியக்காரத்தனமான யுத்த தந்திர நோக்கத்தை கொண்டிருக்கிறது. ஒடுக்கப்பட்ட நாடுகளின், தேசங்களின் புரட்சிகரப் போராட்டங்களை மிகவும் வெறி கொண்டு ஒடுக்குகிறது; சுதந்திர தேசங்களைக் கொண்ட உலக அமைப்பு என்று சொல்லிக் கொள்ளப்படுகின்ற ஒன்றுக்கு கிழக்கு அய்ரோப்பாவை மீட்க வேண்டும் என்று தன் நோக்கத்தை பகிரங்கமாகவே அது அறிவித்துள்ளது. உலகம் முழுவதையும் வெற்றி கொள்ளும் ஆக்கிரமிப்புத் திட்டங்களை விடாப்பிடியாக வைத்துக்கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தொடுக்கும் கொடுந்தாக்குதல்களானது மற்றவர்கள் மீதுதான் விழும், ரசியா மீது விழாது என்று எவ்வாறு நீங்கள் கனவு காண்கிறீர்கள்?

அமெரிக்கா ஒரு ஏகாதிபத்திய நாடு. ரசியா ஒரு சோசலிச நாடு. முற்றிலும் வேறுபட்ட சமுதாய அமைப்பு முறைகளைக் கொண்ட இரு நாடுகளுக்கிடையில் ''எல்லா விதமான கூட்டுறவை'' எப்படி நீங்கள் எதிர்பார்க்க முடியும்?

அமெரிக்காவுக்கும் மற்ற ஏகாதிபத்திய அரசுகளுக்கும் இடையில் கூட பரஸ்பரம் ஏமாற்றிக் கொள்வதும், போட்டியும் இருக்கிறது; அமெரிக்கா அவற்றைத் தன் காலடியில் போட்டு நசுக்கும் வரையில் திருப்தி அடையாது. அப்படியிருக்கும்போது சோசலிச ரசியாவுடன் ஏகாதிபத்திய அமெரிக்கா எவ்வாறு ஒத்துப்போகும் என்று நீங்கள் கனவு காண்கிறீகள்?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைத் தோழர்களே! இவ்விசயத்தை பற்றி சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். உலகத்தில் புயல் வீசும் போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நம்பியிருக்க முடியுமா? முடியாது. எல்லா ஏகாதிபத்தியவாதிகளையும் பிற்போக்குவாதிகளையும் போலவே அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளையும் நம்ப முடியாது. ரசியாவின் நம்பிக்கைக்குரிய கூட்டாளிகள் சோசலிச முகாமைச் சேர்ந்த சகோதர நாடுகளும், சகோதர மார்க்சிய-லெனினியக் கட்சிகளும், அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும் தேசங்களும் மட்டுமே.

வரலாற்றின் வளர்ச்சி விதி, எந்த ஒரு தனிநபரின் விருப்பத்தையும் சாராது இயங்கி வருகிறது. சோசலிச முகாமின் வளர்ச்சியையும், ஒடுக்கப்படும் மக்களின், தேசங்களின் புரட்சிகர இயக்கத்தையும் யாராலும் அழிக்க முடியாது என்பது மட்டுமல்ல, தடுத்து நிறுத்தக்கூட முடியாது.

சோசலிச முகாமின் மக்களுக்கும் உலக மக்களுக்கும் துரோகமிழைக்கிற வனும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூடிக்குலாவுவதன் மூலம் உலகை ஆதிக்கம் செலுத்த கனவு காண்கின்றவனும் சோகமான முடிவைத்தான் தழுவ நேரிடும். அவ்வாறு செய்வது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடைய மாபெரும் தவறும் அவர்களுக்கு அபாயகரமானது ஆகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தம்மை படுபாதாளத்தின் விளிம்பிலேயே தடுத்து நிறுத்திக் கொள்ள இன்னும் காலம் தாழ்ந்துவிட வில்லை. தங்களுடைய சமாதான சகவாழ்வுப் பொதுவழியை உதறி யெறிந்துவிட்டு, லெனினுடைய சமாதான சகவாழ்வுக் கொள்கைக்குத் திரும்பவும், மார்க்சிய-லெனினியம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் பாதைக்குத் திரும்பவும் அவர்களுக்கு இதுவே தகுந்த நேரமாகும்.

நமது காலத்தின் மிகப்பெரிய பிளவுவாதிகள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களே!

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது விமர்சனம்

"மக்கள் தினசரி", "செங்கொடி" பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்கள் (பிப்ரவரி 4, 1964)

நவீன திருத்தல்வாதக் கருத்துக்கள் பெருவெள்ளமெனச் சூழ்ந் திருக்கும் இக்காலத்தைப்போல வேறு எக்காலத்திலும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமை அச்சுறுத்தலுக்குள்ளாகி இருந்த தில்லை. சர்வதேச அளவிலும், தனிப்பட்ட கட்சிகளுக்குள்ளும், மார்க் சிய-லெனினியத்துக்கும் திருத்தல்வாதத்திற்கும் இடையே கடுமையான போராட்டம் நடந்து வருகிறது. தற்பொழுது சர்வதேச கம்யூனிச இயக் கம், முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பிளவுபடுவதற்கான கடும் அபாயத்தால் சூழப்பட்டுள்ளது.

சர்வதேச கம்யூனிச இயக்கம் மற்றும் சோசலிச நாடுகளுக்கிடையி லான ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டியது கம்யூனிஸ்டுகள், பாட்டாளி கள் மற்றும் புரட்சியாளர்களின் உடனடிக் கடமையாக உள்ளது.

மார்க்சிய-லெனினியத்திற்கேற்பவும், 1957-ஆம் ஆண்டு பிரகடனம் மற்றும் 1960-ஆம் ஆண்டு அறிக்கை ஆகியவற்றின் புரட்சிகரக்கோட் பாடுகளுக்கேற்பவும் சோசலிச நாடுகள் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக் கத்தின் ஒற்றுமையைக்காப்பாற்ற சீனக்கம்யூனிஸ்ட் கட்சி முரண்பாடற்ற தளராத முயற்சிகளை மேற்கொண்டது. கோட்பாடுகளையும், ஒற்றுமை யையும் உயர்த்திப் பிடிப்பது, வேறுபாடுகளைக் களைவது, பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தைப் பலப்படுத்துவது ஆகியன சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியான நிலைப்பாடாக அன்றும், இன்றும் தொடர்ந்து இருந்து வருகிறது.

திருத்தல்வாதப் பாதையில் பயணத்தை மேற்கொள்ளத் தொடங்கிய திலிருந்து, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைக் காப்பாற்று வதே தங்கள் இலட்சியம் என ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து கூறி வருகிறார்கள். சமீபகாலத்தில் அவர்கள் ''ஒற்றுமை'' பற்றி அதிகமாகவே கூச்சலிட்டு வருகிறார்கள். ''ஒற்றுமை'' பற்றிக் கூச்சலிடுபவர்களை நம்பி நாம் ஏமாறக்கூடாது. உதட்டளவில் ஒற்றுமை பற்றிப் பேசுபவர்கள்தான் பெருவாரியாக வேற்றுமைக்கான விதையை விதைப்பவர்களாகவும் இருக்கிறார்கள். ''மிகப்பெரிய குறுங்குழுவாதி களும், மிகப்பெரிய வாய்ச்சண்டைக்காரர்களும், போக்கிரிகளும் சில சமயங்களில் ஒற்றுமைக்காக உரத்து கூச்சலிடுகிறார்கள்'' [1] என்று எங்கெல்ஸ் 90 ஆண்டுகளுக்கு முன்பே சொன்னதை இது ஞாபகத்திற்கு கொண்டு வருகிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தங்களை, ஒற்றுமையைக் காப்பாற்றுபவர்களாக காட்டிக் கொள்ளும் அதே சமயத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது பிளவுவாத முத்திரை குத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

''சீனத்தலைவர்கள், சோசலிச முகாமின் ஒற்றுமையை மட்டுமல்லாமல் பாட்டாளிவர்க்க சர்வதேசியம் பற்றிய கருத்துக்களையும் காலில் போட்டு மிதிக்கிறார்கள். சகோதரக் கட்சிகளுக்கிடையே இருக்க வேண்டிய மிகச் சாதாரண உறவுகளைக்கூட ஒட்டுமொத்தமாக மீறுகிறார்கள். இவ்வாறு உலக கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையையே குலைத்து வருகிறார் கள்''என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி வெளியிட்ட பகிரங்க கடிதம் கூறுகிறது.

மேலும் ரசிய பத்திரிகைகளில் வந்த கட்டுரைகள் சீனக்.கம்யூனிஸ்டு களை ''குறுங்குழுவாதிகள்'' என்றும் ''பிளவுவாதிகள்'' என்றும் குற்றஞ்சாட்டி வருகின்றன.

ஆனால் உண்மை நிலைமை என்ன? யார் சோசலிச நர்டுகளின் ஒற்றுமைக்கு குழிபறிக்கிறார்கள்? யார் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின்

1. ''எங்கெல்ஸ், ஏ. பெபலுக்கு ஜுன் 20, 1873'' மார்க்ஸ், எங்கெல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள், ஆங்கிலப்பதிப்பு அ.மொ.ப., மாஸ்கோ, பக்கம் 345.

ஒற்றுமைக்கு குழிபறிக்கிறார்கள்? யார் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கைகளைக் காலில் போட்டு மிதித்து வருகிறார்கள்? யார் சகோதர கட்சிகளுக்கிடையே உள்ள உறவுகள் பற்றிய ஒத்துக்கொள்ளப்பட்ட விதிகளை ஒட்டுமொத்தமாக மீறுகிறார்கள்? வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால், உண்மையாகவே முற்ற முழுக்க பிளவுவாதிகளாக இருப்பது யார்?

மேற்கண்ட கேள்விகளுக்குத் தெளிவான விடை காண்பதன் மூலம் மட்டுமே சோசலிச நாடுகள் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கம் ஆகியவற்றின் ஒற்றுமையைக் காப்பாற்றி பலப்படுத்தும் வழியைக் கண்டறிந்து, பிளவுக்கான அபாயத்தைத் தவிர்க்க இயலும்.

ஒரு வரலாற்றுப் பரிசீலனை

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் உள்ள தற்போதைய பிளவுவாதத்தைப் பற்றி சரியாகப்புரிந்து கொள்ளவும், சரியான வழியில் அதற்கு எதிராகப்போராடவும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் கடந்த ஒரு நூற் ற ண்டுக்கும் மேற்பட்ட வரலாற்றைப் பார்ப்பது அவசியமாகும்.

கம்யூனிச இயக்கத்தின் வரலாறு, மார்க்சிய-லெனினியத்திற்கும் சந்தர்ப்பவாதத்திற்குமிடையேயும், ஒற்றுமையைப் பாதுகாக்கும் சக்திகளுக்கும் பிளவுவாதிகளுக்குமிடையேயும் நடக்கும் போராட்டமாகவே இருந்து வந்துள்ளது. தனிப்பட்ட நாடுகளிலும் சர்வதேசிய அளவிலும் இந்த நிலைமைதான் இருந்துவந்துள்ளது. இந்த நெடிய போராட்டத்தில் மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனின் ஆகியோர் கோட்பாட்டு ரீதியாகவே பாட்டாளிவர்க்க ஒற்றுமையின் உண்மையான சாரத்தைத் தந்துள்ளார்கள். மேலும் திருத்தல்வாதம், சந்தர்ப்பவாதம், பிளவுவாதம் ஆகியவற்றை மிக உறுதியாக எதிர்த்து நின்று மிகச்சிறந்த நடைமுறை முன்னுதாரணங்களை வழங்கி உள்ளார்கள்.

1847-ல் முதன்முதலில் கம்யூனிஸ்ட் லீக் என்னும் சர்வதேசப் பாட்டாளி வர்க்க அமைப்பை மார்க்சும், எங்கெல்சும் உருவாக்கினர். கம்யூனிஸ்ட் லீக் அமைப்பின் செயல்திட்டமான கம்யூனிஸ்ட் அறிக்கையில் "உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!" என்ற போர்க்குணம் மிக்க முழக்கத்தை மார்க்சும், எங்கெல்சும் முன்வைத்தனர்; விஞ்ஞான ரீதியானகம்யூனிசத்திற்கு முறையான, ஆழமான விளக்கத்தை அளித்த தன்மூலம் சர்வதேச பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கான சித்தாந்த அடிப்படைகளைநிறுவினர்.

சர்வதேசப்பாட்டாளி வர்க்கத்தின் கோட்பாட்டு ரீதியான ஒற்றுமைக்காக, மார்க்சும், எங்கெல்சும் தங்கள் வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்தனர்.

எல்லா நாட்டு தொழிலாளர் இயக்கங்களையும் அய்க்கியப்படுத்தும் நோக்கத்தோடு, 1864-ல் சர்வதேச உழைப்பாளர் சங்கம் என்ற முதலாவது அகிலத்தை அவர்கள் உருவாக்கினார்கள். முதல் அகிலத்தின் காலகட்டம் முழுவதும் பக்கூனினிஸ்டுகள், புருதோனிஸ்டுகள், பிளாங்கிஸ்டுகள், லாசலியர்கள் மற்றும் பிறருடன் கோட்பாட்டு ரீதியான போராட்டத்தை நடத்திவந்தனர். பக்கூனினிஸ்ட் பிளவுவாதிகளை எதிர்த்துத்தான் மிகக் கடுமையான போராட்டங்கள் நடந்தன. ஆரம்பத்திலிருந்தே பக்கூனினிஸ்டுகள் மார்க்சிய கோட்பாடுகளைத் தாக்கி வந்தனர். ''தனது குறிப்பிட்ட திட்டத்தை, தனது சொந்த போதனைகளை அகிலத்தில் ஆதிக்கம் செலுத்தச் செய்வதற்கு முயல்வதாக'' மார்க்ஸ் மீது பக்கூனினிஸ்டுகள் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால் உண்மையில் அவர்கள்தான் தங்கள் குழுவின் கொள்கைகளை அகிலத்தின் மீது திணிக்க முயன்றனர்.பக்கூனினின் குறுகிய சந்தர்ப்பவாதமிக்க கொள்கைகளை அகிலத்தின் திட்டத்திற்கு மாற்றாக வைக்க முயற்சித்தனர். அவர்கள், ஒன்றன்பின் ஒன்றாக வெவ்வேறு தந்திரங்களை கையாண்டு எப்படியாகிலும்'பெரும் பகுதியின் ஆதரவு' பெறுவதற்காக, குறுங்குழுவாத மற்றும் பிரிவுவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

முதல் அகிலத்தில், உண்மையான சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒற்றுமையைப் பாதுகாக்கும் பொருட்டு, மார்க்சும், எங்கெல்சும் பக்கூனினிஸ்ட் பிளவுவாதிகளின் பகிரங்க சவால்களை எதிர்த்து விட்டுக்கொடுக்காத கோட்பாட்டு ரீதியான போராட்டத்தை நடத்தி வந்தார்கள். மார்க்ஸ் கலந்துகொண்ட 1872 ஹேக் காங்கிரசில் பிளவுவாத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டுவந்த பக்கூனினிஸ்டுகள் அகிலத்திலிருந்தே வெளியேற்றப்பட்டார்கள்.

ஹேக் காங்கிரசில் பக்கூனினிஸ்டுகளின் பிளவுவாத நடவடிக்கைகள் குறித்து,மார்க்சியவாதிகள் கோட்பாட்டு ரீதியில் அல்லாத சமரச அணுகுமுறையை மேற்கொண்டிருந்தால் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துக்கு பெரும் பாதகமான விளைவுகள் ஏற்பட்டு இருக்கும் என எங்கெல்ஸ் குறிப்பிட்டார். ''அப்படிச் செய்திருந்தால் அகிலம்உடைந்து சிதறியிருக்கும் 'ஒற்றுமை'யின் பெயரால் உடைந்து சிதறியிருக்கும்.''[1] என்றும் அவர் கூறினார்.

மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் முதல் அகிலம், சந்தர்ப்பவாதத்தையும், பிளவுவாதத்தையும் எதிர்த்துப்

---

1. *''எங்கெல்ஸ், ஏ, பெபலுக்கு ஜூன் 20, 1873'', மார்க்ஸ், எங்கெல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள், ஆங்கிலப்பதிப்பு அ. மொ. ப,. மாஸ்கோ, பக்கம் 345.*

போராடி சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் மார்க்சியத்தின் தலைமையை நிறுவுவதற்கான அடிப்படைகளை உருவாக்கித் தந்தது.

1876-ல் முதல் அகிலம் முடிவு பெற்றதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில், வெகுஜன சோசலிசத் தொழிலாளர் கட்சிகள் உருவாகத் தொடங்கின. மார்க்சும், எங்கெல்சும் இக்கட்சிகள் உண்மையான விஞ்ஞான கம்யூனிச அடிப்படையில் உருவாகி வளரும் என்ற நம்பிக்கையோடு இவற்றின் உருவாக்கத்தையும் வளர்ச்சியையும் மிகவும் உன்னிப்பாக கவனித்து வந்தனர்.

அச்சமயத்தில் அய்ரோப்பாவின் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்த ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியை, கவனமாகவும் அக்கறையுடனும் கவனித்து வந்தனர். பல சமயங்களில் அக்கட்சி, ''ஒற்றுமையை'' காரணம் காட்டி சந்தர்ப்பவாதிகளோடு கேடுகெட்ட சமரச உணர்வுடன் நடந்து கொண்டதை மிகக் கடுமையாக விமர்சித்து வந்தனர்.

1875-ல் ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சி, கொள்கையை விட்டுக் கொடுத்து, லஸ்ஸாலியர்களோடு கூட்டுச் சேர்ந்ததையும், அதன் விளைவாக உருவான கோதா வேலைத்திட்டத்தையும் விமர்சித்தார்கள். இந்த ஒற்றுமை 'மிக அதிக விலை கொடுத்து பெறப்பட்டது' என்றும் ''கோதா வேலைத்திட்டம் கட்சியை நிலைகுலையச் செய்யும் ஆட்சேபனைக்குரிய திட்டம் என்றும் மார்க்ஸ் சுட்டிக்காட்டினார்.[1]'' எங்கெல்ஸ், ''இது ஜெர்மன் சோசலிச பாட்டாளி வர்க்கம் முழுவதும் லஸ்ஸாலியர்கள் முன் மண்டியிடும் செயல் ஆகும்'' என்றார். ''இந்த அடிப்படையில் உருவாகும் ஒற்றுமை ஒரு வருடம் கூட நிலைக்காது என நான் நம்புகின்றேன்''[2] என்றும் அவர் கூறினார்.

மார்க்ஸ் கோதா வேலைத் திட்டத்தை விமர்சனம் செய்த போது மார்க்சியவாதிகளுக்கு ''கோட்பாடுகள் பற்றிய விசயங்களில் எவ்வித ஊசலாட்டமும் இருக்கக் கூடாது'' என்ற புகழ்மிக்க கோட்பாட்டை முன் வைத்தார்.''[3]

---

1. ''மார்க்ஸ் டபுள்யூ. பிராக் என்பவருக்கு மே,51875,'' மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள், ஆங்கிலப்பதிப்பு, எப்.எல்.பி.எச்., மாஸ்கோ பக்கம் 360-361.

2. மேற்கூறிய நூல், ''எங்கெல்ஸ் ஏ. பெபலுக்கு, மார்ச் 18-28 1875, மார்க்ஸ், பக்கம் 358.

3. மேற்கூறிய நூல், ''மார்க்ஸ் டபிள்யூ. பிராக் என்பவருக்கு மே 5, 1875, பக்கம் 361.

பின்னர் மார்க்சும், எங்கெல்சும் ஜெர்மன் கட்சிக்குள் சந்தர்ப்பவாதி களின் நடவடிக்கைகளை அனுமதித்ததற்காக அதன் தலைவர்களை கடுமையாக விமர்சனம் செய்தனர். மேலும், இந்த சந்தர்ப்பவாதிகள் ''தங்கள் நவீன புராணவியல் கருத்துக்களோடு நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலிய தேவதைகளையும் சேர்த்துக் கொண்டு, கட்சியினுடைய பொருள்முதல் வாதத்துக்குமாற்றாக அதனை முன் வைக்க முயற்சித்தனர்''[1] என்றும், இவ்வாறு செய்வது ''கட்சியை யும், கோட்பாட்டையும் கேவலப்படுத்துவதாகும்''[2] என்றும் மார்க்ஸ் கூறினார்.

''வர்க்கப் போராட்டமே வரலாற்றின் உந்து சக்தியாகும் என்றும், குறிப்பாக தற்கால சமூகப் புரட்சிக்கு மாபெரும் திறவுகோல் முதலாளி களுக்கும், பாட்டாளிகளுக்கும் இடையே நடக்கும் வர்க்கப் போராட்டமே என்பதையும் கடந்த 40 ஆண்டுக்காலமாக நாங்கள் வலியுறுத்தி வரு கிறோம். எனவே, இந்த வர்க்கப் போராட்டத்தை இயக்கத்திலிருந்து நீக்க விரும்புபவர்களோடு எம்மால் ஒத்துழைக்க இயலாது''[3] என்று ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சிக்கு அனுப்பிய தங்களது சுற்றறிக்கை யில் மார்க்சும், எங்கெல்சும் குறிப்பிடுகின்றனர்.

எங்கெல்சின் செல்வாக்கினால் 1889-ல் நிறுவப்பட்ட இரண் டாவது அகிலம், முதலாளித்துவம் 'அமைதியாக' வளர்ந்து கொண்டு இருந்த காலத்தில் நிலவியது. மார்க்சியம் எல்லா இடங்களிலும் பரவி, கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை பல லட்சக் கணக்கான மக்களுக்கான திட்டமாக எல்லா இடங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட இக்காலக்கட்டத்தில், பல்வேறு நாடுகளில் இருந்த சோசலிசக் கட்சிகள் முதலாளித்துவ சட்டத்தை பயன்படுத்திக்கொள் வதற்குப் பதிலாக அதைக் குருட்டுத்தனமாக வழிபடும் சட்டவாதிகளாக மாறி சந்தர்ப்பவாதத்திற்கான கதவுகளை அகலத்திறந்துவிட்டனர்.

எனவே, இரண்டாவது அகில காலகட்டம் முழுவதும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கம், புரட்சிகர மார்க்சியவாதிகள் என்றும் போலி

---

1. ''மார்க்ஸ் எப். எ. சோர்ஜ் என்பவருக்கு, அக்டோபர் 19, 1877, மார்க்ஸ், எங்கெல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள், ஆங்கிலப்பதிப்பு, எப்.எல்.பி.எச்., மாஸ்கோ பக்கம் 376.
2. மேற்கூறிய நூல், ''மார்க்ஸ் எப். எ. சோர்ஜ் என்பவருக்கு செப்டம்பர் 19, 1879, பக்கம் 396.
3. ''மார்க்சும், எங்கெல்சும் ஏ. பெபல், டபிள்யூ. லீப்னெட், டபிள்யூ. பிராக் மற்றும் பிறருக்கு [சுற்றறிக்கைக் கடிதம்] செப்டம்பர் 17-18, 1879.

மார்க்சிய சந்தர்ப்ப வாதிகள் என்றும் இரண்டு பிரதானப் பிரிவுகளாகப் பிரிந்து காணப்பட்டது.

எங்கெல்ஸ், சந்தர்ப்பவாதிகளை எதிர்த்து சமரசமற்ற போராட்டத்தை நடத்தினார். முதலாளித்துவம் அமைதியான வழியில் சோசலிசமாகப் பரிணமிக்கும் என்ற சந்தர்ப்பவாதிகளின் கட்டுக் கதையை அவர் கடுமையாக மறுத்துரைத்தார். தங்களை மார்க்சிய வாதிகள் எனச் சொல்லிக் கொள்ளும் இந்த சந்தர்ப்பவாதிகளைப் பற்றி பேசும்போது ''நான் பெரிய மிருகங்களையே விதைத்தேன்; ஆனால், சிறிய ஈக்களையே அறுவடை செய்தேன்'' என்று ஹெய்னே (Haine) தன்னைப் போல நடிக்கும் போலி வேடதாரிகளைப் பார்த்துச் சொன்னான். மார்க்சியவாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் சந்தர்ப்ப வாதிகளைப் பார்த்து மார்க்சும் இதையே சொல்ல வேண்டியிருக்கும்''[1] என்கிறார் எங்கெல்ஸ்.

1895-ல் எங்கெல்ஸ் இறந்தபின் இந்த ஈக்கள் பகிரங்கமாக வெளி வந்து திட்டமிட்டமுறையில் மார்க்சியத்தைத் திருத்தி படிப்படியாக, இரண்டாவது அகிலத்தின் தலைமையைக் கைப்பற்றினர்.

எங்கெல்சுக்குப் பிறகு சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தனிப் பெரும் புரட்சியாளரான லெனின், இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்ப வாதத்தை முறியடித்து மார்க்சியத்தைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பை ஏற்றார்.

இரண்டாவது அகிலத்தின் திருத்தல்வாதிகள் மார்க்சியத்தை 'முழுமையற்றது', 'பழமையானது' என்றும் ஊளையிட்டபோது ''நாங்கள் முற்றிலும் மார்க்சிய கோட்பாட்டு நிலைப்பாடுகளிலேயே நிற்கிறோம்'' ஏனெனில் ''எல்லா சோசலிஸ்டுகளையும் அய்க்கியப் படுத்தும்''[2] புரட்சிகர கோட்பாடு அது என்று லெனின் திட்டவட்டமாக அறிவித்தார்.

---

1. ''பால் லபாக்குக்கு எங்கெல்சின் கடிதம், அக்டோபர் 27. 1890.'' கலை இலக்கியம் பற்றி மார்க்ஸ், எங்கெல்ஸ் என்ற நூலில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. அயல்மொழிப் பதிப்பு சோசியல்ஸ் பதிப்பு,பாரிஸ் 1954 பக்கம் 258.
2. வி.இ.லெனின் ''நமது திட்டம்'' தொகுப்பு நூல் ஆங்கிலப்பதிப்பு அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1960,தொகுதி 4, பக்கம், 210, 211.

இவை யாவற்றுக்கும் மேலாக ரசியாவில் ஒரு மார்க்சிய கட்சியைக் கட்டுவதற்காக லெனின் போராடினார். இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாத கட்சிகளிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்ட ஒரு புதிய கட்சியைக் கட்டுவதற்காக, ரசிய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியினுள் இருந்த பல்வேறு மார்க்சிய விரோத கோஷ்டிகளுடன் லெனின் சமரசமற்ற போராட்டத்தை நடத்தினார்.

இரண்டாவது அகிலத்தில் இருந்த மற்ற கட்சிகளைப் போலவே ரசிய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியும், புரட்சிகரக் குழுவையும் சந்தர்ப்பவாதக் குழுவையும் கொண்டதாக இருந்தது. லெனின் தலைமையிலிருந்த போல்ஷ்விக்குகள் முதலாவது குழுவையும்,மென்ஷ்விக்குகள் இரண்டாவது குழுவையும் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

லெனின் தலைமையில் இருத்த போல்ஷ்விக்குகள், மென்ஷ்விக்குகளை எதிர்த்து பாட்டாளி வர்க்கக் கட்சியின் ஒற்றுமையையும் அணிகளின் தூய்மையையும் காப்பாற்ற நீண்ட நெடிய தத்துவார்த்த மற்றும் அரசியல் போராட்டங்களை நடத்தினர். இறுதியாக 1912-ல் சந்தர்ப்பவாத, பிளவுவாத நடவடிக்கைகளுக்காக மென்ஷ்விக்குகள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

எல்லா சந்தர்ப்பவாதக் குழுக்களும் லெனினை மிக மோசமாக வசைபாடின. லெனினை ஒரு பிளவுவாதி என்று முத்திரை குத்த அவர்கள் எல்லா வழியிலும் முயன்றனர். லெனினியத்துக்கு விரோதமான குழுக்கள் அனைத்துடனும் சேர்ந்து கொண்டு ''குழுவாதத்தை எதிர்ப்போம்'' என்ற முழக்கத்தின் கீழ் லெனினையும், போல்ஷ்விக் கட்சியையும் 'பதவி வெறியர்கள்' 'பிளவுவாதிகள்' என டிராட்ஸ்கி வசைமாரி பொழிந்தார். 'குழு வாதத்திற்கு அப்பாற்பட்டவர்' என்று தன்னைக் காட்டிக் கொள்ளும் டிராட்ஸ்கி, ''குழுவாதத்தின் மோசமான மிச்ச சொச்சங்களின் பிரதிதிதி''[1] என்றும் ''மோசமான பிளவுவாதிகளின் பிரதிநிதி''[2] என்றும் லெனின் பதிலளித்தார்.

லெனின் இது குறித்துத் தெளிவாகக் குறிப்பிட்டார் ''ஒற்றுமை என்பது மகத்தான விசயம், ஒரு மகத்தான முழக்கம். ஆனால் பாட்டாளி

---

1. *வி. இ. லெனின், ''அய்க்கியத்திற்கான அறைகூவல் என்ற போர்வையில் அய்க்கியத்தை சீர்குலைப்பது, தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல் மொழி பதிப்பகம், மாஸ்கோ, 1952 தொகுதி 1, பாகம் 2, பக்கம் 251.*

2. *வி. இ. லெனின், ''ஆகஸ்டு கூட்டின் முறிவு'' தொகுப்பு நூல்கள் ஆங்கிலப்பதிப்பு, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1964 தொகுதி 20, பக்கம் 161.*

வர்க்க நலன்களுக்கு தேவைப்படுவது மார்க்சியவாதிகளின் ஒற்றுமையே அன்றி, மார்க்சியவாதிகளுக்கும், மார்க்சிய விரோதிகளுக்கும், மற்றும் மார்க்சியத்தைச் சீர்குலைப்பவர்களுக்கும் இடையிலான ஒற்றுமை அல்ல.''[1]

மென்ஷ்விக்குகளை எதிர்த்து லெனின் நடத்திய போராட்டம், சர்வ தேசிய முக்கியத்துவமுடைய விசயமாகும்;ஏனெனில்,மென்ஷ்விஸமானது இரண்டாவது அகில திருத்தல்வாதத்தின் ரசிய மறுபதிப்பாகவும் வடிவமாகவும் இருந்ததோடு, இரண்டாவது அகில தலைவர்களால் ஆதரிக்கப்பட்டது. மென்ஷ்விக்குகளை எதிர்த்துப் போராடிய அதே சமயத்தில், இரண்டாவது அகிலத்தின் திருத்தல்வாதத்தையும் எதிர்த்து லெனின் தொடர்ச்சியாகப் போராடினார்.

முதல் உலகப் போருக்கு முன்பே லெனின் இரண்டாவது அகிலத்தின் திருத்தல்வாதிகளை தத்துவார்த்த மற்றும் அரசியல் தளங்களில் விமர்சித்ததோடு, ஸ்டுட்கார்ட் மற்றும் கோபன்ஹேக்கன் காங்கிரசுகளில் அவர்களை எதிர்த்துப் போராடினார். முதல் உலகப்போர் தொடங்கியவுடன் இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்கு பகிரங்கமாக துரோகமிழைத்து விட்டனர். ஏகாதிபத்திய வாதிகளின் நலன்களுக்குச் சேவை செய்த அவர்கள், பல்வேறு நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களை ஒருவரை ஒருவர் படுகொலை செய்யும்படி கோரினர். அதன் மூலம் சர்வதேசப் பாட்டாளிகளிடையே கடுமையான பிளவை உண்டாக்கினர். ரோசா லக்சம்பர்க் கூறியது போல ''எல்லா நாடுகளின் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்ற பெருமைமிகு முழக்கத்தை ''எல்லா நாடுகளின் தொழிலாளர்களே ஒருவரையொருவர் படுகொலை செய்யுங்கள்''[2] என்ற முழக்கமாக திருத்தல்வாதிகள் மாற்றிவிட்டனர்.

அச்சமயத்தில் மார்க்சினுடைய சொந்த நாட்டிலிருந்த ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சிதான் இரண்டாவது அகிலத்திலேயே வலிமை மிக்கதாகவும் செல்வாக்குடையதாகவும் இருந்தது. அதுதான், முதன் முதலாகத் தன் சொந்தநாட்டு ஏகாதிபத்தியங்களின் பக்கம் சார்ந்து நின்றதன்மூலம் சர்வதேச பாட்டாளி வர்க்க இயக்கத்தில் பிளவை உண்டாக்கிய பிரதானக் குற்றவாளியாகவும் இருந்தது.

---

1. *வி.இ. லெனின், ''அய்க்கியம்'' தொகுப்பு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, முன்னேற்றப்பதிப்பகம், மாஸ்கோ, 1964, தொகுதி 20, பக்கம் 232.*
2. *''இது அல்லது அது'' ரோசா லக்சம்பர்க்கின் தேர்ந்தெடுக்கப் பட்ட பேச்சுக்களும் எழுத்துக்களும், ஜெர்மன் பதிப்பு, டீக் எவர்லாக், பெர்லின் 1951, தொகுதி 2, பக்கம் 534.*

இந்த நெருக்கடியான சமயத்தில் சர்வதேச பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்காக உறுதியோடு போராட லெனின் முன்வந்தார்.

1914 ஆகஸ்டில் சுற்றுக்கு விடப்பட்ட 'அய்ரோப்பிய போரில் புரட்சிகரமான சமூக ஜனநாயகத்தின் கடமைகள்' என்ற கட்டுரையில் லெனின் இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டி அதன் பெரும்பாலான தலைவர்களைக் கடுமையாகச் சாடினார்; குறிப்பாக சோசலிசத்திற்கு பகிரங்கமாகத் துரோகமிழைத்த ஜெர்மன் சமூக ஜன நாயக கட்சியின் தலைவர்களை மிகக் கடுமையாகச் சாடினார்.

இரண்டாவது அகிலத்தின் திருத்தல்வாதிகள் முதலாளித்துவத் தோடு வைத்திருந்த இரகசிய உறவை பகிரங்கமாக்கியதன் மூலம் சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் பிளவினைத் தவிர்க்க முடியாததாக்கினர். இதுபற்றி லெனின் கூறினார்.

''சந்தர்ப்பவாதத்துடன் தீர்மானகரமாக முறித்துக் கொள்ளாமல், அதன் தவிர்க்க இயலாத ஓட்டாண்டித்தனத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லாமல், இக்கால கட்டத்தில் சோசலிசத்தின் கடமைகளை முன்னெடுத்துச் செல்வதோ உண்மையான பாட்டாளிவர்க்க சர்வதேச ஒற்றுமையைச் சாதிப்பதோ சாத்தியமில்லை''.[1]

இதன் காரணமாகவே மார்க்சியவாதிகள் அய்ரோப்பாவின் பல நாடுகளில் உள்ள சந்தர்ப்பவாதிகளுடன் உறவை முறித்துக் கொள்வதை லெனின் உறுதியாக ஆதரித்தார்; மேலும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர ஒற்றுமையை மீண்டும் கட்டியமைப்பதற்காக ஓட்டாண்டியாகிப்போன இரண்டாவது அகிலத்துக்குப் பதிலாக மூன்றாவது அகிலத்தை நிறுவுவதற்கு துணிச்சலுடன் அறைகூவல் விடுத்தார்.

1919 மார்ச்சில் மூன்றாவது அகிலம் உருவாக்கப்பட்டது. இது இரண்டாவது அகிலத்தின் சிறப்பான சாதனைகளை கிரகித்துக் கொண்டதோடு, அதன் சந்தர்ப்பவாத தேசிய வெறி கொண்ட முதலாளித்துவ மற்றும் குட்டிமுதலாளித்துவ குப்பைகளைத் தூக்கியெறிந்தது. இவ்வாறு, அது சர்வதேசப் பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிகர இலட்சியம் ஆழமாகப் பரந்து விரிந்து வளர வழி செய்தது.

லெனினுடைய கொள்கையும், நடைமுறையும் மார்க்சியத்தை அதன் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்திற்கு - லெனினிய கட்டத்திற்கு

---

1. *வி. இ. லெனின் ''போரும் ரசிய சமூக ஜனநாயகமும்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1952, தொகுதி 1, பாகம் 2, பக்கம் 403.*

இட்டுச் சென்றது. சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையும், சர்வதேச கம்யூனிச இயக்கமும் மார்க்சிய லெனினிய அடிப்படையில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டது.

அனுபவங்களும் படிப்பினைகளும்

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் வளர்ச்சியின் வரலாறு நமக்கு எதனை விளக்குகிறது?

முதலில் பிறவற்றைப் போலவே சர்வதேச கம்யூனிச இயக்கமும் இரண்டாக பிளவுபடும் தன்மை வாய்ந்தது என்பதை விளக்குகிறது. பாட்டாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே நடக்கும் வர்க்கப் போராட்டம் கம்யூனிச அணிகளிலும் தவிர்க்க முடியாது பிரதிபலிக்கவே செய்கிறது. சந்தர்ப்பவாதத்தின் ஒருவகையோ அல்லது பிறிதொரு வகையோ கம்யூனிச இயக்கத்தின் வளர்ச்சியின்போது தோன்றுவதும், சந்தர்ப்பவாதிகள் மார்க்சிய விரோதப் பிளவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், சந்தர்ப்பவாதத்தையும் பிளவுவாதத்தையும்எதிர்த்து மார்க்சிய - லெனினியவாதிகள் உறுதியோடு போராட வேண்டியதும் தவிர்க்க முடியாதது. இதுபோன்ற எதிர்மறைகளின் போராட்டங்களின் மூலமே மார்க்சிய-லெனினியமும் சர்வதேசத் தொழிலாளர் வர்க்க இயக்கமும் வளர்ந்து வந்துள்ளன. இப்போராட்டங்களின் மூலமே சர்வதேச தொழிலாளர்வர்க்க இயக்கம் மார்க்சிய-லெனினிய அடிப்படையில் தனது ஒற்றுமையை வளர்த்து உறுதிப்படுத்தி வந்துள்ளது.

எங்கெல்ஸ் கூறினார்: ''பாட்டாளி வர்க்க இயக்கம் தவிர்க்க முடியாதபடி பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களைக் கடந்து செல்கிறது; ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு பகுதி மக்கள் மேற்கொண்டு முன்னேற முடியாமல் தேக்கமுற்று நின்றுவிடுகின்றனர். இதை புரிந்துகொண்டால், ''பாட்டாளி வர்க்க ஒற்றுமை'' என்பது உண்மையில் தங்களுக்குள் ஜீவ-மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பல்வேறு கட்சிக் குழுக்களாலேயே சாதிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்''.[1]

இதுதான் உண்மையில் நடந்தது. கம்யூனிஸ்ட் லீக், முதல் அகிலம், இரண்டாவது அகிலம் ஆகிய யாவும் முதலில் அய்க்கியமாக

---

1. ''எங்கெல்ஸ் ஏ. பெபலுக்கு, ஜூன் 20 1873'', மார்க்ஸ், எங்கெல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம். மாஸ்கோ, பக்கம் 347.

இருந்து, பின் தத்தம் வளர்ச்சிப் போக்கில் இரண்டாகப் பிரிந்து இறுதியில் ஒன்றையொன்று எதிர்க்கும் இரு பகுதிகளாக மாறின. ஒவ்வொரு தடவையும், சந்தர்ப்பவாதத்தையும், பிளவுவாதத்தையும் எதிர்த்த சர்வதேசப் போராட்டம் சர்வதேசத் தொழிலாளர் வர்க்க இயக்கத்தை ஒரு புதிய கட்டத்திற்கு இட்டுச் சென்று புதிய அடிப்படையிலான, உறுதியான, விரிவான அய்க்கியத்தை ஏற்படுத்த உதவியது. அக்டோபர் புரட்சியின் வெற்றியும், மூன்றாவது அகிலம் உருவாக்கப்பட்டதும் இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத்தையும் பிளவுவாதத்தையும் எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டத்தில் பெற்ற மாபெரும் சாதனைகளாகும்.

ஒன்றுமை, போராட்டம் அல்லது தேவைப்பட்டால் பிளவு, அதன்பின் புதிய அடிப்படையிலான ஒரு புதிய ஒற்றுமை-இதுதான் சர்வதேச பாட்டாளிவர்க்க இயக்க வளர்ச்சியின் இயக்கவியல் ஆகும்.

இரண்டாவதாக; ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒற்றுமையைப் பாதுகாப்பவர்களுக்கும் பிளவை உருவாக்குபவர்களுக்கும் இடையிலான போராட்டத்தின் சாராம்சம், மார்க்சிய-லெனினியத்திற்கும் சந்தர்ப்பவாதம்மற்றும் திரிபுவாதத்திற்கும் இடையிலான போராட்டமாகவும், மார்க்சியத்தை உயர்த்திப் பிடிப்பவர்களுக்கும், மார்க்சியத்துக்கு துரோகமிழைத்தவர்களுக்கும் இடையிலான போராட்டமாகவுமே இருந்து வந்திருக்கிறது என்பதை சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் வரலாறு சுட்டிக் காட்டுகிறது.

சர்வதேசிய அளவிலும் சரி, தனிப்பட்ட நாடுகளிலும் சரி உண்மையான பாட்டாளிவர்க்க ஒற்றுமை என்பது மார்க்சிய-லெனினிய அடிப்படையில் மட்டுமே சாத்தியமாகும்.

சர்வதேசிய அளவிலும் சரி தனிப்பட்ட நாடுகளிலும்சரி எங்கெல்லாம் சந்தர்ப்பவாதமும் திருத்தல்வாதமும் தலை தூக்குகின்றனவோ அங்கெல்லாம் பாட்டாளி வர்க்க அணிகளிடையே பிளவு என்பது தவிர்க்கமுடியாததாகிறது. கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு பிளவும் சந்தர்ப்பவாதிகளும், பிளவுவாதிகளும் மார்க்சிய-லெனினியத்தை எதிர்த்ததாலும் அதற்குத் துரோகமிழைத்ததாலும் ஏற்பட்ட பிளவுகளேயாகும்.

பிளவுவாதம் என்றால் என்ன?

இதன் பொருள், மார்க்சிய-லெனினியத்தில் இருந்து பிரிந்து போவதே. மார்க்சிய-லெனினியத்தை எதிர்த்து, அதற்குத் துரோகமிழைத்து, பாட்டாளி வர்க்க ஒற்றுமையை குலைக்கும் எவரும் பிளவுவாதிகளாவர்.

இதன் பொருள், புரட்சிகர பாட்டாளி வர்க்கக்கட்சியிலிருந்து பிரிந்து போவதேயாகும். திருத்தல்வாத வழியில் ஊன்றி நின்றுகொண்டு, புரட்சிகரமான பாட்டாளி வர்க்கக் கட்சியை ஒரு சீர்திருத்தவாத முதலாளித்துவக் கட்சியாக மாற்றுபவர்கள் அனைவரும் பிளவுவாதிகளாவர். இதன் பொருள், புரட்சிகரமான பாட்டாளி வர்க்கம் மற்றும் பரந்துபட்ட உழைக்கும் மக்களிடமிருந்து பிரித்து போவதேயாகும். உழைக்கும் மக்கள் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான விருப்பத்திற்கும் அடிப்படை நலன்களுக்கும் எதிரான திட்டத்தையும் வழியையும் பின் பற்றுபவர்கள் யாவரும் பிளவுவாதிகளே ஆவர்.

''எங்கு பாட்டாளிவர்க்க உணர்வு பெற்ற தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் பருண்மையான, திட்டவட்டமான முடிவுகளுக்கு ஆதரவளித்து அணிதிரள்கிறார்களோ, அங்கு கருத்துக்களிலும் செயல்களிலும் ஒற்றுமை இருக்கும்.''[1] அதே சமயம், ''சந்தர்ப்பவாதம், கோஷ்டி பூசல்களை உருவாக்கி, மிகவும் வெட்கமற்ற முறையில் பெரும்பாலான தொழிலாளர்களின் விருப்பத்திற்கு குறுக்கே நிற்கும்.''[2] என்றார் லெனின்.

பாட்டாளிவர்க்க ஒற்றுமையைச் சீர்குலைப்பதன் மூலம் பிளவுவாதம் முதலாளிகளுக்குச் சேவை செய்து, அதன் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. பாட்டாளி வர்க்க அணிகளில் பிளவை ஏற்படுத்துவதே முதலாளிகளின் முரணற்ற கொள்கையாகும். தனது ஏஜெண்டுகளை பாட்டாளி வர்க்க அணிகளிலிருந்தே விலைக்கு வாங்குவது அல்லது உருவாக்குவது முதலாளி வர்க்கத்தின் மிகவும் கீழ்த்தரமான வழியாகும்.

சரியாகச் சொன்னால், சந்தர்ப்பவாதிகளும், திருத்தல்வாதிகளும் தான் முதலாளிகளின் ஏஜெண்டுகளாவர். இந்த ஏஜெண்டுகள், பாட்டாளிகளை ஒன்றிணைத்து முதலாளிகளை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக, பாட்டாளிவர்க்கம் முதலாளிகளுடன் ஒத்துழைப்பதையே விரும்புகின்றனர். இதைத்தான் இரண்டாவது அகில பெர்ன்ஸ்டைன், காவுட்ஸ்கி போன்ற திருத்தல்வாதிகள் செய்தனர். அனைத்து நாடுகளின் பாட்டாளி வர்க்கமும் ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்றுவார்கள் என்று ஏகாதிபத்தியவாதிகள் மிகவும் பயந்து

---

1. *வி. இ. லெனின், ''அய்க்கியத்திற்கான அறைகூவல் என்ற போர்வையில் அய்க்கியத்தைச் சீர்குலைப்பது'' தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1952, தொகுதி 1, பாகம் 2, பக்கம் 255.*

2. *மேற்கூறிய நூல், பக்கம் 258.*

கொண்டிருந்த, வேளையில் அவர்கள் சர்வதேசப் பாட்டாளிவர்க்க இயக்கத்தில் பிளவை உருவாக்க முயற்சிக்கிறார்கள்; முதலாளித்துவத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை முன்மொழிகிறார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கும் பிளவுவாதிகள், முதலாளிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, மார்க்சிய-லெனினியத்திலிருந்தும் புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சியிலிருந்தும், புரட்சிகர பாட்டாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்கள் ஆகிய அனைவரிடமிருந்தும் பிரிந்து நிற்பவர்களாவர். மேலும் சந்தர்ப்பவாதிகள், பெரும்பான்மையாக இருக்கும்போதும், தலைமைப் பதவிகளை வகித்துவரும்போதும் கூட பிளவுவாதிகளாகவே இருக்கின்றனர்.

இரண்டாவது அகிலத்தின்போது திருத்தல்வாதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய காவுட்ஸ்கியும், பெர்ன்ஸ்டைனும் பெரும்பான்மையினராகவும், லெனின் பிரதிநிதித்துவப்படுத்திய மார்க்சிஸ்டுகள் சிறுபான்மையினராகவும் இருந்தனர். இருந்தபோதிலும், உண்மையில் காவுட்ஸ்கி, பெர்ன்ஸ்டைன் போன்ற பிற சந்தர்ப்பவாதிகள் லெனினைப் போன்ற புரட்சியாளர்களாக இல்லாமல், பிளவுவாதிகளாகவே இருந்தனர்.

1904-ல் மென்ஷ்விக்குகள், ரசிய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியின் மத்திய அமைப்புகள் தலைமைப் பதவிகளில் இருந்தபோதும், பிளவுவாதிகளாகவே இருந்தனர். ''தலைமை தாங்கும் மையங்கள் (மத்திய அமைப்பு, மத்திய கமிட்டி, கவுன்சில்) கட்சியிலிருந்து துண்டித்துக் கொண்டுள்ளன''[1] என்றும் ''மையங்கள் தங்களை கட்சிக்கு வெளியே நிறுத்திக்கொண்டுள்ளன. இதில் நடுநிலை என்பது இல்லை. ஒருவர் மைய அமைப்புக்களோடு இணையவேண்டும் அல்லது கட்சியோடு இணையவேண்டும்''[2] என்றும் சுட்டிக்காட்டினார் லெனின்.

சுருங்கக்கூறின் சந்தர்ப்பவாதமும், திருத்தல்வாதமும், பிளவுவாதத்தின் அரசியல் மற்றும் சித்தாந்த வேர்களாகும். பிளவுவாதம் என்பது சந்தர்ப்பவாதம் மற்றும் திருத்தல்வாதம் ஆகியவற்றின் அமைப்பு ரீதியான வெளிப்பாடாகும். இன்னொரு விதத்தில் சொல்லப்போனால் சந்தர்ப்பவாதமும், திருத்தல்வாதமும்தான்

---

1. வி. இ. லெனின், ''போல்ஷ்விக்குகளின் ஜுரிக் குழுவுக்கு ஒரு கடிதம்'' தொகுப்பு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1962, தொகுதி 8, பக்கம் 63.
2. மேற்கூறிய நூல், பக்கம் 64.

பிளவுவாதமும் குறுங்குழுவாதமும் கம்யூனிஸ்ட் இயக்கத்திலுள்ள திருத்தல்வாதிகள் மிகப்பெரிய, மிக இழிவான பிளவுவாதிகளும் குறுங்குழுவாதிகளும் ஆவர்.

மூன்றாவதாக, பாட்டாளிவர்க்க ஒற்றுமையானது, சந்தர்ப்பவாதம், திருத்தல்வாதம், பிளவுவாதம் ஆகியவற்றிற்கெதிரான போராட்டத்தில் உறுதிபடுத்தப்பட்டு வளர்க்கப்பட்டது என்பதை சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் வரலாறு நிரூபிக்கிறது. ஒற்றுமைக்கான போராட்டம், கொள்கை வழிகளுக்கான போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டுள்ளது.

பாட்டாளி வர்க்கத்திற்குத் தேவையான ஒற்றுமை, வர்க்க ஒற்றுமையும், புரட்சிகர ஒற்றுமையும், பொது விரோதிக்கு எதிரான ஒற்றுமையும் மற்றும் கம்யூனிச இலட்சியத்திற்கான ஒற்றுமையுமாகும். சர்வதேசப் பாட்டாளிவர்க்க ஒற்றுமையின் தத்துவ, அரசியல் அடிப்படையாக விளங்குவது மார்க்சிய-லெனினியம் ஆகும். எனவே, அரசியல் மற்றும் தத்துவார்த்த ஒற்றுமை இருந்தால் மட்டுமே, சர்வதேச பாட்டாளிவர்க்கம், அமைப்பு ரீதியான பிணைப்பும், செயலில் ஒற்றுமையும் கொண்டதாக விளங்க முடியும்.

உண்மையான புரட்சிகரப் பாட்டாளிவர்க்க ஒற்றுமையானது கோட்பாடுகளையும், மார்க்சிய-லெனினியத்தையும் உயர்த்தி பிடிப்பதன் மூலம்மட்டுமே சாத்தியமாகும். கோட்பாடுகளைக்கைகழுவி விடுவதாலும், சந்தர்ப்பவாத சகதியில் புரள்வதாலும் கிடைக்கும் ஒற்றுமை பாட்டாளி வர்க்க ஒற்றுமை அல்ல; மாறாக லெனின் கூறியது போல ''இந்த ஒற்றுமையின் பொருள், தேசிய முதலாளிகளுக்கும், பாட்டாளிகளுக்கும் இடையிலான ஒற்றுமை என்பதும் சர்வதேச தொழிலாளர் அமைப்பில் பிளவு என்பதும் கைக்கூலிகளிடையே ஒற்றுமை என்பதும் புரட்சியாளர்களிடையே பிளவு என்பதும் ஆகும்.''[1]

''எப்படி முதலாளி வர்க்கம் தூக்கியெறியப்படும் வரை அது தானாகவே அழியாதோ, அது போலவே,'' முதலாளிகளின் இலஞ்சத்தையும் ஆதரவையும் பெற்ற சந்தர்ப்பவாதமும் ''கொல்லப்பட்டால்'' ஒழிய தானாக சாகாது. அதாவது, சோசலிச தொழிலாளர் வர்க்கத்திடையே உள்ள அதன் எல்லாவித செல்வாக்கும் துண்டிக்கப்பட்டுத்

---

1. வி. இ. லெனின், ''ஒரு பிரெஞ்சு சோசலிஸ்டின் நேர்மையான குரல்'' தொகுப்பு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, இண்டர்நேசனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க் 1930, தொகுதி 18, பக்கம் 329.

தூக்கியெறியப்பட வேண்டும்'' எனவே, ''சந்தர்ப்பவாதப் போக்கிற்கெதிரான இரக்கமற்ற போராட்டம்.''[1] நடத்துவது அவசியமாகும் என்று அவர் மேலும் கூறினார்.''

சந்தர்ப்பவாதிகளும், திருத்தல்வாதிகளும் சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தைப் பிளவுபடுத்தத் தயாராக இருக்கும் நிலையில் உண்மையான மார்க்சியவாதிகள் எக்காரணத்தைக் கொண்டும் தத்துவார்த்த ரீதியில் சமரசம் செய்துகொள்ளாமல், பிளவுவாதத்துக்கு எதிராக உறுதியாகப்போராடவேண்டும். இதுவே மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியவர்களின் மதிப்புமிக்க கட்டளைகளாகும். மேலும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்கு இது ஒன்றே சரியான வழியாகும்.

நமது காலத்தின் மிகப்பெரிய பிளவுவாதிகள்

குருச்சேவின் தலைமையிலான ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள்தான் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நவீன திருத்தல்வாதத்தின் பிரதான பிரதிநிதிகளாகவும் மிகப்பெரிய பிளவுவாதிகளாகவும் உள்ளனர் என்பதையே அண்மைக்கால நிகழ்ச்சிகள் நமக்கு உணர்த்துகின்றன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்கும், 22-வது காங்கிரசுக்கும் இடைப்பட்ட காலத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் திருத்தல்வாதத்தை முழுமை பெற்றதாக வளர்த்தனர். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் முரண்பட்ட 'சமாதான சகவாழ்வு', 'சமாதான போட்டி', 'சமாதான மாற்றம்', 'எல்லா மக்களுக்குமான அரசு', 'எல்லா மக்களுக்குமான கட்சி' ஆகிய போக்குகளை உள்ளடக்கிய திருத்தல்வாதப் பாதையை முன்வைத்தனர். 1957 மற்றும் 1960-ல் அனைத்துக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவழிக்கு மாற்றாக திருத்தல்வாத வழியை அனைத்து சகோதரக் கட்சிகளின் மீதும் திணிக்கமுயன்றனர். மார்க்சிய-லெனினிய வழியில் உறுதியாக நின்று திருத்தல்வாத வழியை எதிர்த்து நிற்பவர்களையெல்லாம் அவர்கள் கடுமையாகச் சாடினர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்கான அடிப்படையைச் சீர்குலைத்ததோடு மார்க்சிய—லெனினியத்துக்கும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் துரோகம்

---

1. வி. இ. லெனின், ''ஒரு பிரெஞ்சு சோசலிஸ்டின் நேர்மையான குரல்'' தொகுப்பு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, இண்டர்நேசனல் பப்ளிஷர்ஸ், நியூயார்க், 1930, தொகுதி 18, பக்கம் 329.

இழைத்து, தங்கள் திரிபுவாத, பிரிவினைவாத நடவடிக்கைகளைத் திணிப்பதன்மூலம் பிளவுபடுவதற்கான பேரபாயத்தையும் உருவாக்கி உள்ளனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், சோசலிசமுகாமை உறுதி படுத்தி விரிவாக்குவதற்கு மாறாக, அதை பிளவுபடுத்தி சிதறடிக்க முயன்று வருகின்றனர். இவ்வாறு அவர்கள், உன்னத சோசலிச முகாமை குழப்பம் மிக்கதாக மாற்றியுள்ளனர். பிரகடனத்திலும் அறிக்கையிலும் வரையறுக்கப்பட்டுள்ள, சகோதரக் கட்சிகளுக்கிடையே இருக்கவேண்டிய உறவுநெறிகளை மீறி, சகோதர சோசலிச நாடு களிடம் வல்லரசு ஆதிக்க வெறியையும், தேசிய தன்னகங்காரத்தையும் கடைபிடித்து சோசலிச முகாமின் ஒற்றுமையைச் சீர்குலைந்துள்ளனர்.

அவர்கள், சகோதர நாடுகளின் இறையாண்மையை எதேச்சதிகார மாக அத்து மீறுகிறார்கள், அவர்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகிறார்கள், சதிவேலைகளில் ஈடுபடுகிறார்கள், சகோதர நாடுகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எல்லாவழிகளிலும் முயல்கிறார்கள்.

''சர்வதேச உழைப்புப் பிரிவினை'' என்ற பெயரில் ரசியகம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், சகோதர நாடுகள் தங்கள் சொந்த முயற்சியில், சோசலிசத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளையும், தற்சார்புப் பொருளாதார அடிப்படைகளை உருவாக்குவதையும் எதிர்த்து, அந்நாடுகளை பொருளாதாரத் தொங்குசதையாக மாற்ற முயல்கிறார்கள். பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள சகோதர நாடுகள் தொழில் மயமாக்கலைக் கைவிட்டு தமக்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்கும் ஆதாரமாகவும், தங்கள் நாட்டின் உற்பத்தி பொருட்களை வாங்கும் சந்தையாகவும் மாற நிர்ப்பந்தம் செய்கின்றனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், தங்களின் பெரும் வல்லரசு ஆதிக்கக்கொள்கையைப் பின்பற்றுவதில் மிகவும் மனசாட்சியற்ற முறை யில் நடந்து கொள்கிறார்கள். சகோதர நாடுகளின் மீது தொடர்ந்து அரசியல்,பொருளாதார மற்றும் இராணுவ நிர்ப்பந்தங்களையும் கூட ஏற் படுத்துகின்றனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், அல்பேனிய அரசு மற்றும் கட்சித் தலைவர்களைத் தூக்கியெறியும்படி பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்ததோடு, அந்நாட்டுடன் எல்லாப் பொருளாதார, அரசியல் உறவு களையும் கேவலமான முறையில் முறித்துக் கொண்டனர். வார்சா ஒப்பந் தம் மற்றும் பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில் முதலியவற்றின்

உறுப்பினர் என்ற முறையில் அந்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய நியாய மானஉரிமைகளை வழங்குவதற்கும் சர்வாதிகாரமான முறையில் மறுத்து விட்டனர். நட்புறவு, பரஸ்பர உதவி, நேச உறவு, ஆகியவை பற்றிய ரசிய-சீன ஒப்பந்தத்தின் விதிகளை மீறி, சீனாவில் பணிபுரிந்து வந்த 1390 ரசிய நிபுணர்களையும் ஒருதலைபட்சமாகத் திருப்பியழைத்துக் கொண்டதோடு, ரசிய நிபுணர்கள் சீனாவில் பணிபுரிவதற்கான 343 ஒப் பந்தங்களையும் முறித்து கொண்டனர். மேலும் 257 விஞ்ஞான, தொழில் நுட்ப ஒப்பந்தங்களை ரத்து செய்ததுடன், சீனாவுக்கு எதிராக கட்டுப் படுத்தப்பட்ட, பாரபட்சமான வர்த்தகக் கொள்கையைப் பின்பற்றி வரு கின்றனர். சீன-ரசிய எல்லைகளில் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு, சிங்கியாங் பகுதியில் பெருமளவிலான சீர்குலைவு சதி வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான பலர், எனது ‘நல்ல நண்பர்கள் என சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தோழர்களிடமே கூறுமள வுக்கு குருச்சேவ் சென்றுள்ளார்.

சோசலிசக் கட்டுமானப் பணியில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொது வழியான மாபெரும் பாய்ச்சல், மக்கள் கம்யூன்கள் முதலியவற்றைத் தாக்கி வரும் கட்சி விரோத நடவடிக்கைகளை குருச்சேவ் ‘தைரியமான செயல்’ எனப் புகழ்ந்துள்ளார்.

முதலாளித்துவ நாடுகளுக்கிடையே கூட அரசு உறவுகளை மோச மாக்கும் இம்மாதிரியான நடவடிக்கைகள் அபூர்வமே. ஆனால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், மீண்டும், மீண்டும் இது போன்ற அதிர்ச்சியூட்டக்கூடிய கடுமையான செயல்களை சகோதர சோசலிச நாடு களுக்கெதிராக பின்பற்றி வருகின்றனர். அதே சமயம் ‘பாட்டாளிவர்க்க சர்வ தேசியத்துக்கு விசுவாசமாக இருப்பதாக’ தொடர்ந்து பீற்றிக் கொள்கின்றனர். இதுபோன்ற உங்கள் செயல்களில் கொஞ்சமாவது சர்வதேசியம் இருக்கிறதா? என்று நாங்கள் கேட்க விரும்புகின்றோம்.

சகோதரக் கட்சிகளிடம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் நடந்துகொள்ளும் விதத்திலிருந்தே அவர்களின் பெரும் வல்லரசு ஆதிக்க வாதமும், பிளவுவாதமும் அப்பட்டமாகத் தெரிகிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசிலிருந்தே அதன் தலைவர்கள் தனிமனித துதியை எதிர்த்து போராடுவது என்ற போர்வை யில் பிற சகோதரக் கட்சிகளின் தலைமையை தங்கள் தேவைக்கேற்ப மாற்றியமைக்க முயற்சி செய்துள்ளனர். அன்றிலிருந்து இன்றுவரை

''தனிமனித துதியை எதிர்த்து போராடுவதையே'' ஒற்றுமைக்கான ஒரு முன் நிபந்தனையாகவும், ''அதுவே ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாடாகவும் இருக்க வேண்டுமெனவும்''[1] வலியுறுத்தி வருகின்றனர்.

பிரகடனத்திலும், அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளபடி, சகோதரக் கட்சிகளுக்கிடையே இருக்க வேண்டிய உறவு முறைகளுக்கு மாறுபட்ட முறையில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், சகோதரக் கட்சிகளின் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் மறுத்து, ஒரு வகை நிலப்பிரபுத்துவத் தந்தைவழி உறவுமுறை ஆதிக்கத்தை சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் புகுத்தவும் அதன் மூலம் சகோதரக் கட்சிகளுக்கிடையிலான உறவு முறையை தந்தைக்கும் மகனுக்குமிடையிலான உறவாக மாற்றவும் முயன்று வருகின்றனர். குருச்சேவ், ஒரு சகோதரக் கட்சியை ''சின்னப் பையன்'' என்றும் தன்னை அதன் ''தாயாகவும்''[2] பலமுறை வர்ணித்துள்ளார். இத்தகைய நிலப்பிரபுத்துவ தற்புகழ்ச்சி மனப்பான்மை குறித்து அவர் சிறிதும் வெட்கப்படவில்லை.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், சகோதரக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து ஏகமனதாக முடிவெடுக்கும் கொள்கையை முழுவதுமாக அசட்டை செய்துவிட்டு சர்வாதிகார முறையில் முடிவுகளை எடுத்துவிட்டு மற்றவர்கள் மீது கட்டளையிடுகின்றனர். அவர்கள் சகோதரக் கட்சிகளுக்கிடையே இருக்கும் கூட்டு ஒப்பந்தங்களை முரட்டுத்தனமாகக் கிழித்தெறிந்துவிட்டு, சகோதரக் கட்சிகளுக்கும் அக்கறையுள்ள முக்கியமான விசயங்களில் எதேச்சையாக எடுத்த தங்களுடைய முடிவுகளை மற்ற கட்சிகளின் மீது திணித்தார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், சகோதரக் கட்சிகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை பரஸ்பரம் கலந்தாலோசித்துத் தீர்க்க வேண்டும் என்ற விதிமுறைகளை மீறியுள்ளார்கள் முதலில் அவர்கள் தங்கள் கட்சிக் காங்கிரசையும்; பின்னர் பிற சகோதரக் கட்சிகளின்

---

1. ''சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அய்க்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும்'' பிராவ்தா டிசம்பர் 6, 1963 - ஆசிரியர் குழு கட்டுரை.

2. ''லுக்'' என்ற அமெரிக்கப் பத்திரிகையின் ஆசிரியர் கார்னெர் கவுல்சின் என். எஸ். குருச்சேவுடனான பேட்டி, ஏப்ரல் 20, 1962, சோ. சோ. கு. ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் கூட்டத்தில் என். எஸ். குருச்சேவ் அறிக்கை, டிசம்பர் 12, 1962.

காங்கிரசையும் மேடையாகப் பயன்படுத்தி மார்க்சிய-லெனினியத்தை உறுதியாக உயர்த்திப் பிடிக்கும் சகோதரக் கட்சிகளை பெருமளவில் பகிரங்கமாகத் தாக்கி வருகின்றனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்கள் அரசியல் சதுரங்கத்தில் சகோதரக் கட்சிகளைப் பகடைக்காய்களாகக் கருதுகின்றனர். குருச்சேவ் சகோதரக் கட்சிகளிடம் முரட்டுத்தனமாகவும், தாறுமாறாகவும், ஆத்திரத்துடனும் நடந்துகொள்கின்றார். ஒரு நாள் ஒரு விதமாகவும், மறுநாள் வேறுவிதமாகவும் பேசுகிறார். என்ன நடக்கிறது, எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதையெல்லாம் புரிந்துகொள்ளாமல்,எல்லா சகோதரக் கட்சிகளும் தனது தாளத்திற்கேற்ப நடனமாட வேண்டுமென அவர் வலியுறுத்துகிறார்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், பல கம்யூனிஸ்ட் கட்சிகளில் உள்ள தமது திருத்தல்வாத சீடர்களைத் தூண்டிவிட்டு, அக்கட்சிகளின் தலைவர்களைத் தாக்கவும், தலைமைப் பதவிகளைக் கைப்பற்றவும், உண்மையான மார்க்சிய-லெனினியவாதிகளைத் துன்புறுத்தவும், அவர்களைக் கட்சியிலிருந்தே வெளியேற்றவும் செய்கின்றனர். இவ்வாறு அக்கட்சிகளில் பிளவையும், குழப்பத்தையும் உண்டாக்குகின்றனர். இவர்களின் இதுபோன்ற செயல்களின் விளைவாக, பல முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் அமைப்பு ரீதியான பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

'சமாதானம், சோசலிசம் பற்றிய பிரச்சினைகள்' என்ற சகோதரக் கட்சிகளின் பொதுவான பத்திரிகையை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், திருத்தல்வாதம், குறுங்குழுவாதம், பிளவுவாதம் முதலியவற்றைப் பரப்புவதற்கும், உண்மையான மார்க்சிய-லெனினிய சகோதர கட்சிகளைக் கடுமையாகத் தாக்குவதற்குமான ஒரு சாதனமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இது, இப்பத்திரிகை உருவாக்கப்பட்டபோது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களை மீறுகின்ற செயலாகும்.

இத்துடன், சர்வதேச ஜனநாயக அமைப்புகளிலும், இவர்கள் தங்கள் திருத்தல்வாதக் கொள்கைகளைத் திணித்து, அவ்வமைப்புகளின் சரியான பாதைகளை மாற்றி, அவற்றில் பிளவுகளை உருவாக்க முயன்று வருகிறார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எதிரிகளையும், தோழர்களையும் தலைகீழாக மாற்றி விட்டார்கள்.

அவர்கள் தமது போராட்ட முனையை அமெரிக்க ஏகாதிபத்தியத் திற்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிராக திசைவழிப்படுத்துவதற்குப் பதிலாக சகோதரக் கட்சிகளுக்கும், நாடுகளுக்கும் எதிராகத் திருப்பி விட்டிருக்கிறார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தமது உலக ஆதிக்கத்திற்காக ரசிய-அமெரிக்க ஒத்துழைப்பை உருவாக்குவதற்காக பெருமுயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். உலக மக்களின் மிகக் கொடூரமான எதிரியாகிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை, தமது நம்பிக்கையுள்ள நண்பனாகவும், மார்க்சிய-லெனினியத்தை உயர்த்திப் பிடிக்கும் சகோதரக் கட்சிகளைத் தங்கள் எதிரிகளாகவும் கருதுகிறார்கள். அவர்கள் அமெரிக்க ஏகாதி பத்தியத்தோடும் பிற நாடுகளின் பிற்போக்குவாதிகளோடும், ஓடுகாலி டிட்டோ கும்பல் மற்றும் வலதுசாரி சமூக ஜனநாயகவாதிகளோடும் ஒன்றிணைந்து, சகோதரக் கட்சிகளையும், சோசலிச நாடுகளையும், மார்க்சிய-லெனினியவாதிகளையும் மற்றும் அனைத்து நாடுகளது புரட்சிகரமான பொதுமக்களையும் தாக்கி வருகிறார்கள்.

அய்சனோவர் அல்லது கென்னடி போன்றவர்களிடமிருந்து, தமக்குக் கிடைத்ததைப் பெற்றுக்கொள்ளும் போதும், பிற விசயங்கள் எல்லாம் தங்களைப் பொருத்தவரையில் சிக்கலின்றி நடைபெறுகின்றன என நினைக்கும்போதும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பூரித்துப் போகிறார்கள். மார்க்சிய-லெனினியத்தை உயர்த்திப் பிடிக்கும் சகோதரக் கட்சிகளையும், நாடுகளையும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குவதோடு அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் நடத்தும் அரசியல் பேரத்தில் சகோதரக் கட்சிக்ளையும், நாடுகளையும் பலியிட முயற்சி செய்கின்றனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் தவறான கொள்கைகள் தோல்விகளைத் தழுவி, சங்கடங்களில் சிக்கிக்கொள்ளும்போது, அவர்கள் கோபமடைந்து, முகம் சிவந்து, மீண்டும் சகோதரக் கட்சிகளையும், மார்க்சிய-லெனினியத்தைப் பின்பற்றும் நாடுகளையும், கடுமையாகத் தாக்குவதோடு, மற்றவர்களை அவர்களுடைய பலியாடுகளாக மாற்ற முயற்சிக்கின்றனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ரசிய மக்களுக்கும், சோசலிச முகாமிற்கும், சர்வதேச கம்யூனிச இயக்கம் மற்றும் புரட்சிகர மக்களின் நலன்களுக்கும் எதிராக பாட்டாளிவர்க்க சர்வதேசியத்திற்குத் துரோகம் செய்யும் பாதையில் செல்கிறார்கள் என்பதைத்தான் மேற்கண்ட விசயங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், மார்க்சிய-லெனினியத்துக்கு எதிராக தமது திருத்தல்வாதத்தையும், பாட்டாளிவர்க்க சர்வதேசியத் திற்கெதிராக தமது பெரும் வல்லரசு ஆதிக்கவெறியையும், தேசியத் தன்னகங்காரத்தையும், சர்வதேச பாட்டாளிவர்க்க ஒற்றுமைக்குப் பதிலாகத் தங்கள் குறுங்குழுவாதத்தையும், பிளவுவாதத்தையும் முன் வைக்கின்றனர் என்பதைத்தான் இவ்விசயங்கள் நிரூபிக்கின்றன. இவ்வாறு, எல்லா பழைய சந்தர்ப்பவாதிகளையும், திருத்தல்வாதி களையும் போலவே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் பல சகோதரக் கட்சிகளிலும், சோசலிச நாடுகளிலும், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்திலும் பிளவுகளை உருவாக்குபவர்களாக மாறியிருக்கிறார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திருத்தல்வாதமும், பிளவு வாதமும், கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் சேர்ந்த வேறு எந்த சந்தர்ப்பவாதிகள் மற்றும் பிளவுவாதிகளினுடையதை விட மிகவும் அபாயகரமானதாகும். இந்த திருத்தல்வாதம், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியில், எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளிடையேயும் மதிப்புமிக்க இடத்தில் இருந்த லெனினால் உருவாக்கப்பட்ட கட்சியில் தோன்றியுள்ளது. முதல் சோசலிச நாடான மாபெரும் சோவியத் யூனியனில் தோன்றி யுள்ளது.பல ஆண்டுகளாக, மார்க்சிய-லெனினியவாதிகளும் உலகிலுள்ள எல்லாப் புரட்சிகர மக்களும் சோவியத் ரசியாவை மிகவும் மதிப்புடன் போற்றி வந்ததோடு, அதனையே உலகப் புரட்சிக்கான தளமாகவும் போராட்டத்துக்கான முன்னுதாரணமாகவும் கருதிவந்தனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இவையனைத்தையும், லெனினால் உருவாக்கப்பட்ட கட்சி என்ற கவுரவத்தையும், முதல் சோசலிச நாடு என்ற கவுரவத்தையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, தமது பிளவுவாதம் மற்றும் திருத்தல்வாதத்தின் சாராம் சத்தை மூடி மறைக்கின்றார்கள், இன்னும் உண்மையை அறியாதவர்களை ஏமாற்றுகிறார்கள்.

அதே சமயம், இரட்டை வேடம் போடுவதில் கைதேர்ந்த இப்பேர் வழிகள் பிளவுவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டே, 'ஒற்றுமை' 'ஒற்றுமை' என்று கூக்குரலிடுகின்றனர். அவர்களின் தந்திரம் குறிப் பிட்ட அளவுக்கு மக்களை தற்காலிகமாகக் குழப்புகிறது.ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மேலுள்ள பாரம்பரிய நம்பிக்கையும், அதன் செயல்பாடுகள் பற்றிய அறியாமையும் பெருவாரியான மக்களை, அதன் திருத்தல் வாதத்தையும் பிளவுவாதத்தையும் உடடியாக உணர முடியாமல் தடுத்து விட்டிருக்கிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், உலகு தழுவிய செல்வாக்குப் பெற்ற மிகப் பெரிய சோசலிச அரசைத் தமது கையில் வைத்திருப்பதால் அவர்களின் திருத்தல்வாதமும், பிளவுவாதமும் வேறு எந்த சந்தர்ப்ப வாதிகள் மற்றும் பிளவுவாதிகளுடையதைக் காட்டிலும் உலக கம்யூனிச இயக்கத்துக்கும், உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் மிக அதிகமான தீங்கு விளைவித்துள்ளது. உலக வரலாற்றிலேயே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள்தான் மாபெரும் திருத்தல்வாதிகள், குறுங்குழுவாதிகள், பிளவுவாதிகள் என்று கூறமுடியும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திருத்தல்வாதமும், பிளவு வாதமும் சர்வதேச அளவில் திருத்தல்வாதம் பரவ பெருமளவு உதவியதோடு, ஏகாதிபத்தியத்துக்கும், அனைத்து நாட்டு பிற்போக்கு வாதிகளுக்கும் பெருமளவில் சேவை செய்துள்ளது என்பது ஏற்கனவே தெளிவாகியுள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திருத்தல்வாதமும், பிளவு வாதமும், ரசிய நாட்டில் முதலாளித்துவ சக்திகளின் அபரிமிதமான வளர்ச்சி மற்றும் ஏகாதிபத்தியக்கொள்கை ஆகியவற்றின் விளைவாகும். குறிப்பாக 'அணுகுண்டு மிரட்டல்', 'அமைதிவழி பரிணாமம்' ஆகிய அமெரிக்க ஏகாதிபத்தியக் கொள்கைகளின் விளைவாகும். அவர்களுடைய திருத்தல்வாத, பிளவுவாதக் கோட்பாடுகளும், கொள்கைகளும் உள் நாட்டில் பரவலாக உள்ள முதலாளித்துவ சக்திகளுக்கு உதவுவதோடு ஏகாதிபத்தியங்களுக்கும் உதவுகின்றன; உலகமக்களின் புரட்சிகரத் துணிவாற்றலை முடமாக்கி புரட்சிகரப் போராட்டங்களுக்குத் தடையாகவும் அமைகின்றன.

உண்மையிலேயே, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், ஏகாதி பத்தியம் மற்றும் அதன் கைக்கூலிகளின் பாராட்டுகளையும், புகழ்ச்சி களையும் ஏற்கனவே பெற்றுவிட்டார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் பிளவை ஏற்படுத்தியதற்காக குருச்சேவைப் புகழ்கின்றனர். ''மேற்கு நாடுகளுடன் உறவுகளைச் சுமுகப்படுத்துவதற்கு குருச்சேவ் உளப்பூர்வ மாக விரும்புகிறார் என்பது தெளிவாகிறது, அதனை அடைவதற்காக கம்யூனிச இயக்கத்தில் பிளவு ஏற்படும் ஆபத்தையும் ஏற்கத் தயாராக இருக்கிறார்''[1] என்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கூறுகின்றனர். ''ஸ்டாலின் காலத்து அய்க்கியப்பட்ட முகாமை நிகிதா குருச்சேவ் மீட்க முடியாதவாறு அழித்து விட்டார். இது கம்யூனிசத்திற்கு

1. *''ராஜதந்திரத்துக்கு தொடக்கம்: கூட்டமைப்புகளில் விரிசல் கள்'' தி நேசன், பிப்ரவரி 9, 1963.*

அல்ல, மேற்கத்திய உலகத்துக்கு குருச்சேவ் செய்த மாபெரும் சேவையாகும்''[1] ''அவர் சீனாவுடனான உறவைத் தவறாகக் கையாண்டதற்காக, நாம் அவருக்கு நன்றிக் கடன்பட்டுள்ளோம்... சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் அமைதியான பணிகள் மூலமும், பல்வேறு அதிர்ச்சியூட்டும் 'திடீர் நடவடிக்கைகள் மூலமும குழப்பங்களைத் தோற்றுவித்ததற்காக நாம் குருச்சேவ் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.''[2]

அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். குருச்சேவ்தான் ''மேற்கத்திய நாடுகள் விரும்பும் வகையில் நடந்துகொள்ளும் மிகச்சிறந்த பிரதமர்... எனவே சிறிது காலத்துக்காவது, குருச்சேவ் அவர்களின் நிலையை மேலும் பலவீனமாக்கும் எந்த நடவடிக்கையையும் தவிர்க்க வேண்டும்''[3] மேலும் அவர்கள் கூறுகிறார்கள், ''செஞ்சீனாவுடன் குருச்சேவ் மேற்கொண்டுள்ள தகராறில் அவருக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்று அமெரிக்க நிர்வாகம் கருதுகிறது.''[4]

வெகுநாட்களுக்கு முன்பாகவே ஓட்டாண்டிகளாகிவிட்ட டிராட்ஸ்கியவாதிகளும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை மெச்சுகிறார்கள். ஸ்டாலின் விசயத்திலும், அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் யூகோஸ்லாவிய திருத்தல்வாதிகளின் விசயத்திலும் குருச்சேவின் அணுகுமுறைகளை டிராட்ஸ்கியவாதிகள் முழுமையாக ஆதரிக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள். ரசியகம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசிலும், 22 வது காங்கிரசிலும்உருவாகியுள்ள நிலைமை, தொழிலாளர் அரசு நடக்கும் நாடுகளிலேயேகூட நமது இயக்கம் மறுமலர்ச்சி அடைவதற்கு மிகவும் சாதகமானதாகும்''[5] ''இதற்காக நாம் 25 வருடங்களாக காத்திருந்தோம்.

---

1. *''மாஸ்கோவும், பீகிங்கும்: பிளவு எவ்வளவு ஆழமானது?'' நியூஸ்வீக், மார்ச் 26, 1962.*
2. *''சோதனைத் தடை உடன்பாடு — குருச்சேவ் தன்னுடைய வழிகளை மாற்றிக் கொண்டாரா'', அமெரிக்கச் செய்தி மற்றும் உலக அறிக்கை, செப்டம்பர் 30, 1963.*
3. *''கம்யூனிச ஒற்றுமை அமெரிக்காவில் கடந்த கால விசயமாகப் பார்க்கப்படுகிறது'' லண்டன் டைம்ஸ், ஜனவரி 17, 1962.*
4. *''தி பெரிஸ்கோப்'', நியூஸ்வீக், ஜூலை 1, 1963.*
5. *''சர்வதேச நிலைமையும் நமது கடமைகளும்'', 1963-ல் நான்காவது அகிலம் என்றழைக்கப்பட்ட டிராட்ஸ்கியிஸ்டுகளின் மறு ஐக்கியப் பேராயத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், நான்காவது அகிலம், ஆங்கிலப் பதிப்பு, எண். 17, அக்டோபர், டிசம்பர், 1963, பக்கம் 47.*

எனவே, நாம் இப்பொழுது உள்ளே புகுந்திடவேண்டும். மிகுந்த ஆற்றலுடன் செயல்படவேண்டும்''[1] ''குருச்சேவின் நடவடிக்கைகளில், பழைமைவாதிகளுக்கு எதிரான ஸ்டாலினிய அழிப்புப்போராட்டத்துக்கு நாம் விமர்சனத்துடனான ஆதரவை வழங்கவேண்டும்.''[2]

யோசித்துப் பாருங்கள்! புரட்சியின் எல்லா எதிரிகளும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை மிகத் தீவிரமாக ஆதரிக்கிறார்கள். காரணம் என்னவெனில், மார்க்சிய-லெனினியத்தையும், உலகப் புரட்சியையும் அணுகுவதில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடன் அவர்கள் செயல் ஒற்றுமை காண்கிறார்கள். அத்துடன், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திரிபுவாத, பிளவுவாதப் பாதை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எதிர்புரட்சித் தேவைகளை நிறைவு செய்கிறது.

''தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாத போக்கைக் கடைபிடிக்கும் நபர்கள் முதலாளிகளைப் பாதுகாப்பதில், முதலாளிகளையே விஞ்சி நிற்கிறார்கள் என்பதை முதலாளிகள் புரிந்து கொண்டுள்ளதை''[3] லெனின் சுட்டிக்காட்டினார். பாட்டாளிவர்க்க இலட்சியமான உலகப் புரட்சியை அழிப்பதில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு உதவுவதற்கு ஏகாதிபத்திய பிரபுக்களும், எஜமானர்களும் மிக மகிழ்ச்சியோடு முன் வருகின்றனர்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தைப் பிளவுபடுத்தக்கூடிய கடுமையான அபாயத்தை உருவாக்கிய ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அதற்கான பழியை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீதும், பிற மார்க்சிய-லெனினியக் கட்சிகள் மீதும் சுமத்துவதோடு, அவைகளின் மீது ''பிளவுவாதம்'',

---

1. ''ரசியப் புரட்சியின் புதிய கட்டமும் ஸ்டாலினிசத்தின் நெருக்கடியும்'' அமெரிக்க டிராட்ஸ்கியவாதிகளின் சோசலிச தொழிலாளர் கட்சியின் தேசிய கமிட்டி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், ஏப்ரல் 13-15, 1956, 20-வது காங்கிரசும், (ரசிய கம்யூனிஸ்ட் கட்சி) உலக டிராட்ஸ்கியமும், நியூயார்க் பதிப்பகம், லண்டன், 1957, பக்கம் 36.
2. ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசின் எதிரொலிகள்'' நான்காவது அகிலம் என்றழைக்கப்படும் டிராட்ஸ்கியிஸ்டுகளின் சர்வதேச செயலகத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், டிசம்பர் 5, 1961, நான்காவது அகிலம், ஆங்கிலப்பதிப்பு, எண். 14, குளிர்கால இதழ், 1961-1962, பக்கம் 25.
3. வி. இ. லெனின், ''சர்வதேச சூழலும் கம்யூனிச அகிலத்தின் அடிப்படைக் கடமைகள்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேசனல் பப்ளிசர்ஸ், நியூயார்க், 1943, தொகுதி 10, பக்கம் 196.

''குழுவாதம்'' ஆகிய குற்றச்சாட்டுகளைப் புனைந்துரைக்கின்றனர். ஆகவே, அவர்களுடைய முக்கிய அவதூறுகள் சிலவற்றை ஒவ்வொன்றாக மறுத்துரைப்பது அவசியம் என்று கருதுகிறோம்.

ரசியாவின் எதிரி என்ற குற்றச்சாட்டுக்கு மறுப்பு

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களுடைய திருத்தல்வாதத்தையும், பிளவுவாதத்தையும் எதிர்ப்பவர்களையும் விமர்சனம் செய்பவர்களையும் ரசியாவின் எதிரிகள் எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். இது மிகப் பயங்கரமான குற்றச்சாட்டாகும். மாபெரும் லெனினால் உருவாக்கப்பட்ட கட்சியை, உலகின் முதல் சோசலிச நாட்டை எதிர்ப்பதற்கு எவ்வளவு கர்வம் இருக்கவேண்டும்!

பாசாங்கு செய்யவேண்டாம் என நாம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறோம். ரசியாவின் எதிரி என்ற குற்றச்சாட்டு எமக்கு ஒருபோதும் பொருந்தாது.

சுயமயக்கத்தில் ஆழ்ந்துவிடாதீர்கள் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு நாம் அறிவுறுத்துகிறோம். ரசியாவின் எதிரி என்ற குற்றச்சாட்டினால் மார்க்சிய - லெனினியவாதிகளின் வாயை அடைத்துவிட முடியாது.

உலகெங்குமுள்ள பிற கம்யூனிஸ்டுகள் மற்றும் புரட்சிகரமான மக்களுடன் சீனக் கம்யூனிஸ்டுகளாகிய நாங்களும் ரசிய மக்களையும், ரசிய அரசையும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் மிக உயர்ந்த இடத்தில் வைத்து மதித்தும், நேசித்தும் வருகிறோம். ஏனெனில் ரசிய மக்கள்தான் லெனினுடைய கட்சியின் தலைமையில் வெற்றிகரமாக அக்டோபர் புரட்சி தீபத்தை ஏற்றிவைத்தனர். உலக பாட்டாளிவர்க்க புரட்சியில் ஒரு புதிய சகாப்தத்தை தொடக்கிவைத்து பின்வந்த ஆண்டுகளில் கம்யூனிச பாதையில் பீடுநடை போட்டனர். லெனின் மற்றும் ஸ்டாலின் தலைமையில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சியும், அரசும்தான் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் மார்க்சிய - லெனினிய வழியைக் கடைபிடித்து சோசலிசத்தைக் கட்டியமைப்பதில் மாபெரும் சாதனைகளை ஈட்டியது, பாசிசத்தை எதிர்த்த போரின் வெற்றிக்கு மாபெரும் பங்களிப்பும் செய்தது, சர்வதேச அளவில் அனைத்து நாட்டு மக்கள் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களுக்கும் ஆதரவை வழங்கியது.

இறப்பதற்குச் சில காலத்திற்கு முன் ஸ்டாலின் கூறினார்:

''நமது கட்சியின் துணிவையும் வெற்றியையும் பாராட்டி, சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் புரட்சிகரமான உலகத்தொழிலாளர் இயக்கத்தின்'அதிரடிப்படை' என்று நமது கட்சிக்குப் பெயர் சூட்டினர். இதன்மூலம், இந்த 'அதிரடிப்படை'யின் வெற்றி முதலாளித்துவ நுகத்தடியின் கீழ்த் துயருறும் மக்களுக்கு விடிவு ஏற்பட துணைசெய்யும் என்று நம்பிக்கை தெரிவித்தார்கள். நமது கட்சி, அவர்களது இந்த நம்பிக்கையை நிறைவேற்றியிருக்கிறது என நான் நினைக்கிறேன்.''[1]

லெனினால் உருவாக்கப்பட்ட ரசிய கம்யூனிஸ்ட் கட்சி எல்லாக் கம்யூனிஸ்டுகளின் நம்பிக்கையையும் காப்பாற்றியுள்ளது என்று ஸ்டாலின் கூறியது சரியே. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட அனைத்து சகோதரக் கட்சிகளும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு செலுத்தும்மதிப்புக்கும், மரியாதைக்கும் அதுமுற்றிலும் தகுதியானதே.

ஆனால், 20-வது காங்கிரசுக்குப் பின், குருச்சேவ் தலைமையிலான ரசிய கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலின் மீது மிகக்கடுமையான தாக்குதல் களைத் தொடுத்து வருவதோடு, திருத்தல்வாதப் பாதையையும் மேற் கொண்டுள்ளது. இந்நிலையில் இவர்கள் எல்லா கம்யூனிஸ்டுகளின் நம்பிக்கைகளையும் காப்பாற்ற முடியுமா? நிச்சயமாக முடியாது.

''சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கான பொதுவழி பற்றிய தனது ஆலோசனைகளில்'' சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கூறிய தாவது, சோசலிச முகாமில் உள்ள எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும் கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என்று சோசலிச முகாமில் உள்ள மக்களும், சர்வதேச பாட்டாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் கோருகிறார்கள்.

1. மார்க்சிய-லெனினிய பாதையில் ஊன்றிநின்று, உண்மையான மார்க்சிய-லெனினிய உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

2. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், பாட்டாளி வர்க்கத் தலைமையிலான தொழிலாளர்-விவசாயி கூட்டணியையும் உறுதிப்படுத்தி அரசியல், பொருளாதார, தத்துவார்த்தத் துறைகளில் சோசலிச புரட்சியை இறுதிவரை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

---

1. ஜே. வி. ஸ்டாலின், கட்சியின் ஒன்பதாவது பேராயத்தில் ஆற்றிய உரை, ஆங்கிலப் பதிப்பு, அயல் மொழி பதிப்பகம், மாஸ்கோ, 1952. பக்கம் 9.

3. பரந்துபட்ட மக்களின் முன்முயற்சியையும், படைப்புத் திறமையையும் வளர்க்கவேண்டும். திட்டமிட்ட சோசலிச கட்டுமானப் பணியை மேற்கொள்ளவேண்டும், உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும், மக்களின் வாழ்நிலையை உயர்த்தவும், தேசப் பாதுகாப்பை பலப்படுத்தவும் வேண்டும்.

4. மார்க்சிய-லெனினிய அடிப்படையில் சோசலிச முகாமை பலப் படுத்தவேண்டும், பிற சோசலிச நாடுகளுக்கு பாட்டாளி வர்க்க சர்வ தேசியக் கோட்பாடுகளின் அடிப்படையில் உதவவேண்டும்.

5. ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தக்கொள்கைகளை எதிர்த்து உலக அமைதியைப் பாதுகாக்கவேண்டும்.

6. எல்லா நாடுகளிலும் உள்ள பிற்போக்குவாதிகளின் கம்யூனிச விரோத, மக்கள் விரோத மற்றும் எதிர்ப்புரட்சிக் கொள்கைகளை எதிர்க்க வேண்டும்.

7. உலகின் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின், தேசங்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு உதவ வேண்டும்.

சோசலிச முகாமில் உள்ள எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும் ''தமது சொந்த மக்களுக்காகவும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்காகவும், உழைக்கும் மக்களுக்காகவும் மேற்கூறிய கோரிக்கைகளை நிறை வேற்றக் கடமைப்பட்டுள்ளன'' என இது மேலும் கூறுகிறது.

ஆனால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இந்தக் கோரிக்கை களைக் கைவிட்டு, சகோதர கட்சிகளின் நம்பிக்கைகளுக்குத் துரோகம் செய்துவிட்டு, திருத்தல்வாத, பிளவுவாதப் பாதையைப் பின்பற்று கின்றனர். இது சர்வதேச பாட்டாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு மட்டுமல்லாது, ரசிய அரசுக்கும், ரசிய மக் களுக்கும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கூட எதிரானதாகும்.

குருச்சேவ் தலைமையில் உள்ள ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் களைத் தவிர வேறு யாரும் ரசியாவின் எதிரிகள் அல்லர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஸ்டாலினை முற்றாக மறுதலித்துவிட்டதோடு, உலகின் முதலாவது பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தையும், முதல் சோசலிச அமைப்பையும் இருள் சூழ்ந்த பயங் கரமான ஒன்றாகச் சித்தரிக்கின்றனர். இது ரசிய எதிர்ப்பு அன்றி வேறு என்ன?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை ஒழித்துவிட்டதாகப் பறைசாற்றுவதோடு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பாட்டாளி வர்க்க குணாம்சத்தை மாற்றி ரசியாவில் முதலாளித்துவ சக்திகளுக்கு வாசல் திறந்து விட்டுள்ளனர். இது ரசிய எதிர்ப்பு அன்றி வேறு என்ன?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அமெரிக்க-ரசிய ஒத்துழைப்பை நாடி அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் வாலை ஆட்டிக் கொண்டு நிற்கின்றனர். இவ்வாறு மாபெரும் ரசியநாட்டை அவமானப் படுத்துகின்றனர். இது ரசிய எதிர்ப்பு அன்றி வேறென்ன?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பெரும் வல்லரசு ஆதிக்க கொள்கையை கடைபிடித்து, சகோதர சோசலிச நாடுகளை சார்பு நாடுகளாக நடத்தி ரசிய அரசின் மதிப்பை கெடுத்துள்ளனர். இது ரசிய எதிர்ப்பு அன்றி வேறென்ன?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பிற மக்களின் புரட்சிகரப் போராட்டங்களைத் தடுத்தும், எதிர்த்தும் ஏகாதிபத்தியம், நவீன காலனித்துவம் ஆகியவற்றிற்காகப் பரிந்து பேசுபவர்களாக மாறி, லெனின் கட்சியின் புகழ்பெற்ற சர்வதேச மரபுகளைக் களங்கப்படுத்தியுள்ளனர். இது ரசிய எதிர்ப்பு அன்றி வேறென்ன?

சுருங்கச் சொன்னால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் நடவடிக்கைகள் மாபெரும் சோவியத் யூனியனுக்கும் அதன் புகழ்பெற்ற கட்சிக்கும் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, ரசிய மக்களின் அடிப்படை நலன்களுக்கும் கடும் சேதம் விளைவித்துள்ளன. இவை யாவும் முற்றமுழுக்க ரசிய எதிர்ப்புத் தன்மை வாய்ந்த செயல்களே ஆகும்.

இத்தகைய சூழ்நிலைமைகளில் இயல்பாகவே சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, பிற மார்க்சிய-லெனினியக் கட்சிகள் மற்றும் பிற மார்க்சிய-லெனினியவாதிகளின் உடனடிக் கடமை, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திருத்தல்வாத, பிளவுவாத நடவடிக்கைகளை கடுமையாக விமர்சிப்பதும் அதன் மூலம் மார்க்சிய-லெனினிய கொள்கைகளின் தூய்மையைப் பாதுகாப்பதும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையையும், சர்வதேச பாட்டாளிவர்க்கக் கோட்பாடுகளையும் உயர்த்திப் பிடிப்பதும் ஆகும். நாம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திருத்தல்வாத, பிளவுவாத தவறுகளை மட்டுமே எதிர்க்கிறோம். நாம் இவ்வாறு செய்வதன் நோக்கம், லெனினால் உருவாக்கப்பட்ட ரசிய கம்யூனிஸ்ட் கட்சியைப்

பாதுகாப்பதும், முதல் சோசலிச நாடான ரசியாவையும், அந்நாட்டு மக்களின் அடிப்படை நலன்களையும் பாதுகாப்பதுமே ஆகும். இதனை எப்படி ரசிய எதிர்ப்புச் செயல் என்று சொல்ல முடியும்?

ரசிய நாட்டை ஒருவர் ஆதரிக்கிறாரா, எதிர்க்கிறாரா என்பது அவர் மார்க்சிய-லெனினியத்தையும், பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளையும் உண்மையிலே பாதுகாக்கிறாரா, இல்லையா என்பதைப் பொருத்தும், அவர் உண்மையாகவே ரசிய கட்சி, ரசிய அரசு மற்றும் ரசிய மக்களின் அடிப்படை நலன்களைப் பாதுகாக்கிறாரா, இல்லையா என்பதைப் பொருத்துமே இருக்கிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திருத்தல்வாத, பிளவுவாத நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சனம் செய்வது, ரசியாவைப் பாதுகாப்பதற்கேயாகும். மாறாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைப் போல்திருத்தல்வாத, பிளவுவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் உண்மையில் ரசியாவை எதிர்ப்பதாகும். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் தவறான வழியைப் பின்பற்றுவது அல்லது அதற்கு அடிபணிவது ரசிய நாட்டை உண்மையில் பாதுகாப்பது அல்ல. மாறாக ரசிய மக்களின் அடிப்படை நலன்களுக்கு ஊறுவிளைவிக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு உதவுவதாகும்.

20-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சித் தலைவர்களைப் பற்றி லெனின் கொண்டிருந்த கருத்துக்களை இங்கு நினைவு கூர்வது அவசியமாகும். அப்பொழுது இரண்டாவது அகிலத்தில் ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சிதான் மிகப் பெரியதாகவும் செல்வாக்குப் பெற்றதாகவும் இருந்தது. ஆனால் அக் கட்சியின் தலைவர்களிடையே சந்தர்ப்பவாதத்தைக் கண்டவுடன் ரசிய சமூக ஜனநாயகக் கட்சி எக்காரணத்தைக் கொண்டும் ''ஜெர்மன் சமூக ஜனநாயகக்கட்சியின் சிறு இயல்புகளைக் கூட உதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது''.[1] எனத் தெளிவாக அறிவுறுத்தினார் லெனின். ''மார்க்சின் தத்துவங்களுக்கு உண்மையாக இருக்கவும்,தொழிலாளர் இயக்கத்தின் இன்றைய கடமைகளுக்கேற்ப ரசிய சோசலிஸ்டுகளைத் தயார் செய்யவும் விரும்பினால், நாம் ஜெர்மன் தலைவர்களின் செயல்களை அச்சமின்றியும்

---

1. *வி.இ லெனின். ''ஸ்டுட்கார்டில் நடந்த சர்வதேசிய சோசலிசப் பேராயம்''. தேர்வு நூல்கள். ஆங்கிலப் பதிப்பு. இண்டர் நேசனல் பப்ளிசர்ஸ், நியூயார்க். 1943. தொகுதி 4. பக்கம் 315.*

பகிரங்கமாகவும் விமர்சனம் செய்ய வேண்டும்''[1] என்றும் அவர் மேலும் கூறினார்.

லெனினுடைய ஆணைகளின் உணர்வில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு நாங்கள் அறிவுரை கூற விரும்புகிறோம்: நீங்கள் உங்களின் திருத்தல்வாதத் தவறுகளைத் திருத்திக் கொள்ளாவிட்டால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி, ரசிய அரசு, ரசிய மக்கள், சோசலிச முகாம், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமை ஆகியவற்றின் அடிப்படை நலன்களை முன்னிட்டு ''அச்சமின்றியும் பகிரங்கமாகவும்'' நாங்கள் உங்களை தொடர்ந்து விமர்சனம் செய்வோம்.

தலைமையைக் கைப்பற்றும் முயற்சி என்ற குற்றச்சாட்டுக்கு மறுப்பு

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் பிளவுவாத, திருத்தல்வாத நடவடிக்கைகளை நாங்கள் விமர்சிப்பதும் எதிர்ப்பதும் தலைமையை கைப்பற்றும் நோக்கத்துடன் செய்யப்படுவது என அவர்கள் இட்டுக்கட்டிக் கூறுகின்றனர்.

முதலில், நாங்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைக் கேட்க விரும்புகிறோம்: நாங்கள் தலைமையை கைப்பற்ற விரும்புவதாக நீங்கள் கூறுகிறீர்கள். யாரிடமிருந்து? இப்பொழுது யாரிடம் தலைமை உள்ளது? சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் அனைத்து சகோதரக் கட்சிகள் மீதும் அதிகாரம் செய்யும் தலைமை என்ற ஒன்று உண்டா? அத்தகைய தலைமை உங்களிடம் இருக்கிறதா?

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், தங்களையே தோழமைக் கட்சிகளின் மீது அதிகாரம் செலுத்தும் இயல்பான தலைவர்களாக நினைத்துக்கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது. அவர்களுடைய தர்க்க முறைப்படி அவர்களுடைய திட்டம், தீர்மானங்கள், அறிக்கைகள் யாவுமே பிழையற்ற சட்டங்கள். குருச்சேவின் ஒவ்வொரு வார்த்தையும், அவை எவ்வளவு முட்டாள்தனமாக, தவறானதாக இருந்தாலும் அவையே

---

1. *வி. இ. லெனின், ''தொழிற்சங்கங்கள் பற்றிய கட்சியின் கண்ணோட்டத்தின் மீது வய்னாவ் (ஏ. வி. லூனாசார்ஸ்கி) எழுதிய பிரசுரத்திற்கு முன்னுரை'', தொகுப்பு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1962, தொகுதி 13, பக்கம் 165.*

அரச கட்டளைகளாகும். எல்லாச் சகோதரக் கட்சிகளும் அதற்கு செவி மடுத்துக்கீழ்ப்படிய வேண்டுமேயொழிய அதனை விமர்சனம் செய்யவோ, எதிர்க்கவோ கூடாது. இது ஒரு முழுமையான எதேச்சதிகாரமாகும். இது வடிகட்டிய நிலப்பிரபுத்துவ எதேச்சதிகார சித்தாந்தமாகும்.

எவ்வாறாயினும், சர்வதேச கம்யூனிச இயக்கம் என்பது ஒரு நிலப் பிரபுத்துவக் கும்பல் அல்ல என்பதை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் களுக்கு நாம் சொல்லிக்கொள்கிறோம். சிறியதோ பெரியதோ, பழையதோ புதியதோ, ஆட்சியில் இருக்கிறதோ இல்லையோ எல்லாச் சகோதரக் கட்சிகளும் சமமானவையே. சகோதரக் கட்சிகளின் எந்தக் கூட்டத்திலும் சரி, ஏகமனதாக அவர்களால் நிறைவேற்றப்பட்ட எந்த உடன்படிக்கையிலும் சரி, உயர்ந்த கட்சி, தாழ்ந்த கட்சி என்ற பிரிவினையோ, ஒரு கட்சி தலைமை தாங்க,பிற கட்சிகள் பின்பற்றியாக வேண்டும் என்பதோ, ஒன்று தந்தைக்கட்சி, மற்றவை பிள்ளைகள் கட்சி என்பதோ அல்லது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள்தான் மற்ற சகோதரக் கட்சிகளின் மேல் ஆதிக்கம் செலுத்தும் தலைவர்கள் என்பதோ எங்கும் சொல்லப்படவோ, அங்கீகரிக்கப்படவோ இல்லை.

புரட்சியின் சமனற்ற வளர்ச்சி காரணமாய், ஒரு குறிப்பிட்ட வரலாற்று கட்டத்தில், ஒரு குறிப்பிட்ட நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கக் கட்சியும், பாட்டாளி வர்க்கமும் இயக்கத்தின் முன்னணியில் செல்லும் நிலை ஏற்படுகிறது என்பதை சர்வதேச பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இயக்கத்தின் வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

பிரிட்டனில் தொழிற்சங்க இயக்கமும், பிரெஞ்சு உழைக்கும் மக்களின் அரசியல் போராட்டமும், சர்வதேச பாட்டாளி வர்க்க இயக்கத்தின் முன்னணியில் ஒன்றன்பின் ஒன்றாக இருந்தன என்பதை மார்க்சும், எங்கெல்சும் சுட்டிக்காட்டியுள்ளனர். பாரீஸ் கம்யூன் தோல்விக்குப் பின் ''ஜெர்மன் தொழிலாளர்கள் பாட்டாளிவர்க்கப் போராட்டத்தின் முன்னணியில் தற்போது உள்ளனர்'' என்று எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். ''அவர்கள் எவ்வளவு காலம் பெருமைக்குரிய இந்த இடத்தைவகிக்க நிகழ்ச்சிப்போக்குகள் அனுமதிக்கும் என்பதை முன் கூட் டியே சொல்ல முடியாது ..எப்படி இந்தபோதிலும் சர்வதேச உணர்வைப் பாதுகாப்பதே முக்கியமான விசயம், அது தேசியவெறி தலைதூக்குவதை அனுமதிக்காது. அது பாட்டாளிவர்க்க இயக்கத்தின் ஒவ்வொரு புதிய முன்னேற்றத்தையும், அது எந்த நாட்டில் நடந்தாலும் மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்கும்''[1] என்றார் எங்கெல்ஸ்.

---

1. பிரடெரிக் எங்கெல்ஸ், ''ஜெர்மனியில் விவசாய யுத்தத்திற்கு முன்னுரைக் குறிப்பு'' காரல் மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல் மொழிப்பதிப்பகம், மாஸ்கோ, 1951 தொகுதி 1, பக்கம் 591.

20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், ரசியத் தொழிலாளி வர்க்கம் சர்வதேச பாட்டாளிவர்க்க இயக்கத்தின் முன்னணியில் நின்று வரலாற்றில் முதன்முறையாக பாட்டாளிவர்க்க புரட்சியில் வெற்றியீட்டியது.

1919-ல் லெனின் இதுகுறித்துக் கூறினார்: ''புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் மேலாதிக்கம் தற்சமயம் ரசியர்களின் கையில் உள்ளது. இது நீண்ட நாட்களுக்கல்ல என்பதைச் சொல்லத் தேவை இல்லை. 19-ம்நூற்றாண்டில் அது முதலில் பிரிட்டனிடமும் பின் பிரெஞ்சு மக்களிடமும் கடைசியில் ஜெர்மனியிடம் இருந்ததுபோலவே இன்று மாறியுள்ளது.''[1]

எங்கெல்சால் குறிப்பிடப்பட்ட ''முன்னணி'' அல்லது லெனினால் குறிப்பிடப்பட்ட ''மேலாதிக்கம்'' ஆகியவை எக்காரணத்தைக் கொண்டும் சர்வதேச உழைக்கும் வர்க்க இயக்கத்தின் முன்னணியில் உள்ள கட்சி பிற கட்சிகளுக்குக் கட்டளையிடலாம் என்பதையோ பிற சகோதரக் கட்சிகள் அதற்கு கீழ்ப்படியவேண்டும் என்பதையோ அர்த்தப்படுத்தவில்லை. ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி, இயக்கத்தின் முன்னணியில் இருந்தபோது, எங்கெல்ஸ் கூறினார்: ''அய்ரோப்பிய பாட்டாளி வர்க்கத்துக்காக பேசுவதற்கு அதற்கு உரிமையில்லை. குறிப்பாக உண்மைக்குப் புறம்பானவற்றைப் பேசுவதற்கு கொஞ்சங் கூட உரிமையில்லை''.[2]

ரசிய போல்ஷ்விக்குகள் இயக்கத்தின் முன்னணியில் இருந்தபோது லெனின் கூறினார் : ''பிற நாடுகளில் ஏற்படும் நிகழ்ச்சிகள் பற்றி நாம் முன்கூட்டியே கணித்திருந்தாலும் மாஸ்கோவிலிருந்து நாம் எதையும் கட்டளையிடக்கூடாது.''[3]

எங்கெல்சாலும் லெனினாலும் குறிப்பிடப்பட்ட முன்னணிப் பாத்திரம் என்பது நீண்ட காலத்துக்கு நிலையாக இல்லாதபோதிலுங்கூட மாறி வரும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றமடைகிறது. இந்த மாற்றம்,

---

1. வி. இ. லெனின், ''மூன்றாவது அகிலமும் வரலாற்றின் அதன் இடமும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, தொகுதி 2, பாகம் 2, பக்கம் 203.
2. ''எங்கெல்ஸ், ஏ. பெபலுக்கு, மார்ச் 18-28, 1875'', மார்க்ஸ் எங்கெல்சின் தேர்ந்தெடுக்கப்பட்ட கடிதங்கள், ஆங்கிலப் பதிப்பு, மாஸ்கோ, பக்கம் 354.
3. வி. இ லெனின், ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்)யின் எட்டாவது பேராயத்தில் வைத்த கட்சி திட்டத்தின் மீதான அறிக்கை'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1952, தொகுதி 2, பாகம் 2, பக்கம் 159

எந்தக் கட்சியினுடைய சொந்த விருப்பத்தையும் பொருத்தது அல்ல. மாறாக, அது வரலாறு உருவாக்கும் நிலைமைகளைப் பொருத்தது. சூழ்நிலைமைகள் மாறும் போது மற்ற கட்சிகள் இயக்கத்தின் முன்னணிக்கு வந்துவிடும் முன்பு முன்னணியில் இருந்த ஒரு கட்சி திருத்தல்வாதத்தை மேற்கொண்டால், அது எவ்வளவு பெரிய செல்வாக்கு மிக்க கட்சியாக இருந்த போதிலும் அது தனது அந்தஸ்தை இழந்துவிடும். ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

சர்வதேச கம்யூனிச இயக்க வரலாற்றின் ஒரு கட்டத்தில் கம்யூனிஸ்ட் அகிலம் உலக கம்யூனிஸ்ட் கட்சிகளின் மையப்படுத்தப்பட்ட தலைமையாக விளங்கியது. இது, பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் நிறுவப்படவும், வளரவும் உதவிபுரியும் மாபெரும் வரலாற்றுப் பாத்திரத்தை ஆற்றியது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சிகள் முதிர்ச்சி அடைந்துவிட்ட நிலையில், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் சூழல் அதிக சிக்கலானதாக மாறிவிட்ட நிலையில், கம்யூனிஸ்ட் அகிலத்தின் மையப்படுத்தப்பட்ட தலைமை பொருத்தமானதாகவோ, தேவையானதாகவோ இல்லை. 1943-ல் கம்யூனிஸ்ட் அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் தலைமை, அகிலத்தைக் கலைப்பதாக முன் மொழிந்தது. அத்தீர்மானம் கூறியதாவது:

''எந்த அளவுக்கு தனிப்பட்ட நாடுகளின் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைமைகள் மிகவும் சிக்கலானதாக மாறுகிறதோ, அந்த அளவுக்கு ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தொழிலாளர் பிரச்சினைகளுக்கு ஒரு சர்வதேச மையத்தின் மூலமாகத் தீர்வு காண்பதென்பது அகற்ற முடியாத தடைகளைச் சந்திக்கிறது.''

இத்தீர்மானம் யதார்த்துடன் பொருந்தியதாக இருக்கிறது என்பதையும், சரியானது என்பதையும் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

இன்றைய சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் யாருக்கு யார் தலைமை தாங்குவது என்ற கேள்வியே எழுவதில்லை. சகோதர கட்சிகள் சுதந்திரமாகவும் முற்றிலும் சமத்துவமாகவும், அதே சமயம் அவை ஒன்றிணைந்தும் இருக்கவேண்டும். பொதுவான விசயங்களில் அவை ஒன்றையொன்று கலந்தாலோசிப்பதன் மூலம் ஒருமித்த கண்ணோட்டத்திற்கு வரவேண்டும். பொது இலட்சியத்திற்கான போராட்டத்தில் தங்களுடைய நடவடிக்கைகளை ஒன்றிணைக்க வேண்டும். சகோதரக் கட்சிக்களுக்கு இடையிலான உறவுகள் பற்றிய இந்நெறிமுறைகள் 1957-ம் ஆண்டு

பிரகடனத்திலும், 1960-ம் ஆண்டு அறிக்கையிலும் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களை சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் தலைவர்களாக கருதுவதும் பிறகட்சிகளைத் தமக்குக் கீழ்ப் படிந்து நடக்கச் செய்வதும் பிரகடனமும் அறிக்கையும் வகுத்துள்ள கொள்கைகளை அப்பட்டமாக மீறுவதாகும்.

வேறுபட்ட வரலாற்றுப் பின்னணிகள் காரணமாக, இயற்கையாகவே சகோதரக் கட்சிகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு சூழ்நிலைமைகளில் இருக்கின்றன. தமது புரட்சிகளில் வெற்றியை சாதித்துள்ள கட்சிகள், இதுவரை புரட்சியில் வெற்றிபெறாத கட்சிகளிலிருந்து வேறுபட்டுள்ளன, மிக முன்னதாகவே வெற்றியைச் சாதித்துள்ள கட்சிகள் அதனைப் பின்னதாக்கச் சாதித்துள்ள கட்சிகளிலிருந்து வேறுபட்டுள்ளன. இருப்பினும், வெற்றிபெற்றகட்சிகள், அதிலும் குறிப்பாக, முன்னரே வெற்றி பெற்ற கட்சிகள் சகோதரக் கட்சிகளுக்கு ஆதரவு தருவதில், மிக அதிக அளவு சர்வதேசப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதைத்தான் இந்த வேறுபாடுகள் உணர்த்துகின்றன. மாறாக, அவை பிற சகோதரக் கட்சிகளின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு எந்த உரிமையும் இல்லை.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி லெனினாலும், ஸ்டாலினாலும் கட்டியமைக்கப்பட்டது. இது, பாட்டாளி வர்க்க புரட்சியில் வெற்றிபெற்று பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தி சோசலிச கட்டுமானத்தில் ஈடுபட்ட முதல் கட்சியாகும். எனவே லெனின், ஸ்டாலின் ஆகியோரின் புரட்சிகரப் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்வதிலும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் முன்னணியில் நின்று, பிற சகோதரக் கட்சிகளுக்கு முழு ஆதரவை வழங்குவதிலும் அக்கட்சி அதிகப் பொறுப்புக்களை ஏற்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

இந்த வரலாற்று சுழல்களைக் கருத்தில்கொண்டு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி இந்தப் புகழ்மிக்க வரலாற்றுக் கடமையை ஏற்கும் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நம்பிக்கை கொண்டிருந்தது. 1957-ம் ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற சகோதரக் கட்சிகளின் கூட்டத்தில், சோசலிச முகாம் ரசியாவைத் தனது தலைமையாக் ஏற்றுக் கொள்ள வேண்டும் என எமது கட்சியின் பிரதிநிதிகள் குழு வலியுறுத்தியது. இதற்கு காரணம், அவர்கள் பல தவறுகளைச் செய்திருந்த போதிலும் எல்லாச் சகோதரக் கட்சிகளாலும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட மாஸ்கோ பிரகடனத்தை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் கடைசியில்

ஏற்றுக் கொண்டார்கள். சோசலிச முகாமுக்கு ரசியா தலைமை தாங்க வேண்டும் என்ற எங்களது முன்மொழிவு பிரகடனத்தில் இடம் பெற்றுள்ளது.

தலைமைப் பதவி இருப்பதென்பது, சகோதரக் கட்சிகளிடையே சமத்துவம் என்ற கோட்பாட்டிற்கு முரண்பட்டதல்ல என்றுகருதுகிறோம். இதன் பொருள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பிற கட்சிகளை கட்டுப்படுத்தும் உரிமை கொண்டிருக்கிறது என்பதல்ல. இதன் பொருள், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பெரும் பொறுப்புகளையும் கடமைகளையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதே.

இருந்தபோதும் இந்த 'தலைமை' பதவி ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்குத் திருப்திகரமாகஇல்லை. இதுபற்றி பலமுறை குருச்சேவ் புகார் செய்தார். ''தலைமையினால் எங்களுக்கு என்ன ஆதாயம் இருக்கிறது? அது பாலையோ, வெண்ணையையோ, வீட்டு மனைகளையோ, உருளைக்கிழங்கையோ எதையும் கொடுப்பதில்லை. ''ஒரு வேளை தார்மீக ரீதியில் எதையும் தருகிறதா? அதுவுமில்லை''[1] என்றும் ''தலைமையில் இருப்பதால் எங்களுக்கு என்ன பயன்? அது நாசமாகப் போகட்டும்''[2] என்றும் குருச்சேவ் கூறியுள்ளார்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தாங்கள் தலைமையைப் பெற விரும்பவில்லை என்று சொல்லிக் கொண்டே நடைமுறையில் அனைத்து சகோதரக் கட்சிகள் மீதும் ஆதிக்கம் செலுத்தும் சலுகையைக் கோருகிறார்கள். சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் முன்னணியில் இருந்து,மார்க்சிய-லெனினியப் பாதையில் நடந்து, தங்களின் சர்வதேச பாட்டாளி வர்க்க கடமையை நிறைவேற்ற விரும்பவில்லை. ஆனால், அனைத்து சகோதரக் கட்சிகளும் அவர்களுடைய ஆணையை ஏற்று, அவர்களுடைய திருத்தல்வாத, பிளவுவாத நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

திருத்தல்வாத, பிளவுவாதப் பாதையை மேற்கொண்டதன் மூலம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தாமாகவே சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ''தலைமையை'' இழந்து விட்டனர். இப்பொழுது

---

1. என். எஸ். குருச்சேவ், சோசலிச நாடுகளின் சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுக்களை கௌரவித்துக் கொடுக்கப்பட்ட விருந்தில் ஆற்றிய உரை, பிப்ரவரி 4, 1960.
2. என். எஸ். குருச்சேவ், புகாரெஸ்டில் நடந்த 12 சகோதரக் கட்சிகளின் பிரதிநிதிகளது கூட்டத்தில் ஆற்றிய உரை, ஜூன், 24, 1960.

''தலைமை'' என்ற வார்த்தையை அவர்களுக்குப் பொருத்தினால் பிளவுவாத,திருத்தல்வாத நடவடிக்கைகளுக்கு அவர்கள் தலைமை தாங்கு கிறார்கள் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

எல்லா கம்யூனிஸ்டுகள் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதன் முன்னுள்ள கேள்வி யாருக்கு யார் தலைவர் என்பதல்ல மாறாக மார்க்சிய-லெனினியத்தையும் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தை யும் கடைபிடிப்பதா? அல்லது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திருத்தல்வாத, பிளவுவாத நடவடிக்கைகளுக்கு அடிபணிவதா என்பது தான். தலைமையைப் பெற விரும்புவதாக எங்கள் கட்சி மீது அவதூறு பரப்பும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், உண்மையில் நாங்கள் உட்பட அனைத்து சகோதரக் கட்சிகளும், அவர்களின் திருத்தல்வாத, பிளவுவாதத் தலைமைக்கு அடிபணிய வேண்டும் என்று வற்புறுத்து கின்றனர்.

பெரும்பான்மையின் விருப்பத்தை எதிர்ப்பது, சர்வதேசக் கட்டுப்பாட்டை மீறுவது என்ற குற்றச்சாட்டுக்கு மறுப்பு

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை தாக்கத் தொடங்கிய 1960-ம் ஆண்டுகளிலிருந்தே எம்மீது 'பெரும் பான்மையின் விருப்பத்தை எதிர்க்கிறார்கள்' என்றும் 'சர்வதேச கட்டுப்பாட்டை மீறுகின்றார்கள்' என்றும் அடிக்கடி குற்றம் சாட்டி வருகின்றனர். இப்பிரச்சினையில், அவர்களுடான எங்கள் விவாதத்தை மீண்டும் பரிசீலிப்போம்.

1960 ஜூனில் நடைபெற்ற புகாரெஸ்ட் கூட்டத்தில் ரசிய கம்யூ னிஸ்ட் கட்சித் தலைவர்கள் தகவல் கடிதம் ஒன்றை சுற்றுக்கு விட்டு எதிர்பாராத விதமாக எங்கள் மீது தாக்குதல் தொடுத்து, பெரும்பான் மையைத் திரட்டி எங்களை அடிபணியச் செய்ய நிர்ப்பந்தித்தார்கள். அவர்களுடைய முயற்சி, வெற்றி பெறவில்லை. ஆனால் அக்கூட்டத் துக்குப் பின் பெரும்பான்மைக்கு சிறுபான்மை கட்டுப்பட வேண்டும் என்ற வாதத்தை சகோதரக் கட்சிகளின் உறவு முறைகளில் முன் வைத் தனர்; மேலும், புகாரெஸ்ட் கூட்டத்தில் பெரும்பான்மையான கட்சி களின் பிரதிநிதிகள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களை எதிர்த்தனர் என்பதைக் காரணம் காட்டி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, ''ஏகமனதாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும், விருப்பத்தையும்'' மதிக்கவேண்டும் என்று கோரினர்.

1960-ம் ஆண்டு செப்டம்பர் 10-ம்தேதி ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய பதில் கடிதத்தில் இந்தத் தவறான வாதத்திற்கு மறுப்பு தெரிவித்திருந்தோம்.

''மார்க்சிய-லெனினிய அடிப்படைக் கொள்கைகளைப் பொருத்த வரையில் யாருடைய நிலை சரியானது யாருடைய நிலை தவறானது என்பதை பெரும்பான்மையை வைத்து முடிவு செய்யமுடியாது. உண்மை எப்பொழுதும் உண்மைதான்; தற்காலிக பெரும்பான்மையின் காரணமாக பொய் உண்மையாகவோ அல்லது தற்காலிக சிறுபான்மையின் காரணமாக உண்மை பொய்யாகவோ மாறிவிடாது'' என்று அக்கடிதத்தில் சுட்டிக்காட்டினோம்.

1960-ம் ஆண்டு நவம்பர் 5-ந் தேதிய கடிதத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் பெரும்பான்மைக்கு சிறுபான்மை கீழ்ப்படியவேண்டும் என்ற தவறான வாதத்தை மீண்டும் முன்வைத்தது. அதில் ''டுமா எழு'' என்ற லெனின் கட்டுரையில் ''சகோதரக் கட்சிகளின் பெரும்பான்மையின் கருத்தை மதிக்க விரும்பாதவர்கள் சாராம்சத்தில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்கும் அய்க்கியத்திற்கும் எதிராகச் செல்கிறார்கள்'' என்ற பத்தியை எடுத்தாண்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீது குற்றம் சாட்டியது.

1960-ம் ஆண்டு நடந்த சகோதரக் கட்சிகளின் மாஸ்கோ கூட்டத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் இந்தத் தவறான வாதத்திற்கு மீண்டும் ஒருமுறை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தனது மறுப்பைத் தெரிவித்தது. பெரும்பான்மைக்கு சிறுபான்மை கட்டுப்படவேண்டும் என்ற கோட்பாட்டை ''கம்யூனிஸ்ட் அகிலம்'' போன்ற மையப்படுத்தப்பட்ட தலைமை இல்லாத தேவையற்ற இன்றைய நிலையில் ஏற்றுக்கொள்வது முற்றிலும் தவறானது என்று அறிவித்தது. ஒரு கட்சிக்குள் பெரும்பான்மைக்கு சிறுபான்மை கட்டுப்படுவது, ஸ்தாபன அமைப்பில் உயர்மட்ட அமைப்புக்கு கீழ்மட்ட அமைப்பு கட்டுப்படுவது என்ற கோட்பாடு அவசியமே. ஆனால், இதை சகோதரக் கட்சிகளுக்கிடையிலான உறவில் பிரயோகப்படுத்த முடியாது. தங்களுக்கிடையிலான உறவில் ஒவ்வொரு சகோதரக்கட்சியும் தனது தனித்தன்மையைக் காப்பாற்றிக்கொள்ளும் அதேசமயம் எல்லாக் கட்சிகளுடனும் ஒற்றுமையைக் கடைப்பிடிக்கிறது. இங்கு பெரும்பான்மை சிறுபான்மைக்கு கீழ்ப்படியவேண்டும் என்பது இருக்கமுடியாது; அதைவிட, சிறியகட்சி பெரிய கட்சிக்குக் கட்டுப்படுவது என்ற உறவு அறவே இருக்கமுடியாது. சகோதரக் கட்சிகளுக்கு இடையே உள்ள பொதுவான பிரச்சினைகள் பற்றி பரஸ்பரம் கலந்து

ஆலோசிப்பது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் விவாதித்து ஒத்த கருத்தை அடைவது என்ற ஒரே ஒரு வழிதான் உண்டு.

பெரும்பான்மைக்கு சிறுபான்மை கட்டுப்படவேண்டும் என்ற கருத்தை முன்வைத்ததன் மூலம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, சகோதரக்கட்சிகள் ஒருவருக்கொருவர் கலந்தாலோசித்து ஏக மனதாக முடிவெடுக்கும் கொள்கை விதியை முழுவதுமாக மறுத்துள்ளது என்பதை சீனக்கம்யூனிஸ்ட்கட்சியின் பிரதிநிதிகள்குழு சுட்டிக்காட்டியது.

''ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி,எந்த அதிஉயர் கட்சி அமைப்புச் சட்டத்தினடிப்படையில் இதுபோன்ற அமைப்புக்கொள்கை விதியை முன் வைத்துள்ளது? இதுபோன்ற அதி உயர் கட்சி அமைப்புச் சட்டத்தை எல்லா நாடுகளின் கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் எங்கு எப்போது ஏற்றுக்கொண்டன?'' என்ற கேள்விகளை எமது பிரதிநிதிகள் குழு கேட்டுள்ளது.

''டூமா-ஏழு'' என்ற லெனின் கட்டுரையில் உள்ள வரிகள் ரசிய சமூக ஜனநாயக கட்சியிலிருந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்டதாகும். ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமைக் கமிட்டி தந்திர மாக அதிலிருந்து 'ரசியன்' என்ற வார்த்தையை நீக்கிவிட்டுப் பயன் படுத்தியிருப்பதையும் அதன் மூலம், உட்கட்சி அளவில் மட்டுமே பொருந்தக் கூடிய பெரும்பான்மைக்கு சிறுபான்மை கட்டுப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை சகோதரக் கட்சிகளிடையே உள்ள உறவுகளுக் கானதாக விரிவுப்படுத்திக் காட்டியிருப்பதையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி யின் பிரதிநிதிகள் குழு அம்பலப்படுத்தியது.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள்குழு மேலும் கூறியதாவது:

''கட்சிக்குள்ளும் கூட பெரும்பான்மைக்கு சிறுபான்மை கட்டுப்பட வேண்டும் என்பதை ஸ்தாபன அளவில் மட்டுமே நடைமுறைப் படுத்த வேண்டும்; தத்துவார்த்தப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதில், பெரும்பான்மை அல்லது சிறுபான்மை அடிப்படையில் சரி அல்லது தவறு என்று கூற முடியாது. அதே 'டூமா-ஏழு' என்ற கட்டுரையில் டூமா வுக்குகான கட்சிக் கருக் குழுவில் இருந்த ஏழு கலைப்புவாதிகள் பெரும் பான்மையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி சிறுபான்மையாக இருந்த உண்மையான மார்க்சியவாதிகளை ஒடுக்க முயற்சித்ததை லெனின் கடுமையாகக் கண்டித்தார். ஏழு கலைப்புவாதிகளும் பெரும்பான்மையாக இருந்த போதிலும் அவர்கள் எல்லோரும் சேர்ந்தும் கூட மார்க்சிய வழியில் அமைக்கப்பாக்கப்பட்ட, முன்னேறிய, உணர்வுப்பூர்வமான ரசியத் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட விருப்பத்தையோ, ஒன்றுப்பட்ட

தீர்மானத்தையோ, ஒன்றுபட்ட போர்தந்திரத்தையோ பிரதிநிதித் துவப்படுத்த முடியாது.

எனவே அவர்களின் ஒற்றுமை குறித்த முழக்கங்கள் எல்லாம் வெறும் கபட நாடகமே என்று லெனின் சுட்டிக் காட்டினார். ''கட்சியில் இல்லாத அந்த ஏழு நபர்களும் சேர்ந்து ஆறு மார்க்சியவாதிகளை விழுங்க விரும்புகின்றனர். இதை 'ஒற்றுமை' என்று அழைக்கவேண்டு மெனக் கோருகின்றனர்.''[1] டூமாவில் இருந்த இந்த ஆறு மார்க்சிய வாதிகளே பெரும்பான்மையான பாட்டாளிகளின் விருப்பத்திற்கேற்ற வகையில் செயல்பட்டனர் என்று கூறிய லெனின், அந்த ஏழு பேரும் ''தமது பலத்தைக் கொண்டு எதிர்ப்பை ஒடுக்கும் தந்திரங்களைக் கைவிட்டால் ஒழிய''[2] ஒற்றுமையைப் பாதுகாக்க முடியாது என்பதை வலியுறுத்தினார்.

லெனினுடைய வார்த்தைகள் எதைக் காட்டுகின்றன என்பதையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகள் குழு கீழ்க்கண்டவாறு விளக்கியது:

''...கட்சிக்குள்ளும் கூட பெரும்பான்மை என்பது எல்லாச் சமயத் திலும் சரியாக இருந்துவிட முடியாது. அதற்கு மாறாக சில சமயங் களில் ஒற்றுமையைக் காப்பதற்காக பெரும்பான்மை, ''தனது ஒடுக்கு முறைக் கொள்கையைக் கைவிட வேண்டும்.'' அதிலும் குறிப்பாக சகோதரக் கட்சிகளின் உறவு விசயத்தில் இது அவசியமானதாகும். அர்த்தத்தை கிரகித்துக் கொள்ளாமல், யோசனையற்ற முறையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டித் தோழர்கள் லெனி னுடைய வாசகங்களைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் அவர்கள் வேண்டுமென்றே ஒரு முக்கியச் சொல்லை நீக்கியுள்ளனர். இருந்த போதிலும் அவர்கள் தங்கள் நோக்கத்தில் தோல்வியடைந்துள்ளனர்!''

1960-ல் நடைபெற்ற மாஸ்கோ கூட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள் குழு நிகழ்த்திய நீண்ட உரைகளை எடுத்துக் காட்டி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கூறிய 'பெரும்பான்மை யின் விருப்பத்தை எதிர்க்கிறோம்' என்ற அபத்தமான குற்றச்சாட்டை முன்பே முழுமையாக மறுத்துள்ளோம். 1960-ம் ஆண்டு அறிக்கை எழுதப்பட்டபோது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், பிற சகோதரக் கட்சி களும் இந்த தவறான வாதத்திற்குத் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்த

1. வி. இ. லெனின், ''டூமா ஏழு'', தொகுப்பு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1963, தொகுதி 19, பக்கம் 450.
2. வி. இ. லெனின் ''சமூக ஜனநாயக டூமா குழுவுக்குள் ஏற்பட்ட சர்ச்சை குறித்த கட்டுரை'', தொகுப்பு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், தொகுதி 19, பக்கம் 470.

தால்தான் சகோதரக் கட்சிகளுக்கிடையே பேச்சு வார்த்தைகள் மூலம் ஏகமனதாக முடிவெடுக்கும் கொள்கை அவ்வறிக்கையில் சேர்க்கப் பட்டது.

இருந்தபோதிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இப்போதும் ''பெரும்பான்மைக்கு சிறுபான்மை கட்டுப்பட வேண்டும்'' என்று கூச்சலிட்டு வருகின்றனர். இது அனைத்து சகோதரக் கட்சிகளின் சுதந்திரத்தையும், சம அந்தஸ்தையும் மறுப்பதோடு, கட்சிகளிடையே பரஸ்பரம் பேசித் தீர்த்து ஏகமனதாக முடிவெடுக்கும் கொள்கையையும் ரத்து செய்ய விரும்புகிறார்கள் என்பதையே காட்டுகிறது. பெரும்பான்மை என்று பாசாங்கு செய்து சில சகோதரக் கட்சிகளைப் பலாத்காரமாக தங்கள் விருப்பத்தை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தி, அதன் மூலம் கிடைத்த போலியான பலத்தைப் பயன்படுத்தி, மார்க்சிய-லெனினிய தோழமைக் கட்சிகளைத் தாக்கு கின்றனர். அவர்களுடைய செயல்கள் குழுவாத, பிரிவினைவாதத் தன்மை கொண்டவையாகவும், பிரகடனம் மற்றும் அறிக்கையை மீறுப வையாகவும் இருக்கின்றன.

அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளையும் கட்டுப்படுத்துகிற சர்வதேச ஒழுங்கு பற்றி இன்று ஒருவர் பேசுகிறார் என்றால், அதன் பொருள் சகோதரக் கட்சிகளுக்கிடையிலான உறவுகளைப் பற்றி, பிரகடனத்திலும் அறிக்கையிலும் சொல்லப்பட்ட வழிகாட்டு நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதுதான். இந்த நெறிகளை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மீறியுள்ளனர் என்பதைப் பல சான்றுகள் மூலம் உறுதிப் படுத்தியுள்ளோம்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பெரும்பான்மை, சிறு பான்மை பற்றித் தொடர்ந்து வற்புறுத்தினால், நாங்கள் அவர்களின் பெரும்பான்மையை அங்கீகரிக்கவில்லை என்பதை வெளிப்படையாகவே கூற விரும்புகிறோம். உங்களுடைய பெரும்பான்மை போலியான ஒன்று. உண்மையான பெரும்பான்மை என்பது உங்கள் பக்கம் இல்லை. சர்வ தேச கம்யூனிச இயக்கத்தில் உண்மையான மார்க்சிய-லெனினியத்தை உயர்த்திப் பிடிக்கும் தோழமைக் கட்சிகளின் உறுப்பினர்கள் சிறுபான்மை யாக உள்ளனர் என்பது உண்மையா? பரந்துபட்ட மக்களிடமிருந்து நீங்களும் உங்களைப் பின்பற்றுபவர்களும் முற்றிலும் அந்நியப்பட்டுள் ளீர்கள். எனவே, உங்களுடைய தவறான வழியை நிராகரிக்கிற பெருந்திரளான கட்சி உறுப்பினர்களையும், மக்களையும் எவ்வாறு உங்களுடைய பெரும்பான்மைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளமுடியும்?

அடிப்படைக் கேள்வி இதுதான்: யார் பரந்துபட்ட மக்களின் பக்கம் நிற்கிறார்கள்? யார் அவர்களுடைய அடிப்படை நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்? யார் அவர்களுடைய புரட்சிகர உணர்வைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்?

ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சியின் நிலைபற்றி 1916-ல் லெனின் கூறினார்: ''108 பேர்களுக்கு எதிராக லிப்நெஹ்ட், ரூலே ஆகிய இருவர் மட்டுமே நிற்கின்றனர். ஆனால், இவர்கள் இருவரும் லட்சக் கணக்கான மக்களை, சுரண்டப்படும் மக்களில் பெரும்பகுதியினரை, மனிதகுலத்தின் எதிர்காலத்தை, ஒவ்வொருநாளும் வளர்ந்து, முதிர்ந்து வரும் புரட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இதற்கு மாறாக, அந்த 108 பேர் பாட்டாளி வர்க்கத்திலுள்ள விரல்விட்டு எண்ணப்படக் கூடிய முதலாளித்துவக் கைக்கூலிகளின் அடிமை உணர்வுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.''[1]

இன்று உலகிலுள்ள மக்களில் 90% மக்கள் புரட்சியை விரும்புகிறார்கள். இதில் இன்னும் அரசியலுணர்வு பெறாத, ஆனால் இறுதியாக அரசியலுணர்வு பெறக்கூடிய மக்களும் அடங்குவர். உண்மையான பெரும்பான்மை என்பது மக்களின் அடிப்படை நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற புரட்சிகர மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் மார்க்சிய-லெனினியவாதிகளுமே தவிர இந்த நலன்களுக்குத் துரோகம் விளைவித்துள்ள விரல்விட்டு எண்ணத்தக்க திருத்தல்வாதிகள் அல்ல.

தோழமைக் கட்சிகளின் கட்சி விரோத குழுக்களுக்கு ஆதரவு என்ற குற்றச்சாட்டுக்கு மறுப்பு

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை தனது பகிரங்க கடிதத்தில், ''சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை, அமெரிக்கா, பிரேசில், இத்தாலி, பெல்ஜியம், ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கெதிரான கட்சி விரோத குழுக்களை உருவாக்கி ஆதரவு கொடுக்கிறது'' என்ற அவதூறான குற்றச்சாட்டைக் கூறியுள்ளது.

---

1. *வி.இ. லெனின், ''போரிஸ் சோவரினுக்கு ஒரு பகிரங்கக்கடிதம் தொகுப்பு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1964, தொகுதி 23, பக்கம் 199.*

உண்மை நிலை என்ன?

சமீப ஆண்டுகளில் சில நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஏற்பட்டுள்ள பிளவுகளுக்கு பிரதான காரணம், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களது திருத்தல்வாத, பிளவுவாதப் பாதையை அக்கட்சிகளின் மீது பலவந்தமாகத் திணித்ததேயாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திருத்தல்வாதப் போக்கை ஏற்றுக் கொண்டதாலோ, அல்லது அவர்களுடைய சொந்த திருத்தல் வாதப் போக்குகளை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஆதரித்து ஊக்குவித்ததாலோ அக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் சொந்த நாட்டு புரட்சிகர இயக்கத்தை தடம்புரளச் செய்து புரட்சிகர இலட்சியத்திற்கு கடும் சேதம் விளைவித்துள்ளனர். சர்வதேச கம்யூனிச இயக்கத்திலுள்ள இரண்டு பாதைகளுக்கிடையிலான போராட்டத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களைப் பின்பற்றி அவர்களுக்குத் தாளம் போடுவதன்மூலம் இயக்கத்தின் ஒற்றுமைக்கு கடும் சேதம் விளைவித்துள்ளனர். இது, தவிர்க்க முடியாத வகையில் அவர்களின் கட்சிகளுக்குள் உள்ள மார்க்சிய - லெனினியவாதிகளிடையே பரவலான அதிருப்தியையும் தடைகளையும் எதிர்ப்பையும் தோற்றுவித்துள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை கண்மூடித்தனமாக அப்படியே பின்பற்றுபவர்கள் தங்கள் சொந்த கட்சிகளுக்குள் பிளவுவாதக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்றனர். ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளை மீறி, கட்சிப்பாதை பற்றிய வேறுபாடுகள் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை விவாதிக்கக்கூடிய சாதாரண உட்கட்சி ஜனநாயகத்தைக் கூட அனுமதிப்பதில்லை. மேலும் அவர்கள் கொள்கைப் பற்றுக்கொண்ட கம்யூனிஸ்டுகளை முறையற்ற விதத்தில் விலக்கி வைக்கவும், தாக்கவும், கட்சியிலிருந்து அடியோடு நீக்கவும் செய்கின்றனர். இதன் விளைவாக கட்சிக்குள் நடக்கும் இரண்டு பாதைகளுக்கிடையிலான போராட்டம் தீவிரமான வடிவம் எடுக்கிறது.

சாராம்சத்தில் இந்த கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள் நடக்கும் போராட்டம் மார்க்சிய — லெனினியப் பாதையைப் பின்பற்றுவதா, அல்லது திரிபுவாதப் பாதையை பின்பற்றுவதா, கம்யூனிஸ்ட் கட்சியை பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான முன்னணிப் படையாகவும் உண்மையான புரட்சிகரப் பாட்டாளி வர்க்க கட்சியாகவும் உருவாக்குவதா, அல்லது முதலாளிகளுக்குச் சேவை செய்யும் சமூக ஜனநாயகக் கட்சியின் வடிவில் மாற்றியமைப்பதா என்ற போராட்டமாக மாறியுள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களுடைய பகிரங்கக் கடிதத்தில், அமெரிக்கா, பிரேசில், இத்தாலி, பெல்ஜியம், ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள் நடக்கும் போராட்டம் பற்றித் தவறான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். மார்க்சிய-லெனினியத்தை பின்பற்றியதால் தங்கள் சொந்தக் கட்சியிலுள்ள திருத்தல்வாதக் குழுக்களால் தாக்கப்பட்டு விலக்கி வைக்கப்பட்டவர்களை, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மிக மோசமாக நிந்திக்கின்றனர்.

வெளுப்பைக் கறுப்பென்றும் கறுப்பை வெளுப்பென்றும் வர்ணிப்பதன் மூலம் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள் நடக்கும் போராட்டத்தின் உண்மையை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மறைக்கவோ மாற்றவோ முடியுமா? கண்டிப்பாக முடியாது.

உதாரணத்திற்கு பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நடக்கும் உட்கட்சி போராட்டத்தை எடுத்துக் கொள்வோம். பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியில் நீண்ட காலமாகவே கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தன. அக் கட்சியின் தலைவர்கள் பாட்டாளிவர்க்க சர்வதேசியம் மற்றும் மார்க்சிய-லெனினியத்திலிருந்து விலகி, மேலும் மேலும் ஆழமாக திருத்தல்வாத சகதிக்குள் புதைந்து விட்டதால், அக்கட்சிக்குள் நடக்கும் போராட்டம் மிகவும் தீவிரமடைந்தது.

ஹங்கேரியில் நடந்த எதிர்ப்புரட்சிக் கிளர்ச்சியின் போது, அதை ஒடுக்குவதில் ஹங்கேரியின் உழைக்கும் மக்களுக்கு ரசியா உதவியதைக் கண்டனம் செய்து அறிக்கை விடுமளவுக்கு பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த திருத்தல்வாதக் குழு சென்றது.

இந்த திருத்தல்வாதக் கும்பல், பெல்ஜிய காலனியவாதிகளின் இரக்கமற்ற ஒடுக்குமுறைகளுக்கெதிராக காங்கோ மக்கள் நடத்திய ஆயுதம் தாங்கிய போராட்டத்தை எதிர்த்தது. பெல்ஜியம் படையனுப்பி அடக்கியதை ஆதரித்தது. காங்கோவின் தேசிய விடுதலை இயக்கத்தில் தலையிடவும் அதை ஒடுக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியம் அய்.நா.சபையைப் பயன்படுத்தியதையும் ஆதரித்தது. ''அய்.நா. சபையின் முடிவுகள் உடனடியாகவும், முழுமையாகவும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்''[1] என்று தான் தான் முதன்முதலாக அய். நா.வுக்கு விண்ணப்பித்ததாகவும் வெட்கமின்றிப் பெருமைப்பட்டுக் கொண்டது.

---

1. *எர்னஸ்ட் பர்னெல், லா ஹியூமனிட், காங்கோ பிரச்சினை பற்றி, லிடிராபியுருக் (பெல்ஜியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இதழ்) நிருபருடன் ஒரு பேட்டி. ஜூலை 26, 1960.*

இக்கட்சி, டிட்டோ கும்பலின் ''திருத்தல்வாதத் திட்டங்கள் மார்க்சிய-லெனினியத்துக்கு மேலும் வளம் சேர்க்கும் கருத்துக்களைக் கொண்டுள்ளன'' [1] என்று பாராட்டியது.

இக்கட்சி, 1960-ம் ஆண்டு அறிக்கை ஒரே குழப்பமாக உள்ளது என்றும் ''ஒவ்வொரு 20-வது வரியிலும் அறிக்கையின் பொது வழிக்கு முரணான சொற்றொடர் இருக்கின்றது'' [2] என்றும் கூறி அவ்வறிக்கையைக் கேவலப்படுத்தியது.

1960-ம் ஆண்டு இறுதியிலும் 1961-ம் ஆண்டு தொடக்கத்திலும் பெல்ஜியத்தில் நடைபெற்ற தொழிலாளர்களின் மாபெரும் வேலை நிறுத்தங்களை, இந்த திருத்தல்வாத குழு ஆதரிக்காமல், காவல் படை மற்றும் குண்டர்படை ஆகியவற்றின் அடக்குமுறைக்கெதிரான தொழிலாளர்களின் நடவடிக்கைகளை ''முர்க்கத்தனமான, பொறுப்பற்ற செயல்'' [3] எனக்கூறி தொழிலாளர்களின் போராட்ட உணர்வை இழிவுபடுத்தியது.

இந்த திருத்தல்வாதக் குழு பெல்ஜிய உழைக்கும் மக்களின் நலன்களுக்கும் சர்வதேச கம்யூனிச இயக்கத்துக்கும் செய்த துரோகத்திற்கு எதிராக, தோழர் ஜேக்குஸ் கிரிப்பா தலைமையில் இருந்த மார்க்சிய—லெனினியவாதிகள் ஊக்கத்துடன் போராடினர். அவர்கள் திருத்தல்வாதக் குழுவின் தவறுகளை கட்சிக்குள் அம்பலப்படுத்தியும் மறுத்தும் வந்ததுடன் திருத்தல்வாதப்பாதையை உறுதியாக எதிர்த்தும் தடுத்தும் வந்தனர்.

எனவே பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நடக்கும் போராட்டம், மார்க்சிய—லெனினிய பாதைக்கும், திருத்தல்வாதப் பாதைக்கும் இடையிலான போராட்டமே என்பது தெளிவு.

---

1. ''பெல்ஜிய கம்யூனிஸ்ட் கட்சியும், யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கழக காங்கிரசும்'' லி டிராப்யுருக், ஏப்ரல் 22, 1958.
2. ஜ-ஒன் புளும் 1961 டிசம்பர் 3-ல் பிரஸ்ஸெல்ஸ் சமஷ்டிக் காங்கிரசில் ஆற்றிய உரை, ''கட்சியின் மார்க்சிய-லெனினிய அய்க்கியத்திற்காகவும், சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தில் மார்க்சிய-லெனினிய அய்க்கியத்திற்காகவும்'' என்ற கட்டுரையில் ஜேக்குஸ் கிரிப்பா எடுத்தாண்டது. லிடிராப்யுருக், பிப்ரவரி 22, 1962.
3. ஜ-ஒன் பளும் ''ஒரு முழுமையான, விரைவான வெற்றிக்கு: இரண்டு கம்யூனிச முன்மொழிவுகள், லிடிராப்யுருக், டிசம்பர் 29, 1960.

பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த திருத்தல்வாதக் குழு இந்த உட்கட்சிப் போராட்டத்தை எவ்வாறு கையாண்டது? அவர்கள் குழுவாத, பிளவுவாத வழியை மேற்கொண்டு மார்க்சிய—லெனினிய வழியில் உறுதியாக நின்ற கம்யூனிஸ்டுகளை முறையற்ற வகைகளில் தாக்கினர்; சிலரை கட்சியிலிருந்து விலக்கி வைத்தனர். பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியின் 14-வது காங்கிரசில் ஜேக்குஸ் கிரிப்பாவையும் பிற தோழர்களையும் பேச அனுமதிக்க மறுத்ததோடு, உறுப்பினர் களிடையே இருந்த பரந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் முறை யற்ற வகையில் அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கினர்.

இந்த சூழ்நிலையில்தான், தோழர் ஜேக்குஸ் கிரிப்பா அவர்களின் தலைமையிலான பெல்ஜியம் மார்க்சிய—லெனினியவாதிகள் புரட்சிப் பாதையை உயர்த்திப் பிடித்து கட்சித் தலைமையின் திருத்தல்வாத, பிளவுவாத நடவடிக்கைகளை உறுதியாக எதிர்த்துநின்று, பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியைப் புனரமைக்கப் போராடினர். அவர்களுடைய நடவடிக்கைகள் முற்றிலும் சரியானதும் நிந்தனைகளுக்கு அப்பாற் பட்டதும் அல்லவா?

பெல்ஜிய கட்சியிலுள்ள திருத்தல்வாதக் குழுவை வெளிப்படையாக ஆதரித்ததன் மூலமும், பெல்ஜியத்தின் உண்மையான மார்க்சிய—லெனி னியவாதிகளைத் தாக்குவதையும் விலக்கி வைப்பதையும் ஊக்குவித்த தன் மூலமும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சகோதரக் கட்சி களில் பிளவுகளை உருவாக்குபவர்கள் தாங்களே என்பதை அம்பல மாக்கிக் கொண்டனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, அதன் நிலைமை இதைவிட மோசமானது.

'மக்கள் தினசரி' ஆசிரியர் குழுவால் 1963-ம் ஆண்டு மார்ச் 9-ல் வெளியிடப்பட்ட 'திருத்தல்வாதிகளுக்கு ஒரு கண்ணாடி' என்ற கட்டுரை யில் டாங்கே தலைமையில் இருந்த ஓடுகாலிக் கும்பல் மார்க்சிய-லெனி னியத்திற்கும் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்திற்கும் இந்தியப் பாட் டாளி வர்க்கம் மற்றும் இந்திய மக்களின் புரட்சிகர இலட்சியத்திற்கும் துரோகம் செய்ததையும் தேசிய ஆதிக்க வெறி மற்றும் வர்க்க சரணா கதிப் பாதையை மேற்கொண்டதையும் ஏராளமான சான்றுகளுடன் சுட்டிக் காட்டினோம். இந்தக் கும்பல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை ஆக்கிரமித்துக்கொண்டு, இந்திய முதலாளிகள், நிலப் பிரபுக்களின் விருப்பங்களுக்கேற்ப அவர்களுடைய நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நேரு அரசாங்கத்தின் கைப்பாவையாக கம்யூ னிஸ்ட் கட்சியை மாற்றியமைத்தது.

அதற்குப் பிறகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை என்ன வாயிற்று?

இப்பொழுது டாங்கே கும்பல் துரோகப் பாதையில் தொடர்ந்து சென்று கொண்டிருப்பதை ஒவ்வொருவரும் காணமுடியும். இது இன்னும் வர்க்க சமரசத்தையும், நேரு அரசின் மூலமே சோசலிசத்தை உரு வாக்க முடியும் என்பதையும் பற்றிப் பேசி வருகிறது. ஆயுத விரிவாக் கத்துக்கும், யுத்தத் தயாரிப்புக்குக்கும் அதிக செலவு செய்யும் நேரு அரசின் பட்ஜெட்டையும் மக்களைக் கொள்ளையடிக்கும் அதன் நடவடிக்கைகளையும் வெகுவாக ஆதரிக்கிறது. 1963 ஆகஸ்டில் நேரு அரசின் வரிக்கொள்கையை எதிர்த்து 10 லட்சம் மக்கள் பம்பாயில் நடத்திய மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத் திற்கு எதிராக நாசவேலை செய்தது. சிறை செய்யப்பட்ட கம்யூனிஸ்டுகளை விடுவிக்கக் கோரி கல்கத்தாவில் ஒரு லட்சம் மக்கள் கலந்துகொண்ட பேரணியைத் தடுக்க முயன்றது. வெறித்தனமான சீன எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்வதோடு, நேரு அரசின் ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கையை ஆதரிக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தி யத்திடம் கூலிக்குப் பணியாற்றும் கொள்கையைப் பின்பற்றி வருகிறது.

டாங்கே கும்பலின் துரோகச் செயல்கள் வெளிப்பட்டதன் விளை வாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பரந்துபட்ட அணிகளிடமிருந்து அக்கும்பலுக்கு எதிர்ப்பும், தடையும் உருவாயின. டாங்கே கும்பல், இந்திய நாட்டையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியையும் பீடித்த சாபக்கேடு என்பதை மேன்மேலும் அதிகமான இந்தியக் கம்யூனிஸ்டுகள் உணர்ந்து வந்தனர். அவர்கள் தற்போது கட்சியின் பெருமை வாய்ந்த புரட்சிகரப் போராட்ட பாரம்பரியத்தை மீண்டும் நிலைநாட்ட முயன்று வருகிறார்கள். இவர்கள் தான் இந்தியப் பாட்டாளி வர்க்கம் மற்றும் இந்திய மக்களின் நம்பிக்கைகளை பிரதிபலிக்கும் உண்மையான பிரதிநிதிகளாவர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ''துரோகிகளையும்'', ''ஓடுகாலி களையும்'' ஆதரிக்கிறது என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால், உண்மையில் டாங்கே போன்ற அப்பட்டமான துரோகிகளையும் ஓடுகாலிகளையும் ஆதரிப்பவர்கள் அவர்களே.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், திருத்தல்வாதத்தையும், பிளவுவாதத்தையும் எதிர்க்கத் துணிந்த பல நாடுகளிளிலுள்ள கம்யூனிஸ்டுகளையும் ''கொள்கையைக் கைவிட்டவர்கள்'' ''ஓடு காலிகள்'', ''கட்சியின் எதிரிகள்'' எனக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆனால் அந்த கம்யூனிஸ்டுகள் செய்ததென்ன? அவர்கள் செய்தது மார்க்சிய-லெனினிய வழியில் ஊன்றி நின்று புரட்சிகரப் பாதையும் புரட்சிகரக் கட்சியும் வேண்டும் என்று வலியுறுத்தியதைத் தவிர வேறெதுவுமில்லை. மார்க்சிய-லெனினிய வழியில் நிற்கும் இந்தப் புரட்சியாளர்களைத் திட்டுவதன் மூலம் அவர்கள், சரியான பாதைக்கு ஆதரவாகவும் தவறான பாதைக்கு எதிராகவும் நடத்தும் போராட்டத்தை இறுதிவரை நடத்தாமல் தடுத்துவிட முடியும் என ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கருதுகிறார்களா? அவர்களின் இந்தத் தவறான விருப்பங்கள் ஒருநாளும் நிறைவேறப் போவதில்லை.

எல்லா இடங்களிலும், எல்லாக் காலத்திலும் உண்மையான புரட்சியாளர்களும், உண்மையான பாட்டாளி வர்க்க புரட்சிகரப் போராளிகளும்,உண்மையான மார்க்சிய-லெனினியவாதிகளும்(போர்க்குணம்மிக்க பொருள் முதல்வாதிகள்) அஞ்சாநெஞ்சம் படைத்தவர்களே; அவர்கள் திருத்தல்வாதிகள் மற்றும் பிற்போக்குவாதிகளின் அவதூறுகளுக்கு அஞ்சமாட்டார்கள். ஏனெனில், எதிர்காலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் தாங்களேயன்றி பிற்போக்குவாதிகளோ, திரிபுவாதிகளோ அல்ல,என்பதை அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள்.மாபெரும் மனிதர்கள் அனைவரும் ஒரு காலத்தில் ''சாதாரணமானவர்கள்'' தான். உண்மையானவர்களாகவும் மக்களின் ஆதரவைப் பெற்றவர்களாகவும் இருந்தால் அவர்கள் முதலில் அற்பமானவர்களாகத் தோன்றினாலும் இறுதியில்அவர்கள்தான் நிச்சயம்வெற்றிபெறுவார்கள் இதுதான்லெனின் விசயத்திலும், மூன்றாம் அகிலத்தின் விசயத்திலும் உண்மையானது. இதற்கு மாறாக, உண்மையை இழந்து விடுவதால் பிரபலமானவர்களும் பெரிய படைகளும் கூட மக்கள் ஆதரவையும் இழந்து இறுதியில் தேய்ந்து, சிதைந்து, அழுகி விடுவர். காவுட்ஸ்கி, பெர்ன்ஸ்டைன் ஆகியோருக்கும் இரண்டாம் அகிலத்திற்கும் இந்த நிலைமைதான் ஏற்பட்டது. ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அதற்கு எதிரான ஒன்றாக மாறுகிறது.

கம்யூனிஸ்டுகள் புரட்சியை உருவாக்குபவர்கள். புரட்சியை உருவாக்க மறுத்தால், அவர்கள் மார்க்சிய-லெனினியவாதிகளாக இருக்க முடியாது என்பதோடு, திருத்தல்வாதிகளாகவோ அல்லது அது போன்றவர்களாகவோ மாற நேரிடும். மார்க்சிய-லெனினியவாதிகளான கம்யூனிஸ்டுகள் இயல்பாகவே, புரட்சிக்காக உறுதியாக நிற்பவர்களாகவும், திருத்தல்வாதத்தை எதிர்ப்பவர்களாகவும் இருக்க வேண்டும். அதே போல, ஒரு மார்க்சிய-லெனினியக் கட்சி திருத்தல்வாதத்தை எதிர்க்கும் கம்யூனிஸ்டுகளுக்கும், புரட்சியாளர்களுக்கும் உறுதியான ஆதரவை வழங்க வேண்டும்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்பொழுதும் தனது நிலையை மறைத்ததே இல்லை. மார்க்சிய-லெனினியத்தைப் பின்பற்றும் எல்லா புரட்சிகர தோழர்களையும் நாங்கள் ஆதரிக்கிறோம். சர்வதேச கம்யூனிச இயக்கத்தில், நாங்கள் திருத்தல்வாதிகளோடு தொடர்பு வைத்துக் கொண்டுள்ளபோது, உண்மையான மார்க்சிய-லெனினியவாதிகளோடு ஏன் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது? நாங்கள் பிறநாடுகளில் உள்ள உண்மையான மார்க்சிய-லெனினியவாதிகளை ஆதரிப்பதை பிளவுவாதச் செயல் என ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். எங்கள் கருத்தின்படி இது நாங்கள் செய்ய வேண்டிய ஒரு பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கடமையாகும்.

துன்பத்துக்கோ கொடுங்கோன்மைக்கோ பயப்படாதவர்களும் உண்மையை உயர்த்திப் பிடித்துப் போராடும் துணிவுமிக்கவர்களுமான அனைத்து நாடுகளிலுமுள்ள மார்க்சிய-லெனினியவாதிகள், கம்யூனிசப் போராளிகளின் மாபெரும் புரட்சிகர உணர்வை நிரூபித்துக் காட்டியுள்ளனர். இத்தகைய தீரம் மிக்க போராளிகளில் ஜேக்குஸ் கிரிப்பா போன்ற தோழர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் பெல்ஜியம் கம்யூனிஸ்டுகளும், ஜோவா அமசோனாஸ், மாரிக்கோ கிராபோயிஸ் போன்ற தோழர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் பிரேசில் கம்யூனிஸ்டுகளும், இ. எப். ஹில் போன்ற தோழர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் ஆஸ்திரேலியக் கம்யூனிஸ்டுகளும், பிரேமலால் குமாரசிரி, நாகலிங்கம் சண்முகதாசன் போன்ற தோழர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் இலங்கை கம்யூனிஸ்டு கட்சிகளும் மற்றும் இந்திய, இத்தாலிய, பிரெஞ்சு, அமெரிக்க கம்யூனிஸ்டு கட்சிகளின் உள்ளும் வெளியிலும் இருக்கும் மார்க்சிய-லெனினியவாதிகளும் அடங்குவர். இவர்கள் மார்க்சிய-லெனினிய புரட்சிகரக்கொள்கையை உயர்த்திப் பிடித்தும், மார்க்சிய-லெனினிய கொள்கையை ஆயுதமாகக் கொண்ட புரட்சிகர பாட்டாளி வர்க்க முன்னணிக் கட்சியை உருவாக்க, தொடர்ந்து செயல்பட்டதன் மூலமும் பாட்டாளி வர்க்கம் மற்றும் தங்கள் நாட்டிலுள்ள இதர உழைக்கும் மக்களின் அடிப்படை நலன்களை உயர்த்திப் பிடித்து, உலகப் பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்கு பெரும் பங்காற்றினர்.

உலகம் முழுவதும் கம்யூனிசத்தின் வெற்றிக்காகப் போராடிவரும் அனைத்து மக்களின் மரியாதையையும், அனுதாபத்தையும் ஆதரவையும் பெறுவதற்கு இவர்கள் முற்றிலும் தகுதியுடையவர்களாவர்.

சுருக்கமாக, எந்த நாடானாலும் எந்தஇடமானாலும், எங்கெல்லாம் ஒடுக்குமுறை இருக்கிறதோ, அங்கெல்லாம் அதற்கான எதிர்ப்பு இருக்கிறது, எங்கெல்லாம் திருத்தல்வாதிகள் இருக்கிறார்களோ அங்கே

அவர்களை எதிர்த்துப் போராடும் மார்க்சிய-லெனினியவாதிகளும் இருக்கின்றனர். எங்கு மார்க்சிய-லெனினியவாதிகள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு, பிளவுவாத நடவடிக்கைகள் நடைபெறுகின்றனவோ அங்கு புகழ்மிக்க மார்க்சிய-லெனினியவாதிகளும் வலிமை மிக்க புரட்சிகரக் கட்சிகளும் தவிர்க்க முடியாதபடி உருவாகின்றன. நவீன திருத்தல்வாதிகளின் எதிர்பார்ப்புகளுக்கு மாறான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. திருத்தல்வாதிகள் தங்கள் எதிரிகளைத் தாங்களே உருவாக்கி வருகின்றனர். கடைசியில் அவர்களாலேயே திருத்தல்வாதிகள் புதைக்கப்பட்டு விடுவர். இது தவிர்க்க முடியாத விதியாகும்.

இன்றைய பொது விவாதம்

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் தற்போது நடைபெறும் மாபெரும் விவாதம், மார்க்சிய-லெனினியத்தைப் பின்பற்றுவதா அல்லது திருத்தல்வாதத்தைப் பின்பற்றுவதா? பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைப் பின்பற்றுவதா அல்லது பெரும் வல்லரசு ஆதிக்க வெறியைப் பின்பற்றுவதா? ஒற்றுமைக்காக நிற்பதா அல்லது பிளவுக்காக நிற்பதா என்பதை மையமாகக் கொண்டுள்ளது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசைத் தொடர்ந்து வெகு காலத்திற்கு முன்பே, அடிப்படைக் கொள்கை விதிகளில் சச்சரவுகள் தோன்றின. நீண்ட நாட்களாக சகோதரக் கட்சிகளிடையே நடைபெறும் தனிப்பட்ட முறையிலான பேச்சுகளில் இடம் பெற்றிருந்த இவை இரண்டு வருடங்களுக்கு சற்று முன்பாகத்தான் பகிரங்கமாக வெளிவந்தன.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் பகிரங்க வாதப் பிரதிவாதங்கள் நடத்தப்படுவதை ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள்தான் தூண்டவும் வலியுறுத்தவும் செய்தனர் என்பது அனைவரும் அறிந்ததே.

1961 அக்டோபரில் நடந்த தங்களது 22-வது காங்கிரசில் அவர்கள் அல்பேனியத் தொழிலாளர் கட்சியைப் பகிரங்கமாக தாக்கினர். அக்காங்கிரசுக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக் குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்றிருந்த தோழர் சூ-என்-லாய் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் இந்த நடவடிக்கையை ஆட்சேபித்து, இது மார்க்சிய-லெனினியத்துக்கு உகந்ததல்ல என்பதைச் சுட்டிக்காட்டினார். அதற்கு ரசியத் தலைவர்களின் பதில் என்ன?

அதற்கு அவர்கள் தாங்கள் செய்ததுதான் ''முற்றிலும் சரி''[1] என்றும் ''இது மட்டுமே சரியான மார்க்சிய-லெனினிய கொள்கை விதியின்பாற்பட்ட நிலைபாடு''[2] என்பதால் இந்த பகிரங்க வாதப்பிரதிவாதங்களைத் தொடங்கி வைக்கிறோம் என்றும் கூறினார்.

பிறகு, 1962 ஜனவரியில் வியட்னாம் தொழிலாளர்கட்சி, ''ஒருவரை ஒருவர் வானொலியிலும், பத்திரிகைகளிலும் தாக்கிக் கொள்வதை நிறுத்த வேண்டும்'' என்ற ஆலோசனையை முன்வைத்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் அல்பேனியத் தொழிலாளர் கட்சியும் பிற சகோதரக் கட்சிகளும் இந்த ஆலோசனையை ஆதரித்தன. ஆனால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், பகிரங்க தாக்குதல்களை நிறுத்துவதற்கான திட்டவட்டமான வாக்குறுதியளிக்க மறுத்துவிட்டனர். அல்பேனியத் தொழிலாளர் கட்சியை பகிரங்கமாக தாக்குவதை நிறுத்திக் கொள்ளாதது மட்டுமின்றி, 1962-ன் இறுதியிலும் 1963-ன் தொடக்கத்திலும் நடைபெற்ற அய்ந்து அய்ரோப்பிய சகோதரக் கட்சிகளின் காங்கிரசுகளில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும் பகிரங்கமாகத் தாக்க ஆரம்பித்தனர், இவ்வாறு பகிரங்க விவாதத்தை இன்னும் பரந்த அளவில் தொடங்கினர். இந்தத் தாக்குதலாளர்களுக்கு பகிரங்கமாகப் பதிலளிப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லாது போயிற்று.

சகோதரக் கட்சிகளின் எல்லாத் தாக்குதல்களுக்கும் இன்னும் நாங்கள் பதில் தரவில்லை. இருப்பினும் 1963 மார்ச்சில் எங்கள் கட்சியின் மத்திய கமிட்டி, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு எழுதிய தனது பதிலில், சீன-ரசிய கட்சிகளுக்கிடையில் திட்டமிடப்பட்டுள்ள பேச்சு வார்த்தைகள் நடப்பதற்கான சுமுகமான சூழலை உருவாக்கும் பொருட்டு, பதிலளிப்பதற்கான எங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் பத்திரிகைகளில் பகிரங்கமான பதில் கொடுப்பதை மார்ச் 9-லிருந்து தற்காலிகமாக நிறுத்திவைப்பதாகக் கூறியது. ஆனால் பேச்சுவார்த்தை தொடங்கவிருந்த நேரத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை அதன் பெயரைக் குறிப்பிட்டே பகிரங்கமாக தாக்கும் அறிக்கைகளையும் தீர்மானங்களையும் வெளியிட்டனர்.

---

1. *என். எஸ். குருச்சேவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்தில் ஆற்றிய நிறைவுரை, அக்டோபர் 27, 1961. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராய ஆவணங்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, பக்கம் 334.*
2. *''நமது சகாப்தத்தின் பதாகை'', பிராவ்தாவில் ஆசிரியர் குழு கட்டுரை, பிப்ரவரி 21, 1962.*

ஜூலை 14-ல் ரசிய பிரதிநிதிக் குழுவுக்கும் சீனப் பிரதிநிதிக் குழுவுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கும் பொழுதே எல்லா கட்சி அமைப்புகளுக்கும், ரசியாவிலுள்ள அனைத்து கம்யூனிஸ்டுகளுக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தனது பகிரங்க கடிதத்தை வெளியிட்டது. அக்கடிதத்தில், உண்மைகளைத் திருத்தியும், சரியையும் தவறையும் குழப்பியும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும், தோழர் மாசேதுங் அவர்களையும் மிக மோசமாகவும் கேவலமாகவும் தாக்கியும், ஏசியும் எழுதியிருந்தது. இவ்வாறு ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பகிரங்க விவாதங்களை அதிக அளவில் செய்வதில் மேலும் ஒரு படி சென்றனர்.

1963 ஜூலை 15-லிருந்து ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சீனாவை தமது முதல் எதிரியாகக் கருதி அவதூறுகளையும், தாக்குதல்களையும் தொடுத்தனர். இதற்கு அரசாங்க அறிக்கைகள், தலைவர்களின் பேச்சுகள், கூட்டங்கள், கட்டுரைகள் ஆகியவற்றையும், தங்களின் எல்லா பிரச்சார சாதனங்களையும்—மத்திய மற்றும் உள்ளூர் பத்திரிகைகளிலிருந்து வானொலி, தொலைகாட்சிவரை—தங்கள் வசமிருந்த அனைத்துப் பிரச்சார சாதனங்களையும் பயன்படுத்தினர். ஜூலை 15 முதல் அக்டோபர் 3 வரையிலான காலத்தில் மட்டும் அவர்கள், தங்களுடைய 26 மத்திய செய்திப் பத்திரிகைகளிலும், இதர மாத, வார இதழ்களிலும், 1119 சீன விரோத கட்டுரைகளை, ஆசிரியர் குழுக் கட்டுரைகளாகவும், தலையங்கங்களாகவும், விமர்சனங்களாகவும், கையெழுத்திடப்பட்ட கட்டுரைகளாகவும், வாசகர் கடிதங்களாகவும், கருத்துப்படங்களாகவும் வெளியிட்டு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியையும் அதன் தலைவர்களான மாசேதுங், லியோசோஷி, சூயென்லாய், மற்றும் பிற சீனத்தோழர்களையும், அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு அவதூறு செய்தனர். இதே காலத்தில், சீனாவுக்கு எதிராக, குறைந்தபட்சம் 728 கட்டுரைகளாவது உள்ளூர் வெளியீடுகளில் வெளியிடப்பட்டன என்பது ஒன்றியக் குடியரசுகளின் 15 பத்திரிகைகளை ஆய்வு செய்த போது தெரிந்தது.

இந்த பகிரங்க விவாதங்களில் அக்கறையுள்ள அனைவரும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்காக ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதம் உள்ளிட்ட முக்கிய சீன-எதிர்ப்பு கட்டுரைகள் அனைத்தையும் இரண்டு முறை முழுமையாக வெளியிட்டோம். 12-க்கும் மேற்பட்ட மொழிகளில் அவற்றை உலகம் முழுவதற்கும் ஒலிபரப்பினோம். ரசிய பிரசுரங்களில் வெளியிடப்பட்ட எல்லா கட்டுரைகளையும் நாங்கள் வெளியிடவில்லை. ஏனெனில் அவை அந்த அளவுக்கு ஏராளமானதாக இருந்தன.

மேலும் அவைகளில் பல திரும்பத் திரும்பக் கூறியதையே கூறுவதாகவும் இருந்தன. அத்துடன் எங்கள் பத்திரிகைகளில் உள்ள இடமும் போது மானதாக இல்லை. இருந்தபோதிலும் அவை அனைத்தையும் எங்கள் வெளியீட்டகங்கள் சேகரித்துள்ளன. அவற்றை நாங்கள் புத்தக வடிவில் வெளியிடுவோம்.

கிட்டத்தட்ட 2000 சீன-எதிர்ப்புச் செய்திகளை, கட்டுரைகளாக வும் இதர வடிவங்களிலும் ரசியா வெளியிட்டுள்ளது. சகோதரக் கட்சி களுக்கிடையே இருக்கும் சமத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் அதே அளவு எண்ணிக்கையில் பதில்களை வெளியிட சீனக் கட்சி உரிமை பெற்றுள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதம், மார்க்சிய—லெனினியம் குறித்த அடிப்படைக் கோட்பாடுகள் பற்றியும், கடந்த ஏழு அல்லது எட்டு வருடங்களாக சர்வதேச கம்யூனிச இயக்கத் தில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள் குறித்தும் பல பிரச்சினைகளை எழுப்பியுள்ளதால், இவற்றைக் கவனமாகப் பரிசீலனை செய்த எமது 'மக்கள் தினசரி' மற்றும் 'செங்கொடி' பத்திரிகை ஆசிரியர் குழுக்கள் 1963 செப்டம்பர்-6 முதல் தொடர்ச்சியான விமர்சனங்களை வெளியிட் டன. இந்த விமர்சனத்தையும் சேர்த்து இதுவரை ஏழு விமர்சனங்களை மட்டுமே நாங்கள் வெளியிட்டுள்ளோம்.

எங்கள் விமர்சனங்களை நாங்கள் இன்னும் முடித்துக் கொள்ள வில்லை. ரசியாவின் மத்திய மற்றும் உள்ளூர் பதிப்பகத் துறைகள் சீனாவுக்கெதிரான கட்டுரைகளை மிக அதிக அளவில் வெளியிட்டுள்ள போதிலும் நாங்கள் அவற்றிற்குப் பதிலளிக்க இன்னும் ஆரம்பிக்கக் கூட இல்லை.

1963-ம் ஆண்டு அக்டோபர் 25-ல் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பதிலில் குருச்சேவ் பகிரங்க விவாதங்களை நிறுத்த வேண்டுகோள் விடுத்தார். அதன் பிறகும் ரசிய பத்திரிக்கைகள் சீனாவுக்கு எதிரான கட்டுரைகளை தொடர்ந்து வெளியிட்டன.

அண்மையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் விவாதங் களை நிறுத்த மீண்டும் வேண்டுகோள் விடுத்ததோடு ''அவை கம்யூனிச இயக்கத்திற்கு நிறையத் தீமைகள் செய்துள்ளன'' என்றும் கூறியுள்ள னர். ஆனால் முன்பு, பகிரங்க விவாதங்கள் ''ஒட்டு மொத்த உலகக் கம்யூனிச இயக்கத்தின் நன்மைக்காகவே''[1] என்றும் ''இது ஒன்றே

1. ''கம்யூனிசத்தின் புதிய வெற்றிகளை நோக்கி'' கம்யூனிஸ்ட் இதழ், ஆசிரியர் குழு கட்டுரை, எண். 16, 1961.

உண்மையான மார்க்சிய—லெனினிய கொள்கை வழியின் பாற்பட்ட நிலைபாடு'' [1] என்றும் கூறினர். ஒரு சமயம் ஒன்றையும், பிறிதொரு சமயம் மற்றொன்றையும் பேசுகிற நீங்கள் என்ன, விளையாட்டா விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள்? என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைக் கேட்க விரும்புகிறோம்.

நீங்கள் சீனாவைத் தாக்கி எழுதிய 2000 கட்டுரைகளுக்குப் பதிலாக நாங்கள் பத்துக்கும் குறைவான கட்டுரைகளையே எழுதியுள்ளோம், இன்னும் உங்கள் பகிரங்கக் கடிதத்துக்குக் கூட பதில் கொடுக்காத நிலையில் எங்களை நீங்கள் அமைதியாக இருக்கச் சொல்வது சகோதரக் கட்சிகளின் சமத்துவக் கொள்கைக்கு ஏற்புடையதுதானா? என்று கேட்க விரும்புகிறோம். நீங்கள் இவ்வளவு காலமும் எவ்வளவோ தாக்கி எழுதியதற்கு நாங்கள் ஒரு சிறிய அளவு பதிலளித்தவுடனே நீங்கள் பொறுமையிழந்து, அமைதியிழந்து, அதைக் கேட்க மறுக்கிறீர்களே, உங்களின் நடத்தை ஜனநாயக விவாத முறைகளுக்கு ஏற்புடையதுதானா? என்றும் கேட்க விரும்புகிறோம்.

சீனக் கட்சி மேலும் விவாதத்தைத் தொடர்ந்தால் ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்தும், ரசிய மக்களிடமிருந்தும் மிகவும் தீர்மானகரமாக எதிர்த் தாக்குதல் காத்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளட்டும்'' என்று 1963-ம் ஆண்டு செப்டம்பர் 21-ல் ரசிய அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் வெட்கமின்றி அறிவித்தது எங்களைப் பயமுறுத்தவும், மிரட்டவுமா? என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைக் கேட்க விரும்புகிறோம். பிற மக்கள் உங்கள் கட்டளைக்கு அடிமைத்தனமாகக் கீழ்ப்படிவார்கள் என்றும், உங்கள் உறுமலைக் கண்டு பயந்து நடுங்குவார்கள் என்றும் நீங்கள் உண்மையிலேயே நம்புகிறீர்களா? வெளிப்படையாகச் சொல்வதெனில் ''நீங்கள் கூறிய அந்த மிகவும் தீர்மானகரமான எதிர்த் தாக்குதல்'' என்ன என்று பார்ப்பதற்காக செப்டம்பர் 21-லிருந்தே நாங்கள் ஆர்வத்தோடு காத்துக் கொண்டிருக்கிறோம்.

தோழர்களே, நண்பர்களே! நீங்கள் தவறு செய்கிறீர்கள், முற்றிலும் தவறு செய்கிறீர்கள்.

இப்பொழுது பொது விவாதம், தொடங்கிவிட்டது எனவே, இது விதிப்படி தொடர வேண்டும். போதுமான அளவு சொல்லி விட்டதாக நீங்கள் நினைத்தால் எதிராளிக்கு பதில் கொடுக்க போதிய சந்தர்ப்பம்

---

1. ''நமது சகாப்தத்தின் பதாகை'', பிராவ்தாவில் ஆசிரியர் குழு கட்டுரை, பிப்ரவரி 21, 1962.

கொடுக்க வேண்டும். இன்னும் சொல்ல வேண்டியது நிறைய இருக்கிற தென்றால் அவற்றையும் சொல்லிவிடுங்கள். ஆனால் நீங்கள் அவ்வாறு சொல்லும்பொழுது முழுமையாக பதில் கொடுக்க எதிராளியையும் அனுமதியுங்கள். சுருங்கச் சொன்னால் இதில் சம உரிமை இருக்க வேண்டும். சகோதரக் கட்சிகள் சமத்துவமானவை என்று நீங்களே கூறி யிருக்கிறீர்கள் அல்லவா? அவ்வாறிருக்கையில், நீங்கள் சகோதரக் கட்சி களைத் தாக்க விரும்பும் போது பொது விவாதம் தொடங்கி அதை வலியுறுத்துவதும், அதே நேரத்தில் விவாதத்தை நீங்கள் நிறுத்த விரும் பும்போது சகோதரக் கட்சிகள் உங்களுக்கு பகிரங்கமாக பதிலளிக்கும் உரிமையைத் தாக்கி மறுப்பதும் ஏன்?

முதலில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள்தான் பகிரங்க விவாதத்தை முறையற்ற விதத்தில் தூண்டிவிட்டு, விரிவுபடுத்தியும் அதை வலியுறுத்தியும் வந்தனர். ஆனால், இப்பொழுதோ அதை நிறுத்த வேண்டுமென்று கூச்சலிடுகின்றனர். இவையாவற்றுக்கும் பின்னணி என்ன?

இந்த விவாதத்தைத் தொடங்கியவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வாறு நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது இந்த பகிரங்க விவாதம் தங்களுக்குச் சாதகமாக இருக்கும் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் முதலில் கருதினர். ஆனால், நிகழ்ச்சி கள் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக நடைபெற்று வருகின்றன. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் பக்கம் உண்மை இல்லை. எனவே, அவர்கள் பொய்கள், அவதூறுகள், உண்மைகளைப் புரட்டுவது, சரியை யும், தவறையும் குழப்புவது ஆகியவற்றையே சார்ந்திருக்க வேண்டியுள் ளது. விவாதம் வளர்ந்து அவர்கள் உண்மையான விசயங்களையும், விபரங்களையும் தர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டவுடன் அவர்களின் அடிப்படை தகர்ந்து போவதைக் கண்டு நடுங்குகின்றனர்.

திருத்தல்வாதிகளைப் பொறுத்தவரை, ''நிலவுகிற தத்துவார்த்த ரீதியான, திட்ட ரீதியான, போர்த்தந்திர ரீதியான, அமைப்பு ரீதியான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்திக் காட்டுவதை விட, ஒப்புக்கொள்ள முடியாத, விருப்பத்தகாத,ஏற்றுக்கொள்ள முடியாத விசயம் என்று அவர் களுக்கு எதுவும் கிடையாது.''[1] என்று லெனின் ஒரு முறை கூறினார்.

---

1. *வி. இ. லெனின், ''சர்வதேச சோசலிசத் துறை மற்றும் கலைப்புவாதிகள் பற்றி மீண்டும் ஒரு முறை'' தொகுப்பு நூல் கள், ரசியப் பதிப்பு, அ. மொ. ப. மாஸ்கோ, 1948, தொகுதி 20, பக்கம் 37.*

இது போன்ற ஒரு சூழ்நிலைமையில்தான் தற்போது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உள்ளனர்.

''பகிரங்க விவாதத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைபாடு யாவரும் அறிந்ததே. முதலிலிருந்தே நாங்கள், சகோதரக் கட்சிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளைத் தனிப்பட்ட முறையில் கலந்தாலோசித்து தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறி வருகிறோம். இந்தப் பொது விவாதத்தை நாங்கள் தூண்டவோ விரும்பவோ இல்லை.

இருந்த போதிலும் பொது விவாதம் ஏற்கனவே தொடங்கப்பட்டு நடைபெற்று வருவதாலும், இதனை நடத்துவதுதான் ''லெனினிய வழிப்படி செயல்படுதல்.'' [1] என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கூறியிருப்பதாலும் ஜனநாயக ரீதியான விவாதங்களின் மூலம் உண்மையான ஆதாரங்களின் அடிப்படையில் இறுதி முடிவு காணும் வரை இந்த விவாதம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

இதைவிட முக்கியமானது என்னவென்றால், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மார்க்சிய—லெனினியத்துக்கும் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்துக்கும் துரோகமிழைத்திருப்பதாலும், பிரகடனத்தையும் அறிக்கையையும் கிழித்தெறிந்திருப்பதாலும், நாங்கள் மார்க்சிய-லெனினியத்தையும் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தையும் பிரகடனம் மற்றும் அறிக்கையின் புரட்சிகரக்கொள்கைகளையும் பாதுகாப்பதிலிருந்து விலகி இருக்கவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கமுடியாது. இவ்விவாதம் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் கோட்பாடு பற்றிய முக்கிய பிரச்சினைகள் சம்மந்தப்பட்டதாக இருப்பதால், அவைபற்றி முழுமையாக அலசித் தீர்க்கப்படவேண்டும். இதுவும் கூட, ஒரு முக்கியமான மார்க்சிய—லெனினிய அணுகுமுறையாகும்.

சாரம்சம் என்னவெனில், சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நிலவும் வேறுபாடுகள் மார்க்சிய-லெனினியத்துக்கும் திரிபுவாதத்துக்கும் இடையிலானதும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கும், பெரும் வல்லரசு ஆதிக்கவாதத்துக்கும் (Great Power Chauvinism) இடையிலானதும் ஆகும். பகிரங்க விவாதங்களை நிறுத்துவதன்மூலம் கொள்கை வழிகளிலான முக்கிய வேறுபாடுகளை அடிப்படையிலேயே களைந்துவிட முடியாது. இதற்கு மாறாக, பகிரங்க விவாதத்தின் மூலம் மட்டுமே விசயங்களையும், விபரங்களையும் ஆதாரமாகக் கொண்டு அவைகளைத்

---

1. ''லெனினியக் கட்சியின் 'வரலாற்றுப் பேராயம்'' பிராவ்தா தலையங்கம், நவம்பர் 4, 1961.

தெளிவுபடுத்தவும் தவறுகளையும் சரியானவைகளையும் வேறுபடுத்திப் பார்க்கவும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையை, மார்க்சிய-லெனினியம் மற்றும் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் பாதுகாக்கவும் பலப்படுத்தவும் முடியும்.

மார்க்சிய-லெனினியம் என்பது ஒரு அறிவியல். அறிவியல், விவாதங்களைக் கண்டு அஞ்சுவதில்லை. விவாதங்களைக் கண்டு அஞ்சுவது எதுவும் அறிவியலகாது. சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் தற்போது நடைபெறும் மாபெரும் விவாதமானது எல்லா நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுகளையும் புரட்சியாளர்களையும், புரட்சிகர மக்களையும், தங்கள் சொந்தநாட்டு புரட்சி பற்றிய பிரச்சினைகள் குறித்தும், உலகப் புரட்சி குறித்தும் மார்க்சிய-லெனினிய அடிப்படையில் தங்கள் மூளையைப் பயன்படுத்திச் சிந்திக்கத்தூண்டுகிறது. இந்த மாபெரும் விவாதத்தின் மூலம் மக்கள், சரி எது, தவறு எது என்பதையும் உண்மையான மார்க்சிய-லெனினியம் எது, போலியானது எது என்பதையும் புரிந்து கொள்வார்கள். இப்பெரும் விவாதத்தின்மூலம் உலகில் உள்ள எல்லா புரட்சிகர சக்திகளும் ஒன்று திரட்டப்படும். எல்லா மார்க்சிய-லெனினிய வாதிகளும் சித்தாந்த ரீதியிலும் அரசியல் ரீதியிலும் உறுதி செய்யப்பட்டு தங்கள் நாடுகளில் மேலும் முதிர்ச்சியடைந்த வகையில் மார்க்சிய-லெனினியத்தை நடைமுறையுடன் இணைக்கும் திறன் பெறுவார்கள். இவ்வாறு மார்க்சிய-லெனினியம் சந்தேகமின்றி மேலும் செழுமை பெறும் வளர்ந்து புதிய சிகரங்களை எட்டும்.

ஒற்றுமையைப் பாதுகாத்து வலிமைபடுத்தும் பாதை

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திருத்தல்வாதமும், பெரும் வல்லரசு ஆதிக்கவெறியும், (Great Power Chauvinism) சோசலிசநாடுகள் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கம் ஆகியவற்றின் ஒற்றுமைக்கு முன்எப்போதுமில்லாத அளவுக்கு அபாயகரமானவைகளாகும். திருத்தல் வாத, பெரும் வல்லரசு ஆதிக்கவாத நிலைப்பாட்டை எடுத்ததன்மூலம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஒரு பிளவுக்காக நிற்கிறார்கள். இத்தகைய நிலைபாட்டை மேற்கொண்டிருக்கும் வரை, அவர்கள் 'ஒற்றுமை' குறித்து எவ்வளவுதான் பேசினாலும், மற்றவர்களை 'பிளவு வாதிகள்', 'குழுவாதிகள்' என்று அவதூறு பேசினாலும் உண்மையில் அவர்கள் போலியான ஒற்றுமைக்காகவும், யதார்த்தத்தில் பிளவுக்காகவும் பணியாற்றுகிறவர்களேயாவர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், பிற மார்க்சிய-லெனினிய கட்சிகளும், அனைத்து மார்க்சிய-லெனினியவாதிகளும், மார்க்சிய-லெனினியத்திலும் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்திலும் ஊன்றி நிற்கிறார்கள். சோசலிச முகாம் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் உண்மையான ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கும், உறுதிபடுத்துவதற்கும் இது மட்டுமே சரியான நிலைப்பாடு ஆகும்.

மார்க்சிய-லெனினியமும் 'பாட்டாளிவர்க்க சர்வதேசியமும்தான் அத்தகைய ஒற்றுமையின் அடிப்படைகளாகும். இந்த அடிப்படையில் மட்டுமே, தோழமைக் கட்சிகள் மற்றும் நாடுகளின் ஒற்றுமையைக் கட்டியமைக்க முடியும். இந்த அடிப்படையில் இருந்து ஒருவர் விலகும் போது ஒற்றுமை சாத்தியமற்றதாக மாறும். மார்க்சிய-லெனினியத்துக்கும் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்துக்கும் போராடுவது என்பது, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்குப் பாடுபடுவதாகும். கொள்கையில் ஊன்றி நிற்பதும் ஒற்றுமையை உயர்த்திப் பிடிப்பதும் ஒன்றோடொன்று பிரிக்கமுடியாதபடி இணைக்கப்பட்டிருக்கின்றன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் போலித்தனமாக அல்லாமல், உண்மையிலேயே ஒற்றுமையை விரும்பினால், அவர்கள் மார்க்சிய—லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஊன்றி நிற்கவேண்டும், வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம், அரசு மற்றும் புரட்சி குறிப்பாக, பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவை தொடர்பான மார்க்சிய-லெனினிய போதனைகளைப்பின்பற்றவேண்டும். ஆகவே அவர்கள், வர்க்கப் போராட்டத்துக்குப் பதில் வர்க்க சமரசம் அல்லது வர்க்க சரணடைவை முன்வைப்பதையோ, பாட்டாளிவர்க்கப் புரட்சிக்குப் பதில் சமுதாய சீர்திருத்தவாதம் அல்லது சமூக பாசிபிசத்தை (Social Pacifism) முன்வைப்பதையோ, அல்லது எக்காரணத்தைக் கொண்டும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிடுவதையோ அனுமதிக்க முடியாது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், உண்மையிலேயே ஒற்றுமையை விரும்பினால், போலியாக நடித்துக்கொண்டிருக்கவில்லை என்றால் அவர்கள் 1957-ம் ஆண்டு பிரகடனம் மற்றும் 1960-ம் ஆண்டு அறிக்கை ஆகியவற்றின் புரட்சிகரக் கோட்பாடுகளைக் கண்டிப்புடன் கடைபிடிக்கவேண்டும். எல்லாத் தோழமைக் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுத்திட்டத்துக்கு மாற்றாக அவர்கள் தமது சொந்த கட்சியின் திட்டத்தை முன்வைப்பது முற்றிலும் அனுமதிக்கப்பட முடியாதது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உண்மையிலேயே ஒற்றுமையை விரும்பினால், போலியாக நடித்துக்கொண்டிருக்கவில்லை

என்றால் எதிரிகளுக்கும் தோழர்களுக்கும் இடையில் தெளிவாக வேறு படுத்திப் பார்க்கவேண்டும். உலக மக்களின் முதல் எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும் எதிர்க்கும் பொருட்டு, அனைத்து சோசலிச நாடுகள், அனைத்து மார்க்சிய-லெனினிய சகோதரக் கட்சிகள், உலகிலுள்ள அனைத்து தொழிலாளர்கள், உலகில் உள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் நாடுகள், அமைதியை விரும்பும் நாடுகள் மற்றும் மக்கள் ஆகியவர்களுடன் இணைந்து செயல்படவேண்டும். அதற்குப் பதிலாக அவர்கள், எதிரிகளை தோழர் களாகவும், தோழர்களை எதிரிகளாகவும் நடத்துவதையும், அமெரிக்க-ரசிய கூட்டுறவின் மூலம் உலகை மேலாதிக்கம் செலுத்தும் நப்பாசை யுடன் சகோதர நாடுகள், கட்சிகள், புரட்சிகர மக்களுக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், பிற நாடுகளின் பிற்போக்குவாதிகள், ஓடுகாலி டிட்டோ கும்பல் போன்றோருடன் கூட்டுச் சேர்வதையும் முற்றிலும் அனுமதிக்க முடியாது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உண்மையாகவே ஒற்றுமை யைக் காப்பாற்ற விரும்பினால், போலியாக நடித்துக் கொண்டிருக்க வில்லையென்றால், அறிக்கை மற்றும் பிரகடனத்தில் வகுக்கப் பட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையில் தோழமை கட்சிகளிடையே உள்ள உறவைப் பேணவும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கு உண்மையாக இருக்கவும் வேண்டும். இக்கொள்கைகளுக்கு மாற்றாக அவர்கள் பெரும் வல்லரசு ஆதிக்கவாதம் மற்றும் தேசிய தன்னகங்காரக் கொள்கைகளைக் முன்வைப்பதை முற்றிலும் அனுமதிக்க முடியாது.

வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால்;

அவர்கள் ஒற்றுமைக் கோட்பாட்டை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். சில சகோதரக் கட்சிகளைக் கூட்டுச் சேர்த்துக்கொண்டு பிற சகோதரக் கட்சிகளைத் தாக்கும் பிளவுவாத, குறுங்குழுவாத நடவடிக்கைகளை கைவிட வேண்டும்.

ஒருவருக்கொருவர் ஆதரவும், உதவியும் வழங்கும் கொள்கை விதி களைப் பின்பற்ற வேண்டும். 'உதவி' என்ற பெயரிலோ, 'சர்வதேசிய உழைப்புப் பிரிவினை' என்ற சாக்கிலோ, சகோதர நாடுகளின் நலன் களுக்கும் இறையாண்மைக்கும் பங்கம் விளைவிக்கவோ, அவர்களின் சுயசார்பு அடிப்படையிலான சோசலிச கட்டுமானத்தை எதிர்க்கவோ முயலக் கூடாது.

சகோதரக் கட்சிகளிடையே சுதந்திரம் மற்றும் சமத்துவம் என்ற கொள்கை விதியைக் கடைபிடிக்க வேண்டும். தன்னை, பிற சகோதரக்

கட்சிகளுக்கு மேலாக இருத்திக் கொள்ளவோ, தங்கள் கட்சியின் திட்டத்தை, பாதையை, தீர்மானத்தை மற்றவர்களின் மீது திணிக்கவோ கூடாது. 'தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டம்' என்ற பெயரில் பிற சகோதரக் கட்சிகளின் உள் விவகாரங்களில் தலையிடவோ கவிழ்ப்புச் சதிகளில் ஈடுபடவோ கூடாது. சகோதரக் கட்சிகளை தனது சொத்தாகவும், சகோதர நாடுகளை தனது சார்பு நாடுகளாகவும் நடத்தக்கூடாது.

கலந்தாலோசிப்பதன் மூலம் ஏகமனதான முடிவை வந்தடையும் கொள்கை விதியைப் பின்பற்ற வேண்டும். பெரும்பான்மை என்ற பெயரில் தனது சொந்தக் கட்சியின் தவறான பாதையை பிற கட்சிகளின் மேல் பலவந்தமாகத் திணிக்கக் கூடாது. தனது சொந்தக் கட்சி காங்கிரஸ் அல்லது பிற கட்சிகளின் காங்கிரசுகளைப் பயன்படுத்தியும் தீர்மானங்கள், அறிக்கைகள், தலைவர்களின் பேச்சுக்கள் ஆகியவற்றின் மூலமும் சகோதரக் கட்சிகள் மீது பகிரங்க தாக்குதலை தொடுக்கக் கூடாது. தத்துவார்த்த வேறுபாடுகளை அரசு உறவுகளுக்கு ஒருபோதும் கொண்டு செல்லக்கூடாது.

சுருங்கச் சொன்னால், உண்மையாகவே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சோசலிச முகாம் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கம் ஆகியவற்றின் ஒற்றுமையை விரும்பினால் அவர்கள் தங்களின் திருத்தல் வாதம், பெரும் வல்லரசு ஆதிக்கவெறி, பிளவுவாதப் பாதை ஆகியவற்றிலிருந்து அடியோடு விலகிக் கொள்ளவேண்டும். மார்க்சிய-லெனினியத்துக்கும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் உண்மையாய் இருப்பதன் மூலமும், நவீன திருத்தல்வாதம், நவீன வறட்டுச் சூத்திரவாதம், பெரும் வல்லரசு ஆதிக்கவெறி, மற்றும் பல்வேறு வடிவங்களிலான முதலாளிய தேசியவாதம், பிளவுவாதம், குறுங்குழுவாதம் ஆகியவற்றை எதிர்த்துச் செயல்படுவதன் மூலமும்தான்- வார்த்தைகளில் அல்லாமல் செயலில் அவ்வாறு நடந்து கொள்வதன் மூலம்தான்- சோசலிச முகாமின் ஒற்றுமையையும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையையும், பாதுகாத்து உறுதிப்படுத்த முடியும். ஒற்றுமையைப் பாதுகாக்கவும், உறுதிப்படுத்தவும் இது ஒன்றே வழியாகும்.

ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால், இன்றைய உலகசூழ்நிலை மிகமிக சாதகமாக உள்ளது. சர்வதேச கம்யூனிச இயக்கம், ஏற்கனவே மிகச்சிறந்த வெற்றிகளைப் பெற்று, சர்வதேச வர்க்க சக்திகளின் பலாபல நிலைமைகளில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தற்போது சர்வதேச கம்யூனிச இயக்கம், திருத்தல்வாத, பிளவுவாத கருத்தோட்டங்களின் தாக்குதலுக்குப்பட்டிருக்கின்றது. இது வரலாற்று வளர்ச்சி விதிக்கு முரணான ஒன்றல்ல. இது சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும்

சில சகோதரக் கட்சிகளுக்கும் தற்காலிகமாக சில தொந்தரவுகளைத் தந்தாலும், இறுதியில் திருத்தல்வாதிகளின் உண்மை முகம் அம்பலப் படுத்தப்படும் என்பதாலும், மார்க்சிய-லெனினியத்துக்கும் திருத்தல் வாதத்துக்கும் இடையிலான போராட்டம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதாலும், இது ஒரு நல்ல விசயமே.

சந்தேகத்திற்கிடமின்றி மார்க்சிய-லெனினியம் தனது இளமை மிகு வீரியத்தை தொடர்ந்து நிரூபிக்கும், உலகம் முழுவதையும் வெற்றி கொள்ளும், சர்வதேசிய கம்யூனிச இயக்கம் மார்க்சிய-லெனினிய அடிப் படையில் மேலும் மேலும் அய்க்கியப்பட்டு வலிமை பெறும், சர்வதேச பாட்டாளிவர்க்க இலட்சியமும், உலக மக்களின் புரட்சியும் மேலும் அதிக வெற்றிகளை ஈட்டும். நவீன திருத்தல்வாதம் சந்தேகத்துக்கு இடமின்றி ஓட்டாண்டியாகும்.

விசயங்களை அமைதியாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என நாங்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்குப் புத்தி கூற விரும்பு கிறோம். உங்களுடைய திருத்தல்வாதமும், பிளவுவாதமும் எங்கே கொண்டு போய்விடப் போகின்றன? ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் களுக்கு மீண்டும் ஒருமுறை உண்மையான வேண்டுகோள் விடுக்க விரும்புகிறோம். 1957 பிரகடனம் மற்றும் 1960-ம் ஆண்டு அறிக்கை ஆகியவற்றின் புரட்சிகரக் கொள்கைகளுக்கும், சகோதரக் கட்சிகள், நாடுகள் ஆகியவற்றிற்கு இடையே இருக்கவேண்டிய உறவுமுறைகள் குறித்து இந்த ஆவணங்களில் வகுத்துக் கூறப்பட்டுள்ள கொள்கை விதிகளுக்கும் மார்க்சிய—லெனினியத்துக்கும், பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்துக்கும் திரும்ப வருவீர்கள் என நம்புகிறோம். அதன்மூலம் வேறுபாடுகள் களையப்பட்டு, சர்வதேச கம்யூனிச இயக்கம், சோசலிச முகாம் ஆகியவற்றின் ஒற்றுமை பாதுகாக்கப்படும் ரசிய-சீன உறவுகளும் இக்கொள்கையின் அடிப்படையில் வலிமையாக்கப்படும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களோடு நாங்கள் தீவிரமாக வேறுபட்டிருந்தாலும் லெனின் மற்றும் ஸ்டாலினால் வழிகாட்டப்பட்டு வளர்க்கப்பட்ட ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பரந்துபட்ட உறுப்பினர்கள் மீதும், ரசிய மக்கள் மீதும் எங்களுக்கு முழுநம்பிக்கை இருக்கிறது. எப்பொழுதும்போல் சீனக் கம்யூனிஸ்டுகளும், சீனமக்களும், சீனாவுக்கும் ரசியாவுக்குமிடையிலான ஒற்றுமையை உறுதியுடன் பாதுகாக்கவும் நமது இருநாட்டு மக்களிடையே ஆழவேருன்றிய நட்பினை வளர்க்கவும் விரும்புகிறார்கள்.

உலக கம்யூனிஸ்டுகளே, மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில் ஒன்றுபடுங்கள்!

பாட்டாளி வர்க்கப் புரட்சியும் குருச்சேவின் திருத்தல்வாதமும்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது விமர்சனம்

'மக்கள் தினசரி', 'செங்கொடி' பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்கள் (மார்ச் 31, 1964)

இக்கட்டுரை 'சமாதான மாற்றம்' என்ற பிரபல விசயம் குறித்து விவாதிக்கிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் குருச்சேவ் இப்பிரச்சினையை எழுப்பியதால் இது பிரபலமாகி, அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. மார்க்சிய-லெனினியக் கருத்துக்களுக்கு எதிரான திருத்தல்வாதக் கருத்துக்கள் 22-வது காங்கிரசில் இது திட்டவடிவில் முழுமையாக முறைப்படுத்தப்பட்டுவிட்டது. 1963-ம் ஆண்டு ஜூலை 14-ந் தேதியிட்ட ரசிய கம்யூனிஸ்ட்கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதம் மீண்டும் ஒருமுறை இந்தபழைய பல்லவியை பாடியுள்ளது.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் வரலாற்றில் மார்க்சியத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் திருத்தல்வாதிகள் செய்யும் துரோகம் எப்பொழுதுமே பலாத்காரப் புரட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் எதிர்ப்பதன் மூலமும், முதலாளித்துவத்திலிருந்து

சோசலிசத்துக்கு அமைதியாக மாறமுடியும் என்று கூறுவதன் மூலமே தன்னை கூர்மையாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. அதுவேதான் குருச்சேவின் திருத்தல்வாதத்திலும் நடைபெற்றுள்ளது. இந்த விசயத்தில் குருச்சேவ், பிரௌடர் மற்றும் டிட்டோவின் சீடராகவும், பெர்ன்ஸ்டைன் மற்றும் காவுட்ஸ்கியின் சீடராகவும் செயல்படுகிறார்.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிறகு பிரௌடரின் திருத்தல்வாதம் டிட்டோவின் திருத்தல்வாதம், அமைப்பு சீர்திருத்த கோட்பாடு (Theory of structural reform) ஆகியவற்றின் தோற்றத்தையும் நாம் பார்த்து வருகிறோம். இந்த வகை திருத்தல்வாதங்கள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் தோன்றிய உள்ளூர் திருத்தல் வாதங்களாகும்.

ஆனால், குருச்சேவின் திருத்தல்வாதம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் தோன்றி வளர்ச்சி பெற்று, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக மாறி, சர்வதேச பாட்டாளி வர்க்க புரட்சிகர இலட்சியம் முழுவதின் வெற்றி அல்லது தோல்வியை நிர்ணயிக்கும் முக்கியத்துவம் பெற்றதாக இருக்கிறது.

இதன் காரணமாகவே, இக்கட்டுரையில் முன்னைவிட மேலும் தெளிவான வார்த்தைகளில் திருத்தல்வாதிகளுக்கு நாங்கள் பதிலளித்திருக்கிறோம்.

பெர்ன்ஸ்டைன் மற்றும் காவுட்ஸ்கியின் சீடர்

முதன் முதலாக, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் ''சமாதான மாற்றம்'' அதாவது ''பாராளுமன்றப்பாதையின் மூலம் சோசலிசத்திற்கு மாற்றம்''[1] என்ற வழியை குருச்சேவ் முன்வைத்தார். இது அக்டோபர் புரட்சிப் பாதைக்கு முற்றிலும் எதிரானது.

குருச்சேவ் மற்றும் அவரைப் போன்றவர்களால் முன்வைக்கப்படும் ''பாராளுமன்றபாதை'' குறித்து ஆய்வு செய்வோம்.

முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் கீழ் முதலாளித்துவ தேர்தல் விதிகளுக்கு உட்பட்டு பாட்டாளி வர்க்கம் பாராளுமன்றத்தில் நிலையான பெரும்பான்மை பெறமுடியும் என குருச்சேவ் கூறுகிறார். முதலாளித்துவ நாடுகளில் ''பாட்டாளி வர்க்கம் உழைக்கும் விவசாயிகள்,

---

1. என். எஸ். குருச்சேவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்கான அறிக்கை, பிப்ரவரி 1956.

புத்தி ஜீவிகள், தேசபக்த சக்திகள் ஆகியவர்களை அணிதிரட்டியும், முதலாளிகள், நிலப்பிரபுக்களுடன் சமரசம் செய்யும் கொள்கையை விட்டு விடத் திராணியற்ற சந்தர்ப்பவாதிகளை உறுதியோடு தூக்கியெறிந்தும், மக்களின் விருப்பத்துக்கு எதிராக நிற்கும் பிற்போக்கு சக்திகளை முறியடித்தும் பாராளுமன்றத்தில் ஒரு நிலையான பெரும்பான்மையை பெறக்கூடிய நிலை இருக்கிறது?[1] என்று கூறுகிறார் அவர்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பாட்டாளி வர்க்கம் பெற முடிந்தால், அதுவே அரசு அதிகாரத்தை கைப்பற்றியதும் முதலாளித்துவ அரசு இயந்திரத்தை நொறுக்கி எறிந்ததும் ஆகும் என குருச்சேவ் கருதுகிறார். ''தொழிலாளர் வர்க்கம் நாட்டில் ஒரு வலிமைமிக்க புரட்சிகர இயக்கத்தை உருவாக்குவதன் மூலம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பிடித்து அதனை ஒரு மக்கள் அதிகாரத்தின் கருவியாக மாற்றுவது என்பதன் பொருள், முதலாளி வர்க்கத்தின் இராணுவ அதிகார வர்க்க இயந்திரத்தை அழித்து அவ்விடத்தில் பாராளுமன்ற வடிவிலான ஒரு புதிய பாட்டாளி வர்க்க மக்கள் அரசை நிறுவுவது என்பதாகும்''[2] என்கிறார் குருச்சேவ்.

பாட்டாளி வர்க்கம் பாராளுமன்றத்தில் ஒரு நிலையான பெரும் பான்மையைப் பெறும்பட்சத்தில் அதுவே சமுதாயத்தை சோசலிச சமுதாயமாக மாற்ற வகை செய்யும் என்கிறார் குருச்சேவ். மேலும் அவர் பாராளுமன்றத்தில் ஒரு நிலையான பெரும்பான்மையைப் பெறுவது என்பதே ''பல முதலாளித்துவ மற்றும் முன்னாள் காலனிய நாடுகளில் அடிப்படை சமூக மாற்றத்தை உருவாக்குவதற்குத் தேவையான நிலைமைகளை பாட்டாளி வர்க்கத்திற்கு உருவாக்கும்''[3] என்று கூறு கிறார். மேலும் கூறுகிறார்: ''...இன்றைய நிலைமை பல முதலாளித்துவ நாடுகளில், பாட்டாளி வர்க்கம் பெரும்பான்மை மக்களைத் தனது தலைமையின் கீழ் ஒன்றுபடுத்தி உற்பத்தி சாதனங்களை மக்களின்

---

1 என். எஸ். குருச்சேவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்கான அறிக்கை, பிப்ரவரி 1956.

2 என். எஸ். குருச்சேவ் ''உலக கம்யூனிச இயக்கத்தின் புதியவெற்றி களுக்காக'' (உயர் கட்சிப் பள்ளியின் கட்சி அமைப்புகளின் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு, சமூக அறிவியல் கல்வி கழகம் மற்றும் மார்க்சிய, லெனினிய நிலையம், ரசிய கம்யூ னிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி ஜனவரி 6, 1961) வோர்ல்டு மார்க்சிஸ்ட் ரிவ்யூ எண் 1, 1961, பக்கம் 22.

3 என். எஸ். குருச்சேவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்கான அறிக்கை, பிப்ரவரி 1956.

கரங்களுக்கு மாற்றுவதை உத்தரவாதப்படுத்த ஒரு உண்மையான வாய்ப்பை அளித்திருக்கிறது.''[1]

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம், ''பல நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தை தூக்கியெறிவதற்கு முன்னரேயே முதலாளிகளை சாதாரண சீர்திருத்தங்களை விட மிகவும் மேம்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நிர்ப்பந்திக்க முடியும்''[2] என்கிறது. முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் கீழ் சில நாடுகளில், ''அடிப்படை உற்பத்திச் சாதனங்களை முதலாளிகளிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்வதற்கு முதலாளிகளே சம்மதிக்கக் கூடிய, முதலாளிகளும் அதை விரும்பக் கூடிய''[3] ஒரு நிலைமை தோன்றுவது சாத்தியம் என்று கூட திட்டம் கூறுகிறது.

விற்பனை செய்ய அலைந்து கொண்டிருக்கும் குருச்சேவின் சரக்கு ஒன்றும் புதியதல்ல, அது இரண்டாம் அகில சந்தர்ப்பவாதத்தின் ஒரு வெறும் மறு உற்பத்தியே, புத்துயிர் ஊட்டப்பட்ட பெர்ன்ஸ்டைனிசம் மற்றும் காவுட்ஸ்கியசமே.

சட்டபூர்வ பாராளுமன்றப் பாதையை முன்வைத்ததும், பலாத்காரப் புரட்சியையும் பழைய அரசு இயந்திரத்தை உடைத்தெறிவதையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் எதிர்த்ததும்தான் மார்க்சியத்துக்கு பெர்ன்ஸ்டைன் செய்த துரோகத்தின் விசேஷ அம்சங்களாகும்.

பெர்ன்ஸடைன், முதலாளித்துவம் சமாதான முறையில் ''சோசலிசமாக வளர்ச்சியடையும்'' எனக் கருதினார். நவீன முதலாளித்துவ சமுதாயத்தின் அரசியல் அமைப்பு ''அழிக்கப்படக்கூடாது மாறாக அது மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்''[4] என்றார். மேலும் ''இன்று நாம் வாக்களிப்பதன் மூலமும், ஆர்ப்பாட்டங்கள் மற்றும்

---

1. என். எஸ் குருச்சேவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்கான அறிக்கை, பிப்ரவரி 1956.
2. ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம்'' ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசின் ஆவனங்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1961, பக்கம் 482.
3. மேற்கூறிய நூல், பக்கம் 486.
4. எட்வர்ட் பெர்ன்ஸ்டைன், ''சோசலிசத்திற்கான முன் தேவைகளும், சமூக ஜனநாயக கட்சியின் கடமைகளும்'' ஜெர்மன் பதிப்பு, பெர்லின் 1923, பக்கம் 11.

இவை போன்ற நிர்ப்பந்தங்கள் மூலமும் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இரத்தப் புரட்சி தேவைப்பட்ட சீர்திருத்தங்களை கொண்டு வருகிறோம்''[1]

சோசலிசத்தைக் கொண்டு வருவதற்கு ஒரே வழி சட்டபூர்வ பாராளுமன்றப் பாதையே என்றார் அவர். பாட்டாளி வர்ககம் ''அனைத்தும் தழுவிய சமத்துவ வாக்குரிமையைப் பெற்றால், அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெற அடிப்படை நிபந்தனையான சமூகக் கொள்கை அடையப்பட்டுவிட்டதாக அர்த்தம்''[2] என்றார்.

அவர் மேலும் அழுத்தமாகக் கூறினார்: ''அதன் (உழைக்கும் வர்க்கத்தின்) நிர்ப்பந்தத்தை அதற்கு மேலும் தாக்குபிடிக்க முடியாமல், ஆட்சியாளர்களின் கோட்டை என்று சொல்லப்படுபவை கிட்டத்தட்ட தானாகவே இடிந்து விழும் அளவுக்கு அது எண்ணிக்கையில் பெருகி வலிமையடைந்து சமுதாய முழுமைக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறும் காலம் வரும்''[3]

லெனின் சொன்னார்: ''மார்க்சியத்தின் நேரடியான புரட்சிகரத் தன்மையை தவிர்த்துவிட்டு பிறவற்றை மட்டுமே மார்க்சியமாக பெர்ன்ஸ்டைன்வாதிகள் ஏற்றுக் கொண்டனர். இப்பொழுதும் ஏற்றுக் கொள்கின்றனர். பாராளுமன்றப் போராட்டம் ஒரு குறிப்பிட்ட வரலாற்று காலத்திற்கு மட்டுமே பொருந்தும் ஆயுதங்களில் ஒன்று என்று அவர்கள் கருதவில்லை. மாறாக 'பலாத்காரம்', 'கைப் பற்றல்', 'சர்வாதிகாரம்' போன்றவற்றை தேவையற்றதாகச் செய்து விடுகிற முக்கியமான ஒரே போராட்ட வடிவமாகப் பார்க்கின்றனர்''.[4]

பெர்ன்ஸ்டைனுக்கு சரியான வாரிசாக இருந்தார் காவுட்ஸ்கி. அவர் பெர்ன்ஸ்டைனைப் போலவே பாராளுமன்ற பாதையை தீவிரமாக பிரச்சாரம் செய்ததோடு, பலாத்காரப் புரட்சியையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் எதிர்த்தார். முதலாளித்துவ பாராளுமன்ற

---

1. எட்வர்ட் பெர்ன்ஸ்டைன், ''சோசலிசத்திற்கான முன்தேவைகளும், சமூக ஜனநாயக கட்சியின் கடமைகளும்'', ஜெர்மன் ஜெர்மன் பதிப்பு, பெர்லின் 1923, பக்கம் 197.
2. எட்வர்ட் பெர்ன்ஸ்டைன், ''சோசலிசம் என்றால் என்ன?'' பதிப்பு, பெர்லின் 1922, பக்கம் 28.
3. எட்வர்ட் பெர்ன்ஸ்டைன், ''அரசியல் பொதுவேலை நிறுத்தமும் ஜெர்மன் சமூக ஜனநாயக கட்சியின் அரசியல் நிலைமையும்'', ஜெர்மன் பதிப்பு, பெர்லின் 1905, பக்கம் 37.
4. வி. இ. லெனின், ''இராணுவப் படைகளின் வெற்றியும் தொழிலாளர் கட்சியின் பணிகளும்'' நூல்திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, அயல்மொழி பதிப்பகம், மாஸ்கோ 1962, தொகுதி 10, பக்கம் 249.

ஜனநாயக அமைப்பில் ''வர்க்க முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு ஆயுதந் தாங்கிய போராட்டத்தை மேற்கொள்ள இனியும் இடமில்லை''[1] என்றும் ''பலாத்காரத்தின் மூலம் அரசைத் தூக்கியெறிய வேண்டுமெனப் பிரச் சாரம் செய்வது கேலிக்குரியது''[2] என்றும் கூறினார். மேலும் அவர் ''ஒரு பொறுமையற்ற மருத்துவ தாதி, கர்ப்பமாயுள்ள பெண்ணை ஒன்பதாவது மாதத்திற்கு பதில் அய்ந்தாவது மாதத்திலேயே பிரசவிக்க செய்வதற்கு பலாத்காரத்தை பயன்படுத்தியது''[3] போன்று லெனினும் போல்ஷ்விக்குகளும் செயல்படுவதாக தாக்கினார்.

காவுட்ஸ்கி பாராளுமன்ற முடக்குவாதத்தால் மீட்க முடியாதவாறு பீடிக்கப்பட்டிருந்தார். அவருடைய மிகப் பிரபலமான கூற்று:

''இதுவரை இருந்தது போலவே இப்போதும் நமது அரசியல் போராட்டத்தின் நோக்கம், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று, பாராளுமன்றத்தை அரசாங்கத்தின் எஜமானனாக மாற்றி, அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகத்தான் இருந்து வருகிறது.''[4]

மேலும் அவர் சொன்னார், ''பாராளுமன்றக் குடியரசு-முடியரசைத் தலைமையாகக் கொண்டு அமைந்த ஆங்கிலேய வடிவிலானது அல்லது முடியரசு இல்லாதது-இதுதான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் சோசலிச சமுதாயம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு அடிப்படை என்று நான் கருதுகிறேன். இந்த குடியரசுதான் நாம் பாடுபட்டு உருவாக்க வேண்டிய எதிர்கால அரசு.''[5]

காவுட்ஸ்கியின் இந்த நகைப்பிற்குரிய அறிக்கைகளை கடுமையாக விமர்சித்தார் லெனின். காவுட்ஸ்கியை கண்டிக்கும்போது லெனின் பிரகடனப்படுத்தியதாவது: ''கயவர்களும் முட்டாள்களும்தான் முதலாளித்துவ நுகத்தடியின் கீழ், கூலி அடிமை என்ற நுகத்தடியின் கீழ் நடத் தப்படும் தேர்தல்களில் பாட்டாளி வர்க்கம் பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வரும் என்று நினைக்க முடியும். இது ஒரு மிகப்பெரிய

1. கார்ல் காவுட்ஸ்கி, வரலாற்றை பொருள் முதல்வாத நோக்கில் ஆய்தல், ஜெர்மன் பதிப்பு, பெர்லின் 1927, பக்கம் 431-32.
2. கார்ல் காவுட்ஸ்கி, 'சமூக ஜனநாயகமும் கம்யூனிசமும்', ரேண்ட் பள்ளி அச்சகம், நியூயார்க், 1946, பக்கம் 117.
3. கார்ல் காவுட்ஸ்கி, பாட்டாளி வர்க்க புரட்சியும் அதன் திட்டமும், ஜெர்மன் பதிப்பு, பெர்லின் 1922, பக்கம் 90.
4. கார்ல் காவுட்ஸ்கி, ''புதிய போர்த் தந்திரம்'' தி நியூ ஜெய்ட், எண் 46, 1912.
5. கார்ல் காவுட்ஸ்கி, பிரான்ஸ் மேரிங்குக்கு எழுதிய கடிதம், ஜூலை 15, 1893.

ஏமாற்று அல்லது முட்டாள்தனமாகும். இது வர்க்கப் போராட்டத்துக்கும் புரட்சிக்கும் பதில் பழைய அமைப்பின் கீழ் பழைய அதிகாரத்துக்கு ஒட்டுப்போட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று போதிக்கிறது.'' 1

காவுட்ஸ்கியின் பாராளுமன்ற பாதை என்பது ''கலப்படமற்ற மிக மிக மோசமான சந்தர்ப்பவாதம். இது வாயளவில் புரட்சியை ஏற்றுக் கொண்டு செயலளவில் அதனை மறுப்பதாகும்'' 2 என்று கூர்மையாக லெனின் விமர்சித்தார். மேலும் அவர் சொன்னார்: ''புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்ற கருத்துக்கு, ஒடுக்குபவர்களுக்கு எதிராக ஒடுக்கப்படும் வர்க்கத்தின் புரட்சிகர பலாத்காரம் தேவையற்றது என விளக்கவுரை எழுதிய காவுட்ஸ்கி மனம்போனபடி மார்க்சின் கருத்துக்களை புரட்டுவதில் உலகிலேயே முதலிடம் பெறுகிறார்.'' 3

இங்கு நாங்கள், குருச்சேவ், காவுட்ஸ்கி, பெர்ன்ஸ்டைன் ஆகியோரின் மேற்கோள்களையும் இந்த கனவான்கள் பற்றி லெனின் செய்த விமர்சனங்களையும் கொஞ்சம் அதிகமாகவே வெளியிட்டு குருச்சேவின் திருத்தல்வாதம் என்பது அப்பட்டமான நவீன பெர்ன்ஸ்டைனிசம் மற்றும் காவுட்ஸ்கியவாதம்தான் என்றுகாட்டியுள்ளோம். பெர்ன்ஸ்டைன் மற்றும் காவுட்ஸ்கியைப் போன்று குருச்சேவ், மார்க்சியத்திற்கு இழைத்த துரோகம் புரட்சிகர வன்முறையை எதிர்ப்பதில் ''புரட்சிகர வன்முறையை துடைத்தெறிவது'' என்பதற்கான அவருடைய செயலில் மிகவும் கூர்மையாக வெளிப்படுகிறது. இந்த விதத்தில் பெர்ன்ஸ்டைனும், காவுட்ஸ்கியும் குருச்சேவினால் தோற்கடிக்கப்பட்டு விட்டனர். பெர்ன்ஸ்டைன் மற்றும் காவுட்ஸ்கியின் தகுதி வாய்ந்த சீடரான குருச்சேவ் அவருடைய ஆசிரியர்களையும் மிஞ்சி விட்டார்.

பலாத்காரப் புரட்சி பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனைத்தும் தழுவிய விதிகளில் ஒன்று

பலாத்காரப் புரட்சி, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனைத்துத்

1. வி. இ. லெனின் ''இத்தாலியன், பிரெஞ்சு, ஜெர்மன் கம்யூனிஸ்டுகளுக்கு வாழ்த்துக்கள்'', நூல் திரட்டு, ரசியப் பதிப்பு மாஸ்கோ 1950, தொகுதி 30, பக்கம் 40.
2. வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 1, பக்கம் 323.
3. வி. இ. லெனின், ''பாட்டாளி வர்க்க புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும்'', நூல் திரட்டு, ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப., மாஸ்கோ 1952, தொகுதி 2 பகுதி 2, பக்கம் 47, 48.

தழுவிய விதிகளில் ஒன்று என்பதையும், பழைய அரசு நிறுவனங்களை ஒழித்துக்கட்டுவதன் அவசியத்தையும், முதலாளித்துவ சர்வாதிகாரத்தை தூக்கியெறிந்து விட்டு அவ்விடத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது அவசியம் என்பதையும் ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பதுதான் மார்க்சியவாதிகளுக்கும் எல்லா வகைப்பட்ட சந்தர்ப்பவாதி கள் மற்றும் திருத்தல்வாதிகளுக்கும், பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர் களுக்கும் அனைத்து ஓடுகாலிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு என் பதை தொழிலாளர் வர்க்க இயக்க வரலாறு முழுவதும் நமக்குப் போதிக் கிறது.

மார்க்சிய-லெனினிய அடிப்படை போதனைகளின்படி, ஒவ்வொரு புரட்சியிலும் உயிர்நாடியான பிரச்சினை அரசு அதிகாரம் குறித்த பிரச் சினைதான். பாட்டாளி வர்க்கப் புரட்சியில் உயிர்நாடியான பிரச்சினை அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் முதலாளித்துவ அரசு அதிகார நிறுவனங்களை பலாத்காரத்தின் மூலம் ஒழித்துக் கட்டி பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதும் முதலாளித்துவ அரசை அகற்றி அவ்விடத் தில் பாட்டாளி வர்க்க அரசை நிறுவுவதுமேயாகும்.

மார்க்சியம் எப்பொழுதுமே பலாத்காரப் புரட்சியின் தவிர்க்க முடி யாமை குறித்து பிரகடனப்படுத்தியுள்ளது. பலாத்காரப்புரட்சி சோசலிச சமுதாயத்தின் மருத்துவத் தாதி எனவும், முதலாளித்துவ சர்வாதி காரத்தை தூக்கியெறிந்து அவ்விடத்தில் பாட்டாளிவர்க்க சர்வாதி காரத்தை கொண்டு வருவதற்கான ஒரே பாதை எனவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனைத்தும் தழுவிய விதி எனவும் மார்க்சியம் போதிக்கிறது.

அரசு என்பதே ஒரு பலாத்கார அமைப்பு என்று மார்க்சியம் நமக்கு போதிக்கிறது. அரசு இயந்திரத்தின் முக்கிய அங்கம் அதன் இராணுவ மும் போலீசும்தான். எல்லா ஆளும் வர்க்கங்களும் அதன் ஆட்சியை பாது காக்க பலாத்காரத்தைத்தான் சார்ந்திருக்கின்றன என்பதை வரலாறு காட்டுகிறது.

பாட்டாளிவர்க்கம் சமாதான வழிகளில் அதிகாரத்தை அடையத் தான் விரும்புகிறது. ஆனால் பிற்போக்குவாதிகள் தாமாகவே, அரசு அதிகாரத்தை துறக்கமாட்டார்கள் என்பதையும், அவர்கள்தான் எப்போதும் முதலில் பலாத்காரத்தை பயன்படுத்தி புரட்சிகர வெகுஜன இயக்கத்தை அடக்க முயல்கிறார்கள் என்பதையும், அதன்மூலம் உள் நாட்டுப் போரை தூண்டிவிடுகிறார்கள் என்பதையும் இவற்றின் மூலம் ஆயுதந்தாங்கிய போராட்டத்தை நிகழ்ச்சிநிரலுக்கு கொண்டு வருகிறார்

கள் என்பதையும் எண்ணற்ற பல வரலாற்றுச் சான்றுகள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

''உள்நாட்டுப் போர் நடைபெறாமல் எந்தப் பெரிய புரட்சியும் வரலாற்றில் இதுவரை நடைபெற்றதில்லை. மேலும் உள்நாட்டுப் போர் இல்லாமல் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறுவது பற்றி இதுவரை எந்த ஒரு உண்மையான மார்க்சியவாதியும் கற்பனை செய்துகூட பார்த்ததில்லை'' [1] என்று லெனின் கூறினார்.

முதலாளித்துவ புரட்சிகளையும் சேர்த்துத்தான் லெனின் வரலாற்றில் நடந்த மிகப்பெரிய புரட்சிகள் என்று குறிப்பிடுகிறார். முதலாளித்துவ புரட்சி என்பது ஒரு சுரண்டும் வர்க்கத்தை இன்னொரு சுரண்டும் வர்க்கம் தூக்கியெறிவதுதான், இருப்பினும் இதை ஒரு உள்நாட்டு போர் இன்றி சாதிக்கமுடியாது. எல்லாச் சுரண்டும் வர்க்கங்களையும், சுரண்டும் முறைகளையும் தூக்கியெறிவதற்கான புரட்சியான, பாட்டாளி வர்க்கப் புரட்சியில் இது (உள்நாட்டுப்போர்) கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்தது.

பலாத்காரப் புரட்சிதான் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனைத்தும் தழுவிய விதி என்பது பற்றி கூறவந்த லெனின், ''முதலாளித்துவத் துக்கும், சோசலிசத்துக்கும் இடையே 'பிரசவவேதனை'மிக்க ஒரு நீண்டகாலம் இருக்கிறது. பலாத்காரம் எப்போதும் பழைய சமுதாயத் தின் மருந்துவ தாதியாக இருக்கிறது'' [2] என்றார். இந்த ''முதலாளித்துவ அரசானது ''உலர்ந்து உதிர்ந்து'' அவ்விடத்தில் பாட்டாளி வர்க்க அரசு (பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்) வந்துவிடும் என்பது நடக்காது. ஆனால் ஒருபொது விதிப்படி அது பலாத்காரத்தின்மூலம் மட்டுமே தூக்கி எறியப்படமுடியும்'' [3] மேலும் ''இந்த பலாத்காரப் புரட்சி குறித்த இக் கண்ணோட்டத்தை பரந்த பொதுமக்களின் மனதில் திட்டமிட்டு பதிய வைக்கவேண்டியது அவசியமாகும். சுருங்கச்சொன்னால் பலாத்காரப் புரட்சி பற்றிய இந்த கண்ணோட்டம்தான் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் அனைத்து போதனைகளின் ஆணிவேராக இருக்கிறது'' [4] என்று லெனின் கூறினார்.

---

1. *வி.இ.லெனின், ''தீர்க்கத் தரிசன வார்த்தைகள்'', நூல்திரட்டு, ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1950, தொகுதி 27, பக்கம் 457.*
2. *வி. இ. லெனின், ''பழையதின் அழிவு கண்டு நடுங்குபவர்களும் புதியதிற்காக போராடுபவர்களும்'', நூல் திரட்டு.ரசியப்பதிப்பு, மாஸ்கோ 1949, தொகுதி 26, பக்கம் 362.*
3. *வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்''.தேர்வு நூல்கள், ஆங்கில பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 1, பக்கம் 219.*
4. *மேற்கண்ட நூல், பக்கம் 220.*

''மூலதனத்தால் ஆளப்படும் எல்லா நாடுகளிலும் அவை சோச லிசத்தை நோக்கி முன்னேற பாட்டாளிகளின் பலாத்காரப் புரட்சியும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் தவிர்க்க முடியாத, இன்றியமையாத நிபந்தனையாகும்'' [1] என்று ஸ்டாலின் கூட சொன்னார்.

முதலாளித்துவ அமைப்பை, பலாத்காரப் புரட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமுமின்றி அடியோடு மாற்றியமைத்து விடமுடியுமா? ஸ்டாலின் பதில் கூறினார் :

''கண்டிப்பாக முடியாது என்பது தெள்ளத் தெளிவானது. அது போன்ற புரட்சியை சமாதான வழியில், அதுவும் முதலாளித்துவ ஆட்சிக்கென்றே ஏற்படுத்தப்பட்ட முதலாளித்துவ ஜனநாயக கூட் டமைப்பிற்கு உட்பட்டு நடத்த முடியும் என ஒருவர் நினைத்தால் ஒன்று அவர் பைத்தியக்காரராய், சாதாரண விசயங்களைக்கூட புரிந்து கொள்ளாத மனிதராக இருக்க வேண்டும் அல்லது பாட்டாளி வர்க்கப் புரட்சியை ஒட்டு மொத்தமாகவும் பகிரங்கமாகவும் கைவிட்டவராக இருக்க வேண்டும்.'' [2]

பலாத்காரப் புரட்சி பற்றிய மார்க்சிய-லெனினிய கோட்பாட்டின் அடிப்படையிலும், பாட்டாளி வர்க்கப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்கத் தால் தலைமை தாங்கப்பட்ட மக்கள் ஜனநாயகப் புரட்சி ஆகியவற்றின் புதிய அனுபவத்தின் அடிப்படையிலும தோழர் மாசேதுங் ''துப்பாக்கிக் குழலிலிருந்தே அரசியல் அதிகாரம் பிறக்கிறது'' என்ற புகழ்பெற்ற வாசகத்தை முன் வைத்தார்.

தோழர் மாசேதுங் மேலும் கூறினார்: ''புரட்சியும், புரட்சிகர யுத்தங்களும் வர்க்க சமுதாயத்தில் தவிர்க்க முடியாதவை, அவையின்றி சமுதாய வளர்ச்சியில் பாய்ச்சலை ஏற்படுத்துவதும், பிற்போக்கு ஆளும் வர்க்கங்களை தூக்கியெறிவதும் சாத்தியமில்லை. எனவே, மக்கள் அரசியலதிகாரத்தை வெல்வதும் சாத்தியமில்லை.'' [3]

---

1. ஜே.வி.ஸ்டாலின், ''நமது கட்சியில் சமூக ஜனநாயக விலகல்கள் குறித்த அறிக்கை பற்றிய விவாதத்துக்கு தரப்பட்ட பதில்கள்'', ஆங்கிலப்பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ, 1954, தொகுதி 8, பக்கம் 322.
2. ஜே. வி. ஸ்டாலின், ''லெனினியம் பற்றிய கேள்விகள் குறித்து'', நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1954, தொகுதி 8, பக்கம் 25.
3. மாசேதுங், ''முரண்பாடுகள் பற்றி'', தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், பீகிங், தொகுதி 1, பக்கம் 344.

அவர் கூறினார் :

''ஆயுதந் தாங்கிய படையின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதும், பிரச்சினைகளுக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண்பதும், புரட்சியின் மையக் கடமையாகவும், மிக உயர்ந்த வடிவமாகவும் இருக்கிறது. இந்த மார்க்சிய - லெனினிய கொள்கை விதி சீனாவுக்கும் மற்ற எல்லா நாடுகளுக்கும் பொருந்தும் உண்மையாகும்.'' [1]

மேலும் அவர் கூறினார்:

''ஏகாதிபத்திய சகாப்தத்தில், தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் ஆயுதந்தாங்கிய முதலாளிகளையும், நிலப்பிரபுக்களையும் துப்பாக்கியின் வலிமையைக் கொண்டு மட்டுமே எதிர்த்துப் போராடி வெற்றி பெறமுடியும் என்று வர்க்கப் போராட்ட அனுபவம் நமக்கு போதிக்கிறது. ஆகவே இந்த அர்த்தத்தில் துப்பாக்கியைக் கொண்டுதான் உலகத்தை அடியோடு மாற்றி அமைக்க முடியும் என்று நாம் கூறமுடியும்.'' [2]

தொகுத்துச் சொல்வதானால், பலாத்காரப்புரட்சி என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனைத்தும் தழுவிய விதிகளில் ஒன்று. மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படை விதிகளில் ஒன்று. மிக முக்கியமான இந்த விசயத்தில் மார்க்சிய-லெனினியத்துக்கு குருச்சேவ் துரோகம் விளைவித்துள்ளார்.

குருச்சேவ் திருத்தல்வாதத்தை எதிர்த்து எமது போராட்டம்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் குருச்சேவ் ''பாராளுமன்ற பாதையை'' முன்வைத்தபோதே சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, இது முழுமையான தவறென்றும், மார்க்சிய - லெனினியத்தின் அடிப்படை முரண்பாடுகளையே மீறுவதென்றும் முற்றிலும் ஒத்துக் கொள்ள முடியாதது என்றும் கருதியது.

---

1. *மாசேதுங் ''போர், யுத்த தந்திரம் குறித்த பிரச்சினைகள்'' தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ படைப்புகள், ஆங்கிலப்பதிப்பு, அயல் மொழிப் பதிப்பகம், பீகிங் 1963, பக்கம் 267.*
2. *மேற்கண்ட நூல், பக்கம் 273.*

குருச்சேவின் திருத்தல்வாதம் இன்னும் ஆரம்ப நிலையில் இருந்தது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் இன்னும் பகிரங்க வாதப் பிரதிவாதங்களை தூண்டி விடவில்லை. எனவே நாங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு குருச்சேவின் ''பாராளுமன்றப் பாதை''யின் தவறை பகிரங்கமாக அம்பலப்படுத்துவதையும், விமர்சனம் செய்வதையும் தவிர்த்தோம். ஆனால் அவருடைய தவறான கருத்துக்களுக்கு எதிரான, சரியான மார்க்சிய—லெனினிய கருத்துக்களை ஆக்கபூர்வ வடிவில் எங்கள் கட்டுரைகளிலும் அறிக்கைகளிலும் வெளியிட்டோம். அதே சமயம் அதை எதிர்த்து நாங்கள் முறையான, தேவையான போராட்டத்தை கட்சிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளிலும், சகோதரக் கட்சிகளுக்கிடையிலான கூட்டங்களிலும் நடத்தினோம்.

1956 செப்டம்பரில் நடந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது தேசிய காங்கிரசில் எமது மத்திய கமிட்டியின் அரசியல் அறிக்கையில் நாங்கள் சீனப் புரட்சியின் அனுபவங்களைத் தொகுத்து மிகத் தெளிவாகக் கூறினோம்.

நமது கட்சி அமைதியான மாற்றத்துக்காக பணியாற்றினாலும், அது தன் தற்காப்பையும், மக்களின் ஆயுதங்களையும் கைவிட்டுவிட நாம் அனுமதிக்கவில்லை...

பிற்போக்குவாதிகளைப் போல மக்கள் போரை விரும்புவதில்லை... என்றாலும் மக்கள் ஆயுதத்தை எடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டபோது அவர்கள் அவ்வாறு செய்தது முற்றிலும் நியாயமானதே. மக்கள் ஆயுதம் எடுத்ததை எதிர்த்திருந்தாலும், தாக்கும் எதிரிக்கு பணிந்து போகும்படி அவர்களை கேட்டிருந்தாலும் அது சந்தர்ப்பவாத வழியை மேற்கொண்டதாக இருந்திருக்கும். இங்கு புரட்சிகர வழியைப் பின்பற்றுவதா அல்லது சந்தர்ப்பவாத வழியை பின்பற்றுவதா என்ற கேள்வி, நிலைமை புரட்சிக்கு சாதகமாக முதிர்ந்து விட்ட நிலையில் நமது 60 கோடி மக்களும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றவேண்டுமா, வேண்டாமா என்ற பிரதான கேள்வியாக மாறி விட்டது. இதில் நமது கட்சி புரட்சிகர வழியைப் பின்பற்றியது. அதன் விளைவாக நாம் இன்றைய சீன மக்கள் குடியரசைப் பெற்றிருக்கிறோம்.

இந்த பிரச்சினையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரசின் மார்க்சிய—லெனினிய கருத்தோட்டம், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசின் திரிபுவாத கருத்தோட்டத்துக்கு எதிரானது.

1956 டிசம்பரில் வெளியிடப்பட்ட ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவம் பற்றி மேலும்'' என்ற கட்டுரையில்

அக்டோபர் புரட்சியின் பாதையை ஆக்கபூர்வமான வழியில் விளக்கியிருந்தோம். இவ்வாறு உண்மையில் அக்டோபர் புரட்சிப் பாதைக்கு எதிராக குருச்சேவ் முன்வைத்த சொல்லிக்கொள்ளப்படும் பாராளுமன்றப் பாதையை விமர்சித்திருந்தோம்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர்களோடு நடந்த பலதரப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தோழர்கள் குருச்சேவின் தவறான கருத்துக்கள் குறித்து கடுமையாக விமர்சனம் செய்தனர். நாங்கள் உண்மையாகவே குருச்சேவ் தனது தவறுகளைத் திருத்திக்கொள்வார் என எதிர்பார்த்தோம்.

1957-ல் நடந்த கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தின்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் குழு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகள் குழுவோடு முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறுவதற்கான பிரச்சினை குறித்து கூர்மையான விவாதத்தை நடத்தியது.

மாஸ்கோ கூட்டத்திற்கான தயாரிப்புகளின்போது ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி முன்மொழிந்த முதலாவது நகல் அறிக்கையில் சமாதான மாற்றம் குறித்து மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது, சமாதானமற்ற வழிகளில் மாற்றத்திற்கான சாத்தியப்பாடு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதுபோன்றே பாராளுமன்ற பாதை மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது, பிற போராட்ட வழிகள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதேசமயம் ''கம்யூனிஸ்டுகள், சோசலிஸ்டுகளின் ஒருமித்த செய்கைகளின்'' மூலம் பாராளுமன்ற பாதையிலே அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அதிக நம்பிக்கையை வெளியிட்டிருந்தது. மார்க்சிய—லெனினியத்திலிருந்து விலகிச்செல்லும் இக் கருத்துக்கள் அனைத்து கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் செயல்திட்ட ஆவணத்தில் எழுதப்பட்டிருந்ததை இயல்பாகவே சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகள் குழு இதை விமர்சனம் செய்தவுடன், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, பிரகடனத்துக்காக இரண்டாவது நகலை முன்வைத்தது. சமாதானமற்ற முறையில் மாற்றம் குறித்த சொற்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும், சமாதான முறையில் மாற்றம் பற்றிய நகலில் இருந்த பகுதிகள், 20-வது காங்கிரசில் குருச்சேவால் முன்வைக்கப்பட்ட திருத்தல்வாத கருத்துக்களையே தொடர்ந்து பிரதிபலித்தன.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக்குழு, இந்தத் தவறான கருத்துக்கள் குறித்து சம்மதமின்மையை தெளிவாக தெரிவித்தது. 1957 நவம்பர் 10-ல் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறுவதற்கான எங்கள் கருத்துக்களை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு முறையாக விளக்கினோம். எழுத்து மூலமாகவும் ஒரு விளக்க குறிப்பை அளித்தோம். எங்கள் எழுத்து மூலமான விளக்கக் குறிப்பின் பகுதிகள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளன.

''சமாதான முறை மாற்றத்துக்கான விருப்பம் குறித்துப் பேசுவது என்பது போர்த்தந்திர அடிப்படையில் சாதகமானதே. ஆனால் சமாதான முறை மாற்றத்திற்கான சாத்தியம் குறித்து அளவுக்கதிகமாக வலியுறுத்துவது பொருத்தமற்றது. எதிர்ப்புரட்சி தாக்குதல்களை முறியடிப்பதற்கு எப்போதும் தயாராக இருக்கவேண்டியது அவசியம் ஆகும். தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுகிற புரட்சியின் மிக முக்கியமான இறுதிக் கட்டத்திலும் மக்களின் புரட்சியை ஒடுக்க முதலாளி வர்க்கம் ஆயுத படைகளை பயன்படுத்தும்போதும் (பொதுவாகச் சொன்னால் முதலாளி வர்க்கம் அப்படிச்செய்வது என்பது தவிர்க்க முடியாதது)ஆயுத ப்லாத்காரத்தின் முலமே முதலாளி வர்க்கத்தைத் தூக்கி எறிவதற்கு தயாரிப்புடன் இருக்கவேண்டும்.

பாராளுமன்ற வடிவிலான போராட்டம் முழுமையாக பயன்படுத்தப் பட வேண்டும். ஆனால் அதன் பங்கு வரையறைக்குட்பட்டது. மிக முக்கியமான விசயம் என்னவெனில் புரட்சிகர வலிமையை ஒன்று குவிப் பதற்கான கடினமான பணிகளைத் தொடர வேண்டும் என்பதே. சமா தான மாற்றம் என்பது பாராளுமன்றப் பொரும்பான்மை மூலம் மாற்றம் என்று விளக்கப்படக்கூடாது. முக்கியமான பிரச்சினை என்னவெனில் அரசு இயந்திரம் பற்றியது, அதாவது பழைய அரசு இயந்திரத்தை (முதன்மையாக ஆயுதப் படைகள்) நொறுக்கி எறிவது மற்றும் புதிய அரசு இயந்திரத்தை (முதன்மையாக ஆயுதப்படைகள்) நிறுவுவது பற்றியது ஆகும்.

சமூக ஜனநாயகக் கட்சிகள் சோசலிசத்துக்கான கட்சிகளல்ல. சில இடதுசாரி பிரிவுகளைத் தவிர்த்து, அவை முதலாளித்துவ அரசியல் கட்சி களின் பல்வேறு ரகங்களே. சோசலிசப் புரட்சி பற்றிய விசயத்தில் நமது நிலைப்பாடு, சமூக ஜனநாயகக் கட்சிகளின் நிலைப்பாட்டிலிருந்து அடிப் படையிலேயே வேறுபட்டது. இந்த தெளிவான வேறுபாட்டை காணாமல் விட்டுவிடக்கூடாது.

எமது இக்கருத்துக்கள் மார்க்சிய - லெனினியத்துக்கு முற்றிலும் பொருந்தி வரக்கூடியவை. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் பிரதிநிதிகள் குழுத் தோழர்களால் இக்கருத்துக்களுக்கு எதிராக வாதாட முடியவில்லை. ஆனால் அவர்கள், நகல் பிரகடனத்தில் இப்பிரச்சினை பற்றிச் சொல்லப்படும் கருத்து, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் இது குறித்துச் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களுடன் கொஞ்சமாவது ஒத்திருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் அவர்களது உள்நாட்டு தேவைகளுக்காக கொஞ்சம் சலுகைகள் காட்டுமாறு எம்மைக் கேட்டுக் கொண்டனர்.

நாங்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் தவறான கருத்துக்களை ஆட்சேபித்து எங்கள் சொந்தக் கருத்துக்களை எழுத்து மூலம் முன் வைத்தோம். அதன் காரணமாக எதிரிக்கு எதிரான பொதுப் போராட்டத்தை கருத்தில் கொண்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிக்குழு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களால் திரும்பத் திரும்பத் வலியுறுத்தப்பட்ட விருப்பங்களுக்கு ஏற்ப அப்பிரகடனத்தில் ஒரு சில இடங்களில் மட்டும் மாற்றங்களை செய்ய ஒப்புக் கொண்டு ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் அறிக்கையை அடிப்படையாக ஏற்றுக் கொள்ள சம்மதித்தோம்.

இவ்விவாதங்களின் மூலம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து அவற்றைச் சரி செய்து கொள்வார்கள் என நாங்கள் நம்பினோம். எங்கள் எதிர்பார்ப்புக்கு மாறாக ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

1960-ல் நடைபெற்ற தோழமைக் கட்சிகளின் கூட்டத்தில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிக்குழு மீண்டும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களோடு, முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறுவதற்கான வழி வகைகள் குறித்து மீண்டும் மீண்டும் கடுமையான விவாதம் நடத்தி, குருச்சேவின் திருத்தல்வாதக் கருத்துக்களை முழுமையாக அம்பலப்படுத்தி விமர்சனம் செய்தது. இந்த கூட்டத்தின் போது சீனக் குழுவும் ரசியக் குழுவும் அவரவர் நிலையில் நின்றதால் எந்த உடன்பாட்டிற்கும் வரமுடியவில்லை.

ஒரு பொது அறிக்கையை இக் கூட்டத்தில் உருவாக்க வேண்டும் என்ற தோழமைக் கட்சிகளின் பொது விருப்பத்தின்படியும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் தேவைகளை கருத்தில் கொண்டும் இந்தத் தடவையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிக்குழு இப்பிரச்சினையில் இறுதியாக சில சலுகைகளை மீண்டும் வழங்கி 1957-ம் ஆண்டு

பிரகடனத்திலுள்ள இது தொடர்பான பகுதியை 1960-ம் ஆண்டு அறிக்கையில் அப்படியே எடுத்து எழுத சம்மதித்தது. அதே சமயம் சமாதான மாற்றம் குறித்து 1957 நவம்பர் 10-ல் முன்வைக்கப்பட்ட சுருக்கமான எங்கள் கருத்துக்களை கூட்டத்தில் வினியோகித்தது மட்டுமல்லாமல் இதுவே ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக்கு நாங்கள் கொடுக்கும் கடைசி சலுகை என்பதையும், மீண்டும் இதுபோன்ற சலுகைகளை வழங்க மாட்டோம் என்பதையும் தெளிவுபடுத்தினோம்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு அதுபோன்ற சலுகைகளை கொடுத்தது தவறு என தோழர்கள் இப்போது விமர்சித்தால் இந்த விமர்சனத்தை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

பிரகடனத்திலும் அறிக்கையிலும் காணப்படும் சமாதான மாற்றம் குறித்த கருத்துக்கள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி நகல் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டது. மேலும் பல இடங்களில் 20-வது காங்கிரசின் கருத்துக்களை அப்படியே இணைத்துக் கொண்டது, எனவே ஆங்காங்கே குறிப்பிடத்தக்க அளவுக்கு நாங்கள் ஒட்டுவேலையை செய்திருந்தபோதிலும் அவை ஒட்டு மொத்தத்தில் பெருமளவுக்கு தவறான, பலவீனமான கருத்தைத்தான் வெளிப்படுத்துகின்றன. ஆளும் வர்க்கம் தானாகவே அதிகாரத்தை துறக்காது என்பதைச் சுட்டிக்காட்டும் அதே சமயத்தில் இந்த இரண்டு ஆவணங்களும் உள்நாட்டுப் போரின்றி பல முதலாளித்துவ நாடுகளில் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என்று கூறுகிறது. பாராளுமன்றமல்லாத பாதையின் மூலம் வெகுஜனப் போராட்டங்களை நடத்த வேண்டும் என்று கூறும் அதே சமயம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதன் மூலம் உழைக்கும் மக்களுக்கு சேவைசெய்யும் கருவியாக அதனை மாற்ற முடியும் என்றும் சொல்லப்படுகிறது. சமாதானமற்ற மாற்றத்தைப் பற்றிக் குறிப்பிடும் அதே வேளையில் பலாத்காரப் புரட்சிதான் உலகு தழுவிய விதி என்று அது வலியுறுத்த தவறிவிட்டது. பிரகடனத்திலும் அறிக்கையிலும் உள்ள இது போன்ற தவறுகளையும் பலவீனங்களையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் குருச்சேவின் திருத்தல் வாதத்தை கூவி விற்று வருகின்றனர்.

1960-ம் ஆண்டு அறிக்கை மற்றும் 1957-ம் ஆண்டு பிரகடனம் ஆகியவற்றிலுள்ள முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறுவது பற்றிய கருத்துக்கள் குறித்த வேறுபாடுகளை தொடர்ச்சியாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி வந்துள்ளது என்பதை அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் எங்கள் கருத்துக்களை ஒரு போதும் மறைத்து வைக்கவில்லை. சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்தின் நலன் கருதியும், சகோதரக் கட்சிகளின் திட்ட

அடிப்படையிலான இந்த ஆவணங்களை திருத்தல்வாதிகள் தவறாக பயன்படுத்திக் கொள்வதைத் தடுக்கவும் கம்யூனிஸ்ட் மற்றும் பிற தொழிலாளர் கட்சிகளின் கூட்டு ஆலோசனைகளின் மூலம் புரட்சிகர மார்க்சிய-லெனினிய கொள்கை வழிகளுக்கு பொருந்துவதாக இப்பிரகடனத்திலும் அறிக்கையிலும் தேவையான மாற்றத்தைக் கொண்டு வருவது அவசியமாகும்.

இந்தப் பிரச்சினையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களைப் பற்றி வாசகர்கள் முழுமையாக தெரிந்து கொள்வதற்காக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பிரதிநிதிக்குழு 1957 நவம்பர் 10-ல் முன்வைத்த, சமாதான மாற்றம் குறித்த பிரச்சினையின் மீதான சுருக்கமான கருத்தின் முழு வாசகத்தையும் இந்த கட்டுரையில் பிற்சேர்க்கையாக இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.[1]

குருச்சேவின் திருத்தல்வாதத்தை எதிர்த்து மார்க்சிய—லெனினிய கட்சிகளும், உலக மார்க்சிய-லெனினியவாதிகளும் கடந்த எட்டு வருடங்களாக நடத்தும் போராட்டத்தில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. மேலும் மேலும் அதிக மக்கள் குருச்சேவின் திருத்தல் வாதத்தின் மெய்யான பண்பை புரிந்து கொண்டு வருகின்றனர். இருந்த போதிலும் இன்னும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்கள் முட்டாள்தனமான கருத்துக்களை சிலேடைப் பேச்சுக்களாலும், தந்திர நடத்தைகளாலும் மறைத்து அவற்றை எல்லா சாத்தியமான வழியிலும் பரப்ப முயன்று வருகின்றனர்.

எனவே 'சமாதான மாற்றம்' பற்றிய தவறான வாதங்களை மறுப்பது எங்களுக்கு இன்னும் அவசியமானதாக உள்ளது.

குதர்க்கவாதம் வரலாற்றை மாற்றமுடியாது

மார்க்சிய-லெனினியத்திற்குத் தாங்கள் செய்த துரோகத்தை மூடி மறைக்கவும் தங்கள் திருத்தல்வாதப் பாதைக்கு நியாயம் கற்பிக்கவும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மார்க்ஸ், லெனின் படைப்புக்களை அப்பட்டமாகப் புரட்டியிருப்பதோடு வரலாற்றையும் புரட்டியிருக்கிறார்கள்.

---

1. ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமைக்கும் நமக்கும் இடையே உள்ள வேறுபாடுகளின் தோற்றமும் வளர்ச்சியும்'' என்ற விமர்சனக் கட்டுரையின் பிற்சேர்க்கை எண் 1

''இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் அத்தகைய ஒரு சாத்தியப் பாடு(சமாதான மாற்றம்)இருக்கிறது என்பதை மார்க்ஸ் ஏற்றுக் கொள்ள வில்லையா?''[1] என்று அவர்கள் வாதாடுகிறார்கள். உண்மையாகச் சொல்லப்போனால் இவ்வாதம் மார்க்சின் கருத்துக்களை திருத்தவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் எதிர்க்கவும் இதே முறையை பின்பற்றிய ஓடுகாலி காவுட்ஸ்கியின் வாதத் திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

1870-களில் மார்க்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடு களில் ''தொழிலாளர்கள் தங்கள் இலட்சியத்தை சமாதான முறைகளில் அடைய முடியும்'' எனக்கூறியது உண்மையே. ஆனால் அதே சமயம் இந்த சாத்தியப்பாடு ஒரு விதிவிலக்குதான் என்பதை அவர் வலியுறுத்திச் சொல்லியுள்ளார். மேலும் அவர் கூறினார்: ''இது இப்படி இருந்தாலும் அய்ரோப்பா கண்டத்திலுள்ள பெரும்பாலான நாடுகளில் நமது புரட்சி யின் நெம்புகோலாக பலாத்காரமே செயல்பட வேண்டியிருக்கும் என் பதையும் கூட நாம் அங்கீகரிக்க வேண்டும்.''[2]

அவர் மேலும் சுட்டிக் காட்டினார்: ''ஆங்கில முதலாளிய வர்க்கம், வாக்குரிமை அதன் ஏகபோகமாக இருக்கும் வரை எப்போதுமே பெரும் பான்மையின் முடிவுகளை ஒத்துக் கொள்வதில் தயக்கம் காட்டாது. ஆனால் நான் சொல்வதை நம்புங்கள், உயிராதாரமான முக்கியத்துவம் வாய்ந்ததாக அது கருதிக் கொண்டிருக்கிற விசயங்களில், அது சிறுபான் மையாக இருக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அப்போதே ஒருபுதிய அடிமை எஜமானர்களின் போரை அங்கே நாம் சந்திக்க வேண்டியிருக்கும்.''[3]

ஓடுகாலி காவுட்ஸ்கி பற்றிய தனது விமர்சனத்தில் லெனின் கூறினார்:

''1870-களில் மார்க்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடு களில் சோசலிசத்துக்கு சமாதான மாற்றம் பற்றிய சாத்தியப்பாட்டை ஏற்றுக் கொண்டாரே என்ற வாதம் குதர்க்கவாதிகளின் வாதம், இன்னும்

---

1. மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படைகள், ஓ.வீ. கியூசினானும் மற்றவர்களும் ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1959, பக்கம் 526.
2. ஹேக் காங்கிரஸ் குறித்து, ஆம்ஸ்டர்டாமில் பொதுக் கூட்டத்தில் காரல் மார்க்ஸ் ஆற்றிய சொற்பொழிவு, மார்க்ஸ்-எங்கெல்ஸ், நூல்திரட்டு, ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1961, தொகுதி 18, பக்கம் 154.
3. ''உலகம்'' பத்திரிகையின் நிருபருக்கும் காரல் மார்க்சுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களின் பதிவு'', மார்க்ஸ்-எங்கெல்ஸ், நூல் திரட்டு, ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1961, தொகுதி 17, பக்கம் 637.

பச்சையாகச் சொன்னால் மேற்கோள்களையும், குறிப்புகளையும் வைத்துக் கொண்டு செப்பிடு வித்தை காட்டுகிற ஏமாற்று பேர்வழியின் வேலையாகும். மார்க்ஸ் முதலாவதாக, இந்த சாத்தியப்பாட்டை விதிவிலக்கு என்ற அளவில்தான் ஏற்றுக்கொண்டார். இரண்டாவதாக, அப்பொழுது ஏகபோக முதலாளித்துவம், அதாவது ஏகாதிபத்தியம் இருக்கவில்லை. மூன்றாவதாக, அப்போது இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இன்றுள்ளதுபோல் முதலாளித்துவ அரசு இயந்திரத்தில் முதன்மையான கருவியாகப் பணிபுரியக்கூடிய இராணுவம் இருக்கவில்லை.''[1]

தனது அடிப்படைப் பொருளாதாரக் குணாம்சங்களின் காரணமாக ஏகாதிபத்தியமானது ''சமாதானம் மற்றும் சுதந்திரத்தின் மீதான அதன் குறைவான பற்றுதலினாலும், இராணுவ வல்லாட்சிக் கொள்கையின் அனைத்தும் தழுவிய வளர்ச்சியின் மீதான அதன் அதிகபட்ச பற்றுதலினாலும்'' பிரித்தாளப்படுகிறது என்று லெனின் கூறினார். சமாதான முறை மாற்றமா அல்லது பலாத்காரமுறை மாற்றமா என்ற கேள்வி பற்றிய விவாதத்தில் ''இதைக் கவனிக்கத் தவறுவது'' என்பது, ''முதலாளித்துவத்தின் ஒரு சாதாரண அல்லது தோட்டக்காரனைப் போன்ற அடிவருடியின் நிலைக்கு தாழ்ந்து விடுவதாகும்.''[2]

இன்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் காவுட்ஸ்கியின் பழைய பல்லவியைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். இது முதலாளித்துவத்தின் சாதாரண அல்லது தோட்டக்காரன் போன்ற அடிவருடி நிலைக்கு தாழ்ந்து விடுவதன்றி வேறு என்ன?

மறுபடியும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கேட்கிறார்கள்: லெனின், ''கொள்கையளவில் சமாதான முறைப் புரட்சியின் சாத்தியப்பாடு பற்றி ஏற்றுக் கொள்ளவில்லையா?''[3] என்று. இது யாவற்றையும் விட மோசமான குதர்க்கவாதமாகும்.

1917-ஆம் ஆண்டு பிப்ரவரி புரட்சிக்குப் பிறகு கொஞ்ச காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ''ரசியாவில் ஒரு விதிவிலக்கான முறையில்

---

1. வி. இ. லெனின், ''பாட்டாளி வர்க்க புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும்'', நூல் திரட்டு, ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப., நியூயார்க், 1945, தொகுதி 23, பக்கம் 233, 234.
2. மேற்கண்ட நூல், பக்கம் 357.
3. ஏ. பெலியகோவ் மற்றும் எப். பார்லாட்ஸ்கை, ''சோசலிசப் புரட்சி பற்றிய லெனின் கருத்துக்களும் இன்றைய உலகமும்'', கம்யூனிஸ்ட், எண் 13, மாஸ்கோ, 1960.

இந்த புரட்சியானது ஒரு சமாதானமுறை புரட்சியாக நடைபெறக் கூடும்'' [1] என லெனின் எதிர்பார்த்தார். அப்போதிருந்த அசாதாரண மான சூழ்நிலையின் காரணமாக இது ''ஒரு விதிவிலக்கு'' என லெனின் குறிப்பிட்டார். ''விசயத்தில் சாரம் என்னவென்றால் மக்கள் கரங்களில் ஆயுதங்கள் இருந்தன என்பதும் அதனால் வெளியிலிருந்து மக்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படவில்லை என்பதும்தான்'' [2] என்றார். ஆனால் 1917 ஜூலையில் முதலாளித்துவ எதிர்ப்புரட்சி அரசாங்கம் ஆயுத பலாத் காரத்தால் மக்களை ஒடுக்கி, பெட்ரோகிரேடு தெருக்களை தொழிலாளர்கள் மற்றும் படை வீரர்களின் குருதியால் நனைத்து ஓடச்செய்தது. இந்த நிகழ்ச்சிக்குப் பின் லெனின், ''ரசியப் புரட்சியில் சமாதான முறை மாற்றத்திற்கான எல்லா நம்பிக்கைகளும் சந்தேகத்திற்கிடமின்றி மறைந்து விட்டது'' [3] என்றார். பின் 1917 அக்டோபரில் லெனினும் போல்ஷ்விக் கட்சியும், தொழி லாளர்கள் படை வீரர்களின் ஆயுதம் தாங்கிய எழுச்சிக்குத் தீர்மான கரமாக தலைமை தாங்கி அரசு அதிகாரத்தைக் கைப்பற்றினர். 1918 ஜனவரியில் லெனின், ''வர்க்கப் போராட்டம்...ஒரு உள்நாட்டு யுத்தமாக மாறிவிட்டது'' [4] என்று சுட்டிக் காட்டினார். அதற்குப் பின் சோவியத் அரசு மேலும் மூன்றரை வருடகாலம் புரட்சிகரப் போரை நடத்த வேண்டியிருந்தது. உள்நாட்டு எதிர்ப்புரட்சி கலங்களையும், வெளிநாட்டு ஆயுதந்தாங்கிய தலையீட்டையும் முறியடிக்க மிகக் கடுமையான தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தது. அதற்கு பின்னரே புரட்சியின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. 1919-ல் லெனின், ''புரட்சிகர பலாத்காரம் அக்டோபர் புரட்சியில் பிரகாசமான வெற்றிகளை ஈட்டித் தந்தது'' [5] எனக் குறிப்பிட்டார்.

---

1 வி.இ. லெனின், ''தற்காலிக அரசு குறித்த நமது நோக்கம் பற்றிய பேச்சுக்கள்'', உழைப்பாளிகள் மற்றும் படைவீரர்கள் சோவி யத்துக்களின் பிரதிநிதிகளின் முதல் ரசிய காங்கிரசின் கூட்டத் தில் பேசப்பட்டவை, நூல் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, அ.மொ.ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 1, பக்கம் 80.

2 வி. இ. லெனின், ''முழக்கங்கள் பற்றி'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அ. மொ. ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 1, பக்கம் 88.

3 வி. இ. லெனின், ''அரசியல் நிலைமை'' நூல் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, அ.மொ.ப., நியூயார்க் 1932, தொகுதி 21, பகுதி 1, பக்கம் 37.

4 வி.இ. லெனின், ''அடுத்த உலகில் இருந்து வந்த மக்கள்'' நூல் திரட்டு, ரசியப்பதிப்பு, மாஸ்கோ 1949, தொகுதி 26, பக்கம் 393

5 வி.இ. லெனின் ''சோவியத் அதிகாரத்தின் போராட்டமும் வெற்றியும்'' நூல் திரட்டு, ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1950, தொகுதி 29, பக்கம் 41.

தற்பொழுது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் வெட்கமின்றி அக்டோபர் புரட்சி ''புரட்சிகளிலேயே இரத்தமற்ற புரட்சி'' [1] என்றும் இது ''கிட்டத்தட்ட சமாதான முறையிலே சாதிக்கப்பட்டது'' [2] என்றும் சொல்லுகின்றனர். அவர்களுடைய கூற்றுகள் யாவும் வரலாற்று உண்மைகளுக்கு மாறுபட்டவையாகும். உலகத்தின் முதல் சோசலிச அரசின் உருவாக்கத்துக்காக இரத்தம் சிந்திய, உயிரை ஈந்த புரட்சிகர தியாகிகளுக்கு அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

உலக வரலாறு இதுவரை, முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு சமாதான முறை மாற்றத்துக்கான எந்த முன்மாதிரியையும் உருவாக்கியதில்லை என்று நாங்கள் சொல்லும்போது ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், ''சோசலிச புரட்சி சமாதான வழியில் சாதிக்கப்பட்டதற்கான நடைமுறை அனுபவங்கள் இருக்கின்றன'' என்று சொற்புரட்டு செய்கின்றனர். அவர்கள் எல்லா உண்மைகளுக்கும் கண்களை மூடிக்கொண்டு, ''1919-ல் ஹங்கேரியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சமாதான முறையில்தான் ஏற்படுத்தப்பட்டது'' [3] என்கின்றனர்.

இது உண்மைதானா? இல்லை. ஹங்கேரியப் புரட்சியின் தலைவரான பெலா குன் கூறியிருப்பதைப் பார்ப்போம்.

1918 நவம்பரில் ஹங்கேரிய கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது. புதிதாக உருவான கட்சி உடனடியாக புரட்சிப் போராட்டத்தில் இறங்கி சோசலிசப் புரட்சிக்கான கீழ்க்காணும் முழக்கங்களை வெளியிட்டது. ''முதலாளிகளை நிராயுதபாணியாக்குங்கள், பாட்டாளிகளை ஆயுதபாணியாக்குங்கள், சோவியத் அதிகாரத்தை நிறுவுங்கள்'' [4] ஹங்கேரியின் கம்யூனிஸ்ட் கட்சி எல்லா துறைகளிலும் ஆயுதந்தாங்கிய எழுச்சிக்காக செயல்பட்டது. அது தொழிலாளர்களுக்கு ஆயுதம் வழங்கியது. அரசுப் படைகளை தன்வழிக்கு கொண்டு வர முயன்றது. மாஜி சிப்பாய்களை ஸ்தாபனப்படுத்தியது. ஆயுதந் தாங்கிய ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. நிர்வாகிகளை வெளியேற்றிவிட்டு தொழிற்

---

1. எப். கான்ஸ்டன்டினோவ், ''லெனினும் நமது காலமும்'' கம்யூனிஸ்ட், எண் 5, மாஸ்கோ 1960.
2. ஏ. அய். மிக்கோயன், 20-வது காங்கிரசில் ஆற்றிய உரை, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ், ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1963. தொகுதி 1, பக்கம் 313.
3. ''மார்க்சிய—லெனினியமே கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்கான அடிப்படை'' பதிப்பாசிரியர் குழுவின் கட்டுரை, கம்யூனிஸ்ட் எண் 15, மாஸ்கோ 1965.
4. ''ஹங்கேரியப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பாடங்கள்'' பெலா குன், ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1960. பக்கம் 46.

சாலைகளை ஆக்கிரமித்துக் கொள்ள வழி நடத்தியது. பெரும் பண்ணைகளை பறிமுதல் செய்ய விவசாயத் தொழிலாளர்களுக்கு வழிகாட்டியது. பிற்போக்கு இராணுவ அதிகாரிகளையும், சிப்பாய்களையும், போலீசையும் நிராயுதபாணிகளாக்கியது. வேலை நிறுத்தங்களை ஆயுதந் தாங்கிய எழுச்சியுடன் இணைத்தது. இதுபோன்ற பல வழிகளில் செயல்பட்டது.

உண்மையில் ஹங்கேரியப் புரட்சி பல்வேறு அளவிலும், பல்வேறு வடிவங்களிலும் ஆயுதப் போராட்டங்களால் நிறைந்திருந்தது. அது குறித்து பெலா குன் கூறினார்:

''கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்ட நாளிலிருந்து, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய நாள் வரை முதலாளித்துவ அரசு துருப்புக்களுடனான ஆயுத மோதல்கள் மேலும் மேலும் அதிகரித்த அளவில் அடிக்கடி நடந்தன. 1918 டிசம்பர் 12-ல் புடாபெஸ்ட் படை வீட்டில் இருந்த வீரர்கள் அன்றைய அரசின் இராணுவ அமைச்சருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு போராட்டத்திற்காக வீதியில் இறங்கியதில் இருந்து... புரட்சிகரத் தொழிலாளர்கள் மற்றும் போர் வீரர்களுக்கும் அரசின் படைவீரர்களுக்கும் குறிப்பாக போலீசுக்கும் இடையே நடந்த சண்டைகளைப் பற்றிய விசயங்களை பத்திரிகைகள் அநேகமாக ஒரு நாள் தவறாமல் வெளியிட்டு வந்தன. கம்யூனிஸ்டுகள் ஏராளமான எழுச்சிகளை புடாபெஸ்டில் மட்டுமல்ல, மகாணங்களிலும் தோற்றுவித்தனர்.''[1]

ரசியப் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஹங்கேரியப் புரட்சி அமைதியான மாற்றத்திற்கு ஒரு உதாரணம் என்று சொல்லும்போது அவர்கள் அப்பட்டமான பொய் சொல்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

ரசிய பத்திரிகைகளில் ஹங்கேரியின் முதலாளிய அரசாங்கம் ''தானாகவே முன்வந்து ராஜினாமா செய்ததாக''[2] கூறப்படுகிறது. அநேகமாக இதை மட்டுமே அடிப்படையாக கொண்டுதான் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் முதலில் சொன்ன பொய்களை சொல்லி வருகிறார்கள் போலும். ஆனால் உண்மை நிலை என்ன?

ஹங்கேரியின் முதலாளித்துவ அரசின் தலைவராக அச்சமயத்தில் இருந்த கரோலி இது குறித்து தெளிவாகச் சொன்னார்.

---

1. பெலா குன், ''ஹங்கேரியப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பாடங்கள்'', ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1960, பக்கம் 57.
2. ''உலகப் புரட்சிக்கான சூழ்நிலை எப்படி வளர்ந்து வருகிறது'', சோவியத் ஸ்காயா ரசியா, ஆகஸ்ட் 1, 1963.

அவர் கூறினார்: ''எனது சொந்த ராஜினாமா மற்றும் பாட்டாளிகளுக்கு அதிகாரத்தை மாற்றியளித்தல் தொடர்பான ஓர் அறிக்கையில் நான் கையொப்பமிட்டேன். ஆனால் உண்மையில் அதற்கு முன்னரே அதிகாரம் அவர்கள் கைக்கு மாறியிருந்தது. அவர்களிடம் நான் அதிகாரத்தை ஒப்படைக்கவில்லை. ஏனென்றால் அது எற்கனவே அவர்களால் கைப்பற்றப்பட்டு விட்டது. அவர்கள் திட்டமிட்டு உருவாக்கிய சோசலிசப் படை அதனை செய்து முடித்து விட்டது.''

இதன் காரணமாகவே, முதலாளிகள் தாமாகவே முன்வந்து தங்கள் அரசியல் அதிகாரத்தை பாட்டாளிகள் வசம் ஒப்படைத்தனர் என்பது வஞ்சகமான ஒரு ''கட்டுக்கதை'' [1] என்று சுட்டிக்காட்டினார் பெலா குன்.

1919-ம் ஆண்டின் ஹங்கேரியப் புரட்சி தோற்கடிக்கப்பட்டது. அதன் தோல்விக்கான காரணத்தை ஆய்வு செய்த லெனின், இளம் ஹங்கேரியன் கம்யூனிஸ்ட் கட்சி, எதிரிக்கு எதிராக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதியாகச் செயல்படுத்துவதில் போதிய உறுதியைக் கடைபிடிக்கவில்லை, மாறாக அக்கட்சி மிக முக்கியமான கட்டத்தில் ஊசலாடியது.அதுதான் அது செய்த தற்கொலைக்கொப்பான தவறாகும் என்றார். அது மட்டுமல்லாமல், ஹங்கேரியன் கட்சியானது விவசாயிகளின் நிலப்பிரச்சினையில் தீர்வுக்கான கோரிக்கை தொடர்பாக சரியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது, அதன் காரணமாக விவசாயிகளிடமிருந்து அக்கட்சி தன்னைத்தானே விலக்கிக் கொண்டது. புரட்சியின் தோல்விக்கு இன்னொரு முக்கியக் காரணம் என்னவென்றால், கம்யூனிஸ்ட் கட்சி சந்தர்ப்பவாத சோசலிச ஜனநாயக் கட்சியோடு இணைந்ததாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் 1918-19ம்ஆண்டு ஹங்கேரிய புரட்சியை சமாதான மாற்றத்திற்கான உதாரணமாக சொல்வதென்பது வரலாற்றை அப்பட்டமாகத் திரித்துக் கூறுவது ஆகும்.

மேலும், செக்கோஸ்லோவாக்கியாவின் தொழிலாளி வர்க்கம் ''அரசியல் அதிகாரத்தை சமாதானப் பாதையிலேயே'' [2] வென்றது என்று சொல்கிறார்கள். இது மேலும் ஒரு நகைப்புக்கிடமான வரலாற்று திரிபு ஆகும்.

---

1. பெலா குன், ''ஹங்கேரியப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் படிப்பினைகள்'', ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1960, பக்கம் 49.
2. எல். அய். பிரஷ்னேவ், செக்கோஸ்லோவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் 12-வது காங்கிரசில் ஆற்றிய உரை, பிராவ்தா, டிசம்பர் 4, 1962.

செக்கோஸ்லோவாக்கியாவில் மக்கள் ஜனநாயக அரசு அதிகாரம் பாசிசத்துக்கு எதிரான போரின் போக்கில் நிறுவப்பட்டதாகும். அது முதலாளிகளிடமிருந்து ''சமாதான முறையில்'' எடுத்துக் கொள்ளப் படவில்லை. இரண்டாம் உலகப்போரின் போது, கம்யூனிஸ்ட் கட்சி யானது பாசிஸ்டுகளை எதிர்த்து கொரில்லா யுத்தத்திலும், ஆயுதந் தாங்கிய எழுச்சியிலும் மக்களுக்கு வழிகாட்டியது. அது ஜெர்மன் பாசிஸ்ட் படைகளையும், அடிமைத்தனமான செக்கோஸ்லோவாக்கிய அரசையும் ரசியப் படையின் உதவியுடன் தோற்கடித்து தேசிய முன் னணியின் கூட்டணி அரசை உருவாக்கியது. இந்த அரசு சாராம் சத்தில் மக்களின் ஜனநாயக சர்வாதிகாரமாக பாட்டாளி வர்க்கத் தலைமையில் செயல்பட்டது. அதாவது இது பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் ஒரு வடிவமாக இருந்தது.

1948 பிப்ரவரியில் செக்கோஸ்லோவாக்கியாவில் இருந்த பிற் போக்குவாதிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துணையுடன் ஒரு ஆயுதந் தாங்கிய கலகம் மூலம் மக்கள் அரசாங்கத்தை தூக்கியெறியும் ஒரு எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பு சதித்திட்டம் தீட்டினர். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இருந்த அரசாங்கம் உடனடியாக படைகளை பரவலாக நிறுத்தி வைத்து ஆயுதந்தாங்கிய மக்கள் ஆர்ப்பாட் டங்களுக்கு ஏற்பாடு செய்து எதிர்ப்புரட்சியின் மூலம் மீண்டும் ஆட்சியை க்கைப்பற்றும் முதலாளி வர்க்கத்தின் சதியை முறியடித்து வெற்றிபெற்றது. பிப்ரவரி நிகழ்ச்சி என்பது, முதலாளி வர்க்கத்திடமிருந்து பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை ''சமாதான முறையில்'' பெற்றதை அல்ல, மாறாக முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்புரட்சியை பாட்டாளி வர்க்கம் தனது அரசு நிறுவனங்கள் மூலமாக, முக்கியமாக தனது இராணுவத்தின் மூலமாக ஒடுக்கியதையே குறிக்கிறது என்பதை இந்த உண்மைகள் தெளிவாகக் காட்டுகின்றன.

பிப்ரவரி நிகழ்ச்சி பற்றி தொகுத்துக் கூறிய கோட்வால்டு கூறினார்: ''பிப்ரவரி நிகழ்ச்சிக்கும் முன்பே நாங்கள் சொன்னோம், யுத்தத்திற்கு முன்பு இருந்ததோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அடிப்படை மாற்றங்களில் ஒன்றாக அரசு இயந்திரம் ஏற்கனவே புதிய வர்க்கங்களுக்கு—பழைய ஆளும் வர்க்கங்களுக்கு அல்ல-சேவை செய்கிறது. அரசு இயந்திர மானது, இந்த அர்த்தத்தில் ஒரு மகத்தான பங்கு வகித்தது என்பதை பிப்ரவரி நிகழ்ச்சி காட்டியது''[1]

---

1. *கிளிமெண்ட் காட்வால்ட், செக்கோஸ்லோவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கூட்டத்தில் ஆற்றிய உரை. நவம்பர் 17, 1948.*

மேலே கூறிய நிகழ்ச்சிகள் சமாதான முறையில் மாற்றத்திற்கான முன் மாதிரிகளாக எவ்வாறு இருக்க முடியும்?

லெனின் கூறினார்:

தன்னை பலாத்காரப் புரட்சியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காகவே காவுட்ஸ்கி இத்தகைய குள்ள நரித்தனத்தையும், குதர்க்கவாதங்களையும் ,மோசடியான பொய்யாக்கங்களையும் நாட வேண்டியிருந்தது. தனது இந்த பொய்மைகளை மறைக்கவே 'தாராள தொழிலாளர் கொள்கைக்கு -அதாவது முதலாளித்துவக் கொள்கைக்கு ஓடிப்போனார்' மேலும், ''இங்குதான் உண்மையான பிரச்சினையே இருக்கிறது'' [1] என்றார் லெனின்.

குருச்சேவ் ஏன் வெட்கமின்றி மார்க்ஸ், லெனின் முதலியவர்களின் எழுத்துக்களை திருத்தி, வரலாற்றை கட்டுக்கதையாக்கி குதர்க்கவாதத்தில் ஈடுபடுகிறார்? மாற்றுகிறார். மீண்டும் அங்குதான் பிரச்சினை இருக்கிறது.

பொய்கள் உண்மையை மூடி மறைக்க முடியாது

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ''சமாதான மாற்றம்'' என்ற தங்கள் எதிர்ப்புரட்சிப் பாதையை நியாயப்படுத்துவதற்கு, வரலாற்று நிலைமை மாறிவிட்டது என்ற வாதத்தை பிரதானமாக பயன்படுத்துகின்றனர்.

...இரண்டாம் உலகப் போருக்குப் பின் வரலாற்று சூழ்நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆய்வு செய்வதிலும், அவற்றிலிருந்து முடிவுகளை வந்தடைவதிலும் மார்க்சிய-லெனினியவாதிகள் குருச்சேவின் கருத்துக்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் வரலாற்று நிலைமைகள் அடிப்படையிலேயே மாற்றமடைந்துள்ளதாக மார்க்சிய-லெனினியவாதிகள் கருதுகின்றனர். பாட்டாளிவர்க்க சோசலிச சக்திகளின் பலம் அதிகளவில் அதிகரித்திருப்பதிலும்,ஏகாதிபத்தியத்தின் நிலை பலவீனம் அடைந்திருப்பதிலும் இந்த மாற்றத்தை முக்கியமாகக் காண முடிகிறது. போருக்குப்

1. வி. இ. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஒடுகாலி காவுட்ஸ்கியும்'',தேர்வு நூல்கள்,ஆங்கிலப் பதிப்பு, அ மொ.ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பக்கம் 44.

பின் சோசலிச நாடுகள் மிகுந்த வலிமையோடு இருப்பதும், சுதந்திரம் பெற்ற நாடுகள் புதிதாக வரிசையாக உருவாகி வருவதும், ஆயுதந்தாங்கிய புரட்சிப் போராட்டங்கள் பல நாடுகளில் தொடர்ச்சியாக நடந்து வருவதும், முதலாளித்துவ நாடுகளில் மக்கள் போராட்டம் புதிய ஆக்கம் பெற்று வருவதும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அணிகள் பெருமளவில் விரிவடைந்து வருவதும் நிகழ்ந்திருக்கின்றன. சர்வதேச பாட்டாளிவர்க்க சோசலிசப் புரட்சி இயக்கம், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய ஜனநாயகப் புரட்சி இயக்கம் ஆகிய இவ்விரண்டும்தான் நமது காலத்தின் முக்கிய வரலாற்றுப் போக்குகளாகும்.

போருக்குப் பிந்திய ஆரம்ப காலத்தில் தோழர் மாசேதுங், உலக படைபல சமநிலை எதிரிக்கு அல்ல, நமக்கு சாதகமாயுள்ளது என்பதை பலமுறை சுட்டிக்காட்டினார். இந்தப்புதிய சூழ்நிலை ''உழைக்கும் வர்க்கமும் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களும் விடுதலை பெறுவதற்கு இன்னும் பரந்துவிரிந்த வாய்ப்புகளை திறந்துவிட்டுள்ளது. அதை நோக்கிய இன்னும் அதிக யதார்த்தமான பாதைகளைத் திறந்து விட்டுள்ளது'' [1] என்றும் கூறினார்.

மேலும் அவர் சுட்டிக்காட்டினார்: ''பிரச்சினைகளை உருவாக்குவதும் தோல்வியடைவதும், மீண்டும் பிரச்சினையை உருவாக்குவதும் மீண்டும் தோல்வியடைவதும் ஆக அழிந்துபோகும்வரை இதனைத் தொடர்வதே, மக்கள்நலன் தொடர்பான விசயங்களில் உலகம் முழுவதும் உள்ள ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அனைத்துப் பிற்போக்குவாதிகளின் தர்க்க ரீதியான அணுகுமுறை. அவர்கள் இந்த தர்க்கத்திற்கு எதிராக ஒருபோதும் செயல்படமாட்டார்கள். இது ஒரு மார்க்சிய விதியாகும்... ''ஏகாதிபத்தியம் மூர்க்கத்தனமானது'' என்று நாம் சொல்லும்போது, அதன் இயல்பு ஒருபோதும் மாறாது என்பதையும், இறுதிவரை ஏகாதிபத்தியவாதிகள் தங்களது கசாப்புக் கத்தியைக் கீழே போடமாட்டார்கள் என்பதையும், அவர்கள் தங்கள் அழிவைச் சந்திக்கும்வரை ஒருபோதும் புத்தராக மாறமாட்டார்கள் என்பதையும் குறிப்பிடுகிறோம்.'' [2]

---

1. மாசேதுங், ''புரட்சிகர சக்திகளின் ஒற்றுமையும், ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்த்த போராட்டமும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல்மொழி பதிப்பகம், பீகிங் 1961, தொகுதி 4, பக்கம் 284.
2. மாசேதுங், ''பொய்த் தோற்றங்களை தூக்கியெறியுங்கள், போராட்டத்துக்கு தயாராகுங்கள்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல்மொழி பதிப்பகம், பீகிங் 1961, தொகுதி 4, பக்கம் 428.

போருக்கு பிற்பட்ட உலக நிலைமை புரட்சிக்கு அதிக அளவில் சாதகமாயுள்ளது என்ற உண்மையையும், ஏகாதிபத்தியமும், பிற்போக்கு வாதமும் என்றுமே தமது இயல்பை மாற்றிக் கொள்ளமாட்டாது என்ற விதியையும் மார்க்சிய-லெனினியவாதிகள் அடிப்படையாகக் கொண்டுள்ளனர். எனவே புரட்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என்ற முடிவுக்கு அவர்கள் வருகிறார்கள். இந்த சாதக நிலைமையை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும்,பல்வேறு நாடுகளிலுள்ள குறிப்பான சூழ்நிலைமைகளையொட்டி புரட்சிப் போராட்டங்களின் வளர்ச்சியை செயலூக்கத்துடன் முன்னெடுத்துச்செல்லவேண்டும் என்றும் மற்றும் புரட்சியில் வெற்றியடைய தயாரிப்புகள் செய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் முடிவுக்கு வருகிறார்கள். இதற்கு மாறாக போருக்குப் பின் ஏற்பட்ட இந்த மாற்றங்களை சாக்குபோக்காகக் கொண்டு, புரட்சி எதிர்க்கப்பட வேண்டுமென்றும், தவிர்க்கப்பட வேண்டுமென்றும், உலக சக்திகளின் பழைய நிலையில் ஏற்பட்ட மாற்றங்களினால் ஏகாதிபத்தியமும் பிற்போக்குவாதமும் தங்களது தன்மைகளை மாற்றி கொண்டன என்றும், வர்க்கப் போராட்டத்தின் விதிகள் மாறிவிட்டன என்றும், அக்டோபர் புரட்சியின் பொதுப்பாதையும், பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிய மார்க்சிய—லெனினிய கொள்கையும் காலாவதியாகி விட்டன என்றும் முடிவுக்கு வருகிறார் குருச்சேவ்.

குருச்சேவும் அவரைப் போன்றவர்களும் ஒரு அராபிய இரவுகள் கதையை பரப்பி வருகின்றனர்.

''தற்போது தேசிய மற்றும் சர்வதேச நிலைமைகள்,பல முதலாளித்துவ நாடுகளில் சமாதான முறையில் சோசலிசப் புரட்சியை நடத்த பாட்டாளிவர்க்கத்துக்குச் சாதகமாக உருவாகி வருகின்றன''[1] என்கின்றனர்.

அவர்கள் சொல்கிறார்கள்:

''முதல் உலகப்போருக்கும் இரண்டாவது உலகப் போருக்கும் இடைப்பட்ட காலத்தில், பல அய்ரோப்பிய நாடுகளிலுள்ள பிற்போக்கு முதலாளிகள் தங்கள் நாட்டு போலீஸ் அதிகாரவர்க்க இயந்திரத்தை தொடர்ந்து வளர்த்து வலிமையாக்கினர்,உழைக்கும் மக்களின் வெகுஜன இயக்கங்களை காட்டுமிராண்டித்தனமாக அடக்கி ஒடுக்கினர். சமாதான முறையில் சோசலிசப் புரட்சியை சாதிப்பதற்கு எந்தவித சாத்தியப்பாட்டையும் விட்டு வைக்கவில்லை.''

1. ஏ. புட்டன்கோ, ''போரும் புரட்சியும்'', கம்யூனிஸ்ட், எண் 4 மாஸ்கோ 1961.

ஆனால் அவர்கள் கூற்றுப்படி நிலைமை இன்று மாறிவிட்டது.[1]

அவர்கள் கூறுகிறார்கள்: ''சர்வதேசிய அரங்கில் சக்திகளின் உறவில் ஏற்பட்டுள்ள சோசலிசத்துக்கு சாதகமான அடிப்படை மாற்றங்கள்'' ''புரட்சியை நடத்தும் நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேச பிற்போக்குவாதிகள் தலையிடமுடியாதபடி முடக்கக்கூடிய''[2] நிலைமை உருவாகியுள்ளது. இவை ''முதலாளி வர்க்கம் உள்நாட்டுப் போரைக் கட்டவிழ்த்து விடுவதற்கான சாத்தியப்பாடுகளைக் குறைத்திருக்கின்றது.''[3]

ஆனால், குருச்சேவ் மற்றும் அவரைப் போன்றவர்களின் பொய்கள் யதார்த்தங்களை மூடி மறைத்து விட முடியாது.

மிகத் தெளிவான இரண்டு உண்மைகள் என்னவெனில் இரண்டாம் உலக யுத்தத்துக்குப்பின் ஏகாதிபத்தியவாதிகளும் பிற்போக்குவாதிகளும் எல்லா இடங்களிலும் கொடூரமான முறையில் மக்களை அடக்கி ஒடுக்க தங்களின் அடக்குமுறை இயந்திரங்களை பலப்படுத்தி வருகின்றனர். அமெரிக்காவினால் தலைமை தாங்கப்படும் ஏகாதிபத்தியம் உலகின் அனைத்து பகுதிகளிலும் எதிர்ப்புரட்சி ஆயுதத் தலையீட்டை நடத்தி வருகின்றது.

இன்று அமெரிக்கா எப்போதைக் காட்டிலும் அதிகமாக இராணுவ மயமாக்கப்பட்டதாக மாறியிருக்கிறது. அது தனது இராணுவத்தை 27,00,000 படை வீரர்களைக் கொண்டதாக அதிகரித்துள்ளது. இது 1934-ம் ஆண்டிலிருந்தது போல் பதினொரு மடங்கு அதிகமாகும். 1939-ம் ஆண்டிலிருந்தது போல் ஒன்பது மடங்கு அதிகமாகும். இன்று அமெரிக்கா அதிகளவிலான போலீசையும்,இரகசிய ஸ்தாபனங்களையும் கொண்டுள்ளது, இந்தவிசயத்தில் இது ஹிட்லர் ஜெர்மனியையும் மிகவும் பின்னுக்குத் தள்ளிவிட்டு உலகின் முதலிடத்தில் இருக்கிறது என்பதை அமெரிக்கப் பெரு முதலாளிகளில் சிலர் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

பிரிட்டனின் இராணுவம் 1934-ல் 2,50,000 பேரைக் கொண்டிருந்தது. 1963-ல் 4,20,000 பேரைக் கொண்டதாக பெருகி

---

1. ஒ.வி. கியூசினான் மற்றும் பிறர், ''மார்க்சிய - லெனினியத்தின் அடித்தளங்கள்'' ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1959, பக்கம் 528.
2. ஏ. பெலியகோவ், எப். பார்லாட்ஸ்கை, ''சோசலிசப் புரட்சி குறித்த லெனினிய கருத்துக்களும் இன்றைய உலகமும்'', கம்யூனிஸ்ட் எண். 13, மாஸ்கோ 1960.
3. ஏ. புட்டன்கோ, ''போரும் புரட்சியும்'', கம்யூனிஸ்ட் எண். 4, மாஸ்கோ 1961.

இருக்கிறது. அதனுடைய போலிஸ் படைகள் 1934-ல் 67,000 பேரைக் கொண்டிருந்தது, 1963-ல் 87,000 பேரைக் கொண்டதாக அதிகரித்துள்ளது.

பிரான்சின் இராணுவம் 1934-ல் 6,50,000 பேரைக் கொண்டிருந்தது, 1963-ல் 7,40,000 பேரைக் கொண்டதாக உயர்ந்துள்ளது. அதனுடைய போலீஸ் மற்றும் பிற காவல்படைகள் 1934-ல் 80,000 பேரைக் கொண்டிருந்தது, 1963-ல் 1,20,000 பேரை கொண்டதாக அதிகரித்துள்ளது.

பிற ஏகாதிபத்திய நாடுகளும் சாதாரண முதலாளித்துவ நாடுகளும் கூட மிகப்பெரிய அளவில் ஆயுதப்படைகளையும், போலீஸ் படைகளையும் அதிகரிப்பதில் விதிவிலக்காக இல்லை.

மக்களை செயலற்றவர்களாக்க பொதுவான மற்றும் முழுமையான படைபலக்குறைப்பு முழக்கத்தை குருச்சேவ் ஆர்வத்துடன் பயன்படுத்தி வருகிறார். இதை அவர் நீண்டகாலமாக ஓதி வருகிறார். ஆனால் உண்மையில் எங்குமே பொதுவான மற்றும் முழுமையான படைபல குறைப்பின் நிழல்கூட இல்லை. அமெரிக்காவால் தலைமை தாங்கப் படும் ஏகாதிபத்திய முகாமில் எங்கு பார்த்தாலும் பொதுவான மற்றும் முழுமையான ஆயுதப் போட்டியையும், பலாத்கார அடக்குமுறை கருவிகள் விரிவுபடுத்தப்பட்டு பலப்படுத்தப்படுவதையுமே காணமுடிகிறது.

எதனால் இந்த முதலாளிகள் சமாதான காலத்தில் தனது இராணுவ படைகளையும், போலீசையும் இவ்வளவு வெறி பிடித்ததுபோல் அதிகரித்து வருகிறார்கள்? உழைக்கும் மக்களின் வெகுஜன இயக்கங்களை ஒடுக்குவதன்றி, அவை சமாதானமுறையில் அரசியல் அதிகாரத்தை பெறுவதற்கு உத்தரவாதமளிப்பது அவர்களின் நோக்கமாக இருக்க முடியுமா? ஆளுகின்ற இந்த முதலாளிகள் போருக்குப் பிற்பட்ட 19 ஆண்டுகளில் சிப்பாய்கள் மற்றும் போலீஸ் துணைகொண்டு வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களையும், ஜனநாயக உரிமைக்காக போராடும் மக்களையும் கடுமையாக அடக்கி ஒடுக்கி வந்திருக்கிறார்கள் அல்லவா?

சென்ற 19 வருடங்களில் அமெரிக்க ஏகாதிபத்தியம் பல இராணுவ மையங்களை அமைத்துள்ளது. 40-க்கும் மேற்பட்ட நாடுகளோடு இராணுவ உடன்படிக்கைகளையும் செய்துள்ளது. முதலாளித்துவ உலகின் அனைத்துப் பகுதிகளிலும் கிட்டத்தட்ட 2,200 இராணுவ தளங்களும் படைமுகாம்களும் அமெரிக்காவால் உருவாக்கப்பட்டுள்ளன.

10,00,000 அமெரிக்க இராணுவ வீரர்கள் அமெரிக்காவை விட்டு வெளியிடங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். அதனுடைய ''தாக்கும் படை'', தன்னுடைய நகரும் தரைப்படையையும், விமானப்படையையும் எந்தச் சமயத்திலும் உலகின் எந்த இடத்துக்கும் அனுப்பி மக்களுடைய புரட்சியை அடக்கி ஒடுக்க தயாராக இருந்து வருகிறது.

சென்ற 19 வருடங்களில் அமெரிக்காவும் பிற ஏகாதிபத்திய நாடுகளும் பல்வேறு நாடுகளிலுமுள்ள பிற்போக்குவாதிகளுக்கு உதவியும், ஆதரவும் வழங்கியதோடு, மக்களின் புரட்சிகளை அடக்குவதற்கும் உதவியுள்ளனர். எண்ணற்ற எதிர்ப்புரட்சி ஆயுதந்தாங்கிய ஆக்கிரமிப்புகளையும், தலையீடுகளையும் கூட நேரடியாக திட்டமிட்டு நிறைவேற்றியுள்ளனர். அதாவது எதிர்ப்புரட்சியை அவர்கள் எற்றுமதி செய்துள்ளனர். உதாரணமாக அமெரிக்க ஏகாதிபத்தியம் சீனாவில் உள்நாட்டுப் போரை நடத்த சியாங்கே சேக்குக்கு உதவியது. தனது படைகளை கிரீசுக்கு அனுப்பி, கிரீஸ் மக்களின் விடுதலை பெற்ற பகுதிகளை தாக்குவதில் தலைமை தாங்கியது. கொரியாவில் ஆக்கிரமிப்பு போரை கட்டவிழ்த்துவிட்டது. லெப்னானில் தனது படையை இறக்கி ஈராக்கில் நடந்த புரட்சியை அச்சுறுத்தியது. லாவோஸ் பிற்போக்குவாதிகளுக்கு உதவியும், அவர்களைத் தூண்டிவிட்டும் உள்நாட்டுப் போரை நீடிக்கச் செய்தது. காங்கோவில் தேசிய சுதந்திர இயக்கத்தை ஒடுக்குவதற்கு சொல்லிக் கொள்ளப்படும் அய். நா. படைகளை நிர்வகித்து வழிநடத்தியது. கியூபாவில் எதிர்ப்புரட்சி படையெடுப்பை நடத்தியது. தெற்கு வியட்னாம் மக்களின் சுதந்திரத்திற்கான போராட்டத்தை அடக்கி ஒடுக்க இன்னும் போரிட்டு வருகிறது. அண்மையில் பனாமா மக்களின் இறையாண்மையை பாதுகாப்பதற்கான நியாயமான தற்காப்பு போராட்டத்தை அடக்க ஆயுதப் படையை பயன்படுத்தியது. சைப்பிரஸில் இராணுவ தலையீட்டில் தானும் பங்கேற்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் மக்களின் புரட்சிகளையும், தேசிய சுதந்திரத்துக்கான இயக்கங்களையும் அடக்கவும், தலையிடவும் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதோடு தேசிய தன்மையின் சாயல்கள் காணப்படும் முதலாளித்துவ நாடுகளின் ஆட்சிகளையும் கூட அப்புறப்படுத்த முயலுகிறது. இந்த 19 வருடங்களில் அமெரிக்க அரசாங்கம் ஆசியா ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவின் எண்ணற்ற நாடுகளில் எதிர்ப்புரட்சி இராணுவ ஆட்சி கவிழ்ப்புகளையும் ஏற்பாடு செய்துள்ளது. தானே உருவாக்கிய பொம்மை அரசுகள் தனது தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாது போய்விட்டால் - உதாரணமாக நின்கோடின்டியம் போன்ற பொம்மை அரசுகள்-அவற்றை நீக்குவதற்கு பலாத்காரத்தை கூட பயன்படுத்தியுள்ளது. ''செக்கு இழுக்க முடியாத கழுதையை

உடனே கொன்றுவிடு'' என்ற பழமொழியைப் போன்றதுதான் அமெரிக்காவின் செயல்பாடு.

இன்றைய காலகட்டத்தில் புரட்சிகளை வெற்றிகரமாக நடத்தி ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் நாடுகளின் விடுதலையை சாதிக்க உள் நாட்டிலுள்ள பிற்போக்கு ஆளும் வர்க்கங்களின் கடுமையான ஒடுக்கு முறைகளை எதிர்த்து நின்று சமாளிக்க வேண்டும் என்பது மட்டுமல் லாமல், ஏகாதிபத்தியத்தின் குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆயுதத் தலையீட்டையும் எதிர்த்து போராட முழுமையாக தயாராக இருக்க வேண்டும் என்பதைதான் இதுவரை நடந்த நிகழ்ச்சிகள் நமக்கு விளக்குகின்றன. இதுபோன்ற தயாரிப்புகள் இல்லாமல், எதிர்ப் புரட்சி களின் பலாத்காரத்தை அவசியமானபோது புரட்சிகர பலாத்காரத்தால் தீர்க்கமாக முறியடிக்காமல் புரட்சி என்பது சாத்தியமில்லை. வெற்றி என்பது நிச்சமாக சாத்தியமில்லை.

தங்களது ஆயுதப் படைகளை பலப்படுத்தாமல், ஏகாதிபத்தியப் படைகளின் ஆக்கிரமிப்புகளையும் தலையீடுகளையும் எதிர்த்துப் போராடத் தயாராகாமல், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைத் தொடுக்கும் கொள்கையைக் கடைபிடிக்காமல் விடுதலை பெற்ற நாடுகள் தங்கள் தேசிய சுதந்திரத்தை காப்பாற்றிக் கொள்வதோ, புரட்சிகர இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வதோ இயலாத காரியமாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களைப் பார்த்து நாங்கள் கேட்க விரும்புகிறோம்: போருக்கு பிறபட்ட சூழ்நிலையின் புதிய அம்சங்கள் குறித்து வழவழ என்று பேசும் நீங்கள், அவற்றில் மிக முக்கியமானதும், பகிரங்கமானதுமாக தெரிகின்ற அமெரிக்காவும் பிற ஏகாதிபத்தியவாதிகளும் எல்லா இடங்களிலும் புரட்சியை நசுக்கு கிறார்கள் என்பது குறித்து பேசுவதைத் தவிர்க்கிறீர்களே அது ஏன்? சமாதானபூர்வ மாற்றம் குறித்து ஓய்வு ஒழிச்சலின்றிப் பேசுகிற நீங்கள் ஏகாதிபத்தியவாதிகளாலும் பிற்போக்குவாதிகளாலும் கட்டியமைக்கப் பட்டுள்ள ஊதிபருத்த பலாத்கார ஒடுக்குமுறை நிறுவனங்களை எதிர் கொள்வது பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லையே அது ஏன்? தேசிய சுதந்திரத்தையும், மக்களுடைய புரட்சிகர வெகுஜன இயக்கங் களையும் ஏகாதிபத்தியமும் பிற்போக்குவாதமும் கொடுமையாக ஒடுக்குவது பற்றிய கொலைகாரத்தனமான உண்மைகளை வெட்கமற்ற முறையில் மறைத்து, ஒடுக்கப்பட்ட மக்களும், நாடுகளும் சமாதான முறையில் வெற்றி பெறலாம் என்ற மாயையைப் பரப்பிவருகிறார்கள். மக்களின் விழிப்புணர்வை மழுங்கடிக்கவும், கோபமடைந்த மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் பற்றிய வெறுமையான வாக்குறுதிகளை

அள்ளிவீசி அவர்களின் புரட்சியை எதிர்க்கவும் முயற்சிக்கிற நீங்கள் உண்மையில் ஏகாதிபத்தியத்துக்கும் எல்லா நாடுகளின் பிற்போக்குவாதிகளுக்கும் கூட்டாளியாக செயல்படுகிறீர்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லையா?

இந்த பிரச்சினையில் நமக்கு ''எதிர்மறை உதாரண ஆசிரியராக'' அமெரிக்க அரசு செயலாளராக இருந்த காலஞ்சென்ற ஜான்பாஸ்டர் டல்லஸ் என்பவரை எடுத்துக் கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

1956 ஜூன் 21-ல் டல்லஸ் ஆற்றிய ஒரு உரையில் அனைத்து சோசலிச நாடுகளும் இதுவரை ''பலாத்காரத்தைப் பயன்படுத்தித் தான்'' நிறுவப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார். பிறகு ''இன்று ரசிய ஆட்சியாளர்கள் பலாத்காரத்தைக் கைவிட்டு விடுவதாக கூறுகின்றனர்'' அதனால் ''இந்த வளர்ச்சிப் போக்கை நாம் வரவேற்று ஊக்குவிக்க வேண்டும்'' [1] என்று அவர் கூறினார்.

முதலாளித்துவ அமைப்பின் உண்மையான ஆதரவாளரான டல்லஸ் வர்க்கப்போராட்டத்தில் பலாத்காரத்தின் இன்றியமையாத பாத்திரத்தை தெளிவாக உணர்ந்துள்ளார். பலாத்காரப் புரட்சியை குருச்சேவ் மறுத்திருப்பதை வரவேற்கும் அதே வேளையில் முதலாளி வர்க்கம் தனது ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான எதிர்புரட்சிகர பலாத்காரத்தை பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மிகவும் வலியுறுத்தியுள்ளார். டல்லஸ் இன்னொரு பேச்சில், ''தனது குடிமக்களை ('பிற்போக்கு ஆளும் வர்க்கங்களை' என்று கொள்க) பாதுகாப்பதுதான் ஒவ்வொரு அரசுக்கும் இன்றியமையாத கடமையாகும்...ஆகவே ஒவ்வொரு நாகரிக சமுதாயத்திலும் அதன் உறுப்பினர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் கருவியாக போலீஸ் படையை பராமரிப்பதற்குத் தங்கள் பங்களிப்பை செலுத்துகிறார்கள்'' [2] என்று கூறினார்.

இங்கு டல்லஸ் உண்மையைத்தான் கூறினார். ஏகாதிபத்தியம் மற்றும் எல்லா பிற்போக்குவாத ஆட்சியின் அரசியல் அஸ்திவாரம் ''ஒரு போலீஸ் படை''யைத் தவிர வேறொன்றுமில்லை. அஸ்திவாரம் வலிமையாகவும் அசைக்க முடியாமலும் இருக்கும் வரையில் வேறு எதுவும் முக்கியமில்லை. அவர்களுடைய ஆட்சியையும் அசைக்க

---

1. *ஜே.எப். டல்லஸ், கிவானிஸ் இண்டர்நேசனலின் 41-வது வருடக் கூட்டத்தில் பேசியது, ஜூன் 21, 1956.*
2. *ஜே. எப். டல்லஸ், அசோசியேட்டட் பிரஸ் வருடாந்திர விருந்தில் பேசியது, ஏப்ரல் 22, 1957 நியூயார்க் டைம்ஸ், ஏப்ரல் 23, 1957.*

முடியாது. முதலாளிகள் தங்களின் ஆட்சியை பாதுகாக்க பலாத்காரத்தைச் சார்ந்துள்ளார்கள் என்ற உண்மையை மறைக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் டல்லஸிற்கு மிகவும் ஏற்புடைய சமாதான மாற்றம் என்ற தேவதைக் கதையை எந்த அளவு அதிகமாகப் பரப்புகிறார்களோ அந்த அளவுக்கு புரட்சியை எதிர்ப்பதில் ஏகாதிபத்தியத்தின் நெருங்கிய நண்பர்களாக செயல்படும் தங்களின் உண்மையான முகத்தை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

''பாராளுமன்ற பாதை''க்கு மறுப்பு

இரண்டாம் அகிலத்தின் திருத்தல்வாதிகளால் விளம்பரப்படுத்தப் பட்ட ''பாராளுமன்ற பாதை'' என்ற கருத்து லெனினால் முறியடிக்கப் பட்டது, நீண்ட காலத்திற்கு முன்பே செல்லாக்காசாகிவிட்டது. ஆனால் குருச்சேவின் கண்களுக்கு பாராளுமன்ற பாதை இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு திடீரென்று மதிப்பை பெற்று விட்டதாகத் தோன்றுகிறது.

அது உண்மைதானா? நிச்சயமாக இல்லை.

முதலாளித்துவ அரசு இயந்திரத்தின் முதன்மையான உறுப்பு இராணுவமே ஒழிய பாராளுமன்றமல்ல என்பதைத்தான் இரண்டாம் உலகப் போருக்குப் பின் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நமக்கு மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளது.பாராளுமன்றம் என்பது முதலாளித்துவ ஆட்சிக்கு ஒரு அலங்காரச் சின்னமாக, ஒரு முடுதிரையாக இருந்து வருகிறது. பாராளுமன்றப் பாதையை ஏற்றுக்கொள்வதும் அல்லது கைவிடுவதும் அல்லது பாராளுமன்றத்துக்கு அதிகமாகவோ குறைவாகவோ அதிகாரம் அளிப்பதும் வெவ்வேறு விதமான தேர்தல் முறையைக் கைக்கொள்வது ஆகிய இவற்றில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது முதலாளித்துவ ஆட்சி யின் தேவைக்கும் நலன்களுக்கும் ஏற்றாற்போல்தான் எப்போதும் தீர் மானிக்கப்படுகிறது. முதலாளிகள் இராணுவ அதிகார வர்க்க நிறுவனங் களை கட்டுப்படுத்தும் வரை தேர்தல் மூலம் பாட்டாளிகள் ''பாராளு மன்றத்தில் நிலையான பெரும்பான்மை பெறுவதென்பது சாத்தியமற்றது அல்லது அத்தகைய ''நிலையான பெரும்பான்மை'' நம்பப்பட முடியா தது. ''பாராளுமன்ற பாதை'' வழியாக சோசலிசத்தை அடைவதென்பது அறவே சாத்தியமில்லாதது.ம் வெறும் ஏமாற்றுப் பேச்சும் ஆகும்.

முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் கிட்டத் தட்ட பாதி இன்னும் சட்டப்படி தடை செய்யப்பட்டவையாக

இருக்கின்றன. இக்கட்சிகளுக்கு சட்டவுரிமை இல்லாததன் காரணமாக, அவை பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

உதாரணமாக, ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சி வெள்ளைப் பயங்கரத்தின் கீழ் வாழ்கிறது. அது தேர்தலில் கலந்துகொள்ளவே வாய்ப்பில்லை. இந்நிலைமையில், இபாரூரி போன்ற ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் குருச்சேவின் ''சமாதான முறை மாற்றத்தை'' ஸ்பெயினில் ஆதரித்துப் பேசுவது வருந்தத்தக்கதாகவும், இரங்கத்தக்கதாகவும் இருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சிகள் சட்டபூர்வமானவையாகத் தேர்தலில் பங்கெடுக்கக்கூடிய நிலையிலும் இருக்கிற முதலாளித்துவ நாடுகளில், முதலாளித்துவ தேர்தல் சட்டங்களால் திணிக்கப்பட்டுள்ள நேர்மையற்ற வரைமுறைகளை வைத்துக்கொண்டு முதலாளித்துவ ஆட்சியின் கீழ் பெரும்பான்மை ஓட்டுக்களை வெல்வதென்பது அவைகளுக்கு மிகவும் கடினம். அப்படியே அவர்கள் பெரும்பான்மை ஓட்டுகளைப் பெற்றாலும் பாராளுமன்றத்தில் அவர்கள் பெரும்பான்மை இடங்களைப் பிடிப்பதை தேர்தல் சட்டங்களைத் திருத்துவதன் மூலமோ அல்லது வேறு வழிகளிலோ தடுப்பதற்கு முதலாளிகளால் முடியும்.

உதாரணமாக, இரண்டாம் உலகப்போருக்குப் பின் பிரெஞ்சு ஏகபோக முதலாளிகள் இரண்டு தடவை தேர்தல் சட்டத்தை திருத்தி இருக்கிறார்கள். ஒவ்வொரு தடவையும் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்றத்தில் பிடிக்கும் இடம் குறைந்து கொண்டு வந்துள்ளது. 1946-ல் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி 182 சீட்டுக்களைப் பெற்றிருந்தது. 1951 தேர்தலில் தேர்தல் சட்டத்தை திருத்தியபின் 103 சீட்டுக்களையே பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி பெற்றது, 79 சீட்டுக்களை பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி இழந்தது. 1956-ல் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் 150 சீட்டுக்களை பிடித்தது, ஆனால் 1958-ல் தேர்தலுக்கு முன்பு ஏகபோக முதலாளிகள் மீண்டும் தேர்தல் சட்டத்தை திருத்தினர். அதன் விளைவாக பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி வெறும் 10 சீட்டுகளை பெற்றது, 140 சீட்டுக்களை இழந்தது.

சில சூழ்நிலைகளில் கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றதாலோ, அல்லது தேர்தலில் வெற்றி பெற்றதன் விளைவாக அரசில் பங்கு கொண்டதாலோ பாராளுமன்றத்தின் முதலாளித்துவ தன்மைகளையோ அதன் பல்வேறு அம்சங்களையோ அதனால் மாற்ற இயலாது. இந்நிலையில், பழைய அரசு நிறுவனங்களையும் அதிகார

வர்க்கத்தையும் ஒழித்து புதியதை உருவாக்குவதென்பது நடக்கவே நடக்காது. அடிப்படை சமுதாய மாற்றத்தை முதலாளித்துவ பாராளுமன்றங்களையோ அரசுகளையோ சார்ந்திருப்பதன் மூலமாக கொண்டு வருவது என்பது முடியவே முடியாத காரியமாகும். பிற்போக்குவாத முதலாளிகள் அரசின் நிறுவனங்களையும், இராணுவத்தையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, தேர்தலை செல்லாததாக்கி பாராளுமன்றத்தை கலைத்து கம்யூனிஸ்டுகளை அரசிலிருந்து வெளியேற்றி, கம்யூனிஸ்ட் கட்சியை தடை செய்துவிட முடியும், மேலும் மக்களையும் முற்போக்கு சக்திகளையும் நசுக்க மிருகத்தனமான பலாத்காரத்தை மேற்கொள்ள முடியும்.

உதாரணமாக, 1946-ல் சிலி கம்யூனிஸ்ட் கட்சி, தேர்தல் வெற்றியை பெறுவதில் முதலாளித்துவ முற்போக்கு கட்சியை ஆதரித்தது. கம்யூனிஸ்டுகள் பங்கேற்புடன் ஒரு கூட்டணி அரசாங்கம் அமைக்கப் பட்டது. அந்த சமயத்தில் முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்த அந்த அரசை சிலி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் 'மக்கள் ஜனநாயக அரசாங்கம்' என்று வர்ணிக்கும் அளவுக்குச் சென்றனர். ஆனால் ஒரு வருடத்திற்குள் முதலாளிகள் கம்யூனிஸ்டுகளை அரசிலிருந்து வெளியேறும்படி நிர்ப்பந்தித்தனர். பிறகு கம்யூனிஸ்டுகளை ஒட்டு மொத்தமாக கூட்டமாகக் கைது செய்தனர். 1948-ல் கம்யூனிஸ்ட் கட்சியையே தடை செய்தனர்.

தொழிலாளர்களின் கட்சி, முதலாளிகளின் கூலிக்கட்சியாக சீரழிந்து அவர்களுக்கு அடிபணிந்து இருக்கும் போது மட்டுமே முதலாளிகள் அக் கட்சியை பெரும்பான்மை பெறவும் அரசைஏற்றுநடத்தவும் அனுமதிப்பர். ஒரு சில நாடுகளில் முதலாளித்துவ சமூக ஜனநாயக கட்சிகளின் நிலை இதுதான். ஆனால் இத்தகைய செயல் முதலாளிகளின் சர்வாதிகாரத்தை பாதுகாக்கவும் மேலும் வலுப்படுத்தவும் பயன்பட்டுள்ளதே தவிர ஒடுக்கப்படும் சுரண்டப்படும் பாட்டாளிகளின் நிலைமையை மாற்ற எந்த வகையிலும் பயன்படாது, பயன்படவும் முடியாது. இத்தகைய உண்மைகள் பாராளுமன்றப் பாதையின் ஒட்டாண்டித்தனத்துக்கு கூடுதல் சான்றுகளாக விளங்குகின்றன.

இரண்டாம் உலகப்போருக்குப்பின் நடந்த நிகழ்ச்சிகள், கம்யூனிஸ்ட் தலைவர்கள் பாராளுமன்றப் பாதையை நம்பி, ''பாராளுமன்ற மாயை'' என்ற தீர்க்கமுடியாத நோயிற்கு பலியாகிவிட்டது. அவர்கள் இயல் பாகவே எதையும் சாதிக்க முடியாது என்பதோடு தவிர்க்க முடியாதபடி திருத்தல்வாத சகதியில் புதைந்து பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இலட்சியத்தை சீரழிப்பார்கள் என்பதைத்தான் காட்டுகின்றன.

முதலாளித்துவப் பாராளுமன்றங்களின்பால் கடைபிடிக்க வேண்டிய சரியான அணுகுமுறை குறித்து மார்க்சிய-லெனினியவாதிகளுக்கும், பிற சந்தர்ப்பவாதிகள் மற்றும் திருத்தல்வாதிகளுக்கும் இடையே ஒரு அடிப்படை வேறுபாடு எப்போதும் இருந்து வந்திருக்கிறது.

முதலாளிகளின் பிற்போக்குத் தன்மையை அம்பலப்படுத்தவும், மக்களுக்கு கற்றுக்கொடுக்கவும், புரட்சிகர வலிமையை சேகரித்துக் கொள்ள உதவவும், குறிப்பான சூழ்நிலைமைகளில் பாட்டாளி வர்க்கக் கட்சி பாராளுமன்றப்போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்றும், பாராளுமன்ற மேடையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் மார்க்சிய-லெனினியவாதிகள் எப்போதும் கூறி வருகிறார்கள். தேவைப்படும்போது இந்த சட்டபூர்வமான போராட்ட வடிவத்தை பயன்படுத்திக் கொள்ள மறுப்பது தவறாகும். ஆனால் பாட்டாளி வர்க்க கட்சி ஒருபோதும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு மாற்றாக பாராளுமன்ற போராட்டத்தைக் கருதக்கூடாது அல்லது சோசலிசத்துக்கான மாற்றத்தை பாராளுமன்ற பாதையின் மூலம் சாதித்துவிடலாம் என்ற மாயையில் ஆழ்ந்துவிடக்கூடாது, அது எல்லா சமயங்களிலும் வெகுஜனப் போராட்டங்களிலேயே கவனம் செலுத்தவேண்டும்.

லெனின் கூறினார்:

''புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சி மக்களை விழிப்படையச் செய்யும் பொருட்டு முதலாளித்துவ பாராளுமன்றத்தில் பங்கெடுக்க வேண்டும் தேர்தல்களின் போதும், பாராளுமன்றத்தில் கட்சிகளுக்கு இடையில் நடக்கும் போராட்டங்களின் போதும் அவ்வாறு செய்ய முடியும். ஆனால் வர்க்கப் போராட்டத்தை பாராளுமன்றப் போராட்ட மாக குறுக்கிவிடுவது, பாராளுமன்றப் போராட்டத்தை உயர்ந்தபட்ச, தீர்மானகரமான வடிவமாக்கி அனைத்து போராட்ட வடிவங்களையும் இதற்குட்பட்டவையாக்குவது உண்மையில் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக முதலாளித்துவத்தின் பக்கம் ஓடிவிடுவதாகும்.''[1]

பாராளுமன்ற வாதத்தின் நிழலைப் பின் தொடர்ந்து சென்றதற்காகவும், அரசு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டிய புரட்சிகரக் கடமையைக் கைவிட்டதற்காகவும் அவர் இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளை கண்டித்தார். அவர்கள் பாட்டாளி வர்க்கக் கட்சியை ஒரு தேர்தல் கட்சியாக, ஒரு பாராளுமன்றக் கட்சியாக, முதலாளிகளின் தொங்கு சதையாக,

1. *வி. இ. லெனின். ''அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும்'' ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப, மாஸ்கோ 1954, பக்கம் 36.*

முதலாளித்துவ சர்வாதிகாரத்தைக் காக்கும் ஒரு கருவியாக மாற்றி விட்டார்கள். பாராளுமன்றப் பாதையை ஆதரிப்பதன் மூலம் இரண்டாம் அகிலத்தின் திரிபுவாதிகள் அடைந்த கதியையே குருச்சேவும் அவரைப் பின்பற்றுபவர்களும் அடைவார்கள்.

''இடது சந்தர்ப்பவாதத்திற்கு எதிர்ப்பு'' என்பதற்கு மறுப்பு

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் பாட்டாளி வர்க்கப் புரட்சி குறித்த விசயத்தில் தன் அணுகுமுறை பற்றி பொய்களைப் புனைந்துரைக்கிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி புரட்சிகர சூழ்நிலை நிலவாத போதே ''உடனடியான பாட்டாளி வர்க்க புரட்சி என்ற முழக்கத்தை முன்வைக்கிறது'' என்றும், அது ''முதலாளித்துவ நாடுகளில் உள்ள பாட்டாளிகளின் ஜனநாயக உரிமைக்கும் பிற உழைக்கும் மக்களின் அத்தியாவசிய நலன்களுக்குமான போராட்டத்தை''[1] கைவிட்டு வருகிறது என்றும். ஆயுதந்தாங்கிய போராட்டத்தை ''பூரணமானதாக''[2] கருதுகிறது என்றும் இதுபோன்ற வேறு குற்றச்சாட்டுகளையும் கூறுகிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது ''இடது சந்தர்ப்பவாதம்'', ''இடது துணிச்சல்வாதம்'' ''டிராட்ஸ்கியிசம்''போன்ற முத்திரைகளை அடிக்கடி குத்துகின்றனர்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் இதுபோன்ற கூப்பாடுகளின் நோக்கம், புரட்சியை எதிர்ப்பதும் மறுதலிப்பதுமான தமது திருத்தல்வாதப் பாதையை மூடி மறைப்பதுதான். ''இடது சந்தர்ப்பவாதம்'' என்று அவர்கள் தாக்குவது உண்மையில் மார்க்சிய - லெனினியப் புரட்சிகரப் பாதையை அன்றி வேறல்ல.

புரட்சி என்பது நமது விருப்பத்தின் பேரில் நடத்தப்பட முடியாதது என்றும், புற நிலைமையில் புரட்சிகரமான சூழ்நிலை நிலவினாலொழிய புரட்சி என்பது சாத்தியமில்லை என்றும் நாங்கள் எப்போதும் கூறி வந்திருக்கிறோம் அதே சமயம் புரட்சி வெடித்தெழுவதும் வெற்றி பெறுவதும்

---

1. *''ரசியாவில் உள்ள அனைத்து கம்யூனிஸ்டுகளுக்கும் அனைத்து கட்சி அமைப்புகளுக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி எழுதிய பகிரங்கக் கடிதம்,'' ஜூலை 14, 1963.*

2. *''கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமைக்கான மார்க்சிய-லெனினிய அடிப்படை'', ஆசிரியர் குழுவின் கட்டுரை, கம்யூனிஸ்ட், எண. 15, மாஸ்கோ, 1963.*

புரட்சிகர சூழ்நிலையை மட்டும் பொறுத்ததல்ல, கூடவே அகநிலையில் புரட்சிகர சக்திகளின் தயாரிப்புகளையும் முயற்சிகளையும் பொறுத்தது.

பாட்டாளி வர்க்கக் கட்சி, புரட்சியை நடத்துவதற்கு தேவையான புறவய நிலைமைகள் மற்றும் அகநிலை சக்திகள் ஆகிய இரண்டைப் பற்றியும் துல்லியமாக மதிப்பிடவில்லையென்றாலும், நிலைமை கனிந்து வருவதற்கு முன்பே அவசரமாக ஒரு புரட்சியைத் தொடுக்க முயன்றாலும் அது 'இடது' துணிகரவாதமாகும். ஆனால் பாட்டாளி வர்க்கக் கட்சி புரட்சிக்கான சூழ்நிலை கனியும் முன்னே அதற்கான செயலாக்கமுள்ள தயாரிப்புகளைச் செய்யாதிருக்குமானால் அல்லது புரட்சிகரமான சூழ்நிலை நிலவும் போது, நிலைமைகள் கனிந்திருக்கும்போது, ஒரு புரட்சியைத் தலைமை தாங்கி வழி நடத்தி அரசு அதிகாரத்தைக் கைப்பற்றத் துணியாமலிருக்குமானால் அது வலது சந்தர்ப்பவாதம் அல்லது திரிபுவாதமாகும்.

அரசு அதிகாரத்தைக் கைப்பற்றும் நேரம் வரும் வரை, புரட்சிகர சக்தியை ஒன்று திரட்டும் கடினமான பணியில் முழுமையாக கவனம் செலுத்துவதுதான் ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியின் மிக முக்கியமான அடிப்படை பணியாகும். அன்றாடப் போராட்டங்களில் அளிக்கப்படும் செயலூக்கமுள்ள தலைமையானது புரட்சிகர சக்தியை ஒன்று குவிப்பதையும், சூழ்நிலைகள் கனிந்து வரும்போது புரட்சியில் வெற்றியை ஈட்டுவதற்கான தயாரிப்புகளைச் செய்வதையும்தான் தனது மையக் கடமையாகக் கொள்ள வேண்டும். பாட்டாளி வர்க்கக் கட்சி, பாட்டாளி வர்க்கம் மற்றும் மக்களின் அரசியல் விழிப்புணர்வை அதிகரிக்கவும், தனது சொந்த வர்க்க சக்திகளைப் பயிற்றுவிக்கவும், அதன் போரிடும் தகுதியை பக்குவப்படுத்தவும், மேலும் புரட்சிக்கு சித்தாந்த ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், ஸ்தாபன ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தயாரிப்பதற்காகவும் அன்றாடப் போராட்டங்களின் பல்வேறு வடிவங்களைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு செயல்படுவதன் மூலம் மட்டுமே, புரட்சிகர சூழ்நிலைமைகள் கனிந்திருக்கும்போது வெற்றி வாய்ப்புகளை தவற விடாமல் இருக்க முடியும். இல்லையெனில் புரட்சிகரமான யதார்த்த நிலைமைகள் நிலவும்போது பாட்டாளி வர்க்கக் கட்சி புரட்சியை நடத்தும் வாய்ப்பை வெறுமனே நழுவிச் செல்ல விட்டுவிடும்.

புரட்சிகர சூழ்நிலை நிலவாதபோது எந்த புரட்சியையும் நடத்தக் கூடாது என்பதை ஓய்வொழிச்சலின்றி வலியுறுத்தி வரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், புரட்சிகர சூழ்நிலை உருவாவதற்கு முன் அன்றாட புரட்சிகரப் போராட்டங்களையும், புரட்சிகர சக்திகளை ஒன்று

திரட்டுவதையும் ஒரு பாட்டாளி வர்க்க கட்சி எவ்வாறு செய்ய வேண்டும் என்பது குறித்து எதுவும் சொல்வதில்லை. உண்மையில் புரட்சிகர சூழ்நிலை இல்லாமலிருக்கும்போதே புரட்சிக்கான தயாரிப்பு செய்வது, புரட்சிகர சக்தியை ஒன்று குவிப்பது ஆகிய கடமைகளை, புரட்சிகர சூழ்நிலைமைகள் இல்லை என்ற சாக்கில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் கைவிடுகிறார்கள்.

லெனின் ஒருமுறை புரட்சிகர சூழ்நிலை பற்றிய ஓடுகாலி காவுட்ஸ்கியின் மனப்பான்மையை மிக அழகாக விளக்கினார். அவர் சொல்கிறார்: புரட்சிகர நெருக்கடி தோன்றும்போது ''...புரட்சிக்காரராக மாறுவதற்கு காவுட்ஸ்கியும் கூடத் தயாராக இருக்கிறார்! ஆனால், அப்போது ஒவ்வொரு அயோக்கியனும் கூட ...புரட்சிவாதியாகத்தான் தன்னை அறிவித்துக் கொள்வான் என்பதை நாம் காண்போம்''. ''அவ்வாறு இல்லையெனில் காவுட்ஸ்கி புரட்சியைப் பற்றி அசட்டையாக இருப்பார்''. லெனின் சுட்டிக் காட்டியது போலவே காவுட்ஸ்கி ஒரு எடுத்துக்காட்டான பிலிஸ்டைன் (அற்பவாதி), ஒரு புரட்சிகர மார்க்சியவாதிக்கும் அற்பவாதிக்கும் இடையே உள்ள வேறுபாடு என்னவென்றால், மார்க்சியவாதி ''பாட்டாளி வர்க்கத்தையும் அனைத்து உழைக்கும் மக்கள் மற்றும் சுரண்டப்படும் மக்களையும் அதற்கு (புரட்சிக்கு) தயார்செய்யக் கூடிய தைரியத்தைப் பெற்றிருப்பார்''.[1] இதிலிருந்து லெனின் சாடிய காவுட்ஸ்கி மாதிரியான அற்பவாதிகளாக குருச்சேவும் அவரைப் பின் பற்றுபவர்களும் இருக்கிறார்களா இல்லையா? என்பதை மக்கள் தாங்களாகவே முடிவு செய்து கொள்ள முடியும்.

முதலாளித்துவ நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்க கட்சிகள், ஏகபோக முதலாளித்துவத்துக்கு எதிராகவும், ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், ஏகாதிபத்தியத்தின் ஆயுதக் குவிப்பையும் போருக்கான தயாரிப்பையும் எதிர்க்கவும், உலக சமாதானத்தை பாதுகாக்கவும், ஒடுக்கப்பட்ட தேசங்களின் புரட்சிகரப் போராட்டத்திற்கு தீவிரமாக ஆதரவளிக்கவும், அந்நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கத்தையும் உழைக்கும் மக்களையும் செயலூக்கத் துடன் தலைமை தாங்கி வழி நடத்தி செல்லவேண்டும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் ஆக்கிரமிப்பு, தலையீடு, கட்டுப்பாடு மற்றும் அச்சுறுத்தலுக்காளாகியுள்ள முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி

---

1. *வி. இ. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு அ.மொ.ப. மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 2, பக்கம் 310.*

வர்க்கக் கட்சிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிரான தேசியப் பதாகையை உயர்த்திப் பிடிக்கவேண்டும், வெகுஜனப் போராட்டத்தின் திசையை பிரதானமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிராகவும் அதே வேளையில், ஏகபோக மூலதனத்துக்கு எதிராகவும், தேசிய நலன்களுக்கு துரோகமிழைக்கும் பிற உள்நாட்டு பிற்போக்குவாதிகளுக்கு எதிராகவும் திருப்பிவிடவேண்டும். அய்க்கியப்படுத்தக்கூடிய அனைத்து சக்தி களையும் அவை அய்க்கியப்படுத்தி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் அடிவருடிகளுக்கும் எதிரான ஒரு அய்க்கிய முன்னணியைக் கட்டவேண்டும்.

சமீப ஆண்டுகளில் முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கமும், பிற மக்களும் பரந்துபட்ட வெகுஜனப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இப்போராட்டங்கள் மூலம் அவர்கள் உள்நாட்டு ஏகபோக முதலாளித்துவம் மற்றும் பிற்போக்கு சக்திகளை தாக்குவதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெற்றுவரும் புரட்சிகர போராட்டங்களுக்கும் சோசலிச முகாமிலுள்ள நாடுகளுக்கும் தங்களது வலிமைமிக்க ஆதரவை வழங்கி வருகின்றனர். இந்தப் பங்களிப்பை நாம் எப்போதும் முழுமையாகப் பாராட்டியுள்ளோம்.

உடனடிப் போராட்டங்களை செயலூக்கத்துடன் தலைமை தாங்கி நடத்திவரும் அதேவேளையில் கம்யூனிஸ்டுகள் அவற்றை தொலை நோக்கான, பொதுநலன்களுக்கான போராட்டத்துடன் இணைக்க வேண்டும், பாட்டாளி வர்க்கப் புரட்சிகர உணர்வில் மக்களைப் பயிற்றுவிக்கவேண்டும், இடைவிடாது அவர்களின் அரசியல் விழிப் புணர்வை உயர்த்தவேண்டும், காலம் கனியும்போது புரட்சியில் வெற்றியை ஈட்டுவதற்காக புரட்சிகர சக்திகளை ஒன்றுதிரட்டவேண்டும். எங்களது கண்ணோட்டம் மார்க்சிய-லெனினியத்துடன் முற்றிலும் இனக்கமுடையதாகும்.

மார்க்சிய - லெனினியவாதிகளின் இந்த கண்ணோட்டத்திற்கு எதிரான முறையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், ''நன்கு வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் ஜனநாயகம் மற்றும் சோசலிச கடமைகளுக்கு இடையில் எந்தவகையான எல்லைக்கோடும் வரையறுக்க முடியாதவாறு ஒன்றோடொன்று நெருக்கமாக இரண்டும் ஒரே கடமை யாக இணைந்து மாறிவிட்டது'' [1] என்கின்றனர். இது நீண்டகால

---

1. ஏ. பெலியகோவ், எப். பார்லாட்ஸ்கை, ''சோசலிசப் புரட்சி குறித்த லெனினிய கருத்துக்களும் இன்றைய உலகமும்'', கம்யூனிஸ்ட், எண். 13, மாஸ்கோ 1960.

போராட்டத்திற்கு பதில் உடனடி போராட்டங்களையும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பதில் சீர்திருத்தவாதத்தையும் முன்வைப்பதாகும்.

லெனின் கூறினார் :

''வெகுஜனங்களின் புரட்சிகரப் போராட்ட முறைகளோடு இணைக்கப் படாத எந்த ஒரு சீர்திருத்தமும் பலன் தரக்கூடியதாக, உண்மையான தாக, நீடித்து இருக்கக்கூடியதாக இருக்கமுடியாது'' ''தொழிலாளர் இயக்கத்தின் புரட்சிகர முறையுடன் சீர்திருத்தத்துக்கான போராட் டத்தை இணைக்காத ஒரு தொழிலாளர் கட்சி ஒரு குழுவாக, மக்களிடமிருந்து துண்டிக்கப்பட்டதாக மாறிவிடக்கூடும், மேலும்... இது உண்மையான புரட்சிகர சோசலிசத்தின் வெற்றிக்கு மிகப் பெரும் அபாயமாகவும் இருக்கும்''[1]

லெனின் மேலும் சொல்கிறார், ''ஒவ்வொரு ஜனநாயக கோரிக்கை யும் வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளர்களைப் பொருத்தவரையில் சோசலிசத்தின் மிக உயர்ந்த நலன்களுக்கு கீழ்பட்டதே''.[2] மேலும், அரசும் புரட்சியும் என்ற நூலில் லெனின் எங்கெல்சை மேற்கோள் காட்டி எழுதுகிறார், அன்றாட தற்காலிக நலன்களுக்கான மாபெரும் முக்கியத் துவம் வாய்ந்த நிலைப்பாட்டை மறந்து விடுவதும், பின்விளைவுகளைப் பற்றி ஆராய்ந்து பார்க்காமல் அப்போதைய வெற்றிக்காக முயற்சிப்பதும் போராடுவதும் நிகழ்காலத்திற்காக இயக்கத்தின் எதிர்காலத்தைத் தியாகம் செய்வதும் சந்தர்ப்பவாதம் ஆகும். அதுவும் அபாயகரமான சந்தர்ப்பவாதமாகும்.

குறிப்பாக இந்த அடிப்படையில்தான் ''சீர்திருத்தத்தை புகழ்வது, ஏகாதிபத்திய முதலாளிகளுக்கு அடிபணிவது, புரட்சியை பழிப்பது, கைவிடுவது''[3] ஆகியவற்றுக்காக காவுட்ஸ்கியை விமர்சனம் செய்தார் லெனின். அவர் சொல்கிறார், ''பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்திய

---

1. வி. இ. லெனின், ''சோசலிசப் பிரச்சாரக் கழகத்தின் செய லாளருக்கு'', நூல் திரட்டு, ரசியப்பதிப்பு, மாஸ்கோ 1950, தொகுதி 21, பக்கம் 389.
2. வி. இ. லெனின், ''மார்க்சியத்தின் கேலிச் சித்திரமும், ஏகாதி பத்திய பொருளாதார வாதமும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேஷனல் பப்ளிசர்ஸ், நியூயார்க், 1943, தொகுதி 5, பக்கம் 292.
3. வி. இ. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல்மொழி பதிப்பகம், மாஸ்கோ, 1952, தொகுதி 2, பகுதி 2, பக்கம் 95.

முதலாளிகளை புரட்சிகரமான முறையில் தூக்கி எறிய போராடி வரு கிறது'' ஆனால் காவுட்ஸ்கியோ, ''ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிந்து கொண்டே அதை சீர்திருத்த முறையில் முன்னேற்றவும் அதற்கு ஒத்துப் போகவு் போராடுகிறார்''.[1]

லெனின் காவுட்ஸ்கியை செய்த விமர்சனம் இன்றைய ரசிய கம்யூ னிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கும் பொருந்துகிற சித்திரமாகும்.

உழைக்கும் வர்க்கத்தையும், பரந்துபட்ட மக்களையும் புரட்சியில் வழி நடத்திச் செல்வதற்கு, பாட்டாளி வர்க்கக் கட்சி போராட்டத்தின் அனைத்து வடிவங்களிலும் தேர்ச்சி பெற வேண்டும், வேறுபட்ட வடிவங் களை ஒன்றிணைக்கவும், போராட்டத்தின் நிலைமை மாறுவதற்கு ஏற்ப ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்திற்கு விரைவாக மாற்றிக் கொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும். அமைதியான மற்றும் ஆயுதந் தாங்கிய, பகிரங்கமான மற்றும் இரகசியமான, சட்டப்படியான மற்றும் சட்ட விரோதமான, பாராளுமன்ற முறையிலான மற்றும் மக்கள் திரள் போராட்டமாக, உள்நாட்டு மற்றும் சர்வதேச போராட்டமாக இவ்வாறு எல்லாவிதமான போராட்ட வடிவங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தால்தான் அது எந்த சூழ்நிலையிலும் வெல்லப்பட முடியாததாக இருக்கும் என்று நாங்கள் எப்போதும் கூறிவந்திருக்கிறோம்.

சரியாகச் சொன்னால், சர்வதேச பாட்டாளி வர்க்கப் போராட்டத் தின் வரலாற்று அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட சீனக் கம்யூனிஸ்டு கள், சீனப் புரட்சியின் குறிப்பான தனித்தன்மைகளுக்கு ஏற்ப போராட் டத்தின் அனைத்து வடிவங்களிலும் முழுமையாகவும் திறமையாகவும் தேர்ச்சி பெற்றிருந்ததன் விளைவாகவே சீனப்புரட்சி வெற்றியடைந்தது. சீனப் புரட்சியில் ஆயுதப் போராட்டமே முதன்மையான வடிவமாக இருந்தது. ஆனால் போராட்டத்தின் பிற வடிவங்களையும் பயன் படுத்தாமல் இருந்திருந்தால் புரட்சி வெற்றியடைந்திருக்க முடியாது.

சீனப் புரட்சியின் காலகட்டத்தில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு முனைகளில் போராடியது. அது சட்டவாத வலது விலகலையும், 'இடது' சட்டவிரோத விலகலையும் எதிர்த்துப் போராடியது. சட்டப் பூர்வமான போராட்டத்தை சட்ட விரோதமான போராட்டத்துடன் சரியான விதத்தில் இணைத்தது. ஒட்டுமொத்தமாக நாட்டில், அது புரட்சிகர தளப்பிரதேசங்களில் நடந்த போராட்டங்களையும் கோமின்டாங்

1. *வி. இ. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல் மொழி பதிப்பகம், மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 2, பக்கம் 95.*

பகுதிகளில் நடந்த போராட்டங்களையும் அது சரியாக இணைத்தது, கோமின்டாங் பகுதிகளில் பகிரங்க மற்றும் தலைமறைவு வேலைகளை சரியாக இணைத்தது, சட்டப்பூர்வ வாய்ப்புகளை முழுவதுமாகப் பயன்படுத்திக்கொண்டு தலைமறைவு வேலைகளுக்கு வழிகாட்டும் கட்சி விதிகளை உறுதியாகக் கடைபிடித்தது. சீனப் புரட்சி ஒரு சிக்கலான மற்றும் பல்வேறுவிதமான போராட்ட வடிவங்களை சீனாவின் அதன் குறிப்பான நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் உருவாக்கியது.

அதன் நீண்டகால நடைமுறை அனுபவத்தின் விளைவாக, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சட்டப்படியான போராட்டங்களை நிராகரிப்பதும், கட்சியின் பணிகளை குறுகிய எல்லைக்குள் கட்டுப்படுத்திக்கொள்வதும், நிறுத்திவிடுவதும், அதன்மூலம் மக்களிடமிருந்து தானே தனிமைப் படுவதும் தவறாகும் என்பதை முழுவதும் உணர்ந்துள்ளது. ஆனால், திருத்தல்வாதிகளால் தம்பட்டமடிக்கப்படும், சட்டவாதத்தை ஒருவர் ஒருபோதும் சகித்துக்கொள்ளக்கூடாது. திருத்தல்வாதிகள் ஆயுதப் போராட்டத்தையும், பிற சட்ட விரோதமான போராட்டத்தையும் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் ஆளும் வர்க்கத்தால் அனுமதிக்கப் பட்ட சட்டப்படியான போராட்டங்களிலும் நடவடிக்கைகளிலும் மட்டுமே ஈடுபடுகின்றனர். கட்சியின் நடவடிக்கைகளையும், மக்கள் போராட்டங்களையும் ஆளும் வர்க்கங்களின் சட்ட எல்லைக்கு உட் படுத்தி விடுகின்றனர். கட்சியின் அடிப்படைத் திட்டத்தை கேவலப் படுத்தி அதை அடியோடு கைவிடுகிறார்கள். பிற்போக்குவாத சட்டமுறை களையே ஏற்றுக்கொண்டு புரட்சியையே காட்டிக்கொடுக்கிறார்கள்.

லெனின் தனது விமர்சனத்தில் சரியாகவே சுட்டிக்காட்டியபடி காவுட்ஸ்கி போன்ற திரிபுவாதிகள் முதலாளித்துவ சட்டவாதத்தால் இழிவுக்கும், அவமதிப்புக்கும் உள்ளாக்கப்பட்டார்கள், ''தற்போதைய போலீஸ் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு கொடுக்கப் பட்ட ஒரு மொந்தை கூழுக்கு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி செய்யும் உரிமை விற்கப்பட்டுவிட்டது.''[1]

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அவர்களுடைய சீடர்களும் பல்வேறு போராட்ட வடிவங்கள் குறித்துப்பேசினாலும், உண்மையில் அவர்கள் போராட்ட வடிவத்தை மாற்றுவது என்ற பெயரில் சட்ட வாதத்தில் ஊன்றி நின்று பாட்டாளி வர்க்கப் புரட்சியின்

---

1. *வி. இ. லெனின், ''இரண்டாவது அகிலத்தின் தகர்வு'', நூல் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேஷனல் பப்ளிசர்ஸ், நியூயார்க், 1930, தொகுதி 18, பக்கம் 314.*

குறிக்கோளையே கைவிடுகிறார்கள். இது லெனினியத்துக்குப் பதிலாக காவுட்ஸ்கியிசத்தை பின்பற்றுவதைத்தான் காட்டுகிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் லெனினுடைய ''இடதுசாரிக் கம்யூனிசம் இளம் பருவக்கோளாறு'' என்ற மாபெரும் படைப்பினைத் தங்களின் தவறான பாதையை நியாயப்படுத்துவதற்கும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்குவதற்கும் ஒரு ''அடிப்படையாக'' பயன்படுத்தி வருகின்றனர்.

இது முற்றிலும் பயனற்றது. லெனினுடைய பிற படைப்புகளைப் போலவே இதுவும் மார்க்சிய-லெனினியவாதிகளுக்கு சந்தர்ப்பவாதத்தின் பல்வேறு வகைகளை எதிர்த்து போராடப் பயன்படுமே தவிர என்றுமே திருத்தல்வாதத்தின் ஆதரவாளர்களுக்கு ஒரு கருவியாகப் பயன்படாது.

லெனின் ''இடது சாரி'' இளம்பருவக் கோளாறை விமர்சித்து புரட்சிகரப் போர்த் தந்திரங்களைப் பிரயோகிப்பதில் திறமையாக இருக்கும்படியும், புரட்சிக்குத் தயாரிப்பதில் இன்னும் சிறப்பாகச் செயல் படும்படியும் பாட்டாளி வர்க்க கட்சியைக் கேட்டுக் கொண்டபோது— அவர் ஏற்கனவே இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளிடமிருந்து துண்டித்துக் கொண்டு, மூன்றாவது அகிலத்தைத் தோற்றுவித்திருந்தார்.

உண்மையில், '' 'இடதுசாரி' கம்யூனிசம் இளம்பருவக் கோளாறு'' என்ற நூலில் சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் முதன்மையான எதிரி அந்தச் சமயத்தில் காவுட்ஸ்கி வகைப்பட்ட சந்தர்ப்பவாதமே என்பதை குறிப்பிட்டிருந்தார் லெனின். மேலும் அவர் திருத்தல்வாதத் திலிருந்து முழுமையாக முறித்துக் கொள்ளாதவரை புரட்சிகர போர்த் தந்திரங்களில் தேர்ச்சி பெறுவது எப்படி என்ற பேச்சுக்கே இடமிருக்க முடியாது என்பதைத் திரும்ப திரும்ப வலியுறுத்தினார்.

''இடது சாரி'' இளம்பருவக் கோளாறுக்காக லெனினால் விமர்சிக் கப்பட்ட தோழர்கள் யாவரும் புரட்சியை விரும்புகிறவர்களாக இருந் தனர். ஆனால் பிற்கால திருத்தல்வாதி குருச்சேவ் அதற்கு எதிராக இருக்கிறார். எனவே இவர் காவுட்ஸ்கியை போன்றவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர் என்பதால் அவருக்கு ''இடது சாரி'' இளம் பருவக் கோளாறை எதிர்ப்பது என்ற பிரச்சினை குறித்து பேச யோக்கியதையில்லை.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை 'டிராட்ஸ்கியவாதத்' தன்மை கொண்டிருப்பதாக குற்றஞ்சாட்டுவது ஒரு

முட்டாள்தனமாகும். உண்மையில் குருச்சேவ்தான் டிராட்ஸ்கியசத்தின் வாரிசாக மாறி இன்றைய டிராஸ்கியஸ்டுகளுடன் ஒன்றுபட்டு நிற்கிறார்.

டிராட்ஸ்கியிசம் பல்வேறு பிரச்சினைகளில் பல்வேறு விதமாக வெளிப்படுகிறது. மேலும் அது அடிக்கடி 'தீவிர இடதுசாரி' முகமூடியை அணிந்துகொள்கிறது. ஆனால் அதன் சாரம் புரட்சியை எதிர்ப்பதும், புரட்சியை மறுப்பதுமேயாகும்.

பாட்டாளி வர்க்கப் புரட்சியையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் எதிர்ப்பது என்ற அடிப்படையில் டிராட்ஸ்கியசமும், இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதமும் உண்மையில் ஒன்றாகவே இருக்கின்றன. அதனால்தான் ஸ்டாலின் திரும்பத் திரும்ப டிராட்ஸ்கியசத்தை ஒருரக மென்ஷ்விசம் என்றும், காவுட்ஸ்கியிசம் என்றும், சமுக ஜனநாயகம் என்றும் மேலும் அது எதிர்ப்புரட்சிகர முதலாளிகளின் முன்னேறிய பிரிவு என்றும் கூறினார்.

இன்றைய குருச்சேவ் திருத்தல்வாதமும் சாரத்தில் புரட்சியை எதிர்ப்பதாகவும் மறுப்பதாகவும் இருக்கிறது. ஆகவே குருச்சேவின் திருத்தல்வாதம் காவுட்ஸ்கியிசத்துடன் ஒரே குட்டையில் ஊறிய மட்டை என்பது மட்டுமல்ல புரட்சியை எதிர்ப்பதில் டிராட்ஸ்கியிசத்தோடும் ஒன்று சேர்கிறது என்பதுதான் தர்க்க ரீதியான முடிவு. எனவே குருச்சேவ் தனக்குத்தானே டிராட்ஸ்கியிச முத்திரையைக் குத்திக் கொள்வதுதான் சிறந்தது.

வேறுபட்ட இரு பாதைகள்
வேறுபட்ட இரு முடிவுகள்

வரலாறுதான் மிகச் சிறந்த சாட்சியாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின் சர்வதேச கம்யூனிச இயக்கத்திலும், மக்களின் புரட்சிகரப் போராட்டத்திலும் செறிவான அனுபவங்கள் நமக்கு கிடைத்துள்ளன. அவற்றில் சில வெற்றிகரமான அனுபவங்கள், சில தோல்விகரமான அனுபவங்கள். இந்த வரலாற்று அனுபவத்திலிருந்து அனைத்து நாடுகளின் கம்யூனிஸ்டுகளும், புரட்சிகர மக்களும் சரியான முடிவுகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் அக்டோபர் புரட்சிப் பாதையையும் புரட்சிகர மார்க்சிய-லெனினிய வழியையும் பின்பற்றி கிழக்கு

அய்ரோப்பா, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகள் சோசலிசப் புரட்சிகளை நடத்தி வெற்றி பெற்றுள்ளன. அக்டோபர் புரட்சியின் அனுபவங்களுக்குப் பின் சீன, கிழக்கு அய்ரோப்பிய நாடுகள், கொரியா, வியட்னாம், கியூபா, முதலிய நாடுகளின் புரட்சிகர அனுபவங்களும் நமக்கு கிடைத்துள்ளன. இந்த வெற்றிகரமான புரட்சிகள், அக்டோபர் புரட்சி அனுபவத்தையும், மார்க்சிய-லெனினியத்தையும் வளர்த்து செழுமைப்படுத்தி உள்ளன.

சீனாவிலிருந்து கியூபாவரை எல்லா நாடுகளிலும் நடைபெற்ற புரட்சிகள் விதிவிலக்கின்றி ஆயுதந்தாங்கிய போராட்டத்தின் மூலமும் ஏகாதிபத்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கும், தலையீட்டுக்கும் எதிராகப் போராடியதன் மூலமும் வெற்றியடைந்திருக்கின்றன.

சீன மக்கள், மூன்று வருட 'மக்கள் விடுதலை யுத்தம்' உள்பட இருபத்திரெண்டு வருடங்கள் புரட்சிகர யுத்தத்தை நடத்திய பிறகே புரட்சியில் வெற்றி பெற்றனர். மக்கள் விடுதலை யுத்தத்தில் இறுதிவரை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவு பெற்ற சியாங்கேஷேக் பிற்போக்குவாதிகளை அவர்கள் முழுமையாகத் தோற்கடித்தனர்.

கொரிய மக்கள் 1930 முதல் 15 வருடங்கள் ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக புரட்சிகரமான ஆயுதந்தாங்கிய போராட்டத்தை தொடர்ந்து நடத்தினர். புரட்சிகர ஆயுதப்படையை கட்டியமைத்து விரிவுபடுத்தி இறுதியில் ரசியப் படையின் உதவியோடு வெற்றி பெற்றனர். கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு தோற்றுவிக்கப்பட்ட பின், மறுபடியும் மூன்று வருடம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆயுதப் படை ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடி அதனை தோற்கடித்த பின்னரே புரட்சியை உறுதியாக நிலை நிறுத்த முடிந்தது.

1945 ஆகஸ்டில் வியட்னாம் மக்கள் அரசியல் அதிகாரத்தை ஆயுதந்தாங்கிய எழுச்சியின் மூலம் கைப்பற்றினர். அப்பொழுது தொடங்கி பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தோடும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடும் எட்டு வருடங்கள் போராடி அதற்குப்பின்னரே வட வியட்னாமில் வெற்றி பெற்றனர். தென் வியட்னாம் மக்கள் இன்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக வீரமிக்க போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

1953-ல் கியூபா மக்கள் ஆயுதந்தாங்கிய எழுச்சியை தொடங்கினார்கள். அதற்குப் பின் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதனுடைய பொம்மை ஆதரவாளரான பாடிஸ்டாவையும் தூக்கி எறிய புரட்சிகரமான போரை இரண்டு ஆண்டுகள் நடத்தவேண்டி இருந்தது.

அப் புரட்சியின் வெற்றிக்குப்பின் கியூபா மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கூலிப்படைகளின் படை எடுப்பை எதிர்த்து போராடினர். புரட்சியின் பலனைப் பாதுகாத்தனர்.

பிற சோசலிச நாடுகளும் ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் நிறுவப்பட்டன.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் சீனாவிலிருந்து கியூபா வரை நடைபெற்ற பல்வேறு பாட்டாளி வர்க்கப் புரட்சிகரப் போர்களின் வெற்றியிலிருந்து நமக்கு கிடைக்கும் முக்கியப் படிப்பினைகள் யாவை ?

1. பலாத்காரப் புரட்சிதான் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சர்வவியாபக விதியாக இருந்து வருகிறது. சோசலிசத்திற்கான மாற்றத்திற்காக பாட்டாளி வர்க்கம் ஆயுதந்தாங்கிய போராட்டத்தை நடத்தி பழைய அரசு நிறுவனங்களை ஒழித்துக்கட்டி பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை நிறுவவேண்டும்.

2. பாட்டாளி வர்க்கத்தின் மிக நம்பகமான நேசசக்தி விவசாயிகளே. பாட்டாளி வர்க்கம் விவசாயிகளோடு நெருக்கமாக இணைந்து, தொழிலாளர்-விவசாயிகள் கூட்டின் அடிப்படையில் ஒரு பரந்த அய்க்கிய முன்னணியை உருவாக்கி, புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை வலியுறுத்தவேண்டும்.

3. எல்லா நாடுகளிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் மக்கள் புரட்சிகளின் முதல் எதிரியாகும். ஆகவே பாட்டாளி வர்க்கம் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய பதாகையை உயர்த்திப்பிடித்து, அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் உள்நாட்டு ஏவல் நாய்களையும் தீர்க்கமாக எதிர்த்து போராடி தோற்கடிக்க வேண்டும்.

4. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளின் புரட்சிதான் மிகச் சிறந்த துணையாகும். எல்லா நாடுகளிலுமுள்ள தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டும். அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளுடனும் ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்திய அடிவருடிகளுக்கும் எதிராக ஒன்றுபட்டு ஒரு பரந்த சர்வதேச அய்க்கிய முன்னணி அமைக்க வேண்டும்.

5. புரட்சியை உருவாக்க ஒரு புரட்சிகரமான கட்சி அவசியம். மார்க்சிய-லெனினிய அடிப்படையிலான புரட்சிகரத் தத்துவத்தையும் நடைமுறையையும் கொண்டதாகவும், திருத்தல்வாதத்திற்கும் சந்தர்ப்பவாதத்திற்கும் எதிராக சமரசமற்ற போக்கை பின்பற்றக் கூடியதாகவும்,

பிற்போக்கு ஆளும் வர்க்கத்துக்கும் அவர்களின் அரசு அதிகாரத்துக்கும் எதிராக புரட்சிகர நிலைப்பாட்டை மேற்கொள்ளக்கூடியதாகவும் இல்லாமல் ஒரு பாட்டாளிவர்க்க புரட்சிகர கட்சி, புரட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் வெற்றி பெறச் செய்வது இயலாத காரியம் ஆகும்.

புரட்சிகர ஆயுதந்தாங்கிய போராட்டம் என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு மட்டுமல்லாது அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளின் தேசிய ஜன நாயகப் புரட்சிக்கும் பிரதான முக்கியத்துவம் உடையதாகும். இந்த விசயத்தில் அல்ஜீரிய தேசிய விடுதலை யுத்தத்தின் வெற்றி ஒரு சிறந்த உதாரணமாகும்.

புரட்சிகரமான பாதையை பின்பற்றி சரியான யுத்த தந்திரம், மற்றும் போர்த் தந்திரத்தை வகுத்து மக்களின் புரட்சிகர போராட்டத்துக்கு செயலூக்கத்துடன் தலைமை தாங்கிய கட்சிகள் அனைத்தும் புரட்சிகர இயக்கத்தைப் படிப்படியாக வெற்றியை நோக்கி அழைத்துச் சென்று, வேகத்துடன் வளர்ந்து பலம் பெற்றுள்ளன என்பதையே பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் போருக்குப் பிந்திய முழுமையான வரலாறு காட்டு கிறது. அதற்கு மாறாக, புரட்சிகரமற்ற சந்தர்ப்பவாத பாதையை மேற் கொண்டு, குருச்சேவின் சமாதான மாற்றத்தை ஏற்றுக் கொண்டு செயல் பட்ட கட்சிகள் புரட்சிகரப் போராட்டத்துக்கு கடுமையான சேதங்களை விளைவித்து தங்களை உயிரற்ற சீர்திருத்தவாத கட்சிகளாக முற்றிலு மாக சீரழித்து பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக முதலாளிவர்க்கத்தின் கைக் கருவிகளாக மாறிவிட்டன. இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு உதாரணங்கள் நிறையவே உள்ளன.

ஒரு காலத்தில் ஈராக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் முழுமையான புரட்சிகர குணாம்சங்களைப் பெற்றிருந்தனர். ஆனால் குருச்சேவின் திருத்தல்வாதப் பாதை அவர்கள் மீது திணிக்கப்பட்டதன் விளைவாக அவர்கள் எதிர்ப்புரட்சிக்கு எதிராக விழிப்புடன் இருக்க தவறிவிட்டனர். அதனால் ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பின் போது தலைமை தோழர்கள் பலர் வீரத்துடன் தங்கள் உயிரை தியாகம் செய் தனர். மேலும் ஆயிரக்கணக்கான ஈராக் கம்யூனிஸ்டுகளும், புரட்சியாளர் களும் படுகொலை செய்யப்பட்டனர். சக்தி வாய்ந்த ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி சிதறடிக்கப்பட்டது. ஈராக்கின் புரட்சிகர லட்சியம் பெரும் பின்னடைவுக்குள்ளானது. இந்தப் படிப்பினை பாட்டாளி வர்க்கப் புரட்சி வரலாற்றில் ஒரு துயர்மிகு அனுபவமாகும், இரத்தத்தால் எழுதப்பட்ட ஒரு படிப்பினையாகும்.

அல்ஜீரிய கம்யூனிஸ்ட் கட்சி குருச்சேவ் மற்றும் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் சொல்லுக்கு கட்டுப்பட்டு ஆயுதப் போராட்டத்திற்கு எதிராக திரிபுவாத பாதையை ஏற்றுக் கொண்டது. ஆனால் இந்த குப்பையை ஏற்றுக்கொள்ள அல்ஜீரிய மக்கள் மறுத்துவிட்டனர். அவர்கள் ஏகாதிபத்தியத்துக்கெதிராக தேசியவிடுதலைக்காக துணிவுடன் போராடினர். தேசிய விடுதலைக்காக ஆயுதந்தாங்கிய போராட்டத்தை தொடர்ந்து ஏழு வருடங்கள் நடத்தி இறுதியாக பிரெஞ்சு அரசாங்கம் அல்ஜீரியாவின் சுதந்திரத்தை அங்கீகரிக்குமாறு நிர்ப்பந்தித்துள்ளனர். ஆனால் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திருத்தல்வாதப் பாதையை பின்பற்றிய அல்ஜீரிய கம்யூனிஸ்ட் கட்சி, மக்களின் நம்பிக்கையையும் அல்ஜீரிய அரசியல் வாழ்வில் தனது ஸ்தானத்தையும் இழந்தது.

கியூபா புரட்சியின்போது, மக்கள் சோசலிசக் கட்சியின் தலைவர்கள் சிலர் புரட்சிகர மார்க்சிய-லெனினிய பாதையான புரட்சிகர ஆயுதப் போராட்டப் பாதையை மறுத்து, குருச்சேவின் திருத்தல்வாத பாதையை பின்பற்றி சமாதான மாற்றத்தை முன்வைத்தனர், பலாத்காரப் புரட்சியை எதிர்த்தனர். இந்த நிலைமையில் கியூபாவுக்கு உள்ளேயும், வெளியேயும் தோழர் பிடல் காஸ்ட்ரோவின் தலைமையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட மார்க்சிய-லெனினிய வாதிகள், பலாத்காரப்புரட்சியை மறுத்தவர்களை ஒதுக்கிவிட்டு கியூபா புரட்சிகர மக்களோடு இணைந்து புரட்சியை நடத்தி இறுதியாக மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியை ஈட்டினர்.

பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் நீண்டகாலமாக திருத்தல்வாதப் பாதையை பின்பற்றிவந்த தோரே போன்றவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சிலர் குருச்சேவுக்கு மதிப்பளித்து 'பாராளுமன்றப் பாதையை' பிரச்சாரம் செய்தனர். உண்மையில் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியை ஒரு சமூக ஜனநாயக கட்சியின் மட்டத்துக்கு தரம் தாழ்த்தினர். அவர்கள் மக்களின் புரட்சிகர விருப்பங்களுக்கு செயலூக்கமுள்ள ஆதரவளிப்பதை நிறுத்திக் கொண்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசியப்பதாகையை மூட்டைகட்டி வைத்துவிட்டனர். அவர்களுடைய திருத்தல்வாத பாதையை பின்பற்றியதன் விளைவாக ஒரு காலத்தில் மக்களிடம் மாபெரும் செல்வாக்கு பெற்றிருந்த கம்யூனிஸ்ட் கட்சி நாளடைவில் மக்களிடமிருந்து தனிமைப்பட்டு நாளுக்கு நாள் சிதைவடைந்து வருகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் நீண்ட காலமாக திருத்தல்வாதப் பாதையை மேற்கொண்டு வந்த டாங்கே போன்ற சிலர் புரட்சிப் பதாகையை கீழே எறிந்தனர். மக்களை தேசிய மற்றும்

ஜனநாயகப் புரட்சிகரப் போராட்டத்தில் வழிநடத்த தவறினர். இந்த டாங்கே கும்பல் மேலும் திருத்தல்வாதப் பாதையில் சரிந்து தேசிய வெறியர்களாக சீரழிந்து இந்தியப் பெருமுதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களின் பிற்போக்குக் கொள்கைகளை பரப்பும் கருவிகளாக மாறி பாட்டாளி வர்க்கத்தை கைவிட்ட ஓடுகாலிகளாக மாறிவிட்டனர்.

அடிப்படையிலே மாறுபட்ட இரண்டு பாதைகள், அடிப்படையிலேயே வேறுபட்ட இருவேறு முடிவுகளைத்தான் தருகின்றன என்று வரலாற்றுப் பதிவேடுகள் நமக்குக் காட்டுகின்றன. இந்த படிப்பினைகள் யாவும் கவனத்துடன் ஆராயப்பட வேண்டும்.

பிரெளடர் மற்றும் டிட்டோ முதல் குருச்சேவ் வரை

குருச்சேவின் திருத்தல்வாதம் மிக ஆழமான சமூக, வரலாற்று வேர்களைக் கொண்டும், காலத்தின் முத்திரையைப் பெற்றும் இருக்கிறது. லெனின் கூறியது போல, ''சந்தர்ப்பவாதம் என்பது ஒரு விபத்தோ, தனிப்பட்ட நபர்கள் செய்கிற பாவமோ, தவறோ, துரோகமோ அல்ல, மாறாக அது ஒரு முழு வரலாற்று சகாப்தத்தின் சமூக உற்பத்தி''.[1]

இரண்டாம் உலகப் போருக்குப் பின் பெரும் வளர்ச்சி பெற்ற சர்வதேச கம்யூனிச இயக்கம் அதன் சொந்த அணிகளுக்குள்ளேயே அதற்கு எதிரான கருத்துக்களை தோற்றுவித்துள்ளது. இக்கருத்துக்கள் மார்க்சிய-லெனினியத்துக்கும், பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும், சோசலிசத்துக்கும் எதிரான திருத்தல்வாத எதிர்ப்போக்கு ஆகும். இந்த எதிர்ப்போக்கு முதன் முதலாக பிரதானமாக பிரௌடரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. பின் டிட்டோவாலும் இப்போது குருச்சேவாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. குருச்சேவின் திருத்தல்வாதம் என்பது பிரௌடரிசம் மற்றும் டிட்டோயிசத்தின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமேயன்றி வேறல்ல.

1935ஆம் வாக்கில் பிரௌடர் தனது திருத்தல்வாதத்தை வெளிப்படுத்த துவங்கினார். அவர் முதலாளித்துவ ஜனநாயகத்தை வணக்கத்திற்குரியதாக்கினார். முதலாளித்துவ அரசாங்கத்தின் மீது தேவையான விமர்சனம் செய்வதைக்கூட கைவிட்டார். முதலாளித்துவ சர்வாதிகார

1: *வி. இ. லெனின், ''இரண்டாவது அகிலத்தின் தகர்வு'', நூல் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேஷனல் பப்ளிசர்ஸ், நியூயார்க், 1930, தொகுதி 18, பக்கம் 310.*

அமைப்பு கம்யூனிஸ்டுகளுக்கு நேர்த்தியான ஒன்று என்று புகழ்ந்தார். ''20-ம் நூற்றாண்டின் அமெரிக்கனிசமே கம்யூனிசம்''[1] என்பது அவரது முழக்கம்.

இரண்டாம் உலகப் போரின் போது பாசிசத்துக்கு எதிரான சர்வ தேசிய, உள்நாட்டு அய்க்கிய முன்னணிகள் தோன்றியவுடன் அவர் ''ஜனநாயகம்'', ''முன்னேற்றம்'' மற்றும் ''பகுத்தறிவு'' போன்ற பல்வேறு முதலாளித்துவ கருத்துக்களில் மூழ்கித் திளைத்து முதலாளிகளின் முன் மண்டியிட்டு முற்ற முழுக்க சரணாகதியாளராக சிதைந்து விட்டார்.

பிரௌடர் திருத்தல்வாதக் கருத்துக்களின் ஒரு முழு தொகுப்பையே பிரச்சாரம் செய்தார். அது முதலாளிகளைப் புகழ்வதாகவும் புரட்சியை எதிர்ப்பதாகவும் மறுப்பதாகவும் இருந்தது.

ரசியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றின் டெஹ்ரான் பிரகடனம் சோசலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையிலான ஒரு புதிய ''நீண்ட கால ஒத்துழைப்பும், நம்பிக்கையும்'' கொண்ட வரலாற்று கட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், அது ''பல தலைமுறைகளுக்கு ஒரு நிலையான அமைதி''[2] நிலவ உத்தரவாதப்படுத்தும் தகுதி வாய்ந்தது என்றும் பிரௌடர் பிரகடனம் செய்தார்.

ரசியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றின் சர்வதேசிய உடன்பாடுகள் ''விதி விலக்கின்றி உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டினுடைய, ஒவ்வொரு மனிதனுடைய ஜீவாதார நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன''[3] என்று பிரௌடர் பிரச்சாரம் செய்தார். மேலும் அவர், உள்நாட்டு குழப்பங்கள் நிலவுவது என்பது, சர்வதேசிய ஒழுங்கு நிலவுவதற்கு பொருந்தாததாகும்'' என்று கூறினார். ஆகவே ஒரு நாட்டுக்குள் ''வர்க்கப் போராட்டம் வெடிப்பதை'' எதிர்ப்பதும் உள்நாட்டில் வர்க்கப் போராட்டத்தை ''குறைப்பதும் அதன் மீது குறிப்பான வரையறைகளை ஏற்படுத்துவதும்''[4] மிக மிக அவசியமாகும் என்றார்.

---

1. *வில்லியம் பாஸ்டர், ''அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு'', ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேசனல் பப்ளிசர்ஸ், நியூயார்க் 1952, பக்கம் 337.*
2. *ஏர்ல் பிரௌடர், டெக்ரான், ''போரிலும் சமாதானத்திலும் நமது பாதை'', ஆங்கிலப் பதிப்பு, நியூயார்க் 1944, பக்கம் 23, 27*
3. *மேற்கண்ட நூல், பக்கம் 31.*
4. *ஏர்ல் பிரௌடர், ''டெக்ரானும் அமெரிக்காவும்'', ஆங்கிலப் பதிப்பு, தொழிலாளர் நூலக பதிப்பகத்தார், நியூயார்க் 1944, பக்கம் 17, 18.*

ஒரு புதிய யுத்தமானது ''உலகின் பெரும்பகுதியை அழித்துவிடும் ஒரு உண்மையான பேரழிவாக இருக்கும்'' என்றும், அது ''உலகின் பெரும்பகுதியை 50 அல்லது 100 ஆண்டுகளுக்கு காட்டுமிராண்டித்தன வாழ்க்கைக்குப் பின் தள்ளிவிடக் கூடும்'' என்றும், ''அனைத்து வர்க்க வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்ட மேம்படுத்தும் உடன்பாட்டினை வலியுறுத்துவது''[1] யுத்தத்தின் அழிவுகளைத் துடைத்தெறியும் பொருட்டு அவசியமாகும் என்றும் அவர் பிரச்சாரம் செய்தார்.

சோசலிசத்தை அடைவதற்கு ''ஜனநாயக ரீதியாக இணங்கச் செய்வது மற்றும் திடநம்பிக்கை இவற்றையே முழுவதுமாகச்''[2] சார்ந்திருக்கும்படி அவர் வலியுறுத்தினார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு சில நாடுகள் ''சமாதான முறையில் சோசலிசத்துக்கு மாறிச் செல்வதற்கு சாத்தியமான நிலைமைகளை''[3] அடைந்திருப்பதாக அவர் அறிவித்தார்.

பாட்டாளி வர்க்க கட்சிகளின் சுதந்திரமான பாத்திரத்தை அவர் மறுத்தார். ''கம்யூனிஸ்டுகளின் நடைமுறை ரீதியான அரசியல் நோக்கங்கள் அவர்களை விட மிகப் பெரிய எண்ணிக்கையிலான கம்யூனிஸ்டுகளல்லாதவர்களுடன் அனைத்து முக்கிய அம்சங்களிலும் உடன்பாடானவையாக நீண்டகாலத்துக்கு இருக்கும்''[4] என்று அவர் கூறினார்.

இந்த கருத்துக்களால் வழிகாட்டப்பட்டு அவர் அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியை கலைத்து விட்டார்.

ஒரு குறிப்பிட்ட காலம்வரை பிரௌடரின் திருத்தல்வாதம் அமெரிக்கப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்தை அதன் அழிவின் விளிம்புக்கே இட்டுச் சென்றது. அது பிற நாடுகளது பாட்டாளி வர்க்க கட்சிகளுக்கு கலைப்புவாதம் என்ற நஞ்சைப் பரப்பி கெடுத்தது.

---

1. *ஏர்ல் பிரௌடர், ''கம்யூனிஸ்டுகளும் தேசிய ஒற்றுமையும்'', தொழிலாளர் நூலக பதிப்பகத்தார், நியூயார்க் 1944, பக்கம் 9, 10.*
2. *ஏர்ல் பிரௌடர், ''வெற்றிக்கான பாதை'', ஆங்கிலப் பதிப்பு, தொழிலாளர் நூலகபதிப்பகத்தார், நியூயார்க் 1941, பக்கம் 22.*
3. *ஏர்ல் பிரௌடர், ''உலகக் கம்யூனிசமும் அமெரிக்க வெளி நாட்டுக் கொள்கையும்'', ஆங்கிலப்பதிப்பு, ஆசிரியரால் பதிப்பிக் கப் பட்டது, நியூயார்க் நகரம், 1948, பக்கம் 19.*
4. *ஏர்ல் பிரௌடர், டெக்ரான், ''போரிலும் சமாதானத்திலும் நமது பாதை'', இண்டர்நேஷனல் பப்ளிசர்ஸ், நியூயார்க் 1944, பக்கம் 117.*

பிரௌடரின் திருத்தல்வாதப் பாதை தோழர் வில்லியம் பாஸ்டரின் தலைமையிலிருந்த பல அமெரிக்க கம்யூனிஸ்டுகளால் நிராகரிக்கப் பட்டது., பல தோழமை கட்சிகளும் இதனை மறுத்து ஒதுக்கின. ஆனாலும் பிரௌடரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட திரிபுவாதப் போக்கு சர்வதேச கம்யூனிச இயக்கத்தால் முழுமையாக விமர்சிக்கப்பட்டு முறியடிக்கப்படவில்லை. போருக்கு பிந்திய புதிய சூழ்நிலைகளில் திருத்தல்வாதப் போக்கு மீண்டும் சில நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் அணிகள் மத்தியில் தோன்றியது.

முதலாளித்துவ நாடுகளில் சில கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் புரட்சிகர மார்க்சிய—லெனினியப் பாதையைக் கைவிட்டு ''சமாதான மாற்றம்'' என்ற பாதையைத் தழுவிக்கொண்டபோது அங்கே முதன் முதலாக திருத்தல்வாதப் போக்கின் வளர்ச்சி வெளிப்பட்டது. இந்தப் பாதை டோக்ளியாட்டியின் அமைப்பு சீர்திருத்தக்கொள்கையின்வாயிலாக தன்னை தெளிவாகவே வகைப்படுத்திக் கொண்டுள்ளது. அது முதலாளித்துவ ஜனநாயகத்தின் சட்டபூர்வ வழிகளின் மூலமாகவே பாட்டாளி வர்க்கம் அரசுத் தலைமையை அடையலாம் என்றும், ஏகபோக முதலாளித்துவத்திற்கு சேவை செய்யும் வகையில் திட்டமிடுதல் மற்றும் தேசிய மயமாக்கல் போன்ற வழிகளிலேயே தேசிய பொருளாதாரத்தை சோசலிசமயமாக்கி விடலாம் என்றும், இப்பாதையின்படி முதலாளித்துவ அரசு இயந்திரத்தை நொறுக்காமலேயே புதிய சோசலிச உற்பத்தி உறவுகளை நிறுவி விடலாம், சோசலிசத்துக்கு மாறிவிடலாம். என்றும் வாதிடுகிறது. நடைமுறையில் இது கம்யூனிசத்தை சமூக ஜனநாயகமாக சிதைப்பதற்கு ஒப்பாகும்.

சோசலிச நாடுகளில் யூகோஸ்லாவியாவில் முதன் முதலில் திரிபு வாதப் போக்கு தோன்றியது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சரணடைவது டிட்டோவிய திருத்தல்வாதத்தின் முக்கிய குணாம்சம் ஆகும். டிட்டோ கும்பல் தனது உடலையும், ஆன்மாவையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு விற்றுவிட்டது. அவர்கள் யூகோஸ்லாவியாவில் முதலாளித்துவத்தை மீண்டும் நிலைநாட்டியதோடல்லாமல், சர்வதேச கம்யூனிச இயக்கம் மற்றும் சோசலிச முகாமின் அடிப்படைகளை அழிப்பதில் ஏகாதிபத்தியத்தின் கருவியாகவும் செயல்பட்டனர். உலகப் புரட்சிக்கு எதிரான சதிவேலைகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சிறப்பு படைப் பிரிவாக அவர்கள் பங்காற்றி வருகிறார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு பணிபுரியவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியை எதிர்க்கவும், அழிக்கவுமான தங்கள் முயற்சியில் டிட்டோ கும்பல் பலாத்காரப் புரட்சி இன்று ''சமுதாய முரண்பாடுகளைத் தீர்க்கும்

வழியில் தேவையற்ற ஒன்றாக ஆகிவருகிறது''[1] என்றும் முதலாளித்துவ பாராளுமன்றத்தின் மூலம் ''பரிணாம முறையில் சோசலிசத்துக்கான மாற்றம் சாத்தியமானது என்பது மட்டுமல்ல இது ஏற்கனவே உண்மையாகியும் விட்டது''[2] என்றும் வெளிப்படையாகவே பேசியது. அவர்கள் பாகுபாடின்றி முதலாளித்துவத்தை சோசலிசத்தோடு சமமாக குறிப்பிட்டு இன்றைய உலகம் ''ஒட்டு மொத்தமாக சோசலிசத்துக்குள் 'குதித்து' உலகமே சோசலிசமயமாக மாறிவிட்டது''[3] என்றனர். மேலும் அவர்கள் ''சோசலிசமா முதலாளித்துவமா என்ற பிரச்சினை ஏற்கனவே உலக அளவில் தீர்க்கப்பட்டு விட்டது''[4] என்றும் சொல்கின்றனர்.

பிரௌடரிய திருத்தல்வாதம், அமைப்பு சீர்திருத்தவாதக்கொள்கை, டிட்டோவிய திருத்தல்வாதம் ஆகிய இவையே இரண்டாம் உலகப் போருக்குப் பின் திருத்தல்வாதப் போக்கின் முதன்மையான வெளிப்பாடுகளாக இருந்து வருகின்றன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது மற்றும் 22-வது காங்கிரசுகளுக்கு இடையே குருச்சேவின் திருத்தல்வாதப் பாதை ''சமாதான மாற்றம்'', ''சமாதான சகவாழ்வு'' மற்றும் ''சமாதானப் போட்டி'' என்று ஒரு முழுமைப் பெற்ற அமைப்பு முறையாகவே மாறிவிட்டது. அதனை தனது ''புதிய படைப்பாக'' குருச்சேவ் எல்லா இடங்களிலும் விளம்பரப்படுத்தி வருகிறார். அது ஒன்றும் புதியதல்ல, மாறாக பிரௌடரின் திரிபுவாதம், அமைப்பு சீர்திருத்தக் கொள்கை, டிட்டோவின் திரிபுவாதம் ஆகியவற்றை இணைத்து புதுப்பிக்கப்பட்ட ஒரு பகட்டான கலவைதான். அது சர்வதேச உறவுகளில் குருச்சேவின் திரிபுவாதம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு சரணாகதியை நடைமுறைப்படுத்தி வருகிறது. ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளில் இது பிற்போக்கு ஆளும் வர்க்கத்துக்கு அடிபணியும் நடைமுறையை பின்பற்றுகிறது. சோசலிச நாடுகளில் இது முதலாளித்துவ சக்திகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது.

---

1. *இலியா கொசோனோவிக்''வரலாற்றுப் பொருள் முதல் வாதம்'', ரசியப் பதிப்பு, மாஸ்கோ, 1958, பக்கம் 352.*
2. *எட்வர்ட் கார்டுதெல்ஜ், ''சோசலிச ஜனநாயகத்தில் யூகோஸ்லாவிய அனுபவம்'', ஆஸ்லோவில் நடந்த நார்வேஜியன் தொழிலாளர் கட்சிக் கூட்டத்தில் ஆற்றிய உரை, அக்டோபர் 8, 1954.*
3. *மியாக்கோ தோதொரோவிக், ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே உள்ள உறவு பற்றிய அறிக்கை'', கம்யூனிஸ்ட், எண் 7, 8, பெல்கிரேடு 1956*
4. *மிர்கோ பெரோவிக், ''பொலிடிக்கா எக்கோனோமிஜா'', இரண்டாவது பதிப்பு, பெல்கிரேடு, 1958, பக்கம் 466.*

பெர்ன்ஸ்டைன், காவுட்ஸ்கி மற்றும் இரண்டாம் அகிலத்தின் இதர திரிபுவாதிகள் ஒரே பாதையில் ஓடி முதல் உலகயுத்த காலத்தில் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் எனில், இரண்டாம் உலக யுத்தப் போருக்குப் பின்பு பிரௌடர், டிட்டோ, குருச்சேவ் விசயத்திலும் இது உண்மையாக உள்ளது.

பிரௌடர் இந்த விசயத்தை தெளிவுபடுத்தியுள்ளார். 1960-ல் அவர் எழுதினார்: ''1945-ல் நான் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றப் படக் காரணமாக இருந்த அதே 'முரண்பட்ட கருத்தைத்'தான் குருச்சேவ் இப்போது கடைபிடிக்கிறார்'' குருச்சேவின் புதிய கொள்கை ''வார்த் தைக்கு வார்த்தை நான் 15 ஆண்டுகளுக்கு முன்பே வாதிட்ட அதே பாதையாகத்தான் இருக்கிறது, எனவே எனது குற்றம்-தற்காலிகமாக வாவது-புதிய வைதீக முறையாக மாறியிருக்கிறது''[1] என்று மேலும் அவர் குறிப்பிட்டார்.

தானும் டிட்டோ கும்பலும் ''ஒரே கருத்தைச் சேர்ந்தவர்கள், ஒரே கோட்பாட்டில் வழிகாட்டப்படுபவர்கள்''[2] என்று குருச்சேவே ஒப்புக் கொண்டுள்ளார்.

எனவே குருச்சேவின் திரிபுவாதமானது பிரௌடர், காவுட்ஸ்கி, பெர்ன்ஸ்டைன் மற்றும் டிட்டோ ஆகியவர்களின் திரிபுவாதத்தைக் காட்டிலும் இயல்பாகவே நாசகரமானது. ஏன்? ஏனென்றால் ரசியா தான் முதல் சோசலிச அரசாகும். சோசலிச முகாமிலேயே இது ஒரு பெரிய நாடு என்பதோடு, லெனினியத்தின் தாய் நாடாகும். ரசிய கம்யூனிஸ்ட் கட்சி லெனினால் உருவாக்கப்பட்ட பெரிய கட்சியாகும். சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் அது வரலாற்றால் உருவாக்கப் பட்ட ஒரு பெருமைக்குரிய இடத்தை வகித்து வருகிறது. குருச்சேவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ரசிய நாட்டின் தலைவர் என்ற பொறுப்பை பயன்படுத்தி தனது திரிபுவாத பாதையைத் திணித்து வருகிறார்.

குருச்சேவ் தனது திருத்தல்வாதப் பாதையை ''லெனினிய'' பாதை என்று வர்ணிக்கிறார். மாபெரும் லெனினிய மற்றும் மாபெரும் போல்ஷ்விக் கட்சியின் பெருமைகளைப் பயன்படுத்தி மக்களைக் குழப்பியும், ஏமாற்றியும் வருகிறார்.

---

1. *ஏர்ல் பிரௌடர், ''அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்டாலின் எப்படி அழித்தார்'', ஹார்பர்ஸ் இதழ், மார்ச் 1960.*

2. *என். எஸ். குருச்சேவ், யூகோஸ்லாவியாவில் உள்ள பிரியோனி யில் வெளிநாட்டு நிருபர்களுக்கு அளித்த பேட்டி, ஆகஸ்ட் 28, 1963.*

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பராம்பரிய மதிப்பையும், பெரிய கட்சி மற்றும் பெரியநாடு என்ற அந்தஸ்தையும் பயன்படுத்தி எல்லாவித அரசியல், பொருளாதார, ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் தனது திரிபுவாத பாதையை ஏற்றுக்கொள்ளுமாறு மற்றவர்களை நிர்ப்பந்திக் கிறார் குருச்சேவ்.

உழைக்கும் மக்களிடையிலான பிரபுக்குலத்தவரை விலைக்கு வாங்குகிற ஏகாதிபத்திய கொள்கை போன்று மார்க்சிய—லெனினியத் துக்கு துரோகமிழைக்கும் சர்வதேச கம்யூனிச இயக்கத்திலுள்ள முதலாளியவாத கம்யூனிஸ்டுகளை குருச்சேவ் விலைக்கு வாங்குகிறார். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் எதிர்ப்புரட்சிப் பாதையை புகழும்படியும் அதற்கு சேவை செய்யும்படியும் அவர்களைத் தூண்டு கிறார்.

இதன் காரணமாக சென்ற காலத்தில் அல்லது நிகழ்காலத்தில் தோன்றிய பிற திரிபுவாதிகள் அனைவரும் குருச்சேவ் முன் அற்பமான வர்களாகிறார்கள். 1957-ம் ஆண்டு பிரகடனம் சுட்டிக்காட்டுவது போல், நவீன திரிபுவாதத்தின் சமுதாய ஊற்றுக்கண் அந்நிய ஏகாதிபத்தி யங்களின் நிர்ப்பந்தங்களுக்கு சரணடைவதும், உள்நாட்டில் முதலாளிய செல்வாக்கு உட்படுவதும் ஆகும்.

பழைய திரிபுவாதிகளைப் போலவே புதிய திரிபுவாதிகளும் லெனின் வர்ணித்திருப்பது போல், ''யதார்த்தத்தில் அவர்கள் முதலாளி வர்க்கத்தின் ஒரு அரசியல் பிரிவு... தொழிலாளி வர்க்க இயக்கத்தில் அதன் செல்வாக்கை பரப்புகின்றவர்களும், அதன் ஏஜெண்டுகளும் ஆவர்.'' [1]

லெனின் கூற்றுப்படி நவீன திரிபுவாதத்தின் பொருளாதார அடிப்படை பழைய திரிபுவாதத்தைப் போன்றே ''தொழிலாளர் இயக்கத்தின் தலைமையிலுள்ள மிகச்சிறிய ஒரு பகுதிதான்.'' [2]

அமெரிக்காவின் தலைமையில் உள்ள ஏகாதிபத்தியம் மற்றும் சர்வதேச ஏகபோக மூலதனம் ஆகியவற்றின் விளைபொருளே நவீன திரிபுவாதம். அணுஆயுதப் போர் மிரட்டலால் பீதியுற்றதன் விளை

---

1. *வி. இ. லெனின், ''இரண்டாவது அகிலத்தின் தகர்வு'', நூல் திரட்டு, ஆங்கிலப்பதிப்பு, இண்டர்நேஷனல் பப்ளிசர்ஸ், நியூயார்க் 1930, தொகுதி 18, பக்கம் 310.*

2. *வி. இ. லெனின், ''சந்தர்ப்பவாதமும் இரண்டாவது அகிலத்தின் தகர்வும்'', நூல் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேஷனல் பப்ளிசர்ஸ், நியூயார்க், 1930, தொகுதி 18, பக்கம் 389.*

வாகவும், விலைக்கு வாங்கப்பட்டு சீரழிததின் விளைவாகவும், நவீன திருத்தல்வாதிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பகடைக்காய்களாக சேவை செய்வதோடு,புரட்சியை எதிர்ப்பதில் அதன் அடிமைத்தனமான சேவகர்களாக உள்ளனர்.

அமெரிக்க ஏகாதிபததியத்தின் போர்வெறிக் கூச்சலில் நடுக்கமுற்று அறிவிழந்துவிட்ட குருச்சேவ் கூட இந்த ''நோவாவின் பேழை'', அதாவது இந்த உலகம் ஒவ்வொரு கணமும் அபாயத்தில் உள்ளது என்று கருதுவதோடு மனித இனத்தின் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை முழுமையாக இழந்துவிட்டுள்ளார். தேசிய அகங்காரம் என்ற கண்ணோட்டத்தில் இருக்கும் அவர், அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் மற்றும் நாடுகளின் புரட்சிகள், தனக்கு தொல்லைகளை உருவாக்கும் என்றும், அதில் தன்னை சிக்க வைத்துவிடும் என்றும் அஞ்சுகிறார். அதனால் ஒவ்வொரு புரட்சியையும் எல்லா வழிகளிலும் தடுக்க வேண்டும் என்று விரும்புகிறார். காங்கோ நாட்டின் விவகாரத்தில் நடந்து கொண்டதுபோல் அமெரிக்க ஏகாதி பத்தியத்தோடு எவ்விதமான மனசாட்சியுமின்றி கூட்டு சேர்ந்து, மக்கள் புரட்சியை துடைத்தெறிய முயற்சிக்கிறார். அவ்வாறு செய்வதன் மூலம் ஆபத்தைத் தவிர்க்க முடியும் என்றும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து, சதித்தனமாக உலகத்தை தங்கள் பரஸ்பர செல்வாக்கு மண்ட லங்களாக பிரித்து கொள்ள முடியும் என்றும் இவ்வாறு ஒரே கல்லில் இரண்டு பறவைகளை வீழ்த்த முடியும் என நினைக்கிறார். இவையாவும் குருச்சேவ் வரலாற்றில் மிகப் பெரிய சரணாகதிவாதி என்பதை நிரூபிக் கிறது. குருச்சேவின் கேடுகெட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத் தினால் மாபெரும் ரசிய நாட்டிற்கே தவிர்க்க முடியாதபடி அளவிட முடியாத பாதிப்புகள் ஏற்படும்.

பல பத்தாண்டுகளாக சோசலிச நாடாக இருந்த ரசியாவில் குருச்சேவின் திரிபுவாதம் ஏன் தோன்றியது? உண்மையில் இது ஒன்றும் அதிசயமான விசயமல்ல. ஒவ்வொரு சோசலிச நாட்டிலும் சரித்திர ரீதியாக எது வெற்றி பெறும்-சோசலிசமா அல்லது முதலாளித் துவமா-என்பது நீண்டகால அடிப்படையில் படிப்படியாக தீர்மானிக் கப்படும் பிரச்சினையாகும். சமூகத்தில் முதலாளித்துவ சக்திகளும், வர்க்கங்களும் இருக்கும்வரை திரிபுவாதம் வளருவதற்கான அடிப் படைகள் இருக்கின்றன.

ரசிய நாட்டில் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டு விட்டன என்றும் முதலா ளித்துவம் உருவாகும் அபாயம் இல்லை என்றும் கம்யூனிச கட்டுமான பணி நடைபெற்று வருகிறது என்றும் குருச்சேவ் அடித்துக் கூறுகிறார். இக்கூற்றுகள் யாவும் பொய்களே.

உண்மையில், குருச்சேவின் திரிபுவாத ஆட்சியின் விளைவாக, ரசிய அரசின் இயல்பு மாறிவிட்டது என்றும், அது தற்போது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக இல்லை என்று வெளிப்படையாகவே அறிவித்து விட்டதன் விளைவாகவும் தொடர்ந்து அடுக்கடுக்காக பல தவறான உள் நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதன் விளைவாகவும் ரசிய சமுதாயத்தில் முதலாளித்துவ சக்திகள் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் அரசியல், பொருளாதார, கலாச்சார மற்றும் தத்துவார்த்த துறைகள் உட்பட அனைத்து துறைகளிலும் மூழ்கடிக்கும் பெரும் வெள்ளமென பரவிவிட்டன. குருச்சேவ் திருத்தல் வாதத்தின் சமூக அடிப்படை குறிப்பாக ரசியாவில் தொடர்ந்து பரவிக் கொண்டிருக்கும் முதலாளித்துவ சக்திகளில்தான் அடங்கியிருக்கிறது.

குருச்சேவ் திரிபுவாதம் இந்த முதலாளித்துவ சக்திகளைத்தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அவர்களுக்கு சேவை செய்கிறது. எனவே இது கண்டிப்பாக ரசிய மக்களுக்கு கம்யூனிசத்தை கொண்டு வராது. அதற்கு மாறாக சோசலிசத்தின் பலன்களை ஒழித்து முதலாளித்துவத்தை திரும்பக் கொண்டு வருவதற்கான பெரும் வாய்ப்புக்களைத் திறந்து விட்டிருக்கிறது. இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் பெரிதும் விரும்பப்படும் ''சமாதான பரிணாம வளர்ச்சி'' என்ற பாதையேதான்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முழு வரலாறும் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்துக்கு சமாதான முறையில் மாறிச் செல்வது நடக்காது என்பதைத்தான் நமக்கு கூறுகிறது. இருந்த போதிலும் யூக்கோஸ்லாவியா, ''சமாதான பரிணாம வளர்ச்சி'' மூலம் சோசலிசத்திலிருந்து திரும்பவும் முதலாளித்துவ அமைப்புக்கு மாறியதற்கு ஒரு உதாரணமாக இருந்துள்ளது. இப்பொழுது குருச்சேவின் திரிபுவாதம் ரசிய நாட்டை அந்த பாதையில் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார வரலாற்றிலேயே இது ஒரு துயர மிக்க படிப்பினையாகும். எல்லா மார்க்சிய - லெனினியவாதிகளும், எல்லா புரட்சியாளர்களும் எதிர்கால தலைமுறையினரும் எந்த நிலைமையிலும் இந்த மாபெரும் படிப்பனையை மறக்கக்கூடாது.

எங்களது நம்பிக்கைகள்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரஸ் முடிந்து எட்டு வருடங்கள்தான் முடிந்துள்ளது. வரலாற்றின் இந்த மிகக் குறைந்த

காலத்தில் குருச்சேவின் திரிபுவாதம் ரசிய நாட்டிற்கும், சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர குறிக்கோளுக்கும் மாபெரும் துயர மிக்க சேதத்தை விளைவித்துள்ளது.

குருச்சேவ் திரிபுவாதத்தை மறுத்து அழித்தொழிக்க வேண்டிய நேரம்—சரியான நேரம்—இதுவே.

இங்கு ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைத் தோழர்களுக்கு நாங்கள் சில அறிவுரைகளை வழங்க விரும்புகிறோம். எண்ணற்ற திரிபுவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும், வரலாற்றின் குப்பைத் தொட்டியில் தூக்கியெறியப்பட்டிருக்கும்போது நீங்களும் ஏன் பிடிவாதமாக அவர்களின் உதாரணத்தை பின்பற்ற வேண்டும்?

திரிபுவாத தவறுகள் புரிந்த பிற தோழமைக் கட்சிகளின் தலைமைத் தோழர்களும் கூட சிந்தித்து பார்ப்பார்கள் என்று நாங்கள் நம்பிக்கை தெரிவிக்கிறோம். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் திரிபுவாத பாதையை பின்பற்றியதன் மூலம் அவர்கள் என்ன நன்மைகளை அடைந்திருக்க முடியும்? திருத்தல்வாதச் சேற்றில் ஆழமாக புதைந்து விட்ட ஒரு சிலரைத் தவிர பெரும்பாலான தோழர்கள் குழப்பப்பட்டுள்ளனர், ஏமாற்றப்பட்டுள்ளனர் அல்லது தவறான பாதையைப் பின்பற்ற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்கள் யாவரும் இறுதியில் புரட்சிகரப் பாதையைப் பின்பற்றி எதிர் புரட்சிப் பாதையை நிராகரித்து விடுவர் என்று நம்புகிறோம். மார்க்சிய-லெனினிய தத்துவத்தை பின்பற்றி இறுதியில் திரிபுவாதத்திலிருந்து விடுபட்டு விடுவார்கள் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம், இது குறித்து நாங்கள் மிகப் பெரிய நம்பிக்கைகளை மனதில் வைத்துள்ளோம்.

திரிபுவாதம் வரலாற்று சக்கரத்தை, புரட்சியின் போக்கை, கண்டிப்பாக மாற்றமுடியாது. தாமே புரட்சியை மேற்கொள்ளாத திரிபுவாத தலைவர்களால் உண்மையான மார்க்சியவாதிகளும், புரட்சிகர மக்களும் புரட்சிகரமாக எழுச்சியுறுவதை கண்டிப்பாக தடுக்கமுடியாது. ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும்'' என்ற தனது நூலில் லெனின் எழுதினார்: காவுட்ஸ்கி துரோகியாக மாறியபோது ஜெர்மன் மார்க்சியவாதியாக லீப்னெஹ்ட் தொழிலாளர் வர்க்கத்துக்கு ''இது போன்ற 'தலைவர்களை' வெளியே தள்ளுவதன்மூலம் நீங்கள் அவர்களின் பயனற்ற இழிவான பிரச்சாரங்களிலிருந்து விடுதலை பெற்று அவர்கள் இன்றியே புரட்சிக்கு திரண்டு எழுந்து, அவர்கள் இல்லாமலே,

அவர்களையும் மீறி புரட்சியை நோக்கி முன்னேறுங்கள்''[1] என்ற வேண்டுகோளை மட்டும்தான் விடுக்க முடிந்தது.

அய்ரோப்பாவின் பல கட்சிகளில் இரண்டாவது அகில வகைப்பட்ட திருத்தல்வாதம் பரவியிருந்தபோது, பிரெஞ்சு கம்யூனிஸ்ட் பால்கோலே என்பவரின் கருத்துக்களுக்கு லெனின் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். கோலே சொன்னார் :

''நமது எதிரிகள் சோசலிசம் திவாலாகி விட்டதாக உரக்க பேசி வருகிறார்கள். இது கொஞ்சம் அவசரப்பட்டு செய்யப் படுகிறது. இருப்பினும், அவர்கள் முழுமையாக தவறு செய்கிறார்கள் என யார் தைரியமாக சொல்லமுடியும்? இப்பொழுது அழிந்து கொண் டிருப்பது சோசலிசமேயல்ல, அது ஒரு வகையான சோசலிசம், அது இனிப்பு தடவிய சோசலிசம், இலட்சியப் பற்றில்லாத, எழுச்சியுணர்வு இல்லாத ஒரு தொப்பையான அதிகாரியின் வழிப்பட்ட, ஒரு தந்தைவழிக் குடும்ப வகைப்பட்ட சோசலிசம், துணிவோ, தீரமான உற்சாகமோ இல்லாத முதலாளித்துவத்துடன் நட்பு ரீதியான உடன்பாடுகளில் தனது மூக்கைப் புதைத்துக்கொண்டுள்ள ஒரு புள்ளி விவர பக்திமான் சோசலிசம், சீர்திருத்தங்களில் மட்டுமே முழுகவனத்தையும் செலுத்து கின்ற தனது பிறப்புரிமையை ஒரு சோற்றுப் பொட்டலத்துக்காக விற்று விட்ட சோசலிசம், மக்கள் பொறுமை இழக்கும்போது வடிகாலாகவும், பாட்டாளி வர்க்கத் துணிகரத்துக்கு ஒரு தானியங்கித் தடையாகவும் முதலாளிகளின் பார்வைக்கு தென்படும் சோசலிசம்.''[2]

எவ்வளவு அதி அற்புதமான வர்ணனை! லெனின் இதனை ஒரு பிரெஞ்சு கம்யூனிஸ்ட்டின் மிக நேர்மையான குரல் என்கிறார். மக்கள் இப்போது கேட்கிறார்கள்: இன்றைய நவீன திரிபுவாதம் செத்துக் கொண்டிருக்கும் அந்த ''ஒரு வகையான சோசலிசம்'' அல்லவா? திரிபுவாதத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டுள்ள பல கட்சிகளில் உள்ள எண்ணற்ற நேர்மையான கம்யூனிஸ்டுகளின் குரலை அவர்கள் வெகு சீக்கிரம் கேட்கத்தான் போகிறார்கள்.

---

1. *வி. இ. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஒடுகாலி காவுட்ஸ்கியும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அயல் மொழி பதிப்பகம், மாஸ்கோ, 1952, தொகுதி 2, பகுதி 2, பக்கம் 105.*
2. *லாவ்சனே, ''அழிந்து கொண்டிருக்கும் சோசலிசமும், மறுப் பிறப்பெடுக்க வேண்டிய சோசலிசமும்'' 1915.*

''ஒரு கப்பல் உடைந்து போனாலும் அதை அடுத்து ஆயிரம் கப்பல்கள் பயணம் செய்யத்தான் செய்கின்றன. ஒருமரம் பட்டுப் போனாலும் அதனடியில் பத்தாயிரக்கணக்கான மரக்கன்றுகள் தோன்றத் தான் செய்கின்றன'' போலி சோசலிசம் செத்துக்கொண்டிருக்கிறது, அதே சமயத்தில் விஞ்ஞான சோசலிசம் இளமை சக்தியோடு முன்னெப் போதுமில்லாத வேகத்தில் பாய்ந்து முன்னேறிவருகிறது. புரட்சிகர சோசலிசம் தனது வீரிய சக்தியால் எல்லாவிதமான தடைகளையும் இடையூறுகளையும் வென்று உலகம் முழுவதையும் வெற்றிகொள்ளும் வரை படிப்படியாக முன்னேறிச் செல்லும்.

இக்கட்டுரையை கம்யூனிஸ்ட் அறிக்கையின் கடைசியில் சொல்லப் பட்ட வார்த்தைகளைக் கொண்டு முடிப்போம்.

''தமது கருத்துக்களையும் இலட்சியங்களையும் மறைத்து வைப்பதை கம்யூனிஸ்டுகள் இழிவாகக் கருதுகிறார்கள். இன்றைய சமுதாய நிலைமைகள் அனைத்தையும் பலாத்காரமாக வீழ்த்தினால்தான் தமது இலட்சியங்களை அடையமுடியும் என்று அவர்கள் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துகிறார்கள். கம்யூனிஸ்ட் புரட்சியை நினைத்து ஆளும் வர்க்கங்கள் நடுநடுங்கட்டும்! பாட்டாளிகள் இழப்பதற்கு அடிமைச் சங்கிலியைத் தவிர வேறெதுவும் இல்லை. அவர்கள் வெல்வதற்கு ஓர் உலகம் இருக்கிறது.''

''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!''

குருச்சேவின் போலிக் கம்யூனிசமும் அதன் வரலாற்றுப் படிப்பினைகளும்

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்பதாவது விமர்சனம்
'மக்கள் தினசரி', 'செங்கொடி' பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்கள் (ஜூலை 14, 1964)

பாட்டாளி வர்க்கப் புரட்சி, மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய கோட்பாடுகள் மார்க்சிய-லெனினியத்தின் உள்ளுயிர்ச் சத்தாகும். புரட்சியை உயர்த்திப் பிடிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உயர்த்திப் பிடிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பதுமே மார்க்சிய-லெனினியத்திற்கும் அனைத்துவகை திரிபுவாதத்திற்கும் இடையே நடக்கும் போராட்டத்தின் மையமாக இருந்து வந்துள்ளது. இன்று உலகம் முழுவதும் உள்ள மார்க்சிய-லெனினியவாதிகளுக்கும், திரிபுவாத குருச்சேவ் கும்பலுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தின் குவிமையமாகவும் அதுவே உள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசில் திரிபுவாத குருச்சேவ் கும்பல், ''சமாதான சகவாழ்வு'', ''சமாதானப் போட்டி'', ''சமாதான மாற்றம்'' ஆகிய எதிர்ப்புரட்சிகரக் கோட்பாடுகளை

முழுமையாக்கியது, அது மட்டும் அல்லாமல், ''அனைத்து மக்களின் அரசு'', ''அனைத்து மக்களின் கட்சி'' ஆகிய அர்த்தமற்ற கோட்பாடுகளை முன்வைத்தது, ரசியாவில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திற்கு இனியும் அவசியம் இல்லை என அறிவித்தது. அதன் மூலம் அந்தக் கும்பல் தன்னுடைய திரிபுவாதத்தை ஒரு முழுமைப்பெற்ற முறைமையாக வளர்த்தெடுத்துள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசில் திரிபுவாத குருச்சேவ் கும்பலினால் முன்வைக்கப்பட்டுள்ள திட்டம் போலிக் கம்யூனிச திட்டமாகும், பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு எதிராகவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பாட்டாளி வர்க்கக் கட்சியையும் அழித்தொழிப்பதற்கரகவும் முன்வைக்கப்பட்ட திரிபுவாதத் திட்டமாகும்.

குருச்சேவ் கும்பல்''அனைத்து மக்களின் அரசு''என்ற போர்வையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிடுகிறது,''அனைத்துமக்களின் கட்சி'' என்ற போர்வையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பாட்டாளி வர்க்க குணாம்சத்தை மாற்றுகிறது, ''முழுஅளவிலான கம்யூனிசக் கட்டுமானம்'' என்ற போர்வையில் முதலாளித்துவத்தை மீட்டமைக்க வழிவகை செய்கிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு என்பதற்குப் பதிலாக ''அனைத்து மக்களின் அரசை'' முன்வைப்பதும் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிக் கட்சிக்குப் பதிலாக ''அனைத்து மக்களின் கட்சியை'' முன்வைப்பதும் கோட்பாட்டளவில் அர்த்தமற்றதும் நடைமுறையில் கடும் தீங்கு விளைவிக்கக்கூடியதும் ஆகும், இது மாபெரும் வரலாற்றுப் பின்னடைவாகும், இது கம்யூனிசத்தை நோக்கிய எந்த மாற்றத்தையும் சாத்தியமற்றதாக்கி முதலாளியத்தை மீட்டெடுக்கவே உதவும் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி 1963, ஜூன் 14 அன்று வெளியிட்ட ''சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய ஆலோசனைகளில்'' சுட்டிக்காட்டி இருந்தது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதமும், ரசியப் பத்திரிகைகளும் தங்களை நியாயப்படுத்தும் பொருட்டு புலமைவாதத்தில் இறங்கியுள்ளது. ''அனைத்து மக்களின் அரசு'', ''அனைத்து மக்களின் கட்சி'' பற்றிய நமது விமர்சனங்களை ''மார்க்சியத்திற்குப் புறம்பான'' குற்றச்சாட்டுகள் எனவும், ''சோவியத் வாழ்க்கையிலிருந்து தனிமைப்பட்டு போனதையே காட்டுகின்றன'' எனவும், ''கடந்த காலத்திற்குத் திரும்பிச் செல்லும்படியான'' கோரிக்கை எனவும் குற்றஞ்சாட்டுகிறது.

நல்லது, உண்மையில் யார் மார்க்சிய—லெனினியத்திலிருந்து விலகிச் சென்றுள்ளார்கள், சோவியத் வாழ்க்கை என்பது உண்மையில் என்ன, யார் உண்மையில் ரசியாவை கடந்த காலத்துக்கு கொண்டு செல்ல விரும்புகிறார்கள் என்பதை நாம் கண்டறிவோம்.

சோசலிச சமுதாயமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும்

சோசலிச சமுதாயத்தைப் பற்றிய சரியான கருத்தாக்கம் எது? சோசலிச கட்டம் முழுவதும் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் நிலவுமா? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை தொடர்ந்து பாதுகாத்து சோசலிசப் புரட்சியை இறுதிவரை எடுத்துச் செல்லவேண்டுமா? அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒழித்துவிட்டு முதலாளிய மீட்சிக்குப் பாதை அமைக்க வேண்டுமா? இந்தக் கேள்விகளுக்கு மார்க்சிய—லெனினியக் கோட்பாட்டின் அடிப்படையில் நின்றும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவங்களிலிருந்தும் சரியான பதில்கள் அளிக்கப்பட வேண்டும்.

முதலாளிய சமுதாயத்தை அப்புறப்படுத்திவிட்டு சோசலிச சமுதாயம் அமைப்பது மனித சமுதாயத்தின் வரலாற்றில் ஒரு மாபெரும் பாய்ச்சலாகும். சோசலிச சமுதாயம், வர்க்க சமுதாயத்திலிருந்து வர்க்கங்களற்ற சமுதாயத்திற்கு மாறிச் செல்லும் முக்கியமான வரலாற்றுக் கட்டமாகும். மனிதகுலம் சோசலிச சமுதாயத்தின் மூலமே கம்யூனிச சமுதாயத்திற்குள் நுழைகிறது.

சோசலிச சமுதாயம் முதலாளிய சமுதாயத்தைவிட ஒப்பற்ற அளவில் உயர்ந்ததாகும். சோசலிச சமுதாயத்தில் முதலாளி வர்க்க சர்வாதிகாரத்திற்குப் பதிலாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்படுகிறது. உற்பத்தி சாதனங்களில் தனியுடைமைக்கு பதிலாக பொதுவுடமை நிறுவப்படுகிறது. அடக்கப்பட்ட, சுரண்டப்பட்ட வர்க்கமாயிருந்த பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாக மாறுகிறது, உழைக்கும் மக்களின் சமூக நிலையில் அடிப்படை மாற்றம் ஏற்படுகிறது. பாட்டாளி வர்க்க அரசு சிறு அளவிலான சுரண்டலாளர்களின் மீது மட்டுமே சர்வாதிகாரத்தை நிறுவி, உழைக்கும் மக்களிடையே மிகப் பரந்த ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துகிறது, இது முதலாளிய சமுதாயத்தில் இயலாத ஜனநாயகமாகும். தேசவுடமையாக்கப்பட்ட தொழிற்துறையும், கூட்டுறவு முறைப்படுத்தப்பட்ட விவசாயமும் சமுதாய

உற்பத்தி சக்திகளின் வேகமான வளர்ச்சிக்குப் பேருதவி புரிகின்றன. அவற்றின் வளர்ச்சி விகிதத்தை, வேறு எந்தப் பழைய சமுதாயத் துடனும் ஒப்பிட முடியாத அளவுக்கு அதிகப்படுத்துகின்றன.

எவ்வாறாயினும், முதலாளிய சமுதாயத்திலிருந்துதான் சோசலிச சமுதாயம் பிறக்கிறது என்பதையும் கம்யூனிச சமுதாயத்தின் முதல் கட்டம்தான் இது என்பதையும் ஒருவர் பார்க்க மறுக்கக்கூடாது. இது இன்னும், பொருளாதாரத்திலும் மற்ற துறைகளிலும் முழு வளர்ச்சி யுற்ற கம்யூனிச சமுதாயமல்ல. இது தவிர்க்க முடியாத வகையில் முதலாளிய சமுதாயத்திலிருந்து பிறந்ததன் அடையாளங்களைக் கொண்டிருக்கும்.

சோசலிச சமுதாயத்தை வரையறுக்கும்பொழுது மார்க்ஸ் கூறினார்:

''நாம் இங்கு குறிப்பிடும் கம்யூனிச சமுதாயம், தன்னுடைய சொந்த அடிப்படைகளின் மீது வளர்ச்சியுற்ற ஒன்றல்ல. மாறாக, முதலாளிய சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் தோன்றியுள்ள ஒரு சமுதாயம். எனவே, அது பொருளாதாரம், ஒழுக்கம், அறிவுத்துறை ஆகிய அனைத்துத்துறைகளிலும் எந்தப் பழைய சமுதாயத்தின் கருப்பை யிலிருந்து அது தோன்றியதோ அந்தச் சமுதாயத்தின் அடையாளங் களைக் கொண்டதாயுள்ளது''[1]

கம்யூனிச சமுதாயத்தின் முதற்கட்டமாகிய சோசலிச சமுதாயத்தில், பொருளாதார ரீதியாக கம்யூனிசம் இன்னும் வளர்ச்சியுற்றிருக்க முடியாது, மேலும் அது முதலாளியத்தின் மரபுகளிலிருந்தும். மிச்ச சொச்சங்களிலிருந்தும் முழுமையாக விடுபட்டிருக்க முடியாது''[2] என்று லெனின் கூடக் குறிப்பிடுகிறார்.

சோசலிச சமுதாயத்தில், தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும், நகரத்திற்கும் கிராமத்திற்கும், உடல் உழைப்புக்கும் மூளை உழைப் புக்கும் இடையிலான வேறுபாடுகள் இன்னும் நிலவுகின்றன, முதலாளிய உரிமைகள் இன்னும்முழுவதுமாக ஒழிக்கப்படவில்லை. ''செலுத்தப்பட்ட உழைப்பின் அடிப்படையில் (தேவைகளின் அடிப்படையில் அல்ல) நுகர்பொருட்கள் விநியோகிக்கப்படுவதில் உள்ள அநீதியை உடனடியாக

---

1. காரல் மார்க்ஸ், ''கோதா திட்டம் பற்றிய விமர்சனம்'', மார்க்ஸ், எங்கெல்ஸ் தேர்வு நூல்கள், அ. மொ. ப., மாஸ்கோ 1951, தொகுதி 2 பக்கம் 21.
2. வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'', தேர்வு நூல்கள், அ.மொ,ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 1, பக்கம் 302.

நீக்கிவிட''[1] முடியாது, எனவே செல்வத்திலுள்ள வேறுபாடு தொடர்ந்து நிலவுகிறது. இந்த வேறுபாடுகளும், நிகழ்வுகளும், முதலாளிய உரிமைகளும் படிப்படியாகவே, ஒரு நீண்ட கால கட்டத்திலேயே மறையும். மார்க்ஸ் கூறியது போல, இந்த வேறுபாடுகள் மறைந்த பின்பே முதலாளிய உரிமைகள் முற்றிலும் ஒழிந்த பின்பே ''திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்'' என்ற கொள்கையின் அடிப்படையிலான முழுமையான கம்யூனிசத்தை அடைய முடியும்.

மார்க்சிய-லெனினியமும், ரசியா, சீனா மற்ற சோசலிச நாடுகளின் நடைமுறையும், சோசலிச் சமுதாயம் ஒரு மிக மிக நீண்ட வரலாற்றுக் கட்டத்தைக் கொண்டதாயிருக்கும் என்று நமக்கு போதிக்கின்றன. இந்தக் கட்டம் முழுவதும் முதலாளிய வர்க்கத்திற்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப்போராட்டம் தொடர்ந்து நிலவும், முதலாளியப் பாதைக்கும் சோசலிச பாதைக்கும் இடையில் ''யார் வெற்றி பெறுவார்கள்'', என்ற கேள்வி தொடர்ந்து இருக்கும், முதலாளிய மீட்புக்கான அபாயமும் தொடர்ந்து நிலவும்.

ஜூன் 14, 1963-ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி வெளியிட்ட 'சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பொதுவழி பற்றிய ஆலோசனை' கீழ்வருமாறு கூறுகிறது:

பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பும் மிக நீண்ட வரலாற்றுக் கட்டத்திற்கு வர்க்கப் போராட்டம் தொடரும், இது நமது விருப்பத்துக்கு அப்பாற்பட்ட புறநிலை விதியாகும், இது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன் இருந்ததிலிருந்து வடிவத்தில் மட்டுமே மாறுபட்டிருக்கும்.

அக்டோபர் புரட்சிக்குப் பின் லெனின் பலமுறை சுட்டிக்காட்டியதாவது :

அ) தூக்கியெறியப்பட்ட சுரண்டல்காரர்கள், அவர்கள் இழந்த ''சொர்க்கத்தை'' திரும்பப்பெற ஆயிரக்கணக்கான வழிகளில் எப்போதும் முயற்சி செய்வார்கள்.

ஆ) குட்டி முதலாளிய சூழ்நிலையில் முதலாளியத்தின் புதிய கூறுகள் தொடர்ந்து தன்னெழுச்சியாக உருவாகும்.

---

3. வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'', தேர்வு நூல்கள், அ.மொ.ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி1, பக்கம் 296.

இ) முதலாளிய வர்க்கத்தின் செல்வாக்கினாலும், எங்கும் பரவி யுள்ள குட்டி முதலாளிய வர்க்கத்தின் ஊழல் சூழ்நிலையாலும் பாதிக்கப் பட்ட, தொழிலாளி வர்க்க அணிகளிலிருந்தும், அரசாங்க ஊழியர் களிடமிருந்தும் புதிய முதலாளிய கூறுகளும், அரசியல் ரீதியாகச் சீரழிந்து போனவர்களும் தோன்றலாம்.

ஈ) சர்வதேச முதலாளியத்தின் முற்றுகையும், ஏகாதிபத்தியத்தின் ஆயுதத் தலையீட்டு அபாயமும், அமைதியான முறையில் சீர்குலைவைச் சாதிக்க அவர்கள் மேற்கொண்டுள்ள சதிச் செயல்களும் ஒரு சோசலிச நாட்டில் வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நிலவுவதற்கான புறச் சூழ்நிலைகளாக இருக்கின்றன.

லெனினுடைய இந்த முடிவுகளை வாழ்க்கை உறுதிப்படுத்தி உள்ளது.

சோசலிச சமுதாயத்தில், தூக்கி எறியப்பட்ட முதலாளிய வர்க்கமும் மற்ற பிற்போக்கு வர்க்கங்களும் நீண்ட காலத்திற்கு பலம் பொருந்திய தாக இருக்கும், சில அம்சங்களில் உண்மையில் மிகவும் பலம்வாய்ந்த தாய் இருக்கும். அவை சர்வதேச முதலாளிய வர்க்கத்துடன் ஆயிரக் கணக்கான தொடர்புகளைக் கொண்டிருக்கும். அவை தங்கள் தோல்வியை ஒத்துக்கொள்வதில்லை, அவை பாட்டாளி வர்க்கத்துடன் தங்களுடைய பலத்தைச் சோதிப்பதில் விடாப்பிடியாக இருக்கின்றன.

பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக எல்லாத் துறைகளிலும் அவர்கள் பகிரங்கமான மற்றும் மறைமுகமான போராட்டங்களை நடத்துகின்றனர். சோசலிசம், சோவியத் முறை, கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிய-லெனினியம் ஆகியவற்றுக்கு ஆதரவு என்ற பதாகையின் பின் இருந்துகொண்டு, அவர்கள் சோசலிசத்தை சீரழிக்கவும் முதலாளியத்தை மீட்கவும் வேலை செய்கிறார்கள். அரசியல் ரீதியாக அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் பகை கைதியாக நீண்டகாலத்திற்கு நீடிக்கிறார்கள், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தூக்கி எறிய தொடர்ந்து முயற்சிக்கிறார்கள். அரசாங்க அங்கங்களிலும், பொது அமைப்புகளிலும் பொருளாதாரத் துறைகளிலும், கலாச்சார மற்றும் கல்வி நிறுவனங்களிலும் அவர்கள் ஊடுருவி பாட்டாளி வர்க்கத் தலைமையை எதிர்க்கிறார்கள் அல்லது தலைமையைக் கைப்பற்றுகிறார்கள். பொருளாதார ரீதியாக, அனைத்து மக்களின் சோசலிச உடைமையையும், சோசலிச கூட்டுஉடைமையையும் உடைத்தெறிந்து, முதலாளிய சக்திகளை வளர்த்தெடுக்க எல்லா வழிமுறைகளையும் கையாளுகிறார்கள். சித்தாந்த, கலாச்சார, கல்வி துறைகளில் பாட்டாளி வர்க்க உலகக் கண்ணோட்டத்திற்கு பதில்

முதலாளிவர்க்க உலக கண்ணோட்டத்தை முன் வைக்கிறார்கள், முதலாளிய வர்க்க சித்தாந்தத்தால் பாட்டாளி வர்க்கத்தையும் மற்ற உழைக்கும் மக்களையும் களங்கப்படுத்துகிறார்கள்.

விவசாயத்தில் கொண்டு வரப்படும் கூட்டுப்பண்ணை முறை தனி நபர்களை கூட்டு விவசாயிகளாக மாற்றி, அவர்களுக்கு முழுமையான மறுபோதம் அளிப்பதற்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்குகிறது. எனினும், கூட்டு உடைமை அனைத்து மக்களின் உடைமையாக வளர்ச்சியுறும் வரை, தனி உடைமைப் பொருளாதாரத்தில் மிச்ச சொச்சங்கள் முழுமையாக மறையும் வரை, விவசாயிகளிடையே சிறு உற்பத்தியாளர்களின் பண்புகள் தவிர்க்க இயலாதவாறு நீடிக்கும், இந்தச் சூழ்நிலைமைகளில் தன்னெழுச்சியான முதலாளிய பண்புகள் தவிர்க்க இயலாதவை, புதிய பணக்கார விவசாயிகளின் வளர்ச்சிக்கு ஏற்ற அடிப்படை இன்னும் இங்கு இருக்கும், விவசாயிகள் மத்தியில் வர்க்க வேறுபாடுகள் தொடர்ந்து நிலவும்.

மேலே விவரிக்கப்பட்ட முதலாளிய வர்க்கத்தின் செயல்பாடுகள், அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கலாச்சாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் அந்த வர்க்க சீரழிவுகளின் தாக்கம், நகரம் மற்றும் கிராமங்களில் உள்ள சிறு உற்பத்தியாளர்களிடையே நிலவும் தன்னெழுச்சியான முதலாளியப் பண்புகள், எஞ்சி இருக்கக்கூடிய முதலாளிய உரிமைகளின் தாக்கம், பழைய சமுதாயத்தின் பழக்க வழக்கம் ஆகிய அனைத்தும் பாட்டாளிவர்க்க அணிகள் மத்தியிலும் கட்சி மற்றும் அரசாங்க அமைப்புகளிலும் அரசியல் ரீதியாகச் சீரழிந்த வர்களை உருவாக்குகின்றன, அனைத்து மக்களுக்கும் சொந்தமான அரசு தொழிற்சாலைகளில் புதிய முதலாளிய சக்திகளையும், ஊழல் பேர்வழிகளையும், கையாடல் பேர்வழிகளையும் உருவாக்குகின்றன, கலாச்சார, கல்வி நிறுவனங்களிலும் அறிவு ஜீவிகள் மத்தியிலும் புதிய முதலாளிய அறிவுஜீவிகளை உருவாக்குகின்றன. இந்த புதிய முதலாளிய சக்திகளும், அரசியல் சீரழிவாளர்களும் தூக்கி எறியப்பட்டு, ஆனால் முற்றிலும் அழிக்கப்படாது உள்ள பழைய முதலாளிய சக்திகளுடனும், பிற சுரண்டும் வர்க்கங்களுடனும் இணைந்து சோசலிசத்தைத் தாக்கு கின்றனர். தலைமை அமைப்பில் பதுங்கியுள்ள அரசியல் சீரழிவாளர்கள் மிகவும் ஆபத்தானவர்கள், ஏனெனில், அவர்கள் கீழ்மட்ட அமைப்பு களிலுள்ள முதலாளிய சக்திகளை ஆதரித்தும், பாதுகாத்தும் வருகிறார்கள்.

ஏகாதிபத்தியம் நிலவும் வரை, சோசலிச நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கம் உள்நாட்டு முதலாளிகளை எதிர்த்தும், சர்வதேச ஏகாதிபத் தியத்தை எதிர்த்தும் போராடியே தீர வேண்டும். ஏகாதிபத்தியம்

சோசலிச நாடுகளுக்கு எதிரான ஆயுதத் தலையீட்டை மேற்கொள்ளவும் அல்லது அமைதியான முறையில் சீர்குலைவைச் செய்யவும் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ளும். அது சோசலிச நாடுகளை அழிக்க அல்லது முதலாளிய நாடுகளாகச் சீரழிந்துபோகச் செய்ய அனைத்து முயற்சியையும் மேற்கொள்ளும் இந்த சர்வதேச வர்க்கப் போராட்டம் தவிர்க்க இயலாதவாறு சோசலிச நாடுகளில் பிரதிபலிக்கும். லெனின் சொன்னார்:

''முதலாளியத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச்செல்வது ஒரு முழுமையான வரலாற்றுச் சகாப்தத்தைக் குறிக்கிறது, இந்தச் சகாப்தம் முடியும்வரை, தவிர்க்கமுடியாதவாறு சுரண்டும் வர்க்கம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான நம்பிக்கையை வளர்த்துவரும். அந்த நம்பிக்கைகள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளாக மாறும்.''[1] மேலும் அவர் சொன்னார்:

வர்க்கங்களை ஒழிக்க ஒரு நீண்ட, கடினமான, உறுதியான வர்க்கப் போராட்டம் தேவைப்படுகிறது. அது மூலதனத்தின் அதிகாரத்தைத் தூக்கியெறிந்த பின்பும், முதலாளிய அரசை அழித்த பின்பும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவிய பின்பும், (பழைய சோசலிசம் மற்றும் பழைய சமுக ஜனநாயகவாதிகளின் கொச்சையான பிரதிநிதிகளின் கற்பனையைப் போல) மறைந்துவிடுவதில்லை. மாறாக, அது தன் வடிவங்களை மட்டுமே மாற்றிக்கொள்கிறது; பலவகைகளில் அதுமேலும் கடுமையானதாக மாறுகிறது.''[2]

சோசலிசக் கட்டம் முழுவதும் அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கலாச்சாரம், கல்வி ஆகிய துறைகளில் பாட்டாளி வர்க்கத்திற்கும், முதலாளிய வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாதது. இது ஒரு நீண்ட, திரும்பத் திரும்ப நடக்கக்கூடிய, மிகவும் சிக்கலான போராட்டமாகும். கடல் அலைகளைப் போல இது சில சமயம் உயர எழும், சில சமங்களில் பின்வாங்கும், சில நேரங்களில் அமைதியாயிருக்கும், சில நேரங்களில் புயலாய் வீசி அடிக்கும். இது சோசலிச சமுதாயத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய போராட்டமாகும். ஒரு சோசலிச சமுதாயம் கம்யூனிச சமுதாயத்தை நோக்கி முன்னேறுமா அல்லது முதலாளியத்தை நோக்கி பின்வாங்குமா என்பது இந்த நீண்ட போராட்டத்தின் முடிவைப் பொறுத்தே இருக்கிறது.

---

1. வி. இ. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும், ஓடுகாலி காவுட்ஸ்கியும்.''
2. வி.இ. லெனின், ''ஹங்கேரிய பாட்டாளிகளுக்கு வாழ்த்துக்கள்''

சோசலிச சமுதாயத்தில் நடக்கும் வர்க்கப் போராட்டம் தவிர்க்க இயலாதவாறு கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் பிரதிபலிக்கும். ஒரு சோசலிச நாட்டை முதலாளிய நாடாக சீரழியச் செய்ய வேண்டுமானால் முதலில் அந்த நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியை திரிபுவாதக் கட்சியாக சீரழியச் செய்வது அவசியம் என்பதை முதலாளி வர்க்கமும், சர்வதேச ஏகாதிபத்தியமும் நன்கு புரிந்து கொண்டுள்ளன. பழைய, புதிய முதலாளியக் கூறுகளும், பழைய, புதிய பணக்கார விவசாயிகளும், அனைத்து வகையான சீரழிவு சக்திகளும் திருத்தல் வாதத்தின் சமூக அடிப்படையாய் அமைகின்றனர். கம்யூனிஸ்ட் கட்சிக்குள் தங்களுடைய ஏஜெண்டுகளை உருவாக்க அவர்கள் எல்லா வழிகளையும் பயன்படுத்துகிறார்கள். முதலாளியத்தின் செல்வாக்கு நிலவுவது திரிபுவாதத்திற்கு உள்நாட்டு ஆதாரம், ஏகாதிபத்தியத்தின் நெருக்கடிகளுக்குப் பணிவது வெளி ஆதாரமாகும். சோசலிசக் கட்டம் முழுவதும் சோசலிச நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் மார்க்சிய—லெனினியத்திற்கும், பல்வேறு வகைப்பட்ட சந்தர்ப்பவாதத்திற்கும்—பிரதானமாக திரிபுவாதத்திற்கும்—இடையிலான தவிர்க்க முடியாத போராட்டம் இருந்தே தீரும். இந்தத் திரிபுவாதத்தின் பண்பு என்னவென்றால், வர்க்கங்கள் இருப்பதையும், வர்க்கப் போராட்டம் நிலவுவதையும் மறுத்துக் கொண்டே பாட்டாளி வர்க்கத்தைத் தாக்குவதில் முதலாளிகளுக்கு ஆதரவாகச் செயல்படும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை முதலாளி வர்க்க சர்வாதிகாரமாக மாற்றும் என்பதாகும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலமே முதலாளியத்திலிருந்து கம்யூனிசத்திற்கு, வர்க்க சமுதாயத்திலிருந்து வர்க்கபேதமற்ற சமுதாயத்திற்கு மாறிச் செல்லமுடியும், அதைத் தவிர வேறு பாதை இல்லை என்பதை மார்க்சிய ஆசான்கள், சர்வதேச பாட்டாளி வர்க்க இயக்க அனுபவத்தின் அடிப்படையிலும், வர்க்கப் போராட்டத்தின் புறநிலை விதியின் அடிப்படையிலும் சுட்டிக் காட்டினார்கள்.

''வர்க்கப் போராட்டம் இன்றியமையாதவாறு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்லும்'' [1] என மார்க்ஸ் கூறினார்.

மேலும் மார்க்ஸ்:

''முதலாளியத்திற்கும் கம்யூனிச சமுதாயத்திற்கும் இடையில் ஒன்று இன்னொன்றாக மாறக்கூடிய புரட்சிகரமான மாறுதலுக்கான கால கட்டம் உள்ளது. இதற்கு ஏற்றாற்போல் அரசியல் மாற்றத்தைக் கொண்டுள்ள ஒரு காலகட்டமும் உள்ளது, அக்காலக்கட்டத்திற்கான

1. ''வெய்டமெய்யருக்கு மார்க்ஸ், மார்ச் 5, 1852'', மார்க்ஸ்-எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அ. மொ. ப., தொகுதி 2, பக்கம் 410.

அரசு புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தவிர வேறு எதுவுமில்லை'' [1] என்று கூறினார்.

சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சி என்பது இடையறாத புரட்சியின் ஒரு நிகழ்ச்சிப் போக்காகும். புரட்சிகர சோசலிசத்தைப் பற்றி மார்க்ஸ் விளக்கும்பொழுது:

''பொதுவாக வர்க்க வேறுபாடுகளை ஒழிப்பதற்கும், வர்க்க வேறு பாடுகள் நிலவுவதற்குக் காரணமான எல்லா உற்பத்தி உறவுகளையும் ஒழிப்பதற்கும், இந்த உற்பத்தி உறவுகளுக்கு ஏற்ப அமைந்துள்ள எல்லா சமூக உறவுகளையும் ஒழிப்பதற்கும், இந்த சமூக உறவுகளின் விளைவாகத் தோன்றியுள்ள எல்லா கருத்துக்களையும் புரட்சிகரமாக மாற்றுவதற்கும் அவசியமான ஒரு மாறுதல் கட்டமாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், புரட்சியின் நிரந்தரத் தன்மையையும் பிரகடனப் படுத்துவதே சோசலிசம்'' [2] என்று கூறினார்.

இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் லெனின், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சின் கோட்பாட்டை படைப்பாக்கத்துடன் ஆராய்ந்து விளக்கினார்.

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது வர்க்கப் போராட்டத்தின் முடிவல்ல, மாறாக புதிய வடிவங்களில் அதன் தொடர்ச்சியே ஆகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது, தோற்கடிக்கப்பட்ட, இன்னும் அழிக்கப்படாத, இன்னும் மறைந்தொழியாத, தனது எதிர்ப்பைக் கைவிடாமல் அதை மேலும் தீவிரப்படுத்தியுள்ள முதலாளி வர்க்கத்திற்கு எதிராக, வெற்றியடைந்த அரசியல் அதிகாரத்தை முதலாளி வர்க்கத் திடமிருந்து கைப்பற்றிய பாட்டாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்டம் ஆகும்'' [3] என லெனின் சுட்டிக்காட்டினார்.

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது பழைய சமுதாயத்தின் மரபுகளுக்கும் சக்திகளுக்கும் எதிராக-இரத்தம் சிந்தியும், சிந்தாமலும் பலாத்காரமாகவும், அமைதியாகவும், இராணுவ ரீதியாகவும், பொருளா

1. *காரல் மார்க்ஸ், ''கோதா திட்டம் பற்றிய விமர்சனம்'', மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அ. மொ. ப., மாஸ்கோ, 1951, தொகுதி2, பக்கம் 30.*
2. *காரல் மார்க்ஸ், ''பிரான்சில் வர்க்கப் போராட்டம், 1948-50'', மார்க்ஸ்-எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ. மொ. ப., மாஸ்கோ 1951, தொகுதி 1, பக்கம் 203.*
3. *வி. இ. லெனின், ''சுதந்திரம், சமத்துவம் என்றமுழக்கங்களுடன் மக்களை ஏமாற்றுதல் பற்றிய உரைக்கான முன்னுரை'', பாட்டாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டு, ஆங்கிலப் பதிப்பு, அ. மொ. ப., மாஸ்கோ 1959, பக்கம் 302.*

தார, கல்வி, நிர்வாக ரீதியாகவும்-நடைபெறும் இடையறாத போராட்டமாகும்''[1] என லெனின் மேலும் கூறியுள்ளார்.

மார்க்சிய—லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் சோசலிச சமுதாயத்தில் வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம் ஆகியவை பற்றி தோழர் மாவோ, 'மக்களிடையே உள்ள முரண்பாடுகளைச் சரியாக கையாளுவது பற்றி' என்ற தனது புகழ்பெற்ற நூலிலும் பிற படைப்புகளிலும் விரிவான முறையில் ஆய்வு செய்துள்ளார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிய—லெனினியக் கோட்பாட்டை படைப்பாக்கத்துடன் மேலும் வளர்த்தெடுத்துள்ளார்.

தோழர் மாவோ, இயக்கவியல் பொருள்முதல்வாத அடிப்படையில் சோசலிச சமுதாயத்தின் புறநிலை விதிகளை ஆய்வு செய்கிறார். இயற்கை உலகிற்கும் மனித சமுதாயத்திற்கும் பொருந்தக்கூடிய, 'முரண்பாடுகளின் போராட்டமும், அய்க்கியமும்' என்ற அனைத்தும் தழுவிய விதி சோசலிச சமுதாயத்திற்கும் பொருந்தும் என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார். சோசலிச சமுதாயத்தில், உற்பத்தி சாதனங்களின் உடைமை சோசலிச மயமாக்கப்பட்ட பின்பும் வர்க்க முரண்பாடுகள் நீடிக்கிறது, வர்க்கப் போராட்டம் மறைந்துவிடுவதில்லை. சோசலிசப் பாதைக்கும் முதலாளியப் பாதைக்கும் இடையிலான போராட்டம் சோசலிசக் கட்டம் முழுவதும் நீடிக்கிறது. சோசலிசக் கட்டுமானத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கும், முதலாளித்துவத்தின் மீட்பைத் தடுப்பதற்கும் அரசியல், பொருளாதார, சித்தாந்த, கலாச்சார அரங்குகளில் சோசலிசப் புரட்சியை இறுதிவரை கொண்டு செல்வது இன்றியமையாதது ஆகும். ஓரிரு தலைமுறைகளில் சோசலிசத்தின் வெற்றியைக் கொண்டுவந்துவிட முடியாது; இந்தப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க அய்ந்து அல்லது பத்து தலைமுறைகள் அல்லது அதற்கும் அதிகமான தலைமுறைகள் கூட தேவையாயிருக்கும்.

தோழர் மாவோ, சோசலிச சமுதாயத்தில் இரு வகையான சமூக முரண்பாடுகள் நிலவுகின்றன என்ற உண்மையை வலியுறுத்துகிறார், அவை, மக்களுக்குள்ளே இருக்கும் முரண்பாடுகளும், நமக்கும் எதிரிக்கும் இடையிலான முரண்பாடுகளும் ஆகும். இதில் முதல்வகை முரண்பாடுகளே அதிகமாயிருக்கும். தன்மையில் வேறுபட்ட, இந்த இரண்டு வகை முரண்பாடுகளையும் வேறுபடுத்திப் பார்த்து, அவைகளை சரியான முறையில் கையாளுவதற்கு முற்றிலும் வேறுபட்ட வழிகளை மேற்கொள்வதன் மூலமே 90 சதவீதத்திற்கும் அதிகமான மக்களை

---

1. வி. இ. லெனின், ''இடதுசாரி கம்யூனிசம்-ஓர் இளம்பருவக் கோளாறு.''

ஒன்றிணைக்க முடியும், சிறுபான்மையினரான எதிரிகளை வீழ்த்த முடியும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வலுப்படுத்த முடியும்.

சோசலிசம் வளர்ந்து வலுவடையவும், பாட்டாளி வர்க்கம் முதலாளிகளை வெற்றிகொள்ளவும், இரு பாதைகளுக்கிடையிலான போராட்டத்தில் சோசலிசம் வெற்றி பெறவும் அடிப்படை உத்தரவாதத்தை அளிப்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமேயாகும்.

மனிதகுலம் முழுவதையும் விடுதலை அடையச் செய்த பின்பே பாட்டாளி வர்க்கம் தன்னை விடுவித்துக் கொள்ள முடி ம். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இரு வரலாற்றுப் பணிகளைக் கொண்டிருக்கிறது, ஒன்று உள்நாட்டுப் பணி, மற்றொன்று சர்வதேசப் பணி. எல்லா சுரண்டும் வர்க்கங்களையும் ஒழிப்பது, சோசலிசப் பொருளாதாரத்தை அதிகபட்ச அளவு வளர்த்தெடுப்பது, மக்களிடையே கம்யூனிச உணர்வை வளர்ப்பது, கூட்டு உடைமைக்கும் அனைத்து மக்களுக்குமான உடைமைக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை ஒழிப்பது, தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான வேறுபாட்டை ஒழிப்பது, நகரத்திற்கும், கிராமப்புறத்திற்கும் இடையிலான வேறுபாடு, மூளை உழைப்பாளிகளுக்கும் உடல் உழைப்பாளிகளுக்குமிடையிலான வேறுபாடு ஆகியவற்றை ஒழிப்பது, வர்க்கங்கள் மீண்டும் தோன்றுவதற்கான எல்லா வாய்ப்பையும் ஒழிப்பது, முதலாளிய மீட்புக்கான வாய்ப்பை நீக்குவது, ''திறமைக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற ஊதியம்'' என்ற கோட்பாட்டின் அடிப்படையிலான கம்யூனிச சமுதாயத்தை அடைவதற்கான நிலைமைகளை உருவாக்குவது ஆகியவை உள்நாட்டுப் பணிகளாகும். சர்வதேச ஏகாதிபத்தியத்தின் தாக்குதலைத் (ஆயுதத் தலையீடு மற்றும் அமைதி வழியிலான சீர்குலைவு) தடுப்பது, அனைத்து நாட்டு மக்களும் ஏகாதிபத்தியத்தையும், முதலாளியத்தையும், சுரண்டல் முறையையும் இறுதியாக அழிக்கும்வரை உலகப் புரட்சிக்கு ஆதரவளிப்பது ஆகியவை சர்வதேசப் பணிகளாகும். இந்த இரு பணிகளை நிறைவேற்றவும், முழுமையான கம்யூனிச சமுதாயத்தை அடையவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முற்றிலும் அவசியமாகும்.

இன்றைய யதார்த்த நிலையைக் கணக்கில் கொண்டு பார்ந்தோமானால், எந்த ஒரு சோசலிச நாட்டிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பணிகள் இன்னும் முடிவுற்றுவிடவில்லை. விதிவிலக்கில்லாமல் எல்லா சோசலிச நாடுகளிலும் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும் இருக்கின்றன, சோசலிசப் பாதைக்கும், முதலாளியப் பாதைக்கும் இடையிலான போராட்டம் இருக்கிறது, சோசலிசப் புரட்சியை இறுதி வரை எடுத்துச் செல்வது பற்றிய பிரச்சினையும் முதலாளிய மீட்பைத்

தடுப்பது பற்றிய பிரச்சினையும் இன்னும் இருக்கின்றன. அனைத்து மக்களுக்குமான உடைமைக்கும் கூட்டு உடைமைக்கும் இடையிலான வேறுபாடுகள், தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும், நகரத்திற்கும் கிராமத்திற்கும், மூளை உழைப்பாளிகளுக்கும் உடல் உழைப்பாளிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் ஒழிக்கப்படுவதற்கும், வர்க்கங்களும், வர்க்க வேறுபாடுகளும் ஒழிக்கப்படுவதற்கும், ''திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்'' என்ற கோட்பாட்டினைக்கொண்ட கம்யூனிச சமுதாயத்தை அடைவதற்கும் எல்லா சோசலிச நாடுகளும் இன்னும் நீண்ட தொலைவு செல்ல வேண்டியுள்ளது. எனவே, எல்லா சோசலிச நாடுகளும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உயர்த்திப் பிடிப்பது அவசியமாயுள்ளது.

இந்த நிலைமைகளில், திரிபுவாத குருச்சேவ் கும்பல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அழிப்பது, சோசலிசத்திற்கும், கம்யூனிசத்திற்கும் துரோகமிழைப்பதேயன்றி வேறல்ல.

ரசியாவில் பகை வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் நிலவுகின்றன

ரசியாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒழிப்பதாக அறிவிக்கும் திரிபுவாத குருச்சேவ் கும்பல், ரசியாவில் பகை வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டுவிட்டன என்றும் எனவே வர்க்கப் போராட்டம் தற்போது இல்லை என்றும் கூறுகிறது.

ஆனால் ரசியாவில் உண்மை நிலை எவ்வாறு உள்ளது? உண்மையில் அங்கு பகை வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும் இல்லையா?

மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சிக்குப் பின் ரசியாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. முதலாளியத் தனி உடைமை ஒழிக்கப்பட்டது, தொழிற்சாலைகளை நாட்டுடைமையாக்கியும், கூட்டு விவசாயப் பண்ணைகளை உருவாக்கியும் அனைத்து மக்களுக்குமான உடைமைகளும், சோசலிசக் கூட்டு உடைமைகளும் நிறுவப்பட்டன, கடந்த பல பத்தாண்டுகளில் சோசலிசக் கட்டுமானத்தில் பெரும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் லெனின், ஸ்டாலின் தலைமையின் கீழ் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும் ரசிய மக்களும் சாதித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் வெற்றியின் விளைவுகளாகும்.

எனினும், ரசியாவில் தூக்கி எறியப்பட்ட பழைய முதலாளிகளும் இதர சுரண்டல் வர்க்கங்களும் முழுவதும் ஒழிக்கப்படவில்லை, தொழிற்

சாலைகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்பும் விவசாயக் கூட்டுப் பண்ணை உருவாக்கப்பட்ட பின்பும் அவை உயிருடன் இருந்தது. முதலாளிகளின் அரசியல் மற்றும் சித்தாந்த செல்வாக்கு இருந்தது. நகரங்களிலும், கிராமப் புறங்களிலும் தன்னெழுச்சியான முதலாளியப் போக்குகள் தொடர்ந்து நிலவின. புதிய முதலாளிய கூறுகளும் குலாக்குகளும் தொடர்ந்து உருவாகிக் கொண்டிருந்தனர். இந்த நீண்ட இடைக்கட்டம் முழுவதும் அரசியல், பொருளாதார, சித்தாந்த அரங்குகளில் பாட்டாளி வர்க்கத்திற்கும், முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டமும், சோசலிசப் பாதைக்கும், முதலாளியப் பாதைக்கும் இடையிலான போராட்டமும் தொடர்ந்தது.

அந்தச் சமயத்தில் ரசியா மட்டும்தான் சோசலிசக் கட்டுமானத்தில் இருந்த முதல் நாடு, ஒரே நாடு, அது பின்பற்றுவதற்கான வெளிநாட்டு அனுபவமும் கிடையாது. மேலும் சோசலிச சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம் பற்றிய விதிகளைப் புரிந்து கொள்வதில் மார்க்சிய—லெனினிய இயங்கியலை ஸ்டாலின் சரியாக பின்பற்றவில்லை, எனவே அவர் விவசாயத்தில் கூட்டுப்பண்ணைகளை உருவாக்கியவுடன் ரசியாவில் ''பகை வர்க்கங்கள் இனி இல்லை''[1] என்றும் ரசியா ''வர்க்கப் போராட்டத்திலிருந்து விடுபட்டு விட்டது''[2] என்றும் முன்கூட்டியே தவறாக அறிவித்தார், சோசலிச சமுதாயத்தின் ஒத்த பண்புகளை ஒருதலைப்பட்சமாக அதிகம் வலியுறுத்தி முரண்பாடுகளைக் கவனியாது விட்டு விட்டார், முதலாளிய சக்திகளை எதிர்த்த போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தையும், மக்களையும் சார்ந்திருக்கத் தவறினார், முதலாளிய மீட்புக்கான சாத்தியப்பாட்டை சர்வதேச ஏகாதிபத்தியத்தின் ஆயுதத் தாக்குதலுடன் மட்டுமே இணைந்தது எனக் கருதினார். இது, கோட்பாட்டு ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் தவறானதாகும். இருந்தும், ஸ்டாலின் மாபெரும் மார்க்சிய—லெனினிய வாதியாக இருந்தார், அவர் ரசிய கட்சியையும், அரசையும் வழி நடத்திச் செல்லும்வரை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், சோசலிச பாதையையும் உறுதியுடன் உயர்த்திப் பிடித்தார், மார்க்சிய—லெனினியப் பாதையைப் பின்பற்றி சோசலிசப் பாதையில் ரசியாவை வெற்றிகரமாக முன்னேறச் செய்தார்.

---

1. *ஜே. வி. ஸ்டாலின், ''சோவியத் ரசியாவின் அரசியல் சட்ட நகல்'', லெனினியத்தின் பிரச்சினைகள், ஆங்ரலப்பதிப்பு. அ.மொ.ப., மாஸ்கோ 1954, பக்கம் 690.*

2. *ஜே. வி. ஸ்டாலின், ''மத்திய கமிட்டியின் வேலை பற்றி ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது காங்கிரசில் வைத்த அறிக்கை'', மேற்கண்ட நூல், பக்கம் 777.*

ரசியாவில் கட்சி, அரசு ஆகியவற்றின் தலைமையை கைப்பற்றிய வுடன் குருச்சேவ் தொடர்ச்சியாக பல திரிபுவாதக் கொள்கைகளை திணித்தார். அவை முதலாளிய சக்திகளைப் பெரும் வேகத்துடன் வளரச்செய்தன, பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளிய வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தையும், சோசலிசப்பாதைக்கும் முதலாளியப்பாதைக்கும் இடையிலான போராட்டத்தையும் மீண்டும் கூர்மைப்படுத்தின.

கடந்த சில ஆண்டுகளில் வந்துள்ள ரசிய செய்திப் பத்திரிகைகளை ஆய்வு செய்தால், ரசியாவில் பழைய சுரண்டும் வர்க்கங்களின் சக்திகள் நிலவுவதை மட்டும் அல்ல, புதிய முதலாளிய வர்க்க சக்திகள் பெரும் அளவில் உருவாகி வருவதையும், வர்க்க வேறுபாடுகள் வேகமாகக் கூர்மையடைந்து வருவதையும்கூட காண முடியும்.

எல்லா மக்களுக்கும் சொந்தமான ரசியத் தொழிற்சாலைகளில் பல்வேறு முதலாளிய சக்திகளின் செயல்பாடுகளை முதலில் பார்ப்போம்.

அரசுக்குச் சொந்தமான சில தொழிற்சாலைகளின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களும், அவர்களைச் சார்ந்த கும்பல்களும் தங்கள் பதவிகளைத் தவறாகப் பயன்படுத்தி தொழிற்சாலைகளின் பொருட் களையும் இயந்திரங்களையும் பயன்படுத்தி ''இரகசிய தொழிற் சாலைகளை'' உருவாக்கி தனிப்பட்ட முறையில் உற்பத்தி செய் கின்றனர். அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சட்ட விரோதமாக விற்று இலாபங்களைப் பங்கிட்டுக் கொள்கின்றனர். அதன் மூலம் பெரும் சொத்துக்களைக் குவித்துள்ளனர். இங்கே சில உதாரணங்களைக் காணலாம்.

லெனின் கிராடில் இராணுவத்திற்கான பொருட்கள் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையில் அதன் தலைமைப் பொறுப்பிலுள்ள வர்கள் ''எல்லா முக்கிய பதவிகளிலும் ''தங்களுடைய ஆட்களை நியமித்து ''அரசு தொழிற்சாலையை தங்களுடையதாக மாற்றி கொண்டனர்.'' இராணுவப் பொருட்கள் அல்லாத மற்றப் பொருட் களைத் தயாரிப்பதில் சட்ட விரோதமாக ஈடுபட்டனர். மூன்று ஆண்டு களில் பேனாக்களை உற்பத்தி செய்து விற்றதில் மட்டும் 12,00,000 பழைய ரூபிள்களைப் பெற்றனர். அவர்களில் ''1920-களில்... நெப்மேன்'' (Nepman) ஆக இருந்த ஒருவர் ''வாழ்நாள் முழுவதும் திருடனாக''[1] இருந்தவர்.

---

1. *கிராஸ்நாயா ஸ்வஸ்தா, மே 1962.*

உஸ்பெக்கிஸ்தானில் ஒரு பட்டு நூல் ஆலையின் மேலாளர், அதன் தலைமைப் பொறியாளர், தலைமைக் கணக்கர், சப்ளை மற்றும் விற்பனை பிரிவின் தலைவர், பணிமனைகளின் தலைவர் ஆகிய அனைவரும் சேர்ந்து கொண்டு, ''புதிய முதலாளிகளாக'' மாறினார்கள். அவர்கள் 10 டன்களுக்கும் அதிகமான செயற்கை மற்றும் இயற்கைப் பட்டை சட்ட விரோதமான வழிகளில் வாங்கி, ''கணக்கில் கொண்டு வரப்படாத'' பொருட்களைத் தயாரித்தனர். உரிய விதிமுறைகளை மீறி தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, ''ஒரு நாளைக்கு 12 மணி நேரம்''[1] வேலை வாங்கினர்.

கார்க்கோ என்னுமிடத்தில், மரச்சாமான்கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையின் மேலாளர், அத்தொழிற்சாலைக்கு உள்ளேயே ''சட்ட விரோதமாக கம்பளி ஆடைகள் பின்னும் தொழிற்சாலை'' ஒன்றை நடத்தி வந்தான். அவனுக்குப் ''பல மனைவிகள் இருந்தனர், பல கார்களும், பல வீடுகளும், 176 கழுத்துப் பட்டைகளும், நூற்றுக்கு மேற்பட்ட சட்டைகளும், டஜன் கணக்கான பிற ஆடைகளும்'' இருந்தன. அவன் பெரும் குதிரைப் பந்தய சூதாடியாகவும் இருந்தான்.''[2]

இத்தகையவர்கள் தாங்களாகவே எல்லாவற்றையும் இயக்குவதில்லை. அவர்கள் அரசுத்துறைகளில் சப்ளை மற்றும் வியாபாரம் ஆகிய பகுதிகளுக்கு பொறுப்பான முக்கியப் புள்ளிகளுடன் இரகசியமாக இணைந்து வேலை செய்கின்றனர். காவல் துறையிலும், நீதித் துறையிலும் அவர்களுடைய ஆட்கள் இருக்கின்றனர். அந்த ஆட்கள் இவர்களைப் பாதுகாப்பதுடன் இவர்களின் ஏஜெண்டுகளாகவும் வேலை செய்கின்றனர். அரசு உறுப்புகளில் உள்ள உயர்மட்ட அதிகாரிகள் கூட அவர்களுக்கு ஆதரவாக இருந்து பாதுகாப்பளிக்கின்றனர். இங்கே சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

மாஸ்கோவில், மன நரம்பியல் மருத்துவமனையைச் சார்ந்த பணிமனையின் தலைவரும், அவருடைய கும்பலும் ஒரு ''இரகசியத் தொழிற்சாலையை'' ஏற்படுத்தினர். அதற்காக லஞ்சம் கொடுத்து ''58 பின்னல் இயந்திரங்களையும்'', ஏராளமான கச்சாப் பொருட்களையும் பெற்றனர். அவர்கள் ''52 தொழிற்சாலைகளுடனும் கூட்டுறவு கைவினை சங்கங்களுடனும், கூட்டுறவு பண்ணைகளுடனும்'' வியாபார தொடர்பு கொண்டு சில ஆண்டுகளில் 30 லட்சம் ரூபிள்கள் சம்பாதித்தனர். அவர்கள் சோசலிச சொத்தை திருடுதலையும், சூதாட்டத்

1. *பிராவ்தா வோஸ்டாகா, அக்டோபர் 8, 1963.*
2. *பிராவ்தா உக்ரேய்னி, மே 18, 1962.*

தையும் ஒழிக்கும் துறையைச் சார்ந்தவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் லஞ்சம் கொடுத்தனர்.[1]

ரசிய கூட்டமைப்பில் இருந்த ஒரு இயந்திரத் தொழிற்சாலையின் மேலாளர், ஒரு இரண்டாவது இயந்திரத் தொழிற்சாலையின் உதவி மேலாளருடனும் மற்ற அலுவலர்களுடனும், அதாவது மொத்தம் நாற்பத்துமூன்று பேர் சேர்ந்து தொள்ளாயிரத்துக்கும் மேற்பட்ட தறிகளைத் திருடி மத்திய ஆசியா, கஸக்ஸ்தான், காகஸஸ் இன்னும் பல இடங்களிலுள்ள தொழிற்சாலைகளின் நிர்வாகிகளுக்கு விற்றனர், அந்த நிர்வாகிகள், அவற்றை சட்டவிரோதமான உற்பத்திக்குப் பயன்படுத்தினார்கள்.[2]

கிர்கிஸ் சோசலிசக் குடியரசில், ''நாற்பதுக்கும் மேற்பட்ட கையாடல் பேர்வழிகளும், ஊழல் பேர்வழிகளும் உள்ளடங்கிய கும்ப லொன்று இரண்டு தொழிற்சாலைகளைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து, ரகசிய உற்பத்தியில் ஈடுபட்டு மூன்று கோடிக்கும் மேலான ரூபிள்கள் மதிப்புக்கொண்ட அரசுகளின் சொத்தைக் கொள்ளை அடித்தனர். அந்தக் குடியரசின் திட்டக்குழுவின் தலைவர், உதவி வர்த்தக அமைச்சர், குடியரசின் அமைச்சர் குழுவின் வட்டத்தலைமை யைச் சார்ந்தவர்கள், நிர்வாகக்குழுத் தலைவர்கள் ஏழுபேர், தேசியப் பொருளாதாரக் குழு, அரசு கட்டுப்பாட்டுக் குழு ஆகியவற்றின் தலைவர்கள், ''நாடு கடத்தப்பட்டிருந்த ஒரு பெரிய குலாக்''[3] ஆகியோரும் இந்தக் கும்பலில் இருந்தனர்.

இந்த உதாரணங்கள் காட்டுவது என்னவென்றால் சீர்கேடர்களின் பிடியில் விழுந்துள்ள இத்தொழிற்சாலைகள் பெயரளவில்தான் சோசலிச நிறுவனங்களாக இருக்கின்றனவே தவிர, உண்மையில் அவை முதலாளிய நிறுவனங்களாக மாறி இந்தச் சீர்கேடர்கள் தங்களைச் செல்வந்தர்களாக ஆக்கிக்கொள்வதற்கு பயன்படுகின்றன. உழைப்பாளி களுடன் அவர்கள் கொண்டுள்ள உறவு, சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும் இடையிலானதாகவும், ஒடுக்குபவர்களுக்கும் ஒடுக்கப்படுபவர்களுக்கும் இடையிலானதாகவும் மாறியுள்ளன. உற்பத்தி சாதனங்களைப் பயன்படுத்தி மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டும் இந்தச் சீர்கேடர்கள் அப்பட்டமான முதலாளிய சக்திகள் இல்லையா?

---

1. *இஸ்வெஸ்தியா, அக்டோபர் 20, 1963, இஸ்வெஸ்தியா ஞாயிறுமலர், எண் 12, 1964.*
2. *கோம்சோமோல்ஸ்கயா பிராவ்தா, ஆகஸ்ட் 9, 1963.*
3. *சோவியத்ஸ்கயா கிர்கிஸியா, ஜனவரி 9, 1962.*

இந்தச் சீர்கேடர்களுடன் இரகசிய உறவு கொண்டு பல வகையான சுரண்டல்களிலும் பங்கு கொண்டு, கையாடல்களில் ஈடுபட்டு, இலஞ்சங் களைப் பெற்று, கொள்ளைகளில் பங்குபெறும், அரசாங்க நிறுவனங் களில் உள்ள இவர்களின் கூட்டாளிகள் அப்பட்டமான முதலாளிய சக்திகள் இல்லையா?

சந்தேகமின்றி இவர்கள் அனைவரும் பாட்டாளி வர்க்கத்திற்கு விரோதமான முதலாளிய வர்க்கத்தைச் சார்ந்தவர்களே. சோசலிசத்திற்கு எதிரான அவர்களது செயல்பாடுகள் நிச்சயமாக பாட்டாளி வர்க்கத்தைத் தாக்கக்கூடிய முதலாளிகளின் வர்க்கப் போராட்டமாகும்.

கூட்டுப் பண்ணைகளில் பல்வேறு குலாக்குகளின் செயல்களை இப்பொழுது பார்ப்போம்.

கூட்டுப் பண்ணைகளில் சில தலைமைப் பொறுப்பாளர்களும் அவர்களது கும்பலும் திருடுவது, விருப்பம்போல் சூதாட்டத்தில் ஈடுபடுவது, தாராளமாக பொதுப்பணத்தைக் கையாடுவது ஆகிய முறைகளின் மூலம் கூட்டுப் பண்ணையைச் சார்ந்த விவசாயிகளை ஏமாற்றுகின்றனர். இதோ சில எடுத்துக்காட்டுகள்.

உஸ்பெக்கிஸ்தானில் உள்ள ஒரு கூட்டுப்பண்ணையின் தலைவர் ஒரு ''கிராமம் முழுவதையும் பயத்தில் ஆழ்த்தி வைத்திருந்தார்'' இந்த பண்ணையிலுள்ள எல்லா முக்கிய பதவிகளிலும் ''தன்னுடைய மைத்துனர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் அமர்த்தி இருந்தார்.'' கூட்டுப் பண்ணைக்குச் சொந்தமான 1,32,000-க்கும் அதிகமான ரூபிள்களை தனது சொந்த 'தேவைகளுக்காக' கொள்ளை அடித்தார். அவருக்கு ஒரு காரும், இரண்டு மோட்டார் சைக்கிள்களும் இருந்தன. அவருக்கு மூன்று மனைவிகளும் ''ஒவ்வொரு மனைவிக்கும் சொந்தமாக ஒரு வீடும்'' [1] இருந்தன.

குர்ஸ்க் பகுதியில் உள்ள ஒரு கூட்டுப்பண்ணையின் தலைவர் அப்பண்ணையைத் தன்னுடைய ''பரம்பரைச்'' சொத்தாக கருதிக் கொண்டார். அப்பண்ணையின் கணக்காளர், காசாளர், தலைமைப் பண்டகக் காப்பாளர், உழவியல் நிபுணர், பண்டக மேலாளர் ஆகியோ ருடன் கூட்டுச்சேர்ந்து சதி செய்தார். ஒருவரை ஒருவர் பாதுகாத்துக் கொண்டு அவர்கள் ''கூட்டுப் பண்ணை விவசாயிகளை ஏமாற்றி'' சில ஆண்டுகளில் ஒரு இலட்சம் ரூபிள்களுக்கும் மேல் கொள்ளையடித் தனர். [2]

---

1. *செல்ஸ்கயா ஜிஜன், ஜூன் 26, 1962.*
2. *எக்கனாமி செஸ்கயா கெஜட்டா, எண் 35, 1963.*

உக்ரய்ன் பகுதியில், ஒரு கூட்டுப் பண்ணையின் தலைவர் அப் பண்ணையின் பெண் கணக்காளருடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு, பொருட்கள் வாங்கியதாகப் பொய் சான்றிதழ்களும், பணக்கணக்குகளும் தயாரித்து 50,000 ரூபிள்கள் சுருட்டினார். இந்தப்பெண் கணக்காளர் ''சிறந்த முறையில் கணக்கு வைத்திருப்பவர்'' எனப் பாராட்டப் பட்டார். தேசியப் பொருளாதாரத்தின் சாதனைகள் பற்றி மாஸ்கோவில் நடந்த கண்காட்சியில் அவரது செயல்முறைகள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன.[1]

அல்மா—அட்டா பகுதியில் உள்ள ஒரு கூட்டுப் பண்ணையின் தலைவர் ஊகவியாபாரத்தில் திறமை வாய்ந்தவர். அவர் ''உக்ரய்ன் அல்லது உஸ்பெக்கிஸ்தானிலிருந்து பழச்சாறும், ஜாம்புல்லிலிருந்து சர்க்கரையும், சாராயமும்'' வாங்கி அவற்றைப் பதப்படுத்தி ஒயின் தயாரித்து அதை பல பகுதிகளில் கொள்ளை விலைக்கு விற்றார். அந்தப் பண்ணையில் வருடத்திற்கு பத்து இலட்சம் லிட்டர்கள் தயாரிக்கும் ஒயின் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது. அதன் ஊக வியாபார வலைப் பின்னல் கஸக்ஸ்தான் சோவியத் சோசலிசக் குடியரசு முழுவதும் பரவி இருந்தது. ஊக வியாபாரம் அப்பண்ணையின் முக்கிய வருவாய்களில் ஒன்றாக இருந்தது.[2]

பைலோ ரசியாவிலுள்ள ஒரு கூட்டுப் பண்ணையின் தலைவர், தன்னை ''அப்பண்ணையின் கோமகனாக நினைத்துக் கொண்டு எல்லா விசயங்களிலும் தன்னிச்சையாகச்'' செயல்பட்டார், அவர் பண்ணையில் வசிக்கவில்லை, நகரத்திலோ அல்லது தன்னுடைய ஆடம்பரமான மாளிகையிலோ வசித்தார், எப்பொழுதும் ''வியாபார பித்தலாட்டங்களிலும்'' சட்ட விரோத கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபட்டிருந்தார். அவர் கால்நடைகளை வெளியிலிருந்து வாங்கி, தன்னுடைய பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டதாக காண்பித்து, பொய்யான உற்பத்தியைக் காண்பித்து வந்தார். இருப்பினும் அவரைப் ''புகழ்ந்து செய்திப் பத்திரிகைகளில் வந்தவை கொஞ்சநஞ்சமல்ல'' அவர் ஒரு ''முன் மாதிரித் தலைவர்''[3] எனப் புகழப்பட்டவர்.

இவர்களின் தலைமையின் கீழ் கூட்டுப் பண்ணைகள் தனிப்பட்ட சொத்தாக மாறியுள்ளன என்பதையே இந்த உதாரணங்கள் காட்டு கின்றன. இத்தகைய மனிதர்கள் சோசலிசக் கூட்டுப் பொருளாதார

---

1. செல்ஸ்கயா ஜிஜன் ஆகஸ்ட் 14, 1963.
2. பிராவ்தா, ஜனவரி 14, 1962.
3. பிராவ்தா. பிப்ரவரி 6, 1961.

நிறுவனங்களை புதிய குலாக்குகளின் பொருளாதார நிறுவனங்களாக மாற்றிவிட்டனர். அவர்களைக் காப்பாற்ற உயர்மட்ட அமைப்புகளில் அவர்களுடைய ஆட்கள் உள்ளனர். கூட்டுப் பண்ணை விவசாயிகளிடம் அவர்கள் கொண்டுள்ள உறவு, ஒடுக்குபவர் — ஒடுக்கப்படுபவர், சுரண்டுபவர் — சுரண்டப்படுபவர் என்ற வகையிலேயே உள்ளது. கூட்டுப் பண்ணை விவசாயிகளின் முதுகின் மேல் சவாரி செய்யும் இவ் வகை புதிய சுரண்டல் பேர்வழிகள் நூற்றுக்கு நூறு புதிய குலாக்குகள் இல்லையா?

சந்தேகமில்லாமல், அவர்கள் பாட்டாளிகளுக்கும், உழைக்கும் விவசாயிகளுக்கும் எதிரான வர்க்கத்தைச் சார்ந்தவர்களே, குலாக் அல்லது கிராமமுதலாளி வர்க்கத்தைச் சார்ந்தவர்களே. சோசலிசத்திற்கு எதிரான அவர்களுடைய நடவடிக்கைகள், பாட்டாளி வர்க்கத்தையும் உழைக்கும் விவசாயிகளையும் தாக்கக்கூடிய முதலாளிகளின் வர்க்கப் போராட்டமேயாகும்.

அரசு நிறுவனங்களிலும், கூட்டுப் பண்ணைகளிலும் உள்ள முதலாளிய நபர்களைத் தவிர, ரசியாவின் நகரங்களிலும், கிராமங் களிலும் மேலும் பல முதலாளிய நபர்கள் உள்ளனர்.

அவர்களில் சிலர் தனியார் உற்பத்திக்கும், விற்பனைக்கும் தனிப் பட்ட நிறுவனங்களை வைத்துள்ளனர். மற்றவர்கள் ஒப்பந்தக் குழுக்களை வைத்துக் கொண்டு அரசாங்கத்திற்கோ அல்லது கூட்டுறவு நிறுவனங்களுக்கோ தேவையான கட்டுமானப் பணிகளை வெளிப் படையாகவே மேற்கொள்கின்றனர், இன்னும் சிலர் தனியார் உணவு விடுதிகள் திறந்துள்ளனர். ஒரு ''ரசிய பெண்முதலாளி'' லெனின்கிராடில் நைலான் ரவிக்கைகள் தயாரிக்க கூலிக்கு ஆள் அமர்த்தி உள்ளார். அவரின் ''தினசரி வருமானம் 700 புதிய ரூபிள்களாகும்'' [1] குர்ஸ்க் பகுதியில் உள்ள பணிமனை உரிமையாளர் ஒருவர் கம்பளிக் காலணிகள் தயாரித்து கொள்ளை விலைக்கு விற்கிறார். அவரிடம் 540 ஜோடி கம்பளிக் காலணிகள், எட்டு கிலோ தங்க நாணயங்கள், 3000 மீட்டர் உயர்ந்த ரக துணி வகைகள், 20 கம்பளங்கள், 1200 கிலோ கம்பளி, இன்னும் பல விலை உயர்ந்த பொருட்கள் ஆகியவையும் இருந்தன.[2] கோமல் பகுதியில் ஒரு முதலாளி, ''தொழிலாளர்களையும், கைவினை ஞர்களையும் கூலிக்கமர்த்தி'' வேலை செய்தார். இரண்டு ஆண்டுகளில்

---

1. இஸ்வெஸ்தியா, ஏப்ரல் 9, 1963.

2. சோவியத்ஸ்கயா ரோசியா, அக்டோபர் 9, 1960.

பன்னிரண்டு தொழிற்சாலைகளில் உலைக்கலன்களைக் கட்டவும், சீர்திருத்தவும் உயர்ந்த விலையிலான ஒப்பந்தங்களைப் பெற்றார்.'' [1] ஓரென்பர்க் பகுதியில் ''நூற்றுக்கணக்கான தனியார் உணவுவிடுதிகளும், கப்பலுக்குப் பொருள் ஏற்றும் இடங்களும்'' உள்ளன. ''கூட்டுப்பண்ணைகளின் பணமும், அரசின் பணமும் தொடர்ந்து உணவு விடுதி உரிமையாளர்களின் பைக்குச் செல்கின்றன.'' [2]

சிலர் ஊக வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்; பொருட்களை சொற்ப விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பதன்மூலமும், தொலைவிலிருந்து பொருட்களை வாங்கிவந்து விற்பதன் மூலமும் பெருத்த இலாபம் சம்பாதிக்கின்றனர். ஏராளமான வியாபாரிகள், விவசாயப் பொருட்களை வாங்கிவந்து மாஸ்கோவில் விற்பதில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் ''டன் கணக்கில் எலுமிச்சை, ஆப்பிள், காய்கறிகள் ஆகியவற்றை மாஸ்கோவிற்கு கொண்டு வந்து அதிக விலைக்கு விற்கின்றனர்.'' இந்த ''இலாபக் கொள்ளையர்களுக்கு வியாபாரத்திற்கான இடம், பண்டகக் காப்பறைகள், இதர பணிமனைகள் எனப் பல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.'' [3] கிராஸ்நோடா பகுதியில் ஒரு பெண் தனக்கென ஒரு ஏஜெண்சி நிறுவிக்கொண்டுள்ளார். ''பன்னிரண்டு விற்பனையாட்களையும், கப்பல்களுக்கு பொருட்களை ஏற்றி இறக்க இரு ஆட்களையும் அமர்த்தி உள்ளார். அவர் கிராமப் பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான இறைச்சிப் பன்றிகளையும், நூற்றுக்கணக்கான குவிண்டால்கள் தானியங்களையும், நூற்றுக்கணக்கான டன்கள் பழங்களையும்'' டான்பேசின் பகுதிக்கு அனுப்புகிறார். ''ஏராளமான திருட்டு உலோகச் செங்கற்களையும், கண்ணாடிகளையும்'' இதர கட்டிடப் பொருட்களையும் நகரங்களிலிருந்து கிராமங்களுக்கும் அனுப்புகிறார். இந்த மறுவிற்பனை மூலம் பெரும் இலாபங்களை ஈட்டியுள்ளார். [4]

இன்னும் சிலர் தரகர்களாகவும், இடைத்தரகர்களாகவும் மாறி உள்ளனர். அவர்கள் பரவலான தொடர்புகளைக் கொண்டுள்ளனர், அதன்மூலம் லஞ்சம் கொடுத்து ஒருவர் எதையும் பெறமுடியும். லெனின் கிராடில் ஒரு தரகர் இருந்தார், ''அவர் வியாபார மந்திரியாக இல்லாவிட்டாலும், எல்லா இணைப்புகளையும் கட்டுப்படுத்தினார்'', ''இரயில்வேயில் எந்தப் பதவியில் இல்லாவிட்டாலும் சரக்கு வண்டிகளை

---

1. இஸ்வெஸ்தியா, அக்டோபர் 18, 1960.
2. செல்ஸ்கயா ஜிஜன், ஜூலை 17, 1963.
3. எக்கனாமி செஸ்கயா கெஜட்டா, எண் 27, 1963.
4. லிட்ரேட்சர்னயா கெஜட்டா, ஜூலை 27, ஆகஸ்ட் 17, 1963.

பிரித்தளித்தார்'', ''கடுமையான கட்டுப்பாட்டில் உள்ள பொருட்களைக் கூட, அவரால் பெறமுடியும்'', ''லெனின்கிராடில் இருந்த அத்தனை பொருள் இருப்பு இடங்களும் அவரின் கீழ் இருந்தன.'' அப்பொருட்களைக் கொடுப்பதற்காக பெரும் ''போனஸ்களைப்'' பெற்றார். 1960-ல் மட்டும் ஒரு மரக் கம்பெனியிடமிருந்து 7,00,000 ரூபிள்களைப் பெற்றார். லெனின்கிராடில் இத்தகைய தரகர்களின் ''பெரும் கூட்டமே''[1] உள்ளது.

இந்த தனிப்பட்ட முதலாளிகளும், சூதாடிகளும் அப்பட்டமான முதலாளியச் சுரண்டலில் ஈடுபட்டுள்ளனர். இதிலிருந்து அவர்கள் பாட்டாளிகளுக்குப் பகையான முதலாளிவர்க்கத்தைச் சார்ந்தவர்கள் என்பது தெளிவாகவில்லையா?

உண்மையில் ரசிய பத்திரிகைகளே இவர்களை ''ரசிய முதலாளிகள்'' ''புதியதாகப் பிறந்துள்ள முதலாளிகள்'', ''தனியார் முதலாளிகள்'', ''புதியதாகத் தோன்றியுள்ள குலாக்குகள்'', ''சூதாடிகள்'', ''சுரண்டல் பேர்வழிகள்'' என அழைக்கின்றன. ரசியாவில் பகை வர்க்கங்கள் இல்லை என திருத்தல்வாத குருச்சேவ் கும்பல் அழுத்தம் திருத்தமாக கூறும்பொழுது அவர்கள் தங்களைத் தாங்களே மறுத்துக்கொள்ள வில்லையா?

மேலே கூறப்பட்ட ஆதாரங்கள் அனைத்தும் ரசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டவைகளில் ஒரு பகுதியே. மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்க இதுவேபோதும், பிரசுரிக்கப்படாதவை இன்னும் ஏராளம் இருக்கின்றன, பல பெரிய, மேலும் பயங்கரமான உண்மைகள் எல்லாம் மறைக்கப் பட்டு, பாதுகாக்கப்பட்டுள்ளன. ரசியாவில் பகை வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும் உண்டா, இல்லையா என்ற கேள்விக்குப் பதில் அளிக்கவே நாங்கள் மேலே கூறப்பட்ட எடுத்துக்காட்டுகளைக் கூறினோம். இந்தப் புள்ளி விவரங்களை திரிபுவாத குருச்சேவ் கும்பல் கூட மறுக்கமுடியாது.

பாட்டாளிகளுக்கு எதிரான முதலாளிகளின் கட்டுப்பாடில்லாத செயல்கள் ரசியா முழுவதும் பரவலாக உள்ளது; நகரங்களிலும், கிராமங் களிலும், தொழிற்சாலைகளிலும், விவசாயத்திலும், உற்பத்தியிலும், விநியோகத்திலும், பொருளாதாரத் துறைகளிலும், கட்சியிலும், அரசாங்க அமைப்புகளிலும், அடிப்படை மட்டத்திலிருந்து தலைமை மட்டங்கள் வரை அவர்களின் செயல்கள் பரவியுள்ளது என்பதை எடுத்துக் காட்ட இந்தப் புள்ளி விவரங்களே போதுமானவை. சோசலிசத்திற்கு

1. *சோவியத்ஸ்கயா ரோசியா, ஜனவரி 27, 1961.*

எதிரான இந்த செயல்கள் பாட்டாளிகளுக்கு எதிரான முதலாளிகளின் கடுமையான வர்க்கப் போராட்டமே தவிர வேறல்ல.

ஒரு சோசலிச நாட்டில், பழைய மற்றும் புதிய முதலாளிய சக்திகள் சோசலிசத்தின் மீது தாக்குதல்கள் தொடுப்பது அதிசயமானதல்ல. கட்சியின் தலைமையும், அரசும் மார்க்சிய-லெனினியத்தில் ஊன்றி இருக்கும் வரை அதைப் பற்றி பீதியுற வேண்டியதில்லை. ஆனால் இன்றைய ரசியாவில் சூழ்நிலைமை ஆபத்தாகியுள்ளதற்குக் காரணம் திரிபுவாத குருச்சேவ் கும்பல் ரசிய கட்சியின் தலைமையையும், அரசையும் கைப்பற்றி உள்ளதும், சலுகைப்பெற்ற ஒரு முதலாளிய பகுதி ரசியாவில் தோன்றி உள்ளதுமே ஆகும்.

பின்வரும் பகுதியில் இந்தப் பிரச்சினையைப் பரிசீலிப்போம்.

ரசியாவில் உள்ள சலுகைபெற்ற பகுதியினரும் திரிபுவாத குருச்சேவ் கும்பலும்

கட்சியிலும் அரசாங்க அமைப்புகளிலும், நிறுவனங்களிலும், பண்ணைகளிலும் உள்ள சீரழிந்து போன நபர்களையும், கட்சியின் முன்னணி ஊழியர்களில் உள்ள சீரழிந்துபோன சக்திகளையும், முதலாளிய அறிவு ஜீவிகளையும் உள்ளடக்கியதே இன்றைய ரசிய சமுதாயத்திலுள்ள சலுகை பெற்ற பகுதியாகும். இது ரசிய தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும், பெரும்பான்மையான அறிவுஜீவிகளுக்கும், கட்சி ஊழியர்களுக்கும் எதிராக நிற்கிறது.

எல்லா திசைகளிலிருந்தும் முதலாளிய, குட்டி முதலாளிய சித்தாந்தங்களுக்கும் பழக்க வழக்கங்களும் பாட்டாளி வர்க்கத்தை முற்றுகையிட்டு, அதன் ஒரு பகுதியினரைக் களங்கப்படுத்தி வருகிறது என அக்டோபர் புரட்சி முடிந்தவுடனே லெனின் சுட்டிக்காட்டினார். இச் சூழ்நிலை ரசிய அலுவலர்களிடமிருந்தும், ஊழியர்களிடமிருந்தும் மக்களுக்கு அந்நியமான அதிகார வர்க்கமும், புதிய முதலாளிய சக்திகளும் தோன்றுமளவிற்கு இட்டுச் சென்றுள்ளது. ரசிய அரசுக்காக வேலை செய்வதற்கு முதலாளிய தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு அதிக சம்பளம் கொடுப்பது அவசியமாயிருந்த போதிலும், அவர்கள் அதைக் களங்கப்படுத்தும் அளவிற்குச் செல்வாக்கு உடையவர்களாயிருப்பார்கள் என்று லெனின் மேலும் சுட்டிக்காட்டினார்.

எனவேதான், முதலாளிய, குட்டி முதலாளிய சித்தாந்தங்களின் தாக்கத்திற்கு எதிரான தொடர்ச்சியான போராட்டங்களுக்கும், அரசாங்க வேலைகளில் பரந்துபட்ட மக்கள் பங்கு கொள்ளும் வகையில் அவர்களை விழிப்புணர்வு ஊட்டுவதற்கும் சோவியத் அமைப்பிலுள்ள அதிகாரி களையும், புதிய முதலாளிய சக்திகளையும் இடையறாது அம்பலப்படுத்தி களையெடுப்பதற்கும், முதலாளிகள் தோன்றுவதற்கும், நீடித்து நிற்பதற் குமான சூழ்நிலைகள் உருவாகாமல் தடுப்பதற்கும், லெனின் பெரும் முக்கியத்துவம் கொடுத்தார். ''அமைப்பை செழுமைப்படுத்துவதற்கான திட்டமிட்ட, உறுதியான போராட்டம் இல்லாவிட்டால், சோசலிசத் திற்கான அடித்தளம் உருவாக்கப்படுவதற்கு முன்பே நாம் அழிந்து விடுவோம்''[1] என லெனின் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதே சமயத்தில், ஊதியம் சம்பந்தப்பட்ட விசயத்தில் பாரிஸ் கம்யூ னின் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என லெனின் பெரிதும் வலியுறுத்தினார்; அதாவது எல்லா அரசு ஊழியர்களுக்கும் தொழிலா ளர்களுக்கும் கொடுக்கப்படும் ஊதியமே கொடுக்கப்பட வேண்டும், முதலாளிய தொழில் நுட்ப நிபுணர்களுக்கு (Specialists) மட்டும்தான் அதிக ஊதியம் தரப்பட வேண்டும் அக்டோபர் புரட்சியிலிருந்து ரசியப் பொருளாதாரம் புனரமைக்கப்பட்டதுவரை லெனின் வழிகாட்டுதல்கள் பிரதானமாகப் பின்பற்றப்பட்டன, கட்சியின் முன்னணி ஊழியர்களும், அரசாங்க அமைப்பின் ஊழியர்களும், நிறுவன ஊழியர்களும் கட்சி உறுப் பினராயிருந்த தொழில் நுட்ப வல்லுனர்களும் கிட்டத்தட்ட தொழி லாளிகள் பெறும் அளவிற்கான ஊதியத்தையே பெற்று வந்தனர்.

அதே சமயம் எந்த ஒரு துறையிலும் முன்னணி ஊழியர்கள் தங் களுடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், தார்மீக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் சீரழிந்து போவதைத் தடுக் கவும், கம்யூனிஸ்ட் கட்சியும், ரசிய அரசாங்கமும் அரசியல் அரங்கிலும், சித்தாந்த அரங்கிலும். விநியோக முறையிலும் பல நடவடிக்கைகளை எடுத்தன.

ஸ்டாலின் தலைமையிலிருந்த ரசிய கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலும், சோசலிசப் பாதையிலும் ஊன்றி நின்று முதலாளியத்திற்கு எதிரான உறுதியான போராட்டத்தை நடத்தியது. கட்சிக்கு வெளியில் பாட்டாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் சோசலிசப் பாதைக்கும், முதலாளியப் பாதைக்கும்

---

1. வி.இ. லெனின், '' 'உணவு வரி பற்றி' துண்டு பிரசுரத்திற்கான திட்டம்'', தொகுப்பு நூல், மாஸ்கோ 1950, தொகுதி 32, பக்கம் 301.

இடையிலான போராட்டம் ஆகியவற்றின் பிரதிப்பலிப்பாகவே கட்சிக்குள் டிராட்ஸ்கியவாதிகளுக்கும், ஜினோவியவாதிகளுக்கும், புகாரின்வாதிகளுக்கும் எதிராக ஸ்டாலின் நடத்திய போராட்டங்கள் அமைந்தன. இவற்றில் கிடைத்த வெற்றி ரசியாவில் முதலாளியத்தை மீட்டெடுப்பதற்கான முதலாளிகளின் சதியை முறியடித்தது.

ஸ்டாலின் இறப்பதற்கு முன்பே சில பகுதியினக்கு அதிக ஊதியம் அளிக்கப்பட்டு வந்ததையும், சில ஊழியர்கள் முதலாளிய நபர்களாக சீரழிந்து போய்விட்டிருந்ததையும் மறுக்கமுடியாது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அக்டோபர் 1952-ல் நடத்த 19-வது கட்சிக் காங்கிரசுக்கான தனது அறிக்கையில் கட்சியின் சில அமைப்புகளில் சீரழிவும், ஊழல்களும் தோன்றியுள்ளதைச் சுட்டிக்காட்டி உள்ளது. அந்த அமைப்பின் தலைவர்கள் அவர்களைச் சார்ந்தவர்களைக்கொண்டு சிறு குழுக்களை அமைத்துக்கொண்டு, ''கட்சி மற்றும் அரசின் நலனை விடத் தங்கள் குழுவின் நலனை உயர்வாகக் கருகிறார்கள்'' சில தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள், ''அந்த நிறுவனங்கள் தங்கள் பொறுப்பில் விடப்பட்டுள்ள அரசு நிறுவனங்கள் என்பதையே மறந்துவிட்டு தங்களுடைய சொந்த நிறுவனமாக மாற்ற முயற்சி செய்கின்றனர்.'' ''கூட்டுப் பண்ணைகளின் சொத்தை கூட்டாக பாதுகாப்பதற்குப் பதிலாக'' கட்சி மற்றும் சோவியத் ஊழியர்களில் சிலரும், விவசாயத் துறையில் உள்ள சில ஊழியர்களும் ''கூட்டுப் பண்ணைகளின் சொத்தைக் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்''. ''கலாச்சார, கலை மற்றும் அறிவியல் துறைகளிலும் கூட சோசலிச அமைப்பைத் தாக்கும் கறைப்படுத்தும் படைப்புகள் தோன்றியுள்ளன; விஞ்ஞானிகளின் மத்தியில் ஒரு ஏகபோக ''அராக்செயவ் ஆட்சி'' (Arack Cheyev regime) தோன்றியுள்ளது.

ரசியக் கட்சி மற்றும் அரசின் தலைமையை குருச்சேவ் கைப்பற்றிய பின் ரசியாவில் வர்க்கப் போராட்ட தலைமையில் ஒரு அடிப்படை மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

முதலாளிகளின் நலன்களுக்குச்சேவை செய்யும் பல திரிபுவாதக் கொள்கைகளை தொடர்ச்சியாய் குருச்சேவ் மேற்கொண்டு வருகிறார்; அதன் மூலம் ரசியாவில் முதலாளிய சக்திகளை வேகமாக வளர்த்து வருகிறார்.

''தனிமனித வழிபாட்டுக்கு எதிரான போராட்டம்'' என்ற பெயரில் குருச்சேவ் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், சோசலிச அமைப்பையும் இழிவுபடுத்தி உள்ளார்; அதன் மூலம் ரசியாவில்

முதலாளிய மீட்புக்கான பாதை அமைத்துள்ளார். ஸ்டாலினை முழுமையாக நிராகரிப்பதன் மூலம் அவர் உண்மையில், ஸ்டாலினால் உயர்த்திப் பிடிக்கப்பட்ட மார்க்சிய—லெனினியத்தை நிராகரித்துவிட்டு, திரிபுவாத வெள்ளத்திற்கு மடை திறந்து விட்டுள்ளார்.

''சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம்'' என்ற சோசலிசக் கொள்கைக்குப் பதிலாக, ''பொருளாதார ஊக்கமளிப்பை'' (Material Incentive) குருச்சேவ் முன் வைத்துள்ளார். ஒரு சிறுபான்மை யினரின் வருமானத்திற்கும், பாட்டாளிகள், விவசாயிகள், சாதாரண அறிவு ஜீவிகள் ஆகியோரின் வருமானத்திற்கும் இடையிலான வேறு பாட்டைக் குறைப்பதற்கு பதிலாக அவர் அதிகரித்துள்ளார், தலைமைப் பொறுப்பில் உள்ள சீரழிந்துபோனவர்களுக்கு அவர் ஆதரவு அளித்துள் ளார், அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற் கும், ரசிய மக்களுடைய உழைப்பின் பலனைக் கொள்ளை அடிப்பதற்கும் ஊக்கமளித்துள்ளார். இவ்வாறு சோவியத் சமுதாயத்தில் வர்க்க வேறுபாடுகள் உருவாவதை அவர் துரிதப்படுத்தி உள்ளார்.

குருச்சேவ், திட்டமிட்ட சோசலிசப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துள்ளார், முதலாளியக் கொள்கையான இலாபம் என்பதை மேற்கொண்டு முதலாளியப் போட்டியை வளர்த்து, அனைத்து மக்களுக்குமான சோசலிச உடமையைத் தகர்த்துள்ளார்.

குருச்சேவ், சோசலிச விவசாயத் திட்டத்தை ''அதிகார வர்க்கத் தன்மை'' கொண்டது, ''தேவையற்றது'' எனக் குறிப்பிட்டுத் தாக்கி உள்ளார். அமெரிக்கப் பெரும்பண்ணை முதலாளிகளிடமிருந்து முதலாளிய நிர்வாகத்தைக் கற்றுக் கொள்ளும் ஆர்வத்துடன், குலாக் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தும் சோசலிசக் கூட்டுப் பொருளாதாரத்தை சீர்குலைத்தும் வருகிறார்.

முதலாளிய சித்தாந்தம், முதலாளிய சுதந்திரம், சமத்துவம், சகோ தரத்துவம் மற்றும் மனிதாபிமானம் முதலாளியக் கருத்து முதல் வாதம், இயக்குமறுப்பியல், ஆகியவற்றை விற்கும் முகமாக முதலாளிய தனி மனிதவாதம், மனிதாபிமானம், அமைதிவாதம் ஆகிய போக்குக் கருத்துக்களையும் ரசிய மக்களிடைய பரப்பி சோசலிச நெறிமுறைகளை இழிவுபடுத்துகிறார் குருச்சேவ். அழுகிப் போன, மேற்கத்திய முதலா ளியக் கலாச்சாரம் ரசியாவில் இன்று நாகரிகமாக மாறியுள்ளது; சோசலிசக் கலாச்சாரம் ஒதுக்கப்படுகிறது; தாக்கப்படுகிறது.

''சமாதான சகவாழ்வு'' என்ற பெயர்ப்பலகையின் கீழ் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கைகோர்த்துக் கொண்டுள்ளார் குருச்சேவ்; சோசலிச முகாமையும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தையும் சிதைத்து வருகிறார், ஒடுக்கப்பட்ட மக்களின் நாடுகளின் புரட்சிகரப் போராட்டங் களை எதிர்த்து வருகிறார்; பெரும் வல்லரசு ஆதிக்கத்தையும், தேசியத் தற்பெருமையையும் நடைமுறைப்படுத்தி பாட்டாளி வர்க்க சர்வதேசியத் திற்கும் துரோகமிழைத்து வருகிறார், ஒரு சிலரின் நலன்களைப் பாது காப்பதற்காகவே இத்தனையையும் செய்து வருகிறார், அவர் ரசிய மக்களின், சோசலிச முகாமிலுள்ள மக்களின், உலக மக்களின் அடிப்படை நலன்களுக்கு மேலாக அந்த சிலரின் நலன்களைக் கருதுகிறார்.

குருச்சேவ் பின்பற்றும் பாதை முழுக்க முழுக்கத் திரிபுவாதப் பாதை யாகும். இந்தப் பாதையின் விளைவாக, முன்னாள் முதலாளிய சக்திகள் மட்டும் பலம்பெறவில்லை, கூடவே ரசிய கட்சியின் முன்னணி ஊழியர்கள் மத்தியிலும், அரசாங்க ஊழியர்கள் மத்தியிலும், அரசு நிறுவன நிர்வாகிகள் மத்தியிலும், கூட்டுப் பண்ணை நிர்வாகிகள் மற்றும் கலாச்சார, கலை, அறிவியல் தொழில் நுட்பத் துறைகளிலுள்ள உயர் அறிவு ஜீவிகள் மத்தியிலும் ஏராளமான புதிய முதலாளியக் கூறுகள் தோன்றியுள்ளன.

தற்போது ரசியாவில் முன் எப்போதும் இல்லாத அளவு எண்ணிக் கையில் புதிய முதலாளிய சக்திகள் அதிகரித்து இருப்பது மட்டும் அல்லாமல், அவர்களின் சமூக அந்தஸ்தும் அடிப்படையிலேயே மாறி உள்ளது. குருச்சேவ் ஆட்சிக்கு வருவதற்கு முன் அவர்கள் ரசிய சமுதாயத்தில் ஆட்சி புரியும் ஸ்தானத்தில் இல்லை. அவர்களுடைய நடவடிக்கைகள் பல வழிகளில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன; அவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகி இருந்தனர். குருச்சேவ், படிப்படியாக கட்சி மற்றும் அரசின் தலைமையைக் கைப்பற்றியதிலிருந்து, இந்தப் புதிய முதலாளிய நபர்கள் கட்சி மற்றும் அரசு அமைப்பிலும், பொருளாதார, கலாச்சார மற்ற இதர துறைகளிலும் ஆட்சி புரியும் நிலைக்குப் படிப்படி யாக உயர்ந்தனர், சோவியத் சமுதாயத்தின் சலுகை பெற்ற பகுதியாக மாறினர்.

இந்த சலுகைபெற்ற பகுதியே இன்று ரசியாவிலுள்ள முதலாளி களின் முக்கிய அங்கமும், திரிபுவாதி குருச்சேவ் கும்பலின் பிரதான சமூக அடிப்படையும் ஆகும். இந்த ரசிய முதலாளிகளின் குறிப்பாக, இச்சலுகை பெற்ற பகுதியின் அரசியல் பிரதிநிதிகளே திரிபுவாத குருச்சேவ் கும்பலாகும்.

திரிபுவாத குருச்சேவ் கும்பல், நாடு முழுவதும், மத்தியிலிருந்து, உள்ளூர் அமைப்பு வரை, கட்சி மற்றும் அரசாங்க தலைமை அமைப்புகளிலிருந்து பொருளாதார, கலாச்சார, கல்வித்துறைகள் வரை அடுத்தடுத்து களையெடுப்பை மேற்கொண்டு அணி அணியாக ஊழியர்களை நீக்கியது, தான் நம்பாதவர்களை நீக்கிவிட்டு தனது ஆதரவாளர்களை முக்கியப் பதவிகளில் அமர்த்தியது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியே இதற்கு ஓர் உதாரணமாகும். 1952-ல் நடந்த அக்கட்சியின் 19-வது காங்கிரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய கமிட்டி உறுப்பினர்களில் 70 சதவீதம் பேர் 1956, 1961-ம் ஆண்டுகளில் நடந்த 20-வது, 21-வது காங்கிரசுகளில் நீக்கப்பட்டனர் என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. 20-வது காங்கிரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய கமிட்டி உறுப்பினர்களில் கிட்டத்தட்ட 50 சதவீதம் பேர் 22-வது காங்கிரசில் நீக்கப்பட்டனர்.

உள்ளூர் அமைப்புக்களை எடுத்துக் கொள்வோம். முழுமையுறாத புள்ளி விவரத்தின்படியே, 22-வது காங்கிரசிற்கு முன்பு ''ஊழியர்களைப் புதுப்பிப்பது'' என்ற பெயரில் குருச்சேவ் திரிபுவாதக் கும்பல் யூனியன் குடியரசு கட்சிகளின் மத்திய கமிட்டி உறுப்பினர்களிலும், பிரதேச, மற்றும் பிராந்திய கட்சி கமிட்டி உறுப்பினர்களிலும் 45 சதவீதத்தினரை நீக்கியுள்ளது. நகராட்சி மற்றும் மாவட்ட கட்சிக் கமிட்டிகளின் உறுப்பினர்களின் 40 சதவீதத்தினரையும் நீக்கி உள்ளது. மேலும் 1963-ல் கட்சியை ''தொழிற்துறை'' மற்றும் ''விவசாயம்'' என்ற அடிப்படையில் பிரிப்பது என்ற பெயரில் யூனியன் குடியரசுகளின் மத்திய கமிட்டி மற்றும் பிராந்தியக் கட்சிக் கமிட்டி உறுப்பினர்களில் பாதிக்கு மேலானவர்களை மாற்றியது.

தொடர்ச்சியான இந்த மாற்றங்களின் மூலம் ரசியாவின் சலுகை பெற்ற பகுதியானது, கட்சி, அரசாங்கம் மற்றும் இதர முக்கிய அமைப்புகளின் மீது தனது கட்டுப்பாட்டை நிறுவியது.

இந்த சலுகை பெற்ற பகுதியின் உறுப்பினர்கள் மக்களுக்கு சேவை செய்யும் பணியை, அவர்கள் மீது ஆதிக்கம் செய்யும் சிறப்புரிமையாக மாற்றினர். சிறு கும்பலின் சுய இலாபத்திற்காக உற்பத்தி சாதனங்களின் மீதும், வாழ்க்கை வசதிகள் மீதும் தங்களுக்குள்ள அதிகாரத்தை கேடாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த சலுகை பெற்ற பகுதியினர் ரசிய மக்களின் உழைப்பினால் விளைந்த பலனைப் பறிக்கின்றனர். சராசரி ரசியத் தொழிலாளி மற்றும் விவசாயியின் வருமானத்தை விட பல நூறு மடங்கு அதிகமான

வருமானத்தைப் பெறுகின்றனர். அதிக சம்பளம், அதிக பரிசுகள், அதிக அரசுரிமை, பல்வகையான தனிநபர் மான்யங்கள் என்ற வடிவங்களில் அவர்கள் அதிக வருமானத்தை அடைவதோடு மட்டும் நிற்பதில்லை, தங்களுடைய சலுகை பெற்ற அந்தஸ்தைப் பயன்படுத்தி லஞ்சம் மற்றும் ஊழல் மூலம் பொதுச் சொத்தையும் அபகரிக்கின்றனர். ரசிய உழைக்கும் மக்களிடமிருந்து முழுவதும் விலகி, முதலாளிகளின் சீரழிந்துபோன, ஒட்டுண்ணி வாழ்க்கையை நடத்துகின்றனர்.

இந்த சலுகை பெற்ற நபர்கள் சித்தாந்த ரீதியாக முற்ற முழுக்க சீரழிந்து போயுள்ளனர்; போல்ஷ்விக் கட்சியின் புரட்சிகர மரபுகளிலிருந்து முழுவதும் விலகிப் போயுள்ளனர்; ரசிய உழைக்கும் வர்க்கத்தின் உயர்ந்த இலட்சியங்களை உதறிவிட்டனர். இவர்கள் மார்க்சிய—லெனினியத்தையும், சோசலிசத்தையும் எதிர்க்கிறார்கள்; புரட்சிக்குத் துரோகமிழைக்கிறார்கள்; மற்றவர்கள் புரட்சி செய்வதைத் தடுக்கிறார்கள். அவர்களுடைய ஒரே நோக்கம் அவர்களின் பொருளாதாரப் பிடிப்பையும், அரசியல் ஆதிக்கத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வதுதான். அவர்களது அனைத்து நடவடிக்கைகளும் சலுகை பெற்ற பகுதியின் சொந்த நலன்களைச் சுற்றியே அமைந்துள்ளன.

ரசியகட்சியின் தலைமையையும், அரசையும் கைப்பற்றிய குருச்சேவ் கும்பல், புகழ்பெற்ற புரட்சிகர வரலாற்றைக் கொண்ட ரசியாவின் மார்க்சிய—லெனினிய கம்யூனிஸ்ட் கட்சியை திரிபுவாதக் கட்சியாக மாற்றி வருகிறது; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமான ரசிய அரசை திரிபுவாதக் குருச்சேவ் கும்பலின் சர்வாதிகாரமாக மாற்றி வருகிறது; அனைத்து மக்களுக்குமான சோசலிச உடைமையையும், சோசலிசக் கூட்டுடமையையும் சலுகை பெற்ற பகுதியினரின் உடைமையாகப் படிப்படியாக மாற்றி வருகிறது.

டிட்டோ, ''சோசலிசம்'' என்னும் பதாகையை உயர்த்திப் பிடிப்பதாகக் கூறினாலும், டிட்டோ கும்பல் திரிபுவாதப் பாதையைப் பின்பற்ற தொடங்கிய பின் யூகோஸ்லாவிய மக்களுக்கு எதிரான அதிகார வர்க்க முதலாளித்துவம் படிப்படியாக வளர்ந்து யூகோஸ்லாவியாவின் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை அதிகார வர்க்க முதலாளியத்தின் சர்வாதிகாரமாக மாற்றியதையும் அதன் சோசலிசப் பொருளாதாரத்தை அரசு முதலாளியமாக மாற்றியதையும் மக்கள் பார்த்துள்ளார்கள். டிட்டோ கும்பல் ஏற்கனவே சென்ற பாதையில் இன்று குருச்சேவ் கும்பல் செல்வதை மக்கள் பார்க்கிறார்கள். பெல்கிரேடை தனது மெக்காவாகக் கருதுகிறார் குருச்சேவ். டிட்டோ கும்பலின் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்வதாகவும், இரண்டு கும்பல்களும்

''ஒரே கண்ணோட்டத்தைச் சார்ந்தவை என்றும், ஒரே கோட்பாட்டினால் வழிகாட்டப்படுகின்றன''[1] என்றும் அடிக்கடி பிரகடனம் செய்துகொள் கிறார். இது ஒன்றும் வியப்பிற்குரியதல்ல.

மாபெரும் ரசிய மக்களின் இரத்தத்தாலும் வியர்வையாலும் உருவாக்கப்பட்ட இந்த உலகின் முதல் சோசலிச நாடு, குருச்சேவின் திரிபுவாதத்தால் இன்று முதலாளிய மீட்பு என்ற பெரும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

ரசிய மக்களுக்கு எதிரான தங்களுடைய கடுமையான வர்க்கப் போராட்டத்தின் உண்மைகளை மறைக்க ''ரசியாவில் பகை வர்க்கங்களோ, வர்க்கப் போராட்டமோ இல்லை'' என்ற கதையை குருச்சேவ் கும்பல் பரப்பி வருகிறது.

திரிபுவாத குருச்சேவ் கும்பலால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சலுகைபெற்ற சமூக அடுக்கு ரசிய மக்கட் தொகையில் ஒருசில சதவீதமே. ரசிய ஊழியர்களிடம் கூட அவர்களின் எண்ணிக்கை மிக குறைவே. இது 90 சதவீதத்திற்கும் மேலான ரசிய மக்களுக்கும், பெரும்பான்மையினரான ரசிய ஊழியர்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் எதிராக நிற்கிறது. ரசிய மக்களுக்கும் சலுகை பெற்ற இந்த அடுக்கிற்கும் இடையிலான முரண்பாடே இன்றைய ரசியாவின் பிரதான முரண்பாடாகும். இது சமரசப்படுத்த முடியாத பகை வர்க்க முரண்பாடாகும்.

லெனினால் கட்டப்பட்ட பெருமைமிக்க ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும், மாபெரும் ரசிய மக்களும், அக்டோபர் சோசலிசப் புரட்சியின்போது வரலாற்றைப் படைக்கும் புரட்சிகர முன்னூக்கத்தைக் காட்டியவர்கள்; வெள்ளைப் படையினரையும், ஒரு டஜனுக்கும் மேலான ஏகாதிபத்திய நாடுகளின் ஆயுதத் தலையீட்டையும் முறியடிப்பதில் தங்களுடைய உறுதியையும் வீர சாகசத்தையும் காட்டியவர்கள்; தொழில்மயமாக்குவதற்கும் கூட்டுப் பண்ணைகளை உருவாக்குவதற்குமான போராட்டங்களில் ஒப்பற்ற சாதனைகளைப படைத்தவர்கள்; ஜெர்மன் பாசிஸ்டுகளுக்கு எதிரான தேசபக்தப் போரில் மாபெரும் வெற்றியை ஈட்டி மனித குலத்தைக் காப்பாற்றியவர்கள். குருச்சேவ் கும்பலின் ஆட்சியின் கீழும் கூட ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பரந்துபட்ட உறுப்பினர்களும் ரசிய மக்களும் லெனினாலும், ஸ்டாலினாலும் உருவாக்கி வளர்க்கப்பட்ட பெருமைமிக்க புரட்சிகர மரபுகளைப் பின்பற்றுகிறார்கள்;

---

1. *என். எஸ். குருச்சேவ், ''யூகோஸ்லாவியாவிலுள்ள பிரியோனியில் வெளிநாட்டு நிருபர்களுடன் பேட்டி'' ஆகஸ்ட் 28, 1963.*

அவர்கள் இன்னும் சோசலிசத்தை உயர்த்திப் பிடித்து உள்ளார்கள். கம்யூனிசத்தை அடைய விரும்புகிறார்கள்.

சலுகை பெற்ற பகுதியின் ஒடுக்குமுறையாலும், சுரண்டலாலும் பரந்துபட்ட ரசியத் தொழிலாளிகளும், கூட்டுப் பண்ணைவி வசாயிகளும், அறிவு ஜீவிகளும் அதிருப்தியுற்றுள்ளார்கள். சோசலிசத்தைக் காட்டிக் கொடுத்து முதலாளியப் பாதையில் செல்லும் குருச்சேவ் கும்பலின் திரிபுவாதக் கூறுகளை அவர்கள் இன்று தெளிவாகப் பார்க்கத் தொடங்கியுள்ளார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சிகர நிலைப்பாட்டில் ஊன்றி நின்றும், சோசலிசப் பாதையில் உறுதியுடன் நின்றும் குருச்சேவின் திரிபுவாதத்தை உறுதியாக எதிர்க்கும் பலர் இன்னும் ரசிய ஊழியர்களின் அணிகளிடையே இருக்கிறார்கள். பரந்துபட்ட ரசிய மக்களும், கம்யூனிஸ்டுகளும், ஊழியர்களும் குருச்சேவ் கும்பலின் திரிபுவாதப் பாதையை பல வழிகளில் எதிர்த்தும் தடுத்தும் வருகின்றனர்; அதனால் குருச்சேவ் கும்பலால் அவ்வளவு எளிதாக முதலாளியத்தை மீட்க முடியாமல் செய்து வருகின்றனர். மாபெரும் ரசிய மக்கள், மாபெரும் அக்டோபர் புரட்சியின் பெருமைமிக்க மரபுகளையும் சோசலிசத்தின் பெரும்பலன்களையும் பாதுகாக்கவும், முதலாளிய மீட்புச் சதியைத் தகர்த்தெறியவும் போராடி வருகிறார்கள்.

"அனைத்து மக்களுக்கான அரசு" என்பதற்கு மறுப்பு

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசில் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு என்பதை நீக்கி "அனைத்து மக்களின் அரசு" என அறிவித்ததன் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு பகிரங்கமான எதிர்ப்புக் கொடியை உயர்த்தினார் குருச்சேவ். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் "அவசியம் ரசியாவில் முடிவுற்று விட்டது" என்றும் "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகத் தோன்றிய அரசு, தற்போதைய புதிய கட்டத்தில் அனைத்து மக்களுக்குமான அரசாக மாறிவிட்டது" என்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டத்தில் எழுதப்பட்டுள்ளது.

மார்க்சிய—லெனினியம் பற்றி ஓரளவே அறிந்தவர் கூட அரசு பற்றிய கருதுகோள் ஒரு வர்க்கக் கருதுகோள் என்பதை அறிவார். "அரசின் தெளிவான அடையாளம் என்னவென்றால் அதிகாரத்தைத்

தன் கையில் குவித்து வைத்துள்ள ஒரு தனி வர்க்கம் நிலவுகிறது என்பதே''[1] என லெனின் சுட்டிக் காட்டியுள்ளார். வர்க்கப் போராட்டத்தின் ஒரு கருவியான அரசு, ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கப் பயன்படுத்தும் ஒரு இயந்திரம். ஒவ்வொரு அரசும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் சர்வாதிகாரமே. அரசு நிலவும் வரை அது வர்க்கத்திற்கு மேலாகவோ அல்லது அனைத்து மக்களுக்குமானதாகவோ இருக்கமுடியாது.

பாட்டாளி வர்க்கமும் அதன் அரசியல் கட்சியும் எப்பொழுதும் தன் கருத்துக்களை மூடி மறைக்காது. பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் நோக்கம் முதலாளிகளின் ஆட்சியை வீழ்த்திவிட்டுப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதுதான் என அவர்கள் பகிரங்கமாகக் கூறுகிறார்கள். சோசலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பின் பாட்டாளி வர்க்கமும், அதன் கட்சியும் இடையறாது முயற்சி செய்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றுக் கடமைகளை நிறைவேற்றி வர்க்கங்களையும், வர்க்க வேறுபாடுகளையும் களையவேண்டும்; அவ்வாறு செய்வதன் மூலம் அரசு உலர்ந்து உதிரும். முதலாளிகளும் அவர்களின் கட்சிகளும் மட்டுமே மக்களை ஏமாற்றுவதற்காக, அரசு அதிகாரத்தின் வர்க்கத் தன்மையை பல வழிகளிலும் மூடிமறைக்க முயல்கிறார்கள்; அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள அரசு இயந்திரத்தை ''அனைத்து மக்களினது'' என்றும் ''வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது'' என்றும் வர்ணிக்கிறார்கள்.

ரசியாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அழிந்துவிட்டது என்ற குருச்சேவின் அறிவிப்பும் ''அனைத்து மக்களின் அரசு'' என அவர் முன் வைத்துள்ள ஆய்வும் அவர் அரசு பற்றிய மார்க்சிய-லெனினிய போதனைகளுக்குப் பதிலாக முதலாளியப் பொய்களை முன் வைக்கிறார் என்பதையே காட்டுகின்றன.

மார்க்சிய-லெனினியவாதிகள், அவர்களுடைய பொய்களை விமர்சிக்கும்பொழுது, திரிபுவாத குருச்சேவ் கும்பல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, ''அனைத்து மக்களின் அரசு'' என்பதற்கான ஒரு கோட்பாட்டு அடிப்படையைக் கண்டு பிடிக்க முயல்கிறது. மார்க்சாலும், லெனினாலும் குறிப்பிடப்பட்டுள்ள பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான வரலாற்றுக் கட்டம் முதலாளியத்திலிருந்து கம்யூனிசத்தின்

---

1. வி. இ. லெனின், ''நரோத்திசத்தின் பொருளாதார உள்ளடக்கமும் திருவாளர் ஸ்ட்ருஷன் புத்தகத்தில் உள்ளது பற்றிய விமர்சனமும்'', தொகுப்பு நூல், ஆங்கிலப்பதிப்பு, அயல் மொழி பதிப்பகம், மாஸ்கோ 1960, தொகுதி 1, பக்கம் 419

முதல்கட்டம் வரையிலானதுதான் என்றும் அதனுடைய உயர்ந்த கட்டத்திற்கானது அல்ல என்றும் அவர்கள் இப்பொழுது கூறுகிறார்கள். ''அரசு உலர்ந்து உதிர்வதற்கு முன்பே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியமற்றதாகி விடும்''[1] என அவர்கள் மேலும் கூறுகிறார்கள்; அதாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முடிந்தபின் இன்னொரு கட்டம் அதாவது ''அனைத்து மக்களின் அரசு'' என்னும் கட்டம் உள்ளது என்கிறார்கள்.

இவை முழுக்க முழுக்க குதர்க்கவாதமே.

மார்க்ஸ் தன்னுடைய ''கோதா திட்டம் பற்றிய விமர்சனத்தில்'' முதலாளியத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்லும் கட்டம் முழுவதும் உள்ள அரசு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே என்ற பிரசித்தி பெற்ற உண்மையைக் கூறியுள்ளார். மார்க்சியத்தின் இந்த உண்மைக்கு லெனின் தெளிவான விளக்கம் கொடுத்துள்ளார். அவர் கூறுகிறார்:

''மார்க்ஸ் தனது ''கோதா திட்டம் பற்றிய விமர்சனத்தில்'' எழுதி எழுதினர்:

''முதலாளிய சமுதாயத்திற்கும் கம்யூனிச சமுதாயத்திற்கும் இடையில், ஒன்று இன்னொன்றாக புரட்சிகரமான மாற்றத்துள்ளாகும் கட்டம் இருக்கிறது. அதற்கு இணையாகவே ஒரு அரசியல் மாறுதல் கட்டமும் இருக்கிறது. அதில் அரசு என்பது புரட்சிகரப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக இருக்க முடியுமே தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

இதுவரை இந்த உண்மை சோசலிஸ்டுகளால் ஒருபோதும் மறுக்கப்படவில்லை; வெற்றியடைந்த சோசலிசம், முழுமையான கம்யூனிசமாக வளர்ச்சி பெறும் காலம்வரை அரசு நிலவும் என்பதை அங்கீகரித்துள்ளதையே இது காட்டுகிறது.''[2]

லெனின் மேலும் கூறுகிறார்:

''ஒரு வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்பது பொதுவாக ஒவ்வொரு வர்க்க சமுதாயத்திற்கும் மட்டும் அல்ல, முதலாளிகளை வீழ்த்தியுள்ள

---

1. ''கம்யூனிசத்தைக் கட்டுவதற்கான திட்டம்'', பிராவ்தா, ஆசிரியர் குழு கட்டுரை, ஆகஸ்டு 18, 1961.

2. வி. இ. லெனின், ''சுயநிர்ணயம் பற்றிய விவாதம்—தொகுக்கப்பட்டது'', தொகுப்பு நூல், இண்டர்நேசனல் பப்ளிசர்ஸ், நியூயார்க், 1942, தொகுதி 19, பக்கம் 269, 270.

பாட்டாளி வர்க்கத்திற்கு மட்டும் அல்ல, முதலாளியத்தை, 'வர்க்கமற்ற சமுதாயத்திலிருந்து' அதாவது கம்யூனிசத்திலிருந்து பிரிக்கும் வரலாற்று காலக்கட்டம் முழுவதும் அவசியம் என்பதைப் புரிந்துள்ளவர்களால் மட்டுமே அரசு பற்றிய மார்க்சின் போதனைகளிலுள்ள சாரத்தை அறிய முடியும்.''[1]

பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு என்பது திரிபுவாத குருச்சேவ் கும்பல் கூறுவதுபோல முதலாளியத்திலிருந்து கம்யூனிசத்தின் முதல் கட்டம் வரையிலான காலகட்டத்தில் மட்டும் அல்ல, முதலாளியத்திலிருந்து ''முழுமையான கம்யூனிசத்தை'' அடையும் வரையிலான முழுமையான காலத்திற்கும் எல்லா வர்க்கவேறுபாடுகளும் களையப்பட்டு வர்க்கமற்ற சமுதாயத்தை அடையும் வரையிலும்; அதாவது, கம்யூனிசத்தின் உயர்ந்த கட்டத்தை அடையும் வரையிலும் நிலவும் என்பதை மார்க்சும், லெனினும் தெள்ளத் தெளிவாக்கியுள்ளனர்.

மார்க்ஸ், லெனின், ஆகியோரால் குறிப்பிடப்படும் மாறுதல் கால கட்டத்தில் நிலவக்கூடிய அரசு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தவிர வேறல்ல என்பது தெளிவான உண்மை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது முதலாளியத்திலிருந்து கம்யூனிசத்தின் உயர்ந்த கட்டம் வரையிலான காலகட்டத்திற்கான அரசு வடிவம் மட்டும் அல்ல, மனித வரலாற்றில் நிலவக்கூடிய அரசின் கடைசி வடிவமும் கூட. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உலர்ந்து உதிர்வது என்பது அரசு உலர்ந்து உதிர்வதாகும்.

லெனின் கூறுகிறார்:

''சோசலிசத்தின் முழு வரலாற்றையும், அரசியல் போராட்டத்தையும் ஆய்வு செய்த மார்க்ஸ் அரசு மறைந்து போகும் என்ற முடிவுக்கு வருகிறார்; அரசு மறைந்து போகக்கூடிய மாறுதல் வடிவம் (அரசு என்ற நிலையிலிருந்து அரசு இல்லாத நிலைக்கு மாறுதல்) ''ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைத்துக் கொண்டுள்ள பாட்டாளி வர்க்கமாகத்தான் இருக்கும்.''[2]

வரலாற்று ரீதியாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வடிவம் நாட்டுக்கு நாடு வேறுபடலாம். கட்டத்திற்கு கட்டம் வேறுபடலாம். ஆனால், சாராம்சத்தில் அது ஒன்றாகத்தான் இருக்கும்.

---

1. வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'', தேர்வு நூல்கள், அ.மொ.ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 1. பக்கம் 234.
2. மேற்கண்ட நூல், பக்கம் 256, 257.

லெனின் கூறுகிறார்:

''முதலாளியத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறும்பொழுது பல்வேறு வகையான அரசியல் வடிவங்கள் தோன்றலாம். ஆனால், சாராம்சம் ஒன்றாகவே இருக்கும்; அதுதான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்.''[1]

எனவே அரசு உலர்ந்து உதிர்வதற்கு முன்பே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முடிந்துவிடும் என்பதும் அதற்குப் பின் ''அனைத்து மக்களினது அரசு'' என்னும் இன்னொரு கட்டம் வரும் என்பதும் திரிபுவாதி குருச்சேவின் கண்டுபிடிப்பே தவிர நிச்சயமாக மார்க்ஸ், லெனின் ஆகியோரின் கருத்தல்ல.

திரிபுவாத குருச்சேவ் கும்பல் மிகவும் கஷ்டப்பட்டு மார்க்சின் ஒரு வாக்கியத்தைத் தேடிக் கண்டுபிடித்து, சம்பந்தமில்லாமல் அதை மேற்கோள் காட்டித் தங்களுடைய மார்க்சிய-லெனினிய விரோத கருத்துக்காக வாதிடுகின்றனர். கம்யூனிச சமுதாயத்தில் வரும் எதிர்கால அரசின் இயல்பு பற்றி மார்க்ஸ் தன்னுடைய ''கோதா திட்டம் பற்றிய விமர்சனத்தில்'' ''கம்யூனிச சமுதாயத்தின் அரசு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அல்ல'' [2] என்று குறிப்பிட்டுள்ளதைத் தங்கள் விருப்பப்படி விளக்குகிறார்கள். மார்க்சின் இந்த மேற்கோளைத் தொட சீனர்களுக்கு தைரியம் கிடையாது என வெற்றிக் களிப்புடன் அறிவிக்கிறார்கள். இந்த மேற்கோள் தனக்கு மிகவும் உதவியாய் உள்ளது எனக் கருதுகிறது திரிபுவாத குருச்சேவ் கும்பல்.

மார்க்சியத்தைத் திரிக்க, திருத்தல்வாதிகள் இந்த மேற்கோளைப் பயன்படுத்துவார்கள் என்பதை லெனின் முன்கூட்டியே அறிந்து வைத்திருந்தார் போலத் தோன்றுகிறது. அதனால்தான் ''அரசு பற்றி மார்க்சியம்'' என்ற படைப்பில், லெனின் இதற்கு அருமையான விளக்கம் கொடுத்துள்ளார். அவர் கூறுகிறார், ''......பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது அரசியல் மாறுதலுக்கான காலகட்டமாகும்...ஆனால், மார்க்ஸ், கம்யூனிச சமுதாயத்திலிருக்கும் வருங்கால அரசின் தன்மை பற்றிப் பேசுகிறார்!! எனவே, கம்யூனிச சமுதாயத்திலுங்கூட அரசு இருக்கும்!! இது முரண்பாடான ஒன்றல்லவா?'' ''இல்லை'' என்று பதிலளித்த லெனின், முதலாளித்துவ அரசானது உலர்ந்து உதிரும்

1. வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'', தேர்வு நூல்கள். அ.மொ.ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 1, பக்கம் 234.

2. எம். எ. சஸ்லோவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் பிளீனகூட்டத்தில் வைத்த அறிக்கை, பிப்ரவரி 1964, நியூ டைம்ஸ், ஆங்கிலப்பதிப்பு, எண் 15, 1964, பக்கம் 62.

நிலையை அடையும் வளர்ச்சிப் போக்கினை கீழ்க்காணுமாறு விளக்குகிறார்.

முதல் கட்டம்-முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளிகளுக்கு அரசு தேவைப்படுகிறது-அதாவது முதலாளிய அரசு.

இரண்டாவதுகட்டம் - முதலாளியத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்லும் கட்டத்தில், பாட்டாளி வர்க்கத்திற்கு அரசு தேவைப் படுகிறது-இது பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு.

மூன்றாவது கட்டம்-கம்யூனிச சமுதாயத்தில் அரசு தேவை இல்லை. உலர்ந்து உதிர்ந்து விடுகிறது.

''இது முரணற்றது, தெளிவானது'' என முடிக்கிறார் லெனின்.

லெனினுடைய வரையறுப்பில், முதலாளிய அரசு, பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு, அரசு உலர்ந்து உதிர்வது ஆகியவை மட்டுமே காணப்படுகின்றன, கம்யூனிசத்தை அடையும்பொழுது, அரசு உலர்ந்து உதிர்ந்துவிடும். இல்லாத ஒன்றாகி விடும் என லெனின் தனது வரையறுப்பில் தெளிவாகக் கூறுகிறார்.

திருத்தல்வாத குருச்சேவ் கும்பலும் இதே மேற்கோளை லெனினுடைய ''அரசு பற்றி மார்க்சியம்'' என்ற நூலிருந்து எடுத்தாண்டு, தனது தவறைப் பாதுகாக்க முயற்சி செய்துள்ளது. பிறகு அது கீழ்க்காணும் முட்டாள்தனமான முடிவுக்கு வருகிறது.

''லெனினால் குறிப்பிடப்பட்ட முதல் இரண்டு கட்டங்களும் நமது நாட்டில் ஏற்கனவே வரலாறாக மாறிவிட்டது. ரசியாவில் இப்பொழுது அனைத்து மக்களின் அரசு-கம்யூனிச அரசமைப்பு, கம்யூனிசத்தின் முதல்கட்டத்தின் அரசு தோன்றி வளர்ந்து வருகிறது.''[1]

லெனினால் குறிப்பிடப்பட்ட முதல் இரண்டு கட்டங்களும் ரசியாவில் கடந்த காலத்தைச் சேர்ந்தவைகளாக மாறியிருந்தால், அரசு உலர்ந்து உதிர்ந்து கொண்டிருக்கவேண்டும். அப்படியானால், ''அனைத்து மக்களுக்குமான அரசு'' எங்கிருந்து வந்தது. இன்னும் அரசு உதிர்ந்து கொண்டிருக்கவில்லையானால், அது பாட்டாளி வர்க்க சர்வாதிகார மாகத்தான் இருக்க முடியுமே தவிர எந்த சூழ்நிலையிலும் அது ''அனைத்து மக்களின் அரசாக'' இருக்க முடியாது.

---

1. *''பாட்டாளி வர்க்கக் கட்சியிலிருந்து அனைத்து சோவியத் மக்களின் கட்சி என்ற நிலைக்கு'', பார்ட்டியின்யாஜிஜன் பத்திரிகையின் ஆசிரியர் குழு கட்டுரை. எண் 8, 1964.*

திரிபுவாத குருச்சேவ் கும்பல் தனது ''அனைத்து மக்களின் அரசு''க்காக வாதாடும்பொழுது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஜனநாயகமற்றது என இழிவுபடுத்துகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசுக்குப் பதிலாக ''அனைத்து மக்களின் அரசை'' உருவாக்கும்பொழுது மட்டுமே ஜனநாயகம் மேலும் வளர்க்கப்பட்டு ''அனைத்து மக்களின் உண்மையான ஜனநாயகமாக'' மாற்றப்படும் என அவர்கள் கூறுகிறார்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மறைவு ''வீரியத்துடன் வளர்ந்து செல்லும் ஜனநாயகத்திற்கான வழியைக்'' குறிக்கிறது என்றும் ''பாட்டாளி வர்க்க ஜனநாயகம் அனைத்து மக்களின் சோசலிச ஜனநாயகமாக மாறுவதைக் குறிக்கிறது''[1] என்றும் அதிமேதாவித்தனமாக குருச்சேவ் கூறுகிறார்.

இந்த உளறல்கள் எதைக் காட்டுகின்றனவென்றால் ஒன்று இதன் மூலகர்த்தாக்கள் அரசு பற்றிய மார்க்சிய—லெனினிய போதனைகளை ஒரு சிறிதும் அறியாதவர்களாக இருக்கவேண்டும் அல்லது வேண்டும் என்றே அவற்றைத் திரித்து கூறுபவர்களாக இருக்கவேண்டும்.

சர்வாதிகாரம் என்பது ஒரு வர்க்கத் தன்மை கொண்டது என்பதைப் போலவே ஜனநாயகம் என்பது ஒரு அரசு வடிவமே என்பதையும், ஒரு சிறிதே மார்க்சிய—லெனினிய அறிவைக் கொண்டவர்கள் கூட அறிவார்கள். வர்க்க ஜனநாயகம்தான் இருக்கமுடியுமே தவிர ''அனைத்து மக்களுக்கும் ஜனநாயகம்'' என்பது இருக்கமுடியாது.

லெனின் கூறினார்:

''மிகப் பெரும்பான்மை மக்களுக்கு ஜனநாயகம், மக்களைச் சுரண்டுபவர்களுக்கும், ஒடுக்குபவர்களுக்கும் பலாத்காரமான ஒடுக்குமுறை அதாவது ஜனநாயக மறுப்பு— இதுதான் முதலாளியத்திலிருந்து கம்யூசனித்திற்கு மாறிச்செல்லும் கட்டத்தில் ஜனநாயகத்தில் ஏற்படும் மாற்றமாகும்.''[2]

சுரண்டும் வர்க்கத்தின் மேல் சர்வாதிகாரம், உழைக்கும் மக்களிடையே ஜனநாயகம்- இவையே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இரண்டு அம்சங்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில்

1. என். எஸ். குருச்சேவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசுக்கான அறிக்கை, அக்டோபர் 1961 மற்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி திட்டம் பற்றி காங்கிரசில் சமர்பித்த அறிக்கை.

2. வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 1, பக்கம் 291.

மட்டுமே, உழைக்கும் மக்களுக்கான ஜனநாயகத்தை முன் எப்போதும் கண்டிராத அளவிற்கு வளர்க்கவும் விரிவடையச் செய்யவும் முடியும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாமல் உழைக்கும் மக்களுக்கு உண்மையான ஜனநாயகம் இருக்க முடியாது.

முதலாளிய ஜனநாயகம் இருக்குமிடத்தில் பாட்டாளி வர்க்க ஜனநாயகம் இருக்கமுடியாது. பாட்டாளி வர்க்க ஜனநாயகம் இருக்கும் இடத்தில் முதலாளிய ஜனநாயகம் இருக்க முடியாது. ஒன்று இன்னொன்றை ஒதுக்கிவிடுகிறது. இது தவிர்க்கமுடியாததும் சமரசத்திற்கு இடமில்லாததும் ஆகும். எவ்வளவு அதிகமாக முதலாளிய ஜனநாயகம் நீக்கப்படுகிறதோ அவ்வளவு அதிகமாக பாட்டாளி வர்க்க ஜனநாயகம் தழைக்கும். எந்த நாட்டில் இது நடந்தாலும் ஜனநாயகம் இல்லாதது போலவே முதலாளிகளின் கண்களுக்குத் தெரியும். ஆனால் உண்மையில் இது பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் வளர்ச்சியும் முதலாளிய ஜனநாயகத்தின் வீழ்ச்சியும் , ஆகும். பாட்டாளி வர்க்க ஜனநாயகம் வளர்ச்சியடையும் பொழுது முதலாளிய ஜனநாயகம் அழிந்து விடும்.

இந்த அடிப்படை மார்க்சிய-லெனினிய ஆய்வு, திரிபுவாத குருச்சேவ் கும்பலினால் எதிர்க்கப்படுகிறது. உண்மையில் அவர்கள் கூறுவது என்னவென்றால், எதிரிகள் மீது சர்வாதிகாரம் இருக்கும்வரை ஜனநாயகம் இருக்க முடியாது. எனவே ஜனநாயகத்தை வளர்க்க ஒரே வழி எதிரிகள் மீதான சர்வாதிகாரத்தை ஒழித்துவிட்டு, அவர்களை ஒடுக்குவதை நிறுத்திவிட்டு ''அனைத்து மக்களுக்குமான ஜனநாயகத்தை'' நிறுவ வேண்டும்.

ஓடுகாலி காவுட்ஸ்கியின் ''தூய ஜனநாயகம்'' என்னும் கருத்தாக்கத்தில் வளர்க்கப்பட்டதுதான் இவர்களுடைய கருத்தும்.

காவுட்ஸ்கியை விமர்சிக்கும்பொழுது லெனின் கூறுகிறார்:...''தூய ஜனநாயகம்'' என்பது வர்க்கப் போராட்டத்தையும்'', அரசின் இயல்பையும் புரிந்து கொள்ளாத அறியாமையைக் காட்டும் சொற்றொடர் மட்டும் அல்ல, அது முழுக்க முழுக்க அர்த்தமற்றதாகும். ஏனெனில் கம்யூனிச சமுதாயத்தில் காலப் போக்கில் ஒரு பழக்கமாக மாறி ஜனநாயகம் உலர்ந்து உதிர்ந்துவிடுமே தவிர அது ஒருபோதும் தூய ''ஜனநாயகமாக இருக்காது''[1]

---

1. *வி. இ. லெனின், ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஒடுகாலி காவுட்ஸ்கியும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 2, பக்கம் 48.*

மேலும் அவர் சுட்டிக்காட்டுகிறார்:

''வளர்ச்சியின் இயங்கியல் (பாதை) பின்வருமாறு உள்ளது, முடியாட்சியிலிருந்து முதலாளிய ஜனநாயகம்; முதலாளிய ஜனநாயகத்திலிருந்து பாட்டாளி வர்க்க ஜனநாயகம்; பாட்டாளி வர்க்க ஜனநாயகத்திலிருந்து ஒன்றுமில்லாததற்கு''[1]

அதாவது, கம்யூனிசத்தின் உயர்ந்த கட்டத்தில், வர்க்க வேறுபாடுகள் ஒழியும்பொழுது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உலர்ந்து உதிரும்பொழுது அவற்றுடன் சேர்ந்து பாட்டாளி வர்க்க ஜனநாயகமும் உலர்ந்து உதிர்ந்து விடும்.

அப்பட்டமாக சொல்வோமானால், ''அனைத்து மக்களின் அரசு''டன் ''அனைத்து மக்களுக்குமான ஜனநாயகம்'' என குருச்சேவ் கூறுவதும் பித்தலாட்டமாகும். முதலாளிகள் மற்றும் பழைய திரிபுவாதிகள் ஆகியோரின் நார் நாராகக் கிழிந்துபோன ஆடைகளை ஒட்டுப் போட்டுத் தைத்து தன்னுடைய புதிய 'லேபிளை' ஒட்டிவிடும் குருச்சேவின் பிரதான நோக்கம் ரசிய மக்களையும், உலகம் முழுவதும் உள்ள புரட்சிகர மக்களையும் ஏமாற்றுவதும், அதன் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும், சோசலிசத்துக்கும் தான் இழைத்த துரோகச் செயலை மூடிமறைப்பதும் ஆகும்.

குருச்சேவினுடைய ''அனைத்து மக்கள் அரசின்'' சாராம்சம்தான் என்ன?

ரசியாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு முடிவுகட்டி விட்டு தன்னுடைய தலைமையின் கீழ் ஒரு திரிபுவாத கும்பலின் சர்வாதிகாரத்தை, அதாவது ரசிய முதலாளிகளின் சலுகை பெற்ற பகுதியின் சர்வாதிகாரத்தை குருச்சேவ் நிறுவியுள்ளார். உண்மையில் அவரது ''அனைத்து மக்களின் அரசு'', பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அல்ல. மாறாக திரளான தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் புரட்சிகர அறிவுஜீவிகள் மீதான அவரது சிறிய திரிபுவாத கும்பலின் சர்வாதிகாரமாகும். குருச்சேவ் கும்பலின் ஆட்சியின் கீழ் ரசிய உழைக்கும் மக்களுக்கு ஜனநாயகம் கிடையாது; மாறாக திரிபுவாத குருச்சேவ் கும்பலுக்கு, சலுகை பெற்ற அடுக்குக்கு, புதிய, பழைய முதலாளிய நபர்களுக்கு மட்டும்தான் அங்கு ஜனநாயகம் உண்டு.

---

1. வி. இ. லெனின், ''அரசு பற்றி மார்க்சியம்'' ரசியப் பதிப்பு, மாஸ்கோ 1958, பக்கம் 42.

குருச்சேவின் ''அனைத்து மக்களுக்குமான ஜனநாயகம்'' என்பது முழுக்க முழுக்க முதலாளிய ஜனநாயகமே; அதாவது, ரசிய மக்களின் மீதான குருச்சேவ் கும்பலின் சர்வாதிகாரமே.

ரசியாவில் இன்று பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டில் யார் ஊன்றி நின்றாலும், மார்க்சிய—லெனினியத்தை உயர்த்திப் பிடித்து வெளிப் படையாகப் பேசத்துணிந்தாலும், எதிர்த்தாலும், போராடினாலும் அவர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள், பின்தொடரப்படுகிறார்கள், நீதிமன்றத்திற்கு வர உத்தரவிடப்படுகிறார்கள், கைது கூடச் செய்யப்படுகிறார்கள், அவர்கள் சிறையிலிடப்படுகிறார்கள் அல்லது மனோநிலை பாதிக்கப்பட்டவர்கள்'' எனச் சொல்லப்பட்டு ''மனநோய் விடுதிக்கு'' அனுப்பப்படுகிறார்கள். லேசான அதிருப்தி காட்டுபவர்களை கூட கடுமையாக எதிர்த்துப் 'போராட' வேண்டும் என்றும், குருச்சேவின் விவசாயக் கொள்கையைக் கிண்டல் செய்யும் அளவுக்கு தைரியம் கொண்டுள்ள ''அழுகிப்போன ஜோக்கர்களை''[1] எதிர்த்து ''விட்டுக் கொடுக்காது போராட வேண்டும்'' என்றும் ரசிய பத்திரிகை சமீபத்தில் அறிவித்துள்ளது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு உள்ள தொழிலாளர்களையும் எதிர்ப்புத் தெரிவித்த மக்களையும் பல சமயங்களில் குருச்சேவ் கும்பல் கடுமையாக அடக்கியுள்ளது என்பது வியப்புக்குரியதல்ல.

''அனைத்து மக்களின் அரசை'' வைத்துக் கொண்டு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு முடிவு கட்டும் சூத்திரம் குருச்சேவ் திருத்தல் வாத கும்பலின் இரகசியத்தை வெளிப்படுத்துகிறது; அதாவது, அவர்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கடுமையாக எதிர்க் கிறார்கள். ஆனால், அரசு அதிகாரத்தை அவர்கள் அழியும்வரை கைவிட மாட்டார்கள். அரசு அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பதன் முக்கியத்துவத்தைத் திரிபுவாத குருச்சேவ் கும்பல் நன்கு அறிந்துள்ளது. ரசிய உழைக்கும் மக்களையும், மார்க்சிய—லெனினியர்களையும் ஒடுக்க அவர்களுக்கு அரசு இயந்திரம் தேவையாயுள்ளது. ரசியாவில் மீண்டும் முதலாளியத்தைக் கொண்டுவர அவர்களுக்கு அரசு தேவையாயுள்ளது. ''அனைத்து மக்களின் அரசு'', ''அனைத்து மக்களுக்குமான ஜனநாயகம்'' என்ற பதாகைகளை குருச்சேவ் கும்பல் உயர்த்திப் பிடிப்பதற்கான உண்மையான நோக்கங்கள் இவையே.

---

1. *இஸ்வெஸ்தியா, மார்ச் 10, 1964.*

''அனைத்து மக்களின் கட்சி'' என்பதற்கு மறுப்பு

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசில் குருச்சேவ் இன்னொரு பாதாகையை வெளிப்படையாக உயர்த்திப் பிடித்தார்; அது ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பாட்டாளி வர்க்க குணாம்சத்தை மாற்றுவது என்பதாகும். பாட்டாளி வர்க்கக் கட்சி என்பதற்கு பதில் ''அனைத்து மக்களின் கட்சி''யை அறிவித்தார். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம் கூறுவதாவது:

''ரசியாவில் சோசலிசம் பெற்ற வெற்றியின் விளைவாகவும் ரசிய சமுதாயத்தின் ஒற்றுமையை உறுதிப்படுத்தியதன் விளைவாகவும், பாட்டாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்ட் கட்சி, ரசிய மக்களின் முன்னணிப் படையாக, அனைத்து மக்களின் கட்சியாக மாறிவிட்டது.''

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி ''அனைத்து மக்களின் அரசியல் அமைப்பாக மாறிவிட்டது'' என அறிவிக்கிறது. என்ன அபத்தம்!

அரசைப் போலவே, அரசியல் கட்சியும் வர்க்கப் போராட்டத்திற்கான ஒரு கருவி என மார்க்சிய-லெனினியத்தின் ஆரம்பப் பாடமே கூறுகிறது. ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒரு வர்க்க குணாம்சத்தைக் கொண்டுள்ளது. கட்சி உணர்வு என்பது வர்க்க குணாம்சத்தின் ஒன்று குவிக்கப்பட்ட வெளிப்பாடாகும். வர்க்கத் தன்மையற்ற அல்லது வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட அரசியல் கட்சி என்பது இல்லை. இதற்கு முன்பும் இருந்ததில்லை; அதே போல், ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் நலன்களை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தாத ''அனைத்து மக்களின் கட்சி'' என்பதும் இருக்கமுடியாது.

பாட்டாளி வர்க்கத்தின் கட்சி, மார்க்சிய - லெனினியத்தின் புரட்சிகரக் கோட்பாட்டின் அடிப்படையிலும், புரட்சிகர வேலை முறையின் அடிப்படையிலும் கட்டப்படுகிறது; பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமை மீது அளவற்ற நம்பிக்கை வைத்துள்ள முன்னணிச் சக்திகளால் இக்கட்சி உருவாக்கப்படுகிறது; இது பாட்டாளி வர்க்கத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட முன்னணிப் படையாகும்; அவ்வர்க்கத்தின் மிக உயர்ந்த அமைப்பு வடிவமாகும். பாட்டாளி வர்க்கத்தின் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் நலன்களையும், அதன் ஒருமுனைப்படுத்தப்பட்ட விருப்பத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

மேலும், பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றுதான் மொத்த மக்கள் தொகையில் 90 சதவீதமாயுள்ள மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய கட்சியாகும். ஏனெனில், பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு இணையானதாகும்; பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரம் என்ற ஒளியிலும் பாட்டாளி வர்க்கம் மற்றும் பிற உழைக்கும் மக்களின் நிகழ்கால, எதிர்கால நலன்கள் என்ற அடிப்படையிலும், பெரும்பான்மை மக்களின் சிறந்த நலன்கள் என்ற அடிப்படையிலும் பாட்டாளி வர்க்கக் கட்சி பிரச்சினைகளை அணுகும்; மார்க்சிய-லெனினிய அடிப்படையில் இது சரியான தலைமையைக் கொடுக்கும்.

பாட்டாளி வர்க்கக் கட்சி, பாட்டாளி வர்க்கத்திலிருந்து தோன்றியவர்களுடன் பிற வர்க்கங்களிலிருந்து வந்தவர்களையும் தன்னுடைய உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும். ஆனால், பிற வர்க்கங்களிலிருந்து வந்துள்ளவர்கள் அந்த வர்க்கங்களின் பிரதிநிதிகளாகக் கட்சியில் இணையவில்லை. என்றைக்குக் கட்சியில் இணைகிறார்களோ அன்றே அவர்கள் தங்களது வர்க்க நிலைப்பாட்டைக் கைவிட்டு பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும். மார்க்சும், எங்கெல்சும் கூறினார்கள்:

''மற்ற வர்க்கங்களைச் சார்ந்தவர்கள் பாட்டாளிவர்க்க இயக்கத்தில் இணைவார்களானால், அவர்கள் முதலாளிய, குட்டி முதலாளிய விருப்பு, வெறுப்புகளின் மிச்ச சொச்சங்களைத் தம்முடன் கொண்டு வரக்கூடாது; மாறாக பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தை முழுமனதுடன் மேற்கொள்ள வேண்டும் என்பது முதல்நிபந்தனையாக இருக்க வேண்டும்''[1]

பாட்டாளி வர்க்க கட்சியின் குணாம்சத்தைப் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் நீண்ட காலத்திற்கு முன்பே மார்க்சிய-லெனினியத்தால் தெளிவாக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்தக் கோட்பாடுகளை திரிபுவாதக் குருச்சேவ் கும்பல் ''மாறாத வெறும் வறட்டு சூத்திரங்கள்'' என்றும் ''அனைத்து மக்கள் கட்சி'' என்பதையே ''கம்யூனிஸ்ட் கட்சி வளர்ச்சியின் இயங்கியலுக்கு ஏற்ற ஒன்றாகவும்''[2] கருதுகிறது.

---

1. *''எ. பெபல், டபிள்யூ.லீப்னெக்ட், டபிள்யூ.பிரேக் ஆகியோருக்கு மார்க்ஸ்-எங்கெல்ஸ் இருவரின் கடிதங்கள், செப்டம்பர்—17-18, 1879'', மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ மொ.ப., மாஸ்கோ 1951, தொகுதி 2, பக்கம் 440.*
2. *''பாட்டாளி வர்க்கத்தின் கட்சி என்பதிலிருந்து அனைத்து சோவியத் மக்களின் கட்சி'', ஆசிரியர் குழு கட்டுரை, பார்ட்டியின் யாஜிஜன், எண் 8, 1964.*

''அனைத்து மக்களின் கட்சி'' என்னும் அவர்களின் நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதற்கான வாதங்களைக் கண்டுபிடிக்க திரிபுவாத குருச்சேவ் கும்பல் தனது மூளையைக் கசக்கிப் பிழிந்து கடும் முயற்சி செய்கிறது. ஜூலை 1963-ல் சீன, ரசிய கட்சிகளிடையே நடந்த பேச்சுவார்த்தைகளின் போதும், ரசியப் பத்திரிகைகளிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியை ''அனைத்து மக்களின் கட்சியாக'' மாற்றியதற்கான காரணங்களாக பின்வருவனவற்றை வைத்தார்கள்.

1. ரசிய கம்யூனிஸ்ட் கட்சி அனைத்து மக்களின் நலன்களை வெளிப்படுத்துகிறது.

2. அனைத்து மக்களும் பாட்டாளி வர்க்கத்தின் மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டத்தை எற்றுக் கொண்டுவிட்டார்கள்; பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியமான கம்யூனிசத்தை நிறுவுவது அனைத்து மக்களின் இலட்சியமாக மாறிவிட்டது.

3. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் அணிகளில் பாட்டாளிகள் கூட்டுப் பண்ணை விவசாயிகள், அறிவுஜீவிகள் ஆகியோரின் சிறந்த பிரதிநிதிகள் உள்ளனர். ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தன் அணிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட தேசிய இனங்களின் பிரதிநிதிகளையும், மக்களையும் அய்க்கியப்படுத்தி உள்ளது.

4. கட்சியின் செயல்பாடுகளில் பயன்படுத்தப்படும் ஜனநாயகமுறை கூட அனைத்து மக்களின் கட்சி என்ற தன்மைக்கு ஏற்பவே இருக்கிறது.

திரிபுவாத குருச்சேவ் கும்பலின் இந்த வாதங்களில் ஒன்றுகூட ஒரு ஆழமான பிரச்சினை பற்றிய ஆழமான அணுகுமுறையைக் கொண்டதாகத் தெரியவில்லை. மேலோட்டமாகப் படித்தாலே இது புரியும்.

குழம்பிப் போன, சந்தர்ப்பவாதத்தில் குழம்பிய மண்டைகளோடு போராடும்பொழுது லெனின் குறிப்பிட்டார்.

''ஆழமான பிரச்சினைகளை ஆழமான முறையில் அணுகாதவர்களை முக்கியமானவர்களாக நாம் கருத முடியுமா? அவ்வாறு செய்வது கடினம் தோழர்களே, மிகக் கடினம்! ஆனால், சிலரால் ஆழமாக அணுகப்படாத கேள்விகள் மிகவும் ஆழமானவை, ஆகவே அந்தக்

கேள்விகளுக்கு அளிக்கப்படும் பலவீனமான பதில்களை ஆய்வதில் எந்த தீங்கும் ஏற்பட்டுவிடாது'' [1]

இன்று கூட பாட்டாளி வர்க்கக் கட்சி என்ற முக்கியமான கேள்விக்கு திரிபுவாத குருச்சேவ் கும்பல் அளித்துள்ள பலவீனமான பதில்களை ஆய்வதால் எந்தத் தீங்கும் ஏற்பட்டு விடாது.

திரிபுவாத குருச்சேவ் கும்பலின் கருத்துப்படி கம்யூனிஸ்ட் கட்சி ''அனைத்து மக்களின் கட்சி''யாக வேண்டும்; ஏனெனில் அது அனைத்து மக்களின் நலன்களை வெளிப்படுத்துகிறது. அப்படியானால் ஆரம்பம் முதலே பாட்டாளி வர்க்கக் கட்சி என்பதற்குப் பதிலாக ''அனைத்து மக்களின் கட்சி'' என்றல்லவா இருந்திருக்க வேண்டும்?

திரிபுவாத குருச்சேவ் கும்பலின் கருத்துப்படி, கம்யூனிஸ்ட் கட்சி ''அனைத்து மக்களின் கட்சி''யாக வேண்டும். ஏனெனில் அனைத்து மக்களும் பாட்டாளி வர்க்கத்தின் மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டத்தை ஏற்றுக்கொண்டு விட்டனர். ஆனால் கூர்மையான வர்க்கப் பிரிவினைகளும், வர்க்கப் போராட்டமும் நடந்து கொண்டிருக்கும் ரசிய சமுதாயத்தில் எல்லோரும் மார்க்சிய-லெனினியக் கண்ணோட்டத்தை ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என எப்படிக் கூற முடியும்? உங்கள் நாட்டில் உள்ள பத்தாயிரக்கணக்கான பழைய, புதிய முதலாளிய சக்திகள் எல்லோரும் மார்க்சிய - லெனினியவாதிகளா? நீங்கள் கூறுவது போல மார்க்சிய-லெனினிய உலகக் கண்ணோட்டத்தை உண்மையிலேயே அனைவரும் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்றால், உங்கள் சமுதாயத்தில் கட்சி, கட்சியற்றது என்ற வேறுபாடு ஒழிந்துவிட்டது என்றும், கட்சி தொடர்ந்து இருப்பதற்கான எந்த அவசியமும் இல்லை என்றும் அல்லவா ஆகிறது? அப்படியானால் ''அனைத்து மக்களுக்குமான கட்சி'' என ஒன்று இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒன்றுதானே?

திரிபுவாத குருச்சேவ் கும்பலின் கருத்துப்படி, கம்யூனிஸ்ட் கட்சி ''அனைத்து மக்களின் கட்சி''யாக வேண்டும்; ஏனெனில், கட்சியின் உறுப்பினர்களில் பாட்டாளிகள், விவசாயிகள், அறிவுஜீவிகள், அனைத்து தேசிய இனங்கள், மக்கள் ஆகியோர் அடங்கி உள்ளனர். அப்படியானால் தனது 22-வது காங்கிரசில் ''அனைத்து மக்களுக்குமான கட்சி'' என்ற கருத்தை வைப்பதற்கு முன்பு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சியில்

1. *வி. இ. லெனின், ''முதலாவதும், முக்கியமானதும் தெளிவே'', தொகுப்பு நூல், ஆங்கிலப் பதிப்பு, முன்னேற்றப் பதிப்பகம்' மாஸ்கோ 1967, தொகுதி 20, பக்கம் 544.*

பாட்டாளி வர்க்கத்திலிருந்து வந்தவர்கள் மட்டும்தான் உறுப்பினர்களாயிருந்தார்களா? வேறு வர்க்கங்களிலிருந்து வந்தவர்கள் யாரும் உறுப்பினர்களாகவில்லையா? அதற்கு முன்பு ஒரு தேசிய இனத்திலிருந்து வந்தவர்கள்தான் உறுப்பினர்களாயிருந்தார்களா? பல தேசிய இனங்கள் இல்லையா? ஒரு கட்சியின் தன்மை, அதன் உறுப்பினர்களின் சமூகப் பின்னணியிலிருந்து தீர்மானிக்கப்படுவது என்றால், பல்வேறு வர்க்கங்களிலிருந்தும், தேசிய இனங்களிலிருந்தும், மக்களிலிருந்தும் உறுப்பினர்களைப் பெற்றுள்ள, உலகிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ''அனைத்து மக்களின் கட்சிகளே'' எனப் பொருள்படாதா?

திரிபுவாத குருச்சேவ் கும்பலின் கருத்துப்படி, கட்சி ''அனைத்து மக்களின் கட்சி'' ஆகும்; ஏனெனில் அதனுடைய செயல்களில் ஜனநாயக முறைகளையே கடைப்பிடிக்கிறது. ஆனால், தொடக்க காலத்திலிருந்து ஒரு கம்யூனிஸ்ட் கட்சி ஜனநாயக மத்தியத்துவம் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே கட்டப்படுகிறது; அது மக்களிடையே வேலை செய்யும்பொழுது மக்கள் திரள் வழியையும் இணங்கச் செய்வது, கற்றுக்கொடுப்பது போன்ற ஜனநாயக முறைகளையுமே பின்பற்றுகிறது. அப்படியானால் தொடக்க காலம் முதலிலே கம்யூனிஸ்ட் கட்சி ''அனைத்து மக்களின் கட்சி''யாக உள்ளது எனப் பொருள்படாதா?

சுருங்கக்கூறின், திரிபுவாத குருச்சேவ் கும்பலின் எந்த வாதமும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இல்லை.

''அனைத்து மக்களின் கட்சி'' எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கும் பொழுதே ''உற்பத்தி அடிப்படையில் கட்சியைக் கட்டுதல்'' எனக் கூறிக்கொண்டு கட்சியை ''தொழிற்துறைக் கட்சி'', ''விவசாயக் கட்சி'' எனப் பிரித்துள்ளார் குருச்சேவ்.[1]

''சோசலிசத்தில் அரசியலை விட பொருளாதாரத்தின் முக்கியத்துவம் கருதியே ''இவ்வாறு செய்யப்பட்டதாக திரிபுவாத குருச்சேவ் கும்பல் கூறுகிறது. அதன் மூலம் ''கம்யூனிசக் கட்டுமானத்திற்கு அவசியமான பொருளாதார, உற்பத்திப் பிரச்சினைகள் கட்சி அமைப்புகளின் மைய நடவடிக்கைகளாக மாறியுள்ளதாகவும்''[2] அவைகளின்

---

1. என். எஸ். குருச்சேவ் ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி பிளீனக் கூட்டத்தில் முன்வைத்த அறிக்கை'', நவம்பர் 1962.

2. ''படி, அறி, செயல்படு'', தலையங்கம், எக்கானமிசெஸ்கயா கெஜட்டா, எண் 50, 1962.

''அனைத்துப் பணிகளில் அடிப்படையாக மாறியுள்ளதாகவும்''[1] குருச்சேவ் கும்பல் கூறுகிறது. ''கட்சி அமைப்புகளின் பிரதான வேலை உற்பத்தியே என நாங்கள் அடித்துக் கூறுவோம்''[2] என குருச்சேவ் கூறினார். எல்லாவற்றிற்கும் மேலாக லெனினின் கருத்தும் இதுவே எனவும், தாங்கள் லெனினின் கோட்பாட்டின்படியே செயல்படுவதாகவும் கூறிக் கொள்கிறார்கள்.

எவ்வாறாயினும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றை அறிந்த அனைவரும் அவை லெனினின் கருத்துக்கள் அல்ல, லெனினியத்திற்கு விரோதமான ட்ராட்ஸ்கியின் கருத்துக்களே அவை என்பதை அறிவார்கள். குருச்சேவ் ட்ராட்ஸ்கியின் உண்மையான சீடரே.

ட்ராட்ஸ்கியையும், புகாரினையும் விமர்சிக்கும்பொழுது லெனின் கூறினார்:

''பொருளாதாரத்தின் உருட்டித் திரட்டப்பட்ட வெளிப்பாடே அரசியல், ...ஆனால் அரசியல், பொருளாதாரத்தின் மீது செல்வாக்கு செலுத்துகிறது; இதற்கு மாறாக வாதிடுவது மார்க்சியத்தின் அரிச்சுவடியையே மறப்பதாகும்.''

அவர் தொடர்ந்து கூறுகிறார்:

''...இந்த விசயத்தைப் பற்றி ஒரு சரியான அரசியல் அணுகுமுறை இன்றி ஒரு குறிப்பிட்ட வர்க்கம் தன்னுடைய ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. மேலும், தன்னுடைய உற்பத்திப் பிரச்சினைகளைக் கூடத் தீர்க்க முடியாது.''[3]

விவரங்கள் மிகத் தெளிவாக உள்ளன: ''அனைத்து மக்களின் கட்சி'' என்பதை திருத்தல்வாத குருச்சேவ் கும்பல் முன்வைப்பதன் நோக்கம், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பாட்டாளி வர்க்கத்தன்மையை முழுமையாக மாற்றுவதும், மார்க்சிய—லெனினியக் கட்சியை ஒரு திரிபுவாதக் கட்சியாக மாற்றுவதுமேயாகும்.

---

1. *''கம்யூனிஸ்டும் உற்பத்தியும்'', தலையங்கம், கம்யூனிஸ்ட், எண் 2, மாஸ்கோ 1963.*
2. *என். எஸ். குருச்சேவ், காலினன் தொகுதி தேர்தல் கூட்டத்தில் ஆற்றிய உரை, பிப்ரவரி 27, 1963.*
3. *வி. இ. லெனின், ''தொழிற்சங்கங்கள், தற்போதைய நிலைமை மற்றும் ட்ராட்ஸ்கி, புகாரின் ஆகியோரது தவறுகள் பற்றிமீண்டும் ஒருமுறை'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இண்டர்நேஷனல் பப்ளிசர்ஸ், நியூயார்க் 1943, தொகுதி 9, பக்கம் 54,55.*

ரசியாவின் மாபெரும் கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்கக் கட்சியி லிருந்து முதலாளியக் கட்சியாகவும், மார்க்சிய—லெனினியக் கட்சியில் இருந்து திரிபுவாதக் கட்சியாகவும் சீரழிந்து போகும் பேரபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

லெனின் கூறினார் :

''வாழ விரும்பும் ஒரு கட்சி, தன்னுடைய வாழ்வு பற்றிய கேள்வியில் எள்ளளவும் ஊசலாட்டத்தையோ, தன்னைக் குழி தோண்டிப் புதைக்க நினைப்பவர்களுடன் சமரசம் செய்து கொள்வதையோ அனுமதிக்கக் கூடாது.''[1]

தற்போது, குறிப்பாக இந்த முக்கியமான கேள்வியுடன்தான் திரிபுவாத குருச்சேவ் கும்பல், மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பரந்துபட்ட உறுப்பினர்களை எதிர்கொள்கிறது.

குருச்சேவின் போலிக் கம்யூனிசம்

கம்யூனிச சமுதாயத்தைப் பரந்த அளவில் கட்டக்கூடிய கட்டத்தில் ரசியா ஏற்கனவே நுழைந்துவிட்டது என ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது காங்கிரசில் குருச்சேவ் அறிவித்தார். ''இருபது வருடங்களில் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டிவிடுவோம்''[2], என அவர் அறிவித்தார். இது சுத்தமான பித்தலாட்டம்.

குருச்சேவ் கும்பல் ரசியாவை முதலாளிய மீட்புப் பாதையில் வழி நடத்திச் செல்லும்பொழுது, ரசிய மக்கள் சோசலிசத்தின் பலன்களை இழக்கும் பேரபாயத்தில் இருக்கும்பொழுது கம்யூனிசத்தைக் கட்டுவதை பற்றிய பேச்சு எவ்வாறு இருக்கமுடியும்?

''கம்யூனிசத்தைக் கட்டுவது'' என்ற வார்த்தைகளின் பின் தனது திரிபுவாதத்தை மறைக்கவேண்டும் என்பதே குருச்சேவின் உண்மையான நோக்கமாகும். ஆனால், இந்தத் தந்திரத்தை அம்பலப்படுத்துவது

---

1. *வி.இ. லெனின், ''வோரா ஜாஸிலிச் எவ்வாறு கலைப்புவாதத்தை முறியடித்தார்?'' தொகுப்பு நூல், ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப., மாஸ்கோ 1963, தொகுதி 19, பக்கம் 414.*

2. *என். எஸ். குருச்சேவ், ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் திட்டத்தின் மீதான அறிக்கை,'' 22-வது காங்கிரசில் முன்வைத்தது, அக்டோபர் 1961.*

அவ்வளவு கடினமானதல்ல. மீனின் கண்ணை முத்து என்று கூறுவதை எவ்வாறு அனுமதிக்க முடியாதோ அதுபோல திரிபுவாதம் கம்யூனிசப் போர்வையில் உலாவுவதையும் அனுமதிக்க முடியாது.

விஞ்ஞானக் கம்யூனிசம் துல்லியமான, குறிப்பான அர்த்தங்களைக் கொண்டுள்ளது. மார்க்சிய—லெனினியக் கருத்துப்படி, கம்யூனிச சமுதாயம் என்பது வர்க்கங்களும், வர்க்க வேறுபாடுகளும் முற்றாக நீக்கப்பட்ட ஒரு சமுதாயமாகும்; அனைத்து மக்களும் உயர்ந்த அளவிலான கம்யூனிச உணர்வையும் நெறிமுறைகளையும், உழைப்பில் அதிக ஆர்வத்தையும் முன்முயற்சியையும் கொண்டிருப்பார்கள்; அங்கு சமுதாய உற்பத்தி அபரிமிதமாகப் பெருகி இருக்கும்; ''திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்'' என்ற கோட்பாட்டின்படி அங்கு விநியோகம் இருக்கும்; அங்கு அரசு உலர்ந்து உதிர்ந்து இருக்கும்.

மார்க்ஸ் கூறினார் :

''கம்யூனிச சமுதாயத்தின் உயர்ந்த கட்டத்தில், தனி மனிதர்களை அடிமைப்படுத்தியுள்ள வேலைப் பிரிவினை ஒழிக்கப்படுவதன் கூடவே உடல் உழைப்புக்கும், மூளை உழைப்புக்கும் இடையிலான முரண்பாடு மறைந்துவிடும்; உழைப்பு என்பது பிழைப்புக்கான ஒரு வழி என்று மட்டும் இல்லாமல் அது வாழ்க்கையின் பிரதான தேவையாக மாறுகிறது; தனி மனிதனின் முழுமையான வளர்ச்சியுடன் கூடவே உற்பத்தி சக்திகளும் வளரும்; அனைத்து கூட்டுச் சொத்துக் களின் ஊற்றுகளும் அபரிமிதமாகப் பெருக்கெடுத்து ஓடும்-அப்பொழுது தான் முதலாளிய உரிமைகளின் குறுகிய வரம்புகள் அதன் முழுமையான அளவில் உடைக்கப்பட்டு, ஒவ்வொருவரிடமிருந்தும் திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம் என்பதை சமுதாயம் தன்னுடைய பதாகையில் பொறித்துக் கொள்ளும்.''[1]

மார்க்சிய-லெனினியக் கோட்பாட்டின்படி, சோசலிசக் கட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உயர்த்திப் பிடிப்பதன் நோக்கமே சமுதாயம் கம்யூனிசத்தை நோக்கிச் செல்வதை உறுதிப்படுத்தத்தான். ''முன்னோக்கிச் செல்வது, அதாவது கம்யூனிசத்தை நோக்கிச் செல்வது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வழியேதான் முடியும்; அதைத்

1. *மார்க்ஸ், ''கோதா திட்டம் பற்றிய விமர்சனம்'', மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப., மாஸ்கோ 1951, தொகுதி 2, பக்கம் 23.*

தவிர வேறு வழியில்லை'' என லெனின் கூறினார்.[1] ரசியாவில் குருச்சேவ் கும்பல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டு விட்டதால் அது பின்னோக்கியே செல்கிறது, முன்னோக்கி அல்ல; முதலாளியத்திற்கு பின்னோக்கிச் செல்கிறதே தவிர கம்யூனிசத்திற்காக முன்னோக்கி அல்ல.

கம்யூனிசத்தை நோக்கிச் செல்வதென்பது வர்க்கங்களையும், வர்க்க வேறுபாடுகளையும் ஒழிப்பதை நோக்கிச் செல்வதாகும். ஒரு கம்யூனிச சமுதாயம் வர்க்கங்களை, அதுவும் சுரண்டும் வர்க்கங்களைத் தன்னிடத்தில் கொண்டிருக்கும் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. இருந்தும் ரசியாவில் புதிய முதலாளிகளை வளர்த்தும், சுரண்டல் அமைப்பைப் புதுப்பித்தும், விரிவாக்கியும், வர்க்க வேறுபாடுகளைத் துரிதப்படுத்தியும் வருகிறார் குருச்சேவ். ரசிய மக்களுக்கு எதிரான சலுகை பெற்ற ஒரு முதலாளிய அடுக்கு ஆட்சியிலும், அரசாங்கத்திலும், பொருளாதாரம், கலாச்சாரம் இன்னபிற துறைகளிலும் இன்று ஆதிக்கத்தில் இருக்கிறது. இவற்றில் ஒருவர் கடுகளவாவது கம்யூனிசத்தைக் காண முடியுமா?

கம்யூனிசத்தை நோக்கிச் செல்வதென்பது, உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும், அனைத்து மக்களுக்கும் சொந்தமாயுள்ள ஒரு சமுதாய அமைப்பை நோக்கிச் செல்வதாகும். உற்பத்தி சாதனங்களில் பல்வகையான உடைமை வடிவங்களைக் கொண்டுள்ள ஒரு கம்யூனிச சமுதாயம் சிந்தித்துக்கூட பார்க்க முடியாத ஒன்றாகும். இருந்தும், அனைத்து மக்களுக்கும் சொந்தமான நிறுவனங்கள் படிப்படியாக முதலாளிய நிறுவனமாக மாறுதல், கூட்டுடைமை வடிவில் உள்ள பண்ணைகள் படிப்படியாக குலாக் பொருளாதாரத்திற்கு செல்லுதல் என்ற சீரழிவு நிலையை குருச்சேவ் உருவாக்கி வருகிறார். மீண்டும் இவற்றில் கடுகளவாவது கம்யூனிசத்தைக் காண முடியுமா?

கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுவது என்பது, அபரிமிதமான சமுதாய உற்பத்தியை நோக்கி, ''திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்'' என்ற கோட்பாட்டை நடைமுறையில் பிரயோகிப்பதை நோக்கிச்செல்வது என்பதாகும். பரந்துபட்ட மக்களை ஓட்டாண்டியாக்கி, ஒரு சிலரைச் செல்வக் கொழிப்பில் ஆழ்த்தும் ஒரு கம்யூனிச சமுதாயம் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும்.

---

1. வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, அ.மொ.ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 1, பக்கம் 291.

சோசலிச அமைப்பின் கீழ் மாபெரும் ரசிய மக்கள் சமுதாய உற்பத்தி சக்திகளை என்றுமில்லாத வேகத்தில் வளர்த்தெடுத்தனர். ஆனால் குருச்சேவின் திருத்தல்வாத தீமைகள் ரசிய சோசலிசப் பொருளாதாரத்தில் பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. பல்வேறு முரண்பாடுகளில் நெருக்கப்பட்டுள்ள குருச்சேவ் தனது பொருளாதாரக் கொள்கைகளை அடிக்கடி மாற்றுவதன் மூலமும், அவ்வப்போது தனது கருத்துக்களை மாற்றிக் கொள்வதன் மூலமும் ரசியத் தேசியப் பொருளாதாரத்தையே ஒரு குழப்பமான நிலைக்குத் தள்ளியுள்ளார். குருச்சேவ் உண்மையிலே திருத்தமுடியாத ஒரு உதவாக்கரைப் பேர்வழி. ஸ்டாலின் காலத்தில் உருவாக்கப்பட்ட தானிய சேமிப்புகளை எல்லாம் வீணடித்துவிட்டு, ரசிய மக்களின் வாழ்க்கையில் பெரும் துயரத்தைக் கொண்டுவந்துள்ளார் குருச்சேவ். ''திறமைக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம்'' என்னும் சோசலிச விநியோகக் கோட்பாட்டை மீறியதன் மூலமும், திரித்ததன் மூலமும் பரந்துபட்ட ரசிய மக்களுடைய உழைப்பின் பலன்களை ஒரு சிலர் அபகரிக்க உதவியுள்ளார் குருச்சேவ். அவர் செல்லும்பாதை கம்யூனிசத்தை விட்டு விலகிச் செல்லும்பாதை என்பதை நிருபிக்க இந்த விவரங்களே போதுமானவை.

கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுவது என்பது மக்களின் கம்யூனிச உணர்வை உயர்த்துவதை நோக்கி முன்னேறுவதாகும். முதலாளியக் கருத்துக்கள் தங்குதடையின்றிப் பரவலாக நிலவுகிற ஒரு கம்யூனிச சமுதாயம் சிந்தித்து கூடப் பார்க்க முடியாத ஒன்றாகும். இருந்தும், குருச்சேவ் ரசியாவில் முதலாளிய சித்தாந்தத்தை ஊக்கத்துடன் புதுப்பித்து வருகிறார்; சீரழிந்து போன அமெரிக்கக் கலாச்சாரத்தின் தூதுவனாகச் செயல்பட்டு வருகிறார். பொருளாதார ஊக்கத் தொகைகளை பிரச்சாரம் செய்வதன் மூலம் அவர் அனைத்து மனித உறவுகளையும் பண உறவுகளாக மாற்றி வருகிறார். தனிமனிதவாதத்தையும், சுயநலத்தையும் ஊக்குவித்து வருகிறார். அவருடைய செயல்களால் மீண்டும் உடல் உழைப்பு கேவலமானதாகக் கருதப்பட்டு, மற்ற மக்களின் உழைப்பில் உல்லாசமாக வாழ்வது மகிழ்ச்சிக்குரியதாகவும் உயர்ந்ததாகவும் கருதப்படுகிறது. குருச்சேவால் வளர்க்கப்பட்டு வரும் சமூக நீதிகளும், சூழ்நிலைமைகளும் கம்யூனிசத்தை விட்டு வெகுதூரம் விலகிச்செல்பவை.

கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுவது என்பது அரசு உலர்ந்து உதிர்வதை நோக்கி முன்னேறுவதாகும். மக்களை அடக்கி ஒடுக்கும் அரசு இயந்திரத்துடன் உள்ள ஒரு கம்யூனிச சமுதாயம் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு,

உண்மையான பொருளில் அரசாக இருப்பதில்லை; ஏனெனில் இது சிறு பான்மையாயுள்ள சுரண்டும் வர்க்கம் பெரும்பான்மையாயுள்ள மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுவதில்லை; மாறாக சிறுபான்மையாயுள்ள சுரண்டும் வர்க்கத்தின் மீது சர்வாதிகாரத்தைச் செலுத்தவே இது பயன்படுத்தப்படுகிறது; அதே சமயத்தில் பெரும் பான்மையாயுள்ள மக்களிடையே ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப் படுகிறது. குருச்சேவ் ரசிய அரசின் குணாம்சத்தை மாற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்குப் பதிலாக, ரசிய பாட்டாளிகள், விவசாயிகள் அறிவுஜீவிகள் ஆகியோர் மீது சலுகை பெற்ற ஒரு சிறுபான்மையின் சர்வாதிகாரத்தை நிறுவி வருகிறார். அவர் தொடர்ந்து சர்வாதிகார அரசின் அங்கங்களைப் பலப்படுத்தி வருகிறார் ; ரசிய மக்களின் மீதான ஒடுக்குமுறையைத் தீவிரப்படுத்தி வருகிறார். இந்நிலையில் கம்யூனி சத்தைப் பற்றிப் பேசுவது உண்மையிலேயே கேலிக்குரியதாகும்.

விஞ்ஞானக் கம்யூனிசத்தின் கோட்பாடுகளோடு ஒப்பிடும்பொழுது, எல்லா அம்சங்களிலும் திரிபுவாத குருச்சேவ் கும்பல் ரசியாவை சோசலிசப் பாதையை விட்டு விலகி முதலாளியப் பாதையில் இட்டுச் செல்வதை அறியலாம். இதன் விளைவாக ''திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்'' என்ற கம்யூனிச இலட்சியத்தை நெருங்கு வதற்குப் பதிலாக அதைவிட்டு வெகுதூரம் விலகிச் செல்வதை அறியலாம்.

கம்யூனிசப் பெயர்ப்பலகையை குருச்சேவ் உள்நோக்கத்துடனேயே முன் வைக்கிறார். ரசிய மக்களை முட்டாளாக்கவும், முதலாளியத்தை நிலைநாட்டுவதை மூடி மறைக்கவுமே இதைப் பயன்படுத்துகிறார். சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தையும், உலகம் முழுவதும் உள்ள புரட்சிகர மக்களையும் ஏமாற்றவும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் காட்டிக் கொடுக்கவும் இதைப் பயன்படுத்துகிறார். இந்தப் பெயர்ப் பலகையின் கீழ் குருச்சேவ் கும்பல் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் கைவிட்டு விட்டது; உலகைப் பங்கிட்டுக் கொள்வதற்கான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கூட்டை நாடுகிறது; மேலும் சகோதர சோசலிச நாடுகளை தன்னுடைய நலன்களுக்காக சேவை புரியச் சொல்கிறதே தவிர ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதையும், ஒடுக்கப்பட்ட மக்களின், நாடுகளின் புரட்சிகளை ஆதரிப்பதையும் இது விரும்பவில்லை; தன்னு டைய அரசியல், பொருளாதார, இராணுவக் கூட்டுப்பாடுகளை ஏற்றுக் கொண்டு தன்னுடைய சார்பு நாடுகளாகவும், காலனிகளாகவும் பிற சகோதர சோசலிச நாடுகள் இருக்க வேண்டும் என விரும்புகிறது. மேலும், அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களும், நாடுகளும், தங்களுடைய

புரட்சிகரப் போராட்டத்தைக் கைவிட்டு தன்னுடைய தனிப்பட்ட நலன்களுக்கு சேவை செய்ய வேண்டும் என விரும்புகிறது குருச்சேவ் கும்பல்; அதற்காக ஏகாதிபத்தியம் மற்றும் அதன் அடிவருடிகளின் ஒடுக்குமுறைக்கும், அடிமைப்படுத்துதலுக்கும், பணிந்து போகுமாறு கோருகிறது; அதன் மூலம் ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்து உலகைப் பங்கிட்டுக் கொள்ளும் தன்னுடைய இனிய கனவுகளுக்கு இடையூறு ஏதும் வராமல் பார்த்துக்கொள்ள விரும்புகிறது.

சுருங்கக்கூறின், ரசியாவில் ''இருபது ஆண்டுகளில் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டுவது'' என்னும் குருச்சேவின் முழக்கம் பொய்யானது மட்டும் அல்ல, பிற்போக்கானதும் கூட.

''கம்யூனிசத்தைக் கட்டுவதற்காக நமது கட்சிக்கும் மக்களுக்கும் உள்ள உரிமையைக் கேள்விக்குள்ளாக்கும் அளவிற்கு சென்றுவிட்டார்கள்''[1] சீனர்கள் என குருச்சேவ் கும்பல் கூறுகிறது. இது ரசிய மக்களை முட்டாளாக்கவும், சீன மக்களுக்கும் ரசிய மக்களுக்கும் இடையிலுள்ள நட்பை நச்சுப்படுத்தவும் செய்யக்கூடிய கேவலமான முயற்சியாகும்.

மாபெரும் ரசிய மக்கள் இறுதியில் கம்யூனிச சமுதாயத்திற்குச் செல்வார்கள் என்பதில் எங்களுக்கு எந்தவிதச் சந்தேகமும் இல்லை. ஆனால் இன்று குருச்சேவ் கும்பல் ரசிய மக்களின் சோசலிசப் பயன்களை அழித்துவருகிறது; அதன் மூலம் கம்யூனிசத்தை நோக்கி முன்னேறும் அவர்களின் உரிமையைப் பறித்து வருகிறது. இந்த நிலைமையில் ரசிய மக்களை எதிர்கொண்டுள்ள பிரச்சினை, எவ்வாறு கம்யூனிசத்தைக் கட்டுவது என்பதல்ல மாறாக முதலாளியத்தை மீட்டெடுக்க விரும்பும் குருச்சேவின் முயற்சிகளை எவ்வாறு எதிர்த்துத் தடுப்பது என்பதே ஆகும்.

மக்களுக்கு ஒரு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அமைத்துக் கொடுப்பதே நமது இலட்சியம். ஆனால் ''சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இதைக் கண்டு ரசிய சமுதாயம் 'முதலாளியமாகிக் கொண்டிருக்கிறது', 'சீரழிந்து கொண்டிருக்கிறது''''[2] எனக் கூறுகிறார்கள் என திருத்தல்வாத குருச்சேவ் கும்பல் கூறுகிறது. குருச்சேவ் கும்பல்

---

1. *எம். ஏ. சுஸ்லோவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பிளீனக் கூட்டத்தில் முன்வைத்த அறிக்கை, பிப்ரவரி 1964.*

2. *அனைத்து கட்சிகளுக்கும், ரசியாவிலுள்ள அனைத்து கம்யூனிஸ்டுகளுக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம், ஜூலை 14, 1963.*

மீது ரசிய மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை திசை திருப்பச் செய்யப் படும் இந்தத் தந்திரம் வருத்தத்திற்குரியதும், முட்டாள்தனமானதும் ஆகும். ரசிய மக்கள் இன்னும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைய வேண்டும் என நாங்கள் உளப்பூர்வமாக விரும்புகிறோம். ஆனால், குருச்சேவ் தம்பட்டமடித்துக்கொள்ளும், ''அனைத்து மக்களின் நல் வாழ்க்கையில் அக்கறை'', ''ஒவ்வொருவருக்கும் உயர்ந்த வாழ்க்கை'' என்பது எல்லாம் அப்பட்டமான பொய்யும் வாய்ச்சவடாலும் ஆகும். ரசிய மக்களின் வாழ்க்கை, குருச்சேவின் கையில் ஏற்கனவே மோசமான நிலைக்கு சென்றுள்ளது. குருச்சேவ் கும்பல் ரசியாவிலுள்ளசலுகை பெற்ற நபர்களுக்கும், பழைய,புதிய முதலாளிகளுக்குமே ''உயர்ந்தவாழ்க்கை'' தர முயல்கிறது. இவர்கள் ரசிய மக்களுடைய உழைப்பைக் கொள்ளை அடித்து, முதலாளியப் பிரபுக்களின் வாழ்க்கையை நடத்திவருகிறார்கள். அவர்கள் யதார்த்தத்தில் முழுக்க, முழுக்க முதலாளிகளாக மாறி விட்டனர்.

குருச்சேவின் ''கம்யூனிசம்'' சாராம்சத்தில் முதலாளிய சோசலிச வகையானதாகும். அவர் கம்யூனிசம் என்பது வர்க்கங்களையும், வர்க்க வேறுபாடுகளையும் அழித்துவிடும் என்று கருதவில்லை, மாறாக அவர் கம்யூனிசம் ''உடல் மற்றும் மூளை உழைப்பால் உற்பத்தியான ஏராளமான பண்டங்கள் நிறைந்த ஒரு பாத்திரம்; அனைவருக்கும் எளிதில் கிட்டுமாறு அது இருக்கும்'' [1] என விவரிக்கிறார். கம்யூனிசத் திற்கான பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம், பாட்டாளி வர்க்கத்தின் கூடவே மனிதகுலம் முழுவதையும் விடுவிக்கும் போராட்டம் எனக் குருச்சேவ் கருதவில்லை. மாறாக ''மாமிசமும், காய்கறிகளும் கொண்ட ஒரு நல்ல சாப்பாட்டுக்கான'' போராட்டமாகவே கருதுகிறார். அவருடைய மூளையில் கடுகளவு கூட விஞ்ஞானக் கம்யூனிசம் இல்லை; மாறாக, சமுதாயத்தைப் பற்றிய முதலாளித்துவ அற்பவாத பார்வையே இருக்கிறது.

குருச்சேவின் ''கம்யூனிசம்'' அமெரிக்காவைத் தனது மாதிரியாக எடுத்துக்கொள்கிறது. அமெரிக்க முதலாளியத்தின் நிர்வாக முறைகளையும், முதலாளிய வாழ்க்கை முறைகளையும் அரசு கொள்கைகள் மட்டத்திற்கு குருச்சேவ் கும்பல் உயர்த்தி உள்ளது. தான் அமெரிக்காவின் சாதனைகளை ''எப்பொழுதும் உயர்வாகவே கருதுவதாக'' அவர் கூறுகிறார். அவர் ''அமெரிக்கர் களின் சாதனைகளைக் கண்டு சந்தோசம் அடையும் பொழுது

1. *என். எஸ். குருச்சேவ், ஆஸ்திரிய வானொலி மற்றும் தொலைக் காட்சிக்கான உரை, ஜூலை 7, 1960.*

சில சமயங்களில் பொறாமைகூடப் படுகிறார்''[1] ரோஸ்வெல் கார்ஸ்ட் என்னும் ஒரு அமெரிக்கப் பெரும் விவசாயியின் கடிதத்தை வானளாவப் புகழ்கிறார், அக்கடிதம் ''முதலாளிய முறையைப் பிரச்சாரம் செய்கிறது.''[2] அதையே தன்னுடைய விவசாயத் திட்டமாக குருச்சேவ் எடுத்துக் கொண்டார். அவர் தொழிற்துறையிலும், விவசாயத்திலும் அமெரிக்காவை, குறிப்பாக அமெரிக்க முதலாளிய நிறுவனங்களின் இலாப நோக்கத்தைப் பின்பற்ற விரும்புகிறார். அமெரிக்க மக்களின் வாழ்க்கை முறைக்கு மிகவும் மதிப்புக் கொடுக்கிறார், ஏகபோக முதலாளிகளின் ஆட்சியிலும், ஆதிக்கத்திலும் அமெரிக்க மக்கள் ''மோசமாக வாழ வில்லை''[3] என்கிறார். இன்னும் மேலே போய், அமெரிக்க ஏகாதி பத்தியத்திடம் கடன் வாங்கி கம்யூனிசத்தைக் கட்டிவிடுவதில் குருச்சேவ் நம்பிக்கை கொண்டுள்ளார். அவருடைய அமெரிக்கா ஹங்கேரி பயணங் களின்போது ''சாத்தானிடமிருந்து கூடக் கடன் வாங்கத் தயாராக இருப்பதாக'' பலமுறை அறிவித்துள்ளார்.

எனவே, குருச்சேவின் கம்யூனிசம் உண்மையில் ''நல்ல காய்கறி களும் மாமிசமும் கொண்ட சாப்பாட்டு கம்யூனிசம்'', ''அமெரிக்க வாழ்க்கை முறை கம்யூனிசம்'', ''சாத்தானிடமிருந்து கடன்கூட பெறும் கம்யூனிசம்'' என்பதை காணமுடியும். இத்தகைய கம்யூனிசத்தை நாங்கள் ரசியாவில் அடைந்தபின், ''என்னிடமிருந்து வேண்டுகோள் வர மலேயே நீங்கள் கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுவீர்கள்''[4] என மேற்கத்திய ஏகபோக முதலாளிகளின் பிரதிநிதிகளிடம் அவர் அடிக்கடி கூறுவதில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

இத்தகைய கம்யூனிசம் புதிதானதல்ல; முதலாளியத்திற்கு இன்னொரு பெயரே இது. இது முதலாளிய முத்திரை அடையாளம் அல்லது விளம்பரம். மார்க்சிய பெயர்ப் பலகைகளைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்த பழைய வகை திரிபுவாதக் கட்சிகளைப் பற்றி லெனின் கிண்டலாக்க கூறினார்.

---

1. *என். எஸ். குருச்சேவ், யூ. எஸ். காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் செனட்டின் அந்நிய உறவுக்கமிட்டி உறுப்பினர்களுடனான பேட்டி, செப்டம்பர் 16, 1959.*
2. *என். எஸ். குருச்சேவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பிளீனக் கூட்டத்தில் ஆற்றியஉரை, பிப்ரவரி 1964.*
3. *என். எஸ். குருச்சேவ், அமெரிக்காவிலுள்ள டிட்ஸ்பர்க்கில் முதலாளிகளுடனும், தலைவர்களுடனும் நடந்த ஒரு பேச்சு, செப்டம்பர் 24, 1959.*
4. *என். எஸ். குருச்சேவ், ''பிரெஞ்சு பாராளுமன்ற உறுப்பினர்களுக் கான கூட்டத்தில் பேசியது'', மார்ச் 25, 1960.*

''பாட்டாளிகள் மத்தியில் மார்க்சியம் பிரபலமடைகிறபோதெல்லாம் இந்த ''முதலாளிகளின் தொழிற்கட்சி'', மார்க்ஸ் பெயரில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் அரசியல் போக்கைக் காணலாம். ஒரு வியாபாரக் கம்பெனி ஒரு குறிப்பிட்ட முத்திரையை, அடையாளத்தை அல்லது விளம்பரத்தைப் பயன்படுத்துவதை எவ்வாறு தடுக்க முடியாதோ அதே போல இதையும் தடுக்க முடியாது''[1]

குருச்சேவின் ''கம்யூனிசம்'' ஏகாதிபத்தியத்தாலும், ஏகபோக முதலாளியத்தாலும் ஏன் புகழப்படுகிறது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். அமெரிக்காவின் அரசு செயலர் டீன் ரஸ்க் கூறினார்:

''...நல்ல சாப்பாடு, இரண்டாவது கால்சராய் இத்தகைய விசயங்கள் இன்று ரசியாவில் எந்த அளவுக்கு அதிக முக்கியத்துவம் உள்ளவைகளாகி விட்டனவோ அந்த அளவுக்கு மிதவாதம் செல்வாக்குச் செலுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது எனக் கருதுகிறேன்.''[2]

பிரிட்டிஷ் பிரதமர் டக்ளஸ் ஹோம் கூறியுள்ளார்:

''ரசிய கம்யூனிசம் கல்வியையும், சாப்பாட்டையும் முதலில் வைத்துள்ளதாக திரு. குருச்சேவ் கூறியுள்ளார். இது நல்லது; யுத்த-கம்யூனிசத்தை விட சாப்பாட்டுக் கம்யூனிசம் நல்லது. மெலிந்த, பசியுடன் உள்ள கம்யூனிஸ்டுகளைவிட கொழுத்த, வசதியான கம்யூனிஸ்டுகள் நல்லவர்கள், இதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.''[3]

குருச்சேவ் திருத்தல்வாதம் ''சமாதான முறையில் பரிணாமம்' என்னும் கொள்கையை ஆதரிக்கிறது. ரசியாவிலும் பிற சோசலிச நாடுகளிலும் அதைத்தான் அமெரிக்க ஏகாதிபத்தியம் எதிர்பார்க்கிறது. ஜான் பாஸ்டர் டல்லஸ் கூறினார்:

''...அதிக அளவு தாராளவாதத்திற்கான கூறுகள் ரசியாவில் இன்று காணப்படுகின்றன. இது தொடர்ந்தால், அவை ரசியாவில் ஒரு அடிப்படை மாற்றத்தையே கொண்டு வரும்.''[4]

---

1. வி.இ. லெனின், ''ஏகாதிபத்தியமும் சோசலிசத்தில் பிளவும்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப்பதிப்பு, இண்டர்நேஷனல் பப்ளிசர்ஸ், நியூயார்க் 1943, தொகுதி 11, பக்கம் 761.
2. டீன்ரஸ்க், பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கார்ப்பரேசனின் தொலைக் காட்சியில் அளித்த பேட்டி, மே 10, 1964.
3. டக்ளஸ் ஹோம், இங்கிலாந்தில் உள்ள நோர்விச்சில் ஆற்றிய உரை, ஏப்ரல் 6, 1964.
4. ஜே. எப். டல்லஸ், பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரை, மே 15, 1956.

டல்லஸ் தாராளவாத சக்திகள் எனக் குறிப்பிட்டது முதலாளிய சக்திகளையே, டல்லஸ் நம்பிக்கை கொண்டுள்ள அடிப்படை மாற்றம் என்பது சோசலிசம் முதலாளியமாகச் சீரழிந்து போவதையே, டல்லஸ் கனவு காணும் இந்த ''அடிப்படை மாற்றத்தையே'' குருச்சேவ் செய்து வருகிறார்.

ரசியாவில் முதலாளியம் மீட்டெடுக்கப்படுவதை இந்த ஏகாதிபத்திய வாதிகள் எவ்வளவு நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள்! எவ்வளவு சந்தோசம் அடைகிறார்கள்!

அவ்வளவு விரைவில் சந்தோசம் அடைய வேண்டாம் என ஏகாதி பத்தியக் கோமான்களுக்கு நாம் கூறிக் கொள்வோம். திரிபுவாத குருச்சேவ் கும்பலின் சேவைகள் எல்லாம் சேர்ந்தும் கூட ஏகாதிபத்தி யத்தைத் தனது அழிவிலிருந்து காப்பற்ற முடியாது. ஏகாதிபத்திய ஆளும் கும்பலைப் பாதித்துள்ள அதே நோய்தான் திரிபுவாத ஆளும் கும்பலையும் பாதித்துள்ளது; உலக மக்கள் தொகையில் 90 சதவீத மாய் உள்ள பெரும்பான்மை மக்களுக்கு கடும் எதிரியாக அவர்கள் உள்ளார்கள். எனவே அவர்களும் மெலிந்த பலமற்ற வெறும் காகிதப் புலிகளே. ஆற்றைக் கடக்க முயன்ற களிமண் புத்தரைப் போல திரிபு வாத குருச்சேவ் கும்பலும் தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாது. இவ்வாறிருக்க அது எவ்வாறு ஏகாதிபத்தியத்தின் ஆயுளை நீடிக்கச் செய்யும்?

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றுப் படிப்பினைகள்

குருச்சேவின் திரிபுவாதம் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்குப் பெரும் சேதம் விளைவித்துள்ளது. அதே சமயத்தில் அது உலகம் முழுவதும் உள்ள மார்க்சிய - லெனினியவாதிகளுக்கும் புரட்சிகர மக்களுக்கும் தன்னுடைய எதிர்மறை உதாரணத்தின் மூலம் கற்றுக்கொடுத்துள்ளது.

மாபெரும் அக்டோபர்புரட்சி அனைத்து நாட்டிலும் உள்ள மார்க்சிய -லெனினியவாதிகளுக்கு தன்னுடைய வளமான நேர்மறை அனுபவங் களை அளித்து, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கான பாதையைத் திறந்துவிட்டது என்று கொண்டோமானால், குருச்சேவின் திரிபுவாதம் முக்கியமான எதிர்மறை அனுபவங்களை

அளித்து, அதன் மூலம் பாட்டாளிவர்க்கக் கட்சியும், சோசலிச அரசும் சீரழிந்து போகாமல் தடுப்பதற்குத் தேவையான சரியான படிப்பினை களை அனைத்து நாடுகளிலும் உள்ள மார்க்சிய-லெனினியவாதி களுக்குத் தந்துள்ளது எனக் கூறலாம்.

வரலாற்று ரீதியாக எல்லாப் புரட்சிகளும் அவற்றிற்கே உரிய சறுக்கல்களை, திரிபுகளை, திருப்பங்களைக் கொண்டிருக்கின்றன. லெனின் ஒரு முறை கேட்கிறார்:

''...விசயத்தின் சாராம்சத்தை எடுத்துக் கொண்டோமானால், ஒரு புதிய உற்பத்தி முறை, தொடர்ந்த பின்னடைவுக்களையும், தவறுகளை யும், தோல்விகளையும் சந்திக்காமல் உடனே வேர்பிடித்து நிலை பெற்ற தாக வரலாறு உண்டா?''[1]

1871-ல் பாரிஸ் கம்யூன் பாட்டாளிகள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட வீரம் செறிந்த நடவடிக்கையிலிருந்து கணக் கிட்டால் சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஒரு நூற்றாண்டிற்கும் குறைவான வரலாற்றையே கொண்டுள்ளது; அல்லது அக்டோபர் புரட்சியிலிருந்து கணக்கிட்டால் சுமார் அரை நூற்றாண்டு வரலாற்றையே கொண்டுள்ளது. பாட்டாளி வர்க்கப் புரட்சி; மனிதகுல வரலாற்றிலேயே மாபெரும் புரட்சி; அது முதலாளியத்திற்குப் பதிலாக சோசலிசத்தையும் தனியுடைமைக்குப் பதிலாக பொதுவுடமையையும் நிறுவுகிறது; அனைத்துச் சுரண்டும் அமைப்புகளையும், சுரண்டும் வர்க்கங்களையும் வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்க்கிறது. உலகையே குலுக்கும் இத்தகைய ஒருபுரட்சி கடுமையான, அபாயகரமான வர்க்கப் போராட்டங்களுக்கிடையே செல்வதும், பின்னடைவுகளுடன் கூடிய நீண்ட, துயரம் மிக்க பாதையினூடே செல்வதும் இயல் பானதும், தவிர்க்க முடியாததும் ஆகும்.

முதலாளிகளின் ஆயுதந்தாங்கிய அடக்குமுறையினால் பாட்டாளி வர்க்க ஆட்சி வீழ்ந்ததற்குப் பல உதாரணங்கள் வரலாற்றில் உண்டு. பாரிஸ் கம்யூனும் 1919-ல் இருந்த ஹங்கேரி சோவியத் குடியரசும் இவற் றிற்கு உதாரணங்களாகும். தற்காலத்தில் கூட உதாரணங்கள் உண்டு. 1956-ல் ஹங்கேரியில் நடந்த எதிர்ப்புரட்சிக் கலவரம் பாட்டாளி வர்க் கத்தின் ஆட்சியை ஏறக்குறைய தூக்கி எறியும் நிலைக்குச் சென்றது. இந்த வகையான முதலாளிய மீட்பை மக்கள் எளிதாக அடையாளம்

---

1. வி. இ. லெனின், ''மாபெரும் ஆரம்பம்'', தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, அ. மொ. ப., மாஸ்கோ 1952, தொகுதி 2, பகுதி 2, பக்கம் 229.

கண்டு கொண்டு இவற்றிற்கு எதிராக கண்காணிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க முடியும்.

ஆனால், இன்னொரு வகையான முதலாளிய மீட்பை மக்கள் எளிதாக அடையாளம் காணமுடிவதில்லை; அதனால், விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இல்லாமல் போய்விடுகிறார்கள்; இது மிகப்பெரும் அபாயம் ஆகும். கட்சி மற்றும் அரசின் தலைமை சீரழிந்து போவதால் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு திரிபுவாதப் பாதையை அல்லது ''அமைதி வழி பரிணாமப்'' பாதையை மேற்கொள்கிறது. சில வருடங்களுக்கு முன் டிட்டோ கும்பல் இத்தகைய படிப்பினையை அளித்தது; அக்கும்பல் சோசலிச யூகோஸ்லாவியாவை முதலாளிய நாடாகச் சீரழித்தது. ஆனால் இந்த உதாரணம் மட்டும் மக்களுடைய முழுக்கவனத்தையும் ஈர்க்கப் போதுமானதல்ல. இது ஒரு விபத்தாக இருக்கலாம் எனச் சிலர் கூறலாம்.

ஆனால், இப்போது திரிபுவாதி குருச்சேவ் கும்பல், கட்சி மற்றும் அரசு தலைமையைக் கைப்பற்றியிருக்கிறது. சோசலிசத்தைக் கட்டமைப்பதில் பல பத்தாண்டுகள் வரலாற்றைக் கொண்ட மாபெரும் அக்டோபர் புரட்சி மண்ணில், ரசியாவில் முதலாளித்துவம் மீண்டும் வருவதற்கான கடும் அபாயம் இருக்கிறது. இது சீனா உள்பட எல்லா சோசலிச நாடுகளுக்கும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உள்பட அனைத்து கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளுக்கும் அபாய எச்சரிக்கை ஆகும். இது தவிர்க்க முடியாமல் உலகெங்குமுள்ள மார்க்சிய-லெனினிய வாதிகள் மற்றும் புரட்சிகர மக்களின் கவனத்தை ஈர்த்து தங்களுடைய விழிப்புணர்வை கூர்மையாக்கவும், ஆழமாக சிந்திக்கவும் தூண்டி இருக்கிறது.

குருச்சேவ் திருத்தல்வாதத்தின் தோற்றம் ஒரு மோசமான விசயம் ஆகும். அது ஒரு நல்ல விசயமாகவும் கூட இருக்கிறது. சோசலிசம் ஈட்டப்பட்டுள்ள நாடுகளும், சோசலிசப் பாதையில் பயணம் தொடரவிருக்கும் நாடுகளும், திரிபுவாதி குருச்சேவ் கும்பல் வளர்த்துவரும் 'அமைதியான பரிணாமத்'தின் படிப்பினைகளை தீவிரமாகப் பரிசீலனை செய்து, இதுபோன்ற 'அமைதியான பரிணாமத்'தைத் தடுத்து எதிரியின் ஆயுதத் தாக்குதல்களை முறியடிக்கத் தேவையான பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பார்கள். அப்போது உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றி மேலும் உறுதியாகிவிடும்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நாற்பத்து மூன்றாண்டு கால வரலாறு உடையது. அதன் நீண்டகால புரட்சிகரப் போராட்டத்தின் போது எங்கள் கட்சி வலது மற்றும் 'இடது' சந்தர்ப்பவாதத் தவறுகளை எதிர்த்துப் போராடியது; தோழர் மாசேதுங் தலைமையிலான மத்திய கமிட்டியின் மார்க்சிய—லெனினியத் தலைமை நிறுவப்பட்டது. சர்வவியாபக உண்மையான மார்க்சிய—லெனினியத்தை சீனாவின் பருண்மையான புரட்சிகர நடைமுறையுடனும், கட்டுமானத்துடனும் நெருக்கமாக ஒன்றிணைத்ததன் மூலம் தோழர் மாசேதுங் சீன மக்களை வெற்றிக்கு மேல் வெற்றிக்கு அழைத்துச் சென்றார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியும் தோழர் மாசேதுங்கும் கோட்பாட்டு, அரசியல், ஸ்தாபனத்துறைகளிலும், நடைமுறைப் பணிகளிலும் இடைவிடாத போராட்டத்தை நடத்துவதற்கும் அதன் மூலம் திரிபுவாதத்தை முறியடித்து முதலாளித்துவ மீட்சியைத் தடுப்பதற்கும் எங்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளார்கள். சீனமக்கள் நீண்டகாலப் புரட்சிகர ஆயுதப் போராட்டங்களை நடத்தி ஒரு புகழ்மிக்க புரட்சிகரப் பாரம்பரியத்தைப் பெற்றுள்ளார்கள். சீனமக்களின் விடுதலைப்படை, மாசேதுங்கின் சிந்தனை ஆயுதத்தைத் தரித்து மக்களுடன் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எண்ணற்ற ஊழியர்கள் சீர்செய்யும் இயக்கங்களின் மூலமும், கூர்மையான வர்க்கப் போராட்டங் களின் மூலமும் பக்குவப்படுத்தப்பட்டு உள்ளனர். இந்த காரணங்கள் யாவும் எங்கள் நாட்டில் முதலாளித்துவ மீட்சியை மிகக் கடினமாக்கி உள்ளன.

ஆனால், நாம் உண்மைகளைக் காண்போம். எங்கள் சமுதாயம் முற்றமுழுக்க தூய்மையானதாக இருக்கிறதா? இல்லை அது அப்படி இல்லை. வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் இன்னமும் நீடிக்கின்றன; தூக்கி எறியப்பட்ட பிற்போக்கு வர்க்கங்கள் திரும்ப வருவதற்கான சூழ்ச்சி நடவடிக்கைகளை இன்னும் தொடர்கின்றன; மேலும் இங்கே புதிய, பழைய முதலாளித்துவ சக்திகளின் சூதாட்ட நடவடிக்கைகள் இருக்கின்றன; பதுக்கல்காரர்கள், ஒட்டுண்ணிகள், சீரழிவுவாதிகள் ஆகியோரின் இடர்மிக்க தாக்குதல்கள் இருக்கின்றன. ஒரு சில ஆதார அமைப்புகளில் கூட சீரழிவு நடவடிக்கைகள் இருக்கின்றன. அதற்கு மேல், இந்த சீர்குலைவாதிகள் உயர்ந்த தலைமை அமைப்புக்களில் தங்கள் பாதுகாவலர்களையும் ஏஜெண்டுகளையும் பெறுவதற்கு தங்களாலான அனைத்தையும் செய்துவருகின்றனர். இத்தகைய சக்திகளுக்கு எதிரான எங்களது கண்காணிப்பில் நாங்கள் சிறிதும் தொய்வடைந்துவிடக்கூடாது. மாறாக, முழுமையான எச்சரிக்கையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

சோசலிச நாடுகளில், சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்குமிடையிலான-திரும்ப வரமுயலும் முதலாளித்துவ சக்திகளுக்கும் அதை எதிர்க்கும் சக்திகளுக்கும் இடையிலான - போராட்டம் தவிர்க்க முடியாததாகும். ஆனால், சோசலிச நாடுகளில் முதலாளித்துவ மீட்சியும் அவைகள் முதலாளித்துவ நாடுகளாகச் சீர்குலைந்துபோவதும் நிச்சயமாகத் தவிர்க்க முடியாதவை அல்ல. ஒரு சரியான தலைமையும், பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொள்ளுதலும், புரட்சிகர மார்க்சிய—லெனினியப் பாதையை உறுதியாகப் பின்பற்றுதலும், நீண்ட, இடைவிடாத போராட்டத்தைத் தொடுத்தலும், உரிய நடவடிக்கைகளை எடுத்தலும் இருக்கும் வரை நாம் முதலாளித்துவ மீட்சியைத் தடுக்க முடியும். சோசலிசம் மற்றும் முதலாளித்துவ பாதைகளுக்கிடையிலான போராட்டம் சமூக முன்னேற்றத்துக்கான உந்து சக்தியாக ஆகிவிட முடியும்.

முதலாளித்துவ மீட்சியை எவ்வாறு தடுக்க முடியும்? சீனாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நடைமுறை அனுபவத்தையும், பிறநாடுகளின் பிரதானமாக ரசியாவின் சாதக, பாதக அனுபவத்தையும், மார்க்சிய—லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளுக்கேற்ப தொகுத்துக் கொண்ட பிறகு, இந்தப் பிரச்சினையின் மீதான சில கொள்கைகள் கோட்பாடுகளை தோழர் மாசேதுங் உருவாக்கினார். அதன்மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிய—லெனினிய கொள்கையை மேலும் வளர்த்துச் செழுமைப்படுத்தினார்.

தோழர் மாசேதுங் அவர்களால் முன்வைக்கப்பட்ட இது தொடர்பான கொள்கைகள், கோட்பாடுகளின் முக்கிய உள்ளடக்கம் கீழே தரப்படுகிறது:

முதலாவது : சோசலிச சமுதாயத்தை ஆராய்வதற்கு 'எதிர் மறைகளின் ஒற்றுமை' என்ற மார்க்சிய—லெனினிய விதியைப் பிரயோகிப்பது அவசியம். எல்லாப் பொருள்களிலும் முரண்பாடு பற்றிய விதியே, அதாவது எதிர்மறைகளின் ஒற்றுமை பற்றிய விதியே, பொருள் முதல் வாத இயக்கவியலின் அடிப்படை விதியாகும். இயற்கை உலகானாலும் சரி, மனித சமுதாயமானாலும் சரி, மனித சிந்தனையானாலும் சரி இந்தவிதி எல்லா இடங்களிலும் செயல்படுகிறது. ஒரு முரண்பாட்டில் எதிர்மறைகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாக இருக்கவும் அதே சமயத் தில் ஒன்றை எதிர்த்து ஒன்று போராடவும் செய்கின்றன. இதுவே பொருள்களை இயங்கவும், மாற்றவும் நிர்ப்பந்திக்கிறது. சோசலிச சமுதாயம் இதற்கு விதிவிலக்கல்ல. சோசலிச சமுதாயத்தில், மக்களிடையேயான முரண்பாடுகள், நமக்கும் எதிரிக்குமிடையிலான முரண்பாடுகள்

என்று இரண்டு வகையான சமூக முரண்பாடுகள் இருக்கின்றன. இந்த இரண்டு வகையான முரண்பாடுகளும் அவைகளின் சாரத்தில் முற்ற முழுக்க வேறுபட்டவையாக இருக்கின்றன; எனவே அவற்றைக் கையாள் வதற்கான முறைகளும் வேறுபட்டவைகளாகவே இருக்க வேண்டும். அவற்றைச் சரியாகக் கையாள்வதன் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை மேலும் உறுதிப்படுத்தவும், சோசலிச சமுதாயத்தை மேலும் பலப்படுத்தவும், வளர்ச்சியடையச் செய்யவும் முடியும். பலர் 'எதிர்மறைகளின் ஒற்றுமை' பற்றிய விதியை அங்கீகரிக் கிறார்கள் ஆனால், அதனை சோசலிச சமுதாயத்தின் பிரச்சினைகளைக் கையாள்வதிலும், ஆராய்வதிலும் பிரயோகிக்க இயலாதவர்களாக இருக் கிறார்கள். அவர்கள் சோசலிச சமுதாயத்தில் முரண்பாடுகள் இருக் கின்றன என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள் - எதிரிக்கும் நமக்கு மிடையில் மட்டுமல்ல, மக்களுக்கிடையேயும் முரண்பாடு இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். மேலும் அவர்கள் இவ்விரு வகையான முரண்பாடுகளையும் பிரித்தறிவது எப்படி என்றும், அவற்றை சரியாகக் கையாள்வது எப்படி என்றும், தெரியாமலிருக்கிறார்கள். ஆகவே, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினையை சரி யாகக் கையாள இயலாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

இரண்டாவது: சோசலிச சமுதாயம் ஒரு மிக நீண்ட வரலாற்றுக் காலம் கட்டத்தைக் கொண்டதாக இருக்கிறது. வர்க்கங்களும் வர்க்கப் போராட்டங்களும் இந்த சமுதாயத்தில் தொடர்ந்து நிலவுகின்றன; சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்குமான போராட்டம் இன்னமும் தொடர்கிறது. பொருளாதார அரங்கிலான (அதாவது உற்பத்தி சாதனங்களின் உடைமையில்) சோசலிசப் புரட்சி போதுமான தாக இருப்பதில்லை. எனவே அது உறுதிப்படுத்தப்பட முடியாததாக இருக்கிறது. அரசியல் மற்றும் சித்தாந்த அரங்குகளிலும் ஒரு முழுமை யான சோசலிசப் புரட்சி நடத்தப்பட வேண்டும். சோசலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்குமிடையிலான போராட்டத்தில் 'யார் வெல்வர்' என்பதைத் தீர்மானிகக ஒரு நீண்டகாலம் தேவைப்படுகிறது. பல பத்தாண்டுகள் போதாது; வெற்றிக்கு ஒன்று முதல் பல நூற்றாண்டுகள் வரை தேவைப்படுகிறது. காலம் பற்றிய பிரச்சினையில் ஒரு குறுகிய காலக்கட்டத்திற்கு பதிலாக ஒரு நீண்ட காலத்திற்கு தயாராக இருப்பதே நல்லது. முயற்சி பற்றிய விசயத்தில் கடமை எளிது என்பதை விட கடினமானது என்று கருதுவது நல்லது. இந்த வழியில் சிந்திப்பதும் செயல்படுவதும் அதிகம் பயனுள்ளதாகவும் குறைந்த தீங்கு பயப்பதாக வும் இருக்கும். இதைக் கவனிக்கத் தவறுபவர்களும் இதை முழுவது மாக அங்கீகரிக்கத் தவறுபவர்களும் மிகப்பெரிய தவறுகளை செய்பவராவர். சோசலிசத்தின் வரலாற்றுக் காலக்கட்டத்தின்போது,

முதலாளித்துவ மீட்சி தடை செய்யப்படவும் சோசலிசக் கட்டமைப்பை முன்னெடுத்துச் செல்லவும் கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்கான நிலைமைகள் உருவாக்கப்படவும் வேண்டுமானால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலை நிறுத்துவதும், சோசலிசப் புரட்சியை இறுதி வரை முன்னெடுத்துச் செல்வதும் அவசியமாகும்.

மூன்றாவது: பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் விவசாயி-தொழிலாளி கூட்டணியை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படுகிறது; தொழிலாளி வர்க்கமும் அதன் தலைமையிலுள்ள மக்களும் பிற்போக்கு வர்க்கங்கள், தனிநபர்கள், சோசலிச மாற்றத்தையும், சோசலிசக் கட்டமைப்பையும் எதிர்க்கும் சக்திகள் ஆகியோரின் மீது செலுத்தும் சர்வாதிகாரம் என்பதே இதன் பொருளாகும். மக்களின் அணிகளிடையே ஜனநாயக மத்தியத்துவம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. நமது ஜனநாயகம் எந்த முதலாளித்துவ அரசிலும் உள்ள ஜனநாயகத்தைக் காட்டிலும் மிக விரிவான எல்லையைக் கொண்டதாகும்.

நான்காவது: சோசலிசப் புரட்சி, சோசலிசக் கட்டமைப்பு ஆகிய இரண்டிலுமே மக்கள் திரள் பாதையைக் கடைப்பிடிப்பதும், தீரமுடன் மக்கள் திரளைத் திரண்டெழச் செய்வதும், மக்கள் திரள் இயக்கங்களைப் பெரிய அளவில் கட்டவிழ்த்து விடுவதும் அவசியமாகும். ''மக்களிடமிருந்து மக்களுக்கு'' என்ற மக்கள் திரள் பாதையே நமது கட்சியின் அனைத்துப் பணிகளுக்கும் அடிப்படையான பாதையாகும். மக்களின் பெரும்பான்மையில்-எல்லாவற்றிற்கும் மேலாக தொழிலாளி, விவசாயி மக்கள் திரளின் பெரும்பான்மையில்-உறுதியான நம்பிக்கை வைப்பது அவசியமாகும். நமது பணிகளில் மக்களைக் கலந்தாலோசிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்; எந்தச் சூழ்நிலையிலும் மக்களிடமிருந்து நம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளக் கூடாது. கட்டளையிடுதலும், சலுகை காட்டும் மனப்பான்மையும் எதிர்க்கப்பட வேண்டியவை. முழுமையாகவும் வெளிப்படையாகவும் கருத்துக்களை வெளிப்படுத்துவதும், மாபெரும் விவாதங்களும் புரட்சிகரப் போராட்டத்தின் முக்கிய வடிவங்களாகும்; அவை நமது நாட்டு மக்களால் அவர்களது நீண்ட புரட்சிகரப் போராட்டத்தின் போக்கில் உருவாக்கப்பட்டவையாகும்; மக்களிடையேயான முரண்பாடுகளையும், நமக்கும் எதிரிகளுக்குமிடையிலான முரண்பாடுகளையும் கலைவதற்கு மக்கள் திரளைச் சார்ந்திருக்கும் போராட்ட வடிவங்களாகும்.

அய்ந்தாவது: சோசலிசப் புரட்சியிலும் சரி, சோசலிசக் கட்டமைப்பிலும் சரி யாரைச் சார்ந்திருப்பது, யாரை வென்றெடுப்பது, யாரை எதிர்ப்பது என்ற கேள்விகளுக்கு விடை காணுவது அவசியமாகும்.

பாட்டாளி வர்க்கமும் அதன் முன்னோடியும் (கம்யூனிஸ்ட் கட்சியும்) சோசலிச சமுதாயத்தின் வர்க்கப் பகுப்பாய்வைச் செய்ய வேண்டும்; சோசலிசப் பாதையை உறுதியாக எடுத்துச் செல்லும் உண்மையாக நம்பத் தகுந்த சக்திகளை சார்ந்திருக்க வேண்டும்; வெல்லப்படக் கூடிய அனைத்து நேச சக்திகளையும் வென்றெடுக்க வேண்டும்; எதிரிகளுக்கு எதிரான ஒன்றுபட்ட போராட்டத்தில், மக்கள் தொகையின் 95 சதவீதத்தை உள்ளடக்கிய மக்கள் திரளுடன் அய்க்கியப்பட வேண்டும். கிராமப்புறங்களில், விவசாயத்தில் கூட்டுப் பண்ணைகளை உருவாக்கிய பிறகு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், விவசாயி-தொழிலாளி கூட்டணியையும் பலப்படுத்தவும், தன்னெழுச்சியான முதலாளித்துவப் போக்குகளை முறியடிக்கவும் சோசலிசத்தின் நிலைமையை இடைவிடாது பலப்படுத்தவும் விரிவுபடுத்தவும் ஏழை மற்றும் கீழ்த்தட்டு, நடுத்தர விவசாயிகளைச் சார்ந்திருப்பது அவசியமாகும்.

ஆறாவது : நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் திருப்பத் திரும்ப விரிவான சோசலிச கல்வி இயக்கங்களை நடத்துவது அவசியமாகும். மக்களைப் பயிற்றுவிப்பதற்கான இந்தத் தொடர்ச்சியான இயக்கங்களில், புரட்சிகர வர்க்கச் சக்திகளை அமைப்பாக்கவும் அவர்களின் வர்க்க உணர்வை உயர்த்தவும் மக்களிடையே முரண்பாடுகளைச் சரியாகக் கையாளவும், அய்க்கியப்படக் கூடிய அனைவரையும் அய்க்கியப்படுத்தவும் நாம் சிறப்பாகச் செயல்படவேண்டும். இந்த இயக்கங்களில், சோசலிச விரோத, முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சக்திகள், நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், எதிர்ப்புரட்சியாளர்கள், முதலாளித்துவ வலதுசாரிகள், கையாடல்காரர்கள், ஒட்டுண்ணிகள், சீரழிந்துபோனவர்கள் ஆகிய இவர்கள் சோசலிசத்தின் மீது கட்டவிழ்த்துவிடும் தாக்குதல்களை நொறுக்கித் தள்ளுவதற்கும், அவர்களில் பெரும்பான்மையினரை புதிய மனிதர்களாக மறுவார்ப்பு செய்வதற்கும், அவர்களை எதிர்த்து பதிலுக்குப் பதிலாக கூர்மையான போராட்டத்தை நடத்துவது அவசியமாகும்.

ஏழாவது : செயலூக்கத்துடன், சோசலிசப் பொருளாதாரத்தை விரிவடையச் செய்வது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். விவசாயத்தை அஸ்திவாரமாகவும், தொழிற்துறையை வளர்ந்துவரும் சக்தியாகவும் கொண்டு தேசியப் பொருளாதாரத்தை வளர்ப்பது என்ற பொதுக் கொள்கையின் வழிகாட்டுதலின் கீழ் படிப்படியாக தொழிற்துறை, விவசாயம், அறிவியல், தொழில் நுட்பம், தேசிய பாதுகாப்பு இவற்றில் நவீனமயமாக்கலைச் சாதிப்பது அவசியமாகும். உற்பத்தியின் வளர்ச்சியின் அடிப்படையில் மக்களின் வாழ்க்கைத் தரங்களைப் படிப்படியாகவும் விரிந்து பரந்த அளவிலும் உயர்த்துவது அவசியமாகும்.

எட்டாவது: அனைத்து மக்களின் உடைமை, கூட்டுடைமை ஆகியவை சோசலிசப் பொருளாதாரத்தின் இரண்டு வடிவங்களாகும். கூட்டு உடைமையிலிருந்து அனைத்து மக்களின் உடைமைக்கு மாறிச் செல்வது-இரண்டு வகையான உடைமையிலிருந்து ஒரே விதமான அனைத்து மக்களின் உடைமைக்கு மாறிச் செல்வது-ஒரு நீண்ட படிமுறையாகும். கூட்டுடைமை கூட ஒரு தாழ்ந்த மட்டத்திலிருந்து உயர்ந்த மட்டத்துக்கு, சிறுவீத அளவிலிருந்து பெருவீத அளவுக்கு வளர்கிறது. இந்த மாற்றம் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வாக, சீன மக்கள் உருவாக்கிய மக்கள் கம்யூன் ஒரு பொருத்தமான ஸ்தாபன வடிவமாக இருக்கிறது.

ஒன்பதாவது : ''நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்துக்கள் மோதட்டும்'' என்பது கலைகளின் வளர்ச்சி மற்றும் அறிவியலின் முன்னேற்றத்தைத் தூண்டவும், சோசலிச கலாச்சாரத்தை செழித்து வளரச் செய்யவுமான ஒரு கொள்கையாகும். கல்வி, பாட்டாளி வர்க்க அரசியலுக்கு சேவை செய்வதாகவும், ஆக்கபூர்வமான உழைப்புடன் இணைக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். உடல் உழைப்பாளிகள் அறிவுஜீவிகளாகவும், அறிவுஜீவிகள் உடல் உழைப்பாளிகளாகவும் இருக்கவேண்டும். அறிவியல், கலாச்சாரம், கலை மற்றும் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களிடையே பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தை ஊக்குவிப்பதும், முதலாளித்துவ சித்தாந்தத்தை துடைத்தெறிவதும் ஒரு உக்கிரமான நீண்டகால வர்க்கப் போராட்டமாகும். ஒரு பெரிய தொழிலாளி வர்க்க அறிவுஜீவிப் படைப் பிரிவைக் கட்டமைப்பது அவசியமாகும். அவர்கள் சோசலிசத்துக்கு பணிபுரியக் கூடியவர்களாகவும், 'சிவந்தும் நிபுணத்துவம் பெற்றும்' (Red and expert) இருக்கவேண்டும். அதாவது கலாச்சாரப் புரட்சி, வர்க்கப் போராட்டத்தில் புரட்சிகர நடைமுறை, உற்பத்திக்கும் அறிவியல் பரிசோதனைக்குமான போராட்டம் ஆகிய எல்லா வழிகளிலும் அரசியல் ரீதியாக உணர்வு பெற்றவராகவும் தொழில் ரீதியில் வல்லுநராகவும் இருக்க வேண்டும்.

பத்தாவது : கூட்டு உற்பத்தி உழைப்பில் ஊழியர் பங்கேற்பு முறையைக் கடைபிடிப்பது அவசியம். நமது கட்சி மற்றும் அரசின் ஊழியர்கள் சாதாரணத் தொழிலாளர்களேயன்றி, மக்களின் முதுகின் மேல் அமர்ந்திருக்கும் பிரபுக்கள் அல்லர்; கூட்டு உற்பத்தி உழைப்பில் பங்கேற்பதன் மூலம் ஊழியர்கள் உழைக்கும் மக்களுடன் விரிவான, இடைவிடாத, நெருக்கமான உறவுகளை நிலைநிறுத்திக் கொள்கிறார்கள். இது, ஒரு சோசலிச அமைப்பிற்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த பெரிய நடவடிக்கையாகும். இது, அதிகார வர்க்கத்தை அடக்கியாள்வதற்கும், திரிபுவாதம் மற்றும் வறட்டுச் சூத்திரவாதத்தை தடுக்கவும் உதவுகிறது.

பதினொன்றாவது : ஒரு சிறிய எண்ணிக்கையிலான நபர்களுக்கு உயர்ந்த ஊதியங்கள் வழங்கும் முறையை ஒருபோதும் பிரயோகிக்கக் கூடாது. கட்சி, அரசாங்கம், நிறுவனங்கள் மற்றும் மக்கள் கம்யூன் இவற்றில் வேலை செய்யும் நபர்களின் வருமானங்களுக்கும் மக்கள் பிரிவினரின் வருமானங்களுக்கும் இடையில் இருக்கும் இடைவெளியானது அறிவுபூர்வமாகவும் படிப்படியாகவும் குறைக்கப்பட வேண்டும்; அதிகப்படுத்தப்படக்கூடாது. அனைத்து பணியாட்களும் தங்களது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதையும், சிறப்பு சலுகைகளை அனுபவிப்பதையும் தடுக்கவேண்டும்.

பனிரெண்டாவது : ஒரு சோசலிச நாட்டின் மக்களின் ஆயுதந்தாங்கிய படைகள் பாட்டாளி வர்க்க கட்சியின் தலைமையின் கீழும், மக்களின் கண்காணிப்பின் கீழும் இருப்பது எப்போதும் அவசியமாகும். அவை எப்போதும் மக்கள் படையின் புகழ்மிக்க பாரம்பரியத்தை-மக்களுக்கும் படைக்கும் இடையிலான அய்க்கியத்தை, அதிகாரிகள் படை வீரர்களுக்கிடையான அய்க்கியத்தைக்-கடைப்பிடித்து வர வேண்டும். ஒழுங்கான இடைவெளிகளில் அதிகாரிகள் சாதாரண படைவீரர்களாகவும் பணியாற்றும் முறையைக் கடைபிடிப்பது அவசியமாகும். இராணுவ ஜனநாயகம், பொருளாதார ஜனநாயகம் இவற்றை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். மேலும் மக்கள் பாதுகாப்புப் படைகள் (Militia Units) நாடு முழுவதிலும் அமைக்கப்படவும் பயிற்றுவிக்கப்படவும் வேண்டும். அதன் மூலம் ஒவ்வொருவரும் ஒரு படைவீரராக வேண்டும். துப்பாக்கிகள் எப்போதும் கட்சி மற்றும் மக்களின் கரங்களில் இருக்க வேண்டும். அவை ஒருபோதும் பிழைப்புவாதிகளின் கருவிகளாக மாறிவிட அனுமதிக்கக்கூடாது.

பதின்மூன்றாவது : மக்களின் பொதுநலக்காப்பு அமைப்புகள் எப்போதும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையிலும், மக்களின் கண்காணிப்புக்கு கீழும் இருக்க வேண்டும். சோசலிசத்தின் பலன்களையும் மக்களின் நலன்களையும் பாதுகாக்கும் போராட்டத்தில், பரந்துபட்ட மக்கள் பிரிவினரும், பாதுகாப்பு அமைப்புகளும் இணைந்த கூட்டு முயற்சிகளைச் சார்ந்திருக்கும் கொள்கை பிரயோகிக்கப்பட வேண்டும். ஒரு மோசமான ஆள் தப்பிப்பதோ அல்லது ஒரு நல்ல மனிதன் தண்டிக்கப்படுவதோ நடந்து விடக் கூடாது. எதிர்ப்புரட்சியாளர்கள் எப்போது கண்டுபிடிக்கப்பட்டாலும் நசுக்கப்பட வேண்டும், தவறுகள் எப்போது கண்டுபிடிக்கப்பட்டாலும் களையப்பட வேண்டும்.

பதினான்காவது: அயலுறவுக் கொள்கையில், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் கடைபிடிப்பதும், வல்லரசு ஆதிக்கவாதத்தையும், தேசிய தற்பெருமையையும் எதிர்ப்பதும் அவசியமாகும். சோசலிச முகாம், சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் போராட்டங்களால் உருவாக்கப்பட்டதாகும். அது உலகெங்கிலுமுள்ள தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களுக்கும், சோசலிச நாடுகளிலுள்ள மக்களுக்கும் சொந்தமாகும். 'அனைத்து நாடுகளது தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! உலகத் தொழிலாளர்களே ஒடுக்கப்பட்ட நாடுகளே ஒன்றுபடுங்கள்! என்ற போர்க்குணம்மிக்க முழக்கங்களை நாம் உண்மையாகச் செயல்படுத்த வேண்டும்; ஏகாதிபத்தியம் மற்றும் பிற்போக்குவாதத்தின் எதிர்ப் புரட்சிகர, மக்கள் விரோத, கம்யூனிச விரோத கொள்கைகளை எதிர்த்து தீர்மானகரமாகப் போராட வேண்டும்; அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் புரட்சிகரப் போராட்டங்களை ஆதரிக்க வேண்டும். சோசலிச நாடுகளிடையே உள்ள உறவுகள், சுதந்திரம், முழுமையான சமத்துவம் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையிலும் பரஸ்பர ஆதரவு மற்றும் பரஸ்பர உதவி என்ற பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாட்டின் அடிப்படையிலும் இருக்கவேண்டும். ஒவ்வொரு சோசலிச நாடும் தனது கட்டமைப்புக்கு அது முதன்மையாகத் தன்னைத்தானே சார்ந்திருக்க வேண்டும். எந்த ஒரு சோசலிச நாடாவது தனது அயலுறவுக் கொள்கையில் தேசியத் தற்பெருமையைக் கடைபிடிக்குமாயின் அல்லது இன்னும் மோசமாக உலகைப் பங்கீடு செய்துகொள்வதற்காக ஏகாதிபத்தியத்தின் கூட்டாளியாக ஆர்வத்துடன் பணியாற்றுமானால் அத்தகைய நடவடிக்கை ஒரு சீர்கேடான நடவடிக்கையாகும்; பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்குத் துரோகமிழைப்பதாகும்.

பதினைந்தாவது: பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலவும் வரை பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையான கம்யூனிஸ்ட் கட்சி இருக்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியானது பாட்டாளி வர்க்க ஸ்தாபனத்தின் அதி உயர்ந்த வடிவமாகும். பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் மூலம் வெளிப்படுகிறது. கட்சிக் குழுக்கள் தலைமை தாங்குவது என்ற முறை எல்லாத் துறைகளிலும் அமுல்படுத்தப்பட வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் காலகட்டத்தில், பாட்டாளி வர்க்கக் கட்சியானது பாட்டாளி வர்க்கத்துடனும் உழைக்கும் மக்களின் பரந்துபட்ட திரளுடனும் நெருக்கமான உறவுகளைப் பேணவும் பலப்படுத்தவும் வேண்டும்; தனது வீரம் மிக்க புரட்சிகர நடைமுறையை பேணவும் வளர்க்கவும் வேண்டும், மார்க்சிய—லெனினிய சர்வ வியாபக மெய்மையை தனது சொந்த நாட்டின் பருண்மையான நடைமுறையுடன் ஒருங்கிணைக்கும்

கோட்பாட்டை உயர்த்திப் பிடிக்கவேண்டும். அத்துடன் திரிபுவாதம், வறட்டுச் சூத்திரவாதம், அனைத்து வகையான சந்தர்ப்பவாதம் ஆகிய வற்றுக்கு எதிரான போராட்டத்தில் விடாப்பிடியாக இருக்கவேண்டும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றுப் படிப்பினைகளின் அடிப்படையில் தோழர் மாசேதுங் கூறினார்:

''வர்க்கப் போராட்டம், உற்பத்திக்கான போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை ஆகியன ஒரு வலிமை வாய்ந்த சோசலிச நாட்டைக் கட்ட மைப்பதற்கான மூன்றுமாபெரும் புரட்சிகர இயக்கங்களாகும். கம்யூனிஸ்டு கள் அதிகார வர்க்கப் போக்கிற்கு ஆட்படாமலும் திரிபுவாதத்திற்கும் வறட்டுச் சூத்திரவாதத்திற்கும் எதிராக தடைக்காப்புறுதி பெறவும் எப் போதும் வெல்லப்பட முடியாதவர்களாக விளங்கவும் இவ்வியக்கங்கள் ஒரு உறுதியான உத்தரவாதமாக இருக்கின்றன. இவை பரந்துபட்ட உழைக்கும் மக்களுடன் அய்க்கியப்படவும், ஜனநாயக சர்வாதிகாரத்தை எய்தவும் பாட்டாளி வர்க்கத்தினால் இயலும் என்பதற்கான நம்பத் தகுந்த உத்தரவாதங்களாகும். இந்த இயக்கங்களில்லாமல் நிலப் பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், எதிர்ப்புரட்சியாளர்கள், எல்லாவகை யான மோசமான சக்திகள், மனிதர்களைக் கொன்று தின்னும் அரக்கர்கள் ஆகியோர் உலவித் திரிவார்கள். நமது ஊழியர்கள் இதை எல்லாம் கண்டு கொள்ளாதிருக்கும் அதே சமயத்தில் பல சமயங்களில் எதிரிக்கும் நமக்கும் வேறுபடுத்தி பார்க்கத் தவறிவிடுகிறார்கள். ஆனால், எதிரி களுடன் கூட்டு சேர்ந்து சீர்கெட்டு, ஒழுக்கங்கெட்டுப்போய் விடு கிறார்கள்; இவ்வாறு எதிரிகளின் முகாமுக்குள் இழுக்கப்பட்டு விடு கிறார்கள்; அல்லது எதிரிகள் நமது அணிகளுக்குள் ஊடுருவிவிடுகிறார்கள். நமது தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள் ஆகியோரில் பலர் எதிரிகளின் எளிய மற்றும் வலிய தந்திரங்களுக்கு எதிராகத் தங்களைத் தற்காத்துக் கொள்ளாவிட்டால் பிறகு, தேசிய அளவில் எதிர்ப்புரட்சி மீட்சி தவிர்க்க முடியாமல் ஏற்படுவதற்கு சில வருடங்கள் அல்லது சில பத்தாண்டுகள் அல்லது அதிகபட்சம் பல பத்தாண்டுகள்தான் பிடிக் கும். பிறகு மார்க்சிய-லெனினியக் கட்சி சந்தேகத்துக்கிடமின்றி ஒரு திரிபுவாதக் கட்சியாகவோ அல்லது ஒரு பாசிசக் கட்சியாகவோ மாறி விடும்; சீனா முழுவதின் இயல்பே மாறிவிடும்'' [1]

நமது கட்சியும், நாடும் தமது இயல்பை மாற்றிக் கொள்ளாமலி ருப்பதை உத்தரவாதப்படுத்த வேண்டுமானால் நமக்கு ஒரு சரியான பாதையும், சரியான கொள்கையும் மட்டும் இருந்தால் போதாது;

---

1. *மாசேதுங், உடலுலைப்பில் ஈடுபடும் ஊழியர்கள் குறித்து எழுதப் பட்ட செக்கியாங் மாநிலத்தின் ஏழு சிறந்த ஆவணங்கள்'' மீதான குறிப்பு, மே 9, 1963.*

மேலும் நாம் பாட்டாளி வர்க்க இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் பல பத்து இலட்சக்கணக்கான வாரிசுகளைப் பயிற்றுவிக்கவும் வளர்க்கவும் வேண்டும் என்று தோழர் மாவோ சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதிப் பகுப்பாய்வில், பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இலட்சியத் திற்கான வாரிசுகளைப் பயிற்றுவிப்பது பற்றிய பிரச்சினை என்பது, பாட்டாளி வர்க்கப்புரட்சியாளர்களின் முந்திய தலைமுறையில் தொடங்கி வைத்த மார்க்சிய-லெனினியப் புரட்சிகர இலட்சியத்தை தொடர்ந்து முன் னெடுத்துச் செல்லக்கூடிய மக்கள் இருப்பார்களா மாட்டார்களா? நமது கட்சி மற்றும் அரசின் தலைமை பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களின் கரங்களில் இருக்குமா இருக்காதா, நமது சந்ததிகள் மார்க்சிய-லெனினி யத்தால் உருவாக்கப்பட்ட சரியான பாதையில் தொடர்ந்து முன்னேறிச் செல்வார்களா, மாட்டார்களா அல்லது வேறுவார்த்தைகளில் சொல்ல சொல்லவேண்டுமென்றால் நாம் குருச்சேவின் திரிபுவாதம் சீனாவில் தோன்றுவதை வெற்றிகரமாகத் தடுக்கிறோமா இல்லையாஎன்பதுதான். சுருங்கச்சொன்னால், இது பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகும். நமது கட்சிக்கும் நாட்டுக்கும் வாழ்வா சாவா என்ற விசயமாகும். நூறாண்டுகளுக்கு, ஆயிரம் ஆண்டுகளுக்கு, இல்லை, பத்தாயிரம்ஆண்டுகளுக்கானபாட்டாளிவர்க்கப்புரட்சிகர இலட்சியத்திற்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகும். ரசியாவில் ஏற்பட் டுள்ள மாற்றங்களை அடிப்படையாகக்கொண்டு ஏகாதிபத்திய தீர்க்க தரி சிகள், 'சமாதானபூர்வபரிணாமவளர்ச்சி' பற்றியதங்களது நம்பிக்கைகளை சீனக் கட்சியின் மூன்றாவது அல்லது நான்காவது தலைமுறையின் மீது வைக்கிறார்கள். இந்த ஏகாதிபத்திய தீர்க்க தரிசனங்களை நாம் தூள் தூளாக்கவேண்டும். நமது அதிஉயர்ந்த அமைப்பிலிருந்து கடைசிமட்ட அமைப்புகள் வரை. எல்லா இடங்களிலும் புரட்சிகர இலட்சியத்திற்கான வாரிசுகளைப் பயிற்றுவிப்பதற்கும் வளர்ப்பதற்கும் நாம் இடைவிடாத கவனம் செலுத்தவேண்டும்.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்திற்குத் தகுதி வாய்ந்த வாரிசுகளை உருவாக்கத் தேவையான விசயங்கள் என்ன?

அவர்கள் உண்மையான மார்க்சிய—லெனினியவாதிகளாக இருக்க வேண்டும். மார்க்சிய—லெனினியப் போர்வையைப் போர்த்திக் கொண்டிருக்கும் குருச்சேவ் போன்ற திரிபுவாதிக்ளாக இருக்கக்கூடாது.

அவர்கள் பெரும்பான்மையான சீன மக்களுக்கும், உலக மக்களுக்கும் முழுமனதுடன் சேவை புரியும் புரட்சியாளர்களாக இருக்கவேண்டும்; தனது சொந்தநாட்டில் விரல்விட்டு எண்ணத்தக்க சலுகை பெற்ற முதலாளித்துவ பிரிவினர் மற்றும் அந்நியப் பிற்போக்கு மற்றும்

ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களுக்கு பணிபுரியும் குருச்சேவ் போன்றவர்களாக இருக்கக்கூடாது.

அவர்கள் மிகப்பெரும்பான்மையை அய்க்கியப்படுத்தவும் அதனுடன் இணைந்து பணிபுரியவும் தகுதி வாய்ந்த பாட்டாளி வர்க்க அரசியல் வல்லுநர்களாக இருக்கவேண்டும். தங்களுடன் உடன்பாடுடையவர்களுடன் மட்டும் அய்க்கியப்படுவது என்றில்லாமல் தங்களோடு உடன்பாடில்லாதவர்களோடும், முன்பு எதிர்ப்பவர்களாக இருந்து பின்பு அது தவறு என்று அறிந்தவர்களுடன்கூட அய்க்கியப்படுவதில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் மிக முக்கியமாக குருச்சேவ் போன்ற சூழ்ச்சியாளர்களையும், பிழைப்புவாதிகளையும் குறித்து கண்காணிப்புடன் இருக்கவேண்டும். அத்தகைய மோசமான நபர்கள் எந்த மட்டத்திலும் கட்சியின், அரசின் தலைமையைக் கைப்பற்றுவதிலிருந்து தடுக்கவேண்டும்.

அவர்கள் கட்சியின் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டைப் பிரயோகிப்பதில் முன்மாதிரியாக இருக்கவேண்டும். ''மக்களிடமிருந்து மக்களுக்கு'' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தலைமை தாங்கும் முறையில் தேர்ச்சி பெறவேண்டும். மேலும், அவர்கள் ஒரு ஜனநாயக நடைமுறையை வளர்த்துக் கொள்ள வேண்டும்; மக்களுக்கு செவி சாய்ப்பதில் சிறந்தவர்களாக இருக்கவேண்டும். குருச்சேவைப் போன்று அவர்கள் கொடுங்கோலர்களாக இருக்கக்கூடாது. கட்சியின் ஜனநாயக மத்தியத்துவத்தை மீறக்கூடாது. தோழர்கள் மீது திடீர் தாக்குதல் தொடுக்கக்கூடாது. தன்னிச்சையாகவும், ஆணவத்தோடும் செயல்படுபவராக இருக்கக்கூடாது.

அவர்கள் அடக்கமுள்ளவர்களாகவும், விவேகமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். செருக்குத் தன்மைக்கும், மூர்க்கத்தன்மைக்கும் எதிராகத் தங்களைக் காத்துக்கொள்பவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் சுயவிமர்சன உணர்வை மனதில் பதிய வைத்தவர்களாக, தனது பணிகளில் குறைபாடுகளையும் தவறுகளையும் திருத்திக் கொள்ளும் தைரியம் கொண்டவர்களாக இருக்கவேண்டும். அவர்கள், குருச்சேவைப் போன்று தங்கள் தவறுகளை மூடிமறைப்பவர்களாக, எல்லா பெருமைகளையும் தங்கள் தலையில் சுமந்துகொண்டு எல்லாக் குறைகளையும் மற்றவர்கள் தலையில் சுமத்துபவர்களாக இருக்கக்கூடாது.

பாட்டாளி வர்க்க புரட்சிகர இலட்சியத்தின் வாரிசுகள் வெகுஜன போராட்டங்களில் முன்னணிக்கு வருகிறார்கள். புரட்சியின் மாபெரும் புயல்களில் புடம்போடப்படுகிறார்கள். வெகுஜனப் போராட்

டங்களின் நீண்ட காலக்கிரமத்தில் ஊழியர்களை சோதித்தறிந்து, தேர்வு செய்து வாரிசுகளைப் பயிற்றுவிப்பது இன்றியமையாததாகும்.

தோழர் மாவோ அவர்களால் முன்வைக்கப்பட்ட மேலே கண்ட கொள்கைகள் மார்க்சிய—லெனினியத்தின் ஆக்கபூர்வ வளர்ச்சிகளாகும். முதலாளித்துவ மீட்சியைத் தவிர்ப்பதில் நமக்குள்ள கோட்பாட்டு ஆயுதக்கிடங்கில், தீர்மானகரமான முக்கியத்துவம் வாய்ந்த புதிய ஆயுதச் சேமிப்புகளாக இவை இருக்கின்றன. இக்கோட்பாடுகளை நாம் பின்பற்றிச் செல்லும்வரை, நாம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்; நமது கட்சியும் அரசும் தமது இயல்பை ஒருபோதும் மாற்றிக்கொள்ளாமல், சோசலிசப் புரட்சியையும் சோசலிச கட்டுமானத்தையும் வெற்றிகரமாக நடத்திச் செல்லும்; ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும் தூக்கி எறியக்கூடிய எல்லா மக்களின் புரட்சிகர இயக்கங்களுக்கு உதவும்; சோசலிசத்தில் இருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லும் எதிர்கால மாற்றத்தை உத்தரவாதப்படுத்தும்.

★ ★ ★

ரசியாவில் திரிபுவாத குருச்சேவ் கும்பல் தோன்றியிருப்பதைப் பொருத்தவரை, மார்க்சிய—லெனினியவாதிகள் என்ற அடிப்படையில் எங்கள் அணுகுமுறை எந்த ‘இடையூறையும்’ நாங்கள் அணுகுவதைப் போன்றதே ஆகும். முதலாவது, நாங்கள் அதற்கு எதிராக இருக்கிறோம்; இரண்டாவது, அதைக்கண்டு நாங்கள் அஞ்சவில்லை.

நாங்கள் அதை விரும்பவில்லை அதை நாங்கள் எதிர்க்கிறோம். ஆனால், திருத்தல்வாத குருச்சேவ் கும்பல் ஏற்கனவே தோன்றி விட்டதனால் அதைக்கண்டு திகிலடைவதற்கு ஒன்றுமில்லை. மேலும் அதைக்கண்டு அலறவும் தேவையில்லை. பூமி தொடர்ந்து சுழலும்; வரலாறு தொடர்ந்து முன்னோக்கிச் செல்லும்; உலகமக்கள் எப்போதும் போலவே புரட்சி செய்வார்கள்; ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் அடிவருடிகளும் தவிர்க்கமுடியாதபடி தங்களது அழிவைச் சந்திப்பார்கள்.

மாபெரும் ரசிய மக்களின் வரலாற்றுப் பங்களிப்புகள் எப்போதும் மங்காத புகழுடன் விளங்கும். அவை திரிபுவாத குருச்சேவ் கும்பலின் துரோகத்தினால் ஒருபோதும் மாசுபடுத்தப்பட முடியாதவை. ரசியாவின் தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர அறிவுஜீவிகள் மற்றும் கம்யூனிஸ்டுகள் இறுதியில் தங்கள் பாதையில் எதிர்வரும் அனைத்து தடைகளையும் கடந்து கம்யூனிசத்தை நோக்கி வெற்றிநடை போடுவார்கள்.

ரசிய மக்களும் அனைத்து சோசலிச நாடுகளின் மக்களும், உலகெங்கிலுமுள்ள புரட்சிகர மக்களும் திரிபுவாத குருச்சேவ் கும்பலின் துரோகத்திலிருந்து நிச்சயமாக படிப்பினைகளைக் கற்றுக்கொள்வார்கள். குருச்சேவின் திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டத்தில், சர்வதேசகம்யூனிச இயக்கம் வளர்ந்துள்ளது; மேலும் எப்போதையும் விட வலிமை வாய்ந்ததாய் தொடர்ந்து வளரும்.

பாட்டாளி வர்க்கப் புரட்சி இலட்சியத்தின் எதிர்காலத்தைப் பற்றி மார்க்சிய-லெனினியவாதிகள் எப்போதும் ஒரு புரட்சிகரமான நம்பிக்கை மனப்பான்மையைப் பெற்றுள்ளார்கள். மார்க்சிய—லெனினியம், சோசலிசம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றின் பிரகாசமான ஒளி ரசியாவின் மீது மீண்டும் வீசும் என்று நாங்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளோம். பாட்டாளி வர்க்கம் உலகம் முழுவதையும் வெல்வது உறுதி; கம்யூனிசம் முழுமையான இறுதி வெற்றியை பூமியில் எய்தப் போவதும் உறுதி.

☆ ☆ ☆

குருச்சேவ் ஏன் வீழ்ந்தார்?

தலையங்கம்,
'செங்கொடி', (நவம்பர் 21, 1964)

குருச்சேவ் வீழ்ந்து விட்டார்.

ரசியக் கட்சி மற்றும் அரசியல் தலைமையை சதியின் மூலம் கைப் பற்றிய தலைமைச் சதிகாரன், நவீன திரிபுவாதத்தின் முதல் பிரதிநிதி, இறுதியாக வரலாற்றின் மேடையிலிருந்து துரத்தியடிக்கப்பட்டு விட்டார்.

இது மிக நல்ல விசயம்; உலக மக்களின் புரட்சிகர இலட்சியத் திற்குச் சாதகமானது.

திரிபுவாதத்திற்கெதிராக இடைவிடாமல் போராடிக் கொண்டிருக்கும் உலகெங்கிலுமுள்ள மார்க்சிய-லெனினியவாதிகளுக்கு குருச்சேவின் வீழ்ச்சி ஒரு மாபெரும் வெற்றியாகும். இந்த வீழ்ச்சி, நவீன திரிபுவாதம் ஓட்டாண்டியாகிவிட்டதையும் அதன் படுதோல்வியையும் குறிக்கிறது.

குருச்சேவ் வீழ்ந்தது எப்படி? இதற்கு மேலும் அவரால் ஏன் குளறுபடி செய்து கொண்டு நீடிக்க முடியவில்லை?

இந்தக் கேள்வி உலகெங்கிலுமுள்ள பல்வேறுபட்ட அரசியல் குழுக் களிடமிருந்து பல்வேறுபட்ட விளக்கங்களை எழுப்பிவிட்டுள்ளது.

ஏகாதிபத்தியவாதிகள், பிற்போக்குவாதிகள், சந்தர்ப்பவாதிகள் மற்றும் அனைத்து வகையான திரிபுவாதிகள், அவர்கள் குருச்சேவுக்கு அனுதாபப்படுபவர்களோ அல்லது தங்கள் நோக்கங்களில் குருச்சேவிடம் கருத்து வேறுபாடு கொண்டவர்களோ யாராயினும், ''பலம் வாய்ந்த மனிதனாக'' தோற்றமளித்த குருச்சேவின் திடீர் வீழ்ச்சியைப் பற்றி பல்வேறுபட்ட கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

பல கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளும், குருச்சேவின் வீழ்ச்சியைப் பற்றிய தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் கட்டுரை களையும், ஆவணங்களையும் வெளியிட்டுள்ளன.

இந்தக் கட்டுரையில் நாங்களும் குருச்சேவின் வீழ்ச்சியைப் பற்றி விவாதிக்க விரும்புகிறோம்.

மார்க்சிய-லெனினியவாதிகளைப் பொறுத்தவரை இந்த வீழ்ச்சி புரிந்து கொள்வதற்குக் கடினமான ஒரு விசயமல்ல. உண்மையில் சொல்லப் போனால் இது முழுவதுமாக எதிர்பார்க்கப்பட்டதுதான். குருச்சேவ் இத்தகைய ஒரு முடிவுக்குத்தான் வருவார் என்று மார்க்சிய-லெனினியவாதிகள் நீண்டகாலமாகவே எதிர்பார்த்தார்கள்.

குருச்சேவின் வீழ்ச்சிக்குக் காரணமாக, மக்கள் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுகளைக் கூட அவர் மீது அடுக்க முடியும். ஆனால் அவை எல்லாவற்றிலும் முக்கியமானதாக ஒன்றைக் கூறலாம். அதாவது, அவர் உலக மக்கள் ரசிய மக்கள் ஆகியோரின் புரட்சிகர விருப் பத்தை மார்க்சிய-லெனினியத்தால் கணித்துச் சொல்லப்பட்ட வரலாற்று வளர்ச்சியின் விதியை மீறி வரலாற்றின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த வீணாக முயன்றார் என்பதாகும். மக்களின் முன்னேற்றப் பாதையில் உள்ள எந்த தடைக்கல்லும் அகற்றப்பட வேண்டும். அவரும் அவரைப் போன்றவர்களும் அதை விரும்பினார்களோ இல்லையோ மக்கள் குருச்சேவை நிச்சயமாக நிராகரிக்கவே செய்தார்கள். ரசிய மக்களாலும் உலகெங்கிலுமுள்ள புரட்சிகர மக்களாலும் திரிபுவாதத்தை எதிர்த்து உறுதியுடன் தொடுக்கப்பட்ட போராட்டத்தின் தவிர்க்க முடியாத விளைவே குருச்சேவின் வீழ்ச்சியாகும்.

நமது சகாப்தம், உலக முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் தங்களது அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் சோசலிசமும் கம்யூனிசமும் வெற்றியை நோக்கி வீறுநடைப்போட்டுக் கொண்டிருக்கும் ஒரு சகாப்தமாகும். பாட்டாளி வர்க்க உலகப் புரட்சியை படிப்படியாக முன்னெடுத்துச் சென்று முழுமையான வெற்றியை ஈட்டவேண்டும். ஏகாதிபத்தியம் இல்லாத, முதலாளித்துவம் இல்லாத, மனிதனை

மனிதன் சுரண்டுவதில்லாத ஒரு புதிய உலகத்தை தங்கள் செந்த முயற்சியின் மூலமாக தத்தம் நாடுகளின் பருண்மையான நிலைமைகளுக் கேற்ப நிர்மாணிக்க வேண்டும். இதுவே இச்சகாப்தத்தில் வாழும் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரலாற்றுக் கடமையாகும். இது வரலாற்று வளர்ச்சியின் மாற்ற முடியாதப் போக்காகும்; உலக புரட்சிகர மக்களின் பொதுவான கோரிக்கையாகும். இந்த வரலாற்றுப் போக்கு மனித விருப்பத்திற்கு அப்பாற்பட்டு சுதந்திரமாக இயங்கும் ஒரு புறநிலை விதி ஆகும். மேலும் அது தடுத்து நிறுத்தப்பட முடியாததாகும். ஆனால், சமகால அரசியல் மேடையின் கோமாளியாகத் திகழ்ந்த குருச்சேவ், பழைய முதலாளித்துவப் பாதையில் வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னுக்கு திருப்பிவிடலாம் என்ற வீணான நம்பிக்கையால், அழுகிப்போன சுரண்டும் வர்க்கங்கள் மற்றும் அவர்களுடைய அழுகிப் போன சுரண்டல் வடிவம் ஆகியவற்றின் வாழ்வை நீடிக்கலாம் என்ற வீணான நம்பிக்கையால் இந்தப் போக்கிற்கு எதிராகச் செயல்பட்டார்.

குருச்சேவ், வரலாற்றின் சந்தர்ப்பவாதிகள் மற்றும் திரிபுவாதிகளின் மார்க்சிய விரோத கருத்துக்கள் அனைத்தையும் சேகரித்து அவற்றில் இருந்து ஒரு முற்றமுழுவதுமாக திரிபுவாதப் பாதையை உருவாக்கினார் அப்பாதையின் உள்ளடக்கம் ''சமாதான சகவாழ்வு'', ''சமாதான போட்டி'', ''சமாதான முறையில் மாற்றம்'', ''அனைத்து மக்களின் அரசு'', ''அனைத்து மக்களின் கட்சி'' ஆகியவையாகும். அவர் ஏகாதிபத்தியத்தின்பால் ஒரு சரணாகதிப் பாதையைக் கடைப்பிடித்தார்; மக்களின் புரட்சிகரப் போராட்டங்களை எதிர்க்கவும், கலைக்கவும் அவர் வர்க்க சமரசக் கோட்பாட்டைப் பயன்படுத்தினார். சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் அவர் ஒரு பிளவுப் பாதையை—பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கு பதிலாக வல்லரசு ஆதிக்கவாதத்தை—முன்வைத்தார். சோசலிச அமைப்பு முறைக்கு மாற்றாக முதலாளித்துவ சித்தாந்தம், அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகியவற்றை முன்வைத்து முதலாளித்துவத்திற்கு புத்துயிருட்ட முயற்சிகள் மேற்கொண்டதன் மூலம் ரசியாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் சிதைக்க கடுமையாக முயன்றார்.

கடந்த 11 வருடங்களில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மற்றும் லெனின், ஸ்டாலின் ஆகியோரது தலைமையில் கட்டியமைக்கப்பட்ட உலகின் முதலாவது சோசலிச நாடு என்பதனுடைய பெருமையைப் பயன்படுத்திக் கொண்டு குருச்சேவ் ரசிய மக்களின் உண்மையான விருப்பத்திற்கு எதிராக தன்னால் இயன்ற எல்லா மோசமான காரியங் களையும் செய்தார். இந்த மோசமான செயல்கள் கீழ்க்கண்டவாறு தொகுத்துத் தரப்படுகின்றன.

1. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற பெயரில் மிக மோசமான கொச்சையான மொழியில் ரசிய மக்கள் மற்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான ஸ்டாலின் மீது வசைமாறி பொழிந்தார். ஸ்டாலினை எதிர்ப்பதன் மூலம் அவர் மார்க்சிய-லெனினியத்தை எதிர்த்தார். ஸ்டாலின் தலைமையில் இருந்த காலம் முழுவதிலும் ரசிய மக்கள் படைத்த மாபெரும் சாதனைகள் அனைத்தையும் ஒரு கணத்தில் இல்லை என்று மறுத்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், சோசலிச அமைப்பையும், மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும், மாபெரும் ரசியாவையும், சர்வதேச கம்யூனிச இயக்கத்தையும் அவமதிக்க முயற்சி செய்தார். அவ்வாறு செய்ததின் மூலம் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அனைத்து நாடுகளிலுமுள்ள பிற்போக்குவாதிகளுக்கும் அவர்களுடைய ரசிய எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மிக அசிங்கமான உதவிகளைச் செய்தார்.

2. 1957 பிரகடனத்தையும், 1960 அறிக்கையையும் பகிரங்கமாக மீறி அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் அவர் ''அனைத்து மட்ட ஒத்துழைப்பை'' நாடினார். ரசிய மற்றும் அமெரிக்க அய்க்கிய நாடுகளின் தலைவர்கள் ''மனித இனத்தின் எதிர்காலத்தை தீர்மானிப்பவர்கள்'' என்றும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ''சமாதானத்துக்காக நேர்மையான விருப்பத்தை'' கொண்டிருக்கிறார்கள் என்றும் ஓயாமல் புகழ்ந்து தனது தவறான கருத்தை நிலைநிறுத்தி வந்தார். ஒரு சமயம் துணிகரக் கொள்கையைக் கடைபிடித்து கியூபாவுக்கு ஏவுகணைகளை (Guided Missiles) அனுப்பிவைத்தார்; இன்னொரு சமயம் சரணாகதி கொள்கையை கடைபிடித்து அமெரிக்க கொள்ளையர்களின் கட்டளையின் பேரில் கியூபாவிலிருந்து ஏவுகணைகளையும், குண்டுவீச்சு விமானங்களையும் பணிவுடன் திரும்பபெற்றுக் கொண்டார். அவர் அமெரிக்க கப்பற்படையின் கண்காணிப்பை ஏற்றுக்கொண்டு கியூபாவின் இறையாண்மையை விற்றுவிடக்கூட முயன்றார். கியூபா அரசிற்கு தெரியாமல் கியூபாவில் அமெரிக்க கட்டுப்பாட்டில் உள்ள அய்க்கிய நாடுகள் சபையின் ''கண்காணிப்பையும்'' ஏற்றுக்கொண்டார். அவ்வாறு செய்ததின் மூலம் அக்டோபர் புரட்சியிலிருந்து கடந்த நாற்பது ஆண்டுகளில் கேட்டிராத பெரும் அவமதிப்பிற்குரிய இழிவை மாபெரும் ரசிய மக்களுக்குத் தேடித் தந்துவிட்டார்.

3. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அணுஆயுத மிரட்டல் கொள்கைக்கு சேவை செய்யவும், சோசலிச சீனா, தனது தற்பாதுகாப்புக்கு தனது சொந்த அணு ஆயுத வலிமையை கட்டமைத்துக் கொள்வதை தடுக்கவும், அவர் ரசியாவின் பாதுகாப்புத் திறனுக்கு பாதகம் ஏற்படுத்தக் கூட தயங்காமல் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இரண்டு ஏகாதிபத்திய

வல்லரசுகளுடன் அரைகுறை அணு ஆயுத சோதனைத் தடை உடன் படிக்கையை செய்து கொண்டுள்ளார். இந்த ஒப்பந்தம் ஒரு முழுமை யான மோசடியே என்பதை உண்மைகள் உணர்த்துகின்றன. இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டதின் மூலம் குருச்சேவ், ரசிய மக்கள், அனைத்து சோசலிச நாடுகளின் மக்கள், உலகின் அனைத்து சமாதானம் விரும்பும் மக்கள் ஆகியோரின் நலன்களை விற்றுவிட மூர்க்கத்தனமாக முயற்சித்தார்.

4. ''அமைதியான மாற்றம்'' என்ற பெயரில் முதலாளித்துவ நாடு களில் உள்ள மக்களின் புரட்சிகர இயக்கங்களை தடுக்க ஒவ்வொரு வழி யிலும் முயற்சித்தார். அவர் சட்டபூர்வமான பாராளுமன்றப் பாதையை மேற்கொள்ளுமாறு கோரினார். இந்தத் தவறான பாதை, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்தை முடமாக்கி, புரட்சிகர மக்களை சித்தாந்த ரீதியாக நிராயுதபாணியாக்கி, ஒரு சில நாடுகளில் புரட்சிக்கு தீவிரமான பின்னடைவுகளை ஏற்படுத்தி வருகிறது. பல முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளை உயிரற்ற ஒரு புதுவகையான சமூக ஜனநாயகக் கட்சிகளாக மாற்றி அவற்றை முதலாளித்துவத்திற்கு சேவை செய்யும் கருவிகளாகச் சிதைந்து போகச் செய்துவிட்டன.

5. ''சமாதான சகவாழ்வு'' என்ற பெயர்ப் பலகையின் கீழ் அவர் தேசிய விடுதலை இயக்கத்தை எதிர்க்கவும், நாசப்படுத்தவும், தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்தார். மேலும், ஒடுக்கப்பட்ட நாடுகளின் புரட்சிகரப் போராட்டங்களை நசுக்குவதில் அமெரிக்க ஏகாதிபத்தியத் தோடு கைகோர்த்துக் கொண்டு செயல்படும் அளவுக்குச் சென்றார். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் காங்கோ மக்களை நசுக்குவதில் உதவி யளிக்கும் வகையில், காங்கோவுக்கு ஆக்கிரமிப்பு படைகளை அனுப்ப வாக்களிக்குமாறு அய்க்கிய நாடுகள் சபையிலுள்ள ரசியப் பிரதிநிதிகள் குழுவுக்குக் கட்டளையிட்டார். காங்கோவுக்கு அய்க்கிய நாடுகளின் படை என்று சொல்லிக்கொள்ளப்படும் படைகளை அனுப்புவதற்கு ரசிய போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தினார். அல்ஜீரிய தேசிய விடுதலைப் போராட்டத்தை 'பிரான்சின் உள்நாட்டு விவகாரம்' என்று வர்ணித்து உண்மையில் அவர் அல்ஜீரிய மக்களின் புரட்சிகரப் போராட் டங்களை எதிர்த்தார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் வியட்னாமுக்கு எதிராகத் தீட்டப்பட்ட பேக்போ வளைகுடா நிகழ்ச்சிகளிலிருந்து அவர் ''ஒதுங்கி நிற்குமளவுக்கு'' துணிச்சல் பெற்றிருந்தார். அமெரிக்க கும்ப லுக்கு அவர்களின் இடர்பாடான நிலைமைகளிலிருந்து விடுபடுவதற்கு உதவவும், அமெரிக்க கொள்ளையர்களின் ஆக்கிரமிப்புக் குற்றத்தை பூசி மெழுகுவுமான வழிகளைப் பற்றி அதிகமாகச் சிந்தித்தார்.

6. 1960 அறிக்கையை நாணயமற்ற முறையில் மீறிய அவர், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாகச் சிதைந்துவிட்ட டிட்டோவை ஒரு ''மார்க்சிய-லெனினியவாதியாகவும் ஒரு முதலாளித்துவ நாடாகச் சிதைந்துவிட்ட யூகோஸ்லாவியாவை ஒரு சோசலிச நாடாகவும் வர்ணித்து ஓடுகாலி டிட்டோ கும்பலின் மீதான அறிக்கையின் தீர்ப்பைத் திருத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். சமயம் கிடைத்தபோதெல்லாம், தானும் டிட்டோ கும்பலும் ''ஒரே சித்தாந்தத்தை'' கொண்டிருப்பதாகவும், தாங்கள் இருவரும் ''ஒரே கோட்பாட்டினால் வழிகாட்டப்படுவதாகவும்'' அறிவித்தார். யூகோஸ்லாவிய மக்களின் நலன்களுக்கு துரோகம் இழைத்து, சர்வதேச கம்யூனிச இயக்கத்துக்கும் சேதம் விளைவித்த இந்த ஓடுகாலியிடமிருந்து தான் அடக்கத்துடன் கற்றுக்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார்.

7. ஒரு சகோதர சோசலிச நாடான அல்பேனியாவை தனது வஞ்சினம் கொண்ட எதிரியாகக் கருதினார். அதற்கு ஊறுவிளைவிக்கவும், வீழ்த்தவும் சாத்தியமான எல்லா வழிகளையும் வகுத்தார். தான் அதை ஒரே விழுங்கில் விழுங்கி ஏப்பம் விட்டுவிட விரும்பினார். அவர் அல்பேனியாவுடனான அனைத்துப் பொருளாதார, அரசுத்துறை உறவுகளையும் வெட்கமின்றித் துண்டித்துக் கொண்டார். வார்சா உடன்படிக்கை அமைப்பின் உறுப்பினர் என்ற முறையில் அல்பேனியா பெற்றிருந்த உரிமைகளையும், பரஸ்பர பொருளாதார உரிமைக் கழகத்தில் (Council of Mutual Economic Assistance) அல்பேனியா பெற்றிருந்த நியாயமான உரிமைகளையும் தன்னிச்சையாகப் பறித்துக் கொண்டார். மேலும் அல்பேனியக் கட்சியையும் அரசு தலைமையையும் தூக்கி எறியும்படி வெளிப்படையாகவே அழைப்பு விடுத்தார்.

8. மார்க்சிய-லெனினியத்தையும், ஒரு புரட்சிகர பாதையையும் உயர்த்திப் பிடித்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீது அவர் முதுகெலும்பற்ற வெறுப்புணர்வை வளர்த்தார். ஏனெனில் அவர் திருத்தல்வாதத்தையும் சரணாகதிப் பாதையையும் மேற்கொள்ளும் முயற்சிக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மாபெரும் தடைக்கல்லாய் இருந்தது. அவர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கெதிராகவும், தோழர் மாசேதுங் அவர்களுக்கு எதிராகவும் எண்ணற்ற வதந்திகளையும் வசவுகளையும் பரப்பினார். சோசலிச சீனாவை சீர்குலைக்கும் வீணான முயற்சியில் அவர் எல்லா வகையான கீழ்த்தரமான நடவடிக்கைகளையும் கையாண்டார். அவர் நூற்றுக் கணக்கான உடன்பாடுகளையும், ஒப்பந்தங்களையும் வஞ்சகத்தனமாக கிழித்தெறிந்தார். சீனாவில் பணியாற்றிக் கொண்டிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரசிய நிபுணர்களை தன்னிச்சையாகத் திரும்ப

அழைத்துக் கொண்டார். சீனாவுக்கும் ரசியாவுக்கும் இடையே எல்லைத் தகராறுகளை திட்டமிட்டு உருவாக்கினார்; சிங்கியாங்கில் பெரிய அளவிலான சீர்குலைவு நடவடிக்கைகளை மேற்கொண்டார். சோசலிச சீனாவின் மீதான இந்திய பிற்போக்குவாதிகளின் ஆயுத தாக்குதலை அவர் ஆதரித்தார். அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு அவர்களுக்கு ஆயுத உதவி வழங்கி சீனாவுக்கு எதிரான ஆயுதந்தாங்கிய ஆத்திர மூட்டல்களை தூண்டிவிட்டும், உதவியும் வந்தார்.

9. சகோதர நாடுகளிடையேயான உறவுகளுக்கு வழிகாட்டும் கொள்கைகளை மூர்க்கத்தனமான முறையில் மீறி அவற்றின் சுதந்திரத் தின் மீதும் இறையாண்மையின் மீதும் ஆதிக்கம் செய்தார்; அவற்றின் உள்நாட்டு விவகாரங்களில் தீயநோக்குடன் தலையிட்டார். ''பரஸ்பர பொருளாதார உதவி'' என்ற பெயரில் சகோதர நாடுகளின் சுதந்திரமான பொருளாதார வளர்ச்சியை எதிர்த்தார்; கச்சாப் பொருட்களுக்கான மூலாதாரமாகவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் சந்தையாகவும் மாற அவற்றை நிர்ப்பந்தித்தார். இவ்வாறு அவற்றின் தொழிற்துறையை ஒரு தொங்கு சதையாகச் சுருக்கினார். இவையெல்லாம், தனது சொந்த கண்டுபிடிப்பு களில் உருவான புதிய கொள்கைகள், சூத்திரங்கள் என்று தற்பெருமை அடித்துக்கொண்டார். ஆனால் உண்மையில் அவை முதலாளித்துவ உலகின் காட்டுமிராண்டிச் சட்டங்களாகும். அவற்றைத்தான் அவர் சோசலிச நாடுகளுக்கிடையிலான உறவுகளில் பிரயோகித்தார். இதற்கு அவர் ஏகபோக முதலாளித்துவ மண்டலங்களின் பொதுச் சந்தையை (Common Market) முன்மாதிரியாக எடுத்துக்கொண்டார்.

10. சகோதரக் கட்சிகளுக்கிடையிலான உறவுகளுக்கு வழிகாட்டும் கொள்கைகளை முழுமையாக மீறி சகோதரக் கட்சிகளுக்கு எதிரான கவிழ்ப்பு மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட அனைத்து வகையான சதித்திட்டங்களையும் மேற்கொண்டார். மார்க்சிய—லெனினியத்தை உயர்த்திப்பிடிக்கும் சகோதரக்கட்சி மீது ஒளிவு மறைவற்ற பெரும் அளவிலான கட்டற்ற தாக்குதலைத் தொடுப்பதற்கு தனது சொந்தக் கட்சியின் காங்கிரசு மற்றும் மத்திய கமிட்டி கூட்டங் களை மட்டுமல்லாது சில சகோதரக் கட்சிகளின் காங்கிரசுகளையும் பயன்படுத்தினார். ஆனால் பல சகோதரக் கட்சிகளின் விசயங்களில், தனது திரிபுவாதப் பாதையை ஆதரிக்கவும் அந்த கட்சிகளிலிருக்கும் மார்க்சிய-லெனினியவாதிகளைத் தாக்கவும் சட்டவிரோதமான முறையில் வெளியேற்றவும் அரசியல்ரீதியாக சீரழிந்தவர்களையும், ஓடுகாலி களையும், கட்சி மாறிகளையும் வெட்கமின்றி விலைக்கு வாங்கினார்.

இவ்வாறு பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் கட்சிகளுக்குள் பிளவுகளை உருவாக்கினார்.

11. சகோதரக் கட்சிகளிடையே கலந்தாலோசித்து ஒற்றுமையை அடைவது என்ற கோட்பாட்டை வேண்டுமென்றே மீறி ''தந்தையாதிக்க கட்சி'' (Patriarchal Father Party)பாத்திரத்தை மேற்கொண்டுசகோதரக் கட்சிகளின் சர்வதேசமாநாடுஒன்றை சட்டவிரோதமான முறையில்கூட்ட தான்தோன்றித்தனமாக முடிவு செய்தார். 1964 ஜூலை 30 தேதியிட்ட அறிவிப்பில் 26 சகோதரக் கட்சிகளின் தயாரிப்புக்கமிட்டி கூட்டம் ஒன்று டிசம்பர் 15-ல் கூட்டப்படுமென்று ஆணையிட்டார். அதன் மூலம் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் ஒரு வெளிப்படையான பிளவை உருவாக்க முயன்றார்.

12. ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் உள்நாட்டு முதலாளித்துவ சக்திகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் முதலாளித்துவத் துக்கு திரும்ப இட்டுச் செல்லும் அடுக்கடுக்கான பல திரிபுவாதக் கொள்கைகளைப் பின்பற்றினார். ''அனைத்து மக்களின் அரசு'' என்ற பெயர்ப்பலகையின் கீழ் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒழித்தார்; ''அனைத்து மக்களின் கட்சி'' என்ற பெயர்ப் பலகையின் கீழ் அவர் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பாட்டாளி வர்க்கப் பண்பை மாற்றி, கட்சியமைப்பின் மார்க்சிய—லெனினிய கொள்கைகளுக்கு மாறாக கட்சியை ''தொழிற்துறை'', ''விவசாயத்துறை'' கட்சிகளாகப் பிளவுபடுத்தினார்.

''ஒரு முழு அளவிலான கம்யூனிச கட்டமைப்பு'' என்ற பெயர்ப் பலகையின் கீழ், லெனின் ஸ்டாலின் ஆகியோரது தலைமையில் ரசிய மக்கள் தங்களது வியர்வையையும் ரத்தத்தையும் சிந்தி உருவாக்கிய உலகின் முதலாவது சோசலிச நாட்டில் பழைய முதலாளித்துவப் பாதையை மீண்டும் கொண்டுவர அவர் ஆயிரத்தொரு வழிகளில் முயன்றார். ரசிய விவசாய மற்றும் தொழிற்துறையில் அவருடைய குருட்டுத்தனமான வழிகாட்டுதல் ரசிய தேசியப் பொருளாதாரம் மாபெரும் அழிவுக்குள்ளாகும் நிலைமையை ஏற்படுத்தியது. ரசிய மக்களின் வாழ்க்கையில் மாபெரும் துயரங்களைக் கொண்டு வந்தது.

கடந்த 11 வருடங்களாக குருச்சேவ் செய்து வந்த ஒவ்வொன்றும் சோசலிசத்துக்கு எதிராக ஏகாதிபத்தியத்துடன் கூட்டணி, சீனாவுக்கு எதிராக அமெரிக்காவுடன் கூட்டணி, மக்கள் புரட்சிகள் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு எதிராக பிற்போக்குவாதிகளுடன் கூட்டணி, ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் அனைத்து மார்க்சிய-லெனினிய தோழமைக் கட்சிகள் மற்றும் அனைத்துப்

புரட்சியாளர்கள் ஆகியோருக்கு எதிராக டிட்டோ கும்பல் மற்றும் அனைத்து வகையிலான ஓடுகாலிகளுடன் கூட்டணி என்ற கொள்கை களாகத்தான் இருந்து வந்துள்ளன. குருச்சேவின் இந்த கொள்கை ரசிய மக்களது, சோசலிச முகாமிலுள்ள நாடுகளின் மக்களது மற்றும் உலகெங்கிலுமுள்ள புரட்சிகர மக்களது அடிப்படை நலன்களுக்கு ஊறு விளைவித்துள்ளது.

குருச்சேவின் சாகசச் செயல்கள் இத்தகையனவே.

குருச்சேவ் போன்ற ஒருவரின் வீழ்ச்சி என்பது நிச்சயமாக வயது முதிர்ந்த விட்டதாலோ, நோயுற்றதாலோ ஏற்பட்டதல்ல அல்லது அவரின் வேலை முறையிலோ தலைமை தாங்கும் முறையிலோ இருந்த தவறுகளினால் மட்டும் ஏற்பட்டதல்ல; குருச்சேவின் வீழ்ச்சி அவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடைப்பிடித்த திரிபுவாதப் பொதுவழி மற்றும் பல தவறான கொள்கைகளின் விளைவாகும்.

மக்கள் தனது கண்காணிப்பின் கீழ் சாதாரணமாக இருக்கிறார்கள் என்று குருச்சேவ் கருதினார். தனது சொந்த இனிய விருப்பப்படி ரசிய மக்களின் வருங்காலத்தை நிர்ணயிக்க முடியும் என்று எண்ணிக் கொண்டு இருந்தார். ரசியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு வல்லரசுகளின் ''தலைவர்கள்'' அனைத்து நாடுகளின் மக்களுடைய தலைவிதியை முடிவு செய்து விட முடியும் என அவர் கருதினார். அவரைப் பொருத்தவரை, மக்கள் வெறும் முட்டாள்கள் 'தான் மட்டுமே வரலாற்றை உருவாக்கும் கதாநாயகன்' ரசிய மக்களும், பிற நாடுகளின் மக்களும் தனது திரிபுவாத அதிகாரத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று நிர்ப்பந்திக்க வீண்முயற்சி செய்தார். இவ்வாறு ரசிய மக்களுக்கும், சோசலிச முகாமிலுள்ள நாடுகளின் மக்களுக்கும், உலகெங்கிலுமுள்ள பாட்டாளி வர்க்கத்திற்கும், புரட்சிகர மக்களுக்கும் நேர் எதிரானவராக தன்னை நிறுத்திக் கொண்டார். தன்னைத் தானே ஒரு நெருக்கடியில் மாட்டிக் கொண்டு விட்டார். அவர் தனது சொந்த சீடர்களாலேயே கைவிடப்பட்டார்; உள்நாட்டு வெளிநாட்டுச் சிக்கல்களிலிருந்து அவரால் தன்னை விடுவித்துக்கொள்ள முடியவில்லை. அவர் தன் கழுத்தைச் சுற்றி தானே சுருக்கு மாட்டிக் கொண்டுவிட்டார். தனது சவக்குழியை தானே தோண்டிக் கொண்டு விட்டார்.

வரலாற்று நீரோட்டத்தைப் பின்னுக்குத் திருப்பிவிட முடியும் என்ற வெற்று நம்பிக்கையைப்பேணி வளர்த்த பல கோமாளிகளை வரலாறு கண்டிருக்கிறது. ஆனால் அவர்கள் அனைவரும் ஒரு இழிவான முடிவையே அடைந்திருக்கிறார்கள்.

மக்களின் விருப்பத்திற்கும் சமுதாய வளர்ச்சியின் தேவைக்கும் எதிரான தீயச்செயலில் ஈடுபட்டவர்கள், அவர்கள் எவ்வளவு பெரிய ''கதாநாயகர்களாக'' இருந்தபோதிலும் எவ்வளவுதான் மூர்க்கர்களாக இருந்தபோதிலும், கேலிக்குரிய வகையில் எதற்கும் பயனற்றவர்களாகத்தான் சென்று முடிவார்கள் என்பதை எண்ணற்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இத்தகையவர்கள் மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்கும் நோக்கத்துடன் தொடங்கி, கடைசியில் தங்களையே அழித்துக் கொள்வதில்தான் முடிந்திருக்கிறார்கள். இதுதான் இதுபோன்ற நபர்களுக்கான பொது விதியாகும்.

முதலாம் அகில காலகட்டத்தில் பக்கூனின் போன்ற ''நபர்கள்'' தங்கள் காலத்தில் மூர்க்கத்தனமாக மார்க்சியத்தை எதிர்த்த ''கதாநாயகர்களாக'' இருந்தனர். ஆனால் அவர்கள் விரைவிலேயே வரலாற்றின் குப்பைத் தொட்டியில் வீசியெறியப்பட்டனர். இரண்டாவது அகில காலகட்டத்தில் பெர்ன்ஷ்டைன், காவுட்ஸ்கி போன்ற மார்க்சிய விரோத ''கதாநாயகர்கள்'' ஒரு காலத்தில் தலைமைப் பதவிகளில் அமர்ந்திருந்த ''வெல்லமுடியாத அசகாய சூரர்களாக'' இருந்தார்கள். ஆனால், முடிவில் வரலாறு அவர்களைப் பற்றி உலகறிந்த ஓடுகாலிகள் என்றுதான் எழுதியது. லெனினின் மறைவுக்குப் பிறகு எதிர்ப்புக்குழு கலகத் தலைவராக இருந்த டிராட்ஸ்கி தன்னை ஒரு ''கதாநாயகனாக'' அணி செய்து கொண்டார். ஆனால் உண்மைகள், ஸ்டாலினுடைய சரியான கூற்று உறுதிப்படுத்தின; அதாவது, ''அவர் ஒரு கதாநாயகன் என்பதை விட ஒரு நடிகரைத்தான் பிரதிபலிக்கிறார், ஒரு நடிகரை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு கதாநாயகரோடு ஒப்பிட்டு குழப்பிக் கொள்ளக்கூடாது'' என்று ஸ்டாலின் கூறினார்.

''ஆனால் முன்னேற்றமே மனித உலகின் நிலையான விதியாகும்''. வரலாற்றின் சக்கரத்தை நிறுத்த விரும்புகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அரைப்பட்டு மண்ணோடு மண்ணாகப் போவார்கள் என்பதைத்தான் வரலாறு நமக்கு கற்பித்திருக்கிறது. தோழர் மாசேதுங் அவர்கள் திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டியதைப் போல, ஏகாதிபத்தியமும் அனைத்துப் பிற்போக்குவாதிகளும் காகிதப் புலிகளே; திரிபுவாதிகளும் கூட அப்படித்தான். எவ்வளவுதான் மூர்க்கமானவர்களாகவும் வீராப்பானவர்களாகவும் இருந்தாலும் பிற்போக்கு வர்க்கங்களின், பிற்போக்கு சக்திகளின் ''கதாநாயகர்கள்'' உண்மையிலேயே காகிதப் புலிகள்தான். தோற்றத்தில்தான் சக்திவாய்ந்தவர்கள்; உண்மையில் வரலாற்றில் எழுந்துவரும் அலைகளால் அடித்துக் கொண்டுபோகப்படும் நீர்குமிழிகள்தான். குருச்சேவ் இதற்கு விதிவிலக்கல்ல. 20-வது மற்றும் 22-வது காங்கிரசுகளில் மார்க்சிய-லெனினியத்தையும், ஸ்டாலினையும்

அவர் துர்நோக்குடன் தாக்கியபோதும் புக்காரெஸ்ட் கூட்டத்தில் மார்க்சிய-லெனினியத்தை உயர்த்திப் பிடிக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின்மீது திடீர்த்தாக்குதல் தொடுத்த போதும் அந்த நாட்களில் அவரிடமிருந்த மட்டு மிஞ்சிய மூர்க்கத்தனத்தை நினைத்து பாருங்கள்! ஆனால், இந்த சோவியத் எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பு, சீன எதிர்ப்பு ''கதாநாயகன்'' தனது திரிபுவாத முன்னோடிகளைப் போலவே தனது இறுதிமுடிவைச் சந்திக்க அதிககாலம் பிடிக்கவில்லை. எவ்வளவு பேர் அவரிடம் வாதிட்ட போதிலும் சரியான பாதைக்குத் திரும்பும்படி கேட்டுக்கொண்ட போதிலும் அதையெல்லாம் ஒருசிறிதும் எண்ணிப் பார்க்காமல், கடைசியில் தனது இறுதி முடிவான அழிவை அடைந்தார்.

குருச்சேவ் வீழ்ந்துவிட்டார். உற்சாகத்தோடு பின்பற்றப்பட்ட திரிபுவாதப் பாதையும் மதிப்பிழந்தது. ஆனால், மார்க்சிய-லெனினியம் திரிபுவாதப்போக்கை வென்று தொடர்ந்து முன்னேறும். எல்லா நாடுகளது மக்களின் புரட்சிகர இயக்கம், அதன் பாதையில் எதிர்வரும் எல்லாத் தடைகளையும் துடைத்தெறிந்து அலையென எழுந்து முன்னேறும்.

இருந்தபோதிலும், வரலாற்றின் போக்கானது தொடர்ந்து கடுமையானதாகவே இருக்கும். குருச்சேவ் வீழ்ந்துவிட்டபோதிலும் அவரது ஆதரவாளர்களான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், பிற்போக்குவாதிகள், நவீன திரிபுவாதிகள் ஆகியோர் இந்த தோல்வியை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இந்த நரவேட்டைக்காரர்கள், குருச்சேவுக்காக தொடர்ந்து பிரார்த்தித்து வருகிறார்கள். தங்களுடைய பிரார்த்தனைகள் மூலம் அவருக்கு புத்துயிர் அளிக்க முயன்று வருகின்றனர். அவருடைய ''பங்களிப்புகளையும்'' ''தகுதி வாய்ந்த வீரச் செயல்களையும்'' அவரால் தொடங்கி வைக்கப்பட்ட பாதைகளிலேயே நிகழ்ச்சிகள் செல்லும் என்ற நம்பிக்கையில் பெரும் சத்தத்துடன் பிரகடனப்படுத்தி வருகிறார்கள். அதன்மூலம் ''குருச்சேவ் இல்லாமலேயே குருச்சேவிசம்'' நிலவ வேண்டும் என்று கருதுகிறார்கள். அவர்களுடைய பாதை ஒரு முட்டுச் சந்து என்று திட்டவட்டமாகக் கூற முடியும்.

பல்வேறு சிந்தாந்தப் போக்குகளும் அவற்றின் பிரதிநிதிகளும் தவிர்க்க முடியாதபடி அரங்கிற்கு வந்து தங்கள் பங்கை ஆற்ற இடைவிடாது முயற்சிக்கிறார்கள். எந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்பதைத் தீர்மானிப்பது முற்றிலும் அவர்களுடைய விசயம், ஆனால் ஒரு விசயத்தில் எமக்கு ஒரு சிறிதும் சந்தேகமில்லை.

வரலாறு மார்க்சிய-லெனினியத்தால் கண்டறியப்பட்ட விதிகளின்படிதான் முன்னேறும்; அது அக்டோபர் புரட்சி பாதையில்தான் வீறுநடை போட்டு முன்னேறும்.

மாபெரும் சோசலிச சாதனைகள், லெனினால் தோற்றுவிக்கப்பட்ட முதலாவது சோசலிச அரசின் பெருமை, மார்க்சிய-லெனினியத்தின் தூய்மை, பாட்டாளி வர்க்கப் புரட்சிகர இலட்சியத்தின் வெற்றிகரமான முன்னேற்றம் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் புதிய பங்களிப்புகளைச் செய்வதற்கு புரட்சிகரப் பாரம்பரியங்களைக் கொண்ட மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும் மாபெரும் ரசிய மக்களும் தகுதிவாய்ந்தவர்களே என்பதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லை.

சர்வதேச கம்யூனிச இயக்கம், மார்க்சியம்-லெனினியம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவற்றின் அடிப்படையில் அய்க்கியப்படட்டும்!

லெனினியமா,
சமூக-ஏகாதிபத்தியமா ?

லெனினியமா, சமூக-ஏகாதிபத்தியமா?

மாபெரும் லெனின் பிறந்த நூறாவது ஆண்டு நிறைவின் நினைவாக "மக்கள் தினசரி", "செங்கொடி" "விடுதலைப்படை நாளிதழ்" ஆசிரியர் குழுக்கள். (ஏப்ரல் 22, 1970)

1. லெனினியப் பதாகை வெல்லப்பட முடியாதது

இவ்வாண்டு ஏப்ரல் 22-ந் தேதி, மாபெரும் லெனின் பிறந்த நூறாவது ஆண்டு நிறைவு தினமாகும்.

உலகம் முழுவதிலுமுள்ள மார்க்சிய-லெனினியவாதிகள், பாட்டாளி வர்க்கம், புரட்சிகர மக்கள் ஆகியோர் மாபெரும் லெனின் மீது தாம் கொண்டுள்ள அதியுயர்ந்த மதிப்புடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத்தினத்தை நினைவுபடுத்துகிறார்கள்.

மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் மறைவுக்குப் பின்னர் லெனின் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் மாபெரும் முதல்வராகவும்

உலகம் முழுவதிலுமுள்ள பாட்டாளி வர்க்கத்தினதும் அடக்கியொடுக்கப் பட்ட மக்கள் அனைவரினதும் மாபெரும் ஆசானாகவும் விளங்கினார்.

லெனின் பிறந்த ஆண்டுக்கு அடுத்த ஆண்டான 1871-ல் பாரீஸ் கம்யூன் கிளர்ச்சி வெடித்தெழுந்தது. இது முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறியப் பாட்டாளி வர்க்கம் செய்த முதலாவது முயற்சியாகும். லெனின் தனது புரட்சி நடவடிக்கைகளை ஆரம்பித்தபோது, அதாவது 19-ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், உலகம் ஏகாதிபத்தியத்தினதும் பாட்டாளி வர்க்கப் புரட்சியினதும் சகாப்தத்துக்குள் பிரவேசித்தது. ஏகாதிபத்தியத்துக்கும் விதவிதமான சந்தர்ப்பவாதத்துக்கும் எதிரான போராட்டத்தில், குறிப்பாக இரண்டாவது அகிலத்தின் திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தில், லெனின் மார்க்சியத்தைக் கையேற்று. பாதுகாத்து, வளர்த்து, அதைப் புதியதொரு கட்டத்துக்கு, அதாவது லெனினிய கட்டத்துக்கு உயர்த்தினார். ஸ்டாலின் கூறியது போலவே, ''லெனினியம் என்பது ஏகாதிபத்தியத்தினதும் பாட்டாளி வக்கப் புரட்சியினதும் சகாப்தத்தின் மார்க்சிசமாகும்.''[1]

லெனின் ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளைப் பகுத்தாராய்ந்து, அதன் விதியை வெளிப்படுத்தி, ஏகாதிபத்தியத்தின் சகாப்தத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிய வரிசை வரிசையான முக்கியமான பிரச்சினைகளுக்கும், சோசலிசம் ''முதன் முதலில் ஒரு நாட்டில் அல்லது சில நாடுகளில் வாகை சூடும்''[2] என்ற பிரச்சினைக்கும் தீர்வு கண்டார். அவர் முதலாளிவர்க்க ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் தலைமையை மேற்கொள்ளவேண்டும் என்ற சிந்தனையை விளக்கிக் கூறியதோடு, 1905-ல் புரட்சி என்ற பொது ஒத்திகையை நடத்தவும் ரசியப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்கினார். அவர் தலைமை தாங்கிய மகத்தான அக்டோபர் சோசலிசப் புரட்சி, பழைய முதலாளித்துவ உலகத்திலிருந்து புதிய சோசலிச உலகத்துக்குச் செல்லும்

---

1. *ஜே. வி. ஸ்டாலின், ''லெனினியத்தின் அடிப்படைகள் பற்றி'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 6, பக்கம். 63.*

2. *வி. இ. லெனின், ''பாட்டாளிவர்க்கப் புரட்சியின் இராணுவ வேலைத்திட்டம்'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 23, பக்கம் 75.*

அடிப்படை மாற்றத்தை நிறைவேற்றி, மனிதகுல வரலாற்றில் புதிய யுகத்தைத் திறந்து வைத்தது.

லெனின் தத்துவரீதியிலும் நடைமுறையிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சி இலட்சியத்துக்கு வழங்கிய சாதனைகள் மிகவும் மகத்தானவை.

லெனினின் மறைவுக்குப் பின், ஸ்டாலின் உள்நாட்டு வெளிநாட்டு வர்க்க எதிரிகளுக்கு எதிரான போராட்டத்திலும் கட்சியிலிருந்த வலது, ''இடது'' சந்தர்ப்பவாதிகளுக்கு எதிரான போராட்டத்திலும் லெனினிய இலட்சியத்தை உயர்த்திப்பிடித்து பாதுகாத்தார். சோசலிசப் பாதையில் தொடர்ந்து முன்னேறி, மகத்தான வெற்றிகளைப் பெறுவதில் ஸ்டாலின் ரசியமக்களுக்கு தலைமை தாங்கினார். இரண்டாவது உலகயுத் தத்தில், ஸ்டாலின் தலைமையின் கீழ் ரசிய மக்கள் பாசிச ஆக்கிரமிப்பை வீழ்த்திய பிரதான சக்தியாக விளங்கி, மனிதகுல வரலாற்றில் என்றுமே அழியாத மகத்தான பங்கை செலுத்தினார்கள்.

சீனக் கம்யூனிஸ்டுகளும் சீன மக்களுமாகிய நாம் லெனினியத்தி லிருந்துதான் நமது விடுதலைக்கான பாதையைக் கண்டுபிடித்தோம் என்பதை ஒருபோதும் மறந்துவிடமாட்டோம். ''அக்டோபர் புரட்சியின் பீரங்கி முழக்கம், நமக்கு மார்க்சிய - லெனினியத்தைக் கொண்டு வந்தது'' என்றும், ''சீனர் மார்க்சிய - லெனினியம் என்ற சர்வவியாபகமாக நடைமுறைப்படுத்தப்படக்கூடிய இந்த உண்மையைக் கண்டுபிடித்தார்கள்; சீனாவின் தோற்றம் மாற ஆரம்பித்தது'',[1] என்றும் தோழர் மாசேதுங் கூறுகிறார். ''சீன மக்கள் சீனப் புரட்சியை மகத்தான அகடோபர் சோசலிசப் புரட்சியின் தொடர்ச்சி என எப்பொழுதும் கருதுகிறார்கள்''[2] என்றும் அவர் சுட்டிக்காட்டு கிறார்.

தோழர் மாசேதுங் மார்க்சிய - லெனினிய கோட்பாட்டை நடை முறைப்படுத்தி, சீனப் புரட்சியின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ஆக்க பூர்வமாகத் தீர்வு கண்டார் உலகப்பாட்டாளி வர்க்கப்புரட்சி வரலாற்றில் மிகவும் நீண்டகால, தீவிரமான, கடினமான, சிக்கலான புரட்சிப் போராட்டங்களையும், புரட்சியுத்தங்களையும் நடத்தி, கிழக்கிலுள்ள

---

1. மாசேதுங், ''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் பற்றி'', தேர்வு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 4. பக்கம் 1475, 1476.
2. தலைவர் மாவோ அவர்களின் 1957, ஏப்ரல் 17-ந் தேதிய உரை.

அந்தப்பெரிய நாடான சீனாவில் மக்கள் புரட்சி வெற்றி பெறுவதில் சீன மக்களுக்கு தலைமை தாங்கினார். அது அக்டோபர் புரட்சிக்கு பிறகு உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் ஒரு மாபெரும் வெற்றியாகும்.

தற்போது, நாம் உலகப் புரட்சியின் மகத்தான புதியதொரு சகாப்தத்தில் வாழ்கிறோம். லெனின் காலத்திலிருந்து சர்வதேசிய சூழ்நிலைமைகளில் உலகை அதிரச் செய்யும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. லெனினின் புரட்சிகர போதனைகள் சரியானவை என்பதையும், லெனினியப் பதாகை வெல்லற்கரியது என்பதையும் முழு உலக வரலாற்றினதும் வளர்ச்சி நிரூபித்துள்ளது.

ஆனால் வரலாறு தனக்கே உரிய மாற்றங்களையும் திருப்பங்களையும் கொண்டது. எங்கெல்சின் மறைவுக்குப் பின் பெர்ன்ஷ்டைன்-காவுட்ஸ்கி திரிபுவாதம் தோன்றியது போலவே, ஸ்டாலின் மறைவுக்குப் பின், குருச்சேவ்-பிரஷ்னேவ் திரிபுவாதமும் தோன்றியது.

குருச்சேவ் அதிகாரத்துக்கு வந்த 11 ஆண்டுகளுக்குப் பின்பு திரிபுவாத கும்பலுக்குள் ஒரு பிளவு ஏற்பட்டது. குருச்சேவிற்கு பதிலாக பிரஷ்னேவ் அதிகாரத்திற்கு வந்தார். அவர் பதவிக்கு வந்து 5 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்த பிரஷ்னேவ்தான் இப்பொழுது ரசியாவில் லெனின் பிறந்த நூறாவது ஆண்டு 'நினைவு' விழாவை நடத்துகிறார்.

''ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் மத்தியில் புகழ்பெற்ற புரட்சிகரத் தலைவர்கள் மறைந்த பின்னர், அவர்களுடைய எதிரிகள் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை ஏமாற்றுவதற்காக அந்த தலைவர்களின் பெயர்களைப் பயன்படுத்த முயல்வது வரலாற்றில் எப்பொழுதும் நிகழ்கிறது''[1] என்று லெனின் ஒருமுறை கூறினார்.

துரோகி பிரஷ்னேவும் அவர் போன்றோரும் மாபெரும் லெனினுக்கு எதிராக இதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சொல்லிக்கொள்ளப்படும் ''லெனின் பிறந்த நூறாவது ஆண்டு விழாவிற்கான ஆய்வுரை''யில் அவர்கள்

---

1. *வி. இ. லெனின், ''ஏகாதிபத்தியமும் சோசலிச இயக்கத்தில் பிளவும்'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 23, பக்கம் 117.*

பாட்டாளி வர்க்கப் புரட்சி ஆசானான லெனினுடைய மாபெரும் மதிப்பை வெட்கங்கெட்ட முறையில் உருச்சிதைத்து, அவர்களுடைய திரிபுவாதக் குப்பையை லெனினியமாகப் புகுத்தினார்கள். லெனினை ''நினைவுபடுத்து''வதாக அவர்கள் பாசாங்கு செய்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் தமது சமூக-ஏகாதிபத்தியம், சமூக-பாசிசம், சமூக-இராணுவ வெறி ஆகியவற்றை முன் தள்ளுவதற்கு லெனினின் பெயரை பயன்படுத்துகிறார்கள். இது லெனினுக்கு எவ்வளவு பெரிய அவமானம்!

லெனினியத்துக்கு ரசியத் திரிபுவாதத் துரோகிகள் செய்த துரோகத்தனத்தை முற்றுமுழுதாக அம்பலப்படுத்துவது, ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியத்தின் வர்க்க இயல்பை அம்பலப் படுத்துவது, முதலாளித்துவ ஏகாதிபத்தியம் போலவே சமூக—ஏகாதிபத்தியமும் தவிர்க்க முடியாதபடி அழிந்துவிடும் என்ற வரலாற்று விதியைச் சுட்டிக் காட்டுவது, அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் ரசிய திரிபுவாதத்துக்கும் சகல நாட்டு பிற்போக்குக்கும் எதிரான உலக மக்களின் மகத்தான போராட்டத்தை மேலும் முன் தள்ளுவது ஆகியவையே, நமது தற்போதைய போராட்டக் கடமைகளாகும். மாபெரும் லெனின் பிறந்த நூறாவது ஆண்டு நிறைவை நாம் நினைவு படுத்துவதன் பெரும் முக்கியத்துவம் இதில்தான் அடங்கியுள்ளது.

2. பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் லெனினியத்தின் அடிப்படைப் பிரச்சினை

சந்தர்ப்பவாதத்துக்கும் திரிபுவாதத்துக்கும் எதிரான தனது போராட்டத்தில், லெனின் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டியதாவது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அடிப்படைப் பிரச்சினை என்பது, பலாத்காரத்தால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, முதலாளிவர்க்க அரசு இயந்திரத்தை நொறுக்கி, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதாகும்.

'' 'உலர்ந்து உதிர்ந்து விடும் போக்கில்', அது (முதலாளித்துவ அரசு) பாட்டாளி வர்க்க அரசால் (பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்) ஒதுக்கப்பட முடியாது. பொது விதியின்படி, பலாத்காரப் புரட்சி மூலம்தான் அது நிகழமுடியும்''[1] என்று லெனின் கூறினார்.

---

1. வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'', தேர்வு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 3, பக்கம் 179,

அவர் மேலும் கூறினார்: ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சின் கோட்பாடு, வரலாற்றில் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப்பாத்திரம் சம்பந்தப்பட்ட அவரின்போதனைகள் அனைத்துடனும் பிரிக்கப்பட முடியாதபடி இணைந்து பிணைந்திருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே இந்தப் பாத்திரத்தின் இறுதி முடிவாகும்''[1]

லெனின் தலைமை தாங்கிய அக்டோபர் புரட்சியின் வெற்றி பாட்டாளிவர்க்கப் புரட்சியும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமும் பற்றிய மார்க்சிய கோட்பாட்டின் வெற்றியாகும். அக்டோபர் புரட்சியின் பாதை, பாட்டாளிவர்க்கப் பலாத்காரப் புரட்சி மூலம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை வென்றெடுக்கும் பாதையாகும்.

அக்டோபர் புரட்சியின் போது லெனின் புதிய புரட்சிகர நடைமுறையைத் தொகுத்து, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிய கோட்பாட்டை மேலும் வளர்த்தார். சோசலிசப் புரட்சி ''உக்கிரமான வர்க்க மோதல்கள் நிறைந்த ஒரு முழுச் சகாப்தமாக அமைகிறது''[2] என்றும், ''இந்தச் சகாப்தம் முடிவடையும் வரை, சுரண்டல்காரர் தவிர்க்கமுடியாதபடி மீட்சிக்கான நம்பிக்கையை ஆவலுடன் வளர்த்துக் கொண்டிருப்பதோடு, இந்த நம்பிக்கை மீட்சிக்கான முயற்சிகளாகவும் மாற்றப்படுகிறது''[3] என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எனவே, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், ''முதலாளிவர்க்கத்தைத் தூக்கியெறிந்துள்ள பாட்டாளிவர்க்கத்துக்கு மட்டுமல்ல, முதலாளித்துவத்துக்கும் 'வர்க்கமற்ற சமுதாய'த்துக்கும் அதாவது கம்யூனிசத்துக்கும் இடையிலுள்ள வரலாற்றுக் காலகட்டம் முழுவதுக்கும் அவசியம்''[4] என அவர் வாதாடினார்.

இன்று, நாம் லெனின் பிறந்த நூறாவது ஆண்டு நிறைவை நினைவு படுத்தும் போது, லெனினுடைய இந்த ஒளிவீசும் சிந்தனைகளை மீண்டும் படிப்பது, மிகப்பெரும் நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

---

1. வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'' தேர்வு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 3, பக்கம் 184.

2. வி. இ. லெனின், ''சோசலிசப் புரட்சியும் தேசிய சுய-நிர்ணய உரிமையும்'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 22, பக்கம் 138.

3. வி. இ. லெனின். ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும்'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 28, பக்கம் 235.

4. வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'', தேர்வு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 3, பக்கம் 192.

பாட்டாளிவர்க்கப் புரட்சி, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்ற அடிப்படைப் பிரச்சினையிலேயே ரசியத் திரிபுவாதக் துரோகக்கும்பல், லெனினியத்துக்கும் அக்டோபர் புரட்சிக்கும் துரோகம் செய்துள்ளது என்பது நன்றாக தெரிந்த ஒன்றுதான்.

குருச்சேவின் திரிபுவாத சுயரூபம் அம்பலப்படத் தொடங்கிய போதே, தோழர் மாசேதுங் கூர்மையாகச் சுட்டிக்காட்டியதாவது: ''இரண்டு 'வாள்கள்' உண்டு; ஒன்று லெனின், மற்றொன்று ஸ்டாலின் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது, ஸ்டாலின் என்ற வாள், ரசிய தலைவர்களால் வீசியெறியப்பட்டுவிட்டது.'' ''லெனின் என்ற வாளைப்பொறுத்தவரை, அதுவும் இப்பொழுது ரசியாவின் சில தலைவர் களால்குறிப்பிட்ட அளவு வீசியெறியப்பட்டுள்ளதா? என்னுடைய கருத்துப் படிஅதுவும் கணிசமான அளவு வீசியெறியப்பட்டுள்ளது. அக்டோபர் புரட்சி இன்னும் செல்லுபடியாகிறதா? அது இன்னும் அனைத்து நாடுகளுக்கும் முன்னுதாரணமாகத் திகழமுடியுமா? பாராளுமன்றப் பாதையின் மூலம் அரசியல் அதிகாரத்தைப் பெறுவது சாத்தியமாகும் என்று ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் குருச்சேவ் முன்வைத்த அறிக்கை கூறுகிறது. அதாவது எல்லா நாடுகளும் அக்டோபர் புரட்சியிலிருந்து இனிமேலும் கற்றுக் கொள்ளத் தேவை யில்லை. இந்த வழி திறக்கப்பட்டவுடனே, லெனினியம் முற்றமுழுக்க தூக்கியெறியப்பட்டுவிட்டது''[1].

3. குருச்சேவ், பிரஷ்னேவ் துரோக கும்பலின் எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பு

உலகின் முதலாவது சோசலிச நாடான ரசியாவில், முதலாளித்துவ மீட்சி எப்படி நடந்தேறியது? அது சமூக-ஏகாதிபத்தியமாக எப்படி மாற முடிந்தது? நாம் மார்க்சிய-லெனினியக் கருத்தை, குறிப்பாகப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது பற்றிய தோழர் மாசேதுங் சிந்தனையைக் கொண்டு, இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து பார்த்தால், அது பிரதானமாக ரசியாவில் வர்க்கப் போராட்டத்தின் ஒரு விளைவாகும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். ரசியாவில், கட்சியில் அதிகாரத்தில் இருந்து முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் கட்சி மற்றும் அரசு தலைமையை அபகரித்ததன் விளைவாகும். அதாவது, ரசியாவின் முதலாளி வர்க்கம் பாட்டாளிவர்க்க அரசியல்

---

1. *சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 8-வது மத்திய கமிட்டியின் 2-வது பிளீனக் கூட்டத்தில் தலைவர் மாவோ ஆற்றிய உரை, 1956, நவம்பர் 15.*

அதிகாரத்தை அபகரித்ததன் விளைவாகும். அதே வேளையில், அது உலக ஏகாதிபத்தியம் அழிவிலிருந்து தன்னைக் காப்பாற்றுவதற்காக, ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பலின் மூலம் ரசியாவில் ''சமாதான பரிணாம'' கொள்கையை முன் நடத்தியுள்ளதன் விளைவாகும் என்றும் புரிந்து கொள்ள முடியும்.

''சோசலிச சமுதாயம் ஒரு கணிசமான அளவு நீண்ட வரலாற்று காலகட்டமாகும். சோசலிசம் என்ற வரலாற்றுக் காலகட்டத்தில், வர்க்கங்கள், வர்க்க முரண்பாடுகள், வர்க்கப் போராட்டம் ஆகியவை இன்னும் நிலவுகின்றன; சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்கும் இடையில் போராட்டம் நிலவுகின்றது; முதலாளித்துவ மீட்சி என்ற ஆபத்து நிலவுகிறது''[1] என்று தோழர் மாசேதுங் சுட்டிக் காட்டுகின்றார்.

சோசலிச சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம் இன்னும் அரசியல் அதிகாரம் என்ற பிரச்சினையில்தான் செறிந்து நிற்கிறது. தோழர் மாசேதுங் சுட்டிக்காட்டுவதாவது: ''கட்சி, அரசாங்கம், இராணுவம் ஆகியவற்றிலும் பல்வேறு கலாச்சாரத் துறைகளிலும் ஊடுருவியுள்ள முதலாளி வர்க்கப் பிரதிநிதிகள், ஒரு எதிர்ப்புரட்சித் திரிபுவாதிகள் கூட்டமாகும். நிலைமைகள் பக்குவமடைந்ததும், அவர்கள் அரசியல் அதிகாரத்தை அபகரித்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை முதலாளி வர்க்க சர்வாதிகாரமாக மாற்றிவிடுவர்.''[2]

அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் ரசியாவில், முதலாளி வர்க்கம் தூக்கியெறியப்பட்டபோதிலும், வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் தொடர்ந்து நீண்டகாலமாக நிலவியுள்ளன. டிராட்ஸ்கி, ஜினோவியேவ், காமனேவ், ராதெக், புஹாரின், ரிகோவ் போன்ற கட்சிக்குள் ஊடுருவிய எதிர்ப்புரட்சி முதலாளிவர்க்கப் பிரதிநிதிகள் கும்பலை ஸ்டாலின் ஒழித்துக்கட்டினார். வர்க்கப் போராட்டம் எப்பொழுதும் கூர்மையாக நடைபெற்று வந்ததையும் முதலாளித்துவ மீட்சி என்ற ஆபத்து எப்பொழுதும் நிலவி வந்ததையும் இது காட்டியது.

---

1. *1962, ஆகஸ்டில் பெத்தைஹோவில் நடைபெற்ற மத்திய கமிட்டி வேலை மாநாட்டிலும், செப்டம்பரில் நடைபெற்ற கட்சியின் 8-வது மத்திய கமிட்டியின் 10-வது பிளீனக் கூட்டத்திலும் தலைவர் மாசேதுங் ஆற்றிய உரைகள்.*
2. *சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் ''சுற்றறிக்கை'', மே 16, 1966.*

முதலாவது பாட்டாளி வர்க்கசர்வாதிகார நாடாக ரசியா இருந்ததால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்தி, முதலாளித்துவ மீட்சியைத்தவிர்ப்பது எப்படி என்பது பற்றிய அனுபவம் அதற்கு குறைவாயிருந்தது. இத்தகைய நிலைமைகளில், ரசிய கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பதுங்கியிருந்து அதிகாரத்தில் இருந்த முதலாளித்துவப் பாதையாளரான குருச்சேவ், ஸ்டாலின் மறைவுக்குப்பின் விஷம் கக்கும் முறையில் ஸ்டாலினை அவதூறு செய்யும் ''ரகசிய அறிக்கை'' ஒன்றைத் திடீர்த் தாக்குதல் தொடுக்கும் முறையில் வெளியிட்டு, பல்வகை வஞ்சகத்தனமான சூழ்ச்சி நடவடிக்கைகளையும் கையாண்டு, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அரசு அதிகாரத்தை அபகரித்தார். இது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை முதலாளி வர்க்க சர்வாதிகாரமாக மாற்றிய எதிர்ப் புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பாகும்; சோசலிசத்தைத் தூக்கியெறிந்து, முதலாளித்துவத்துக்குப் புத்துயிர் அளித்த எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பாகும்.

இந்த எதிர்ப்புரட்சி ஆட்சிக்கவிழ்ப்பில் பிரஷ்னேவ் குருச்சேவின் கூட்டு சதிகாரனாக விளங்கினார். பின்னர் குருச்சேவிற்குப் பிறகு பிரஷ்னேவ் பதவிக்கு வந்தார். அவரது பதவியேற்பு, சாராம்சத்தில் குருச்சேவ் எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பின் தொடர்ச்சியாகும். பிரஷ்னேவ் இரண்டாவது குருச்சேவே.

தோழர் மாசேதுங் சுட்டிக்காட்டியுள்ளதாவது: ''திரிபுவாதம் அதிகாரத்துக்கு வருவது, முதலாளி வர்க்கம் அதிகாரத்துக்கு வருவது என்று அர்த்தப்படும்.''[1] ''இன்றைய ரசியாவில் முதலாளி வர்க்க சர்வாதிகாரம், பெரும் முதலாளி வர்க்க சர்வாதிகாரம், ஜெர்மன் பாசிச ரக சர்வாதிகாரம், ஹிட்லர் ரக சர்வாதிகாரம் நடத்தப்படுகின்றது.''[2]

தோழர் மாசேதுங் கூறிய இந்த விவேகமான ஆய்வுரை, ரசிய திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியத்தின் வர்க்க சாராம்சத்தையும் சமூக மூலாதாரங்களையும் மிகவும் ஆழமாக எடுத்துக்காட்டி, அதன் பாசிச இயல்பைச் சுட்டிக்காட்டுகிறது.

ரசிய திரிபுவாதத் துரோகக் கும்பல் ரசியாவில் கட்சி, மற்றும் அரசு அதிகாரத்தை அபகரித்த பின்னர் ரசிய முதலாளி வர்க்கத்தின் சலுகை

---

1. *1964 ஆகஸ்டில் தலைவர் மாசேதுங் அவர்களின் ஒரு விவாதம்.*
2. *1964 மே 11-ந் தேதி தலைவர் மாசேதுங் அவர்களின் ஒரு விவாதம்.*

பெற்ற சமூகத் தட்டு, தன் அரசியல், பொருளாதார அதிகாரத்தைப் பெரிதும் விரிவுபடுத்தி, கட்சியிலும், அரசாங்கத்திலும், இராணுவத்திலும் பொருளாதார கலாச்சாரத் துறைகளிலும் ஆதிக்க நிலையைக் கைப்பற்றி உள்ளது அத்துடன், இந்தச் சமூகத்தட்டின் மத்தியிலிருந்து, முழு அரசு இயந்திரத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தி சமூகச் செல்வங்கள் முழுவதையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்துவ ஏகபோக முதலாளி வர்க்கம், அதாவது புதிய ரக பெரும் முதலாளி வர்க்கம் தோன்றியுள்ளது.

இந்தப் புதிய ரக அதிகாரத்துவ ஏகபோக முதலாளி வர்க்கம், தன் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி, சோசலிச உடைமை முறையை அதிகாரத்திலுள்ள முதலாளித்துவப் பாதையாளரின் உடைமை முறையாகவும்; சோசலிசப் பொருளாதாரத்தை முதலாளித்துவப் பொருளாதாரமாகவும்; அரசாங்க ஏகபோக முதலாளித்துவப் பொருளாதாரமாகவும் மாற்றியுள்ளது. அது ''அரசு'' என்ற பெயரில், கட்டுக்கடங்காத முறையில் அரசாங்க கருவூலத்தை சூறையாடி எல்லா சாத்தியமான வழிகளிலும் ரசிய மக்களின் உழைப்பின் பலன்களை தன் இச்சைப்படி கையாடுகிறது. ஆடம்பர வாழ்க்கையிலும் காம வெறியிலும் மூழ்கி, கொடுங்கோலாட்சி செய்து மக்களை அடக்கியொடுக்குகிறது.

இந்தப் புதிய ரக அதிகாரத்துவ ஏகபோக முதலாளி வர்க்கம் மீட்சிக்கான நம்பிக்கையை மீட்சிக்கான முயற்சிகளாக மாற்றியுள்ள முதலாளி வர்க்கமாகும். அது அக்டோபர் புரட்சியின் வீரஞ்செறிந்த புதல்வர்களை அடக்கியொடுக்கி, ரசியாவின் சகல தேசிய இன மக்கள் மீதும் மீண்டும் சவாரி செய்து, தன் சிறிய எதிர்ப்புரட்சி ஜாரிச தர்பாரை அமைத்துள்ளது. எனவே, அது கடைக்கோடிப் பிற்போக்கானது; அது மக்கள் மீது மிகப் பெரும் பகைமை பாராட்டி, மக்களை அச்சுறுத்தி வருகிறது.

இந்தப் புதிய ரக அதிகாரத்துவ ஏகபோக முதலாளி வர்க்கம், வீழ்ச்சி அடைந்த இதர எல்லாப் பிற்போக்கு வர்க்கங்களைப் போல, தனக்குள்ளே பலவிதமான முரண்பாடுகளால் துளைக்கப்படுகின்றது. தாம் அபகரித்த அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கான வீணான முயற்சிகளில் இந்த வர்க்கத்தின் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் கள்ளக் கூட்டுச் சேரும் அதே வேளையில், ஒருவருக்கு எதிராக ஒருவர் சூழ்ச்சி செய்து, ஒருவருடன் ஒருவர் சண்டையிடவும் செய்கிறார்கள். அவர்களது நிலைமை எவ்வளவுக்குக் கஷ்டமாகின்றதோ அவ்வளவுக்கு அவர்களுக்கிடையே வெளிப்படையான, தலைமறைவான சண்டைச்சரவுகள் தீவிரமாகின்றன.

இந்தப் புதிய ரக அதிகாரத்துவ ஏகபோக முதலாளி வர்க்கம், அதிகபட்ச இலாபத்தைப் பறித்தெடுத்து, தன் பிற்போக்காட்சியைப் பேணிக்காக்கும் பொருட்டு தன் சொந்த நாட்டு மக்களையே சுரண்டி அடக்கி ஒடுக்குவது மட்டுமல்லாமல், நிச்சயம் திமிர் கொண்ட ஆக்கிர மிப்பு மற்றும் விஸ்தரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, உலகை மறு பங்கீடு செய்யும் உலக ஏகாதிபத்திய அணிகளில் சேர்ந்து, மிகவும் கொடூர மான சமூக-ஏகாதிபத்தியக் கொள்கையை முன் நடத்தவும் வேண்டும்.

இந்தப் புதிய ரக அதிகாரத்துவ ஏகபோக முதலாளி வர்க்கம், ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியத்தின் வர்க்க அடிப்படையாகும். இப்பொழுது, பிரஷ்னேவ்தான் இந்த வர்க்கத்தின் பிரதம பிரதிநிதி யாவார். அவர் குருச்சேவின் திரிபுவாதத்தை வெறித்தனமாக முன் நடத்தி வளர்த்துள்ளதோடு குருச்சேவ் அதிகாரத்தில் இருந்த காலத்தில் ஏற்கனவே ஆரம்பமாகிய, முதலாளித்துவ மீட்சியிலிருந்து சமூக-ஏகாதி பத்தியத்துக்கான பரிணாமத்தை நிறைவேற்றிக் கொண்டுமிருக்கிறார்.

பிரஷ்னேவ் பதவிக்கு வந்தபின்னர், சொல்லிக்கொள்ளப்படும் ''புதிய பொருளாதார அமைப்புமுறை''யைப் பன்முகங்களிலும் முன்நடத்தி, முதலாளித்துவ லாபக் கோட்பாட்டைச் சட்ட வடிவத்தில் அமைத்து, உழைப்பாளி மக்கள் மீதான அதிகாரத்துவ ஏகபோக குழுவின் சுரண்டலைத் தீவிரப்படுத்துகிறார். அவரும் அவர் போன்றோரும் சமூக-ஏகாதிபத்தியத்தின் படைக்கல விஸ்தரிப்பு யுத்தத் தயாரிப்புகளின் தேவைகளுக்காக, மக்களின் வாழ்வையோ சாவையோ பொருட்படுத் தாமல், அவர்களிடம் கடும் வரிகளை வசூலித்து, ''வெண்ணெய்க்குப் பதில் பீரங்கிகள்'' என்ற ஹிட்லரின் கொள்கையை அமுல்படுத்தி, தேசிய பொருளாதாரத்தின் இராணுவமயமாக்கத்தை துரிதப்படுத்து கிறார்கள்.

ரசிய திரிபுவாதத் துரோகக் கும்பலின் இந்த முறைகேடான செயல்கள், சமூக உற்பத்தி சக்திகளுக்கு மிகப்பெரும் அழிவைக் கொண்டு வந்து, தொழிற்துறை வீழ்ச்சி, விவசாயம் தாழ்ந்து கொண்டுபோதல், கால்நடைகளின் தொகை குறைதல், பண வீக்கம், சப்ளைகளின் பற்றாக்குறை, அரசாங்கச் சந்தைகளில் விற்பனைப் பொருட்களின் என்றுமில்லாத் தட்டுப்பாடு, உழைப்பாளி மக்களின் வளர்ந்து வரும் வறுமை போன்ற பாரதூரமான தீங்குகளை விளைவித்துள்ளன. ரசியத் திரிபுவாதத் துரோகிகள், கடந்த பல பத்தாண்டுகளில் ரசிய மக்கள் அய ராது உழைத்துச் சேகரித்த பெரும் தொகையான செல்வங்களை விரயம் செய்துள்ளது மாத்திரமல்ல, இரண்டாவது உலக யுத்தத்தில் தோற்கடிக் கப்பட்ட நாடான மேற்கு ஜெர்மனியிடம் கடன்களுக்கு அடிமைத்

தனமாகக் கெஞ்சியுள்ளார்கள். மேலும் அவர்கள் நாட்டின் இயற்கைச் செல்வாதாரங்களை விற்று, ஜப்பானிய ஏகபோக மூலதனத்தை சைபிரியாவுக்குள் வரவழைக்கும் அளவுக்கும் சென்றுள்ளார்கள். இன்றைய ரசியப் பொருளாதாரம் ஏற்கனவே விடுவிக்க முடியாத நெருக்கடியில் சிக்கியுள்ளது. ரசிய மக்களின் நண்பர்கள் என்ற முறையில், சீன மக்களாகிய நாங்களும் உலக மக்களும், லெனினியத்தின் பிறந்தகத்துக்கு இவ்வளவு கூடுதலான அழிவையும் அவமானத்தையும் கொண்டு வந்து உள்ள ரசிய திரிபுவாதத் துரோகிகள்மீது எல்லையற்ற கோபாவேசமடைகிறோம்; முதலாளித்துவ அமைப்பு முறை பன்முகங்களிலும் மீட்டெடுக்கப்பட்ட நிலைமையில் சொல்லொணாத் துன்ப துயரங்களால் அவதிப்படும் பரந்துபட்ட ரசிய மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

''பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் ரசியாவில் இனிமேலும் அவசியமில்லை'' என்றும், ரசியா ''மக்கள் அனைவரினதும் அரசை''[1] பெற்றிருக்கிறது என்றும் ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் ஒருமுறை கூறியது. ஆனால் இப்பொழுது ''மக்கள் அனைவரினதும் அரசு பாட்டாளி வர்க்க சர்வாதிகார இலட்சியத்தைத் தொடர்கிறது''[2] என்றும், ''மக்கள் அனைவரினது அரசும்'' ''பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசும்'' ''ஒரே ரக''[3] த்தைச் சேர்ந்தவை என்றும் கூறி, அது தனக்குத் தானே கன்னங்களில் அறைந்து கொள்கிறது. மேலும் இக் கும்பலிலுள்ளவர்கள் ''கட்சியின் தலைமையைப் பலப்படுத்துதல்'', ''கட்டுப்பாட்டைப் பலப்படுத்துதல்'', ''மத்தியத்துவத்தைப் பலப்படுத்துதல்'' என்பனவற்றையும் இன்ன பிறவற்றையும் பற்றி பெரும் ஆரவாரம் செய்கிறார்கள். ''மக்கள் அனைவரினதும் அரசு'' அதே வேளையில், ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' அடிப்படையில் ஒன்றுக்கொன்று நேர்விரோதமான இவ்விரண்டு கருத்துக்களையும் அவர்கள் ஒன்றுசேர்ப்பது பொது மக்களை ஏமாற்றி, பெரும் முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை மூடிமறைப்பதற்கேயன்றி வேறெதற்கும் அல்ல. அவர்களுடைய கூறப்படும் ''கட்சித் தலைமை''யின் அர்த்தம், ஒரு சில சமூக-பாசிஸ்ட்கள் பரந்துபட்ட கட்சி உறுப்பினர்

---

1. *ரசியத் திரிபுவாத ''22-வது காங்கிர''சில் அங்கீகரிக்கப்பட்ட ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத் திட்டம்,''*

2. *ரசியத் திரிபுவாதத்தின் ''விலாடிமிர் இலியிச் லெனின் பிறந்த நூறாவது ஆண்டு நிறைவை நினைவுபடுத்துவது பற்றிய உருவரைக்குறிப்பு''.*

3. *ரசியத் திரிபுவாத ''பிராவ்தா.'' மார்ச் 5, 1970.*

களுக்கும் பொதுமக்களுக்கும் எதிராக அரசியற் கட்டுப்பாட்டை நடத்துவதாகும். அவர்களுடைய சொல்லிக்கொள்ளப்படும் ''கட்டுப்பாட்டின்'' அர்த்தம் அவர்களுடைய ஆட்சியைப் பற்றி அதிருப்தி தெரிவிக்கும் மக்கள் அனைவரையும் அடக்கி ஒடுக்குவதாகும். அவர்களுடைய சொல்லிக்கொள்ளப்படும் ''மத்தியத்துவ''த்தின் அர்த்தம், அரசியல், பொருளாதார, இராணுவ அதிகாரத்தை அவர்களின் கரங்களில் மேலும் மத்தியத்துவப்படுத்துவதாகும். ஒரு வார்த்தையில் கூறினால் அவர்கள் பாசிச சர்வாதிகாரத்தைப் பலப்படுத்தி, ஆக்கிரமிப்பு யுத்தங்களைத் தயார் செய்யும் நோக்கத்துக்காக இந்தப் பெயர்ப் பலகைகள் எல்லாவற்றையும் தொங்க விட்டுள்ளார்கள்.

லெனினுக்கும் அக்டோபர் புரட்சிக்கும் துரோகம் செய்யும் தன் பிற்போக்காட்சியை நிலைநிறுத்த, உள்நாட்டு வெளிநாட்டு நெருக்கடிகளில் சிக்கியுள்ள ரசியத் திரிபுவாதத் துரோகக்கும்பல் மென்மேலும் வெளிப்படையாக எதிர்ப்புரட்சி பலாத்காரத்தை நாடுகிறது; இன்றைய ரசியாவில் விசேஷ ஏஜெண்டுகளும் ஒற்றர்களும் தறிகெட்டுத் திரிகின்றனர்; பிற்போக்குச் சட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் கணக்கில்லை. புரட்சி ஒரு குற்றம்; மக்கள் எங்கெங்கும் பொய்க் குற்றச்சாட்டுகளின் பேரில் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். எதிர்ப்புரட்சிக்குப் பரிசு; தமது பதவியேற்றத்துக்காகத் துரோகிகள் ஒருவரை ஒருவர் வாழ்த்துகிறார்கள். பல புரட்சிவாதிகளும் நிரபராதிகளும், அடைப்பு முகாம்களுக்குள்ளும், கூறப்படும் ''மனநோயாளர் வைத்தியசாலை''களுக்குள்ளும் தள்ளிவிடப்பட்டிருக்கிறார்கள். மக்களின் எதிர்ப்பை மிருகத்தனமாக நசுக்க, ரசிய திரிபுவாதக் கும்பல் டாங்கிகளையும் கவச மோட்டார்களையும் கூட அனுப்புகின்றது.

லெனின் சுட்டிக்காட்டியதாவது: ''ரசியாவில் இருப்பது போல் நாட்டின் மக்கட் தொகையில் பெரும்பான்மையோர் மீதான இத்தகைய அடக்குமுறை உலகில் வேறெங்குமில்லை.'' ரசியர்கள் தவிர்த்த இதர தேசிய இனத்தவர்கள், ''மாற்றாராக கருதப்பட்டனர்.''[1] தேசிய அடக்குமுறை, ''போதிய உரிமையற்ற தேசிய இனத்தவர்களை, மன்னர் மீதான கடும் பகைமையின் இருப்பிடமாக்கியது''[2]. இப்பொழுது, ரசியத் திரிபுவாதப் புதிய ஜார் மன்னர்கள்,

1. *வி. இ. லெனின், ''சோசலிசமும் யுத்தமும்'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 21, பக்கம். 285.*

2. *வி. இ. லெனின், ''அகில ரசியக் கடற்படையின் 1-வது காங்கிரசில் ஆற்றிய உரை'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 26, பக்கம் 322,*

பழைய ஜார் மன்னர்களின் தேசிய அடக்குமுறைக் கொள்கையை மீட்டெடுத்து, சகல சிறுபான்மைத் தேசிய இனங்களையும் கசக்கிப் பிழியவும் அடக்கி ஒடுக்கவும், பாகுபாடு செய்தல், பலவந்தமாகக் குடியேற்றுதல், பிளவுபடுத்தல், சிறை வைத்தல் போன்ற கொடிய வழி முறைகளைக் கையாண்டு, ரசியாவைத் திரும்பவும் ''சகல தேசிய இனங்களினதும் சிறை''[1]யாக மாற்றியுள்ளார்கள்.

ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் முழுச் சித்தாந்தத் துறையிலும் பன்முக முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துகின்றது. அடியோடு உளுத்துப்போன முதலாளி வர்க்க சிந்தாந்தத்துக்கும் கலாச்சாரத்துக்கும் மடைகளைத் திறந்து வைக்கும் அதேவேளையில், அது பாட்டாளி வர்க்கத்தின் சோசலிசச் சிந்தாந்தத்தையும் கலாச்சாரத்தையும் வெறித்தனமாகச் சீரழித்து அடக்குகின்றது. அது இராணுவ வெறி, தேசிய வெறி, இனவெறி ஆகியவற்றுக்காக மிகவும் ஊக்கத்துடன் வக்காலத்து வாங்கி, கலை இலக்கியத்தைச் சமூக—ஏகாதிபத்தியத்தை முன்நடத்துவதற்கான கருவிகளாக மாற்றுகின்றது.

ஜார் மன்னர் அமைப்புமுறையின் இருண்ட ஆட்சியை வெறுப்புடன் கண்டித்தபோது, லெனின் பின்வருமாறு சுட்டிக்காட்டினார்: போலீசாரின் கொடுங் கோன்மை மிருக்கத்தனமான துன்புறுத்தல், ஒழுக்கக் கேடு ஆகியவை ''கல்லும் கூச்சலிடும் அளவை அடைந்தன''![2] ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பலின் ஆட்சியை அப்பொழுது லெனின் கண்டித்த ஜார் மன்னர் அமைப்புமுறையுடன் ஒருவர் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

குருச்சேவ், பிரஷ்னேவ் துரோகக் கும்பல் எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பு மூலம், சகல ஏகாதிபத்தியமும் பிற்போக்குகளும் வகிக்க முடியாத பாத்திரத்தை வகித்தது. ஸ்டாலின் கூறியது போலவே, ''உட்புறத்திலிருந்து கோட்டையைக் கைப்பற்றுவது மிகவும் எளிது.''[3] 14 நாடுகளின் ஆயுதத் தலையீடு, வெள்ளைப் படைக்காவலர் கலகம்,

---

1. வி. இ. லெனின், ''புரட்சிகரப் பாட்டாளிவர்க்கமும் தேசிய சுய நிர்ணய உரிமையும்'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 21, பக்கம் 392.
2. வி. இ. லெனின், ''உள் விவகாரங்கள் பற்றிய விமர்சனம்'', தொகுப்பு நூல்கள், சீனமொழிப் பதிப்பு, தொகுதி 5, பக்கம் 258.
3. ''ரசிய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்) வரலாற்றின் சுருக்கமான படைப்பு'', சீன மொழிப் பதிப்பு, மக்கள் பதிப்பகம், பக்கம் 491.

ஹிட்லரின் லட்சோப லட்சம் துருப்புகளின் தாக்குதல், ஏகாதிபத்தியத்தின் எல்லாவிதமான சீர்குலைவு கவிழ்ப்பு, முற்றுகை, சுற்றி வளைப்புகள் ஆகிய அனைத்தையும் எதிர்த்து நின்ற இந்த சோசலிசக் கோட்டை இறுதியில் இந்த ஒருசில துரோகிகளால் அதன் உட்புறத்திலிருந்து கைப்பற்றப்பட்டது. குருச்சேவ்-பிரஷ்னேவ் கும்பல், சர்வதேசியக் கம்யூனிச இயக்க வரலாற்றில் மிகப்பெரும் துரோகிகள்; வான்முட்டும் பாதகங்களுக்காக வரலாற்றால் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகள்.

4. சொல்லில் சோசலிசம், செயலில் ஏகாதிபத்தியம்

லெனின் இரண்டாவது அகிலத்தின் துரோகிகளை ''சொல்லில் சோசலிசம் செயலில் ஏகாதிபத்தியம், அதாவது சந்தர்ப்பவாதம் ஏகாதிபத்தியமாக வளர்கிறது''[1] என்று விமர்சித்து நிராகரித்தார்.

ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பலும் திரிபுவாதத்திலிருந்து சமூக-ஏகாதிபத்தியமாக வளர்ந்திருக்கின்றது. வித்தியாசம் என்னவென்றால், இரண்டாவது அகிலத்தின் சமூக-ஏகாதிபத்தியவாதிகள், காவுட்ஸ்கியும் அவரைப் போன்றோரும் அரசு அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் தமது நாட்டின் ஏகாதிபத்தியவாதிகளுக்கு மாத்திரம் சேவை செய்து, பிற நாட்டு மக்களிடமிருந்து பறித்தெடுக்கும் கொள்ளை லாபங்களிலிருந்து சிந்திச்சிதறிய சிலவற்றைப் பொறுக்கி எடுத்தார்கள். ஆனால் ரசியத் திரிபுவாத சமூக-ஏகாதிபத்தியவாதிகள் தாம் அபகரித்த அரசு அதிகாரத்தைச் சார்ந்திருப்பதன் மூலம், பிற நாடுகளின் மக்களை நேரடியாகச் சூறையாடி அவர்களை அடிமைப்படுத்துகிறார்கள் என்பதே ஆகும்.

ஒரு சோசலிச நாடு, அதன் அரசியல் அதிகாரம் ஒருகால் திரிபுவாதக் கும்பலால் அபகரிக்கப்பட்டதும், ஒன்று ரசியாவைப்போல் சமூக—ஏகாதிபத்தியமாக மாறிவிடும் அல்லது செக்கோஸ்லோவாக்கியா, மங்கோலிய மக்கள் குடியரசு ஆகியவை போல் சார்பு நாடாகவோ அல்லது காலனிய நாடாகவோ சீரழியும் என்பது வரலாற்றுப் படிப்பினையாகும். குருச்சேவ்-பிரஷ்னேவ் துரோகக் கும்பல் அதிகாரத்துக்கு வந்ததன் சாராம்சம், லெனின், ஸ்டாலின் ஆகியோரால் உருவாக்கப்பட்ட சோசலிச நாட்டைச் சமூக-ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்க வல்லரசாக மாற்றியதிலேயே தங்கியிருக்கின்றது என்பதை மக்கள் இப்பொழுது தெள்ளத் தெளிவாகக் காணமுடியும்.

---

1. வி. இ. லெனின், "3-வது அகிலத்தின் கடமைகள்" தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 29, பக்கம் 458.

ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் லெனினியம், சோசலிசம், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவை பற்றிப் பகட்டாகப் பேசும் அதே வேளையில் முழுக்க முழுக்க ஏகாதிபத்தியச் செயல்களில் ஈடுபடுகிறது.

சொல்லிக் கொள்ளப்படும் ''சகோதர நாடு''களைப் பொறுத்து, தான்''சர்வதேசிய''த்தை அமுல்நடத்துவதாக ரசியத்திரிபுவாதத் துரோகக்கும்பல் மேல்பூச்சுக்குக் கூறுகிறது ஆனால் உண்மையில் அது ''வார்சா ஒப்பந்த அமைப்பு'', ''பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சில்'' போன்ற விலங்குகளைச் சில கிழக்கு அய்ரோப்பிய நாடுகளுக்கும் மங்கோலிய மக்கள் குடியரசுக்கும் ஒன்றன்பின் ஒன்றாகப் பூட்டி அவற்றைச் சொல்லிக்கொள்ளப்படும் ''சோசலிசப் பெரும் குடும்பம்'' என்ற முட்கம்பி வேலிகளுக்குள் சிறைப்படுத்தி, தான் விரும்பியபடி அவற்றைக் கொள்ளையடிக்கின்றது. பயங்கரமான அதிமிகு பொருளாதாரச் சுரண்டலை நடத்துவதற்காக, இந்தக் கும்பலிலுள்ளவர்கள் தமது தலைமையாதிக்க நிலையைப் பயன்படுத்தி, ''சர்வதேசியத் தொழில் பங்கீடு'', ''குறிப்பிட்ட உற்பத்தியில் ஈடுபடுவது'', ''பொருளாதார ஒருமைப்பாடு'' ஆகியவற்றை முன் தள்ளி, இந்த நாடுகளை நிர்ப்பந்தித்து, அவற்றின் தேசிய பொருளாதாரங்களை ரசியத் திரிபுவாதத்தின் தேவைகளுக்குத் தக்கவாறு விற்பனைச் சந்தைகளாகவும், துணைப் பதனீட்டு ஆலைகளாகவும், பழத்தோட்டங்களாகவும், காய்கறித் தோட்டங்களாகவும், கால்நடைப் பண்ணைகளாகவும் மாற்றுகிறார்கள்.

இந்த நாடுகளைக் கடுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்க, அவர்கள் மிகவும் யதேச்சாதிகாரமுடைய மிகவும் பயங்கரமான முறைகளைக் கையாள்வதோடு, அங்கு மிகப் பெரும் தொகையான துருப்புகளையும் நிறுத்திவைத்திருக்கிறார்கள்; மேலும் செக்கோஸ்லோவாக்கியாவைத் தமது இரும்புக் கால்களால் மிதிக்க அவர்கள் பல லட்சம் துருப்புகளை வெளிப்படையாக அனுப்பி, அங்கு துப்பாக்கி முனையில் பொம்மை ஆட்சி ஒன்றை நிறுவவும்கூட செய்துள்ளனர். லெனினால் கண்டிக்கப்பட்ட பழைய ஜார் மன்னர்கள் போலவே இந்தத் துரோகிகள் கும்பல் ''அதன் அயல் நாடுகளுடனான உறவுகளை சலுகை என்ற நிலப்பிரபுத்துவக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே முற்றிலும் அமைக்கிறது.''[1]

---

1. வி. இ. லெனின், ''பெரும் ரசியர்களின் தேசிய தற்பெருமை பற்றி'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 21, பக்கம் 85.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான அதன் ''உதவி'' பற்றி ரசிய திரிபுவாதத் துரோகக் கும்பல் வெளிப்பகட்டுக்குப் பேசுகிறது. ஆனால் உண்மையில் இடைப்பட்ட பிராந்தியத்துக்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் போட்டிபோடுவதில், அது ''உதவி'' என்ற பெயர்ப் பலகையில் இந்தப் பிராந்தியத்திலுள்ள சில நாடுகளைத் தன் செல்வாக்குப் பிராந்தியத்துக்குள் உட்படுத்தப் பெரிதும் முயல்கின்றது. யுத்தத்தளவாடங்கள், மூலதனம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலமும், சமனமற்ற வர்த்தகம் செய்வதன் மூலமும். ரசியத் திரிபுவாதம் அவற்றின் இயற்கை செல்வாதாரங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றது; அவற்றின் உள்விவகாரங்களில் தலையிட்டுக் கொண்டிருக்கின்றது; இராணுவத் தளங்களைக் கைப்பற்றச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கின்றது.

லெனின் சுட்டிக்காட்டியதாவது: ''நிதி மூலதனம் காலனியக் கொள்கையை அமுல்நடத்துவதில் எண்ணற்ற 'பழைய' நோக்கங்களுடன் மூலப்பொருட்களின் ஊற்றுமூலங்கள், மூலதன ஏற்றுமதி, 'செல்வாக்குப் பிராந்தியங்கள்'...சாதாரண பொருளாதாரப்பிரதேசம் ஆகியவற்றுக்கான போராட்டத்தையும் சேர்த்திருக்கின்றது''[1]. ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியம் இந்த முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் பாதையிலேயே முன்னேறிக்கொண்டிருக்கின்றது.

பல்வேறு நாடுகளின் புரட்சிப் போராட்டங்களுக்கான அதன்''பூரண ஆதரவு''பற்றி ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் உதட்டளவில் பேசுகின்றது; ஆனால் யதார்த்தத்தில் சகல நாட்டு மக்களினதும் புரட்சிப் போராட்டங்களைச் சீர்குலைக்க இந்தக் கும்பல் உலகில் கடைக்கோடிப் பிற்போக்குச் சக்திகள் அனைத்துடனும் கள்ளக் கூட்டுச் சேர்கிறது. அது முதலாளித்துவ நாடுகளிலுள்ள புரட்சிகர வெகுஜனங்களைத் ''தீவிரவாதிகள்'' என்றும் ''கலகக்காரர்கள்'' என்றும் வெறித்தனமாகத் திட்டுகிறது; இந்த நாடுகளிலுள்ள மக்கள் இயக்கங்களைப் பிளவுபடுத்தவும் சிதறடிக்கவும் முயல்கிறது. அது இந்தோனேசியா, இந்தியா முதலிய நாடுகளின் பிற்போக்குவாதிகளுக்குப் பணத்தையும் துப்பாக்கிகளையும் கொடுத்து, புரட்சியாளர்களை வதைசெய்வதில் அவர்களுக்கு நேரடியாக உதவி செய்துள்ளது; ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களின் ஆயுதப் போராட்டச் சுவாலைகளை அணைக்கவும் தேசிய விடுதலை இயக்கங்களை நசுக்கவும் அது இரவும் பகலும் சதிசெய்து

---

1. *வி. இ. லெனின், ''ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்'', தொகுப்பு நூல்கள் சீன மொழிப் பதிப்பு, தொகுதி 21, பக்கம் 293.*

கொண்டிருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் போலவே அதுவும் உலக இராணுவப் போலீஸ் படையாகச் சேவை செய்து கொண் டிருக்கிறது.

''ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட''த்தை ஏற்றுக் கொள்வது பற்றி ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் வெளிப்பூச்சுக்குப் பேசுகிறது. இக்கும்பல் சில சமயங்களில் அமெரிக்காவைத் திட்டும் ஒருசில சொற் றொடர்களைப் பகட்டாகப் பேசுவதுண்டு. ஆனால் உண்மையில் ரசியத் திரிபுவாதமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் உலகத்தின் மீது ஆதிக்கம் செலுத்த வீண் முயற்சி செய்கின்ற மிகப் பெரும் ஏகாதிபத்தியங்களாகும். ரசியத் திரிபுவாதத்தின் சொல்லிக்கொள்ளப்படும்அமெரிக்க ''எதிர்ப்பும்'' அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சகல நாட்டு மக்களின் போராட்டங்களும் முற்றிலும் வேறுபட்ட இரண்டு விசயங்கள். உலகை மீண்டும் பங்கீடு செய்யும் பொருட்டு ரசியத் திரிபு வாதமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஒன்றோடொன்றுபோட்டி யிடும் அதே வேளையில் கள்ளக்கூட்டும் சேர்கின்றன. ஜெர்மன் பிரச்சினை, மத்திய கிழக்குப் பிரச்சினை, தென் கிழக்காசியப் பிரச்சினை, ஜப்பானியப் பிரச்சினை, அணு ஆயுதப் பிரச்சினை போன்ற வரிசை வரிசையான பெரும் முக்கியமான பிரச்சினைகளில் ரசியத் திரிபு வாதம் செய்துள்ள அனைத்தும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் அது போட்டிபோடுவது, கள்ளக்கூட்டுச் சேர்வது ஆகியவற்றுக்கான குற்றச் சாட்சியமாகும். அவை இரண்டும் சகல நாட்டு மக்களினதும் நலன்களை பலிகொடுத்து, ஏகாதிபத்திய வல்லரசு அரசியலை முன்னடத்திக் கொண்டிருக்கின்றன. ரசியத் திரிபுவாதத்துக்கும் அமெரிக்க ஏகாதிபத்தி யத்துக்கும் இடையில் எந்தவிதமான சமரசம் ஏற்பட்டாலும் அது கொள்ளைக்காரர்களுக்கு இடையிலான தற்காலிக உடன்பாடுகளாக மாத்திரமே இருக்கும்.

''நவீன இராணுவவெறி முதலாளித்துவத்தின் விளைவாகும்.''[1] என்றும் இன்றைய கால யுத்தம் ''ஏகாதிபத்தியத்தின் இயல்பிலிருந்தே தோன்றுகிறது''[2] என்றும் லெனின் சுட்டிக் காட்டினார்.

---

1. *வி. இ. லெனின், ''இராணுவ வெறியும் சமூக—ஜனநாயகக் கட்சியின், இராணுவ வெறி — எதிர்ப்புத் தந்திரங்களும்'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 15, பக்கம் 144.*

2. *வி. இ. லெனின், ''ரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்) 8-வது காங்கிரஸ்'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 29, பக்கம் 168.*

பிரஷ்னேவ் பதவிக்கு வந்தது முதல், ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் இராணுவவெறிப் பாதையில் மென்மேலும் அதிக தூரம் சென்றுள்ளது. அது குருச்சேவின் அணுஆயுத மிரட்டல் என்ற இராணுவ யுத்த தந்திரக் கோட்பாட்டைப் பின்பற்றி, ஏவுகணை - அணு ஆயுதங்களைப் பெருமளவில் அதிகரிக்கின்றது; அதே வேளையில் வழக்கமான ஆயுதங்களை அதிகரிப்பதிலும் தன் முயற்சிகளை இரட்டிப்பாக்கியுள்ளது; தரை, கடல், விமான முப்படைகளையும் பன்முகங்களிலும் பலப்படுத்தி, உலகெங்கும் ஏகாதிபத்திய ''பீரங்கி படகு கொள்கை''யை முன்னடத்தியுள்ளது.

யுத்தம் சம்பந்தமான பிரச்சினையில், உண்மையான படைக்கல விரிவாக்கத்தையும் யுத்தத் தயாரிப்பையும் மூடிமறைக்க ''ஆயுதங்கள் இல்லாத, படைகள் இல்லாத, யுத்தங்கள் இல்லாத'' உலகம் பற்றி குருச்சேவ் முன்பு போலித்தனமாக விளம்பரம் செய்தார். இன்று, பிரஷ்னேவும் அவரது கூட்டாளிகளும் தமது தொனியை ஓரளவு மாற்றி, யுத்தவெறியைத் தூண்டத் தம்மால் இயன்றதனைத்தையும் செய்ய, தற்போதைய சர்வதேசியச் சூழ்நிலை ''புதியதொரு உலக யுத்தம் என்ற ஆபத்தைக் கர்ப்பத்தில் கொண்டிருக்கின்றது''[1] என்று கூப்பாடு போட்டு, ''விரோதிகளை முந்திக் கொள்வது'' என்று கூறி வெளிப்படையாகப் பயமுறுத்துகிறார்கள்; தமது ''யுத்த தந்திர ஏவுகணை''களால் ''எந்த இடத்திலுள்ள எந்த இலக்கையும் அழித்தொழிக்க முடியும்''[2] என்று பகட்டுகிறார்கள். அவர்கள் இராணுவச் செலவை மேலும் வெறித்தனமாக அதிகரித்து, ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கான அணிதிரட்டலையும் தயாரிப்புகளையும் தீவிரப்படுத்தி ஹிட்லர் மாதிரி மின்னல் வேகத் தாக்குதல் ஒன்றை தொடுக்கச் சதி செய்திருக்கிறார்கள்.

ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் திடீர்த் தாக்குதல் மூலம் செக்கோஸ்லோவாக்கியாவை ஆக்கிரமித்தது; சென் பௌ தீவு, தியெலெக்தி போன்ற சீனப் பிரதேசங்கள் மீது படையெடுத்தது; எமது நாட்டுக்கு எதிராக அணு ஆயுத அச்சுறுத்தலையும் நடத்தியுள்ளது. இதெல்லாம் ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு இயல்பையும், சாகசவாதத்தையும் முழுமையாக அம்பலப்படுத்தி

---

1. ரசியத் திரிபுவாத ''உச்சிடெல்ஸ்கயா கெஜெட்டா'', பிப்ரவரி 5, 1970.

2. ரசியத் திரிபுவாத தேசிய பாதுகாப்பு மந்திரி ஏ. ஏ. கிரெச்கோவின் கட்டுரை, ரசியத் திரிபுவாத ''கம்யூனிஸ்ட்'' எண் 3, 1969.

இருக்கின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் போல், ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியத்தின் ஆட்சியிலிருக்கும் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் உலக யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கத் தயார் செய்து கொண்டிருக்கும் இன்னொரு தலையாய குற்றவாளியாக மாறியுள்ளனர்.

5. சொல்லிக்கொள்ளப்படும் 'பிரஷ்னேவ்வாதம்' முழுக்க முழுக்க மேலாதிக்கவாதமே

சமூக-ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் விஸ்தரிப்புக் கொள்கையை மேலும் முன்னடத்த, பிரஷ்னேவ் துரோகக் கும்பல் குருச்சேவ் திரிபுவாதத்தை வளர்த்து, ''பிரஷ்னேவ் வாதம்'' என அழைக்கப்படும் பாசிசக் ''கோட்பாடு'' தொகுதி ஒன்றைப் பொறுக்கிச் சேர்த்து உருவாக்கி உள்ளது.

''பிரஷ்னேவ் வாதம்'' உண்மையில் எத்தகைய் சரக்கால் உருவாக்கப்பட்டது என இப்பொழுது ஆராய்வோம்.

முதலாவதாக, ''எல்லைக்குட்பட்ட அரசுரிமைத் தத்துவம்''. சொல்லிக்கொள்ளப்படும் சோசலிச நலன்களைப் பாதுகாப்பது என்றால் ''அதியுயர்ந்த அரசுரிமை''யைப் பாதுகாப்பதாகும்[1] என்று பிரஷ்னேவும் அவரது கூட்டாளிகளும் கூறுகிறார்கள். ''மற்றொரு நாட்டின் அரசுரிமையின் தலைவிதி உட்பட'' அந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை ரசியத் திரிபுவாதத்துக்கு உண்டு என்று அவர்கள் பகிரங்கமாகப் பிரகடனம் செய்கிறார்கள்.[2]

என்ன ''சோசலிச நலன்களா''! ரசியாவில் சோசலிச அமைப்பு முறையைக் கவிழ்த்து, முதலாளித்துவத்துக்குப் 'புத்துயிர் அளிக்கும் திரிபுவாத மார்க்கத்தைச் சில கிழக்கு அய்ரோப்பிய நாடுகளிலும் மங்கோலிய மக்கள் குடியரசிலும் முன்நடத்தியவர்கள் நீங்கள் தான். நீங்கள் கூறும் ''சோசலிச நலன்கள்'' உண்மையில் ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியத்தின் நலன்களாகும்; காலனியாதிக்கத்தின் நலன்களாகும்; எல்லாவற்றுக்கும் மேலான ''அதியுயர்ந்த அரசுரிமை''யை நீங்கள் இதர நாடுகளின், மக்கள் மீது பலவந்தமாகச் சுமத்தியிருக்கிறீர்கள். அதாவது இதர நாடுகளின் அரசுரிமை

---

1. ரசியத் திரிபுவாத ''சர்வதேசிய விவகாரங்கள்'', எண் 11, 1968.
2. ரசியத் திரிபுவாத ''கிர்ஸ்நயா ஸ்வெஸ்தா'', 1969, பிப்ரவரி 14.

739

''எல்லைக்குட்பட்டது''; அதே வேளையில் இதர நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தும் உங்களுடைய அதிகாரம் ''எல்லையற்றது''. வேறு வார்த்தையில் சொன்னால், இதர நாடுகளை ஆட்டிப்படைக்கும் உரிமை உங்களுக்கு உண்டு, ஆனால் உங்களை எதிர்க்கும் உரிமை இதர நாடுகளுக்கு இல்லை; இதர நாடுகளைக் காலில் போட்டு மிதிக்கும் உரிமை உங்களுக்கு உண்டு, ஆனால் உங்களை எதிர்க்கும் உரிமை இதர நாடுகளுக்கு இல்லை. ''மற்றவரை ஆட்சி புரியும் உரிமை தனக்கு உண்டு''[1] என்று ஹிட்லர் ஒருமுறை வெறித்தனமாகக் கூச்சலிட்டான். தேசிய அரசுரிமை பற்றிய ''கருத்துகள் உளுத்துப் போய்விட்டன''[2] என்றும், ''தனிப்பட்ட நாட்டின் அரசுரிமை'' ''கூட்டு அரசுரிமை''[3]யால் மாற்றியமைக்கப் படவேண்டும் என்றும், டல்லசும் அவர் போன்றோரும் கூட வக்காலத்து வாங்கினார்கள். இவ்வாறாகப் பிரஷ்னேவின் ''எல்லைக்குட்பட்ட அரசுரிமை கோட்பாடு'', வெறித்தனமான ஏகாதிபத்தியப் பிதற்றல்களின் எதிரொலியே தவிர வேறு எதுவுமல்ல என்பது தெளிவு.

இரண்டாவதாக, ''சர்வதேசிய சர்வாதிகார கோட்பாடு'' ''சோசலிச அமைப்பு முறைக்கு எதிரான அச்சுறுத்தலை இல்லாது ஒழிக்க ஒரு சகோதர நாட்டுக்கு இராணுவ உதவி அளிக்கும்''[4] உரிமை தமக்கு உண்டு என்று பிரஷ்னேவும் அவரது கூட்டாளிகளும் பிரகடனம் செய்கிறார்கள். வரலாற்று வளர்ச்சி ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒரு தேசிய சர்வாதிகாரத்திலிருந்து முழு உலக அரசியல் மீதும் தீர்க்கமான செல்வாக்கு வகிக்கக்கூடிய ஒரு சர்வதேசிய சர்வாதிகாரமாக மாற்றும்''[5] என்பதை ''லெனின் முன்கூட்டியே கண்டிருந்தார்'' என அவர்கள் கூறுகிறார்கள்.

---

1. ''நியூரெம்பெர்க் விசாரணை'', தொகுதி 2
2. அமெரிக்காவின் ''வெளிநாட்டு விவகாரங்கள்'' அக்டோபர் இதழ் 1957.
3. பி. சி. ஜெசுப், ''நவீன சர்வதேசியச் சட்டம்''
4. பிரெஷ்னேவ், போலந்து திரிபுவாத ''5-வது காங்கிர''சில் ஆற்றிய உரை, நவம்பர் 12, 1968.
5. மாஸ்கோவில் அக்டோபர் புரட்சியின், ''ஆண்டு நிறைவு விழா கூட்ட''த்தில் கே. தி. மாஸீரோவின் அறிக்கை, நவம்பர் 6, 1968.

இந்த துரோகிகள் கூட்டம் லெனினின் கருத்துக்களை முற்றிலும் திரித்துப் புரட்டியிருக்கிறது.

''தேசிய, காலனித்துவப் பிரச்சினைகள் பற்றிய ஆரம்ப நகல் உருவரைக் குறிப்பு'' என்ற தன் கட்டுரையில் லெனின் ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒரு தேசிய (அதாவது ஒரு நாட்டில் நிலவுகின்ற; உலக அரசியலை தீர்மானிக்க முடியாத) சர்வாதிகாரத்தி லிருந்து சர்வதேசிய சர்வாதிகாரமாக (அதாவது குறைந்தபட்சம் சில முன்னேறிய நாடுகளில் நிலவுகின்ற, உலக அரசியல் முழுவதன் மீதும் ஒரு தீர்க்கமான செல்வாக்கு வகிக்கக்கூடிய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக) மாற்றுவது''[1] பற்றி எழுதினார். பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தில் ஊன்றி நின்று, பாட்டாளி வர்க்க உலகப்புரட்சி யைப் பிரச்சாரம் செய்வது என்றுதான் லெனின் இந்த இடத்தில் கருதினார். ஆனால் ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் லெனினுடைய இந்த பத்தியிலுள்ள பாட்டாளிவர்க்க புரட்சி உணர்வை உருச்சிதைத்து, சொல்லிக்கொள்ளப்படும் ''சர்வதேசிய சர்வாதிகார கோட்பாட்டை வெளிப்படையாக உருவாக்கி, அதைச் சில கிழக்கு அய்ரோப்பிய நாடு களுக்கும் மங்கோலிய மக்கள் குடியரசுக்கும்எதிராக இராணுவத்தலையீடு இராணுவஆக்கிரமிப்பு ஆகியவற்றை நடத்துவதற்கான ''கோட்பாட்டு'' ஆதாரமாகப் பயன்படுத்தியிருக்கிறது. நீங்கள் குறிப்பிடும் ''சர்வதேசிய சர்வாதிகாரம்'', பிற நாடுகளைப் புதிய ஜார் மன்னர்களின் ஆட்சி, அடிமைப்படுத்தல் ஆகியவற்றுக்குள்ளாக்குவதே. ''ஒரு சகோதர நாட்டுக்கு உதவி அளிப்பது'' என்ற பெயர்ப் பலகையைத் தொங்க விடுவதன் மூலம் மற்றொரு நாட்டுக்கு எதிராக உங்களது இராணுவ சக்தியைப் பயன்படுத்தவோ அல்லது மற்றொரு நாட்டில் உங்கள் விருப்பப்படி துருப்புகளை அனுப்பவோ உங்களுக்கு உரிமை உண்டு என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நீங்கள் ''கூட்டுப் படைகள்'' என்ற பதாகையை பறக்கவிட்டுக்கொண்டு செக்கோஸ்லோவாக்கியாவை ஆக்கிரமித்தீர்கள்; இதற்கும் அன்று சீனாவுக்கு எதிராக எட்டு வல்லரசுகளின் கூட்டுப் படைகள் நடத்திய தாக்குதல், ரசியாவுக்கு எதிரான 14 நாடுகளின் ஆயுதத் தலையீடு, கொரியாவுக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் ஸ்தாபன ரீதியில் அணி திரட்டப்பட்ட ''16 நாடு'' களின் ஆக்கிரமிப்பு ஆகியவற்றுக்கும் இடையில் என்ன வித்தியாசம் இருக்கின்றது?

---

1. வி. இ. லெனின், ''தேசிய, காலனியப் பிரச்சினைகள் பற்றிய ஆரம்ப நகல் உருவரைக் குறிப்பு'', தேர்வு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 4, பக்கம் 292.

மூன்றாவதாக, ''சோசலிசப் பெரும் குடும்பக் கோட்பாடு''. ''சோசலிசப் பெரும் குடும்பம் பிரிக்கப்படமுடியாத ஒரு முழுமை''[1] என்றும் ''சோசலிசப் பெரும் குடும்ப''த்தின் ''ஒருமுகப்பட்ட செயல்''[2] பலப்படுத்தப்படவேண்டும் என்றும் பிரஷ்னேவும் அவரது கூட்டாளி களும் பறைதட்டிக் கொள்கிறார்கள்.

என்ன ''சோசலிசப் பெரும் குடும்பமா''! இது உங்களை ஆதிக்க நாடாகக் கொண்ட காலனியப் பேரரசுக்கான ஒரு புனைபெயரே தவிர வேறு எதுவுமல்ல. பெரியதோ சிறியதோ உண்மையான சோசலிச நாடுகளுக்கிடையிலான உறவுகள், மார்க்சிய-லெனினிய அடிப்படையிலும் முழு சமத்துவம், பிரதேச ஒருமைப்பாட்டுக்கு மதிப்பு கொடுத்தல், நாட்டின் அரசுரிமைக்கும் சுதந்திரத்துக்கும் மதிப்பு கொடுத்தல், ஒன்று மற்றதன் உள்விவகாரங்களில் தலையிடாமை ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையிலும்; பரஸ்பர ஆதரவு, பரஸ்பர உதவி என்ற பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாட்டின் அடிப்படையிலும் அமைக்கப்பட வேண்டும். ஆனால் நீங்கள் பிற நாடுகளை உங்களது காலில் போட்டு மிதித்து, அவற்றை உங்களுக்குக் கீழ்ப்படுத்தியும் உங்களுடைய சார்பு அரசுகளாக்கியும் இருக்கிறீர்கள். நீங்கள் கூறும் ''ஒருமுகப்பட்ட செயல்'' பிற நாடுகளின் அரசியல், பொருளாதாரம், இராணுவ விவகாரங்கள் ஆகியவற்றை உங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் ஒன்றிணைப்பது என்று அர்த்தப்படும். நீங்கள் கூறும் ''பிரிக்கப்பட முடியாத முழுமை'' உங்களது கட்டுப்பாடு, அடிமைப்படுத்தல் ஆகிய வற்றில் இருந்து விடுதலை பெறாமல் பிற நாடுகளைத் தடை செய்வ தாகும். பிற நாடுகளின் மக்களை உங்களது அடிமைகளாக்க நீங்கள் அப்பட்டமாக முயன்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா?

நாலாவதாக, ''சர்வதேசியத் தொழில் பங்கீட்டுக் கோட்பாடு''. வெகுகாலத்துக்கு முன்பே குருச்சேவ் பறைசாற்றிய இந்த அபத்தத்தைப் பிரஷ்னேவும் அவரது கூட்டாளிகளும் பெரிதும் வளர்த்திருக்கிறார்கள். மேலே குறிப்பிட்டது போல், சில கிழக்கு அய்ரோப்பிய நாடுகளிலும் மங்கோலிய மக்கள் குடியரசிலும் ''சர்வதேசியத் தொழில் பங்கீட்''டை முன்நடத்தியிருப்பது மட்டுமல்ல, அதை இதர ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் பரப்பியுள்ளார்கள். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் ரசியத் திரிபுவாதத்துடன் ''ஒத்துழை''த்தால் ஒழிய, ''சுதந்திரமான தேசிய பொருளாதாரத்தை

---

1. *ரசியத் திரிபுவாத ''இஸ்வெஸ்தியா'', ஜூலை 2, 1968.*

2. *1969 ஜூன் மாத வஞ்சக மாஸ்கோ கூட்டத்தின் ''பிரதான ஆவணம்''.*

நிறுவ''[1] முடியாது என்றும் ''இந்த ஒத்துழைப்பு சர்வதேசியத் தொழில் பங்கீட்டின் மேம்பாட்டை மேலும் பரந்த அளவில், பயன் படுத்த அதிகமான சாத்தியப்பாடுகளை ரசியாவுக்கு அளிக்கின்றது என்றும் நாங்கள் இந்த நாடுகளின் பாரம்பரிய வர்த்தகப் பண்டங்களான பருத்தி, கம்பளி, தோல் பொருட்கள், சுத்திகரிக்கப்பட்ட இரும்பற்ற உலோகத் தாதுகள், தாவர எண்ணெய், பழங்கள், காபி, கொக்கோ விதை, தேயிலை ஆகியவற்றையும் இதர மூலப் பொருட்களையும் ஆக்கப் பொருட்களையும் இந்த நாடுகளிலிருந்து மென்மேலும் அதிக தொகையில் வாங்கமுடியும்''[2] என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

''பாரம்பரிய வர்த்தகப் பண்டங்க''ளின் இந்தப் பட்டியல்தான் என்னே!

ஆனால் இந்தப் பட்டியல் பூரணமானதாக இல்லாதது வருத்தத் திற்குரியது; பெட்ரோலியம், ரப்பர், இறைச்சி, காய்கறிகள், அரிசி, சணல், கருப்பஞ் சர்க்கரை ஆகியவையும் இன்ன பிறவும் இதில் சேர்க்கப்படவேண்டும்.

ஆட்சியிலிருக்கும் ஒரு சில ரசியத் திரிபுவாதிகளின் கண்களுக்கு ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்கள் இந்தப் ''பாரம்பரிய வர்த்தகப் பண்டங்களை'' அவர்களுக்குத் தலைமுறை தலைமுறையாகக் கொடுத்து வரவேண்டும் என்ற தலைவிதிக்காளாகி யிருப்பதாகத் தோன்றுகிறது போலும். இது என்ன ''கோட்பாடு''? ஒவ்வொரு நாடும் அதன் இயற்கை நிலைமைகளுக்கு ஏற்ப, என்ன உற்பத்தி செய்யவேண்டுமெனத் தாம் நிர்ணயிப்பதாகக் காலனிவாதி களும் ஏகாதிபத்தியவாதிகளும் வெகு காலத்துக்கு முன்பே விளம்பரம் செய்துள்ளார்கள். முதலாளித்துவத் தொழிற் துறை நாடுகள் மிகவும் வசதியான, மிகவும் கொடுமையான காலனியச் சுரண்டலை நடத்து வதற்காக அவர்கள் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளை மூலப்பொருள் உற்பத்திப் பிரதேசங்களாகப் பலவந்தமாக மாற்றி, அவற்றைப் பின்தங்கிய நிலையில் வைத்திருக்கின்றனர். ரசியத் திரிபு வாதக் கும்பல் ஏகாதிபத்தியத்தின் இந்தக் காலனியக் கொள்கையைத் தான் பின்பற்றுகிறது. அதன் ''சர்வதேசியத் தொழில் பங்கீட்டுக் கோட்பாடு'' ''ரசிய தொழிற்துறை; ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன்

---

1. வஞ்சக மாஸ்கோ கூட்டத்தில் பிரெஷ்னேவின் பேச்சு ஜூன் 7, 1969.

2. ரசியத் திரிபுவாதத்தின் ''23-வது காங்கிரசில், ஏ. என். கோஸீஜினின் அறிக்கை, ஏப்ரல் 5, 1966.

அமெரிக்க-விவசாயம்'' அல்லது ''ரசியத் - தொழிற்துறை; ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க-உப பதனீட்டு ஆலை'' என்பதாகும்.

உண்மையான சோசலிச நாடுகளுக்கும், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குமிடையில் சமத்துவம், பரஸ்பர நலன் என்ற அடிப்படையில் ஒன்று மற்றதன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நடத்தப்படும் பண்டமாற்று, அளிக்கப்படும் பரஸ்பர உதவி ஆகியவை தமது கரங்களில் முன்முயற்சியை வைத்திருப்பதன் மூலம் இந்த நாடுகளில் சுதந்திரமான தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை. ஆனால் விரல்விட்டு எண்ணக்கூடிய ஆட்சியிலிருக்கும் ஒருசில ரசியத் திரிபுவாதிகள் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் ''சர்வதேசியத் தொழில் பங்கீட்டுக் கோட்பாடு'', ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்குள் ஊடுருவி, அவற்றைக் கட்டுப்படுத்தி சூறையாடி, அவர்களது செல்வாக்குப் பிராந்தியங்களை விஸ்தரித்து ரசியத் திரிபுவாதக் காலனியம் என்ற புதியதொரு நுகத்தடியில் இந்த நாடுகளைப் பூட்டுவதையே ஒரே ஒரு நோக்கமாகக் கொள்கிறது.

அய்ந்தாவதாக, ''எமது நலன்கள் சம்பந்தப்பட்டுள்ளன என்ற கோட்பாடு'' ''பிரதானமானதோர் உலகவல்லரசாகிய ரசியாவுக்கு பரந்த வளர்ந்து வரும் சர்வதேசியத் தொடர்புகள் உண்டு; அவை பூகோள ரீதியில் தூரத்தில் இருந்தாலும், எமது நண்பர்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட சம்பவங்களைச் செயலற்ற முறையில் பார்த்துக்கொண்டிருக்க முடியாது''[1] என்று பிரஷ்னேவும் அவரது கூட்டாளிகளும் பிரகடனம் செய்கிறார்கள். ''ரசியக் கப்பல் படைகள்'' ''எமது நாட்டுப் பாதுகாப்பின் நலன்களுக்குத் தேவையான இடமெங்கும் செல்லும்''[2] என்றும் அவர்கள் இறுமாப்புடன் கூப்பாடு போடுகிறார்கள்.

பிரதானமானதொரு வல்லரசாக இருக்கின்றபடியால், ஒரு நாடு உலகின் எல்லாப் பாகங்களையும் அதன் நலன்கள் அடங்கிய இடங்களாகக் கருதவும், பூகோளம் முழுவதும் கை நீட்டவும் முடியுமா? பரந்த சர்வதேசத் தொடர்புகளைக் கொண்டிருப்பதன் காரணமாக, ஒரு நாடு, அச்சுறுத்தல் ஆக்கிரமிப்பு ஆகியவற்றை நடத்த அதன் பீரங்கி

1. ஏ. ஏ. கிரெமிக்கோ, ''ரசியாவின் சுப்ரீம் சோவியத் கூட்ட''த்தில் முன்வைத்த அறிக்கை, ஜூலை 10, 1969.

2. 1969 சோவியத் கடற்படையின் தினத்தில் ரசியத் திரிபுவாதக் கடற்படையின் பொதுக் கமாண்டர் எஸ். ஜி. கோர்ஷ்கோவின் உரை.

பழைய ஜார் மன்னர்களின் ''ஸ்லாவ் பேரரசு'' வெகுகாலத்துக்கு முன்பே ஒரு நீர்க்குமிழி போல் மறைந்து விட்டது. ஜார் மன்னர் ஆட்சி 1917-ம் ஆண்டில், லெனின் தலைமை தாங்கிய மகத்தான அக்டோபர் புரட்சியால் அழித்தொழிக்கப்பட்டது. பழைய ஜார் மன்னர்களின் ஆட்சி மலை ஏறிவிட்டது. அதுபோல, ஏகாதிபத்தியம் அதன் பூரண வீழ்ச்சியை நோக்கிச் செல்லும் இன்றைய சகாப்தத்தில், முழு உலகத்தின் மீதும் மேலாதிக்கம் செலுத்தும் மேலும் பெரியதொரு பேரரசை அமைக்கும் புதிய ஜார் மன்னர்களின் வெறித்தனமான முயற்சியும் ஓர் ஆசைக் கனவே தவிர வேறு எதுவுமல்ல.

''ஏகாதிபத்தியத்தை, இறக்கும் தறுவாயிலுள்ள முதலாளித்துவம்'' என லெனின் அழைத்தார். ஏனெனில், ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை அவற்றின் கடைசி எல்லைகளுக்கு, உச்ச நிலைக்குக் கொண்டு வருகிறது; அதைத் தொடர்ந்து புரட்சி ஆரம்பிக்கிறது''[1] என்று ஸ்டாலின் கூறினார்.

ரசியத் திரிபுவாதம் ஏகாதிபத்தியத்தின் பழைய பாதையை மேற்கொண்டுள்ளதால், அது தவிர்க்க முடியாதபடி ஏகாதிபத்திய விதியால் ஆதிக்கம் செலுத்தப்படும்; ஏகாதிபத்தியத்திற்கே இயல்பான சகல விதமான முரண்பாடுகளுக்கும் உள்ளாகும்.

தோழர் மாசேதுங் சுட்டிக்காட்டியுள்ளதாவது: ''அமெரிக்கா ஒரு காகிதப் புலி, நீங்கள் அமெரிக்காவை நம்பாதீர்கள். ஒரு குத்தில் அது துளைக்கப்படும். திரிபுவாத ரசியாவும் ஒரு காகிதப் புலியே.''[2]

ஆக்கிரமிப்பு, விஸ்தரிப்பு ஆகியவற்றை வெறிபிடித்த முறையில் நடத்துவதன் மூலம், ரசியத் திரிபுவாதச் சமூக ஏகாதிபத்தியம் தன் விருப்பத்துக்கு விரோதமாக சென்று, தன் வீழ்ச்சிக்கான நிலைமைகளை உருவாக்குவது திண்ணம். ரசியத் திரிபுவாதம், ''சோசலிசப் பெரும் குடும்ப''த்தின் பல்வேறு நாடுகளைத் தன் உரிமைப் பிரதேசங்களாகக் கருதுகிறது. ஆனாலும் இந்த நாட்டு மக்கள் மீது நீண்டகாலம் காலனித்துவ ஆட்சி செலுத்துவதில் அது எவ்விதத்திலும் வெற்றி காண முடியாது; தனக்கும் இந்த நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை

---

1. *ஜே. வி. ஸ்டாலின், ''லெனினியத்தின் அடிப்படை அம்சங்கள்'' தொகுப்பு நூல்கள், சீனமொழிப் பதிப்பு, தொகுதி 6, பக்கம் 65.*
2. *1964, ஜனவரி 30-ந் தேதி மாசேதுங் நிகழ்த்திய விவாதம்.*

ஈடுசெய்யவும் அதனால் முடியாது. இன்றைய கிழக்கு அய்ரோப்பா, என்றோ ஒருநாள் நிச்சயம் வெடிக்கப்போகும் ஒரு வெடி மருந்துப் பீப்பாய் போலவே இருக்கின்றது. ரசியத் திரிபுவாதத்தின் டாங்கிகள் பிரேக்கில் பிரவேசித்துள்ளமை ரசியத் திரிபுவாத சமூக-ஏகாதிபத்தி யத்தின் பலத்தை எவ்விதத்திலும் காட்டவில்லை, மாறாக அது ரசியத் திரிபுவாதக் காலனியப் பேரரசின் வீழ்ச்சியின் ஆரம்பத்துக்கான அறிகுறியேயாகும். செக்கோஸ்லோவாக்கியச் சேற்றில், ஆழப்புதைந்த கால்களுடன் உள்ள ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியம், அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாததாய் இருக்கிறது.

ரசியத் திரிபுவாதம் ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் அதன் விஸ்தரிப்பு, சூறையாடல் ஆகியவற்றின் மூலம், இந்தப் பிரதேசங்களின் மக்களுக்கு எதிராகத் தன்னைத் தானே நிறுத்தி வைத்திருக்கிறது. அது தன் சக்திக்கு மீறித் தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிக் கொண்டு பெருஞ்சுமையுடையதாகியதால் உடல் வீக்க நோய்வாய்ப்பட்ட ஒரு மனிதனைப் போல இருக்கிறது. ''எங்களை விட மிக மோசமாக இல்லாவிட்டாலும் ரசியர்களும் எங்களைப் போல் பெரும் பிழை செய்கிறார்கள் என நாங்கள் கண்டுபிடித்துள்ளோம்''[1] என்று அமெரிக்க ஏகாதிபத்தியப் பத்திரிகை கூடக் கூறுகின்றது.

உலக ஏகாதிபத்திய அணிகளில் ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதி பத்தியம் சேர்ந்திருப்பதால், ஏகாதிபத்திய நாடுகள் மத்தியிலுள்ள முரண்பாடுகள் மேலும் கூர்மையாயிருக்கின்றன. தத்தம் செல்வாக்குப் பிராந்தியங்களை விஸ்தரிக்கும் முயற்சியில் சமூக-ஏகாதிபத்தியமும் ஏகாதிபத்தியமும் தீவிரமான போட்டியில் ஈடுபடுகின்றன. உலக மக்களால் வளையமாகச் சுற்றிவளைக்கப்படும் சமூக-ஏகாதிபத்தியத் துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான சண்டை சச்சரவு தவிர்க்க முடியாதபடி முழு ஏகாதிபத்திய அமைப்பு முறையினதும் அழிவுப் போக்கைத் துரிதப்படுத்தும்.

உள்நாட்டிலும் ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியத்தின் ஆட்சி ஒரு எரிமலையின் மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. ஸ்டோலிபின் பிற்போக்குக் காலத்தில் லெனின் பின்வருமாறு எழுதினார்: ரசியத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம், ''துரிதமாக வளரலாம் அல்லது

---

1. *''அமெரிக்கச் செய்திகளும் உலக அறிக்கையும்,'' ஜனவரி 5, 1970.*

மெதுவாக வளரலாம்'', ''எப்படியாயினும், அது புரட்சி நோக்கிச் செல்கின்றது.''[1] இன்று ரசியாவில் ஒருபுறம் புதிய ரக அதிகாரத்துவ ஏகபோக முதலாளி வர்க்கத்துக்கும் மறுபுறம் அடிமைப்படுத்தப்பட்ட பாட்டாளி வர்க்கம், உழைக்கும் விவசாயிகள், புரட்சிகர அறிவுஜீவிகள் ஆகியோருக்கும் இடையிலுள்ள மோதலும் எதிர்ப்பும் நாளுக்குநாள் தீவிரமாகிக் கொண்டிருக்கின்றன. வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சி மனித சித்தத்துக்கு அப்பாற்பட்டது. அது விரைவிலோ பின்னரோ புரட்சியை ஏற்படுத்தும்.

ரசியா ஆரம்பத்தில் பல தேசிய இனங்கள் வாழும் ஒரு சோசலிச அரசுகளின் ஒன்றியமாக இருந்தது. சோசலிச நிலைமைகளிலும் சமத்துவம், சுய்விருப்பம் ஆகிய அடிப்படையிலும் மாத்திரமே இத்தகைய ஒரு ஒன்றியம் நிறுவப்படவும் உறுதிப்படுத்தப்படவும் வளர்க்கப்படவும் முடியும். ஸ்டாலின் சுட்டிக்காட்டியது போலவே, ரசியா ''முதலாளி வர்க்க நாடுகளில் பல தேசிய இனங்களைக் கொண்ட அரசுகள் கட்டப்பட்டு தோல்வியுற்ற அனுபவங்களைக் கண்டிருக்கிறது. பழைய ஆஸ்திரிய-ஹங்கேரிய பேரரசு வீழ்ச்சியடைந்த அனுபவத்தை கண்டிருக்கிறது.'' ஆனாலும் பலதேசிய இனங்கள் வாழும் சோவியத் அரசுகளின் ஒன்றியம், ''எந்தப்பரிட்சையிலும் நிச்சயம் நின்றுபிடிக்கும்.'' ஏனெனில், சோசலிச அமைப்பு முறை ''தனியொரு ஒன்றிய அரசின் அமைப்பு முறைக்குள், சகல தேசிய இன மக்கள் மத்தியிலும் உண்மையான சகோதர ஒத்துழைப்பை நிறுவியுள்ளது.''[2] இப்பொழுது, ரசியத் திரிபுவாதத் துரோகக் கும்பல், சோசலிச அமைப்பு முறையை கவிழ்த்துள்ளது; அது முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தை அமுல் நடத்தி, தேசிய சமத்துவத்தின் இடத்தை தேசிய அடக்கு முறைக்குக் கொடுத்துள்ளது; முதலாளி வர்க்கத்தின் ''காட்டுமிராண்டிக் கொள்கை''க்கு பல்வேறு தேசிய இனங்களுக்கிடையில் பரஸ்பர உதவி, சகோதரத்துவம் ஆகியவற்றின் இடத்தைக் கொடுத்திருக்கின்றது. முன்னாளில் இருந்த அந்த ஒன்றியத்தின் பாட்டாளிவர்க்க அடிப்படை, சோசலிச அடிப்படை இன்று ஒதுக்கிவிடப்பட்டுள்ளது என்றால், புதிய ரக முதலாளி வர்க்க ஆட்சியின் கீழ் உள்ள பிரமாண்டமான, பல தேசிய

---

1. *வி. இ. லெனின், ''ஆர்ப்பாட்டங்களின் ஆரம்பம்'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுப்பு 16, பக்கம் 51.*

2. *ஜே. வி., ஸ்டாலின், ''சோவியத் யூனியனின் நகல் அரசியல் அமைப்பு பற்றி'', லெனினியத்தின் பிரச்சினைகள், சீன மொழிப் பதிப்பு, மக்கள் பதிப்பகம், 1964, பக்கம் 649, 650.*

இனங்கள் வாழும் இந்த சொல்லிக்கொள்ளப்படும் ''ஒன்றியம்'' முன்னைய ஆஸ்திரிய-ஹங்கேரியபேரரசு போல், என்றோ ஒரு நாளைக்கு அதே நெருக்கடிக்கூடாகச் சென்று தோல்வியில் முடிவடையாதா?

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள தன் நெருக்கடி நிலையில் இருந்து தன்னை விடுவிக்கும் பொருட்டு, ரசியத் திரிபுவாதச் சமூக—ஏகாதிபத்தியம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் போல ஏவுகணை அணு ஆயுத மிரட்டலில் வெறித்தனமாக ஈடுபட்டு, இராணுவத் துணிச்சல் நடவடிக்கைகள், பெருமளவு ஆக்கிரமிப்பு யுத்தம் ஆகியவற்றின் மூலம் தப்பும் வழி ஒன்றைத் தேடுகின்றது. ஆனால் யுத்தம் மரண வேதனையிலுள்ள ஏகாதிபத்தியத்துக்கும் சமூக-ஏகாதிபத்தியத்துக்கும் புதியதோர் உயிர் பிச்சை அளிக்குமா? இல்லை. அதற்கு முற்றிலும் மாறாகவே நடக்கும். யுத்தம், அதன் நிச்சயிக்கப்பட்ட அழிவிலிருந்து ஏகாதிபத்தியத்தை மீட்பதற்குப் பதிலாக அதன் அழிவைத் துரிதப்படுத்த மாத்திரமே செய்யும் என்பதை வரலாறு மறுத்துரைக்க முடியாதபடி நிரூபிக்கின்றது.

தலைவர் மாசேதுங் சுட்டிக்காட்டியுள்ளதாவது: ''உலக யுத்தம் பற்றிய பிரச்சினையைப் பொறுத்த வரை, இரண்டு சாத்தியப்பாடுகள் தான் உண்டு: ஒன்று,யுத்தம் புரட்சியை ஏற்படுத்தும்; இன்னொன்று, புரட்சி யுத்தத்தைத் தடுத்து நிறுத்தும்.''[1]

தலைவர் மாசேதுங் மேலும் சுட்டிக்காட்டியுள்ளதாவது: ''அனைத்துலக மக்களே அய்க்கியப்பட்டு, எந்த ஏகாதிபத்தியமும் அல்லது சமூக-ஏகாதிபத்தியமும் தொடுக்கும் ஆக்கிரமிப்பு யுத்தத்தை, குறிப்பாக அணுகுண்டுகளை ஆயுதங்களாகப் பாவிக்கும் ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்த்து நில்லுங்கள்! இத்தகைய யுத்தம் ஏற்பட்டால், அனைத்துலகமக்களும் புரட்சி யுத்தத்தால் ஆக்கிரமிப்பு யுத்தத்தைஅழிக்க வேண்டும். அதற்குஇப்பொழுது முதலே தயாரிப்புகள்செய்யவேண்டும்!''[2]

தற்போதைய சர்வதேசிய சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு விடுத்த இந்த மகத்தான அறைகூவலில், தலைவர்

1. *லின்பியாவோ, ''சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 9-வது தேசிய காங்கிரசில் முன்வைத்த அறிக்கை''.*

2. *''மகத்தான 70-ம் ஆண்டுகளை வரவேற்கிறோம்''— ''மக்கள் தினசரி'', ''செங்கொடி'' ''விடுதலைப் படை தினசரி'' ஆகியவற்றின் 1970 புத்தாண்டு தினத்தின் தலையங்கம், ''மக்கள் தினசரி'', ஜனவரி 1, 1970.*

மாவோ உலகம் முழுவதுமுள்ள பாட்டாளி வர்க்கத்துக்கும் புரட்சிகர மக்களுக்கும் போராட்டத் திசை மார்க்கத்தைச் சுட்டிக்காட்டு கிறார். அனைத்துலக மக்களும் உயர்ந்த விழிப்புணர்வை நிலை நிறுத்தி, எல்லாத் தயாரிப்புகளையும் செய்து, யுத்தம் தொடுக்கத் துணியும் எந்த ஆக்கிரமிப்பாளனுக்கும் உறுதியான நாசகரமான அடிகள் எந்நேரத்திலும் கொடுக்கவேண்டும்!

சமீப சில ஆண்டுகளில், ரசியத் திரிபுவாதத் துரோகக்கும்பல் பழைய ஜார் மன்னர்களின் பழைய தந்திரங்களைப் பின்பற்றி, புதிய ''சர்வ ஸ்லாவின் இயக்கம்'' ஒன்றைப் பாதி பகிரங்கமாகவும் பாதி மறைமுக மாகவும் ஆதரித்து, திட்டமிட்டு ரசிய ''தேசிய உணர்வின் புனிதத் தன்மை'' பற்றி விளம்பரம் செய்து வந்துள்ளது; இப் பிற்போக்கு சிந்தனைப் போக்கைக் கொண்டு ரசியாவின் உழைப்பாளி வெகுஜனங்கள், இளம் சந்ததி ஆகியோரின் உள்ளங்களில் நஞ்சூட்டி வந்துள்ளது. ஆட்சியிலிருக்கும் ஒருசில ரசிய திரிபுவாதிகளுடைய யுத்தக் கொள்கைகளின் கருவிகளாகச் சேவை செய்யும்படி ரசிய மக்களைத் தூண்டும் வீண் முயற்சியிலேயே அது இவ்வாறு செய்து வந்துள்ளது. ''சர்வ ஸ்லாவிச''த்தால் ஒருபோதும் ஏமாற்றப்படாமல் இருக்கும்படி நாங்கள் சகோதர ரசிய மக்களுக்கு நேர்மையுடன் நினை வூட்ட விரும்புகிறோம்.

''சர்வ ஸ்லாவிசம்'' என்றால் என்ன? மார்க்சும் எங்கெல்சும் பழைய ஜார் மன்னர்களை அம்பலப்படுத்தியபோது, கூர்மையாகச் சுட்டிக்காட்டியதாவது: ''சர்வ ஸ்லாவிசம் என்பது செயின்ட்பீட்டர்ஸ்பர்க் மந்திரிசபையின் கண்டுபிடிப்பாகும்''.[1] எங்கெல்ஸ் கூறியதாவது: பழைய ஜார்மன்னர்கள் யுத்தத்தயாரிப்பில் இந்த மோசடியை ''ரசிய ஜார்மன்னர் அமைப்பு முறையையும் ரசியப் பிற்போக்கு சக்தியையும் மீட்கும் கடைசி பாதுகாப்பு நங்கூரமாக'' பயன்படுத்தினார்கள்; ஆகையால், ''சர்வ ஸ்லாவிசம் எங்களதும் ரசியர்களினதும் மிகப் பயங்கரமான எதிரி.''[2]

ரசியத் திரிபுவாதப் புதிய ஜார் மன்னர்களின் ''சர்வ ஸ்லாவிசம்'', ஹிட்லரின் ''ஆரியர்களே மேம்பட்டவர்கள்'' என்பது போன்ற கடைக்

---

1. *காரல் மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ், ''சோசலிச ஜனநாயகக் கூட்டணியும் சர்வ தேசியத் தொழிலாளர் சங்கமும்'', மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 18, பக்கம் 492.*
2. *காரல் காவுட்ஸ்கிக்கு எங்கெல்ஸின் கடிதம், 1882 பிப்ரவரி 7, ''கலை பற்றி மார்க்சும் எங்கல்சும்'', சீன மொழிப் பதிப்பு, மக்கள் இலக்கிய பதிப்பகம், 1963, தொகுதி 3, பக்கம் 361.*

கோடிப் பிற்போக்கு இன வெறியாகும். அவர்கள் இத்தகைய பிற்போக்குச் சிந்தனைகளை விளம்பரம் செய்வதன் ஒரே ஒரு நோக்கம், அவர்களுடைய ''மேம்பட்ட இன''த்தின் மத்தியிலுள்ள ஒரு சில பிற்போக்கு ஆட்சியாளரின் வெளிநாட்டு விஸ்தரிப்புக்குச் சேவை செய்வதாகும்; பரந்துபட்ட மக்களைப் பொறுத்தவரை இது பிரம்மாண்டமான அழிவு என்று அர்த்தப்படும்.

''ரசியர் அல்லாதவர்களுக்கு எதிரான அடக்குமுறை இரண்டு முனைகளுடைய ஒருதடி. அது ஒருமுனையால் 'ரசியரல்லாத' வரையும், மறுமுனையால் ரசிய மக்களையும் தாக்குகின்றது''[1] என்று லெனின் ஒருமுறை சுட்டிக்காட்டினார். இப்பொழுது, சொல்லிக்கொள்ளப்படும் ''சர்வஸ்லாவிசம்'' என்ற மூடுதிரைக்குப் பின்தான், விரல்விட்டு எண்ணக்கூடிய ஆட்சியிலிருக்கும் ஒருசில ரசியத் திரிபுவாதிகள் ஒருபுறம் ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்குத் தீவிரமாக திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்; மறுபுறம் ரசிய மக்கள் உட்படச் சோவியத் மக்கள் மீதான தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ரசியப் பாட்டாளி வர்க்கத்தினதும் பரந்துபட்ட மக்களினதும் நலன்கள், ரசியத் திரிவாதப் புதிய ஜார்மன்னர்களின் நலன்களுக்கு முற்றிலும் விரோதமானவை; ஆனால், அவை புரட்சிகர அனைத்துலக மக்களின் நலன்களுக்கு இசைந்தவை ரசியத் திரிபுவாதப் புதிய ஜார் மன்னர்கள் பெருமளவு ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றைத் தொடுத்தால், அப்பொழுது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தங்களைக் கையாள்வது பற்றிய லெனினுடைய கோட்பாட்டின்படி, ரசியாவின் பாட்டாளி வர்க்கமும் புரட்சிகர மக்களும், ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியத்தால் நடத்தப்படும் அநீதியான யுத்தத்துக்குச் சேவை புரிய நிச்சயம் மறுத்துவிடுவர். அவர்கள் மகத்தான அக்டோபர் புரட்சியின் வீரமிக்க புதல்வர்களின் இலட்சியத்தை முன்னெடுத்துச் சென்று புதிய ஜார் மன்னர்களைத் தூக்கியெறிந்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் புனரமைக்க போராடுவார்கள்.

200 ஆண்டுகளுக்கு முன்னர், ரசியக் கவிஞர் ஒருவர், ஜாரினா காதரின் ||ன் உடைய ஆக்கிரமிப்பு ''யுத்தங்களின் சாதனை''களை வானளாவப் புகழ்ந்து போற்றிய போது, ''உறுதியுடன் முன்னேறுங்கள், அப்பொழுது உலகம் முழுவதும் உங்களுடையது''[2]

---

1. *வி. இ. லெனின், ''தேசிய சமத்துவம்'', தொகுப்பு நூல்கள், சீன மொழிப் பதிப்பு, தொகுதி 20, பக்கம் 257.*
2. *ஜி. ஆர். டெர்ஷாவின், ''வார்சாவைக் கைப்பற்றியதற்கு.''*

என்று எழுதினார். இப்பொழுது ரசியத் திரிபுவாதப் புதிய ஜார் மன்னர்கள் பழைய ஜார் மன்னர்களின் குதிரையிலேயே ஏறி ''உறுதியுடன் முன்னேறி'' இருக்கிறார்கள். அவர்கள் எங்கெங்கும் அசட்டுத் துணிச்சலுடன் முட்டி மோதி, கடிவாளத்தை இழுத்துப்பிடிக்க முடியாமல் இருக்கிறார்கள். அவர்களது மூதாதையர்கள் அதே குதிரையிலிருந்து கீழே வீழ்த்தப்பட்டனர்; இதன் விளைவாக, ரோமனோவ் வம்சத்தின் ரசியப் பேரரசு முடிவுக்கு வந்தது என்பதை அவர்கள் முற்றிலும் மறந்துவிட்டார்கள். புதிய ஜார் மன்னர்களுக்கு பழைய ஜார் மன்னர்களை காட்டிலும் நல்ல முடிவு கிட்டப் போவதில்லை என்பது நிச்சயம். அவர்களும் குதிரையிலிருந்து கீழே வீழ்த்தப்பட்டு, சுக்குநூறாவது திண்ணம்.

7. அனைத்துலக மக்களே, ஐக்கியப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியம், ரசியத் திரிபுவாதம், சகல நாட்டுப் பிற்போக்கு ஆகியவற்றைத் தூக்கியெறியப் போராடுங்கள்

''ரசியா முதலாவது சோசலிச நாடு. ரசிய கம்யூனிஸ்ட் கட்சி லெனினால் நிறுவப்பட்ட கட்சி. ரசிய கட்சியினதும் அரசினதும் தலைமை இப்பொழுது திரிபுவாதிகளால் அபகரிக்கப்பப்பட்டுள்ளபோதிலும், பரந்துபட்ட ரசிய மக்களும் கட்சி உறுப்பினர்களும் ஊழியர்களும் நல்லவர்கள்; அவர்கள் புரட்சி நடத்த விரும்புவார்கள்; திரிபுவாதத்தின் ஆட்சி நீண்டகாலம் நீடித்திருக்க முடியாது என்பதில் திடமான நம்பிக்கை கொண்டிருக்கும்படி தோழர்களுக்குப் புத்திமதி கூற விரும்புகிறேன்''[1] எனத் தோழர் மாசேதுங் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீன மக்கள் ரசிய மக்கள் மீது ஆழ்ந்த அன்புணர்வைக் கொண்டிருக்கிறார்கள். லெனின் தலைமை தாங்கிய மகத்தான அக்டோபர் புரட்சியின்போது, ரசியாவில் இருந்த சீன உழைப்பாளிகள் ரசியப் பாட்டாளி வர்க்கத்துடன் தோளோடு தோளிணைந்து போராடினார்கள். நமது இரு நாட்டு மக்களும் நீண்டகாலப் புரட்சிப் போராட்டப் போக்கில் ஒருவருக்கொருவர் ஆதரவளித்து, ஒருவருக்கொருவர் உதவி

---

1. *சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் விரிவாக்கப்பட்ட வேலை மாநாட்டில் மாசேதுங் நிகழ்த்திய உரை, ஜனவரி 30, 1952.*

செய்து, நெருங்கிய நட்பை உருவாக்கியுள்ளார்கள். சீன-ரசிய இருநாட்டு மக்களுக்குமிடையிலான உறவுகளில் பிளவை ஏற்படுத்தவும் அவற்றைச் சீர்குலைக்கவும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஆட்சியிலிருக்கும் ஒரு சில ரசியத் திரிபுவாதிகள் மிகவும் வெறித்தனமாக முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் இறுதியில் அவர்கள் கல்லொன்றைத் தூக்கித் தம் காலில் போட மாத்திரமே செய்வர்.

ரசிய மக்கள் லெனின், ஸ்டாலின் ஆகியோரால் பயிற்றுவிக்கப்பட்ட, புகழ்மிக்க புரட்சிகர பாரம்பரியம் படைத்த மாபெரும் மக்கள். அவர்கள் தம் முதுகுகளில் புதிய ஜார் மன்னர்கள் சவாரி செய்வதை எவ்விதத்திலும் நீண்டகாலம் அனுமதிக்க மாட்டார்கள். அக்டோபர் புரட்சியின் பலன்கள் ரசியத் திரிபுவாதத் துரோகிகளால் வீசியெறியப்பட்டுள்ள போதிலும் அக்டோபர் புரட்சியின் கோட்பாடுகள் அழிவற்றவையாகும். மகத்தான லெனினியப் பதாகையின் கீழ், மக்கள் புரட்சி எழுச்சி திரிபுவாத ஆட்சி என்ற பனிக்கட்டியை உடைத்துச் செல்வது திண்ணம்; சோசலிச வசந்தகாலம் நிச்சயம் ரசிய நாட்டிற்கு திரும்பி வரும்!

தோழர் மாசேதுங் சுட்டிக் காட்டியுள்ளதாவது: ''சீனாவிலும் சரி, உலகின் இதர நாடுகளிலும் சரி ஒரு வார்த்தையில் கூறினால், 90 சதவீதத்துக்கு மேலானோர் இறுதியில் மார்க்சிய-லெனினியத்தை ஆதரிப்பார்கள். சமூக-ஜனநாயகக் கட்சி, திரிபுவாதம், ஏகாதிபத்தியம், சகலநாட்டுப் பிற்போக்கு ஆகியவற்றால் ஏமாற்றப் படுகிறபடியால் உலகில் இன்னும் பலர் விழிப்படையவில்லை. எப்படியாயினும், அவர்கள் படிப்படியாக விழித்தெழுந்து, மார்க்சிய-லெனினியத்தை ஆதரிப்பார்கள். மார்க்சிய—லெனினியம் என்ற உண்மை தடுக்கப்படமுடியாதது. பொதுமக்கள் இறுதியில் புரட்சியில் எழுவர். உலகப்புரட்சி வாகை சூடுவது திண்ணம்.''[1]

மாபெரும் லெனின் பிறந்த நூறாவது ஆண்டு நிறைவை ஞாபகப் படுத்தும்போது, நாம் பின்வருவனவற்றை மகிழ்ச்சியுடன் காண்கிறோம்: மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் வழிகாட்டலில், உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி இலட்சியம் வெற்றி மேல் வெற்றி பெற்று முன்னேறிக் கொண்டிருக்கிறது. உலகம் முழுவதுமுள்ள

---

1. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் விரிவாக்கப்பட்ட வேலை மாநாட்டில் மாசேதுங் நிகழ்த்திய உரை, ஜனவரி 30, 1952.

உண்மையான மார்க்சிய-லெனினிய சக்திகள் நாளுக்கு நாள் வளர்ந்து பலப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களினதும் மக்களினதும் விடுதலைப் போராட்டம் ஓங்கி வளர்கின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் ரசியத் திரிபுவாதத்தினதும் ஆக்கிரமிப்பு, கட்டுப்பாடு, தலையீடு, இம்சை ஆகியவற்றுக்குள்ளான சகல நாடுகளும் மக்களும் மிகப் பரந்த அய்க்கிய முன்னணி ஒன்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் ரசியத் திரிபுவாதத்துக்கும் எதிரான புதியதொரு வரலாற்றுக் காலகட்டம் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது. ஏகாதிபத்தியத்திற்கும் சமூக—ஏகாதிபத்தியத்திற்கும் சாவுமணி அடிக்கப்படுகிறது.

வெல்லப்பட முடியாத மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனை, பாட்டாளி வர்க்கம் உலகை அறிந்துகொண்டு அதை மாற்றுவதற்கான பலம்வாய்ந்த ஆயுதமாகவும், வரலாற்று முன்னேற்றத்தை உந்தித்தள்ளுவதற்கான பலமிக்க ஆயுதமாகவும் திகழ்கின்றது. மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனை கோடானுகோடி புரட்சிகர மக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டதும், அது அனைத்து நாட்டு மக்களினதும் புரட்சியின் பருண்மையான நடைமுறையுடன் ஒன்றிணைக்கப்பட்டதும், பழைய உலகம் முழுவதையும் தவிடு பொடியாக்க வற்றாத புரட்சி ஆற்றலைக் கொண்டு வருவது நிச்சயம்!

மாபெரும் மார்க்சியம் நீடூழி வாழ்க!
மாபெரும் லெனினியம் நீடூழி வாழ்க!
மாபெரும் மாசேதுங் சிந்தனை நீடூழி வாழ்க!

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
622	25	1935 ஆம் வாக்கில்	1935 ஆம் ஆண்டு வாக்கில்
629	1	சீரழிகதின்	சீரழிந்ததன்
630	30	படிப்பனையை	படிப்பினையை
641	18	சமுக	சமூக
641	27	சமங்களில்	சமயங்களில்
643	9	சமுக	சமூக
645	8	முடிம்	முடியும்
656	20	களுக்கும்	களும்
658	6	பகுதியினக்கு	பகுதியினருக்கு
,,	9	நடத்த	நடந்த
,,	14	கருகிறார்கள்	கருதுகிறார்கள்
659	16	சோாலிசப்	சோசலிசப்
666	14,15	எழுதி எழுதினர்	எழுதினார்
,,	17	மாற்றத்துள்ளாகும்	மாற்றத்துக்குள்ளாகும்
669	17	நூலிருந்து	நூலிலிருந்து
674	2	பாதாகையை	பதாகையை
687	26	கிண்டலாக்கக்	கிண்டலாகக்
694	20	காலம் கட்டத்தை	காலகட்டத்தை
695	33	கலைவதற்கு	களைவதற்கு
701	12	வேறுவார்த்தைகளில் சொல்ல-	வேறுவார்த்தைகளில்
707	1	செந்த	சொந்த
708	4	முலம்	மூலம்
709	36	மெழுகுவுமான	மெழுகவுமான
710	28	சரணாகதிப	சரணாகதிப்
714	21	சரியான கூற்று	கூற்றின் சரியான தன்மையை

SEELAN BOOKS NORWAY SIGNATURE

முன்னுரை

2	31	1999-ல்	1969-ல்
6	16	50-வது	20-வது
7	21	திரிபுவாதா	திரிபுவாதக்
,,	24	கட்டுரையையு மற்றம்	கட்டுரையையும் மற்றும்
9	23	என்ற	என்று முன்வைத்த
10	11	நிவைிப்பாடுகளை	நிலைப்பாடுகளை
11	28	இயகக்த்தின்	இயக்கத்தின்
13	32	இருந்தகர்	இருந்தார்
14	9	காலகட்டப்;	காலகட்டம்;
16	11	அதிசிாரத்துக்கு	அதிகாரத்துக்கு
19	27	புரட்சியாளகள்	புரட்சியாளர்கள்
23	1	முதளாளித்துவ	முதலாளித்துவ

குறிப்பு :

குறிப்பு :

மார்க்சிய-லெனினியம் என்பது ஒரு அறிவியல். அறிவியல் விவாதங்களைக் கண்டு அஞ்சுவதில்லை. விவாதங்களைக் கண்டு அஞ்சுவது எதுவும் அறிவியலாகாது. சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் தற்போது நடைபெறும் மாபெரும் விவாதம், எல்லா நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுகளையும் புரட்சியாளர்களையும், புரட்சிகர மக்களையும் தங்கள் சொந்த நாட்டுப் புரட்சி பற்றிய பிரச்சினைகள் குறித்தும், உலகப்புரட்சி குறித்தும் தங்கள் மூளையைப் பயன்படுத்தி மார்க்சிய-லெனினிய அடிப்படையில் சிந்திக்கத்தூண்டுகிறது. இந்த மாபெரும் விவாதத்தின் மூலம் மக்கள், சரி எது, தவறு எது என்பதையும் உண்மையான மார்க்சிய-லெனினியம் எது, போலியானது எது என்பதையும் புரிந்துகொள்வார்கள். இப்பெரும் விவாதத்தின் மூலம் உலகிலுள்ள எல்லா புரட்சிகர சக்திகளும் ஒன்று திரட்டப்படும். எல்லா மார்க்சிய-லெனினியவாதிகளும் சித்தாந்தரீதியிலும், அரசியல்ரீதியிலும் உறுதி செய்யப்பட்டு மேலும் முதிர்ச்சியடைந்தவகையில் மார்க்சிய-லெனினியத்தை தங்கள் நாடுகளில் பருண்மையான நடைமுறையுடன் இணைக்கும் திறன் பெறுவார்கள். இவ்வாறு மார்க்சிய-லெனினியம் சந்தேகமின்றி மேலும் செழுமைபெறும்; வளர்ந்து புதிய சிகரங்களை எட்டும்.

—— ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது விமர்சனத்திலிருந்து.